JL
XMm211,N09
N09.8--9
162043

# மதராஸ் புல்லெடீன் ஆப் கோவாபரேஷன்

என்னும்

## சென்னைக் கூட்டுத்தொழில் வர்த்தமானி

சம்புடம் VIII] 1916௵ செப்டம்பர்௴ [இலக்கம் 1

## மதராஸில் ஐக்கிய முயற்சியைப்பற்றி

மிஸ்டர் H. W. உல்பு துரை அவர்களின் அபிப்பிராயம்.

மிஸ்டர் H. W. உல்பு துரையவர்கள் பின் வருமாறு அடங்கிய கடிதத்தை 6—5—1916-இல் கோவாப்ரேடிவ் சங்கங்களின் ரெஜிஸ்டராராகிய திவான் பகதூர் L. D. ஸ்வாமிகக்கண்ணுப் பிள்ளையவர்களுக்கு எழுதினார்:—

சென்ற ௵-த்திய ரிபோர்ட்டை தாங்கள் அனுப்பியதற்கு வந்தனமளிக்கிறேன். அதை நான் மிகவும் ஆவலுடன் பார்வையிட்டேன். நான் இது வரையில் வாசித்த முதன்மையான ரிபோர்ட்டுகளில் இது வொன்றாகும். இப்பொழுதுள்ள கஷ்ட காலங்களிலும் ஐக்கிய முயற்சி அபிவிருத்தி யடைந்ததற்கும், உம்முடைய யுக்தத்திற்கும் நான் மெச்சுகிறேன். பிரத்தியக்ஷமாக இந்தியாவில் ஐக்கிய மியக்கம் பரவிக்கொண்டு வருகிறது. இப்பொழுது அவற்றின் முதல் நோக்கங்கள் இத்தேசத்தில் ஊன்றிவிட்டன ; மேலே வியாபிக்கப் பிரயத்தனம் செய்கிறோம்.

உண்மையில், சங்கங்களின் சங்கியையும் க்ஷேமநிதியும் அதிகரித்ததினாலும் கவர்ன்மெண்டாரின் உதவி குறைந்ததினாலுமே, நாம் சந்தோஷப்படவேண்டும். கடன்கள் சரியானபடி திருப்பிக்கொடுபடவில்லை. ஆனால் வேறு விதமான வெளிக் காரணங்களிருக்கும்பொழுது இக்குறை யேற்படுவது ஸகஜம். சரியான காலங்களில் கெடு தப்பாமல் நடவடிக்கைகள் செய்வது இத்தொழிலுக்கு இன்றியமையாததாதலால், இதில் யேற்படும் தவறுகளை மிகவும் ஜாக்கிரதையாய்ப் பாதுகாப்பது ஒழுங்கான விஷயம். ஒழுங்காய் வேலை செய்துவாராத பாங்கிகள் யாதொரு நன்மையும் தராதாகையால், காய்ந்த

16 2043



மரக்கிளைகளை வெட்டி விடுதல் எப்படி ஓர் மரத்துக்கு நன்மையோ அவ்விதமே இம்மாதிரி பாங்கிகளை புதித்து விடுதல் ஐக்கிய முயற்சிக்கு நல்லது.

சங்கமேல்விஜாரணைப் பற்றியுள்ள உங்களுடைய ஆவலுக்கு நான் சந்தோஷப்படுகிறேன். அது மிகவும் முக்கியமாயுள்ள அவசரமான விஷயம். ஓர் முடிவான யேற்பாடாக ஜில்லா பாங்கியானது, மேல் விஜாரணை செய்வதை நான் அங்கீகரிக்கவில்லையென தங்களுக்குத் தெரியும்; ஆனால் கிராமச் சங்கங்களை தங்கள் சொந்த நன்மைகளை யுத்தேசித்து மேல் விஜாரணை செய்யும் யூனியன்களை ஸ்தாபித்துக்கொள்ள விரும்புகிறேன். ஜில்லா பாங்கியானது தன் ஸ்தலத்திலுள்ள பாங்கிகளுக்குப் பணம் கொடுத்துதவும் முதலாளியாக யிருக்க வேண்டும். ஆனால் இப்பொழுதும் இன்னும் கொஞ்ச காலம் வரையிலும், இநதியாவில் அது முடியாத காரியம்; மேல் விஜாரணையை ஜில்லா பாங்கியினால் நடத்துவது தான் தற்காலம் முடியும். இவ்விஷயமாய் வேலை செய்வதற்கு தேர்ச்சியுள்ள உத்தியோகஸ்தர்களை இப்பாங்கியாற்றான் நிர்வகிக்கமுடியும். சோதனை செய்யப்படும் ஒவ்வொரு பாங்கியும் மேல் விஜாரணை செய்வதற்கு ஓர் குறித்த வரியை முடிவில் கொடுப்பது நியாயமான காரியமாகும்.

செங்கற்பட்டு ஜில்லாவில் காரணப்படி ஒப்புக்கொள்ளும் பங்குக்காரர்களிருப்பது உங்களுடைய அதிஷ்டம்தான். உண்மையாய் அந்த ஸெண்ட்ரல் பாங்கியானது முடிவில் ஸ்தல பாங்கிகளின் பாங்கியாக வேண்டும். தங்கள் பணத்தை அதில் போட்ட ஜனங்கள் அம்மாதிரியே பெருந்தன்மையாக அபிப்பிராயப்படமாட்டார்கள்.

பொறுப்பு எடுத்துக்கொள்ளும் கியாரண்டீயிங் யூனியன்களைப் பற்றியுள்ள உங்கள் அபிப்பிராயத்தை நான் ஒப்புக்கொள்ளுகிறேன்; ஆனால் என்னெக்கம் வேறு. எல்லாவற்றையும் சேர்ப்பதற்கு வேறு வழிகளிருக்கின்றன.

ஜர்மனி தேசத்தில் சொத்துக்களின் பேரில் கடன் கொடுத்து வரும் கோவாப்ரேடிவ் சங்கங்கள் அதிகமாயிருக்கின்றன. வென்று இம்பீரியல் கமிட்டியர் நினைத்தது தவறு: ஜர்மனி தேசத்தில் நடப்பதெல்லாம் ஒழுங்கானவை யென்று நினைப்பது மிகவும் அபாயமான யோஜனை. அந்த தேசத்தில் வழங்கி வரும் அநேக செய்கைகள் மிகவும் தேர்ச்சியுள்ள ஜர்மன் ஜட்ஜுகளால் தவறு யென்று தீர்மானிக்கப்பட்டிருக்கின்றன. ஜர்மனியில் எந்தெந்த யிடங்களில் ஒத்திக்கடன்கள் அதிகமா யேற்பட்டிருக்கின்றவோ, அந்தந்த



விடங்களில் ஜனங்களின் குறித்த நோக்கங்களுக்கு மாறாகத்தோன்றியிருக்கின்றனவே யொழிய அவர்களாக வேண்டுமென்று உண்டாக்கிக் கொள்ளவில்லை. ஒத்திக்கடன் கொடுத்தலால், பணமானது ஓடிக்கொண்டியிராமல், பெட்டியில் பூட்டப்பட்டதைபோல் ஒரே யிடத்திலிருப்பதை நீங்கள் பார்க்கலாம். மேலும் இப்பொழுது ஐரோப்பாவில் அநேக பாங்கிகள் முறிவடைந்ததின் காரணமாகிய ஈட்டு சொத்தின் விலை மதிப்புக் குறைவுக்கு இது உள்ளாகும். ஆனல் அவ்வித அபாயம் இந்தியாவில் தற்காலத்து தோன்றுமலிருக்கலாம்; ஆனால் அபாயமில்லையென யாரால் சொல்லக்கூடும்? நோக்கத்தில் கம்மிட்டியார் சொல்வது சரியாயிருக்கிறது. நபர் ஜாமீன் தான் கொடுக்கவேண்டும். ஈட்டுஜாமீன்கள் கொடுத்தால் இதற்கு பக்க ஜானுமீகத்தானிருக்க வேண்டும். ஆனால் நீங்கள் நடவடிக்கை செய்து வரும் ஸ்தலங்கள் வேறு கர்னாடப் பழக்கங்களும், பிரத்தியேக வாழ்க்கைகளுமுடைய உங்கள் ஜனங்களின் நோக்கங்கள் எனக்குயாதொன்றும் தெரியாது; ஆகையால் நான் என்னுடைய யோஜனையை சொல்லுவதற்கில்லை. நிலத்தின் பேரில் கடன் கொடுப்பது வழக்கமாயிருந்தால், ஜனங்கள் வழக்கத்திற்குத் தகுந்தபடி உண்மையான ஜமீன் வாங்கிக்கொண்டு கடன் கொடுக்கலாம், ஆனால் பாங்கியில் பணமில்லாதபடி ஈட்டுக்கட்டன்களிலேயே யெல்லாப் பணத்தையும் கொடுத்து விடவேண்டாம். நீங்கள் ஐக்கியயியகத்தில் இன்னும் இளம்பர்வத்தி லிருப்பதால், மிகவும் ஜாக்கிரதையுடன் வேலை செய்தால் உங்கள் ஜனங்களை ஐக்கிய முறையின் இலக்ஷணங்களுக்கிணங்கி மெள்ள மெள்ள வரும்படி பழக்கலாம்.

45-வது பாராவில் கூறிய அம்சமானது மிகவும் சிறிய விஷயம். குறித்த காரியத்திற் கென்று கடன் வாங்கப்பட்ட தொகையை வேறு விஷயத்தில் உபயோகப்படுத்தி விட்டால் அதை மறுபடி உடனே திருப்பக் கேழ்க்க அதிகாரமிருக்கும் வரையில் குறித்தகாலம் இவ்வள வென்று முதலிலேயே அறிவித்துக் கொள்வது நல்லது.

கடன் வாங்குபவர் தமக்கு வேண்டும் காலம் வரையில் உபயோகப்படுத்தும்படியா யிருக்கவேண்டும். பஞ்சாயத்தாரும் அதை அங்கீகரிக்க வேண்டும். இரண்டு வழிகளிலும் நியாயமா யிருப்பது நல்லது; மறுகடன் கொடுத்தல் மிகவும் சொல்பமாயிருக்கவேண்டும். அதற்குத் தகுந்த காரணங்களும் வேண்டும்.

தர்ம யோகங்கள் அபிவிருத்தி யடையாததைப் பற்றி நான் ஆச்சரியப்படவில்லை. அவைகள் உபயோகமுள்ளவைகளா யிருக்குமென்று எனக்குத் தெரியவில்லை. நாம் முன்னேக்கி வர வர நாணயத்தைச் சேர்ந்த முக்கிய அம்சங்கள் யாவருக்கும் நன்குவிளங்கும்.

39-வது பக்கத்தில் உதாரணமாய்க் காட்டப்பட்ட விவசாயச் சங்கங்கள் பரீக்ஷார்த்தமாய் செய்யப்பட்ட முயற்சியென ஆவலுடன் பார்க்கப்படுகின்றன. அவைகளெல்லாம் நிரம்பவேற்பட்டு ஒழுங்காய் ஒன்றுக்கொன்று சேர்க்கப்பட்ட பிறகுதான் ஜனங்களுக்கு அவைகளினால் நன்மைகளுண்டாகும். ஆனால் நான் மெள்ள மெள்ள முன்னோக்கிச் செல்லவேண்டும். இம்முறை ஐக்கிய முயற்சியால் இந்தியாவுக்கு அளவற்ற நன்மைகள் பலவுள.

என்னுடைய அபிப்பிராயங்களை தாராளமாய்க் கூறியதற்கு மன்னிக்க வேண்டும்: இந்தியாவில் மிகவும் தைரியமாய் இவ்வியக்கமானது சரியான வழியில் நடைபெற்றுவருகின்றது. இவ்வேலையில் உழைத்து வருபவர்களுக்கு இதினால் ஜனங்களுடைய நன்மையே இதற்குத் தகுந்த வெகுமதியாகும்.

---

# பத்திராதிபரின் குறிப்பு

பதிப்பிக்கும் கம்மிட்டியார் தமிழ் தெலுங்கு கூட்டுத்தொழில் வர்த்தமானியை எவ்விதங்களிலும் சுயற்சியாயிருக்கும்படி செய்ய வேண்டுமென விரும்புகிறார்கள். ஐக்கிய முயற்சி இலாகாவில் உழைத்துவரும் கவர்ன்மெண்டாரும், கவர்ன்மெண்டாரல்லாத கனவான்களும் உதவிசெய்தாலொழிய இந்நோக்கம் கைகூடுவதரிது. ஆகையால், கூட்டுமுயற்சி சம்பந்தமான தணிக்கைக் குறிப்புகள், பரிசோதனைகள், மாதிரி சங்கங்களைப்பற்றிய வியாசங்கள், ஐக்கிய சங்கங்கள் அபிவிருத்தி யடைவதற்கு உதவியுள்ள "குறிப்புகள், முதலானவைகளை எங்களுக்கு அடிக்கடி அனுப்பி வர்த்தமானிக்கு உதவிபுரியும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

## ஐம்பதுவீத க்ஷேமநிதி சட்டம்.

ஐம்பது வித க்ஷேமநிதி சட்டத்தை ரத்து செய்துவிட்டதற்கு கவர்ன்மெண்டாருக்கு நன்றியறிவுடயவர்களாயிருக்கிறோம். சென்ற பிரதியில் ஆனரபில் மிஸ்டர் V. S. ஸ்ரீனிவாச சாஸ்திரிகள் சென்னை லெஜிஸ்லேடிங் கவுன்ஸிலின் முன்பு கொண்டுவரப்பட்ட தீர்மானத்தைப்பற்றி நம்மபிப்பிராயத்தை வெளியிடும்பொழுது அச்சட்டமானது ஜனங்களுக்கு ஸாதகமாயில்லாததினால், இப்பொழுது நடந்துவரும் தணிக்கை காலம் முடிந்தபிறகாவது, கவர்ன்மெண்டார் ரத்து செய்வாரென நம்பினோம். அக்காலத்திற்கு முன்னமேயே ரத்து செய்யப்பட்டதைப்பற்றி நாம் சந்தோஷிக்கிறோம். கவுன்ஸிலில் கொண்டுவரப்பட்ட ஆனரபில் மிஸ்டர் சாஸ்திரியாரின் தீர்மானத்தை. அப்பொழுதே கவர்ன்மெண்டார் அங்கீகரித்திருந்தால் ஜனங்கள் அதிக சந்தோஷமடைவார்களாயினும், தங்களுடைய வேண்டுகோளுக்கு கவர்ன்மெண்டார் இப்பொழுதாவது இணங்கி கருணை புரிந்ததற்கு, இந்த ராஜதானியிலுள்ள ஐக்கியமுயற்சிக்காரர்கள் யாவரும் அவர்களுக்கு கடமைப்பட்டுள்ளோம். கவர்ன்மெண்டாரால் புதிதாய் யேற்படுத்தப்பட்ட சட்டம் பின்வருமாறு 1916௵ ஜூலை௴ 11௳ போர்ட்டுஸெண்ட் ஜார்ஜ் கெஜட்டில் பிரசுரிக்கப்பட்டது. "பொறுப்பு வரையறுக்கப்பட்டும், பங்குகளையுமுடைய சங்கங்கள், நிகர்லாபத்தில் நான்கில் ஓர் பங்குக்குக் குறையாமல் க்ஷேமநிதியிற் சேர்க்கவேண்டியது; பின்பு, செலுத்தப்பட்ட பங்குத்தொகைக்கு 100க்கு 9 வீதத்திற்கு மேலாகாமல் டிவிடெண்டுகொடுத்தும் நிகர்லாபத்தில் $7\frac{1}{2}$ வீதம் பொது தர்ம நிதிக்குப் பிரத்தியேகப்படுத்தியும் செய்யலாம். அப்படியும் மீதியாயுள்ள நிகர்லாபத்தை க்ஷேமநிதியுடன் சேர்க்கவேண்டியது."

நிகர்லாபத்தில் ஓர்பாகத்தை மேல்விஜாரணை நிதிக்காவது அல்லது வேறு யாதொரு விஷயத்திற்காவது வைக்காமலிருக்கும்படி இப்புதுச்சட்டத்தை வேறு மாறான தாத்பரியம்கொண்டு அதிகாரிகள், வேலைசெய்வார்களென சில விடங்களில் பயப்படுகிறார்கள். அவ்விதியானது டிவிடெண்டு கொடுக்கலாமென்றும், ஆனால் கொடுக்கவேண்டியது கட்டாயமில்லையென்றும் கூறுவதால் மேற்கூறிய பயத்திற்கு யாதொரு காரணமுமில்லாமல் மேல் விஜாரணை அல்லது மற்ற விஷயங்களுக்கு நிதியேற்படுத்த உத்தேசிக்கும் சங்கங்கள் இவ்விஷயமாய் பைலாவொன்று உண்டாக்கி அங்கீகரித்துவிட்டால், ஆடிட்டர்கள் ஆக்ஷேபணை செய்வதற்கிடமில்லை.

## ராஜதானி பாங்கி.

இப்பிரதியில் மாகாண பாங்கி ஸ்தாபிக்கும் விஷயமாய் வேறு பக்கங்களில் கூறப்பட்டுள்ளன. அவ்விஷயமானது சென்ற 3 அல்லது 4 மாதங்களாய் இந்த ராஜதானியின் ஐக்கிய முயற்சிக்காரர்களின் கவனத்தைக் கவர்ந்து வருகின்றது. சமீபத்தில், கவர்ன்மெண்டைச் சேராத கனவான்களாயுள்ள ஐக்கிய முயற்சிக்காரர்கள், கவர்ன்மெண்டார் செய்துவரும் மேல் விஜாரணையின் பொறுப்பை தாங்களும் வகிப்பதாக சம்மதித்திருப்பதை நம் நிருபர்கள் அறிந்திருக்கலாம். ஜில்லா பாங்கிங் யூனியன்கள் மதுரை இராமநாதபுரம் மாதிரியில் யேற்பட யேற்பட தனி நபர்கள்மாத்திரம் மெம்பர்களாயுள்ள பழமையான ஜில்லா பாங்கிகளும், மதராஸ் ஸெண்ட்ரல் பாங்கி

யும், சங்கங்கள் மெம்பராகவும், அவைகளின் நிர்வாக கமிட்டியில் தங்கள் பிரதிநிதிகளிருக்கும்படியாகவும், தங்கள் நிர்மாணத்தை மாற்றிக்கொள்ள வேண்டுமென ஓர்வித அபிப்பிராயம் யேற்பட்டிருக்கிறது. இம்பீரியல் கோவாப்ரேடிவ் கமிட்டியாரின் அபிப்பிராயம் அவ்வகைத்தே. மேலும், மதுராஸ் ஸெண்ட்ரல் பாங்கியானது, ஜில்லா பாங்கிகளுடன் மாத்திரம் சம்பந்தம் வைத்துக்கொண்டும், அவைகளின் மீதிப்பணங்களை பெற்றுக்கொண்டும், அவசியம் தேவையாயுள்ள பாங்கிகளுக்குப் பணம்கொடுத்துதவும்படியானதுமான சங்கங்களை பிரதிநிதிகளாகவுடைய ஓர் மாகாண பாங்கியாக மாற்றிக்கொள்ள வேண்டுமென அவர்கள் அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள்.

இப்பொழுதிருக்கும் ரிஜிஸ்ட்ரார் இவ்விஷயமாய் சில மாறுபாடுகள் கொண்டுவர முயன்றார். ஆனால் பிரயோஜனமில்லை. அதற்குள் மிஸ்டர் எம். ஷிவராவ் அவர்களும், இன்னும் இந்த ராஜதானியிலுள்ள முக்கிய ஐக்கிய முயற்சிக்காரர்கள் சிலரும் சேர்ந்து மாகாண பாங்கியொன்றை ஸ்தாபிப்பதற்கு ஸ்கீம் ஒன்றை தயார் செய்து. எல்லாச் சங்கங்களுக்கும் பிரசுரம் செய்தார்கள். இதுவரையில் அதைப்படிக்காதவர்கள் இப்பிரதியில் பார்க்கலாம்.

இந்த ராஜதானியில் ஐக்கிய முயற்சிக்காரர்களாகிய, கவர்ன்மெண்டாரல்லாத கனவான்கள் சேர்ந்துள்ள ஸ்தாபனமான பிரோவின்ஷியல் கோவாப்ரேடிவ் யூனியனின் சென்ற சப்டம்பர் மாதத்தில் கூடப்பட்ட நிர்வாக கமிட்டியாரின் மீட்டிங்கில் மிஸ்டர் ஷிவராவின் உத்தேசிக்கப்பட்ட மாகாண பாங்கியின் ஸ்கீமைத்தாங்குவதாகவும், பெரிய தனவான்களையும் அதில் பங்கெடுக்கப் பிரயத்தனம் செய்ய வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது. பங்குவேண்டுபவர்கள், கட்டணவரி ரூபாய் ஒன்றும், தனிநபர்களாயிருந்தால் பங்கு ஒன்றுக்கு இப்பொழுது ரூபாய் பத்தும், சங்கங்களாயிருந்தால் ரூபாய் ஐந்தும் கட்டணம்வரியையும்சேர்த்து, விண்ணப்பத்துடன் ரெஜிஸ்டாருக்குக்காவது, அல்லது திருவல்லிக்கேணி பிரொவின்ஷியல் யூனியன் காரியதரிசிக்காவது அனுப்பக் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

* * * *

## ஐக்கிய முயற்சி தர்ம சாலை.

பேஹாரில் பாபு ராஜ்பரகாஷ் என்பவர் புதிதாய் ஸ்தாபிக்கப்பட்ட பாட்வா கியாரெண்டிங் யூனியனைச் சேர்ந்துள்ள 16 சங்கங்களின் மெம்பருக்காக ஓர் ஐக்கிய முயற்சி வைத்திய சாலையை ஸ்தாபித்தார். இச்சங்கங்கள்தான் விசேஷமாய் அந்த வைத்திய சாலைக்கு



திரவிய யுதவி செய்யபட்டவைகள். யூனியனுடன் சேர்ந்த சங்கங்களின் மெம்பர்கள் தான் இதில் மெம்பர்களாகலாம். ஒவ்வொரு மெம்பரும் கட்டண வரி ரூபாய் ஒன்றும், வருஷச் சந்தா ரூபாய் ஒன்றும் கொடுத்து வருகிறார். அவரும் அவருடைய குடும்பத்தார்களும் இனாமாய் மருந்து வாங்கியும் வைத்தியருடைய ஆலோசனையைக் கேட்டுக்கொள்ளலாம். ஆனால் வைத்தியரை மெம்பரின் வீட்டுக்கு வரவழைத்தால் பாதி படிச் செலவாகிய ரூபாய் ஒன்றும் வண்டிச் செலவும் கொடுக்கிறார்கள். இந்த வைத்தியசாலையானது தேர்ச்சியடைந்த ஸப் அஸிஸ்டெண்டு ஸர்ஜன் ஒருவரின் வசத்திலிருந்து வருகிறது. மெம்பர்களல்லாதவர்களுக்கும் மருந்து கொடுக்கப்படுகின்கின்றது; ஆனால் மருந்துக்கு மாத்திரம் சிறிய கிரயம் வாங்கப்படுகிறது.

ஏழைகளுக்கு இனாமாய் மருந்து கொடுக்கப்படுகிறது. ஸ்தல பிரபு ஒருவர் தமக்குச் சொந்தமான ஓர் வீட்டை வைத்திய சாலையின் உபயோகத்திற்குக் கொடுத்திருந்தார். இந்த வைத்திய சாலை யேற்பட்டது முதல், மருந்து வாங்கின மெம்பர்களின் சங்கியை 393; கிரயம் கொடுத்து மருந்துவாங்கின மெம்பர்களல்லாதவர்களின் சங்கியை 231; இனாமாய் மருந்து கொடுக்கப்பட்ட மெம்பர்களல்லாத யேழைஜனங்களின் சங்கியை 519; ஆகமொத்தம் 1143 ஜனங்கள் பிரயோஜனமடைந்திருக்கிறார்கள். கியாரண்டீ யூனியனிற் சேர்ந்த சங்கங்களின் மெம்பர்கள் 430-இல், 259 பேர்கள் கட்டணவரியையும் வருஷச்சந்தாவையும் கொடுத்துவிட்டு வைத்தியசாலையில் மெம்பராயிருக்கிறார்கள். இப்பொழுதிருக்கும் வைத்தியர் குறைந்த சம்பளத்திற்குழைத்தும், சுயநலத்தை அதிகமாய்க் கருதாமலும் வேலை செய்து வருகிறார்.

## மதராஸ் இன்னும் பின்னால் நிற்கின்றது.

சென்ற மைசூர் கோவாபரேடிவ் கான்பரன்சின் அக்கிராசனம் வகித்த திவான் பகதூர் J. S. சக்கிரவர்த்தி அவர்கள் செய்த பிரசங்கத்தில் இந்தியாவிலுள்ள பற்பல ராஜதானியில் ஐக்கிய முயற்சியானது எவ்விதம் பரவியுள்ளதென்று தாரதம்மியம் பார்த்து அறியும்பொருட்டு இலக்கங்களால் விபரித்துக் காட்டினார். ஒவ்வொரு 1,000 சதுரமயில்கள் விஸ்தீரணமுள்ள பூமிக்கு, பஞ்சாப்பில் சுமார் 33 சங்கங்களும், ஐக்கியமாகாணங்களில் 26 சங்கங்களும், பங்காளத்தில் 25 சங்கங்களுமிருக்கின்றன. ஆனால் மதாராஸில் சுமார் 11 சங்கங்கள் மாத்திரம்தான் யேற்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு லக்ஷ ஜனத் தொகைக்கு, பஞ்சாப்பில் 795 பேர்களும், பம்பாய் ராஜதானியில் 439 பேர்களும் கோவாப்ரேடிவ் சங்கங்களில் மெம்

பர்களாயிருக்கிறார்கள்; ஆனால் இங்கே 287 பேர்கள்தான் சேர்ந்துள்ளார்கள். தொழில்தனமுடைத்தாயிருப்பதில் நம் ராஜதானி இதுவரையில் முதன்மையாயிருந்தது. ஆனால் இப்பொழுது இது பஞ்சாப்பு தேசத்திற்கடுத்தபடியாயும், இரண்டாவதாயுமிருக்கிறது. தொழில்தனத்தை லக்ஷ ஜன விதப்படி பிரித்தால், நம்முடைய ராஜதானி மிகவும் தாழ்ந்துபோகிறது—ரூ. 34,320 விதம் விழுகிறது. இவ்விலக்கங்களினால் நாம் சந்தோஷப் படுவதற்கிடமில்லை. யாவரும் ஐக்கிய முயற்சி அபிவிருத்தியின் பொருட்டு மிகவும் ஆவலுடன் வேலைசெய்வார்களென நம்பப்படுகிறது.

### ஐந்தாவது மதராஸ் பிரோவின்ஷியல் கோவாப்ரேடிவ் கான்பரென்ஸ்

மதராஸ் பிரோவின்ஷியல் கோவாப்ரேடிவ் யூனியனின் நிர்வாக கம்மிட்டியார், ஐந்தாவது மாகாண கான்பரென்ஸை டிசம்பர் 22, 23 தேதிகளில் ஆனரபில் மிஸ்டர் கில்மன் துரையவர்கள் அக்கிராசனத்தின் கீழ் சென்னையில் நடத்துவதாகத் தீர்மானித்திருக்கிறார்கள்.

---

## வீட்டு உண்டிகைப் பெட்டியில் டிபாஸிட்டு செய்தல்

அஸிஸ்டெண்டு ரெஜிஸ்ட்ரார் ம-ா-ா-ஸ்ரீ K. நாகேஸ்வரராவ் பந்துலுகாரு எழுதியது

(1) இந்த இராஜதானியில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள ஐக்கிய சங்கங்களில் பெரும்பான்மையாயுள்ள கிராம விவசாயச் சங்கங்கள் கடன் வாங்குவதும், கடன் கொடுப்பதைமட்டுமே அனுஷ்டித்து வருகின்றனவென்பதும் மெம்பர்களுக்கு சிக்கனம், நாணயம் முதலியவைகளைகற்பிக்க வேண்டுமென்று எதிர்பார்க்கப்படுகிற அச்சங்கங்கள் அவ்விஷயத்தைக் கொஞ்சமேனும் கருதவில்லையென்றும் பகிரங்கமாய் ஏற்பட்டுள்ளது மிகவும் விசனிக்கத் தக்க விஷயமே. இருந்தபோதிலும், மெம்பர் தான் வாங்கின கடனை கெடுப்பிரகாரம் ஒழுங்காய் கொடுக்க வேண்டுமென்ற கடமை, கடன் வாங்கினவனுக்கு சிக்கனம் செட்டு முதலிய பழக்கங்களை கற்பிக்கின்றனவென்பதில் ஆட்சேபணையில்லை ஆனாலும் இப்பழக்கங்கள் கற்றுக் கொள்ளவேண்டிய கற்பனையிலிருந்து வெகு தூரம் எட்டி நிற்கிறது.



(2) ஐக்கியசங்கங்களிற் சேர்ந்துள்ளவர்களெல்லாம் அநேகமாய் எல்லோரும் முதலற்றவர்களாகையினாலே எம்மாதிரி சேவிங்ஸ் டிபாசிட்டுகளும் செலுத்தமுடியாதென்று வழக்கமாய் சொல்லுகிற கட்சியாருண்டு. இவ்விஷயத்திற்கு இவர்கள் வரும்படியின் ஒருபாகத்தைக்கொடுக்க முடியாதென்பதும் கொடுக்க வேண்டுமென்று எதிர்பார்க்கப்படவில்லையென்பதும் உண்மையே; அவர்களுடைய வரும்படியின் மீதியெல்லாம், சங்கத்திற்குக் கொடுக்க வேண்டிய கடனுக்கு ஈடுசெய்யப்படவேண்டும். ஆனால், கவனிக்க முடியாத மிகவும் சொற்பதொகைகள் சொற்பமாயிருக்கும் காரணத்தினாலேயே பிரயோஜனமற்றவையென்று அவசியமல்லாததும், உபயோக மற்றவுமான விஷயங்களில் செலவழிக்கப் படுகின்றனவென்பது அநேகமாய் நாம் எல்லோரும் அனுபவத்தில் கண்டுள்ள விஷயம். இப்பேர்க்கொத்த சிறு தொகைகள் புத்திசாலித்தனமாய் சேர்க்கப்பட்டால் பல துளி பெருவெள்ளம் என்பது போல் நாளடைவில் மிகவும் பெருந்தொகையாகுமென்பதும் சொந்தக்காரர்களுக்கு அவசரச் சமயங்களில் உதவுமென்பதும் நிச்சயமான விஷயம்.

(3) இப்பேர்க்கொத்த சிறு தொகைகளைச் சேகரிக்கும் படியாகத்தான் வீட்டு உண்டிகைப்பெட்டிகள் புதிதாக யேற்பட்டிருக்கிறது. இவ்வித சிறு தொகைகள் மேல் நாடுகளில் மிகவும் சாதுர்யமான வழிகளில் சேகரிக்கப் படுகின்றன. ஐக்கிய சங்கங்கள் தங்கள் விவகார எல்லைக்குள்ள இவ்விதமாய் அகப்படக்கூடிய சில்லரைத் தொகைகளை சேர்க்கவேண்டியதும், முக்கியமாய் ஏழை ஜனங்களை இவ்விஷயத்தில் பழக்கப்படுத்துவதும் தங்களுடைய முக்கிய கடமையாகக் கொண்டிருக்கின்றன. இவ்விஷயத்திற்காக வசூல் செய்ய ஆட்கள் (கலெக்டர்கள்) நியமிக்கப் பட்டிருக்கின்றன. எச்சமயத்தில் ஜனங்களிடம் பணம் இருக்கப்பட்ட சமயமென்று தெரிந்து விடு வீடாய்ச்சென்று பணத்தை வீண் செலவு செய்ய ஜனங்கள் யோஜிப்பதற்கு முன்னமேயே அவர்களிடமுள்ள பணத்தை பறித்து சேகரிக்க இவர்கள் கிரமங்கள் தோறும் போகிறார்கள். சம்பளம் பட்வாடா செய்யப்படும் தினங்களில் ஆபீஸ்களுக்கும், தொழிற் சாலைகளுக்கும் வாரக்கடைசி தினங்களிலும்,

இயந்திர சாலைகளுக்கு கூலி பட்வாடா செய்யப்படும் சமையத்திலும் இந்த சேவகர்கள் போகிறார்ககள். இன்னும் இச்சேவகர்கள் வயல்களிலும் காடுகளிலும் வேலை செய்து கொண்டிருக்கிற கூலியாட்களிடத்திற்கும் பண்ணை வேலை செய்யும் பண்ணையாட்களிடத்திற்கும், போகிறார்கள். இச்சேவகர்களால் வசூல் செய்யப்படும் பணத்திற்கு ரசீதுக்குப்பதிலாக முத்திரையிட்ட துண்டுகளின் துண்டுகளும், இரயில்வேக்களில் கொடுக்கப்படுகிற டிக்கட்டுகள் போன்ற அச்சிட்ட டிக்கட்டுகளும், தொகைகளின் இனத்துக்குத் தகுந்தாற்போல் உருவத்திலும், நிறத்திலும் வெவ்வேறு விதமாக கொடுக்கப்படுகின்றன. இந்த துண்டுகளும் சீட்டுகளும் அவசியமானபோது இந்த இரசீதுகளை கொடுத்த ஐக்கிய சங்கங்களில் ரொக்கப் பணமாக மாற்றிக்கொள்ளலாம். சிறிய இனங்களையுடைய சீட்டுகளுக்குப் பதிலாக பெரிய இனமுள்ள சீட்டை மாற்றிக்கொள்ளலாம்! தபாலாபீசுகளில் தபால் முத்திரைகளை ரொக்கப்பணமாக மாற்றிக் கொள்ளவும், ஏற்பாடுசெய்யப்படுகிறது. சில விடங்களில் சிறிய உண்டிப்பெட்டிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

(4) உண்டிப்பெட்டிகள் மூலயமாய் பணம் சேகரிக்கும் வழக்கம் முதல்முதலில் அமெரிக்கா தேசத்து ஐக்கிய நாடுகளில் ஏற்பட்டது. இப்பொழுதோ அவ்வழக்கம் மானிடரால் வசூல் செய்யப்படும் வழக்கத்திற்கு இந்த உண்டிகைப்பெட்டிகள் அனுகூல சாதகமாய் மேல்நாடுகளிலெல்லாம் விசேஷமாய் பரவியுள்ளது. இம்மாதிரிப்பழக்கம் மிகவும் சுலபமானதாயும் பந்தோபஸ்தாயு முள்ளதால் மற்றெல்லா விதங்களிலும் இப்பழக்கம் மேலானதாக எல்லோராலும் மெச்சப்படுகிறது. உண்டிப்பெட்டிகள் இரும்பினால் அல்லது தகரத்தினால் செய்துள்ள மேலே துவாரமுள்ள சிறிய பெட்டிகள். இத்துவாரத்தின் வழியாய் நாணயங்கள் உள்ளேபோகுமே யொழிய வெளியில் வரமுடியாது. இச்சிறு உண்டிப்பெட்டியானது ஐக்கிய சங்கத்தாரால் பூட்டப்பட்டு ஐக்கிய சங்கத்தார்களே சாவியும் வைத்திருக்கிறார்கள். இப்பெட்டிகளின் எண்ணம் என்னவென்றால் ஜனங்கள் தங்களிடம் பணம் உள்ளபோது பெட்டியில் போட்டுவிடுவார்களென்பதும் பின்னும் அதிலிருந்து எடுத்து செலவழிப்பதிலிருகு தடுக்ப்படுவகார்கள் என்பதுமே. சிலநாட்களுக்குப் பிறந்து இப்



பெட்டிகள் சங்கங்களுக்கு கொண்டுபோகப்பட்டு அங்கே திறக்கப்பட்டு அதிலுள்ள பணம் சங்கக்கணக்கில் வரவு வைக்கப்படுகிறது.

(5) இம்மாதிரிப் பெட்டிகள் உள்ளூரில் தயார்செய்யப்பட்டுகோதாவரி ஜில்லாவில் ஒன்பது சங்கங்களுக்குபட்வாடா செய்யப்பட்டன. ஒன்பது சங்கங்கள் சென்ற கோவாபரேடிவ் வருஷத்தில் உபயோகித்தன. அவைகளின் முடிவு பின்னால் சொல்லப்பட்டிருக்கிறது.

(6) தேர்ச்சியடைந்தவர்கள் கையாளப்பட்டு வருகிற காகிநாடா கோவாபரேடிவ் பாங்கியானது 16 சிறுவர்களிடம் 16 உண்டிகைப்பெட்டிகளை பட்வாடா செய்தன. அப்பெட்டிகள் மாதமொருமுறை சங்கத்திற்கு கொண்டுவரப்பட்டு அதிலுள்ள பணம் சிறுவர்களின் போஷகர்கள் பெயரால் சரப்தா கணக்குகளில் கர்ரெண்டு அக்கவுண்டுக்கு வரவு வைக்கப்பட்டிருக்கிறது. சென்ற கோவாபரேடிவ் வருஷத்தில் ரூ. 494—4—0 இவ்விதமாக சேகரிக்கப்பட்டது. சிறுவர்களுக்குள் இவ்விஷயத்தில் போட்டி ஏற்பட்டது. தேகத்திற்கு கெடுதி செய்யக்கூடிய பட்சணங்களை வாங்குவதிலும், உபயோகமற்றவும், பிரயோஜன மற்றவும் தட்டு முட்டு வினோத விளையாட்டுக்கருவிகளை வாங்குவதிலும், செலவழிக்திருக்கக்கூடிய எத்தனையோ அணாக்கள் இவ்விதமாய் பிரயோஜனமாகக் கூடியதாய் சேகரிக்கப்பட்டது.

(7) இராஜோல் தாலூக்கா ரவுல்பாளையம் கிராமத்தில் சென்ற வருஷம் ஒரு ஐக்கியசங்கம் ஸ்தாபிக்கப்பட்டது. இக்கிராமத்தில் கிறிஸ்தவ பாதிரிமார்கள் ஆதரணையில் ஒரு பிரைமரி பாடசாலையிருக்கிறது. இப்பள்ளிக்கூடத்து உபாத்தியாயர்கள் நற்போதனையின் பேரில் பதினாறு மாணவர்கள் (அவர்களில் சிலர் பஞ்சம கிறிஸ்தவர்கள்) ஐக்கிய சங்கத்தாரால் பட்வாடா செய்யப்பட்ட உண்டிப் பெட்டிகளில் தங்கள் பெற்றோர்களால் கொடுக்கப்பட்டு வந்த சிறு தொகைகளைப் போட்டுவந்தார்கள். சென்ற வருஷம் ஜூன் மாதம் 30 தேதி வரையில் சேகரிக்கப்பட்ட தொகையின் மொத்தம் ரூ. 11—1—0. கிறிஸ்தவபாதிரிமார்கள் ஐக்கிய முயற்சிக்காக செய்து வரும் இம் மதிப்பிட முடியாத உபகாரம் அக்கம்பக்கத்திலுள்ளவர்கள் இவ்விஷயத்

களைக்கண்டு கற்றுக்கொள்ள ஏதுவாயிருப்பதால் அளவிட்டு சொல்லமுடியாது.

(8) கோதாவரி ஜில்லாவிலேயே சூராவரம், அன்னவரம், கோபாலபட்டணம் என்னும் இடங்களில் 31 மெம்பர்களுக்கு 31 பெட்டிகளும் மெம்பரல்லாதவர்களுக்கு இரண்டு பெட்டிகளும் பட்வாடா செய்யப்பட்டன. இம்மாதிரியாக இவ்விடங்களில் வசூலான தொகை ரூ. 28—10—9. இம்மாதிரி அனுஷ்டித்து வந்தவர்கள் வயதடைந்தவர்களே. இத்தொகை கொஞ்சம் பெருந்தொகைகளானவுடன் அவர்களுடைய கடன் கணக்குகளில் வரவு வைக்கப்படும்.

(9) இந்த நடவடிக்கையில் எல்லோரும் சிரத்தை எடுத்துக்கொள்ளவேண்டும். மிச்சம் பிடிப்பதையும் சிக்கனமாயிருப்பதையும் பழக்கப்படுத்துவதில் வேண்டிய அம்சங்கள் உள்ளதான இவ்வழக்கம் மேல் நாடுகளில் மெச்சப்படுகிறது. இம்மாதிரியாக பெருந்தொகைகள் வசூல் செய்யப்பட்டு வருவதாக சொல்லப்படுகிறது. இவ்வழக்கத்தை கைக்கொண்டு சிரத்தையோடு நடத்திவந்தால் நம்முள்ளும் இதைப்போன்ற பலன்கள் கைகூடுமென்பது நிச்சயம்.

---

## விவசாயமும் வர்த்தகமும்

கனம் மிஸ்டர், கார்டன் பிரேசர் துரையவர்கள், கோயம்புத்தூரில் நடந்த சென்ற விவசாய கான்பிரன்சில் அக்கிராசனாதிபதியாக செய்த உபன்னியாசத்தின் சாராம்சம்பின்வருமாறு:—

இன்றைய கான்பிரன்சில் அக்கிராசனம் வகிக்கும்படியாக என்னை வரவழைத்துள்ள கௌரவமானது என்னால் எதிர் பார்க்கப்படாதது. ஆனால் இந்த இராஜதானியில் விவசாயத்திற்கும், வியாபாரத்திற்கும், ஒன்றிற் கொன்று ஏற்பட்டுள்ள ஒற்றுமையின் அறிகுறியைக் காட்டுவதற்காகவும் உங்களுடைய கலாசாலையானது விவசாயத்திற்கு மட்டுமல்லாது வியாபாரவிஷயத்தை விர்த்திசெய்யக்கூடிய சக்தியை யறிவிக்கவும் விவசாயத்திற்கும், வியாபாரத்திற்கும் ஒன்றிற்கொன்று நெருங்கியஒற்றுமை வரவேண்டுமென்று உங்களுடைய விவசாயடைரக்டரவர்கள் கொண்டிருக்கும் கருத்திற்கும் இது ஒரு சாக்ஷியென்று நான் எண்ணுகிறேன்.

நம்முடைய இராஜதானி மட்டுமல்ல, இந்தியா தேசம் முழுமையுமே, ஆதிகாலந் தொட்டு விவசாயமே முக்கியமாகக் கொண்டுள்ளது.



இத்தேசத்தின் வர்த்தகமும் வியாபாரமும் ஏற்றுமதி இறக்குமதியுள்பட, தங்களுடைய தானியங்களையும், விளைபொருள்களையும், அதிகரிக்கச் செய்வதில் குடியானவர்கள் அடையும் தேர்ச்சியினளவைச் சார்ந்திருக்கின்றன. நல்ல தினுசாக அதிக தானியம் விளையும் பட்சத்தில் ஜனங்களுடைய செல்வ நிலைமை மிகவும் முன்னுக்கு வந்துள்ளதென்று சொல்லலாம். விஷயங்களை விர்த்தி செய்வதற்கு வேண்டிய பணமும், புதிய தொழிற்களை ஸ்தாபிக்கவும், தொழிற்சாலைகளுக்கு முதல் சேர்க்கவும் வேண்டிய பணமும் கிடைக்கக்கூடும்.

புதிய தொழிற்களைப்பற்றிச் சொன்னதில், விவசாய விஷயத்திற்கு நேரே சம்பந்தப்பட்ட தொழிற்களென்று நீங்கள் கருதுவீர்களென நான் கோருகிறேன்.

இதனால் நான் தாத்பர்யப்படுவது என்னவென்றால், தானியங்களின் அளவையும், குணத்தையும், அதிகரிக்கச் செய்வதில் உதவிபுரியக் கூடியதான அவ்விதத் தொழிற்கள் முதல் விஷயமாக கவனிக்கப்படவேண்டுமென்பது தான். இவ்விஷயங்களைப் பற்றி உங்களுடைய கலாசாலையிலேயே நீங்கள் கற்றுக் கொள்ளுகிறீர்கள். நீங்கள் கவனிக்க வேண்டிய இரண்டாவது விஷயம் என்னவென்றால் உலகத்தின் வியாபார ஸ்தலங்கள் பல விடங்களுக்கும் உங்களுடைய தானியங்களை தயார் செய்தனுப்பும் விஷயம் சம்பந்தப்பட்ட தொழிற்களைப்பற்றியே தான். குடியானவனுடையவும் பயிர்த்தொழிற் செய்பவனுடையவும் வேலையானது தானியம் விளைந்தவுடனேயே முடிந்து போகிறதென்று நீங்கள் சொல்லலாம். ஆனால் உங்களுடைய உழைப்பின் முழுப்பலனையும் அடைய வேண்டுமென்று நீங்கள் கருதினால் உங்களுடைய தானியங்கள் யாருக்கு பிரயோஜனப்படுகின்றனவோ அவர்களுக்கு நேராகச் சேரும்படி நீங்கள் கவனிக்க வேண்டியது உங்களுடைய கடமையாகும்.

நல்லபொருளை விளைவித்தும், அதைப்பிரயோஜனப்படுத்துவோருக்கும், உபயோகப் படுத்துவோருக்கும், சேரும் முன்னமேயே, மட்டப் பொருள்களைக் கலந்து கொண்டு போகும்படி இதரர்களுக்கு இடங்கொடுப்பதினால் உயர்ந்ததினுசான பொருளையும், தானியத்தையும் விளைவித்ததினால் நமக்கென்ன பயன்? இவ்விதமாக கலக்கப்படுகிறதென்பது முற்றும் உண்மையே. உங்களால் விளைவிக்கப்படுகிற பொருள்களை எத்தனை தினுசான தொழிற்களில் உங்களால் பிரயோஜனப்படுத்த முடியுமோ, அவ்வளவு சாத்தியமான வரையில் தொழிற்களில் பிரயோஜனப்படுத்தாது விளைந்தபொருளை அப்படியே ஏன் இதரதேச வியாபாரிகளுக்குக் கொடுத்து விடுகிறீர்கள்? உங்களுடைய

விளைபொருள்களை உங்களால் சாத்தியமானவரை வேலை செய்து மீதியிருக்கும் பட்சத்தில் இதரதேச வியாபாரிக்குக் கொடுங்கள். தென்னிந்தியாவின் விளைபொருள்களிற் சிலவற்றைப் பற்றியும், அவைகள் சம்மந்தமான தொழிற்களைப் பற்றியும் உங்களுக்குச் சொல்ல பிரியப்படுகிறேன். முதலில் நெல்லைப்பற்றியும் அதின் அரிசி இயந்திர தொழிலைப்பற்றியும் கவனிப்போம். விவசாய இலாகாதாரால் செய்யப்பட்டு வருகிற வேலையின் நற்பலன்கள் மிகவும் சிக்கனமாகச் செய்யக்கூடிய ஒற்றை நடுவு விஷயத்தை பரவச் செய்துள்ளதிலேயே தெரிகின்றன. இவ்விராஜதானியின் நெற்சாகுபடி முழுமையுமே இம்மாதிரியில் நடப்பட்டு விளைவிக்க பிரயத்தனப்பட்டால் விவசாயிகளுக்கு செலவு மிகவும் குறைந்துவிடும் நூறு இலட்சம் ரூபாய்—இலாபங்கிடைக்குமென்று எனக்கு தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இதற்கடுத்தது பருத்தி. கூட்டுறவாலும், விதைகளைப் பொறுக்கியெடுக்கும் தினுசினாலும், விளையக் கூடிய பருத்திகளோ, கணக்கிலடங்காதவையென்று சொல்லக்கூடிய அவ்வளவு, அதிகமாய் இருக்கின்றன.

குடியானவர்கள் படிப்பின்மையினாலும், விவகாரம் தெரியாததினாலும் மிகவும் மட்டமான தினுசு பருத்தியை விளைவிக்க முயலுவதையெல்லாம் உங்களுடைய செல்வாக்கினாலும், பிரயத்தனங்களினாலும் தடுக்க வேண்டும். கிராக்கியும், விலையும் அதிகமாயுள்ளதெல்லாம் நல்ல தினுசான பருத்திக்கேதான். நல்ல தினுசு பருத்தி உற்பத்தி செய்வதில் குடியானவர்களுக்கு கொஞ்சம் தொந்திரவும் கஷ்டமும் அதிகமானாலும், இவைகளுக்கீடாக நல்ல விலை கிடைக்குமென்று நிச்சயமாய்ச் சொல்லுகிறேன். குடியானவர்கள் அஞ்ஞானத்தினாலும் யோஜனையில்லாததாலும் மிகவும் மட்ட தினுசான மணிலாக் கொட்டையை விளைத்தாலும் இப்பொழுது அது மிகவும் பிரயோஜனமும், இலாபத்தைக் கொடுக்கக் கூடியதுமான வியாபாரம். மிகவும் மட்டான விதை உபயோகிக்கப் பட்டு வந்தது. ஒரே நிலத்தில் அதன் சாரம் போகும் வரையில் தொடர்ந்தே மணிலாக்கொட்டை விதைக்கப்பட்டும் வந்தது. பருப்பை தயாரிப்பதில் மிகவும் கவனக்குறைவாயிருந்தார்களென்பது மட்டுமல்ல இன்னமும் அப்படியே இருக்கிறார்களென்பது மிகவும் துக்கிக்கக்கூடிய விஷயமே. மத்தியிலுள்ள வியாபாரிகள் அதில் கலப்பு அதிகமாகச் செய்கிறார்களென்பது இன்னும் புகாருக்கிடமாயிருக்கிறது. விவசாய சம்பந்தமாக தானியங்களை நல்ல தினுசாகவும் அதிகமாகவும் விளைவிக்கும் விஷயத்தைக் குறித்து நான் சொல்லவில்லை. இவையெல்லாம் உங்கள் கலாசாலைப் படிப்பாலே நீங்கள் கற்றுக் கொள்ளுவீர்கள் நான்



உங்களை கவனிக்கச் சொன்னதெல்லாம் விளைவிக்கப்படும் பொருள்கள் மிகவும் நல்ல பொருளாயும், அதிக லாபத்தைக் கொடுக்கக் கூடிய தினுசாயும் வியாபாரத்துக் கனுப்பும்படியாக செய்யப்படவேண்டுமென்பதுதான்.

வியாபாரிகள் மத்தியில் நல்ல பொருளோடு மட்ட சரக்கை கலப்பதால் நேர்கிற கெடுதிகளில் மணிலாக் கொட்டைக்கே அதிக கெடுதி நேர்ந்துள்ளது. அந்தப் பிழை விவாசாயிகளுடையதல்ல. பருப்பெடுப்பதற்காக கொட்டைகளை ஊறவைத்து அடிக்கிறார்கள். இதனால் பருப்பு சீக்கிரம் உளுத்துப் போவதுமன்றி எண்ணையும் உலர்ந்து போகிறது. இம்மாதிரியாகவே விளையும் கடலையில் 100க்கு 75வீதம் தயார் செய்யப்படுகிறது. இதனால் எவ்வளவு நஷ்டமென்று குடியானவர்கள் அறிகிறார்களில்லை; இயந்திரத்தில் உடைத்தபருப்புக்கு கிடைக்கும் விலையில் முக்காற்பாகந்தான் இந்ததினுசில் உடைந்த பருப்புக்கு கிடைக்கிறது. சராசரி பார்க்கப்போனால் விளையும் கடலை முழுவதும் இயந்திரத்தில் உடைக்கப்பட்டிருக்கும் பட்சத்தில் குடியானவர்களுக்கு வருஷம் 1-க்கு 60 இலட்சம் அதாவது நான்கு வருஷங்களுக்கும் 240 இலட்சம் ரூபாய் அதிக இலாபம் கிடைத்திருக்கும்.

கடலை உடைப்பதற்கும் எண்ணெயெடுப்பதற்கும் இயந்திர சாலைகளை ஏற்படுத்துவதற்கும், தொழிற்களை விர்த்தி செய்வதற்கும் கடலை இடங்கொடுக்கிறது.

ஐரோப்பாச்சண்டை ஆரம்பமான முதற்கொண்டு அவுரிவியாபாரம் தலையெடுத்திருக்கிறது. இவ்வியாபாரம் நிலைத்திருப்பதும் மத்தியில் மாண்டுபோவதும் இனிமேற் தெரியவேண்டிய விஷயம். நிலையாக நிற்கும் பட்சத்தில் விவசாயிகள் அதைக் கவனிக்கவேண்டியதவசியம். அது எல்லோருக்கும் மிகவும் இலாபகரமான வியாபாரமாய் ஏற்பட்டிருக்கிறது.

உங்கள் தானியங்கள் வியபாரத்துக்கு அனுப்பப்படும்போது கலப்பில்லாமற் போய்ச்சேரும்படியாக கவனியுங்கள். ஏனெனில் அது ஏமாற்றுகிறவிஷயம் மனச்சாட்சிக்கு விரோதமான காரியம். வியாபாரமுறைக்கு ஒழுங்கற்ற விஷயம். இலாபத்தைக்குறைக்கக்கூடிய விஷயம். உங்கள் சரக்கை வாங்குகிறவர்களை நீங்கள் ஏமாற்றிவிடுவதாக நினைக்கும் பட்சத்தில் அதைப்போன்ற கேவலம் வேறொன்றுமில்லை. ஏனெனில் உங்கள் சரக்கை வாங்கினவர் மறுதரம் உங்கள் சரக்கை வாங்கமாட்டார். இரண்டாவது உங்கள் சரக்கு கலப்புள்ள

தென்று அறியும் பட்சத்தில் அதற்கேற்றாப்போல், அதை சுத்தப் படுத்தவேண்டியதற்கதிகமாக விலையைத்தள்ளி வாங்குவார். ஆகையால் உங்கள் பொருள்களை விளைவிப்பதில் மட்டுமல்ல, அப்பொருள்கள் கலப்பில்லாமல் வியாபாரஸ்தலங்களுக்குப் போய்ச்சேரும்படியாக கவனிக்கவேண்டியதும் உங்கள். கடமை. கனவான்களே ! உங்கள் கலாசாலைப்படிப்புமுடிந்து வெளியிற்போனவுடனே உங்கள் அகசம் பக்கத்தார்கள் உங்களிடம் கற்றுக்கொள்ளும்படியாக நீங்கள் நடக்க வேண்டும்.

கடைசியாக நான்கூறும் புத்திமதியாதெனில் என் புத்திக்கும் அனுபவத்திற்கும் தெரிந்தவரையில் நல்லவிதையைப் பொறுக்கி யெடுத்து நல்ல நிலத்தில் உயர்ந்த தினுசுப்பொருளாக சாகுபடிச் செய்து, கலப்பொன்று மில்லாது, கூட்டுறவால் நீங்கள் விளைவிக்கும் பொருள்களுக்கு அதிக இலாபம் கிடைக்கும் படியாக பிரயத்தனம் செய்ய வேண்டுமென்பது தான்.

விவசாய விஷயத்திலும், வியாபார விஷயத்திலும் இக்கலாசாலையின் பழைய மாணாக்கர்களிடத்திருந்தும், தற்போதிய மாணவர்களிடந்திருந்தும் அதிக நன்மை பெறுவதற்கு நாமெல்லோரும் ஆவலுடன் எதிர்பார்க்கிறோம். நம்முடைய எண்ணம் ஏமாறாதபடிக்கு அவர்கள் நடப்பார்களென்று நான் உறுதியாய் எண்ணுகிறேன்.

---



# மதராஸ் ராஜதானிபாங்கி நிர்மாணம்

புத்தூர் ம-ா-ா-ஸ்ரீ M. ஷிவராவ் அவர்களெழுதியது.

விவசாய சம்பந்தமுள்ளனவும், விவசாய சம்பந்தமில்லாதனவும் வரையறுக்கப்பட்ட பொறுப்புள்ளனவும், வரையறுக்கப்படாதபொறுப்புள்ளனவுமாகிய இச்சென்னை இராஜதானியிலுள்ள, பிரைமரி கோவாபரேடிவ் சங்கங்களுக்கு தற்காலம் வெளி உதவி வேண்டும் போதெல்லாம் சென்டரல் பாங்கிகளும், பாங்கிங் யூனியன்களும் திரவிய சகாயம் செய்து வருகின்றன. அவ்வாறு பொருளுதவிபுரியும் சங்கங்கள் பத்து இப்போது இருக்கின்றன. இவைகளில் சில தனிகராலேயே நடைபெற்றும் மற்றும் சில தனிகரும் பங்குத் தொகை எடுத்துள்ள சங்கங்களும் ஆகிய இருவரால் ஆக்கப்பட்டு நடைபெற்றும் வருகின்றன. இப்போது இந்த ராஜதானியிலே கூட்டுறவு நாணயத்தை உன்னத நிலைக்குக் கொண்டுவர இன்றியமையாது செய்யவேண்டுவதாகிய ஓர் விஷயம் உண்டு. அதாவது, இராஜதானியில் பற்பல பாகங்களிலுள்ள எல்லாச்சங்கங்களையும் தன்னுடன் சேர்த்துக்கொண்டு, உபயோக மில்லாமல் ஒருசங்கத்திலிருக்கும் அதிகபணத்தை அவசியமாகவேண்டியிருக்கும் மற்றோர் சங்கத்திற்கு மாற்றிக் கொடுத்துதவக்கூடியதுமாகியஒரு பொதுத்தலைச்சங்கம்ஏற்படுத்தவேண்டும். பணக்குறைவு மிகுதிகளைச் சரிப்படுத்தக்கூடிய அப்படிப்பட்ட ஒரு பொதுத்தலைச்சங்கம் யிராத காரணத்தினாலேயே ஒரு சென்டரல் பாங்கு தன்னிடமிருக்கும் அதிகபணத்தை எவ்விதம் வட்டிக்கு விடுவது என்பது தோற்றாமல் திகைக்கவும் மற்றோர்சென்டரல் பாங்கு போதுமான தொகை யிராததினால் கொடுக்கவேண்டியவர்களுக்குக் கொடுக்க இயலாது கஷ்டப்படவும் அடிக்கடி நேரிடுகிறது. ரிஜிஸ்திராரும், அஸிஸ்டெண்டு ரிஜிஸ்திரார்களும் பணம் அதிகம் வைத்திருக்கும் பாங்கும் பணம் வேண்டியிருக்கும் பாங்கும் ஒன்றோடொன்று கடிதப்போக்குவரவு செய்வதற்கு வேண்டிய அனுகூலங்களைச் செய்துவருகிறார்களென்றாலும், வட்டி தீர்மானஞ்செய்வதிலும், சரியான விதத்தில் கொடுக்கப்படுகிறதா என்பதை நிச்சயிப்பதிலும் சிலகாலம் வீணாய்ப்போய் விடுகிறது. அப்போது சில பாங்குகளில் உபயோகப்படாமல் அதிகபணம் நின்றுவிடுகிறது. பணத்தை உபயோகிக்க கூடாமையால் வரும் டிபாசிட்டுகளையும் வேண்டாமென்று சில பாங்குகள் மறுக்கவும் நேரிடுகிறது.

1914-15௵த்தின் மாரிகாலத்தில் இந்தியாவின் பலபாகங்களையும் பார்த்துவந்த கோவாபரேஷன் இம்பீரியல் கமிட்டியார் சில பாங்

குகள் உபயோகமில்லாமல் பணம் வைத்திருப்பதும் மற்றும் சில பாங்குகள் பணக்குறைவினால் கஷ்டப்படுவதுமாகிய இந்நிலையைநீக்கக் கருதி ஒவ்வொரு இராஜதானியிலும் புரொவின்ஷியல் அல்லது அபெக்ஸ் என்னும் ஒரு பாங்கியை ஏற்படுத்தவேண்டுமென்றும் அந்த பாங்கியைக் கடைசியாய் சென்டரல் பாங்குகளோடு மாத்திரமே, லேவாதேவி செய்யவேண்டுமென்றும் அதை நடத்தும் மானேஜிங் போர்டார் மிகவும் வியாபாரத் தேர்ச்சியுடையவர்களாயிருத்தல் வேண்டுமென்றும் அந்த பாங்கின் மேலான விசாரணைகர்த்தர்கள் சங்கங்களாய் இருத்தல் வேண்டுமென்றும் குறிப்பித்திருக்கிறார்கள், மேலும் ஆரம்பத்தில் புரொவின்ஷியல் பாங்கியின் நோக்கத்துடன் ஸ்தாபிக்கப்பெற்ற மதராஸ் சென்டரல் அர்பன்பாங்கி (லிமிடெட்) என்பது, கமிட்டியார் மேலே காண்பித்துள்ள சில முக்கியமான மாறுதல்களைச் செய்ய உடன்பட்டால் இந்த சென்டரல் பாங்கையே புரொவின்ஷியல் பாங்காக மாற்றிவிடக்கூடும் என்றும்கமிட்டியார் அபிப்ராயப்பட்டிருக்கிறார்கள்.

புரொவின்ஷியல் பாங்கின் ஸ்தாபனவிஷயமும் மற்றும்கோவாபரேஷன் சம்பந்தமாய் செய்யவேண்டிய சீர்திருத்தங்கள் பலவும் அடங்கிய ரிபோர்ட் 1915ளு ஆகஸ்ட்டுமீ வெளிவந்தும் நாளதுவரையில் மதராஸ் சென்டரல் பாங்கியார் தங்களுடைய பாங்கை புரொவின்ஷியல் பாங்காக மாற்றவேண்டி யாதொரு முயற்சியும் எடுத்துக்கொண்டதாகக் காணப்படவில்லை. ஆனால் மதராஸ் சென்டரல் பாங்கின் டைரெக்டர்கள் பாங்கின் பங்குகள் விற்பனைக்குவரின் அவற்றைச் சங்கங்கள் விலைக்கு வாங்கினால் வாங்கும் சங்கங்களை பங்குதாரர்களாக ஒப்புக்கொள்ள சம்மதிப்பார்களெனவும் வேறு மாறுதல்களைச் செய்ய அவர்கள் உடன்படமாட்டார்களென்றும் ரிஜிஸ்திரார் மூலமாய் எனக்குத் தெரியவருகிறது.

ஆகையினால் புரொவின்ஷியல் பாங்கு ஒன்று இப்போது ஸ்தாபித்தல் கூடாதகாரியம் என்று விட்டு விடவேண்டும். அவ்வாறன்றி ஒரு புரொவின்ஷியல்பாங்கு ஏற்படுத்தவேண்டுமாயின் அப்பொறுப்பை இராஜதானியிலுள்ள எல்லா கோவாப்ரேடர்களும் முக்கியமாய் ஜில்லாபாங்குகளும், சென்டரல் பாங்குகளும், பாங்கிங்கு யூனியன்களும் வகித்தல்வேண்டும். இந்த இராஜதானியிலுள்ள கோவாபரேடர்களில் பெரும்பாலோர் புரொவின்ஷியல் பாங்கியின் ஸ்தாபன விஷயமாய் ஒத்து வேலைசெய்தால், ஓர் நேர்த்தியான புரொவின்ஷியல் பாங்கை உண்டாக்குவதற்கு வேண்டிய சாதனங்கள் தங்களிடத்



திலே இருக்கின்றன என்பதை கோவாபரேஷன் விஷயம் தெரிந்துள்ள யாரும் அறிவார்கள்.

புரொவின்ஷியல் பாங்கு ஸ்தாபனவிஷயமான பெரிய இப்பொறுப்பை பழய பாங்கிங்கு யூனியன்கள் மேற்கொள்ளாது என்னிடம் ஒப்புவித்திருக்கிறார்களாகையால் இச்சுற்றுக் கடிதத்தை நான் தங்களுக்கு அனுப்பியிருக்கிறேன்.

இந்த இராஜதானியிலுள்ள கோவாபரேடர்களுக்கு பாங்கிங்கு யூனியன் என்ன என்பதுதெரியும். புரொவின்ஷியல் பாங்குஎகெல்டு இராஜதானியிலுள்ள எல்லா சங்கங்களும் தன்னிடம் பங்குற்றுத்துள்ள சங்கங்களாகக் கொண்டுவிளங்கும் ஒரு சென்டரல் யூனியன்கும்.

(1) இந்த புரொவின்ஷியல் பாங்கிக்கு வேண்டிய மூலதனம் இரண்டுலக்ஷம் ரூபாய் என மதிப்பிடப்படுகிறது. இப்பெருந்தொகை சில குறித்த சங்கங்களைக் கஷ்டப்படுத்தாமலும் சில தனிகர்களுடைய உதவியையே அதிகமாய் எதிர்பார்க்காமலும் எல்லாச் சங்கங்களிடமிருந்தும் எளிதாய் வரும் என நம்பப்படுகிறது.

(2) இம்பீரியல் கமிட்டியார் தங்களுடைய ரிபோர்ட்டில் தெளிவாய்ச் சொல்லியிருக்கிறபடி இப்புரொவின்ஷியல் பாங்கியின் எல்லா விஷயங்களிலும் முடிவான தீர்மான அதிகாரம் சங்கங்களைச் சேர்ந்தது.

இரண்டு லக்ஷம் ரூபாய் பங்குத்தொகை சேகரிக்க இராஜதானியிலுள்ள இரண்டாயிரம் சங்கங்களும் நூறு ரூபாய் பொறுமான சராசரி ஒருபங்கை ஒவ்வொருசங்கமும் எடுத்துக்கொள்ளல்வேண்டும். பங்கின் பாதிதொகையை நிருத்திவைக்கப்பட்டிருக்கும் பொறுப்புத் தொகையாகவும், மிகுதி பாதியைவருஷம் ஒன்றுக்கு ரூபாய் ஐந்து வீதம் வசூலிக்கவும் ஏற்பாடுசெய்யப்பட்டிருக்கிறது. ஆகையால் பங்கெடுக்கவிரும்பும் சங்கம் ஒரு பங்குக்காக பிரவேசகட்டணம் ரூபாய் ஒன்றும் பங்குத்தொகைக்காக ரூபாய் ஐந்தும் ஆக ரூபாய் ஆறு அச்சங்கத்தின் சென்டரல் பாங்கிக்குச் செலுத்தல்வேண்டும். சங்கங்கள் அதிகதொகை செலுத்த யாதொரு ஆக்ஷேபணையுமில்லை. ஆனால் ஒரு பங்கை எடுக்க குறைந்தது முதல் செலுத்தவேண்டியது ரூபாய் ஆறு ஆகும். இவ்விதம் பங்கு எடுத்துக் கொள்ளப்போதுமான சங்கங்கள் சம்மதிப்பதுமல்லாமல் பங்கின் முதல்பகுதியையும் செலுத்தியவுடனே புரொவின்ஷியல் பாங்கு ஒன்று ரிஜிஸ்தர்செய்ய வேண்டுமென ரிஜிஸ்தராருக்கு ஒருமனு அனுப்பப்படும். ரிஜிஸ்தரா

ருக்கு அனுப்பும் மனு, சட்டத்தில் விதித்துள்ளபிரகாரம் இருக்கவேண்டுமாகையால் இத்துடன் அனுப்பியுள்ள மனுவினு மசோதா சகாயச் சட்டங்களிலும் கையெழுத்துவைத்து அனுப்பவேண்டப்படுகிறது. இவ்விதம் செய்வதற்கும் மகாஜனக்கூட்டத்தின் அனுமதி வேண்டுமாயின் * உடனே அச்சபையைக்கூட்டி உத்தரவுபெற்று அனுப்பவேண்டும். சங்கங்கள் இரண்டாயிரம் பங்குகள் எடுத்துக் கொள்ளும் என நம்பப்படுகிறது. நல்ல நிலைமையிலுள்ள சங்கங்கள் ஒருபங்குக்குமேல் எடுத்துக்கொள்ளலாம். செல்வாக்கில்லாத சங்கங்கள் அவசரமில்லாத ஒரு செலவைச் குறைத்தாகிலும் குறைந்தது ஒருபங்கேனும் எடுக்கக் கோரப்படுகிறது. ஆயிரம் பங்குகள் சங்கங்களல்லாத தனிகர்களுக்கு ஏற்படுத்தப்படும். அவர்கள் பங்குத்தொகையின் பத்தில் ஒருபாகத்தை மனுவோடு செலுத்துதல்வேண்டும். மிகுதியை வேண்டும்போது செலுத்தல்வேண்டும். தனிகர்களுக்கு இன்னும் அதிக பங்குகள் வேண்டியதாயிருந்தால் சங்கங்களும் அவ்வளவு அதிகம் பங்குகள் எடுத்தபின்னரே தனிகர்களுக்குக் கொடுக்கப்படும். இந்த நிபந்தனைக்குக்காரணம் மகாசபையில் பெரும்பான்மையான ஓட்டுகள் முதலிலிருந்தே சங்கங்களுடையதாய் இருத்தல் வேண்டும் என்பதே. ஒரு பங்குதாரன் எத்தனை பங்குகள் எடுத்திருந்தாலும் அவனுக்கு ஓட் ஒன்றேயாகும் என்னும் கோவாபரேடிவ் முக்கியவிதி அனுசரிக்கப்படும்.

இம்பீரியல் கமிட்டியார் கூட்டுறவைப்பற்றி பாங்கிகளின் பொறுப்புகளில் ஒன்றுக்கொன்றில் ஒருசிக்கு ஏற்படாமலிருக்கிறதற்காக ஸெண்ட்ரல்பாங்குகள் இனிமேல்பட ஒன்று மற்றொன்றிலிருந்துப்ரொவின்ஷியல் பாங்குமூலமாய் தவிரகடன் வாங்கக்கூடாதென்றும், ஜாயிண்ட்ஸ்டாக்பாங்கில் கடன் வாங்குகிறதற்கு ஏற்பாடுகள் பிரொவின்ஷியல்பாங்கைபொறுத்ததென்றும்,சிபாரிசுசெய்திருக்கிறார்கள். இந்த அபிப்பிராயங்களுக்கு அனுசரணையாய் இப்பொழுது உத்தேசித்திருக்கிறபுரொவின்ஷியல் பாங்கு தன்னுடைய சக்திக்கு மேற்படாமல் ஸெண்டரல் பாங்குகளுக்கு எவ்வளவு கடன் வேண்டுமோ அவ்வளவு கொடுக்கும்; ஆனல் ஸெண்டரல் பாங்குகள் தங்களுக்காக, தங்களால் எவ்வளவுமுடியுமோ அவ்வளவு உள்ளூர் டிபாசிட் சேர்க்குமென்றும்

* சில சங்கங்களுக்கு பிரத்தியேக மகாசபையின் தீர்மானம் அவசியமில்லை. ஏனென்றால் ரிஜிஸ்தாரால் சரியான எல்லைக்குள் ஸ்தாபிக்கப்படும் எந்த யூனியனாயினும் ஒரு சங்கத்தை அணைத்துக்கொள்ளும் அதிகாரம் அச்சங்கத்தின் பஞ்சாயத்துதாரர்களுக்கும் நிர்வாக சபையினருக்கும் உரியதாயிருக்கிறது.



அதற்குமேற்பட்டால் புரொவின்ஷியல் பாங்கு சகாயத்தை, எதிர்பார்க்குமென்றும் நம்பப்படுகிறது. ஸெண்ட்ரல் பாங்குகள் புரொவின்ஷியல் பாங்குக்கு கொடுக்கவேண்டிய வட்டியின் வீதம் வழக்கம்போல் சந்தற்பத்தை அனுசரித்து இருக்கும். ஆனல் புரொவின்ஷியல் பாங்கியில்நடமாடும் தனம் 10 லக்ஷம் ரூபாயாகிவிட்டால், ஸெண்ட்ரல் பாங்குகளுக்கு தான் கொடுக்கும் கடன்களின்பேரில் 100–க்கு ½ வீதம் மேற்பார்வைக்காக, செலவழிக்கும்படி 100-க்கு $6\frac{3}{4}$–க்கு அதிகப்படாமல் புரொவின்ஷியல் பாங்கு கடன்கொடுக்க முடியுமென்று நம்பப்படுகிறது. இதற்குமேல் வட்டியை குறைக்கிற விஷயம் சங்கங்கள் ஒத்துழைப்பதை பொறுத்திருக்கிறது.

இம்பீரியல் கமிட்டியார் சிபாரிசு செய்கிறபடி ஸெண்டரல் பாங்குகளின் பொருட்டு வெளி பாங்குகளில் கடன் வாங்குகிறதற்கு திட்டங்கள் புதிதாய் ஏற்படப்போகிற புரொவின்ஷியல் பாங்கைச் சேர்ந்தது. இப்படிச் செய்யும் பக்ஷத்தில் மதராஸ் பாங்கியிலிருந்து வாங்கி இப்பொழுது அனுபவித்துக் கொண்டுவருகிற ஒவ்வொரு ஸெண்டரல் பாங்கிக்கும் புரொவின்ஷியல் பாங்கு இப்போது அனுபவிக்கிற அளவுக்கும் அதே வட்டிக்கும் ஓவர் டிராப்ட் கொடுக்கும். இப்போது கொடுக்கும் குறைந்தவட்டிகளுக்கு ஸெண்ட்ரல் பாங்குகள் தாங்கள் வாங்கும் டிபாசிட்டுகளுக்கு (நீண்டகால டிபாசிட்டுகளுக்கு வருஷம் 1-க்கு 6 வீதமும், குறுகிய தவணை டிபாசிட்டுகளுக்கு 100–க்கு $5\frac{1}{2}$, 5 வீதமும்) மேற்படாத வீதத்திற்கு புரொவின்ஷியல் பாங்கு டிபாஸிட்டு ஏற்றுக்கொள்ளும். இவ்வீதங்களுக்கு ஸெண்டரல் பாங்குகள் ஏற்றுக்கொள்ளுகிற டிபாசிட்டுகள் அந்த பாங்குகளில் செலவழிக்கப்பட இடமில்லாவிடில் புரொவின்ஷியல் பாங்கிக்கு மாற்றிவிடலாம். அப்பொழுது புரொவின்ஷியல் பாங்கு டிபாசிட்டை ஏற்றுக்கொள்ளுகிற பாங்கை அந்த டிபாசிட்டுகளின்பேரில் கொடுக்கவேண்டிய வட்டியைக் கொடுத்து காப்பாற்றும். அதனோடுகூட மாற்றவேண்டியதற்காக ஏற்படுகிற செலவை எந்த ஸெண்ட்ரல் பாங்கு டிபாசிட்டை அனுப்பினதோ அந்த பாங்கு ஏற்றுக்கொள்ளவேண்டும். ஸெண்டரல் பாங்குகள் இன்ன எல்லைக்குகள்தான் டிபாசிட்டை அனுப்பினதோ அந்த பாங்கு ஏற்றுக்கொள்ளவேண்டும். ஸெண்டரல் பாங்குகள் இன்ன எல்லைக்குள்தான் டிபாசிட்டுகள் சேகரிக்கலாம் என்று, வரையறை கிடையாது. ஆனல் வட்டியின் வீதங்களின்பொருட்டு ஸெண்டரல் பாங்கு டிபாசிட்டுகள் வைக்க எண்ணமிருக்கிறவர்களுக்கு புரொவின்ஷியல் பாங்கு ஏற்படுத்தியிருக்கிறதைவிட இன்னும் சரசமான நிபந்தனைகள் ஏற்படுத்தி புரொவின்ஷியல் பாங்கோடு போட்டி செய்யக்கூடாது.

புரொவின்ஷியல் பாங்கு திறமையாய் வேலை நடத்துவதற்காக வேண்டிய ஆபீஸ் சிப்பந்திகள் முக்கியமாய் கவனிக்கப்படவேண்டும். மாதம் ஏறக்குறைய 200 ரூ. சம்பளத்தில் ஒரு செக்டெரியும், வீட்டு வாடகை உள்பட அதே தொகைக்கு ஆபீஸ் சிப்பந்திகளும் ஏற்படுத்தவேண்டும். அனேகமாய் சாதல்வார் செலவுகளும், கடுதாசி முதலியவைகளும் மாதாந்திரசெலவு 500 ரூபாயிக்குப் போகும். இது வருஷத்திற்கு 6,000 ரூ. தான் ஆகும். பிரொவின்ஷியல் பாங்கு தன் வேலைக்கு போதுமான பணத்தின்பேரில் 100–க்கு 6 வீதம் வட்டி கொடுத்து 100–க்கு $6\frac{3}{4}$ வீதம் கடன்கள் கொடுத்தால் பங்குத்தொகைக்கு 200-க்கு 6 வீதம் ஈவுத்தொகை கொடுத்தபிறகு, ரூ. 6,000 சிப்பந்திகளின் விஷயமாய் செலவிட 8 லக்ஷம் ரூ. தான் பாங்கு வேலை நடத்துவதற்கு வேண்டியிருக்கும். இந்த ஸ்திதிக்கு பாங்கு வரும் வரையிலும் செக்ரிடெரிக்கு மாதம் 200–க்கு குறைவாகவே சன்மானம் செய்யவேண்டும். ஆனால் யாராவது ஒரு கோவாபரேடர் மாதாந்திர சம்பளமில்லாமல் வருஷத்தில் ஏதாவது கொஞ்ச சன்மானத்திற்கு செக்ரிடெரியாய் வர இஷ்டப்படக்கூடும்.

இப்பொழுதுதான் ஈவுத்தொகையைப்பற்றி சொல்லப்பட்டது. பாங்கு தனது பங்குத்தொகையைச் சேகரம் செய்ய சங்கங்களின் சகாயத்தையே கோருமானால் 100–க்கு 6 விட ஈவுத்தொகை கொடுக்க பாங்கிக்கு அவசியமிருக்காது. ஆனால் பாங்கு, அதன் பங்குத்தொகைக்காக நபர் முதலாளிகளை எதிர்பார்க்கும் பக்ஷத்தில், முதலாளிகளின் பங்காகிற ஸ்திதியை அடைகிறதுமல்லாமல் 100–க்கு 7,8 அல்லது 9 வீதம் சுதந்திர ஈவுத்தொகை கொடுக்கவும் நபர் பங்குதார்களின் பொருட்டு விசேஷ விதிகள் செய்யவும், சங்கங்களுக்கு மாத்திரம் 100–க்கு 6 வீதத்திற்கு ஈவுத்தொகையைக் குறைக்கவும் நேரும் இவ்விதமான கஷ்டங்களைக்குறித்து, பங்குகளை ஒருவரை யறுக்கப்பட்ட நெம்பரை உடைய முதலுடையவர்களுக்கு யாதொரு சுதந்திர ஈவுத்தொகை யில்லாமல் வைப்பதும், முக்கியமாகவே சங்க பங்குதாரர்களுடைய பங்குத்தொகையிலிருந்து மூலதனத்தைச் சேர்க்க முயலுவதும் தான் சரியானவழி.

புரோவின்ஷியல் பாங்கு நிர்வாக சபையானது தனிப்பங்குதாரர்களுடைய பிரதிநிதிகளும், ஸெண்டரல் பாங்குகளுடைய பிரதிநிதிகளும் பிரதம சங்கங்களுடைய பிரதிநிதிகளும், சேர்ந்ததாயிருக்கும். ஆனால் பின்சொல்லப்பட்ட இரண்டு கூட்டங்கள் சேர்ந்து எப்பொழுதும் மிகுதியாகவே யிருக்கவேண்டும். சங்க நிர்வாக சபை அநேகமாய் மதராஸிலேயே வசிக்கிறவும். காரியம் நடத்துகிறதற்காக வாரந்தோறும், ஒருமுறை அல்லது அடிக்கடி கிரமம் தவறாமல் கூடுகிற ஸ்திதியிலிருக்



கிறவும், குறைந்தது மூன்று நிர்வாக சபையார் அடங்கிய ஸ்டாண்டிங் கமிட்டி ஒன்றைத்தெரிந்தெடுக்கும். இக்மகட்டி எவ்வளவுதூரம் தன் ஆலோசனைகளை முன்கொண்டு வரலாம் அல்லது காரியங்களை நடத்தலாம் என்பது நிர்வாகசபையின் ஸ்டாண்டிங் கட்டளைகளினால் நிர்ணயிக்கப்படும். சம்பளம் பெறும் நபராயிருந்தாலும் சரி அல்லது சம்பளமில்லாமல் சன்மானத்துக்கு மாத்திரம் அருகனாயிருக்கிற நிர்வாக சபை மெம்பராயிருந்தாலும் சரி, செக்ரிடெரியாக நியமனம்பெருபவர் ரிஜிஸ்திரார் முன் அனுமதியில்லாமல் நிர்வாக சபையாரால் ஏற்படுத்தப்படவும் அல்லது, தண்டனை விதிக்கப்படவும் அல்லது தள்ளப்படவும் கூடாது.

நிர்வாக சபையாருடைய மீட்டிங்குகள் மூன்றுமாதத்திற்கு ஒருதரம் கூடலாம், வேலை போதுமான நிலைமையை அடைகிறவரைக்கும், நிர்வாகசபை மெம்பர்கள்தான் பிரயாணத்திற்குறிய சார்ஜு செலவுகளை ஒப்புக்கொள்ளவாவது, அல்லது சங்கங்களின் பிரதிநிதிகளாய்யிருந்தால் அந்த சங்கங்களின் கடன் கணக்கில் மேற்கூறிய செலவுகளை பதியவாவது வேண்டியிருக்கும்.

ஸெண்டரல்பாங்குகளும் புரொவின்ஷியல் பாங்கும் போதுமான வரையில் எளிதாய் பணமாய் மாற்றக்கூடிய வழிகளில் பணத்தை சேகரித்தாவது அல்லது நினைத்தபோது பணம் கிடைக்கத்தக்கதாய் ஏற்பாடுகள் செய்தாவது,,தங்களை பந்தோபஸ்து செய்து கொள்ள வேண்டியதைப்பற்றி இம்பீரியல் கமிட்டியார் சவிஸ்தாரமாய் சொல்லியிருக்கிறார்கள். இதனால் மேற்கூறிய கமிட்டியார் எண்ணுகிறது என்னவென்றால், முன்சொன்ன பாங்கு புரொவின்ஷியல் பாங்கு விஷயத்தில் வருஷப்பொறுப்புகளில் மூன்றிலொருபங்கும், இதர ஸெண்டரல் பாங்கு விஷயத்தில் பாதியும். டிபாசிட்டு மூலமாய் உண்டான பொறுப்புகளிலிருந்து தடையில்லாமல் மீட்டுக்கொள்ள திறமையுள்ளதாய் செய்யும்படியான தொகையைச் சீக்கிரம் கிடைக்கக் கூடிய ரிஸர்வும் ஓவர் டிராப்டும், கைரொக்க ரூபமாய் அடையவேண்டும். புரொவின்ஷியல் பாங்கு அப்பேர்கொத்த திரவமூலதனத்தை தன் ஆதீனத்தில் உடைத்தாயிருக்குமென்று நம்பப்படுகிறது. இதை உத்தேசித்து மதராஸ் பாங்கால் ஸெண்டரல் பாங்குகளுக்கு, கொடுக்கப்பட்டிருக்கிற ஓவர்டிராப்டை பொரொவின்ஷியல் பாங்குக்கு மாற்றிவிட ஆலோசனை செய்யப்பட்டிருக்கிறது. இப்படிச்செய்தால் புரொவின்ஷியல் பாங்கு தன்னைச்சேர்ந்த ஒவ்வொரு ஸெண்டரல் பாங்கிக்கும் திரும்ப ஓவர்டிராப்ட் கொடுக்கவும், அந்தக்கடன்பேரில் மதராஸ் பாங்கு சாற்றுகிற அதே வட்டியையாவது அல்லது 100–க்கு $\frac{1}{2}$ ஜாஸ்தியாவது சாற்றவும் கூடும்.

## தஞ்சைஜில்லா ஐக்கிய எருச்சங்கம் லிமிடெட்.

நீடாமங்கலம் ம-ா-ா-ஸ்ரீ ரேய் ஸாகிப் ஏ. சேதுராமய்யரவர்களெழுதியது.

இச்சங்கத்தை ஐக்கியசங்கச்சட்டப்படி ரிஜிஸ்டர்பண்ணவேண்டியதற்காக ஸர்.எஸ்.சுப்பிரமணிய அய்யர், ஆனரபில் மிஸ்டர் வி.கே. ராமானுஜாச்சாரியார், ஆனரபில் மிஸ்டர் கே.சிதம்பரநாத முதலியார் முதலிய 16 கனவான்கள் 1916ம்-௵ ஜூலைமீ 28௳ ஐக்கியச்சங்க ரிஜிஸ்டராருக்கு மனுவை அனுப்பினார்கள். ஆகஸ்டுமீ 13-ந் தேதி ரிஜிஸ்ட்ரார் பொறுப்பு வரையறுக்கப்பட்ட ஓர் ஐக்கியச் சங்கமாக இதை ரிஜிஸ்டர் செய்தார். இவ்விஷயம் 5—9—16-ல் மனுதாரர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது. 1—10—16-ல் இச்சங்கத்தின் மகாசபை மீட்டிங்குகூடி நிர்வாக சபையார் ஒருவரைத்தேர்ந்து எடுத்து வேலை ஆரம்பிக்கப்பட்டது. அப்பொழுது 18 மெம்பர்களிடமிருந்து 47 பங்குக்கு ரூ. 235 பங்குத்தொகையாகவும், ரூபா. 16—8—0 பிரவேச கட்டணமாகவும் நீடாமங்கலம் சேதுராமய்யரால் வசூல் செய்யப்பட்டிருந்தது. மீட்டிங்குசமயத்தில் 3பேர்கள் சேர்வதாகச்சொல்லி பிறகு தங்களுடைய பங்குத்தொகையையும் பிரவேச கட்டணத்தையும் செலுத்திவிட்டார்கள். மகாஜன சபையார் 1—10—16.ல் 5 டன் எலும்புவாங்கவும் 1 டன் பாஸ்பரிக் நாடியூலும் (அதாவது) எலும்புசத்துள்ள பாறைக்கல்கள் வாங்கவும் அனுமதி கொடுத்திருக்கிறார்கள். 1 டன் பாறைக்கல்கள் வாங்கப்பட்டன. பிறகு 4 பேர்கள் இச்சா மெம்பர்களாகச் சேர்ந்தார்கள். அவர்கள் இப்பொழுது எலும்பு சேகரம் செய்துகொண்டிருக்கிறார்கள்.

### சங்கத்தினுடைய நோக்கங்கள்.

எலும்பு, எலும்பு ஸத்துள்ள உருண்டை கற்கள், மீன் உரம், புண்ணாக்கு, சூப்பர் பாஸ்பேட் என்று சொல்லப்படும் கரையக்கூடிய எலும்பு ஸத்து உரம், பசுந்தாள் விதைகள், இன்னும் இதர எருக்களை வாங்குவதற்கும் அவ்வெருக்களை சுத்தப்படுத்துவதற்கும், கலப்பதற்கும் எலும்புத்தூள், எலும்பு ஸத்துள்ள பாறைத்தூள், முதலிய தயார் செய்யப்பட்ட எருக்களை ரொக்கப்பணத்திற்கு மெம்பர்களுக்கு விற்பது முதலிய நோக்கங்களை அபிவிருத்தி செய்வதற்கான இதரவிஷயங்களைச் செய்வதும் இச்சங்கத்தின் நோக்கங்களாகும்.

### சங்கம் ஸ்தாபிக்கப்படுவதின் அவசியம்.

1911-ம்௵ கோயம்பத்தூர் விவசாய காலேஜைச் சேர்ந்த, ரசாயன சோதனைச் சாலையிலுள்ள சில சிப்பந்திகள் தஞ்சாவூர் ஜில்லாவுக்கு வந்து 5 மைலுக்கு ஒருதரம் மண்ணை நன்செய் பூமிகளிலிருந்து



எடுத்து தங்கள் சோதனைச் சாலையில் பகுத்தறிந்து தஞ்சாவூர் ஜில்லாவில் நெல்பயிருக்குவேண்டிய எலும்பு ஸத்து உரம்பூமியில் நிரம்பக் குறைவாக இருக்கிறதாக கண்டுபிடித்து இருக்கிறார்கள். தஞ்சாவூர் ஜில்லாவில் சுமார் 10 லக்ஷம் ஏகரா நன்செய் பூமி இருக்கிறது. சாஸ்திர ரீதியாய் பாதிக்கு மேலேயே எலும்பு சத்து உரம் குறைவாக இருக்கிறதாகத் தெரிகிறது. மூன்றிலொருபங்கு எலும்பு சத்து உரம் குறைவாக இருப்பதாக வைத்துக் கொண்டாலும் சுமார் 20 லக்ஷம் ரூபாய்க்கு எலும்புச் சத்து உரம் வாங்கி போடும்படியாயிருக்கும். தஞ்சாவூர் ஜில்லாவிலிருந்து சுமார் ரூ. 1 லக்ஷம் மதிப்புள்ள எலும்புகள் ஏற்றுமதியாகிறது. 20 வருஷம் ஏற்றுமதியைத்தடுத்து, அந்த எலும்பு உரத்தை பூமிகளிற் போட்டுக்கொண்டு வந்தால் ஒருவாறு இந்தக் குறைவு நீங்கலாம். அப்படி ஏற்றுமதியைத் தடுப்பது அனுபோகத்தில் முடியாததால் ஐக்கிய முயற்சியில் இக்குறையை ஒருவாறு நீக்கிக்கொள்ள இச்சங்கம் ஏற்படுத்தப் பட்டிருக்கிறது.

எலும்புத்தூள் உண்டாக்கவும், எலும்பு சத்துள்ள பாறைக்கற்தூள் பண்ணவும், நீடாமங்கலம் சேதுராமய்யர் தன் தோட்டத்திலுள்ள 9 குதிரை பவர் ஆயில்இஞ்சினோடு தூள்பண்ணும் ஒரு எந்திரத்தைச் சேர்த்திருக்கிறார். அதை சங்கத்திற்கு அறைவைக் கூலிக்காக அமர்த்தியிருக்கிறார்.

நெல்பயிருக்கு வேண்டிய ஆற்றுவண்டல் இப்போது நிரம்பவும் குறைந்து போய் விட்டபடியினாலும், சுத்த ஜலமே பாசனத்துக்கு வருவதால் ஜில்லா நன்செய் பூமிகளில் எலும்பு சத்து குறைந்து போயிருக்கிறது. விவசாய ஐக்கிய முயற்சியால் இக்குறையை நிவர்த்தி பண்ண இச்சங்கம் ஏற்படுத்தி யிருக்கிறபடியால் தஞ்சைஜில்லா மிராசுதார்கள் இதில் மெம்பர்களாகக் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

திருச்சினாப்பள்ளிஜில்லா பெரம்பலூர் தாலுக்கா வேட்டத்தூரில் (திருச்சிக்கும் இதற்கும் சுமார் 20 மைல்தூரம்) 11 சதுர்மைலில் எலும்பு சத்துள்ள பறவைகற்கள் இருக்கின்றன. கோயம்புத்தூரிலுள்ள ஸ்டேன்ஸ் அண்ட்கோ என்கிற எருக் கம்பெனிக்காரர்கள் மாதம் சுமார் 100 டன், டன் 1-க்கு ரூ. 15 மேனிக்கு வாங்கி தூள் செய்கிற எந்திரத்தினால் தூள்செய்து, டன் 1க்கு தூளைசுமார் ரூ. 35-க்கு விற்கிறார்கள். நிகர லாபமாக இக்கல்லினால் மாதம் ரூபா 2000 வரையில் சம்பாதிக்கிறார்கள். தஞ்சை ஜில்லா ஐக்கிய எருச்சங்கமும் இக்கற்களை வரவழித்து மெம்பர்களுக்கு எலும்பு சத்து உரமாக விற்பதும் ஒரு உத்தேசம்.

## 1911—1916-வருஷங்களில்

# ஐக்கிய முயற்சியின் இயக்கம்.

ம-௱-௱-ஸ்ரீ திவான்பகதூர் ஆர் ராமச்சந்திரராவ் அவர்கள் இந்துப் பத்திரிகையில் ஐக்கிய முயற்சி சம்பந்தமாய் சமீபத்தில் எழுதிய வியாசத்திற்கு மறுமொழியாக, ஓர் ஐக்கிய முயற்சிக்காரர் பின்வருமாறு அபிப்பிராயப்பட்டு எழுதுகிறார்:—

1. சுமார் 1200 ஐக்கிய சங்கங்கள் யூனியன்களுக்கு அணைக்கப்பட்டிருப்பதும், சில யூனியன்கள் மேற் பார்வை பார்ப்பதையே தன் எண்ணமாகக் கொண்டிருப்பதும் நமக்குத் தெரிந்த விஷயம். இவ்விதம் ஸ்தாபிக்கப்பட்டுள்ள யூனியன்கள் நான்கு விதமாய் பிரிக்கப்பட்டிருக்கின்றன. (1) ஐந்து முதல் பத்து மைலுக்கதிகப் படாத எல்லைக்குள் விவகாரம் நடத்தும் லோகல் யூனியன்கள், (2) ஒன்று அல்லது இரண்டு, மூன்று தாலுக்காக்களில் விவகாரம் நடத்தும் தாலுக்கா யூனியன்கள், (3) ஜில்லா முழுவதிற்கும் விவகாரம் நடத்தும் ஜில்லா யூனியன்கள், (4) கடைசியாக மாகாணம் முழுவதிலும் விவகாரம் நடத்துவதற்காக, மாகாண யூனியன். மாகாணயூனியனின் எண்ணமோ, மாகாணம் முழுவதிலுமுள்ள ஐக்கிய சங்கங்களை மேற்பார்வை பார்த்து வரவேண்டுமென்பது. இப்பேர்க்கொத்த யூனியன்கள் இராஜதானியிலுள்ள எல்லா கிராமங்களுக்கும் உபயோகப்படுகின்றனவென்று சொல்லுவதற்கில்லை. ஏனெனில், இராஜதானியிலுள்ள ஒவ்வொரு கிராமமும், மேற்சொன்ன நான்கு வித யூனியன்களில் ஒன்றுக்காவது அணைக்கப்படாமலிருக்கின்றது. ஆனால் ஒவ்வொரு கிராமமும் ஏதாவது ஒரு வித யூனியனில் அணைக்கப்படவேண்டுமென்பது கோரிக்கை. நாம் கொண்டருக்கும் கொள்கையும் அதுவே யாகும்.

1911௵ மார்ச்சுமாதம் முதல் தேதியன்றைக்கு ஒரே யூனியன் செங்கற்பட்டு ஜில்லா உத்தரமேரூரில் இருந்தது. இந்த யூனியனுக்கு அப்பொழுது பத்தொன்பது சங்கங்கள் மட்டும் அணைக்கப்பட்டிருந்தன.

1911௵ அக்டோபர்மாதம் 4௳ யன்றைக்கு இப்போதைய ரிஜிஸ்ட்ராரவர்கள் தம்முடைய ரிப்போர்ட்டின் 26-வது பாராவில் சொல்லியுள்ளதாவது:—

"இனிவரும் சில வருஷங்களுக்கு ரிஜிஸ்ட்ரார் செய்யவேண்டிய, மிகவும் இனிமையானவும் பொறுப்பானவும் வேலை யென்னவெனில் இப்பேர்க்கொத்த யூனியன்களை ஸ்தாபிப்பதே யாகும்,



தாலுக்கா யூனியனிலிருந்து ஆரம்பஞ்செய்து மாகாணம்முழுவதிற்கும் மாகாண யூனியனில் முடிக்க வேண்டியிருக்கும். தற்காலம் சங்கங்களை மேற்பார்வை பார்ப்பதையும் தணிக்கை செய்வதையும்கொண்டிருக்கிற ரிஜிஸ்ட்ராரவர்கள் வேலையையும், ஐக்கிய சங்கங்களுக்கு உதவி செய்து வருகிற சென்ட்ரல் பாங்கி வேலைகளையும் இந்த யூனியன்கள் நாளடைவில் தங்கள் பேரில் பொறுப்பை பெற்றிக்கொள்ளும்.

(2) 1911௵ மார்ச்சு௴ முதற்தேதியன்றைக்கு ஐக்கியசங்கங்களுக்கு உதவி செய்து வரும் ஒரு யூனியனாவது யேற்படவில்லையென்பது நமக்குத் தெரிந்த விஷயம். 1916௵ ஆகஸ்டு௴ 21௳ யன்றைக்கோ உதவி செய்து வரும் ஜில்லா பாங்கிங் யூனியன்கள் எட்டு ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. 1912௵ ரிஜிஸ்தர் செய்யப்பட்ட மதுரை, இராம நாதபுரம் ஜில்லா பாங்கி முதற்கொண்டு கோயம்பத்தூர் ஜில்லா பாங்கி முடிய எல்லாம் ஜில்லா பாங்கிகள் ஜில்லா பைங்கிங் யூனியனாக ,மாற்றிக் கொண்டிருக்கிறார்கள். திருச்சினாப்பள்ளி ஜில்லா பாங்கு ஒன்றுதான் இது பரியந்தம் பாங்கிங் யூனியனாக மாறாமலிருப்பது. இதுவும் சீக்கிரம் மாறிவிடலாம்.

(3) இப்பொழுது வேலைநடத்திவரும் சூபர் வைஸிங் யூனியனானாலும் சரியே, பாங்கிங் யூனியனானாலும் சரியே, இவையெல்லாம் பொறுப்புவரை யறுக்கப்பட்ட சங்கங்களாக விருக்கின்றன. ஆனாலோ 1911 ௵ மார்ச்சு௴ 1௳ யன்றைக்கு உத்தரமேரூரில் வேலை நடத்திக்கொண்டிருந்த ஒரே யூனியனும் பொறுப்புவரை யறுக்கப் படாத சங்கமாக விருந்தது. இப்படி ஒவ்வொன்றும் மாறினதினால் ஏற்பட்டுள்ள பலன்களையும், நஷ்டத்தையும் விசாரியாது இப்படி நடந்திருக்கிற மாறுதல்களையும், ஐக்கிய முயற்சியின் வளர்ச்சியைப் பற்றி மட்டுமே நாமிப்போது கவனிப்போமாகவும்.

(4) 1911௵ மார்ச்சுமாதம் உத்தரமேரூரிலிருந்த ஒருயூனியனில் சூபர்வைசர் இருந்தாலும், அந்த சூபர்வைசர் கவர்ன்மெண்டு இன்ஸ்பெக்டரின் கீழ் வேலைப்பார்த்து வந்தார். ஆனாலிப்பொழுதோ யூனியன்கள் செய்துவரும் சூபர்விஷனுக்கு, கவர்ன்மெண்டாருதவியில்லாமலே, வேண்டிய பணமிருக்கிறது. அப்படி இல்லாத சிலவிடங்களில் இன்னும் இரண்டொரு மாதங்களில் வேண்டியபணம் சேரும். இன்னும் கொஞ்சகாலத்திற்குள் கவர்ன்மெண்டு இன்ஸ்பெக்டர்கள் மேற்பார்வை பார்ப்பதிலிருந்து விலக்கப்பட்டு தணிக்கை செய்வதற்கென்றுமட்டுமே வைக்கப்படுவார்கள்.

(5) 1916-ம் வருஷத்தில் நியமிக்கப்பட்டிருக்கும் சூபர்வைஸர்கள் அநேகமாய் எல்லோரும் உள்ளூர் மனிதர்களல்ல, நல்ல படிப்

பாளிகளாய் பொறுக்கப்பட்டிருக்கிறார்கள். கூடியவரையில், புக்கீபிங்,
பாங்கிங், பரீட்சை தேறியவர்கள் அல்லது ஒன்று அல்லது இரண்டு
வருஷங்களில் தேறிவிடுவதாக உறுதிமொழி செய்தவர்களாகப்
பார்த்து பொறுக்கியெடுக்கப்பட்டிருக்கிறார்கள். 1911-ம் வருஷம்
மார்ச்சு மாதம் இருந்த ஒரே யூனியனின் ஒரே சூபர்வைசரோ, உள்ளூர்
மனிதர். உள்ளூர் சொஸைடியின் மெம்பர். உள்ளூர் விவகாரங்க
ளில் அதிகார முள்ளவர். அப்பொழுது இருந்த எண்ணமோ சூபர்
வைசர்கள் எல்லோரும் இவ்வித உள்ளூர்க்காரர்களாக இருக்க
வேண்டு மென்பது. பின்னும் இங்கே கவனிக்க வேண்டியவிஷயம்
என்னவெனில், ஐக்கிய யியக்கம் உயற்சி யடைந்திருக்கிறதா அல்லது
தாழ்ச்சியடைந்திருக்கிறதா வென்பதல்ல, ஆனால் ஐக்கியமுயற்சி முன்
னிருந்த நிலைமையிலேயே இல்லாமல் நகர்ந்திருக்கிறதா வென்பது
தான்.

(6) 1916 வருஷம் ஆகஸ்டு மாதம் 21உ சூபர்வைசர்களும்,
கவர்ன்மெண்டு இன்ஸ்பெக்டர் இதுபரியந்தம் பெற்றுவந்த சம்பள
விதப்படியே பெறுவதைப் பார்க்கிறோம். சூபர்வைசர்களுக்கு கொடு
பட வேண்டிய சம்பளம், சென்ட்ரல் பாங்கிகளுக்கும், சங்கங்களுக்கும்
நடுவில் கிடைக்கிறதென்பதும், முழுமையுமாவது, அல்லது பாக
மாவது, கவர்ன்மெண்டாரால் கொடுக்கப்படவில்லை யென்ப
தும், தெரியவரும். 1911-வரு மார்ச்சு மாதம் முதல் தேதி யன்
றைக்கு ஐக்கிய முயற்சி இருந்த நிலைமையைப்பற்றி மிஸ்டர்
இராமச்சந்திர ராவ் அவர்கள் மாகாண முதல் கோவாபரேடிவ்
கான்பரன்சுக்கு 1912-வரு டிசம்பர் மாதம் எழுதிய வியாசத்
தில் 14-வது பாராவில் சொல்லுகிறார்: "ஜில்லாக்கள் முழு
வதிலும், ஐக்கிய சங்கங்களை ஸ்தாபிப்பதில் கவர்ன்மெண்டா
ருடைய நோக்கம் யென்னவெனில் ஜனங்களுக்கு அச்சங்கங்
கள் பொருட்பாடமாக பயன் படவேண்டுமென்பதே. இராஜ
தானியிலுள்ள ஐக்கிய சங்கங்கள் மேற்பார்வை பார்த்துக்
கொள்ள கவர்ன்மெண்டாருதவியில்லாமல் இருக்கும் நிலைமை ஏற்
பட்டதற்குக் காரணம் கவர்ன்மெண்டாரின் நன்கு யோஜிக்கப்
பட்ட செய்கையே. 1916வரு ஆகஸ்டு மாதம் எல்லா சங்கங்களும்
யூனியன்களுக்கு அணைக்கப்படவில்லை யென்பது உண்மையானா
லும், எல்லா சங்கங்களும் ஒரே மனதாய் கவர்ன்மெண்டாருதவி
யில்லாமல் மேற்பார்வை பார்ப்பதற்கு வேண்டியநிதிக்கு தாங்க
ளும் ஒரு பாகம் கொடுப்பதாக ஒப்புக்கொண்டிருக்கின்றன.

(7) 1910-வரு செப்டம்பர் மாதம் 13 தேதி மிஸ்டர் ஆர். இரா
மச்சந்திர ராவ் அவர்கள் கவர்ன்மெண்டாருக்கு தம்முடைய வரு



ஷாந்திர ரிப்போர்ட்டை அனுப்பிய சமயத்தில் ஜில்லா பிடரல்
பாங்கி ஒன்று ஏற்படுத்த வேண்டுமென்கிற எண்ணம் அப்
பொழுது இருக்கவில்லை. 1911-வரு மார்ச்சு மாதம் முதல் தேதி
யன்றைக்கு அவர் தன்னுடைய ரிஜிஸ்தரா ரதிகாரத்தை தற்காலம்
ரிஜிஸ்தராரவர்களிடம் ஒப்புவித்தார். 1912-வரு டிசம்பர் மாதம் 21,
22 தேதிகளில் நடந்த சென்னை மாகாண கோவாபரேடிவ் முதல்
கான்பிரன்சுக்கு மிஸ்டர் ஆர். இராமச்சந்திர ராவ் அவர்
கள் அனுப்பித்த வியாசத்தில் "இனி ஐக்கிய கோட்பாடு
நடக்கவேண்டிய முறை" என்று எழுதியுள்ள சந்தர்ப்பத்தில் ஜில்லா
பிடரல் பாங்கின் எண்ணம் தோன்றியிருக்கிறது. ஆறுவது பக்கம்
இருபத்தேழாவது பாராவில் "1912-வரு தோன்றியுள்ளாத ஒரு
புதிய சங்கம்" கி. பி. 1952-வருத்தில் ஜில்லாக்கள் தலை நகரில்
பிடரில் பாங்கு என்றும் பெயரால் ஒரு சங்கம் ஏற்படுமென்று
முன் அறிகுறியாகச் சொல்லப்பட்டிருக்கிறது. மிஸ்டர் ஆர். இராமச்
சந்திர ராவ் அவர்கள் எண்ணியிருந்த பிடரல்பாங்குக்கு மேலாக
1912வரு ஜூன்மீ 28உ மதுரையில், முதல் ஜில்லாபிடரல் பாங்கு
ரிஜிஸ்தர் செய்யப்பட்டது. ஏனைதை மேலாகச் சொல்லவேண்டுமென்
றால், தனிமெம்பர்களும், சங்கங்களும் சேர்ந்து பங்கெடுத்து பங்கின்
விதாசார லாபம் கொடுக்கும் ஜில்லா பாங்கிங் யூனியனாக ஏற்பட்டுள்
ளது. இந்த பாங்கைப்பற்றி மிஸ்டர் ஆர். இராமச்சந்திர ராவ் அவர்
கள் 1912வரு டிசம்பர்மீ மேற்சொன்ன வியாசத்தில் இந்த
பாங்கை ரிஜிஸ்தர் செய்தது தவறென்று சொல்லி யிருக்கிறார்.
முன்பு சொல்லி யுள்ளபடி 1912வரு ஆகஸ்டுமாதம் 21உ இன்
னும் ஏழு ஜில்லா பாங்கிங் யூனியன்கள் அதிகமாய் ஸ்தாபிக்கப்பட்
டதை பார்க்கிறோம். கி. பி. 1952வருத்துக்கு முன் எல்லா ஜில்லாக்
களுக்கும்பாங்கிங்யூனியன்கள் ஏற்பட்டு விடுமென்றுஎண்ணுகிறோம்.

(8) மெட்ராஸ் சென்டரல் அர்பன் பாங்கிக்கும், ரிஜிஸ்தரா
ரவர்களுக்கும் இருக்கும் பூரா நேசத்தைப்பற்றியும், ரிஜிஸ்தராரவர்
கள் செய்யும் இன்ஸ்பெக்ஷனில் ஏற்படும்முடிவுகளை மெட்ராஸ் சென்
ட்ரல் அர்பன் பாங்கியானது ஒப்புக்கொள்ளும் விஷயத்தைப்பற்றி
யும் 1910வருசெப்டம்பர்மாதம் ரிஜிஸ்தராரவர்கள் மகிமை பாராட்டி
யுள்ளார். 1916வரு ஆகஸ்டு மாதத்திலோ ரிஜிஸ்தராரவர்களும்
அவர்களுடைய சிப்பந்திகளும் செய்யும் இன்ஸ்பெக்ஷன் முடிவுகளை
மெட்ராஸ் சென்டரல் பாங்கியானது அங்கீகரிப்பதுமட்டுமேயல்லாமல்
கணக்குகளை தணிக்கை செய்வதற்கு சூபர்விஷன் பண்டுக்காக,
வேண்டிய பண உதவியும் செய்ய முன் வந்துள்ளார்கள்.

(9) 1910௵ செப்டம்பர்௴ 12௳ ரிஜிஸ்தாரவர்கள் எழுதியிருக்கிறார்: "என்னால் கிராமச்சங்கங்களுக்கு கொடுத்துள்ள கடன்கள் அபாயமின்றி இருக்கின்றனவாவென்று பாதுகாப்பதற்காக ஜில்லா பாங்கியானது தணிக்கை செய்யுமென்று எதிர்பார்த்திருந்தேன். ஆனால் பிரத்தியட்சமாய் அதிகமாக வொன்றும் இன்னும் செய்யப்படவில்லை. அந்நோக்கத்தின் வித்தையானது ஊன்றியிருக்கிறது. நாளடைவில் ஜில்லாபாங்கியாவது இந்த வேலையை விசாலப்படுத்திக்கொள்ளலாம் அல்லது அதிகப்படுத்திக் கொள்ளலாம். இலாபம் அதிகமாகவே சம்பளங்கொடுத்து சிப்பந்திகள் நியமிக்கப்படலாம். 1914௵ ஆகஸ்டு௴ ஏற்படுத்தப்பட்ட கமிட்டியாரவர்களோ தங்களுடைய ரிப்போர்ட்டின் 105-வது பாராவில் சொல்லியுள்ளார் "பண லேவாதேவி மட்டும் செய்வதற்கென்று ஏற்பட்டுள்ள ஜில்லா பாங்கு சங்கங்களை கற்பிப்பதற்கும், மேற்பார்வை பார்ப்பதற்கும் தகுதியற்றதாக ஒப்புக்கொள்ளவேண்டும்" 1916௵ ஆகஸ்டு மாதத்திலோ ஏற்பட்டுள்ள எல்லா ஜில்லா பாங்கிங் யூனியன்களும் தங்கள் யூனியனுக்கு அணைக்கப்பட்டுள்ள எல்லா சங்கங்களையும் மேற்பார்வை பார்க்க கட்டுப்பட்டிருக்கின்றன. இந்த யூனியன்கள் பணலேவாதேவிச மட்டும் செய்வதற்கென்று ஏற்படவில்லை யென்பது நாம்கவனிக்கவேண்டிய விஷயம்.

10. ரிஜிஸ்தாரர் வேலையிலிருந்து விலகின தேதி முதல் தன் மனதில் தோன்றிக்கொண்டிருந்த பிடரல் பாங்குகள் நன்றாய் வேலை செய்யும் என்பதாக உறுதிகொண்டு, 1912 வருஷத்தில், உடனே மூன்று பிடரல் பாங்குகள் செங்கற்பட்டு, சேலம், அனந்தபூர் ஜில்லாக்களில் ஏற்படுத்தப்பட வேண்டுமென்று, மிஸடர் ஆர். இராமச்சந்திர ராவ் அவர்கள் சிபார்சு செய்தார். பின்னும் அவர் சொல்லியதாவது, பிடரல் பாங்குகள் ஏற்படுத்தப்பட்ட ஒரு வருஷத்தில் பிடரல் பாங்குள்ள ஜில்லாக்களின் சங்கங்களுக்கும், ரிஜிஸ்தாரருக்கும் சம்பந்தமேயிராது. பிடரல் பாங்குள்ள ஜில்லாக்களில் ஜில்லா பாங்கின் அதிகாரிகளிலொருவர் ரிஜிஸ்தாரர் ஸ்தானத்திற்குவந்து விடுவார்.

மிஸ்டர். ஆர். இராமச்சந்திர ராவ் அவர்கள் நினைத்திருந்தபிடரல் பாங்கின் விதிகளிலும் பலமடங்கு சௌகரியான விதிகளுடன் சுயேட்சையாய் வேலை நடத்த வேண்டுமென்கிற எண்ணத்துடன் செங்கற்பட்டில் ஒரு ஜில்லா பாங்கிங்யூனியன் 1915௵ மேமாதம் ஸ்தாபிக்கப்பட்டது.

மிஸ்டர். ஆர். இராமச்ரந்திர ராவ் அவர்கள் ஸ்கீமின்படியே சங்கங்கள் மட்டுமே இந்த யூனியனில் பங்கெடுத்திருக்கின்றன. ஆனா



லும் தனிமெம்பர்களை வேண்டாமென்று விலக்க விதி ஏற்படவில்லை. மிஸ்டர் ஆர். இராமச்சந்திரராவ் கோரியுள்ளபடியே, சங்கங்களின் பங்குகளுக்கு பேர்லி மதிப்பின்றி மதிப்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இப்படி இருந்தும் இந்த பாங்கிங் யூனியன் விவகாரங்களை கவர்ன்மெண்டு ரிஜிஸ்தாருடைய சம்பந்தமில்லாது நடத்துவதற்கு சாத்தியப்படவில்லை.

1911௵ மார்ச்சுமாதம் முதல் தேதியன்றைக்கும் 1916௵ ஆகஸ்டு௴ 21௳ யன்றைக்கும் மத்தியில் ஏற்பட்டுள்ள மாறுதல்களை இன்னும் சொல்லிக்கொண்டே போகலாம். ஆனால் இந்த பத்து உதாரணங்கள் போதுமானவை. ஐக்கியமுயற்சியில் ஏற்பட்டுள்ள விருத்திகளை இவ்வுதாரணங்கள் விளக்கிக்காட்ட வித்தியாசமற்றவைகளாயிருக்கலாம். ஐக்கியமுயற்சி முற்றும் பின்னடைந்திருந்தாலொழிய 1916௵ ஆகஸ்டு௴ 21௳ யன்றைக்கு இவ்விஷயத்தைப் பற்றி எழுதும் ஒரு மனிதன் குறைந்தது சில மாறுதல்களைப்பற்றியாவது கணக்கெடுத்திருக்கமுடியும்.

ஐக்கியமுயற்சியின் தற்காலத்திய நிலைமையைப்பற்றி மிஸ்டர். ஆர். இராமச்சந்திரராவ் அவர்கள் 1916௵ ஆகஸ்டு௴ 21௳ "ஹிந்து" பத்திரிகையில் தெரிவித்துள்ள அவர் அபிப்பிராயத்தை படிக்கும் ஒருவருக்கு முதலிற் தோன்றுகிற விஷயம் என்னவெனில் ஐக்கிய முயற்சியில் சிரத்தையுள்ளவர்களை கவனிக்கும்படி அவர்சொல்லுவது. இப்பொழுது காணப்படும் விஷயங்களின் நிலைமையைக்குறித்தல்ல. ஆனால் 1912௵ டிசம்பர்௴ 21,22௳ களில் அவர் சென்னை மாகாண முதல் கோவாப்ரேடிவ் கான்பரன்சுக்கு அனுப்பிய வியாசத்தின் அபிப்பிராயங்களின் பேரில்—அவரது அப்பிராயம் ஏற்பட்டுள்ளதென்பது. இன்னும் அவருடைய அபிப்பிராயம் என்னவெனில் அவர் வியாசம் எழுதின தேதியிலிருந்து இதுவரையில் ஐக்கிய முயற்சியில் பிரயோஜனமுள்ளதாக ஒன்றும் செய்யப்படவில்லை யென்பது.

மதுரை, இராமநாதபுரம் பாங்கிங் யூனியன் ஸ்தாபிக்கப்பட்டது பிசகென்று 1912-ம் வருஷத்தில் அவர் எண்ணினார். 1916௵ ஆகஸ்டு௴ 21௳யிலோ, ஜில்லா பாங்கில் சங்கங்கள் பங்கெடுப்பதற்காக மட்டுமே மெம்பர்களாயிருக்கமுடியாதென்று சொல்லுகிறார். ஆனாலோ சங்கங்கள் மெம்பர்களாயுள்ள ஜில்லா பாங்கிங்யூனியனின்கள் இன்னும் ஏழு புதிதாகவோ அல்லது தங்களுடைய விதிகளை மாற்றிக் கொண்டதினாலேயோ ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. ஜில்லா பாங்கில் தனிமெம்பர்களும் சங்கங்களும் கலந்திருக்க வேண்டுவது அத்தியாவசிய மென்றும், அதின் நன்மையைப்

பற்றியும், அதன் பலனைப் பற்றியும் கோவாபரேடிவ் கமிட்டியார்கள் மிகவும் பலமாய் சொல்லியுள்ளார்கள். கவர்ன்மெண்டாரவர்களும், போர்டாரவர்களும் ரிஜிஸ்தராரவர்களுடைய ஒன்றன் பின் ஒன்றாக நான்கு வருஷாந்தர ரிப்போர்ட்டுகளை பார்வையிடும்பொழுது, ஜில்லா பாங்கிகள் வளர்ந்துவருவதை திருப்தியுடன் கவனித்திருக்கிறார்கள், ஜில்லா பாங்கிங் யூனியன் ஸ்தாபிக்கப்படும் எண்ணம் விசாலப்படுவதைப்பற்றி அவர்கள் கொண்டுள்ள திருப்தி கொஞ்சமல்ல. கடைசியாக எல்லா ஜில்லா பாங்கிங் யூனியன்களும் நன்றாய் நடந்திருக்கின்றன. பங்கெடுத்துள்ள சங்கங்களும் அவைகளின் பிரதிநிதிகளும் ஜில்லாபாங்கிங் யூனியன்களில், செய்யக் கூடுமென்று மிஸ்டர், ஆர். இராமச்சந்திரராவ் நினைத்துள்ள பயங்கரமான விஷயங்கள் ஒன்றேனும் நடந்ததில்லை. இவ்விஷயங்களெல்லாம் மிஸ்டர் ஆர். இராமச்சந்திரராவுக்கு விசாரணைக்கிடங்கொடுக்காமலல்ல, ஆனால் அவ்விஷயங்களெல்லாம் கவனியாது ஒரு மூலையில் அவர் போட்டு விடுகிறார். ஜில்லா பாங்கிங் யூனியன் ஒன்று ஏற்படுத்தினது பிசகென்று 1912-ம் வருஷத்தில் அவருக்கு தோன்றிய விஷயம் மிகவும் பரபலமாய் இன்னும் ஏழு பாங்கிங் யூனியன்கள் ஏற்பட்ட பிறகு 1916௵ ஆகஸ்டுமாதம் 21௳ யன்றைக்கு ஐக்கிய முயற்சியில் எண்ண முடியாத ஒரு அசம்பவ சிந்தையாய் முடிந்துள்ளது.

ஐக்கியமுற்சியில் சிரத்தையுள்ளவர்கள் தாங்களிப்பொழுது செய்வது ஐக்கிய முயற்சிக்கு நன்மையா, கெடுதியாவென்று அறியவிரும்புவார்களாயின் சங்கங்கள் பிரசுரஞ்செய்துள்ள ரிக்கார்டுகளையும் கான்பரன்சுகள் ரிப்போர்ட்டையும் வருஷாந்தர ஸ்டாடிஸ்டிக்ஸ்களையும், கமிட்டியாருடைய ரிப்போர்ட்டையும் பார்வையிட்டறியட்டும். ரிஜிஸ்டிராரவர்களாவது மற்றவர்களாது கமிட்டியாருடைய ரிப்போர்ட்டைகணக்கின்றி அடிக்கடி அதை ஆதாரமாகக் காட்டுகிறார்கள் என்றும் பொது ஜனங்களுடைய வார்த்தையினால் அவர்கள் தங்கள் முடிவான அபிப்பிராயம் ஏமாராமலிருக்கும்படி பார்த்துக்கொள்ளவேண்டும். சமீபகாலமாய் நாம் கேட்டுவரும்சில வசனங்களைப்போலும், மெட்ராஸ் செண்ட்ரல் அர்பன்பாங்கு கோவாப்ரேடிவ் பாங்கல்ல, ஆரம்ப முதற்கொண்டே அது கோவாப்ரேடிவ் பாங்கல்ல, அது கோவாப்ரேடிவ் பாங்காயில்லாததினாலே தான் 29-வது செக்ஷினின்கீழ் ரிஜிஸ்தர் செய்யப்பட்டது என்று சொல்லப்படும் வசனங்களைப்போலும் அப்படி அறுவறுக்கத்தக்கதான கமிட்டியாருடைய நிர்ணயங்கள் ஒன்றேனும் இல்லை. மெட்ராஸ் செண்ட்ரல் பாங்கு கோவாபரேடிவ் பாங்கல்லவென்பது அதை ரிஜிஸ்தர் செய்த ரிஜிஸ்தராவர்களால் கவர்ன்மெண்டாருக்கு அனுப்பப்பட்ட முதல் ரிப்போர்ட்டாகிய 5-7-1906 ரிப்போர்ட்டிலாவது, 14-10-07 ரிப்போர்ட்டிலாவது, மிஸ்டர் ஆர். இராமச்சந்திரரா்வ் அவர்கள் அனுப்பிய [illegible]-9-190[illegible] ரிப்போர்ட்டிலாவது அல்லது 27-9-09 ரிப்போர்ட்டிலாவது அம்மாதிரியாக சொல்லப்படவில்லை. ஆனால் மிஸ்டர் ஆர். இரா்மச்சந்திர ராவ் அவர்கள் ரிஜிஸ்ட்ராராகவிருந்து அனுப்பியகடைசி ரிபோர்ட்டாகிய 12-9-1910 ரிப்போர்ட்டில் அம்மாதிரிவிஷயம் தென்படுகிறது. அப்படி சொல்லப்பட்டுள்ள வாக்யபிரபந்தத்தை நோக்கும் போது அப்போதைய ரிஜிஸ்தராரும் மெட்ராஸ் செண்ட்ரல் அர்பன் பாங்காரும் கொண்டுள்ள சாவதான நிதானத்தை தெளிவாய்க் காட்டுக்கிறது.



---

## கூட்டுறவும் சுய அரசாட்சியும்

புத்தூர் ம-ா-ா-ஸ்ரீ. B. ஆனந்தராவ் அவர்களெழுதியது.

1916௵ மேமீ த்திய வங்காள கோவாபரேடிவ் ஜர்னலுக்கு எழுதிய நிருபரொருவர் சொல்லுகிறார்:—"கூட்டுறவின் முக்கியத்தை கவர்ன்மெண்டார் கவனிக்கவேண்டிய காலம் வந்துவிட்டது. சட்ட நிரூபண சபையில் கூட்டுறவுக்கென்று ஒரு ஸ்தானம் பிரத்தியேகமாய் வைக்கப்படவேண்டும்". இன்னும் அவர் சொல்லுவதாவது அபிப்பிராயத்தை தெரிவிக்க சக்தியற்ற கோடிக்கணக்கான ஜனங்கள் தானாக அறிவிப்பதற்கு தகுந்த வழி கூட்டுறவு ஒன்றே" யென்று சொல்லியிருக்கிறார். மேலே சொன்ன அபிப்பிராயத்தை ஆமோதித்தே ஜூன்மீ 16௳ யன்றை "கியாபிடல்" என்னும் பத்திரிகைக்கு ஒருவர் எழுதுகிறார்:—விவசாய சமூகத்தார்களுக்கு கூட்டுறவின் முயற்சிக்காரர்கள் பொருக்கி யெடுக்கப்பட்ட மனிதர்கள். அவர்கள் தங்களையும் தங்களுடைய சகோதரர்களையும் முன்னுக்கு கொண்டுவர எடுத்துக்கொள்ளும் சிரமத்திற்கும், சிரத்தைக்கும் தக்கவாறு இராஜ்யத்தில் அவர்களுக்குத்தகுதியான நிலைமையைக் கொடுத்து மேம்பாடு பாராட்ட வேண்டியது மிகவும் அவசியம்."

சட்ட நிரூபண சபையில் கூட்டுறவின் பிரதிநிதி யொன்று தற்காலம் இருக்க வேண்டிய தவசிய மென்பதைப் பற்றி ஒரு வேளை அபிப்பிராயங்கள் வேறுபட்டிருக்கலாம்; ஆனால் மேலே சொன்ன விஷயங்களிலுள்ள கோட்பாடு மிகவும் மேம்பாடுடைய தாகையால் சமயம் கிட்டிய போது அவ்விஷயத்தைக் குறித்து வேண்டுவதற்காக கூட்டுறவு முயற்சிக்காரர்கள் ஒவ்வொருவரும் இவ்விஷயங்களை அடிக்கடி ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டியது.

நம்முடைய லோக்கல் போர்டுகளிலும், முனிசிபல் கௌன்சில்களிலும், ஐக்கிய சங்கங்களுக்கு ஒருவித ஸ்தானம் கொடுக்கவேண்டுமென்னும் எண்ணம் முற்றும் புதியதல்ல. இம்பீரியல் கோவாபரேடீவ் கமிட்டியாருக்கு புதீதூர் மிஸ்டர் M. ஷிவருவ் எழுதியனுப்பிய குறிப்பில் சொல்லப்பட்ட பல யோஜனைகளில் இதுவும் ஒன்று. கமிட்டியாரவர்கள் சென்னைக்கு வந்திருந்தபோது சாட்சியஞ் சொல்ல மிஸ்டர் ஷிவருவை அழைத்திருந்தார்கள். அங்குபோய் சாட்சியஞ் சொல்லுவதிலிருந்தும் அவ்விஷயத்தை இன்னும் விசாரிப்பதிலிருந்தும், கூட்டுறவின் முயற்சிக்காரர்களுக்கு அவரது எண்ணத்தைப் பகிரங்கப்படுத்துவதிலிருந்தும் அவருக்கு நேர்ந்த வியாதி அவரை தடை செய்துவிட்டது. ஆகையால்தான், பொதுஜனங்கள் கவனத்திற்கு கொண்டுவரவும் கூட்டுறவின் கர்த்தாக்கள் அபிப்பிராயம்வேண்டுவது அவசியமென்றெண்ணினேன். எல்லா முக்கிய விஷயங்களை தர்க்கம் செய்யப்பட்டு சமீபத்தில் கவனிக்கப் படவேண்டியவைகளில் இதுவும் ஒன்றாக வேண்டுமென்பது தான் எண்ணம்.

என் சொந்த அபிப்பிராயம் யென்னவென்றால், லோகல் போர்டுகளுக்கும் முனிசிபாலிடிகளுக்கும், ஓட்டுக் கொடுப்பதற்கு மெம்பராய் நிற்க லாயக்குள்ளவர்களாக அல்லது பாத்தியப்பட்டவர்களாய் ஐக்கிய சங்கங்களை ஆட்சி செய்பவர்களும் நியமனம் செய்யப்படவேண்டும். அதனால் ஐக்கியமுயற்சிக்கே ஏற்படக்கூடிய நன்மைகள் விஸ்தரித்து சொல்லவேண்டுமென்ற அவசியமல்லாத அவ்வளவு அதிகமாயிருக்கின்றன. ஐக்கிய சங்கத்தின் மெம்பர்கள் தாங்கள் அநேகமாய் எல்லோரும் சங்கத்தின் விஷயங்களில் தொடர்ந்த சிரத்தை எடுத்துக்கொள்வதில்லை யென்பது ஐக்கிய சங்கங்களை ஸ்தாபனம் செய்பவர்கள் எல்லோரும் அறிந்துள்ள விஷயம். ஒரு சங்கத்தை நடத்தவேண்டிய முழு சுமையும் ஒவ்வொரு விஷயத்திலும் மானேஜிங் கமிட்டியாரின் பொறுப்பாகிறது.

மானேஜிங் கமிட்டியார்களுக்குள்ளும் ஆரம்பத்தில் இருந்தசிரத்தை நாளுக்கு நாள் குறைந்து போய் விடுகிறது. மானேஜிங்கமிட்டியாரின் மெம்பர்களில் அநேகர் தங்கள் கழுத்தில் கட்டிய கடமைகளை இயந்திரம் வேலை செய்வது போல் பிரயோஜன மற்ற விதமாக காரியங்களை "ஐயோ! செய்ய வேண்டுமே" யென்ற வருத்தத்துடன் செய்கிறார்கள். ஆனதுபற்றி ஐக்கிய சங்கத்தில் மானேஜிங் கமிட்டியார் ஸ்தானம் கௌரவமாய் எண்ணப்படுவதற்கு பதிலாக பெரிய கஷ்டமாக எண்ணப்படுவது ஆச்சரிய மல்ல. தினம் வேலைசெய்து பிழைப்



பவர்கள் இவ்விஷயத்தில் எடுத்துக் கொள்ளும் சிரத்தை கொஞ்சமேனும் இல்லாமற் போகவே இவ்விஷயம் ஒருவிதத்திலும் பிரகாசிப்பதற்கேயில்லை. கடைசியாக சங்கத்தை நடத்தவேண்டியது ஒரே மனிதனுடைய பொறுப்பாய் விடுகிறது. எல்லாவித நடவடிக்கைகளைக் காட்டிலும் ஐக்கிய சங்கத்தை ஒருமனிதன் நடத்தவேண்டி ஏற்படுகிறது. எல்லாவித கெடுதல்களிலும் இதுமிகவும் கொடியதென்பதில் ஆக்ஷேபணை யில்லை. லோகல்போர்டுகளிலும், முனிசிபாலிடிகளிலும் மெம்பராயிருத்தற்கும், ஓட்டு கொடுத்தற்கும், ஐக்கிய சங்கங்களில் மானேஜிங்கமிட்டி வேலை பார்ப்பவர்கள் லாயக்குள்ளவர்களென்று ஏற்படுத்தப்பட்டால் அப்பொழுது ஐக்கிய சங்க மானேஜிங்கமிட்டி வேலைக்கு ஒருவித தூண்டுதல் ஏற்பட்டு லோகல் போர்டுகளிலும் முனிசிபாலிடிகளிலும் மெம்பராக ஆசை கொள்ளுவோர் ஐக்கியசங்களின் மானேஜிங் கமிட்டிவேலைகளிலும் சிரத்தைகொள்ள ஏற்படும். ஐக்கிய சங்கங்களில் பஞ்சாயத்து மெம்பர் தமது வேலை பிரதி பிரயோஜனமற்றது யென்று அப்பொழுது கருதமாட்டார். லோகல் போர்டுகளுக்கு ஓட்டுகொடுக்கும் பாத்தியதையும் லோகல் போர்டுகளில் மெம்பராயிருப்பதும் கேவலமாகவாவது, அல்லது மிகவும் அற்பமாகவாவது கருதப்படவில்லை. லோகல் போர்டுகளுக்கு எல்லாவித நிபந்தனைகளும், கண்டிப்புகளும் வைத்தும், லோகல் போர்டில் ஒரு ஸ்தானத்திற்கு ஓர்வித மதிப்பு ஜனங்கள் வைத்திருக்கிறார்கள்.

தற்காலம் அமுலில் இருக்கப்பட்ட லோகல் போர்டு சட்டமானது புதித்தாய் மாற்றப்படுவதற்கு ஏற்பாடா யிருக்கிறதென்றும், புதிய ஆக்டு எந்த மாதிரியில் மாற்றப்படவேண்டுமென்பதற்கு அபிப்பிராயங்கள் முன்னமேயே அனுப்பப்பட்டுள்ளன வென்றும் சொல்லப்படுகிறது.

லோகல் செல்ப் கவர்ன்மெண்டு (சுய அரசாட்சி) விஷயத்தில் ஜனங்களுக்கு கொடுக்கப்படுகிற அதிகாரத்தின் நிபந்தனைகளும், நிலைமையும், மாதிரியும், அதிகரித்து இருக்கும்படியாக, புதிய ஆக்டானது மாற்றப்படவேண்டுமென்றும், தற்போது இருக்கப்பட்ட கால நிலைமை மட்டுமேயல்லாமல் ஜனங்களாலும், இராஜாங்கத்தாராலும் எப்பொழுதும் கருதப்பட்ட அபிவிருத்தியடைய வேண்டுமென்றும் கூறப்படுகின்றன.

புதிய சட்டமானது இவ்வித எண்ணங்களோடு எழுதப்பட்டால் (இப்படி செய்வதை தவிர வேறு விதமாகச் செய்ய கவர்ன்மெண்டாருக்கு இடமில்லை யென்று எனக்குத் தோற்றுகிறது) தற்போது

லோகல் போர்டுகளுக்கு ஏற்பட்டுள்ள மகிமை மிகவும் அதிகரிக்குமென்பது உண்மை. இது மட்டுமல்ல, மிகவும் ஆவலாய் எண்ணப்படுகிற ஹோம் ரூல் ஸ்தானத்துக்கு கொண்டுபோகக்கூடிய இவ்விதப் பாதைக்கு ஓர் மதிப்பைக் கொடுக்க ஜனங்கள் ஆரம்பஞ் செய்வார்கள். இப்பேர்க்கொத்த நிலைமையில், ஓர் ஐக்கிய சங்கத்தில் பஞ்சாயத்து மெம்பராகவிருப்பதில் கௌரவம் அதிலேயே ஏற்பட்டுள்ளதென்றும், இன்னும் பெரிய கௌரவத்துக்கு உயர்த்திவிட இந்த ஸ்தானம் தகுதியானதென்றும் ஜனங்களால் கருதப்படுமென்பதற்கு யார் தான் சந்தேகிக்க முடியும்? விஷயங்கள் இப்பொழுதிருக்கும் நிலைமையில், ஒரு ஐக்கிய சங்கத்தில் பஞ்சாயத்து மெம்பராக விருப்பது லோகல் போர்டுகளுக்கு வோட்டுக்கொடுக்கவும், க்யான்டிடேட்டாக நிற்கவும், தகுதியானவர்களென்று ஏற்பட்டுள்ளவர்களில் ஒருவராக்கிவிட்டால், ஜனங்களின் பிரதி நிதியாகவும் உண்மையிலேயே ஜனங்களால் விரும்பப்படும் பிரத்தியக்ஷமான காரியம் இது வொன்றே தான் ஏற்படும்; ஏனெனில் தற்போது ஏற்பட்டுள்ளது யூனியனில் உத்தியோக முறைபற்ற பஞ்சாயத்து மெம்பர் ஒன்று மட்டுமே [தாலுக்கா போர்டு எலக்ஷன் நடவடிக்கைக்கு செய்யப்பட்டுள்ள விதிகளில் 5(f) ]. தற்போது அமுலிலிருக்கிற லாயக்கான இதரர்கள், பிறப்பாலும், வம்ச பரம்பரையாலும், செல்வ நிலைமையை உத்தேசித்து மிருப்பவர்கள், யூனிவர்ஸிடி கல்விப்பெற்றவர்கள்; இம்மாதிரியாக ஏற்பட்டிருக்கிறது.

ஆனால் இவ்வித லாயக்கானவர் களென்று ஒருவராவது ஜனங்களின் பிரதிநிதிகளென்று சொல்லுவதற்கில்லை. ஏனெனில் பொதுக் காரியங்களுக்கு உழைத்ததினாலாவது, ஜனங்களின் அபிப்பிராயத்தினாலாவது லாயக்கானவர்களென்று இவர்கள் ஏற்படவில்லை. ஒரு ஐக்கிய சங்கத்துக்கு பஞ்சாயத்து மெம்பராக நியமிக்கப் படுவது, கொஞ்சமேனும் தனக்கு சிரத்தை யற்றக் காரியங்களில் உழைத்ததினால் ஏற்பட்டுள்ளன. பொது ஜனங்களில் அபிப்பிராயத்தின் பேரிலும், அபிமானத்தின் பேரிலும் முக்கியமாய் நியமனஞ் செய்யப்படவேண்டும். ஐக்கிய சங்கத்துக்கு ஒருவர் பஞ்சாயத்து மெம்பராக ஏற்பட்டுள்ள ஆதாரத்தின் பேரில், அச்சங்கம் ஜனங்கள் இவரிடம் வைத்திருக்கும் மதிப்பினளவுக்கு போதுமான அத்தாட்சி இருக்கிறதென்று சொல்லலாம்.

ஒரு பஞ்சாயத்தாருடைய சாதாரணவேலையின் நிலைமை, லோகல் போர்டு மெம்பர்களால் எதிர்பார்க்கப்படுகிற வேலைகளுக்கு பழக்கப்படுத்த போதுமானவும், தகுந்தவுமான இடமாயிருக்கிறது.



ஜனங்களுடைய அவசியங்களைப்பற்றி சரியாய் அறிந்து கொள்ளல், மானிட வாழ்க்கையின் நிலமையில் அளவற்ற ஜீவகாருண்யம், நியாயம், நியாயமற்றது என்று பகுத்தறியும் நுண்ணறிவு, விஷயங்களை கையாடுவதில் மிகவும் தேர்ச்சியான வழி, இவை போன்றவைகளெல்லாம், லோகல் போர்டு செய்ய வேண்டி ஏற்படுகிற பொதுக் காரியங்களுக்கு பிரயோஜனப்படும் பட்சத்தில் (இவைகள் அவ்வழியில் பிரயோஜனப்படாவென்று ஒருவரும் சொல்ல மாட்டார்கள்) பஞ்சாயத்து மெம்பர் வேலைக்கும் இதே விதமான அனுபவங்கள் அவசியமாயிருத்தலால் பஞ்சாயத்து மெம்பர் வேலை முன் சொன்ன காரியங்களுக்கு பழக்கப்படுத்த சரியான கற்பனுபீடமென்று சொல்லாமலிருக்க முடியாது.

விஷயங்களில் விவரமான அப்பியாசம், பூரா அபிப்பிராயம், மறுதளித்து உடனே சொல்லக் கூடிய சாதுர்யம், வாதஞ்செய்வதில் நேரான வழி, விஷயங்களை சீக்கிரத்தில் கிரகிக்கும் சக்தி, கொஞ்சமேனும் தளராத மனோதைரியம், இன்னும் இவை போன்றவை ஐக்கிய பஞ்சாயத்தாருக்கும், லோகல் போர்டு மெம்பருக்கும் பொதுவாய் வேண்டிய குணங்கள். மனச்சாட்சிப் பிரகாரம் வேலை செய்யக் கோரும் லோகல் போர்டு மெம்பருக்கு வேண்டிய இருதயத்தினுடையவும், மூளையினுடையவும், குணாதிசயங்களை தனக்குள்ளேயும் விர்த்தி செய்து கொள்வதற்கு வேண்டியவும் போதுமளவும் மார்க்கங்கள் ஐக்கிய சங்கத்தின் பஞ்சாயத்துமெம்பருக்கு நன்றாய் ஏற்பட்டுள்ளன. கிராமங்களின் சுகாதார வேலைகளைச் செய்வதற்காக சென்ற வருஷத்தில் பரீட்சார்த்தமாக இருபது ஐக்கிய சங்கங்கள் நியமிக்கப்பட்டு, சம்மந்தப்பட்ட தாலுக்கா போர்டார்கள் அவசியமான பணத்தை அந்தந்த சங்கங்களுக்கு கொடுக்கும்படி உத்திரவு செய்யப்பட்டன. இவ்விஷயத்தில் சங்கங்கள் எடுத்துக்கொண்ட சிரமத்துடனும் வேலை மிகவும் நன்றாயும், திறமாயும் செய்யப்பட்டதென்பது மட்டுமல்ல; சாதாரண கண்டிராக்டர்கள் மூலமாய் செய்யப்பட்டால் எவ்வளவு செல்லுமோ அதைவிட மிகவும் குறைந்த பணத்தில் வேலைமுடிக்கப்பட்டதென்பதில் கவர்ன்மெண்டாருக்கு பூரண திருப்தியாயிருக்கிறது.

பொதுக்காரியங்களை திறமாய்செய்வதற்கு வேண்டியவும், போதுமானவுமான சக்தி ஐக்கிய சங்கங்களில் இருக்கிறதென்பதற்கு இவ்விஷயம் ஒன்றேபோதுமான அத்தாட்சியாக விருக்கிறது. ஐக்கிய சங்கத்தின் பஞ்சாயத்து மெம்பரின்வேலை, லோக்கல்போர்டுகளுக்கு ஓட்டுக்கொடுப்பதற்கும், கியாண்டிடேட்டாக நிற்பதற்கும் லாயக்

கானதாக செய்யப்படவேண்டுமென்று நாம் கோருவது நடவடிக்கையில் முற்றும் நூதனமாறுதலாகவும் இருக்கவில்லை. தற்காலம் அமுலிலிருக்கும் விதிகளிலேயே, முன்னமேயே காட்டியபடி யூனியன் பஞ்சாயத்தின் உத்தியோக முறையில்லாதமெம்பர் ஓட்டுக்கொடுக்க தகுதியென்று ஏற்பட்டிருக்கிறது. லோகல் போர்டுகளின் மெம்பர்களை தெரிந்தெடுக்க பொதுக்காரியங்களில் சிரத்தையுள்ளவர்களை லாயக்கானவர்களென்று ஆமோதிக்கும் முறை முன்னமேயே ஏற்பட்டிருக்கிறது. நாம் அதனுல் இப்போழுது கோரவேண்டுவது அதேமுறையை இன்னொருபொது விஷயசமபந்தத்திற்கும் விசாலிக்கச் செய்யவேண்டுமென்பதே. ஒன்றுக்கொன்று ஒப்பிட்டுக்காட்டுவது ஒழுங்கல்லவென்று சொல்லப்படுகின்றது. யூனியனின் பஞ்சாயத்து மெம்பர்கள் ஐக்கியசங்கபஞ்சாயத்து மெம்பர்களைப் போல் ஜனங்களின் பிரதிநிதிகளாயும் உண்மையாகவே ஜனங்களால் விரும்பட்டவர்களாகவும் எதுவரைக்கும் இருக்கிறுர்களென்று ஒப்பிட்டுப் பார்ப்பது காரியப் பிரயோஜனமான விஷயமாகாது. ஆனுல் ஐக்கிய சங்கங்கள் உண்மையில் ஜனங்களால்விரும்பப்பட்டவும், ஜனங்கள் பிரதிநிதியானவுமான சங்கங்கள் என்பதில் மாறு அபிப்பிராயங்கள் இருக்கமுடியது.

அது காரணம்பற்றி லோக்கல் போர்டுகளின் எலக்ஷன்விஷயத்தில் கவனிக்கப்படுகிற பொது ஜனக்காரியச் சபைகளோடு ஐக்கியச்சங்கங்களையும் பாத்தியப்பட்டதாகச் சேர்ப்பதை ஒருவராவதுமறுதளித்துச் சொல்லுவதற்கில்லையென்று நான் உறுதியாய் எண்ணுகிறேன். இந்தச் சீர்திருத்தம்தற்காலத்திய நிலைமைகளை ஒட்டி அவசியமானதாயும் சீக்கிரத்தில் கவனிக்க வேண்டியதாயும் இருப்பதல்லாமல், கடவுளையும் இராஜாவையும் தேசத்தையும் உண்மையில் நேசிக்கிறவர்கள் எல்லோரும் மனதிலுண்மையாய் எண்ணிக் கொண்டிருக்கிற எதிர்கால அபிப்பிராயங்களை யொட்டி அத்தியாவசியமானதாகவும், விரும்பக்கூடிதாகவுமிருக்கிறது.

---

# ஐக்கிய முயற்சியின் அபிவிருத்தி.

## ரெஜிஸ்ட்ராரின் ஸர்குலர்.

## ஏழை வகுப்பினர்களுக்குச் சங்கங்கள்.

ஏழைகளுக்கும், தாழ்ந்த வகுப்பாருக்கும், நெசவுக்காரர்கள், தையற்காரர்கள், கல்தச்சர்கள், கொத்து வேலை செய்பவர்கள், ரிக்ஷாவண்டிக்காரர்கள், ஜட்கா வண்டிக்காரர்கள், வண்டி ஓட்டுகிறவர்கள், செக்கிலியர்கள், தோட்டிகள், மண் வேலைசெய்பவர்கள், கல்



லுடைக் கூலி வேலை செய்பவர்கள், Badgas—பஞ்சமர்கள் இவர்களைப்போன்ற தினக் கூலியின் பேரில் ஜீவனம் செய்பவர்களாகிய இவர்களுக்கும் ஐக்கிய சங்கங்கள் கீழே சொல்லப் படுகிற மாதிரியில், பணம் கடன் கொடுக்கும் பாங்கிகளும் ஒப்புக் கொள்ளும் பட்சத்தில்-ஸ்தாபிக்கப் படலாம்:—

(1) இவ்விதமான சங்கங்களை ஸ்தாபிப்பதும் நடத்துவதும் நாட்டுக்கு நன்மை செய்வதற்கென்றுமட்டுமல்ல, ஐக்கிய கோட்பாட்டின் முக்கிய நோக்கமென்றே ஒப்புக்கொள்ள வேண்டும். ஆகையினுல் தான் ஐக்கிய முயற்சிக்காரர்களாலும் பரோபகாரிகளாலும் இவ்விஷயம் விருத்திக்கு கொண்டு வரவேண்டியதவசியம்.

(2) இப்பேர்க்கொத்த சங்கங்களுக்கெல்லாம் (அசைாப் பொருளாவது அல்லது அசையும் பொருளாவது) அநேகமாய் ஆஸ்திமிகவும் குறைவாகவே யிருக்கும். பொறுப்பின் எட்டுமடங்கு ஆஸ்தியிருக்க வேண்டுமென்றெண்ணுவது அளவு கடந்த மதிப்பாகவே முடியும். இப்பேர்க்கொத்த சங்கங்களுக்குக் கொடுக்கப்படும் தொகைகள் யாதொரு அபாயங்களுக்குள்ளாகாமல் மிகவும் ஜாக்கிரதையாய் பாதுகாக்கப்பட வேண்டுமென்று எல்லோரும் அறிந்து கொள்ள வேண்டிய விஷயம். சங்கங்களை மேற்பார்வை பார்ப்பது தான் போதுமான காப்பாக விருக்கிறது. போதுமான மேற்பார்வையினுல் அபாயங்கள் ஒன்று மில்லாமலே செய்து விடலாம்.

(3) இம்மாதிரி சங்கங்கள் மூன்று வகுப்புக்களுள் ஸ்தாபிக்கப்படலாம். அவசியமானுல் ஒரே கிராமத்தை மூன்று பாகமாகப் பிரித்து மூன்று தனிசங்கங்கள் ஸ்தாபிக்கலாம். ஒரு சங்கத்திலுள்ள எல்லோரும் ஒரு வகுப்பாயும், நடையுடை பாவனைகளில் ஒரே மாதிரியாயும், ஒருவருக்கொருவர் நன்முய் தெரிந்தவர்களாயும் இருக்க வேண்டும். ஆட்சேபணையின்றி, சங்கம், பொறுப்பு வரையறுக்கப் படாததாயிருக்க வேண்டும். ஒரு சங்கதிற்கு பதினைந்து அல்லது இருபது மெம்பர்கள் மிகவும் குறைந்த தொகையென்று சொல்ல முடியாது.

(4) இச்சங்கங்களுக்கு நூற்றுக்குவருஷம் 1-க்கு எட்டே கால் ரூபாய் வட்டிக்கு கடன் கொடுக்கலாம். கடன் கொடுக்கும் சங்கத்தார் அவ்வட்டியில் 100-க்கு ஒரு ரூபாய் குபர்

விஷன் பண்டுக்குகொடுக்க வேண்டும். சங்கங்கள் மெம்பர்களுக்கு அத்தொகையை நூற்றுக்கு வருஷம் 1 க்கு 12½-வட்டிக்குக்கடன் கொடுக்கும். (அதாவது மாதம் 1 க்கு ரூபாய்க்கு இரண்டுபைசா வீதம்) இந்த ரூ. 12½-வட்டியில் மூன்றேயரைக்கால், அதாவது மாதம் 1 க்கு ரூபாய்க்கு ½ பைசாவீதம் சூபர்விஷன் பண்டுக்காகவென்று வைக்கப்படவேண்டியது. ஒருசங்கத்திற்கு ரூபாய் 1000 கடன் கொடுக்கப்பட்டால் வருஷம் 1க்கு 100 க்கு 4 ⅛ ரூபாய் வீதம் அதாவது மாதம் 1க்கு ரூ 3-7-0 சூபர்விஷன் பண்டுக்காககிடைக்கும். இப்பேர்க்கொத்த மூன்று சங்கங்கள் சேர்ந்து சூபர்விஷன்பண்டுக்கு மாதம் 1 க்கு பத்துரூபாய் கொடுக்கமுடியும். இதுமாதிரி ஆறுசங்கங்கள் சேர்ந்து மாதம் 1 க்கு ரூபாய் இறுபதுசம்பளத்தில் ஒரு சூபர்வைசரை நியமிக்க முடியும். இந்த சூபர்வைசர் மாசற்ற நடத்தையுள்ளவராக இருக்கவேண்டும். தன் சொந்த உபயோகத்திற்காக ஒரு பைசாவும் மெம்பர்களிடம் வசூல் செய்யக்கூடாதவராயிருக்க வேண்டும். சட்டம் இடங்கொடாத ஒரு அணா வசூல் செய்தாலும் உடனே அவனை வேலையைவிட்டு நீக்கிவிடவேண்டியது. அவசியமானபோதெல்லாம் சங்கத்தின் கணக்குகளை அவனே எழுதவேண்டும். அச்சங்கங்களின் மாதாந்தரகணக்குகளையும், வருஷாந்தரக் கணக்குகளையும் அவனே தயார்செய்ய வேண்டும். அவர் அவர்களுடைய சங்கங்கள் எல்லாவற்றையும் போய்ப்பார்த்து தணிக்கை செய்ய வேண்டும். இவ்விஷயம் செய்ய எவனொருவன் பின்தாங்குகிறானோ அந்தக்ஷணமே இவ்வேலைக்கு அவர் லாயக்கல்லாதவனாகிறார். சங்கத்திலுள்ள பஞ்சாயத்து மெம்பர்களுக்கும், மற்றமெம்பர்களுக்கும்கூட்டுறவு சம்மந்தமான விஷயங்களைப் போதிக்க வேண்டும். அவருடைய போதனையின் பேரில் சங்கத்தின் உத்தியோக முறையில் அல்லாத மற்றமெம்பர்கள் கூட்டுறவின் விஷயமாக எவ்வளவு அறிந்திருக்கிறார்கள் என்பதின் பேரில்தான் அவன் செய்யும் வேலைத்திறமை கணிக்கிடப்பட வேண்டும்.

(5) இவ்வகுப்பாருக்காக தற்காலம் ஸ்தாபிக்கப்பட்டுள்ள சங்கங்களும் இந்த விதிகளை யனுசரித்தே மாற்றப்பட வேண்டும். தற்காலம் அநேக சங்கங்கள் சரியாய் மேற்பார்வை பார்க்கப் படாததால் மிகவும் க்ஷீணதிசையில்இருக்கின்றன வென்று நம்பப்படுகிறது. இப்படி யிருப்பதற்குக் காரணவனென்றான் மேல் இச்சங்கங்களும் விவசாயச் சங்கங்கள் போலவே ஆஸ்தி அதிகமாகவும், அசையாப்பொருள் ஆதரவின் பேரிலும் ஸ்தாபிக்கப்பட்டதே. இப்பேர்க்கொத்த சங்கங்களெல்லாம் காலதாமதமின்றி எவ்வளவு சீக்கிரத்தில் முடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில் புதுமாதிரியில் மாற்றப் படவேண்டும்.



(6) இச்சங்கங்களிலெல்லாம் மெம்பர்களுக்கு டிவிடெண்டு கொடுக்க வேண்டியதில்லை. ஆனால் எல்லா இலாபமும் க்ஷேமநிதிக்கே சேர்க்கப்படவேண்டியது க்ஷேமநிதி போதுமானதாகசேர்ந்தபிறகு வட்டியின் வீதத்தை குறைத்துவிடலாம். இப்பேர்க்கொத்த சங்கங்களுக்கெல்லாம் இதுதான் சரியான டிவிடெண்டாகும்.

சென்டரல் பாங்கிகளும், அஸிஸ்டெண்டு ரிஜிஸ்தரார்களும் இவ்விஷயங்களைக்குறித்து தங்கள் தங்கள் அபிப்பிராயத்தை தெரியப்படுத்தும் படியாய் வேண்டப்படுகிறார்கள். இதில் சம்மந்தப்பட்டவர்களால்அல்லது அவர்களில்அநேகமாய் எல்லாராலும் இவ்விஷயம் ஒப்புக்கொள்ளப்பட்டால் இவ்விஷயம் அமுலுக்கு கொண்டு வரப்படும்.

---

## இந்தியா ஊழியச்சங்கம் (Servants of India Society) பம்பாய் பிராஞ்சின் ஆதரணையின் கீழ் ஐக்கியசங்கங்களின் காரியதரிசிகளை பழக்குவதற்கு ஓர் வகுப்பு.

பம்பாய் இராஜதானியின் ஐக்கிய சங்கங்களின் ரிஜிஸ்தாரரவர்கள் கோரியதின்பேரில், பம்பாய், தட்சணதேசம், குஜராத்து தேசம் முதலிய இடங்களிலுள்ள ஐக்கிய சங்கங்களின் காரியதரிசிகளை பழக்கப்படுத்துவதற்காக இந்தியா ஊழியச்சங்கத்தின் கிளைச்சங்கமாகிய பம்பாய் சங்கத்தாரால் ஒரு வகுப்பு ஸ்தாபனஞ்செய்யப்பட்டு ஸைன்டர்ஸ்டு ரோட்டு (Sandhurst Road) கிர்காமில் சங்கத்தின் கட்டடத்திலேயே 1916௵ ஆகஸ்டு மாதம் 23௳ முதற்கொண்டு ஆகஸ்டு மாதம் 30௳ முடிய நடத்தப்பட்டது. வகுப்பானது காலையில் 8 மணி முதல் 10 மணி வரையிலும், மத்தியானம் 2 மணி முதல் சாயந்திரம் 5 மணி வரையிலும் இராத்திரியில் 8 மணி முதல் 10½மணி வரையிலும் கூடிற்று. மிஸ்டர் G. K. தேவதார் அவர்கள் அக்கிராசனாதிபதியாகவும், மெஸ்ஸர்ஸ் ஜாஷீ அவர்களும், தாக்கர் அவர்களும்,

கௌரவ காரியதரிசிகளாகக்கொண்ட ஒரு மாகாண கமிட்டியின் உத்தரவின்கீழ் இவ்வகுப்பானது நடத்தப்பட்டது. காரியதரிசியின் செலவுகளுக்காகவும், பம்பாயில் இவ்வகுப்பை நடத்துவதற்காக வேண்டிய இதர செலவுகளுக்காகவும் நானூறு ரூபாய்க்கு அதிகப்படாத தொகையை கொடுப்பதாக ரிஜிஸ்தராரவர்கள் வாக்களித்தார்: வகுப்பில் போதிக்கப்பட்ட விஷயங்கள் பின்வருமாறு:—

(a) குஜராதி பாஷையிலும், மராத்தி மாகாண கமிட்டி மெம்பர்களாலும் ஐக்கியசங்கங்களின் அஸிஸ்டெண்டு ரிஜிஸ்தராராலும், டிபார்டுமெண்டு ஆடிடர்களாகிய மெஸ்ஸர்ஸ், கோர், ஸெட்ணு இவர்களாலும் கூட்டுறவு சம்பந்தமாய் உபயோககரமான விஷயங்களைப் பற்றி பன்னிரண்டு பிரசங்கங்கள்.

(b) வேலையின் சம்பந்தமாக பற்பல வழிகளைக் குறித்துக்காட்டுவதற்காக ஆறு பாடங்கள்.

(c) விவசாய சம்பந்தமாகவும், கூட்டுறவு சம்பந்தமாகவும், பம்பாயிலுள்ள முக்கிய ஸ்தலங்களைப் போய்ப்பார்த்தல்,

உதாரணமாக:—

(1) பஞ்சாலைகள் (2) விவசாயக் கருவிகளும், இயந்திரங்களும் வைக்கப்பட்டுள்ள கிடங்குகள் (3) தானிய மண்டிகள் (4) உருளைக் கிழங்கு டிப்போக்கள், வெங்காய டிப்போக்கள் (5) டாக்குகள் (6) பசும் பருத்தி (7) பம்பாயில் ஆறு ஐக்கியசங்கங்கள் (8) பம்பாய் சென்ட்ரல் கோவாபரேடீவ் பாங்கு (9) காமதேவியிலுள்ள கோவாபரேடீவ் ஷிகள்,

(d) இப்படி இந்த ஸ்தலங்களுக்கெல்லாம் போய்ப்பார்க்கும் சமயங்களில் அந்தந்த ஸ்தல சம்பந்தமான விஷயங்களைக் குறித்து தேர்ந்தவர்களைக்கொண்டு சிறு சம்பாஷணைகளும், போதனைகளும் நடத்தப்பட்டன.

போதனுமுறை முடிந்தவுடனேயே இவ்வகுப்புக்கு வந்து சேர்ந்துள்ளவர்களுக்கெல்லாம் எழுத்து மூலமாயும் வாய் மொழியாயும் ஒரு பரீட்சை நடத்தப்பட்டது. பரீட்சையில் நூற்றுக்கு ஐம்பது விதம் மார்க்கு வாங்கியவர்களுக்கு யோக்கியதா பத்திரங்கள் (சர்ட்டிபிகேட்டுகள்) ரிஜிஸ்தராரவர்களால் அளிக்கப்பட்டன. பரீட்சை காலம் முடிவதற்குள் முன்னமேயே ஒப்புக்கொண்டிருந்தபடிக்கு ரிஜிஸ்தராரவர்கள் ஆஜராயிருந்தார். வகுப்பிற் சேர்ந்து கற்றுக்கொள்வதற்காக யாதொரு விதமான கட்டணமும் வசூல் செய்யப்படவில்லை. இவ்விஷயத்திற்காகவென்று ஏற்படுத்தப்பட்ட மாகாண கமிட்டிக்கு ஒன்பது பேர் நியமிக்கப்பட்டிருந்தார்கள்.



# அலிபாக் கோவாப்ரேடீவ் பாற்சாலை சங்கம், லிமிடெட்.

(1) இச்சங்கம் 1915-௵ ஏப்பிரல் மாதம் 23 தேதி யன்று ரிஜிஸ்தர் செய்யப்பட்டது.

(2) மெம்பர்களின் தொகை 35; இவர்களில் 28 பேர் பாலைத் தயாரித்து சங்கம் மூலமாய் வியாபாரத்துக்கனுப்பும் விவசாயிகள். இச்சங்கத்திற்கு தன் முதல் ரூ. 1152—8—0. அலிபாக் பட்டணத்திலிருந்து இரண்டு மைல் தூரத்திலுள்ள வேஷ்வி, மூலா என்னும் இவ்விரண்டு கிராமங்களிலிருந்துதான் பால் சேகரிக்கப்படுகிறது. இச்சங்கமானது 340 ரூபாய் வரைக்கும் செலவழித்து பால் கறப்பதற்காக இரண்டு தொழுவங்கள் ஒன்று வேஷ்வியிலும், மற்றொன்று மூலாவிலும் போட்டிருக்கிறார்கள். மெம்பர்கள் மாடுகளை தங்களுடைய தங்கள் சொந்த வீட்டிலேயே வைத்துக்கொள்ளுகிறார்கள். ஆனால் பால் கறந்து கொடுப்பதற்காக சங்கத்தாரால் கட்டப்பட்டுள்ள தொழுவங்களுக்கு, குறிப்பிட்ட நேரங்களில் ஒவ்வொரு நாளும் இரண்டு வேளைகளிலும், மாடுகளைக் கொண்டுவந்து, மானேஜிங் கமிட்டியால் நியமிக்கப்பட்ட பிரதிநிதியின் முன்னிலையில் பால் கறந்து கொடுக்கிறார்கள். வேஷ்வி யென்னுமிடத்தில் சங்கத்தின் கிளார்க்காலும், மூலாவென்னுமிடத்தில் மானேஜிங் கமிட்டியின் மெம்பர் ஒருவராலும் இக்காரியம் மேற்பார்வை பார்க்கப்பட்டு வருகிறது. பால் கறப்பதற்காக பாத்திரங்கள் சங்கத்தாலேயே வாங்கி வைக்கப் பட்டிருக்கின்றன. தங்கள் மாடுகளின் பாலைக் கறப்பதற்காக ஒவ்வொரு மெம்பருக்கும் ஒவ்வொரு தனிப்பாத்திரம் கொடுக்கப்படுகிறது. இம்மாதிரியாக பால் கறந்து சங்கத்தாருக்கு கொடுக்கப்படுகிறது. ஒவ்வொரு மெம்பரும் தம்முடைய பாஸ் புத்தகத்தை கொண்டு வருகிறார். சங்கத்துக்கு கொடுத்த பாலுக்கு கணக்கு உடனுக்குடனேயே அப்புத்தகத்தில் பதியப்படுகிறது. ஒவ்வொரு முகாமிலும் இப்படி சேகரிக்கப்பட்ட பால் முழுவதையும் ஒரு பெரிய பித்தளை ஹண்டாவில் ஊற்றி பூட்டு போடபபட்டு சங்கத்து வேலைக்காரனொருவன் தலைச் சுமையாக தூக்கிக் கொண்டு பட்டணம் கொண்டு போய் சேர்க்கிறான். அங்கே வழக்கமாய் ஏற்பட்டு ரிஜிஸ்தரில் பதியப்பட்டுள்ள வாடிக்கைக் காரர்களுக்கு பால் பட்வாடா செய்யப்படுகிறது.

(3) சுத்தம்: பால் கறப்பதற்காக வென்று வைக்கப்பட்டுள்ள செம்புகள், முதலிய பாத்திரங்கள் இவைகளெல்லாம் மிகவும் சுத்தமாய்வைக்கப் படுகின்றன. பால் கறப்பதற்காகவும், அளப்பதற்காக

வும், சேகரிப்பதற்காகவும், கொண்டு போவதற்காகவும் உபயோகப் படுகிற ஒவ்வொரு பாத்திரமும் முதலில் குளிர்ந்த ஜலத்தில் கழுவப்படுகிறது. பிறகு சோடா கரைத்துள்ள வெந்நீரில் கழுவப்படுகிறது. கடைசியாக கொதிக்கும் சுடுநீரில் கழுவப்பட்டு உலர்த்தப் படுகிறது. பால் கறப்பதற்கு முன்னமே, பால் கறக்கிறவர்களுடைய கைகளும், மாட்டின் மடியும், நன்ருக கழுவப்பட்டு மல்லின் துணியால் துடைக்கப்படுகிறது. சோப்புக்கட்டி தயாராக வைக்கப்பட்டிருக்கிறது. அடிக்கடி அது உபயோகப்படுத்தப்படுகிறது.

(4) வாடிக்கைக்காரர்களின் மொத்தம் 76: 1915ளு செப்டம்பர் மாதத்தில் இவர்களுக்கு பட்வாடா செய்யப்பட்ட பாலின் மொத்தம் 2,700 சேர்கள். மெம்பர்களிடமிருந்து வாங்கப்படுகிற பால் முழுவதும் வாடிக்கைக் காரர்களுக்கு பட்வாடா செய்யப்படுகிறது. கொஞ்சமேனும் மீதி வைக்கப்படுவதில்லை.

(5) மெம்பர்களுக்குள்ளேற்படும் நன்மைகள். மெம்பர்களிடமிருந்து பால் ஒரு ரூபாய்க்கு ஒன்பது சேருக்கு கொஞ்சம் அதிகமாகத்தான் வாங்கப்பட்டு வாடிக்கைக்காரர்களுக்கு எட்டு சேர்வீதம் கொடுக்கப்படுகிறது. செலவுகளை யெல்லாம் கழித்து கணக்குபார்த்தால் சங்கத்திற்கு சுமார் ஆறு ரூபாய்த் தான் லாபம் கிடைக்கிறது; பாலில் ஜலம் கலப்பதற்குமெம்பர்களுக்கு முடியாமற்போனாலும், பாலுக்கு சரியான விலை கிடைக்கிறது. சங்கத்தில் சேர்வதற்கு முன்னால் பால் விற்பதற்காக தெருத்தெருவாய் அலைந்துகொண்டிருந்த சிரமமும், நேரமும் இப்பொழுது மிச்சம். இப்பொழுது அவர்களுக்கு கிடைக்கிற விலையின் பேரில் அவர்கள் முழுத்திருப்தியடைந்திருக்குருர்கள். இதைத்தவிர மாடுகள்வாங்குவதற்கும், மாட்டுக்கு வேண்டிய தீனியை மொத்தமாக வாங்கிவைத்துக் கொள்வதற்கும், மெம்பர்களுக்கு நூற்றுக்குவருஷம் 1-க்கு ரூபாய் ஒன்பதே காலேயரைக்கால் வட்டிக்கு, கடன்களும் சங்கத்தில் கொடுக்கப் படுகின்றன.

(6) வாடிக்கைக் காரர்களுக்குள்ள நன்மைகள். சங்கத்தாரால் விற்கப்படுகிற பாலின் குணத்திற்கும் விலைக்கும் அவிபாக் பட்டணத்திலுள்ள பொது ஜனங்கள் எல்லோரும் ரொம்பவும் திருப்தியடைந்திருக்கிறார்கள்.

(7) இதர ரிமார்க்குகள்: சங்கத்தின் மெம்பர்களின் எருமைகளுக்கு உபயோகப்படுவதற்காக வென்று நல்ல எருமைக்கடாவொன்று சங்கச் செலவிலேயே வைத்து வளர்த்து வருவதற்கு சங்கம் ஏற்பாடுசெய்து கொண்டிருக்கிறது. மெம்பர்களின் எருமைமாடுகளுக்கு மேய்ச்சலுக்குபயோகப் படுமாறு சில நிலங்களை கலெக்டரவர்களிடமிருந்து சங்கம் வாங்கியிருக்கிறது. குஜராத்திலிருந்து வரவழைக்கப்போகிற எருமைக்கடாவும், மெம்பர்களுடைய எருமைமாடுகளும் ஒரு மந்தையாகச் செய்யவும் ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறார்கள்.

---

அநுபத்தம்.

## மதராஸ் ஸெண்டிரல் அர்பன் பாங்கி

சென்ற ஆகஸ்டு மாதம் 12-ம் தேதியன்று ஸெண்டிரல் அர்பன் பாங்கின்விசேஷமீட்டிங்கொன்று நடந்தது. திவான் பகதூர் கிருஷ்ண ஸாமி ராவ் அக்கிராசனம் வகித்தார். ஸர். வி. சி. தேசிகாச்சாரியார், நெல்லூர் கலெக்டர், திவான்பகதூர் R. ராமச்சந்திரராவ், மிஸ்டர் சி. பி. ராமஸ்வாமி அய்யர் முதலிய மெம்பர்களும் அநேகமாக எல்லோரும் ஆஜராயிருந்ததுடன், திவான் பகதூர் எல். டி. ஸ்வாமிக் கண்ணுபிள்ளையும் ஆஜராயிருந்தார். ஸெண்டிரல் பாங்கை மாற்றிக் கொள்ள வேண்டியதும், கோ ஆபரேடிவ் சங்கங்களை அதில் மெம்பர்களாகச் சேர்த்துக்கொள்ள வேண்டியதும், மாகாண பாங்கை நிர்வகிக்கும் விஷயத்தில் அந்த சங்கங்களாகிய மெம்பர்களுக்கு அதிக செல்வாக்கிருக்கும்படி அவைகளுக்கு அதிக ஓட் கொடுக்க வேண்டியதும் அவசிய மென்று திவான்பகதூர், ஸ்வாமிக்கண்ணு பிள்ளை முதலில் பேசினுர். அவர் பேசியதின் ஸாராம்சம் பின் வருமாறு :—

" மாகாணத்திலுள்ள ஸெண்டிரல் பாங்கிகளுக் கெல்லாம் நடுநாயகமாக ஒரு பாங்கி இருக்க வேண்டியது அவசியம். மாகாண பாங்கு 3 விதமாய் ஏற்படலாமென்று கோ ஆபரேஷன் விஷயமாய் ஏற்பட்ட கமிட்டி சிபார்சு செய்திருக்கிருர்கள். மாகாண பாங்கில் சங்கங்களும் மெம்பர்களா யிருக்க வேண்டுமென்றும், அவைகளுக்கு அதிக ஓட் இருக்கவேண்டு மென்றும், கமிட்டி ஒரு வகை பாங்கை சிபார்சு செய்து, இந்த நிபந்தனைகளுக்குட்பட்டு, இந்த ஸெண்டிரல் பாங்கை மாகாண பாங்காய் மாற்றி விடலாமென்று அவர்கள் அபிப்பிராயப் பட்டார்கள். சங்கங்களை மெம்பர்களாகச் சேர்த்துக்கொள்ள நீங்கள் இஷ்டப்படுவீர்களோ என்னமோ தெரியவில்லை; சேர்த்துக் கொண்டாலும் அவைகளுக்கு அதிக ஓட்கொடுக்க இஷ்டப்படுவீர்களோ என்னமோ தெரியவில்லை. ஆனல் உங்களுக்கிஷ்டமிருந்தாலும் இல்லாவிட்டாலும், உங்களுடைய பாங்கின் அமைப்பு இப்பொழுதிருக்கிறபடி இனி வெகுகாலமிருக்க முடியாதென்பதைச் சொல்லவே நான் இங்கு வந்திருக்கிறேன். ஸெண்டிரல் பாங்குகளில் தங்களைச் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று சங்கங்கள் கேட்கின்றன. ஐக்கிய நாணய விஷயம் விரிவடைய இவ்விஷயமாய் ஒரு மாறுதல் செய்யவேண்டியதும் அவசியமாய் விட்டது. இந்த உத்தேசத்துடன் ஆரம்பத்தில் ஸெண்டிரல் பாங்குகள் ஏற்பட வில்லையென்று சொல்வது பிரயோஜனப்படாது. பிறகு என்ன ஏற்படப் போகிற

தென்பது அப்பொழுது யாருக்குத் தெரியும்? சிலசங்கங்களுக்கு உதவி செய்யவே ஸெண்டிரல் பாங்குகள் ஆதியில் உத்தேசிக்கப்பட்டன. சங்கங்கள் வலுத்துப்போய் விட்டதை உணர்ந்து சில ஸெண்டிரல் பாங்குகள் தங்களுடைய அமைப்பைத் திருத்திக் கொண்டு சங்கங்களை மெம்பர்களாகச் சேர்த்துக்கொண்டு விட்டன. நீங்களும் அப்படிச் செய்தால் நலமாயிருக்கும்.

மிஸ்டர் ஷிவராவின் யோசனையை நீங்கள் ஒப்புக்கொள்ள சம்மதிக்கிறீர்களா வென்று எனக்குத் தெரியவில்லை. ஒப்புக்கொண்டு சங்கங்களை மெம்பர்களாக நீங்கள் சேர்த்துக்கொண்டால், உங்களுடைய பங்குகளின் விலை குறையலாமென்று நீங்கள் நினைக்கலாம்; வேறுகாரணங்களாலும் விலைகுறையும். நூற்றுக்கு 9-க்குமேல் லாபம் பிரித்துக் கொள்ளக்கூடாதென்று கவர்ன்மெண்டார் செய்துவிட்ட உத்தரவினாலேயே, பங்குகளின் விலை பாதிக்கப்படும். லாபத்தை கவனிப்போம். பல சங்கங்களை நீங்கள் சேர்த்துக்கொண்டாலும், வெகு காலமாகும் வரையில் உங்களுடைய லாபம் 100-க்கு 9-க்குக் குறையாதென்று நான் நினைக்கிறேன். உங்களுடைய வேலையைக் குறைத்து விடுகிறதற்காக நான் இந்த யோசனை சொல்லவில்லை. மெட்ராஸ் ஸெண்டிரல் பாங்கு ஏற்பட்டபொழுது, மாகாணத்துக்குப் பொதுவாக அது ஏற்படுத்தப்பட்டது. ஆனால் அது அந்த வேலையில் பாதியைத்தான் செய்து வந்திருக்கிறது. அவனுடைய உபயோகம் பலப்பட வேண்டியே, அதைமாகாண பாங்காக மாற்றிக் கொள்ளும்படி நான் சொல்லுகிறேன்” என்று அவர் சொன்னார்.

ரெஜிஸ்டிராருடைய பிரேரணைகளை ஸர். வி. ஸி. தேசிகாச்சாரியார் எதிர்த்துப் பேசினார். அவருடைய பேச்சின் சாராம்சம் பின் வருமாறு:—

“இந்த ஸெண்டிரல் அர்பன் பாங்கானது கோ ஆபரேடிவ் பாங்கு அல்ல. ஆகையால்தான் 1904-ம் வருஷத்திய 10-வது சட்டத்தின் 6-ம் பிரிவுப்படி அது பதிவு செய்யப்படாமல், 29-ம் பிரிவின்படி பதிவுசெய்யப்பட்டது. கோ ஆபரேடிவ் சங்கங்களுக்குள்ள சில சௌகரியங்களை இந்த பாங்குக்கு கவர்ன்மெண்டார் கொடுத்திருப்பது உண்மை; அதற்குப் பதிலாக 100-க்கு ஏழரை வட்டிக்குக் கடன் கொடுக்க பாங்கு சம்மதித்திருக்கிறது. இனாமாக கவர்ன்மெண்டார் தணிக்கை செய்வதை நிறுத்திவிடப் போகிறார்கள். ஸ்டாம்புச் செலவில்லாமல்செய்து கொடுத்திருக்கும் சௌகரியம் அவ்வளவு பெரிதல்ல. 7½ வட்டிக்கு அதிகமான வட்டிக்குக் கடன் கொடுக்



கலாம். 100க்கு 24-க்கு அதிகமாக லாபத்தைப் பங்கு பிரித்துக்கொள்ளலாம். ஐக்கிய நாணயச் சங்கங்கள் நம்மிட மிருந்து 7 வட்டிக்குக் கடன்வாங்கி 9 3/8 வட்டிவரை பெற்றுக்கொள்கின்றன.

இந்த நிலைமையில் சங்கங்களைச் சேர்த்துக்கொண்டு நமக்கு வரும் லாபத்தில் அவைகளுக்குப் பங்கு கொடுப்பானேன்? ஆகையால் பாங்கை மூடி விடுகிறதே நல்லதென்று நான்நினைக்கிறேன்” என்று அவர் சொன்னார்.

பிறகு அக்கிராஸனாதிபதி பேச்சின் ஸாராம்சம் பின்வருமாறு:—

“இந்த விசேஷ மீட்டிங்கானது இரண்டு காரணங்களுக்காகக் கூட்டப்பட்டது. ஒன்று தணிக்கையைப் பற்றியது, கணக்குப் பரிசோதனைக்காக நாமாக 600-ரூபாய் கொடுக்கவேண்டுமென்று ரெஜிஸ்டிரார் கேட்கிறார். ஐக்கிய சங்க்ங்களின் கணக்குகளைத் தணிக்கை செய்வதற்காக அவைகளிடமிருந்து பணம் வசூல் செய்ய வேண்டுமா என்று வெகுநாளாக யோசனை நடந்து வருகிறது. இந்த மாகாணத்தில் கூடின அநேகம் ஐக்கிய நாணயச் சங்கங்களின் கான்பரன்ஸ்களிலும் இது கூடாதென்று தீர்மானிக்கப்பட்டது. எல்லா மாகாணங்களிலுமுள்ள ஐக்கிய நாணயச் சங்க ரெஜிஸ்டிரார்களின் கான்பரென்ஸ் ஒன்று கூடினபொழுது, கணக்குத் தணிக்கைக்காகப் பணம் வசூல் செய்யவேண்டுமென்று நமது மாகாண ரெஜிஸ்டிரார் சொன்ன யோசனையை வேறு எந்த ரெஜிஸ்டிராரும் ஒப்புக்கொள்ளவில்லை. ஆயினும் ரெவினியூ போர்டுக்கும் மாகாண கவர்ன்மெண்டுக்கும் அவர் தம்முடைய அபிப்பிராயத்தை வற்புறுத்திக் கொண்டிருக்கிறார். இதற்கிடையில் கோ ஆபரேடிவ் கமிட்டியின் ரிபோர்ட் வெளியாயிற்று. தணிக்கைக்குப் பணம் வசூல் செய்யலாமென்று அந்த ரிபோர்ட்டில் சொல்லப்பட்டிருந்தாலும், அந்த ரிபோர்ட்டின் மேல் இந்தியா கவர்ன்மெண்டாவது மாகாண கவர்ன்மெண்டாவது இன்னும் உத்தரவு செய்யவில்லை. இதற்குள் ரெஜிஸ்டிரார் ஒரு சுற்றுக் கடிதம் அனுப்பி யிருக்கிறார். கவர்ன்மெண்டார் சட்டத்தை உபயோகப்படுத்தி, தணிக்கைக்கு சங்கங்கள் பணம்கொடுக்கவேண்டுமென்று சொல்வதற்கு முன், சங்கங்கள் தாங்களாகவே கொடுக்க முன் வரவேண்டு மென்று அக்கடிதத்தில் சொல்லியிருக்கிறார். அதன்மேல் இந்த பாங்கு என்ன செய்யவேண்டு மென்று சொல்லும்படி அவரைக்கேட்டோம். அவர், கணக்குத் தணிக்கை செய்ய 3 குமாஸ்தாக்களின் சம்பளத்துக்காக 600ரூபாய் கொடுக்க வேண்டுமென்று சொன்னார். கணக்குத் தணிக்கைக்காக கவர்ன்மெண்டினால் அங்கீகரிக்கப்

பட்டிருக்கிற ராவ்பகதூர், 'கிருஷ்ணஸாமி ராவைக்கொண்டு நாமே தணிக்கைசெய்து' கொள்ளுகிறதாகச் சொன்னோம். அவர் சரியென்று சொன்னார். ஆனால் ராவ்பகதூர், கிருஷ்ணசாமி ராவ் கிடைக்கவில்லை. வருஷம் முடிய ஒரு மாதந்தான் பாக்கியிருந்தது. தகுந்த அதிகாரமில்லாமல் 600 ரூபாய் கொடுக்க இந்த பாங்கின் நிர்வாகசபை தயங்கி, 600 ரூபாய்க்கு மேற் படாமல் கொடுத்துவிடுகிறோமென்று ரெஜிஸ்டிரார் மூலமாய் கவர்ன்மெண்டுக் கெழுதினோம். நாமாகக் கொடுக்க வேண்டுமென்று தாம் கேட்டதாகவும், கவர்ன்மெண்டுக்கெழுதுவது நமக்கு ஆட்சேபமா யிருக்கிறதென்றும் அவர் பதில் எழுதினார். "நீங்களாகக் கொடுங்கள்" என்று கேட்பது சரியல்ல வென்றும், கவர்ன்மெண்டார் குறிப்பிடும் தொகையைக் கொடுத்து விடுகிறோமென்றும் எழுதினோம். 600 ரூபாய் கொடுக்க ஆட்சேபனை செய்வது நமக்குப் பெருமையல்ல வென்றும் குறிப்பிட்ட எந்தக்காலத்திற்குள்ளும் கணக்குத் தணிக்கை செய்விக்கத் தாம் கடமைப் பட்டிருக்கவில்லையென்றும் அவர் எழுதிவிட்டார்; ஆனால் ஒவ்வொருசங்கத்தின் கணக்குகளையும் தணிக்கை செய்யவாவது செய்விக்கவாவது சட்டம் அவரைக் கேட்டுக்கொள்கிறது. ஆகையால் நிர்வாக சபையார் தாங்களாகச் செலவிடக் கூடாதென்று, உங்களை யெல்லாம் கூட்டியிருக்கிறார்கள். அடுத்த விஷயம் இந்த பாங்கை மாகாண பாங்காய் மாற்றிவிடுவதைப் பற்றியது" என்று அவர் சொல்லி, அவ்விஷயமாய் ரெஜிஸ்டிரார் செய்திருக்கிற பிரேரணைகளை எடுத்துச்சொன்னார். பிறகு வாதம் பலமாய் நடந்தது. இந்த ஒரு வருஷத்துக்கு 600 ரூபாய் கொடுக்கும்படி கனம், ரங்காச்சாரியார் செய்த பிரேரணை முடிவில் ஒப்புக்கொள்ளப்பட்டது. ஸெண்டிரல் பாங்கை மாகாண பாங்காக மாற்ற சம்மதிக்கக் கூடாதென்று அவர் செய்த பிரேரணை அங்கீகரிக்கப்பட்டு சபை கலைந்தது.

---

## ராஜதானி கோவாப்ரேடிவ் பாங்கி

கோபவாரேடிவ் இலாகாவின் ரெஜிஸ்டிராராயிருந்து இப்பொழுது நெல்லூர்ஜில்லா கலெக்டராயுள்ள திவான்பகதூர் ஆர் ராமச்சந்திரராவ் மேற்கூறிய விஷயத்தைப்பற்றி பின் வருமாறு எழுதுகிறார் :—

சென்னை மகாணத்திலுள்ள ஐக்கியச் சங்கங்களுக்குப் பொதுவாக ஒரு பாங்கை ஸ்தாபிக்க வேண்டும் என்ற பிரேரணை விஷயமாய்ப் பத்திரிகைகளில் வாதம், பிரதிவாதம் நடந்திருக்கிறது ; அவ்



விஷயத்தைப்பற்றி எனக்குள்ள அபிப்பிராயங்களிற் சிலவற்றை இங்கு சொல்லவிரும்புகிறேன்.

மெட்ராஸ் ஸெண்டிரல் அர்பன் பாங்கில் பங்குடையவர்களின் சொந்த சிரத்தை எப்பொழுது ஐக்கிய முயற்சி அபிவிருத்தி யடைவதற்கு விரோதமாயிருக்கிறதோ அப்பொழுது ஸெண்டிரல் பாங்கானது போய்விடவேண்டுமென்று நினைக்கிறவர்களில் நான் ஒருவன். உள்ள நிலைமையை அறியாது சிலர் பத்திரிகைகளுக்கு எழுதுகிறார்கள். சென்னை ஸெண்டிரல் அர்பன் பாங்கி ஏற்பட்ட காரணத்தையும் அதன் சரித்திரத்தையும் நான் எடுத்துச் சொன்னால், ஐக்கிய முயற்சிக்கும் அந்த பாங்கிக்குமுள்ள சம்பந்தம் விளங்கும். இந்த மாகாணத்தில் ஐக்கியச் சங்க முயற்சியில் எனக்குள்ள அனுபோகத்தின் மேல் என்னுடைய அபிப்பிராயங்கள் ஏற்பட்டவை.

ஐக்கியச் சங்கங்கள் இந்த மாகாணத்தில் முதலில் உண்டான பொழுது அவைகளுக்கு வேண்டிய பணத்தை அடைவது பெரிய கஷ்டமாயிருந்தது. ஐக்கியச் சங்கங்களுக்குக் கடன் கொடுப்பதற்காக கவர்ன்மெண்டார் சிறிது தொகையை ஒதுக்கித்தந்தார்கள் ; ஆனால் சங்கங்களுக்கு டிபாஸிட்டாகக் கிடைக்கும் தொகையைப் பொருத்தே கவர்ன்மெண்டின் தொகையிலிருந்து கடன் கொடுக்கலாமென்று விதியேற்பட்டிருந்ததால், சங்கங்கள் வேலை செய்யும்படி செய்வது கஷ்டமாயிருந்தது. அப்பொழுது ப்ரைவேட் பாங்கி ஒன்றை ஏற்படுத்தலாமென்று திவான் பகதூர் பி. ராஜகோபாலாச்சாரியாருக்கு ஒரு யோசனை உண்டாயிற்று. இந்த மாகாணத்தில் ஐக்கியச் சங்கங்கள் அடைந்திருக்கும் அபிவிருத்திக்கு அவைகள் அவருக்கு எவ்வளவு கடமை பட்டிருக்கின்றன வென்பது நாளாக தானே விளங்குகிறது. அந்த யோசனையின் பலனாக மெட்ராஸ் ஸெண்டிரல் அர்பன் பாங்கு ஏற்பட்டு, ஐக்கியச்சங்க சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டது. அந்த பாங்கி இன்னமாதிரி தான் வேலைசெய்ய வேண்டுமென்று ஐக்கியச்சங்கங்களின் ரெஜிஸ்டிரார் சொல்லும்படி இருக்கவேண்டியே அச்சட்டத்தின கீழ் அது பதிவுசெய்யப் பட்டதென்று நான் நினைக்கிறேன். கொஞ்சங் கொஞ்சமாய் பாங்கி விருத்தியடைந்தது. பணமுடையவர்கள் அதில் பணத்தை டிபாஸிட்டாய்ப் போடும்படி செய்ய நானும் அதன் முதல் காரியதரிசியாகிய ஸர். வி.ஸி. தேசிகாச்சாரியரும் வெகு பிரையாஸைப்பட்டோம். பாங்கில் பணத்தைப் போட்டு வைப்பது சாவ்தானமா யிருக்குமென்று நாளடைவில் தெரியவே, சங்கங்கள் ஏற்பட ஏற்பட பாங்கி அவைகளுக்குப் பணம் கொடுத்துதவக் கூடிய நிலைமைக்கு வந்தது. எல்லா மாகாண ஐக்கியச்சங்க ரெஜிஸ்டி

ரார்களும் கூடி கான்பரென்ஸ் நடந்த சமயங்களில் எல்லாம் சென்னை மாகாணத்தின் சங்கங்களுக்குப் பணம் கவர்ன்மெண்டுதவி யன்னியில் கிடைக்குமென்று நான் உறுதி கூறினேன். அந்த தைரியமான நிலைமைக்குக் காரணம் பின் வருமாறு:—

(1) ஐக்கியச் சங்கங்களின் அபிவிருத்தியானது உறுதியா யிருக்கிறதென்ற அபிப்பிராயம்.

(2) சிலருடைய விசேஷ உற்சாகம்.

(3) பாங்கின் அபிவிருத்தியைக்கருதி அதன் அதன் அமைப்பை. அப்போதைக்கப்போது பாங்கும் ரெஜிஸ்டராரும் கலந்து திருத்தியது.

(4) காரியத்தில் கண்ணாய் நிருவாகத்தை நடத்தினது.

பணமுள்ளவர்கள் பணத்தை வெளி விடக் கூசுகிறார்கள்; மேலே சொன்ன அமிசங்களில் எதிலேனும் நாம் குறுக்கிவிட்டால், பணம் கிடைப்பது அரிதாய்விடும்.

ஆகையால் முதலில் நாம் தீர்மானம் செய்ய வேண்டிய விஷயமென்னவென்றால், சங்கங்கள் பாங்கில் மெம்பர்களாய் விட்டால் இப்பொழுது பாங்குக்குத் தாராளமாய்ப் பணம் கிடைப்பதுபோல் அப்பொழுதும் கிடைக்குமா என்பதே சங்கங்கள் பிரதிநிதிகளைத்தான் யனுப்பும்; அவர்கள் உற்சாக புருஷர்களா யிருப்பவர்கள், அவர்களிடத்தில் எனக்கு விசேஷ மதிப்புண்டு. ஆனால் அவர்கள் காரியவாதிகளல்ல. அவர்கள் தாட்சண்ணியப் படுவர்களாகையால், காரியத்தை நிர்வகிக்கத் தகுதி யுள்ளவர்களாக மாட்டார்கள். அதல்லாமல், அவர்கள் பிரதிநிதிகளே யாகையால், அவர்களுடைய சொந்த உற்சாகம் அதிகமாயிராது. ஐக்கியச் சங்கங்களின் அபிவிருத்திக்காகப் பாடுபடும் தீரபுருஷர்கள் லாப நஷ்டத்தில் அதிகமாகப் பங்குடையவர்களல்லவாகையால், அவர்களைக் கருதி பணம் வந்துவிழாது. நான் ஐக்கியச் சங்கங்களின் ரிஜிஸ்டிராராயிருந்த காலத்தில் நான் செய்தவேலை சித்தியாயிருக்கும் பட்சத்தில் அதற்குக் காரணமென்னவென்றால் ஐக்கியச் சங்க முயற்சியும் சங்கங்களுக்குப் பணம் கொடுத்துதவும் வேலையும் தனித்தனி நடைபெறும்படி செய்து வந்ததே யாகும் பணத்தைக் கடன் கொடுப்பதானது காரியத்தில் கண்ணுடையோர் செய்யும் கருமம் ஐக்கிய முயற்சியானது பக்தி. இவைகள் இரண்டும் ஒன்றாக மாட்டா, ஆகையால் அவைகளைத் தனித்தனிதான் வைத்திருக்கவேண்டும்.



சங்கங்களை பாங்கில் மெம்பர்களாக சேர்த்துக்கொள்ள அடியிற் கண்ட காரணங்கள் சொல்லப்படுகிறதாக நான் நினைக்கிறேன்.

1. மெட்ராஸ் ஸென்டிரல் அர்பன் பாங்குக்கு லாபமானது மூல ஐக்கியச் சங்கங்களிடமிருந்து கிடைக்கிறது.

2. சங்கங்களை மெம்பர்களாகச் சேர்த்துக்கொண்டால் பாங்கின் நிர்வாகம் திறமைப்படும்.

3. ஐக்கிய முயற்சியைப்பற்றிய ஒரு சொப்பன அபிப்பிராயப்படி அப்படிச் செய்யவேண்டியது கிரமம்.

மேற்சொன்ன காரணங்களில் ஒன்றும் சோதனைக்கு நிற்காது. வெளியில் வட்டி வருஷமொன்றுக்கு நூற்றுக்கு 8 முதல் 13 வரையில் இருந்தபோதிலும், இந்த பாங்கானது ஐக்கியச் சங்க சட்டத்தின்படி பதிவு செய்யப்பட்டிருக்கும் காரணத்தால் 100-க்கு 7½ வட்டிக்கு கடன் கொடுக்கவேண்டியிருக்கிறது. மூலச் சங்கங்களால் பாங்குக்கு வட்டி லாபம் கிடைக்கும் காரணத்தால், பங்குக்காரர்கள் இத்தனை தான் எடுத்துக்கொள்ளலாமென்ற நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. கடன் வாங்கும் சங்கங்கள் கடன்கொடுக்கும் பாங்குக்கு வரும் லாபத்தில் பங்கு பெறவேண்டுமென்றால், "இந்தியன் பாங்கு" கடன் கொடுத்து வந்தபொழுது, ஏன் அப்படிக்கேட்கவில்லை. கடன் வாங்குகிறவர்கள் ஒழுங்காய் நாணயத்தை செலுத்தி விட்டால், வட்டியில் ஒரு பாகத்தைக் தள்ளிக் கொடுக்க பாங்குகள் ஆரம்பிக்கும் காலத்தில் இவ்விஷயமாய் யோசித்துக் கொள்ளலாம். நிர்வாகம் திறமைப்படுமென்று ஒரு காரணஞ் சொல்லுகிறார்கள்; பாங்கின் பங்குக்காரர்களில் இரண்டு கக்ஷி யேற்படும்; ஒருவருக்கொருவர் சிரத்தை வேறுபடும். சங்கங்கள் கடன் வாங்குகிறவர்களாகையால், அவைகளின் பிரதிநிதிகள் வட்டியைக் குறைக்க வேண்டுமெம்பார்கள்; மெட்ராஸ் ஸென்டிரல் பாங்கானது ஐக்கிய பாங்காகையால், திருவல்லிக்கேணி ஐக்கிய பண்டசாலையைப்போல், அதனிடமிருந்து கடன் வாங்குகிறவர்களுக்கு வட்டியில் ஒரு பாகத்தைத் திருப்பிக் கொடுக்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள். மெட்ராஸ் ஸென்டிரல் அர்பன் பாங்கானது ஐக்கிய பாங்கல்லவென்பதே பதிலாகும்; அது ஏற்பட்ட காலம் முதல் நான் அதில் வெகு சம்பந்தமுள்ளவனா யிருந்திருப்பதால், என்னுடைய அபிப்பிராயம் சரியாயிருக்கலாம். வெளியிலிருந்து பணம் வரும்படி செய்வதே அதற்கேற்பட்ட முக்கியமான வேலை. அந்த வேலையை அது செய்திருக்கிறதா இல்லையா என்பதையே நாம் கவனிக்க வேண்டும். பாக்கி விஷயங்கள் எல்லாம் பொருந்தாதவை.

இன்னொரு விஷயமுமிருக்கிறது. ஐக்கியச் சங்கங்களை பாங்கில் பங்குக்காரர்களாகச் சேர்த்துக் கொள்ளுவதால், என்ன உண்டாகும்? வட்டி 7½-க்குக் கொஞ்சம் குறையும். இது யாருக்குக் கிடைக்கும்? இது வரையில் ஸ்தாபிதமாயிருக்கிற சில ஸ்தலங்களுக்குக் கிடைக்கும் மாகாணத்திலுள்ள விவசாய ஜனங்களில் 100-க்கு ஒருவர்கூட இன்னும் ஐக்கியச் சங்கங்களில் சேரவில்லை. கால்வட்டி குறையும்படி பார்க்கிறது நல்லதா அல்லது இது வரையில் உண்டாயிருக்கிற வேலையின் பலனை உபயோகப்படுத்தி ஜனத்தொகையில் 1000-ல் 999 பெயர்கள் ஐக்கியசங்கங்களின் நன்மையை அறியாதவர்களாக இருக்கிறார்களே அவர்களுக்கும் அந்த நன்மை உண்டாகும்படி செய்யவேண்டுமா என்று ஐக்கியசங்க இலாகாவை நான் கேட்கிறேன். இது வரையில் செய்திருக்கிற வேலையை ஸ்தோத்திரம் செய்வதில் கருத்துடையவர்கள் கடன் பட்டிருக்கும் ஜனத்தொகையின் ஓரத்தைக்கூட இந்த ஐக்கியச் சங்க முயற்சி இன்னும் தொடவில்லைவென்பதை மறந்துவிடுகிறார்கள். அதல்லாமல், இப்பொழுது யேற்பட்டிருக்கும் சங்கங்களில் சில பாங்கில் மெம்பர்களாய் விடுவதால், அந்த பாங்கு எப்படி ஐக்கிய பாங்கு ஆய்விடுமென்று தெரியவில்லை. இப்பொழுதுள்ளவைகளில் எத்தனை சங்கங்கள் அதில் சேராமலிருக்கும், இன்னும் எத்தனை சங்கங்களுண்டாகும்.

ஸெடின்ரல் பாங்கானது சங்கங்களின் நன்மைக்கு விரோதமாயிருக்கிறதென்று சொல்லி என்னுடைய காதில் விழுந்திருக்கிறது. அப்படியா! 7½-வட்டிக்குக்குறைவான வட்டிக்குசங்கங்களுக்குப்பணம் வேறிடத்தில் கிடைக்குமானால், ஸென்டிரல் பாங்கிலிருந்து அவைகள் கடன் வாங்குவானேன்? வேறுபாங்கில் வாங்குவதைக்காட்டிலும் இப்பாங்கில் வாங்குவது தான் அவைகளுக்கு சாதகமாயிருக்கிறதென்று தெரிகிறது. குறைந்த வட்டிக்குப் பணம் கிடைக்கும் பொழுது, அதிக வட்டிக்கு பாங்கு கடன் கொடுத்தால் பாங்கு செய்வது பிசகுதான். ஆனால்தான்ரெஜிஸ்டிராராயிருந்த காலத்தில்பாங்கு எனக்குப்பல உதவிகளைச் செய்தது; வட்டியில் நூற்றுக்கு 15 முதல் 30 வரையில் யூனியன்களுக்குத் தள்ளிக்கொடுத்தது. கவர்ன்மெண்டு செய்துகொடுத்திருக்கும் சௌகரியங்களினாலேயே பாங்குக்கு லாபம் கிடைக்கிறதென்று ஒரு காரணம் சொல்லுகிறார்கள். (1) வருமான வரிவிதிக்காதிருப்பது (2) ஸ்டாம்புவரி விதிக்காதிருப்பது, (3) இலவசமாய்க் கணக்குப் பரிசோதனை செய்விப்பது இவைகளே கவர்ண்மெண்டு செய்து கொடுத்திருக்கும் சாதகங்கள். இலவசமாய் கணக்குப் பரிசோதனை செய்வதை நிறுத்திவிடப் போகிறார்கள். பாக்கி இரண்டு சாத



கங்கள் இருக்கின்றன. ஆனால் 7½ வட்டிக்குமேல் வாங்காமல் கடன் கொடுக்க வேண்டுமென்ற நிர்ப்பந்தமும் இருக்கிறது. கணக்குப் போட்டுப் பார்த்தால் மேற்கண்ட சாதகங்களால் ஸென்டிரல் பாங்குக்குக் கிடைக்கும் லாபத்தைவிட 7½ வட்டிக்குக் கடன் கொடுப்பதால் வரும் நஷ்டமே பெரிதாயிருக்கும். ஸென்ரடில் பாங்கு ஒரு கம்பெனியாய் விடுமாகில் அதற்கு அதிக லாபம் கிடைக்கும். ஆனால் ஸென்டிரல் பாங்கு இருந்து வெளியிலிருந்து பணத்தை கிரகித்துக் கடன் கொடுக்க வேண்டுமா வேண்டாமா, ஐக்கிய முயற்சிக்குமேல் கட்டிடம் ஏற்பட வேண்டுமா வேண்டாமா என்று கேட்டால் அது வேறு விஷயம். ஐக்கியச் சங்கமொன்று சரியாய் நடைபெற வேண்டியது அவசியமானால், அதன் நிர்வாகமானது ஸ்தலத்தாராலேயே நடத்தப்படவேண்டும். சங்கங்கள் யூனியன்களாகச் சேர்ந்துகொள்ளட்டுமே; ஒரு ஜில்லாவில் சங்கங்களும் யூனியன்களும் அதிகமாகி ஜில்லா பாங்குக்கு வேலை ஏற்படக் கூடுமாகில், எல்லாம் சேர்ந்து ஒரு ஜில்லா பாங்கை ஏற்படுத்தட்டும். ஐக்கியஜில்லா பாங்குகள் போதுமானவை ஏற்பட்டு விட்டால் அவைகள் சேர்ந்து ஒரு மாகாணபாங்கை ஏற்படுத்தட்டும். மலயாளத்துச் சங்கமொன்று, திருச்சிச்சங்கமொன்று, தஞ்சை சங்கமொன்று ஸென்டிரல் பாங்கில் சேர்ந்துவிட்டால் அது ஐக்கிய பாங்காய் விடுமோ?

புதிதாய் ஒருமாகாண பாங்கை ஏற்படுத்த உத்தேசமிருக்கிறதாக பத்திரிகைகளிலிருந்து தெரிகிறது. அது சரியாய் நடைபெறுமா என்பது எனக்குச் சந்தேகம். இந்த மாகாணத்தில் இதுவரையில் கைகூட்டி வந்திருக்கிற முறைகள் அந்த பாங்கு ஏற்படுவதற்கு சரியாயில்லை.

ஆனால் அது விஷயத்தை ரெஜிஸ்டிரார் நன்றாய் அறிந்தவர். சரியாய் நடக்குமென்று அவர் நினைத்தால், அதை ஸ்தாபிப்பது நல்லதுதான். எத்தனையோ பாங்குகள் வேலை செய்ய இடமிருக்கிறது. ஆனால் புது பாங்கு ஸென்டிரல் பாங்கை விழுங்கி விடக்கூடாது. புது பாங்கு சரியாய் நடை பெறாவிடில், ஐக்கிய முயற்சியின் அபிவிருத்தி தடைப்படாமலிருக்க வேண்டி இரண்டும் நடக்கும்படி செய்யவேண்டியது ரெஜிஸ்டிராரின் கடமை.

ஸென்டிரல் பாங்கில் எனக்கு இரண்டு விதமான உரிமை உண்டு. அதில் நான் ஒரு பங்குக்காரன் என்பது ஒரு சிரத்தை, இந்தப் பெரிய ஐக்கிய முயற்சி விருத்தியாகும்படி உழைத்த உத்தியோகஸ்தன் என்பது மற்றொரு சிரத்தை. ஆயினும் உத்தியோகஸ்தனு

யிருந்தவைக் கருதியே நான் எழுதுகிறேன். ஒரு முறையை அனுசரித்துப் பார்த்ததில் அது கைகூடி வந்திருக்கிறது. வேறு முறைகளை அனுசரிப்பானேன் சிரமப்பட்டு கட்டின வீடு இடிந்து விழும்படி செய்வதானது வருத்தைத்தை உண்டு பண்ணுகிறது.

இன்னும் ஒருவார்த்தை, ஐக்கிய முயற்சி விஷயமாம் விசாரணை செய்தி அறிவிக்கும்படி இந்தியா கவர்ன்மெண்டார் நியமித்த கமிட்டி தங்களுடைய ரிபோர்ட்டில் மாகாணத்துக்குப்பொதுவாக ஒரு பாங்கு வேண்டுமென்று சொல்லுகிறது உண்மைதான். ஆனால் அஸ்திவாரத்திலிருந்தும் கட்டடம் கட்டவேண்டுமே யல்லாது கூரையிலிருந்து கீழே கட்டுவது சரியாகாது. ஜில்லா பாங்குகளுக்குப் பொதுவாக மாகாண பாங்கு வேண்டுமென்றுதான் அந்தக் கமிட்டியும் சொல்லுகிறார்களே யல்லாமல், கிராமந்தரங்களிலுள்ள மூலச் சங்கங்களுக்குப் பொதுவாக மாகாண பாங்கு வேண்டுமென்று சொல்லவில்லை.

# மதராஸ் புல்லெடின் ஆப் கோவாபரேஷன்

என்னும்

# சென்னைக் கூட்டுத்தொழில் வர்த்தமானி

சம்புடம் VIII] 1916௵ டிசம்பர்௴ [இலக்கம் 2

OFFICE OF THE REGISTRAR OF ... 19 APR 1917 MADRAS

## குறிப்புகள்

### மதராஸ் பிரொவின்ஷியல் பாங்கி

மதராஸ் ஸெண்டரல் அர்பன் பாங்கியானது பிரொவின்ஷியல் பாங்கியாக மாற்றிக்கொள்ளும் கவர்ன்மெண்டு உத்திரவை யாவரும் அறிந்த விஷயம். இப்பிரதியில் வேறிடத்தில் பதிப்பிக்கப்பட்டிருக்கிறது. ஐக்கிய யியக்கத்தின் அபிவிருத்திக்கு சாதனமாயில்லாமையால் அவ்வுத்திரவானது ஐக்கிய முயற்சிக்காரர்களுக்கு திருப்திகரமாயிராது. பாங்கியின் பங்குகள் 9 வீத வட்டியை ஒரு நாளும் தட்டாமற் கொடுக்கக்கூடிய பிரபரென்ஸ் பங்குகளாக மாற்றப்படுகின்றன. வருஷந்தோறும் கிடைக்கும் நிகர் லாபத்தைக்கொண்டு, பங்கு 1-க்கு ரூ 160 வீதம் கொடுத்து கொஞ்சம் கொஞ்சமாக அவைகளை நிவர்த்தி செய்யவேண்டும். முழுப்பங்குகளும் இவ்விதம் ஒழிய எவ்வளவு நாட்செல்லுமென்று அறிவதரிது. அதாவது அந்த பாங்கியானது இப்பொழுது முறிவடைந்தால் பங்கொன்றுக்கு எவ்வளவு கிடைக்குமோ அத்துகையை நாளடைவில் கொடுத்துக்கொண்டே வரவேண்டும். சங்கங்கள் மெம்பர்களாய்ச்சேரும் வண்ணம் பங்கு 1-க்கு ரூ 100 வீதம், 1500 பங்குகளடங்கிய சாதாரணப் பங்குகள் பிரத்தியேகமாய் வெளியிடப் போகிறார்கள். பங்குத்துகை அநேக தவணைகளிற் கொடுபடலாம், ஆனால் அப்படி முழுவதும் கொடுபடும் வரையில் வோட்டு கிடையாது. சங்கங்கள் நிரம்ப பாங்கியில் மெம்பர்களாகச் சேர்ந்து அதின் நிர்வாகத்தில் அதிக அதிகாரம் பெற்று தனிநபர் மெம்பர்களுக்கு விரோதமாய் வேலை செய்யுமென பயப்படுகிறதற்குக் காரணமேயில்லை. பங்கு ஒன்றுக்கு ஒரு வோட்டென்

றும்,பங்குக்காரர் வோட் செய்யமுடியாமலிருந்தால் அதற்குத் தம் பிரதிநிதியை யனுப்பலாமென்று மேற்பட்டிருக்கிறது. சங்கங்கள் இப்பாங்கியின் நிர்வாகத்தில் அதிகாரமில்லாமற் செய்வதற்கு இவைகள் தகுந்த வழிகளாகும்.' ஆனால் சங்கங்கள் மிகவும் பரிவுடன் இதிற் சேரும் வண்ணம் இம்மாறுதல்களின் நிபந்தனைகளை ஐக்கிய முயற்சிக்காரர்கள் ஒப்புக்கொள்ளும்படி விசாலப்படுத்தி, சங்கங்களுக்கும் ஓர் விதப்பொருப்பு கொடுத்தாலொழிய, இதினால் யாதொரு நன்மையும் சங்கங்களடையாது.

---

## கட்டிடச் சங்கங்களுக்கு கவர்ன்மெண்டாரின் உதவி.

சென்ற பிரொவின்ஷியல் கான்பரென்ஸில் அங்கீகரிக்கப்பட்ட 14 தீர்மானங்களில் ஒன்றாவது, கட்டிடச் சங்கங்களுக்குக் குறைந்த வட்டிக்குத் திரவிய சகாயத்தை மறுத்த இந்தியா கவர்ன்மெண்டின் உத்திரவைப்பற்றியதாகும். இவ்விஷயம் இது வரையில் நடைபெற்ற கான்பரென்ஸ்களில் தோறும் கவர்ன்மெண்டாரின் உதவியைக் கோரி தீர்மானிக்கப்பட்டிருப்பது யாவருமறிந்த விஷயமே. கட்டிடங்கள் கட்டக்கூடிய காலி யிடங்களின் கிரயமும் கட்டிட சாமான்களின் விலையும் உயர்ந்துகொண்டே வருகின்றன. சாமான்னிய நடு வகுப்பினர்கள் இவைகளை தாங்களே சொந்தத்தில் வாங்க வியலாதவர்களாயிருக்கிறார்கள். ஐக்கிய முயற்சிச் சங்கங்களினுதவியால் தங்கள் கஷ்டங்களை நிவர்த்தி செய்துகொள்ளலாமென்றாலோ, சுமார் 4 வீத வட்டிக்குப் பணம் கிடைத்தாலொழிய இவ்வேலைகள் மெம்பர்கள் சௌகரியமாய் நடைபெற முடியாது. அவ்விதம் குறைந்த வட்டிக்கு கவர்ன்மெண்டார் கொடுக்காமலிருந்தால், எங்கிருந்து பணம் வருமோ தெரியவில்லை. ஸெண்ட்ரல் பாங்கிகள் சுமார் 6 வீத வட்டிக்கு வெளியில் கடன் வாங்கும்பொழுது இம்மாதிரிச் சங்கங்களுக்கு குறைந்த வட்டியில் எவ்விதத்தில் திரவிய சகாயம் செய்யும். நெருக்கமான நகரங்களினதும் கிராமங்களினதும் சுகாதார விஷயங்கள் கட்டிடச் சங்கங்களினால் சீர்மையடைவதால், இவ்விதச் சங்கங்கள் அபிவிருத்தியடைய முயலுவது கவர்ன்மெண்டாரின் கடமையாகும்.

---

## கோவாப்ரேடிவ் தான்னிய பாங்கிகள்

வடக்கே பெஹாரில் கோவாபரேடிவ் நாணய பாங்கிகள் என்று ஒருவகை கோவாபரேடிவ் சங்கங்கள் நடந்து வருகின்றன. மற்ற கோவாபரேடிவ் சங்கங்கள் பணத்தில் கொடுக்கல் வாங்கல் நடத்தி



வருவதுபோலன்றி, இவைகள் தான்யங்களிலேயே கொடுக்கல் வாங்கல் நடத்திவருகின்றன. இந்த பாங்கிகளின் முக்கிய நோக்கம், பஞ்ச காலத்தில் ஜனங்களுக்கு உதவி செய்வதே. க்ராமத்திலுள்ள ஜனங்கள் நன்றாய் விளையுங் காலங்களில் தங்களுடைய மாஸூலிலிருந்து, தங்களுடைய சக்திக்கு இயன்றவாறு, அதிகமாகவோ குறைவாகவோ தான்யத்தை பாங்கியிடம் ஒப்பிக்கிறார்கள். விளையாத காலங்களில் பாங்கியிலுள்ள தான்யத்திலிருந்து வேண்டியவர்களுக்குக் கடன் கொடுக்கிறார்கள் கடன் வாங்கிறவர்கள் வாங்கின தான்யத்துக்கு ஒரு குறிப்பிட்ட அளவு தான்யம் வருஷா வருஷம் சேர்த்து காளடைவில் அதிகமாகி பஞ்சம் நேர்ந்த காலத்தில் ஜனங்களுக்கு உபயோகப்படுகிறது.

இந்த பாங்கியின் சௌகர்யங்கள் பின் வருமாறு.—

(1) இதை ஒவ்வொரு க்ராமத்திலும் ஏற்படுத்தலாம். இதற்கு அன்யர்களிடமிருந்து உதவியை எதிர்பார்க்க வேண்டாம்.

(2) ஒவ்வொருவரும் ஸ்வல்ப தான்யமே பாங்கியில் சேர்ப்பதால் எவருக்கும் மீத்து வைப்பதில் கஷ்டம் கிடையாது.

(3) ஸங்கத்தை நடத்தி வருவதில் செலவு அதிகம் ஏற்படாது.

(4) நாணயபாங்கிகளில் அதிமாகக் கடன் வாங்குவதுபோல் இந்த தான்ய பாங்கிகளில் கடன் அதிகமாய் வாங்க இடம் ஏற்படாது.

(5) புது தான்யம் அறுவடையானவுடன் பழைய தான்யத்தை விற்றுவிட்டு, புது தான்யத்தை வாங்கிக் களஞ்சியத்தில் கொட்டி வைக்கலாம். இதனால் லாபமேற்படும். மேலும் பழைய தான்யம் கிடைக்காமல் புது தான்யம் சாப்பிடுகிறவர்களுக்கு நோய் ஏற்படுவதுண்டு, அதைத் தடுத்து விடலாம்.

(6) விவஸாயிகள் சாப்பிடுவதற்கு நல்ல தான்யம் பாங்கியிலிருந்து பெறக்கூடுமாதலால், தங்களுடைய மாஸூலை நல்ல விலை கிடைக்கும் வரையில் காத்திருந்து விற்கலாம்.

(7) தான்ய பாங்கியானது க்ராமத்துக்கு பொதுவில் ஸொந்தமாதலாலும், அதில் உள்ள தான்யத்தை விற்க யாருக்கும் அதிகாரமில்லையாதலாலும், கிராமத்தில் ஒரு குறிப்பிட்ட அளவு தான்யம் இருந்துகொண்டே இருக்கிறது.

(8) கிராம தான்ய பாங்கிகள் தேசமெங்கும் ஏற்பட்டால், பஞ்ச காலத்தில் கஷ்டமிராது.

(9) பஞ்சமேற்பட்ட காலத்தில் ரெயில்வே இல்லாத ஓரிடத்திலிருந்து இன்னோரிடத்துக்கு தான்யம் கொண்டுபோவதென்றால் ரொம்பகஷ்டமாயிருக்கிறது. ஒவ்வொரு கிராமத்திலும் மேற்சொன்ன தான்ய பாங்கிகள் ஏற்படுத்திவிட்டால், யாதொரு கஷ்டமும் ஏற்படாது.

---

## திருவாங்கூரில் ஐக்கிய முயற்சி

திருவாங்கூர் ராஜாங்கத்தில் ஐக்கிய யியக்கம் யேற்பட்டு ஒருவருஷத்திற்குள் சங்க ஸ்தாபன விஷயத்திலும், மிகவும் அபிவிருத்தியடைந்திருக்கின்றது. நாணயத்தைச் சாராத வேறு முறைகளில் சங்கங்கள் உண்டாயின. மருமக்கள் தாயம் சட்டம் விசேஷமாய் எல்லாஜனங்களையும் கட்டுப்படுத்தலாலும், ஜனங்களின் குடியிருப்பு வீடுகள் ஒன்றுக்கொன்று யாதொரு சம்பந்தமுமில்லாமல் பிரிந்திருத்தலாலும், நபர் நாணயம் வளருவதற்கு இடையூறுகளிருக்கின்றன. அப்படியிருந்த போதிலும் 26 சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டது மிகவும் மெச்சத்தகுந்ததே! அவைகளில் ஒன்று ஸெண்ட்ரல் பாங்கி; 16 விவசாய நாணயச் சங்கங்கள்; 2 நெசவுக்காரர்களின் சங்கங்கள்; பாக்கியுள்ள 6 சங்கங்களும் பிரிவினைச் சங்கங்களாகும். ஸெண்ட்ரல் பாங்கின் விசேஷ குறிப்பு யென்னவென்றால், சங்கங்களையும் மெம்பர்களாகச் சேர்த்துக்கொண்டு அவைகளின் பிரதிநிதிகளையும் தன் நிர்வாகத்தில் உடைத்தாயிருத்தல். சங்கங்களுக்கு திரவிய ஸகாயஞ்செய்ய இவ்வித பாங்கி யொன்று யேற்படுத்தியது ரெஜிஸ்ட்ராரின் தீர்க்க ஆலோஜனையைக் காட்டுகின்றது.

---

## மைசூரில் கைத்தொழில் ஐக்கிய முயற்சிச்சங்கங்கள்.

நெசவுக்காரர்களுக்கு மொத்தத்தில், நூல், தரி, முதலிய நெசவுக்கு வேண்டிய சாமான்கள் வாங்கவும், நெய்யப்பட்ட சாமான்களை தகுந்த மார்க்கெட்டில் விற்கவும் சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்ட போதிலும், நெசவுக்காரர்களின் நிலைமையானது உயர்ச்சியடையவில்லை. மேலும், பானூர், சப்பன ஹல்லி, என்ற யிடங்களில் ராஜாங்கத்தாரின் திரவ சகாயத்தைக்கொண்டு, அரிசி யந்திரங்கள், கரும்பாலைகள் முதலியவைகளை உபயோகப்படுத்தும் ஐக்கிய முயற்சிச்சங்கங்கள் யேற்பட்டிருக்கின்றன. இவைகளினால் ஜனங்களுக்கு அதிக நன்மைகள் திடீரென்று உண்டாகாத போதிலும், ஜனங்கள் அநுபவித்துவரும் கஷ்டங்களை ராஜாங்கத்தார் நன்கறிந்து, அவைகளைத் தீர்த்து நன்மையுண்டாக்கும் வழிகளைத் தேடுவார்களென்பதிற் சந்தேகமில்லை.

---



# ஐக்கிய முயற்சியின் அபிவிருத்தி

## சென்னை சட்ட நிருபணை

### ஐக்கிய முயற்சியைப்பற்றிய கேள்விகள்.

சென்ற 1916ஸு நவம்பர் மாதம் 21 தேதி, கூடின மதராஸ் லெஜிஸ்லேடிவ் கௌன்ஸில் மீடிங்கில் கோஆபரேஷனைப்பற்றி ஏற்பட்ட கேள்விகளும் மறுமொழிகளும் வருமாறு:—

வினா.—கோஆபரேடிவ் சொஸைடி ஆக்டு ஏற்பட்டு அமுலுக்கு வந்த தேதி முதல் நாளது வரையில் (1) கடன் வசூலுக்காக எவ்வளவு சொஸைடிகளின் பேரில் பிராதுகள் செய்யப்பட்டிருக்கின்றன; அவைகளில் நாட்டுச் சங்கங்கள் எவ்வளவு, நகரச் சங்கங்கள் எவ்வளவு, டிக்ரி எவ்வளவு கேஸுகளுக்கு வாங்கப்பட்டிருக்கிறது; எவ்வளவு டிக்ரிகள் கொடுத்து தீர்க்கப்பட்டிருக்கின்றன—(2) ரிஜிஸ்ட்ராரினால், முடிவடைந்த நிமித்தமாய் மூடப்பட்ட நாட்டு, நகர சொஸைடிகள் எவ்வளவு? அம்மாதிரி மூடினதினால் எவ்வளவு சொஸைடிகளுக்கு அவைகளின் கடன் முற்றிலும் தீர்க்கப்பட்டன? (3) நாட்டு நகர சொஸைடிகள் தங்களுடைய கடன்கார மெம்பர்களின்மேல் பண வசூலுக்காகத் தொடர்ந்திருக்கும் கேஸுகள் எவ்வளவு, அம்மாதிரி ஏற்பட்ட டிக்ரிகளை நிறைவேற்றியிருக்கும் விவரம் என்ன? (4) போர்டு சென்டு ஜார்ஜு கெஜட்டி 1915 நவம்பர் மீ 9உ முதலாவது பாகம் 1039-ம் பக்கத்தில் பிரசுரித்திருக்கிறபடி 1915 அக்டோபர் 2-தேதி 483 நெ. ராஜாங்கக் குறிப்பின் 12-வது ரூல் பிரகாரம் எவ்வளவு கேஸுகள் ரிஜிஸ்ட்ராராலும் எவ்வளவு கேஸுகள் மத்தியஸ்தராலும் தீர்க்கப்பட்டன? இவைகளடங்கிய ஸ்டேட்மெண்ட் ஒன்றை கவர்ன்மெண்டார் கொடுக்கப் பிரியப்படுவார்களா?

விடை.— மேற்குறித்த விஷயங்களுக்கு நாளது வரையில் கணக்குக் கொடுக்க தகுந்த ஆதாரங்கள் இல்லை. தவிர ஒரு குறித்த காலத்திற்காக தனியாக கணக்குகள் தயாரிக்கச் சொல்ல தங்களுக்கு மனமில்லை. ஏனென்றால் சிப்பந்திகளுக்கு மிகவும் அதிகமான வேலைத் தொந்திரவு கொடுக்கவேண்டி வரும். அம்மாதிரி தொந்திரவு கொடுக்க தகுந்த காரணம் இருந்தாற் தான் செய்யலாமே ஒழிய மற்றப்படி மனமில்லை. 2-வது 3-வது கேள்விகளுக்கு ஜவாபு ரிஜிஸ்திரரின் வருஷாந்தர அட்மினிஸ்ரேஷன் ரிபோர்டில் காணலாம்.

வினா.—சென்ற ஆகஸ்டு மாதம் 14உ தினசரிப் பத்திரிகைகளில் மதராஸ் சென்டரல் அர்பன் பாங்கி மீட்டிங்கின் நடவடிக்கைகள்

பிரசுரிக்கப்பட்டிருந்ததையும், அதே மாதம் 21 தேதி "இந்து" பத்திரிகையில் திவான்பகதூர் ராமச்சந்திர ராவ் "அபெக்ஸ்" கோஆபரேடிவ் பாங்கி ஏற்படுத்தும் விஷயமாய் எழுதியிருந்த நிருபத்தையும் கவர்ன்மெண்டார் கவனித்தார்களா?

(2) ப்ரொவின்ஷியல் கோஆபரேடிவ் பாங்கி ஆரம்பித்து ரிஜிஸ்தர் செய்யப்படுவதற்காக ஏதாவது மனுவுகள் கோஆபரேடிவ் ரிஜிஸ்ட்ராருக்கு வந்திருக்கின்றனவா? வந்திருந்தால் எவ்வளவு மனுவுகள்?

(3) அந்த மனுவு பிரகாரம் ரிஜிஸ்ட்ரார் அவர்கள் ரிஜிஸ்தர் செய்திருக்கிறாரா? இல்லாவிட்டால் ஏன் செய்யவில்லை?

(4) அநேக டிஸ்திரிகட் பாங்குகளில் ஏராளமான தொகையானது மீதிப்பட்டு, இதர ஜில்லா பாங்கிகளுக்குக் கடனாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பது வாஸ்தவந்தானா?

(5) அப்படி கொடுக்கப்பட்டிருந்தால் அது எவ்வளவு ரூபாய்?

(6) கோஆபரேஷன் விஷயமாய் இம்பீரியல்கமட்டியாரால் சிபார்சு செய்யப்பட்ட பிரகாரம் ப்ரொவின்ஷியல் பாங்கி ஒன்று ஆரம்பித்து சீக்கிரமாக ரிஜிஸ்தர் செய்யும் விஷயத்தை கவர்ன்மெண்டார் கவனிப்பார்களா?

விடை.—இரண்டாவது, நான்காவது, ஐந்தாவது கேள்விகளுக்கு வியக்தமான விடையளிக்க முடியாது. ஆனால் அவைகளைப் பற்றிய கடிதப் போக்கு வரத்துகள் பார்வையிடப்பட்டிருக்கின்றன. ப்ரொவின்ஷியல் கோஆபரேடிவ் பாங்கி ஏற்படுத்தும் விஷயம் அவர்கள் ஆலோசனையில் இருக்கிறது. அதைப்பற்றி அதிகமாகச் சொல்ல இப்பொழுது தயாராயில்லை.

வினா.—(1) மலையாளம் ஜில்லா, தென்கன்னடம் ஜில்லா கோஆபரேடிவ் சொஸைடிகளுக்கு ஒவ்வொரு இன்ஸ்பெக்டர் தான் இருக்கிறார் என்பது வாஸ்தவம்தானா?

(2) மேற்குறித்த இரண்டு ஜில்லாக்களிலும் ரிஜிஸ்டரான கோஆபரேடிவ் சொஸைடிகள் எவ்வளவு இருக்கின்றன?

(3) போக்கு வரத்துகளுக்கு ஏற்படும் சிரமத்திற்குத் தகுந்தபடி இந்த இரண்டு ஜில்லாக்களிலும் இன்ஸ்பெக்டரின் தொகைகளை அதிகப் படுத்துவார்களா?

விடை.—மலையாளத்தில் இரண்டு இன்ஸ்பெக்டர்களும், தென் கன்னடத்தில் ஒரு இன்ஸ்பெக்டரும் இருக்கிறார். (2) 1916-ம் வருஷம் ஜூன்௴ 30௳ ரிபோர்ட்டில் மலையாளத்தில் 49 ஸொஸைடிகளும், தென்கன்னடத்தில் 67-ம் இருக்கின்றன.



(3) அதிக சிப்பந்திகள் வேண்டியது அவசியமாகத் தோன்றினால் ரிஜிஸ்ட்ரார் தகுந்தமுயற்சி எடுத்துக்கொண்டு பலப்படுத்துவர்:—

வினா.—1915௵ ஏப்ரல்௴ மங்களூரில் நடந்த கோயமுத்தூர் சர்கிள் கோஆபரேடிவ் கான்பரன்சில் கௌரவ அசிஸ்டெண்டு ரிஜிஸ்ட்ரார் வேலையைப்பற்றிய தீர்மானத்தையும், 1915 ஜூன் மாதத்திய மதரூஸ் கொஆபரேடிவ் புல்லடீனில் அதே விஷயமாய் பிரசுரித்திருந்ததையும் ராஜாங்கத்தார் கவனித்தார்களா? அம்மாதிரி உத்தியோகங்கள் ஒன்று, இரண்டு ஜில்லாவில் ஏற்படுத்தி சோதனை செய்து பார்ப்பார்களா?

விடை.—(1) ஆம் கவனித்தார்கள். (2) அந்த பிரேரணை ஆலோசனையில் இருக்கிறது.

வினா.—(1) கோஆபரேடிவ் சொஸைடி ரிஜிஸ்ட்ரார் வேலைக்கு ஐரோப்பிய ஸிவிலியனை நியமிக்க ஆலோசனை செய்கிறார்களா?

(2) ப்ரொவின்ஷியல் சர்விஸிலிருந்து உயர்ந்த வேலைக்குவரும் இந்தியருக்கே தான் கொடுக்கிறது என்று இதுவரையில் இருந்தது போல் தீர்மானிக்கிறார்களா?

(3) ப்ரொஷன்ஷியல் பாங்கி ஏற்படுத்துவது போன்ற பெரிய விஷயங்கள் செய்ய வேண்டியபடியாலும் கோ ஆபரேஷனைப் பற்றி இம்பீரியல் கமிட்டியாரின் பிரேரணையை நடத்த வேண்டியபடியாலும் ஒரு இந்திய உத்தியோகஸ்தரை கோ ஆபரேடிவ் ரிஜிஸ்ட்ராராக வைத்துக் கொள்வது யுக்தம் என்று நினைப்பார்களா?

விடை.—தற்காலம் வேலை காலியில்லை. பின்னால் ஏற்படுத்தக்கூடிய விஷயங்களைப் பற்றி இப்பொழுது சொல்லத் தயாராயில்லை. ஐரோப்பியருக்குத்தான் என்றாவது இந்தியருக்குத்தான் என்றாவது இந்த ஆபீச் இருக்கிறது என்று அவர்கள் நினைக்கவில்லை—

வினா.—ஒற்றை நாத்தாகப்பிடுங்கி நடும் விதத்தை அநுஷ்டானத்திற்கு கொண்டு வந்ததினால் ஏற்பட்ட நிச்சயமான லாபத்தை உத்தேசித்து, ராஜாங்கத்தார் இந்த முறையை கிராமங்கள் எங்கும் பரவும்படி செய்து விவசாயிகளுக்கு போதிக்கும்படி விவசாய டிபார்டுமெண்டாருக்கு சொல்லி நாட்டுப் புறங்களில் அவ்விவசாயம் பரவும்படி தூண்டுவார்களா?

விடை.—1914௵ நவம்பர்௴ 20௳ கூடின கௌன்ஸிலில் ஏற்பட்ட 141 நெ. கேள்விக்கு கொடுக்கப்பட்ட விடையையும் 1915௵ நவம்பர்௴ 23௳ மீட்டிங்கில் போடப்பட்ட 88 நெ. 6 கேள்வியை

யும் கவனிப்பார்களாக. கவர்ன்மெண்டு நிலத்திலும் ரயத்துக்களின் சொந்த நிலங்களிலும் விவசாய சங்கத்தார் மாதிரி வேலைகள் இந்த விஷயத்தில் செய்து பார்த்திருக்கிறார்கள். பணமும் சிப்பந்திகளும் கிடைப்பதற்குத் தகுந்தபடி இந்த விஷயத்தை சீர்திருத்தி விருத்தி செய்யவேண்டும் என்பதே கவர்ன்மெண்டாரின் எண்ணம்.

### கோஆபரேடிவ் சோஸைடிகளுக்கு இந்திய ரிஜிஸ்ட்ரார்.

பின்வரும் தீர்மானத்தை ஆனரபில் பி. வி. நரசிம்ம அய்யரவர்கள் பிரேரேபித்தார்.—

இன்னும் வெகு காலத்திற்கு கோஆபரேடிவ் சொஸைடிகளின் ரிஜிஸ்ட்ராரார் உத்தியோகமானது இந்தியர்களுக்கே கொடுக்கவேண் க்வர்னர் அவர்களுக்கும் அவர் சபையாருக்கும் இந்த கௌன்சில் சிபார்சு செய்கிறது.

தற்காலத்திய ரிஜிஸ்ட்ராருக்கு மாற்றல் ஆகப்போகிறதென்றும் வேறு புதிய உத்தியோக ஏற்பாடு ஷெ விஷயமாய் நடக்கப்போகிறதென்றும் யாவர் மனதிலும் இப்பொழுது தோன்றியிருக்கிறது. ஒரு ஸிவிலியனைத் தான் ஏற்படுத்தவேண்டும் என்று கவர்ன்மெண்டார் சிபார்சு செய்துகொண்டிருக்கிறார்களெனவும் பிரஸ்தாபிக்கப்படுகின்றது.

அதினால் தான் அம்மாதிரி கேள்விகள் கேட்கப்பட்டன. இந்த வேலைக்கு ஐ. சி. எஸ். இருக்கவேண்டியது அவசியமா? இக்கிளர்ச்சி நன்றாகப் பரவியிருப்பது வாஸ்தவம் தான். ஆனால் இதர நாகரீக தேசங்களிற் போல் அவ்வளவு விசாலமாய்ப் பரவவில்லை. முன்னேற்றம் நன்றாகத் தான் இருக்கிறது. சாதாரணமாய் ஜனங்களுக்கு இந்த வேலையை ஐ. சி. எஸ். அல்லாத இந்திய ரிஜிஸ்ட்ரார் மிகவும் நன்றாய் நிர்வகிப்பார் என்பது அபிப்பிராயம். ஆகையால் இந்தியர்கள் தான் அவ்வேலைக்கு மிகவும் 'லாயக்கு என்று நினைக்கிறார்கள். இந்தியராயிருந்தால் ஜனங்களிடம் விசேஷ சம்பந்த மனப்பூர்வமாய் ஏற்பட சௌகரியங்கள் உண்டு. இக்கிளர்ச்சி விருத்தியடைந்து பரவுவதற்கு ரிஜிஸ்ட்ரார் ஜனங்களிடம் விசேஷ பரிசயம் செய்துவருவது அவசியம். அவர்கள் நோக்கங்களை அறியவேண்டும். நான் புதிதாக ஒன்றும் கேட்கவில்லை. இது வரையில் இந்தியரே ரஜிஸ்ட்ராராக இருந்திருக்கிறார். இது விஷயமான மேற்குறித்த பிரேரணையை முன்னிட்டு நான் இத்தீர்மானத்தை கொண்டுவரலானேன். ராஜாங்கத்தார் இந்தியர்களிலேயே பல மாறுதல் செய்ய விரும்பினால் இம்மாதிரி வேலைக்குப் போதுமான இந்தியர்கள் கிடை



யாது. யாராயிருந்தாலும் லாயக்கா என்பதுதான் நாம் பார்க்கவேண்டும். ஆகையால் உத்தியோகத்தை ஒரு வகுப்பினருக்கே தான் என்று சொல்வதும் ஞாயமில்லை. பெரிய உத்தியோகங்கள் லாயக்கைப் பொருத்தது; தற்காலம் இவ்வுத்தியோகத்திற்கு இந்தியர்கள் தான் லாயக்கு. ஆனரபில் ராமய்யங்கார் இந்த தீர்மானத்தை ஆமோதித்து இந்திய ரிஜிஸ்ட்ரார் ஒருவர் நாட்டுப் புறங்களில் போய் விவசாயிகளிடம் நேரில் பழகிப் பேசித் தெரிந்துகொண்ட விஷயத்தையும் அதன் உபயோகத்தையும் ஓர் உதாரணமாகக் கூறி முடித்தார்.

ஆனரபில் கார்டியூ துரையவர்கள் ஒருக்கால் ஐ. சி. எஸ் ஒருவரை ரிஜிஸ்ட்ராராக ராஜாங்கத்தார் ஆக்கிவிடுவார்களோ என்ற சந்தேகத்தினால் இந்தக் கேள்விகள் வந்திருக்கின்றன என்றும், தனக்குத் தெரிந்த வரையில் கவர்ன்மெண்டில் அம்மாதிரி எண்ணம் இருந்ததாகத் தெரியவில்லை யென்றும், கவர்ன்மெண்டார் இந்தியரையோ ஐரோப்பியரோ அவர்கள் இஷ்டப்படி நியமிக்க, இந்தியர்கள் லாயக்குள்ளவர்கள் என்பதில் ஆக்ஷேபணையில்லை என்றும் சொன்னார்.

கவர்ன்மெண்டாருக்கு தங்கள் இஷ்டம்போல் நியமிக்கும்படி அதிகாரம் தங்களுக்கு இருக்கவேண்டும். இன்னாருக்குத் தான் உத்தியோகம் கொடுக்கிறதென்று அவர்கள் தீர்மானிக்கவும் இல்லை.

ஆனரபில் நரசிம்மய்யர் தான் கொண்டுவந்த பிரேரணையை ரத்து செய்துகொண்டார்.

---

### கோயம்புத்தூரில் ஐக்கிய முயற்சி கோஆபரேடிவ் கட்டிட சொஸைடி

சென்ற ஜூன் ௴ 30௳ யோடு கோயமுத்தூர் கோஆபரேடிவ் பில்டிங் சொஸைடியின் மூன்றாவது வருஷத்திய வேலை முடிவு பெற்றது. சென்ற ஜூன் ௴ 30௳ யோடு முடிவுபெற்ற அந்த வருஷ வேலையின் சாராம்சங்களை செகிரிடேரி அவர்கள் சமீபத்தில் நடைபெற்ற பங்குக்காரர்களின் மீட்டிங்கில் கொடுத்த ரிபோர்டில் பிரசுரித்திருக்கிறார். அந்த ரிபோர்டில் அடங்கிய விஷயங்களில் சில வருமாறு.—

1916௵ ஜூன் ௴ 30௳ 978 பங்குகளும், 178 மெம்பர்களும் இருந்தன. வருஷ ஆரம்பத்தில் 164 மெம்பர்களிருந்தார்கள். ராவ் பகதூர் சி. நாகோஜிராவ் அவர்கள் இறந்ததினால் சொஸைடிக்கு ஒரு பெரிய நஷ்டமேற்பட்டது. டைரக்டர்களெல்லாம் அந்த மரணத்திற்கு மிகவும் விசனிக்கிறார்கள்.

வருஷக்கடைசியில் பில்டிங் சொஸைடியின் மூலதனம் ரூ 6120 ஆனால் ஆரம்பத்தில் ரூ. 5720, இருந்தது. பிரஸ்தாப வருஷத்தில் பணம் அதிகத் தேவையாயிருந்ததினால் ஜில்லா அர்பன் பாங்கியிலிருந்து இதற்கு கடன். கொடுக்கக் கூடிய துகை ரூ. 20,000 லிருந்து ரூ. 30,000 உயர்த்தப்பட்டது. ஜூன் மீ 30உயில் பாங்கியிலிருக்கும் சங்கத்தின் ரூ. 15600 ஆகும். இதர டிபாஸிட் துகைகளும் கடன்களுமாகச் சேர்ந்து ரூ 8979—இருக்கிறது. சென்ற வருஷம் 21 கடன்கள் கொடுக்கப்பட்டன. ஆனால் இவ்வாறு 12 கடன்கள் தான் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இவைகளின் மொத்த துகை ரூ 50104; அதில்ரூ4692-8 முதலுக்காகவும்; ரூ 2367-4-3 வட்டிக்காகவும் வசூல் செய்யப்பட்டிருக்கின்றன. 41 வீடுகள் கட்டவும், 4 வீடுகள் ரிபேர் செய்யவும் 12 வீடுகளின் ஈட்டுக்கடன்களை நிவர்த்திசெய்யவும் இச்சங்கம்வுதவிசெய்திருக்கிறது. சிலவெல்லாம் போக நிகர் லாபம் ரூ. 919-4-1; அதில் ரூ. 223-0-1 ரிசர்வ் பண்டு துகைக்காக எடுத்து வைக்கப்பட்டிருக்கிறது. மீதி ரூ. 574-8-6-ம் சென்ற வருஷம் பங்கிட்டுக் கொடுக்காத டிவிடண்டு ரூ. 5-11-7-ம் ஆக ரூ 580-4-1; இந்த துகையை செலுத்தப்பட்டிருக்கும் பங்குத்தொகைக்கு 100க்கு 9 வீதம் விதித்து கொடுக்கப்படும். சொஸைடியின் சட்டப்படி முனிசிபல் எல்லைக்குள் தான் நடவடிக்கைகள் நடைபெற வேண்டியிருக்கிறது. பில்டிங் சொஸைடி விஷயமாய் கவர்ன்மெண்டார் வாக்குத்தத்தப்படி பணத்தை சௌகரியமான வட்டிக்கு சமீபகாலத்தில் கொடுத்தால் இதரவேலைகள் வெகு சீக்கிரமாய் விருத்தியாகும் என்பதிற் தடையில்லை. போர்டார் குறைவான வட்டிக்கு பணம் கொடுத்தல் கூடாமையாயிருக்கிறது. நகர "விசாலப்படுத்தும்" ஸ்கீம்கள் சுமார் பத்து வரையில் இருக்கின்றன. அவைகளில் சில உருவமடைந்து ராஜாங்கத்தாராலும் அனுமதி கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த சொஸைடி ஜனங்களிடமிருந்தும் ராஜாங்கத்தினிடமிருந்தும் போஷணை பெற்றால் பட்டணங்களின் நெருக்கங்கள் நிவிர்த்தியாகி அநேக காலி நிலங்களில் கட்டிடங்கள் ஏற்படும்.



## சென்னை காஞ்சிபுரம் ரெட்டிப்பேட்டை (Silk Weavers') கோவாபரேடிவ் பாங்கி ரிபோர்ட்டு.

காஞ்சீபுரம் ரெட்டிப்பேட்டை சில்க்வீவர்ஸ் கோவாபரேடிவ் பாங்கி 1625.நெ. ஆனது 1915ளு ஆக்ஸ்டு மீ 9உல் ஒரு ஐக்கிய சங்கமாக திவான்பகதூர் L. D. சாமிகண்ணுபிள்ளை அவர்களால் ரிஜிஸ்டர் செய்யப்பட்டு அதேமாதம் 21உ வேலை ஆரம்பிக்கப்பட்டது.

காஞ்சிபுரத்தில் ஐக்கிய இயக்கத்தை ஆரம்பிக்க பிரதமரிஜிஸ்ட்ராராகிய ஆனரபில் திவான்பஹதூர் பி. இராஜகோபாலாசாரியர் C.I.E. அவர்கள் 1904ளுத்தில் வந்தகாலத்தில் காஞ்சிபுரம் நகரவாசிகளின் பிரயோஜனத்திற்காக இவ் ராஜதானியில் முதல் முதலாக காஞ்சிபுரத்தில் ஒரு நகரசங்கம் ஸ்தாபித்தார். அச்சங்கத்தின் பயனாக சுமார் 2000 மெம்பர்கள் வரையில் காஞ்சிபுரம் நகரசங்கத்தில் சேர்ந்து ஐக்கிய நாணயத்தின் பயனை அடைந்து வருகிறார்கள். அதன் பின்பு சின்னகாஞ்சிபுரத்தில் இன்னொரு நகரசங்கம் ஸ்தாபிக்கப்பட்டது. அதிலும் சுமார் 800 மெம்பர்கள் வரையில் சேர்ந்து ஐக்கியத்தின் பிரயோசனத்தை அடைந்து வருகிறார்கள். ஆனால் அச்சங்கங்கள் நெசவாளிகளுக்கு பயன்படாமலிருந்தன. காஞ்சிபுரத்தில் வசிக்கும் சுமார் 55,000 ஜனங்களில் சற்றேறக்குறைய மூன்றில் ஒரு பாகத்திற்குக் குறையாத ஜனங்கள் நெசவாளிகளாய் இருப்பதாலும் அவர்களின் நிலைமை நாளுக்குநாள் கீழ் நோக்கி வருவதாலும் அவர்களை முன்னுக்குக் கொண்டுவர இக்காஞ்சீபுரம் சர்க்கில் கோவாபரேடிவ் இன்ஸ்பெக்டர் அவர்கள் உத்தேசித்து முதல் முதல் நெசவாளிகளாலேயே நிர்வாகம்செய்ய ஏற்படுத்திய ஐக்கிய நாணயச் சங்கத்தில் இக்காஞ்சிபுரத்தில்முதலாவதான இடம் ரெட்டிப்பேட்டை. ரெட்டிப்பேட்டை என்பது காஞ்சிபுரத்தின் கீழ்பாரிசத்தில்பட்டுநூல் வேலைசெய்யும் பத்மசாலிகளால் குடி ஏற்பட்ட ஒரு சிறுபேட்டை. இப்பேட்டையில் ஆறுவீதிகளும் அவ்வீதிகளில் சுமார் 500 பட்டு தறிகள்வைத்துக் கொண்டிருக்கும் மெம்பர்கள் இருக்கிறார்கள். இவர்களில் அநேகர் சொந்த தறி இல்லாமல் நெசவு முதலாளிகளிடத்தில் கூலிக்குத் தறி நெய்பவர்களாக இருக்கிறார்கள். இவர்களுக்கு வேண்டுமான பணங்கள் உதவி, சொந்தவீடுகளையும் சொந்தத் தறிகளையும் சேகரித்துக் கொடுக்கவும், தறி வைத்துக்கொண்டிருக்கும் முதலாளிகளுக்கு தறி செலவுக்கு வேண்டுமான பணத்தைக்கொடுத்து உதவவும் மெம்பர்களின் பட்டு தினுசுகளை மொத்தமாகச் சேர்த்து விக்கிரியம் செய்விக்கவும், இன்னும் அவர்களுக்கு வேண்டுமான உதவி செய்விக்கவும் எண்ணங்கொண்டு மேற்படி இன்ஸ்பெக்டர் அவர்களால் ஒரு

ஐக்கிய நாணயசங்கம் இங்கு ஸ்தாபிக்கப்பட்டது. ஸ்தாபித்த ஒரு வருஷத்திற்குள் 225 மெம்பர்கள் சேர்ந்தார்கள். இதில் அநேகர் தரி வைத்துக் கொண்டிருக்கும் முதலாளிகள். அவர்களுக்கு வெளியே $1\frac{1}{4}$—$1\frac{1}{2}$ வட்டியில் இருந்த கடன்கள் சங்கத்தின் மூலமாய்ப் பரிகரிக்கப்பட்டன. தரிச்செலவிற்கு வேண்டிய முதல் பணங்களைக் கொடுத்து தரி வேலை நடத்தப்பட்டுவருகிறது. தரி வீடுமுதலியவை இல்லாத ஏழை மெம்பர்களுக்கு முதலாளிகளின் ஜாமீன்பேரில் பணம் கொடுத்தும் சொந்ததரிகள் வைத்தும் உதவி செய்யப்பட்டு வருகிறது. முதலாளிகளிடத்தில் வேலைசெய்யும் கூலி ஆள்களுக்கு முதலாளிகளே பாங்கில் கடன்வாங்கி வட்டியில்லாமல் முதல்பணம் கொடுத்து உதவி யிருக்கிறார்கள்.

சங்கம் ஏற்பட்டபிறகு சுமார் 30 புது தரிகள் ஏற்பட்டன. 5 புது வீடுகளும் ஏற்பட்டன. மெம்பர்களுக்குள் இருந்த சிறு கக்ஷிகளும் விலகின. ஜாதி கட்டுபாடுகளில் இருந்த சில இடைஞ்சல்களும் நீங்கி ஐக்கியம் மேலுக்குமேல் ஓங்கிவருகின்றது. சங்கத்தில் கொடுக்கும் கடன்களுக்கு மாதமாதம் தவணைபோட்டு வசூலித்து வருகிறோம். ஒரு மெம்பராவது தவணை செலுத்த தவறுகிறதில்லை. சென்ற ஜூன்மீ 30உ சங்கத்தின் மெம்பர்களின்பேரில் நின்றிருந்த கடன் பாக்கி ரூபா 16362; இதில் ஒரு ரூபாயாவது சங்கத்தின் நிபந்தனைபடி தவணை கடந்திருக்கவில்லை. சங்கம் ரூபா 15,000 வரையில் டிஸ்ட்ரிகட் பாங்கில் கடன் வாங்கியிருந்தது. மெம்பர்களிடத்திலிருந்து பங்குத்தொகை ரூபா 1345 வரையில் பெற்றிருந்தது; இது சங்கம் ஆரம்பித்தமுதல் வருஷம் ஆனபடியால் டிபாஸிட்கள் அதிகமாகப் பெறவில்லை. ஜூன்மீ 30உ வரையில் பாங்கியின் நிகர்லாபம் 223—2—11. மெம்பர்கள் திருப்பிச்செலுத்தும் கடன்களுக்குத் திருப்பிச் செலுத்தவேண்டிய தேதிகளில் பணம் கிடைக்காவிட்டால் மெம்பர்களுடைய பட்டு சரக்குகள் பாங்கியில்வாங்கி வைத்துக்கொள்ளப்படுகின்றன. அப்படி வைத்துக்கொள்வதால் மெம்பர்கள் திருப்பிச் செலுத்தவேண்டிய தேதிகளில் நாணயப்படி கடனை செலுத்தியதாக ஏற்படும். இரண்டொரு தினங்களில் பணம்வந்தவுடன் சரக்குகள் வாபீஸ்செய்து விடப்படுகின்றன. மெம்பர்களுக்கு பட்டு ஜவுளி ஆதரவின்பேரில் சொல்ப தினங்களுக்குசொல்பகடன்கள்கொடுத்துஉதவப்படுகின்றன. இதற்கு காரணம் யாதெனில் ஒரு மெம்பர் ஒரு பட்டுசேலை தரியினின்று அறுத்தவுடன் அதன் ஜோடியாகிய மற்றொரு சேலைக்கு பட்டுபடியாகும் நூல் முதலியவைகளுக்கு பணம் தேவையா யிருக்கிறபடியால் பூர்த்தியான சேலையை ஒன்றுக்குப் பாதியாய் விற்க வேண்டியதாயிருக்கிறது. அச்சமயத்தில் இச்சங்கம் அச்சேலை ஆதரவின்பேரில் ரூபா 10 அல்லது 15 கொடுத்தால் மற்றொரு சேலையின் வேலை முடிந்து விற்பனைக்குத் தயாராகிறது. மெம்பர் சேலையை தக்கவிலையில் விற்று கடனை பரிகரிக்கிறார்கள். இவ்விஷயத்தில் இச்சங்கம் மெம்பர்களுக்கு செய்துவரும் உதவி மிகவும் பெரியது. மெம்பர்களுக்குவேண்டுமான பட்டுசேலைகளை வரவழைக்கவும், அவர்களின் சரக்குகளை மொத்தமாக விற்பனைசெய்விக்கவும் இச்சங்கம் ஏற்பாடுசெய்ய யோசிக்கிறது. ஆனால் ஐரோப்பிய யுத்தத்தினால் நூல் சாயம் இவைகளின் விலை ஏற்றம் நாளுக்குநாள் உயர்ந்துவருவதால் இந்த ஏற்பாடுகளை கொஞ்சகாலம்வரையில் நிதானித்துச்செய்யவேண்டியதாயிருக்கிறது. இன்னும் காஞ்சிபுரத்தில் நெசவாளிகளாலேயே நிர்வாகம் செய்யும்படி நெசவாளிகளுக்குத்தனித்தனி சங்கம் ஏற்பாடுசெய்துகொண்டு வருவதாகத் தெரிகிறது. இவைகளை ஏற்பாடானதும் எல்லா சங்கங்களுடைய வேண்டுமான நூல் சாயம் முதலியவைகளை மொத்தத்தில் வாங்கி கொடுக்க ஒரு சங்கம் ஏற்படுத்தி மெம்பர்களுடைய சரக்குகளையும் மொத்தமாக சேகரித்து விற்பனைக்கு ஏற்பாடுசெய்யும் பக்ஷத்தில் நெசவாளிகளின் நிலைமையை முன்னுக்குக் கொண்டுவர அநுகூலமாயிருக்கும். இது விஷயத்தில் காருண்ணிய கவர்ன்மெண்டார் வேண்டிய உதவிபுரியவேண்டுகிறோம். காஞ்சிபுரத்தில் 20,30 நெம்பர் நூல் உற்பத்திசெய்ய ஒரு சாலை ஏற்படுத்த வேண்டுமென்கிற ஒரு ஏற்பாடு நடந்துவருகிறது. அது கைகூடிவருமாயின் நெசவாளிகளுக்கு அநேக நன்மையுண்டாகும். எங்கள் சங்கத்தை முன்னுக்குக்கொண்டு வரவும் காஞ்சிபுரம் நெசவாளிகளின் அபிவிருத்தியைக்கோரும் எங்கள் ஸெக்ஷன் அஸிஸ்டெண்டு ரிஜிஸ்ட்ரார் அவர்களுக்கு எங்கள் மனமார்ந்த வந்தனத்தை செலுத்த இச்சங்கம் கடமைப்பட்டிருக்கிறது.



---

## பர்மாவில் ஐக்கிய முயற்சி.

பர்மாவில் ஐக்கிய முயற்சியின் இயக்கம் வருஷந்தோறும் அபிவிருத்தியடைந்து வருவதை நாம் நன்கு அறியலாம். இம்முயற்சி பர்மாவில் யேற்பட்டு 10 வருஷகாலமாய் இங்கிலீஷ் துரையவர்களின் பார்வையிருந்து வந்தது. பர்மாதேசத்து ஜனங்களின் நாகரீக பாகங்கள் இவருக்கு நன்றாய் தெரியும்; ஜனங்களின் பேரில் அபிமானவுள்ளவர். மற்ற தேசங்களைக் காட்டிலும் பர்மாவில் ஐக்கிய முயற்சியின் அபிவிருத்தியானது மிகவும் உறுதியாயும், திருப்திகரமாயுமிருப்பதற்கு இதுவே காரணம். இரண்டு வருஷமாய் சங்கங்களை புதிதாக ஸ்தாபிக்

காமல், ஏற்கனவே யிருக்கும் சீர்மை குலைந்த சங்கங்களை நிலைநிறுத்துவதில் ரெஜிஸ்ட்ரார் பிரயத்தனம் செய்து வந்தார். ஆனால் சென்ற வருஷத்தில் சங்கங்களை யேற்படுத்தினதினால், அவைகளின் சங்கியை 1490-லிருந்து, 2251-க்கும், மெம்பர்களில் மொத்த தொகை 39134 லிருந்து 51356-க்கும் தொழில் தனம் ரூ 84.77 லக்ஷத்திலிருந்து Rs 106.82 லக்ஷத்திற்கும், நிர்வாக செலவுத் தொகையானது ரூ 1.05 லக்ஷத்திலிருந்து ரூ 1.48 லக்ஷத்திற்கும் அதிகரித்திருக்கின்றன. கால்நடை இன்ஷியூரென்ஸை ஐக்கிய முறையின் மூலமாய் ஸ்தாபிக்கப்பட்டயிடம் பஞ்சாப் தேசமாயிருந்த போதிலும், பர்மா தேசமானது தான் அச்சங்கங்களை சீர்மைநிலையில் விருத்தி செய்திருக்கின்றது. கிராம கால் நடை இன்ஷியூரென்ஸ் சங்கங்களானவை 63-லிருந்து 305-க்கு அதிகரித்திருக்கின்றன. இவ்விதம் ஐந்து மடங்கு அபிவிருத்தியானது யாவரும் மெச்சத்தகுந்ததே! ஆனால் பர்மாவில் விவசாயத்தைச் சாராத சங்கங்கள் மிகவும் சொல்பம்தான். டிபார்ட்டுமெண்டாரின் கவனம் இதிற் செலுத்தமுடியாதது தான் காரணமாகும். லெப்டினெண்டு கவர்னரவர்கள், டிபார்ட்டுமெண்டாரின் கஷ்டங்களை யறிந்து, விவசாயத்தைச் சாராத சங்கங்களை நிரம்ப ஸ்தாபிக்க ஸ்பெஷல் அஸிஸ்டெண்டு ரெஜிஸ்ட்ரார் ஒருவரையும், வெவ்வேறு இடங்களில் ஜாயிண்டு ஸ்டாக் பாங்கிகளின் கிளைகளையும் யேற்படுத்த உத்தேசித்திருக்கிறார்கள். பர்மாவில் ஐக்கிய முயற்சியானது விவசாய விஷயமாய் பிரபலமாகிக்கொண்டு வருகின்றது. தரிசை நிலங்களிருக்குமிடங்களில் ஜனங்கள் குடியேறி ஐக்கிய முயற்சி சங்கங்களின் உதவியால் நிலங்களை சாகுபடி செய்து வருகிறார்கள். இச்சங்கங்களால் மிக யேழைகள் கூட தரிசை நிலங்களை பண்படுத்தி சாகுபடி செய்வதோடு, அந்நிலங்களில் சுவான் பாத்தியத்தையும் அடைகிறார்கள்.

---

## மைசூரிலுள்ள கூட்டுறவுக் கட்டிடச் சங்கம்.

சென்ற தசரா மாகர்ண ப்ரோவின்ஷியல் கோவாப்ரேடிவ் கான்பரன்ஸ் நடந்த சமயத்தில், கூட்டுறவு கட்டிடச் சங்கத்தின் அபிவிருத்தியைபற்றி பேசினது எல்லாருக்கும் தெரிந்த விஷயமே. அக்கணமே, அச்சங்கமானது குடகு மாகாணத்து சபார்டினேட் ஜட்ஜாகிய ராவ் சாயப் சின்னையா அவர்களை அக்ராசனாதிபதியாகவும், சீனிவாசராவ், ரெங்கசாமி அய்யங்கார், இவர்களை கௌரவகாரிய தரிசிகளாக்



வும் இன்னும் இதர 12 மெம்பர்களையும் நியமித்து, ஏற்படுத்தப்பட்டது. அச்சங்கத்தின் முதலானது பங்கு ஒன்றுக்கு 25-ரூ வீதம் 150 பங்குகளாக பிரிக்கப் பட்டிருக்கின்றன. மேற்சொன்ன அப்பங்குகளை 25 மாதத்தில் செலுத்தி விடவேண்டும்.

அச்சங்கத்தின் நோக்கம் என்னவென்றால், கூலி வேலை செய்து பிழைக்கும் ஜனங்களுக்கும், மற்றுமுள்ள நடுத்தரமான ஜாதிகளுக்கும் அவரவர்களுக்குத் தகுந்தபடி வீடுகள் கட்டிக்கொடுத்து உபகாரம் செய்ய வேண்டுமென்பதே. மேலும் எவரெவர்கள் வீடு கட்டிக்கொள்ள வேண்டுமென்று பிரியப்படுகிறார்களோ, அவரவர்களுக்கு அச்சங்கத்தில் வேண்டிய தனம் கடனுக் கொடுத்து உதவி செய்கிறார்கள். ஆனால் குடியிருக்கிறவர்கள் அந்தந்த கட்டிடக் கிரயத்தை, சங்கத்திற் குறிக்கப்பட்ட தவணைக்குள் கொடுக்க சக்தியுள்ளவர்களாய் இருக்கவேண்டும்.

---

## கவர்ன்மெண்டு
## ஆர்டர் நெ. 2788 ரெவினியூ
### 7—12—1916

1916ளு நவம்பர்மீ 5உ நடைபெற்ற மீட்டிங்கில் திவான்பகதூர் கிருஷ்ணசாமி ராவ் அவர்கள் பிரசங்கித்தபடி, மதராஸ் சென்டரல் அர்பன் பாங்கி தன்னை புரோவின்ஷியல் பாங்கி ஆக மாற்றிக்கொள்ளத் தயாராயிருக்கும் விஷயத்தை கவர்ன்மெண்டார் கீழ்க்கண்ட நிபந்தனைகளுடன் அங்கீகரிக்கிறார்கள்.—

(2) திவான்பகதூர் அவர்களினால் பிரஸ்தாபிக்கப்பட்ட நிபந்தனைகளின் இரண்டாவது பிரிவின்படி, கிடைத்த லாபத்தின் மீதித்தொகையிலிருந்து பங்கு ஒன்றுக்கு ரூ 160 வீதம் மதராஸ் சென்ட்ரல் அர்பன் பாங்கின் பிரபரன்ஸ் பங்குகள் சிலவற்றிற்கு கொடுத்துத் தீர்த்து வீட்டு வருஷாவருஷம் இம்மாதிரி செய்து பிரபரன்ஸ் பங்கை இல்லாமல் செய்யவேண்டும் என்பதே. லாபம் இவ்வளவு என்பது ஒவ்வொரு வருஷமும் முந்தியே தெரியாதாகையால் ஒரு வருஷத்திற்கு இவ்வளவு பங்குகளுக்குத்தான் கொடுக்கப்படவேண்டும் என்பதை நிர்த்தாரணை செய்ய முடியாது; தவிர கவர்ன்மெண்டார் இந்த விஷயத்தில் சௌகரியம் போல் செய்வது யுக்தமென்று நினைத்து கடினமான நிபந்தனைகள் எற்படுத்த இஷ்டப்படவில்லை. ரிஜிஸ்ட்ரார் அவர்கள் ரிசர்வ் பண்டுக்கும், டிவிடெண்டு கொடுப்பதற்கும், வேலை செய்யும் செலவுக்குமாக எடுத்து வைக்கப்படும் தொகை போக பாக்கி

லாபத்திலிருந்து எவ்வளவு பிரபரன்ஸ் ஷேரைத்திர்ப்பதற்காக கொடுக்கலாம் என்று நினைக்கிறாரோ அம்மாதிரி செய்யவேண்டுமென கவர்ன்மெண்டார் பிரேரிக்கிறார்கள்:—

பிரபரன்ஸ் பங்குக்காரர்களுக்கு வருஷலாபத்தில் 100-க்கு 9-வீத விழுக்காடு கொடுக்க பணம் போதாமற் போனால் டிவிடெண்டு சமப்படுத்தும் பண்டு ரூபாய் 25000-த்திலிருந்து மேற்படி விஷயத்திற்கு உபயோகித்துக் கொள்ளலாம்.

(4) திவான்பகதூர் கிருஷ்ணசாமிராவ் அவர்கள் பிரஸ்தாபித்த நிபந்தனைகளின் 6-வது பிரிவைப்பற்றி கவர்ன்மெண்டாரின் அபிப்பிராயம் என்னவென்றால் தற்காலத்தில் எந்தடிஸ்திரிக்ட் பாங்காவது கிராம சங்கமாவது மதராஸ் ஸெண்டரல் அர்பன் பாங்கியிற்தான் பணம் டிபாஸிட்டு செய்யவேண்டும் என்றாவது அதிலிருந்து தான் கடன் எடுத்துக்கொள்ளவேண்டும் என்றாவது கட்டாயப் படுத்தப்படவில்லை. மேலும் அவைகளில் யாதொன்றும் இதர டிஸ்ரிகட் பாங்கிகளிடமும் சொஸைடிகளிடமும் மதராஸ் செண்டரல் அர்பன் பாங்கி மூலமாய் அல்லாமல் நேராகவே லேவாதேவி வைத்துக் கொள்வதும் தடுக்கப்படவில்லை.—இந்த சுயேச்சை கொஞ்சகாலம் இருக்கவேண்டியது அவசியம் என்பது கவர்ன்மெண்டின் அபிப்பிராயம் ஏனென்றால், ப்ரொவின்ஷியல் பாங்கியின் ஏற்பாடுக்கு போதுமான அனுபவம் உண்டாகவேண்டும். டிஸ்திரிகட் பாங்கிகளையும் சொஸைடிகளையும் ப்ரொவின்ஷியல் பாங்கிலேயேதான் வியாபாரம் வைத்துக்கொள்ளவேண்டுமென்றாவது இதர பாங்கிகளுடன் லேவாதேவியை வைத்துக்கொள்ளக்கூடாது என்று தடுப்பதற்காவது சாத்தியப்படாது. அதனால் ப்ரொவின்ஷியல் பாங்கியிலிருந்து ஜில்லா பாங்கிகள் வாங்கும் கடன்களின் வட்டிவீதமானது சாதாரண லேவாதேவியை அனுசரித்திருக்குமேயல்லாமல் ஒரு கட்டுப்பாட்டில் அகப்படாது. திவான்பகதூர் கிருஷ்ணசாமிராவ் பிரஸ்தாபித்த 6-வது நிபந்தனையாவது வேலைசெய்யும் காலத்தில் அதிக பிரயோஜனத்தைக் கொடுக்காது. எல்லா டிஸ்திரிகட் பாங்கிகளும் சொஸைடியும் ப்ரொவின்ஷியல் பாங்கியில் அவர்கள் இஷ்டப் பிரகாரம் தங்கள் சௌகரியம்போல் பங்கு எடுத்துக் கொள்ளலாம். இந்த ஏற்பாடு சௌகரியமாய் முடிந்தால் டிஸ்திரிகட் பாங்கிகளுக்கும் இதர சொஸைடிகளுக்கும் ப்ரொவின்ஷியல் பாங்கே பணவிஷயங்களுக்கு மத்தியஸ்த நிலையில் வரும்படியான காலம் ஏற்படும். ரிஜிஸ்ட்ரார் அவர்களும் அம்மாதிரியான பாந்தவியம் ஏற்படுவதற்கு வேண்டிய முயற்சிகளை செய்யவேண்டும். ப்ரொவின்ஷியல் பாங்கிக்கு இந்த ராஜதானியின்



கோஆபரேடிவ் கிளர்ச்சியின் பணசம்பந்தமான விஷயங்களை நிர்வகிக்கும் காலம் ஏற்பட்டால் கவர்ன்மெண்டும் அந்த பாங்கோடு கலந்து யோஜனை செய்து வேண்டிய சட்டதிட்டங்களை அம்மாதிரி மாறுதல்களடைவதற்காக ஏற்படுத்துவார்கள்.

(5) மேற்படி விஷயங்களைப் பற்றிய கவர்ன்மெண்டின் தீர்மானங்களை ரிஜிஸ்ட்ரார் மதராஸ் செண்டரல் அர்பன் பாங்கிக்குத் தெரிவித்து அவர்களைக்கொண்டு தன்னுடன் கலந்தே வேண்டிய பைலாக்கள் தயாரித்து கவர்ன்மெண்டின் அங்கீகாரத்திற்கும் அனுப்புவார்.

செண்டரல் அர்பன் பாங்கி மதராஸில் 1916௵ நவம்பர்௴ 5௳ கூடின மீட்டிங்கில் ஏற்படுத்தின தீர்மானங்கள்:—

(1) இப்பொழுது மதராஸ் செண்டரல் அர்பன் பாங்கியில் இருக்கிற பங்குகள் 9 வீதம் "பிரபரன்ஸ்" பங்குகளாக மாற்றப்படவேண்டும். அச்சங்கம் முறிவடைந்தால் ஆதியில் செலுத்தப்பட்ட பங்கு தொகை திருப்பிக் கொடுக்கப்படவேண்டும்.

(2) பிரபரன்ஸ் பங்குகளை கொஞ்சம் கொஞ்சமாய் குறைத்து ஒவ்வொரு பங்குகளுக்கும் குறித்த கிரயத்தின்படி நிகரலாபத்தின் மீதிப்பணத்திலிருந்து கொடுத்து அப்பங்குகளை கழித்துவிட உத்திரவு வாங்கவேண்டும். எந்தப் பங்குகளுக்கு அப்படிக் கொடுத்துதீர்ப்பது என்பதை லாட்டரியால் நிர்த்தாரணம் செய்து கொள்ளவேண்டும்.

(3) பங்கு 1-க்கு ரூ. 100—வீதம் புதுப்பங்குகள் ஏற்படுத்தப்படும். அவைகள் சொஸைடிகளுக்குத்தான் பிரத்தியேகமாய் கொடுக்கப்படவேண்டும். தற்காலம் நடைபெறும் 1800 சொஸைடிகளும், இனி சமீபத்தில் ஏற்படக்கூடிய சொஸைடிகளும் பங்கு எடுத்துக்கொள்ளும்பொருட்டு ரூ. 150,000 லிருந்து ரூ. 180,000 வரையில் பங்குத்தொகை தீர்மானிக்கப்படவேண்டும்.

(4) ஒவ்வொரு பங்குக்கும் வோட் ஒன்று கொடுக்கப்படவேண்டுமேயொழிய ஒவ்வொருபங்குக்காரருக்கும் ஒன்றெனயிருக்கக்கூடாது. பங்குக்காரர் வோட்டுக் கொடுக்க நேரில் வர முடியாவிட்டால் பிரதிநிதியை அனுப்பலாம்.

(5) புதிய பங்குகள் விலையில் அதிகமாவது அல்லது குறைவாவது இல்லாமல் சங்கங்களுக்குக் கொடுக்கப்படவேண்டும். பணம் காலக்கிரமத்திலோ உடனேயோ இஷ்டப்படி கொடுக்கலாம். காலக்கிரமத்தில் கொடுக்கிறவர்கள், முழுவதும் கொடுக்கும்வரையில் வோட் செய்யக்கூடாது.

(6) கடன்களின் வட்டிவிகிதம் கவர்ன்மெண்டார் உத்திரவில்லாமல் குறைக்கப்படமுடியாது. பிரபரன்ஸ் பங்குகளுக்கு அதினால் இடைஞ்சல் ஏற்படுவதாயிருந்தால் வட்டியை கவர்ன்மெண்டாரும் குறைக்கமாட்டார்கள்.

---

# ஐந்தாவது பிரொவின்ஷியல் கான்பரென்ஸுக்கு அனுப்பிய நிருபங்களின் சுருக்கம்.

## கூட்டுறவு முயற்சியால் பாமரர்களுடைய கல்வியபிவிருத்தி.

திருவாங்கூர் சமஸ்தானம் கோவாபரேடிவ் ரிஜிஸ்டரார் ம-௱-௱-ஸ்ரீ C. கோவிந்த பிள்ளை B. A. B. L. அவர்கள் எழுதியது

கூட்டுறவு முயற்சியில் பாமர ஜனங்களுடைய கல்வியபிவிருத்தி விஷயம் கவனிக்கப்படவேண்டுமென்பது கொஞ்சமேனும் கருதப்படவில்லையென்று தாராளமாய்ச் சொல்லலாம். ஸ்டாம்பு முத்திரைச் செலவு, ரிஜிஸ்த்ரேஷன் கூலி, முதலியவை இல்லாமல் குறைந்தவட்டிக்கு பணம் வாங்குவதற்கு மட்டுமே கோவாபரேடிவ் சங்கங்கள் ஏற்பட்டுள்ளவென்று தற்காலம் நினைக்கப்படுகிறது. கடன்வாங்க வேண்டுமென்று அவாவில் ஐக்கிய சங்கங்கள் ஏற்பட்டுள்ளதின் பலனையும் முக்கியத்தையும் மெம்பர்கள் மறந்துவிடுகிறார்கள். சிக்கனம், சுய உதவி, கூட்டுறவு இவைகளையும், மெம்பர்களுடைய பொது நிலைமையையும் சன்மார்க்கத்தையும் உயர்த்துவதற்கு ஐக்கிய சங்கங்கள் ஏற்பட்டுள்ளனவென்பதை மெம்பர்கள் கொஞ்சமேனும் அறிகிறதேயில்லை. கடன்களை வாய்தாப்பிரகாரம் தவணை தவறாது செலுத்தவேண்டுமென்பதை மெம்பர்களுக்கு பஞ்சாயத்துமெம்பர்கள் சரிவர மோதிக்கிறார்களாவென்பதே சந்தேகத்திற்கிடமாகிறது. ஏனெனில் சென்னை கவர்ன்மெண்டார் அவர்கள் செய்துள்ள ரிமார்க்குப்பிரகாரம், மெம்பர்கள் சங்கங்களுக்கு செலுத்தவேண்டியதும், சங்கங்கள் ஜில்லா பாங்கிகளுக்கு செலுத்தவேண்டியதும் அசல்தொகையும், வட்டித்தொகையும், அதிகமாயிருக்கின்றன. ஒழுங்காயில்லாத சங்கங்களை மூடிவிடும்படியாக ஏற்பாடு செய்வதாக ரிஜிஸ்திராரவர்கள் செய்த பிரேரணையை கவர்ன்மெண்டாரவர்கள் தங்கள் உத்திரவில் No. 15, 4-1-16 அங்கீகரித்துள்ளார்கள். கூட்டுறவு முயற்சியில் சிரத்தையுடன் சம்பந்தப்பட்ட ஒவ்வொருவர் மனதிலும் இவ்விஷயம்



ஆழ்ந்த யோஜனைக்கும், தகுந்த ஏற்பாட்டிற்கும் இடந்தருவதற்குப் போதுமானதாக இருக்கிறது. கூட்டுறவு சங்கங்களில் இப்பேர்க்கொத்த திருப்திகரமற்ற விஷயங்கள் ஏற்படுவதற்கு காரணங்களை விஜாரித்தறிந்து அக்குறைகளை நீக்குவது நம்மெல்லோருடையவும் கடமையாகும். ஆகையால் நாமெல்லோரும் கவனிக்கவேண்டிய முக்கியமான காரியமும் செய்யவேண்டிய முக்கியமான கடமையும் என்னவென்றால் ஐக்கிய சங்கங்களில் மெம்பர்களாய் சேர்ந்துள்ள எல்லோரும் தவணை தவறாது ஒழுங்காய் கொடுக்கும் வழக்கத்தை அனுஷ்டிக்கும்படியாகவும், ஒழுங்காய் தவணை தவறாது செலுத்துவதற்கு ஆதாரமானவும் அஸ்திவாரமானவும் சிக்கன குணத்தைக் கைக்கொள்ளும்படியாகவும் போதிக்கவேண்டியது அவர்களை அவ்வழிகளில் பழக்கப்படுத்துவதாகும்.

ஐக்கிய சங்கங்களில் மெம்பர்களாய்ச் சேர்ந்தவர்கள் சிலபாத்தியதைகளையும் சுவதந்திரங்களையும் கொண்டாடுவதைப்போல தாங்கள் மெம்பராய்ச் சேர்ந்துள்ள சங்கங்களுக்கு அவர்கள் சில கடமைகளையும் பொறுப்புகளையும் செலுத்தவேண்டியிருக்கிறதென்று அறிந்துகொள்ள வேண்டுமானால் அவர்களுக்குப் படிப்பிருந்தாலன்றி மற்றெவ்வித முயற்சியும் வீணென்றே கொள்ளவேண்டும். மெம்பர்களுக்கு படிப்பிருந்தால்மட்டுமே மேற்சொன்ன விஷயங்களை போதிக்கமுடியுமென்றும், மெம்பர்களுக்கு படிப்புமட்டும் இருந்திருக்கும் பட்சத்தில் சங்கங்கள் இப்பேர்க்கொத்த கேவல ஸ்திதிக்கு வருவதற்கு ஹேதுக்கள் இருந்திராவென்று உறுதியாய்ச் சொல்லலாம். கூட்டுறவு சங்கங்களின் மெம்பர்களுக்கு படிப்பின் அபிவிர்த்தியைச் செய்தாலொழிய சங்கங்கள் ஸ்தாபிப்பதால் அடையவேண்டிய உண்மையான பலனை அடைவதற்கில்லை. அதற்குமாறாக மெம்பர்கள் கடன் வாங்கமட்டுமே ஜாக்கிரதையாயிருக்கிறார். ஆகையால் கூட்டுறவின் மெம்பர்களுக்கு படிப்பைபோதிக்கும் விஷயத்தில் முதலாவது கான்பிரன்ஸிலேயே யோஜித்த பிரகாரம் தகுந்தஏற்பாடுகள் செய்யவேண்டியது முக்கிய கடமையாகும். அவ்வித ஏற்பாடுசெய்து மெம்பர்களுக்கு அவர்கள் கடமையையும் பொறுப்பையும் அறிந்துகொள்ளும்படி ஏற்பாடுகள் செய்தாலொழிய கூட்டுறவு மெம்பர்களுக்கு நன்மையும் பலனும் உண்டென்று சொல்லுவதற்கே முடியாது. இவ்விதப் பலனைக் கொடுக்கக்கூடிய ஏற்பாடுகள் செய்யப்படுவதற்கு ஒவ்வொரு சங்கமும் அதனுடைய இலாபத்தில் ஓர்பாகம் கொடுப்பதற்கு கொஞ்சமேனும் பின்னடையமாட்டாதென்பது உண்மையேயாகும்.

---

## பஞ்சமர்களுக்காக் கூட்டுறவுச் சங்கங்கள்.

கள்ளிக்கோட்டை கனம் அஸிஸ்டெண்டு ரிஜிஸ்தாராவர்களுக்கு புத்தூர் மிஸ்டர். எம். ஷிவராவ் அவர்கள், பஞ்சமர்களுக்காக ஓர் சங்கம் ரிஜிஸ்தர் செய்துக் கொடுக்க சிபார்சு செய்த விண்ணப்பத்தின் சாரம்ஸம்.—

பஞ்சமர்கள் என்று சொன்னதினாலேயே அவர்களுக்கு பிரத்தியேக சங்கங்கள் அவசியமென்றே யேற்படுகிறது. உலகில் அவர்கள் தாழ்ந்த வகுப்பினர் என்று எண்ணப்படுவதினாலேயே ஏற்பட்டுள்ள மற்ற ஐக்கிய சங்கங்களிலிருந்து அவர்கள் பிரயோஜன மடைவதற்கு அசக்தர்களாகிறார்கள். இது காரணம் பற்றியே தான் அவர்களுக்கு பிரத்தியேக சங்கங்கள் வேண்டுமென்பது. பஞ்சமர்கள் ரொம்பவும் கஷ்டப்பட்டு உழைத்து சம்பாதிக்கும் திறனுடையவர்களெனினும், சிக்கனம் என்பது இன்னதென்று அறியாததால் காலத்தில் கஷ்டப்பட வேண்டிவருமே யென்ற எண்ணம் இல்லாமற் போகிறது. தவிரவும் இவர்கள் பஞ்சமர்களாதலால் ஒன்றும் அறியாதவர்கள். இந்த சௌகரியத்தை வைத்துக்கொண்டு மாப்பிள்ளை ஜாதியார்கள் வியாபாரத்தில் சிறியபடியும் குறைந்த கனமுள்ள தராசும் வைத்துக்கொண்டு இவர்களை யேமற்றுகிறார்கள். மட்ட சரக்கையும் உபயோகித்து அதிக விலைக்கு விற்பதினால் அவர்கள் தினப்படி சாமான் வாங்கி மிச்சம் பிடிப்பதற்கு சாத்தியமான பணத்தைக் கூட மிச்சம் பிடிப்பதற்கு சாத்தியமில்லாமற் போகிறது.

ஆகையால் தின்வரும்படியிலிருந்து கொஞ்சம், கொஞ்சம், மிச்சம் பிடிக்கும்படியாக அவர்களுக்கு சிக்கனம் கற்றுக்கொடுத்து, சேவிங்ஸ் பாங்குகள் கணக்கு ஏற்படுத்திக் கொடுத்து, கொஞ்சம், கொஞ்சமாக சேகரிப்பதற்கு மார்க்கமும் செய்து கொடுக்க வேண்டும். தவிரவும் அவர்களுக்காக ஸ்டோர்ஸ் ஒன்றும் ஏற்படுத்திக் கொடுத்தால் அவர்கள் இப்பொழுது செலவு செய்யும் பணத்தில் கொஞ்சம் குறைந்த [illegible]விலேயே நல்ல சாமான்கள் வாங்க முடிவதுமன்றி பாக்கி சம்பாத்தியத்தை மீதி பிடிக்கவும் முடியும்.

ஆகையால் பஞ்சமர்கள் முன்னுக்கு வருவதற்கு நல்ல மாதிரியாய் நடத்தப்பட்ட ஸ்டோர்ஸ் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டாலொழிய வேறு மார்க்கமில்லை யென்பது திண்ணம். சாவு, முதலிய காலங்களில் கடன் வாங்கவேண்டுமென்பது அவசியமென்றேற்படுகிறது. இச்சமயங்களில் பழைய வியாபாரி மாப்பிள்ளைகளிடத்திற்தான் போகிறார்கள். அவர்களிடம் இவர்கள் என்ன கதியடைகிறார்களென்று சொல்ல வேண்டியதில்லை. கடன் ஒரு தரம் வாங்கிவிட்டால் அவனுக்கு இவன் ஆயுள் மட்டும் அடிமை போலாகிறான்.



இதுகளை யெல்லாம் யோஜனை செய்து தான் இவர்களுக்காக பிரத்தியேக மாதிரியான விதிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன.

---

## கூட்டுறவு முயற்சியில் கௌரவ வேலை.

ஒரு கோவாபரேடர்—எழுதியது

கூட்டுறவு முயற்சியில் இப்பொழுது செய்யப்பட்டுவரும் வேலைகள் சங்கங்கள் ஸ்தாபனஞ் செய்வதும், சங்கங்களை நடத்துவதும், சங்கங்களை மேற்பார்வை பார்ப்பதும் ஆக இம்மூன்று மட்டுமே. சங்கங்களை நடத்துவது சங்கத்தின் மெம்பர்களாலேயே பெரும்பான்மையில் செய்யப்பட்டு வருகிறது. சங்கங்களை ஸ்தாபனஞ் செய்வதும், சங்கங்களை மேற்பார்வை பார்ப்பதுமட்டுமே அதிகாரிகளால் செய்யப்பட்டு வந்தன, ஆனாலும் அதிகாரிகளாற் செய்யப்பட்டு வருவதுங்கூட ஜனங்களாலேயே செய்யப்படவேண்டுமென்று பொது ஜனங்களும் கவர்ன்மெண்டாரும் பூர்ணமாய் எண்ணியிருந்தார்கள்.

இப்பொழுது கவனிக்கவேண்டிய விஷயம், என்னவென்றால், பொது ஜனங்களுக்கு இக்காரியங்களை ஒப்புவிப்பதற்கு வேண்டிய அனுபவங்களை பொது ஜனங்கள் அடைந்துவிட்டார்களா, அதற்குத் தகுந்த பருவம் சமீபத்து விட்டதா, அப்படியானால் தற்காலம் கவர்ன்மென்ட் உத்தியோகஸ்தர்களால் செய்யப்பட்டு வருவதில் எக்காரியங்களில், எந்த அளவிற்கு பொது ஜனங்களிடம் ஒப்பிக்கலாமென்பதே. இவ்விஷயங்களில் ஒருவராவது ஓர் முடிவான அபிப்பிராயத்திற்கு வந்திலர். கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களும், கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தரல்லாதவர்களும் ஓர் முடிவான ஒற்றுமை அபிப்பிராயம் கொண்டவர்களில்லை. கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தரல்லாதவர்களாவது தங்களுக்குள் ஓர் அபிப்பிராயத்திற்கு வந்திலர். கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தரல்லாதவர்களில் ஒரு பாகத்தார் கூறுவது யாதெனில், கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர் இருப்பதினாலேயே கூட்டுறவின் அபிவிர்த்தி குன்றிப்போகிறதென்றும், அவர்கள் சம்பந்தம் இனி கூடாதென்றும் சொல்லுகிறார்கள். மற்ற பாகத்தாரோ கவர்ன்மெண்டு அதிகாரிகள் சம்பந்தம் அவசியமென்றும், அவர்கள் சம்பந்தமில்லாவிடில் கூட்டுறவின் முயற்சியில் பேதங்களேற்படுமென்றும் சொல்லுகிறார்கள். நமக்குத் தெரிந்தமட்டில், கவர்ன்மெண்டு அதிகாரிகள் மேற்பார்வை பார்ப்பதற்கு அவசிய

மானவர்கள் தான். ஆனால் ஜனங்கள் மற்ற விஷயங்களை கவனிப்பதில் ஆட்சேபணையில்லை யென்று சொல்லலாம். பொது ஜனங்கள் கூட்டுறவு முயற்சியில் சிரத்தை யெடுத்துக்கொள்வதற்கு ஆட்சேபணைகள் அதிகமாக இல்லையாயினும் பொதுவாய் எல்லோரிடத்தும் உள்ள குற்றங்களே தடைகளாக இருக்கின்றன.

ஆனால் சுயநலம் பாராட்டல், பொறாமை, வேலையில் திறனில்லாமை, வேலை சாதுர்யமும், சாமர்த்தியமும் இல்லாமை, ஆகிய குற்றங்கள் இவ்வியக்கத்திற்கு க்ஷீணமென்று யாவருமறிவார்கள். இது விஷயத்தை தற்காலம் கௌரவ உத்தியோகஸ்தர்களுக்கு கொடுக்கப்பட்டிருப்பது சங்கங்களை ஸ்தாபனஞ் செய்வதுமட்டுமே. யூனியன்களும் ஜில்லா பாங்குகளும் சங்கங்களின் மேற்பார்வை பார்ப்பதும், சில சமயங்களில் சங்கங்களுக்கு கடன் சாங்கஷன் செய்வதும், சிபார்சு செய்வதும் வருகின்றன. முன்னமேயே கூறியுள்ளபடி அபிப்பிராய பேதங்கள் இல்லாம லிருக்கவில்லை. இப்பொழுது கோறுவது என்னவெனில் ரிஜிஸ்தரா ரவர்களுக்கு 1912வரு இந்தியா II ஆக்டுப்படிக்குள்ள எல்லா அதிகாரங்களையும் ஒருவருக்கு கௌரவ அஸிஸ்டெண்டு ரிஜிஸ்ட்ராரென்ற பெயரிட்டு ஒருவிவகார எல்லையை நிர்ணயித்து வேலை பரீட்சார்த்தமாகப் பார்க்கச் சொல்ல வேண்டுமென்பது. இப்படிச் செய்யும் ஆலோசனையை யொட்டி கீழ்கண்ட அம்சங்களை கவனிப்பது அவசியமாகும்.

(1) கௌரவ அஸிஸ்டெண்டு ரிஜிஸ்தரார்களாக யார் நியமிக்கப்பட வேண்டும்? நன்றாய்ப் படித்தறிந்தவர்களாயும், ஜனங்களின்மேல் அன்பும் நேசமும் உள்ளவர்களாகவும், சிரத்தையுள்ளவர்களாகவும், வேலைக்குத் தக்கபடி தேகதிட காத்திரர்களாகவும் இருக்க வேண்டும்.

(2) விவகார எல்லை எவ்வளவு இருக்கவேண்டும்? இரண் மூன்று தாலூக்காக்களுக்கு அதிகமாக இருத்தல் கூடாது. அறுபது முதல் நூற்றுக்கு உள்பட்டு சங்கங்கள் கொடுக்கப்படலாமே யொழிய அதற்கு மேற்பட்ட சங்கங்கள் கொடுக்கப்பட்டால் சரியாக கவனிக்க முடியாமற்போகும்.

(3) அவர்கள் அதிகாரங்கள்:—இப்பொழுது கவர்ன்மெண்டு அஸிஸ்டெண்டு ரிஜிஸ்தரா ரவர்களால் செய்யப்படும் சகல அலுவல்களையும் இவர்களுக்கு கொடுப்பது நியாயமாகாது. ஆரம்பத்தில் சொற்ப சங்களை ரிஜிஸ்தர் செய்வதும், சாதாரண சில நிபந்தனைகளையும் சில நிபந்தனைகளின் மாறுதல்களையும், ரிஜிஸ்தர்



செய்வதும், கடன்கள் சாங்கஷன் செய்வதும், சங்கங்களை தணிக்கை செய்வதும் பிறகு கவர்ன்மெண்டாருக்கு யுக்தமென்று தோன்றுகிற அந்த அதிகாரங்களையும் சிறுகச்சிறுகப் ஒப்படைக்கலாம்.

(4) அவர்கட்கும் கவர்ன்மேண்டுக்கும் சம்பந்தம்:—இந்த உத்தியோகஸ்தர்கள் நேரே ரிஜிஸ்தராருக்கு உட்பட்டவராயிருக்கலாமே யொழிய அஸிஸ்டெண்டு ரிஜிஸ்தரார்களுக்கு உட்பட்டவராக நியமித்தல் கூடாது. இவருக்கு வேண்டிய சிப்பந்திகள் கொடுக்கபபட வேண்டும். இவர்களுக்கு பிரயாணப்படி, வண்டிச் செலவு வகைரா கொடுக்கப்படவேண்டும்.

---

## சென்னையில் கூட்டுறவு முயற்சியைப்பற்றி சில எண்ணங்கள்.

காஞ்சீபுரம் ம-ா-ா-ஸ்ரீ, P. இராமச்சந்திர சாஸ்திரியார் அவர்கள் எழுதியது

(1) கோவாபரேடிவ் ரிஜிஸ்தரார் இந்தியராகவே இருக்கவேண்டும். இந்தியராக இருந்தால்தான் ஜனங்களுடைய நடவடிக்கைகளையும், வழக்க ஒழுக்கங்களையும் நன்றாய்த் தெரிந்தவராயிருப்பர். அவர்களுடன் பழகுவதற்கு சௌகரியப்பட்டவராதலால் கூட்டுறவின் முயற்சிக்கே அபிவிர்த்தியையும் நன்மையையும் உண்டு பண்ணுவதற்கு சௌகரியப்பட்டவராவர்.

அன்னியர் எவ்வளவு கெட்டிக்காரராயும், திறமையுள்ளவராயும் இருந்தாலும் இந்தியர்களுடன் பழகி அவர்களைப்போல் எண்ணமும் கொள்கையும் கொள்வதற்கு அசாத்தியமாதலால் இந்தியரே ரிஜிஸ்ட்ராராக இருக்கவேண்டும்.

(2) இந்தியர்கள் மிகவும் ஏழைகள்; கடனில் அழுந்தியிருப்பவர்கள். ஐரோப்பியர் மாதிரி கைத்தொழில்கள் செய்வதினால் இந்தியர் முன்னுக்கு வருவதற்கு முடியாது, இந்தியர்களுடைய விவசாயத்தையும் நாட்டுத் தொழில்களையும் அபிவிர்த்தி செய்தாற்தான் இந்தியர்கள் முன்னுக்குவர மார்க்கமுண்டு. இவ்விஷயங்களில் கூட்டுறவின் முயற்சிதான் அதிக பலனையும் நன்மையையும் விளைவிக்கக்கூடியது.

(3) கூட்டுறவின் நாணய சம்பந்தத்தில் மட்டுமே இதுவரை பிரயத்தனம் செய்யப்பட்டு வந்தது. இனி ரிஜிஸ்ட்ராருக்கு விவசாயம், நெசவு, முதலிய விஷயங்களின் தேர்ச்சி பெற்றவர்களை உதவி

யாகக் கொடுத்து ஏழை ஜனங்களை முன்னுக்குவரச் செய்வது கவர்ன்மெண்டாருடையவும், கூட்டுறவின் முயற்சியாருடையவும் கடமையாகும்.

(4) கூட்டுறவுச் சங்கங்களுக்கு இதுகாறும் பணம் வெளியே யிருந்து தான் வந்துகொண்டிருக்கிறது. உள்ளூரிலேயே வேண்டிய தொகை கிடைக்கும். ஆனால் கிடைக்காத காரணம் என்னவென்றால், சங்கங்கள் சரியாயும் ஒழுங்காகவும் நடக்காத காரணத்தின் நிமித்தம் ஜனங்கள் முதலாளிகளை சுற்றிக்கொண்டேயிருக்கிறார்கள். சங்கங்கள் சரியாய் நடந்து முதலாளிகளிடம் போகும் வழக்கத்தை ஜனங்கள் விடுவார்களாகில், முதலாளிகள் சங்கங்களுக்கு தங்கள் பணத்தை தாங்களே கொடுப்பார்களென்பதற்குக் கொஞ்சமேனும் ஆட்சேபணை கிடையாது.

(5) சங்கங்களை தணிக்கை செய்வதையும், மேற்பார்வை பார்ப்பதையும், கவர்ன்மெண்டார் தங்கள் பொறுப்பினின்று நீக்கி சூபர்வைசிங் யூனியன்களுக்கும், பாங்கிங் யூனியன்களுக்கும் கொடுக்கமுயல்கிறார்கள். இப்படி துரிதப்பட்டுச் செய்வது சரியாகாது. யூனியன்கள் நெருக்கம் நெருக்கமாக ஏற்பட்டு ஜனங்கள் தங்கள் கடமையை சரிவர அறிந்துகொள்ளுமுன் தங்கள் கடமையிலிருந்து நழுவ முயலுவது கவர்ன்மெண்டாருக்கு நியாயமாகாது. மற்ற தேசங்களைப்போல் இத்தேசத்து ஜனங்களுக்கும் கல்வியைக் கொடுக்காதது கவர்ன்மெண்டாருடைய அஜாக்கிரதையேயாகும்.

(6) பள்ளிக்கூடத்து உபாத்தியாயர்கள் கொஞ்சம் முயற்சி எடுத்துக்கொண்டால் கூட்டுறவு முயற்சி வெகு எளிதில் பரவும். கூட்டுறவு விஷயமான பாடங்கள் டிரெயினிங் பாடசாலைகளில் போதிக்கப்படவேண்டும். பள்ளிக்கூட உபாத்தியாயர்களுக்குள் கூட்டுறவு பாடங்களில் போட்டிப் பரீட்சை வைத்து பரிசளிக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

(7) கூட்டுறவு முயற்சி விர்த்தியாவதற்கு உள்ள தடைகள் (1) ஜனங்களுடைய கல்வி யின்மை (2) கூட்டுறவு விஷயமான புத்தகங்கள் தேசபாஷைகளில் இல்லாமை (3) கவர்ன்மெண்டு இன்ஸ்பெக்டர்கள் போதாமை (4) கூட்டுறவு முயற்சியால் தேசத்தாருக்கும், தேசத்துக்கும் விளையக்கூடிய நன்மையையும், பலனையும், படித்தவர்கள் அறிந்துகொள்ளாமையும் (5) கூட்டுறவு முயற்சியால் அவர்கள் தக்க சிரத்தை யெடுத்துக்கொள்ளாமையும்.



(8) ஒன்றாகவும் ஐக்கியமாகவும் இருக்கக்கூடிய ஜனங்களுக்கு பிரயத்தியேக சங்கங்கள் ஒற்றுமையை குறைப்பதற்கு ஹேதுக்களாகின்றன.

(9) ஐரோப்பா யுத்தத்தினால் இந்தியாவில் விவசாயிகளைத் தணமற்றவர்க ளெல்லோருக்கும் கஷ்டத்தை யுண்டுபண்ணியிருக்கிறது. இவர்களை உதவிசெய்வதற்கு சங்கங்களுமில்லை. தக்க அனுபவமுள்ள மனிதர்களுமில்லை. கவன்மெண்டார் இப்பேர்கொத்தவர்களுக்கு உதவி புரியத் தயாராயிருப்பதாகத் தெரியவில்லை

---

## அடுத்தது என்ன?

ம-ள-ள-ஸ்ரீ, T.S. சுப்பிரமண்ணிய ஐயரவர்கள் எழுதியது.

கூட்டுறவு முயற்சி இந்த இராஜதானியில் பன்னிரண்டு வருஷ காலமாக நடத்தப்பட்டு வந்தும், ஜனங்களுக்கு அது வேண்டிய நன்மை செய்ததாகத் தெரியவில்லை. கூட்டுறவு முயற்சியின் அபிவிர்த்தியைக் குறித்து ஜனங்களாவது கவர்ன்மெண்டாவது பெருமை பாராட்டிக்கொள்ள இடமில்லை. ஏனெனில் நடந்துள்ள விஷயங்கள் திருப்திகரமாகவேயில்லை. லேவாதேவி சம்பந்தமாகமட்டும் கூட்டுறவு முயற்சி நடந்துள்ளதே யொழிய வேறு மார்க்கத்தில் அது கவனிக்கப்படவேயில்லை. கூட்டுறவு முயற்சியில் வியாபாரக் கூட்டத்தார் சம்பந்தப்படாத வரையில் கூட்டுறவு முயற்சியால் நன்மை விளைந்துள்ளதென்று சொல்லுவதற்கில்லை. நெல், அரிசி, மணிலாக்கொட்டை இந்த விளைபொருள்க ளெல்லாம் இந்தியாவிலிருந்து வெளிநாடுகளுக்குப் போவதில் வியாபாரஞ் செய்யும் மத்தியதரகர்கள் உயர்ந்த வட்டிக்குப் பணம்வாங்கி கஷ்டப்படுகிறார்களல்லவா? கைத்தொழில் விஷயங்களிலும் ஐக்கிய முயற்சி இல்லாததால் ஜனங்கள் கஷ்டப்படுவது மிகவும் பரிதபிக்கத் தக்கது. பகல் முழுதும் கஷ்டப்பட்டு உழைத்து வியர்வை சொட்டச் சொட்ட நெய்து ஒரு வேஷ்டியை ஒரு நெசவுக்காரன் சாயங்காலம் கடைக்குக் கொண்டுபோனால் வாஸ்தவமாய் அவனுக்குண்டான சமயத்தில் பாதிக்கு வியாபாரிகள் கேட்கிறார்கள். நெசவுக்காரன் என்ன செய்வான்: வீட்டிலோ இராத்திரி சாப்பாட்டிற்கில்லை. பகலில் நெய்ததை விற்றுத்தான் இராத்திரி காலக்ஷேபம் நடக்கவேண்டும். தனக்குண்டான உழைப்பையும் நூலின் கிரயத்தையும் கவனியாது வியாபாரி கேட்கும் விலைக்கு கொடுக்கிறான். நூல் வாங்கப்பட்ட பணத்திற்கு இவன் வட்டி கொடுப்பதிலேயே இவன் உழைப்பெல்லாம்

போகிறது. இவர்களுக்கெல்லாம் கூட்டுறவு உதவி அவுசியமில்லையென்று ஏற்பட்டுவிட்டபோதிலும் இவர்களுக்கு உதவிசெய்து அபாரக் கணக்கான ஜனங்களுக்கு க்ஷேமத்தை உண்டுபண்ணுவதற்கு மார்க்கம் தேடுவது கவர்ன்மெண்டாருடையவும் கூட்டுறவு முயற்சிக்காரர்களுடையவும் முக்கிய கடமையாகும்.

---

## கடன்கள்.

திருவண்ணாமலை ம-ா-ா-ஸ்ரீ எம். எஸ் சேஷாசலம் அய்யர் அவர்கள் எழுதியது.

இவ்விராஜதானியில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள சங்கங்கள் ஜனங்களுக்கு குறைந்த வட்டிக்குபணப் கொடுப்பதற்காக மட்டுமே ஏற்பட்டுள. பிறகாரியங்களுக்கு ஏற்பட்டுள்ள சங்கங்கள் மிகவும் சொற்பம். கடன் கொடுக்கும் விஷயங்களில் சங்கங்களில் இப்பொழுது ஏற்படுத்தப்பட்டிருக்கும் நிபந்தனைகளைத் தவிர வேறு நிபந்தனைகளில்லை. ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் சங்கங்களில் இருக்கும் பஞ்சாயத்து மெம்பர்களுக்கோ சிவில் சட்டங்களும், லிமிடேஷன் ஆக்டுகளும், மஹம்மதிய சட்டங்களுக்கும் கொஞ்சமேனும் தெரியாது. இப்படி அறியாமையினால் சங்கங்களுக்கு நேரும் நஷ்டங்கள் இவ்வளவென்று சொல்லிமுடியாது ஆகையால் இப்போது இருக்கும் நிபந்தனைகளுடன் விவரமான சில சட்டங்களையும் நிபந்தனைகளாக ஏற்படுத்தி இச்சட்டங்களை யொட்டி பஞ்சாயத்தார்கள் இனி கடன் பட்வாடா செய்யும்படியாகச் செய்யவேண்டியது. நிபந்தனைகளை மீறி கடன் கொடுப்பதால் நேரும் நஷ்டங்களுக்கு பஞ்சாயத்தார்களே கட்டுப்பட்டவர்கள் என்ற இப்பேர்க்கொத்த நிபந்தனைகளையும் ஏற்படுத்தவேண்டியது அவசியமாகும்.

---

## கூட்டுறவால் ஏற்பட்டுள்ள நன்மைகள்.

ஹோசூர் ரிமௌன்ட் டிபோ மானேஜர் ம-ா-ா-ஸ்ரீ, C. N. ஸ்ரீநிவாஸ ஐயங்காரவர்கள் எழுதியது.

கூட்டுறவால் ஜனங்களுக்கு ஏற்படக்கூடிய நன்மைகள் எண்ணிறந்தவைகள். என்னுடைய சொந்தகிராமத்திலேயே ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் சங்கத்தால் எவ்வளவு நன்மைகள் விளைந்துள்ளனவென்பதை சொல்ல விரும்புகிறேன்.

1. குடிக்கும் வழக்கத்தை மெம்பர்கள் விட்டிருக்கிறார்கள். இப்பொழுது சங்கத்தில் பங்குத்தொகையாக வந்திருக்கும் ரூ. 5400ம் கள்ளு, சாராயக்கடைகளுக்கு போயிருக்கக் கூடிய பணமே. இப்பொழுது இது மிச்சமாயிற்றன்றோ.



2. கவர்ன்மெண்டாருக்கு ரூ. 10,000 ம் பிடித்திருக்கக்கூடிய வேலைகள் கிராம சுகாதாரம், ரஸ்தாக்களை சீர்படுத்தல், சப்பாத்துக் கள்ளியை அழித்தல், இதுபோன்றவைகளெல்லாம் கூட்டுறவின் துவாராய் செய்யப்பட்டன.
3. கிராமசுகாதார சம்பந்தமாக சுமார் 100 வீடுகளை கள்ளிக் கோட்டை ஓடுகள்போட்டு தயார்செய்துகொள்வதற்காக கடன்கள் கொடுத்து உதவிகள் செய்யப்பட்டன.
4. 600 மெம்பர்களுக்குள் பங்கிட்டுக்கொள்ளக்கூடிய நிகரலாபத்தில் பாதி இந்தியா சண்டைநிதிக்கும், மெட்றாஸ் சண்டைநிதிக்கும் கொடுக்கப்பட்டன.
5. பாமர ஜனங்களுக்கு சண்டை சமாசாரம் முதலிய விவரங்கள் தெரியும் பொருட்டும், ஜனங்கள் கல்விபுகட்டும் பொருட்டும், தேசபாஷைகளில் பத்திரிகைகளை வரவழைத்து ஜனங்களுக்கு படித்துக்காட்ட ஏற்பாடு செய்யப்படுகின்றன.

கூட்டுறவின் முறையை சரியான முறையில் நடத்திவருவோமாகில் ஜனங்களுக்கு அதிக நன்மைகளை விளைவிக்குமென்பதில் ஐயமில்லை.

---

## கட்டிடச் சங்கங்கள்.

மதுரை P. S. வெங்குசாமி ஐயரவர்கள் எழுதியது.

ஏழை ஜனங்களும், மத்திய நிலைமையிலிருந்துவரும் ஜனங்களும் சொந்த வீடுகளே இல்லாமலும், நல்ல சுகாதார வீடுகளில்லாமலும் படும் கஷ்டம் சொல்லியும் முடியாது, எழுதியும் முடியாது. சொற்ப வரும்படியிலுள்ளவர்கள் வீட்டு வாடகையாக எவ்வளவு கொடுத்து கஷ்டப்படுகிறார்களென்பது பிரத்தியட்சமான விஷயம். மாதாமாதம் வீட்டு வாடகைக்கு கொடுக்கும் பணம் வீட்டுக்காக சொற்ப வட்டியில் இலகுவான வழிகளில் கடன் வாங்கி அந்த கடனுக்கு வாடகையாக கொடுக்கும் பணத்தை கொடுத்து வந்தால் சொற்ப நாட்களில் கடனும் தீர்ந்து விடும்; அவனுக்கு சொந்தமாகாதோ? இப்பேர்க்கொத்த நிலைமையில் இருக்கும் ஜனங்களுக்கு உதவும் பொருட்டுத்தான் கட்டிடசங்கங்கள் ஸ்தாபிக்கப்படவேண்டுமென்பது. கட்டிடசங்கங்களை ஸ்தாபிப்பதால் ஒவ்வொருவரும் சொந்த வீடுகளை வாங்கி சுகம் பெறுவார்களாதலால் கட்டிடசங்கங்களை ஸ்தா

பிப்பதில் வேண்டியவும், அவசியமானவும் முயற்சிகளும், பிரயத்தனங்களும் எடுத்துக் கொள்ளவேண்டியது.

பட்டணங்களில் ஜனங்கள் வீட்டு நெருக்கத்தாலும், தேக அசௌக்கியத்தாலும் அனுபவிக்கும் வருத்தம் சொல்லி முடியாது. இது காரணம்பற்றியேதான் கட்டிடசங்சங்கள் ஸ்தாபிக்கப்படவேண்டுமென்று முறையிடுவது.

1913௵த்து இந்திய கம்பெனிகளின் ஏழாவது ஆக்டுக்குச்சரியாக நிதிகளின் நிபந்தனைகள் இல்லாததால் நிதிகளின் நிபந்தனைகளை மாற்ற கவர்ன்மெண்டார் பிரயத்தனப் படுகிறார்கள். இப்படி மாற்றுதலை கோவாபரேடிவ் சட்டத்திற்குச்சரியாக மாற்றும் பட்சத்தில் கட்டிடசங்கங்கள் ஸ்தாபனஞ் செய்ய சௌகரியங்கள் அநேகம் ஏற்படுமாதலால் அப்படி மாற்றும்படிக்கு கவர்ன்மெண்டாரவர்களைக் கேட்டுக்கொள்ள வேண்டியது கூட்டுறவு முயற்சிக்காரர்கள் ஒவ்வொருவருடையவும் கடமையாகும்.

---

## 84 நெ. வெங்கடாபுரம் கோஆபரேடிவ் சொஸைடியின் ரிபோர்ட்

இந்த சொஸைடி 1908௵ பிப்ரவரி 4உ துவக்கப்பட்டு 9-வருஷமாக நன்றாய் வேலை செய்து கொண்டு வருகிறது. 1911௵ வரையில் இது 5 கிராமங்களுக்கு உதவிக்கொண்டிருந்தது; பிறகு மற்ற 4 கிராமங்களும் தனியாகப்பிரிக்கப்பட்டு 3 சொஸைடிகள் ஏற்படுத்தப்பட்டன. இப்பொழுது இந்த சொஸைடியில் 80 மெம்பர்கள் இருக்கிறார்கள்; பிராமணர்கள், வைசியர்கள, வண்ணான்கள், அம்பட்டன்கள் இன்னும் பறையர்கள் கூட இதில் மெம்பர்களாக இருக்கிறார்க்ள். கிராமத்தில் 4 ஜனங்கள் தவிர மற்ற எல்லரும் சேர்ந்திருக்கிறார்கள். இந்த வருஷம் சானருத்ரவாம், சிவரு கோபாலபுரம் என்ற இரண்டு கிராமங்கள் சேர்ந்திருக்கின்றன. இதனால் மெம்பர்களின் தொகை இரண்டுதான் அதிகப்பட்டது.

இந்த சொஸைடியின் மூலதனம் ரூ 10,000, பங்கு ஒன்றுக்கு ஒரு ரூபாய் வீதம் 10000 பங்குகளுள்ளன. எல்லா மெம்பர்களுடைய ஆஸ்திகளின் மதிப்பு 2 லக்ஷ ரூபாய். இந்த சொஸைடி இது வரையில் வாங்கியிருக்கும் கடனின் தொகை ரூ 23800. நெல்லூர். பர்மனெண்டு பண்டு, மதராஸ் சென்டால் அர்பன்பாங்கி, கிருஷ்ணாடிஸ்திகட்டு அர்பன்பாங்கி இந்த மூன்றிலிருந்தும் தான் கடன் வாங்கியிருக்கிறது. கிருஷ்ணா டிஸ்திரிகட்பாங்கியிடம் வாங்கின ரூ 8700 நீங்கலாக



மற்றக்கடன்களை யெல்லாம் தீர்த்தாய்விட்டது. ரூபாய் 38087, 545 கடன்களாக மெம்பர்களுக்கு கொடுத்திருக்கிறது. இவைகளில் ரூ. 9847 உள்ள 126 கடன்கள் நிலுவையிலிருக்கின்றன. இந்த 126-ல் 35 கடன்கள் வரையில் காலாவதி ஆய்விட்டதற்கு விசனிக்கிறோம். இந்த வருஷம் கடன் விஷயத்தில் பஞ்சாயத்தார் பயப்படுகிறார்கள். சென்ற இரண்டு வருஷங்களாக ரயத்துகள் அதிக மழையினால் கொஞ்சம் நஷ்டங்கள் அடைந்தார்கள். இந்த வருஷம் வெள்ளத்தினால் வெகு சேதம் உண்டாயிருக்கிறது.

பிக்ஸைட் டிபாஸிட்டும், ப்ராவிடண்டு டிபாஸிட்டும் ஒழுங்காக வசூலிக்கப்படும் கொடுக்கப்பட்டும் வருகின்றன சொஸைடிக்கு ரூ 1397-0-8 ரிஸர்வ் தொகை இருக்கிறது. இதை மதராஸ் சென்டரல் அர்பன்பாங்கியிலும் கிருஷ்ணா டிஸ்திரிகட் பாங்கியிலும் வைக்கப்பட்டிருக்கிறது.

இந்த சொஸைடி செய்யும் இன்பகரமான வேலை என்னவென்றால் ரயத்துகளுக்கு கஷ்டமான காலங்களில் தானியங்களைக்கடனாக் கொடுத்து அவர்கள் சிரமத்தைத் தீர்ப்பதே. இப்பிராந்தியங்களில் ஆகஸ்டுமாதத்திலிருந்து 6 மாதத்திற்கு 4 சௌகார்கள் தானியங்களை 100-க்கு 50 முதல் 60 வரையில் வட்டி வீதத்தில் கொடுக்கிறார்கள். இந்த அக்கிரமத்தை நீக்குவதற்காக பஞ்சாயத்தார் 100-க்கு 9⅜ வீதம் ரூ 300 கடன் வாங்கி 6 புட்டி தானியம் வாங்கினார்கள். இந்த விஷயத்தில் சிலவெல்லாம்போக ரூ 6-9-0 லாபம் கிடைத்தது. அது சொஸைடியின் தானியக்கணக்கில் சேர்த்துவைக்கப்பட்டது. ரிஜிஸ்திரார் அவர்களும் அஸிஸ்டெண்டு ரிஜிஸ்திரார் அவர்களும் இந்த விஷயத்தை மிகவும் கொண்டாடினார்கள் பக்கத்து ஸொஸைடிகளெல்லாம் இம்மாதிரியை அனுஷ்டிக்க ஆரம்பிக்கின்றன. அச்சாவரம் சொஸைடி இந்த வருஷத்தில் 30 புட்டிதானியம் மெம்பர்களுக்கு கடன் கொடுத்தது, பணத்தை விட இம்மாதிரி கடன் மெம்பர்களுக்கு மிக்க உபயோகமாயிருக்கிறது. இதற்காக வெங்கடாபுரத்தில் ஒரு தான்யக் களஞ்சியம் ஏற்படுத்த சாங்ஷன் ஆகியிருக்கிறது.

வருஷ ஆரம்பத்தில் சொஸைடிக்காக சில நிலமும் ஒரு வீடும் வாங்கப்பட்டன. தற்காலம் அந்த வீட்டை போர்டு எலிமெண்டெரி பள்ளிக்கூடத்திற்காக கொடுத்து உதவியிருக்கிறார்கள். சொஸைடிமாதம் ஒன்றுக்கு ரூ 7 சம்பளத்தில் ஒருகுமாஸ்தாவையும் ரூ. 3 சம்பளத்தில் ஒரு ப்யூனையும் நியமித்திருக்கிறது. "காமன் குட் பண்டு" என்று பொதுநல நிதியில் சேர்ந்திருந்தவை ரூ. 16—2—0

இந்தசொஸைடியால் பராமரிக்கப்பட்டுவருகிற ஸ்ரீகிருஷ்ணா தெலுங்கு லைப்ரெரிக்கு சென்றவருஷத்தில் கொடுத்தாய்விட்டது.

சமஸ்கிருத பாடசாலையும் தாழ்ந்த ஜாதிக் குழந்தைகளுக்கு இலவசமாகப் படிப்புச் சொல்லிக்கொடுப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட வித்யாபிவிர்த்தனி சாமாஜமும் தங்கள் பணங்களை சொஸைடியில் கட்டுகிறார்கள். தங்களுக்குத் தேவையான காலங்களில் சொஸைடியானது சில்லரைக்கடன்கள் கொடுக்கிறது. கைக்களூர் கோஆபரேடிவ் யூனியன்கூட தன் பணங்களை இதில் டிபாஸிட் செய்கின்றது. இந்தப் பணங்களைத் திருப்பிக் கொடுக்க செக் கொடுக்கும் வழக்கத்தை இப்பொழுதுதான் ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

சொஸைடியின் புத்தகங்கள் ஒவ்வொருமாதக் கடைசியிலும் யூனியனின் பரிசோதனைக்கு அனுப்பப்படுகின்றன.

ஒவ்வொரு மெம்பரும் இதில் சேர்த்துக்கொள்ளப்படும் சமயத்தில் அவன் ஆஸ்தியின் ஸ்டேட்மெண்டு ஒன்று கொடுக்கவேண்டும். அதைப் பஞ்சாயத்தார் மதித்துப் பரிசோதனை செய்வார்.

அஸிஸ்டெண்டு ரிஜிஸ்ட்ரார் ஆடிடர் முதலியவர்கள் இந்த சொஸைடியைப் பார்க்கப்போன காலத்தில் கணக்குப் புஸ்தகங்கள் முதலிய எல்லாம் வெகு சுத்தமாயும் ஒழுங்காயும் வைத்திருந்ததற்கு மிகவும் கொண்டாடினார்கள். சொஸைடிக்கு மேம்பாட்டைக் கொடுக்கக்கூடிய இன்னொரு விஷயம் என்னவென்றால் இதில் சேருவதற்கு முன்னால் குடிகாரர்களாயிருந்த சிலர் சேர்ந்தபிறகு அந்த வழக்கத்தைவிட்டு விவசாயத்தையோ தொழிலையோ ஒழுங்காய்ச் செய்கிறார்கள். சில மெம்பர்களுக்கு சொந்தவீடு வாங்கிக்கொள்ளும் விஷயத்தில் சொஸைடி உதவிசெய்திருக்கிறது. விவசாயம் செய்ய முடியாத சில பரம ஏழைப்பறையர்களுக்கு மாடு வாங்கிக்கொள்ள உபகாரம் செய்கின்றது. அவர்களும் இப்பொழுது விவசாயிகள் ஆய்விட்டார்கள். பஞ்சாயத்தார் 12 சிவில் கேடுகளும் 8 குற்றக்கேஸுகளும் விசாரித்துத் தீர்க்கலாம். பஞ்சாயத்தார் 11 தடவை கூடியிருக்கிறார்கள் பொதுஜன மெம்பர்சமூகங்கள் மூன்றுதரம் கூடியிருக்கின்றன.

இந்த சொஸைடி கிருஷ்ணா டிஸ்திரிகட் பாங்கில் 10 பங்குகள் எடுத்துக்கொண்டு வருஷத்திற்கு 50 ரூபாயாகக் கொடுக்கின்றது. ப்ரொவின்ஷியல் கோஆபரேடிவ் யூனியனில்கூட 5 பங்குகள் எடுத்துக்கொண்டு வருஷத்தில் 5 ரூபாயாக்க் கொடுக்கின்றது. இந்த கிராமம் மத்தியில் இருக்கிறபடியால் இந்த சொஸைடியும் ஒரு மெம்பராகச் சேர்ந்திருக்கிற கைக்களூர் தாலூகா யூனியனுடைய ஆபீசும் இதில்



இருக்கிறது. மேற்குறித்தவிதத்திலும் இன்னும் அநேகவிதத்திலும் வெகு உபகாரம் இந்த சொஸைடி செய்வதால் பஞ்சாயத்தாருக்கும் அஸிஸ்டெண்டு ரிஜிஸ்ட்ரார் கே. நாகேசுவரராவ் பந்துலுகாரு அவர்களுக்கும் உண்டாகும் புகழ் கொஞ்சமல்ல.

---

## கடப்பை கோஆபரேடிவ் டவுன் பாங்கியின் ரிபோர்டு.

இந்த பாங்கி 8—1—1915-ல் ரிஜிஸ்தர் செய்யப்பட்டு 19—1—1915-ல் ஆரம்பிக்கப்பட்டது. கோஆபரேடிவ் சொஸைடியின் அஸிஸ்டெண்டு ரிஜிஸ்ட்ரார்கள் ம-ா-ா-ஸ்ரீ ஏ. வேதாசல அய்யரவர்களும் ம-ா-ா-ஸ்ரீ டி. ஸ்ரீனிவாசராவ் அவர்களும் இதை ஆரம்பித்து திறந்துவிடுவதற்காக கடப்பையில் விஜயம் செய்தார்கள் 726 பங்குகள் எடுத்துக்கொண்ட 69 மெம்பர்களுடன் பாங்கி ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பத்தில் எடுத்துக்கொள்ளப்பட்ட பங்குகளுக்காக வசூலிக்கப்பட்ட தொகை ரூ 1452. 1916 வருஷம் ஜூன் மாதக் கடைசியில் பார்த்த பொழுது 221 மெம்பர்கள் 1356 பங்குகளை எடுத்துக்கொண்டிருந்தார்கள். அவ்விதம் முற்றிலும் கொடுபட்ட பங்குகளின் தொகை ரூ 39224. பட்டணத்திலுள்ள எல்லா வகுப்பினரும் இந்துக்கள் மகமதியர் கிறிஸ்தவர்கள் எல்லாரும் பங்கு எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் 1916 வருஷம் ஜூன் மாதக் கடைசியில் 170 இந்துக்களும் 24 மகமதியரும் 7 கிறிஸ்தவரும் மெம்பர்களாயிருந்தார்கள். பாங்கி மேன்மேலும் ஜனங்களால் விசுவாசிக்கப்பட்டு வருகிறது. ஏழைகளும் நடுத்தர ஜனங்களும் சேறுகிறார்கள். கடன் வாங்குகிறவர்கள் விசேஷமாய் கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தரும் இதர உத்தியோகஸ்தருமே. 1916 வருஷம் ஜூன் மாதக் கடைசி வரையில் மெம்பர்களுக்குக் கடனாகக்கொடுத்த ரூ 17303; அதில் ரூ. 4292. வசூலானது. கொடுத்தகடன் துகையில் ரூ. 2346, ஸ்தாவர சொத்திலும் இதர பந்தகத்திலும் கொடுக்கப்பட்டிருக்கிறது.

ரூ 4000 இதர கோவாபரேடிவ் சொஸைடிகளுக்கு 1916 வருஷம் ஜூன் மாதத்திற்கு முந்தியும் ரூ 3000 அதற்குப்பிந்தியும் கொடுபட்டிருக்கின்றன. வட்டிகள் மாதா மாதம் வசூலிக்கப்பட்டிருக்கிறது. மெம்பர்களும் அப்படியே வழக்கமாயும் ஒழுங்காயும் கொடுக்கிறார்கள். வட்டியை சேரும்படி விடுகிறதில்லை. முதல் துகையை மாத விகிதமாய் கொடுக்கவேண்டும் என்று ஒரு ஏற்பாடு இல்லாவிட்டாலும்

ஏழை மெம்பர்கள் ஒவ்வொரு மாதமும் கொஞ்சம் கொஞ்சமாய் கொடுத்துவிடுகிறார்கள். இது ஒரு நல்ல விஷயம். கடனைத் திரும்பிக் கொடுக்க ஏற்படுத்தப்பட்டிருக்கும் அதிக காலம் 4 வருஷம்; கடன், கொடுத்திருக்கும் துகையையும் திருப்பிக்கொடுபட்டிருக்கும் துகையையும் கவனித்தால் 100-க்கு 25 வரையில் ஆகிறது. பாங்கின் ஆஸ்தி முழுவதும் பங்குப் பணமும் டிபாஸிட் பணமுமே. பாங்கியின் நாணயத்தையும் உள்ளூரிலேயே கிடைக்கும் கடன்களையும் கவனித்தால் அதுசமீபகாலத்தில் சென்டரல் பாங்கியிலிருந்தாவது இதர சங்கத்திலிருந்தாவது சமீபகாலத்தில் கடன்வாங்கவேண்டிய அவசியம் ஏற்படாது. அது பதிலாக டவுன் பாங்காக இருந்தபோதிலும் கொஞ்சம்கொஞ்சம் டிஸ்திரிகட் பாங்கியின் வேலையைக்கூட செய்யும் போலிருக்கிறது. 1916 ஜூன் மாதக் கடைசியில் பாங்கில் இருந்த பிக்செட், டிபாஸிட் துகை ரூ. 9125; ரெகரிங் டிபாஸிட் ரூ. 3784; கரண்டு டிபாஸிட் ரூ. 299-15-2. 1915 ஜனவரிமுதல் ஜூன் 1916 வரையில் 1½ வருஷத்திற்கு அந்த பாங்கின் லேவாதேவி.

இந்த பாங்கிக்கு டைரக்டர்கள் பலமாக அமைந்திருக்கிறார்கள். அவர்கள் கடன் வாங்கவரும் மனுக்களை வெகு கவனமாய்ப் பார்க்கிறார்கள். முந்தி டைரக்டர்களால் சிபார்சு செய்யப்பட்ட மெம்பர்களுக்கு கொடுத்திருக்கும் துகை ரூ 781-ஆகிறது. டைரக்டர்கள் மாதத்தில் சுமார் இரண்டு மீட்டிங்கு கூடுகிறார்கள்—பாங்கும் நன்றாய் வேலை செய்கிறது. 1916௵ ஜூன் மாதக்கடைசியில் கடன் கொடுக்காமல் பாக்கியில் இருந்த மெம்பர்கள் இரண்டு பேர்தான்—அவர்களில் ஒருவருடைய கடன் பின்பு முற்றிலும் வந்து விட்டது. மற்றவருடைய கடனுக்கு பந்தகப் பத்திரம் இருக்கிறது. குடும்ப அசௌகரியத்தினால் முதலில் முக்கால் பங்கை அவனால் முற்றிலும் கொடுக்க முடியவில்லை.

கோஆபரேஷனின் நோக்கம் இந்த ஜில்லாவில் இன்னும் நன்றாய் ஊன்றவில்லை. இவ்விடங்களில் கடன் கொடுக்கும் வியாபாரம் கோமுட்டிகள் கையிலும் காபுக்கள் கையிலும் இருக்கின்றது. அவர்கள் வட்டி சாதாரணமாய் 100க்கு 12 ஆகத்தான் இருக்கிறது. 18க்கு மேல் போகிறதில்லை.

கடப்பா பாங்கில் அவ்வளவு ஜனங்கள் கடன் வாங்கும்படி செய்தது என்னவென்றால் திருப்பிக் கொடுக்கும் துகையும் கழிபடுவதனால்தான். வியாபாரிகளெல்லாம் சில்லரைத் துகைகளை அடிக்கடி திருப்பி வாங்கிக்கொள்ளுகிறதில்லை யாகையால் பாங்கியில் நம்பிக்கை ஏற்படு



கிறது. ஆனால் வியாபாரிகள் பங்கு எடுத்துக் கொண்டிருந்தாலும் விசேஷமாய் கடன் மாத்திரம் வாங்குகிறதில்லை.

1915௵ டிசம்பர்௴ 11௳ திவான் பகதூர் எல். டி. ஸ்வாமிகண்ணுப் பிள்ளையரவர்கள் பரிசோதனைக்குப் போயிருந்த பொழுது இதைப்பற்றி சிலாகித்துப் பேசியதை சந்தோஷமாய் அடியில் வருமாறு கூறுவோம்.—

கடப்பா கோஆபரேடிவ் டவுன் பாங்கியின் கணக்குகளை 1915 டிஸம்பர்௴ பரிசோதனை செய்தோம் 1915௵ ஜனவரி௴ முதல் பாங்கி வேலை செய்கிறது. செகிரிடேரி ஜே. கிருஷ்ண மூர்த்திராவ் அவர்களின் பார்வையின் கீழ், வெகு திருப்தி கரமான நிலைமையில் இருக்கிறது. கடன்களின் மனுக்களையும் அவைகளை நன்றாய் டைரக்டர்கள் கவனித்ததையும் புஸ்தகங்கள் அழகாய்த் தெறிவிக்கின்றன. ஸ்தாவர சொத்தின் ஈட்டின் கொடுக்கப்பட்ட கடன்கள் மிகக் கொஞ்சமே. இதுதான் கோஆபரேஷனின் நோக்கம். கடன் வசூல்செய்வது வெகு ஒழுங்கா யிருக்கிறது. ஆனால் ரூல்பிரகாரம் மாதா மாதம் கடன் வசூல் செய்யச்சொல்லவில்லை. புஸ்தகங்கள் மிகவும் சுத்தமாயும் நன்றாயும் வைக்கப்பட்டிருக்கின்றன.

---

## ஆறாவது மைசூர் கோவாப்ரேடிவ் கான்பரென்ஸ்

சென்ற வருஷத்தில் நடைபெற்ற 6-வது மைசூர் கான்பரென்ஸின் அக்கிராசனாதிபதியாகிய J. S. சக்கிரவர்த்தி அவர்கள் பேசிய பிரசங்கத்தின் சாராம்சம் பின் வருமாறு:—

சுமார் 10 வருஷ காலத்திற்குள் கோவாப்ரேடிவ் சங்கங்களின் சங்கியை இந்தியாவில் மிகவும் அதிகரித்த விஷயத்தைப்பற்றி ஐக்கிமுறையியக்கத்தில் அபிமானமுள்ளவர்கள் சிலர் பயத்துடனும், அவநம்பிக்கை யுடனும் நோக்குகிறார்கள். ஜர்மனி தேசத்தில் முதல் முதலில் 30 சங்கங்கள் தான்யேற்பட்டன; ஆஸ்டிரியாவில் 10 வருஷத்திற்கு 15 சங்கங்கள்தான் ஸ்தாபிக்கப்பட்டன; ஐரோப்பில் மற்றதேசங்களைப் பார்க்கப்போனால் இவ்வுளவு அபிவிருத்தியானது ஆரம்பத்தில் எவ்விடத்திலும் காணோம். இந்தியாவில் பொது ஜனங்களின் படிப்பு மொத்தத்தில் மற்ற தேசங்களிலுள்ளவர்களைக் காட்டிலும் குறைவாயிருப்பதினால், இவ்வபிவிருத்தியானது மிகவும் புகழத்தகுந்தது.

இந்தியாவிலுள்ள பல மாகாணங்களில் கோவாபரேஷனைப் பற்றிய கணக்குகளை ஆராய்ந்து பார்த்தால் நமது ராஜதானி பல அம்சங்களில் வேறு மாகணங்களைவிடத் தாழ்ந்ததாயிருக்கிறதென்று தெரிய வருகிறது. சிறிய மாகாணங்களாகிய ஆஜ்மீர், மீர்வாரா, குடகு, பரோடா ஸமஸ்தானம் ஆகிய இவைகளைக் கணக்கில் சேர்க்காமல் பார்ப்போம். ஏனென்றால் இவைகள் ஸ்வல்ப விஸ்தீரணமும் ஜனத்தொகையுமுள்ளனவாயிருப்பதால், இவைகளில் சில சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டாலும் கோவாபரேஷன் அதிகமாக அபிவ்ருத்தியடைந்திருப்பதாகத் தோற்றும்; ஆகையால் பெரிய மாகாணங்களை மாத்ரம் கவனிப்போம்.

பஞ்சாபில் மொத்த விஸ்தீரணத்தில் 1000 சதுர மைலுக்கு 33 வீதம் சங்கங்கள் இருக்கின்றன. ஐக்கிய மாகாணங்களில் 26 சங்கங்கள் இருக்கின்றன. வங்காளத்தில் 25 சங்கங்கள் இருக்கின்றன. ஆனால் சென்னை ராஜதானியிலோ 1000 சதுரமைல் விஸ்தீரணத்துக்கு 11 ஸங்கங்கள் வீதந்தானிருக்கின்றன.

ஜனத்தொகைக் கணக்கின்படிபார்த்தாலும் சென்னை ராஜதானி தாழ்ந்ததாகவே இருக்கிறது. பஞ்சாபிலும், மத்ய மாகாணங்களிலும் 1-லக்ஷம் ஜனங்களுக்கு 17-வீதம் சங்கங்கள் இருக்கின்றன. சென்னை ராஜதானியிலே 1-லக்ஷம் ஜனங்களுக்கு 4-வீதந்தானிருக்கிறது. மொத்தம் ஜனத்தொகையில் ஒரு லக்ஷம் பேருக்கு 795-பேர்கள் வீதம் பஞ்சாப் மாகாணத்தில் மெம்பர்களிருக்கிறார்கள். பம்பாய் ராஜதானியில் லக்ஷத்துக்கு 439 பேர்கள் மெம்பர்களிருக்கிறார்கள். சென்னை ராஜதானியிலோ லக்ஷத்துக்கு 287 பேர்கள் தான் கோவாபரேடிவ் சங்கங்களில் மெம்பர்கள்.

கோவாபரேடிவ் சங்கங்களின் மொத்த நடை முதல் பணம் இதுவரையில் நமது ராஜதானியில் தான் அதிகமென்று எண்ணி வந்தோம். ஆனால் இப்போது பஞ்சாபில் மற்ற மாகாணங்களை விட அதிகமாயிருக்கிறது. பஞ்சாபின் நடை முதல் பணம் ரூ. 1,91,39,000; சென்னை ராஜதானியின் நடை முதல் பணம் ரூ. 1,42,10,000, இந்த விவரங்களைப் பார்த்தால் நமது நாஜதானி கோவாபரேஷனில் இன்னும் அபிவிருத்தி யடையவேண்டுமென்று தெரிகிறது.

---

# அநுபந்தம்.

---

## ஐந்தாவது மதராஸ் மாகாண கோவாப்ரேடிவ் கான்பரென்ஸ்.

ஐந்தாவது மதராஸ் மாகாண கோவாப்ரேடிவ் கான்பரென்ஸானது டிசம்பர், 22, 23, தேதிகளில் ஆனரபில் மிஸ்டர் கில்மன் துரையர்களின் அக்கிராசனத்தின் கீழ் பச்சையப்பன் காலில் நடைபெற்றது. ராஜதானியிலுள்ள பிரமுகர்களும், டிபார்டுமெண்டு உத்தியோகஸ்தர்களும் சங்கடெலிகேட்டுகளும் விஜயம் செய்திருந்தார்கள்,

மதராஸ் பிரொவின்ஷியல் கோவாப்ரேடிவ் யூனியனுக்கு பிரசிடெண்டாகிய ம-ா-ா-ஸ்ரீ, கே. பி. ராமனுதய்யரவர்கள், கான்பரென்ஸின் வரவேற்கும் கமிட்டியாருக்காக பிரதிநிதிகளையும் மெம்பர்களையும் உபசரணையோடு ஏற்கும் காலத்தில் பேசினது:—

நமது கான்பரென்ஸின் மெம்பர்களே, இன்றைக்கும் நாளைக்கும் நமது சபைக்கு மனப்பூர்ணமான அன்புடன் கமிட்டியாருக்காக வரவேற்கும் கௌரவம் எனக்கு ஏற்பட்டது. வேறு சௌகரியத்திற்கு வேண்டியயேற்பாடுகள் நமது ஹாலுக்கு விசேஷமான ஜோடனைகளும் செய்யவும் இயலவில்லை. வருஷங்கள் ஆக ஆக நமது கான்பரன்ஸும் வருஷா வருஷம் ஒழுங்கான காரியமாய் ஏற்படுகிறதினால் ஒருவரையும் மேற்படி செலவுகளுக்காக தனிச்சந்தா கொடுக்கும்படி வருத்தப்படுத்தக்கூடாது. தவிர, தகுந்த வரும்படி இல்லாதபொழுது சிலவு அதிகம் செய்வது ஒரு வியாபாரத்திலும் உதவாது. அதிலும் கோஆப்ரேடிவ் விஷயங்களில் செய்வது மிகத் தவறு என்றாலும் வெளி ஆடம்பரத்திலும் லௌகிகத்திலும் ஏற்பட்டிருக்கும் குறைகள் உங்களின் இதர சௌகரியங்களை தாங்கள் இங்கு தங்கும் வரையில் திருப்திகரமாய் கவனிக்கப்பிரயத்தனம் செய்வதால் நீங்கிவிடும் என்று நம்புகிறேன்.

சென்ற வருஷம் நமது கான்ப்ரென்ஸ் கூடின பிறகு தற்காலத்திற்குள் நமது கோஷ்டிக்கு ஒரு மகத்தான கஷ்டம் ஏற்பட்டது. அது என்னவென்றால் ம-ா-ா-ஸ்ரீ திவான்பகதூர் எம். ஆதிநாராயண அய்யாவின் மரணமே. தேசிய ஊழியத்தையே தன் கடமையாகக்

கொண்டு சிரமப்பட்டு உழைத்து தன் நாட்டார்களின் புகழையாவது பாராட்டாமல் தான் எடுத்துக்கொண்ட காரியத்தை அதிதீவிரமாயும் நிதானமாயும் தன் மனச்சாக்ஷிக்கு விரோதமில்லாமல் மிக ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் செய்தே தீர்க்கும் விடாமுயற்சிக்கு இந்த மகானுடைய அனுபவத்தைத்தான் நம் தேசீயச் சிறுவர்களெல்லாம் மாதிரியாகக்கொண்டு பின்பற்றவேண்டும். அவருடைய அனுபவத்தையும் முதிர்ந்த அறிவுடன் கூடியபுத்திமதியையும் நமக்கு தாராளமாய் கொடுத்து உதவியிருக்கிறார்.

கான்பரென்ஸுக்காக வேண்டிய எத்தனங்கள் செய்கிறவர்கள் அவர் ஊக்கத்துடனும் அறிவுடனும் செய்யும் விஷயங்களைப் பின்பற்றி அவருடைய பக்ஷத்தையும் மரியாதையையும் வேலைசெய்ய எவ்வளவு ஆசையுள்ளவர்களையும் மிதத்திற்குமிஞ்சி வேலைசெய்யவொட்டாமல் பார்க்கும் அன்பையும் நன்றாய் அறிவார்கள். அவருடன் விசேஷப் பழக்கமுள்ள ஒவ்வொருவரும் சலிப்பில்லாத பொறுமையும்பெருந்தன்மையான குணமும் குடியிருந்த அந்த ஸ்தூல உடலைக் காணாது வருந்துவார்கள்.

சங்கங்களின் நடவடிக்கைகளை ஒருவாறு கவனித்தால் ஒரு விஷயத்தில் கொஞ்சம் குறைவும் மறு விஷயத்தில் கொஞ்சம் கூடவும் ஆகியிருக்கும்; ஆனால் நிர்வாகமுறையில் மொத்த அபிவிருத்திதான் கவனிக்கப்படும், கோ ஆபரேடிவ் சொஸைடி ரிஜிஸ்ட்ரார் அவர்களுக்கு இந்த வருஷத்திற்கு இன்னும் 250 சொஸைடிகளாவது ஏற்பட்டு, மெம்பர்களும் இரட்டித்து, தொழில்தனமும் 100-க்கு இருபதாவது அதிகரித்து சேர்ந்திருக்கும் மூலதனமும் 100-க்கு 17 அதிகரித்தால் திருப்தியாயிருக்கும். ஆனால் ஒரே சொஸைடியில் சேர்ந்திருக்கும் நாமோ அப்படி கவனிக்கிறதில்லை. எல்லா சொஸைடியையும்விட நம்முடையது பணவிஷயத்திலும், நிர்வாக விஷயத்தில் பொறுப்பை அறிவதிலும் மெம்பர்கள் பணவிஷயமான பிரயோஜனங்கள் அடைவதிலும், செட்டான வழக்கங்களைக்கற்று "தன் கையே தனக்கு உதவி" என்பதை அனுபவத்திற்குக் கொண்டு வருவதிலும், சொஸைடியின் சட்ட திட்டங்களுக்குட்பட்டு ஒற்றுழைத்து மேன்மைப்படவும் முயலுகிறோம். தங்கள் சொஸைடி சீர்மையான நிலைமையில் இல்லையானால் அதின் எல்லாரும் தனித்தனியே தத்தளித்து மாலுமியில்லா மரக்கலம்போல் ஆகிறார்கள்.

நம்முடைய கோ ஆபரேடிவ் மார்க்கத்தில் சேர்ந்தவர்களில் அநேகர் ஐக்கியயியக்கத்தின் நோக்கம் இன்னது என்று அறியாமல் சாதா



ரண கடைக்காரர்களைப்போல் சுயநயத்தையும் லாபத்தையுமே கவனிக்கிறார்கள். இதனால்தான் மேற்கூறிய கஷ்டமேற்படுகின்றது. விரும்பக்கூடாத சில மெம்பர்கள் சொஸைடியில் சேர்ந்து விடுகிறார்கள். அவர்கள் ஜனங்களின் கண்ணுக்கு ப்பகட்டாய் சில சமயம் தோன்றுகிறார்கள்; சொஸைடி அவர்களால் பின்னிட்டு மலினமடைந்தால், அவர்களுக்கென்ன நஷ்டம்? சுபாவத்தில் கெடுதலான புத்தியுள்ளவர்கள் மிக டம்பமும் சுறுசுறுப்பும் காட்டுவதும், சமாதானம் ஞாயமானவழி இவைகளைப் பின்பற்றுபவர் தாழ்ந்துபோவதும் வழக்கமாயிருக்கிறது. இதனால் தான் புல்லுருவிகளைப் போன்ற இவர்கள் நம் சங்கத்தில் நுழைந்துவிடுகிறார்கள்.

ஞாயவழியைப் பின்பற்றும் கோ ஆபரேடர்களில் அதிக மெம்பர்கள் சேர்ந்து தீவிரமாய் வேலைசெய்ய ஆரம்பித்தால் புல்லுருவிகளைப்போன்ற டாம்பீக மெம்பர்களைப் படுக்கவைத்துவிடலாம். இம்மாதிரி ஏற்பட்டுவிட்டால் நான் நினைக்கும் சங்கங்கள் மிகவும் திருப்தியுடன் வேலைசெய்யும் என்பதிற் சந்தேகமில்லை. நம் கோ ஆபரேஷனின் முன்னேற்றத்திற்கு மற்றொரு தடங்கல் என்னவென்றால் மெம்பர்கள் பெரும்பாலர் யாதொரு சகாயமும் செய்யாமல் ஆனால் கூடியவரையில் உபத்திரவம் செய்ய முயன்று லாபத்தை மாத்திரம் பங்கிட்டுக்கொள்ளவேணும் என்று எதிர் பார்க்கிறார்கள். கோ ஆபரேஷனுடைய அபிப்பிராயத்திற் முற்றும் மாறான எண்ணமுடைய அல்லது அதை அறியும் திறமையில்லாத அற்பன் ஒருவன் தெரியாத்தனமாய் சேர்க்கப்பட்டுவிட்டால் அதனால் சொஸைடிக்கு ஏற்படு அபகீர்த்தியும் நஷ்டமும் கொஞ்சமல்ல.

ஐக்கிய முயற்சியானது மிகவும் மேன்மையான புத்தியை புகட்டுவதாயிருந்தாலும் அதினால் அற்புதமான தெய்வீகச் செயல்கள் செய்யமுடியாது. "பன்றித் தோலினால் பட்டு பீதாம்பரம் நெய்வார் ஒருவருமில்லை." ஆகையால் சங்கம் விருத்தியாக வேண்டுமானால் நல்ல எண்ணமும் சுறுசுறுப்பும் புத்திசாலித் தனமுமுள்ள கோ ஆபரேடர்கள் தலைமையான இடங்களை வகித்து யார் யாருக்கு எந்தெந்த தொழில் கொடுத்து எந்தெந்த ஸ்தானத்தில் வைக்கவேண்டுமோ அப்படி வைத்துப் புல்லுருவி போன்றவர்களும் சேந்திருக்கவேண்டியது அவசியமானால் அவர்களையும் தகுந்த இடத்தில் நிறுத்தி சரியானபடி கண்காணிக்கவேணும்.

அவசியம் கவனிக்க வேண்டிய விஷயங்களாவன:—ப்ரொவின்ஷியல் பாங்கி—ஐக்கிய முயற்சியின் முன்னேற்றம்—சங்கங்களின் மேல்

விசாரணை இவைகளே—இவ்விஷயங்களின் அவசியமும். மேன்மையும் அவைகளை சரிவரச் செய்துமுடிக்கும் விதமும் எப்படி என்று அறிய நாமெல்லாரும் விரும்புகிறோம். முதலாவது, ப்ரொவின்ஷியல் பாங்கியைப் பற்றிய பேச்சுகளையும் விவாதங்களையும் கவனித்தவர்கள் விவகாரங்களை அறிவதுடன் இம்மாதிரி விஷயங்களில் வழக்கமாய் ஏற்படக்கூடிய உஷ்ணமான வார்த்தைகளையும் அறிவார்கள்.

கோஆபரேஷனில் சாதாரண அபிமானமும் ஒரு குறிப்பிட்ட பாங்கில் விசேஷ நேசமும் உள்ள சிலர் வியாபாரம் கோஆபரேஷன் இவைகளுக்கு ஒன்றுக்கொன்று ஒற்றுமையில்லையென கூறுவார்கள். கோஆபரேஷனின் முன்னேற்ற வேலைகளை உத்தேசித்து யூனியனானது கூடிய சீக்கிரத்தில் கோஆபரேடிவ் புல்லடினமாதாந்தரசஞ்சிகையாக்கவேணும் என்றுவிரும்புவதை ஆமோதித்து இந்த கான்பரன்ஸுக்காகப் பேசுகிறேன். யூனியனுடைய சுறு சுறுப்பானது கற்பனாவிஷயத்தில் விசாலமாய் உபயோகிக்கப்படுதல் மிக நலம். யூனியன் ஆரம்பித்ததுமுதல் முக்கியமாய் எடுத்துக்கொண்ட காரியங்களில் இது ஒன்று.

யூனியனின் உபயோகத்தை நாம் அங்கீகரித்துக் கொள்வதனால் நமது கோஆபரேஷனுக்கு உறுதியும் பலமும் ஏற்பட்டு நாளடைவில் மிகுந்த நன்மையை அடைவோம். பிரபலப்படுத்தும் வேலையோடுகூட மேற்பார்வை வேலைகள்கூட சில அது செய்யலாம். நாம் எதிர் பார்க்கும் வண்ணம் நமது யூனியனில் தகுந்த மெம்பர்கள் இருந்தால் அவர்கள் தாங்கள் பார்வையிடும் ஜில்லாக்களிலுள்ள சொஸைடிகளை கௌரவத்திற்காக கண்காணிப்பதோடு அவைகள் ஐக்கிய முறையைப்பற்றி கற்பனா வேலைசெய்யக்கூடும். யூனியனை அம்மாதிரி வேலைகள் செய்யச் சொல்வது என்றால் எவ்வளவோ திரவிய சகாயமிருக்கவேண்டும்.

நாடுகளிலும் நகரங்களிலும் பிரஜைகள் விசேஷமாய் விருத்தியாவதனால் கட்டிட சொஸைடிகளை ஏராளமாய் ஸ்தாபித்து விருத்தி செய்யவேண்டும் இந்த சொஸைடிகளெல்லாம் சரிவர பண உதவி பெறாவிட்டால் நீடித்து நிற்கமுடியாது. பம்பாயில் நகர அபிவிர்த்தி செய்யும், டிரஸ்டியார் நிலவரி' குறைத்தும் மகா தாராள புத்தியுள்ள ஸர் பிரபாசங்கர் பட்டாணி அவர்கள் கட்டிடம் கட்டும் சொஸைடிகளுக்கு 100-க்கு 4 வட்டியுடன் 10 வருஷத்திற்கு கடன் கொடுக்காதிருந்தால் அச்சங்கம் அபிவிருத்தியடையா. பண உதவியில்லாமல் இச்சங்கங்கள் அதிகமாக ஏற்பட்டாலும் சரியான வேலைகளைச் செய்யாது.



பொதுச் சங்கங்களோ அல்லது கோஆபரேடிவ் சொஸைடிகளோ பணம் கடன் கொடுத்து உதவ வேண்டும். நுண்ணறிவுள்ள முனிஸிபாலிடி முதலிய பொது சபைகள் இம்மாதிரி கட்டிடச்சங்கங்களை யேற்படுத்தி திரவிய சகாயஞ்செய்து உதவினாற் தான் நகர, கிராம சுகாதாரங்களுக்கு ஓர் விமோஜன முண்டென்று அறியவேண்டும். இன்னுமொரு விஷயம் கூறுகிறேன். நான் சேர்ந்திருக்கும் ஸ்டோர்ஸ்க்கு சரியானபடி மளிகைசமான்கள் சப்ளைசெய்யும்படியான தகுந்த ஏஜன்ஸிகள் இல்லாமலிருக்கிறது. சாமான்கள் விளைவிக்கும் கிராமவாசிகளான கோஆபரேடர்கள் இம்மாதிரியான சொஸைடிகளுக்கு நேராய் நல்ல சரக்குகள் அனுப்ப ஒப்புக்கொண்டால் நடுவில் தரகாளிகள் இல்லாமல் பரஸ்பரம் மிகலாபமும் சுகமும் அடைவதிற் சந்தேகமில்லை. திருவல்லிக்கேணி "ஸ்டோர்ஸ்" கூடுமானவரையில் மத்தியஸ்ததரகர்களைக்குறைக்கப் பார்த்தும் பலிக்கவில்லை. ஒரு இடத்தில் தரகர் இருக்கிறார் என்றுவேறு இடம்போனால் அங்கேயும் வந்து நிற்கிறார். தரகு என்பது வியாபாரத்திற்கே இயற்கைபாத்தியம் வகித்ததோ அது இல்லாமல் வியாபாரம் செய்யமுடியாததோ என்பதைப் பற்றி நான் அடிக்கடி நினைப்பதுண்டு. கோஆபரேடிவ் விற்பனைச் சங்கம் அல்லது கோஆபரேடிவ் ஏஜன்ஸி என்ற பெயருடன் விவசாயிகளுக்கா நடவடிக்கைகள் செய்யும் சங்கம் ஒன்று ஏற்பட்டால் அவர்களுக்கும் திருவல்லிக்கேணி கோஆபரேடிவ் ஸொஸைடிக்கும் பரஸ்பரம் உபகாரமாயிருக்கும். கோஆபரேஷனை முன்னுக்குக் கொண்டுவர விரும்புவோரால் இம்மாதிரி ஏற்பாடு செய்ய இயலும் என்று நான் நிச்சயமாய் நம்புகிறேன்.

பேசுவதற்கு இம்மாதிரியான சந்தர்ப்பம் கிடைத்ததே என்று தன் மனதிலிருக்கும் எல்லாவற்றையும் சொல்ல ஆசையுண்டாவது யார்க்கும் சகஜமே. ஆனால் மகா மேதாவிகளால் செய்யக்கூடிய விஷயங்களை அவ்வகுப்பைச் சேர்ந்தவனல்ல என்று மனதினால் உணரும். நான் நிர்த்தாரணமாய் எப்படிச் சொல்லுகிறது. சென்ற மீட்டிங்கு முதல் இதுவரையில் 42 பங்குகளோடு 44 புது சொஸைடிகளும், 17 பங்குகளோடு 4 புது மெம்பர்களும் சேர்ந்திருக்கிறார்கள் ; மொத்தம் 252 ஆகிறது.

யூனியன் தான் எடுத்துக் கொண்ட வேலைகளை ஞாயமாயும் திருப்திகரமாயும் பெருந் தன்மையுடனும் செய்யவேண்டுமானால், இப்பொழுதிருக்கும் 2000 சொஸைடிகளும் யூனியனைத் தாங்கவேண்டும் என்றதைச்சொல்லவும் வேண்டுமோ.

## அகிராசனாதியின் பிரசங்கம்.

பிறகு கான்பரன்ஸுக்கு பிரசிடெண்டும் ராஜாங்கசபையில் மெம்பருமான கனம். எச். எப். டபள்யூ கில்மன் ஐ. ஸி. எஸ். துரையவர்கள் தன் கற்பனா சக்திகள் நிறைந்துள்ள பிரசங்கத்தை பின் வருமாறு உரைத்தார்.—

மதராஸ் ப்ரோவின்ஷியல் கோஆபரேடிவ் யூனியனின் மெம்பர்களே! கனவான்களே!—உங்களுடைய இந்தவருஷ கான்பரன்ஸை ஆரம்பிக்கும் பிரசங்கம் என்னால் செய்யப்படவேணும் என்று தாங்கள் கேட்டுக்கொண்டதை மிகவும் சந்தோஷமாய் ஏற்றுக்கொள்ளுகிறேன். இந்த ராஜதானியில் கோ ஆபரேடிவ் கிளர்ச்சிக்கு வழிகாட்டும் அதிமேதாவிகளும் புத்திசாலிகளுமான இந்தியர்களுக்கிடையில் நிற்கும் பெருமையும் கௌரவமும் என்னது என்று உணர என்மனம் குதூகலிக்கிறது. இக்கிளர்ச்சி இன்னும் மிகக் குழந்தைப்பருவத்தில் இருந்தாலும் இதில் சேர்ந்திருக்கும் மெம்பர்களுக்கு பணவிஷயமான சௌகரியங்களை மிகவும்செய்திருக்கிறது. இதன் மேன்மையை நான் எப்பொழுதும் கோறிக்கொண்டிருந்தாலும் இதுவரையில் பகிரங்கமாய் சேர்ந்திராததினால் என்னை தாங்கள் அழைத்தபொழுது இந்த கௌரவத்தை சரிவர நிர்வகிப்பேனோ என்ற சந்தேகத்துடன் தான் ஒப்புக்கொண்டேன். மேலும் தங்கள் வேலைக்கு ஒத்தாசைசெய்யும் ராஜாங்கத்தின் சிபார்சுக்கு நான் பாத்தியஸ்தனாயும் இல்லை. ஆகையால் நான் ராஜாங்கத்திற்காகப் பேசுகிறேனோ என்று நீங்கள் எண்ணவே வேண்டாம். பக்ஷபாத புத்தியுடனும் புத்திபுகட்டும் எண்ணத்துடனும் நான் பேசவரவில்லை. தன் மனதிலுள்ளதை சிநேகபாவத்துடன் நடுநிலைமையாய்ப் பேசவந்தேன் என்று நினைப்பீர்கள் என நம்புகிறேன். சங்கங்களின் தற்கால நிலைமையை உரைக்க ஆரம்பிக்கிறேன். சென்ற 6 வருஷத்தில் இந்த ராஜதானியிலுள்ள பிரதம சங்கங்கள் மூன்றுமடங்கு அதிகரித்திருக்கின்றன. 1910—11-ல் 44,000 மெம்பர்களடங்கியுள்ள 596 சங்கங்கள் இருந்தன. 1915-16ல் 14,6,000 மெம்பர்களுள்ள 1,800 சங்கங்கள் இருக்கின்றன. கிராம சொஸைடிகளின் தொழில்தனம் 24லக்ஷத்திலிருந்து 75 லக்ஷமாகவும், கடன் கொடுத்திருக்கும் தொகையும் 16லக்ஷத்திலிருந்து 34லக்ஷமாகவும் அதிகரித்திருக்கிறது. இவை யெல்லாம் இக்கிளர்ச்சியில் ஜனங்களுக்கு மிகசம்மதமும் நம்பிக்கையும் இருப்பதைக்காட்டுகிறது. ஆகையால் கனவான்களே இந்த நம்பிக்கையை கௌரவப்படுத்துவது உங்கள் கடமை. தற்கால நிலைமையைப் நன்றாய் பலப்



படுத்திக்கொள்ள வேண்டியதோடுகூட மேன்மேலும் சரியான வழியில் சீர்திருத்தங்கள் செய்ய முயலவேண்டும்.

நீங்கள் கவலையுடனும் யோசனையுடனும் செய்யவேண்டிய காரியங்கள் சுருக்கிச் சொல்லுமிடத்து இரண்டுதான் என்று எனக்குத் தோன்றுகிறது, மேற்பார்வையும், தணிக்கையுமே. இந்த இரண்டு வார்த்தையும் ஏறக்குறைய ஒரே அர்த்தத்துடன் புணைக்கப்பட்டவைகளாயிருந்தாலும் ஜனங்களின் கடமையையும் ராஜாங்கத்தின் கடமையையும் நோக்குங்கால் வித்தியாசம் காணப்படும். பிரதம சங்கங்களின் மேன்பார்வை மிகவும் அத்தியாவசியமானது. ஏனென்றால் அவைகளின் கடமைகள், சங்கங்களின் ஆஸ்தியை நிர்ணயித்தல், அவைகளை கோஆபரேடிவ் பாங்கிகளுக்கு கடன்கொடுக்க சிபார்சு செய்தல், அச்சங்கங்களின் கடன் வாங்கின மெம்பர்களிடமிருந்து சரியானபடி வசூல்செய்ய வற்புறுத்தல், கடைசியாக வரவுசிலவு கணக்குகளை பரிசோதித்தல் முதலிய பலவேலைகளாயிருக்கின்றன.

இப்பொழுது சொஸைடிகள் விசேஷமாய் ஏற்பட்டு தீவிரமாய் பரவுகிறதை கவனித்தால் ரிஜிஸ்திராரையும் அவர் சிப்பந்திகளையும் கொண்டு ராஜாங்கத்தார் இதுவரையில் கண் காணித்து வந்தது போல் செய்வது சாத்தியமாகாது என்று எனக்குத் தோன்றுகிறது. இதர தேசங்களில் ஏற்பட்டிருக்கும் அனுபவங்களினால் முற்றிலும் ராஜாங்கத்தாருடைய மேன்பார்வையிலேயே இம்மாதிரியான விஷயங்களை விட்டு விடுதல் இவைகளின் நோக்கங்களுக்கு சௌகரியமாகாது என்றும் தேவையானபடி சமயோசிதம் போல் செய்து விருத்திக்குக் கொண்டு வருவது நல்ல ஜன சமூகங்களினால்தான் ஆகும் என்றும் தெறிகிறது. சென்னையில் நீங்கள் ஆரம்பித்திருக்கும் நிர்வகாயூனியன்கள் சொஸைடிகளை மேன்பார்வை செய்துகொண்டு அவைகளுக்கும் கோ ஆபரேடிவ் பாங்கிகளுக்கும் சம்பந்தமுண்டாக்கும் தன்மையையுடையதாயிருக்கிறது. ஆனால் இப்பொழுது 31 யூனியன்கள்தான் இருக்கின்றன. இவைகள் 1800 சொஸைடிகளில் 600—தான் கவனிக்கப்போதுமானவை. இம்மாதிரி யூனியன்கள் ஏற்பட்டிருக்கும் இடங்களைச் சுற்றியுள்ள சொஸைடிகளில் வசூல்கள் மிக நன்றாய் ஆகிறதென்றும் இல்லாத இடங்களில் குறைவு தான் என்றும் நான் அறிகிறேன். ஆகையால் உங்கள் சொஸைடிகளை கூட்டம் கூட்டமாய் தனித்தனி தொகுப்பது நல்லது என்று நினைக்கிறேன். இந்நிலையால் தொகுக்கப்படும் சொஸைடிகளின் விஸ்தீர்ணத்தையும் இடத்தையும் தாலூக்காவின் பாகமென்றாவது, தாலூகா என்றாவது, ஜில்லா என்றாவது நிச்சயித்து விடுதல் தவறாகும்.

தாலூகா, ஜில்லா யூனியன்களுக்கு அனுகுணமாகச் சொல்ல வேண்டிய விஷயங்கள் நிரம்ப இருக்கின்றன என்று எனக்குத் தெரியும், ஏனென்றால் அந்த மூலஸ்தானங்களில் சரிவர நிர்வகிக்கக்கூடிய மனிதர்கள் இருக்கிறார்கள். சிறிய லோகல் யூனியன்களில் இருக்கும் மெம்பர்களோ ப்ரைமரி சொஸைடிகளின் மெம்பர்களாயிருப்பதால் கடன் கொடுக்கும் விஷயங்களில் அவர்கள் சிபார்சு அவ்வளவு பயனுடையதன்று. ஆகையால் இன்று ஜில்லா யூனியனாயிருப்பது நாளைக்கு தாலூகா யூனியனாகவும் மறுநாள் லோகல் யூனியனாகவும் மாவுவிடும். இம்மாதிரி யேற்படாமலிருக்க நீங்கள் செய்யவேண்டியது என்னவென்றால் லோகல் யூனியன்களை சரிவரக் கற்பித்து அவர்களுக்குக் கோ ஆபரேடிவ் பாங்குகளுக்கும் சரியான சம்பந்தம் நேரில் ஏற்படும்படி செய்துவைப்பதே.

தணிக்கைப் பரிசோதனையானது இவ் யூனியன்களின் கடமைகளில் ஒன்றாய் சொன்னேனே, அது என்னவென்றால் பெரிய கம்பெனிகளிலும் கிளப்புகளிலும் உள்ள கணக்குகளை சார்ட்டர்ட் அக்கௌண்டெண்டுகளிடம் சோதனைக்கு அனுப்புகிறார்களல்லவா. கம்பெனி கிளப்பு இவைகளிலுள்ள அக்கௌண்டுகள் கணக்குகளெல்லாம் தயாரித்துத் தானே ஷெயாரிடம் சோதனைக்கு அனுப்புகிறார்கள். நம் கோ ஆபரேடிவ் கணக்குகளையும் அம்மாதிரி தயாரித்து தணிக்கை செய்யச் சொல்வதில் என்ன தடை. சொஸைடியின் கணக்குகளை நீங்களே ஏற்படுத்தும் கணக்குப்பிள்ளைகளால் தயாரித்து ரிஜிஸ்திராரின் சிப்பந்திகளுக்கு சமானமான சார்டட்ர்ட் அக்கௌண்டெண்டுகளிடம் சோதனைக்கு கொடுப்பது இயலாதகாரியமாக ?

இம்மாதிரி செய்வது சரியான வேலைக்கிரமம் எனறு எனக்குப் புலப்படுகிறது. இதனால் கவர்ன்மெண்டு ஏஜண்டுகள்கூட மேன்பார்வையுடன்போகும் லகுவான வேலை செய்யும் சௌகரியத்தை அடைவார்கள்.

ப்ரைவேட் தணிக்கைகள் சிலாக்கியம் என்று ஒப்புக்கொள்ளப்பட்டால் அதற்கு ஏற்படும் சிலவுகளுக்கு என்ன செய்கிறது என்ற கேள்வி உண்டாகும். கவர்ன்மெண்டாரால் சமீபத்தில் ஒத்துக்கொள்ளப்பட்டிருக்கும் திறமான கண்காணிப்புக்கு பிரைமரி சொஸைடிக்கு பங்குத்தொகையும் ரிஸர்வதுகையும் போக மீதித்துகையில் 100க்கு சராசரி 1 வீதம் சிலவு ஏற்படும் என்று மதிக்கப்பட்டிருக்கிறது. பிரைமரிசொஸைடிகள் 100க்கு $\frac{1}{2}$வீதம் சிலவு ஒத்துக்கொள்வதாக ஏற்கனவே ஒப்புக்கொண்டிருக்கின்றன. இதனால் பணம் உதவுகிற



பாங்கிகள் சங்கங்களுக்கு கடன் கொடுக்கும் தொகையின்பேரில் மற்றையப் பாதியையும் கொடுக்கவேண்டியிருக்கும்; பணம் கொடுக்கும் பாங்கிகளுக்கு இம்மாதிரியான பேரங்கள் ஏற்பட்டுவிட்டால், அவைகளுக்கு வட்டியின் உயர்வான நிர்த்தாரணம்இவ்வளவு என்று ஏற்படுத்திக்கொள்ள சௌகரியமாயிருக்கும். பிரைமரி சொஸைடிகளுக்கு இந்த பாங்கிகள் 100க்கு $7\frac{1}{2}$-வீதம் கொடுத்து அச்சொஸைடிகளைக் கண்காணிக்க 100க்கு $\frac{1}{2}$-வீதம் சிலவுகொடுக்க ஒப்பூக்கொண்டால் 100க்கு 7வீதம் கடன் அவைகள் வாங்கமுடியாது, செண்டரல் பாங்கி, டிஸ்திரிகட் பாங்கியூனியன் இவைகள் 100க்கு 6வட்டிக்கு மேற்படாமல் கடன் வாங்க எதிர்பார்க்கும், ஆனால் இப்பேர்ப்பட்டபாங்கிகள் தாங்கள் வாங்கப்பட்ட தொகைகளுக்கு 100-க்கு $6\frac{1}{2}$-வட்டி கடன் கொடுக்கப் பிரியப்படுமோ என்று நான் சந்தேகிக்கிறேன்.

அபெக்ஸ் அல்லது ப்ரொவின்ஷியல் பாங்கியைப்பற்றியாவது அல்லது மதராஸ் ஸெண்டிரல் அர்பன் பாங்கியின் அமைப்பை மாற்றும் விவகாரத்தையாவது கவனிக்குங்கால் அவைகளைக் கண்காணிக்கும் சிலவுகளை நன்றாய் கவனிக்கவேண்டியது அவசியமல்லவா. சென்ற 6மாதமாக இது விஷயத்தைப்பற்றி எழுதப்பட்டுக் கொண்டிருப்பதை நான் விவகரிக்க வரவில்லை. மேல் நடக்கக்கூடிய சம்பவங்களைகொஞ்சம் கவனத்தில் வைத்திருக்கவேணும் என்று சொல்லுவேன். காலக்கிரமத்தில் டிஸ்திரிகட் பாங்கிங் யூனியன்களும், செண்டரல் பாங்கிகளும் வெகுவாக இன்னம் ஏற்படக்கூடிய சௌகரியங்கள் இருக்கின்றன. அநேக் பிரதம சொஸைடிகள் மேற்படி பாங்கிகளின் சிபார்சுகளுக்கும் பண உதவிக்கும் கடமைப் படவேண்டியிருக்கும். இம்மாதிரி நடவடிக்கைதான் கோஆப்ரேஷன் கமிட்டியார் யோசனை செய்தது. மேலும் அபெக்ஸ் பாங்கியின் கொள்கை ராஜதானியின் லேவாதேவியை செண்டரல் பாங்கிகளின் மூலமாய் அடக்கியாளவேண்டும் என்று கமீட்டியாரின் தீர்மானம். சமீபத்தில் செண்டரல் பாங்கிகளும், பாங்கிங் யூனியன்களும் ஜில்லா முழுவதும் பரவி ஏற்படும் என்பது சாத்தியமே. பிரதம சங்கங்களுக்கு பணம் கொடுத்து உதவும் சௌகரியம் அபெக்ஸ் பாங்கிக்கு அப்பொழுது யிராததினால், லாபமொன்றும் யேற்படாது. அனுபவத்தில் நமது டிஸ்திரிகட்பாங்கிகள் அநேகத்திற்குஸ்தலதனங்கள் தானாகவே விசேஷமாய் வந்து விழுந்து அவைகள் சீக்கிரமாய் சுவாதீன நிலைமையை அடைந்து தங்கள் தாங்களே சொல்பவட்டிக்குக் கடன்வாங்க சக்தியுள்ளதாக ஆகின்றன. 100க்கு 7வட்டி வீதம் கடன்வாங்கினால் கட்டாது. அப்படியானால் அபெக்ஸ் பாங்கிலிருந்து எப்படிவாங்கும்? இதுவரையில்

அவைகள் அந்த வட்டிக்கு கடன் வாங்கி யிருக்கின்றனவா? உள்ளூர்
பணம் குறைந்த வட்டிக்கு வழக்கமாய் கிடைக்கிறதா? லோகல் கொ
ஆபரேடிவ் பாங்கிகளுக்கு அபெக்ஸ் பாங்கியின் நடவடிக்கையில்
என்ன சௌகரியம் இருக்கிறது? அபெகஸ் பாங்கியை விருத்தி
செய்யும் எண்ணமுடையவர்களும் மதருஸ் ஸென்டரல் அர்பன்
பாங்கி டைரக்டர்களும் அவசியம் கவனிக்க வேண்டிய விஷயங்கள்
இவைகள். மதருஸ் ஸென்டரல் அர்பன் பாங்கியின் டைரக்டர்கள்
ராஜதானி கோஆபரேஷனின் மூல தன உதவிக்குத் தக்கபடி தங்
கள் பாங்கியின் அமைப்பை மாற்றி சீர்திருத்த எண்ணங் கொண்டி
ருக்கிறார்கள் என்று அறிய நான் மிகவும் சந்தோஷிக்கிறேன். எல்லா
ருக்கும் சௌகரியமான ஓர் முடிவான ஏற்பாடுசமீபத்தில் ஏற்பட
லாம் என்றும் நம்புகிறேன்.

கடன் லேவாதேவியைவிட இதர விஷயங்களுக்கு ஏற்படக்
கூடிய சொஸைடிகளோ கணக்கற்றதா யிருக்கின்றன. அவைகளுள்
சில:—கிரய விக்கிரயங்களுக்காக சொஸைடி, விவசாயிகளின் விளை
பொருள்களை மொத்தத்தில் விற்கும் சொஸைடி, நல்ல வித்துகள்
உண்டாக்கி விற்கும் சொஸைடி, மெம்பர்களுக்கு குடிக்கூலிக்காவது
விற்பனைக்காவது கட்டிடம் கட்டும் சொஸைடி, ஆடுமாடுகள் இன்ஷியூ
ரென்ஸ் சொஸைடி, தயிர் வெண்ணெய் சப்ளை செய்யும் சொஸைடி,
என்று அநேகம் இருக்கின்றன. இம்மாதிரி சொஸைடிகளில் சில இத்
தேசத்தில் ஏற்படுத்திப் பார்த்திருக்கிறோம். ஆனால் கோஆபரேடிவ்
லேவாதேவி சங்கம்போல் அவ்வளவு விருத்தியடையவில்லை. அவை
கள் ஏன் அவ்வளவு பிரகாசிக்கவில்லை. என்கிற காரணம் யாவரும்
அறிந்த விஷயம். ஜனங்கள் உண்மையாகவே விருத்தியாகவேணும்
என்று கவலை யெடுத்துக் கொள்ளும் எந்த சொஸைடியும் நாளடை
வில் விருத்தியாகி ஜயம் அடையும் என்பதில் யாதொரு சந்தேகமும்
இல்லை. சில சங்கங்கள் மேம்பாடாவதற்கு கொஞ்சம் காலதாமதமா
கும். அவைகளில் கட்டிடம் கட்டும் சொஸைடியைச் சொல்லலாம்.
இவைகளைப்பற்றி சிலயோசனையில்லாத வார்த்தைகள்பேசப்பட்டிருக்
கின்றன; ஏனென்றால் கவர்ன்மெண்டார்சகாய வட்டிக்கு தேவையான
பணம் இதற்குக் கொடுக்கவில்லை; யுத்தம் நடந்துகொண்டிருக்கும்
பொழுது கவர்ன்மெண்டார் பணம் கொடுத்து உதவுவது சாத்திய
மல்ல. காலக்கிரமத்தில் கொடுத்தாலும் கொடுப்பார்கள். இல்லாவிட்
டாலும் இல்லை. அவர்கள் எம்மாதிரியான நோக்கத்தை வகித்த
போதிலும் கோஆபரேடிவ் சொஸைடிகளின் நல்ல உபயோகமுள்ள
வேலையால் நாளடைவில் வட்டியின் விகிதம் குறைந்து, கட்டிட



சொஸைடிகள் தங்கள் கட்டிடங்களுக்கு வேண்டிய துகைகளை கிரகிக்க
சௌகரியங்கள் ஏற்படுமென நாம் நம்ப இடமுண்டு. இதர மாதிரி
யான சொஸைடிகளெல்லாம் ஏற்படுத்த வேண்டிய விஷயம் ஒன்று
முக்கியமே ஒழிய, ஏற்பட்டுவிட்டால் தானாக நடைபெறும். இந்த
சொஸைடிகளிலெல்லாம் முக்கியமாய் என் மனதிற்படுவது ஸ்டோர்ஸ்
சொஸைடி. இதற்கு ஒரு நல்ல உதாரணமாக திருவல்லிக்கேணி
ஸ்டோர்ஸ் இருக்கிறது. இந்த ஸ்டோர்கள் ஆதியில் எண்ணிய வண்
ணம்செய்ய இயலவில்லையாம். சாமான்களின் செலவுக்குத்தகுந்த படி
சரியான வரத்து ஏற்படாத குறைவை உணருகிறார்கள். வருஷத்
தில் 6, 7 லக்ஷம் பெறுமான சரக்குகள் வாங்கி மெம்பர்களுக்கு சௌ
கரியமாய் விற்கவேண்டுமானால் வாங்குவதற்குத் தகுந்த சிப்பந்திகளும்
ஏற்பாடும் இல்லாமல் இயலாது. மேற்சொன்ன சொஸைடியானது
சாமான்கள் வாங்கும் விஷயத்தில் தகுந்த ஏற்பாடுகள் செய்திருப்
பதாய்தெரியவில்லை.

தவிர, விவசாய டிபார்ட்மெண்டார் விருத்திக்குக் கொண்டு வர
வேண்டுமென்று மிகவும் பிரயத்தினம் செய்து கொண்டிருக்கிற விவ
சாய வித்துச் சங்கம், கிருஷிகர்களின் கூட்டு தானியங்களை விற்கும்
சொஸைடிகள், ஆகிய இவைகள் அபிவிருத்தியடையும் வழி என்ன
வென்றால் கோஆபரேடிவ் என்ற ஒற்றுமைப்பின் சௌகரியங்களை
யும் சத்தியமும் கௌரவமுமான மார்க்கங்களின் மேன்மையையும்
ஜனங்களுக்கு போதிப்பதே. திருநெல்வேலி, ராமனாதபுரம் ஜில்லாக்
களில் பருத்தி விதை யூனியன் என்று ஒரு சொஸைடியும் சுத்த
மான நெய் விற்க சென்னைக்கருகில் இரண்டொரு சொஸைடிகளும்
ஏற்படுத்தி ஒரு சிறிய ஆரம்பம் செய்திருக்கிறீர்கள். இந்தியவிளை
பொருள்களை சுத்தம் செய்து நல்லதாகச்செய்யும் விஷயத்தில் ரொம்ப
வேலைகள் செய்யவேண்டி யிருக்கிறது. இந்த ராஜதானியிலிருந்து
ஏற்றுமதியாகும் சரக்குகளை கவனியுங்கள். ஒன்றாவது கலப்பில்லாம
லும் வேறுவித ஊழல் செய்யப்படாமலும் இருக்கிறதா? பருத்தி
யானாலும் சரி, தோல், நிலக்கடலை, எண்ணெய், சாயம், மெழுக்கு
இன்னும் எதுவானாலும் ஒருவாறு கலப்பு செய்யப்பட்டு இந்திய வியா
பாரத்திற்கே ஒரு அபகீர்த்தியும் ஹானியும் ஏற்படும்படி இருக்கிறது.
தோல்களோடு "எப்ஸம் சால்ட்" என்ற உப்பு கலக்கிறார்கள். சாயத்
தோடு மண்ணைச் சேர்க்கிறார்கள். நல்லபருத்தியுடன் மட்டப்பருத்தி
யைக் கலந்தும் வேர்க்கடலையை தண்ணீரில் நனைத்தும் மெழுக்கு
வியாபாரம் கலக்கப்பட்டும் இருப்பதால் வியாபார சேம்பர்ஸ் காரர்
கள் வியாபாரம் செய்யமாட்டோமென்று சொல்லுகிறார்கள். இந்திய

வியாபாரத்திற்கு நாளடைவில் எம்மாதிரியான நஷ்டம் ஏற்படப் போகிறது என்பதற்கு ஒரு உதாரணம் காட்டுகிறேன்.

ராஜாங்கத்தார் ருஷியாவுக்கும் இந்தியாவுக்கும் வியாபாரத்தை பரவச்செய்ய கவலை கொண்டு இதற்காக இரண்டு உத்தியோகஸ்தர்களை அவ்விடத்திற்கு அனுப்பியிருக்கிறார்கள். ருஷியாவின் வியாபாரம் வெகு சிலாக்கியம் என்று உங்களுக்கு தெறியாமலிருக்கலாம். சண்டை முடிந்த பிறகு அதற்கு ஏராளமான போட்டிகள் ஏற்படும். ருஷியாவுக்கு வேண்டிய வெகு சாமான்களை போட்டா போட்டி பயமில்லாமல் இந்தியா சப்ளை செய்யலாம். ஆனால் சரக்கு மாத்திரம் நல்லதாயிருக்கவேண்டும். இப்பொழுது செய்வதுபோல் கலந்து விற்பனைசெய்ய ஆரம்பித்தால் ஒரு வருஷங்கூட அவர்களுடன் வியாபாரஞ் செய்யமுடியாது. இந்தியாவின் ஏற்றுமதிச் சரக்கு சுத்தமாயிருக்கவேண்டியது ராஜாங்கத்திற்கே அத்தியாவசியம். இதற்காகவே பிரதம கோஆபரேடிவ் சொஸைடிகள் மென்மேலும் விருத்தியாக வேண்டியது.

கனவான்களே! கோஆபரேடிவ் கிளர்ச்சியைப் பற்றிய சாதாரணக் குறிப்புகளை சொல்லி முடித்தேன். இனி இக்கிளர்ச்சிக்கே தாய்போலிருந்து உழைத்து வந்தவருடைய மரணத்தைப்பற்றி அனுதாபம் சொல்லிவிட்டு முடிக்கிறேன். இந்த ராஜதானியில் முதல்முதல் கோ ஆபரேடிவ் சொஸைடியை ஆரம்பித்த ம-ா-ா-ஸ்ரீ திவான் பகதூர் ஆதிநாராயண அய்யா அவர்களின் மரணத்திற்கு மிகவருந்துகிறேன். அவர் இக்கிளர்ச்சியில் வெகு ஊக்கத்துடன் சாகும் வரையில் உழைத்தவர்; மதராஸ் ஸெண்ட்ரல் அர்பன் பாங்கியில் வெகுகாலம் டைரக்டராயிருந்தவர். மதராஸ் ப்ரொவின்ஷியல் கோஆபரேடிவ் யூனியனை ஸ்தாபித்தவர்களில் ஒருவர். செங்கல்பட்டு டிஸ்திரிகட் பாங்கிங் யூனியனை ஸ்தாபித்து அதிலும் டைரக்டராயிருந்தவர். அவர் விடாமுயற்சியும் ஊக்கமும் ஞாபகசக்தியுமுள்ள நல்ல முகராசியுள்ளவர். அவருடைய ஞாபகம் அவருடைய ஐரோப்பிய இந்திய சிநேகிதர்களுடைய மனதில் வெகுகாலம் குடியிருக்கும்.

இக்கிளர்ச்சியில் வெகு ஊக்கத்துடன் உழைத்துவரும் கௌரவ உத்தியோகஸ்தர்கள் யாவரையும் நான் சிலாக்கிக்காமல் இருக்கமுடியாது. கோஆபரேஷனின் விருத்திக்காக அவர்கள் எடுத்துக்கொள்ளும் சிரத்தையை என்னால் புகழ முடியவில்லை. பிரதிப்பிரயோஜனத்தை எதிர் பார்க்காமல் நீங்கள் செய்யும் தீவிர வேலையும் ஊக்கமும் இளைஞர்கள் யாவரும் கற்றுக் கொள்ள வேண்டிய



முக்கிய விஷயமே. இதன் முன்னேற்றம் உங்கள் கையிலேயே இருக்கின்றன. இதுவரையில் நீங்கள் செய்திருக்கும் வேலையினால் பாக்கியும் நன்றாய் முடிவுபெறுமென நம்புகிறேன். நீங்கள் இதுவரையில் அனுசரித்த முறையையே இன்னும், அனுஷ்டித்து ஜாதி, வர்ணம், தேசீய விஷயங்கள் இவைகளில் அதிக கவனம் செலுத்தாமல், கோஆபரேஷனையே கவனித்து முன்னுக்குக்கொண்டு வரவேண்டும் என்பதே என் அபிப்பிராயம்.

போன தடவைக்கு இப்பொழுது நன்றாயிருக்கிறது என்று திருப்தியடையக் கூடாது. இதை விடத்திருப்திகரமாய்ச் செய்ய முடியாது என்று சொல்லும்படி வேலை செய்வதே உங்கள் கொள்கையாக இருக்கவேண்டும்.

---

பின்வரும் தீர்மானங்கள் கான்பரென்ஸால் அங்கீகரிக்கப்பட்டன:—

## தீர்மானங்கள்

I. இந்த ராஜதானியில் கவர்ன்மெண்டாரல்லாத ஐக்கிய முயற்சிக் காரர்களில் மிக்க ஊக்கத்துடன் வேலை செய்த முதன்மையானவர்களிலொருவரும், விவசாயத்தை ஐக்கிய முயற்சி மூலமாய் அபிவிருத்தியடைய வேண்டுமென்ற அளவற்ற ஆவலுமுடைய காலஞ்சென்ற திவான்பகதூர் M. ஆதிநாராயணய்யர அவர்களின் உழைப்பை இக்கான்பரென்ஸ் மிகவும் மெச்சி ரிகார்ட்டில் பதிவதுடன், அவரிறந்து போனதினால் ஐக்கிய யியக்கமடைந்துவரும் நஷ்டத்திற்கு அனுதாபப்படுகின்றது.

II. இம்பீரியல் கமிட்டியார் குறிப்பிட்டபடி இந்த ராஜதானியில் மாகாண பாங்கி ஒன்றை சமீபத்தில் ஸ்தாபிக்க வேண்டியதவசியமென இக்கான்பரென்ஸ் அபிப்பிராயப்படுகிறது.

III. ரெஜிஸ்ட்ராரும், அஸிஸ்டெண்டு ரெஜிஸ்ட்ரார்களும் கூடும் கான்பரென்ஸ்களில், ஸெண்ட்ரல் பாங்கிகளும், ஜில்லா பாங்கிங் யூனியன்களும் தங்கள் பிரதிநிதிகளை யனுப்பும்படி அவைகளை அழைக்கவேண்டுமென்றும், டிபார்ட்டுமெண்டு நிர்வாக பிரத்தியேக விஷயம் நீங்கலாக ஐக்கிய இயக்கத்தைச் சேர்ந்த பாக்கியுள்ளயெல்லா விஷயங்களிலும் வோட்டு கொடுக்க அவைகளுக்கு அதிகார மிருக்கவேண்டுமென்றும் இக்கான்பரென்ஸ் அபிப்பிராயப்படுகிறது.

IV. சில குறித்த சங்கங்களிடத்தில் ஒப்பிவிக்கப்பட்ட சுகாதார வேலைகள் கவர்ன்மெண்டாரின் திருப்திகரமாய் முடிவுற்றதைக் கேட்டு இக்கான்பரென்ஸ் மிகவும் மகிழ்ச்சியடைவதுடன், அம்மாதிரி வேலை

களை இன்னும் அதிகச் சங்கங்களுக்குக் கொடுத்து அவ்விதப் பரீக்ஷார்த்தம் செய்வதை, விசாலிக்கவேண்டுமென இக்கான்பரென்ஸ் மிகவும் வணக்கத்துடன் வற்புறுத்துகின்றது.

V. கலப்பில்லாத நல்ல சரக்கு விதைகளையும், விவசாயக் கருவிகளையும் கோவாப்ரேடிவ் சங்கங்களுக்கு தனித்தனி கொடுத்துதவுதற்கும், வேண்டும்பொழுது விளை பொருள்களை மொத்தத்தில் விற்க யேற்பாடு செய்வதற்கும், தகுந்த ஸ்தலங்களில் டிப்போக்களை ஸ்தாபிக்க வேண்டுமென ஸென்டரல் பாங்கிகளையும், யூனியன்களையும், இக்கான்பரென்ஸ் கேட்டுக்கொள்ளுகிறது.

VI. (*a*) கோர்வாப்ரேடில் ஸொஸைடிகள் ஒன்றுக்கொன்று சௌகரியமாய் பணம் அனுப்பித்துக்கொள்வதை யுத்தேசித்து, அணுவின் பின்னங்களையும் தபாலர்பீஸ் மூலமாய் அனுப்ப உத்திரவு கொடுக்கும்படி இந்தியா கவர்ன்மெண்டாரை இக்கான்பரென்ஸ் கேட்டுக்கொள்ளுகிறது.

(*b*) பம்பாயில் நடந்து வருவதைப்போல், பண முதவும் ஸ்தாபனங்களுக்கும், சங்கங்களுக்கும் ஒன்றுக்கொன்று தபாலாபீஸ் மூலமாய் பணமனுப்புவதிலேற்படும் கமிஷனில், ஓர் பாகத்தை ரீபேட்டாக திருப்பி அவைகளுக்குச் கொடுக்க வேண்டுமென இக்கான்பரென்ஸ் அபிப்பிராயப்படுகிறது.

VII. இந்த ராஜதானியில் முனிசிபல் இலாகாவில் ஐக்கிய முயற்சிப் பாற்சாலைகளை ஸ்தாபிக்க வேண்டுமென்றும் அவைகள் சரிவர வேலை செய்வதற்கு வேண்டிய சாதனங்கள், உதாரணமாக, பசுமாட்டின் கொட்டகைகளைக் கட்டி இவைகளுக்கு வாடகைக்கு விடுதல், முதலியவைகளை முனிசிபாலிடிகள் செய்ய வேண்டுமென இந்தகான்பரென்ஸ் சிபார்சு செய்கின்றது.

VIII. முனிசிபல் அல்லது லோகல்பண்டைச்சேர்ந்த பிரைமரி, ஸகண்டரிப் பள்ளிக்கூடங்களிலிருக்கும் உபாத்தியாயர்கள் வெகுமானத்திற்காவது அல்லது கௌரவத்திற்காவது கோவாப்ரேடிவ் ஸொஸையடியில் மெம்பராகவாவது அல்லது டைரெக்டராகவாவது வேலை செய்யலாமென்று பொது உத்திரவொன்றை பிறப்பிக்க வேண்டுமென வித்தியா யிலாகா டைரெக்டரை இக்கான்பரென்ஸ் கேட்டுக்கொள்ளுகிறது.

IX. நிர்ணயத்தைச் சாராத சங்கங்களை, பொதுவில் எல்லாவற்றையும் விசேஷமாய் கைத்தொழில் சங்கங்களையும், இனி ஸ்தாபிக்க



வேண்டுவதின வசியத்தை இக்கான்பரென்ஸ் கோவாப்ரேடிவ் டிபார்மெண்டாருக்கு வற்புறுத்துவதுடன், விவசாயம், நெசவு, வியாபாரம், இவைகளில் தேர்ச்சியுள்ளவர்களை ரெஜிஸ்ட்ராருக்கு அஸிஸ்டெண்டாகக் கொடுத்துதவும்படி கவர்ன்மெண்டாரை இக்கான்பரென்ஸ் கேட்டுக்கொள்ளுகிறது.

X. கோவாப்ரேடிவ் சங்கங்களின் நிர்வாக கமிட்டியில் வேலை செய்தல் லோகல் போர்ட்டுகளிலும் முனிஸிபாலிடிகளிலுமுள்ள ஸ்தானங்களுக்கு ஓட்டு கொடுப்பதற்கும், அவைகளை யடைவதற்கும் உரித்தானதென்று இக்கான்பரென்ஸ் நினைக்கிறது.

XI. கோவாப்ரேடிவ் டிபார்ட்டுமெண்டானது எப்பொழுதும் போல் ஓர் இந்திய உத்தியோகஸ்தர் வசமிருந்து வரவேண்டுமென இக்கான்பரென்ஸ் அபிப்பிராயப்படுகிறது.

XII. கட்டிடச்சங்கங்களுக்கு திரவியசகாயம் செய்யவேண்டாமென்ற இந்தியா கவர்ன்மெண்டாரின் உத்திரவை இக்கான்பரென்ஸ் வருத்தத்துடன் நோக்குவதுடன், அச்சங்கங்கள் கவர்ன்மெண்டாரினுதவியன்னியில் அபிவிருத்தியடையமுடியாததினால்,அவ்வுத்திரவை திரும்பவும் ஆலோஜித்து திருப்திகரமாய் முடிவுசெய்யவேண்டுமென கவர்ன்மெண்டாரைக் கேட்டுக்கொள்ளுகிறது.

XIII. டிரஸ்ட்டு பண்டுகளை கோவாப்ரேடிவ் ஸொஸையடிகளில் டிபாஸிட்டு செய்யும்வண்ணம், இந்தியன் டிரஸ்ட்டு ஆக்ட்டை திருத்தவேண்டுமென இக்கான்பரென்ஸ் வற்புறுத்துகிறது.

XIV. ஆக்ட்டைப் பொருந்தியுள்ளதும், ரெஜிஸ்ட்ராரால் அங்கீகரிக்கப்பட்டதுமான பைலாக்களை, கவர்ன்மெண்டார்கள் அல்லது டிபார்ட்டுமெண்டார்கள் புதிய சட்டத்தாலாவது அல்லது ஸர்க்குலராலாவது திடீரென்று ரத்து செய்யக்கூடாது! காலக்கிரமத்தில் அவைகளாகவே மாறுதலடையும் அல்லது நீங்கும் வரையில், அப்பேற்பட்ட பைலாக்கள் அமுலிலிருக்க வேண்டுமென்று இக்கான்பரென்ஸ் தீர்மானிக்கின்றது.

## அக்கிராசனாதிபதியின் முடிவுப் பிரசங்கம்

முதல் நாள் கான்பரென்ஸு முடிவு பெறும் முன்னமே, கனம் கில்மன் துரையவர்களுக்கு இரண்டாவது நாள் கான்பரென்ஸின் அக்கிராசனம் வகிக்க அவகாசமில்லாததினால், அவர் ம-ா.ா-ஸ்ரீ கனம் P. ராஜகோபாலாசாரியார் அவர்களை அப்பொறுப்பை வகிக்கும்படி கேட்டுக்கொண்டதின்பேரில்,அவரும் சம்மதித்து அக்கிராசனத்தைப் பெற்றார். அவர் முடிவுபிரசங்கத்தின் சாராம்சம் பின்வருமாறு:—

இப்பொழுது ஐக்கிய முயற்சியின் உயர்வு நிலைமையால் நீங்கள் எல்லாரும் இவ்வியக்கத்தின் நோக்கங்களை நன்கறிந்திருக்கிறீர்களென்பதிற் சந்தேகமில்லை. ஆனால் அநேகர் அநேக விதமாய் அபிப்பிராயங்கள் கொண்டிருக்கக்கூடும்; ஒன்றுக்கொன்று வித்தியாசங்களிருக்கலாம். மெம்பர்களின் பொது நோக்கமானது ஐக்கிய முயற்சியின் அபிவிருத்தியைப் பற்றியாயிருப்பதால், அவ்வபிப்பிராயங்களுக்கு நாம் மரியாதை கொடுக்கவேண்டும்; அதினால் கோவாப்ரேஷனுக்குச் கெடுதல் வந்து விட்டதெனக் கவலைப்பட வேண்டாம்.

நான் சொல்லும் விஷயங்களை கவர்ன்மெண்டார் தரப்பில் சொல்லுவதாக நினைக்க வேண்டாம். கோவாப் ரேடிவ் ரெஜிஸ்ட்ராராக முன்பு நான் இருந்ததை உத்தேசித்து உங்களுக்கு சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன்.

மதராஸ் ஸெண்ட்ரல் பாங்கியை இம்பீரியல் கம்மிட்டியார் கூறிய படி இராஜதானி பாங்கியாக மாற்றிக்கொள்ள முடியுமா அல்லது வேறு பாங்கியொன்று அம்முறையில் ஸ்தாபிக்கப்பட வேண்டுமா, என்ற விவகாரத்தைப்பற்றி அநேக சம்வாதங்கள் நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். கான்பரென்ஸாவது அதைப்பற்றித் தீர்மானித்திருக்கிறது. சாதாரணச் சங்கங்களின் நன்மைகளுக்கு விரோதமாக கவர்ன்மெண்டாராவது அல்லது ரெஜிஸ்ட்ராராவது ஓர் காரியம் செய்வாரென்று நம்புவதற்கு இடமில்லை. ஆனால் இவ்விஷயத்தைக் கான்பரென்ஸானது ஆமோதிக்காமல், கவர்ன்மெண்டாரிடம் விட்டுவிடுதல் நல்லது. ரிஜிஸ்ட்ரார்கள் அடிக்கடி கூடும் கான்பரென்ஸ்களில், பாங்கிங் யூனியன்களின் பிரதிநிதிகள் அழைக்கப்பட வேண்டுமென்ற தீர்மானமானது அதிக கஷ்டங்களுக்கு ஏதுவாயிருக்கிறது. ரெஜிஸ்ட்ராரும், அஸிஸ்டெண்டு ரெஜிஸ்ட்ராரும் அநேக பாங்கிகளைப்பற்றி தாராளமாய்ப் பேசமுடியாமற் போய்விடும். ஆகையால் பாங்கிகளைச் சேர்ந்தவர்கள் அங்கேயிருப்பது நல்லதா? 5-வது தீர்மானத்தைப்பற்றி யோஜிக்குமிடத்து, லேவாதேவியையும், வியாபாரம் செய்வதையும் ஒன்று சேர்த்திருக்கின்றன. 'பணமானது எப்பொழுதும் புரண்டுகொண்டேயிருக்கவேண்டுமேயொழிய சாமான்கள் வாங்குவதில் செலவிடப்படக்கூடாது. இந்த ராஜதானியில் நாணயமுறையல்லாத வேறு வழிகளில் ஐக்கியமுயற்சி பிரபலமாகாதது விசனிக்கத் தகுந்ததுவே. நாணயச்சங்கங்கள் 100 யிருப்பதைக்காட்டிலும், நாணயத்தைச் சாராத சங்கங்கள் 10-யிருப்பது மேன்மையே!

ராவ் ஸாகிப் K. இராமஸ்வாமி அய்யர் அக்கிராசனாதிபதிக்கு வந்தனமளித்தவுடன், கான்பரென்ஸ் கலைந்தது.

# அனுபந்தம் B.

## I. வரவேற்புக் கமிட்டி மெம்பர்களின் பெயர்

1. ஆனரபிள் ஸ்ரீ K. R. V. கிருஷ்ண ராவ்
2. ஆனரபிள் மிஸ்டர் A. சூரியநாராயண ராவ்
3. ஆனரபிள் மிஸ்டர் யாகுப் ஹஸன்
4. ஆனரபிள் மிஸ்டர் சிதம்பரநாத முதலியார்
5. ஆனரபிள் மிஸ்டர் பி. வி. நரசிம்மய்யர்
6. பிரொபஸர் K. B. ராமனுஜன்
7. சல்லப்பல்லி குமாரராஜா
8. மிஸ்ஸஸ் ஓயிட்ஹெட்
9. ரெவரன்டு வில்லியம் S. ஸத்தர்லன்டு
10. மிஸ்டர் J. E. பிரொலிக்
11. ,, வித்தியாஸகர் பண்டியா
12. ராவ்பகதூர் C. S. சுப்பிரமணியம்
13. மிஸ்டர் J. P. கோட்லிங்கம்
14. V. வெங்கிடசுப்பய்யா
15. V. S. ராமஸ்வாமி சாஸ்திரி
16. M. ஆனந்தராவ் (புத்தூர்)
17. C. N. ஸ்ரீனிவாச அய்யங்கார் (ஹொஸூர்)
18. T. A. ராமலிங்க செட்டியார் (கோயமுத்தூர்)
19. M. ஷிவராவ் (புத்தூர்)
20. ராஜா லக்ஷ்மிநாத் ஸ்வாமிஜி அர்ஸு
21. S. சத்தியமூர்த்தி அய்யர்
22. H. C. ஹர்மன்
23. R. ஆனந்தராவ்
24. பாபநாடு ஜமீந்தார்
25. மிஸ்டர் P. ராமச்சந்திர சாஸ்திரி
26. C. N. கிருஷ்ணஸ்வாமி அய்யர் (கோயமுத்தூர்)
27. J. கிருஷ்ணமூர்த்திராவ் பந்துலு
28. P. S. வெங்குஸாமி அய்யர்
29. V. R. ஸ்ரீனிவாசன் (தஞ்சாவூர்)
30. N. கிருஷ்ணஸ்வாமிராவ் (பாளயங்கோட்டை)
31. T. S. நாராயண அய்யங்கார் (வத்திருப்பு)
32. K. சேஷகிரிராவ் (சம்பெய்கல்லூர்)
33. P. L. ராமஸ்வாமி நாயகர்
34. ரேய் ஸாஹிப் C. அருளய்ய நாயிடு
35. O. M. வெங்கிடநாதய்யங்கார்
36. ராவ் ஸாஹிப் A. ராமராவ்
37. ராவ் ஸாஹிப் C. கண்ணன்செட்டி
38. மிஸ்டர் R. K. பிரஸன்னவெங்கிடேச ராவ்
39. M. நாராயணராவ்
40. N. நாராயணராவ்
41. M. S. சேஷாசலமய்யர்
42. ரேய் ஸாஹிப் K. ராமஸ்வாமி அய்யர்

## II. சங்கங்களின் நன்கொடைகள்

| வரிசை நெ. | ஜில்லா | சங்கத்தின் நம்பரும் பெயரும் | தொகை ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|---|
| 1 | அனந்தபுரம் | 837 போந்தலபல்லி | 1 | 0 | 0 |
| 2 | ,, | 1562 குத்தி லண்டன் மிஷன் ... | 1 | 0 | 0 |
| 3 | ,, | 635 சிக்கத்திமனபல்லி ... | 1 | 0 | 0 |
| 4 | ,, | 502 ஹிந்துபூர் ... | 5 | 0 | 0 |
| 5 | செங்கற்பட்டு | 3 பெரிய காஞ்சீபுரம் டவுன் பாங்கி... | 5 | 0 | 0 |
| 6 | ,, | 381 சிறு காஞ்சீபுரம் டவுன் பாங்கி ... | 5 | 0 | 0 |
| 7 | ,, | 375 செங்கற்பட்டு அர்பன் ஸொஸைட்டி | 3 | 0 | 0 |
| 8 | ,, | 623 திருவெள்ளூர் அர்பன் பாங்கி ... | 5 | 0 | 0 |
| 9 | ,, | 1560 செங்கற்பட்டு பாங்கி யூனியன் ... | 5 | 0 | 0 |
| 10 | ,, | 1580 திருவெள்ளூர் கோவாப்ரேடிவ் யூனியன் | 3 | 0 | 0 |
| 11 | ,, | 613 முருந்தகிரி | 2 | 0 | 0 |
| 12 | ,, | 144 இடையர்பாக்கம் ... | 1 | 0 | 0 |
| 13 | ,, | 192 மதுராந்தகம் ... | 5 | 0 | 0 |
| 14 | ,, | 1168 படலம் ... | 2 | 0 | 0 |
| 15 | ,, | 1251 அன்னுதூர் ... | 1 | 0 | 0 |
| 16 | சித்தூர் | 59 சித்தூர் ... | 2 | 0 | 0 |
| 17 | ,, | 633 கட்னகல்லு ... | 1 | 0 | 0 |
| 18 | ,, | 1233 பாக்சால ... | 1 | 0 | 0 |
| 19 | கோயமுத்தூர் | 1188 காரமடை ... | 1 | 0 | 0 |
| 20 | ,, | 1189 மங்களகரைபுதூர் ... | 1 | 0 | 0 |
| 21 | ,, | 1417 பட்டக்காரனூர் ... | 2 | 0 | 0 |
| 22 | ,, | 1811 காரமடை யூனியன் | 5 | 0 | 0 |
| 23 | ,, | 1445 ஈரோடு முனிசிபல் தோட்டிகளின் சங்கம் | 2 | 0 | 0 |
| 24 | ,, | 1348 கரம்பபாளையம் | 2 | 0 | 0 |
| 25 | ,, | 1655 நாயகர்பாளையம் ... | 2 | 0 | 0 |
| 26 | ,, | 546 சூலூர் ... | 5 | 0 | 0 |
| 27 | ,, | 1674 காரமடைவடவல்லி ... | 1 | 0 | 0 |
| 28 | ,, | 1236 மருதூர் ... | 1 | 0 | 0 |
| 29 | ,, | 427 கோயமுத்தூர்ஜில்லாஅர்பன் பாங்கி | 25 | 0 | 0 |
| 30 | ,, | 26 கோயமுத்தூர் பாங்கியும் ஸ்டோர்ஸும் | 5 | 0 | 0 |
| 31 | ,, | 1081 கோயமுத்தூர் கட்டிடச் சங்கம் ... | 5 | 0 | 0 |
| 32 | ,, | 757 தோலம்பாளையம் ... | 5 | 0 | 0 |
| 33 | கஞ்சம் | 40 பர்ஹாம்பூர் அர்பன் பாங்கி ... | 5 | 0 | 0 |
| 34 | குண்டூர் | 530 குண்டூர் ஜில்லா பாங்கிங் யூனியன்... | 5 | 0 | 0 |
| 35 | ,, | 22 தெனாலி அர்பன் பாங்கி | 2 | 0 | 0 |
| 36 | ,, | 1453 கொல்லூரு பார்வதி பாங்கி ... | 4 | 0 | 0 |
| 37 | ,, | 393 சினகட்லவரு ... | 2 | 0 | 0 |
| 38 | கிருஷ்ணா | 1422 கிருஷ்ணா ஜில்லா பாங்கி ... | 10 | 0 | 0 |
| 39 | ,, | 84 வெங்கிடாபுரம் ... | 1 | 0 | 0 |
| 40 | ,, | 743 வேமந்தா ... | 1 | 0 | 0 |
| 41 | மதராஸ் | 900 மதராஸ்லிடிகோவாப்ரேடிவ்பாங்கி | 5 | 0 | 0 |
| 42 | ,, | 15 திருவல்லிக்கேணி ஸ்டோர்ஸ் ... | 50 | 0 | 0 |



| வரிசை நெ. | ஜில்லா. | சங்கத்தின் நம்பரும் பெயரும். | தொகை. ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|---|
| 43 | மதராஸ் | மதராஸ் சென்ட்ரல் அர்பன் பாங்கி | 25 | 0 | 0 |
| 44 | மதுரை | 28 மதுரை அர்பன் ஸொஸைடியும் ஸ்டோர்ஸும் | 15 | 0 | 0 |
| 45 | ,, | 81 ஒத்தக்கடை ... | 2 | 0 | 0 |
| 46 | ,, | 1048 ஊத்தங்குடி ... | 2 | 0 | 0 |
| 47 | ,, | 29 திருமங்கலம் | 5 | 0 | 0 |
| 48 | ,, | 975 மதுரை ராமனுதபுரம்ஜில்லாபாங்கி | 15 | 0 | 0 |
| 49 | மலையாளம் | 1534 கண்ணனூர் ... | 1 | 0 | 0 |
| 50 | ,, | 784 வேலாஞ்சேரி ... | 2 | 0 | 0 |
| 51 | நெல்லூர் | 1364 காவலி கோவாப்ரேடிவ் பாங்கி ... | 1 | 0 | 0 |
| 52 | நீலகிரி | 959 கூண்டபூர் ... | 1 | 0 | 0 |
| 53 | வட ஆற்காடு | 570 திருவண்ணுமலை ... | 5 | 0 | 0 |
| 54 | ,, | 1187 வெள்ளெய்நாய்கனெரி ... | 1 | 0 | 0 |
| 55 | ராமனுதபுரம் | 147 வடமலைபுரம் ... | 2 | 0 | 0 |
| 56 | ,, | 1383 சங்கரலிங்கபுரம் ... | 1 | 0 | 0 |
| 57 | ,, | 1336 சிவகங்கை ... | 3 | 0 | 0 |
| 58 | ,, | 590 சுப்ரமணியபுரம் ... | 1 | 0 | 0 |
| 59 | ,, | 474 மெல்டஜலபட்டி ... | 1 | 0 | 0 |
| 60 | சேலம் | 115 பொட்டிபுரம் ... | 5 | 0 | 0 |
| 61 | ,, | 151 சேலம் டிஸ்டிரிக்ட் பாங்கி ... | 15 | 0 | 0 |
| 62 | ,, | 25 சேலம் .. | 10 | 0 | 0 |
| 63 | ,, | 601 மாத்திகிரி ... | 10 | 0 | 0 |
| 64 | ,, | 169 தொளஸம்பட்டி ... | 2 | 0 | 0 |
| 65 | ,, | 762 பெரியர்பட்டி ... | 2 | 0 | 0 |
| 66 | ,, | 289 மென்தால் .. | 2 | 0 | 0 |
| 67 | ,, | 1259 யுப்பேரிபட்டி ... | 2 | 0 | 0 |
| 68 | ,, | 1709 கமலாபுரம் ... | 1 | 0 | 0 |
| 69 | ,, | 1504 கே. கள்ளிபட்டி ... | 1 | 0 | 0 |
| 70 | ,, | 1260 ரெட்டிபட்டி ... | 1 | 0 | 0 |
| 71 | ,, | 327 எம்.நல்லகவுண்டன் பட்டி ... | 2 | 0 | 0 |
| 72 | ,, | 1258 யு. மாரமங்கலம் ... | 1 | 0 | 0 |
| 73 | ,, | 1257 பெரியேரிபட்டி ... | 2 | 0 | 0 |
| 74 | ,, | 1261 கந்தாசாரிபட்டி ... | 2 | 0 | 0 |
| 75 | ,, | 1262 சாத்தபாடி ... | 2 | 0 | 0 |
| 76 | ,, | 291 அமரகுண்டி ... | 2 | 0 | 0 |
| 77 | ,, | 1513 சிந்தாமணியூர் ... | 2 | 0 | 0 |
| 78 | ,, | 1707 குள்ளம்பாடி ... | 1 | 0 | 0 |
| 79 | ,, | 1694 சத்தியமங்கலம் ... | 1 | 0 | 0 |
| 80 | ,, | 43 டகல்படி ... | 1 | 0 | 0 |
| 81 | ,, | 173 சின்னப்பம்பட்டி ... | 2 | 0 | 0 |
| 82 | தென்னாற்காடு | 116 ஜலகண்டாபுரம் ... | 2 | 0 | 0 |
| 83 | ,, | 46 திண்டிவனம் பாங்கி ... | 3 | 0 | 0 |
| 84 | ,, | 1055 சேல்லங்குப்பம் ... | 1 | 0 | 0 |
| 85 | ,, | 1526 கொல்லா ... | 1 | 0 | 0 |
| 86 | ,, | 1425 ரெட்டணை ... | 1 | 0 | 0 |
| 87 | தென்கன்னடம் | 1112 பெண்ட்வால் ... | 5 | 0 | 0 |
| 88 | ,, | 181 புத்தூர் ... | 2 | 0 | 0 |

| வரிசை நெ. | ஜில்லா | சங்கத்தின் நம்பரும் பெயரும் | தொகை ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|---|
| 89 | தென்கன்னடம் | 1113 தெ. கன்னடாம்டிஸ்டிரிக்ட் பாங்... | 7 | 0 | 0 |
| 90 | ,, | 1082 ஆர்யாபு ... | 1 | 0 | 0 |
| 91 | ,, | 958 உடிப்பி ... | 5 | 0 | 0 |
| 92 | ,, | 960 பிண்டூர் ... | 2 | 0 | 0 |
| 93 | ,, | 974 விட்டல் ... | 2 | 0 | 0 |
| 94 | தஞ்சாவூர் | 831 திருகாட்டுபள்ளி ... | 5 | 0 | 0 |
| 95 | ,, | 8 நிகல்ஸன் பாங்கி ... | 5 | 0 | 0 |
| 96 | ,, | 378 திருவாரூர் பாங்கி ... | 3 | 0 | 0 |
| 97 | ,, | 27 மன்னார்குடி பாங்கி ... | 10 | 0 | 0 |
| 98 | ,, | 326 வண்டுவான்செரி ... | 3 | 0 | 0 |
| 99 | ,, | 1023 தஞ்சாவூர் ஜில்லா பாங்கி ... | 10 | 0 | 0 |
| 100 | திருநெல்வேலி | 1010 பாலம்கோட்டா பாங்கி ... | 5 | 0 | 0 |
| 101 | திருச்சிறுப்பள்ளி | 30 லால்குடி ரூரப் பாங்கி ... | 2 | 0 | 0 |
| 102 | ,, | 1050 திருச்சிறுப்பள்ளி கிரோட் டாங்கி ... | 7 | 0 | 0 |
| 103 | ,, | 19 நாமக்கல் பாங்கி ... | 5 | 0 | 0 |
| 104 | ,, | 1323 திருப்பளாத்தரை ... | 2 | 0 | 0 |
| 105 | திவான்பஹதூர் ஆர். ராமசந்திர ராவ் ஐ. எஸ். ஓ. | | 5 | 0 | 0 |

## III டெலிகேட்டுகளின் ஜாப்தா

| வரிசை நெ. | ஜில்லாவின் பெயர் | சங்கத்தின் நம்பரும் பெயரும். | டெலிகேட்டின் பெயர் |
|---|---|---|---|
| 1 | அனந்தபுரம் | 1503 நல்லசெருவு ... | [செக்ரிடெரி] |
| 2 | ,, | 620 தனகல்லு ... | [ ,, ] |
| 3 | ,, | 1376 சங்கிபள்ளி ... | [ ,, ] |
| 4 | ,, | 635 சிக்கத்தமபள்ளி ... | M. லக்ஷ்மண ராவ். |
| 5 | ,, | 837 பன்தலபள்ளி ... | K. வெங்கட்டராமப்பா. |
| 6 | ,, | ... ,, ... | எரநாயனி சிட்டப்பா. |
| 7 | ,, | 243 சோமந்தபள்ளி ... | நாராயண ரெட்டி. |
| 8 | ,, | 424 சட்டிபள்ளி ... | K. அனுமனந்த ராவ். |
| 9 | ,, | 14 புக்கபட்டணம் ... | லக்ஷிமி நரசிம்ம சாஸ்திரி. |
| 10 | ,, | 371 பெனுகொண்டா ... | N. சோமசுந்தரம். |
| 11 | ,, | ... ,, ... | M. நாராயண ராவ். |
| 12 | பல்லாரி | 1538 கம்பினி ... | K. சுப்பராய சாஸ்திரி. |
| 13 | செங்கல்பட்டு | 1688 ஆர்யம்பாக்கம் பன்சமா... | M. S. பொன்னுசாமி. |
| 14 | ,, | 1580 திருவள்ளூர் கோவாப்ரேடிவ் யூனியன் ... | (செக்ரிட்டெரி) |
| 15 | ,, | 613 முக்குந்தகிரி ... | சக்ரவர்த்தி அய்யங்கார் |
| 16 | ,, | 679 சேலை ... | T. முருகேச முதலியார். |
| 17 | ,, | 686 பழையசீவரம் ... | குப்புசாமி அய்யங்கார். |
| 18 | ,, | 1668 பழைய பல்லாவரம் ... | M. கிருஷ்ண அய்யர். |
| 19 | ,, | 623 திருவள்ளூர் பாங்கி ... | J. M. சாம ராஜு. |



| வரிசை நெ. | ஜில்லாவின் பெயர் | சங்கத்தின் நம்பரும் பெயரும் | டெலிகேட்டின் பெயர் |
|---|---|---|---|
| 20 | ,, | 1119 பொன்னேரி ஆரணி ... | M. செங்கல்வராயசெட்டி. |
| 21 | ,, | 1283 பாதிரிவேடு ... | C. செங்காலி செட்டி. |
| 22 | ,, | 1253 ஸெம்பியம் ... | T. V. அப்பாராவ் நாயுடு. |
| 23 | ,, | 1072 தையூர் ... | T. ஆசீர்வாதம் |
| 24 | ,, | 630 கீளச்சேரி யூனியன் ... | சவரிய்யு நாயுடு. |
| 25 | ,, | 144 இடையர்பாக்கம் ... | V. ரங்கப்ப நாயுடு |
| 26 | ,, | 3 பெரிய காஞ்சிபுரம் பாங்கி | A. கெங்காதர முதலியார். |
| 27 | ,, | 1560 செங்கல்பட் டிஸ்ரிட் பாங்கிங்யூனியன் ... | P. ராமசந்திர சாஸ்திரி. |
| 28 | ,, | 375 செங்கல்பட்டு பாங்கி | P. B. கிருஷ்ணச்சாரியார் |
| 29 | ,, | 767 திருப்பாச்சூர் ... | வீரபத்திர குருக்கள். |
| 30 | ,, | 1669 சிங்கப்பெருமாள்கோயில் | லக்ஷிமய்யா நாயுடு. |
| 31 | ,, | 139 குந்திபெரும்பெடு ... | S. தொமாஸ்தாமஸ் நாயுடு. |
| 32 | ,, | 1743 சேந்தமங்கலம் ... | M. ராஜு நாயகர். |
| 33 | ,, | 1686 நத்தப்பேட்டை ... | ஏகாம்பர முதலியார். |
| 34 | ,, | 1889 ஏகனம்பேடு ... | முருகேச முதலியார் |
| 35 | ,, | 1646 பாப்பரம்பாக்கம் ... | E. சுப்ரமண்ணிய நாயகர். |
| 36 | ,, | 334 ஆலபாக்சம் ... | S.V. சீனிவாச அய்யங்கார். |
| 37 | ,, | 842 சைதாபேட்குன்னத்தூர் | K. நடராஜ முதலியார். |
| 38 | ,, | 676 திருவெண்கரனை ... | பிரசன்னராகவாசாரி. |
| 39 | ,, | 91 திருபாண்டியூர் ... | B. பாப்பய்யநாயுடு. |
| 40 | ,, | 460 தண்ணீர்குளம் ... | G. சேஷாத்ரி அய்யங்கார். |
| 41 | ,, | 1071 திருவீள்ளூர் கரனை ... | துரைசாமி பிள்ளை. |
| 42 | ,, | 92 மொலாசூர் ... | P. சின்னய்ய நாயுடு |
| 43 | ,, | 1277 மணல்லூர் ... | பால வீரப்பா |
| 44 | ,, | 37 ஜமீன் நுங்கம்பாக்கம் ... | B. சுப்பராயலு நாயுடு |
| 45 | ,, | 1134 சித்தாலபாக்கம் ... | அப்பாதுரை செட்டி. |
| 46 | செங்கற்பட்டு | 894 கொன்னூர் ... | அருணசலமுதலியார் |
| 47 | ,, | 1278 நாவபாக்கம் ... | C. N. ராகவலு நாயுடு |
| 48 | ,, | 841 காவநூர் ... | முருசேமுதலியரர் |
| 49 | ,, | 97 அக்கமபுரம் ... | C. கோபால் பிள்ளை |
| 50 | ,, | 380 உத்தரா மேரூர் கோவாபரேடிவ் யூனியன் ... | O. M. வெங்கடநாட நாத அய்யங்கார் |
| 51 | ,, | 192 மதுராந்தகம் ... | T. ராகவாச்சாரியார் |
| 52 | ,, | ... ,, ... | M.P. திருவெங்கடாச்சாரியார் |
| 53 | ,, | 800 நன்மெலி ... | N. கோபால்சாமி அய்யர் |
| 54 | ,, | 1860 காஞ்சிபுரம் கோவாப்ரேடிவ் சூபாரிவைஸ் யூனியன் | ராமாஞ்சலு நாயுடு |
| 55 | ,, | 343 கூவம் ... | திருபுராந்தக் குருக்கள் |

| வரிசை நெ. | ஜில்லாவின் பெயர் | சங்கத்தின் நம்பரும் பெயரும் | டெலிகேட்டின் பெயர் |
|---|---|---|---|
| 56 | ,, | 541 இருளஞ்சேரி | கணபதி முதலியார் |
| 57 | ,, | 1757 மருதம் | C. வரதராஜுலு நாயுடு |
| 58 | ,, | 710 பி. மாதம்பாக்கம் | அய்யாதி முதலியார் |
| 59 | ,, | 1599 சாலவாக்கம் யூனியன் | A. V. துரைசாமி அய்யர் |
| 60 | ,, | 225 சாலவாக்கம் | சிவானந்தம் பிள்ளை |
| 61 | ,, | 1251 அன்னூதூர் | V. ஸ்ரீனிவாசசாரியார் |
| 62 | ,, | 1 திரூர் | வேலாயுதம் பிள்ளை |
| 63 | ,, | 175 ஓரகாதம் | K. கோவிந்தாச்சாரியார் |
| 64 | ,, | 1623 சுரோத்திரியம் அருகுணம் | வடிவேலு பிள்ளை |
| 65 | ,, | 1625 ரெட்டிப்பேட்டைவீவர்ஸ் | கோவிந்த செட்டி. |
| 66 | ,, | ... ,, | T. வரதராஜுலு நாயுடு செக்ரிடெரி |
| 67 | சித்தூர் | 633 கட்ணுகல்லு | |
| 68 | ,, | 624 மருதவல்லிபுரம் | நாராயணசாமி ரெட்டி |
| 69 | ,, | 1740 சோம்பள்ளி | K. நரசிம்ம சாஸ்திரிலு |
| 70 | ,, | 1173 ராஜரத்தினபுரம் | வீராசாமி ரெட்டி |
| 71 | ,, | ... ,, | பொன்னப்ப ரெட்டி |
| 72 | ,, | 59 சித்தூர் பாங்கி | V. கிருஷ்ணசாமி அய்யர் |
| 73 | கோயம்பத்தூர் | 1417 பட்டகாரனூர் | [பிரஸிடெண்டு] |
| 74 | ,, | 1467 சென்னிமலைபாளையம் | ( ,, ) |
| 75 | ,, | 1674 காரமடை வேதவல்லி | கோபாலகிருஷ்ண அய்யர் |
| 76 | ,, | 1333 சங்கரலிங்கபுரம் | (பிரஸிடெண்டு) |
| 77 | ,, | 1655 நாயகம் பாளயம் | V. ரங்காராவ் |
| 78 | ,, | 1811 காரமடை கோவாப் ரேடிவ யூனியன் | H. G. கோவிந்தசாமி அய்யர் |
| 79 | ,, | ... ,, | P. திருவேங்கிட கவுண்டர் |
| 80 | ,, | 1188 காரமடை | நஞ்சப்ப கவுண்டர் |
| 81 | ,, | 1348 குரும்பப்பாளயம் | V.R. வெங்கடசுப்பிரமணி அய்யர் |
| 82 | ,, | 1236 மருதூர் | சாமிகண்ணு |
| 83 | ,, | ... ,, | ராமஸ்வாமி கவுண்டர். |
| 84 | ,, | 1675 குரணூர் | லக்ஷ்மி வெங்கடரமண அய்யர். |
| 85 | ,, | .665 கூனம்பட்டி | K. ராஜகோபால்ராவ். |
| 86 | ,, | 409 மேட்டுபாடுதூர் | M. N. அருணசல கவுண்டர். |
| 87 | ,, | 414 விருமண்டபாலயம் | V.S. ராஜ கவுண்டர். |
| 88 | ,, | 184 கம்பிளியம்பட்டி | K.M.C. ரங்கய்ய கவுண்டர். |
| 89 | ,, | 427 கோயம்பத்தூர் ஜில்லா பாங்கி | C. N. கிருஷ்ணஸ்வாமி அய்யர் |



| வரிசை நம்பர். | ஜில்லாவின் பெயர். | சங்கத்தின் நம்பரும் பெயரும். | டெலிகேட்டின் பெயர். |
|---|---|---|---|
| 90 | ,, | 26 கோயம்பத்தூர் பாங்கியும் ஸ்டோர்சும் | K. R. சுப்பாராயர் |
| 91 | ,, | 1081 கோயம்பத்தூர் பில்டிங் சொஸைடி | T.A. ராமலிங்கசெட்டியார் |
| 92 | ,, | 344 சுள்ளிப் | ராமசாமி கவுண்டர். |
| 93 | ,, | 423 துடுபதி | முத்துமாணிக்கம் முதலியார் |
| 94 | ,, | 185 கைகோலப் பாளையம் | K. P. கிருஷ்ணசாமி கவுண்டர் |
| 95 | ,, | 417 வடமுகம் கங்கேயம் பாலயம் | ராம ரெட்டியார் |
| | ,, | ... ,, | ரங்கசாமி ரெட்டியார் |
| 96 | கடப்பை | 716 ராயச்சூட்டி | பாலய்யசேஷச்சாருலு |
| 97 | ,, | 872 காமசமுத்திரம் | (பிரஸிடெண்ட). |
| 98 | ,, | 1414 கடப்பை டவுன் பாங்க் | K. லக்ஷ்மணராவ். |
| 99 | கோதாவரி | 729 பெத்தாபுரம் காஸ்ல் ஸ்டுஹர்ட் ஸ்டுஹர்ட் | செல்லசுப்பராயடு. |
| 100 | குண்டூர் | 393 சின்னகுடலவரு | B அனுமந்தராவ். |
| 101 | ,, | 1140 கிரப்ப | கர்ராகோபால கிருஷ்ணய்யா |
| 102 | ,, | 861 சடிம்பல்லி | M. வெங்கட சுப்பராவ் |
| 103 | ,, | ... குண்டூர் எம்.எஸ்.ஸி.எஸ். | P. கிருஷ்ணமாச்சாரியார் |
| 104 | கிருஷ்ண | 1422 கிஷ்ன ஜில்லா பாங்க் | V. நாராணராவ் பந்துலு |
| 105 | ,, | 576 அலபாடு | (பிரஸிடெண்டு). |
| 106 | ,, | 84 வெங்கடாபுரம் | G. வெங்கடாசலபதி. |
| 107 | ,, | 743 வேமந்த | V, சீத்தாராமய்யா |
| 108 | கர்நூல் | ... தேவனகுண்டா | (செக்ரிடெரி) |
| 109 | ,, | 109 கர்நூல் அர்பன் பாங்கி | P. ராமசாமி அய்யர். |
| 110 | மதராஸ் | 1628 சிந்தாதிரிப்பேட்டை | G. ஹரிசார்வோதமராவ் |
| 111 | ,, | ... ,, | ராவ்ஸாகிப் T. லக்ஷ்மண நாய்கர் |
| 112 | ,, | 15 டி. யு. ஸி. எஸ். லிமிடெட் | ராவ்பஹதூர் G. நாராயணசாமி செட்டி. |
| 113 | ,, | ... ,, | S. சத்தியமூர்த்தி அய்யர் |
| 114 | ,, | ... ,, | K. B. ராமனுத அய்யர் |
| 115 | ,, | 1165 நல்லான்ச்சேரி | பருனம் |
| 116 | ,, | 900 மதராஸ் ஸிட்டி பாங்கி | T, ஜகோபால சரியார் |
| 117 | ,, | 1636 பரம்பூர் கொபலர்ஸ் | வீராசாமி |
| 118 | ,, | ... ராயப்பேட்டை | முனியன். |
| 119 | ,, | ... ,, | S. சிங்காரவேலு. |
| 120 | ,, | ... ,, | M. முருக பிள்ளை. |
| 121 | ,, | ... ,, (பாங்கி | K. கிருஷ்ணசாமி நாயுடு |
| 122 | மலையாளம் | 1538 கள்ளிக்கோட்டை அர்பன் | V. K. மீனன் |
| 123 | நெல்லூர் | 1559 சூலூர் பேட்டை | S. முனிசாமி செட்டி |

| வரிசை நம்பர். | ஜில்லாவின் பெயர். | சங்கத்தின் பெயரும் நம்பரும். | டெலிகேட்டின் பெயர். |
|---|---|---|---|
| 124 | நீலகரி | 673 கேயர் ஹாடா ரைஸ் ... | பெல்லா கவுண்டர் |
| 125 | ,, | 1179 நிம்தல ... | காரசசி கவுண்டர். |
| 126 | வடஆர்காடு | 1185 நட்டாம்பல்லி ... | R. C. அனுமந்த கவுண்டர் |
| 127 | ,, | 4 காவேரிபாக்கு ... | நரசிம்ம முதலியார். |
| 128 | ,, | 64 அரக்காலூர் ... | P. நாராயண அய்யர். |
| 129 | ,, | 846 ரகுநாத சமுத்திரம் ... | R. S .ரங்கசாமி அய்யங் கார். |
| 130 | ,, | 1460 மிச்சேரி அரும்பாக்கம்... | T. C. ராமனுத அய்யர். |
| 131 | ,, | 1461 கலவை புத்தூர் ... | தாண்டவராய முதலியார். |
| 132 | ,, | 1290 ஆரணிகொளத்தூர் ... | K. ராமசந்திர சாஸ்திரி. |
| 133 | ,, | 1263 கரிந்துளம்பாடி ... | பாலகிருஷ்ண ரெட்டி |
| 134 | ,, | 1462 கலவைசின்னசமுத்திரம் | R. வெங்கடசுப்பய்யர். |
| 135 | ,, | 485 போளூர் | சண்முக முதலியார். |
| 136 | ,, | 1177 பிலாசூர் ... | N. S. வெங்கடசுப்பய்யர். |
| 137 | ,, | 1830 ஆலியாளமங்களம் ... | K. நாராயண அய்யர். |
| 138 | ,, | 1464 கணியனூர் ... | C. சீத்தாராம அய்யர். |
| 139 | ,, | 847 கலவை ... | சின்னசாமி குருக்கவு. |
| 140 | ,, | ,, | துரைசாமி முதலியார். |
| 141 | ,, | ,, | சேஷாசல முதலியார். |
| 142 | ,, | ... கலவை யூனியன் ... | M. சிங்காரவேலு முதலியார். |
| 143 | ,, | 570 திருவண்ணாமலை ... | R. V. அர்தனரி அய்யர். |
| 144 | ,, | ... ,, | G. M. வெங்கோப ராவ். |
| 145 | ,, | 1385 திருவண்ணாமலை தாலுக் கோஆபரேடிவ்யூனிய | M. S. சேஷாச்சலம் ஐய்யர். |
| 146 | ,, | 1129 திரிஞ்சாபுரம் ... | கிருஷ்ண ரெட்டியார். |
| 147 | ,, | 1142 அரங்கி ... | அப்பு பிள்ளை. |
| 148 | ,, | 1567 முள்ளுவடி ... | (பிரஸிடென்ட்) |
| 149 | ,, | 456 வாலாஜ ஆலபாக்கம் ... | A. ராகவாசாரியார். |
| 150 | ,, | 1148 காவேரிபாக் யூனியன் ... | A. கோவிந்த சாரியார். |
| 151 | ,, | 913 வெங்குணம் ... | M. முருகேச முதலியார். |
| 152 | ,, | 176 வாங்கூர் ... | P. ஸ்ரீனிவாச அய்யங்கார். |
| 153 | ,, | 1175 இடையன்சேத்து ... | S. அப்பாவு. |
| 154 | ,, | 1255 விருபாக்ஷிபுரம் ... | சுப்பராய கவுண்டர். |
| 155 | ,, | 235 ஒருகூர் ... | வீராகவ தீக்ஷிதர். |
| 156 | ,, | 473 சுமைதாங்கி ... | P. மார்கபந்து அய்யர். |
| 157 | ,, | 1557 தேவிகபுரம் ... | A. ராஜகோபால அய்யர். |
| 158 | ,, | 1286 போளூர் கோ ஆ. யூனியன் | பி. சாமா அய்யர். |
| 159 | ,, | 1331 கீள்பாலூர் ... | வெங்கடாசல அய்யர். |
| 160 | ,, | 1230 கடலாடி ... | நீலகண்ட பிள்ளை. |
| 161 | ,, | 1738 கன்னிமங்கலம் ... | அருணசல அய்யர். |
| 162 | ,, | 1594 மெல்நத்தபாக்கம் ... | வெங்கட பெருமாள் முத. |
| 163 | ராமனுதபுரம் | 413 பெத்துசட்டிபேட்டை ... | (பிரஸிடெண்ட்) |
| 164 | ,, | 1053 வடமலைபுரம் ... | R. அனந்தராவ் |
| 165 | ,, | 995 வத்திராப்பு ... | T.S. நாராயண அய்யங்கார் |
| 166 | சேலம் | 115 போடிபுரம் ... | விஜயராகவ அய்யர். |
| 167 | ,, | ,, | S. வெங்கடராம அய்யர். |



| வரிசை நம்பர். | ஜில்லாவின் பெயர். | சங்கத்தின் நம்பரும் பெயரும் | டெலிகேட்டின் பெயர் |
|---|---|---|---|
| 168 | சேலம் | 601 மத்திகிரி பாங்கி ... | A. சுப்பரமணிய அய்யர். |
| 169 | ,, | 43 பாகல்பட்டி ... | V. தாசி நாயுடு. |
| 170 | ,, | 151 சேலம் டிஸ்டிரிக்ட் பாங் | K. சடகோப முதலியார். |
| 171 | ,, | ,, | P. L. ராமசாமி நாயகர். |
| 172 | ,, | 169 தொளஸம்பட்டி ... | கோட்டியா கவுண்டு. [யர் |
| 173 | ,, | 1483 தொளசம்பட்டி யூனியன் | T. C கிருஷ்ணசாமி அய் |
| 174 | ,, | 1709 கமலாபுரம் ... | K. R. ராஜகோபால அய் |
| 175 | ,, | 1504 கெ, காளிபேட்டை ... | K. சீனிவாச அய்யர். [யர். |
| 176 | ,, | 1260 ரெட்டிபேட்டை ... | எல்லப்ப கவுண்டர். |
| 177 | ,, | 1259 யு. மாரமங்கலம் ... | பரம கவுண்டர். |
| 178 | ,, | 1257 பெரியரிபேட்டை ... | கணபதி கவுண்டர். |
| 179 | ,, | 1261 கந்தசாரப்பேட்டை ... | எர்ர செட்டியார். |
| 180 | ,, | 173 இன்னப்பன்ப்பேட்டை ... | சந்திரசேகரி அய்யர். |
| 181 | ,, | 266 லலிகம் ... | L. ராமகிருஷ்ண அய்யர். |
| 182 | ,, | 116 ஜலகண்டபுரம் ... | C. வெங்கடாசல அய்யர். |
| 183 | ,, | 125 கம்பைனல்லூர் ... | T. ராஜ ராவ். |
| 684 | ,, | ... ,, | K. சீனிவாச ராவ். |
| 185 | ,, | ... ,, | C. P. சுந்தாராவ். |
| 186 | ,, | 165 செய்க்காரப்பட்டி ... | N. குப்புசாமி அய்யர். |
| 187 | ,, | ... ,, ... | (செக்ரிடெரி) |
| 188 | தென்னுர்காடு | 717 ஒலகூர் ... | (பிரசிடெண்டு) |
| 189 | ,, | 1614 ரெட்டணைவிவசாயச்சங்... | P. லக்ஷ்மண ரெட்டி. |
| 190 | ,, | ... ,, ... | (பிரசிடெண்டு) |
| 191 | தென் கன்னட | 1112 பந்தவால் ... | சர்பட் கணபதி ராவ். |
| 192 | ,, [ம் | 1082 ஆர்யாப்பு ... | பவானி சங்கர் ராவ். |
| 193 | ,, | 1113 தென்கன்னடம் பாங்க் ... | M. அனந்த ராவ். |
| 194 | ,, | 181 புத்தூர் ... | M. சிவராவ். |
| 195 | தஞ்சாவூர் | 931 வாஞ்சையூர் ... | C. சீனிவாஸ அய்யர். [கார் |
| 196 | ,, | 1023 தஞ்சாவூர்ஜில்லாபாங்க்... | T. R. சினிவாஸ அய்யங் |
| 197 | ,, | 1023 தஞ்சாவூர் டிசி. பாங்க் ... | S. P. நடேச அய்யர். |
| 198 | ,, | ... ,, ... | S. வெங்கடராம அய்யர். |
| 199 | ,, | 76 செங்காலிபுரம் ... | V. பஞ்சாபகேச அய்யர். |
| 200 | ,, | 1078 சிறுகலத்தூர் ... | S. P. நடேச அய்யர்; |
| 201 | ,, | 7 நீடாமங்கலம் ... | சேதுராம அய்யர், |
| 202 | திருநெல்வேலி | 1471 அம்பாசமுத்திரம் ... | K.R. சங்கரநாராயணஐயர் |
| 203 | ,, | 1010 பாளம்கோட்டை, சி,எஸ்.<br>1079 பாலம்கோட்டா ஸ்டோர் | N. கிருஷ்ணசாமி ராவ் |
| 204 | திருசினுப்பள் | 1050 திருச்சினுபள்ளி பாங்கி | P. கிருஷ்ணசாமி பிள்ளை |
| 205 | ,, [ளி | 1459 அரியூர் | A.S. வைத்தியநாத அய்யர் |
| 206 | ,, | 194 மனவாஸி ... | M. ரங்கசாமி அய்யங்கார் |
| 207 | ,, | 273 வாளாடி ... | V. N. கந்தசாமி அய்யா, |
| 208 | ,, | 683 தாப்பாய ... | பொன்னுசாமி முதலியார் |
| 209 | ,, | 20 வேலூர் ... | R. முத்துசாமி செட்டி. |
| 210 | ,, | 1612 நாமக்கல் யூனியன் ... | C. M. ரங்காராவ் |
| 211 | ,, [ம் | 1323 திருப்பளாத்துரை ... | ரகுநாதசாமி அய்யர். |
| 212 | விசாகபட்டண | 1358 விஜயநகரம் பாங்கி ... | M. வெங்கடரங்கய்யா. |

# விளம்பர விகிதங்கள்.

## கூட்டுறவுச் சங்கங்களுக்கு.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| முழுப்பக்கம் | ... ... | ரூ. | 15 | 0 | 0 | வருஷம் ஒன்றுக்குப் பிரதி ஒன்றுக்கு |
| அரைப்பக்கம் | ... ... | ,, | 10 | 0 | 0 | ,, ,, |
| காலபக்கம் | .... ... | ,, | 7 | 0 | 0 | ,, ,, |

## மற்றவர்களுக்கு

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| முழுப்பக்கம் | ... ... | ரூ. | 20 | 0 | 0 | வருஷம் ஒன்றுக்குப் பிரதி ஒன்றுக்கு |
| அரைப்பக்கம் | ... ... | ,, | 12 | 0 | 0 | ,, ,, |
| கால்பக்கம் | ... ... | ,, | 8 | 0 | 0 | ,, ,, |

---

# சந்தாதார்களுக்கு விண்ணப்பம்.

சந்தாதார்கள் தயைகூர்ந்து இச்சம்புடன் எட்டுகுள்ள சந்தாவை பாக்கியுடன் கொடுத்துதவும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். தந்தா செலுத்தப்படாமலிருந்தால் அடுத்த பிரதியின் புஸ்தகமானது வி. பி. மூலமாயனுப்பப்படும்.

இப்படிக்கு,

சூரியதரிசி,

மதராஸ் பிரொவின்ஷியல் கோவாப்ரேடிவ்

யூனியன் ஆபீஸ்,

திருவல்லிக்கேணி.

# மதராஸ் புல்லெடின் ஆப் கோவாபரேஷன்

என்னும்

## சென்னைக் கூட்டுத்தொழில் வர்த்தமானி

சம்புடம் VIII] 1917௵ மார்ச்சு௴ [இலக்கம் 3

600 008.

## குறிப்புகள்.

நமது வர்த்தமானியை மாதாந்திரப் பத்திரிகையாக மாற்றிக்கொள்
ளும் ஆலோஜனையை கவர்ன்மெண்டார் அங்கீகரித்ததைக் கேட்க நம்
நிருபர்கள் சந்தோஷப்படுவார்கள். இங்கிலீஷ், தமிழ், தெலுங்கு, ஆகிய
இம்மூன்று பாஷைகளில் பிரசுரமாகும் இவ்வர்த்தமானியால் ஐக்கிய
முயற்சித்தொழில் அடையும் அபிவிருத்தியானது யாவரும் நன்கறியக்
கூடும். கவர்ன்மெண்டார் சம்பந்தமில்லாத பொதுஜனப் பத்திரிகை
யாயிருப்பதால், இதை இந்த ராஜதானி ஐக்கிய முயற்சிக்காரர்கள் மாதாந்
திரப் பத்திரிகையானவுடன் வழக்கம்போல் போஷிப்பார்களென நம்பப்
படுகிறது.

### சென்னையில் ஏழைச்சங்கங்களின் மேற்பார்வை.

சென்னை நகரத்தில் ஏழைவகுப்பினர்களுக்கு சுமார் 16 சங்கங்கள்
யேற்பட்டிருக்கின்றன. அச்சங்கங்களின் பிரதிநிதிகள் மார்ச்சு மாதத்தில்
ரெஜிஸ்ட்ராராபீஸில் கூடி தங்கள் சங்கங்களின் மேற்பார்வையை மத
ராஸ் .பிரொவின்ஷியல் கோவாப்ரேடிவ் யூனியனிடம் ஒப்புவிப்பதாக
முடிவு செய்திருக்கிறார்கள். சூபர்விஷன் பண்டுக்காக ஒவ்வொரு சங்க
மும்தான் வாங்கும்கடன் துகையில் 100-க்கு அணா 8 வீதமும், பண முத
வும் ஸென்ட்ரல் பாங்கியானது சுமார் ஏறக்குறைய அவ்வளவு துகையும்
கொடுப்பதாக யேற்பட்டிருக்கின்றன. அவ்விதம் உண்டாகும் துகை
யானது பேற்பார்வை செலவுகளுக்குப் போதாமலிருந்தபோதிலும், ஐக்
கியமுயற்சியின் அபிவிருத்தியை தன் முக்கிய நோக்கமாக வுடைய யூனி
யன் இவ்வேலையை சந்தோஷத்துடன் எடுத்துக்கொண்டிருக்கின்றது.

### மதராஸ் ஸோஷல் ஸர்விஸ் லீக்

தாழ்ந்த வகுப்பினர்களாகிய பஞ்சமர்கள், தோட்டிகள், ஒட்டர்கள்
முதலியவர்களை நல்ல ஸ்திதிக்குக் கொண்டுவர சென்னைநகரில் ஸோஷல்

ஸர்விஸ்லீக் என்ற சபை கொஞ்சகாலமாய் நடந்துவருகின்றது. அச்சபையின் நோக்கங்களுள் ஐக்கிய முயற்சியால் யேழைகளை அபிவிருத்தியடையச்செய்வது ஒன்றாகும் மேற்கூறிய வகுப்பினர்கள் பெரும்பான்மையோர் ஸாவ்காரர்களுடைய வலையிற் சிக்கி ரூபாயொன்றுக்கு மாதம் தோறும் வட்டி அணா 1-லிருந்து 2-வரையிற் கொடுத்து மிகவும் கஷ்டப்பட்டு வருகிறார்கள். இம்மாதிரி வட்டி கொடுத்ததுபோக பாக்கியேதாவதிருந்தால், அதையும் குடியிற் செலவு செய்கிறார்கள். இவர்கள் குடியிருக்கும் சேரிகளுக்கருகில் ஸாவ்காரர்களின் கடைகளையும், கள்ளுக்கடைகளையும் நிரம்ப யேற்பட்டிருப்பதைப் பார்க்கலாம். இந்த லீக் மெம்பர்களால் சுமார் 6 சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டு நன்றாய் வேலை செய்து வருகின்றன. இவைகளுக்கு வேண்டிய டிபாஸிட்டுகளை வாங்கிக்கொடுப்பதுமன்றி, இவைகளை மேற்பார்வை செய்தும்வருகிறார்கள். இம்மாதிரி இந்நகரில் அநேக சங்கங்கள் உண்டாகுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

## சில மைசூர் சங்கங்கள்.

ஐக்கிய சங்க கௌரவ ஸ்தாபனராகிய ம-ா-ா-ஸ்ரீ O. M. வெங்கிட்டனாதய்யங்கார் அவர்கள் சென்ற மைசூர் கோவாப்ரேடிவ் கான்பரென்ஸுக்குப் போனபொழுது அவ்விடத்தில் பார்வையிடப்பட்ட சங்கங்களின் வரலாறு:—

1. **மைசூர் கோவாப்ரேடிவ் ஸ்டோர்ஸ்.**—இதில் 900 மெம்பர்களிருக்கிறார்கள்; தொழில் தனம் சுமார் ரூ. 34,350, க்ஷேமநிதி ரூ. 4,162; டிபாஸிட்டுகளின் துகை ரூ. 12,000, மொத்த லேவாதேவி சுமார் ரூ. 6 லக்ஷம். மெம்பர்களுக்கு சாமான்கள் விற்ற பிறகு தான் மெம்பர்களல்லாதவர்களுக்குக் கொடுக்கப்படும்.

2. **மைசூர் ஸிடி கோவாப் ரேடிவ் பாங்கி.**—இதிலும் 900 மெம்பர்களிருக்கிறார்கள்; தொழில் தனம் ரூ. 12,500; பங்கு ஒன்றின் விலை ரூ. 10, ஆனால் இதை தவணையொன்றுக்கு அணா 8 வீதம் 20 தவணைகளிற் செலுத்தலாம். டிபாஸிட்டுகளின் துகை சுமார் ரூ. 12,500; மெம்பர்களிடமிருந்து பாங்கிக்குக் கொடுபடவேண்டிய கடன் நிலுவை சுமார் ரூ. 75,000; பாஸ்புக் யேற்பாடு புதிதாயுண்டாக்கப்பட்டிருக்கிறது.

3. **மைசூர் ஜில்லா ஸெண்ட்ரல் பாங்கி.**—இப்பொழுது 60 மெம்பர்களிருக்கிறார்கள்; அதில் 13 சங்கங்கள்; செலுத்தப்பட்ட பங்குத்தொகை ரூ. 18,559; மெம்பர்களிடமிருந்தும் மற்றவர்களிடமிருந்தும் பெறப்பட்ட டிபாஸிட்டுகளின் துகை ரூ. 64,510. இந்த பாங்கியானது 10 சங்கங்களுக்கு ரூ. 201,000 வரையில் கடன் கொடுத்திருக்கின்றது. தவணை மீறின கடன் முதலின்மேல் அபராத வட்டி விதிக்கிறார்களே



யொழிய, தவணை மீறின வட்டியின் மேலும் விதிக்கிறதில்லை. நகைகளின் மேலும், மற்ற சொத்துக்களின் மேலும் கடன் கொடுக்கிறார்கள்.

4. **மால்கோட்டை கோவாப்ரேடிவ் அக்ரிகல்சரல் ஸொஸைட்டி.**—அதில் 150 மெம்பர்களிருக்கிறார்கள்; செலுத்தப்பட்ட பங்கு முதல் ரூ. 6,000; அதின் மொத்த லேவாதேவி சுமார் ரூ. 8,000; அதில் ஸ்டோர் வகுப்பு ஒன்றுயிருந்து வருகிறது. பிரசித்தி பெற்ற ஸ்தல கோவில் ஒன்றுக்கு சாமான்கள் கொடுத்து வருகின்றது. ஸ்தாவர சொத்துக்களின்மேல் மெம்பர்களுக்கு விசேஷமாய் கடன் கொடுக்கப்படுகின்றது.

5. **மால்கோட்டை நெசவுக்காரர்களின் சங்கம்.**—பொறுப்பு வரையறுத்த முறையில் இச்சங்க மேற்பட்டிருக்கிறது. 167 மெம்பர்களிருக்கிறார்கள்; பங்கொன்றின் விலை ரூ. 25, இதுவரையில் செலுத்தப்பட்ட பங்கு முதலின் துகை ரூ. 9,166; க்ஷேமநிதியின் துகை ரூ. 3,533.

6. **மல்லேஸ்வரம் கோவாப்ரேடிவ் ஸ்டோர்.**—மெம்பர்களின் சங்கியை 279; பங்கு முதலின் துகை ரூ. 7,050; ஸ்திர டிபாஸிட்டுகளின் துகை ரூ. 3,000; மாதாந்திர சராசரிவிற்று முதல் ரூ. 5,000 இச்சங்கமானது மெம்பர்களுக்கு கடன் கொடுத்தும் வருகின்றது. குறுகிய காலக்கடன் 12-வீத வட்டிக்கும் நீண்டகாலகக்கடன் 9-வீத வட்டிக்கும் கொடுபட்டு வருகின்றன.

7. **பெங்களூர் ஸெண்டரல் கோவாப்ரேடிவ் பாங்கி.**—243 தனி நபர்களும், 104 சங்கங்களும் மெம்பர்களாயிருக்கிறார்கள்; பங்கு முதலின் துகை ரூ. 90,000, டிபாஸிட்டுகளின் துகை சுமார் ரூ. 4 லக்ஷம், பாங்கிக்குச் சேரவேண்டிய நிலுவைக்கடன்களின் துகை ரூ. 4,84,074.

8. **மைசூர் பிரோவின்ஷியல் கோவாப்ரேடிவ் பாங்கி.**—சென்னையில் நடந்ததுபோல், இம்மாகாணபாங்கி யேற்படுவதில் அநேக ஆக்ஷேபணைகள் உண்டாயின. பெங்களூர் ஸெண்ட்ரல் கோவாப்ரேடிவ் பாங்கியின் டைரெக்டர்கள், ரெஜிஸ்ட்ராரின் வேண்டுகோளின்படி தங்கள் பாங்கியை மாகாண பாங்கியாக மாற்றிக்கொள்ள மறுத்துவிட்டார்களென தெரிய வருகிறது. அதின்மேல் இந்த பாங்கியானது ஸ்தாபிக்கப்பட்டது. பிறகு பெங்களூர் ஸெண்ட்ரல் பாங்கியானது தான் செய்த தவறை நீக்கிக்கொள்ள, சங்கங்கள் தன்னிடம் மெம்பராகும்படி தன்பைலாக்களை மாற்றிக்கொண்டது. கடைசியில் மைசூர் கவர்ன்மெண்டார் இவ்விஷயங்களில் தலையிட்டு, அவ்விரண்டு பாங்கிகளும் மாகாண பாங்கிகளாக வேலைசெய்து வருகின்றன.

### மதுரை-ராமனாதபுரம் கான்பரென்ஸு

சென்ற மதுரை ராமனாதபுரம் ஜில்லா கான்பரென்ஸானது யாவரும் கொண்டாடும்படி இவ்விராஜதானியில் முதன்மை ஐக்கிய முயற்சிக்காரர்களுள் ஒருவரான ம-ா-ா-ஸ்ரீ C. N. கிருஷ்ணஸாமி அய்யர். M. A., L. T., அவர்களின் அக்கிராசனத்தின் கீழ் நடைபெற்றது. அக்கிராசனாதிபதியின் பிரசங்கம் ஐக்கிய முயற்சி இவ்விந்தியாவில் யேற்பட்டதுமுதல் தற்காலம் வரையிலுமுள்ள ஐக்கிய முறை விஷயங்களைப் பற்றி மிகவும் தெளிவான நடையில் பரவியுள்ளதால், அதை நம் நேயர்கள் நன்கறியவேண்டி இப்பிரதி அநுபந்தத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களையே அக்கிராசனத்திற்குத் தேடும் வழக்கத்தை விட்டு, கவர்ன்மெண்டு உத்தியோகத்திலில்லாத ஐக்கிய முயற்சிக்காரர் ஒருவரைத் தெரிந்தெடுத்தது அக்கான்பரென்ஸின் வரவேற்புக் கம்மிட்டியாரின் நுண்ணிய அறிவைக்காட்டும். இம்மாதிரியே இனிமேற் கூடும் மற்ற ஜில்லா கான்பரென்ஸுகளிலும் அக்கிராசனாதிபதிகளைத் தெரிந்தெடுப்பதில் முன்னாலோசனை செய்வார்களென நம்பப்படுகிறது.

### மதராஸ் ஸெண்ட்ரல் அர்பன் பாங்கி.

கோவாப்ரேடிவ் சங்கங்கள் பங்குகளெடுத்துக்கொண்டு மெம்பராகும் வண்ணம் மதராஸ் ஸெண்ட்ரல் பாங்கியானது தன்னுடைய பைலாக்களை மாற்றிக்கொண்டிருக்கின்றது. அம்மாறுதல்களை கவர்ன்மெண்டார் அங்கீகரித்திருக்கிறார்கள். சங்கங்கள் வாங்கும் பங்குகளுக்கு கிரயம் அநேக தவணைகளிற் செலுத்தலாம். ஆனால் ஒரு பங்காவது முழுவதும் செலுத்தப்பட்டாலொழிய வோட்டு கொடுக்கமுடியாது. எவ்வளவு பங்குகளெடுக்கப்பட்டனவோ அவ்வளவு வோட்டுக்கள் உண்டு. பிரபரென்ஸ் பங்குக்காரர்களுக்கு 9 வீத டிவிடெண்டு கட்டாயமாய்க்கொடுக்க வேண்டியிருப்பதால், பங்கெடுக்கும் சங்கங்களுக்கு இம்பீரியல் கம்மிட்டியார் சொல்லும் நன்மைகளில்லாமலும், ஆனால் சிரமங்களும் யேற்படுவதால், சங்கங்கள் சேர்ந்துகொள்ள நிதானிக்கின்றன.

---

# கோவாபரேஷன் முறையில் வீடு கட்டுதல்.*

## கட்டிட சங்கங்களின் அவசியம்.

அதிக பணக்காரர்களாயில்லாத நடுத்தர வகுப்பு ஜனங்கள் பெரிய பட்டணங்களில் குடியிருக்க ஸௌகர்யமான வீடுகளில்லாமல் கஷ்டப்படவேண்டியிருக்கிறது. அதிக வாடகை கொடுத்து விசாலமான

* இது 'ஜனாபிமானி'யிலிருந்து யெடுக்கப்பட்டது.



வீடுகளில் வசிப்பதற்கு அவர்களுக்கு சக்தி யிருப்பதில்லை. ஜன நெருக்கடியும், ஸுகாதாரக் குறைவுமுள்ள தெருக்களில் ஸௌகர்யக் குறைவான வீடுகளில் குடியிருக்கவேண்டி யிருக்கிறது. அதோடு கொடுக்க வேண்டிய வாடகையும் ரொம்ப அதிகமாயிருக்கிறது. இவர்களுக்கே இப்படியானால் ஏழைகள் படும் பாட்டைப்பற்றி சொல்லவேண்டியதில்லை.

இந்த அஸௌகர்யங்களை உத்தேசித்து சில ஜனாபிமானிகள் ஏழைகளுக்கும் மத்யதர வகுப்பார்களுக்கும் தக்க வீடுகள் கட்டிக்கொடுக்க முயற்சி யெடுத்து வருகிறார்கள். இதற்காக அவர்கள் கோவாபரேடிவ் கட்டிடஸங்கங்கள் ஸ்தாபித்து வருகிறார்கள். ஜனநெருக்கமில்லாததும், ஸுகாதார வஸதிகளுள்ளதுமான இடத்தில் அதிக வாடகையில்லாமல் வீடு கட்டிக் கொடுப்பதே இந்த ஸங்கங்களுடைய நோக்கமாகும்.

## கட்டிட சங்கங்களில் சேரக்கூடியவர்கள்.

ஆனால் இந்த முயற்சிகள் பலிதமாக வேண்டுமென்றால் ஜனங்களுக்குள் இதைப்பற்றி ஊக்கமேற்படவேண்டும். அதிக வாடகையாலும் ஜன நெருக்கத்தாலும் கஷ்டப்படுகிறவர்களும், கல்வி யபிவ்ருத்தியால் நல்ல வீடுகளில் குடியிருக்க வேண்டுமென்ற விருப்பம் ஏற்பட்டு, இல்லாக் குறையால் அதற்கேற்றபடி தகுந்த வீடுகளில் குடியிருக்க முடியாமல் தவிப்பவர்களுந்தான் அநேகமாய் கோவாப்ரேடிவ் கட்டிட சங்கங்களில் சேர்ந்து ஊக்கத்துடன் உழைக்கக்கூடும். ஜனஸமூக வாழ்க்கையில் குடியிருப்பு விஷயமாய் இந்த சீர்திருத்தம் செய்ய விரும்பும் எவரும் ஒரு கட்டிட சங்கம் ஸ்தாபிக்க வேண்டுமானால், முதல் முதலில் நல்ல வீடுகள் வேண்டுமென்று எண்ணுகிறவர்களைத் தெரிந்து, அவர்களைச் சேர்த்துக்கொண்டு கட்டிட சங்கம் ஆரம்பிக்கவேண்டும். அப்படி சேருபவர்கள் காலத்தையும் பொருளையும் கவனிக்காமல், நல்ல வீடுகள் அமைத்துக்கொள்ளும் விஷயத்தில் ஊக்கத்துடன் வேலை செய்யக் கூடியவர்களாயிருக்கவேண்டும்.

## இந்தியாவுக்கேற்ற கட்டிட சங்கம்.

கோவாபரேடிவ் கட்டிட சங்கங்களில் பல மாதிரிகள் இருக்கின்றன. பின் விவரிக்கப்போகும் முறை இந்தியாவுக்கு ரொம்ப ஏற்றதென்று பம்பாய் கோவாபரேடிவ் சங்கங்களின் ரெஜிஸ்ட்ராராகிய மிஸ்டர் யூபாங்க் என்பவர் தெரிவிக்கிறார். இதில் முக்யக் கொள்கை யென்னவென்றால், வாடகைக் கிருப்பவர்களே வீடுகளை தங்களுக்குள் பொதுவில் சொந்தமாக வைத்துக் கொள்ளுவார்கள், இந்தமுறை இங்க்லண்டில் திருப்திகரமாக அநுஷ்டிக்கப்பட்டு வருகிறது. ஸொந்தத்தில் வீடுவாங்க சக்தியில்லாத ஜனங்களுக்கு இந்த கோவாபரேஷன் ஏற்பாடு ரொம்ப ச்லாக்யமாகும்.

இந்த மாதிரி சங்கத்தில் சேரும் மெம்பர்கள், தங்களுக்கு குடியிருக்கவேண்டிய ஒரு வீடு அல்லது பல வீடுகளை வாங்குவதற்காகும் தொகையில் ஒரு பாகத்தை பங்குத் தொகையாகச் செலுத்தவேண்டும். வீட்டின் க்ரயத்தில் இதுபோக பாக்கிப் பணத்துக்கு ஸங்கத்தார் ஸாதாரணக் கடன் வாங்கமேண்டும். அல்லது கட்டிடங்களை ஈடுவைத்துக் கடன் வாங்கவேண்டும். ஸங்கத்தார் கட்டும் வீடுகள் ஸங்கத்து மெம்பர்களுக்குப் பொதுவில் ஸொந்தமாக இருக்குமே யொழிய, ஒவ்வொரு மெம்பரும் குடியிருக்கும் வீடு அந்த மெம்பருக்கு ஸொந்தமாகமாட்டாது. எல்லாருக்கும் பொதுவில் ஸொந்தமா யிருப்பதால் யாவரும் வீட்டை நல்ல ஸ்திதியில் வைத்துக்கொள்ள முயலுவார்கள். ஸாதாரண வீடுகளில் வீட்டுக்குடையவர் ஸொந்த லாபத்தை உத்தேசித்து அதிக வாடகை ஏற்படுத்துவதுபோலில்லாமல் மெம்பர்களுக்குக் குறைந்த வாடகையையே ஏற்படுத்திக் கொள்வார்கள். இதை அடிக்கடி உயர்த்தவும் வேண்டியிராது. மெம்பர்கள் எப்போதும் வீட்டில் குடியிருக்க வேண்டுமென்பதுமில்லை. எந்த மெம்பராவது வெளியில் போகவேண்டுமென்றால், தமது பங்குகளை தாமிருந்த வீட்டுக்கு வருபவருக்கு விற்றோ, அல்லது சங்கத்துக்கே விற்றோ, அல்லது வேறு மெம்பர்களுக்கு விற்றோ பணம் பெறலாம்.

## எங்கே நிலம் வாங்குவது ?

இந்தமாதிரி சங்கங்கள் வீடுகட்ட எவ்விடத்தில் நிலம் தெரிந்தெடுக்க வேண்டுமென்பதைச் சொல்லுகிறோம். ஸாதாரணமாக இந்த கோவாபரேஷன் முறையில் வீடு கட்டுவதற்கு பட்டணங்களை யடுத்தாற்போலுள்ள க்ராமங்களில் நிலம் வாங்குவதுதான் நல்லது. அப்படிப்பட்ட இடங்களிலும் திறந்த வெளிகள் உள்ளதாகப் பார்த்து வாங்க வேண்டும். மிஸ்டர் யூபாங்க் இது விஷயமாய்ச் செய்த ஒரு ப்ரஸங்கத்தில், நிலங்களை முதலில் விலை கொடுத்து வாங்குவதால் அதிக பணச் செலவு ஏற்படுமாகையால், பெரிய பட்டணங்களின் அபிவ்ருத்திக்காக ஏற்பட்டிருக்கும் இம்ப்ருவ் மெண்ட் ட்ரஸ்ட் என்னும் அபிவ்ருத்தி ஸபைகளிட மிருந்தாவது, நகர நிர்மாணக் கமிட்டிகளிட மிருந்தாவது நிலங்களை 99-வர்ஷத்துக்கு வாடகையில் வாங்கி வர்ஷந்தோறும் வாடகை செலுத்தி வருவது தான் நல்லது என்று சொல்லுகிறார்.

நிலம் தெரிந்தெடுப்பதில் இன்னும் சில விஷயங்களை கவனிக்க வேண்டும். முதலாவது, அந்த ஸ்தலங்களிலிருந்து மெம்பர்கள் உத்யோகம் பார்க்கும் பட்டணங்களுக்குப் போகத்தக்க வஸதிகள் இருக்கின்றனவா என்று பார்க்கவேண்டும். அதாவது, ரெயில்வண்டி, ட்ராம் முதலியவைகளுக்கு பக்கமா அவைகளுக்குக் கொடுக்கவேண்டிய சார்ஜுகள் குறைவா யிருக்கின்றனவா என்று பார்க்கவேண்டும். மெம்பர்கள்



அதிகவாடகைகொடுக்க இஷ்டப்படாமல் வெளி யூர்களுக்கு வரும்போது, அதனால் ஏற்படும் வாடகை லாபத்துக்குமேல் ரெயில் வண்டிச் சார்ஜு ஏற்படுமானால் அவ்விடங்களில் குடியிருப்பதால் அவர்களுக்கு பண விஷயத்தில் லாபமொன்றுமில்லை.

இரண்டாவது, வீடு கட்டும் ஸ்தலத்துக்குப் பக்கத்தில் கடைகள் இருக்கின்றனவா என்று பார்க்க வேண்டும்.

மூன்றாவது, மெம்பர்களின் குழந்தைகள் வாசிப்பதற்குப் பக்கத்தில் பள்ளிக்கூடங்கள் இருக்கவேண்டும்.

நான்காவது, வீடுகட்டும் இடமானது ஸுகாதாரமுள்ளதாய் திறந்த வெளியாக இருப்பதோடு, வைத்யசாலை, உல்லாஸத் தோட்டம், புஸ்தக சாலைகள் ஆகிய இவைகளும் ஸமீபத்திலிருக்கின்றனவா என்பதைக் கூடியமட்டும் கவனிக்க வேண்டும்.

ரொம்ப விஸ்தீரணமுள்ளதாக நிலங்களைவாங்கி வீடுகள் கட்டினால், பிற்பாடு முனிஸிபாலிட்டியாரை அவ்விடத்துக்கு புதுரோடுகள் போடும்படிக்கும், விளக்குகள் போடும்படிக்கும் கேட்டுக்கொள்ளலாம். மேற்சொன்ன பல விஷயங்களில் ரொம்ப முக்யமாய் கவனிக்க வேண்டியது நிலத்தின் க்ரயம் அல்லது வாடகையே.

## பணத்தைச் சேகரிக்கும் வழி.

நிலம் வாங்கவும், வீடுகள் கட்டவும், காம்பவுண்ட் சுவர்கள், கேட்டுகள், தோட்டங்கள், வழிகள் இவைகள் போடவும், ஸங்கத்துக்கு ரொம்ப பணம் வேண்டியிருக்கும். ஸங்கத்தின் மெம்பர்கள் வெகுவாய்ப் பணக்காரர்களாயிருக்க மாட்டார்களாகையால், இவைகளுக்கு மூலதனம் சேர்ப்பது கஷ்டமாயிருக்கும். பணம் சேகரிப்பதற்குப் பின் வழிகளை கவனிக்க வேண்டும்.

(1) மெம்பர்கள் செலுத்தும் ப்ரவேசக் கட்டணம்.

(2) பங்கு மூலதனத்தில் செலுத்தப்பட்ட பாகம். ஸாதாரணமாய் மெம்பர்கள் தங்கள் பங்குப் பணத்தை ஒரு வர்ஷத்திற்குள் தவணை வாரியாகச் செலுத்துவது ஸௌகர்யமாக இருக்கும். ஸங்கத்தின் மெம்பர்கள் ஆறுமாஸம் பங்குப் பணம் செலுத்தின பிறகு கட்டிடங்களைக்கட்ட ஆரம்பிக்கவேண்டும். ஒரே தடவையில் பங்குப்பணத்தைச் செலுத்தும்படி மெம்பர்களைத் தூண்டுவதற்காக, அப்படிச் செலுத்துகிறவர்கள் கட்டப்படும் வீடுகளில் எந்த வீடு, அல்லது ஒரே வீடானால் அதில் எந்த பாகம், அவர்களுக்கு வேண்டுமோ, அதை அவர்கள் தெரிந்தெடுத்துக் கொள்ளும்படி விடலாம்.

(3) ஸங்கத்தின் ஸொத்தின் பேரில் கடன்கள் வாங்குவது. இந்தக் கடன்களை மெம்பர்களல்லாதவர்களிடமிருந்தும் வாங்கலாம்.

(4) 5 வர்ஷத்துக்குக்குறையாத ஒரு தவணையில் திருப்பிக்கொடுப்பதாகச் சொல்லி, பொது ஜனங்களிடமிருந்தும், சங்கத்தின் அபிமானிகளிடமிருந்தும், வேறு கோவாபரேடிவ் சங்கங்களிடமிருந்தும் டெபாஸிட்டுகளும் கடன்களும் பெருவது. ஸாதாரணமாக இந்தக் கட்டிட சங்கங்கள் ஸ்வல்பகாலத்தவணையில் கடனும் டெபாஸிட்டும் வாங்கினால் அவைகளை திருப்பிச் செலுத்துவது கஷ்டமாயிருக்குமாதலால் மேற் சொன்னபடி, குறைந்தது 5-வர்ஷத்துக்குத் தவணை ஏற்படுத்திக் கொள்வது அவச்யமாகும்.

(5) ஜனங்களுக்கு வீடுகட்டிக் கொடுப்பதில் ஊக்கங்காட்டும் முனிஸிபாலிடிகளிட மிருந்தும், வேறு பொது ஸ்தாபனங்களிலிருந்தும் ஸ்வல்ப வட்டியில் நீண்ட காலத் தவணையில் கடன் வாங்குவது.

இப்படிக் கடன்கள் வாங்குவதற்கு சங்கங்கள் காட்டக் கூடிய ஜாமீன் பங்கு மூலதனந்தான். இந்த பங்கு மூலதனமானது ஆரம்பத்திலேயே, மொத்தம் வேண்டியிருக்கும் மூலதனத்தில் அரைக்கால் பாகமாவது இருக்க வேண்டும்.

### வர்ஷாந்தரச் செலவு.

இவ்விதம் ஆரம்பத்தில் வேண்டியிருக்கும் பணத்தைத் தவிர, வர்ஷந்தோறும் ஆகும் செலவு இவ்வளவு என்பதை மதிப்பிட்டு, அந்தச் செலவுகளுக்கும் பணம் ஸம்பாதிக்கவேண்டும். வர்ஷவாரியில் ஆகும் செலவுகளாவன. (1) நிலம் வாடகைக்கு எடுத்துக் கொண்டிருந்தால், அதற்கு வாடகை- (2) முனிஸிபல் வரிகள், தண்ணீர் வரி, (3) வீடுகளைப் பழுது பார்ப்பதற்காகும் செலவு. (4) ரிஸர்வுபண்ட் அல்லது கடனை ஒழிப்பதற்கான பண்ட், அதாவது, வர்ஷந்தோறும் ஒரு தொகை கடனடைப்பதற்காகவென்று எடுத்து வைப்பது, (5) தீவிபத்துகளுக்காக வீடுகளை இன்ஷூர் செய்யச்செலவு. (6) வீடுகளின் காம்பவுண்டு, வழிகள், தோட்டங்கள் ஆகிய இவைகளுக்கு விளக்குப்போடுவது. சங்கத்திற்கு வேண்டிய கடுதாசி பேனா முதலியவைகளை வாங்குவது. (7) சங்கம் வாங்கிய கடன்கள், டெபாஸிட்டுகள் முதலியவைகளுக்கு வட்டி. (8) மெம்பர்கள் எடுத்துக்கொண்டிருக்கும் பங்குகளுக்கு டிவிடெண்டுகள். (9) சில்லரைச் செலவுகளுக்கு வேண்டிய பணம். இந்த வர்ஷாவாரிச் செலவுகளுக்காகும் தொகைமுழுவதையும் மெம்பர்களிடமிருந்து குடியிருப்பு வாடகையாக வஸூல் செய்யவேண்டும். இந்த வர்ஷாவாரிச் செலவை மதிப்புப் போடும்போது, மதிப்பைக் குறைவாய் போட்டிருந்தால் அதற்கு ஈடுசெய்யும்படிக்கும், வீடுகள், அல்லது சங்கம் கட்டினது ஒரே வீடானால் அறைகள் காலியாய்ப்போனால், அதனால் ஏற்படும் வாடகை நஷ்டத்துக்கு ஈடுசெய்யும்படிக்கும் மெம்பர்களின் மாஸ வீட்டு வாடகையைத் தக்கபடி ஏற்படுத்த வேண்டும்.

# ஐக்கிய முயற்சியின் அபிவிருத்தி.

---

## விஜயமங்கலம் யூனியன் கான்பரென்ஸ

1917-ம் வருஷம் மார்ச்சுமீ 25வ விஜயமங்கலத்தில் கூடின, விஜயமங்கலம் யூனியன் கான்பரென்சில்ஷ யூனியன் பிரசிடென்ட் ம-ா-ா-ஸ்ரீ, K.M. சின்னரங்கய கவுண்டரால் வரவேற்பு பிரசங்கம் பின்வருமாறு:—

கனவான்களே:—

எங்களுடைய வேண்டுகோளுக்கிணங்கி நீங்களெல்லோரும் இந்தக் கான்பரென்சுக்கு விஜயம் செய்ததற்கு யூனியன் பெயரால் உங்களுக்கு நல்வரவுகூறி சில வார்த்தைசொல்ல அனுமதி கேட்டுக்கொள்ளுகிறேன்.

இப்போது நாம் கூடியிருக்கும் இந்தக் கான்பரென்சானது நமது யூனியன் முதல் கான்பரென்சாகும் இந்த சபையில் வீற்றிருப்பவரில் சிலர் மாகாண கோவாபரேடிவ் யூனியன் கான்பரென்சுக்கும் ஜில்லா கோவாபரேடிவ் கான்பரென்சுக்கும் போய் அங்கு நடந்த விசேஷங்களை கவனித்து அதனால் உண்டாகும் பிரயோஜனத்தை அடைந்திருப்பார்கள்.

ஆனால் அந்தக் கான்பரென்சுகளுக்கு நாம் எல்லோரும் போய் வருகிறது முடியாத காரியம். பொதுஜன நன்மைக்காக பிரதி பிரயோஜனமில்லாமல் பாடுபடும் நாம் நமது சங்கவிஷயத்தில் விசேஷ விருத்தி விஷயத்தில் ஆரம்பிப்பதற்கும் நமது யூனியனில் அணைக்கப்பட்ட ஒவ்வொரு சங்கங்களின் நிலைமைகளையறிந்து விருத்திக்கு வருவதற்குமாக இந்தக் கான்பரன்சு ஆரம்பம் செய்யப்பட்டிருக்கிறது. இனிமேல், பிரதி வருஷமும் இப்படியே கான்பரென்சு நடத்த உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

ஐக்கியசங்க ஏற்பாடானது 1907-ம் வருஷம்நமது ஜில்லாவில் 2 கிராமங்களில் ஸ்தாபிக்கப்பட்டு வேலை செய்யத் தொடங்கிற்று. காலஞ்சென்ற எனது தமையனார் ம-ா-ா-ஸ்ரீ, K. N. ரங்கய்ய கவுண்டர் அவர்கள் அநேக பொது முயற்சிகளில் உழைத்து வந்தது உங்களெல்லோருக்கும் தெரிந்த விஷயம். அவர் உழைத்த அனுபவத்தின் பலனாக இந்த ஐக்கிய முயற்சியால் தான் கிராமவாசிகளாகிய நாம் முன்னுக்குவரலாமென்ற முடிவுக்குவந்து, 1909-ம்வருஷத்தில் நமது ஜில்லாவில் ஆரம்பிக்கப்பட்ட சங்கங்களை பார்த்துவரலாமென்று நாங்களிருவரும் அந்த சங்கங்களுக்குப்போய் அதின் பஞ்சாயத்தாரில் சிலரோடு பேசியதில் ஐக்கியமுறைப்

படி நாணயமாய்ச் செலுத்தாதவர்களே எங்களுக்கு கிடைத்தது. இதனால் யாதொரு பிரயோஜனமும் இல்லையென்றும், கடன்வாங்கினவர் காலா காலத்தில் தொகை செலுத்துவதில்லையென்றும், தன்து கடனை பாக்கி யென்றும் தெரிவித்தார். அப்போது நாங்கள் இவருக்கு நாணயப்படி செலுத்த முடியாததால் இப்படி சொல்லுகிறாரென்று தைரியமடைந்து அதன்கணக்கு வகையறாவெல்லாம் பார்த்துவிட்டு கம்புளியம்பட்டியில் சங்கம் ஸ்தாபிக்க முயன்றோம்.

நாங்கள் முதலில் பார்த்த சங்கத்தின் பஞ்சாயத்து மெம்பர்களை பாக்கி வைத்துக்கொண்டதினால் அச்சங்கம் மிகவும் சீர்கேடான நிலைமை யில் அநேக மாறுதலடைந்து கஷ்டப்படுகிறது.

இப்போது நமது வட்டத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் சங்கங் களில் பஞ்சாயத்து மெம்பர்கள்மட்டும் தாங்கள் வாங்கியிருக்கும் கடனை வாய்தாப்படி செலுத்தியிருக்கும் சங்கங்கள் மிகவும் உன்னத நிலைமையி லிருக்கிறதை நாம் பார்க்கிறோம். இதை நமது யூனியன் சங்கங்களை தணிக்கை செய்து பார்த்தால் தெரியவரும். அதற்காக பஞ்சாயத்தார் களாயிருப்பவர்கள் நாணயமாய் பணத்தைசெலுத்தி, சங்கத்தை முன் னுக்குக்கொண்டுவரக் கேட்டுக்கொள்ளுகிறேன். இந்தசங்கதி சங்கம் ஸ்தாபிக்க முயன்ற முதல்தினமே தெரியவந்தபடியால் நானும் இதை முதலில் சொல்ல நேரிட்டதைப்பற்றி இப்போது வாய்தாப்படி தொகை செலுத்தாத பஞ்சாயத்தார்கள் வருத்தப்படமாட்டார்களென்று நினைக் கிறேன்.

நமது யூனியனிற் சேர்க்கப்பட்ட சங்கங்களில் நன்றாய் நடக்கக் கூடிய சங்கங்களில் சிலது நாம் சங்கத்தை விருத்திக்குக் கொண் டுவந்து ஜாஸ்தி லேவாதேவி செய்தால் சரியாய் வசூலாகாமல் பாக்கி யிருந்து அவஸ்தைப்பட நேரிடுமென்று பயந்து விருத்திக்கு வராம லிருக்கிறது. இந்த ஐக்கியமுயற்சியால் அந்தவித பயம் உண்டாக இடமில்லை. அது விஷயம் சமீபத்தில் மூடப்பட்ட சங்கங்களின் நிலுவைகளை டிபார்ட்மெண்ட் உத்தியோகஸ்தர்கள் வசூல்செய்து வருவதில் நஷ்ட மேற்படாதென்று தெரியவருகிறது. அத்துடன் நான் பிரசிடெண்டாயிருக்கும் சங்கத்திலேயே பஞ்சாயத்தார்கள் அநுபவமில்லாதபோது கொடுபட்ட கடன்கள் சென்ற இரண்டு வருஷத் திய பஞ்சாயத்தால் பாக்கிவிழுந்து வசூலிப்பது கஷ்டமாயேற்பட சங்கத்தின் பொறுப்பு எல்லா மெம்பர்களுக்கும் சேர்ந்ததால், எல்லா மெம்பர்களுடைய சகாயத்தின்பேரில் பூராக்கடன்களும் வசூலாய்விட் டது. அதற்கு ஒரு கடனைமட்டும் உதாரணமாய்ச் சொல்லுகிறேன். 38



நெ. மெம்பர் சீரா நாவிதனுக்கு பூமி ஈட்டின்பேரில் 200 ரூபாயும், நபர் ஜாமீன்பேரில் 100 ரூபாயும் கடன்கொடுக்கப்பட்டிருந்தது. அது வாய்தாப் படி வசூலாகாமல் பாக்கி விழுந்துவிட்டது. அதற்கு மெம்பர்களெல்லாம் ஆலோசித்து அவனுக்குக் கொடுக்கவேண்டிய நாவித வேலை செய்யும் கூலியை தானியமாய்க் கொடுக்காமல் ரூபாய்களாக அந்தந்த ஊர்க்காரர் வசூலித்து சொஸைடி கடனை தீர்ப்பதென்று சென்ற வருஷத்தில் 136-8-0 கடன் தீர்ந்து இப்போது அடமானக்கடனில் ரூ. 88-0-0 மட் டும் பாக்கியிருக்கிறது. அதுவும் நாளது ஜூன்மீ த்திற்குள் தீர்ந்துவிடும். இம்மாதிரியிருப்பதால் சங்கவிஷயத்தில் பயப்பட யாதொரு நியாயமு மில்லை.

கிராமத்தில் சொஸைட்டி சம்மந்தப்பட்ட நடவடிக்கைகள் தவிர கிராமத்தி லேற்படும் சகல விவகாரங்களும் மத்தியஸ்தத்திலேயே தீர்ந்துவிட இந்த சொஸைட்டியானது நாம் கூடி ஒன்றுசேர்ந்து பழக வும் நாம் கூடவும் ஒரு ஆதாரமாக இருக்கிறது.

நமது சங்கங்கள் கடன் வாங்கி மெம்பர்களுக்குக் கொடுத்து வரு வதில் நீண்ட காலக்கடன்கள் அதாவது (5 வருஷம் 10 வருஷக் கெடு வில் கொடுக்கக்கூடிய கடன்கள்) மெம்பர்களுக்கு பூராப் பெய ருக்கும் அநுகூல மிருப்பதாக இந்த 8 வருஷ காலத்திய அநுபவத்தில் தெரியவில்லை. நமது சங்கத்தில் கடன் வாங்கும் மெம்பர்களை 4 பிரிவாக பிரித்து, முதல் வகுப்பார் சிறிது லேவாதேவிக் காரர்கள் அவர்களுக்கு கடன் அவசியமில்லை. ஏதோ ஒரு சமயத்துக்கு வாங்கினாலும் சலீசாய்த் தீர்த்துவிடக் கூடியவர்கள். 2-வது வகுப்பார் தனது வருமானத்தில் வருஷாவாரி மீதியடையக் கூடியவர்கள். இவர்கள் அந்த மீதத்துடன் சொஸைடியிலும் கடன் வாங்கி பூமி வகையறாக்கள் வாங்கினால் வருஷவாரி மீதத்தில் சொஸைடி கடனைத் தீர்க்கக் கூடியவர்கள். 3-வது வகுப்பார் வேறு இடங்களில் கடன் வாங்கி வட்டி மட்டும் வருஷாவருஷம் செலுத்தக் கூடியவர்கள். அவர்கள் சங்கத்தில் கடன் வாங்கினால் பாதிப்பெயர்கள் வருமானத்தில் பாதியும், வேறு பக்கம் கடன் வாங்கி பாதியும், சேர்ப்பதற்குள் கஷ்டப்பட்டு வாய்தாக்கடந்து போகவிட்டு செலுத்தக் கூடியவர்கள். 4-வது வகுப்பார் வேறு இடத் தில் கடன் வாங்கி வட்டிகூடக் கொடுக்காமல் இருந்து கடனில் முழுகிப் போகக் கூடியவர்கள். இவர்கள் சங்கத்தில் கடன் வாங்கினால் திருப்பிக் கொடுக்கவே முடியாதவர்களாயிருப்பவர்கள்.

இந்த 4-வகுப்பாரில் நமது சொஸைடி கடனில் அநுகூல மடை யக்கூடியவர்கள் 1, 2 வகுப்பாரும், 3 வகுப்பாரில் பாதிப்பெயருமே. 1-வது வகுப்பாருக்கு அவ்வளவு அநுகூலமில்லை. 2-வது வகுப்பாரும்

3-வதில் பாதிப்பெயர்களும் பூரண அனுகூலமடைகிறார்கள். ஆனால் அப்பேர்ப்பட்டவர்கள் ஒவ்வொரு சங்கத்திலும் 100-க்கு 20 பெயர்களுக்குமேல் இருக்கமாட்டார்கள். இதை ஞாபகத்தில் வைத்தே பஞ்சாயத்தார்கள் கடன் கொடுத்தால்தான் சொஸைடி நல்ல நிலைமையிலிருக்குமென்று நினைக்கிறேன்.

குறுகியகாலக் கடன்கள் (அதாவது ஒரு வருஷத்திற்குள் பூராக் கடனையும் தீர்த்துவிடும் கடன்கள்); இந்தக்கடனை நமது யூனியன் சங்கத்தில் 3 சங்கம் சென்ற 4 வருஷமாக ஆரம்பித்து, 2 சங்கம் வாய்தாப்படி வசூலிக்காமலும், வசூலித்ததை மறுகடன் கொடுத்தும், அடுத்த வருஷத்தில் கடன் கேட்க லாயக்கில்லாதிருந்தபடியால் நிறுத்திவிட்டார்கள். அதில் ஒரு சங்கமாகிய கம்புளியம்பட்டி சங்கமட்டும் முதல் வருஷம் ரூ. 1200, அடுத்த வருஷம் ரூ. 1500, அதற்கடுத்த வருஷம் ரூ. 1250-ம், இந்த வருஷம் ரூ. 1900-மும் வாங்கி ஜனவரி மாதத்தில் கிஸ்துக்கும், இதர செலவுகளுக்குமாக மகா சிறு தொகைகளாக இந்த வருஷம் 89 கடன்கள் பட்வாடா செய்திருக்கின்றன. இதனால் மெம்பர்களுக்கு அளவிறந்த நன்மை யென்பது என் அனுபவத்தில் தெரிய வருகிறது. முதல் கிஸ்தில் மாசூலிலிருந்து நமக்கு வரும்படி கிடைக்கிறதில்லை. இதனால் அநேக மெம்பர்கள் தங்கள் மாசூலை கொடுப்பதாய் வியாபாரியிடம் முன் பணம் கடன் பெறுகிறார்கள். அப்போது அந்த வியாபாரி சுவல்ப காலத்து அளவிறந்த வட்டி கேட்பதுடன், சரக்கு வாங்கும்போதும், நிலவரத்துக்கு விலையைத் தள்ளியும், ஜாஸ்தி நிறையும், தன் இஷ்டம்போல் போட்டுக்கொள்ள பாத்தியதையுடையவனாகிறான். கம்புளியம்பட்டி சங்கத்தில் இந்தக் கடன் வாங்குவதற்காகவே சங்கத்தில் சேர அவசியமில்லாதவர்களும் சொஸைடி உபயோகமில்லையென்று காலி செய்கிறவர்களுமான சில பணக்காரர்களாயுள்ளவர்கள் வந்து மெம்பர்களாய்ச் சேர்ந்து கடன் பெற்றிருக்கிறார்கள். ஷை சங்கத்தில் ரூ. 200 கிஸ்து செலுத்தக் கூடியவரும், ரூபாய் 7000, வரை லேவாதேவி செய்திருப்பவருமாகிய ஒருவர் ஒரு பங்கெடுத்து மெம்பராய்ச் சேர்ந்து, சென்ற வருஷம் 50 ரூபாயும், இந்த வருஷம் 35 ரூபாயும் கடன் வாங்கியிருக்கிறார். இந்தத் துகைக்கு 5மீ வாய்தா அது ஜூன் மாதம் 10உ வருகிறது. கிஸ்து தீர்ந்தவுடனே 5-வது கிஸ்தாக இதைத் தீர்த்துவிடுகிறார்கள். இந்த வருஷம் கொடுத்த கடனை இப்போதே செலுத்த ஆரம்பித்துவிட்டார்கள். ஆதலால் நமது சொஸைடிகள் இந்த முறையை அனுசரித்தால் மிக்க பிரயோசனமுண்டாகும்.

நான் சென்ற 3 வருஷத்திற்கு முன்பு திருப்பூர் கால்நடைக் காக்ஷியில் கால் நடைகளை இன்ஷூர் செய்வதைப்பற்றிப் பேசியிருக்கிறேன்.



அதை நமது புல்லடீன் என்ற பத்திரிகையில் பார்த்திருப்பீர்கள். அதை அனுசரித்து நமது கால் நடைகள் பெரு வியாதி முதலிய தொத்து வியாதியால் இறந்துபோவதற்கும், ஏதாவது அபாயத்திலிறந்துபோய் நஷ்டப்படுவதற்கும், இன்ஷூர் ஏற்பாட்டை அனுசரித்தால் நலமாயிருக்கும். நமது மாசூலை ஒன்று சேர்த்து விற்பது நாம் வாங்கும் புண்ணாக்குப் பருத்திக்கொட்டை முதலியவைகளை மொத்தமாய் வாங்கி மெம்பர்களுக்குக் கொடுப்பதை நமது யூனியனில் ஏதாவதொரு சங்கத்தில் டிபார்ட்மெண்டு உத்தியோகஸ்தர்களிட அனுமதியைப்பெற்று ஆரம்பித்து நடத்தி, பிரயோசனமென்று தெரிந்தபின் எல்லா சங்கங்களும் ஆரம்பிக்கலாமென்று நினைக்கிறேன். நமது யூனியன் ஆரம்பிக்கப்பட்டு செய்து வந்திருக்கும் வேலையை யூனியன் ரிபோர்ட்டில் விவரமாய்த் தெரிய வரும். நான் அது விஷயமாய் இரண்டொரு வார்த்தை இப்பொழுது சொல்லி நிறுத்திவிடுகிறேன்.

சங்கங்கள் யூனியன் மேற்பார்வையினால் விருத்தியடைய இருக்கும் விசேஷ காரணம், யூனியன் கவர்னிங்குபாடியார் சகல விஷயத்திலும் ஒவ்வொரு சங்கத்தின் பஞ்சாயத்தார்களைப்போலவே, அந்தஸ்துடையவர்களாதலால் இவர்கள் சொல்வதை மதிக்க இடமுண்டாகிறது. டிபார்ட்மெண்ட் உத்தியோகஸ்தர்கள் சொல்வதற்கும் கவர்னிங்குபாடியார் சொல்வதற்கும், கவர்னிங்குபாடியார் இதர சொஸைட்டி மெம்பர்களைப் போலவே மெம்பர். கவர்னிங்குபாடியிலிருக்கும் மெம்பர், தன் சொஸைட்டி நல்ல நிலைமையிலிருந்தால் தான் இதர சொஸைட்டிக்குச் சொல்ல நாம் லாயக்கென்று, தன்னுடைய சொஸைட்டியை முன்னுக்குக்கொண்டு வந்து இதர சொஸைட்டிக்குச் சொல்லும்போது தன் சொஸைட்டியைப்பற்றிச் சொன்னால், நீமும் அப்படி முன்னுக்கு வரவேண்டுமென்ற எண்ணமுண்டாகி சங்கங்கள் விருத்திக்கு வந்திருப்பதாய் என்னுடைய அபிப்பிராயம்.

யூனியனிலும் சொஸைட்டிகளிலும் வேலை செய்யக் கூடியவர்களுக்கு யாதொரு பிரதி பிரயோசனமில்லை யென்பது உங்களுக்கெல்லாம் தெரிந்த விஷயம். அப்படி யிருப்பதில் சிலருக்கு, நாம் ஏன் வீணாய் வேலை செய்யவேண்டும். நமக்கென்ன பிரயோசனமென்று அசிரத்தைப்படுவதனால் சங்கங்கள் கேவலமடைய நேரிடுகிறது. சொஸைட்டிகளிலும் யூனியனிலும் பஞ்சாயத்தார்களா யிருக்கப்பட்டவர்களை ஜனங்கள் தங்கள் தலைவர்களாக மதித்தல்லவா நியமிக்கிறார்கள். அப்படித் தலைமை ஸ்தானத்தை வகிக்கக்கூடிய நிலையை நாம் ஏற்றுக்கொண்டபின்பு காரியத்தை சரியாய்ப் பார்க்காமல் அசட்டையாய் விட்டுவிடுவது

சரியல்ல. தனக்கிஷ்டமில்லாதவரை பஞ்சாயத்திலிருந்து விலகி நடத்தக்கூடியவர்களுக்கு உதவியாயிருந்து வரக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இந்த வெயில் காலத்தில் ரயில் முதலிய சவுகரியமில்லாத இந்த இடத்துக்குத் தாங்களெல்லாம் விஜயம் செய்ததானது ஐக்கிய முயற்சி முன்னேற்றமடைகிறதின் நற்குறி யென்று சந்தோஷித்து உங்களுக்கெல்லாம் எனது மனபூர்வமான வந்தனமளிக்கிறேன்.

மேலும் இந்தக் கான்பரென்சுக்கு அக்கிராசனாதிபதியாக இருக்க ஒத்துக்கொண்டிருக்கும் ம-ா-ா-ஸ்ரீ C. N. கிருஷ்ணசாமி அய்யரவர்களை நீங்களெல்லோரும் தெரிந்திருக்கலாம். நெடுநாள் அவர் நமது ஜில்லா பாங்கின் செக்ரிடரியாயிருப்பதோடுகூட இந்த கோவாபரேடிவ் விஷயத்தில் மிகவும் சிரத்தை யெடுத்து பொதுஜன நன்மைக்காக வேலை செய்துவருகிறார். இப்போது அவர் செய்யப்போகும் பிரசங்கத்தை நீங்களெல்லோரும் கவனித்துக் கேட்கவேணுமாய்க் கேட்டுக்கொள்வதோடு நான் ம-ா-ா-ஸ்ரீ, C. N. கிருஷ்ணசாமி அய்யரவர்களைப் பிரசிடெண்டாய்ப் பிரேரேபிக்கிறேன்.

---

## விஜய மங்கலம் யூனியன் ரிபோர்ட்.

விஜயமங்கலத்தில் கூடின விஜய மங்கலம் கோஆபரேடிவ் யூனியன் முதல் கான்பரன்சில் படிப்பதற்காக ஷை யூனியன் பிரசிடெண்ட் K.M. சின்னரங்கய்ய கவுண்டரவர்களால் தயார் செய்யப்பட்ட யூனியன் வேலைகளைக் காட்டும் ரிபோர்ட்:—

விஜய மங்கலம் கோவாபரேடிவ் யூனியனானது 1913-ம் வருஷம் பிப்ரவரிமீ 7உ யில் கனம் ரிஜிஸ்திரார் அவர்கள் முன்னிலையில் வேலை தொடங்கப்பட்டது. இப்போது யூனியன் வேலை தொடங்கி 5 வருஷமாகிறபடியால் ஒவ்வொரு வருஷத்திய ரிபோர்ட்டையும் சுருக்கமாகச் சொல்லி (1916-17) வருஷத்திய ரிபோர்ட்டை சற்று விவரமாய் சொல்ல அனுமதி கேட்டுக்கொள்ளுகிறேன். ஷை யூனியனில் (1912-13) வருஷமாகிய ஆரம்பகாலத்தில் 16 சங்கங்கள் அணைக்கப்பட்டிருந்தன. யூனியன் மகா சபை மீட்டிங்கு 1, கவர்னிங்குபாடி மீட்டிங்குகள் 6 கூடின. சங்கங்கள் விஷயமாய் கவர்னிங்கு பாடியாராலும் சூபர்வைசராலும் சீர்திருத்தவேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

1913-14 வருஷமாகிய இரண்டாவது வருஷத்தில் 423 துடுப்பதி, 1170 நடுப்பட்டி, சங்கங்கள் யூனியனில் சேர்ந்ததில் மொத்தம் 18. யூனியனுடைய முயற்சியால் ஷை நடுப்பட்டி சங்கம் ஏற்பட்டது. இவ்வருஷம் 13 கவர்னிங்பாடி மீட்டிங்குகள் கூடியதில் 2 கோரமில்லை. சங்கங்களின் விருத்தி விஷயமாய் கவர்னிங்பாடியாருடைய தீர்மானங்களும் சூபர்வைசருடைய தணிக்கையும் ஏற்பட்டன.



1914-15 வருஷமாகிய மூன்றாவது வருஷத்தில், 720 குன்னத்தூர் 723. வெள்ளரிவேலி, 665 கடமைபட்டி, 1416 பாப்பம்பாளயம், இந்த 4 சங்கங்கள் யூனியனில் சேர்ந்ததில் மொத்தம் சங்கங்கள் 22, யூனியன் முயற்சியால் ஷை பாப்பம்பாளையம் சங்கம் ஏற்பட்டது. மகா சபை மீட்டிங்கு 1, கவர்னிங்பாடி மீட்டிங்கு 6 நடந்தன. சங்கங்களின் விஷயத்தில் யூனியன் வேலை செய்து வந்திருப்பதோடு பெருந்துறை சங்கத்தை ஆறு சங்கங்களாக பிரிக்க முயற்சி செய்தது.

1915-16 வருஷமாகிய 4-வது வருஷத்தில் யூனியன் சங்கங்களிருந்து 234 பெருந்துறை சங்கம் வேறு யூனியனோடு சேர்கப்பட்டும், 390 மூங்கில் பாளயம் சங்கம் மூடப்பட்டும் போனதால் யூனியனில் 20 சங்கங்கள் இருந்தன. மகா சபை மீட்டிங்கு 1 கவர்னிங்பாடி மீட்டிங்குகள் 13° கூடியதில் 2 மீட்டிங்குகள் கோரமில்லை. சங்கங்களின் விருத்தி விஷயத்தில் யூனியன் கவர்னிங்பாடியாருடைய அநேக தீர்மானங்களும் சூபர்வைசருடைய தணிக்கையும் செய்யப்பட்டதோடு விஜய மங்கலம் சங்கத்தை கவர்னிங்குபாடி ம-ா-ா ஸ்ரீ ராஜ கோபாலராவ் அவர்களும் வரப்பாளயம் சங்கத்தை யூனியன் பிரசிடெண்டும் குன்னத்தூர் வெள்ளரிவேலி சங்கங்களை ம-ா-ா-ஸ்ரீ ராஜாக்கவுண்டரவர்களும், 415 இறுக்களிஞ்சி சங்கத்தை கவர்னிங்குபாடி மெம்பர் ம-ா-ா-ஸ்ரீ இராமரெட்டியாரும், 391 சீனாபுரம் சங்கத்தை ம-ா-ா-ஸ்ரீ அனுமந்த கவுண்டரவர்களும் நேரில் அடிக்கடி போய் பார்வையிட்டு விருத்திக்குக் கொண்டுவரச் செய்தார்கள். கவர்னிங்பாடியாருடைய தீர்மானத்தை அனுசரித்து சீனாபுரம் சங்கத்தில் கவர்னிங்குபாடி மெம்பர் ம-ா-ா ஸ்ரீ அனுமந்த கவுண்டரவர்கள் செய்த திருப்திகரமான வேலைகளைப்பற்றி 1915-ம் வருஷம் டிசம்பர்மீ 10உயில் சினாபுரத்தில் கவர்னிங்பாடியின் 40-வது நெ. தீர்மானத்தில் அவருக்கு வந்தனமளித்தார்கள். கனம் அஸிஸ்டெண்ட் ரிஜிஸ்திராரவார்களும் ஷையார் செய்த வேலையைப்பற்றி தாமும் வந்தனமளிப்பதில் கலந்து கொள்வதாய் எழுதியிருக்கிறார்.

1916-17 வருஷமாகிய 5-வது வருஷத்தில் முன் இருந்த 20 சங்கங்களோடு, 719 சிச்சாம்பாளயம், 1639 நெ. திங்களூர், 1678 நெ. செல்லப்பம்பாளயம், இந்தமூன்று சங்கங்களும் சேர்க்கப்பட்டன. இதில் செல்லப்பம்பாளயம் திங்களூர் யூனியனின் முயற்சியால் ஏற்பட்டு யூனியனிலணைந்தன. இவ்வருஷத்தில் மறுபடியும் யூனியனுடைய முயற்சியால்

F. 20 வெட்டயங்கிணர், F. 19 அப்பிச்சிமார மடத்துப் பாளயம், F.18 நல்லாம்பட்டி, இந்த மூன்றுசங்கங்களும் ஏற்பட்டு யூனியனில் சேர்வதாக இருக்கின்றன ஆகவே யூனியனில் சேர்ந்துள்ள ஒட்டு சங்கங்கள் 26. இந்தசங்கங்களில் 6 சங்கங்கள் நல்ல நிலமையிலும் 11 சங்கங்கள் நடுநிலமையிலும் 4 சங்கங்கள் கெட்ட நிலமையிலும் இருக்கின்றன. மிதி 5 சங்கங்கள் புதிது. கெட்ட நிலமையிலுள்ள சங்கங்களைப்பற்றி கவர்னிங்பாடியாருடைய தீர்மானங்களும் சூபர்வைசருடைய தணிக்கையும் அடிக்கடி இருந்து வந்ததோடு கவர்னிங்குபாடி மீட்டிங்குகள் அந்த சங்கத்தில் போடப்பட்டு வேண்டிய ஏற்பாடுகள் செய்துவந்ததில் இப்போது இந்தசபைக்கு பிரசிடெண்டாய் வீற்றிருப்பவரே கவர்னிங்பாடியாருடைய மீட்டிங்கில் ஆஜர் இருந்து சங்கத்துக்கு வேண்டிய கற்பனைகள் கொடுத்திருக்கிறார். அந்தசங்கங்களை கூடியசீக்கிரம் நல்ல நிலமைக்குகொண்டுவருவதற்கு பிரயாசைப்படுவதாயிருக்கிறோம். யூனியனில் அணைக்கப்பட்ட சங்கங்களில் வருஷ ஆரம்பத்தில் ஒட்டு மெம்பர்கள். 2156, பங்குத்தொகை ரூ 9,222 ஜில்லா பாங்கில் வாங்கியிருக்கும் கடன் ரூ. 10 3,959; டிபாசிட்டு ரூ. 2180; மெம்பர்கள் வாங்கியிருக்கும் கடன்களின் சங்கை 1,970; துகை ரூ. 1,12,382; இதில் தவணை கடந்த கடன்களின்சங்கை 526-க்கு ரூ. 13733; க்ஷேமநிதி ரூ. 9,518 ஆக இருந்தது. யூனியன் ஆர்ம்பகாலத்திலிருந்து யூனியன்செலவுகளுக்காக சங்சங்களிலிருந்து டெலிகேஷன் பீசு அபிலியேஷன் பீசு ஜில்லா பாங்கிலிருந்து ரிபேட்டு(அதாவதுயூனியன் சங்கங்களிருந்து வசூலாகும் வட்டியில் 30-ல் 1 பாகம்) இவைகளைக்கொண்டே யூனியன் நடந்து வந்திருக்கிறது. யூனியன் ஆரம்பமான காலத்திலிருந்து நாளது வரை யூனியனுக்கு குமாஸ்தா இல்லாமலே செக்ரிடெரி பிரசிடெண்ட் இவர்களால் வேலை நடந்து வந்திருக்கிறது. யூனியன் மீட்டிங்குகளுக்கு ஆஜராகும் கவர்னிங்குபாடிமெம்பர்களுக்கு சென்ற 3 வருஷகாலமாய் சிட்டிங்கு பீசுவகையறு ஒன்றுமில்லாமலே இருந்தபடியால் யூனியனுக்கு சங்கங்களிலிருந்து யூனியன்செலவுக்கு யாதொன்றும் வாங்காமல் யூனியனை ஒருமாதிரியாய் நடத்திக்கொண்டுவந்து விட்டோம். மீட்டிங்குகளுக்கு ஆஜராகும் கவர்னிங்பாடி மெம்பர்களுக்கு ஏதாவது வழியில் ஏற்படும் செலவு கையிலிருந்து செய்யாமல் இருப்பதற்காக இந்தவருஷ ஆரம்பத்திலிருந்து சிட்டிங்கு பீசு எட்டணு கொடுத்துவருகிறோம். இப்போது யூனியனும் சங்கங்களும் விர்த்தியாய்க் கொண்டுவந்து விட்டபடியால் பொதுவாய் கவர்னிங்பாடி மெம்பர்களுக்கே வேலை அதிகரித்ததோடு யூனியனுடைய சகலமேல் பார்வையும் பார்க்கும் பிரசிடெண்டோ, செக்ரிடெரியோ தங்களுடைய முழுக்காலத்தையும் செலவு செய்யவேண்டியிருப்பதாலும் தாங்கள் பிரசிடெண்டாயிருக்கும் சங்கத்தின் நிர்வாகத்தையும் கவனிக்கவேண்டியிருப்பதாலும் யூனியன் பூரா வேலையையும் அவர்கள் செய்யமுடியாததையிட்டு யினிமேல் யூனியனுக்கு ஒரு குமாஸ்தா நியமனம் செய்வதாய் உத்தேசித்திருக்கிறோம். குமாஸ்தா ஒருவர் நியமனம் செய்யப்பட்டால் யூனியன் இன்னும் அதிக விர்த்தியாகுமென்று எதிர்பார்க்கலாம்.



இந்த யூனியனில் அணைக்கப்பட்ட சங்கங்களில் 488 கவுண்டம்பாளையம் சங்கம் சென்னிமலை சங்கத்திலிருந்து பிரிந்தது, அதன் ஆரம்ப காலத்தில் என்னமாய் நடத்தப்போகிறார்களென்று கவலைப்படவேண்டியிருந்தது. அதன் ஆரம்ப காலத்தில் யூனியன் இல்லாமல் இருந்தால் யூனியன் சூபர்வைசராயிருக்கும் ம-ா-ா-ஸ்ரீ, K. A. அனந்தபத்மனுபய்யரவர்கள் அப்போது அந்த சொஸைடிக்குப்போய் கணக்குகள் எழுதிக்கொடுத்து வந்தார். அதன்பின், ரூப் எக்ஜாமினராய் நியமிக்கப்பட்டு தணிக்கை செய்துவந்த காலத்திலும் சூபர்வைசரான பின்னிட்டும் பஞ்சாயத்தார் வசூல் செய்து வைத்திருக்கும் தொகைகளை காஷ் புக்கில் வரவு வைப்பது முதலிய பஞ்சாயத்தார் செய்ய வேண்டிய எழுத்து வேலை பூராவும் செய்து கொண்டுவந்தார். அந்தச் சங்கத்தின் பஞ்சாயத்தார்களின் சிரத்தையால் சங்கமானது ஆரம்பகால முதல் நல்ல நிலமையிலேயே இருந்து வரக்காரணம், பஞ்சாயத்தார்கள் தாங்கள் வாங்கியிருக்கும் கடனை வாய்தாப்பிரகாரம் செலுத்தி வந்ததனாலேயே இப்போது இந்த யூனியன் சொசைடிகளில் அது நல்ல சொசைடியாக மதிக்கப்பட்டுவருகிறது. யூனியன் சங்கங்கள் எல்லாவற்றிலும் குறுகிய காலக்கடனை அமுலுக்குக்கொண்டுவர ஏற்பாடு செய்வதாயிருக்கிறோம். சங்கத்தின் மெம்பர்கள் வாங்கும் புண்ணாக்கு, பருத்திக்கொட்டைகளை மொத்தமாய் வாங்கி மெம்பர்களுக்குக் கொடுப்பதை இரண்டொரு சங்கங்களில் பரீக்ஷார்த்தமாய் ஆரம்பிக்கலாமாக இருக்கிறோம். யூனியனில் சேர்க்கப்பட்ட சங்கங்களை கள்ளிக்கோட்டை செக்ஷன் கனம் அஸிஸ்டெண்ட் ரெஜிஸ்திரார் அவர்கள் சென்ற மாதத்தில் எல்லா சங்கங்களையும் நேரில் போய் பார்க்கவிருப்பம் மேலிட்டவராய் வெய்யில் வகையறுக்களை கவனியாமல் வண்டி போகமுடியாத சில சங்கங்களுக்கு நடந்து போய் மெம்பர்களுக்கு விசேஷமான கற்பனைகளைச் சொல்லி உற்சாகப்படுத்தினதிலிருந்தே இப்போது யூனியனும் சங்கங்களும் விருத்முகங்காட்ட ஆரம்பித்திருக்கிறது.

யூனியனில் அணைக்கப்பட்ட சங்கங்கள், யூனியன் ஆரம்பகாலத்திலிருந்த நிலமைக்கு இப்போது யூனியனிட மேல்பார்வையில் விருத்திக்கு வந்திருப்பதாய் சொல்ல எங்களுக்குத் தைரியம் உண்டா

வதை யூனியன் சங்கங்கள் பூருவம் சமீபத்தில் தணிக்கை செய்த கனம் அஸிஸ்டெண்ட் ரெஜிஸ்திரார் அபிப்பிராயப்படுவதிலிருந்து தீர்மானிக்க வேண்டியதாயிருக்கிறது.

எங்கள் யூனியன் சங்கங்களில் நடு நிலைமையில் இருப்பதாய்ச் சொன்ன சங்கங்களின் பஞ்சாயத்தார்கள் சிறிது கவனம் எடுத்துக் கொள்ளும் பக்ஷத்தில் சங்கம் நாளது ஜூன்மீ 30-திக்குள் நல்ல நிலைமைக்கு வந்து விடும். கெட்ட நிலைமையிலிருப்பதாய்ச் சொன்ன 4 சங்கங்களில் கவர்னிங்குபாடியார் மகா சபை மீட்டிங்கு கட்டி அதில் தாங்கள் ஆஜரிருந்து மெம்பர்களை சந்திக்க பல தடவை ஏற்பாடு செய்தும் ஒரு சங்கத்தில் கூட மகாசபை கூடவில்லை அதைப்பற்றி விசாரித்தால் பஞ்சாயத்தார் மகாசபை கூட ஏற்பாடு செய்ய வில்லையென்றே தெரிந்தது. அதுகளிலிருக்கும் மெம்பர்களோடு பேசியதில் பஞ்சாயத்தார்களின் சிரத்தையின்மையால் தான் தங்கள் சங்கம் கேவலமாயிருக்கிறதென்று சொல்லுகிறார்கள். பஞ்சாயத்தார்கள் அப்படியிருப்பதின் காரணம் தாங்கள் சங்கத்தில் வாங்கியிருக்கும் பெருந்தொகையான கடன்களை வாய்தாப்படி கொடுக்காமலிருப்பதால் வேறு மெம்பர்களைக் கேட்க வெட்கப்பட்டு கேள்வி கேட்பாடு இல்லாமலே இருந்து விடுகிறார்கள். இப்படியிருக்கும் பஞ்சாயத்தார்கள் மட்டும் தங்கள் கடனை வாய்தாப்படி செலுத்திவிட்டு பஞ்சாயத்திலிருந்து விலகி புதிதாய் நடத்தக் கூடியவர்களுக்கு விரோதம் செய்யாமலிருந்தால் மேலே கெட்ட நிலைமையிலிருப்பதாய் சொன்ன 4 சங்கங்களும் கூடிய சீக்கிரம் நல்ல நிலைமைக்கு வந்து விடும்.

யூனியன் சங்கங்களின் நிலைமை மேற்கண்டவாறு இருப்பதால் யூனியன் மேற்பார்வையானது சங்கங்கள் கெட்ட நிலைமைக்கு வருவதை சீர்திருத்துவதிலேயே போய் விடுகிறபடியால் சங்கங்களில் விருத்தி விஷயத்தை கவனிக்க யூனியனுக்கு சாவகாசமும் தைரியமும் இல்லாமல் போய்விடுகிறது. ஆனாலும் யூனியன் தனது சங்கங்களை ஜூன்மீ த்திற்குள் கெட்ட நிலைமையிலிருந்து சரிப்படுத்தி வருகிற புது வருஷத்தில் எல்லா சங்கங்களின் விருத்தி விஷயத்தை புது வேலை செய்ய உத்தேசித்திருப்பதை நமது சங்கங்கள் கவனித்து யூனியனுக்கு ஒத்தாசையாயிருக்கு மென்று நம்புகிறோம். யூனியன் கவர்னிங்குபாடியாரும் யூனியனில் அணைக்கப்பட்ட சகல மெம்பர்களும் இருந்து வரும் ஒற்றுமையும் யூனியனிட தீர்மானத்துக்குக் கட்டுப்பட்டு நடக்கும் விசேஷ குணமும் இந்த யூனியனில் அணைக்கப்பட்ட சங்கங்களுக்கு மிகுதியாயிருப்பதால் யூனியனும் சங்கங்களும் விசேஷ விருத்தியடையுமென்று நம்புகிறோம்.

---



## திருச்சிராப்பள்ளி ஜில்லா அர்பன் பாங்கி லிமிடெட்.

திருச்சிராப்பள்ளி ஜில்லா அர்பன் பாங்கியின். 1916 வருஷம் ஜூன் மாதம் 30ம் தேதியோடு முடிவடைந்த வருஷக்கணக்குகளை ம-ா-ா-ஸ்ரீ முக்கிய இன்ஸ்பெக்டர் கே. வேதாசலம் அய்யரவர்கள் பரிசோதித்தார். கணக்குகள் ஒப்புக்கொள்ளப்பட்டது.

2. வர்த்தமான வருஷத்தில் 3 மெம்பர்கள் புதிதாய் சேர்ந்திருக்கிறார்கள். 6 மெம்பர்கள் விட்டுவிட்டார்கள். வருஷக்கடைசியில் இருந்த மெம்பர்களின் துகை 45, வசூலாயிருக்கிற மூலதனத்துகை சென்ற வருஷத்தில் இருந்த பிரகாரம் ரூ. 50,000, சென்ற வருஷம் கடன்வாங்கினதற்கும் இந்தவருஷம் கடன்வாங்கினதற்கும் ஒப்பிடும்பொழுது மெம்பர்களிடமிருந்து வந்த டிபாஸிட் துகையில் ரூ. 55,615 குறைவாகவும் மெம்பர்களல்லாதவர்களிடமிருந்து வந்த டிபாஸிட் ரூ. 1,27639 அதிகமாகவும் இருந்தது. மதறாஸ் பாங்கியார் கணக்கிற்குமேல் அதிகமாக பணம் எடுத்துக்கொள்வதற்காக இவர்களுக்கு கொடுத்த கைமாத்து ரூ. 38,550, அவர்களிடமிருந்து வாங்கி வருஷக்கடைசியில் டிஸ்திரிகட் பாங்கிக்கு நிலுவை பாக்கியில்லாமையால் அதை முற்றிலும் திருப்பிக் கொடுத்தாய்விட்டது. ரூ. 70,600 சொஸைடிகளுக்கு கடன்களாக கொடுபட்டிருக்கிறது. ரூ. 2,02,000 இதர சென்டரல் பாங்கிகளில் வைக்கப்பட்டிருக்கிறது. மற்ற பாங்கிகளில் வருஷக்கடைசியில் சேர்த்து வைக்கப்பட்டிருக்கும் துகை ரூ. 3,12,000. இந்த விஷயங்களினால் பாங்கிக்கு விசேஷ டிபாஸிட்டுகள் சேர்க்கும் சக்தியிருக்கிறது என்று தெறிகிறது. வருஷக் கடைசிநாளில் வசூலாகாமல் நிலுவையில் இருக்கும் துகை, முதலுக்காக ரூ. 35,633 வட்டிக்காக ரூ. 2,748.

3. 1914—15-ம் வருஷத்திய லாபத்திலிருந்து கொடுபட்டிருக்கும் மூலதனத்துகையின்பேரில் 100-க்கு 2 விழுக்காடுபோனஸைச் சேர்த்து 100-க்கு 12-வீதம் பாங்கியில் டிவிடெண்டு கொடுக்கும்படி தீர்மானமாயிற்று. செகரிடேரி அவர்களுக்கு ரூ. 2,099—15—11 கௌரவச் சம்பளமாகக் கொடுக்கப்பட்டது. பைலாப்படி, ரிஸர்வ் பண்டுக்காக சேர்க்கப்படவேண்டிய துகை ரூ. 4,199—15—10-க்குமேல் ரூ. 438—8—10 அதிகமாக ரிஸர்வ் துகையில் சேர்க்கப்பட்டிருக்கிறது. மீதியாயிருக்கும் ரூ. 4,681—14—11 "டிவிடெண்டு ஈகுவலிசேஷன் பண்டில்" சேர்க்கப்பட்டது. வருஷக்கடைசியில் இதுவரையில் சேர்ந்திருக்கும் ரிசர்வ் பண்டும் "டிவிடெண்டு' ஈகுவலிஸேஷன் பண்டும், முறையே ரூ. 12,000, ரூ. 13,757—7—1.

4. வர்த்தமான வருஷத்தில் பாங்கி அடைந்த நிகரலாபம் ரூ. 12.433—4—11 (நிலுவையில் இருக்கும் கெடுமீறிய வட்டி ரூ. 2,652—15—8, கெடுவுக்குள்பட்ட வட்டி ரூ. 599—5—0 அபராத வட்டி ரூ. 94—10—0 ஆக ரூ. 3,346—14—8 இதில் சம்பந்தப் படவில்லை) மேற்படி துகையில் இரண்டாவதுபாராவில் கண்டபடி கெடு மீறிப்போய் பாங்கிக்கு சேரவேண்டிய வட்டித்துகை ரூ. 2,748 சேர்க் கப்படவில்லை. நிகரலாபத்தில் நான்கில் ஒருபாகம் அதாவது ரூ. 8,107—5—3 ரிசர்பண்டில்சேர்க்கப்படவேண்டும். மீதி ரூ. 4,924-15-8 பங்குக்காரர்களுக்கு டிவிடெண்டாக விதித்துக்கொடுக்க இருக்கிறது. 1915௵ நவம்பர்௴ கவர்ன்மெண்டாரால் ஏற்படுத்தப்பட்ட சட்டப்படி 100-க்கு 9-க்குமேல் டிவிடண்டு கொடுக்கக்கூடாது. இந்தமாதிரி கொடுப் பதற்கு வேண்டிய ரூ. 4,500போக மீதித்துகையைரிசர்வ்பண்டில் சேர்க்க வேண்டும். மேற்படி பண்டுக்குசேரவேண்டியதுகை மதருஸ் சென்டரல் அர்பன்பாங்கிக்கு அனுப்பப்படவேண்டும். அப்பொழுது ஏற்கனவே கட்டப்பட்டிருக்கும் மேற்படி இனத்துகையின்மேல் 1916௵ ஜூன்௴ 30௳ வரையில் சேர்ந்திருக்கும்வட்டி ரூ. 620—14—9-யை கழித்துக் கொண்டு அனுப்பலாம். நடைபெறும் பைலாப்படி செகிரிடெரிக்கு சேர வேண்டிய கௌரவச்சம்பளத்தை பொதுநிதியிலிருந்து கொடுத்து இந்த வருஷக்கணக்கில் எழுதவேண்டியது.

5. 1916 ஜூன் 30 தேதியோடு பாங்கி ஆரம்பித்து 8 வருஷம் ஆயிற்று. வழக்கம்போல் இந்த வருஷம் பாங்கியின் வேலை வெகு சிலாக் கியமாயிருக்கிறது. கணக்குகள் சரிவர வைக்கப்பட்டிருக்கிறது.

6. ஜயம்கொண்டான், லால்குடி யூனியன்களைச் சேர்ந்த சொஸைடி களிடமிருந்து வசூலானவட்டிகளுக்காக டிஸ்திரிகட்பாங்கி தள்ளிக் கொடுத்தது ரூ. 415-15-5. இன்னும் மேற்படி பாகத்தில் கொடுக்க வேண்டிய துகை ரூ. 425—12—5. நாமக்கல்லிலும் கரூரிலும் இரண்டு யூனியன்கள் ஏற்பட்டிருக்கின்றன. மூலதனம் ரிசர்வ்துகை காரண்டு டிபாசிட் இவைகள் சேராத தொழில் தனத்தின்பேரில் 100-க்கு ரூ. 0—8—0. வீதம் சூபர்விஷன் பண்டுக்கு (மேன்பார்வை நிதிக்கு) கொடுப்பதையும் தான் சொஸைடிகளுக்கு கொடுக்கும் கடன்களின் பேரில் 100-க்கு 0—4—0. வீதம் கொடுப்பதையும் கொண்டு மேற் பார் வையை நிர்வகிக்குமா வென்று ஜில்லா பாங்கியை கேட்கப்பட்டிருக் றது. மேன் பார்வை விஷயத்தை டிஸ்திரிகட் பாங்கி டாரக்டர்கள் சீக்கிரமாய் தீர்மானிப்பார்கள் என்று நம்புகிறோம்.

7. 1916௵ ஜூலை௴ 10௳ கவர்ன்மெண்டாரால் அறிவிக்கப் பட்ட குறிப்பு சட்டங்கள் தீர்மானமான பிரசுரம் ஏற்படுகிறவரையில்



சொஸைடிகளை கட்டுப்படுத்தமாட்டாது. ஆனால் அதில் கவனிக்க வேண் டிய விஷயம் என்னவென்றால் ரத்து செய்யம்படும் வரையில் அதிகார முறையுடன் இருக்கும் 1915 நவம்பரில் பிரசுரமான சட்டங்களின்படி பாங்கிதன்னுடைய நிகரலாபத்தை அடியிற்கண்டமாதிரியல்லாமல் இதர விஷயங்களுக்கு உபயோகிக்கக்கூடாது என்பதே; அதாவது ரிசர்வ்பண் டுக்கும்: 100-க்கு 9-வரையில் டிவிடண்டுக்கும் ; பிரியப்பட்டால் பொது நன்மைபண்டுக்குமே. ரெவினியூ போர்டார் தீர்மானமாவது 1915 நவம் பரில்ஏற்பட்ட சட்டங்களின்படி லிமிடெட்சொஸைடிகளின் நிகரலாபங் களிலிருந்து கௌரவ உத்தியோகஸ்தர்களுக்கு யாதொரு உபகாரச் சம் பளமும்கொடுக்கக்கூடாது. 1916 ஜூலைமாதத்தில் ஏற்பட்ட சட்டங்கள் இதன் அர்த்தத்தை தெளிவாய் விளங்குகின்றன. நிகரலாபத்திலிருந்து டிவிடெண்டு ஈகுவலி சேஷன்பண்டு உண்டாக்ககூடாது. ஆனால் கடைசி அதிகத்துகையாகிய 100-க்கு 9-க்கு குறைவாகடிவிடெண்டு ஏற்பட்டால் அந்த வித்தியாசத் துகையை மாத்திரம் டிவிடெண்டு ஈடுவலி சேஷன் பண்டில் சேர்க்கலாம். தற்காலத்திய ஆடிட் ஆர்டர் 1915 நவம்பரில் ஏற்படுத்திய சட்டங்களின் அர்த்தத்தின் ஆதாரத்தில்தான் இருக் கிறது. இந்த அர்த்தப்படி திருச்சினாப்பள்ளி டிஸ்திரிகட் பாங்கி சம்மந் தப்பட்டவரையில் யாதொரு வித்தியாசமும் இல்லை ஏனென்றால் ரிஸர் வுக்காக என்று 100-க்கு 25 அல்லது ரூ. 50 வைத்தாலும் டிவிடெண் டுக்குப் போக பாக்கித் துகை ரிஸர்வுக்குப் போய்தீரவேண்டும்.

8. 1915-16-ல் திருச்சினாப்பள்ளி ஜில்லாவில் 102 விவசாயச் சங்கங்களுக்கு தான், ரூ. 60,460 இந்த பாங்கிகடன் கொடுத்திருக் கிறது என்பதை கவனிக்க ரிஜிஸ்ட்ரார் அவர்கள் அநுதாபப்படு கிறார் இனி மேல் இந்த ஜில்லாவுக்குள் ஜாஸ்தி துகைகள் கடன் கொடுப்பது சாத்தியம் என்றும் அப்படிச் செய்ய சரியான மேற் பார்வைக்கு சிப்பந்திகள் நியமிக்கவேண்டும் என்றும் நினைக்கப்படுகிறது. சரியான மேன் பார்வை சிப்பந்திகள் வைத்துக்கொள்ள, பாங்கி கிராம் சொஸைடிகளோடு சரியான பாகம் கொடுக்கவேண்டும். அது கொடுக் கும் கடன்களின் பேரில் 100-க்கு ¼ வீதம் மாத்திரம் கொடுத்தால் போதாது. போதுமான தணிக்கை சிப்பந்திகள் ஏற்படாத வரை யில் சொஸைடிகள் நிரம்ப விருத்தியடைவதற்கும் பாங்கிகளின் பண வசூல்களை கவனிக்காததற்கும் குறை கூறுவதில் பயனில்லை. பாங்கி யின் தொழில் நிதியை ஜில்லாவுக்குள் ஏராளமாய் செலவழிக்கும் பொருட்டு அவசியமான ஏற்பாடுகளைத் தீர்மானிக்க டைரக்டர்கள் குறிப்பிடும் தினத்தில் ரிஜிஸ்ட்ரார் அவர்கள் அவர்களுடன் கலந்துபேசத் தயாராயிருக்கிறார்.

## கிருஷ்ணு ஜில்லா கோ ஆபரேடிவ் பாங்கி.

(1) 1422 நெ. கிருஷ்ணு ஜில்லா கோஆபரேடிவ் பாங்கியின் கணக்குகள் 1916 ஜூன் 30-ம் தேதியுடன் முடிவடைந்த வருஷத்திற்கு காகினடா செக்ஷன் கோஆபரேடிவ் சொஸைடிகளின் அஸிஸ்டெண்டு ரிஜிஸ்ட்ரரான ம-ா-ா-ஸ்ரீ கே. நாகேசுவரராவ் பந்துலு அவர்களால் தணிக்கை செய்யப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டன. (1) வரவு சிலவு, (2) லாபம் நஷ்டம், (3) ஆஸ்தி கடன் இவைகள் அடங்கிய ஸ்டேட்மெண்டுகளை அவர் கொடுத்தார்.

(2) இந்த பாங்கி 1915 ஜனவரி 17வ ரிஜிஸ்தர் ஆகிவேலை செய்ய ஆரம்பித்தது. இது இரண்டாவது வருஷம். 1915 ஜூன் 30வ 51 மெம்பர்கள் இருந்தார்கள். 30-6-1916ம் ஷேர் அவைகளின் துகை 56 ஆயிற்று. சொஸைடிகள் சென்றவருஷம் ஒன்றும் சேரவில்லை. இவ்வருஷம் 21 சொஸைடிகள் சேர்ந்திருக்கின்றன. இவை யெல்லாம் விவசாய சொஸைடியே. இன்னும் இந்த ஜில்லாவில் 54 விவசாய சொஸைடிகளும் 10 இதர சொஸைடிகளும் இந்த பாங்கில் சேர வேண்டியதாய் இருக்கின்றன. எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கும் பங்குகளின் துகையும் பங்குகளுக்காக கொடுபட்டிருக்கும் துகையும் முறையே 30-6-1915-ல் 335, ரூ. 16,750/-30-6-1916-ல் 485 ரூ. 35, 330 இந்த 485 பங்குகளில் 136 பங்குகள் சொஸைடிகளாலும் மீதி 349 தனி மெம்பர்களாலும் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன.

(3) மெம்பர்களிடமிருந்தும் மற்றவர்களிடமிருந்தும் கிடைத்த டிபாஸிட் துகைகள் முறையே 30-6-1915 ரூ. 32,050, ரூ. 10,150 ஆக இருந்தது, 30-6-1916-ல் ரூ. 35,746-13-0 ரூ. 31,685 ஆயிற்று.

ஜில்லாவிலுள்ள இதர கோஆபரேடிவ் சொஸைடிகளின் டிபாஸிட் துகை ரூ 1,013-1-6 ஆக இருந்து ரூ 9,365-3-7. ஆக ஆயிற்று. இந்தடிபாஸிட்டு துகைகள் சொஸைடிகளின் ரிஸர்வ்பண்டுகளாக இருக்கின்றன. பாங்கி இந்தவருஷத்தில் இதர ஸெண்டரல் சொஸைடிகளிடமிருந்து ரூபாய் 165,000 கடன் வாங்கி ரூ 18,000 திருப்பிக்கொடுத்திருக்கிறது. இன்னும் கொடுக்கவேண்டிய கடன் ரூ 147,500.

4. சொஸைடிகளுக்கும் தனிமெம்பர்களுக்கும் இந்த வருஷத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் கடன்களின் துகைகளும் கடன்களும் முறையே ரூ. 205,459 சேர்ந்த 109 கடன்களும் ரூ. 8980 சேர்ந்த 2 கடன்களுமே. வருஷக்கடைசியில் ரூ. 230,615 உள்ள 107 கடன்களும் ரூ. 8,480 உள்ள 7 கடன்களும் மெம்பர்களின் மேலும் சொஸைடிகளின் மேலும் பாக்கி. மெம்பர்களிடமிருந்தும் சொஸைடிகளிடமிருந்தும் வருலாகவேண்டிய துகை ரூ. 33,570ல் ரூ. 30,410 வசூலாய் விட்டது வருஷக்கடைசியில் வசூலாகாமல் நிலுவையாய் நின்றதுகை ரூ. 3,160; இந்த நிலுவைவசூலான துகைக்கு சற்றேரக்குறைய 100க்கு 9க்கு மேல் ஆகிறது.



5. பாங்கிக்கு கிடைத்த நிகரலாபம இந்த வருஷத்தில் ரூ. 2,414-7-5. 23வது பைலாபடி கீழ்க்கண்டபடி சிலவழிக்க வேண்டும்:—

¼ ரிசர்வ்பண்டு ரூ.603-8-4 மீதிமெம்பர்களுக்கு டிவிடண்டு ரூ.1810-9-2. 30-6-1916 வரையில் மதராஸ் சென்டரல் அர்பன் பாங்கியில் சேர்ந்திருக்கிறவட்டி ரூ. 6-11-4-யை கழித்துக்கொண்டு சொஸைடி இப்பொழுது ரிஸர்வ் பண்டில் சேர்ப்பதற்கு ரூ. 596-13-0 ஷை பாங்கிக்கு அனுப்பவேண்டும். இத்துடன் சேர்ந்துபாங்கியிலிருக்கும் மொத்த ரிசர்வ் துகை ரூ. 749-15-3 ஆகிறது

6. பாங்கியின் லேவாதேவிகள் இந்தவருஷத்தில் விசேஷவிருத்தியடைந்திருக்கிறது, அதின் முன்னேற்றத்திற்காக டைரக்டர்கள் வெகுவாக நன்கு மதிக்கப்படவேண்டும்.

---

## தவணை மீறின கடன்கள்

1. தென்கன்னடம் சென்டரல் கோஆபரேடிவ் பாங்கியார், தென்கன்னடத்திலுள்ள கோஆபரேடிவ் சொஸைடிகளின் சூபர் வைசர்களுக்கு அடியிற் கண்ட சுற்று விளம்பரத்தை அனுப்பியிருக்கிறார்கள். மேற்பார்வை வேலையை எடுத்துக் கொண்டிருக்கிற பாங்கிகளுக்கு இந்தச் சுற்று நிருபம் மிக்க உபயோகமுள்ளதாயிருக்கும். பிரஸ்தாப கோஆபரேடிவ் வருஷம் முடிவடையும் தருவாயிலிருக்கிறது. இன்னம் 3 மாதம் சில்லரைக்குள் சூபர்வைசர்கள் தங்கள் இலாகாவிலுள்ள சொஸைடிகளை இரண்டு மூன்று தடவைக்கு மேல் பார்வையிட முடியாது. ஆகையால் தற்காலம் தான் சூபர்வைசர்களுக்கு சொஸைடி வேலையின் முக்கியமான விஷயங்களில் ஒன்றை கவனிக்க தகுந்த சமயமாயிருக்கிறது. அதாவது மெம்பர்களிடமிருந்து வசூலிக்கப்பட வேண்டிய தவணை மீறின கடன்களை வசூலிப்பது தான்.

2. தென்கன்னடம் ஜில்லா சொஸைடி மெம்பர்கள் கடன் திருப்பிக் கொடுப்பதில் கொஞ்சம் ஒழுங்கீனம் என்ற குற்றத்திற்கு உள்ளாகாமல் இருக்கவில்லை. ஆனால் கோஆபரேடிவ் கிளர்ச்சியை ஜில்லாவில் பரவவைக்கும் உரிமையைப் பெற்றவர்கள் சென்ற இரண்டு கோஆபரேடிவ் வருஷங்களாக சென்னை ராஜதானியிலுள்ள எந்த ஜில்லாவின் சொஸைடிகளின் தவணைமீறின கடன்களையும் இந்த ஜில்லாக்களின்

5L
162043

தவணைமீறின கடன்களையும் ஒப்பிடும்பொழுது இதுகுறைவாகவே இருக்கிறது என்ற ஒரு ஆறுதல் அடைகிறார்கள். என்றாலும் அதுவும் கூட 1914-15ல் 100க்கு 2 விழுக்காடு இருந்தது. 1915-16 முடிவில் 100க்கு 3 வரையில் உயர்ந்து விட்டது. இப்பொழுது சூபர்வைசர்களின் புத்திமதியும் ஒத்தாசையும் ஏற்பட்டிருக்கிறபடியால் இந்த வருஷம் தவணை மீறின நிலுவைகளை அநேகமாய் இல்லாமற் செய்வார்கள் என்று நம்பப்படுகிறது. ஆகையால் சூபர்வைசர்கள் சொஸைடிகளைப் பார்வையிடப் போகும் பொழுதெல்லாம் தவணை மீறின கடன் வசூலைப்பற்றியே முக்கிய கவனத்தைச் செலுத்துவார்கள்.

3. எம்மாதிரி வழியில் இந்த வேலையை நடத்த வேண்டும் என்பது சூபர்வைசர்களின் இஷ்டப்பிரகாரம் விடப்பட்டிருக்கிறது. ஆனால் அவர்கள் போகும் இடங்களில் எல்லாம் சேரக்கூடிய மெம்பர்களையும் பாக்கிக் காரர்களையும் சேர்த்து சொஸைடியின் பண விஷயமான பொறுப்பைப் பற்றியும் அவர்கள் கடன் திருப்பிக் கொடுக்க கால தாமதம் செய்வதாலும் மற்றவர் அப்படி செய்வதை கவனிக்காமல் விடுவதாலும் தங்களுக்கே ஏற்படுத்திக்கொள்ளும் அபாயத்தை வற்புறுத்த வேண்டும். அந்த மாதிரி கூட்டப்படும் மெம்பர்கள் ஜனரல் மீட்டிங்குக்கு வேண்டிய போதுமான "கோரம்" ஆகாவிட்டாலும் பரவாயில்லை.

4. மொத்தத்தில் பாங்கியார் சூபர்வைசர்களுக்கு வற்புறுத்துவது என்னவென்றால் அவர்களுடைய வேலைத்திறத்தை அந்த வேலையின் பிரயோஜனத்தாலன்றி வேறுவிதமாய் அறியப்படாது என்பதே. சூபர்வைசர்கள் இப்போதை விட நன்றாய் வேலையை கவனிக்க வேண்டுமானால் அவர்களுக்கு முன்னால் ஏற்படுத்திக்கொண்ட காலவரைப்படியல்லாமல் ஒவ்வொரு சொஸைடியிலும் போதுமான காலம் தாமதிக்க வேண்டும் என்பதும் சென்டரல் பாங்கி உத்தியோகஸ்தர்களுக்கு தெரியும். ஆகையால் சூபர் வைசர்கள் தடுக்க முடியாத அவசியம் ஏற்படும் காலத்தில் சௌகரியம்போல் ப்ரோகிராமை மாற்றிக் கொள்ளலாம்.

---

## இந்திய யுத்தக் கடனும் பங்காளத்திலுள்ள கோஆபரேடிவ் சொஸைடிகளும்.

கீழ்கண்ட ஸர்க்குலர் பங்காளத்திலுள்ள சென்டரல் பாங்கிகளுக்கெல்லாம் அனுப்பப்பட்டிருக்கிறதாக வர்த்தமான பங்காள கோஆபரேடிவ் ஜர்னலில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது :—

1917-ம் வருஷம் மார்ச்சு மாதம் 19ௗ "ரைடர்ஸ் பில்டிங்"என்ற கட்டிடத்தில் சென்டரல் பாங்கிகளின் பிரதிநிதிகள் சேர்ந்த ஒரு பெரிய மீட்டிங்கில் பெங்காள கோஆபரேடிவ் சொஸைடிகள் யுத்தக் கடனைத்

தாங்கி அதற்காக மனப்பூர்ணமாய் உழைக்க வேண்டும் என்று ஏகோபித்து தீர்மானிக்கப்பட்டது.

மேலும் எல்லா சென்டரல் பாங்கிகளையும் தங்கள் ரிசர்வ் பண்டு துகைகள் எல்லாவற்றையுமோ அல்லது ஏராளமான பாகத்தையோ சண்டைக் கடன் பத்திரங்களும் போஸ்டாப்பீசு சர்டிபிகேடுகளும் வாங்குவதிலும், தங்களிடம் சேர்த்துவைப்பதற்காக அனுப்பப்படும் கிராம சொஸைடிகளின் ரிசர்வ் பண்டுகளையும் அப்படியே உபயோகிக்கப் படவேண்டு மென்றும் தீர்மானிக்கப்பட்டது. ஒவ்வொரு சென்டரல் பாங்கியும் தாங்கள் கொடுக்கக்கூடிய துகையை தீர்மானிக்க வேண்டுமென்றும் அதையும் மனப்பூர்ணமாய் கொடுக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. அப்படிச் செய்வதினால் அவர்கள் தேசாபிமானமான காரியங்களை செய்கிறார்கள். இம்மாதிரிச் சங்கங்களின் நோக்கங்களும் தேசாபிமான விஷயங்களே என்று எதிர்பார்க்கப்படுகின்றன. மேலும் இம்மாதிரி செய்வதனால் அவர்கள் மிக புத்திசாலித்தனமான காரியமேசெய்கிறார்கள். எப்படி யென்றால் அவர்கள் பணத்திற்கு ஜாஸ்தி வட்டியும் கிடைப்பதோடுகூட பணத்திற்கு ராஜாங்கமே ஜவாப்தாரியாயிருக்கிறது என்ற தைரியமும் உண்டு. தவிர, தங்களிடம் நம்பி வைக்கப்படடிருக்கும் துகைகளை தகுந்த பத்திரமான இனத்தில் வைக்காமல் வேறுவிதமாக விநியோகித்தால் தங்கள் மெம்பர்கள் வைத்திருக்கும் நம்பிக்கைக்கு நியாயம் செய்தவர்களாகமாட்டார்கள். தற்காலத்தில் முதல் தரம் பாதுகாப்புள்ள இனம் இந்திய யுத்தக் கடன் பத்திரமே—இந்த க்ஷேம நிதியை தேசீய உதவித்துகையாய் செய்ய வேண்டும் என்பதே அபிப்பிராயம். சென்டரல் பாங்கியார் தாங்கள் எவ்வளவு துகை கொடுக்கப்போகிறார்கள் என்றும் எம்மாதிரி இனத்தில் என்றும் ரிஜிஸ்ட்ரார் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்ள வேண்டும். ரிஜிஸ்ட்ரார் அவர்களும் தேவையான பத்திரங்களையும் சர்டிபிகேட்டுகளையும் வரவழைத்துக் கொடுத்து அவைகள் திருப்பிக்கொடுக்கப்பட வேண்டிய கஜானா முதலியவைகளையும் ஏற்பாடு செய்வார்.

நூற்றுக்கு 3½ வீதம் கவர்ன்மெண்டு பத்திரங்களும் 4 வட்டிவீதம் மாற்றிக்கொள்ளும் கடன் பத்திரங்களும் வைத்திருக்கும் சென்டரல் பாங்கிகள் இவைகளை 5 வட்டி வீதமுள்ள சண்டைக்கடன் பத்திரங்களாக மாற்றிக்கொள்வது நலம்.

சென்டரல் பாங்கியில் சேராத அர்பன் பாங்கிகளும், பங்குகளாலாகிய பாங்கிகளும் இந்த சுற்று நிருபத்திற் கண்டபடி தங்கள் பணங்களை சேமித்து வைக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

உண்மையான தேசாபிமானத்தையும் பணத்திற்கு தகுந்த பத்தியமான ஈட்டையும் கவனிக்கும் ஒவ்வொரு பாங்கியும் தங்களால் இயன்ற பெருத்த துகையை இம்மாதிரி விநியோகிப்பார்கள் என்று நம்பப்படுகிறது.

---

# ஒரு கோவாபரேடிவ் எருச்சங்கம்.

தஞ்சாவூர் ஜில்லாவின் பெரும்பாகத்திலுள்ள நிலங்களில் முக்கியமான பயிருணவு ஸத்துக்களில் ஒன்றாகிய பாஸ்பாரிக் ஆஸிட் என்னும் ஸத்து குறைவாயிருக்கிறது. இது விசேஷமாய் மன்னார்குடிக்கு மேற்கிலிருந்து நாகப்பட்டணம் ரெயில்வே பாதைக்குத் தெற்கேயும், நன்னிலம் நாகப்பட்டனம் தாலுக்காக்களிலும், மாயவரத்திலும், சீயாழித் தாலுக்கா மேற்பாதியிலும் குறைவாக இருக்கிறது. இப்படி நிலத்திலுள்ள ஸத்துக் குறைவை நிவர்த்திசெய்ய ஏற்பாடுகள் செய்யவேண்டி அந்த ஜில்லாவில் ஒரு கோவாபரேடிவ் எருச்சங்கம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. இப்போது அதில் 20 பேர்களுக்குமேல் மெம்பர்களாயிருக்கிறார்கள்.

இந்த சங்கத்தின் நோக்கங்கள் பின்வருமாறு:—

எலும்பு, எலும்பு ஸத்துள்ள உருண்டை கற்கள், மீன் உரம், பிண்ணாக்கு, ஸூப்பர்பாஸ்பேட் என்று சொல்லப்படும் கரையக்கூடிய பாஸ்பாரிக் ஆஸிட் உரம், பசுந்தாள் ஆகிய இவைகளையும் இன்னும் இதர எருக்களையும் வாங்குவது, அவ்வெருக்களை சுத்தப்படுத்துவது, அவைகளை கலப்பது, எலும்புத்தூள், பாஸ்பாரிக் ஆஸிட் ஸத்துள்ள பாறைத்தூள் முதலிய தயார்செய்யப்பட்ட எருக்களை ரொக்கத்திற்கு மெம்பர்களுக்கு விற்பது, இந்த நோக்கங்களை அபிவிருத்தி செய்வதற்கு வேண்டிய இதரவிஷயங்களைச் செய்வது, ஆகிய இவைகள் இந்த ஸங்கத்தின் நோக்கங்களாகும்.

இந்த சங்கத்தார் 5 டன் எலும்புவாங்கவும், 1 டன் பாஸ்பாரிக் நாட்யூல்ஸ் அதாவது எலும்பு ஸத்துள்ள பறைகள் வாங்கவும் தீர்மானித்திருக்கிறார்கள். இந்த ஸங்கத்தில் நான்கு பறையர்கள் மெம்பர்களாய் சேர்ந்து கொண்டிருப்பதோடு, அவர்கள் இப்போது எலும்பு சேகரம் செய்து கொண்டிருக்கிறார்களாம்.

திருச்சிறாப்பள்ளி ஜில்லா பெரம்பலூர் தாலுக்கா ஊட்டத்தூரில் 11-சதுர மைலில் எலும்பு ஸத்துள்ள பாறை கற்கள் இருக்கின்றன. கோயம்புத்தூரிலுள்ள ஸ்டென்ஸ் அன்ட்கோ என்கிற கம்பெனிக்காரர்கள் மாதம் ஸுமார் 100-டன் கற்கள் டன் 1-க்கு ரூ. 15-மேனிக்கு வாங்கி தூள்செய்கிற யந்த்ரத்தினால் தூள்செய்து தூளை டன் 1-க்கு ரூ. 45-ஸுமாருக்கு விற்கிறார்கள். தஞ்சை ஜில்லா ஐக்கிய எரு ஸங்கத்தாரும் இக்கற்களை தருவித்துத் தூள்செய்து மெம்பர்களுக்கு எலும்பு ஸத்து உரமாக விற்பதாகவும் உத்தேசித்திருக்கிறார்கள்.

---

# அநுபந்தம்.

---

## மதுரை இராமநாதபுரம் ஜில்லா நான்காவது கான்பரென்ஸ்

மதுரை இராமநாதபுரம் ஜில்லாக்களின் ஐக்கிய சங்கங்களின் 4-வது கான்பரன்ஸ் 1917ௗ ஜனவரிமீ 20, 21௳ களில் வத்திராயிருப்பில் ம-ா-ா.ஸ்ரீ C.N. கிருஷ்ணசாமி அய்யரவர்கள் M.A.,L.T., அக்கிராசனத்தின்கீழ் நடைபெற்றது. 20௳ காலையில் கனம் ரெஜிஸ்ட்ரார் டிவான் பகதூர் L.D. சுவாமிகண்ணு பிள்ளையவர்களும், கனம் அசிஸ்டண்டு ரெஜிஸ்ட்ரார் P. மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை அவர்களும் கனம் அக்கிராசனாதிபதியவர்களும் வத்திராயிருப்புக்கு விஜயம் செய்தார்கள். இவர்களை கான்பரன்ஸ் வரவேற்பு சபை மெம்பர்கள் வரவேற்று ஊர்கோலத்துடன் அவரவர்கள் ஜாகையில் கொண்டுபோய் விட்டார்கள்.

மாலை 2-மணிக்கு கான்பரன்ஸ் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. சுமார் 100 டிலிகேட்டுகளும் 200 விசிட்டர்க்களும் வந்திருந்தார்கள். அவர்களுள் கனம் ரெஜிஸ்ட்ரார் டிவான்பகதூர் L. D. சுவாமிகண்ணு பிள்ளையவர்கள், கனம் அசிஸ்டண்டு ரெஜிஸ்ட்ரார் P. மீனாக்ஷிசுந்தரம்பிள்ளை அநந்தபூர் செக்ஷன் அசிஸ்டண்டு ரெஜிஸ்ட்ரார் ஸ்ரீ T. ஸ்ரீனிவாசராவ் ராய் சாகேப், K. இராமசாமி அய்யரவர்கள், ம-ா-ா-ஸ்ரீ R. லக்ஷ்மணய்யங்காரவர்களும் விஜயஞ்செய்தார்கள். வரவேற்பு உபந்நியாசத்தை இங்கிலீஷில் கான்பரன்ஸ் காரியதரிசி மிஸ்டர் A. ஸ்ரீனிவாசாசாரியா ரவர்களாலும் தமிழில் வரவேற்புசபை பிரசிடெண்டு மிஸ்டர் T. S. நாராயணய்யங்காரவர்களாலும் படிக்கப்பட்டது. சங்கங்களின் மேற்பார்வைக்கு முக்கியம் யூனியன்கள் தேவை என்றும் அவ்யூனியன் ஸ்தாபக விஷயமாய் டிஸ்டிரிகட்டு பாங்கார் தங்கள் அபிப்பிராயத்தை மாற்றி யூனியன் ஸ்தாபக விஷயமாய் அநுகூலமாயிருப்பதால் யூனியன்கள் ஸ்தாபிக்க வேண்டியது அவசியமென்றும் இன்னும் ஐக்கிய விஷயமாயுள்ள பொது விஷயங்களையும் பேசி முடித்தார். பிறகு அக்கிராசனாதிபதியவர்கள் தன்னுடைய உபந்நியாசத்தை இனிய தமிழ் நடையில் பேசினார்கள்.

பிறகு வடமலைபுரம் விவசாய ஐக்கிய சங்கத்தின் ரிபோர்ட்டை மிஸ்டர் R. ஆனந்தருவ் படித்தார். அதில் இப்பேற்பட்ட விவசயா ஐக்கிய சங்கத்தின் முக்கியத்தையும் அதில் யேற்படும் கஷ்டங்களை நிவர்த்திக்க வேண்டிய வழிகளையும், நாணயச்சங்கமும் விவசாயச் சங்கமும் ஒன்றுக்கொன்று சகோதர முறையில் வேலை செய்யவேண்டிய விதத்தையும் யாவரும் எளிதாய் தெரிந்துகொள்ளும்படி எடுத்துச் சொல்லப்பட்டன. அப்பால் வத்திராயிருப்பு சங்கத்தின் ரிப்போர்ட்டையும் ஸ்ரீவில்லிபுத்தூர் சங்கத்தின் ரிப்போர்ட்டையும் அந்தந்த சங்க காரியதரிசிகள் படித்தார்கள்.

மருநாள் காலை 8-மணிக்கு மருபடி சபை கூடியது. தீர்மானங்களைப்பற்றி யோஜிக்குமுன் வடமலைபுரம் R. ஆனந்தருவ் தன் சங்கத்தின் இரண்டு மெம்பர்களுக்கு தம் கடன்களை ஒழுங்காய் செலுத்தி வருவதற்கும் மகாசபை மீடிங்கு தவராமல் ஆஜரானதற்கும் ரொக்க சன்மானம் கொடுக்கும்படி பிரசிடெண்டு அவர்களை கேட்டுகொண்டார். அவ்விதம் கேட்டுக்கொண்டதில் சங்கங்களில், மெம்பர்கள் தங்கள் கடன்களை சரியாய் செலுத்துவதில் அக்கரை எடுத்துக்கொள்ளுவதில்லை என்றும் சங்கம் விஷயமாய் மகாசபை மீட்டிங்கு கூட்டினால் மெம்பர்கள் ஆஜராகிறதில்லை என்றும் இந்த இரண்டும் எல்லா சங்கத்திலு மிருப்பதால் அப்பேற்பட்ட விஷயங்கள் நேரிடாமலிருக்க வேடுண்மென்றே இந்த சன்மானம் கொடுக்கப்படுவதாயும் இதையறிந்து மற்றவர்கள் தங்கள் கடனை சரியாய் செலுத்தி மீடிங்குகளுக்கு ஆஜராக யேற்படுமென்றும் எக்காரணத்தினாலும் கடன்களை தவணை தவராமல் செலுத்த வேண்டுமென்றும் சொன்னார். பிறகு பிரசிடெண்டு அவர்கள் சில புத்திமதிகளுடன் ஷை சன்மானத்தை அளித்தார்.

பிறகு சிவகங்கை ம-ள-ள-ஸ்ரீ R. லக்ஷ்மணய்யங்காரவர்கள் "கிராமங்களும் ஐக்கிய நாணயச் சங்கங்களும்" என்னும் விஷயமாய் ஒரு வியாசம் படித்தார்கள்.

பெத்து செட்டிப்பட்டி சங்கம் காரியதரிசி தாத்தய்யஞ் செட்டியார் ஐக்கிய சங்கம் எப்படி தன் மெம்பர்களுக்கு ஒழுங்கை கற்பிக்கிறது என்னும் விஷயமாய் ஒரு பத்திரிகை படித்தார்.

பிறகு இதனடியிற் கண்ட விஷயமாய் 12 தீர்மானங்கள் அங்கீகரிக்கப்பட்டன.

(1) ஐரோப்பிய யுத்தத்தில் நமது மாக்ஷிமைதங்கிய சக்கரவர்த்தியவர்களுக்கு பூர்ணஜெயம் கிடைக்கக் கோருவது.

(2) டிவான் பகதூர் M. ஆதிநாராயணய்யா அவர்கள் காலம் சென்ற விஷயமாய் அநுதாபத் தீர்மானம்.



(3) ராவ் சாகேப் K. விஜயராகவாச்சாரியார் காலம் சென்ற விஷயமாய் அனுதாபத் தீர்மானம்.

(4) சங்கங்களை அனுப்பும் மணியாடர்களில் பைசாக்களும் சேர்த்து அனுப்பவும் மணியாடர் கமிஷனில் ரீபேட் கொடுக்கவும் வேண்டும்.

(5) தாலுக்கா போர்டார் செய்யும் வேலைகளை இச்சங்கங்கள் மூலமாய் வேலைசெய்ய அனுமதி கொடுக்கவேண்டும்.

(6) சங்கம் பஞ்சாயத்தார்களை தாலுக்காபோர்டு முனிசிபாலிடி யூனியன்கள் இதுகளில் ஸ்தானம்வகிப்பதற்கும் வோட்டு கொடுக்கவும் லாயக்குள்ளவர்களாக எடுத்துக் கொள்ளவேண்டும்.

(7) டிரஸ்டு பண்டுகளை ஐக்கிய சங்கத்தில் டிபாசிட்டு செய்யும் விஷயம்.

(8) யூனியன்கள் ஸ்தாபிக்கப் படுவதவதினசியம்.

(9) மதுரை இராமநாதபுரம் பாங்கில் கியர்ஷ்புஸ்தகத்தையும் பிரவேச புத்தகத்தையும் தமிழில் எழுதவேண்டும்.

(10) நாணய மல்லாத இதர சங்கங்களை ஸ்தாபிக்கவேண்டும்.

(11) அங்கங்கே சிற்சில சங்கங்கள் சேர்ந்து பொது கூட்டங்கள் கூடவேண்டும்.

(12) ரிசர்வு பண்டுக்கு 6 வீதம் வட்டிகொடுக்கவேண்டும்.

பிறகு கான்பரன்ஸ் செக்ரடெரி மிஸ்டர் R. ஆனந்தருவ் கான்பரன்ஸுக்கு வரக்கூடாதவர்கள் எழுதிய கடிதத்தையும் கான்பரன்ஸுக்கு வியாசங்கள் எழுதியனுப்பியவர்களின் பெயர்களைப் படித்தார்.

அப்பால் பிரசிடெண்டு அவர்கள் கேட்டுக் கொண்டதின் பேரில் கனம் ரெஜிஸ்ட்ரார் L. D. சுவாமிக்கண்ணுபிள்ளை யவர்கள் யூனியன்கள் ஸ்தாபிக்கவேண்டிய விஷயமாய் செய்த தீர்மானமானது நிரம்பவும் முக்கியமென்றும் அப்பேர்பட்ட யூனியன்கள் கூடிய சீக்கிரத்தில் ஸ்தாபிக்கப்படவேண்டுமென்றும் இன்னும் சங்கங்கள் நடக்க வேண்டிய மாதிரிகளைப்பற்றியும் சில நற்புத்திமதிகளைப் புகட்டினார்.

அக்கிராசனாதிபதியவர்களுக்கு வந்தனமளித்தவுடன் சபை கலைந்தது.

அக்கிராசனாதிபதியாகிய ம-ா-ா-ஸ்ரீ, C. N. கிருஷ்ணஸ்வாமி அய்யவர்களின் உபந்நியாசம்.

டெலிகேட்டுகளும் மற்றுள்ளோருமாகிய சபையோர்களே! மகாஜனங்களே! நீங்கள் இங்கு இன்றயனம் கூடி நடத்த உத்தேசித்திருக்கிற பெருங்காரியமின்னதென்று நான் இப்பொழுது விவரிக்கவேண்டியதில்லை. அது உங்களுக்கெல்லாம் செம்மையாய்த் தெரிந்ததே; ஆனால் அக்காரியம் சீராக நடப்பதற்கு ஏற்பட்டதோர் ரங்கமாகிய அக்கிராசனம் வகிப்பதற்கு உபசரணைக் கமிட்டியார் என்னை நியமித்திருப்பதில், அவ்விஷயமாக மட்டும் இரண்டொரு வார்த்தைகள் அவசியமென்று தோன்றுகிறது. கான்பரென்ஸ் செக்ரடேரிகளாகிய இஷ்டர்கள் சுமார் 2௴த்திற்கு முன் என்னை இவ்விஷயமாய் எழுதிக்கேட்டார்கள். அதற்கு உடனே பதில் எழுதத்தோன்றவில்லை. மதுரை, இராமநாதபுரம் ஜில்லாவிலும், அதையடுத்துள்ள ஜில்லாக்களிலும் கோஆப்ரேஷனுக்காக உழைத்துப் பேரும் பெருமையும் பெற்ற பிரபல புருஷர் அநேகரிருக்க அவர்களையெல்லாம் ஒதுக்கி, கோயம்புத்தூர் வரையில் தேடிவந்து, அவ்விடத்திலும் சாமான்னியருள் சாமான்னியனாகிய அடியேனை யிவ்வளவு ஆதரவுடன் கடாக்ஷிக்க என்ன நியாயமிருக்கலாமென்று யோசித்தேன்; ஒன்றும் காணவில்லை. ஆகவே, என் தேகஸ்திதியை உத்தேசித்தும், வேறு சில காரணங்களைக்கொண்டும், என்னை க்ஷமிக்கும்படி கேட்டுக்கொள்வதாகப்பதில் எழுத உத்தேசிக்கையில், என்னுடன் இக்காரியத்தில் உழைத்து வரும் இரண்டொரு நண்பர்கள் தடுத்து, மதுராமனாதபுரம் ஜில்லாவில் கோஆப்ரேஷன் என்னும் காரியம் கோயம்புத்தூரைவிட வெகு தூரம் உயர்ந்து சங்கங்கள் எல்லா வகையாலும் செழித்திருப்பது கொண்டு, அதையிந்த வியாஜமாகப் போய்ப்பார்த்துவந்தால் அதனால் கோயம்புத்தூர் சங்கங்களுக்கும் ஏதாகிலும் நன்மையுண்டாகலாமென்று சொன்னதினால் சரியென்றொப்பி அம்மூலமாக இன்று உங்களுடன் கலந்து விஷயங்களை யறிந்து கொள்ளும்படியான பாக்கியம் கிடைத்தது. அதற்காக எவ்வளவிற்கும் நான் கிருதக்ஞதை கூடியிருக்க வேண்டியவனாகிறேன். இது நிற்க:

சென்ற 13௵ காலமாக இந்நாட்டில் கோஆப்ரேஷன் மூலமாய் நடவடிக்கை நடந்து வந்திருப்பதில் ஒரு விஷயம் பகிரங்கமானதாகச் செய்யலாம். அதாவது, இந்த முறையில் பாங்குகளையோ, வேறு வகைச் சங்கங்களையோ, நடத்திவருவதற்கு இந்நாட்டாருக்கு யோக்கியதை உண்டென்பதேயாம். இது இந்நாட்டில் தழைக்குமா, தழைக்காதாவென்று நாம் சந்தேகப்படுவது இனியனாவசியம். ஆனால் வேண்டியபடி



இது செழிப்பதற்கும், நற்பயனைக்கொடுப்பதற்கும், சில இடையூறுகளிருக்கின்றன. அவைகளையொதுக்கவேண்டும்; சில அபாயங்கள் காண்கின்றன, அவைகளையும் பரிகரிக்கவேண்டும்; இதனால்உத்தரோத்தரம் நாம் அடையவேண்டிய சில பெரும்பயன்களிருக்கின்றன. அவற்றைச் செம்மையாயறிந்து, லக்ஷியமாக்கி, எப்போதும் மறவாமல் கைப்பற்றவேண்டும்.

ஆதலால் இவ்வகைக் காரியங்களை முன்னிட்டேதான் நாம் இப்பொழுது கான்பரென்ஸ் கூடுவது. இனி வெகு வருஷங்களுக்குக் கான்பரென்ஸ்களில் செய்யவேண்டிய முக்கிய காரியமும், விஷயத்தைப் படித்தறிந்தவர்களைக் கொண்டு, அனுபவத்தில் தேர்ந்தவர்களைக் கொண்டும், நமக்கு வேண்டியவைகளைக் கற்று, அனுஷ்டித்து வருவதேயாம்.

ஆகவே இச்சமயம் நான் கூத்துக்கு நின்றுவிட்டபடியால், போட்டிருக்கும் வேஷத்திற்கிணங்க ஏதோ தெரிந்தவரை யிரண்டொரு அம்சங்களைப்பற்றிச் சுருக்கியுரைத்துவிட்டு மேல் நடக்கவேண்டிய காரியங்களைக் கவனிக்க வேண்டுகிறேன். நமது பெரியோர்கள் புராணக்கதை யாரம்பிக்கையில், ஒவ்வொரு நாளும் பூர்வ கதையைச் சங்கிரகித்துச் சொல்லிவிட்டுப் பிறகு ஆரம்பிப்பது தொன்முறையாதலால் அதையே யனுசரித்து நானும் கோஆப்ரேஷன் பூர்வகதையைச் சுருக்கிச் சொல்ல அனுமதி வேண்டுகிறேன்.

'கோஆப்ரேஷன்' என்பது இந்நாட்டில் இப்பொழுது சுமார் 13௵மாக பிரபல மாகிவருவது உங்களுக்குத் தெரியும். ஆனால் இது மேனாட்டில் சுமார் 75 ௵ங்களுக்கதிகமாகவே பிரபலித்து வந்திருப்பது சிலருக்குத் தெரியாமலுமிருக்கலாம். இந்த ஆங்கில பதத்திற்கு "பரஸ்பர சகாயம்" என்று பொருள். இது மேனாட்டு வைசிக நூற் பரிபாஷைகளிலொன்றாகும். 'பரஸ்பரம்' என்றதனால், இது சம்பந்தப்பட்ட வரை யிரண்டோ, அதிகப்பட்டோ கக்ஷிகளிருப்பதாக யாரும் அனுமானிக்கலாம். அது வாஸ்தவம். அவற்றிற்குத் தமிழ் நாட்டில் வெகுகாலமாய் பொருள், ஏவல், என்ற பெயர்கள் வழங்கி வருகின்றன. 'பொருள்' என்றால் முதலாளிகளையும் 'ஏவல்' என்றால் உழைப்பவரையும் குறிப்பிட்டுப் பேசுவது சாமான்னிய வழக்கம்.

உழைப்பவரே பல சந்தர்ப்பங்களில் முதலும் போடுவதுண்டு. சில்லரைக் கடைக்காரர், சிறு குடித்தனக்காரர் முதலியோர் இவ்வாறு கைமுதலும் போட்டு, உழைத்தும் வந்து காலக்ஷேபஞ் செய்கிறார்கள். ஆனால் அவர்களைப் பற்றி நாம் இங்கு பிரஸ்தாபிப்பது அ

வசியம். பொருளும் ஏவலும் இரண்டுபட்டு பிரபலித்திருப்பதைத்தான் நாம் கவனிக்கவேண்டும். இங்கிலாந்து முதலிய மேனாட்டுப் பிரதேசங்களில், சுமார் 200 ௵ங்களுக்கதிகமாகவே பொருளும் ஏவலும் இணைபிரிந்து போய்விட்டன. நீராவியந்திர சகாயத்தால் நெசவு முதலிய தொழில்கள் பிரபலிக்கப்பிரபலிக்க இவற்றுள் கக்ஷிவாதமும் பிரபலித்து அவ்வகைத்தகரார்களில், 'பொருள்' என்றால் முதலாளிகளுக்கு புத்தி நுட்பமும், கூலிகொடுக்கும் பெருமையுமிருந்தால், அவர்கள் கைம்மேலிட்டு, ஏழைகளாகிய கூலிக்காரர் பிழைப்பு பலவிதத்திலும் மோசமாகி வந்தது. பிழைக்க வழிதெரியாத இவர்களில் பலர், யந்திரங்களைப் பாழாக்கியும், வேறு வகையில் சச்சரவு செய்தும், பல வருஷங்களாகத் தபித்து வந்தார்கள். அதனால் அவர்களுக்கு உபத்திரவமதிகரித்ததேயொழிய வேறுபலனுண்டாகவில்லை. இப்படித் தருமங்குன்றி யதருமமேலிட்டு வினை விளை காயுமானால்; அதற்குயார் மூலமாகவாவது தக்க பரிகாரமுண்டாக்குவது பகவத் சங்கல்பமானதால், அதையனுசரித்து, சுமார் 1844-ம் ௵ முதல் கூலிக்காரருக்குச் சரியான பரிகார முறையேற்பட்டு நாளதுவரை அது கோஆப்ரேஷன் என்னும் பெயரால் பிரபலித்து வருகிறது. அந்தக்கதை விவரிப்பதற்கு இது தருணமன்றாதலால், அதன் தத்துவத்தை மட்டும் நாம் கவனிப்போம். 'முதலாளிகள்' என்றொரு கக்ஷியும், 'தொழிலாளிகள்' என்று மற்றொரு கக்ஷியுமிருந்ததனாலல்லவா, பரஸ்பர மாச்சரியத்திற்கிடமுண்டாகி வலியது மேன்மேலெழ, மெலியது தாழ்ந்து, வாயால் வர்ணிக்க முடியாத கஷ்டத்திற்கிடமுண்டாயிற்று. இவ்விரண்டு சாதனங்களும் ஒரே கக்ஷியாகி விட்டாலோ, சச்சரவிற்கிடமேயில்லையல்லவா? ஆதலால் இவ்விரண்டையொன்றாகப் பிரயத்தனப்பட்டு நல்ல முகூர்த்தத்தில் இங்கிலாந்தில் சிலர் காரியமாரம்பித்ததுதான் 1841-ம் ௵த்திய வைபவம். மேற்குறித்தபடி சில்லரைக்கடைகள் முதலியவிடங்களில் நடப்பது போலவே பெரிய யந்திர முதலிய தொழில் வகைகளிலும், பெருத்த வியாபாரங்களிலும், பாங்குகள் முதலிய சாதனங்களிலும் காரியம் நடக்கப்பார்ப்பது இதன் ரகசியமாம். பாங்கு ஒன்றை மட்டுமே யெடுத்துக்கொள்வோம். இப்பொழுது சாமான்னியமாய் நம்மைச் சுற்றியிருப்பவர் லேவாதேவி செய்வதைச் சற்று கவனிப்போம். சொத்து பலத்து, ஐயாயிரம், பதினாயிரம் லக்ஷம் என்று பெரும்படியாக வாங்குபவரையும், கொடுப்பவரையும் நாம் முதலிலொதுக்கிவிடுவோம். அவர்களுக்குள் கஷ்டமில்லையென்றில்லை. ஆனால் அதைப்பரிகரிக்க நாம் இப்பொழுது புகவில்லை. நடுத்தரமானவர்களையும், கேவலமானவர்களையுமே கருதி நாம் உழைப்பதால், அவர்கள் கதி யெப்படியிருக்கிறதென்பதைத்தான் நாம் இப்



பொழுது விசாரிக்கவேண்டும். இவ்வகையோருக்கு கடன்கொடுப்பவர் இரண்டொரு வகையார்தான். முதலாவது நபர்கள் இவர் கிராமங்களில் குடித்தனம் செய்பவராயுமிருக்கலாம் அல்லது செட்டிமார் போன்ற லேவாதேவிக்காகவே வந்து சேர்ந்தவர்களாகலாம். எப்படியாயினும், இவ்வகை நபர்களுக்கு கடன் வாங்குபவர் எக்கேடுகெட்டாலும் ஆகவேண்டியதொன்றுமில்லை. வாங்கிய கடனை வட்டி தெண்டம் முதலிய பரிவாரங்களுடன் வாப்ஸ் செய்துவிட்டால் சரி. கடன் வாங்குவது எதற்காக? அதனால் வாங்குபவன் முன்னுக்கு வரலாகுமா? கட்டுவதற்கு வகை என்ன? இது முதலிய விஷயங்களையிவர் கவனிப்பதேயில்லை யல்லவா? இனியவர்களைவிட்டு, நிதிகள் முதலிய ஜாயிண்டு ஸ்டாக்கு பாங்குகளைக் கவனிப்போம். அவைகளும் அப்படியேதான் தாங்கள் கொடுக்கும் பணம் தகராரில்லாமலோ, தகராருடனோ வாப்ஸ் ஆகிவிட்டால் போதுமென்கிற நோக்கத்தை முன்னிட்டு வியாபாரம் செய்கிறார்களல்லது, வாங்குபவர் முன்னுக்கு வரவேண்டுமென்கிற எண்ணம் சிறிதாகிலும் மேற்கொண்டு வராவதில்லை. இது நம்மிலனேகமாய் எல்லோருக்கும் அனுபவமாகி வந்திருப்பதாம்.

இப்பொழுது கோவாப்ரேட்டிவ் பாங்குகள் செழித்தால், அதனால் இந்ததோஷம் பரிகாரம் ஆகுமா ஆகாதாவென்பது விளங்கும். கோவாப்ரேட்டிவ் பாங்குகளில் உழைத்துவருபவரெல்லாரும் பாங்குகள் நேராய் நடந்துவருமளவிற்கு மேற்குறித்த பெருத்ததோஷம் காணமாட்டாதென்று உறுதிமொழி கூறுவார்கள். ஏன்? பொறுப்பு வரையறுபடாத கிராமப் பாங்குகளில் சம்மந்தப்படுபவர் ஒவ்வொருவருக்கும் பாங்கின் லாப நஷ்டம் மெம்பர்களாகிய சகலரையும் தொடருமென்பது தெரியும் அல்லது தெரிந்து தீர வேண்டும். ஆகவே, பஞ்சாயத்தார் செய்துவரும்வியாபாரம் கிரமப்படி நடக்கிறதா இல்லையாவென்று ஒவ்வொருவரும் பார்க்கவேண்டியிருக்கிறது. ஆதலால், ஒவ்வொரு கடனும் கொடுக்குமுன் வாபஸ் வருமாவென்கிற உறுதியையும், எப்படிச்செல்லாகிறதென்கிற ரகசியத்தையும் பஞ்சாயத்தார் அறிந்து, வசூல் செய்வதிலும் எதிராளியின் கஷ்டசுகத்தை விசாரித்து, தக்க வண்ணம் ஏற்பாடு செய்யவேண்டியவராகிறார்கள். இப்படி நடப்பதில் கொடுப்பவர்க்கும் சுகிர்தம், கொள்பவர்க்கும் சுகிர்தம் விளைகிறது. இந்த தருமத்தைப் பரிபாலனம் செய்து வருமளவிற்கு இந்த சுபலக்ஷணங்களும் தழைத்தோங்குமென்பதிற் சந்தேகமேயில்லை.

பாங்குகளுக்கேற்பட்ட நியாயமே வேறுவகைத் தொழில்களுக்குமாகும். விவசாயம், பண்டமாற்று, கைத்தொழில்கள், யந்திரத்தொழில்

கள் முதலிய எவ்வகைத்தொழிலைக் கவனித்தாலும், இதுவரை நடந்துவந்ததில் கக்ஷிஇரண்டுபட்டே வந்திருப்பது வெளியாகும். முதலாளிகள் புத்திக்கூர்மையுடையவராயும், மற்றையக்கட்சியார் ஏமாந்தவராயுமே இருந்துவந்திருக்கிறார்கள். உலகத்தில் எக்காலத்திலும் சூட்சும புத்திகள் கொஞ்சமாயும், சாமான்னியர் அதிகரித்துமிருந்து வந்திருப்பதால், வெகுகாலமாய் பெரும்பாலார் கஷ்டஜீவனமே செய்து வருகிறார்கள். ஆகவே இப்பெரும்பாலார்க்கு அவரவர் பாடுபட்டுத்தேடுவதை யவரவரே யனுபவித்து, அவரவர் குஞ்சுகுழந்தைகளுக்கு உதவுமாறு உபகரிப்பதே கோவாப்ரேஷனுக்குள்ள முக்கிய நோக்கமாம். இடைக்கொள்ளைக்காரர் எவ்வளவிற்குக்குறையலாமோ அதை விசாரித்து படிப்படியாய்க் குறைத்து, முதலாளிகளும் தொழிலாளிகளும் ஒரே கட்சியாகவேண்டுவது நமது மனோரதமாம்.

நல்லது இந்தப்புராணமெல்லாம் மேனாட்டில் யந்திரசகாயத்தால் கைத்தொழிலும் வர்த்தகமும் மேம்பட்டதில் கண்டவர்லக்ஷணமாக அதைக்கொண்டு நமக்காகவேண்டியதென்ன? இந்தியாவிலோ 100க்கு 80 முதல் 90 வரை ஜனங்களுக்கு விவசாயமே முக்கிய ஜீவனோபயமாயிருப்பதால் இந்தப்பரிகாரம் அனாவசியமல்லவாவென்று யாரேனும் கேட்கலாம். அதற்குபதிலாவது இந்நாட்டுக்கதையைச் சுமார் 150 வருஷகாலத்திற்கு முன்னெடுத்து சுருக்கியுரைப்பதேயாம். பழைய காலத்தில் பண்டங்கள் விலை சலிசாகவிற்றதாகவும், இப்பொழுது விலையுயர்ந்து வருவதாகவும் நாமெல்லாரும் சொல்லிக்கொள்ளுகிறோம். இதற்குப்பல காரணங்களுண்டாயினும் முக்கியமான காரணமாவது ரூபாய் மலிந்துவிட்டதாகும். அதவாது பழையகாலத்திலிருந்த ரூபாய் மொத்தத்தைக்காட்டிலும் பலமடங்கு அதிகமாக ரூபாய் இக்காலத்தில் நடமாடி வருகிறது. இப்படி ரூபாய் மலிந்து வந்ததில், வேறுதேசங்களிலாகியபடியே இந்தியாவிலும், பணம்என்பது, சாவுகார்கள் என்னும் சிலர்கையிலேயே மிகுந்து, பெரும்பாலார் பணம்வேண்டினால் இவர்கையை எதிர்பார்க்கவேண்டியதாயிற்று. நமதுநாட்டில் குடித்தனக்காரருக்கு பலகாரியங்களுக்கு பணம்வேண்டிவருவதில் இக்காலத்தில் சர்க்கார் கிஸ்து ஒருபெரிய அம்சம். அதை வருஷா வருஷம் தப்பாமல் செலுத்திவருவது ஒருபெரியகாரியம். ஆகவே, இது முதலிய காரணங்களால் இந்தியாவில் பலமாகாணங்களில் குடித்தனக்காரர் காலக்கிரமத்தில் கடனாளிகளாகி, சாகுபடி பூமிகள் சாவுகார் (பணம் பெருத்தவர்) சுவாதீனமாகிவந்தன. இப்படி குடிமெலிந்து வருவதைக் கண்டதும் நம்மவருள் விவேகிகள் பலரும், இந்தியா கவர்ண்மெண்டார் புரொவின்ஷியல் கவர்ன்மெண்டார் முதலியோரும் சிதாப் துலையப



சட்டங்கள் நிரூபணஞ்செய்து அமுலுக்குக் கொண்டுவந்தார்கள். நமது மாகாணத்தைப் பொறுத்தமட்டில் லாண்டு இம்ப்ரூவ்மெண்டு ஆக்ட், அக்ரிகல்ச்சரல் ரிலீவ்ஸ் ஆக்ட், முதலியசட்டங்கள் நாளதுவரை அதற்கு சாக்ஷ்யமாக நிற்கின்றன. ஆனால் இவைகள் ஒன்றும் உத்தேசித்த பலனைக்கொடுக்கவில்லை. காரணம் சுலபமாய் விளங்கும். சுவாமி வரங்கொடுப்பது முதலாவது துர்லபம், அப்படித் தவறியேதாகிலும் கிடைத்தாலும் அடுத்திருக்கும் பூசாரிகள் அதைக் கெடுத்துவிடுவது பழைய அனுபவம். ஆதலால், இவையொன்றும் பலிக்காமற் போகவே நமது மதிராசு கவர்ன்மெண்டார்சுமார் 1890-ம் ௵ சந்தர்ப்பத்தில் தங்கள் உத்தியோகஸ்தர்களில் திறமையும் நற்குணமும் முற்றியவராகிய (இப்பொழுது Sir பட்டமடைந்த) நிக்கல்ஸன் (F. A. Nicholson) துரையை ஐரோப்பாவில் போய்க் கோஆப்ரேஷன் முறையில் விவசாயிகளுக்குச் சகாயம் எப்படிக் கிடைக்கிறதென்று விசாரிந்து வரும்படி நியமிக்க, அவரும் அப்படியே சென்று 2 ௵ காலம் சிரமப்பட்டுப் பெரிய ரிப்போர்ட்டு ஒன்று தயாரித்துப் பிரசுரப்படுத்தினர். ஆனால் அக்காலத்தில் அவருக்கு மேலதிகார ஸ்தானத்திலிருந்தவர்கள் அந்தரிப்போர்ட்டு உபயோகமில்லையென்றும், நமது ராஜதானியில் சாவுகார் என்கிற பூண்டே கிடையாதென்றும், கிராமங்களில் இரண்டுபெயர்கூடி யொரு காரியமாகாதென்றும், மனிதனை மனிதன் நம்புவதில்லையென்றும், இது போன்ற பல நியாயங்களால் கோஆப்ரேஷன் இந்நாட்டில் முளைக்கவே முளைக்காதென்றும், முளைத்தாலும் தழைக்காதென்றும் சொல்லி முடித்துவிட்டார்கள். பிறகு 10 ௵ காலம் வரை யிதைப்பற்றி யொன்றும் சப்தம் கேட்கவில்லை. கடைசியாகலார்ட் கர்ஸன் இந்தியாவிற்குப் பிரதிநிதியாக வந்ததுமேல், அவருடைய முயற்சியினால், இதற்கு மறுபடிஉயிர் வந்து 1904 ௵த்தில் சட்டமொன்று பிறந்தது. இதுவரை நமக்கு பூர்வகதை சங்கிரகமென்னல் தகும். இந்த சட்டம் பிறந்து, ரிஜிஸ்ட்ரார்களென்ற பெரிய உத்தியோகஸ்தர்களும் அவர்கள் ஆதீனத்தில் சில்லரை உத்தியோகஸ்தருமேற்பட்டு, நம்மவர்களுக்கு உபதேசம் செய்து உழைத்து வந்ததில் சென்ற ௵ கடைசி வரை ஆற்றொழுக்கம் இந்த முறையில் காரியம் பிரபலமாகியே வந்திருக்கிறது. உதாரணமாகச் சில அம்சங்களை மாத்திரம் நாம் ஞாபகப்படுத்திக்கொள்வது போதும்; மதிராஸ் ராஜதானியொன்றில் மட்டுமே விசாரித்தால் இப்பொழுது சுமார் 2,000 கோஆப்ரேடிவ் சங்கங்களிருக்கின்றன. மெம்பர்கள் இரண்டு லக்ஷத்திற்குக் குறைவில்லை. வியாபாரம் முதல் பக்கம் பக்கமாக அருநூறு லக்ஷம் வரை சொல்லிக்கொள்ளலாம். க்ஷேமநிதி பத்துலக்ஷம் வரை பெருகிவிட்டது. 1914 ௵ முதல் ஏழுவருஷகாலத்திற்குள் இக்

காரியம் இங்கு இவ்வாறுபெருகி வந்ததைக் கவனித்தவர்களெல்லாம் 'இதென்ன ஆச்சரியம், இதெப்படி இந்தியாவில் இவ்வளவு சீக்கிரம் பிரபலித்தது!' என்றே பேசி வந்தார்கள். ஆனால் அக்காலத்திலேற்பட்டிருந்த சட்டம் நாணயச்சங்கங்களை மட்டுமே உத்தேசித்துப் பிறந்ததாகையால், அனேகமாய் அவை நாணயச்சங்கங்களாகவே செழித்தன. வேறு வகையில் சங்கங்களேற்படவேண்டுமானால், சர்க்காரிடம் விசேஷக்கற்பனை வாங்கியாகவேண்டியிருந்ததில், இங்கொன்று, அங்கொன்றாக, ஏதோ சில சங்கங்கள் மட்டும் வேறு வகைகளிலேற்பட்டு, ஒருவாறாக நடந்துவந்தன. இது பெருத்த கஷ்டமாயிருந்ததால், இதைப்பரிகரிப்பதற்காகவும், வேறு சில தோஷங்களைப்பரிகரிப்பதற்காகவும், 1912-ம் ௵த்தில் இந்தியாகவரன்மெண்டார் பழைய சட்டத்தைத் திருத்தியும், விளக்கியும், கூட்டியும், குறைத்தும், புதுப்பித்தார்கள். அந்தச்சட்டம் சுமார் ஐந்து ௵காலமாக ஜாரியிலிருந்து வந்திருக்கிறது. இது பிறந்து இரண்டு ௵ ஆகையில், இந்தியா கவர்ன்மெண்டாருக்கு ஏதோ பலவகைகளில் சந்தேகம் தோன்றி அதை நிவர்த்தித்துக்கொள்வதற்காக அநுபோகமுள்ள எட்டு பெரியோர் கூடியதோர் கம்மிஷனைத் தாயரித்தனுப்ப அவர்கள் நாடெங்கும் விஷயந்தெரிந்தவர்களை விசாரித்துப் பெரிதாக ஒரு ரிப்போர்ட்டுப் பிரசுரித்திருக்கிறார்கள். இதன்மேல் இந்தியா கவர்ன்மெண்டாருடைய நோக்க மின்னதென்று இன்னும் விளங்கவில்லை. இப்படியெல்லாமிருப்பதில் இதுவரை யாகியதென்ன, இனி ஆகவேண்டியதெனையென்று நாம் விசாரிக்கவேண்டும். இதுதான் இச்சமயம் ஆங்காங்கு கூடும் கான்பரென்சுகளில் அவசரமாய் கவனிக்கவேண்டிய காரியமென்று காண்கிறது.

முதலாவது மேற்கூறியபடி சுமார் 2,000 நாணயச்சங்கங்களாயிருப்பது வாஸ்தவம். மெம்பர்களும், வியாபார முதலும், க்ஷேமநிதியும் பெருகி வருவது வாஸ்தவம். இனி இம்மாதிரிச்சங்கங்கள் பெருகுவதும் அனேகமாய் நிச்சயமென்றே சொல்லலாம். ஆனால் இவ்விஷயத்தில் பிரமித்து ஆனந்தக்கூத்தாடுவதெல்லாம், நமது மாஜி ரிஜிஸ்திரார் ஸ்ரீமான் ராமச்சந்திரராயர் சொல்லியதையும் வங்காள கவரனர் கார்மிக்கேல் பிரபு சொல்லியதையும் மறக்கக்கூடாது. அதாவது இதுவரை நடந்துவந்திருக்கும் காரியத்தினால், இந்நாட்டுக் குடியானவர் கஷ்டம் எல்லாம் நீங்கி சுகப்படும் காலம் வந்து விட்டதாக எண்ணுவதாம். இது பெரிதும் தப்பெண்ணம். வாஸ்தவத்தில், குடியானவர் கஷ்டத்தில் ஆயிரத்திலொரு பங்குகூட இன்னும் தீரவில்லை. சங்கங்கள் லக்ஷத்திற்கதிகப்பட வேண்டும். மெம்பர்கள் கோடிக்கணக்காக



வேண்டும். வியாபார முதலும் அதையனுசருத்துப் பெருகவேண்டும். அக்காலத்தில் வேண்டுமானால் நாம் ஏதோ உலகம் உத்தாரமாகி விட்டதாகத் தமுக்கடிக்கலாம். அதுவரை நாம் அமர்ந்து வேலை செய்யவேண்டியவர்களென்பதை மறக்கக்கூடாது.

நாணயச்சங்கங்கள் பெருகப்பெருக, வேறுசில உபத்திரங்களுண்டாகி அவற்றுள் சில பரிகாரமாகியும், பலவாகாலும் வருத்துகின்றன. அவற்றுள் முதலாவது இச்சங்கங்களுக்கு வேண்டிய வியாபாரமுதல் தேடுவதாம். ஆரம்பத்திலிருந்து இந்த ராஜதானியில் சர்க்கார் பணத்தை யாரும் நாடவில்லை. அதற்குமுதல் ரிஜிஸ்திராராகியிருந்த ஸ்ரீமான் ராஜகோபாலாச்சாரியார் காரணம். அது எவ்வளவிற்கும் சிலாகிக்கத்தக்கதாம். யோசிப்பவருக்கு விளங்கும் மகாஜனங்களுக்குள் சேரகூடிய பணத்தைக் கொண்டே இந்த நாணயச் சங்கங்கள் நாளதுவரை வியாபாரம் நடத்திவருகின்றன.

இதற்காக முதன்முதலேற்பட்டது மதிராஸ் ஸெண்ட்ரல் அர்பன் பாங்கு. அதன்மூலமாய்க் கோஆப்ரேட்டிவ் சங்கங்களுக்கு நாளதுவரை சுமார் 40 லக்ஷத்திற்குமேலேகவே பணம் உபகாரமாகி வந்திருக்கிறது. ஆனால், இவ்வொருவகையில் அது நமக்குப்பேருதவி செய்திருப்பது வாஸ்தவமாயினும், சென்ற 5–6 வருஷங்களாக அந்தப்பாங்கின் மேல் நம்முன் அனேகருக்கு வலுத்த அசூயை உண்டாகியிருக்கிறது. அந்தக் கதையை இங்கு விரிப்பது அனாவசியம். ஏனெனில் அது இந்தமத்தியில் பலவிதத் திருக்கூத்துகளாடியதென்றாலும், சமீபத்தில், யார் செய்த புண்ணியத்தினாலோ, அதன் நிர்வாக சபையோர் ஓர்வழி திரும்ப இஷ்டமுள்ளவராகக் காட்டி வருவதால், அதற்கும் நல்லதிசையிருப்பதாகவே வைத்துக்கொள்ளலாம். மதிராஸ் ஸெண்டரல் அர்பன் பாங்கு வேலையாரம்பித்து, டிபாசிட்டுகள் மூலமாய்ப்பணம் பெருகி வருவது கண்டதும், அக்காலத்திய ரிஜிஸ்தரார் அதையனுசரித்து ஒவ்வொரு ஜில்லாவிற்கு மொவ்வொன்றாகச் சில ஜில்லா நகர பாங்குகளை யேற்படுத்தினார். திருச்சி, சேலம், கோயம்பத்தூர் ஆகிய இவை அவற்றுள் முக்கியமானவை. இவைகளாலும், பின்னிட்டு மதுரை முதலிய இடங்களில் ஏற்பட்டவைகளாலும், நாணயச்சங்கங்களுக்கு வேண்டிய வியாபார முதல் கிடைத்து வந்திருக்கின்றன. அம்மட்டில் அவைகளால் காரியசித்தி யுண்டானதாகப் பெருமைப்படலாம். ஆனால் சங்கங்கள் பெருகப்பெருக வியாபாரமுதல் அதிகமாக வேண்டியதுடன், அவைகளைக் கிரமமாகத் தணிக்கைசெய்து, நல்வழியிலேயே நடக்குமாறு தக்கவண்ணம் போதிப்பதற்கும், கோஆப்ரேடிவ் சாஸ்திரத்தை விட்டு அனுஷ்

டானம் விலகாமற் பார்ப்பதற்கும் ஒரு சாதனம் தேவையாயிற்று. கொஞ்சகாலம் வரை சர்க்கார் செலவில் இனஸ்பெக்டர்கள் ஏற்பட்டு வந்ததில், செலவு அதிகரித்து வந்தது கண்டு, மதிராஸ் கவர்ன்மெண்டார், இவ்வகைச்செலவு மிதமீறிப் போகக்கூடாதென்றும், மகாஜன க்ஷேமத்தை நாடியே இக்காரியமாவதால் மகாஜனங்களே இந்தச் செலவிற்கு வகைதேடவேண்டுமென்று சொல்லலானார்கள். அதுமுதல் இவ்வகையில் கக்ஷியிரண்டுபட்டு தர்க்கம் அதிகரித்து அதன் பலன் இப்பொழுதுதான் விகிதமாகிவருகிறது. வாதம் பலத்துவருகையில், மதிராசு ஸெண்ட்ரல் அர்பன் பாங்காரும், திருச்சியாரும் ஒருகட்சியாக நின்று, நாம்முதலிலேற்பட்டது நாணயச் சங்கங்களுக்கு 7½ வீதம் வட்டிக்கு வேண்டியபோது பணம் கொடுப்பதற்கே யாதலால், மற்ற விவகாரங்களொன்றும் தங்களுக்கு சம்பந்தப்பட்டவையல்லவென்றும், தாங்கள் கோஆப்ரேட்டர்களல்லவென்றும், இன்னும் இவை போன்ற அற்புதமான பல நியாயங்களைக் கொண்டு இருக்கும் ஸ்திதிக்கு ஒரு ரேகையளவாவது விலகமாட்டோமென்றார்கள். மற்ற ஜில்லா பாங்குகளோ சர்க்கார் கேட்டது சரியாயினும், அல்லவாயினும், தாங்கள் கொடுத்து வாங்கும் பணம் சரியாக விநியோகமாகிறதா, சங்கங்கள் சரிவர நடந்து வருகின்றனவாவென்று பார்ப்பது தங்கள் கடமை யென்றுணர்ந்து, அவ்வாறு தணிக்கை செய்வதற்கொப்புக் கொண்டு வந்தன. ஆகவே இப்பொழுது ஒவ்வொரு ஜில்லாவிலுமுள்ள சங்கங்கள் ஆங்காங்கு ஒன்று சேர்ந்து சில்லரை யூனின்களாகி, இவற்றையெலாம் ஜில்லா யூனியனுக்கு ஆதீனமாக்கி அந்த ஜில்லா யூனியன், ஜில்லா பாங்கு என்ற இரண்டு சாதனங்களை யொன்றாக்கப் பிரயத்தினம் நடந்து வருகிறது. கிரமப்படி நடந்தால் இம்முறைப்படி கிராமநாணயச் சங்கங்களும், ஸெண்டரல் பாங்குகளும் வேற்றுமைப் படுவதற்கிட முண்டாகாது. கோஆப்ரேஷனுக் கேற்றபடி நியாயமாக நடக்குமென்பதே என்போலியர் துணிவு. ஆனால் இரண்டோரம்சத்தில் மட்டும் அபிப்பிராய பேதமிருக்கிறது. சில கோஆப்ரேடர்கள் இம்மாதிரி பாங்குகளில் நபர்களாகிய மெம்பர்களைக் கூடியசீக்கிரம் ஒதுக்கிவிட வேண்டுமென்கிறார்கள். தவிர பங்குபணத்தின் லாபத்தையும் குறைத்தே வரவேண்டுமென்கிறார்கள். ஆனால் மேல் கூறியபடி நாணயச்சங்கங்கள் ஆயிரமடங்கு அதிகரிக்கவேண்டுமென்பதையும், வியாபாரமுதல் கோடி கோடி யாகவேண்டு மென்பதையும் கவனிப்பவர்க்கு, லேவாதேவியில் தேர்ந்த விவேகிகள் சிலர் நமக்கு எக்காலத்தும் உதவிசெய்தேயாகவேண்டு மென்றும், மொத்தத்தில் உலகத்தவருக்கு வெல்லக்கட்டி காட்டியே வேலை வாங்கவேண்டியிருப்பதை மறக்கக்கூடாதென்றும் காணும். இந்த விஷ



யத்தை நீங்கள் வேண்டினால் விவகரித்து ஒருவகையாகத் தீர்மானிக்கலாம்.

தவிர இப்பொழுது ஜில்லாப்பாங்குகள் பலவிருப்பத்தில் அவைகளுக்குள் ஐக்யத்தியம் ஒரு விஷத்திலுமில்லை. அதது தன் காரியத்தையே கவனித்துவருகிறது. சிலவற்றில் பணம் செலவில்லாமல் கிடக்கிறது. சிலவைகள் பணம் போதாமல் தவிக்கின்றன. அசிஸ்டண்டு ரிஜிஸ்திரார்கள் அப்போதப்போது கொஞ்சம் கைமாற்று செய்துவருகிறார்கள். என்றாலும் சம்பிரதாயமாய் ஒருஏற்பாடும் நாளதுவரையில்லை. ஆதலாலும், மதிராஸ் ஸெண்டரல் பாங்கின்பிடிவாதத்தாலும், சென்றஇரண்டுவருஷமாக நாமவரும், டிபார்ட்டு மெண்டாரும், இந்த ராஜதானிக்கு ஒரு தலைமைப் பாங்கு ஏற்படவேண்டியோசித்துவருகிறார்கள். மொத்தத்தில் எல்லோருடைய உத்தேசமும் மேற்கூறியபடி கொடுப்பவரும் கொள்பவரும் ஒருகக்ஷியாக வேண்டுமென்பதேயாம். ஆனால் இப்பொழுது மதிராஸ் ஸெண்டரல் அர்பன் பாங்கார் ஏதோ ஒருவழியாகத்திரும்பிவருவதால், புதிதாகப் பாங்கு நிர்மாணம் அனேகமாய் அவசியமிராதென்று காணுகிறது. ஆதலால் அதை யிங்கு விவரிக்க இப்போது அவசரமில்லை. யூனியன்கள் எங்கு மேற்படவேண்டுவதும், ஜில்லா யூனியன்களாக வேண்டுவதும், அம்மூலமாய் ஜில்லாவிலுள்ள சகல சங்கங்களும் சீராக நடக்க வகைதேடுவதும், உங்களுக்கு அவசரமாயாகவேண்டிய காரியம். மதுரை ராமநாதபுரம் ஜில்லாவில் இம்மாதிரிச் சில்லரை யூனியன்கள் இன்னும்பெருகவில்லை. ஆனால் இஜ்ஜில்லா கோஆப்ரேட்டர்களில் சிகாமணியாய் விளங்கும் ஸ்ரீமான் ராமசுவாமி அய்யரவருக்கு இது சரியென்று சமீபத்தில் பட்டிருப்பதால், கூடியசீக்கிரம் இவ்வாறு யூனியன்கள் ஆங்காங்கு ஏற்படுமென்று நம்புகிறேன். இப்பொழுது நடக்கிற மாதிரி எல்லாக்காரியங்களையும் ஜில்லா பாங்கே எடுத்துக்கொள்வதில் இரண்டு தோஷங்கள் வலுக்கும். முதலாவது கோஆப்ரேஷன் என்பது அவரவர் நலத்தை அவரவரே நாடியுழைத்து முன்னுக்குவரவேண்டிய விஷயமாதலால், கூடியமட்டில் கிராம பாங்குகள் தங்கள் முயற்சியாலேயே தோஷங்கள் பரிகரித்து முன்னுக்குவர வேண்டுமென்பதும், சில்லரையூனியன் அவ்வாறே தமக்குச் சம்பந்தப்பட்ட பாங்குகளை கட்டியாளவேண்டுமென்பதும், ஜில்லாயூனியன் இவற்றைமேல் தணிக்கைமட்டும் பார்ப்பதொழிய வேறுவிதமாக அதிகாரம் செலுத்தித் தேனுக்குமணியம் கொடுத்த நியாயமாய் நடத்தக்கூடாதென்றும் விவேகிகள் ஒப்புக்கொள்வதால், அந்தஸ்மிருதிக்கு விரோதமாய் நடப்பது நன்றன்று.

"ப்ரஜாநாம் விநயா தானாது," என்று மகாகவி நமது சக்கரவர்த்திகளைப் புகழ்ந்தது காவிய பரமாகவாஸ்தவமல்லது, லௌகிகமாகாது. வேறு எக்காரியத்தில் அது வாஸ்தவமாகிலும், கோ ஆப்ரேஷனுக்கு அது கூடவேகூடாது. மொத்தத்தில் நம்மெல்லோருக்கும் தாமச குணம் அதிகம். அதை யொதுக்க வேணுமானால், நம்பி முதல் திருவலகுவரை யெல்லோருக்கும் அக்கரையுண்டாகி எல்லோரும் இடைவிடாமலுழைத்து வந்து, பலமுறை சறுக்கிவிழுந்து பலமுறை குட்டுப்பட்டு, ஆயிரம் உளியாடி ஒருலிங்கம் உருப்படவேண்டும். "உத்தரேதாத்மநாதமாணம்", என்பதுதான் நாம் இவ்விஷயத்திலனுஷ்டிக்க வேண்டிய ஸ்மிருதியாகும். வித்தை, புத்தியிரண்டும் கூடிய பெரியோர்களில் சிலருக்கு அவசரம் அதிகம். சாமான்னியர் இவ்வாறு கற்று முன்னுக்குவருவதென்றால், அதுவரை இவர்களுக்குப் பொறுமையிருப்பதில்லை. எதையும் சீக்கிரம் முடிக்கவேண்டியாக்கிரமம் கொண்டு, தானாகப்பழுக்க வேண்டியதைத் தடியடி கொண்டு பழுக்கப்பார்க்கிறார்கள். அது வேறுஎந்த விஷயத்தில் நல்லதாகிலும், கோஆப்ரேஷன்விஷயத்தில் நல்லதேயன்று.

தலைமைப்பாங்கு மூலமாகவேண்டியபோது வேண்டிய வளவிற்கு சலீசாகப் பணமும், ஜில்லா யூனியன்கள், சில்லரையூனியன்கள், முதலியவற்றால் சரிவரத் தணிக்கையும் நடந்துவந்தால், இப்பொழுது சங்கங்களிற்காணும் பலதோஷங்கள் பரிகாரமாகலாம். பணத்தைக் கொடுப்பது தகுமான மெம்பர்களுக்கு அவரவர் யோக்கியதைபோல் தாமதமின்றிக்கொடுப்பதும், மெம்பர்களுக்கும், சங்கங்களுக்கும் யோக்கியதை ஜாப்தாக்கள் ஏற்படுவதும், பணம் கிரமமாகச்சொன்ன காரியத்திற்கே விநியோகமாகும்படி பார்ப்பதும், காலாகாலத்தில் வட்டி, முதல் வகைகளை வசூலிப்பதும் 'கெடுக்கடந்த கடன்கள்' என்கிற விஷப்பூண்டுகளை அடியோடுகளைவதும், இவைபோன்ற காரியங்களெல்லாம் கடிகார முறையில் நிரந்தரமாய் நடக்கவேண்டியவைகள். ஒவ்வொரு சிறியயந்திரமும் அதன் வேலையைக் கிரமப்படி நடத்தினால் மட்டுமே இதுசாத்தியமாகுமாதலால், எல்லாப்பாரத்தையும் ஒரே சாதனம் மேற்போட்டுக்கோள்வது பலவினும் தோஷகரமாகுமென்பதற்கையமில்லை.

இருப்பவைகளை யிவ்வாறு சீராக நடத்தவேண்டுவது அதிக அவசியமே யென்றாலும், அம்மட்டோடு நாம் நிற்பதற்கில்லை. முன்னுக்குப்போய்க்கொண்டேயிருந்தால் மட்டுமே நமக்கு க்ஷேமம். அதெப்படி? சில அம்சங்கள் தாமாகவே விளங்கும். எந்தெந்தக் கிராமங்களில் சங்கங்களேற்பட்டிருக்கின்றனவோ, அந்தக்கிராமங்களில் யோக்-



கியனான எவனும் சங்கத்தில் சேராமலிருக்கக்கூடாது. சங்கங்கள் தமது நன்னடக்கையினால், சுற்றிலுள்ள கிராமங்களிலுள்ளவருக்கு நல்வழிகாட்டும் தீபஸ்தம்பம் போன்று அவ்விடங்களிலும் சங்கங்கள் பெருகும்படி விளக்கிதேடவேண்டும். யூனியன்கள் கொஞ்சம் சிரத்தையும், பக்தியும், கூட்டியுழைத்து, விஷயந்தெரியாதவர்களுக்கு அதை விளக்கிப்புதுச்சங்கங்கள் ஏற்படமுயலவேண்டும். மகா ஜனங்களுக்குள் நாணயம் முதலிய நற்குணம் பெருகுவதற்குக்கல்வியே ஏற்ற சாதனமானதால், ஐக்கிய நாணயச்சங்கம் ஏற்பட்ட எந்தக்கிராமத்திலும் தற்குறிகள் இல்லாமற் போகவேண்டும். சர்க்காரோ பாங்கு பஞ்சாயத்தவரை நம்பி, கிராம மகாஜன க்ஷேமத்திற்காக வேண்டிய காரியங்களை இவர் மூலமாய் நடத்தச்சம்மதித்து ஒருவகையாக ஆரம்பமும் செய்திருக்கிறார்கள். இது நல்ல தருணம். ஆதலால், நாமும் நம்மைப் பொறுத்தமட்டில் ஊக்கத்துடன் உழைத்துப் பரிபூரண பலனை யடைவோமாக. பத்து வருஷங்கழிந்தபின் என்போன்றவர் மதுரை ஜில்லாவில் கிராமங்களுக்குப்போனால், "கோ ஆப்ரேடிவ்பாங்கில்லாத கிராமம் கிடையாது. எங்கும் குடிகிணர்களோ வேறுசாதனங்களோ வேண்டியமட்டிலிருக்கின்றன. கிராமத்தைச்சுற்றியெந்தப்புறத்திலும் துற்நாற்றமில்லை. வீடுவாசல்கள் ஒழுங்காக அமைகின்றன. பள்ளிக்கூடமும் ரீடிங்ரூமும் இல்லாத கிராமமே கிடையாது. அனேகஸீவில் விவகாரங்கள் பாங்கு மெம்பர்களால் பைசலாகிவிடுகின்றன. கிரிமினல் கேஸ்கள் வெகு சொற்பம். போலீஸாருக்குக் குடிகளாலுபத்திரவமும், குடிகளுக்குப் போலீஸாராலுபத்திரவமுமில்லை. ஜாதி, மதம் முதலிய காரணங்களால் பரஸபரமாச்சலியம் ஜனங்களுக்குள் கிடையாது. வீடுகள் அகஸ்மாத்தாய் நெருப்புப் பிடிப்பதில்லை பந்தோபஸ்துக்காகப் போலீஸ் உத்தியோகஸ்தர் தேவையில்லை", என்று சொல்லிச் சந்தோஷப்படவேண்டுமென்பதே கோஆப்ரேட்டர்களுக்கு நோக்கம்.

இக்காரியங்களெல்லாம் ஒருவாறு சாதிப்பதற்கே பல வருஷங்கள் செல்லும். அப்படி நாம் உத்தேசித்தபடி முடித்துவிட்டாலும், மேற்கூறியபடி நாம் மெய்மறந்து ஆனந்தக்கூத்தாடி வெறிகொள்வதற்கில்லை. ஏனென்றால், விவசாயங்களிலேயே ரூ. 1,000-த்திற்கதிகப்பட்டு வேண்டியவர்களுக்கு நமது நாணயச்சங்கங்கள்போன்ற சாதனங்களால் பயன்கிடைப்பதில்லையல்லவா? ஜமீன்தார் முதலிய லக்ஷாதிகாரிகளை நாம் தூக்கிவிட்டோமாகிலும், சாமான்யமான இதரர்களாலனேகமாயிரம் பெயருக்கு வேறுவகையில் பாங்குகள் ஏற்படவேண்டும். அதற்கு நாளதுவரை யாதொருபிரயத்தனமாகவில்லை.

மதுரை கோ ஆப்ரேட்டர்கள் இதை விசேஷித்து யோசித்து பரிகாரம் தேடவேண்டும். இதர முறைகளில் பாங்குகளும் நிதிகளுமிருக்கின்றன. ஆனால் அவைகளெல்லாம் கக்ஷியிரண்டு பட்டவைகளாதலால் கொள்பவர் கொடுப்பவரிருதிறத்தாருக்கும் சுகிர்தமுண்டாகக்கூடிய வழியை நாம் தேடி அடையவேண்டியவர்களாகிறோம்.

இதுவரை நாணயச்சங்கங்களைமட்டுமே குறிப்பிட்டுப்பேச வேண்டியிருந்தது. ஏனெனில் அவைதாம் ஏதோவாறாக உருப்பட்டிருக்கின்றன. இந்நாட்டு ஜனங்கள்மேல் குற்றங்கண்டுபிடிப்பதையே காரியமாகக்கொண்டு சிலரிருக்கிறார்கள். அவர்களுக்கு நாம் ஒரு வகையிலும் சமத்தர்களன்றென்றும், ஆங்கிலேயர்போன்ற க்ஷாத்திர மிகுந்த ஜனங்கள் எப்போதும் கைகொடுத்துதவிவந்தால்தான் நாம்பிழைப்போமென்றும் சொல்லிவருவது வெகுநாளைய மாமூலாகிவிட்டது. 20 வருஷத்துக்குமுன் கோவாப்ரேஷனைப்பற்றி நிக்கல்ஸன் (Sir F. A. Nicholson) ரிப்போர்ட்டு எழுதி சிபார்சு செய்த காலத்தில், இந்தியாவில் இது சாத்தியமேயில்லையென்று இவர்கள் ஒரு குரலாய்க் கூவினார்கள். இப்போது நாணயச்சங்கங்கள் எங்கும்பெருகுவதைக் காணவே, இவர்களுக்கு முன்போல் பல்லவம்பாடுவது சாத்தியமில்லாமற் போயிற்று. ஆகவே இப்பொழுது இவர்கள் நாணயச் சங்கங்களில் எங்காவது ஒன்று கெடுவதையும், சில்லரைத் தோஷங்கள் பலகாணுவதையும் சுட்டித்தவலை போனதைத் தலைபோனதாக வருணித்து காலங்கழிக்கிறார்கள். இதை நாம் பரவபண்ண வேண்டியதில்லை. ஆனாலித்துடன் இன்னொருதோஷம் நம்மேல் ஆரோபணமாகிறது. அதை நாம் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டியிருக்கிறது. அதாவது நாணயம் ஒன்றுதவிர வேறுவகைகளில் நாம் கோஆப்ரேஷன் மூலமாய்ச் சிறக்கவில்லை என்பதாம். இது வாஸ்தவமே, பழைய சட்டத்தில் வேறுவகை கோ ஆப்ரேஷனுக்கு இடமேயில்லாமலிருந்ததை நாம் மேலே ஒரு சந்தர்ப்பத்தில் குறிப்பிட்டோம். புதியசட்டம் பிறந்து 5 வருஷமாகியும் இவ்விஷயமாக விசேஷ நன்மையொன்றுமாகவில்லையென்பது நாம் சம்மதிக்க வேண்டியதேயாம். கோ ஆப்ரேஷன் நமக்குள் வலுத்ததாக சொல்லவேண்டினால், வேறு சில வகைகளில் நாம் அதை யுபயோகித்துப் பயனடைந்தால்தான் நமக்குப் பெருமையடையக் காரணமுண்டு. அவற்றுள் முக்கியமான சில அம்சங்களை மட்டும் நாம்சற்று கவனிப்போம்.

முதலாவது விவசாயமும் கோஆப்ரேஷனும். இப்பொழுதுள்ள நாணயச் சங்கங்கள் விவசாய விஷயமாய்க் கடன்கள் கொடுத்துதவுவது வாஸ்தவமே. என்றாலும் விவசாய அபிவிர்த்தியையே நாடி



யுழைக்கும் கோஆப்ரேடிவ் சங்கங்கள் மதிராஸ் ராஜதானியில் அனேகமாயில்லை யென்னல்தகும்; ஆகவேண்டியகாரியமோ அபாரமானது. இதுவிஷயமாக இந்தியா கவர்ன்மெண்டாருக்கு விவசாய விஷயத்தில் மந்திரியாயிருக்கும் மெக்கண்ணா (Mckenna) துரையவர்கள் எழுதிப் பிரசுரித்திருக்கும் புஸ்தகத்தில் இவ்வாறு வருணிக்கிறார்:—

"விவசாய இலாகாவும், கோஆப்ரேட்டிவ் இலாகாவும் ஏறக்குறைய ஒரே காலத்தில் உருப்பட்டது. இந்தியாவுக்கு சுபசூசனையென்னலாம். கோஆப்ரேஷன் உருப்பட்டதினால் விவசாய இலாகாவில் காணும் குணங்கள் ரயித்துகளுக்குத் தெரிவது வெகுசுலபமாயிற்று. ஏதாகிலும் லாபகரமானதைச் செய்யவேண்டுமென்றால், பழையகாலத்தில் பணக்காரராகிய நபர்களைத் தேடவேண்டும். அவர்கள் அதை யனுஷ்டித்து லாபகரமென்று கண்டால், பிறருக்கு அதைச்சொல்லார். இப்பொழுதோ, இவ்வகைக் காரியத்தை ஒரு சங்கத்திற்குப் போதித்துவிடலாம். சங்கத்திய மெம்பர்களுக்கு லாபநஷ்டம் பொதுவாதலால், நன்மையை யெல்லோருமடைய அவகாசமுண்டாகிறது. முட்டுவழியதிகம் வேண்டுகிற விவசாயக் கருவிகள் முதலிய சாதனங்களை சங்கத்தின் பொருளுதவியைக்கொண்டு ஏழைகளும் உபயோகித்து முன்மாதிரி அடுத்த சந்தையிலேயே போன விலைக்கு விற்று நஷ்டப்படவேண்டியதில்லை. ஒன்று சேர்ந்து நல்லவிலை வரும்போது லாபமடையலாம். ஆகவே கோஆப்ரேஷன் என்பது விவசாய இலாகாதாரரையும் ரயித்துகளையும் பிணைக்குமோர் சங்கிலியாகும். தவிர, இம்மூலமாம் ரயித்துகளும் வர்த்தகரும் சமான ஸ்கந்தமாய் பண்டமாற்றுச் செய்துவரலாம். அல்லாமலும், இதுவரை விவசாய சங்கங்களையே நம்பியிருந்த தனிகர்களான இந்தியருக்கும் இதரர்களான மகாஜனங்களுக்கும் இதனால்தான்சரியான பாந்தவ்விய மேற்படும்..............நாமெல்லோரும் ஒரே லக்ஷ்யத்தை நாடியுழைப்பவர். அதாவது, பிழைக்கமாட்டாமல் தவிக்கிற ஏழைக் குடியை யுயர்த்துவதற்கும், இந்தியாவின் சம்பத்தைப் பெருக்குவதற்குமேயாம். இந்திய மகாஜனங்களுக்குள் செல்வம் பெருகியவர் சீராக வாழவேண்டுமானால் அது கோவாப்ரேஷன் முறையில் விவசாயம், கைத்தொழில், வியாபாரமாகிய முக்கிய அம்சங்கள் செழித்தால்தான் சித்திக்கும். ஆகவே, இந்தத் தருமகாரியத்தைத் பரிபாலனம் செய்து புஷ்டிக்க உபகரியவர்களெல்லோரும் வெகு புண்ணிய புருஷர்கள்...................ஆதலால் விபசாய இலாகாதாருக்கும் மகா ஜனங்களுக்கும் ஐக்கிய பத்தியமெப்போதும் இருக்கவேண்டும்" என்கிறார்.

இதை நாமெல்லோரும் கவனித்து ஏதோ வகையாய் ஆரம்பிக்க வேண்டும். மதுரை, திருநெல்வேலி ஜில்லாக்களில் 5-6 சங்கங்கள் விவசாயவிஷயமாய் ஏற்பட்டிருப்பது மெய்யே. என்றாலும் அதை யொரு ஆரம்பமாகக்கருதுவதற்கில்லை. மெக்கண்ணா (Mckenna) துரைசொல்வதில் ஒருகாரியம் நமக்கு சமீபத்தில் சித்திக்கக்கூடியது. அதாவது, மதுராஸ் பாங்கார் முதலியோர் செய்யுமாறு, நாமும் காரியமாரம்பித்து, கிராமபாங்குகளில், எங்கெங்கு சுலபசாத்தியமோ, அங்கு களஞ்சியங்களேர்படுத்தி, விளைவுகளை உடமைக்காரராகிய மெம்பர்களிடமிருந்து அடைவு வாங்கியவருக்கு அவசரத்திற்குப் பொருளுதவி செய்து, பிறகு கிராக்கி கண்டகாலத்தில் விற்பதற்குச் சௌகரியம் செய்வதாம். இப்பொழுதிருக்கிற ரீதிக்கு இதுதான் முதன்முதலாகவேண்டிய காரியமாக எனக்குத்தோன்றுகிறது. கோயம்புத்தூரில் சில இஷ்டரிடத்திலும் பிரஸ்தாபித்து வருகிறேன். மதுரையிலும் இதற்கு அனுகூலமுண்டென்பது நிச்சயம். இந்த வகையில் காரியம் ஆரம்பமானால், ஒவ்வொன்றாக வேறு அனேக அனுகூலங்கள் காலக்கிரமத்திலுண்டாவது நிச்சயம். அவற்றை யிங்கு விஸ்தரிக்க வேண்டியதில்லை.

இரண்டாவது, விவசாயத்தின் ஒரு அங்கமென்றாலும், பிரத்தியேகமாய்க்கவனிக்கவேண்டியது பால் தயிர் நெய் ஆகிய இவற்றைப் பெருக்கிச் சீர்திருத்துவதாம். இப்பொழுது நடக்கும் கிரமம் நகரவாசிகளுக்கு நன்றாய்த் தெரியுமல்லவா. நாமெல்லோரும் பால், தயிர், நெய், விற்பவரை வயிறாரத்திட்டி வருகிறோம். ஆனால், அவர்களைத் திட்டினால் மட்டுமேபோதாதென்று விவேகிகள் சம்மதிக்கவேண்டும். திட்டினால் நமக்குப் பழையமாதிரி சாபானுக்கிரக சர்மார்த்தியமில்லையென்றும் தெரியும். ஆகவே, அதைநேராக்க வகைதேடவேண்டும். கோ ஆப்பரேட்டிவ் கமிட்டியார் இவ்விஷயத்தைக்கவனித்திருக்கிறார்கள். இந்தியாவில் பெரிய பட்டணங்களிலும், நகரங்களிலுமுள்ளவருக்குப் பால், தயிர், நெய் முதலிய பண்டங்கள் சுற்றியுள்ள நாட்டுப்புறத்துக் கிராமங்களிலிருந்துதான் வருகின்றன. நாட்டுப்புறத்தில் ரயித்துகளில் அனேகர் கறவைமாடுகள், எருமைகள் முதலியவற்றை வைத்திருப்பதில் அவற்றிலுண்டாகும் கவ்வியங்களை இப்பொழுது அவரவரே சுமந்து விற்பனை செய்கிறார்கள். சிலர் வெண்ணெயையோ, நெய்யையோ அகப்பட்டதையெல்லாம்வாங்கி, அவல், உமியிரண்டையும் யுக்தம்போல் கலந்து, விற்றுவருகிறார்கள். அந்தப் பதார்த்தங்களை விட்டால் வேறு இடையாது. ஆதலால் கிராமச் சங்கங்கள் மூலமாய், ஆங்கு சேரும் பால்முதலியவற்றைக் கலப்பில்லாமல் பட்டணம் வந்துசேரும்படி செய்து, அங்குஸ்ரோடர்ஸ் முதலிய சாதனங்களைக்கொண்டு விநியோகப்படுத்திக் கொண்டால் போதுமென்பது கம்மிட்டியார் அபிப்பிராயம். பால் சங்கங்களேற்படுத்தி நூற்றுக்கணக்காகக் கால் நடைகளை யொரே யிடத்தில் கட்டுவது திரமாகக் காணவில்லை. இதுஎப்படியாகிலும் சீக்கிரம் நீங்கள் இவ்வகையில் காரியமாரம்பித்தே தீரவேண்டும். கோ ஆப்பரேட்டர்கள் மனதுவைத்தால் தான், பதார்த்தங்களை மனம்போன்றபடி கலக்கிற துர்வழக்கம் குறையும். இது பால், வகையராவில்தான் எல்லோருக்கும் தெரிகிறதென்றாலும், கலப்பதாகிய பெருந்தோஷம் இந்தியாவில் எல்லா சரக்குகளுக்கும் ஏற்பட்டிருப்பதாகவும், பருத்தி, கோதி முதலிய சாமான்களுக்கு, இத்தியாதி தோஷத்தினால் தக்கவிலை வருவதில்லையென்றும், இப்படியே இனியும் நடந்தால் சீக்கிரத்தில் இந்திய பதார்த்தங்களுக்கு வேற்றூர்களில் மதிப்புப்போய் கிராக்கிகுறைந்து, பெரிய அனர்த்தத்துக்கிடமுண்டாகுமென்றும், சமீபத்தில் புரொவின்ஷியல் கான்பரென்ஸில் சபாநாயகராயிருந்த கில்மன் (Gillman) துரை நமக்கறிவித்தார். ஆதலால் அதை நாம் ஞாபகத்தில்வைத்து, சிறுக ஆரம்பித்து, இந்த தோஷத்தைப் பரிகரிப்போமாகக் கோவாப்ரேஷன் சங்கங்களிலிருந்து எந்த சரக்கு வெளியே போனாலும், அதற்கு விசேஷ மரியாதை கிடைக்கும்படி நாம் பார்க்கவேண்டும்.



நகர வாசிகளுக்குள்ள கஷ்டங்களில், சமயா சமயங்களுக்குச் சலீசாகப் பணமுதவாதது எல்லோருமறிந்த விஷயம். அதைப்பரிகரிக்கச் சிலவிடங்களில் நகரப் பாங்குகள் ஏற்பட்டிருக்கின்றன. எனக்குத் தெரிந்த நாலைந்து பாங்குகள் வெகு திருப்திகரமாகவே வேலைசெய்கின்றன. என்றாலும் டிபார்ட்மெண்டாருக்கு இவற்றைப்பெருக்க மனம் வருவதில்லை இதை நாம் கவனிப்பது மட்டுமல்லாமல், நகரவாசிகளுக்குள்ள மற்றிரண்டு துக்கங்களையும் பரிகரிக்கவேண்டும். அவையாவன 'உண்ணச்சோறும்', 'படுக்கவிடமும்' என்பனவாம். நகரவாசிகளுள் சாமன்னியர் ஏழைகள் ஆகிய இருதிறத்தாருக்கும், நல்ல உணவு பண்டங்கள் கிடைப்பதே அபூர்வம். விலை, இடை, அளவு முதலியவற்றிலும் பல தோஷங்கள் வலுத்திருக்கின்றன. இவைகளை வேண்டுமானால் கோஆப்ரேடிவ் ஸ்டோர்களை மலியவேண்டும் குடியிருக்கும் வீடுகள் வேண்டியபடியிருக்கவிரும்பினால் கோஆப்ரேடிவ் பில்டிங்கு ஸொசைட்டிகள் மலியவேண்டும். ஆனால் இவ்விருவகைச் சாதனங்களும் கிரமமாக நடப்பதென்றால், நாணயச்சங்கங்கள் போல சுல்ப சாத்தியமானவையன்று. எனக்கு இரண்டிலும் கொஞ்சம் அனுபவமுண்டாதலால், சிரம சாத்தியமென்பதை நான் தாராளமாய் இங்கு சொல்லலாம். ஆனால், சிரம சாத்தியமான இம்மாதிரி விஷயங்

களையெடுத்துக் கையாண்டு தக்க வண்ணம் காரியத்தை நிறைவேற்றினாலன்றே நமது தாயாதிகளுடைய வாய் அடையும் நாமும் தமுக்கடிக்க இடமுண்டாகும். ஆதலால் இவ்விரண்டு விஷயங்களை நல்லறிவுடையோர் உய்த்துணர்ந்து காரியமாரம்பிக்கவேண்டும். யாது காரணத்தினாலோ, டிபார்ட்மெண்டாருக்கும் ஆதிமுதல் இவ்விஷயங்களில் சிரத்தை குறைந்தே வந்திருக்கிறது.

இவ்வாறே சில கைத்தொழில் கோஆப்ரேஷன் கலந்துதான் இந்தியாவுக்கு க்ஷேமமுண்டாகவேண்டும் நெசவுத்தொழிலைப்பார்ப்போம். கோயம்புத்தூர், மதுரை, சேலம், ஆகிய மூன்று ஜில்லாக்களில் அனேகமாயிரம் சாலியார்கள் இத்தொழிலைக் கைப்பற்றி வருகிறார்கள் என்றாலும், அவர்களுடைய தரித்திரம் விடிவதேயில்லை. நூல் சாயம், சரிகை, பட்டு முதலியவைகளை மொத்தத்தில் வாங்கியிவர்களுக்குச்சில்லரையாகக் கொடுத்து, நெய்த சரக்கை மறுபடிவாங்கித்தொலைக்கு அனுப்புகிற சிலர் தவிர, மற்றையோராகிய பெரும்பாலார் கஷ்டஜீவனமே செய்து வருகிறார்கள். இவர்கள் கஷ்டம் சாசுவதமாய் விலகவேண்டுமானால், இடைக்கொள்ளைக்காரரை விலக்கி, அவர்களுடைய லாபத்தில் அனேகமாய் எல்லாவற்றையும் இவர்களடைய வேண்டும். கோயம்புத்தூரில் இரண்டொரு முறை பிரயத்தனம் செய்து பார்த்தோம். சாலியர்களுடைய ஸ்வ ஜாதியாரும், பந்துக்களுமாகிய பெரிய முதலாளிகளே அதற்கு இடறுகட்டையாக நிற்கிறார்கள். சாமன்னியக் கூலிக்காரருக்குப் புத்தியுமில்லை; தீர்க்கதிருஷ்டியுமில்லை. குடி முதலிய துர்க்குணங்களுமேலிட்டிருக்கிறது என்றாலும் இவர்களுடன் போராடி முன்னுக்கு கொண்டுவரவேண்டியது. கோஆப்ரேட்டர்களுடைய முக்கிய தருமமாதலால், நீங்கள் உபாயம் கண்டுபிடித்து சாதிக்கவேண்டுமென்பது என் கோரிக்கை. இந்தியாவில் கைத்தறிகள் வெகு காலமாய் உருப்பட்டு வந்திருக்கின்றன. யந்திரங்கள்முன் இனி யிவைநிற்குமாவென்று சிலர் சந்தேகப்படுவதுண்டு. இடைக்கொள்ளையை நிறுத்தி, கைத்தறிகளிலும் சில விமர்சனங்கள் செய்துகொண்டு குடியில்லாமல் சமர்த்தாய்ப்பிழைத்தல் இந்திய சாலியருக்கு குறைவேயில்லையென்னலாம்.

இது போலவே வேறெந்தத் தொழிலையெடுத்தாலும் இகக்ஷிரண்டுபட்டிருப்பதையொன்றாக்க இடமுண்டென்று நல்லறிவுடையோர் எளிதில் காணலாம் "மதிநுட்ப நூலோ டுடையார்க் கதிநுட்பம் யாவுள முன்னிற்பவை" யென்பது அனுபவசித்தமான மொழி.

இப்படி நம்மைச்சுற்றி யெங்குபார்த்தாலும் கோவாப்பரேஷனுக்கு இடமிருப்பதால் காலவிதரணஞ் செய்யாமலும், மிரளாமலும்



கோஆப்ரேட்டர்களாகிய நாம் அவரவர் சக்தியானுசாரமாக முயன்று நம்மையும் நமது தேசத்தவராகிய இதர மித்திரரையும் முன்னுக்குக் கொண்டுவர இது நல்ல சுபமுகூர்த்தம். இந்த ராஜ்ஜியத்தில் பிறந்து வளர்ந்து ஆண்டு அனுபவித்து இவ்விடத்திலேயே ஐக்கியமாக வேண்டியவராகிய இந்திய மகா ஜனங்களுக்கும், அவர்களுடைய முக்கியஸ்தருக்கும் கோஆப்பரேஷன் என்னும் காமதேனுவைப் பரிபாலித்து அதனால் அவரவருக்கேது தேவையோ அந்தப்பலனையடைந்து, தாமும் சுகித்து, பிறரையும் முன்னுக்குக் கொண்டுவருவதாகிய பெருங்காரியத்தை விடச் சிறந்த தருமகாரியமில்லையென்பது நிச்சயம்.

முக்கியமாக இதன்மூலமாய் நமக்குக்கிடைக்கும் செல்வப்பொருளை விடப் பலவினுஞ் சிறந்ததாக மற்றொன்றையே சொல்லவேண்டும். அதாவது, மனிதருள் சாமான்னியமாகக்காணும் சில அவலக்ஷணங்களைக் குறைத்து நற்குணங்களை விர்த்தியாக்குவதாம். இது ஒருநாளில் காணக்கூடியதன்று. ஆயினும் கோவாப்பரேஷன் செழிக்கு மளவிற்கு இந்தப்பலன் நமக்கு நிச்சயமாகக்கிடைககக் கூடியது. இவ்விஷயத்தைக் கமிட்டியார், இந்தியா கவர்ன்மெண்டார் முதலிய சகலரும் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். ஒரு காரணம் போதும். கோவாப்ரேட்டிவ் ரிப்போர்ட்டுகளில் அனேகமாய் எல்லாச் சங்கங்களிலும் மெம்பர்கள் வாங்குகிற கடன்களைக் கெடுத்தவறாமல் கொடுத்து வரவேண்டியது முதல் கடமையாக, அப்படி நடப்பதில்லையென்று வருஷாவருஷம் முறையதிகரித்துக் கேட்கிறது. இது மகா அனியாயம், 'பசிக்குப்பனம்பழம்' என்கிற நியாயமாக 100-க்கு 75 வட்டி கட்டுகிற கடனுக்கு வேண்டுமானால், தவணைசொல்லியும், ஓடி யொளிந்தும் பார்க்கலாம். நியாயமாக வட்டி விகிதமிட்டு, ஒவ்வொரு மெம்பருடையவும் சௌகரியத்தை விசாரித்துக் கொடுத்து வாங்குவதையே விரதமாகக் கொண்ட நாணயச்சங்கங்களுக்கு இந்தத்தோஷ மேற்பட நியாயமேயில்லையல்லவா? ஆதலால் பஞ்சாயத்தவரும் மற்றைய மெம்பர்களும் ஒரு முகமாய்நின்று சங்கங்களில் இனியிந்த அபவாதம் வாராமற் பார்ப்போமாக, கிரமமாய்க் கொடுத்துவருவது பெரும்பாலார்க்கு சிரம சாத்தியந்தான். ஆயினும் எதுசிரமமோ அதைத்தான் எப்படியாவது சாதித்துக்கொள்ள வேண்டும். பைலாக்களுடைய நிர்ப்பந்தம், பஞ்சாயத்தவர் கண்டிப்பு, இதர மெம்பர்களுடைய நிந்தை யிவற்றிற்காவது பயந்து நடந்தால், காலக்கிரமத்தில் ஒவ்வொருவனுக்கும் உணர்வுண்டாகிக் குணம் பக்குவப்படும். அவ்வாறு பக்குவப் பட்டதற்கு லக்ஷணமோ வென்னில், வாங்கும்போது எவ்வளவு சந்தோஷ மிருக்கிறதோ அதற்குச் சிறிதும் குறையாமல் கொடுக்கும்போதும் சந்தோஷ மிருப்பதாம்.

கோஆப்ரேஷனுக்கு அனுகூலமான குணங்கள் நம்மிட மிருப்பதை முந்தி நமது தாயாதிகள் சிலர் இல்லையென்று சாதித்து வந்தாலும், சென்ற 13வருஷங்களுக்குள் அனுபவத்தினால் நாம் அவையிருப்பதை நிச்சயமாய்க் கண்டு கொண்டோமென்று மேலே குறிப்பிட்டோமல்லவா? இதையொட்டி நமது நண்பர்களிற் சிலர் கோஆப்ரேஷன் இந்நாட்டில் எக்காலத்துமிருந்து தான் வந்திருக்கிறதென்கிறார்கள். இதைப்பற்றி வாதிப்பது வீண் சர்க்கார் பிரேரேபணையின் மேல், இப்போது நடந்துவருகிற முறை புதிதென்றே நாம் ஒப்புக்கொள்வதில் நமக்கு குறைவொன்றுமில்லை. ஆனால் அந்த முறையில் காரியம் நடத்தி நற்பயனடைய வேண்டியதற்கேற்ற குணங்கள் நமக்குப் புதிதல்லவென்பதை மட்டும் நாம் எவ்வளவு உறுதியாகவேண்டுமானாலும் சொல்லிக் கொள்ளலாம். கோஆப்ரேஷன் தழைப்பதற்கு முதற் சாதனமென்ன? ஒவ்வொரு மெம்பரும் தன்னை நேராக்கிக் கொள்வதே இவ்விஷயத்தில் இந்நாட்டுச்சாதன தருமமென்ன சொல்லுகிறது? என்று முறையிடுகிறது இந்த ரகசியத்தைக் கற்றுப் போதித்து வந்தவர்களுக்குள் கோஆப்ரேஷன் பரவாவிட்டால் வேறெங்கும் பரவப்போகிறதில்லை. பின்னும். வேதமுறையிற் கூறியதை அறிந்தனுஷ்டித்து வந்தவர்களுக்கு யோகியதையில்லை யென்றால், கோஆப்ரேஷனைக் கைப்பற்ற யோக்கியர் இவ்வுலகத்திலேயே இல்லை அல்லாமலும், கோஆபரேட்டர்கள் தாங்கள் நேராக நடந்து நியாயமான வழியில் செல்வம் சேகரிப்பது மட்டுமே போதாது. நாடெங்கும் வாழக் கேடொன்றுமில்லை யென்பதை மகுடமாக்கிக் கொள்ளவேண்டும்.

ஆதலால் நாம் அவரவர் குணத்தை யதிகரிக்க முயல்வதுடன் அறிவு, குணம் இரண்டும் குன்றிக்காணும் நமது அயலார்களையும் நேராக்கிச் சுகிப்போமாக. கேவலம் ஜடங்களாகப் பாவிக்கிற ஓஷதி வர்க்கம் படுவர்க்கம் இவற்றில் கூட தமது குடும்பரக்ஷணையும், பந்துக்கள், வர்க்கத்தவர் இவர்களுடைய பாலனமும் வெகு தூரம் சிறந்து காணுவதாக வைசிக சாஸ்திர பாரங்கதராகிய மார்ஷல் உபாத்தியாயர் சொல்லுகிறார். இதைப்போதித்து, புத்தி பூர்வமாய் வேலை செய்வதாகப் பெருமைப்படுகிற மனிதராகிய நாம் என்ன செய்யவேண்டும்? அதிலும், கல்விப்பொருள், செல்வப் பொருள் இரண்டும் கூடிய முக்கியஸ்தர் என்ன செய்யவேண்டும்? கோஆப்ரேஷன் மூலமாய்ப் பல விதத்திலும் உழைத்து, கிரிமினல் வர்க்கத்தார் என்றும், தீண்டாதவரென்றும் ஜனங்களை நிந்தித்து விலக்கிவிட்டு நாம் சுகித்திருப்பதாகப் பாவிக்காமல், அவர்களெல்லோரையும் சுகித்திருக்கச் செய்யு



முயலவேண்டும். ஏதோ நாணயச்சங்கங்களை இங்கொன்று, அங்கொன்றாக ஏற்படுத்தி விட்டால் மட்டுமே போதாது. எல்லோருக்கும் விவேகமதிகரிக்க முயன்றுவர வேண்டும். இல்லாவிட்டால், அவிவேகிகள் விவேகிகளென்று ஜம்பம் சொல்லிக்கொள்பவருக்குக் கீழ்வயிற்றுக் கழலைபோன்று உபத்திரவிப்பது நிச்சயம். ஆதலால், எல்லா வகையாலும்நாம் நமக்குள் கல்வி மலிந்து விவேகமுதிர உபாயந் தேடியுழைக்கவேண்டும். பழைய அனுபவமும் இப்படியே. வேதத்தில் கூறியிருக்கிறபடி புத்தியற்றவருக்குச் சம்பத்துக்கிடைத்தால், அது அனர்த்தஹேதுவாகிறது நிச்சயமாதலால்தான் செல்வமும் புத்தியும் கூடியவர் என்ன செய்யக்கூடுமென்பதை இங்கு எல்லோருமறிவார்கள். மதுரைக்காலேஜுக்கு செட்டிமாருள் ஒரு ஸ்ரீமான் சமீபத்தில் செய்திருக்கும் சகாயம் போதுமான சாக்ஷியம். ஆதலால் இந்த மனோதர்மம் நமக்குள் மலிந்து, ஏழைகள் தனிகர் ஆகிய சகலரும் பரோபகாரத்தைக் கருதி அவரவர் சக்தியனுசாரமாக உபகரித்து வரவேண்டியதற்குச் சர்வேஸ்வரனருள் நமக்குப் பூரணமாகவிருக்கவேண்டுமென்பதே நமது பிரார்த்தனையாக விருக்கிறது.

உங்களுடைய பிரீதி என்விஷயத்தில் அபாரமென்பது எனக்கு நிச்சயம். ஆதலால் மனம்போனபடி யெல்லாம் சென்று கல்லிலும் முள்ளிலும் உங்களையிந்நேரம் அலைக்கழித்து விட்டேன். இதிலுள்ள குறைவுகளை நானெடுத்துக்காட்ட வேண்டியதில்லை. சிறுபிள்ளைகளுக்குச் சொல்வதுபோல சில விடங்களில் காணும். வெகுநாள் நான் பள்ளிக்கூடத்தில் உழைத்து வந்த குற்றமே யதற்குச் சமாதானம். தெரிந்தவற்றையே மறுபடி வளர்த்தியது பல சந்தர்ப்பங்களில் காணும் தோஷம். அதற்குநான் செய்யக்கூடியது ஒன்றுமில்லை. உங்களைவிடத் தெரிந்தவரைக்கொண்டு நீங்கள் திருப்திப்படவேண்டும். இவ்விடத்திலாகவேண்டிய காரியங்களுக்கு நான்பேசியதில் ஒருவகையானும் உதவியில்லையென்பது நிச்சயம். ஆனால் அவ்விஷயந்தில் எனக்கு அதிருப்தியேயில்லை. ஏனெனில் என்னை இவ்விடத்தில் வந்து இந்தப்பதவியில் நியமித்தமாத்திரமாகவிருக்க நியமனமாதலாலும், அந்த நிபந்தனைக்குட்பட்ட நான்யிதை யொப்பியதாலும், அது குற்றமாகாதென்றே நம்புகிறேன்.

மொத்தத்தில் ஏற்படும் குற்றங்களெல்லாம், 'முந்திபினுதி' துறகின் யாநிதயல்ா பரிகாரமாகவேண்டியிருப்பதால், அதையனுசெயரித்க்ஷமைவேண்டுகிறேன்.

## விளம்பர விகிதங்கள்.

கூட்டுறவுச் சங்கங்களுக்கு.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| முழுப்பக்கம் | ... ... | ரூ. | 15 | 0 | 0 | வருஷம் ஒன்றுக்குப் | பிரதி ஒன்றுக்கு |
| அரைப்பக்கம் | ... ... | ,, | 10 | 0 | 0 | ,, | ,, |
| காலபக்கம் | .... ... | ,, | 7 | 0 | 0 | ,, | ,, |

மற்றவர்களுக்கு

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| முழுப்பக்கம் | ... ... | ரூ. | 20 | 0 | 0 | வருஷம் ஒன்றுக்குப் | பிரதி ஒன்றுக்கு |
| அரைப்பக்கம் | ... ... | ,, | 12 | 0 | 0 | ,, | ,, |
| கால்பக்கம் | ... ... | ,, | 8 | 0 | 0 | ,, | ,, |

---

## சந்தாதார்களுக்கு விண்ணப்பம்.

சந்தாதார்கள் தயைகூர்ந்து இச்சம்புடன் எட்டுகுள்ள சந்தாவை பாக்கியுடன் கொடுத்துதவும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். சந்தா செலுத்தப்படாமலிருந்தால் அடுத்த பிரதியின் புஸ்தகமானது வி. பி. மூலமாயனுப்பப்படும்.

இப்படிக்கு,

காரியதரிசி,

மதராஸ் பிரொவின்ஷியல் கோவாப்ரேடிவ்

யூனியன் ஆபீஸ்,

திருவல்லிக்கேணி.

OFFICE OF THE REGISTRAR ... 11 A... MADRAS.

# மதராஸ் புல்லெடீன் ஆவ் கோவாபரேஷன்

என்னும்

## சென்னைக் கூட்டுத்தொழில் வர்த்தமானி

சம்புடம் VIII] 1917௵ ஜூன்௴ [இலக்கம் 4

### பத்திராதிபர் குறிப்புகள்.

நமது கூட்டுத்தொழில் வர்த்தமானியானது அடுத்த கோவாப்ரேடிவ் வருஷம், அதாவது 1917௵ ஜூலைமாதம், முதல் மாதாந்திர பத்திரிகை யாகுமென்பதை நம் நேயர்கள் கேட்க சந்தோஷ மடைவார்கள். ஆகையால் மூன்று மாதத்திற் கொருமுறை பிரசுரிக்கப் பட்ட பத்திரிகையின் இது கடைசி சஞ்சிகையாகும் கோவாப்ரெடிவ் சொஸைடிகளின் ரெஜிஸ்ட்ரா ராயிருந்த ம-ா-ா-ஸ்ரீ திவான்பகதூர் R. ராமச்சந்திர ராவ் அவர்களின் ஆட்சிமை நிறைந்தவும் போதனைசக்தியுமுள்ள ஊக்கத்தினுல் இவ்வர்த்தமானி, ஆங்கிலேயம், தமிழ், தெலுங்கு ஆகிய மூன்று பாஷைகளிலும் 1909௵ சப்டெம்பர் மாதத்தில் முதல் முதலில் பிரசுரிக்கப் பட்டன. மூன்றேகால் வருஷம் டிபார்ட்டுமெண்டாரின் ஆட்சிமையில் நடைபெற்று வந்தன. பின்பு திருவல்லிக்கேணி ஸ்டோர்ஸானது 1915௵ ஜூலைமாதம் வரையில் இப்பதிரிகையை நடத்திவந்தது. ஐக்கிய முறையில் போதனை விஷயத்தை தன் நோக்கங்களில் ஒன்ருகக் கொண்ட மதிராஸ் பிரொவின்ஷியல் கோவாப்ரேடிவ் யூனியனுனது இதற்குள் ரெஜிஸ்டர் செய்யப்பட்டது. இதில் சேர்ந்துள்ள மெம்பர்கள், இந்த ராஜதானியிலுள்ள முக்கியமான கோவாப்ரேடிவ் சங்கங்களும், பிரசித்திபெற்ற கோவாப்ரேடர்களுமே! ஆகையால் இந்த வர்த்தமானியை யூனியன் வசம் ஒப்புவிப்பது நல்லதென தோன்றிற்று. கவர்ன் மெண்டாரும், திருவல்லிக்கேணி ஸ்டோர்ஸாரும் இதற்கு இணங்கவே, 1915௵ ஆகஸ்ட்டு மாதத்தில் யூனியன் இப்பத்திரிகையை யெடுத்துக்கொண்டு, அது முதல் மூன்று மாதத்திற் கொருமுறை பிரசூரம் செய்துவருகிறது. மாதாந்திரப் பத்திரிகையாக இதை மாற்றும் ஆலோஜனையை கவர்ன்மெண்டார் அங்கீகாரத்திற்கு முன்னமே அனுப்பின போதிலும், இப்பொழுதுதான் முடிவாக ஒப்புக் கொண்டிருக்கிருர்

கள்: இம்மாறுதலினால் வருஷச்சந்தா ரூ. 1-8-0 விருந்து ரூ. 3-0-0க்கு உயர்ந்துவிட்டது இச்சந்தாவை இன்னும் குறைக்கப் பிரயத்தனம் செய்தும் முடியவில்லை. ஆகையால் நம் நேயர்கள் மாதாந்திர சஞ்சிகையின் பிரயோஜனத்தையே முன்னதாக வைத்துக்கொண்டு சந்தாவின் அதிகத் தொகையை பாராட்டமாட்டார் களென நம்பப்படுகிறது. இம்மாறுதல் செய்ய உடன்பட்ட ரெஜிஸ்ட்ராரவருக்கும், கவர்ன்மெண்டாருக்கும் இத்தருணம் வந்தனம் அளிக்கிறோம்.

### இந்தியன் டிரஸ்டு ஆக்ட்டைத்திருத்தும் சட்டம்:

பம்பாய் கோவாப்ரேடிவ் ஸெண்ட்ரல் பாங்கியானது டிபன்சர் மூலமாய் திரவிய முயர்த்த வேண்டி, கவர்ன்மெண்டார் அதின் வட்டி ஒழுங்காய் கொடுபடும் விஷயமாய் கியாரண்டி செய்திருந்த போதிலும், டிபன்சர்கள் எடுத்துக் கொள்ளவில்லை வெளி மார்க்கட்டுகளில் இந்த டிபன்சர் ஸர்டிபிகேட்டுகள், விலையாகாததினால், தனிகர்கள் தகுந்தபடி டிபன்சர்கள் எடுத்துக் கொள்ளவில்லை. டிரஸ்ட்டு ஆக்ட்டுகளில் கூறியுள்ள ஸெக்யூரிடிகளில் இம்மாதிரி டிபன்சர் ஸர்டிபிகேட்டுகளும் சேர்க்கப்பட்டிருந்தால், மார்கெட்டில் யாவரும் வாங்கிக் கொள்ளுவார்கள். ஆகையால் டிபன்சர்களை வாங்குவதில் யாதொரு ஆக்ஷேபணையுமிராது, இதை யுத்தேசித்துத்தான் கனம் ஸர் பாஸல்பாய் கர்ரிம்பாய் இம்பீரியல் சட்ட நிரூபண சபையில் இந்தியா டிரஸ்ட்டு ஆக்ட்டை முன்கூறிய விஷயத்திற்கு அனுகூலமாய் திருத்த ஓர் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார். அது அங்கீகரிக்கப்பட்டால் கவர்ன்மெண்டார் வட்டி கியாரெண்டி ஒப்புக்கொள்ளும் டிபன்சர்களில் பணம் ஏராளமாய் வந்து விழுமென்று நம்பப்படுகிறது. ஆனால், டிரஸ்ட்டு பண்டுகள் நிரம்ப கோவாப்ரேடிவ் சங்கங்களில் டிபாஸிட்டு செய்யப்படவேண்டுமானால், அந்த ஆக்ட்டானது இன்னும் அநேக மாறுதல்களடையவேண்டும். திருத்தம் கொஞ்சமாயிருந்த போதிலும், அதை நாம் திருப்தியுடன் அங்கீகரிப்பதினால் அநேக சாதனங்களுண்டு.

---

## கூட்டுறவின் மூன்று ஸாரங்கள்.

உத்திரமேரூர் ம-ா-ா-ஸ்ரீ, O. M. வெங்கிடநாத அய்யங்கார்
அவர்களெழுதியது.

கூட்டுறவு சங்கங்களாகிய ஐக்கிய சங்கங்கள் ஒவ்வொரு விஷயத்திற்கும் ஒவ்வொரு சங்கமாகவும், ஒவ்வொரு சங்கத்திலும் பல விஷயங்களையும் ஏற்படுத்தி யிருக்கிறார்கள். சாதாரணமாய் கூட்டுறவு விஷயத்தை முக்கியமாய் மூன்று வகுப்புகளாகப் பிரித்துக் கொள்ளவேண்டும்.



அவைகளாவன :—

1. நாணயச் சங்கம் (Credit Society).
2. உற்பத்திச் சங்கம் (Productive Society).
3. விற்பனைச் சங்கம் (Distributive Society).

ஐக்கியபத்தியமாக முடிக்கவேண்டிய விஷயங்களை மேற்சொன்ன விஷயங்களாகத்தான் பிரித்து அலுவல்களை நடத்தவேண்டும். ஆனால் ஒவ்வொரு வகையையும் பல பிரிவுகளாகச் செய்யலாம். அவைகளைச் சற்று வரிசையாகச் சொல்லத்தக்கது. இந்த விஷயங்கள் எல்லோருக்கும் தெரிந்த விஷயமானாலும் இவைகளை ஞாபகப்படுத்தவேண்டுவது அவசியம்.

முதலாவது **நாணயச் சங்கம்** என்பது ரொக்க லேவாதேவி செய்யும் விஷயமாகும். இந்தச் சங்கங்கள் இந்த இராஜதானியிலும் மற்ற இராஜதானிகளிலும் பண லேவாதேவிகள் நடத்தும் சங்கங்களேயாகும். இந்தப் பணத்தினால் அநேக கூட்டுமுறைகள் செய்து கொள்ளலாமென்று எல்லோருக்கும் தெரிந்தவிஷயம். இதைக்குறித்து அதிகம் எழுதவேண்டியது அனாவசியமாகும். பணம் இருந்தால் பத்துவகையும் செய்யலாம் என்பது பழமொழியால் ஏற்படுகிறது.

இரண்டாவது விஷயமாகிய **உற்பத்தி சங்கம்** என்பது ஒருபொருளை உண்டுபண்ணும் சங்கமாகும். நமக்கு உடுப்பு வேண்டுமானால் பட்டு அல்லது பஞ்சு முதலியதுகளை வரவழைத்து நூலாக்கி நெய்யவேண்டும் அப்படி நெசவு செய்து உபயோகப்படுத்திக் கொள்வதுதான் உற்பத்தி சங்கமாகும். இம்மாதிரியாகவே ஆகாரப்பொருள்களும் மற்ற செயற்படுபொருள்களும் உற்பத்திசெய்து கொள்ளவேண்டும். ஒரு மனிதன் ஜீவிக்கவேண்டியதற்கு என்னென்னவஸ்துக்கள் வேண்டுமோ அவைகளையெல்லாம் உண்டு பண்ணுவதற்கு ஒரு ஐக்கிய சங்கமாக ஏற்படுத்தி அதன் மூலமாய் செய்து கொண்டால்தான் நயமாகவும் ஏராளமாகவும் செய்துகொள்ளலாம். உதாரணமாக இக்காலத்தில் எல்லோரும் சப்பு (Soap) உபயோகிக்கிறார்கள். இவைகளை நாம் இவ்விடத்திலேயே உற்பத்தி செய்யலாம். அதற்கு வேண்டிய ஸாதகமான வஸ்துக்கள் இவ்விடத்திலேயே அகப்படும். அந்த சப்பு செய்வதற்கு நாம் ஒரு ஐக்கிய சங்கமாகச் சேர்ந்து நாணயச் சங்கம் போல் பங்குத்தொகையாக ஏற்படுத்தி பங்கு ஒன்றுக்கு ரூபாய் 10-விகிதம் 1,000 பங்குகளாக ஏற்படுத்தி அவைகளை மூலதனமாக வைத்துக்கொண்டு சப்பு செய்யும் கைத்தொழில்சாலை அமைத்து அந்த சாலையில் உற்பத்தியாகும் சப்புகளை நயமாகவும் வேண்டியவரையிலும் விற்பனைக்குக் கொண்டுவந்தால் அதனால் லாபமும் உபயோகமும் உண்டாகும். இதே மாதிரியாக அநேக பொருள்

களையும் வஸ்துக்களையும் உற்பத்திசெய்து கொள்வோமேயானால் அநேக கைத்தொழில்களையும், ஆகாரப்பொருள்களையும் ஏராளமாயும், நயமாயும் செய்து கொள்ளலாம். இம்மாதிரி செய்வதுதான் உற்பத்தி சங்கமாகும்.

மூன்றாவது விஷயமாகிய **விற்பனை சங்கம்** அல்லது பங்கிடும் சங்கம். அதாவது நமக்கொரு வஸ்து வேண்டுமானால் பத்துபேர் ஒன்று சேர்ந்து மொத்தமாய் வரவழைத்து நமக்குள் பங்கிட்டுக் கொள்வதாகும் உதாரணமாக நமக்கு பயிரிடுவதற்கு எரு வேண்டுமென்று வைத்துக்கொள்வோம். 10-நபர்கள் சேர்ந்து ரூ. 100-க்கு மொத்தமாய் எருவாங்கி இந்த பத்து நபருக்கும் வேண்டிய அளவு பங்கிட்டுக்கொள்ளலாம். அப்படி பங்கிட்டுக் கொள்வதால் லாபம் உண்டாகும். ஒருவன் ஒருபாரம் எரு வாங்கவேண்டுமானால் அவனுக்கு ரூ. 5. பிடிக்கும் என்பதாக வைத்துக்கொள்வோம். பத்து நபர்சேர்ந்து 10-பாரம் வரவழைத்தால் குறைந்த தொகைக்கு அதாவது சுமார் ரூ. 40-க்கு வரவழைக்கலாம். இதனால் ஒவ்வொரு நபரும் தனித்தனியாக வாங்கினால் ரூ. 5-க்கு வாங்க வேண்டிய எரு ரூ. 4க்குக் கிடைக்கிறது. 10-பாரம், மொத்தமாக வாங்குவதனால் நபர் 1-க்கு ரூ. 1 லாபம்கிடைக்கிறது. அதேமாதிரியாக ஆகாரப்பொருள்களும் மற்றும் மனிதவாழ்க்கைக்கு வேண்டிய சாமான்களனைத்தும் வரவழைத்து ஒரு பண்டகசாலையாக ஏற்படுத்திக் கொண்டால் நமக்குள் அதன்லாபத்தையும் பிரயோஜனத்தையும் அடையலாம்.

மேல் சொன்ன பிரிவுகள் ஒவ்வொன்றுக்கும் சம்பந்தமுண்டு. அதாவது நாணய வழியில்லாமல் உற்பத்தி சங்கமும் விற்பனை சங்கமும் உண்டாகாது. அதுபோலவே உற்பத்தி சங்கத்தில் பொருளை உற்பத்தி செய்து அதை விற்பனை செய்யலாம். விற்பனை செய்யும்போதும் உற்பத்தியும் பரஸ்பரம் செய்து கொள்ளலாம். இவைகள் ஒன்றுக்கொன்று சம்பந்தமான தத்துவமாகும். இம்மாதிரியான சங்கங்கள் ஐரோப்பாவில் அதிகமுண்டு. நாம் முதலில் நாணயவகையை நன்றாய் செய்யத் தெரிந்து கொண்டு ஐக்கிய பத்திய தாத்பரியத்துடன் நடந்தோமானால் மற்ற விஷயங்களும் சுலபமாயும் திறமையாயும் செய்ய சக்தி உண்டாகும். இம்மாதிரி விஷயங்களில் ஐரோப்பாவில் டென்மார்க்கு தேசத்தில் வெகு திறமையான ஐக்கியபத்திய முயற்சி செய்கிறார்கள். அவர்களைப்பார்த்து நாமும் பின்பற்றவேண்டும்.

ஆகையால் இந்த இராஜதானியிலும் மேல்சொன்ன நாணயவழியல்லாமல் மற்ற விஷயங்களும் விருத்திக்கு வரும்படியான முயற்சிகளை செய்தாலொழிய ஐக்கிய சம்மந்தமான தத்துவத்தை நாமுணர்ந்தவர்களாகமாட்டோம். பிரதி கிராமத்திலும் நாணய சங்கத்தைப்போல் உற்பத்தி சங்கமும் விற்பனை சங்கமும் உண்டாகவேண்டும்.



# ஐக்கியசங்கங்களும் கெடுக்கடந்த கடன்களும்

**(ஒரு கோவாபரேடர் எழுதியது.)**

ஆங்கிலே அரசாட்சியார் இந்தியா தேசத்தில் செய்துள்ள பற்பல நன்மைகளில் முக்கியமானதும், முதல்தரமானதும் ஐக்கிய சங்கங்களை ஸ்தாபிக்கச்செய்து அவைகளை மேற்பார்வை பார்த்து வருவதே. சென்னை இராஜதானிக்குமட்டும் சென்ற 1915-16ம் வருஷத்தில் இலட்சத்து நாற்பத்தாறுயிரத்து எண்ணூறு ரூபாய் ஜனங்களின் சௌகரியத்திற்காகவும், பிரயோஜனத்திற்காகவும் செலவழிக்கப் பட்டுள்ளதென்றால் கவர்ன்மெண்டார் எடுத்துக்கொள்ளும், சிரத்தைக்கும் சிரமத்திற்கும் வேறு அத்தாட்சியும் வேண்டுமோ? 1916ம் வருஷம், ஜுலை மீ முதற் தேதி யன்றைக்கு சென்னை இராஜதானியில் மட்டும் சுமார் 1800 சங்கங்கள் இருந்திருக்கின்றன. இந்த சங்கங்களில் இலட்சத்து முப்பதாறுயிரத்து இருநூற்று எண்பத்தாறு மெம்பர்கள் சேர்ந்துள்ளார்கள். இவ்வளவு சங்கங்கள் ஏற்பட்டுள்ளதும், இச்சங்கங்களில் இத்தனை மெம்பர்கள் சேர்ந்துள்ளதும், சென்னை இராஜதானிக்கு மட்டுமல்ல இந்தியா தேசம் முழுவதிற்குமே க்ஷேமத்திற்கு நற்குறி யெனினும் இத்தனை சங்கங்களிலும் எத்தனை சங்கங்கள் ஒழுங்காய் நடக்கின்றனவென்று நாமே கண்டறிவது நம்முடைய கடமையாகும். ஏனெனில் கூட்டுறவு சங்கங்கள்தான் இந்தியாவை முன்னுக்கு கொண்டுவரப் போகின்றதும், கூட்டுறவு சங்கங்களில் மெம்பர்களாய்ச் சேர்வதினாலேயே இந்தியர்களுடைய செல்வ நிலைமை விருத்தியடையப் போகின்றதென்றும் அபிப்பிராயங் கொண்டுள்ளவர்கள் அநேகரிருக்கின்றார்கள். ஆகையால் சங்கங்களின் எண்ணிக் கையைக்கண்டு நாம் பிரமிக்காது ஏற்பட்டுள்ள சங்கங்களில் எத்தனை சங்கங்கள் ஒழுங்காயும் நன்றாயும் வேலை செய்கின்றன வென்பதை கண்டறிய வேண்டியது நம்முடைய கடமையாகுமென்று கூறியது தவறாகாது.

சங்கங்கள் ஒழுங்காயும், நன்றாயும் வேலை செய்கின்றன வாவென்று கண்டறிவதற்கு அந்தந்த சங்கங்களிலுள்ள கெடுக்கடந்த கடன்களின் ஜாப்தாவை மட்டும்பார்த்தல் போதுமான தென்று நம்முடைய அபிப்பிராயம். சென்ற நான்கு வருஷகாலங்களாய் கெடுக்கடந்த கடன்கள் சங்கங்களில் அதிகமாய்க்கொண்டே வருகின்றன வென்பது ஐக்கியமுயற்சியில் சம்பந்தமுள்ள எல்லோரும் அறிந்துள்ள விஷயம். இதற்குக் காரணங்கள் எவையென கண்டறிந்து அவைகளை நீக்க முயலுவது இந்தியர்களென சொல்லிக்கொள்ளும் ஒவ்வொருவருடையவும் கடமையாமும். இவ்வியாஸத்தின் எண்ணமும் கோரிக்கையும் அதுவே யாகும்.

தற்காலம் நடக்கும் ஐரோப்பா யுத்தத்தினால் பருத்தி, மணிலாக்

கொட்டை, இவைகளின் விலை குறைந்து போய்விட்டதென்றும், அதினால் ஜனங்களுடைய வரும்படி குறையவே மெம்பர்கள் செலுத்த வேண்டிய தொகைகளை சரிவர ஒழுங்காய் செலுத்த முடியாமற்போய்விட்டதென்றும், தற்காலம் நடக்கும் ஐரோப்பா யுத்தத்தினால் பணம் புரளவில்லையென்றும். அதனால் மெம்பர்கள் தங்களுடைய கடன்களைசெலுத்த முடியவில்லை யென்றும் சொல்லப்படுகிறது. இக்காரணங்கள் நியாயமானவைகளாகத் தோற்றவில்லை. ஏனெனில் பருத்தி, மணிலாக்கொட்டை இவைகளின் வருமானத்திலிருந்து சங்கத்திற்குச்செலுத்த வேண்டுமென்று நிர்ப்பந்தமுள்ளவர்கள் மிகவும் சொற்ப மெம்பர்களே. இவ்வித நிர்ப்பந்தமுள்ள மெம்பர்கள்கூட கொஞ்சம் சிரத்தையும், சங்கத்திற்கு பணம் செலுத்த வேண்டுமென்ற அக்கரையும் எடுத்துக்கொள்வார்களாகில் மணிலாக்கொட்டை பேரிலும், பருத்தி பேரிலும், ஐரோப்பா யுத்தத்தின் பேரிலும் பழிகூறுவதற்கு அவசியமிராது. ஏனெனில் நூறு ரூபாய் கடன் வாங்கிய மெம்பர் சாதாரணமாய் ஒரு வருஷத்தில் அசலுக்கு பத்து ரூபாயும், வட்டிக்கு ரூ. 9-6-0, ஆக ரூபாய் 19-6-0 கொடுக்க வேண்டியதாகிறது. இதற்கு மாதம் ஒன்றரை ரூபாய் தன் செலவிலிருந்து மிச்சம் பிடித்தால் போதுமானது. நூறு ரூபாய் கடன் வாங்கிய மெம்பரும், அவன் குடும்பத்தாரும் மாதம் ஒன்றரை ரூபாய் மிச்சம் பிடிக்க சக்தியற்றவர்களென்று கூறும் பட்சத்தில் அப்பேர்க்கொத்த மெம்பர் நூறு ரூபாய் கடன் வாங்க லாயக்கற்றவனென்றே நாம் கூறுவோம். அப்பேர்க்கொத்த மெம்பருக்கு பஞ்சாயத்தார் நூறு ரூபாய் கடன் சாங்கிஷன் செய்திருக்கக்கூடாது. அப்படிச்செய்வதால் கூட்டுறவு முயற்சியின் நோக்கத்தையும் அபிப்பிராயத்தையும் பஞ்சாயத்தார்களே சரிவர கற்றுக்கொள்ளவில்லை யென்று சொல்லும்படி ஏற்படுகிறது.

ஐரோப்பா யுத்தம் ஆரம்பமான பிறகு பணம் புரளவில்லையென்று கூறுவதையும் நாம் அங்கீகாரஞ் செய்யவில்லை. ஏனெனில் முன் வருஷங்களைவிட தற்காலம் விவாகச் சடங்குகளில் பணம் குறைவாய் செலவழிக்கப்படுகிறதா? ஜனங்களின் குடியும், வெறியும், குறைந்து போய்விட்டதா? சிகரெட்டு, சுருட்டு, பீடி முதலியவற்றை விலைக்கு வாங்கி பணத்தைப் புகையாக்கும் வழக்கம் மாறிவிட்டதா? கோர்ட்டில் ஸிவில். கிரிமினல் கேசுகள் குறைந்து விட்டனவா? இச்செலவுகளுக்கெல்லாம் பணம் இருக்கிறது. சங்கங்களில் வாங்கிய கடனை திருப்பிக்கொடுப்பதற்கு மட்டும் பணம் புரளவில்லைபோலும்.

ஐக்கிய சங்கங்களின் மெம்பர்கள் செலுத்த வேண்டிய அசல் தொகை கெடுகடந்து போயிருப்பதுமன்றி செலுத்தவேண்டிய வட்டியின் தொகையும் வருஷா வருஷம் அதிகமாக கெடுகடந்து கொண்டு போகிறது.



| | 1912-13 | 1913-14 | 1914-15 | 1915-16 |
|---|---|---|---|---|
| கெடுகடந்து வசூலாகவேண்டிய வட்டியில் பாக்கி நின்றது. 100-க்கு | 34·93 | 37·51 | 54·06 | 51·35 |
| பிரஸ்தாப வருஷத்தில் வசூலாக வேண்டிய வட்டித் தொகையில் கெடு கடந்து பாக்கி நின்றது. 100-க்கு | 11·55 | 24·75 | 33·37 | 30·61 |

மேலே காட்டப்பட்டுள்ள குறிப்பின்படிக்கு 1912-13 முதல் மூன்று வருஷங்களில் கெடுதவறிய தொகை அதிகமாய்க் கொண்டே போய் 1915-16ல் கொஞ்சம் குறைந்திருப்பதைப்பார்க்கலாம். முந்தின வருஷங்களைவிட 1915-16ல் ஐரோப்பா யுத்தம் மிகவும் கடுமையாய் நடந்துவர சாமான்கள் எல்லாம் ரொம்பவும் அதிக விலை விற்று வரும் காலத்தில் கெடுகடந்து நின்ற வட்டியின் தொகை கொஞ்சம் குறைந்திருப்பதைப்பார்க்கிறோம். இதனால் நாம் அறிந்து கொள்வது யாதெனில், ஐரோப்பா யுத்தத்திற்கும் ஐக்கிய சங்கங்களில் கெடுகடந்து நிற்கும் தொகைகளுக்கும் யாதொரு சம்பந்தம் இருப்பதாகத் தோன்றவில்லையென்றும் பணம் புரளவில்லையென்றும், பணம் கிடைப்பதரிதாயிருக்கிறதென்றும் சொல்லுவது பொருந்தாதனை தென்றும் உள்ளங்கை நெல்லிக் கனிபோல் தெளிவாய் தெரிகிறது. ஆகையால் இதற்கு உண்மைக் காரணங்களைக் கண்டுபிடித்தல் அவசிய மென்பதாகவும் குறைகளை நீக்க வேண்டியது நம்முக்கிய கடமையென்றும் ஏற்படுகிறது.

கோவாபரேடிவ் ரிஜிஸ்ட்ராரவர்களின் 1914-15 வருஷத்தின் ரிப்போர்ட்டின் பிரகாரம் 115 சங்கங்களும், 1915-16 வருஷத்தின் ரிப்போர்ட்டின் பிரகாரம் 63 சங்கங்களும் மூடப்பட்டன. (லிக்கியுடேட் செய்யப்பட்டன) இப்படிவருஷா வருஷம் சங்கங்கள் முறிக்கப்பட்டால் ஐக்கிய சங்கங்களால் நன்மை எவ்வளவு விளைந்துள்ளனவென்று பிரத்தியட்சமாய்த் தெரிகிறதல்லவா. ஆகௌரவத்தையும் வெட்கத்தையும் பொருட்படுத்தாது இப்படி சங்கங்களை முறிக்கும் வழக்கத்தை முன்னமேயே டிபார்ட்மெண்டார் ஆரம்பித்து ஒழுங்கற்ற சங்கங்களை அப்பப்போது மூடி ஸ்திரமானவும், ஒழுங்கானவும் சொற்ப சங்கங்களை யேனும் நடத்தி வந்திருந்தால் சங்கங்களில் இவ்வளவு கெடுகடந்த கடன்களும் இருந்திரா. சங்கங்களை முறிக்கவேண்டிய அவசியங்களும் இருந்திரா. சீர் கேடான சங்கங்கள் ஒன்பதாயிரம் வைத்திருப்பதிலும் ஒழுங்கான சங்கங்கள் ஒன்பது நூறு வைத்திருந்தால் போதுமென்பதை டிபார்ட்டுமெண்டார் முன்னமேயே கண்டறிந்திருக்கவேண்டும்.

மேற்பார்வை போதுமானதில்லை யென்றும் இன்ஸ்பெக்டர்களும் சூபர்வைசர்களும் சங்கங்களை கவனிப் பதில்லையென்றும் சொல்லும் கனவான்களுக்கு பதில் சொல்லுவதற்கு அதிகமிருப்பினும், வைத்தியன் மருந்தைக்கொடுக்கலாமே யொழிய உட்கொள்ள வேண்டியதும், பத்தியம் பிடிக்க வேண்டியதும் நோயாளியே யொழிய வைத்தியனால் சாத்தியமானது ஒன்றுமில்லை யென்றும், சூப்பர்வைசர்களும், இன்ஸ்பெக்டர்களும் வைத்தியர்களே யொழிய அவர்களால் செய்யப்படும் முயற்சியெல்லாம் ஜனங்கள் சிரமமெடுக்காமலிருந்தால் வீணாகி பலனை விளைவிப்பதில்லை யென்றும் கூறுகிறோம்.

(1). ஐக்கிய சங்கங்களில் குறைந்த வட்டிக்கு பணம் கிடைப்பதினாலேயே கெடுக்கடந்த கடன்கள் அதிகமாகின்றனவென்றால் சிலருக்கு விளங்காமலும் போகும். அஃதெப்படியெனில், ஐக்கிய சங்கங்களில் வசூல் செய்யப்படும் வட்டி 100-க்கு வருஷம் 1-க்கு ரூ. 9-6-0 அபராதவட்டியுடன் சேர்த்து 100-க்கு வருஷம் 1-கக்கு ரூ 12-8-0. தற்காலம் பொது ஜனங்களுக்கு சாதாரணமாய் பன்னிரண்டு வட்டிக்குக் குறைந்து எங்கும் பணம் கிடைப்பதில்லை. சங்கங்களுக்கு கொடுக்க வேண்டிய கடன்களுக்கு வேறு இடத்தில் 12-வட்டிக்கு வாங்கி பத்திரச்செலவு, எழுத்துக் கூலி, ரிஜிஸ்டிரேஷன் கட்டணம் கொடுத்து கஷ்டமடைவதிலும், அதே வட்டிக்கு ஐக்கிய சங்கங்களிலேயே கடன் கெடுகடந்து நிற்வதால் ஒன்றும் கெட்டுப் போகவில்லை யென்றும் ஜனங்கள் கொண்டிருக்கும் ஓர் தப்பான எண்ணம் சங்கங்களில் கெடுக்கடந்தகடன்கள் அதிகமாவதற்கு காரணமாகிறது.

குறிப்பு :—தற்காலம் வட்டி மாதம் 1-க்கு ரூபாய் ஒன்றுக்கு பைசா மூன்று என்றும். ஒழுங்காய் கெடுப்பிரகாரம் செலுத்துபர்களுக்கு ஒன்றரை பைசா வீதம் கணக்கிட்டு மீதியை வாபஸ் செய்யப்படும் என்று ஏற்படுத்தியுள்ள புதியவிதியின்பயன்தான் 1915-16-வருஷத்தில் கெடு கடந்த நின்ற தொகை கொஞ்சம் குறைந்தது. இவ்விதி எல்லாசசங்கங்களிலும் அமுலுக்கு கொண்டுவரப்பட்டால் கொஞ்சம் பயனுளதென்றே கூறுவோம்.

(2). கோர்ட்டுக்குப் போவதால் கடன்வாங்கிய மெம்பர்களுக்கு சௌகரியங்கள் ஏற்படுவதால் கோர்ட்டுக்குப் போய்வரும் வரையில் கடனைசெலுத்தாது அலட்சியமாய் மெம்பர்களிருப்பதால் கெடுக்கடந்த கடன்கள் அதிகமாகின்றன.

கோர்ட்டுக்குப்போன கேசுகள்.

| 1911—12 | 1912—13 | 1913—14 | 1914—15 | 1915—16 |
|---|---|---|---|---|
| 143 | 255 | 429 | 652 | 1022 |

கோர்ட்டுக்குப் போக மெம்பர்கள் பிரியப்படுகிறார்கள் என்பதற்கு மேலே காட்டியுள்ள கணக்கொன்றே போதுமானதாக விருக்கின்றது. இப்படி பிரியப்படுவதின் ரகஸ்யம் என்னவெனில் டிக்ரிதேதிமுதல் கடனை தீர்ப்பதற்கு வாய்தாவும் கொடுக்கப் படுகிறது. டிக்ரிதேதிமுதல் கோர்ட்டார் கொடுக்கும் கெடுதினங்களுக்கு உள்ள வட்டி ரூ. 100க்கு வருஷம் 1க்கு ரூ. 9-6-0 காட்டிலும் குறைத்து விதிக்கப்படுகிறது. கோர்ட்டு சிலவுகளும் அதிகமில்லை. கோர்ட்டு சிலவுக்கும் கெடுதினங்களுக்கு வட்டி குறைத்ததற்கும் இரண்டும் சரியாய்ப்போகிறது. ஆகையால் கோர்ட்டுக்குப் போவதால் கடன்வாங்கிய மெம்பர்களுக்கு நஷ்டமொன்றுமில்லை. கோர்ட்டுக்கு பஞ்சாயத்தார்கள் சீக்கிரம் போக மாட்டார்களென்பது திண்ணம். ஆகையால் கோர்ட்டுக்குப்போய் டிக்ரிவாங்கி வரும்வரையில் தாமதஞ் செய்யும் வழக்கத்தாலேயே கெடுக்கடந்த கடன்கள் அதிகமாகின்றன.

குறிப்பு.—தற்காலம் ஏற்பட்டிருக்கும் ஆர்பிட்ரேஷன் பைலா இத்துர்வழக்கத்தை கண்டிக்குமென்று நினைக்க இடமுண்டு. ஆனாலும் இதைப்பற்றி பின்னால் விபரமாய் எழுதுவோம் (பின் தொடரும்)

# வட்டி

[திருவண்ணாமலை, ம-ா-ா-ஸ்ரீ, M. S. சேஷாசலமய்யர் அவர்களெழுதியது.]

கடன் தொகையை உபயோகப்படுத்தியதற்காக கடன்கொடுத்தவர்களுக்கு கடன் வாங்கியவர் கடன் தொகைக்குமேல் சேர்த்துக்கொடுக்கும் லாபம் வட்டி எனப்படுகிறது. வட்டி வீதம் தேசத்துக்கோர் விதமாய் மாறுபாடுடையதும் தவிர கால சுபாவத்திற்கேற்ப, ஏற்றக்குறையச் சலுமடைகிறது. நம்மிந்தியாவில் சாதாரணமாய் இருதரத்தாருக்கும் நஷ்டமின்றி ஏற்பட்டவட்டி வீதம் "தர்ம வட்டி" என்று வழங்குகிறது. இது தென்னிந்தியாவில் 100-க்கு வருஷத்திற்கு 12 ஆகவும், பம்பாயில் 9 ஆகவும், பர்மாவில் 18 ஆகவும் இன்னும்பல தேசங்களில் அந்தந்ததேசத்தில் கடன் வாங்கி உபயோகிக்கும் தொகைக்கு கிடைக்கக் கூடியவருமானத்திற்கேற்றபடி வட்டி கணக்கிடப்பட்டு வந்தது. கடன் தொகையெந்தெந்தவிஷயத்தில் உபயோகப்படுத்தப்படுகிறதோ, அந்தந்தவிஷயத்தில் கிடைக்கும் லாபத்தின் பேரிலேயே வட்டி வீதம் நிற்கும்; உதாரணமாக மணிலா, அவுரிமுதலிய (ஏராளமான லாபமோ, நஷ்டமோ ஒரேதடவையில் கிடைக்கும்) வியாபாரத்துக்காக வாங்கும் கடன்களுக்கு வருஷத்திற்கு 24 முதல் 48 வரையில் வட்டி கொடுக்கிறார்கள். நிலம் வாங்கவும் வீடு கட்டவும் முதலான சொல்ப லாபம் கிடைக்கும் விஷயங்களுக்கு வருஷத்திற்கு 12 வட்டிக்குமேல் கொடுக்க யாரும் உடன்படார்கள்.

எல்லா தேசங்களிலும் ''வட்டி வியாபாரம்'' அல்லது "லேவாதேவி" என்கிற வியாபாரம் சிலபிரமுகர்களால் செய்யப்பட்டு வருகிறது. வெகுகாலமாய் இவர்கள் பாரம்பரியமாய் இத்தொழில் செய்து வருவதில் இவ்வகுப்பாரின் குணம் நடையுடைபாவனைகள் செப்பனிடப்பட்டு ஓரே பாங்காய் தொன்று தொட்டு வழங்கிவருகின்றன. ஆதிகாலத்திலே வட்டி வாங்குவது பெரும்பாவமாகவும் இழிவான தொழிலாகவும் கருதப்பட்டது. மேல் நாட்டில் மோசேயு இஸ்ரவேலரிடத்தில் வட்டியேவாங்கப்படாதென்று விதி ஏற்படுத்தினார். இஸ்ரவேலரிடமென்றதால் மற்றவரிடம் வட்டி வாங்கலாமென ஏற்படும். ஆதலின் பூர்வகாலத்தில் ஏழைகளிடம் வட்டி வாங்குவது தடுக்கப்பட்டிருந்தது. சொற்ப ஊதியமே கிடைக்கும் விவசாயத்துக்கும், சாப்பாட்டுச் சிலவு, சுபா சுபச் சிலவு முதலியதிரும்பி வருவதையெ எதிர்பார்க்கக்கூடாத கடன்களுக்கும் வட்டி வாங்குவதுஅக்கிரமமெனவும் ஏழைகள் கொடுக்க முடியாதெனவும் கரு

தியேபுராதன மதாசாரியர்களான மோசேயு டெஸ்டமெண்டாகிய வேத
புஸ்தகத்திலும் வட்டி வாங்குவது பெரும்பாவமென வரைந்திருக்
கின்றனர். ஆங்கிலேய அரசன் பதினோருவது நூற்றாண்டில் வட்டிவாங்கு
வதை குற்றமாக்கிச் சட்டமேற்படுத்திவிட்டார். ஆனால் அக்காலத்தில்
லேவாதேவி செய்து வந்த யூதஜாதியாருக்கு அதிக வட்டி வாங்க இது
ஒரு துணையாயிற்று. வட்டி கிடையாதென ஏற்பட்டவுடன் பணம் வைத்
திருப்பவர்களும் பிறருக்குக் கொடுப்பதை நிறுத்திவிட்டார்கள். பணம்
கிடைப்பதருமையானதுமன்றி வட்டிக்குக் கொடுப்பதும் ராஜாங்க
தண்டனைக்குள்ளானதாதலால் யூதர்கள் ரகசியமாய் அப்பிர வட்டிக்குக்
கடன் கொடுக்க ஆரம்பித்துவிட்டார்கள். பணம் லேவாதேவி செய்
வோரை சீர்திருத்தவேண்டுமானால் கடவுளருள் வேண்டுமல்லாமல் ராஜா
ங்கசட்டமாயினும் மற்றோருக்குள்ள சங்கக்கட்டுப்பாடு, ஜாதீய வரம்பு,
முதலிய எதுவும் பிரயோஜனப்படாது என யாவருக்கும் தெரியும். நம்மிந்
தியாவிலே நாளடைவில் இவ்வகுப்பாரால் கொள்ளை கொள்ளப்பட்ட குடு
ம்பங்கள் எண்ணிறந்தவை. ஒவ்வொரு குக்கிராமங்களிலும் ரத்தத்தை
இவர்கள் உறிந்துவிடுதால் வருந்திய உயிரோடுகூடியஎலும்புக் கூடுகளையே
எங்கும் காண்கிறோம். இவ்வகையார் ஏழைகளை மோசம் செய்யும் வித
மும் ஏழைகள் படிப்பின்மையாலும் வேறு வழியின்மையாலும் தங்கள்
சொத்து பூராவும் தோற்று இவர்களுக்கடிமையாவதும் இக்கொடுந்தொ
ழில் புரியும் மானிடப்புலிகளும் மிக்க தர்மவான்களாய் பிறர் மதிக்க
பெரும் செல்வாக்கும் கீர்த்தியும் உடையோராயிருப்பதும் ஒன்றுக்
கொன்று மிக்க விரோதமாயினும் இவ்வுலகில் ஸகஜ தர்மமாய் நடந்து
வருகிறது. ஆங்கிலகவிசிரேஷ்டரான "ஷேக்ஸ்பியர்" என்பவர் தன்
"வெனிஸ்வர்த்தகன்" என்னும் நாடகத்தில் லேவாதேவி செய்வோரின்
குணத்தை உலகோரறியுமாறு விஸ்தாரமாய் "ஷைலக்" என்னும் யூத
னைக்கொண்டு தெரிவிக்கிறார், "தற்காலத்தில் ஒருவனுடைய ஆஸ்திக
ளைக் கவரவும் சுயேச்சையை அடியோடு அழித்து தனக்கு வேண்டிய
சகல சுகங்களையும் பதவிகளையும் தேடிக்கொள்ளவும் "வட்டிவியாபாரம்"
சுலபசாதனமாகும். "உன்பிரியமான பசுவையும் நீ படுத்துறங்கும்
மஞ்சத்தையும் வேறுயெதையும் கடன்கொடுத்தவர்விரும்பினால் நீ
கொடுக்க இஷ்டப்படாவிட்டால் உன் வாழ் நாள் முடிவென்று நினை"
என்று ஓர் நிபுணர் சொன்னார். இது ஒவ்வொருவருடைய அனுபவத்தி
லும் உண்மையென்றே ஏற்படும். நம்மிந்தியாவில் தற்காலத்தில் வட்டி
வியாபாரமுள்ளவர்களே செல்வாக்குள்ளவராகின்றனர். ஏனெனில் இவர்
கள் கடன் கொடுத்திருக்கும் அளவு குடும்பங்களினுடைய கட்டாய ஆதர
வும் இவர்கட்குண்டு; தவிர "பணம் பத்து விதம் செய்யும்" என்றபடி
குணம் குப்பையிலும் பணம் பந்தியிலும் இருக்கவேண்டிய தவசியம்



தானே. இது விஷயமாய் எழுதப்புகின் இவ்வியாஸம் இடம் தராததுடன்
இவ்வகுப்பாரின் சீற்றத்திற்கும் பாத்திரனாவேனாதலின் இத்துடன் நிறு
த்தி வட்டி என்பதைப்பற்றி பின்னும் சற்று சொல்லல் நியாயமாகும். தற்
காலத்தில் தர்ம வட்டி என்பது 100-க்கு 5 வரையில் செலாவணியாகி
றது. வயிறுவளர்க்க வானத்தை அண்ணாந்து பார்த்து வருந்தும் விவசாய
தொழிலையே ஜீவனோபாயமாய்க்கைக்கொண்ட நம்மிந்தியர்கள் கடனின்றி
வாழ்தலரிது. தர்ம சிந்தையும் உதாரமும் உலக இன்பத்தில் வெறுப்பும்
சுபாவமாய்க்கொண்ட நம் சகோதரர்கள் காலத்தை அனுசரித்து நம்
நடவடிக்கைகளை திருத்திக்கொள்வதை விடுத்து "சிக்கனம்" என்பது
சற்றேனுமின்றி வேண்டுங்கால் கடன் வாங்கி வந்ததே நம் தேசத்தின்
தரித்திரத்துக்குக் காரணமாய்விட்டது. இக்கடன்கள் சில குடும்பங்
களில் 4 தலை முறை 5 தலைமுறையாயும் தொடர்ந்து வட்டிக்கு வட்டி
சேர்ந்து பருத்து சுமக்க முடியாத பார மலைகளாய் விளங்குகின்றன.
கடன்கொடுப்பவர் சமயத்துக் கேற்றபடி வட்டி வீதங்கள் ஏற்படுத்திக்
கொண்டு சுயநயமாய் நாளடைவில் பலகுடும்பங்களை மூழ்கச்செய்தனர்.
இவைகளால் அப்பொழுதுக் கப்பொழுது ராஜாங்கத்தார் நிராதரவான
ஏழை ஜனங்களுக்காகப்பரிந்து அவர்களை இந்தவகுப்பாரின் வலைகளி
னின்றும் மீட்கப்பல உபாயங்கள் செய்தும் பயனற்றதாயின. ஆதியிலே
ரோமபுரியிலே ராஜாங்கத்தார் குற்றவாளிகளிடமிருந்து கைப்பற்றும்
பொருள்களைஒன்றுசேர்த்து வட்டி இல்லாமல் ஏழைக்குடிகளுக்கு கடன்
கொடுத்து வந்தார்கள். இவ்வழக்கம் பல தேசங்களிலும் அனுசரிக்கப்
பட்டதாய் தெரிகிறது. மத்தியகாலங்களில் அரசர்கள் வட்டி வீதத்தை
நிர்ணயித்து சட்டமேற்படுத்தி இருக்கிறார்கள். பிறகு ராஜாங்கத்தில்
சண்டை ஏற்பட்டுதிரவியம் அதிகமாய் செலவுக்கு வேண்டி இருந்தகாலங்
களில் பணம் மிகுதியுள்ள இந்தலேவாதேவி செய்யும்வர்த்தகரின் சேர்
க்கைவேண்டி இருந்தமையால் மேற்படி சட்டங்கள் ரத்து செய்யப்பட்டு அவரவ
ர் ஏற்படுத்திக்கொள்ளும் வீதாசாரங்கள் செலாவணியாயிற்று. நம்மிந்தி
யாவிலும் ஏழைக்குடிகளுக்காக பலபிரயத்தனங்கள் செய்யப்பட்டன.
ராஜாங்கத்திலேயே கடன்கொடுப்ப தென்றும் சிலகடன் சட்டங்கள் ஏற்
பட்டன. கடனையொழிக்க சக்தியின்மையென்னும் இன்ஸால் வென்வி
சட்டமும் லிமிடேஷன் ஆகட் என்னும் கெடுச்சட்டமும் கடன்பட்டு வருந்
தும் ஏழைகளுக்காகவே ஏற்பட்டன, ஆனால் அதிக செல்வாக்குள்ளலேவா
தேவிக்காரரை நேரில் பாதிக்கும்படி வட்டி நிர்ணயச் சட்டம்கொண்டு
வர பல ஏழைகளின் சகோதரர்கள் முன்வந்தும் அவர் பிரயத்தன
மனைத்தும் காட்டில் காய்ந்த நிலவாயிருக்கிறது. இன்ஸால்வென்வி என்
னும் கடன்நிவர்த்திக்கும் சட்டத்தின் தைரியத்தால் மோசக்காரரனேகர்
ஏற்பட்டனர். பிழைப்புக்கு மார்க்கமில்லாமல் வருந்தும் காலத்தில்

எவ்வித நிபந்தனைக்கும் உட்பட்டு கடன்வாங்குவதும் பிறகு மோசம் செய்யவழிதேடுவதும் ஸகஜமாய் விட்டது. கடன்கொடுப்போர் இந்த நிலைமைக்கேற்றபடி தக்கலாபம் கிடைக்கும்படி நிபந்தனைகள் ஏற்படுத்தினர். ஒருமுறை சொல்பக் கடனேனும் வாங்க நேர்ந்தவன் தன் சொத்துக்கள் சர்வ விஸ்லங்க சுத்தியாய் காலியாகும் வரையில் கடன்காரனாகவே இருப்பான். இந்த நிலைமையில் சர்பிடரிக் நிகல்ஸன் என்னும் பிரபுவின் பெரு முயற்சியால் நம்மிந்தியாவில் "ஐக்யசங்க ஏற்பாடுகள்" சட்டமூலமாய் ராஜாங்கத்தாரால் ஆரம்பிக்கப்பட்டு தற்காலம் சுமார் 2,000 சங்கங்கள் நம் இராஜதானியில் மாத்திரம் இருக்கின்றன. இவைகளில்முன் கடனை நீக்க மார்க்கங்கள் காண்பிக்கப்படுவதுடன் சிக்கனம், கூட்டுறவு, சுயேச்சை, இவைகளும் கற்பிக்கப்படுகின்றன. அதிக வட்டி வாங்கி ஜீவிக்கும் சாவுகாரர்கள் ஏற்கனவே இந்த ஏற்பாட்டை சந்தேகத்துடன் வெறுத்துவந்தார்கள். குறைந்த வட்டியில் லட்சக்கணக்கான பணங்கள் ஏழைகளுக்கு கடனாகக் கொடுக்கப்பட்டு சக்திக்கேற்றவாறு கொஞ்சம் கொஞ்சமாய் திரும்பி வாங்கப்படுகிறது. தவிர, கிராமங்களில் ஒற்றுமையும் சிநேகபாவமும் பரவி ஒற்றுழைத்து பொது நன்மை விர்த்தியாகத் தலைப்பட்டது. ஆயினும் ஐக்யபாவத்தால் நம் பிரதேசமுழுவதும் காப்பாற்றலாமெனுங் கனவு நிஜமாய் முடியவெகு நாட் செல்லும். செல்வமுழுவதும் கையிலடக்கி இருக்கும் லேவாதேவிக்காரர் இந்த ஏற்பாட்டை தங்கள் சத்ருவாக பாவித்து சகலபுருஷப் பிரயத்தனத்தாலும் இதற்கு இடையூறு செய்யத் தயாராயிருப்பதாலும் நம் ஏற்பாட்டுக்குவேண்டிய செல்வம் ஏராளமாய் கிடைத்தலரிதாயிருப்பதாலும் தற்காலம் முழு நன்மையும் எதிர்பார்த்தல் ஸாத்தியமில்லை. பெருங்கடன்காரர்களும், வியாபாரிகளும், ஏழைகளும் இன்னும் அநேகர் சாவுகார்களிடம் அகப்பட்டு வருந்துகின்றனர். ராஜாங்கத்தார் ஏழைகளைக் காப்பாற்றவட்டி நிர்ணயச்சட்டம் ஏற்படுத்தி இவ்வளவுக்கு மேல் வட்டி வாங்கினால் குற்றமாகும் எனவரையறுக்கா விட்டால் நம்தேசம் இன்னும் க்ஷீணதிசைக்கு வருவதுடன் எவ்விராஜ்யத்துக்கும் அஸ்திவாரமாயும் சகலமாந்தர்க்கும் உயிராயுமுள்ள விவசாயக்காரர்களனைவரும் ஏழைகளாய் தம்தொழில் நடத்தசக்தியற்றவராவார்கள். இதனால் தேசத்துக்கும் ராஜங்கத்துக்கும் இளைப்புண்டாகிறது. ஆகயினால், வட்டி வீதம் இவ்வளவுக்கு மேல் யாராவது வாங்கினால் குற்றமென் சட்டம் ஏற்பட்டவுடன் லேவாதேவிக்காரர்கள் தங்கள் பணங்களை நமது ஐக்யசங்கங்களில் போடவும் தாங்களே ஜனோபகாரிகளாய் ஷை சங்கங்களை பராமரிக்கவும் அதினால் தாங்களே நற்குணங்களை அடையவும் சாதகமாகும்.

---



# தவணைப்பிரகாரம் நாணயங்களை நடத்துதல்.

மேற்கூறிய விஷயத்தைப்பற்றி பின்வரும் வியாஸம்.

1917௵ மாச்சுமீ 25௳ கம்புளியம்பட்டி யூனியன் கான்பரென்சில் K. S. ரங்கய கவுண்டரால் வாசிக்கப்பட்டது.

கோஆபரேடிவ் சங்கங்களால் நாங்கள் மெம்பர்களுக்கு அநேக நல்ல குணங்களை அவசியம் கற்றுக் கொடுக்க வேண்டுமென்று அனைவரும் எதிர்பார்க்கிறார்கள். நல்ல சங்கங்கள் கற்பிக்கும் குணங்களில், உண்மை பேசுதல்-லேவாதேவிவிஷயத்தில்வாக்குத்தவறாமல் நடந்து கொள்ளுதல், மதுபானம் முதலிய கெட்ட குணங்களை விட்டொழித்தல், முதலானவைகள் முக்கியமானவை. நன்றாய் ஆலோசித்துப் பார்க்குமளவில் இவ்விதமான சங்கங்களினின்று கற்றுக்கொள்ளக்கூடாத துர்க்குணங்களுமில்லை, கெட்டகுணங்களை விட்டு மீட்பதற்கும் இவைகளைவிட வேறு ஏற்பாடுகளுமில்லை. ஆயினும் எல்லாக் குணங்களிலும் முதலில் மெம்பர்களுக்கு சங்கங்கள் கற்பிக்கவேண்டியதாவது ஒப்புக்கொண்ட பிரகாரம் அதேகாலத்தில் மெம்பர்கள் தாங்கள் வாங்கிக்கொண்ட கடன்களை திருப்பிக்கொடுத்தல்என்பதே. அதேமாதிரியாகவே சங்கங்கள் தாம் வாங்கின கடனை சரியானகாலத்தில் வாப்ஸ் செய்தல் மிகவும் அவசியம். இக்குணங்கள் சங்கத்திலும்மெம்பர்களிடத்திலு மில்லையாயின் கூடியசீக்கிரத்தில் அச்சங்கங்கள் நாசமடைவதிற் சந்தேகமில்லை. இந்நற்குணமில்லாவிடின் லேவாதேவிச் சங்கங்கள் நடைபெறாதன. ஆகையால் இவ்விதமான சங்கங்களில் இவ்விஷயத்தைப்பற்றி எவ்வளவு கவனித்தாலும் ஜாஸ்தியாக மாட்டாது. ஆனால் வெகுகாலமாய் லேவாதேவியில் வாக்குப் பிரகாரம் நடவாமலிருந்து கொண்டிருந்த கிராமத்திலுள்ளவர்களுக்குவாக்குப் பிரகாரம் (டயத்தில்) வாப்ஸ் செய்யும் நற்குணத்தைக் கற்றுக்கொடுக்கவேண்டுமானால் மிகவும் கஷ்டங்கள் ஏற்படுகின்றன. இச்சங்கங்களின் நிபந்தனைகளை மிகவும் கண்டிப்பாய் வைப்போமாயின் படிப்பில்லாத ஜனங்கள் சங்கத்தை விட்டு நீங்கிவிடுவார்கள். கண்டிப்பு மிகவும் குறைந்துவிட்டால் வாங்கினகடன்களை சரியானகாலத்தில் வாப்ஸ் செய்யாமல் கடனாளிகளாய்க் கெட்டுப்போவார்கள். ஆகையால் இரண்டிற்கும் மத்தியமாய் நடத்தல் வேண்டும்.

(2) மெம்பர்களை ஒரு நிபந்தனைப் பிரகாரம் நடப்பிக்கவேண்டுமானால் அந்த ஏற்பாட்டிற்குமீறி நடக்கிறவர்கள் அபராதத்திற்கு உட்படுவார்களென்ற ஓர் பயம் உண்டுபண்ணவேண்டியது அவசியம். பயமில்லாவிட்டால் தவணை (டயம்) பிரகாரம் வசூலாகாது. பாக்கித் தொகையை சரி

வர வாப்சு செய்கிறவர்களுக்கு வெகுமானம் கொடுக்கலாம். ஆனால் தண்டனையில்லாமல் முடியாது. இது அபாரதமாகவாவது இருக்கலாம், அல்லது மெம்பரினின்று நீக்குவது, தள்ளி வைப்பது, முதலானவைகளும் உபயோகப்படுத்தலாம். ஜனங்களுக்கு மிகவும் அனுகூலமாயும் சரியாயுமுள்ள ஏற்பாடுகளைக் கண்டு பிடிக்கவேண்டும். கோஆபரேடிவ் சங்கங்களின் அபிவிருத்திக்கு இவ்விஷயம் மிகவும் முக்கியமானது.

(3) இவ்வளவு நாளாக நாம் இது விஷயத்தில் தவணை கடந்து வருகிறோம். எல்லா சங்கங்களின் நிபந்தனைகளிலும் இதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். ஆனால் நாம்இவ்வளவுகாலமாக வைத்துக்கொண்டிருக்கிற இந்த ஜாஸ்தி வட்டி வசூல் செய்யும் ஏற்பாடானது நம்முடைய எண்ணங்களை நிறைவேற்றி மெம்பர்களுக்குச் சரியான காலத்தில் வேலை செய்யும் நல்ல குணத்தைக் கற்பிக்கிறதா என்று யோசித்துப் பார்ப்பது நல்லது. அநேகமாய் இது மெம்பர்களுக்கு அவ்வித நல்ல குணங்களை கற்பித்திருப்பதாகத் தெரியவில்லை. ஒரு ஏற்பாடு அமுலுக்கு கொண்டுவருவதற்குமுன் அவ்வேற்பாட்டின் குணாகுணங்களைத் தீர ஆலோசிப்பது சிரேஷ்டமானதால் கோவாபரேட்டர்களை இவ்விஷயத்தைப்பற்றி யோசிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அந்த எண்ணத்துடன் தான் இவ்வியாஸம் எழுதப்பட்டிருக்கிறது.

(4) மெம்பர்களிடத்திலிருந்து ஜாஸ்தி வட்டி வாங்குவதின் அபிப்பிராயம்,. அவர்களுக்கு நாணயத்தின் அவசியத்தை கற்பித்து அவர்கள் மனத்தில் ஒரு பயமுண்டு பண்ணுவது தான். நமக்கு அவர்களிடத்திலிருந்து அனாவசியமாக ஒரு பைசா கூட வாங்கவேண்டுமென்ற எண்ணங்கிடையாது. இந்த எண்ணத்துடன் அபராத வட்டி வசூல் செய்வது சரியான ஏற்பாடு தான். கிராமங்களில் இங்கிலீஷ் தேதிகள் தெரிந்தவர்கள் மிகவும் குறைவு. பஞ்சாயத்தார்கள், அதிக சிரத்தை எடுத்துககொண்டு ஒவ்வொரு மெம்பருக்கும் தவணை காலத்திற்கு 15 நாளைக்கு முன்னதாகவே சொல்லி வைத்து அடிக்கடி அவர்களைக் கேட்டுக்கொண்டிருந்தால் எல்லாக் கடன்களும் சரியான காலத்தில் வசூலாகும். இல்லாவிட்டால் வசூலாவது கொஞ்சம் சிரமம். இவ்வளவு சிரத்தை பஞ்சாயத்தார்களிடம் நாம் எதிர்பார்க்கமுடியாது. தாம் தங்களுடைய ஆஸ்திகளையெல்லாம் ஈடு வைத்து ஏழைகளுக்கு ஜாமீன்தாரர்களாயிருந்து கடன்களை கொடுப்பதே விசேஷம். ஏழைகளிடமிருந்து பணம் வசூல்செய்வது மிகவும் அசாத்தியமான காரியம். இவ்விஷயமாய் அவர்களுக்கு ஜாஸ்தி கஷ்டமில்லாத உபாயமிருந்தாற்தான் ஏழைகளுக்கு ஜாஸ்தி உபகாரம் செய்ய பஞ்சாயத்தார்கள் விரும்புவார்கள். இல்லாவிட்டால் சங்கங்கள் விருத்தியாகமாட்டா. சங்கங்களில் நன்றாய் விசாரித்துப் பார்த்தால் இப்



பொழுது ஏழைகளுக்கு ஜாஸ்தியாக அனுகூலம் கிடைக்கவில்லையென்றும், சுமாராய் ஆஸ்தியுள்ளவர்களே அனுகூலமடைகிறார்களென்றும், விளங்கும். மேலும் இப்பொழுது இருப்பதைவிட பஞ்சாயத்தார்களுக்கு ஜாஸ்தி கௌரவத்தை உண்டாக்கவேண்டும். ஸர்க்கார் இது விஷயமாய் எவ்வளவு உதவி செய்தாலும் கோஆபரேஷனுக்கு மிகவும் உதவியாகயிருக்குமென்பதில் ஆக்ஷேபணையில்லை.

(5) பட்டணங்களிலுள்ள நிதி, பண்டாபீஸ் முதலியவைகளில் அபராத வட்டி வசூல் செய்து வருகிறார்களே, அதனால் அவ்வளவு அனுகூலம் காணப்படவில்லை.

இவைகளுக்கு வருகிற லாபத்தை யோசித்துப்பார்க்குமிடத்தில் இது விஷயமாய் வசூலாகிற தொகை மிகவும் அதிகமாகக் காணப்படுகிறது. ஆனால் மெம்பர்கள் தங்கள்கெட்ட குணங்களை இன்னும் விடவில்லை. இங்கிலீஷ் தேதி முதலிய விவகாரங்களைத் தெரிந்தவர்களாகிய பட்டணத்தார்களே இவ்வித மிருக்கிறதாகத் தெரிகிறது; என்போன்ற படிப்பில்லதா கிராமவாசிகளைக் கேட்பானேன். மெம்பர்களுக்கு தாம் இவ்வளவு வட்டி கூடக்கொடுக்கிறோமென்றுகூடத் தெரியாது. கொடுத்த தொகைகள் வாஸ்தவமாய் சங்கத்தில் வேலை செய்கிறவர்களுக்கு தான் தெரியும். பஞ்சாயத்தார் காரியதரிசி முதலானவர்களுடைய அஜாக்கிரதையாலும் மெம்பர்கள் நஷ்டமடைந்து வருகிறார்களெனத்தெரியவரும். நம்முடைய முக்கிய உத்தேசம் மெம்பர்கள் மனத்தில் பயமுண்டு பண்ண வேண்டுமென்பதே. மெம்பர்கள் ஒன்று மறியாமல் கேட்ட பணத்தைக் கொடுத்துக்கொண்டு வருவதினால் அந்த எண்ணம் கொஞ்சம்கூட நிறைவேறவில்லை.

(6) கோஆபரேஷனில் பண்டிதரான உல்பு துரையவர்களின் புத்தகத்திலுள்ள நிபந்தனைகளில்வேறு ஒரு ஏற்பாடு சொல்லுகிறார். பஞ்சாயத்தார்களுக்கும் மெம்பர்களுக்கும் அபராதம்போட ஏற்பாடு செய்கிறார்கள். ஒவ்வொரு தப்பையும் அவர்கள்யோசித்து தீர்மானம் செய்யவேண்டும். இப்படிச்செய்வதில் மெம்பர்களுக்கு ஜாஸ்திகஷ்டமாகாது. நியாயமான கேஸ்களில் அபராதம் விதிக்கப் படமாட்டாது. இப்படிக் கூட்டித்தீர்ப்பு சொல்லுகிறதில் பஞ்சாயத்தார்களுக்குமரியாதையும் ஜாஸ்தியாகி விவகார ஞானமும் விருத்தியாகும். தனியாக வசூல் செய்வதில் மெம்பர்களுக்கு அபராதமென்றுதெரிந்திருக்கமுடியாது. வரவர மெம்பர்களுக்கு அபராதமென்றால் அவமானம் ஜாஸ்தியாகும். சரியான காலத்திலும் வாப்ஸ் செய்துவிடுவார்கள். அபராதத்தில் அவமானம் இல்லாவிட்டால் ஒருவருக்கு10-ரூ அபராதம் விதித்துவிட்டால் அதைநீக்கும்பொருட்டு 100 ரூபாய் செலவு செய்கிறார். இந்த அபராதத்தை எப்படி வசூல் செய்வது

என்று ஒரு கஷ்டம் ஏற்படலாம். பங்குத்தொகைகொஞ்சம் ஜாஸ்தியாக வசூல் செய்து விட்டால் இது சுலபமாகிவிடும்.

(7) இவ்விதமான ஏற்பாட்டை லேவாதேவி செய்கிறவர்கள் ஒரு மாதிரியாக உபயோகிக்கிறார்கள். தவணைகடந்தவுடனே ஒருமனிதனை அனுப்புகிறார்கள். கடன்பட்டிருக்கிறவர்கள் அவனுக்குபோஜனம்போட்டு கூலிகொடுக்க வேண்டியதாய் நேரிடுகிறது. இதற்கு பயந்து கட்டாயமாய் சீக்கிரம் கடனை வாபஸ்கொடுத்து விடுகிறார்கள். அபராதவட்டி விதிப்பதில் கடன்காரர்களுடைய பணம் நஷ்டமடைகிறதே யொழிய அவர்களுக்கு நல்ல புத்தி வருகிறதில்லை.

(8) இன்னொரு விஷயம் பஞ்சாயத்தார்களுக்கு சொல்ல விரும்பிகிறேன். நான் முன்னமேசொல்லிய பிரகாரம் பஞ்சாயத்தார்கள் அதிக சிரத்தை யெடுத்துக்கொண்டு ஒவ்வொரு மெம்பருக்கும் தவணை காலத்திற்கு 15 நாளைக்கு முன்னதாகவே சொல்லிவைத்து அடிக்கடி அவர்களைக் கேட்டுக் கொண்டிருந்தால் எல்லாக் கடன்களும் சரியான காலத்தில் வசூலாகும். இல்லாவிட்டால் ஆகமாட்டாது. இவ்வளவு சிரத்தை பஞ்சாயத்தாரிடம் நாம் எதிர்ப்பார்க்க முடியாது என்று சொன்னேன். ஆனால் நீங்கள் இப்போது "நாம் இனிமேல் அந்தமாதிரி இருக்கவேண்டுமென்று" இந்தக் கூட்டத்திலிருக்கும் வரையில் நினைத்துக் கொண்டிருப்பீர்கள். இந்தக்கூட்டத்தை விட்டு வெளியிற் போனபின் மறந்து விடாமல் இருக்கும்போது எப்படி நினைத்துக் கொண்டிருப்பீர்களோ அதேமாதிரியாய் தங்கள் தங்கள் கிராமங்களுக்குச் சென்றபின்னும் இருப்பீர்களாயின் ஐக்கிய நாணயச் சங்கத்தில் உண்டாகும் பலனை தாங்களும் தங்களைப்போன்ற இதர மெம்பர்களும் கைமேல் பலனாக அனுபவிக்கலாமென்று நம்புகிறேன்.

---

# இந்தியாவில் ஐக்கிய முயற்சியின் அபிவிருத்தி.

## 1. மைசூர்

சென்ற கோஆபரேடிவ் வருஷக் கடைசியில் 800 சொஸைடிகள் இருந்தன. இதற்கு முந்தின வருஷத்தில் 725 சொஸைடிகள் இருந்தன. இந்த 800 சொஸைடிகளில் 18 ஸென்டரல் சொஸைடிகள் ; 648 விவசாய சொஸைடிகள்; 134 விவசாயிகளல்லாத மற்றவர்களின் சொஸைடிகள். இந்த 134 சொஸைடிகளுக்குள் 21 ஸ்டோர்களும் 38 கைத்தொழில் சொஸைடிகளுமிருக்கின்றன. மேற்படி வருஷத்தில் 103 புது சொஸைடிகள் ரிஜிஸ்ட்டர் செய்யப்பட்டன. 28 சொஸைடிகள்



மூடப்பட்டன. 1914-15-ல் மெம்பர்களின் தொகை 53,267; இப்பொழுது 64,857 ; தொழில் தனம் ரூ. 30,85,747-லிருந்து ரூ. 44,21,688 அதிகரித்திருக்கிறது; சொஸைடிகளின் எண்ணிக்கை சுமார் 100-க்கு 10 அதிகரித்த போதிலும் தொழில் தனம் 100-க்கு 48-ம், டிபாஸிட்டு தொகை 100-க்கு 56-ம், நிகரலாபம் 100-க்கு 34-ம் ஜாஸ்தியாயிருக்கின்றன. சொஸைடி ஒன்றுக்கு சராசரி 81 மெம்பர்களும், ஒவ்வொரு மெம்பரின் சராசரி மூலதனம் ரூ. 68-10-ம் ஆகிறது. முந்திய வருஷத்தில் ஒரு மெம்பரின் சராசரி மூலதனம் ரூ. 57—9—0 ஆக இருந்தது. டிபாஸிட்டுத் தொகைகளின் மொத்தம் சென்றவருஷத்தில் ரூ. 7,59,863, இந்த வருஷத்திலோ ரூ. 11,91,586. இந்தத்தொகையில் பெங்களூர் ஜில்லாவின் தொகை மாத்திரம் ரூ. 7,25,770.

கோஆபரேடிவ் சொஸைடிகளில் குழந்தைகளிடமிருந்து டிபாஸிட்
டுகள் ஒப்புக்கொள்ளப்பட்டு அநேக சொஸைடிகளில் வழக்கத்திற்குக்
கொண்டுவரப்பட்டிருக்கிறது. இம்மாதிரி டிபாஸிட்டுகள் முன் வருஷத்
தில் ரூ. 2,569 இருந்தது இந்த வருஷத்தில் ரூ. 11,991 ஆக யிருக்,
கிறது. சொஸைடிகள் விதிக்கும் வட்டி 100-க்கு 9 முதல் 12-வரையில்
இருக்கிறது. இது சென்னையைவிட கொஞ்சம் அதிகம்தான். இந்த
சொஸைடிகளுக்கு சரக்குகள் சப்ளை செய்ய தேசத்திற்கு ஒரு மொத்த
வியாபார கோஆபரேடிவ் சொஸைடி ஏற்படுத்தவேண்டும் என்பது
கவர்ன்மெண்டின் நோக்கத்தில் இருக்கிறது. உற்பத்திசெய்யும் சொ
ஸைடிகளுள் 21 நெசவுகாரர்களின் சொஸைடிகளா யிருக்கின்றன.
அவைகளில் 1,273 மெம்பர்கள் இருக்கிறார்கள். அவைகளின் தொழில்
தனம் ரூ. 52,116, இந்த சொஸைடிகளின் முன்னேற்றம் தாமதமா
வது அவசியம். நெசவுகாரர்களுக்கு உரித்தான தாராள புத்தியில்லாத
வழக்கமே இதற்குக் காரணம். வெல்லம் செய்வதற்கும் நெல்லு
குத்துவதற்கும் 7 சொஸைடிகள் இருக்கின்றன. இதிற் சில சொஸை
டிகளுக்கு வேண்டிய யந்திரங்கள் வாங்குவதற்காக 52,000 ரூபாய் வரை
யில் கவர்ன்மெண்டார் கடன் கொடுத்திருக்கிறார்கள். கண்ணெய்கான்
ஹள்ளியில், ஏற்றம் இறைக்கும் (Lift Irrigation) கோஆபரேடிவ்
சொஸைடி ஒன்று யேற்பட்டிருக்கிறது. அதற்கும் ராஜாங்கத்தார்
ரூ. 10,000 கடன் கொடுத்திருக்கிறார்கள். வர்த்தமான கோஆப
ரேடிவ் வருஷத்தில் முக்கிய அம்சம் ஒன்று என்ன வென்றால், மாக்களா
கான் கமிட்டியார் சிபார்சு செய்த வழியில் ப்ரொவின்ஷியல் பாங்கி
ஒன்று ஸ்தாபித்ததே. அதின் நோக்கம் முழுவதும் கோஆப்ரேஷனே.
தனி ஜனங்களுக்கு கடன் கொடுக்கிறதில்லை. டைரக்டர்களின் பாதிப்பெ
யர்கள் சொஸைடிகளின் பிரதிநிதிகளாயிருக்க வேண்டும். ரெஜிஸ்ட்ரார்

அவர்கள் ஞாயமாய் சூசிப்பித்த பிரகாரம் அது சொஸைடிகளால் ஏற்படுத்தப்பட்ட பாங்கியாயாயும், சொஸைடிகளுக்காகவும், சொஸைடிகளினாலேயும் வேலை செய்கிறதும் வேலை செய்யப்படுகிறதும் ஆகி, முற்றிலும் கோஆபரேடிவ் குணங்களையே வகித்து வேறொன்றையும் கவனிக்காமலும் இருக்கவேண்டும்—.

## 2. பெங்காளம்.

அடியிற்காட்டும் ஸ்டேட்மெண்டினால் 1915-16-ல் பங்காளத்தில் கோஆபரேடிவ் கிளர்ச்சியின் முன்னேற்றங்கள் அறியலாம்.

| சங்கங்களின் வகை | சங்கங்களின் சங்கியை. | | மெம்பர்களின் சங்கியை. | | தொழில்தனம். | |
|---|---|---|---|---|---|---|
| | 1914—1915 | 1915—1916 | 1914—1915 | 1915—1916 | 1914—1915 | 1915—1916 |
| | | | | | ரூ. | ரூ. |
| ஸென்டரல் ... | 38 | 39 | 4,920 | 5,368 | 40,88613 | 46,49,377 |
| விவசாயிகளது ... | 1,855 | 2,067 | 85559 | 94074 | 5275,888 | 56,94,370 |
| விவசாயிகளல்லாதவர்களது .. | 91 | 125 | 16,498 | 22214 | 1582,026 | 21.04,826 |
| யூனியன்கள் | 8 | 12 | 13 | 17 7 | 4,523 | ... |
| மொத்தம்... | 1,929 | 2 243 | 107116 | 121833 | 1,09,51,050 | 1,24,48,573 |

முன் வருஷங்களின் வேலையோடு வர்த்தமான வருஷவேலையை ஒப்பிடும்பொழுது இக்கிளர்ச்சியின் முன்னேற்றம் ஒருவாறு மந்தமாகத்தான் தெரிகிறது. இதற்குக்காரணம் ராஜாங்கத்தார் இழுத்துப்பிடித்தது கொஞ்சமும், தானியவிளைவு தட்டிப்போனது கொஞ்சமுமாக இருக்கிறது. சுமார் 136 சொஸைடிகள் மூடப்பட்டன.

இந்த வருஷம் இரண்டு ஸென்டரல்பாங்குகள் ரஜிஸ்டர் செய்யப்பட்டன. பாங்கிகளில் செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 4,89,000-ல் இருந்து ரூ. 6,50,200 ஆகவும் டிபாஸிட்டுகள் ரூ. 33,69,000 இருந்து ரூ 37,61,000 ஆகவும், ரிசர்வ் பண்டு (சேமநிதி) ரூ. 75,072-ல் இருந்து ரூ. 1,11,901 ஆகவும் அதிகரித்திருக்கின்றன. கொடுபட்டிருக்கும் பங்குத் தொகையும் ரிசர்வ் துகையும் சேர்ந்து பாங்கி கொடுக்கவேண்டிய துகைகளுடன் ஒப்பிடப்பட்டால் முந்தியவருஷத்தில் 100-க்கு 13 ஆக இருந்தது ; 1915-16-ல் 100-க்கு 19 ஆக யிருக்கிறது.

வருஷக்கடைசியில் நிலை பெற்றிருந்த 2067 விவசாயசொஸைடிகளில் 1860 சங்கங்கள் சென்டரல் பாங்கியுடன் சேர்ந்திருக்கிறன சங்கங்



களுக்கு கொடுக்கப் பட்டிருக்கும் கடன்துகை ரூ. 150,73,000 லிருந்து ரூ. 168,60,000 ஆக அதிகரித்திருக்கிறது. கெடுவுக்கு மிஞ்சிப்போன கடன்களை கவனித்தால் முந்தியவருஷம் 100-க்கு 28 ஆகயிருந்து இந்த வருஷம் 100-க்கு 26 ஆக ஆயிருக்கிறது. சொஸைடிகளின் சராசரி மெம்பர்களின் துகை 45-5; மூலதனம் சராசரி ரூ. 2;754; முன்வருஷத்திய மேற்படி இலக்கங்கள் 46-1-ம், ரூ. 2,844-ம் இருந்தன. விவசாய சம்பந்தமில்லாத சொஸைடிகளில் அநேகம் லிமிடெட் பொறுப்பு விதியை அனுசரித்து ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. அவைகள் தாங்களே மூலதனம் சேகரிவைத்துவேலைசெய்யலாம். ஆனால் அவைகளின்மெம்பர்கள் கடனைத் திருப்பிக்கொடுப்பதில் மிக்க ஒழுங்கற்றவர்களாக இருக்கிறார்கள். ஜோடு செருப்பு முதலியன செய்ய மூன்று சொஸைடிகளும், தச்சுவேலை செய்ய ஒரு சொஸைடியும், எண்ணெய்க்கு ஒன்றும், தாழ்ந்த ஜாதிகளாகிய கோலர்களுக்கு ஒன்றும் இருக்கின்றன. இரண்டு ஸ்டோர்கள் முறிவடைந்தன; இரண்டு புதியஸ்டோர்கள் ஸ்தாபிக்கப்பட்டு ரிஜிஸ்டர் செய்யப்பட்டன; டக்கா கோஆபரேடிவ்பாற்சாலை என்று சொல்லப்படும் வெண்ணெய் எடுக்கும் சொஸைடி ஒழுங்காய் முன்னேற்றம் அடைந்து வருகிறது. வர்த்தமான வருஷத்தில் அது அடைந்தலாபம் ரூ. 2,291. இப்பொழுது செம்படவர்களின் சொஸைடிகள் 7 இருக்கின்றன. அவைகளில் 5 வேலை செய்து கொண்டிருக்கின்றன. வங்காளத்தில் இக்கிளர்ச்சியின் முன்னேற்றத்தில் கவனிக்கக்கூடிய முக்கியமான அம்சம் என்னவென்றால் நெசவுகாரர்களுக்காக ஏற்பட்ட சொஸைடிகளின் ஏராளமான அபிவிருத்தியே. அவை 5-லிருந்து 17 ஆக அதிகரித்திருக்கிறது. நெசவுக்கார்களுக்கு சரக்குகள் மொத்த விலைக்கு சப்ளை செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

## 3. பர்மா.

கீழ்வரையப்பட்ட ஸடேட்மெண்டினால் பர்மாவின் சொஸைடிகளின் முன்னேற்றம் 1914-15-க்கும் 1915-16-க்கும் நன்கு விளங்கும். மொத்தத்தில் கோஆபரேஷனின் முன்னேற்றம் மிக்க அதிகமாக இருக்கிறது அதிலும் கால் நடைகள் இன்ஷியூரென்ஸ் சொஸைடிகளிலும் யூனியன்களிலும் விசேஷ அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறது. எல்லா சொஸைடிகளின் கொடுபட்டிருக்கிற மூலதனத் துகை ரூ. 13,25,834-லிருந்து ரூ. 15,72,042 ஆக உயர்ந்திருக்கிறது மெம்பர்கள் கடன் திரும்பிக் கொடுத்த துகையும் டிபாஸிட்டு துகையும் ரூ. 28,76,838 இருந்து ரூ. 39,96,913 அதிகரித்திருக்கிறது.

இதர சொஸைடிகளிடமிருந்து திருப்பிக் கொடுக்கப்பட்ட துகை ரூ. 25,49,904 இருந்து ரூ. 32,55,976 ஆக உயர்ந்திருக்கிறது.

| சங்கங்களின் வகை | சங்கங்களின் சங்கியை | | மெம்பர்களின் சங்கியை | | தொழில் தனம் | |
|---|---|---|---|---|---|---|
| | 1914—1915 | 1915—1916 | 1914 1915 | 1915—1916 | 1914—1915 | 1915—1916 |
| | | | | | ரூ | ரூ. |
| ஸெண்ட்ரல் ... | 4 | 4 | 1,882 | 2.305 | 33,97,309 | 43,71,805 |
| விவசாயிகளது ... | 1,266 | 1,704 | 31,36 | 38,576 | 41,53,678 | 53,44,372 |
| விவசாயிகளல்லாதவர் | 43 | 46 | 3,574 | 3,576 | 6,02,130 | 6,29,437 |
| யூனியன்கள ... | 112 | 189 | 1,121 | 1,602 | ... | ... |
| கால்நடைகளின் இன்ஷியூரென்ஸ் | 63 | 306 | 1,059 | 5,350 | ... | ... |
| மொத்தம் ... | 1,488 | 2,249 | 38,952 | 51, 314 | 81,53.117 | 100,39,604 |

சண்டையினால் ஏற்பட்ட பணமுடையினாலும் ரூ. 53,500 பொருமான கவர்ன்மெண்டு பத்திரங்களின் விலை இறக்கத்தினால் அடைந்த சுமார் ரூ. 9,000 நஷ்டத்தினாலும் ப்ரொவின்ஷியல் பாங்கிக்கு இது ஒரு கெடுதலான வருஷம். கடன் வாங்கும் சொஸைடிகள் இந்த சமயத்தில் பாங்கியின் ரிசர்வ் துகையை விருத்தி செய்வதற்காக ஒரு வருஷத்திற்கு எல்லாக் கடன்களின் பேரிலும் 100-க்கு ஒன்று கமிஷன் கொடுப்பதாக முன்னுக்கு வந்த விஷயம் மிக சிலாகிக்கத்தக்கதே. சென்டரல் பாங்கிகள் மூன்றும், நெல்லின் விலை ஏற்றத்தினால் வியாபாரிகளுக்குத் திருப்திகரமில்லா மற்போகவே, லாபகரமாய் வேலை செய்ய மிகவும் தடைபட்டது.

சுமார் 25 விவசாய நாணய சொஸைடிகள் இந்த வருஷம் மூடப்பட்டன. விவசாய சொஸைடிகளின் வசூலாயிருக்கும் மூலதனம் ரூ. 7,00,129 விருந்து ரூ. 8,72,738-க்கும் ரிசர்வ் துகை ரூ 4,39,924 விருந்து ரூ. 6,36,041-க்கும், அதிகரித்திருக்கின்றன. பர்மாவில் இக்கிளர்ச்சியின் அபிவிருத்திக்கு காரணம், என்னவென்றால், புது நிலங்களில் குடியேறும் முறைமைகளில் விசேஷமாய் கோஆபரேடிவ் முறைகளை அனுசரிப்பதே. இப்பொழுது நான்கு புது இலாக்காக்களில் குடியேறப்பட்டிருக்கின்றன. அங்கே அநேக சொஸைடிகள் திருப்திகரமாய் வேலைசெய்கின்றன. இந்த ஏற்பாட்டின் நோக்கம் என்னவென்றால், விவசாயிகள் தாங்களே முதல் போடாமல் தரிசு நிலங்களை சுத்தம் செய்து பயிரிட்டு சுவாதீனமாக்கிக்கொள்வதே. இம்மாதிரி வழக்கம் வேறிடங்களில் இல்லை.

இன்னும் அதிக "விவசாயிகளல்லாதவர்களின் சொஸைடிகள்" ஸ்தாபிக்க போதுமான பிரயத்தினம் செய்யவில்லை. அம்மாதிரிச் சங்கங்



கள் வருஷக்கடைசியில் 46 தான் இருந்தன. இந்த சொஸைடிகளின் அபிவிருத்தியை கவனிப்பதற்காக ஒரு ஸ்பெஷல் அஸிஸ்டெண்டு ரிஜிஸ்ட்ராரை நியமிக்க கவர்ன்மெண்டார் தீர்மானித்திருக்கிறார்கள். மண்டலேயில் ஏற்படுத்தியிருக்கிற ஒரு ஸெண்டரல் ரி-இன்ஷியூரன்ஸ் சொஸைடியினால் அநேக கால் நடைகள் இன்ஷியூரன்ஸ் சொஸைடிகள் ஏற்படுத்த ஹேது உண்டாயிற்று. அவைகள் இப்பொழுது 63 லிருந்து 306 ஆக அதிகரித்திருக்கின்றன.

## 4. அஸ்ஸாம்.

கீழ்காட்டிய ஸ்டேட்மெண்டு 1915—16-ல் அஸ்ஸாமில் இக்கிளர்ச்சியின் முன்னேற்றத்தைக் காட்டுகின்றது.

| சங்கங்களின் வகை | சங்கங்களின் சங்கியை | | மெம்பர்களின் சங்கியை | | தொழில்தனம் | |
|---|---|---|---|---|---|---|
| | 1914—1915 | 1915—1916 | 1914—1915 | 1915—1916 | 1914—1915 | 1915—1916 |
| | | | | | ரூ. | ரூ. |
| ஸெண்ட்ரல் ... | 7 | 10 | 449 | 503 | 1,96,247 | 3,29,275 |
| யூனியன்கள் ... | 3 | 2 | 54 | 48 | 2,769 | ... |
| விவசாயிகளது ... | 271 | 285 | 13,698 | 15.792 | 3,47,241 | 3,95,185 |
| விவசாயிகளல்லாதவர்களது ... | 20 | 18 | 1,821 | 1,638 | 2,61,078 | 1,71,777 |
| மொத்தம் ... | 301 | 315 | 16,022 | 17,981 | 8,07,335 | 8,96,237 |

சென்டரல் பாங்கியின் கொடுபட்டிருக்கும் மூலதனப்பங்குத் துகை ரூ. 42,178 விருந்து ரூ. 49,755 ஆகவும், ரிசர்வ் துகை ரூ. 7,346 விருந்து ரூ. 14,019 ஆகவும் அதிகரித்திருக்கின்றன. ஸொஸைடிகளுக்கு கொடுத்திருக்கும் கடன் துகை இந்தவருஷம் ரூ. 44,145, சென்ற வருஷத்தில் ரூ. 57,045 இருந்தது. பாங்கிகள் கொடுத்திருக்கும் கடன் துகையும் வாங்கியிருக்கும் டிபாஸிட்டுத் துகையும் சேர்ந்து முறையே தனி மெம்பர்களிடமிருந்து ரூ. 254,435-ம் சொஸைடிகளிடமிருந்து ரூ. 10,926-ம் சென்ற வருஷத்தில் மேற்படி துகைகள் ரூ. 157,528 ஆகவும், ரூ. 2,524 ஆகவும் இருந்தன.

வர்த்தமான வருஷத்தில் ரிஜிஸ்டரான விவசாய சொஸைடிகள் 27 தான். சுமார் 19 சொஸைடிகள் முறிவடைந்து கொண்டிருந்தன. எல்லா விவசாய சொஸைடிகளும் பொறுப்பு வரையற்ற பாத்தியத்தின் ஆதாரத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன (Unlimited liability). அவைகளின் ரிசர்வ்துகை (க்ஷேமநிதி) ரூ. 49,528 விருந்து ரூ. 63,255 ஆகவும், லாபம் ரூ. 18,110 விருந்து ரூ. 22,935 ஆகவும் அதிகரித்திருக்கின்றன

டிபாஸிட்டுகளின் பேரில் கொடுக்கும் வட்டி 100-க்கு $6\frac{1}{4}$, மெம்பர்களுக்கு கொடுக்கும் கடன்களின் பேரில் ஏற்படுத்தும் வட்டியோ 100-க்கு 12-முதல் $18\frac{3}{4}$ வரையில் இருக்கிறது மெம்பர்களுக்கு கொடுத்திருக்கும் கடன்களின் துகை ரூ. 1,46,801. ஒவ்வொரு மெம்பரின் சராசரித்துகை பார்த்தால் ரூ. 9—4—0.

விவசாயமில்லாத சொஸைடிகளின் முன்னேற்றத்தில் யாதொரு சிரமமும் யெடுத்துக்கொள்ளவில்லை. ரிஸர்வ் துகையை சேர்த்து மூல தனம் ரூ. 2,58,397 லிருந்து ரூ. 1,74,077 ஆகவும், மெம்பர்களிடமிருந்து வந்த டிபாஸிட்டு ரூ. 97,982-ல் இருந்து ரூ. 60,671 ஆகவும் மெம்பரல்லாதவர்களின் டிபாஸிட்டு ரூ. 73,573 லிருந்து ரூ. 43,486 ஆகவும் குறைவடைந்துவிட்டன. மெம்பர்களுக்கு கொடுத்திருந்த கடன்களின் மொத்தம் ரூ. 72,705. ஒவ்வொரு மெம்பருக்கும் சராசரி ரூ. 44 ஆகிறது. சுனும்கஞ்ச் கோஆபரேடிவ் பாற்சாலையும் ஸ்டோர்களும் திருப்திகரமாக வேலை செய்யவில்லை.

### 5. ஆக்ரா அயோத்தி ஐக்கிய மாகாணங்கள்.

கீழ்கூறிய ஸ்டேட்மெண்டு 1914-15-வருஷத்திலும் 1915-16-வருஷத்திலும் ஆக்ரா அயோத்தி ஐக்கிய மாகாணங்களில் கோஆபரேடிவ் கிளர்ச்சியின் முன்னேற்றத்தைக் குறிக்கும்:—

| சங்கங்களின் வகை | சங்கங்களின் சங்கியை | | மெம்பர்களின் சங்கியை | | தொழில்தனம். | |
|---|---|---|---|---|---|---|
| | 1914—1915 | 1914—1915 | 1914—1915 | 1915—1916 | 1914—1915 | 1915—1916 |
| | | | | | ரூ. | ரூ. |
| ஸென்ட்ரல் ... | 58 | 58 | 8,502 | 5,613 | 61,54,725 | 64,39,838 |
| விவசாய சொஸைடிகள் | 2,716 | 2,949 | 1,01,511 | 1 06,333 | 49,77,450 | 51,32,644 |
| விவசாயிகளல்லாதன | 188 | 182 | 6,220 | 6,918 | 4 58,773 | 4,62,969 |
| மொத்தம் .. | 2,962 | 3,189 | 1,16 ,283 | 1,18, 864 | 15,90,928 0 | 120,38,851 |

சண்டையினால் அநேக மாறுபாடுகள் யேற்பட்ட போதிலும் இக்கிளர்ச்சி திடமான முன்னேற்றத்தையே காட்டுகிறது.

இந்த வருஷம் மூன்று ஸென்டரல் பாங்கிகள் மூடப்பட்டன ஆனால் புதிதாய் மூன்று பாங்கிகள் ரிஜிஸ்டர் செய்யப்பட்டன. அதில் ஒன்று வேலை ஆரம்பிக்கவில்லை. பாங்கிகளின் கொடுபட்டிருக்கிற மூலங்கள் 7-55 லக்ஷம் ரூபாயிலிருந்து 8·94 லக்ஷம் ரூபாயாகவும், அவைகளின் ரிசர்வ் துகைகள் ரூ. 3·86 லக்ஷத்திலிருந்து ரூ. 4·81 லக்ஷமாகவும் அதிகரித்திருக்கின்றன. ரிசர்வ் துகையோடு சேர்ந்த மூலதனத்தை தொழில் தனத்தோடு ஒப்பிட்டுப் பார்த்தால் சென்ற வருஷம் 100-க்கு 18·5 ஆக இருந்தது; இந்த வருஷம் 100-க்கு 21-5 ஆக யிருக்கிறது. இப்பொழுது இருக்கும் 3088 சொஸைடிகளில் 2956 சென்டரல் சொஸைடிகளோடு சேர்க்கப்பட்டிருக்கின்றன. மொத்த டிபாஸிட்டுகளும் கடன்களும் சேர்ந்து 44·01 லக்ஷம் ரூபாய்கள், சிறிய சென்டரல் சொஸைடிகளுக்கு அட்வான்ஸுகளாகக் கொடுத்த துகை ரூ· 4·33 லக்ஷம், பிரைமரி சொஸைடிகளுக்கு ரூ. 29·87 லக்ஷம், வருஷம் கடைசியில் வசூலாக வேண்டிய துகை ரூ. 46-25 லக்ஷம், இதில் 12·30 லக்ஷம் தவணை மீறினதுகை.



விவசாய சொஸைடிகளின் மூலதனம் 7-03லக்ஷம் ரூபாயிலிருந்து 8-67லக்ஷம் ரூபாயாக அதிகரித்திருக்கிறது. ரிசர்வ் துகையும் ரூ. 3-54 லக்ஷத்திலிருந்து ரூ. 4-69 லக்ஷமாகவும் அவை ஙிகர்களின் லாபங்களும் ரூ.1-43 லக்ஷத்திலிருந்து ரூ.1-78 லக்ஷமாகவும் அதிகரித்திருக்கின்றன. தொழில் தனமும் ரூ. $1\frac{1}{2}$ லக்ஷத்திற்கு உயர்ந்திருக்கிறது. மெம்பர் ஒவ்வொருவருக்கும் சராசரி மூலதனம் ரூ. 48-2; முன் வருஷத்திலோ ரூ. 49-0; சுமார் 83 சொஸைடிகள் முறிவடையப்பட்டோ முறிவடைந்துகொண்டோ யிருக்கின்றன. கொடுபட்டிருக்கும் மூலதனத் துகை டிபாஸிட்டுகள் ரிசர்வ் துகை இவைகளுக்கும் மொத்த தொழில் தனத்திற்கும் சராசரிபார்த்தால் 100-க்கு 26 லிருந்து 27-6 ஆக அதிகரித்திருக்கிறது. அட்வான்ஸாக கொடுபட்டிருக்கும் தொகையின் மொத்தம் ரூ. 29-96லக்ஷம்; வசூலாகாமல் வெளியில் நிற்கும் துகை 44-36 லக்ஷத்திலிருந்து 45-31 லக்ஷமாக உயர்ந்திருக்கிறது.

விவசாய சம்பந்தமில்லாத சொஸைடிகளுள் 6 விற்பனை ஸ்டோர்களும் ஒன்று உற்பத்தியாக்கி விற்பதற்கும் இருக்கின்றன. அவைகளில் விசேஷமான சொஸைடிகள் லாபகரமாய் வேலை செய்திருக்கின்றன, பாரில்லி தச்சுவேலைசாலை; வர்த்தமான வருஷத்தில் அதின் லாபம் ஒருவாறு குறைந்தபோதிலும் அது உபயோகமான வேலையே செய்து கொண்டுவந்திருக்கிறது.

---

## பம்பாயில் ஓர் கிரஹச்சங்கம்.

பம்பாய் கோஆபரேடிவ் ஹௌசிங் அஸோஷியேஷனுடைய வருஷ ஜனரல் மீட்டிங் பம்பாய் இம்புருவ்மெண்டு டிரஸ்டாருடைய ஆபீசில் சமீபத்தில் நடைபெற்றது. ஜே. பி. ஆர் துரையவர்கள் அக்கிராசனம் வகித்தார். மானேஜிங் கமிடியார் 1917 ஷ மார்ச்சு மீ 31உ யோடு முடிகிற வருஷாந்தர ரிபோர்டில் சொன்னதாவது:

வர்த்தமான வருஷத்தில் "மங்களூரியன் கார்டன் ஹோம்ஸ் கோ ஆபரேடிவ் சொஸைடி" என்றும் "பம்பாய் காதொலிக் கோபார்ட்னர் ஷிப் ஹௌஸிங் சொஸைடி" என்றும் பெயருடன் இரண்டு "வீடு கட்டும் சொஸைடிகள்" ரஜிஸ்தர் செய்யப்பட்டன. இவைகளும் 1915-ம் வருஷம் மார்ச்சு மாதத்தில் ஸ்தாபிக்கப்பட்ட சாரஸ்வட் கோ ஆபரேடிவ் சொஸைடியும் ஆகிய இவை மூன்றும் தான் வீடுகட்டும் சொஸைடிகளாக இதுவரையில் பம்பாய் ராஜதானியில் ரிஜிஸ்டர் செய்யப்பட்டன. இந்த அஸோஸியேஷனுடைய வேலை யானது தன் நேர்த்தியான நோக்கங்களை அனுசரித்து 1916-17ல் வழக்கப்பிரகாரம் நடந்தது. இந்த வருஷத்தில் மொத்தம் 11 மீட்டிங்குகள் நடைபெற்றன. அதில் வீடுகட்டும் ஏற்பாடுகளைப் பற்றிய பலவித பிரஸ்தாபங்களும் ஆமோதிக்கப்பட்டு விவகரிக்கப்பட்டன.

### "சரஸ்வட்" ஜாதியாரின் ஊக்கம்.

1915-16ல் இருந்ததுபோல 1916-17லும் கோஆபரேடிவ் முறையில் வீடுகட்டுதலால் ஒரு முக்கியமான சாதனையின் முன்னேற்றம் எதுவென்றால் பாம்பே சாரஸ்வட் கோஆபரேடிவ் ஹௌஸிங் சொஸைடியார் செய்ததே.

இந்த சொஸைடி 1915-16ல் ரூ. 72,000 செலவில் "காம் தேவி"யிலுள்ள பம்பாய் சிடி இம்ப்ரூவ்மெண்டு டிரஸ்டு எஸ்டேட்டில் 18 குடும்பங்கள் வசிக்கக்கூடிய மூன்றடுக்கு மெத்தைகளுள்ள மூன்று வீடுகளைக் கட்டினார்கள். ஒவ்வொரு வீட்டிலும் குடித்தனம் ஒன்றுக்கு சகல குடித்தன சௌகரியங்களுமுள்ள 4 அறைகள் வைத்துக்கொள்ளக் கூடிய 6 குடித்தனங்கள் இருக்கலாம். மேலும் ஒவ்வொரு வீட்டின் தரைபாகம் அதாவது கீழ்பாகத்திலும் இரண்டு குடித்தனங்கள் இருக்கலாம். 1916-17ல் அவர்களுடைய முதல் ஊக்கத்தின் ஜயத்தினால் ஏற்பட்ட உற்சாகத்துடன் முன் வாங்கின இடத்தின் பக்கத்தில் இன்னொரு "இம்ப்ரூவ்மெண்டு டிரஸ்டு" பூமியை எடுத்துக்கொண்டு மறுபடி ரூ. 72,000 செலவழித்து இன்னம் இரண்டு வீடுகள் கட்டினார்கள். அதில் 24 குடித்தனங்கள் இருக்கலாம். இந்த இரண்டு வீடுகள்கூட மூன்றடுக்கு மெத்தைகள் உள்ளன. ஒவ்வொரு மெத்தையிலும் குடித்தனங்கள் வைத்திருந்த போதிலும் ஒவ்வொருவருக்கும் தனித்தனி சகல சௌகரியங்களும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு அடுக்கிலும் உள்ள குடித்தனக்காரர்களுக்கு இடையில் சௌகரியமாய்ப் படிக்கட்டுகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு குடித்தனத்திற்கும் 3 அறைகளும் ஒரு ஸ்நான அறையும் தாழ்வாரமும் அமைக்கப்பட்டிருக்கின்றன. முதலில் ஏற்பட்ட ரூ. 23, ரூ. 33, ரூ. 36



வாடகைகள் கொடுக்க முடியாதகுறைந்த இடம் வைத்துக்கொள்ளக் கூடிய குடித்தனக் காரர்களைப் பற்றிக்கூட நினைத்திருக்கிறார்கள். இந்தக் குடித்தன இடத்திற்கு ஒரு அறை குறைவு. வாடகைகளும் குறைவு, முதல் மெத்தை, இரண்டாவது மெத்தை, இவைகளுக்கு முறையே ரூ. 21, 26, 28 வாடகைகள். கட்டிடங்கள் 10 மாதங்களில் கட்டிமுடிக்கப்பட்டன. குடித்தனஇடங்கள் செவ்வைப்படுத்தயாரான உடன் 1917௵ பிப்ரவரியில் மெம்பர்கள் இடங்களை வாடகைக்கு எடுத்துக் கொண்டார்கள். மங்களூரியன் கார்டன் ஹோம்ஸ் கோ ஆபரேடிவ் சொஸைடி 1916௵ டிஸம்பரில் ரிஜிஸ்தர் செய்யப்பட்டது. பம்பாய்க்கு அருகிலுள்ள நிலங்களை வாங்குவதும் அவைகளில் தங்கள் சொந்த முதலைக்கொண்டு வீடு கட்டிக்கொள்ளப் பிரியப்படும் மெம்பர்களுக்குப் பகிர்ந்து கொடுப்பதுமே இவைகளின் முக்கிய நோக்கம். சொந்த வீடு கட்டிக்கொள்ள சக்தியில்லாத ஏழை மெம்பர்களுக்கு வாடகைக்குவிடும் பொருட்டு சொந்தத்தில் சில வீடுகள் கட்டிக்கொள்வதும் இந்த சொஸைடியின் நோக்கம்.

### ஓர் பெருந்தன்மையான ஏற்பாடு

"பம்பாய் காதலிக் கோபார்ட்னர்ஷிப் ஹௌஸிங் சொஸைடி" என்ற பெயருடன் 1917௵ மார்ச்சு௴ 31௳ ரிஜிஸ்டர் செய்யப்பட்ட சொஸைடி ஒன்று, தன் பெயர் குறிக்கும் கருத்திற் கிணங்க சாரஸ்வட் சொஸைடியின் பத்ததியில் குடித்தன முறையோடு பங்கு பாத்தியதை ஏற்பாட்டுடன் வீடுகள் கட்டும். பம்பாயின் பக்கங்களிலுள்ள சன்டாகுரூஸ் என்னும் இடத்தில் அவர்கள் முன்னமே நிலம் வாங்கியிருக்கிறார்கள். சண்டையினால் பணம் கிடைப்பது கடினமாயிருப்பதினாலும், சாமான்களுக்கும் கூலிக்கும் விசேஷவிலை ஏற்பட்டிருப்பதனாலும், எளிதான வழியில் கடன் கிடைப்பது அருமையாயிருப்பதினாலும், தற்காலம் இருக்கும் கட்டிட சொஸைடிகள் தங்கள் வேலையை நன்றாய் நடத்த மிகவும் சிரமப்படுகின்றன. மேலும் அதிக சொஸைடிகள் ஏற்படுவதும் கஷ்டமாயிருக்கிறது. இத்தன்மையில் கவர்ன்மெண்டார் இவைகளுக்கு உதவி செய்வது அதிக அவசியம். ராஜாங்கத்தாரும் தயவு செய்து உதவி புரிவார்கள் என்றும் நம்பலாம்.

1915-16ல் குடித்தன பங்குவிகித வழியில் ஏற்பட்ட கட்டிட சொஸைடிகளை நடத்துவதற்காக அஸோஸியேஷனால் ஏற்படுத்தப்பட்ட பைலாக்கள், பம்பாய் ராஜதானி கோஆபரேடிவ் சொஸைடி ரிஜிஸ்ட்ரார் அவர்களால் அங்கீகரிக்கப்பட்டன. 1915-16ல் அஸோஸியேஷனின் மெம்பர்கள் 79 பெயர்களிலிருந்து 1916-17ல் 91 பெயர்கள் ஆயிற்று. உபந்நியாசத்திற்கும் விவாதத்திற்கும் 11 மீட்டிங்குகள் கூட்டப்பட்டன.

வருஷத்தில் மொத்த வரும்படி ரூ. 350-7-0. இத்துடன் முன் வருஷத்து பாக்கி ரூ. 255-1-3 யும் சேர்த்து ரூ. 605-9-3 ஆயிற்று. இந்தத் தொகையிலிருந்து ரூ. 264-14-6 புத்தகங்கள், பத்திரிகைகள் வாங்குவதிலும், அச்சிடுதல், தபால் சிலவு முதலிய சில்லரைச் சிலவுகளிலும் சில வழிந்தது போக பாக்கி ரூ. 340-10-9 வருஷக்கடைசியில் கையிருப்பில் இருந்தது. 23 மெம்பர்களிடமிருந்து ரூ. 165 சந்தா வரவேண்டியதைத் தவிர சொஸைடி, ஒருவருக்காவதும் ஒருவரும் சொஸைடிக்காவதும் ஒரு கடனும் கொடுக்க வேண்டியதில்லை. அஸோஸியேஷனின் வேலையைப்பற்றியும் அதன் பெயரின் கீழ் ஏற்படுத்தப்பட்ட சொஸைடிகளையும் அவைகள் பிரசுரித்த கிரந்தங்களையும் அநேக கேள்விகள் அப்போதைக்கப்போது வந்துகொண்டிருந்தன. அதற்கு உத்தரமாக ரிபோர்டு காபிகளும், அஸோஸியேஷனின் நோடீசுகளும் அனுப்பப்பட்டன. இது கோஆபரேடிவ் வீடு கட்டும் கிளர்ச்சியை முன்னுக்கு வரச்செய்யும் என்பதையும் இந்தியாவில் வீடு கட்டும் விஷயத்தைப் பற்றிய விசேஷ பாண்டித்தியத்தை உண்டாக்கும் என்பதையும் நம்பலாம். ரிபோர்டு அங்கீகரிக்கப்பட்டது. ஸர். பி. டி பட்டாணி திரும்பவும் அஸோஸியேஷனுக்கு பிரசிடெண்டாக நியமிக்கப்பட்டார். மிஸ்டர் ஜே. பி. ஆர் துரையும், சர். வி. டி. தாகர்ஸே, ஆனரபில் ஸர். பாஜுலல் பாய், சி. இப்ராஹிம், ஆர். பி. மாசான், ஆனரபில் மிஸ்டர் சுனிலால், வி. மேடா இவர்கள் திரும்பவும் வைஸ் பிரசிடெண்டுகளாக நியமிக்கப்பட்டார்கள். எஸ். எஸ். டால்மகியும், டி. டி. கபாடியாவும் திரும்பவும் கௌரவ செகரிடேரிகளாக நியமிக்கப்பட்டார்கள்.

அக்கிராசனாதிபதி சொன்னதாவது: பொது ஜனங்கள் இவ்விஷயத்தில் கொஞ்சம்கூட உணர்ச்சி காட்டாவிடினும் அஸோஸியேஷன் நாளடைவில் நல்ல வேலை செய்து வருகிறது. ஏற்கனவே அது செய்திருக்கிறவேலை மிகவும் திருப்திகரமாயிருக்கிறது.

---

## ஒரு கோஆப்ரேடர் கௌரவிக்கப்பட்டார்

கோஆபரேடிவ் சொஸைடிகளின் ரஜிஸ்ட்ராரான திவான் பகதூர் எல். டி. சுவாமிக்கண்ணுப்பிள்ளையவர்கள், திருவல்லிக்கேணி கோஆபரேடிவ் சொஸைடியில் வெகு காலமாய் டைரக்டராயும், பிரசிடெண்டாயும் கௌரவப் பொறுப்புகள் வகித்துக்கொண்டிருந்த கே. பி. ராமனாதய்யர் அவர்களின் படத்தை அதே சொஸையடி ஹாலில் திறந்து வைக்கும் இனிமையான வைபவத்தைச்செய்தார். அந்தப் படம், சொஸைடியின் அபிவிருத்தியின் நோக்கத்துடன் தாங்களெல்லாரும் சேர்ந்து செய்யும் பொது வேலையில் ராமனாதய்யர் காட்டின அன்பார்ந்த அநேக நற்குணங்களை தாங்கள் அந்தரங்கமாய்ப்



புகழுவதற்கு அடையாளமாக, சொஸைடி சிப்பந்திகளால் செய்யப்பட்டது. மீட்டிங்கில் கோஆபரேடர்களும், இதர ஜனங்களும் விசேஷமாய் வந்திருந்தார்கள். வந்திருந்தவர்களில் அநேகர் பிரமுகர்களும் கனவான்களுமாக இருந்தார்கள். சுவாமிக்கண்ணுப்பிள்ளையவர்கள் வந்த உடன் சொஸைட்டிக்குப் பிரசிடெண்டான மிஸ்டர் T.R. வெங்கட்டராமசாஸ்திரி அவர்கள் அவரை சொஸைடியார் புதிதாகக்கட்டி முடித்த ஹாலுக்குள் அழைத்துப்போனார். சுவாமிக்கண்ணுப்பிள்ளையை படத்தைத் திறக்கும்படி கேட்டுக்கொள்ளும்பொழுது வெங்கட்டராமசாஸ்திரியார், தனக்கு ராமனாதய்யரை சென்ற 20 வருஷமாய் வெகு நன்றாய்த்தெரியும் என்றும், சொஸைடி சிப்பந்திகள் அவரிடம் ஒரு விசுவாசமும் கௌரவமும் பாராட்டுதல் ஆச்சரியமல்லவென்றும், ஏனென்றால் ராமனாதய்யருடன் நெருங்கிப்பழகின ஒவ்வொருவரும் அவருடைய குணங்களின் இனிமையால் அவரை நேசிக்காமல் இருக்கமுடியாது என்றும் சொன்னார். மேலும் கோஆபரேடிவ் சொஸைடிகளுக்கு மிக்க அனுகூலமாயிருக்கும் ரிஜிஸ்ட்ரார் அவர்களே அதைத் திறந்து விடுதல் யுக்தம் என்று தங்கள் மனதில் பட்டது என்றும் சொன்னார். பிறகு திவான் பகதூர் எல். டி. சுவாமிக்கண்ணுப்பிள்ளை அவர்களைப் படத்தை திறக்கும்படி கேட்டுக்கொண்டார்.

திவான் பகதூர் சுவாமிக்கண்ணுப்பிள்ளை அவர்களும் படத்தைத் திறக்குமுன் இனிமையான சில வார்த்தைகள் பேசினார். அதின் சாராம்சமாவது: தான் செய்யும் வேலை இன்னும் அதிக லாயக்கும் கௌரவமும் உள்ளவர்களுக்கு கொடுபடலாம் என்று தான் நினைத்ததாகவும், ஆனால் அம்மாதிரி செய்யமுடியவில்லை போலும் என்றும் சொன்னார். இப்பேர்ப்பட்ட சபையில் அக்கிராசனம் வகிக்க தனக்கு சமயம் நேர்ந்ததற்கு சந்தோஷப்பட்டார்; ஏனென்றால் கோஆபரேடிவ் சொஸைடிகளின் ரிஜிஸ்ட்ராருக்கு ப்ரஜைகளின் ஆதிபத்திய கவர்ன்மெண்டின் மீட்டிங்கில் அக்கிராசனம் வகித்தல் விசேஷமாய் கிடைக்காது. ரிஜிஸ்ட்ரார் சாதாரணமாய் மறைவாகத்தான் இருக்கிற வழக்கம். வெளிப்படையாக வரவிடுதல் விசுவாசத்தையும் தாக்ஷிண்யத்தையும் பொறுத்தது. இன்னொரு விதத்தில் ஏற்பட்ட அதிக சந்தோஷம் என்னவென்றால் தன்னுடைய பழைய நாள் சிநேகிதரான ராமனாதய்யரின் படத்தை திறக்கும் இன்பமான வைபவத்தை செய்யக் கொடுத்து வைத்தேனே என்பதுதான்.

அவர்கள் மனதில் முதல் முதலிற்தோன்றும் ஓர்முக்கிய நினைவு என்னவென்றால்; ராமனாதய்யரைப் புகழுகிறோம் என்பது தல்ல, கோஆபரேடிவ் கிளர்ச்சியில் அவர் மார்க்கத்தை அனுசரிக்கும் பக்தியேயாகும். வெகு காலமாக ராமனாதய்யர் தனக்கு உயிராகக்கொண்டிருந்த

திருவல்லிக்கேணி கோஆபரேடிவ் சொஸைடியானது கோவாப்ரேடிவ் ஆக்டு ஏற்படுவதற்கு முன்னமேயே உண்டாயிற்று. இந்த சொஸைடியை ஸ்தாபனம் செய்தவர்களுக்கு மிகவும் கௌரவமுண்டு. அவர்களுள் ராமனாதய்யரே முதன்மை பூண்டவர். சொஸைடி மெம்பர்கள் கூட ராமனாதய்யர் படத்தை ஏற்படுத்தி சொஸைடிக்கு கொடுக்கும் விஷயத்தில் சேர்ந்திருக்கவேண்டும். அதினால் அவர்கள் ராமனாதய்யருக்கும் இன்னம் விசேஷ கௌரவம் கொடுத்திருப்பார்கள். இன்னும் வேறு விதமான கௌரவங்கள் அவருக்குவரும் என்று தான் நினைப்பதாய் சொன்னார். சொஸைடி சிப்பந்திகள் வரி வசூலித்து இவ்வைபவம் செய்த விஷயத்தில் அவர்கள் எல்லாருக்கும் மிகத்திருப்தி யேற்பட்டிருக்கவேண்டும்.

ராமனாதய்யர் மிகுந்த படிப்பாளி என்றும் ஒரு பெரிய உபாத்தியாயர் என்றும், யுனிவர்சிட்டியில் "பெல்லோ" பட்டம் பெற்றவர் என்றும், வித்தியாபிவிருத்தி செய்கிறவர் என்றும், கோஆபரேடர் என்றும் எல்லாருக்கும் தெரிந்த விஷயமே. எல்லா கோஆபரேடர்களுக்குத் எல்லாக் காலத்திற்கும், அவர் கோஆபரேஷன் விஷயமாய் கௌரவத்திற்கு மிக சிரத்தையோடு பாடுபட்டிருப்பது ஒரு உதாரணமாக இருக்கவேண்டும். ராமனாதய்யர் போன்ற மனிதர் இல்லாவிட்டால் இப்பொழுது சொஸைடி அடைந்திருக்கும் பதவிக்கு வர இன்னும் எவ்வளவோ காலங்கள் சென்றிருக்கவேண்டும். இந்த ராஜதானியில் இக்கிளர்ச்சியின் துவக்கத்தில் மனப்பூர்ணமாய் பொது நலத்திற்காக ராமனாதய்யரைப்போல் வேலை செய்தவர்கள் மிகச் சிலரே. ஆனால் இந்த சிலர் கற்றுக்கொடுத்த மாதிரிகள் மிகப் பலிதமுள்ளவைகளாக ஆகி அநேகர் இதில் அபிலாசையுள்ளவர்களாகி மிக ஊக்கம் காட்டுகிறார்கள். இன்னும் அநேக உண்மையான தேசாபிமானிகளும் சேர்ந்து வேலை செய்யத் தயாராயிருக்கிறார்கள். தனக்கு முன் இருக்கும் இந்த விசேஷக் கூட்டத்தாரைவிட வேறு யார் கோஆபரேஷனின் முன்னேற்றத்தை அதிகமாகப் பார்க்கவிரும்பக்கூடும். சொஸைடியின் நடவடிக்கைகளில் விசேஷமாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. தற்காலத்திய டைரக்டர்களுள் சொஸைடியின் வேலையை மிக அழகாய் நடத்தக்கூடிய சிலர் இருக்கிறார்கள். அவர்களுடைய பெயரே சொஸைடி நன்றாய்முன்னுக்கு வரும் என்பதைக் காட்டும். முன் நடந்துபோன விஷயங்களைப்பற்றி அவர்கள் கவலைப்படாமல் மேல் நடக்கவேண்டியதற்கு ஊக்கமாய் வேலை செய்யவேண்டும். ஒவ்வொரு கிளர்ச்சிகளிலும் கஷ்ட காலம் வருகிற வழக்கம் தான் நமது திருவல்லிக்கேணி சொஸைடிக்கு அக்காலம் வந்து போய்விட்டது. திருவல்லிக்கேணி சொஸைடி ஒரு காலத்தில் இங்கிலாந்திலுள்ள ராக்டேல் பயோனீர் அஸ்ஸோஸியேஷனைப்போல் எங்கிலும் பெயரெடுத்து அதன் பெயர் தங்க அக்ஷரங்களால் எழுதப்படும்படியான காலம் வரக்கூடும் என்று அபிப்பிராயப்பட்டார். கோஆபரேடிவ் கிளர்ச்சிக்கே இவ்வுலகத்தில் வயது 70 தான் ஆகிறது. அது இந்தியாவில் ஸ்தாபனமான காலத்தில் முதல் முதல் அதை அநேகர் அவநம்பிக்கையுடன் கவனித்திருந்தபோதிலும், நாளடைவில் அதின் ஜயமும் சீரும் சிறப்பும் ஆச்சரியகரமாய் விருத்தியடைந்திருக்கின்றன. இக்கிளர்ச்சியின் க்ஷேமத்தை வியாபாரத்தின் பொருட்டும் படிப்பின் பொருட்டும்விருத்தி செய்ய இயன்றவரையில் முயலவேண்டும். சொஸைடியாரோ வெகு காலமாக தங்கள் வேலையை வெகு அழகாக நடத்திவந்தமையால் அதின் உள்வர்த்தமானங்களைப்பற்றி டிபார்டுமெண்டாருக்குக்கூட அதிகமாகத் தெரியாது. இந்த சொஸைடியின் வேலையினால் மெம்பர்கள் கற்றுக்கொள்ளும் ஓர் பெரிய பாடம் என்னவென்றால் சுயராஜ்யம் ஆளும் திறமையே.



இச்சொஸைடி தான் செய்யும் திறமான வேலையினால் ராஜதானியில் மிகச் சிறிய சங்கங்கள் கொடுக்கும் தொந்திரவு கூடகொடுக்கவில்லை. கோஆபரேடிவ் சொஸைடிகளின் நோக்கம் என்னவென்றால், செட்டு, தன்னடக்கம், சுயராஜ்யம் இவைகளின் முறைகளைக் கற்றுக்கொடுப்பதே. எல்லாரும் தங்களுடைய தாராளமும் தேசாபிமானமுள்ள எண்ணங்களை ஆதரவாய்க்கொண்டு கோஆபரேஷன் வேலையை நிலைநிறுத்தி அதை ஏற்பாடான கிரியாம்சையில் நன்றாய் நடத்தவேண்டும். ஒரு முதன்மை பெற்ற கோஆபரேடரை கௌரவப்படுத்தமீட்டிங் கூடுவதற்குப் போதுமான காரணங்கள் இருப்பதை எடுத்துக்காட்ட தனக்கு அவகாசம் கொடுத்ததற்காக எல்லாருக்கும் வந்தனம்அளித்தார்.

---

## டிபார்டுமெண்டின் கான்பரன்ஸ்.

1917௵ ஏப்ரல் மாதம் 3, 4, தேதிகளில் மதறாஸிலுள்ள கோஆப்ரேடிவ் ரிஜிஸ்ட்ரார் அவர்களின் ஆபீசில் நடைபெற்ற, ரிஜிஸ்ட்ரார், அஸிஸ்டெண்டு ரிஜிஸ்ட்ரார்கள், சென்டரல் பாங்கிகளின் செகிரடெரிகள் இவர்கள் கூடின கான்பரன்ஸ் நடவடிக்கைகளின் சாராம்சம் வருமாறு. ரிஜிஸ்ட்ரார் அவர்களும் எல்லா அஸிஸ்டெண்டு ரிஜிஸ்ட்ரார்களும் கீழ்க்கண்ட சென்டரல் சொஸைடிகளின் செகிரிடெரிகளும் ஆஜராயிருந்தார்கள்: மதறாஸ் சென்டரல் அர்பன் பாங்கி, கோயமுத்தூர் சென்டரல் பாங்கி, சேலம் சென்டரல் பாங்கி, காஞ்சீவரம் சென்டரல் பாங்கிங் யூனியன், புத்தூர் சென்டரல் பாங்கி, தெனாலி சென்டரல் பாங்கி, மதுரை சென்டரல் பாங்கி, கூடலூர் சூபர்வைஸிங் யூனியன், திருவண்ணாமலை லோகல் யூனியன், உத்தரமேரூர் லோகல் யூனியன். மேற்படி பிரதி நிதிகளின் அபிப்பிராயங்களின் சாராம்சம் வருமாறு:

இந்த வருஷம் இவ்வளவு தாமதமான காலத்தில் வசூலாகாத அல்லது கொடுபடாத வட்டித்துகையை வருஷக்கணக்கிலிருந்து விலக்க வேண்டு மென்ற சட்டமானது அமுலுக்குக் கொண்டுவரப்பட்டால் இப்பொழுதிருக்கும் ஏற்பாடுகள் எல்லாவற்றிற்கும் குந்தகம் ஏற்படும் என்று சென்டரல் பாங்கி செகிரிடெரிகள் எல்லாரும் ஏகோபித்து அபிப்பிராயப்பட்டார்கள். மதுரை ராமனுதபுரம் டிஸ்திரிகட்டு பாங்கு செகிரிடெரி மாத்திரம் கோஆபரேடிவ் வருஷத்தின் கடைசி மூன்று மாதத்திற்குள் வட்டிகளை வசூலிப்பது சாத்தியம் என்று நினைக்கிறார். ஆனால் அவருடைய இதர குறிப்புகளை கீழே காணலாம். மற்ற செகிரிடெரிகள் ஒப்புக்கொள்ளவில்லை. அவர்கள் சொல்வது என்னவென்றால், டிபாஸிட்டுத் துகைகள் வருஷத்தில் எப்பொழுது கேட்டாலும் கொடுக்கப்படவேண்டும், அதே மாதிரி வட்டியும் கொடுபடவேண்டும் என்பதே. எல்லா சொஸைடிகளின் வட்டிகளும் ஓர் குறிப்பிடப்பட்ட காலத்தில் மாத்திரம் வந்தால் டிபாஸிட்டுகளையும் அவைகளின் வட்டிகளையும் திருப்பிக்கொடுத்தல் கஷ்டமாகும் என்கிறார்கள்.

மதுரை ராமனுதபுரம் பாங்கி செகரிடெரி தன் பிரதேசங்களிலுள்ள சுமார் 100 பிரைமரி சொஸைடிகளுடன் பாங்கிக்கு முள்ள நிபந்தனையாவது ஒவ்வொரு வருஷம் ஜூலையிலிருந்து டிசம்பர் வரையில் வட்டியைக் கொடுக்கலாம் என்று ஏற்பட்டிருக்கிறது. அவர் அபிப்பிராயம் என்னவென்றால் அந்த ஏற்பாட்டை மாற்ற போதுமான காலம் (சுமார் 2 வருஷம்) கொடுத்தால் கோஆபரேடிவ் வருஷத்தின் கடைசி மூன்று மாதத்தில் வட்டி வசூல் செய்யவாவது, வசூலிக்கப்பட்ட வட்டியிலிருந்து பங்குக்காரர்களுக்கு டிவிடண்டு கொடுக்கவாவது ஆக்ஷேபணையில்லை என்பதே. கிரிஸ்டியன் சென்டரல் பாங்கியும், சேலம் டிஸ்திரிகட்டு பாங்கியும் இதற்கு சம்மதிக்கின்றன. ஆனால் மதருஸ் சென்டரல் அர்பன் பாங்கியார் டைரக்டர்களின் அடுத்த மீட்டிங்கில் இதைப்பற்றி தீர்மானித்து ரிபோர்டு செய்வார்கள்.

கோயமுத்தூர் டிஸ்திரிகட்டு கோஆபரேடிவ் பாங்கியின் செகிரிடெரி கவர்ன்மெண்டார் தற்கால வழக்கத்தையே அனுசரிக்கவிடுவது யுக்தமாயிருக்கும் என்றும், ஆனால் வசூலிக்கமுடியாத கடன் துகையை நிவர்த்திசெய்ய ஓர் பண்டுக்காக நிகரலாபத்திலிருந்து கொஞ்சம் குறைத்து வைத்துக் கொள்ளலாம் என்றும் அபிப்பிராயப்பட்டார். இதர சென்டரல் பாங்கிகளின் செகிரிடெரிகளும் இவ்வபிப்பிராத்திற்கு இணங்கின போதிலும் தங்கள் டைரக்டர்களின் அபிப்பிராயங்களுடன் கலந்து கொள்ளாமற் சொல்லமுடியவில்லை.

(2) வடசர்க்காரிலுள்ள சென்டரல் பாங்கிகள், மதருஸ் சென்டரல் அர்பன்பாங்கி, இவைகளைத்தவிர மற்ற சென்டரல் பாங்கிகள் எல்லாம் சூபர்விஷன் பண்டுக்காக வட்டி அம்சத்தை அதிகப்படுத்தத்தயாராயில்லை.



(3) டிஸ்திரிகட்டு பாங்கிங்யூனியன்களுக்கும் லோகல் யூனியன்களுக்கும் உள்ள சம்பந்தத்தைப்பற்றி இந்தக்கான் பரன்ஸ் வெகுநேரம் விவாதித்தது. வடசர்க்காரிலுள்ள பாங்கிகள் லோகல் யூனியன்கள்தான் மேற்பார்வைக்கு முக்கியமாய் ஜவாப்தாரிகளாயிருக்கவேண்டும் என்றும் டிஸ்திரிகட்டு பாங்கிங் யூனியன்கள் முக்கியமாய் பணவிஷயமான பொறுப்புகளை வகிக்கவேண்டுமென்றும் ஆமோதித்தன. தெற்கேயுள்ள பாங்கிகள் மேற்பார்வையின் விசேஷப்பொறுப்பு டிஸ்திரிகட்டு யூனியன்களிடம் இருக்கவேண்டும் என்று ஆமோதித்தன. மேற்பார்வையில் சம்பந்தப்பட்ட சிப்பந்திச்சிலவுகளுக்கு மாத்திரம் சூபர்விஷன்பண்டு உபயோகிக்கப்படவேண்டும் என்றும், இதரசிலவுகள் ரிஜிஸ்ட்ரார் அவர்களின் பரிசீலனையின் கீழ் இருக்கவேண்டும் என்றும்எல்லாரும் அங்கிகரித்தார்கள்.

டிஸ்திரிகட்டு பாங்கிங் யூனியனுக்கும் லோகல் யூனியனுக்கும் வரியைப்பிரித்துக் கொடுக்கும் விஷயத்தைப்பற்றி மதுரையானது டிஸ்திரிகட்பாங்கி வசூலித்தவட்டியில் 100க்கு 5-வீதம் கொடுக்கவேண்டும் என்றும் பிரைமரி சொஸைடிகளும் தாங்கள் வசூலித்த வட்டியிலும் அவ்வாறே கொடுக்கவேண்டும் என்றும் ஒரு பைலா ஏற்படுத்த தயாராயிருக்கிறது. எல்லா சென்டரல் பாங்கிகளும் தாங்கள் வசூலித்த வட்டிகளில் 100க்கு 4 அணுவுக்கு குறையாமல் கொடுக்கின்றன.

(4) டிஸ்திரிகட்டு பாங்கிகள், சென்டரல் பாங்கிகள், சூபர்வைசிங் யூனியன்கள், இவைகளெல்லாம் மதருஸ் சென்டரல் அர்பன் பாங்கியில் அதின் புதிய ஏற்பாட்டின்படி தலைக்கு ஒருபங்கு எடுத்துக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றன.

(5) கௌரவ அசிஸ்டெண்டு ரிஜிஸ்ட்ரார்களின் வேலைக்கு விண்ணபங்கள். அதின் நிபந்தனைகள் கான்பரன்ஸுக்கு விவரிக்கப்பட்டன.

(6) சூபர்வைசிங் வேலையைச் செய்யும் டிஸ்திரிகட்டு பாங்கிங் யூனியன்கள் ரிஜிஸ்ட்ராருக்கும் அஸிஸ்டெண்டு ரிஜிஸ்ட்ரார்களுக்கும் மாதாந்தரம் நடவடிக்கைகளைப்பற்றிய விவரங்களை அனுப்பவேண்டும்.

(7) சி. என் கிருஷ்ணசாமி அய்யர் அவர்களின் கேள்வி.

பைலாக்களும் அவைகளை எவ்விதம் சீர்திருத்துவது என்பதும்:—

சிலவிவாதம் நடந்தது. ஆனால் ஒருதீர்மானமும் ஏற்படவில்லை. மதுரையில் நிகரலாபங்களில் $\frac{1}{8}$ பங்கு இன்ஸ்பெக்ஷன் பண்டுக்காக கொடுக்கவேண்டும் என்றபைலா ஒன்று இன்னும் அமுலில் இருக்கிறது. இது நியாயவிரோதமாயிருந்தால் இதற்குபதிலாக வேறொரு பைலாவை ஏற்படுத்த வேண்டும் என்று கவர்ன்மெண்டாரைக்கேட்டுக் கொள்ளவேண்டும். கவர்ன்மெண்டாரும் நிகரலாபங்களைப்பங்கிடும் தற்

கால பைலாக்களுக்குப் பதிலாக இப்பொழுது குறிப்புச்சட்டம் ஒன்று பிரசுரித்திருக்கிறார்கள்.

---

## தென்னாற்காடு, தஞ்சாவூர் ஜில்லாக்களின் அஸிஸ்டெண்டு ரிஜிஸ்ட்ராரவர்களின் ஸர்க்குலர்.

1912ம் வருஷத்திய 2வது ஆக்டாகிய கூட்டுத்தொழில் சங்கங்களைக் குறித்த ஆக்டை அநுசரித்து நடவடிக்கை நடத்தப்படும் ஒவ்வொரு சங்கங்களிலும் ஷை ஆக்டின் 16வது ஸெக்ஷனின்படி,

(1) இந்த ஆக்டு (2) அதன்படி லோகல் கவர்மென்டார் ஏற்படுத்திய சகாய சட்டங்கள் (3) அந்த சங்கத்தை குறித்து ஒழுங்கேற் படுவதற்கான விதிகள் இவைகளின் ஒவ்வொன்றிற்கும் ஒரு பிரதியேனும் ஷை சங்கத்தின்மேல் விலாசமுள்ள இடத்தில் கட்டண மில்லாமலே நியாயமான எல்லா காலங்களிலும் பார்வைக்கு வைத்திருக்க வேண்டுமென்று ஏற்பட்டிருக்கிறது.

2. ஆனால் சதாரணமாய் நாம் தணிக்கைசெய்தவரையில் அநேக சங்கங்களின் விதிகளின் நகல் மட்டில் ஒரு பிரதிமினிட் புஸ்தகத்தில் ஒட்டப் பட்டிருக்கிறது. அதற்குவேறே பிரதிகள் சங்கங்களில் ஆக்டிற்கும் உபகார சட்டங்களுக்கும் பிரதி அடியோடே யில்லை. இது மிகவும் பிசகு. ஆக்டின் பிரதிகள் சென்னைக் கவர்மெண்டு அச்சாபீஸில் ஒரு அணாவிற்கு விற்கப்படுகிறது, உபகார சட்டங்களும் அந்த அச்சாபீஸிலேயே பதிப்பிக்கப் பட்டிருக்கிறது, பொது நமூனாபடி விதிகள் ஏற்பட்டிருந்தால் அந்த நமூனா பாரங்கள் நம்மாபீசிலிருந்து பெற்றுக் கொள்ளலாம். ஆகையால் இம்மாதிரி இந்த மூன்று அம்சங்களில் எது இல்லாமலிருந்தாலும் அதை அந்தச்சங்கம் பார்வையுள்ள சூபர்வைசர், இன்ஸ்பெக்டர் இவர்களிடம் அதற்குண்டான கிரயம் கொடுத்து பெற்றுக் கொள்ளலாம். சங்கத்தின் விதி எழுதியாகிலும் டைப் அடித்தாகிலும் வைக்கவேண்டும். எவ்விதத்திலும் சட்டப்படி இருக்கவேண்டிய இந்த மூன்று ரிகார்டும் ஒரு சங்கமும் இல்லாமல் இருக்கக் கூடாது.

---

## விஜயமங்கலம் கோவாப்ரேடிவ் யூனியன் மீட்டிங்கு.

1917 வருஷம் ஜூன் மீ 19ம்தேதி விஜயமங்கலம் யூனியன் கவர்னிங்குபாடி மீட்டிங்கு நடைபெற்றது.

பின்வரும் தீர்மானங்கள் அங்கீகரிக்கப் பட்டன,—

1. நமது யூனியன் சங்கங்களில் நாளது கோவாப் ரேடிவ் வருஷத்திற்கு சங்கங்களில் வாய்தா கடந்த கடன்கள் ஒன்று கூட இல்லாமல் அந்தந்த சங்கங்கள் வசூல் செய்து விடவேண்டு மென்று ஒரு சர்க்குலர் சங்கங்களுக்கு அனுப்ப வேண்டுமென்று பிரசிடெண்டு கேட்டுக்கொள்ளப்படுகிறார்.



2. நமது யூனியன் சங்கங்களில் வாய்தாக் கடந்த கடன்கள் அதிகமாயிருக்கிற குன்னத்தார் சங்கத்தை நமது கவர்னிங்கு பாடிமெம்பர் ம-ா-ா-ஸ்ரீ, ராஜக் கவுண்டர் அவர்களும், வெள்ளர வெளிசங்கத்தை ம-ா-ா-ஸ்ரீ, ராஜகோபாலராவ் அவர்களும், விஜயமங்கலம் சங்கத்தை ம-ா-ா-ஸ்ரீ. அருணாசல கவுண்டர் அவர்களும், வரப்பாளையம் சங்கத்தை ம-ா-ா-ஸ்ரீ. சின்னரங்கய்ய கவுண்டர் அவர்களும், வாய்ப்பாடி சங்கத்தை ம-ா-ா-ஸ்ரீ இராமரெட்டியார் அவர்களும், தளவாய்பாளையம் சங்கத்தை ம-ா-ா-ஸ்ரீ ஸ்ரீரங்கநாத கவுண்டர் அவர்களும், சீனபுரம் சங்கத்தை ம-ா-ா-ஸ்ரீ அநுமந்த கவுண்டர் அவர்களும் போய் கடன்கள் வசூலாகக் கூடிய ஏற்பாடு செய்து ரிப்போட்டு அனுப்பும்படியாய் கேட்டுக் கொள்ளப்படுகிறது,

3. நமது சூப்பர்வைசர் வாய்தாக்கடந்த கடன்கள் அதிகமாயிருக்கப்பட்ட சங்கங்களை முக்கியமாய் வெள்ளரவெளி, குன்னத்தூர் சங்கங்களைப் பார்வையிட்டு கடன்கள் வசூலாகக் கூடிய ஏற்பாடுகள்செய்து ரிப்போர்ட்டுசெய்ய வேணுமாய் தீர்மானிக்கப் பட்டது.

---

## அநுபந்தம்.

### புதுக்கோட்டை முதல கோவாபரேடிவ் கான்பரன்ஸ்.

சென்ற மார்ச் மாதத்தில் எஸ் பர்ன் துரை அவர்களால் சம்பிரதாயப்படி திறக்கப்பட்ட முதல் புதுக்கோட்டை கோஆபரேடிவ் கான்பரன்ஸ் ஆரம்பித்த உடன் அநேக டெலிகேட்டுகள் தங்கள் தங்கள் சொஸைடிகளின் வேலையைப்பற்றிய ரிபோர்டுகளை வாசித்தார்கள். பிறகு தீர்மானங்கள் ஆலோசிக்கப்பட்டன.

**தீர்மானங்கள்.**

மொத்தத்தில் 18 தீர்மானங்கள் விவாதிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டன. அவைகளில் மிக்க அவசியமானவை வருமாறு :—

முதலாவது தீர்மானம்—சண்டை சீக்கிரம் முடிவடைய வேண்டும் என்பதும் நேச ராஜ்யங்களுக்கு முடிவான ஜயம் உண்டாகவேண்டும் என்பதே. இரண்டாவது மூன்றாவது, தீர்மானங்கள்—கோஆபரேடிவ் கிளர்ச்சியில் தர்பார் காட்டிய அனுதாபத்திற்கும் ம-ா-ா-ஸ்ரீ, எம். கே. வெங்கடாசாரியார் அவர்கள் அதன் முன்னேற்றத்திற்காக உழைத்ததற்கும் நன்றியறிவு பாராட்டியதே.

நான்காவது தீர்மானம், இக்கிளர்ச்சி பரவாத இடங்களிலெல்லாம் பத்திரிகை, உபந்நியாசங்கள் முதலியவைகளால் தர்பார் பரவச் செய்ய வேண்டும் என்பதே.

இந்த தீர்மானம் பிரேரிக்கப்பட்டு ம-ள-ள-ஸ்ரீ, ஏ. மகாலிங்கய்யர், ஜி. சுந்தரேசசாஸ்திரி, இ. புஜங்கராவ் இவர்களால் ஆமோதித்து ஆதரிக்கப்பட்டு, வோட்டுக்குக்கொண்டு வரும் தருவாயில் வெங்கடவராக தீக்ஷிதர் அவர்கள், சர்க்கார் ஒத்தாசை செய்தால் கோஆபரேஷனின் இனிமைக்கு பங்கம் ஏற்படும் என்ற காரணத்துடன் ஆக்ஷேபித்தார். கோஆபரேஷனைப்பற்றி சர்க்காரார் ஏதாவது விஷயத்தை பிரசுரித்தால் சொஸைடிகளின் சுயேச்சைக்கு ஒடுக்கம் உண்டாகும என்றார். தீக்ஷிதர் அவர்களுடைய ஆக்ஷேபணையை ஆமோதித்துப் பேச யாவருக்காவது விருப்பமுண்டா என்று பிரசிடெண்டு கேட்கவே ஒருவரும் வராமையால் முதல் பிரேரணையை "வோட்டில்" வைத்து அங்கீகரித்தார்கள். தீக்ஷிதர் மாத்திரம் ஒவ்வவில்லை.

ஏழாவது தீர்மானம், ராஜாங்கத்திலுள்ள கோஆபரேடிவ் சொஸைடிகளின் ரிஜிஸ்ட்ரார் அவர்களின் வேலை மிக ஊக்கமாய் நடைபெறுவதற்காக ஒரு சென்டரல் பாங்கியும் கோஆபரேடிவ் யூனியன்களும் ஏற்படுத்தவேண்டுமென்பது.

சிற்றுண்டிக்காக மீட்டிங்கு சற்று நிறுத்தப்படுமுன் திவான் அவர்கள் சில வார்த்தைகள் பேசினார். இக்கிளர்ச்சியை ஆதரிக்க, பணம், புத்திமதி, ஒற்றுமைக்கும் ஆசை, இவைகளுடன் தர்பார் எப்பொழுதும் தயாராயிருக்கிற தென்றும், எப்பொழுதாவது இக்காரியங்களில் தர்பார் பின்னடைவதாக மெம்பர்கள் கண்டால் அதற்கு காரணம் அலக்ஷிய புத்தியென்றாவது உணர்ச்சியின்மை என்றாவது நினைக்காமல் ஆனால் ராஜாங்கத்தில் இதைவிட மிக்க அவசியமான விஷயங்களுக்கு உதவி செய்யவேண்டியிருந்திருக்கும் என்று நினைக்கவேண்டும். இக்கிளர்ச்சியில் சுபாவமாகவே மிகக்கவலை எடுத்துக்கொண்டிருக்கிற மகாராஜா அவர்கள் இதன் முன்னேற்றத்திற்காக வேண்டிய எல்லாவற்றையும் தர்பாரின் சக்தியானுசாரம் செய்யவேண்டும் என்று உத்தரவு அளித்திருக்கிறார். தர்பாரும் பொருளின் அளவுக்குத் தக்கபடி செய்யத் தயாராயிருக்கிறது.

சிற்றுண்டியான பிறகு கான்பரன்ஸ் திரும்பவும் கூடினவுடன் ஒன்பதாவது தீர்மானம் பிரேரிக்கப்பட்டது. அதாவது, ஏதாவது கோஆப்பரேடிவ் சொஸைடிகள் பிரியப்பட்டால் அதனதன் எல்லைக்குள் நடக்கக்கூடிய குளம்ராமத்துகள் இதர பொது நலமான வேலைகள் இவைகளை நடத்த தர்பார் அதிகாரம் கொடுக்கவேண்டும் என்று கேட்பது தான்.



பதினோராவது தீர்மானம் வருவாறு:—"ராஜாங்கத்திலுள்ள வியாபாரம் கைத்தொழில் இவைகளுக்கு திரவிய சகாயம் செய்து ஆதரிக்கும் பொருட்டு இந்த கான்பரன்ஸ் தர்பாரைக் கேட்டுக்கொள்வது என்னவென்றால் மைசூர் பாங்கியின் முறையை அனுசரித்து தர்பாரும் இந்த சமஸ்தானத்தில் "ஒரு ஸ்டேட்பாங்கி" ஏற்படுத்த வேண்டும்"

இந்த தீர்மானத்தை ஜீ. சுந்தர சாஸ்திரியார் பிரேரிக்கையில் அதினால் ஜனங்களுக்கு ஏற்படும் விசேஷ குணத்தையும் அவர்களுடைய பணம் சமஸ்தானத்தை விட்டு வெளியே போகாமலிருப்பதின் நலத்தையும் பற்றிச் சொன்னார்.

வெங்கடவராக தீக்ஷிதர் இந்தத் தீர்மானத்தை ஆக்ஷேபித்தார். கோஆபரேடிவ் சொஸைடிகளின் நோக்கம் ஒற்றுமைப்பை நாடியதாகவே இருக்கவேண்டும் என்றும் ஒருவாறான வியாபார பாங்கியாகத்தான் ஏற்படும் என்றும் அதின் நோக்கம் லாபமடையவே விரும்புவதால் இது அவ்விருப்பம் கோஆபரேஷனுக்கு கெடுதியை விளைவிக்கக் கூடியது என்றும் இம்மாதிரி காரணங்களினால் வியாபார பாங்கி ஏற்படுதல் யுக்தமல்ல என்றும் சொன்னார். உதாரணமாக இப்பொழுது இருக்கும் டவுன் பாங்கி தேவையான பணம், வியாபாரம், கைத்தொழில்களுக்கு கொடுக்கத்தயாராயிருக்கிறது; ஆனால் தகுந்த ஈடு இல்லாத குறைதான். சமஸ்தான பாங்கி ஒன்று ஏற்பட்டால் டவுன் பாங்கியின் வேலைக்கு குந்தகம் ஏற்படும். சமஸ்தான பாங்கி ஏற்பட்டால் ஜனங்கள் ஒருக்காலும் டவுன் பாங்கில் வியாபாரம் வைத்துக் கொள்ளமாட்டார்கள். ஏனென்றால் சமஸ்தானத்தின் பொறுப்பில் அதிக நம்பிக்கை ஏற்படுவது ஸகஜம். பிரிடிஷ் துரைத்தனத்தாரே இந்தியாவுக்கு ஒரு சமஸ்தான பாங்கி ஏற்படுத்த இன்னும் ஆலோசித்துக் கொண்டிருக்கிறார்கள். அது தீர்மானமாகும் வரையில் நாம் இவ்விடத்தில் ஒன்று ஏற்படுத்த நினைப்பது அபக்குவ நிலைமையாகும் என்றார்.

டவுன் பாங்கிக்கு செகரிடெரியாகிய ஜி. சுந்தரமய்யர் அவர்கள், பூர்வ பிரஸ்தாபத்தை ஆமோதித்து ஆக்ஷேபணையைநிராகரித்து இந்தியாவுக்கு சமஸ்தான பாங்கி வேண்டாமென்று ஒருவரும் சொல்லவில்லை என்றார். அபிப்பிராய பேதம் உண்டாயிற்று. பிரசிடென்ஸி பாங்கிகளுக்கு சமஸ்தான பாங்கி ஏற்படுவதில் பிரியமில்லை. ஏனென்றால் அது தங்கள் வியாபாரத்திற்கு அழிவை உண்டுபண்ணும் என்று நினைக்கப்படுகிறது. ஆனால் இந்தியர்களுக்கு சமஸ்தான பாங்கி ஏற்படுவதில் பிரியம் உண்டாயிருக்கிறது என்று சொன்னார். இம்மாதிரி சில தர்க்கம் நடந்த பிறகு இந்த பிரேரணை வோட்டில் வைக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது.

இன்னும் சில தீர்மானங்கள் நடைபெற்றன. பிறகு கொளத்தூர் தாலூக்காவிலுள்ள கோஆபரேடர்களுக்காவும் விவசாயிகளுக்காகவும்

அடுத்த கான்பரன்ஸ் கீரனூரில் வைக்கப்படவேண்டும் என்று வேண்டப்பட்டது.

பிரசிடெண்டு பரன் துரையவர்கள் கான்பரன்ஸை கலைக்கப்புகுந்து சுருக்கமாக சில வார்த்தைகள் பேசினார். அவைகளின் முக்கிய சாராம்சம் வருமாறு:—தர்பார் எப்பொழுதும் உங்களுக்கு சிரமகாலங்களில் உதவி செய்யப் பிரியப்படுகிற விஷயம் உங்களுக்கே நன்றாய்த் தெரியுமாதலால் நான் அதிகமாய்ச் சொல்ல வேண்டியது அனாவசியம். கோஆபரேஷனைப் பற்றி மாத்திரம் பேசுவது என்று கட்டுப்பாட்டிலிருந்தால் கான்பரன்ஸில் விசேஷ காலஹரணம் ஆயிருக்காது. சம்ஸ்தான பாங்கி ஏற்படும் விஷயத்தைப்பற்றிப் பேசியது மிக்க அழகியதே. இதற்கு ஆழ்ந்த யோஜனை வேண்டியிருப்பதால் நாம் உடனே தீர்மானித்துவிட முடியாது. நான் இங்கு வந்து உங்களையெல்லாம்பார்த்து மிக்க ஆனந்தத்தை அடைந்து விட்டேன். வருஷா வருஷம் கான்பரன்ஸ் கூடத் தீர்மானித்தது எனக்கு மிக சந்தோஷம் என்றார். பிறகு பிரசிடெண்டு அவர்களுக்கு வழக்கப்படி வந்தனம் அளித்த பிறகு கான்பரென்ஸ் முடிவு பெற்றது.

கூட்டம் கலைய ஆரம்பிக்கு முன் மிஸ்டர் வுிட்ணி பர்ன் துரையவர்கள் இந்திய யுத்தக் கடனைப்பற்றி சில வார்த்தை பேசப்புகுந்தார். வான் ஹிண்டன்பர்க் என்பவர் ஜர்மனியார் ஜயமடைவதற்காக பின்னிடைந்துகொண்டிருக்கிறார்கள் என்றார். ஆனால் தனக்கு இதுவரையில் பின்னிடைவது என்றால் ஜயமடைவது என்று தெரியாது என்றும் முன்னேறிப்போதல் தான் ஜயத்தைக் குறிக்கிறது என்று ஒவ்வொருவருக்கும் தெரியும் என்றும், பின்னிடைவது கூட ஜயம் என்று யாவருக்கும் தெரியாது என்றும் சொன்னார். அம்மாதிரியான அர்த்தம் ஜர்மன் படிப்பாளிகளுக்குத்தான் தெரியும் என்றார். ஞாயத்தையும் நாகரீகத்தையும் தர்மமார்க்கத்தையும் உத்தேசித்து ரூ. 7-12 கொடுத்து ராஜாங்கத்திலிருந்து ரூ. 10-க்கு யுத்தக் கடன் சர்டிபிகேட் வாங்கி அதனால் ராஜாங்கத்திற்கு உதவிபுரிய இது ஒரு நல்ல தருணம். நாட்டுக்கோட்டை செட்டிமார்கள் லக்ஷக் கணக்கில் வாங்கத் தகுந்தவர்கள், ஆனால் உபாயுத் துகைகள் கட்ட விசேஷ ஜனங்கள் வந்துவிட்டால் செட்டிமார்களின் மனதில் தாங்களும் கட்டவேண்டும் என்பது நன்றாய்ப்படும். தான் தன்னுடைய மிகுதித் துகையை எல்லாம் மிக்க ஜாஸ்தியாயில்லாவிட்டாலும் யுத்தக் கடன் கொடுப்பதில் தான் உபயோகிப்பதாகவும் எல்லாரும் நாட்டுக் கோட்டை செட்டிமார்களும் அவ்வாறே செய்ய வேண்டப்படுகிறார்கள்.

இது எல்லாருக்கும் தமிழில் மொழி பெயர்த்து விவரிக்கப்பட்டது. பிறகு ராஜா ராணி, யுவராஜா, சக்கிரவர்த்தி இவர்களுக்கு ஆரவாரத்துடன் மரியாதை காட்டிக் கூட்டம் கலைந்தது.



## உசிலம்பட்டி முதல் கான்பரன்ஸ்.

**அக்கிராசனாதிபதியின் இனிமையான பிரசங்கம்:**—கள்ளர்நாட்டில் முதல் முதல் ஏற்பட்ட கோஆப்ரேடிவ் கான்பரன்ஸ் சென்ற ஏப்பிரல் மாதம் 30௳ ரெவினியூடிவிஷன் ஆபீசர் மிஸ்டர் சி. எஸ். அண்ணாசாமி அய்யர் அக்கிராசனத்தின்கீழ் உசிலம்பட்டியில் நடைபெற்றது. அந்தகான்பரன்ஸில் கள்ளசமஸ்தானங்களிலிருந்து 300 டெலிகேட்டுகளுக்கு மேல் வந்து கூடினார்கள். திவான் பகதூர் எல். டி. சுவாமிக்கண்ணுப்பிள்ளை அவர்களும், அஸிஸ்டெண்டு ரிஜிஸ்ட்ராகளான, வெங்கடாசாரியார், அருணானந்தம்பிள்ளை, மீனாக்ஷி சுந்தரம்பிள்ளை, ராவுசாஹேப் கே. ராமஸாமி அய்யர் முதலானோரும் வந்திருந்தார்கள். கான்பரன்ஸ் இரண்டுமணிக்கு கூடிற்று. மிஸ்டர். ஜே. ஏ. வேதநாயக தேவர் அவர்கள் மகாஜனங்களை நல்வரவேற்றார். மிஸ்டர் சி. எஸ். அனந்தராம அய்யரவர்கள் இனிமையான புத்திபுகட்டக் கூடிய தன் அக்கிராசனப் பிரசங்கத்தை பின்வருமாறு செய்தார்.

நான் உங்களுக்கெல்லாம் கோஆப்ரேடிவ் விஷயத்தில் ஓர் அன்னியன். ஆனால் உங்களுடன் கூடியிருந்த கொஞ்சகாலத்திற்குள் உங்களுக்குள் அபிவிருத்தி ஆகவேண்டிய விஷயங்கள் ரொம்பவும் இருக்கிறதென்று அறிந்துகொண்டேன். முதல் பார்வையில் கோஆப்ரேஷன் விருத்தியடைந்து செழிக்க இதுதகுந்த இடம் அல்ல என்றுஒருவர் நினைக்கக்கூடும். இந்தக்கூட்டத்தார் சென்றசில நூற்றாண்டுகளாக சம்பாதித்துக்கொண்ட பெயரும்கீர்த்தியும் புகழத்தக்கதல்ல. உலகத்தாரின் அபிப்பிராயம் என்னவென்றால், கண்ணியமானவாழ்க்கை, செட்டு, பரஸ்பர உபகாரம், இவைகள் கள்ளர்களுக்குள் தெரியாத விஷயம் என்பதே. அவர்களுக்குள் நம் கோஆபரேடிவ் கிளர்ச்சியின் அனுபவம் மேற்படி அபிப்பிராயத்தை வற்புறுத்துகிறது என்று என்மனதிற் படுகிறது. ஏனென்றால் இக்கிளர்ச்சி 1910-11ல் வெகு பிரகாசமாய் ஆரம்பமாகி அடுத்த வருஷம்முடிய ஒளிவீசிற்று. பிறகு புகைதான் காணப்படுகிறது. முக்கியமாய் சென்ற மூன்று வருஷங்களாக யாதொரு முன்னேற்றமும் இல்லை. இப்பேர்ப்பட்ட விஷயங்களில் முன்னேற்றம் இல்லாமலிருத்தல் மலினமடைவதைக் காண்பிக்கிறது. கள்ளகிராமங்கள் 88 இருந்தபோதிலும் தற்காலம் 30 சொஸைடிகள் தான் இருக்கின்றன. இதனால் நாம் கோஆபரேஷனின் அம்சத்தையே இன்னும் அடையவில்லை என்று தெரிகிறது. இந்த மெம்பர்கள் தாங்கள் கொடுக்கக்கூடிய துகைகளுக்கு மேல் அதிகமாக ஏராளமான துகைகளை யோஜனையில்லாமல் கடன் வாங்கி விட்டார்கள் என்றும், இதர ஜனங்களுடைய தேவையை அலக்ஷியம்செய்து மானேஜிங்கமிட்டி மெம்பர்களுக்கும், அவர்களுடைய உற

வினர்களுக்குமே அவைகளை பகிர்ந்து கொண்டிருக்கிறார்கள் என்றும் கேள்விப்படுகிறேன். பிறகு கடனைத் திரும்பிக் கொடுக்காதவர்கள் மானேஜிங்கமிட்டி மெம்பர்களாகவே யிருக்கிறார்கள். இதனால் நாம் அறிகிறது, மானேஜிங் மெம்பர்களைத் தேர்ந்தெடுப்பதில் நாம் துரதிர்ஷ்டர்கள் என்பதே. ஒரு சொஸைடியில் பிரசிடெண்டாயிருந்த ஒருவர் மோசம் செய்ததற்கும் பணத்தை அபகரித்ததற்கும் குற்றஞ்சாட்டப்பட்டும், இன்னொரு கேஸில் ஒரு பிரசிடெண்டு வழக்கமான களவாணி என்று குற்றஞ் சாட்டப்பட்டும், இருப்பது எனக்கு நேரில் தெரியும். நான்கு சொஸைடிகள் கொடுத்த கடன்களைத் திரும்பிக் கொடுக்காமையால் முறிவடையும்படி நேரிட்டது. நம்முடைய ஆபீஸ் உத்தியோகஸ்தரர்கள் மேற்படி விஷயமாய் புத்தி புகட்டப்புகுந்தது மிக துக்கக்ரமான கதையாயிருக்கும். சென்ற 7 வருஷங்களாக இந்த சொஸைடிகளின் சாதாரண நடவடிக்கை இவ்வளவில் இருந்ததினால் சொஸைடிகள் கிராமத்தார்களின் நம்பிக்கையை அடையப்பெறாமை அதிசயமல்ல. இதனால் இந்த சொஸைடிகளில் டிபாஸிடர்களின் தொகை மிகவுங் கொஞ்சம், சென்ற வருஷம் டிபாஸிட்டில் வந்த தொகை ரூ. 1,330. இந்தத் தொகையை ஏதாவது இரண்டு கிராமத்தார் ஒரு நிமிஷத்திற்குள் செல்லிகட்டவும் அடிதடிக்கும், கிரிமினல் கோர்ட்டில் கிராமக்கக்ஷிக்காக சிலவழிக்கவும், வசூலித்து விடுவார்கள். சென்ற வருஷம் மெம்பர்களின் தொகை 1,868 தான். கடன்களின் சங்கியையோ 2,459. இதினால் அநேக மெம்பர்கள் ஒரு கடனுக்குமேல் கடன் வாங்கி யிருக்கிறார்கள் என்று தெறிகிறது. சென்ற வருஷக்கடைசியில் வசூலிக்கப்படுவதற்காக இருந்த தொகை ரூ. 40,470; இதில் ரூ. 38,392 அதாவது 100-க்கு90-க்குமேல், காலம் கடந்து விட்ட கடன்கள். இந்த எல்லா சொஸைடிகளின் மொத்த பாக்கி, முதலில் ரூ 1,02,535,ம் வட்டியில் ரூ. 29,678ம், ஆகிறது. அதாவது, கடன்வாங்குவது மிக தாராளம், திருப்பிக் கொடுப்பது அருமையிலும் அருமை.

இம்மாதிரி சம்பவங்களினால் இவ்வகுப்பினருள் கோஆபரேடிவ் கிளர்ச்சி விருத்தியாவதைப்பற்றிய பொது ஜனங்களின் சந்தேகம் சரிதான் என்று தோன்றுகிறது. ஆனால் இம்மாதிரி அந்த ஜாதியாரையே மொத்தமாய் குற்றஞ் சாட்டுதல் ஞாயத்திற்கு ஒவ்வினதல்ல என்று என் மனதிற் படுகிறது. முதலாவது, இவ்வகுப்பினருள் பணக்காரர்கள் மிகக் குறைவாகத் தான் இருக்கிறார்கள். அவர்களெல்லாம் சிறியமிராசுதாரர்கள். பணலேவாதேவி விஷயங்களில் மிக்க நாணயக் குறைவு, ஆகையால் அவர்களுடைய சௌகரியத்தை உத்தேசித்துத் தான் இக்கிளர்ச்சி முக்கியமாய் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. தவிர அவர்கள் ஆச்சரியகரமான



ஒற்றுமையுள்ள கூட்டத்தார். அவர்களுடைய கிராம சமுதாய விஷயமாய் விசேஷ ஏற்பாடுகளில் பழகியிருக்கிறவர்கள். பெரிய குற்றச் செய்கைகளாகிய கொலை, மனைவியை விலக்குதல் முதலியவைகளிலிருந்து சிறு குற்றங்கள் வரையில் மத்திஸ்தர்கள் மூலமாய் ஒழியும் படியான கிராம பஞ்சாயத்துக்களின் நடவடிக்கைகளின் அநுபோகம் அவர்களுக்கு நன்றாய்த்தெரியும்.

மேலும் அவர்கள் ஒருவருக்கொருவர் ஆச்சரியகரமான நாணயம் பாராட்டுகிறவர்கள். ஒரு சமயத்தில் ஒரு கள்ளன் அவனுடைய கௌரவபுத்தியின் ஆணையில் நிறுத்தப்பட்டால் அவனை எவ்வளவு வேண்டுமானாலும் நம்பலாம். என்னுடைய அற்ப அனுபவத்தில் அவர்களுடன் நேரில் நான் பழகிய வரையில் இந்த ஜனங்களால் நடத்தப்பட்ட கோஆபரேடிவ் வேலையின் அற்புத மாதிரிகளைப் பார்த்திருக்கிறேன். உதாரணமாக, நான் ஜாமாபந்தி விஷயமாய் இந்த தாலூக்காவில் சுற்றுப் பிரயாணம் செய்துகொண்டிருந்த பொழுது எனக்குக் கிடைத்த உதவியே சாக்ஷி. இந்த பாகங்களில் மழையின் குறைவினால் இந்த வருஷம் அநேக குளங்களில் ஜலம் இல்லாமல் போயிற்று. அதனால் அநேக நிலங்கள் தரிசாய் விடும்படிக்கும் மாகூலைக் காயவிடும்படிக்கும் நேரிட்டு விட்டது.

ஒரு கிராமத்தில் எல்லாரும் சேர்ந்து எல்லாக் கிணறுகளிலும் இருந்த ஜலம் எல்லாவற்றையும் குளத்திற்கு இரைத்துவிட்டு பிறகு மிக பந்தோபஸ்தாக சாகுபடி நிலத்திற்கெல்லாம் எவ்வளவு சிக்கனமாய் உபயோகிக்கலாமோ அவ்வளவு சிக்கனமாய் உபயோகித்து அந்த ஆயக்கட்டு முழுதும் வெள்ளாமையை குறைவில்லாமல் உண்டாக்கினார்கள். அது மிக்க வியக்கத்தக்க கோபஆரேஷனே. பலசாலி என்றும் பலமற்றவன் என்றும் ஒரு விதமான புகாராவது முறுமுறுப்பாவது இல்லாமல் ஜலம் பங்கிடுதலில் மிகக் கண்டிப்பாயும், ஆனால் முற்றிலும் நடு நிலைமையான ஞாயத்தோடும் இருந்தது. இப்பேர்ப்பட்ட விஷயத்தை முடிக்கக்கூடிய ஒரு கூட்டத்தாருக்கு கோவாபரேஷனைப்பற்றி இன்னும் அதிகமாக என்ன கற்றுக்கொள்ளவேண்டும். அவர்களுடைய புத்திசாலிதனத்தைக் கிளப்பிவிட்டு புது மாதிரியான சீர்திருத்திய வழியில் திருப்பிவிடவேண்டியது தான். பிறகு அதன் பிரயோஜனத்தை அவர்களே சரிவர அடையமுயலுவார்கள் என்று நாம் நிச்சயமாய் நம்பலாம். சில கிராமங்களில் தீர்மானமாய் விளைவுகள் இல்லாமல் தட்டிப்போய்க்கொண்டே இருக்கிறது. என்றாலும் இச்சம்பவம் அவர்களை பண விஷயங்களில் சிக்கனமாய் இருக்கச்செய்ய உதவின கடன்களை கௌரவமாய்திருப்பிக்கொடுத்து அதனால் க்ஷாம வருஷத்தில் புதுக்கடன் வாங்க அருகர்களாய்ச் செய்துகொள்ளவும் புத்தி புகட்டமுடியவில்லை. இந்த விஷயங்களைப்பற்றி அவர்

கள் நினைக்காதது தான் காரணம். சென்ற 7 வருஷங்களாக இந்த சொஸைடிகளின் பரிதபிக்கக்கூடிய நிலைமைக்குக் காரணம் இவ்வித அலக்ஷிய புத்தியே. இந்த ஜனங்களின் க்ஷேமகரமான விஷயங்களைக் குறித்து தூண்டுவதற்காக நாம் ஏதாவது சில வழிகள் தேடவேண்டியிருக்கிறது. ஒருக்கால் இது கஷ்டமான வேலையாக இருக்கலாம். ஆனால் முந்தி இனிமையான சரித்திரங்களையும் பிற்காலத்தில் கௌரவமும் உபயோகமுமுள்ள நாட்களையும் உடைத்தானவர்களாய்க் கொண்டிருக்கும் ஒரு கூட்டத்தாரின் விமரிசையும் க்ஷேமமுமே பிரதிப்பிரயோஜன்மாயிருக்கக்கூடிய வேலையைச் செய்ய விரும்புகிறவர்களுக்கு ஒன்றும் எளிதல்ல என்பது வாஸ்தவம் தான். கூட்டத்தாரின் க்ஷேமத்தை விருத்தி செய்வதற்காக ராஜாங்கத்தார் அனேக மார்க்கத்தில் பிரயத்தனப்படுகிறார்கள். நிலங்களுக்கு விசேஷ பாத்தியதை கொடுக்கிறார்கள். ஏதாவது தொழிலில் ஸ்திரமாய் அமருவதற்கு உதவி செய்கிறார்கள். பையன்களுக்கு உயர்தரப்படிப்புக் கொடுப்பதற்கு வேண்டிய சௌகரியங்களும் செய்கிறார்கள். இம்மாதிரியான சௌகரியம் எவ்வளவு செய்த போதிலும் கூட்டத்தாரில் பெரியோர்களும் புத்திசாலிகளும் தங்களுடைய பொறுப்பை கவனித்து எல்லாருக்கும் சிக்கனம், கௌரவம், உறுதியான நற்குணம், இவைகளைப் புகட்டாவிட்டால் பிரயோஜனப்பட மாட்டாது. இக்குணங்களைப்பரவ வைக்கவேண்டும் என்பது தான் கோஆபரேடிவ் சொஸைடிகளின் நோக்கம். இக்குணங்கள் ஜனங்களுள் பரவி விருத்தியடைவதைப் பார்க்க விரும்பும் நீங்கள் எல்லாரும் இக்கிளர்ச்சியைக் கைக்கொண்டு நன்றாய்ப்பரவவைத்து விருத்தி செய்வதே உங்களுக்கு உரித்தான கடமை.

இம்மாதிரி உபந்நியாசத்தை முடித்த பிறகு கள்ளர்கள் தங்கள் சொஸைடிகளுக்கு ஒரு "சூபர்வைசிங் யூனியன்" ஏற்படுத்தவேண்டிய அவசியத்தையும் கள்ளநாட்டு சொஸைடிகளின் குறைகளையும் அதை நிவர்த்தி செய்யும் வழியையும் பற்றி சில வியாஸங்கள் வாசித்தார்கள். கான்பரன்ஸின் தீர்மானங்களாவன:—30 கள்ளர் சொஸைடிகளையும் நன்றாய்க் கண்காணிப்பதற்காக ஒரு சூபர்வைஸின் யூனியன் ஏற்படுத்தப்படவேண்டும். சொஸைடிகளின் குறைகளை நிவர்த்தி செய்ய பைலாச் சட்டங்களை செவ்வையாய் அனுசரிக்கவேண்டும். விதைகளும் உழவுக்கு ஆகவேண்டிய சாமான்களும் மெம்பர்களின் உபயோகத்திற்காக வாங்க பிரசிடெண்டுக்கு அதிகாரம் கொடுக்கவேண்டும். அய்யம்பட்டி மொக்கைய தேவரும், வலயப்பட்டி கள்ளத்தேவரும், மூடப்பட்ட சொஸைடிகளை திறக்க அனுமதி கொடுக்கவேண்டும் என்றும் மெம்பர்களிடமிருந்து வசூலாகாமலிருக்கும் பாக்கித்துகைகளில் பாதித் துகையை கோஆபரேடிவ் வருஷ முடிவுக்குள் தாங்கள் கொடுத்து விடுவதாகவும் வாக்களித்தார்கள். கோஆபரேடிவ் சொஸைடிகளின் ரெஜிஸ்ட்ராரான திவான் பகதூர் எல். டி., சுவாமிக்கண்ணுப் பிள்ளையவர்கள் பல சொஸைடி மெம்பர்களையும் விளித்து சொஸைடிகளுக்குச் சேரவேண்டிய பாக்கிகளை மெம்பர்கள் நாணயமாய் செலுத்திவிட வேண்டிய அவசியத்தையும் சிக்கனம், யோக்கியம், இந்த விஷயங்களை விருத்தி செய்ய வேண்டியதைப்பற்றியும் வற்புறுத்தினர்.

---

# மதராஸ் புல்லெடீன் ஆப் கோவாபரேஷன்

என்னும்

# சென்னைக் கூட்டுத்தொழில் வர்த்தமானி

சம்புடம் XI] 1917௵ ஜூலைமீ [இலக்கம் 1

## பத்திராதிபரின் குறிப்புகள்.

நமது "சென்னை கூட்டுத் தொழில் வர்த்தமானி" இச்சஞ்சிகை முதல் மாதாந்திரப் பத்திரிகையான விஷயம் ஐக்கிய முயற்சிக்காரார்களுக்கு மிகவும் திருப்திகரமாயிருக்குமென நினைக்கப்படுகிறது. பிரைமரிச் சங்கங்களும், யூனியன்களும், ஜில்லா பாங்கிகளும், தாங்கள் அப்பொழுதுக்கப்பொழுது கூடும் கான்பரென்ஸின் நடவடிக்கைகளையும், தங்கள் ரிபோர்ட்டுகளையும், அனுப்பினால், பத்திராதிபக் கம்மிட்டியார் சம்மதத்திற்குட்பட்டு பிரசுரிக்கப்படும். இவ்விராஜதானியிலுள்ள ஐக்கிய முயற்சிக்காரர்களனைவரும், இம்மாதாந்திரப் பத்திரகையின் பிரயோஜனங்களை நன்கறிந்து போஷித்து வருவார்களென யெதிர்பார்க்கப்படுகிறது.

### சென்னைக்கு புது ரிஜிஸ்ட்ரார்.

சென்ற ஜூன்மீ 18உ திங்கட்கிழமை யன்றைக்கு சென்னை இராஜதானிக்கு ரிஜிஸ்ட்ராக மிஸ்டர் F. R. ஹெமிங்வே துரையவர்கள் வேலையை ஒப்புக்கொள்ள, திவான்பஹதூர் L. D. சுவாமி கண்ணு பிள்ளையவர்கள் ஸ்பெஷல் டியூடிகலெக்டராக நியமிக்கப்பட்டுள்ளார். ஜனங்களைப்பற்றிய ஞானமும், ஜனங்களுடன் பரோபகார சிந்தனையும் கூட்டுறவு முயற்சியில் நம்பிக்கையும் ரிஜிஸ்ட்ரார் ஸ்தானத்துக்கு வேண்டிய அம்சங்களாயின் மிஸ்டர் ஹெமிங்வே துரையிடம் இக்குணங்கள் பூர்ணமாய் அமைந்துளவென்று மெட்ராஸ் மெயில் பத்திரிகை கூறுகிறது. சகல விஷயத்திலும் கூட்டுறவு முயற்சியான துபுதிய ரிஜிஸ்ட்ராரின் கீழ் தழைக்குமென்று நம்புவதல்லாமல் புது ரிஜிஸ்ட்ராரவர்களுக்கு சகல பாக்கியங்களும் அருள கடவுளைப்பிரார்த்திக்கிறோம்.

### நிலக்கடலை வியாபாரமும் கிராமவாசிகளும்.

அநேக கிராமங்களில் நிலக்கடலை வியாபாரிகள் ஏழைகளை செய்யும் மோசம் இவ்வளவென்று சொல்லிமுடியாது.

(1) தப்பான நிறைக்கல்களினால் இடைநிறுத்தி ஏழைகளை மோசஞ் செய்கிறார்கள்.

(2) பயிர் கட்டியிருக்கும் சாக்கின் நிறைக்காகவென்று நிறைக்கல் களுடன் கடைக்காரன் ஒரு சாக்கைப்போட்டு நிறுத்து வாங்குவது வழக்கம். கடைக்காரன் போடும்சாக்கு மிகவும் பெரிதான "வங்காள" சாக்கு. தவிரவும் சாக்கின் உட்புறம் களிமண்பூசி காயவைத்த சாக்கா யிருக்கும்.

(3) நிறுக்க வைத்திருக்கும் இடைக் குண்டுகள் "பிரெஞ்சு" குண்டு கள். அக்குண்டுகளில் அடியிற் பள்ளமிருக்கிறது. அப்பள்ளத்தை யெல்லாம் ஈயத்தால் நிறப்பியிருக்கிறார்கள்.

இப்படி மோசஞ்செய்து நிறுத்து வாங்குவதால் ஒரு பாரத்துக்கு ஒன்றே கால் பாரமாக கிராமவாசிகள் மோசஞ்செய்யப்படுகிறார்கள்.

நிலக்கடலை வியாபாரத்திற்காக கூட்டுறவு முறையில் கிட ங்குகள் வைத்து வியாபாரஞ் செய்தால் கூட்டுறவு முயற்சிக்காரர் களுக்கு இலாபம்வருவது மட்டுமே யல்லாது ஏழைகளுக்கும் இலாபம் அதிகம் வரும்.

### பிரைமெரிச் சங்கங்களும், மத்ராஸ் சென்டரல் பாங்கியும்.

மதராஸ் சென்ட்ரல் அர்பன் பாங்கில் சங்கங்களை மெம்பர்களாக சேர்த்துக் கொள்ள வில்லையென்று கோவாப்ரேடர்கள் செய்த பிரேரணை களும், புகார்களும் எல்லோரும் அறிந்த விஷயம். பிரைமெரி சங்கங் கள் பங்கெடுத்துக் கொள்ளலா மென்று மதராஸ் சென்ட்ரல் அர்பன் பாங்கார் தெரிவித்து மாதங்கள் மூன்றுக்கு மேலாகியும் நான்கு அல்லது ஐந்து சங்கங்களுக்குமேல் பங்கெடுத்துள்ளதாகத் தெரியவில்லை. சங் கங்கள் இவ்விஷயத்தில் ஊக்கமும், சிரத்தையும் இனிமேல் அதிகமாய்க் காட்டுமென நம்பப்படுகிறது.

### மகமதியர்களும் கூட்டுறவும்,

ஐக்கிய சங்கங்களில் மகம்மதிய மெம்பர்கள் வருஷா வருஷம் அதி கரித்துக் கொண்டே வருகிறார்கள். இவ்விஷயத்தை சென்னை கவர்ன் மெண்டார் அவர்களும் நன்கறிவார்கள். அப்படியிருந்தும் மகம்மதியர் களுக்கென்று பிரத்தியேக சங்கங்கள் ஒன்றாவது யேற்படாததினால், மகம்மதியர்களும்,மற்ற ஜாதிகளும் ஒற்றுழைக்கிறார்களென்பதற்குச் சந்தேகமில்லை.



### யுத்த நிதியும் கோவாபரேடிவ் சங்கங்களும்.

சங்கங்கள் தங்களுடைய க்ஷேமநிதித் தொகைகளை போஸ்டாபீஸ் யுத்த நிதி சர்ட்டிபிக்கேட்டுகளில் கட்டும்படியாக ரிஜிஸ்ட்ராரவர்கள் அறிக்கை செய்திருக்கிறார்கள். அக்டோபர்மீ 15-ம் தேதி வரையில் தான் போஸ்டாபீசுகளில் பணம் வாங்கப்படுமாதலாலும், ரிஜிஸ்ட்ரார் ஆடிட் உத்திரவு கிடைத்த பிறகு போதுமான சாவகாசம் இருக்கா தென்று தோன்றுவதாலும் இன்னும் ஒன்று அல்லது இரண்டு மாதங் களுக்கு இக்கெடுவை நீடித்துக் கொடுக்கும்படியாய் கவர்ன்மெண்டாரை கோவாபரேடர்கள் கேட்டுக் கொண்டால் நலமெனத் தோன்றுகிறது.

### மைசூரில் ஐக்கிய முயற்சி.

சில அம்சங்களில் மைசூர் ராஜாங்கமானது நம்முடைய ராஜதானி யைக் காட்டிலும் முன்னேற்ற மடைந்திருக்கிறது. மைசூரிலுள்ள ஐக் கிய சங்கங்களின் இன்ஸ்பெக்டர் 27 பெயர்களில் 13 பெயர்கள் B. A. பரிக்ஷை பட்டதாரிகள். இதினால் அங்கேயுள்ள இன்ஸ்பெக்டர்கள் விசேஷப்படிப் பாளிகளெனத் தெரியவருகிறது. 1916௵ ஜூன் மாதத்துடன் முடியும் வருஷத்தில் வேலைசெய்துள்ள 800 சங்கங்களில் சுமார் 200 சங்கங்கள்தான் ஸென்ட்ரல் பாங்கியிலிருந்து கடன்வாங்கி யிருக்கின்றன. பாக்கி சங்கங்கள் தங்கள் ஸ்தலடிபாஸிட்டுகளைக் கொண்டு நிர்வகித்திருக்கின்றன. ஆனால் நம்முடைய சங்கங்களில் ஒன்றா வது ஸென்ட்ரல் பாங்கியின் உதவியில்லா மலிருந்ததில்லை. உண்மையில் கவனிக்குமிடத்து ஸென்ட்ரல் பாங்கியின் பணமுதவியை யெதிர்பார்த்தே அநேக சங்கங்கள் ஏற்படுகின்றன. மொத்தம் சென்னையிலுள்ள 180 சங் கங்களில் விவசாயி களல்லாதவர்களின் சங்கங்கள் 157 தானிருக்கின்றன, ஆனால் மைசூரிலோ மொத்தம் 800 சங்கங்களில், இவ்விதச் சங்கங்கள் 134 நன்றாய் வேலைசெய்துவருகின்றன.

---

## கிராம நாணயச் சங்கமும் அவற்றை கவனிக்கவேண்டிய விதிகளும்*

[கம்புளியம்பட்டி மிஸ்டர் K. S. சின்ன ஸ்ரீரங்கக்கவுண்டர் எழுதியது.]

ஐக்கிய நாணயச் சங்கங்கள் புதிதாய் ஏற்படுத்தப் படுகிற இடங்களி லும் ஏற்பட்ட இடங்களிலும் மெம்பராய்ச் சேர்ந்தவர்களுக்கும் சேர விரும்புகிறவர்களுக்கும் முக்கியமாய் தெரிவிக்க வேண்டிய விஷயங்கள் சில இருக்கின்றன. அவைகளை நான் இப்போது இச்சபையில் தெரி விக்கவேண்டிய கடமைப்பட்டிருக்கிறேன்.

* விஜயமங்கலம் கோவாபரேடிவ்யூனியன் முதல் கான்பரன்ஸில் வாசிக்கப்பட்டது.

(1) ஐக்கிய நாணயச் சங்கங்களின் முக்கியமான கருத்து என்னவென்றால் அதில் சம்பந்தப்பட்ட மெம்பர்களுக்கு தேவையான காலத்தில் அவசியமான காரியத்துக்குப் போதுமான திரவியம் ஒரே நிதானமான வட்டிக்கு கிடைக்கும்படி செய்தலும், மெம்பர்கள் தங்கள் பணத்தை மீத்து முதலாகச் சேர்க்கும்படி சாதகம் செய்தலுந்தான். இந்த இரண்டு சௌகரியங்களையும் எப்படி சங்கங்களின் மூலமாய் அடையலாம் என்பதைப்பற்றி எனக்குத் தெரிந்தவரை சற்று விவரமாய்ச் சொல்லுகிறேன்.

(2) மேற்கூறிய இருவிஷயங்களை (அதாவது தேவையான போது ஒரே நிதானமான வட்டிக்கு கடன் வாங்குதல், பணத்தைச் சிறுகச் சிறுகச்சேர்த்து முதலாக்குதல்) ஆகிய இவ்விரண்டு விஷயங்களையும் சங்கங்களன்னியில் அடைந்து கொள்ளக்கூடாதா என்று சபையார் ஆக்ஷேபிக்கக்கூடும்; அதற்கு தற்காலம் நான் பதில் கூற கடமைப்பட்டிருக்கிறேன். அதாவது தற்காலத்தில் சாமான்யமாய் என்ன நடந்து வருகிறதென்று பார்ப்போம். மேற் சொல்லிய சௌகரியங்கள் இப்போதிருக்கப்பட்ட நிலைமையில் கிடைக்கக்கூடியதாயிருந்தால் சங்கங்களை ஏற்படுத்துவனேனென்று சிலற் கூறுவார்கள் அதற்காக கிராமாந்தரங்களில் தற்கால நிலைமையை நன்றாய் அறிந்து கொள்வது நல்லது.

(3) கிராமங்களில் எவருக்காவது பணம் தேவையாயிருந்தால் லேவாதேவி செய்கிறவரிடம் வட்டிக்கு வாங்கி: சிலவு நடத்துகிறது வழக்கமாயிருக்கிறது. ஆனால் வட்டி ஒரே நிதானமாயிருக்கிறதில்லை; கடன் வாங்குகிறவருடைய அவசரத்துக்குத் தக்கபடி வட்டியை ஜாஸ்தி செய்து விடுகிறார்கள். அப்படி அவர்கள் ஜாஸ்தி செய்வது ஸகஜந்தான். ஏனென்றால் அது அவர்களுடைய தொழிலாயிருப்பதால் அதில் எவ்வளவு ஜாஸ்தி லாபம் கிடைக்கக்கூடியதோ அதையடைய மார்க்கந்தேடுவது அந்தத் தொழிலுக்கு ஏற்பட்டது. காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்ளவேண்டும் என்று சொல்வதுபோல் இந்த அவசரக்காலந்தப்பினால் வேறு எக்காலத்தில் ஜாஸ்தி வட்டி கிடைக்கக்கூடிய தென்பது நன்றாய் தெரிந்திருக்கிறது. பணம் வேண்டிய வரும் வேறு கெதியில்லாமல் வாங்கியே தீருகிறார். வாங்கின பிறகு அவர் என்ன அடைகிறார் என்பதைக் கவனிப்போம். அப்படி வாங்கினவர் வட்டிக்காவது அசலுக்காவது தூண்டப்படுகிறதேயில்லை. தானாகவே கடனைத் திருப்பிக்கொடுத்தாலும் லேவாதேவிக்காரர்கள் எளிதில் வாங்கிக்கொள்வதில்லை. ஏனெனில் ஜாஸ்தி வட்டி கிடைக்க்க்கூடிய காலத்தில் கடனைக்கொடுத்துவிட்டபடியால் அந்த வட்டி தங்களுக்கு எப்போதும் கிடைக்கவேண்டுமென்று விரும்புகிறார்கள். கடன் வாங்கினவரும் அது சௌக்கியந்தான் என்று தன்னிடத்தில், மீதியிருக்கிற பணத்தையும் சிலவழித்து விடுகிறார். இதனால் தான் வாங்கின கடன் ஒன்றுக்கு 2 ஆய் வொஞ்சாகாலத்தில் தன் சொத்து பூராவையும் விற்றுக்கொடுத்தாலும் தீர்ந்துபோகக்கூடியதாயில்லாமல் அநேக குடும்பங்கள் தரித்திர திசையடைந்து கஷ்டப்படுவதைப்பார்த்திருக்கிறோம். பூராத்தொகையைச் செலுத்தும் போதே இவ்வளவு கஷ்டமாயிருக்கும்போது சில்லரை சில்லரையாக கடனை தீர்ப்பதானால் லேவாதேவிக்காரர்கள் வாங்கிக்கொள்ள மாட்டார்களென்பது திண்ணம். லேவாதேவி இங்ஙனமிருக்க சங்கத்தைக் கவனிப்போம்.



(4) சங்கத்தில் அப்படியில்லை; எக்காலத்திலும் ஒரே நிதானமான வட்டிக்கு பணம் வாங்கலாம். நம்முடைய அவசரத்துக்கு தக்கபடி வட்டியை ஜாஸ்தி படுத்துவதும் குறைப்பதும் கிடையாது. சிறுகச் சிறுகக் கொடுத்தாலும் பெற்றுக்கொள்ளலாமென்ற விதிகள் ஏற்பட்டிருக்கின்றன. வாய்தாப்படி கொடுக்கத்தவறினாலும் கொடுக்கும்படி கட்டாயப்படுத்தி நாளாவற்றில் கடன் முழுவதும் தீர்ந்து விடுகிறது. இதில் எளியகுடும்பங்கள் கெட்டுப்போகாமல் விருத்தியையடைய மார்க்கம் ஏற்படுகிறது.

(5) சங்கமென்றால் அதில் சேர்ந்தமெம்பர்களுக்கு பொதுவானது. சங்கத்தில் கடன் கேட்பதினால் பிறரிடம் போய் அவர் சமயம்பார்த்து அவர்கள் தயவைஎதிர்பார்த்து அவர்கைமேலாகவும் கடன்வாங்கிறவர் கை கீழாகவும் இருந்துவாங்க வேண்டியதாயிராமல் சங்கம் பொதுவானதாலும் தனக்கும் அதில் பாத்தியமிருப்பதாலும் பிறர்என்ற பாவனையேற்படுகிறதில்லை.

(6) லேவாதேவிக் காரர்களிடம் கடன்வாங்குவதினால் கடனுக்கும் வட்டிக்கும் போதுமான ஐவேஜி இருக்கிதாவென்று பார்கிறாரேயொழிய அது என்னவிஷயத்திற்கு உபயோகப் படுத்துகிறார் களென்று பார்ப்பதேயில்லை. சங்கத்தில் அப்படியில்லை. இன்ன விஷயத்திற்கு கடன் வேண்டுமென்று சொல்லவேண்டும். அதே விஷயத்திற்கு உபயோகப்படுத்தாதபக்ஷத்தில் கடனைவசூலித்து விடுகிறார்களென்ற பயத்தினால் பொய்யான முகாந்தரங்கள் சொல்ல முடியாது. அதனால் யாரும் அனாவசியமாக வீண் செலவுக்கு கடன் வாங்கமுடியாத விஷயம் மிக்க நல்லது.

(7) இத்தனைசௌகரியங்கள் ஏற்படுவதுடன் சர்க்காரிலும் சில சகாயங்கள் செய்திருக்கிறார்கள். அது யாதெனில் சங்கத்தில் வாங்கும் கடன்களுக்கு முத்திரைக்கடுதாசி தேவையில்லை யென்றும் ரிஜிஸ்தர் கட்டணமில்லை யென்றும் உத்திரவு செய்திருக்கிறார்கள்.

இந்தமட்டில் கடன் வாங்குவதில் சங்கங்களில் ஏற்படுகிற சௌகரியங்களைச் சொன்னேன். லேவாதேவிக்கும் சங்கத்துக்குமுள்ள

வித்தியாசம் இச்சபையார் யாவருக்கும் ஒருவாறு விளங்கியிருக்குமென்று நம்புகிறேன்.

ஆதலால் இது போலவே யினியும் கவனமாய்க் கேட்டு அதின்படி நடக்க அநேகதரம் வந்தனம் புரிந்து மிகவும் பணிந்து கேட்டுக் கொள்ளுகிறேன். இன்னும் அநேகம் சங்கதிகள் இருந்தாலும் இப்போது நாம் கூடியிருக்கும் காலம் போதாதாகையால் எனக்குத் தெரிந்தவரையில் சுருக்கமாச் சொல்லி விட்டேன். இனிப்பணத்தை மீதி வைத்து பொருளாக்குவதைப் பற்றி சிரத்தையுடன் கவனிப்போம். பணங்களை மீத்துவதிலும் சங்கங்களில் ஏற்படுகிறசௌகரியம் இதர இடங்களில் கிடைக்கமாட்டாது ஒருவன் பணத்தை சேர்த்து வைக்க வேண்டுமானால் அதை பிறருக்கு வட்டிக்குக் கொடுத்து விருத்தி செய்யவேண்டும் அல்லது நிலம், ஆடுமாடுகள் வாங்கி விர்த்திசெய்யவேண்டும் அல்லது சீட்டுப் போட்டுக்கொண்டு முதலாகச்சேர்க்கவேண்டும். இந்த ஒவ்வொருமார்க்கமும் சிலாக்கியமானது தான். ஆனால் ஜாஸ்தி பணம் இருக்கிறதாயிருந்தால் தான் பிரயோஜனம். இல்லாவிட்டால் பிரயோஜனமில்லை; ஒருவன் கூலி வேலை செய்து பணம் சம்பாதிக்கிறதாயிருந்தால் அவன் ஒவ்வொரு தடவையும் ¼ ரூபா, ½ ரூபாய் முதலிய சிறு தொகைகளாய்த் தான் அவனுக்கு சேர வேண்டியிருக்கிறது. இதை யாரிடத்தில் கொடுத்து வைத்திருக்கிறது. இதைக்கொண்டு என்னகாரியம் நடத்தலாம்; ஒன்றும் செய்யமுடியாமல் பணம் சிலவழிந்து விடுகிறது. இதனால் பணம் மீதியாகிறதில்லை; சங்கத்தில் எவ்வளவு சிறு தொகைகளாயிருந்தாலும் வாங்கிக் கொள்வார்கள். தபாலாபீஸ் ஸேவிங்ஸ் பாங்கி மாதிரி சங்கத்திலும் ஸேவிங்ஸ்டிபாசிட்டுகள் ஏற்படுத்திக்கொள்ளலாம். அதில் சிறியதொகையை அப்போதைக்கப்போது சேர்த்து ஒரு முதலாக்கலாம்; தொகை சேர்ந்தவுடன் நிலம் வாங்கவோ மாடுவாங்கவோ அல்லது வேறு எவ்விதமான காரியங்களிலும் உபயோகப்படுத்தி பணத்தை விர்த்தி செய்ய இடமுண்டு. சில சங்கங்களில் சீட்டுப்பண்டுகளேற்படுத்தி நடத்தி வருகிறார்கள். அதனால் மெம்பர்கள் பணம் மீத்துவைக்க ரொம்பசாதகம் ஏற்படுகிறது. இன்னும் அநேக விதமாக பணத்தை மீத்துவைக்க விதிகள் ஏற்படுத்திக்கொள்வதில் மெம்பர்கள் அதிகபிரயோஜனத்தை அடையக்கூடியதாயிருக்கிறது.

### சங்கங்கள் ஏற்படுத்திக்கோள்வதில் முக்கியமாய்க் கவனிக்க வேண்டிய சில விஷயங்கள்.

முதலாவது :—சங்கத்தில் சேரவிரும்புகிறவர்கள் ஒவ்வொருவரும் ஷை சங்கத்தில் ஏற்படும் மொத்த பொறுப்புக்கு தாங்கள் உத்திர வாதம் செய்வோம் என்று ஒப்புக்கொள்ளவேண்டும். இப்படிச்செய்வது நமது



சபையாருக்கு முதலில் துன்பமென்றுபடுகிறது. ஆனால் சற்று யோஜித்துப்பார்த்தால் அதில் பாதகமொன்று மில்லையென்று தெரிந்துகொள்ளலாம்; அப்படி ஒவ்வொருவரும் பொறுப்புக்கு ஏற்றுக்கொள்ளாதபக்ஷத்தில் சங்கத்துக்கு பணம் என்னமாய் கிடைக்கும். பிறர் சங்கத்தை நம்பி என்னமாய்க் கடன் கொடுப்பார்கள். ஒவ்வொருவ்ரும் முழுப்பொறுப்புக்கும் ஜவாப்தாரியில்லாமல் சில குறித்த தொகைக்கு மாத்திரம் ஜவாப்தாரியாயிருப்பார்களென்று வைத்துக்கொள்ளுவோம். இவ்விரண்டுக்கும் வித்தியாசம் என்னவென்றால் பூறாப்பொருளுக்கும் உத்திரவாதமென்றிருந்தால் ஒவ்வொரு மெம்பரும் சங்கத்தின் நடவடிக்கைகளில் ஜாஸ்தி கவனம் வைத்து நடத்துகிறார்கள். ஏனென்றால் அப்படிக் கவனிக்காமல் ஏதாவது நஷ்டம் ஏற்பட்டால் முழுநஷ்டத்துக்கும் தாங்களே ஒருக்கால் கொடுக்கவேண்டியிருக்குமென்று எண்ணக் கூடியதாயிருக்கிறது. அப்படியன்னியில் என்ன நஷ்டம் ஏற்பட்டாலும் குறித்த தொகைக்கு மேல்பாத்தியப் படவேண்டிய தில்லை யென்றால் அவ்வளவு சிரத்தை யுண்டாகிறதில்லை. என்னமோ நமக்கென்ன ஏதாவது நஷ்ட மேற்பட்டாலும் குறித்த தொகைக்குமேல் நாம் பாத்தியப்படவேண்டியதில்லை என்ற எண்ணத்தினால் சங்கத்தின் காரியங்களை ஜாஸ்தியாய் கவனிக்கிறதில்லை.

இரண்டாவது:—சங்கத்தின் காரியங்களை நிர்வாகம் செய்யத் தகுந்த பஞ்சாயத்து மெம்பர்களைத் தெரிந்தெடுக்கவேண்டும். பஞ்சாயத்தார் சரியானபடி ஏற்படா விட்டால் சங்கத்தின் காரியம் குறைவு படுகிறது. அநேக சங்கங்களில் பஞ்சாயத்தார்கள் தங்கள் சுயலாபத்தை உத்தேசித்தே சங்கத்தில் சேருகிறார்கள். சேர்ந்து கொண்டவுடன் தங்களைச் சேர்ந்தவர்களை மாத்திரம் மெம்பர்களாய்ச் சேர்த்துக்கொண்டு அவர்களுக்கே பெரும்பான்மையாய்க் கடன்கொடுத்து வருகிறார்கள் சில சங்கங்களில் பஞ்சாயத்தார்கள் கடன் தொகைக்கு கமிஷன் வசூலித்து லாபமடையலாமென்று எண்ணுகிறார்கள். இன்னும் சில சங்கங்களில் பஞ்சாயத்தார்கள் தங்கள் வீட்டிலுள்ள ஒவ்வொருவரையும் மெம்பர்களாகச் சேர்த்து அநேக கடன்களை தாங்களே சங்கத்திலிருக்கும் ஜாஸ்தி பணத்தை உபயோகப் படுத்திக்கொண்டு வருகிறார்கள். சில சங்கங்களில் பஞ்சாயத்தார்கள் தங்களுக்கு என்ன பிரயோஜன மிருக்கிறது, தாங்கள் என்னத்திற்கு சும்மா உழைக்கவேண்டும் என்று நினைத்துக்கொண்டு ஏதாவது பிரதி பிரயோஜனம் வேண்டுமென்று அபேக்ஷிக்கிறார்கள்.

மேற் சொல்லிய மாதிரியுள்ள பஞ்சாயத்து மெம்பர்களால் சங்கத்துக்கு சாதகம் ஏற்படக் கூடிய்தாயில்லை; பஞ்சாயத்தார்களைத் தெரிந்தெடுக்க விரும்புகிறவர்கள் பொதுப்பிரயோஜனத்துக்காக உழைக்க அபேக்ஷையுள்ளவர்களாயும் சுயலாபத்தை மாத்திரம் பெரிதாக எண்ணு

மல் பிறர் லாபத்தை கருதுபவராயுமிருக்கப்பட்டவர்களை தேடி நியமிக்க வேண்டும். இப்பேர்க்கொத்த மனிதர்கள் அவசியம் ஒவ்வொரு கிராமத்திலும் இருப்பார்கள். ஆனால் அவர்களைத் தெரிந்தெடுப்பது கொஞ்சம் பிரயாசந்தான். பொதுப் பிரயோஜனத்துக்கு உழைக்க வேண்டுமென்பவர் அநேகமாய் முன்னுக்கு வருவதில்லை. ஏனெனில் ஜாஸ்தியாக தங்கள் பிரஸ்தாபங்களை வெளிப்படையாகப் பிரசுரப்படுத்துவதில்லை. இவர்களை மெம்பர்கள் முக்கியமாய்க் கவனிக்கவேண்டிய விஷயம்.

சங்கத்தின் மெம்பர்கள் தங்களுக்கு பாத்தியமான சொத்துக்களையும் தாங்கள் உத்திரவாதமாயிருக்கிற கடன்களையும் தெரியப்படுத்தி ஆஸ்திபொறுப்பு ஸ்டேட்மெண்டு தயார் செய்து சங்க ஆபீசில் வைத்து வைக்கவேண்டும்.

சங்கம் காரியங்களில் எல்லா மெம்பர்களும் அதிக ஊக்கமும் கவனமும் வைக்கவேண்டும்; எப்பொழுது கூட்டம் கூடினாலும் ஒவ்வொருவரும் தவராமல் ஷை கூட்டத்திற்கு வந்திருந்து சங்கம் காரியங்களைக் கவனிக்க வேண்டும்.

இப்படியெல்லாம் நடத்தும்பக்ஷத்தில் ஐக்கிய நாணயச் சங்கம் மிகவும் விருத்தியடைந்து திரவிய சகாய மட்டிலு மல்லாமல் எல்லா சௌகரியங்களையும் எளிதில் அடைந்துகொள்ள மார்க்கம் ஏற்படுகிறது. அதைப்பற்றி விவரமாகத் தெரிவிக்கலாம். இப்போது கூடியிருக்கும் கான்பரன்ஸின் காலம் போதாதாகையால் எனக்குத் தெரிந்த வரையில் சுருக்கமாகச் சொல்லிவிட்டேன். சங்கதி சுருக்கமாக இருந்தாலும் இச்சபையார் யாவரும் அதை விஸ்தாரமாக விரித்து அதிலுள்ள கெடுதல்களைவிட்டுவிட்டு நல்லவைகளை யெடுத்துக் கொண்டு அவைகளின்படி தவராமல் செய்யக் கடமைப்பட்டவரேனும் இச்சபை கலையுமுன் இதை மறந்து விடாமல் எக்காலமும் இதன்படி நடப்பார்களானால்.

---



# ஐரோப்பிய யுத்தமும் ஐக்கிய சங்கங்களின் உதவியும்.

[வடமலைபுரம் ம-ா-ா-ஸ்ரீ, R. ஆனந்த ராவ் அவர்கள் எழுதியது].

தற்சமயம் ஐரோப்பாவில் நடந்துவரும் யுத்தமானது உலக முழுவதும் திடுக்கிடச் செய்துவருகின்றது. சுயேச்சையை நிலைநிறுத்தவும், அராஜகதன்மையும் கொடுமைச் செயலையும் கைக்கொண்ட ஜெர்மனியின் கெர்வத்தை அழிக்கவும், உலக சமாதானத்தைக் கருதியும், இந்த யுத்தத்தில் நம் பிரிட்டிஷார் தலையிட்டு இருக்கிறார்கள் என்பது முன்னமே யாவருக்கும் தெரிந்தவிஷயம். தர்மம்குன்றி அதர்மம் மேலிட்டு சாதுக்களுக்கு கஷ்டம் வரும்பொழுது சாக்ஷாத் பகவான் பூலோகத்தில் அவதரித்து துஷ்டநிக்ரஹ சிஷ்டபரிபாலனம் செய்தும் பூபாரத்தை குறைப்பதும் வழக்கமென்று பாரதம், இராமாயணம், பாகவதம், முதலிய புண்ணிய புராணங்களினால் நாம் தெரிந்து கொண்டிருக்கிறோம். தற்சமயம் ஜெர்மனியின் கொடுமையை அடக்கவும், பெல்ஜியம், ஸெர்வா, முதலிய சிறு நேசராஜாங்கங்கள் பரிபாலம் செய்யவும், விஷ்ணுவே ஜார்ஜ் சக்கிரவர்த்தியாக அவதரித்து இந்த யுத்தத்தை நடத்துகிறார். இதில்இராஜபக்தியே ஆபரணமாகக் கொண்ட நம் இந்தியர்கள் செய்துவரும் உதவியை இங்கிலாந்தில் ஆங்கிலேயர்கள் மெச்சி வருகிறார்கள். கூட்டுறவின் கோட்பாட்டின்படி செய்துகொண்ட உடன்படிக்கையின் ஷரத்தை மீறி ஜெர்மானியர் பெல்ஜியத்தில் பிரவேசித்ததின் காரணத்தால் நமது பிரிட்டிஷார் யுத்தத்தில் தலையிட்டு வல்லரசுகள் மறுபடியும் கூட்டுறவை நிலைநிருத்த இந்த யுத்தத்தை நடத்திவருகிறார்கள். கூட்டுறவின் ஸ்தாபகத்தை நிலைநிருத்த யுத்தம் ஏற்பட்டிருப்பதில் இந்திய கூட்டுறவு சங்கங்கள் விசேஷ உதவிசெய்ய கடமைப்பட்டிருக்கின்றன. யுத்தம் ஆரம்பமானதும் நம்மாகாணத்தில் அநேக ஐக்கியச் சங்கங்கள் தங்கள் இராஜபக்தியை வெளிப்படுத்தியும் தங்களால் செய்யக்கூடிய சகாயத்தை செய்வதாயும் தீர்மானங்கள் செய்து கவர்ன்மெண்டாருக்கு தெரியப் படுத்தினார்கள். கவர்ன்மெண்டார் நமது இராஜபக்தியை மெச்சி வந்தனமளித்து ஐக்கியச் சங்கங்களின் தொகையை யுத்தத்திற்கு உபயோகப் படுத்துவது உசிதமல்லவென்று தாங்கள் ஐக்கியச் சங்கங்களின்பேரில் வைத்த அபிமானத்தை வெளியிட்டிருக்கிறார்கள். அதினால் கவர்ன்மெண்டார் உத்திரவுக்குக் கீழ்படிய வேண்டியதான ஒரு எண்ணத்தைக் கருதி தக்க சமயத்தை எதிர்பார்த்திருந்தன. இப்பொழுது தக்க சமயம் வாய்த்திருக்கிறது. கவர்ன்மெண்டார் ஐக்கியச் சங்கங்களின் தொகையை இப்பொழுதும் அபேக்ஷிக்கவில்லை. கடனாகக் கொடுத்தால் வாங்கத் தயாராயிருக்கிறார்கள். இதை அனுசரித்து இந்தியாவின் இதரமாகா

ணங்களில் ஏற்பட்டிருப்பது போல் நமதுமாகாணத்திலும் ஐக்கியச் சங்கங்கள் தங்கள் ரிசர்வு பண்டை யுத்தக் கடனுக்குக் கொடுக்க வேண்டுமென்று நமது மாகாண ரிஜிஸ்த்ரார் உத்திரவு செய்தது நமக்கெல்லாம் ஓர் சந்தோஷத்தை கொடுக்கிற தென்பதிற் தடையில்லை. இந்தக்கடன் கொடுப்பதினால் சங்கங்கள் தம் ஐவேஜ் ஒன்றும் கொடுத்துவிடவில்லை. சங்கத்தின் விதியின்படிக்கும் ஆக்டின் ஷரத்துப் படிக்கும் ரிஜிஸ்த்ரார் அவர்கள் உத்திரவுப்படி நமது க்ஷேம நிதியை கட்டிவைக்க வேண்டியதே தவிர வேறில்லை. சிற்சில சங்கங்கள் இந்த உத்திரவினால் தங்கள் பணம் யத்தத்துக்கு கொடுப்பதைப்பற்றி யோஜிக்கிறார்கள். இது சுத்த தெரியாத்தன்மை. சென்டிரல் டாங்கில் செலுத்துவதற்கு பதிலாக யுத்தபாண்டுகள், தபாலாபீசு சர்டிபிகேட்டுகள், வாங்கி வைத்துக் கொள்ள வேண்டியது. சென்டிரல் பாங்கில் டிபாசிட் செய்வதைவிட யுத்தகடனுக்கு போஸ்டாபீஸ் சர்டிபிகேட்டுகள் வாங்கி கொள்வதுமேல். ஏனெனில், சென்டிரல் பாங்கில்போடும் பணத்திற்கும் சென்டிரல் பாங்கின் ஐவேஜ்தான் ஜாமீன். தபாலாபீசு சர்டிபிகேட்டுக்கோ இந்தியா கவர்ன்மெண்டாரும், இந்தியச் செல்வம் பூராவும் ஜாமீனாக யிருக்கிறது. அப்படியிருக்க சந்தேகப்படவேண்டியது அனாவசியம். கனம் ரிஜிஸ்த்ரார் அவர்கள் சர்குலர் வந்து ஜாஸ்திகாலமாயும், அநேக சங்கங்கள் தங்களிடம் செலுத்தவேண்டியதாயிருக்கும் க்ஷேம நிதியை இன்னும் தனுபாலாபீசில் செலுத்தாமலிருக்கிறார்கள். இபபடி இருப்பது கூட்டுறவின் தன்மைக்கும் விரோதமாயிருப்ப துடன் டிபார்ட்மெண்டாரின் கற்பனையை அலக்ஷியம் செய்ததாகவும் ஏற்படும். இது முற்றிலும் தவறு. சங்கங்கள் இதற்கென்று யேற்பட்டிருக்கிற ஆக்டின் கீழ் ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிற தென்றும் அந்த ஆக்டின்படி யேற்படுத்திய டிபார்ட் மெண்டாரின் கற்பனையின்படி சங்கங்கள் நடக்க வேண்டியது அவசியமென்று இச்சமயத்தில் வற்புறுத்த வேண்டியதா யிருக்கிறது இந்த யுத்தத்தின் விஷயமாய் நமது இந்தியச் செல்வங்கள் ஆற்றுவெள்ளம்போல் வந்து உதவிபுரியும்பொழுது நமது இந்தியர்களின் முன்னேற்றத் துக்காக ஏற்படுத்தப் பட்ட ஐக்கியச் சங்கங்களை தங்கள் சொந்த ஐவேஜ்கொடுக்கா விட்டாலும் க்ஷேம நிதியை கடனாக கொடுக்கவேண்டியது ரொம்ப அவசியம். ஆகையால் ஒவ்வொரு சங்கமும் தாங்கள் செலுத்த வேண்டியதாய் பாக்கி வைத்திருக்கும் க்ஷேமநிதியை 1916-17ல் யேற்படும் க்ஷேமநிதியையும் உடனே செலுத்தி இந்த தர்மயுத்தத்துக்கு உதவி புரியவேண்டியது அவசியமென்று நினைத்து காலதாமசம் செய்யாமல் உதவிபுரிய முன்வரவேண்டுமாய் கோரப்படுகிறது. இப்பொழுது வரும் யுத்தசமாசாரத்தின்படி ஜெர்மனியின் கொடுமை அடக்கப்பட்டு நேசக் கட்சியார் ஜெயமடைந்து வருவதாய்த் தெரிவதால் தற்சமயம்



நாம் தளராமல் உதவிபுரிந்து பூரண ஜெயத்தை கூடிய சீக்கிரத்தில் எதிர்பார்ப்போமாக.

---

# ஐக்கிய சங்கங்களும் கெடுக் கடந்த கடன்களும்.

(முன் தொடர்ச்சி.)

[ஒரு கோவாபரேடர் எழுதியது].

(3) தற்காலம் சங்கங்கள் கணக்குப் புத்தகத்தில் மாத்திரம் வரவு செலவு காட்டும் (Book adjustment) துர்வழக்கத்தை நீக்க ஆரம்பஞ் செய்துவிடவே கெடுக்கடந்தகடன்கள் அதிகமாக ஆரம்பிக்கின்றன. புத்தக வரவு செலவு காட்டும் வழக்கம் கொடியதென்றும், அதை நீக்க வேண்டிய தவசிய மென்றும், அவ்வழக்கம் தலை யெடுத்தால் சங்கங்கள் சீரழிந்து போகுமென்றும், அவ்வழக்கத்தை கண்டிக்க வேண்டிய தவசிய மென்றும், டிபார்ட்மெண்டார் கவனிக்கவே கெடுக்கடந்த கடன்கள் அதிகமாய் வளர்கின்றன.

இம்மாதிரி சட்டம் அமுலுக்கு வருவதற்கு முன்னுள்ள கணக்குகளை நுட்பமாய் பரிசோதனை செய்யும் பட்சத்தில் பஞ்சாயத்தார்களுடையவும் அவர்கள் பந்து மித்திரர்களுடையவும் பஞ்சாயத்து மெம்பர்களுக்கு மனோவாக்கு, காயங்களால், உதவி புரிந்தவர்களுடையவும் கடன் கணக்குகள் புத்தக வரவு செலவாகக்காட்டபட்டு வரப் பட்டதினால் கெடுகடக்காமல் வந்துள்ளதென்று தெரியவரும். புத்தக வரவு காட்டும் வழக்கத்தை ரத்து செய்ய ஆரம்பிக்கவே கெடுக்கடந்த கடன்கள் அதிகமாக வளர்ந்துவிட்டன.

(4) கெடுக்கடந்த கடன்கள் அதிகமாகா வண்ணம் அப்பப்போது கோர்ட்டுக்குப் போய் வசூல் செய்ய பஞ்சாயத்தாருக்கு இஷ்டமில்லாமையே கெடுக்கடந்த கடன்கள் அதிகரிப்பதற்கு காரணமா யிருக்கின்றது. எப்படியெனில் மெம்பர்களுடைய மன வருத்தத்தையும் விரோதத்தையும் கொள்ளுவதற்கு பஞ்சாயத்தார்கள் அஞ்சுவதால் கோர்ட்டுக்குப் போக பின் வாங்குகிறார்கள். சுயகாரியமே மேலாகக் கொண்ட பஞ்சாயத்தார்கள் கோர்ட்டுக்குப் போக சாவகாசமில்லை யென்று முறையிடுகிறார்கள். சங்கஸ்தலத்திற்கும் கோர்ட்டு ஸ்தலத்திற்கும், சில இடங்களில் முப்பது நாற்பது மைல்தூரம் இருத்தலால் கோர்ட்டுக்குப் போக பஞ்சாயத்தார்கள் அசிரத்தையாயிருக்கிறார்கள்.

(5) புதுக்கடன்களும், மறுகடன்களும் சங்கங்களிலிருந்து மெம்பர்களுக்குக் கிடைக்காததால் கெடுக்கடந்த கடன்கள் அதிகரித்துக்

கொண்டே வருகின்றன. புத்தக வரவு செலவு செய்து கொள்ளும் வழக்கம் தவிர கடன் வாங்கி கடன் திருப்பிச் செலுத்தும் வழக்கமும் இருந்து வந்ததினால் சங்கத்தில் கெடுக்கடந்த கடன்கள் இல்லாமலிருந்து வந்தன. எப்படியெனில் சங்கத்தில் மெம்பர்களுக்கு கடன் கொடுத்து வந்தால் ஒரு மெம்பர் சங்கத்தில் தனக்கென்று கடன் வாங்கி மற்ற மெம்பருடைய கடனுக்கு ஈடு செய்து மெம்பர்கள் தங்களுக்குள் லேவாதேவி வைத்துக் கொள்வது வழக்கம். சங்கங்களில் மறுகடன்களும் புதுக்கடன்களும், கொடுப்பது நின்றுவிடவே கெடுக்கடந்த கடன்கள் அதிகமாயின.

சங்கங்களில் ஏன் புதுக்கடன்களும், மறுகடன்களும் மெம்பர்களுக்குக் கிடைப்பதில்லை யென்பது இங்கு விளக்கவேண்டியது அவசியமேயாகும். சங்கம் ஒழுங்காய் நடக்கவில்லை யென்றாவது, நன்றாய் வேலை செய்ய வில்லை யென்றாவது, அல்லது கெடுக்கடந்த கடன்கள் இருக்கின்றன வென்றாவது, பிராவிடெண்டு டிபாஸிட் வசூல் செய்யவில்லை யென்றாவது, ஆஸ்தி பொறுப்பு ஸ்டேட்மெண்டு தயாரிக்கவில்லை யென்றாவது யோஜிக்கப்பட்டு கடன் மனுக்கள் சாங்கஷன் செய்யப்படுகிறதில்லை. சங்கத்தில் 10 கடன்கள் கெடுகடந்திருப்பதினால் புதுக்கடன் சாங்க்ஷன் செய்யப்படுவதில்லை யென்று வைத்துக் கொள்ளுவோம். மேற்சொல்லிய பிரகாரம் புதுக்கடன்களும், மறுகடன்களும், மெம்பர்களுக்கு நின்றுவிடவே மற்றக் கடன்களும் கெடுக்கடந்து போகின்றன அச்சங்கத்தில் கெடுக்கடந்த கடன்கள் அதிகமாக வளர்கின்றன.

(6) கடன்களைத் திருப்பிக்கொடுக்க வேண்டிய காலத்தை சரியானபடி நிர்ணயிக்க பஞ்சாயத்தார்களுக்கு போதிக்காததும், பஞ்சாயத்தார்கள் அறிந்து கொள்ளாததும், கெடுக்கடந்த கடன்கள் அதிகமாவதற்குக் காரணமாகிறது.

(7) கிராமங்களில் கட்சிப் பிரதிகட்சிகள் ஏற்படுவதால் சங்கத்தில் கடன்கள் கெடுகடந்து போகின்றன. எப்படியெனில் ஒருவருக்கொருவர் ஏற்படும் மனஸ்தாபத்தை ஆதாரமாகக்கொண்டு சங்கத்தின் மூலமாய் மெம்பர்களுக்கு நஷ்டம் உண்டாக்க வெண்ணி சங்கத்தின் கடனைக் கேட்காமலே யிருத்தல், பிறர் மூலமாய் மெம்பர் கொடுத்தனுப்பினால் பஞ்சாயத்தார் ஏதோ சாக்கிட்டு வாங்காமலிருத்தல். கட்சிப் பிரதிகட்சிகள் ஏற்படுவதில் ஒரு கட்சியில் பிரசிடெண்டும், மற்றொரு கட்சியில் காரியதரிசியும் இருந்துவிடும் பட்சத்தில் சங்கத்தின் கடன்கள் கெடுக்கடக்க வேறு காரணமும் வேண்டுமோ?

(8) ஐக்கிய சங்கங்களுக்கு லாயக்கற்ற கிராமங்களிலெல்லாம் சங்கங்களை ஏற்படுத்தியதும் கெடுக்கடந்த கடன்கள் அதிகமாவதற்குக் காரணமாகும்.



“ஐக்கிய சங்கத்துக்கு யோக்கியதையற்றது என்று சொல்லக்கூடிய ஒவ்வொரு கிராமத்திலும் (கல்யாணதுர்க்கதாலூக்காவில்) ஐக்கிய சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டன” வென்று ரிஜிஸ்தராரவர்கள் தன்னுடைய 1912-13 வருஷத்திய ரிப்போர்ட்டின் 22-வது பக்கத்தில் கூறியிருக்கிறார். இவ்விஷயம் கல்யாணதுர்க்க தாலூக்காவிற்கு மட்டுமேயல்லாது, லாயக்கற்ற கிராமங்களில் சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ள இடங்கள் நூற்றுக் கணக்காய் உளவென்பது நுட்பமாய் விசாரணை செய்தறிந்தால் நன்கு விளங்கும்.

இவ்விஷயத்தின் உண்மையை கவர்ன்மெண்டாரே தங்களுடைய உத்திரவில் (71-ரிவினியூ 10-1-17வ) ஒப்புக்கொண்டிருக்கிறார்கள் என்றால் வேறு அத்தாட்சியும் வேண்டுமோ? சங்கங்களை வைத்து நிர்வகிக்கவும், நடத்தவும், சக்தியற்ற பஞ்சாயத்தார்களிடம் சங்கங்களை ஒப்புவித்தால் கெடுக்கடந்த கடன்கள் அதிகமாக யாரைக் கேட்கவேண்டும்?

(9) பஞ்சாயத்தார்கள் கடன்கள் கெடுக்கடந்து போகுந்தருணத்தில் புத்தக வரவு செய்வதற்கும், மறுகடன் வாங்கி பழைய கடனை ஈடு செய்வதற்கும், இடமில்லாமற் போகவே பஞ்சாயத்தார் கடன்கள் கெடுக்கடந்து போகின்றன. பஞ்சாயத்தார்கள் கெடுத்தவறி விடவே இதரர்களைக்கேட்க வெட்கப்படுகிறார்கள். பஞ்சாயத்தார் கெடுத்தவறினவுடன் அவர்களை கண்டித்தால் சங்கம் வேலையே நடபெறாது. ஏனெனில் இந்த ஒழுங்கற்ற பஞ்சாயத்தார்களை விடில் வேறு பஞ்சாயத்தார் கிடைக்காத கிராமங்களும் உள.

(10) கவர்ன்மெண்டு இன்ஸ்பெக்டர்களும், பாங்கிங்யூனியனின் சூபர்வைசர்களும், வசூல்செய்யட்டுமே யென்று சிலபஞ்சாயத்தார்கள் எண்ணங்கொண்டிருத்தலால் கெடுக்கடந்த கடன்கள் அதிகமாகின்றன.

(11) “கடன் சாங்கஷன் செய்வதும் நீங்கள்-கடன் வசூல் செய்ய வேண்டியதும் நீங்கள்” என்று சில பஞ்சாயத்தார்கள் கூறுகிறார்களாம். இதன் விபரம் யாதெனில் மெம்பர்களுக்கு கடன் சாங்க்ஷன் செய்வதற்கு கடன் கோரும் விபர ஜாப்தா கடன் சாங்க்ஷன் செய்யும் அதிகாரிகளால் பரிசோதிக்கப்பட்டு இன்னார் இன்னாருக்கு இவ்வளவு கடன் கொடுக்கவேண்டு மென்று நிர்ணயஞ் செய்யப் படுகிறதாம். இதனால் யாருக்கு கடன் கொடுக்கவேண்டுமென்று பஞ்சாயத்தார்கள் கருதுகிறார்களோ அவர்களுக்கு கொடுக்க முடியாமற் போகவே கடன்கள் வசூல் செய்வதிலும் பஞ்சாயத்தார்கள் கவனக்குறைவே கெடுக்கடந்த கடன்கள் அதிகமாகக் காரணமாகிறது.

(12) பஞ்சாயத்தார்கள் சிரத்தையில்லாமையே கெடுக்கடந்தகடன்கள் அதிகமாக காரணமாகின்றது.

(a) ஐக்கிய சங்கங்கள் ஸ்தாபனமாயிருக்கும் கிராமங்களை சீராய்ப் பரிசோதனை செய்து பார்ப்போமாகில், பஞ்சாயத்தார்கள் சுயநலத்தைக்கருதியே சில சங்கங்கள் ஏற்படுத்தப் பட்டதாகத் தெரியவரும். தங்களுக்கு வசூலாக வேண்டிய சொந்தக் கடன்களை வசூல் செய்துகொள்ளும் பொருட்டு சங்கங்கள் ஸ்தாபனஞ் செய்ய சிலபஞ்சாயத்தார்கள் முன் வந்துள்ளார்கள். கடன்வசூலானதும் சங்கத்தில் அசிரத்தையேற்படவே கெடுக்கடந்த கடன்கள் அதிகமாயின.

(b) பஞ்சாயத்தார்களுக்கு தங்களுடையவும் தங்கள் பந்துமித்திரர்களுடையவும் கடன்களுக்கு புத்தகவரவு செலவு செய்து கொள்ள இடமில்லாமற் போனதும், தங்கள் இஷ்டம்போல் தாம்கொடுக்க முடியாமற் போனதும், சங்கத்தில் பஞ்சாயத்தார்களுக்கு சுதந்திரமே இல்லாததாக எண்ணங் கொண்டு சங்கத்தில் வேலை செய்வானேனென்று பஞ்சாயத்தார்களுக்கு சங்கத்தில் சிரத்தை குறைகிறது அதிகமாகின்றன.

(c) பஞ்சாயத்தார்களும், பஞ்சாயத்து பந்துக்களும் கடன்பெற வேண்டின் மஹாசபையார் தீர்மானம் வேண்டுமென்று 15 (a) புதிய விதி சங்கங்களில் வந்தவுடன் "மஹாசபை கூடுவதெப்போது, கடன் பெறுவதெப்போது." என்று பஞ்சாயத்தார்களுக்கு சிரத்தை குறைந்து போயிற்று.

(d) சங்கங்கள் ஸ்தாபனஞ் செய்தகாலத்தும், கடன் பட்வாடாவான காலத்தும் பிரசிடெண்டுக்கும், காரியதரிசிக்கும் நூற்றுக்கு இவ்வளவென்று மெம்பர்கள் கொடுத்து வந்ததாகவும், கடன் கெடுவை அதிகப்படுத்தி வாய்தா பெறுவதற்கும், பூத்திரம் எழுதுவதற்கும், மெம்பராய்ச் சேருவதற்கும், இன்னும் இவை போன்றகார்யங்களுக்கும் பிரசிடெண்டு, செக்ரிடேரிகளுக்கு மெம்பர்கள் வெகுமானம் கொடுத்து வந்ததாகவும், டிபார்ட்டுமெண்டார் கண்டிப்பதாலும், மெம்பர்கள் அனுபோகம் பெறவே நியாய மில்லாத இத்தொகைகளை கொடுக்க வேண்டியதில்லை யென்று நிறுத்தி விட்டதாலும் பிரசிடெண்டு, காரியதரிசி இவர்கட்கு வருமானம் இல்லாமற் போய் சிரத்தைக்குறையவே கெடுக்கடன் கடன்கள் அபிரிமிதமாயின.

(e) வேலை செய்யும் பஞ்சாயத்து மெம்பருக்கு சன்மானம் ஏதாவது டிபார்ட்டுமெண்டார்தான் கொடுக்கிறார்களா வென கவனிப்போமாயின் அதுவுமில்லை. பிராவிடெண்டு டிபாசிட்டுவசூல் செய்யவில்லை யென்றும் கெடுக்கடந்த கடன்கள் இருக்கின்றன வென்றும், ஆஸ்தி பொறுப்பு ஸ்டேட்மெண்டு தயார்செய்து அனுப்பவில்லை யென்றும், 36-வது விதியை மாற்றிக் கொள்ளவில்லை யென்றும் சொல்லிவிடுகிறார்கள். வருமானமின்றி வேலை செய்ய எதிர்ப்பார்ப்பது சரியல்லவென்று டிபார்ட்மெண்டார் இன்னும் அறிந்து கொள்ளாததால் பஞ்சாயத்தார்கள் சிரத்தை குறைந்து விட்டது; இதன்பலன் என்ன?. கெடுக்கடந்த கடன்க்ள் அதிகமானதே கண்கண்ட பலன்.



(13) நம்முடை கடமையென்ன வென்றால் சீர் கேடான சங்கங்களை ஒழுங்குபடுத்தி ஐக்கிய முறையை நல்ல நிலைமையில் நிறுத்த வேண்டியதே. ஒழுங்கற்ற ஒன்பது நூறுசங்கங்களை வைத்திருப்பதிலும் ஒழுங்கான சங்கங்கள் ஒன்பது இருந்தாலே போதுமானதென்று எண்ணங் கொள்ளவேண்டும். இனி ஸ்தாபிக்கப்படும் சங்கங்களெல்லாம் ஒழுங்கான கிராமங்களில் நடத்துவதற்கு சுயநலம் கோராத திறமையுள்ள பஞ்சாயத்தார்களிருக்கிறார்களா வென்ற முதலிய முக்கிய விஷயங்களை யெல்லாம் தீர ஆலோசனை செய்தறிந்தபின்தான் ஸ்தாபிக்கப்பட வேண்டும். ஐக்கிய சங்கங்கள் மூலமாய் இந்தியா தேசம் முன்னுக்கு வரப்போகிற தென்று அநேகர் அபிப்பிராயங் கொண்டிருக்கிறார்கள். இப்படிக் கேவலமாய் சங்கங்களிருக்கும் பட்சத்தில் இந்தியாதேசம் இன்னும் கேவலமான நிலைமைக்கு வரும் என்பதில் என்ன சந்தேகம். ஆகையால் இந்தியச் சகோதரர்கள் இது விஷயத்தை முக்கியமாய் யோஜிக்கவேண்டும். இனி சங்கங்களை ஸ்தாபிப்பதில் ஜாக்கிரதை யாகவும் நுட்பமான விஜாரணை செய்தும் ஸ்தாபிக்க வேண்டும். இருக்கப்பட்ட சங்கங்களில் சீர்திருத்தஞ் செய்ய முடியாத சங்கங்களை உடனே முறிக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

ஐக்கிய சங்கமெம்பர்களுக்கு படிப்பென்னும் விளக்கின் பிரகாசத்தைக் காட்டவேண்டும். அஞ்ஞானமென்னும் இருளைப்போக்க முயல வேண்டும். இதற்கு சங்கங்கள் கவர்ன்மென்டு ஆதரணையிலிருந்து விலக்கி கொள்ளவேண்டும். இதற்கு நியாயங்கள் பலவுள. H. W. உல்பு துரையவர்கள் சொல்லுகிறார். "இராஜாங்க ஆதரணை எதுகாரணம் பற்றியும் கருத தக்கதல்ல. ஏனென்றால் ஜனங்களுடைய பொறுப்புக் குறைந்து போகிறதாக தெரிகிறது" தன் கையே தனக்குதவிஎன்று கற்றுக்கொள்வதில் அலட்சியத்தை கொடுத்து விடுகிறது. இந்தியாவின் முன்னேற்றத்திற் காக ஐக்கிய முறைகளில் உழைக்கும் கனவான்கள் விஷயங்களை கவனித்து சங்கங்களை சீர்திருத்தி ஒழுங்குபடுத்தி ஐக்கிய கோட்பாட்டின் நன்மைகளை எல்லோரும் அனுபவித்து ஆனந்தங் கொள்ள வழிகளைத்தேட உதவி புரிய வேண்டுமென்று எல்லாம் வல்ல கடவுளைப் பிரார்த்திக்கிறோம்.

# ஐக்கிய முயற்சியின் அபிவிருத்தி.

## ரிஜிஸ்ட்ரார் ரிபோர்ட்டின்பேரில் கவர்ன்மெண்டாரின் உத்திரவு.

ரிஜிஸ்ட்ராருடைய 1915-16வருடத்திய ரிபோர்டானது பிரஸ்தாப வருஷத்தில் 200 சங்கங்கள் அதிகமாக ரிஜீஸ்தர்செய்துள்ளதாகக் காட்டுகிறது. ரிஜிஸ்ட்ரார் தன்னுடைய 1914-15 வருஷத்திய ரிப்போர்ட்டில் எதிர்பார்த்துள்ளதற்கு குறைவே யானாலும், பிரஸ்தாப வருடத்தில் மேற்பார்வைபார்க்கும் சூபர்வைசிங் யூனியன்கள் இருபதிலிருந்து முப்பத்தொன்றாக ஏற்பட்டுள்ளதற்கும், யூனியன் மேற்பார்வைக்குட் பட்ட சங்கங்கள் 400லிருந்து 604க்கு அதிகப்பட்டுள்ளதற்கும் கவர்ன்மெண்டார் சந்தோஷப்படுகிறார்கள். இவ்விராஜதானியாயிலுள்ள கிராம சங்கங்களில் சுமார் மூன்றிலிரண்டு பங்குக்குச் சரியான சங்கங்கள் யூனியன் மேற்பார்வையில் இல்லாமலிருக்கின்றன. வருகிறவருஷத்தில் இக்குறைவை ரிஜிஸ்ட்ராரும் அவருடைய இலாகா உத்தியோகஸ்தர்களும் நீக்குவார்களென கவர்ன்மெண்டார் எண்ணுகிறார்கள்.

(2) பிரஸ்தாப வருஷத்தின் முக்கிய விஷயம் என்னவெனில் கிராம சங்கங்களிலுள்ள மெம்பர்களில் மகம்மதியர்களும், கிறிஸ்தவர்களும், பஞ்சமர்களும் புகழக்கூடிய விதமாய் அதிகரித்துள்ளதே. கூட்டுறவு முறையை பஞ்சமர்களுக்குள் அதிகரிப்பதிலுள்ள கஷ்டத்தை கவர்ன்மெண்டார் கருதுகிறார்களெனினும்; தாழ்ந்த வகுப்பாருக்கு உபகாரம் புரிவதற்கென்றுள்ள தர்ம சபைகளின் உதவியை வேண்டிய அளவு கோரப்பட்டுள்ளதாவென கவர்ன்மெண்டார் சந்தேகப்படுகிறார்கள். ரிஜிஸ்ட்ரார் இவ்விஷயத்தைக் கவனிக்க வேண்டப்படுகிறார்.

(3) கிராமச் சங்கங்களினுடையவும், சென்ட்ரல் சங்கங்களுக்கும், மேற்பார்வைபார்க்கும் யூனியன்களுக்கும் அவைகளினுடைய சம்பந்தத்தைக் குறித்தும் கூறும் விஷயம் ரிப்போர்ட்டில் முக்கியமாய் கவனிக்கப்பட்டிருந்தாலும்; கூட்டுறவு முறையை மற்றப்படி அதிகரிப்பதிலுள்ள அவசியத்தை கவனிக்காது விட்டுவிடவில்லை, கிராம நாணயச் சங்கங்களல்லாத மற்றவிதச் சங்கங்களும் அதிகரித்துக்கொண்டிருக்கின்றன. விவசாய கிராமச் சங்கங்களைவிட இம்மாதிரிச் சங்கங்கள் நல்ல நிலைமையிலிருப்பதாகத் தெரிகிறது. விவசாய கிராமச் சங்கங்களல்லாத மற்றவித சங்கங்கள் மிகவும் குறைவாகவே இருக்கின்றன. உற்பத்திச் சங்கம் (Productive Society) பெரிய காஞ்சீபுரம் நெசவுச் சங்கம் ஒன்றேதானிருக்கிறது. இதுவும் நஷ்டத்தில் வேலை செய்துள்ளது. திருவல்லிக்



கேணி ஸ்டோர்ஸ் சங்கத்தின் நல்ல நிலைமை, சிலருக்குள் ஏற்படும் மனஸ்தாபத்தினால் குறைகிறது.

கட்டடச் சங்கங்களில் கும்பகோணச் சங்கம் தவிர மற்றவையெலாம் இருந்த நிலைமையிலேயே இருக்கின்றன. கூட்டுறவு முறையிலுள்ள இம்மாதிரி சங்கங்களுக்கெல்லாம் இது பரியந்தம் செலுத்தி வந்த கவனத்தைவிட அதிகமாக செலுத்தவேண்டியது தகுதியென்றும் வருஷாந்திர ரிப்போர்ட்டில் இச்சங்கங்களைப்பற்றி கூறி வந்ததற்கு அதிகமாகவே பிரயோஜனப்படுமாறு, செய்யலாமென்றும் கவர்ன்மெண்டார் எண்ணுகிறார்கள்.

(4) பிரஸ்தாப வருஷத்தில் மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன. விவசாய கிராமச் சங்கங்களின் இலாயக் கணக்கானது, 4-5-16 தேதியுள் கவர்ன்மெண்டாருடைய 15 நெம்பர் (ரிவினியூ) உத்திரவால் மிகவும் நஷ்டமடைந்துள்ளது கெடுக்கடந்த வட்டித் தொகை, எந்த செக்ஷனும் திருப்திகரமென்று சொல்லுவதற் கில்லாதபடிக்கு அவ்வளவு அதிகமாயிருக்கின்றது. கெடுநேர்ந்தும் வசூலாகாத வட்டியை இலாபமென்று காட்டுவதை கவர்ன்மெண்டார் ரத்து செய்தது நியாயமெனவே தோன்றுகிறது. எப்படியெனில் கெடுநேர்ந்த வட்டியை அப்பப்போது ஒழுங்காய்வசூல் செய்யவேண்டியது சங்கங்களுடைய கடமையாகும். தங்கள் கடமையை சரிவர சங்கங்கள் செய்யாதது அவர்களுடைய குறையேயாகும். சேலம், காக்கினடா செக்ஷன்களில் செய்துள்ள விருத்தியைக் குறித்து கவர்ன்மெண்டார் அங்கீகாரத்துடன் கவனிக்கிறார்கள். மெட்றாஸ், தஞ்சாவூர் செக்ஷன்களில் ஏற்பட்டுள்ள தீட்சணியத்தைப்பற்றி கவர்ன்மெண்டார் வருத்தப்படுகிறார்கள்.

(5) சில ஜில்லாக்களில் கோவாபரேடர்கள் தங்களுடைய வாய்தாத்தவணைகளை ஒழுங்காய் செலுத்தவில்லை யென்று போர்டார் செய்துள்ள ரிமார்க்கை கவர்ன்மெண்டாரும் ஆமோதிக்கிறார்கள். பிரஸ்தாப வருஷத்தில் 63 சங்கங்கள மூடப்பட்டதென்பது மிகவும் அதிருப்திகரமான விஷயமாய் இருக்கின்றது. இச்சங்கங்கள் அடைந்த கதி பிறசங்கங்களுக்கு ஊக்கத்தைக் கொடுப்பதிலும் சங்கங்கள் தங்கள் கடமையை சரிவர செய்யவேண்டுமென்பதை கற்பிப்பதிலும், சங்கங்களை சரிவர ஒழுங்காய் மேற்பார்வை பார்க்க வேண்டு மென்பதையும், தணிக்கை செய்யவேண்டு மென்பதையும் கூட்டுறவு முயற்சிக் காரர்களுக்கு போதிப்பதிலும், பிரயோஜனமா யிருக்கு மென்று நம்பப் படுகிறது.

(6) கோர்ட்டுக்குப் போகும் கேசுகள் பிரஸ்தாப வருஷத்தில் அதிகப்பட்டுள்ளன வென்பது விரும்பத்தக்க விஷயமல்ல. மெம்பர்கள் கடன் அசலினுடையவும், வட்டியுடையவும், தவணைகளை சரிவர ஒழுங்

காய் செலுத்தாத்தின் ஏற்பட்ட பலன் இதுவேயாகும் சென்ற வருஷத்தைக் காட்டிலும் பிரஸ்தாப வருஷத்தில் நூற்றுக்கு அறுபதுவிகிதம் அதிகமாகவும் சென்ற வருஷங்களில் நூற்றுக்கு 600 விகிதம் அதிகமாகவும் கேசுகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இவ்விஷயத்தின் அபாயம் பின்வரும் அட்டவணையால் நன்கு விளங்கும்.

### தாக்கல் செய்யப்பட்ட கேசுகள்

| 1911—12 | 1912—13 | 1913—14 | 1914—15 | 1915—16 |
|---|---|---|---|---|
| 148 | 255 | 429 | 652 | 1022 |

(7) ரிஜிஸ்ட்ரார் அல்லது அஸிஸ்டெண்டு ரிஜிஸ்ட்ரார் அல்லது மத்தியஸ்தர் மூலமாய் வழக்குகளை தீர்மானம் செய்துகொள்ளலாமென, இந்தியா 1912 வருஷம் இரண்டாவது கோவாபரேடீவ் சட்டத்தின் 43-வது செக்ஷனின்கீழ் சமீபத்தில் கவர்ன்மெண்டார் ஏற்படுத்தியுள்ள விதியை அதிகமாகப் பிரயோஜனப்படுத்திக்கொள்ளவில்லை. இவ்விதியை சரிவர உபயோகிக்கும்படி செய்வதால் சிவில் கோர்ட்டுகளுக்குப் போவதை ரத்து செய்வதில் ரிஜிஸ்ட்ரார் சிரத்தை யெடுத்துக்கொள்ளுவாரென கவர்ன்மெண்டார் எண்ணுகிறார்கள்.

(8) சங்கங்களின் மேற்பார்வை பார்ப்பதையும், பிரைமெரி ஆடிட் செய்வதையும், சென்டரல் பாங்கிகளாலும், யூனியன்களாலும் ஏற்படுத்தப்பட்டுள்ள கவர்ன்மெண்டு சம்பந்தமில்லாத உத்தியோகஸ்தர்களைக்கொண்டு செய்துகொள்ளுவதற்கு ரிஜிஸ்ட்ராரனுப்பிய பிரேரணையை பிரஸ்தாப வருஷத்தில் கவர்ன்மெண்டார் அங்கீகாரஞ் செய்துள்ளார்கள். இப்பிரேரணையின் முக்கிய அம்சம் என்னவென்றால், பிரைமெரி சங்கங்களெல்லாம் சென்ற ஜூன் மாதம் 30 தேதி யன்றைக்கு வாங்கியுள்ள மொத்தக் கடன்களின்பேரில் 100-க்கு அணா எட்டு வீதம் சூபர்விஷன் பண்டுக்கென்று கொடுக்கவேண்டுமென்பதே. மொத்தக் கடன்கள் என்பதில் மெம்பர்களுடையவும், மெம்பர்களல்லாதவர்களுடைய டிபாசிட்டுகளும், இதர கடன்களும் சேரும். சூபர்விஷன் பண்டுக்கு பணம் கொடுக்க எல்லா விவசாயச் சங்கங்களும், பிறசங்கங்களில் பல வந்தும் சம்மதப்பட்டிருக்கின்றன வென்பதை நோக்க கவர்ன்மெண்டாருக்கு திருப்தியே. இதர சங்கங்களும் சூபர்விஷன் பண்டுக்கு தொகை செலுத்த வேண்டுமென்னும் அவசியத்தை சீக்கிரம் அறிந்துகொண்டு பிரஸதாப வருஷத்திற்குள் இந்த பிரேரணையை ஒப்புக்கொள்ளுமென கவர்ன்மெண்டார் கருதுகிறார்கள். பிரஸ்தாப வருஷத்தில் சூபர்விஷன் பண்டு வசூலாவதற்கு விஷயங்கள் திருப்திகரமாயிருக்கவில்லை. ஏனெனில் கெடுக்கடந்த வட்டியும், தவணை நேராத வட்டித் தொகையும்



சங்கங்களின் லாபக் கணக்கிலிருந்து எடுத்துவிடப்பட்டதால் சங்கங்களின் இலாபம் ரொம்பவும், குறைந்துபோய்விட்டது. சூபர்விஷன் ஸ்கீம் இனி தாமதமின்றி அமுலுக்கு வரும்படி கவனிக்கும்படியாகவும் கவர்ன்மெண்டாரால் நியமிக்கப்பட்டுள்ள இன்ஸ்பெக்டர்களும், சங்கங்களால் ஏற்படும் சூபர்வைசர்களும் அவரவர்கள் செய்யவேண்டிய வேலைகளை நிஷ்கரணை செய்து, விதிகளை ஏற்பாடு செய்து கவர்ன்மெண்டார் அங்கீகாரத்துக்கு அனுப்பும்படியாகவும், ரிஜிஸ்ட்ராரை கவர்ன்மெண்டார் கேட்டுக்கொள்ளுகிறார்கள். ஆடிட் செய்வதற்கும், சூபர்விஷன் செய்வதற்கும் நியமனம் செய்யப்பட்டுள்ள சர்க்கார் இன்ஸ்பெக்டர்களுக்கும், பாங்கிகளால் நியமனம் செய்யப்பட்டுள்ள சூபர்வைசர்களுக்கும் அவரவர்கள் செய்யவேண்டிய வேலையில் உள்ள பேதாபேதங்களுக்கும், அவர்களை இன்னும் கூட்டுறவு முறையில் முயற்சி யெடுக்கவேண்டியது—அவசியமா இல்லையா என்பதும், கூட்டுறவு முறையின் போதனைச் சட்டம் ஒன்று தயார் செய்வதற்கு காலம் வந்துள்ளதாவென்றும், கூட்டுறவு முறையின் விஷயங்களை பரவச் செய்வதற்கு வித்தியா இலாகாதாருடைய உதவியைக் கோருவதற்கு சமயம் நேர்ந்துள்ளதாவென்றும் ரிப்போர்ட்டு செய்ய வேண்டுமாய் ரிஜிஸ்ட்ரார் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

(9) பிரஸ்தாப வருஷத்தில் 63 சங்கங்கள் நன்றாய் வேலை செய்யவில்லை யென்பதற்காக மூடப்பட்டனவென்பதும், 1913-14 வருஷத்தில் தாக்கல் செய்யப்பட்டதைவிட இரண்டு பங்குக்கு அதிகமாய் கேசுகள் கோர்ட்டில் பிரஸ்தாப வருஷத்தில் தாக்கல் செய்யப்பட்டன வென்பதும், இது பர்யந்தம் விவசாயச் சங்கங்களில் இலாபமென்று காட்டப்பட்டுவந்த தொகையில் பெரும்பான்மை வசூலாகாத தொகை கூட்டப்பட்டுள்ளதென்பதும், இச்சங்கங்களில் பாக்கியுள்ள தொகையில் அசலில் சற்றேறக்குறைய மூன்றிலொருபங்கும் வட்டியில் பாதிக்கு மேலும் கெடுக்கடந்துள்ளதென்பதும், ஐக்கிய சங்கங்களின் குறைகளை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் நன்கெடுத்துக் காட்டுகின்றன. சங்கங்களை ஸ்தாபிப்பதற்கு வேண்டிய அம்சங்களையும் சங்கங்கள் நன்றாய் வேலை செய்யுமாவென்பதையும் கொஞ்சமேனும் கவனியாமலும், யோஜிக்காமலும் சங்கங்கள் அதிசீக்கிரத்தில் அநேகமாய் ஸதாபிக்கவேண்டுமென்று சொல்லப்பட்டு வந்த விஷயமும், சங்கங்களை ரிஜிஸ்தர் செய்வதில் இருந்த தாராள குணமும் தப்பென்றும், கூட்டுறவு முயற்சிக்கே கட்டை விளைவிக்கக்கூடிய விஷயங்களென்றும், கூறுவதற்கு வேறு அத்தாட்சிகளும் வேண்டுமோ? ஆனால் பிரஸ்தாப வருஷத்தின் விஷயங்களை மட்டும் கவனிக்கும் பட்சத்தில் வாஸ்தவமான விர்த்தியும்சங்கங்களின் வேலையில் தேர்ந்த பயிற்சியும் வந்துள்ளதென்றும் கவர்ன்மெண்டார் செவ்

வனே அபிப்பிராயப்படுகிறார்கள். வேலை செய்யாத சங்கங்களை மூடினதும், கெடுக்கடந்த பேர்வழிகளை கண்டித்து தக்க நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டதும், சங்கங்களை நடத்தும் திறமையில் உள்ள குறைகளை நன்கு கண்டறிந்துகொண்டுள்ளார்கள் என்பது தெளிவாய் விளங்குகிறது. 'வசூலாக வேண்டிய கெடுக்கடந்த அசலினுடையவும். வட்டியுனுடையவும் தொகை சொற்பம் குறைந்துள்ளதாகத் தெரிவது கூட்டுறவு முறை கொஞ்சம் விர்த்தியாயிருப்பதற்கு அடையாளமாகும். சங்கங்களின் பங்குத்தொகையும், லேவாதேவிக்கு வேண்டிய தொகையும் அதிகரித்துக்கொண்டே வருகிறது. இத்தொகை கவர்ன்மெண்டார் உதவிய தொகையல்ல' ஜனங்களே தங்களுடைய சிக்கனச் செலவால் மிச்சம் பிடித்து சேகரித்துள்ளதாகும்.

க்ஷேமநிதியின் தொகையானது அதிகரித்துக் கொண்டே வருகிறது. கெடுதவறிய வட்டியின் தொகை வசூலானவுடன் சங்கங்களின் இலாபமானது அதிகரிக்கும். கூட்டுறவு இவ்விராஜதானியில் வாஸ்தவமாகவே நன்றாய் வளர்ந்து தழைத்திருக்கிறது. கவர்ன்மெண்ட் உத்தியோகஸ்தர்களின் முயற்சியால் பரவியதல்ல. இராஜ்தானி முழுவதும்பிரயோஜனகரமான வேலை கூட்டுறவின் மூல்மாய் செய்யப்பட்டு வருகிறது. பொது ஜனங்களுக்காக உழைக்க வேண்டுமென்னும் எண்ணங்கொண்ட பரோபகார கனவான்கள் இவ்விஷயத்தில் அதிகமாக உழைக்கிறார்கள். முக்கியமாயும், அவசியமாயும் இப்பொழுது வேண்டியது என்னவெனில் அசலையும், வட்டியையும் வாய்தாப் பிரகாரம், கெடு தவறாமல் செலுத்த வேண்டு மென்பதுதான். இது விஷயம் சங்கங்களை செவ்வையாய்த் தணிக்கை செய்வதால் மட்டுமே கிடைக்கக் கூடியது. யூனியன்களுடைய ஸதாபனமும், சூபர்வைஸிங் உத்தியோகஸ்தர்களை அதிகப்படுத்துவதும் ரிஜிஸ்ட்ராருடைய சக்திக்குள்ளிருப்பதால், முன் கூறிய குறைகளை யெல்லாம் நிவர்த்திக்கப்படுமெனக் க்ருதப்படுகிறது.

(10) ரிஜிஸ்டிராருடையவும் அவருடைய உத்தியோகஸ்தர்களுடையவும், வேலையின் திறனை ஒப்புக் கொள்வதில் கவர்ன்மெண்டாருக்கு மிகவும் சந்தோஷம். உத்தியோகஸ்தரல்லாத மற்றைய ஏனையோருடைய உதவியைக் குறித்தும் கவர்ன்மெண்டார் மிகவும் சந்தோஷப்படுகிறார்கள்.



# பர்மாவில் கால்நடை இன்ஷியூரென்ஸ் சங்கங்கள்

பர்மாவின் ரிஜிஸ்ட்ராராகிய மிஸ்டர் A. E. இங்கிலீஷ் I. C. S. அவர்களெழுதிய ஆங்கிலேய வியாசத்திலிருந்து மொழி பெயர்க்கப்பட்டது.

பர்மாவின் பல ஜில்லாக்களிலும் கோஆபரேடிவ் லேவாதேவி ஏற்பட்டு சுமார் 6 வருஷம் அனுபவமான பிறகு விவசாயிகள் கடனாளிகளாவதற்கு முக்கிய காரணம் கால் உழவுமாடுகள் தற்செயலாகவோ வியாதியாலோ அடிக்கடி இறந்துபோவது என்று தெளிவாய் விளங்குகிறது. இம்மாதிரி இறக்கும் கால்நடைகளுக்காக புதிதுவாங்க பிரத்தியேகமாகக் கடன் கொடுப்பதைக் காட்டிலும் மேற்படி கால்நடைகளுக்குப் பதிலாக வேறு கால்நடைகளை வாங்கவேண்டி இன்ஷியூரன்ஸ் மூலமாய்பணம் பெறவும் கால் நடைகளுக்கு வியாதிமுதலியன வாராமல் காப்பாற்றவும் ஐக்கியப் பொறுப்புடன் ஒருசங்கம் ஏற்படுவது உசிதம் என்றும் அறிந்து அதற்காக தேசத்திற்கு ஏற்றபடி உழவு கால்நடை இன்ஷியூரன்ஸ் சங்கம் ஒன்று ஏற்படுத்த தக்க முயற்சிகள் செய்யப்பட்டன. இது ஒரு சிக்கலான விஷயம்; ஏனென்றால் பர்மாவின் சீதோஷ்ணங்கள், மாசூல்கள் மாசூல் காலங்கள், கால்நடைகள், அவைகளைக் காப்பாற்றுதல், விவசாய முறை, இவையெல்லாம் பலமாதிரியாக இருக்கின்றன. தென்பாகத்தின் ஈரப்பிரதேசத்தில் மழை காலங்களில் (ஜூன்முதல் நவம்பர் வரையில்) நெல்லு சாகுபடியாகிறது. அங்கே மழை 80 முதல் 150 அங்குலம்வரையில் பெய்கிறது. அங்கே ஒருநாளும் குளிர்நாள் என்பதே இல்லை. வடபாகத்தின் ஈரப்பிரதேசங்கள் குன்றுகள் அடர்ந்த 5 ஜில்லாக்களால் ஆகியவை. அங்கே குளிர்காலம் என்பது நன்றாய்த் தெரியும்; இவை இரண்டு பிரதேசங்களுக்கும் மத்தியில் 15 முதல் 40 அங்குலம் வரையில் மழை பெய்யக்கூடிய மத்திய உலர்ந்த பிரதேசம் இருக்கிறது. இவைகள் சாகுபடியில்லாத காலங்களில் அருங்கோடையினால் வரண்டு இரண்டு மூன்று மாதங்களில் 100 முதல் 115 டிகிரி வரையிலுள்ள அவ்வளவு அதிக உஷ்ணத்தைக்காட்டும். இந்த வரக்ஷியான பிரதேசத்தில் அநேக விதமான தானியங்கள் விளைகின்றன. மேல்நாடுகளில் பருத்தி, எள்ளு, நிலக்கடலை முதலியன மழைகாலங்களில் (ஜூன் முதல் நவம்பர் வரையில்) பயிரிடப்படுகின்றன. கரும்பு, நெல்லு, வெங்காயம், துவரை முதலியன வருஷம் முடியப்பயிராகின்றன. கோடைகாலத்தில் நவம்பர்முதல் ஏப்ரல் வரையில் நதியின் பக்கத்திலுள்ள சதுப்பு நிலங்களிலெல்லாம் நவதானியங்களும், உருளைக்கிழங்கும் மிளகாய் முதலிய அநேக சில்லரை விளைவுகளும் விளைவிக்கப்படுகின்றன.

வடக்கிலும் தெற்கிலும் உள்ள ஈரப்பிரதேசங்களில் எருமைக் கடாக்கள்தான் சமீபகாலம் வரையில் உழவு, முதலியவைகளுக்கு உபயோகிக்கப்பட்டு வந்தன. என்றாலும் ‘டெல்டா’ ஜில்லாக்களில் கடாமாடுகள் ‘வக்கை’ என்னும் ஒருவித வியாதிக்கு விசேஷமாய் உள்ளாகிவந்ததினால் காளைமாடுகள் அவைகளுக்கு பதிலாக ஏற்பட்டன. இதனால் உழவு, வண்டியிழுத்தல், முதலிய விஷயங்களுக்காக உலர்ந்த பிரதேசங்களில் வளர்ந்த எருதுகள் லோயர் பர்மாவுக்கு வருஷாவருஷம் விசேஷமாய் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. வடக்கு ஈரப்பிரதேசத்தில், தரைகெட்டியாயும், மரங்கள் பலமாயும் இருக்கின்றன. அங்கே மரங்கள் இழுப்பதற்கு கால்நடைகள் உபயோகப்படுவதினால் கடா மாடுகளே ஏற்றவைகளாயிருக்கின்றன. ஆனால் கிராமங்களில் அம்மாடுகள் பயங்கரமான அந்த வியாதிக்கு ஆளாவது ஸகஜமாயிருக்கிறது.

ஈரப்பிரதேசத்திலும் உலர்ந்த பிரதேசத்திலும் கால் நடைகளைக் காப்பாற்றும் முறைகள் விசேஷ பேதப்படுகின்றன. தெற்கேயுள்ள ஈரப்பிரதேசங்களில் மேய்ச்சல் தரை ஏற்பாடு என்பது வழக்கத்திலிருக்கிறது. ஒவ்வொரு கிராமத்திற்கும் மாடு மேய்ப்பதற்காக தரிசுநிலம் ஒன்றிருக்கிறது. இதில் மேய்ந்துதான் அந்த கிராமத்து கால் நடைகள் பிழைக்கவேண்டியிருக்கின்றன. மழைக்காலங்களில் இந்த இடம் மாடுகளால் துகைக்கப்பட்டு ஒரே சேறும் சகதியுமாயிருக்கும். புற்களெல்லாம் சேறாகயிருக்கும். இந்த இடங்களில் உழன்று கொண்டிருப்பதனால் சுபாவமாக அவைகள் வியாதியினாலும், பட்டினியாலும், திறந்த வெளியில் கிடப்பதினாலும் விசேஷமாய் இறந்துபோகின்றன. இந்த ஜில்லாக்களில் கால்நடைகள் விசேஷமாய் மரண மடைகின்றன. அநேக விவசாயிகள் வளிகளிலிருந்து வந்த கால்நடைகளின் வயது 4 வருஷம்தான் என்று நிலைநிறுத்தியிருக்கிறார்கள். தேசத்தின் இந்த பாகத்தில் 100-க்கு 15 பிரீமியம் வருஷக்கட்டணம் வைத்தால் கட்டுப்படியாகாது. வடக்கேயுள்ள ஈரப்பிரதேசங்களில் மேய்ச்சலுக்காக இருக்கும் காடுகளின் விஸ்தீர்ணம் மிக அதிகமாயிருக்கிறது. அந்த இடங்களும் ஒருவாறு ஒதுக்குப் புறமாயிருக்கின்றன. பயன்கரமான வியாதிகள் சாதாரணமாய் ஏற்படுகிறதில்லை. அசாதாரணமாய் ஏற்படும் வக்கை என்னும் தொத்துவியாதி மாத்திரம் எப்பொழுதாவது அபூரவமாய் உண்டாகிறது. என்றாலும் இந்தக்காடுகளில் தெற்கேயுள்ள மேய்ச்சல் வெளிகளுக்கில்லாத ஒரு அபாயம் உண்டு. அது என்னவென்றால், காட்டெருமை, மான், பன்றி முதலிய விலங்குகள் கலந்து அவைகளினால் ஏற்படும் சிலவியாதிகள் நமது கால்நடைகளுக்கு தொத்துவதே. வடக்கு ஜில்லாக்களில் இன்ஷியூரென்ஸைப் பரவ வைப்பதாயிருந்



தால் பிரீமியம் (சந்தாதுகை) அதிகமாக இருக்கவேண்டியது அவசியமாகும். உலர்ந்த பிரதேசங்களிலுள்ள ஜில்லாக்களின் வழக்கம் என்னவென்றால் உழவுமாடுகளையெல்லாம் (அவைகள் விசேஷமாய் எல்லாம் எருதுகள்தான்) தனியாக ஒரு இடத்திற் கட்டி ஆகாரம் கொடுக்கிறார்கள். பசுக்கள், கன்றுகள், இவைகளையெல்லாம் கிராமங்களுக்கு அருகிலுள்ள காடுகளில் கூட்டம் கூட்டமாய் மேயவிடுகிறார்கள். கட்டிப்போட்டு தீனி கொடுக்கப்படும் உழவு எருதுகள் பல சௌகரியங்களையும் அடைவதால் வியாதிக்கு உள்ளாவது மிக்க அபூர்வம். பசு முதலிய கூட்டங்களில் அவ்வளவு அக்கரை எடுத்துக் கொள்ளாமையால் அற்ப தீனியும் சேறும் சக்தியும் உள்ள பட்டியில் அடைப்பட்டிருத்தல், முதலியவைகளினால் அவஸ்தைப்படுகின்றன. மழையில்லாத காலங்களில் பசுக்களும், கன்றுகளும் ஏராளமாய் மடிகின்றன. வியாதிகளினாலும் அவை விசேஷமாய் மாளுகின்றன. சில இடங்களில் தவிர பர்மா தேசத்தார்கள் விசேஷமாய் பசுக்களின் பாலைக் கறக்கிறதில்லை. அந்தப்பசுக்களும் இவ்வளவு அசிரத்தையாய் கவனிக்கப் பட்டும் திறமான உழவு எருதுகளை உண்டாக்குவதை கவனிக்க ஆச்சரியத்தை விளைவிக்கிறது.

மேற்கண்ட நிலைமைகளினால் இன்ஷியூரன்ஸ் முதல் முதல் ஏற்பாடு செய்யப்படுதல் வரட்டு கால்நடைகளுக்கு மட்டுமே இருக்கவேண்டும் என்றும் பிராணிகளுக்கு தனிப்பட்டி கட்டி தீனிபோடுவதையும் கவனமாய்ப் பார்ப்பதையும் வழக்கமாய் அனுசரிக்கிற உலர்ந்த ஜில்லா பிரதேசங்களிலுள்ள அப்படிப்பட்ட கால்நடைகளுக்குத்தான் முக்கியமாய் இருக்கவேண்டும் என்றும் விளங்குகிறது. கோஆபரேடிவ் சொஸைடிகளின் ரிஜிஸ்ட்ரார் அவர்கள் மிருகங்களுக்கு 6 மாதத்திற்கு ஒருதரம் விலை மதிப்பிட்டு ஒரு தடவையில் 6 மாதத்திற்கு மாத்திரம் இன்ஷியூர் செய்யும் எற்பாட்டை அனுசரிக்க வேண்டும் என்று பிரஸ்தாபித்தார். கீழ்க்கண்ட 5 ஜில்லாக்களுக்கு மாத்திரம் இந்த ஏற்பாட்டை செய்து பார்க்கலாம் என்று தீர்மானிக்கப்பட்டது, அதாவது மண்டலே, ஷ்வேபோ, ஷூகேயிங், கியாச்சி, மீக்டிலா. இந்த ஜில்லாக்களில் எல்லாம் கிடைக்கக்கூடிய் கணக்கு பிரகாரம் வரட்டுக் கால் நடைகளுக்கு பயங்கரமான தொத்துவியாதிகள் விசேஷமாய் இல்லை என தெரிகிறது.

பரஸ்பர கோஆபரேடிவ் கால்நடை இன்ஷியூரன்ஸ் சொஸைடிகள் 6 ஏற்பட்டபிறகு 1911-ல் மண்டலேயில் நடந்த ப்ரொவின்ஷியல் அக்ரிகல்சரல் கான்பரன்ஸிலும் கோஆபரேடிவ் கான்பரன்ஸிலும் கோஆபரேடிவ் கால்நடை இன்ஷியூரன்ஸைப்பற்றிய விஷயம் விவகரிக்கப்பட்டது. அதில் இந்த இன்ஷியூரன்ஸ் திருப்திகரமானதுதான் என்

றும், நடக்கக் கூடியதுதான் என்றும் தகுந்த ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டன. 1911 ஜூலை முதல் 1912 ஜூன் வரையில் 17 சொஸைடிகளும், 1912-13-ல் 36 சொஸைடிகளும் ஏற்பட்டன. ஆரம்ப வருஷங்களில் ஒப்புக்கொண்ட துகைகளின் ஒருபாகங் கொடுப்பதற்கு கூட சொஸைடியார் வேறு இடத்தில் ரீஇன்ஷியூர் செய்யவேண்டியது அவசியமா யிருந்தது. வாக்கை, முதலிய வியாதிகளுக்குக்கூட இன்ஷியூரன்ஸ் அனுசரிக்கப்படாவிட்டால் அதுபொது ஜன சம்மதம் ஆகாது என்றும் தெரிகிறது. 1913 ௵ ஆகஸ்டில் மண்டலேயில் நடந்த விவசாய கான்பரன்ஸிலும், கோஆபரேடிவ் கான்பரன்ஸிலும் இந்த விஷயம் பூராவும் மறுபடி விவாதிக்கப்பட்டது. விவசாய சொஸைடிகளின் சேர்மன்கள் 300 பெயர்களுக்கு மேல் கூடின ஒரு மீட்டிங்கில் பிரீமியம் (சந்தா) துகை 100-க்கு $3\frac{1}{8}$-க்கு பதிலாக 100-க்கு, 5 ஆக உயர்த்தப்படவேண்டும் என்றும், வக்கை வியாதிகளால் ஏற்படும் மரணம்கூட ஒப்புக் கொள்ளப்படவேண்டும் என்றும் ஒரு ரீஇன்ஷியூரன்ஸ் சொஸைடி இருக்க ஸ்தாபிக்கப்படவேண்டியது அவசியம் என்றும், மோசம் போகாமலிருப்பதற்குகால்நடை இன்ஷியூர் செய்யும் மெம்பர்கள் கோஆபரேடிவ் கிரெடிட் சொஸைடிகளில் மெம்பர்களாக இருக்கவேண்டியது அவசியம் என்றும் தீர்மானிக்கப்பட்டன. ஆரம்ப வருஷங்களில் சொஸைடியார் நாணயப்படி பணம் கொடுப்பதற்காக ராஜாங்கத்தார் அவர்களுக்கு வட்டியில்லாமல் கடன் கொடுத்து உதவலாம் என்று இந்தியா மந்திரி கொடுத்த ஆக்ஞாபத்திரம் 1915-ல் கிடைத்தது. அம்மாதிரி உதவும் பணம் ஒருவருஷத்தில் ரூ. 25,000-க்குமேல் போகக்கூடாது. 6வது வருஷம் முதல் சென்டரல் சொஸைடியின் ரிசர்வ் பண்டுத்துகை யிலிருந்து திருப்பிக்கொடுக்கப்படவேண்டும். கால்நடை இன்ஷியூரன்ஸ் விஷயம் மறுபடியும 1915 ௵ ஆகஸ்டில் மண்டலேயில் நடந்த விவசாய கான்பரன்ஸிலும் கோஆபரேடிவ் கான்பரன்ஸிலும பிரஸ்தாபிக்கப் பட்டது. அதின் தீர்மானமாவது—ஸென்ட்ரல் இன்ஷீயூரன்ஸ சொஸைடி ஒன்று ஸ்தாபனமாக வேண்டும்; இந்த வேலை நடத்துவதற்கு ஏற்பட்ட 5 ஜில்லாக்களிலுமுள்ள ஒவ்வொரு கிரெடிட் சொஸைடியிலும் கால்நடை இன்ஷியூரன்ஸ் வேலையும் சேர்ந்து நடைபெற வேண்டும்; இந்த வேலையைக் கண்காணிக்கும் பொருட்டு இன்ஷியூரன்ஸ் வேலை சேர்க்கப்பட்ட கிரெடிட் சொஸைடிகளின் யூனியன் ஆபீசில் கால்நடை இன்ஷியூரன்ஸ் சொஸைடி ஆபீச் ஒன்றும் சேர்க்கப்படவேண்டும்.

"அப்பர் பர்மா சென்டரல்கோஆப்ரேடிவ் கால்நடை மிருகரியின்ஷியூரன்ஸ் சொஸைடி" யாவது 1915 ௵ ஆகஸ்டில் ரிஜிஸ்தர் செய்யப்



பட்டது. அதில் கோவாப்ரேடிவ் விஷயங்களையும் விவசாய விஷயங்களையும் சீர்திருத்தப் பிரியப்படும் 15 கௌரவ மெம்பர்களும் கிராம கால்நடை இன்ஷியூரன்ஸ் சொஸைடியார்களும் சேர்ந்திருக்கிறார்கள். இந்த சொஸைடிகள் மெம்பர்களிட மிருந்து கிடைக்கும் துகையில் பாதியை தாங்கள் வைத்துக் கொண்டு பாதித் துகையை ரிஇன்ஷியூரன்ஸ் சொஸைடிக்கு அனுப்பிகின்றன. அது ஒரு ஜனரல் மீட்டிங் கமிட்டியாராலும், ஒரு மானேஜராலும் பராமரிக்கப் படுகிறது; தற்காலம் ரிஜிஸ்ட்ரார் அவர்கள் கௌரவமானேஜர் வேலையைப் பார்க்கிறார்—ராஜாங்க பாத்தியத்தை கவனிக்கும் பொருட்டு ஒரு கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர் ஜனரல் கமிட்டியில் மெம்பராக இருக்கிறார். அதில் நடைபெறும் வருஷத்திய பிரீமியம் வரும்படியும், சென்ற வருஷத்திய நிகரலாபம் அடங்கிய ரிசர்வ்பண்டுத்துகையும் சேரும். மேற்குறித்த ரிசர்வ்பண்டு இந்தியா நேஷனல் பாங்கியிலும் அப்பர் பர்மா சென்ட்ரல் கோஆப்ரேடிவ் பாங்கியிலும் வைக்கப்பட்டிருக்கிறது—சொஸைடிகளெல்லாம் 6 மாதத்திற்கு ஒரு தடவை மெம்பர்களின் பெயர், நம்பர், விவரங்கள் இன்ஷியூர் செய்யப்பட்ட கால்நடைகளின் விலை இவைகள் அடங்கிய ஸ்டேட்மெண்டு ஒன்று தயாரித்து சென்டரல் சொஸைடி மானேஜருக்கு அனுப்பவேண்டும்.

கிராமத்திய பரஸ்பர கால்நடை இன்ஷியூரன்ஸின் பைலாக்கள் பிரெஞ்சு மூசுவல் சொஸைடிகளின் ரூல்களை அனுசரித்ததாக யிருக்கின்றன. சண்டையினாலாகிய மரணம் களவு முதலியவைகளுக்கு விலக்கு விதிகள் இருக்கின்றன. தொத்து வியாதிகளைப் பற்றிய சுகாதார ஏற்பாடுகளை மீறி நடப்பவர்களுக்கு சொஸைடியார் இன்ஷியூரன்ஸ் பணம் கொடுக்கமாட்டார்கள்-ஒவ்வொரு வருஷமும் ஜெனரல் மீட்டிங்கினால் தேர்ந்தெடுக்கப்பட்ட மூன்று அனுபோகசாலிகளால் விலைமதிக்கப்படும். விலைகள் ஒன்றுக்கொன்று சரியாக இருந்தால் வேற்று கால் நடைகள் பந்திசெய்து கொள்ளத் தடைகிடையாது; பிரீமியம் வருஷம் ஒன்றுக்கு 100க்கு 5வீதம் மார்ச்சு மாதத்திலும் செப்டம்பர் மாதத்திலும் கொடுக்க வேண்டும்,—சேர்ந்த துகைகளை லோகல் கிரெடிட் சொஸைடியாரிடம் கேட்டபொழுது கொடுக்கும்படி சேமித்து வைக்கப்படும்-மரணம் நேர்ந்த பொழுது நல்ல அனுபோக சாலிகளின் அத்தாக்ஷி வேண்டும். இன்ஷியூர் செய்யப்பட்ட துகையில் மூன்றில் இரண்டு பங்குதான் சொஸைடியார் கொடுப்பார்கள். தோல், மாமிசம், இவை சொஸைடிக்குச் சொந்தமாகையால் அவைகள் விற்கக்கூடியவை யாயிருந்தால் அவர்களே விற்பார்கள். ஆகையால் அது ஒட்டுவாரொட்டி வியாதியால் செத்தாலும் வேறு எப்படிச் செத்தாலும் சொந்தக்காரனுக்கு இன்ஷியூர் செய்யப்பட்ட துகையில் மூன்றில் இரண்டு பங்குதான் கிடைக்கும். சொஸைடியானது ஜனரல் மீட்டிங்கினாலும் கமிட்டியாராலும் கண்காணிக்கப்படுகிறது.

சென்டரல் ரிஇன்ஷியூரன்ஸ் சொஸைடி ஏற்படுகிற வரையில் கிராம சொஸைடிகள் ஆரம்பம் செய்வது தடைப்பட்டது. 1914௵ ஜூலை முதல் 1915 ஜூன் முடிய அம்மாதிரி சொஸைடிகள் ஏழுதான் ரிஜிஸ்டர் செய்யப்பட்டன. ஜூலை 1915 முதல் ஜூன் 1916 முடிய 247 சொஸைடிகள் ரிஜிஸ்தர் ஆகியிருக்கின்றன. அடுத்தவருஷம் சொஸைடிகள் ஏராளமாய் ரிஜிஸ்டர் செய்யப்படும் என்று ஊகிக்கப் படுகிறது. 1916௵ ஜூன் 30உ நிலை பெற்றிருந்த 305 கிராம சொஸைடிகளுள் சுமார் 100 சொஸைடிகள் சென்டரல் சொஸைடியோடு ஐக்கியமாகவில்லை. 1916௵ மார்சு ஏப்ரல் மாதங்களிற்தான் மேற்கூறிய புது சொஸைடிகள் பெரும்பான்மை வேலை ஆரம்பித்ததால் அவைகளின் பயனை குதைந்ற பக்ஷம் அடுத்த அக்டோபர் மாதத்திற்குள் அறிய முடியாது.

அநேக வருஷங்களாக வேலைசெய்து கொண்டிருக்கும் அம்மாதிரி சொஸைடிகளின் திரவிய அபிவிருத்தியையும் ஒப்புக்கொண்ட துகையில் மூன்றில் இரண்டு பங்குதான் கொடுப்பது என்ற கொள்கையையும் கவனித்தால், 100க்கு 5 ஆன பிரீமிய விகிதம் அனுவசிம் என்றும், இன்ஷியூரன்ஸின் அபிவிருத்திக்குத் தடையாகும் என்றும் ஊகிக்கலாம். என்றாலும் பர்மாவில் சென்ற 10 வருஷங்களாக வடக்கு ஈரப் பிரதேசத்தை தவிர மற்ற இடங்களில் வக்கை வியாதியே விசேஷமாய் இல்லாமல் கால்நடைகள் சுகமடைந்திருக்கின்றன. கால் நடை வைத்திய ஏற்பாட்டினாலோ அல்லது அதிருஷ்டவசத்தாலோ, வியாதிவரக்கூடிய காலம் இல்லாமையாலோ, வேறு எந்தக் காரணத்தாலோ, இந்த வியாதி குறைந்திருக்கிறபடியால் பிரீமிய விகிதத்தில் தவறுதலாய் சாஸ்தி செய்திருந்தாலும் அது பத்திரமான வழியில் பிசகினதாகும். அநேக சொஸைடிகள் போஸ்டாபீசு இல்லாத இடங்களில் இருக்கிறபடியால், அங்கிருந்து சென்டரல் சொஸைடிக்கும் சென்டரல் சொஸைடியிலிருந்து அவ்விடங்களுக்கும் பிரீமியம் துகையும் உரிமைத் துகையும் சேர்க்கப்படுவது மிகவும் கஷ்டமாயிருக்கிறது. அதினால் அதிக அபிவிருத்தியடைவதில் தடைப்பட்டாலும் காலக்கிரமத்தில் இக்கஷ்டம் நிவிர்த்தியாகும்.

30-6-1916-ல் முடிவாகும் வருஷத்தில் மூன்று இடங்களில் வக்கை நோய் உண்டாகி மதிப்புக்கு அதிகமான மரணங்கள் நேரிட்டன. இந்த கோவாபரேடிவ் முயற்சியினால் ஆகும் சௌகரியங்களும் கால் நடைகளை அநியாயமாய்மடிய விடாமல் தடுக்கும் முயற்சிகளும் எல்லாருடைய மனதிலும் நன்றாய்ப்பதிந்து விட்டன. 1916 ஜூன் 30உ வரையிலுள்ள ஆதாய விஷயங்களைக் காட்டும் ஸ்டேட்மெண்ட்டைப் பார்த்தால் அது காட்டும், சராசரிக்கணக்கு உருப்படி ஒன்றுக்கு ரூ. 30, இன்னும் உண்மையாய் கவனித்தால் ரூ. 40 ஆகும். தோலும் மாமிசம் விற்ற



ஆதாயம் எதிர்பார்ப்பதற்கு அதிகமாக ஏற்பட்டிருக்கிறது. சொஸைடி கணக்குகள் அந்த விவசாய சொஸைடி கணக்குகளுடன், தணிக்கை செய்யப்படுகின்றன.

தணிக்கை செய்யும் ஆடிடர்கள், சொஸைடி சிப்பந்திகளும் கவர்ன்மெண்டு ஆடிடர்களுமே. மேற்பார்வை யூனியன் ஆபீசர் இன்ஸ்பெக்ஷன் செய்கிறார்கள். இம்முயற்சியின் பயன் முழுவதையும் நான் முன்னாடியே ஊகிக்க போதுமான அனுபவமும் காலமும் ஆகவில்லையாகையால் அதை நன்றாய்கூற முடியாது. ஆனால் பர்மியர்கள் மனதில் கோவாப்ரேடிவ் ஊக்கம் மிக உறுதியாய் குடிகொள்ள ஆரம்பித்து விட்டது என்று சொல்லலாம் ஆகவே கியாச்சி ஜில்லாவில் சராசரிபார்த்தால் சாகுபடியான 40,50 ஏக்கர்பூமிக்கு ஒரு கோ வாப்ரோடிவ் விவசாய சொஸைடி வீதம் யேற்பட்டிருக்கிறது. மண்டலே, சபேயிங், ஷ்வேபோ, ஜில்லாக்களில் கோ ஆப்ரேடிவ் பயிர்ச்சிலவும் கோ வாப்ரேடிவ் விற்பனையும் மிகவும் விருத்தியடைந்திருக்கிறது. பிரீமிய விகிதம் அதிகமாயில்லாமலும் பணம் போக்குவருத்துகள் கஷ்டமில்லா மலுமிருந்தால் கோ ஆப்ரேடிவ் கால்நடை இன்ஷியுரன்ஸ் உறுதியாய் வேரூன்றி விவசாமாய்ம் பரவுவதற்கு யாதொருதடையும் இருக்காது.

---

## கீழ்ச்சேரி விவசாய பாங்கி.

ஆனரபில் திவான் பஹதூர் P. இராஜகோபாலா சாரியார் அவர்கள் கீழச்சேரி விவசாய பாங்குகட்டிட அஸ்திவாரக்கல் நாட்டின கொண்டாட்டம்.

கீழச்சேரி விவசாயபாங்கி இவ்விராஜதானியில் முதன் முதலில் ஸ்தாபனமான சங்கங்களில் ஒன்றென நமது கூட்டுறவினர்கள் எல்லோரும் அறிவார்கள். அன்றியும் அது ஒழுங்குபெற நடக்கும் சங்கங்களில் ஒன்றென்பதும் அவர்கள் அறியக் கிடந்தது. அந்த சங்கத்திற்கு ஒரு கட்டிடம் கட்டும் நிமித்தம் கிருகாரம்ப சடங்கு நிறைவேறிற் றென்பதை கூட்டுறவினர்கள் கேட்டு சந்தோஷப்படுவார்கள்.

கூட்டுறவினர்கள் எல்லோரும் கீழச்சேரி சங்கம் இப்பேர்ப்பட்டதென அறிவார்களேயன்றி அந்த சங்கமிருக்கும் கிராமமும் அதின் சரித்திரமும் அவர்களில் பெரும்பான்மையோர் அறியார்கள். அதனை அவர்கள் அறிவார்களாயின் அந்த சங்கம் செழித்திருப்பதன் காரணத்தை ஒருவாறு உணரலாம்.

கீழ்ச்சேரி தற்போது திருவள்ளூர் தாலூக்காவில் கடம்பத்தூர் ரெயில்வே ஸ்டேஷனுக்கு ஆறுமைல் தூரத்தில் சுமார் 400 வீடுகள் உள்ள ஓர் கிராமம். குடி ஜனங்களில் பெரும் பான்மையோர் ரோமன்

கத்தோலிக் கிறிஸ்தவர். 50 இந்துக்கள் வீடுகளில் 30 வேளாளர்கள் வீடுகளும் உண்டு. இது சிறு கிராமமாயினும் மேல்நாட்டுப்படிப்புவாசனையானது மற்று சில கிராமங்களைக் காட்டிலும்சற்றுமுன்னதாகவே இதற்கு வீசிற்றென்னலாம். அதுகாரணம் பற்றியே தான் இக்கிராம வேளாள மக்களில் கவர்ன்மெண்டு உத்தியோகங்களில் நல்ல அந்தஸ்தில் சிலர் வந்திருந்தனர். அல்லாமலும் இங்குள்ள கிறிஸ்தவர்கள் பண்டைநாள் கிறிஸ்தவர்களாகையால் அவர்களிருப்பிடத்தில் பெரியதோர் கோயிலும், சன்னியாசிகள் வசிக்கமடமும் கன்னியாஸ்திரீகள் விளங்க நன்னெறிகளும் (Nunneries) உண்டாயிருந்தன. இந்நற் குணமுள்ள சந்நியாசிகள் உயர்தரப் படிப்பு பெற்றவர்களா யிருந்தது கொண்டு இவ்வூர் மக்களுக்கு நாகரீகத்தையும், படிப்பினையும் கற்றுக் கொடுத்தனர். இப்படி அறிவு விளங்கி யிருந்தது மல்லாமல் இயற்கையிலேயே ஒற்றுவாழும் குணமும் இவ்வூர் மக்களுக்குண்டு. வேளை ஒன்றுக்கு 60 பெயர் ஒருங்கு சேர்ந்து சாப்பிட வேண்டிய குடும்பம் இன்னும் அந்த ஊரில் உண்டு. வர்த்தகம் செய்வாரும், சர்க்கார் உத்தியோகம் செய்வாரும், ஏக குடும்பமாயிராமல் தனித்தனி பிரிவதனால் குடும்பத்துக்குகேடொன்று மில்லை. விவசாயிகளுக்கு அப்படி யில்லை. அண்ணன் தம்பி யுள்ளவர்கள், விவசாயிகள் பிரிவதால் விவசாய வருமானம் குறையும்; கூடிவேலை செய்தால் விவசாயத்தில் ஊதியம் மிகும். ஆகவே கூட்டுற வென்பது இக்கிராம வாசிகளுக்கு ஏற்கனவே யிருந்தது. அது பற்றி அங்குள்ள சங்கம் உன்னத நிலைமையில் இல்லாமல் வேறெப்படி யிருக்கும். மேலும் இக்கிறிஸ்தவர்களின் உழைப்புப் பெருமை மற்ற கூட்டுறவினர்களுக்கும் தெரியவரின் அது பிரயோஜனமா யிருக்குமென்று அவர்கள் இந்நாட்டில் குடியேறிய சரித்திரம் சிறிது எழுதுகிறேன்.

இவ்வூர் கிறிஸ்தவர்கள் 1780௵த்தில் கிருஷ்ண ஜில்லாவிலிருந்து Father மானென்டி என்பவரால் இவ்விடம் அழைக்கப்பட்டு வந்தவர்களாக அறியப்படுகிறது. இந்த மிஷனரியுடன் வந்தவர்கள் 200 குடும்பத்தார்களென்றும் அவர்களுக்கு அந்த காலத்து கவர்னர் உதவியைக் கொண்டு ,அப்போது காடாயிருந்த கீழ்ச்சேரிக்கு அடுத்த கோவிந்தமேடு கிராமம் கவுல் கொடுக்கப்பட்டதென்றும் சொல்லப்படுகிறது. இந்நிலம் இவர்கள் அனைவருக்கும் போதாதது காண்டு இவர்கள் பக்கங்களிலுள்ள கிராமங்களில் குடியேறத்தலைப்பட்டார்கள். பக்கங்களிலுள்ள கிராமங்களில் உள்ள நிலங்கள் ஏற்கனவே குடியிருந்த ஜனங்களால் கைப்பற்றப்பட்டு சாகுபடியில் இருந்தபடியால், ஏழைகளாயுள்ள இவர்களுக்கு அவைகள் கிடைக்கும் வழி எப்படி? நிலத்தில் போட்ட பணத்துக்கு வட்டிகூட கிட்டாது என்றும், உழுபவனுக்கு தாத்துக் கோலுக்கும் மிஞ்சாது என்று சொல்லிக்கொண்டு சோம்பித்திரிந்து



கடன் வாயகப்பட்டு நிலங்களைப் போக்கடித்துக்கொள்ளும் மிராசுதாரர்கள் கவனிக்க வேண்டிய விஷயம் இங்கொன்றுண்டு. ஜாதியிலே கம்மவாரான இக்கிறிஸ்தவர்கள் குடியேறிய விதத்தை நோக்குங்கள். செழிப்புற்றிருந்த அக்கம்பக்கம் கிராமங்களில் யாதொன்றும் விளையாதென்று தரிசாய் கிராமத்தார் கிடத்தின ஓடைமுதலிய நிலங்களை கைக்கொண்டு அம்மேட்டுகளிலேயே தங்கள் வீடுகளையும் கட்டிக்கொண்டனர். முயற்சி இப்படிப்பட்டதென்று அறிய ஒருவன் விரும்பினால் இந்த ஜாதியார் செய்யும் கிருஷி முறையை அவன் தன் கண் கூடாக்காணுவதவசியம். மேடெனும் இந்நிலங்களை அவர்கள் கிராமத்தில் முதற்றர நிலமென சொல்லும்படி சிறிது காலத்திற்குள் மாற்றி சிக்கனமெனும் குணத்தை கைப்பற்றி செல்வவான்களாய் மற்றும் பல கிராமங்களின் நந்நிலங்களை விலைக்குப்பெற்று விருத்தியடைந்து குடியேறிய கிராமங்களில் மேட்டுகுடிகளென விளங்குகின்றார்கள். , இவர்களில் லக்ஷாதிபதிகளாய் விளங்கு வோரும் உண்டு. இவர்கள் செல்வம் வந்த பின்பும் முயற்சியைக் கைவிடாது மேன்மேலும் விருத்திக்கு வரும் குணத்தையுடையவர்கள்., சமீபத்திலும் இவர்களுள் ஒரு நிலநெருக்கமுள்ள கிராமத்தார் புதிதோர் கிராமம் மொத்தமாய் விலைக்குக்கொண்டு தங்களுள் விவாதமின்றி கூட்டுறவு கோட்பாட்டைப் பின்பற்றி நிலங்களை பங்கிட்டுக்கொண்டார்கள். இத்தகைய ஜனங்கள் தங்கள் கிராமங்களில் ஏற்படுத்திக்கொண்ட ஐக்கியச்சங்கங்கள் ஒவ்வொன்றும் ஒழுங்குபட வேலை செய்வது அதிசயமேயோ? நிற்க, இனி அஸ்திவாரக்கல் சடங்கை பின்பற்றி எழுதப்படும்.

கீழச்சேரி சங்கம் முதன்முதன் ரிஜிஸ்திராராயிருந்த கனம் பி. ராஜகோபாலா சாரியாரால் ரிஜிஸ்தர் செய்யப்பட்டது கொண்டு அவராலேயே அஸ்திவாரக்கல் நாட்டிக்கொள்ள வேண்டுமென்று அப்பாங்கினர் விரும்பியிருந்தனர். அவரும் அந்த சடங்கினை தாமே செய்யவும் அவாவியிருந்தனர். சந்தருப்பம் 1917௵ ஜூலை 23௳ சோமவாரம் பிற்பகல் 3-மணிக்கு நேர்ந்தது. குறிப்பிட்ட நேரம் தவறாமல் ஆனரெபிள் மெம்பர் தமது சிநேகிதர் ரிவினியூ போர்ட் செகிரிடெரி T. விஜயராகவாசாரியாரோடு சென்னையினின்று மோடார் ரதத்தில் வந்தனர். வரும்வழியில் மப்பேடு கிராமத்தினர் பெருங்கூட்டமாய் குறுக்கிட்டு மேளவாத்தியங்களுடன் வரவேற்றினர். இக்கூட்டத்தில் பஞ்சமர் மிகுதியும் ஆரவாரித்து கனவானிடம் தங்கள் நன்றியைக் காட்டினது பாராட்டத்தக்கது. உயர்ந்த பதவியில் இருக்கும் இவர் அப்பஞ்சமரிடமும் ரிஜிஸ்திராராயிருந்த காலத்தில் தனித்தனி பேசினரன்றோ? பிறகு மோடார் கீழச்சேரியை சமீபித்ததும், ஒரு பெருந்திரள் அவரை வரவேற்கத் தயாராயிருந்தது. கீழச்சேரி சங்கத்தினுடைய மெம்பர்களும், அந்த யூனியன் சங்கங்களினுடைய மெம்பர்களும், மற்றுமுள்ள கூட்டுறவினர்களும், டிவிஷன் உத்தி

யோகஸ்தர்களுமாக திரண்ட கூட்டத்தின் நடுவே, ஆவைப்பிரிந்த கன்று எப்போது தாய் வருமோவென்று ஆவல் கொண்டிருப்பதுபோல் எதிர்பார்த்து இருந்த ஜனங்கள் தங்கள் ஆசையைத் தெரிவிக்க தன் பொருட்டு கம்பமிட்டு நாட்டி அலங்கரித்த நல்வரவு மேடையினருகில், கீழச்சேரி பாங்கின் காரியதரிசி சவரய்ய நாயுடு கிராமத்தார் பேரில் ஒரு நல்வரவு பத்திரம் வாசித்துக்கொடுத்தார். பின்னர் கனம் மெம்பர் பாண்டு வாத்திய சகிதம் அலங்கரித்திருந்த மண்டபத்திற்கு அழைக்கப்பட்டு அமர்த்திரியிருந்த ஆசனத்தில் உட்கார்ந்தார். மேடையின்பேரில் கூட்டுறவினர்களை யன்றி வேறு கனவான்களும் வீற்றிருந்தார்கள். உடனே கீழச்சேரி பாங்கின் பிரசிடெண்டும் ஐக்கிய யங்கம் செங்கற்பட்டு ஜில்லாவில் தலையெடுக்கக் காரணபூதர்களில் ஒருவருமான ராய் சாயபு அருளய்ய நாயுடு அஸ்திவாரக்கல்லினை நாட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுங்கால் அடியிற் கண்ட வற்றை சொன்னார்:—

"என் மனத்தின்கண் குதூகலம் எழுகின்றது. எனது பாங்கின் நிர்வாக சபையினரும் மற்ற மெம்பர்களும் பெருமகிழ்ச்சி கொண்டிருக்கின்றனர். ஏன்? இன்று நடக்கும் இச்சடங்கினை தாங்கள் செய்வது எவ்விதத்திலும் பொருத்த முடையதாயிருப்பது கண்டு; இன்றைக்குச் சற்றுத் தாழ பதின்மூன்று வருஷத்திற்கு முன் 1904-ம் வருஷம் செப்டம்பர்மீ 4உ இத்தகைய ஒரு கூட்டத்தின் நடுவில் ஓர் திலகம்போல் விளங்கி கீழ்ச்சேரி விவசாய பாங்கினை ஸ்தாபித்துக் கொடுத்தீர்கள். இன்றும் இக்கூட்டத்தின் நடு நாயகமாய் நின்று, எங்கள் பாங்கு செவ்வனே செழித்திருக்கிறது என்னும் சங்கதியை உலகத்தார் அறியும் "அறிகுறியாக" அதற்கு கட்டிடம் கட்ட, அன்று பாங்கினை ரிஜிஸ்டர் செய்த திருக்கரத்தினாலேயே இன்னும் இவ்வஸ்திவாரக் கல்லினை நிலை நிறுத்தப் போகின்றீர்கள். அக்காலத்தில் எங்கள் பாங்கை ஸ்தாபிக்க அம்மம்ம! தாங்கள் பட்ட சிரமம் சொல்ல எளிதன்று. ஐக்கிய சட்டம் என்பது ஒன்று ஏற்பட்டுள்ளது; அதன் கீழ் எங்கள் சங்கத்தை ரிஜிஸ்டர் செய்து கொடுக்க வேண்டும் என்று நாங்கள் விண்ணப்பமிட்டு அவ்விண்ணப்பத்தின் பேரில் தாங்கள் இந்த சங்கத்தை ரிஜிஸ்தர் செய்தீர்களா? இல்லை. ஓர் சட்டம் உண்டென்றாவது ஐக்கிய சங்கம் இன்னதென்றாவது அறியாத எங்களைத் தேடிக்கொண்டு, முன் பின் பரிச்சியம் இல்லாதார்பால் சென்றுதவும் பெரியார் போல், நாங்களிருக்குமிடம் வந்தீர்கள். ஐயா, தாங்கள் டிஸ்ட்ரிக்டு கலெக்டர் என்னும் ஹோதாவையும் மறக்கும்படி செய்து, பரம ஏழையின் சகோதரென எண்ணும்படி, எங்கள் தெருத் திண்ணையில் எங்களுடன் சமமாயுட்கார்ந்து அளவளாவி, எங்களுக்குக் கரும்பு தின்னக் கூலியும் கொடுத்ததொப்ப, எங்கள் நல்லெண்ணத்தைக் கைக்கொண்டீர்கள். இந்த ஸங்கத்தை ஸ்தாபிக்க இப்படிப்பட்ட சிரமம் ஒரு நாளுடன் இரண்டு நாளுடன் ஒழிந்ததா? "ஒரு கிராமத்திற்கு ஒரு சங்கம்" என்று தாங்கள் சொன்னபோது, அது 'சரியில்லை, எங்கள் சங்கத்திற்கு 30-கிராமங்கள் வேண்டுமென்று சொன்னோம். எங்களுக்கு வெறுப்புண்டாகா வண்ணம் அதற்குத் தாங்கள் இணங்கி, தாங்கள் எங்களுடன் வெயிலென்றும், வண்டி செல்ல நல்ல வழியில்லையென்றும் பாராது, ஒவ்வொரு கிராமத்திற்கும் சென்று கூட்டுறவு ஞானம் ஊட்டி, இப்படி பலநாள் கஷ்டப்பட்டு எங்கள் பாங்கை ஸ்தாபித்துக் கொடுத்தீர்கள். ஸ்தாபனமானவுடன் நீங்கள் வேலை செய்து கொள்ளுங்கள் என்று எங்களை வாளா விட்டுவிட்டீர்களோ? இல்லை. எங்களுக்கு நேர்ந்த சிறு சந்தேகங்களையும் நிவிர்த்தி செய்யும் பொருட்டும், சரியான வழியில் நாங்கள் சங்கத்தை நடத்தும் பொருட்டும், வசதி குறைவுற்ற இந்த கிராமத்திற்கு, மெய் வருத்தம் வெளிகாட்டாது, மீட்டும் மீட்டும் வந்தீர்கள். கனவானே, தங்கள் பொறுமை இருந்தவாறு என்னே! பங்குத் தொகைக்காக "ஒரு ரூபாய் செலுத்தும் குடியானவனிடம்" தாங்கள் பேசும்போது தங்களுக்கிருந்த பொறுமையென்னும் பெருங்குணமே தங்களை இந்தியனுக்குக் கிடைக்கக்கூடிய தாங்களிப்போதிருக்கும் உன்னத பதவிக்குக் கொண்டுவந்து விட்டதெனத்தோன்றுகின்றது. தங்களுக்கு இந்த உன்னதபதவி கிடைத்தபோது கூட்டுறவினர்களாகிய எங்களுக்கு உண்டான சந்தோஷத்திற்கு அளவும் உண்டோ? இவ்வுன்னத பதவியிலிருந்தும், கடன்வாய்ப்பட்டு திரிதரும் ஏழைகளின் வேண்டுகோளுக்கிரங்கி, தங்கத்தானும் வசதியில்லாத இச்சிறு கிராமத்திற்கு தாங்கள் வர இசைந்தது தங்கள் ஒப்புயர்வற்ற பெருமித குணத்தைக் காட்டுகின்றது. அன்றியும், ஐக்கிய இயக்கத்தினிடத்தும் எங்கள் பாங்கினிடத்தும் தங்களுக்கிருக்கும் அபிமானத்தையும் காட்டுகின்றது. இப்பெருமித குணமும் இவ்வபிமானமும் எங்கள் பாக்கியமாய் முடிந்தது. முன் சொன்னபடி எந்த திருக்கரத்தைக் கொண்டு எங்கள் பாங்கை ரிஜிஸ்டர் செய்து கொண்டோமோ அந்த திருக்கரத்தினாலேயே எங்கள் பாங்கின் கட்டிட கடைக்கல்லை இட்டுக்கொள்ளப் போகிறோம்.

இனி தாங்கள் இவ்வளவு சிரமப்பட்டு ஸ்தாபித்துக்கொடுத்த பாங்கு என்னிலைமையிலிருக்கிறதென்று அறிய விரும்புவது இயற்கையே. தாங்கள் இதை ரிஜிஸ்தர் செய்த காலத்தில் இந்த பாங்கு 30-கிராமங்கள் அடங்கிய ஒரு சங்கமாயிருந்தது. இப்போது இவ்வொரு கிராமத்திற்கே அது சொந்தமாய், முன் சேர்ந்திருந்த கிராமங்களில் 30-புதுசங்கங்கள் உண்டாகவே ஒரு யூனியன் ஏற்படுவதற்குக் காரணமாய்விட்டது. பாங்கின் விவகார எல்லைகுறைந்து புதுசங்கங்கள் உண்டாக உண்டாகத்

தாய்ச்சங்கத்தின் மெம்பர்கள் குறைந்துகொண்டே வந்தார்கள். 1905-1906-ம் வருஷத்தில் இருந்த 227-மெம்பர்களுக்குப் பதிலாக 1916-1917-ம் வருஷக் கடைசியில் 100-மெம்பர்கள் தானிருந்தார்கள். இப்படி மெம்பர்கள் குறைந்ததினால் அதின் லேவாதேவியும் குறையவேண்டு மன்றோ? அப்படியில்லை. 1915-ம் 1916-ம் வருஷத்தில் ரூபாய் 5,000-த்திலிருந்த அதின் லேவாதேவி படிப்படியாய் 1916, 1917-ம் வருஷக் கடைசியில் ரூ. 30,000-க்கு உயர்ந்தது. லேவாதேவி அதிகரித்ததினால் மிகுந்த பணத்தை அதனை யொப்ப கீழச்சேரி யூனியனில் சேர்ந்துள்ள சங்கங்களுக்குக் கடன்கொடுக்கப்பட்டிருக்கின்றது. இந்த பாங்கு தன் லேவாதேவிக்கு வேண்டிய பணத்தையெல்லாம் தனது முயற்சியினாலேயே டிபாசிட்டாகவே பெற்றதல்லாமல் சென்ட்ரல் பாங்குகளின் உதவியை நாடவில்லை. சென்ட்ரல் பாங்கி இல்லாத காலத்தில் தன்கையேதனக் குதவியென்னும் ஐக்கியக் கோட்பாட்டை எங்களுக்கறிவுறுத்தினதின் பயன் இது போலும். 1905-1906-ம் வருஷக்கடைசியில் எங்களுக்கிருந்த க்ஷேம நிதி ரூபாய் 358. இன்றைக்கு க்ஷேமநிதி மொத்தம் ரூபாய் 4,125. இது எங்களிடமிருந்து பிரிந்துபோன சங்கங்களுக்கு நாங்கள் பிரித்துக் கொடுத்த க்ஷேமநிதிபோக மிகுந்தது. சட்டப்படி, பிரிந்த சங்கங்களுக்கு க்ஷேமநிதியில் ஒரு பாகத்தைக்கொடுக்க அவசியமில்லையாயினும் கூட்டுறவைப் பின்பற்றி சகோதரவாஞ்ஞைகொண்டு பிரித்துக்கொடுக்க முந்தினோம். 1905-1906-ம் வருஷத்தின் எங்கள் நிகரலாபம் ரூ. 256. கடந்த வருஷத்தின் லாபம் ரூ. 1,108. இதனுடன் லாபத்தில் சேர்க்கக் கூடாதென்று தள்ளிவிடப்பட்ட கணக்கில் ஏறிய வட்டியைக் கூட்டவில்லை. தாங்கள் ரிஜிஸ்டர் செய்த இரண்டொரு வருஷங்களுக்கெல்லாம் இந்த பாங்கு செவ்வனே வேலைசெய்கிறதென்று தாங்கள் அபிப்பிராயப்பட்டபோது "சென்னை இராஜதானியில் ஐக்கியவித்தை இடுவதற்கு முதல் முதல் தேடிய இடங்களில் கீழச்சேரியும் ஒன்று. அங்கிருக்கும் பாங்கு செழித்து மற்றவைகளுக்கு வழிகாட்டியாய் செவ்வனே நடைபெறுகிறதென்று" சொன்னீர்கள். அப்போது "கீழச்சேரி" என்று சொன்னால் இப்போது கீழச்சேரி யூனியனில் சேர்ந்திருக்கும் பிரதேச மொத்தத்திற்கும் அர்த்தமாகும். அப்படித் தாங்கள் சொன்ன திருவாக்கு மெய்வாக்காய் முடிந்திருப்பதாக இக்கீழச்சேரி பாங்கின் வருஷாந்தர ரிபோர்ட்டுகளாலும் யூனியனில் சேர்ந்த சங்கங்களின் ரிபோர்ட்டுகளாலும் வெளியாகும். மேலும் தாங்கள் செங்கற்பட்டு ஜில்லாவும் வட ஆற்காடு ஜில்லாவும் ஐக்கியபயிர் தழைப்பதற்கு தகுந்த இடங்கள் என்று சொன்னதுண்டு. ஐயா, தீர்க்க தரிசியைப்போல தாங்கள் சொன்னவாக்கு எவ்வளவுதூரம் பலித்திருக்கிறதென்று அறிய தாங்கள் சந்தோஷப்படுவீர்கள். இப்போது இந்த ஜில்லாவில் 300 சங்கங்களும் 9-யூனியன்



களும் வட ஆற்காட்டில் 200-சங்கங்களும் 6-யூனியன்களும் இருக்கின்றன.

இனி தாங்கள் ரிஜிஸ்திரார் வேலையினின்று மாற்றப்படுமுன், ஐக்கிய இயக்கம் எந்நிலைமைக்கு வந்ததென நான் இங்குசொன்னால் மிகையாகாதென்று நம்புகிறேன். இந்நாட்டு சந்தர்ப்பங்களை அநுசரித்து, இன்ன சங்கம் இன்ன கோட்பாடுகளுடன் இன்ன விதிகளைத்தான் கைக்கொள்ளல் வேண்டும் என்று சித்தாந்தம் செய்ததுபோல் விதிகளை எழுதினீர்கள். அந்த விதிகளின் உடற்கூறு நாளது வரையில் மாறினதில்லை. இவ்வாறே கணக்குவகைகளிலும் பிறவற்றிலும் தாங்கள் பின்பற்றின மாதிரிகள் இதுவரையில் கைவிடப்படவில்லை. எனவே, தாங்கள் இருக்கும்போதே இவ்வியக்கத்திற்கு ஒரு பலமான அஸ்திவாரத்தினை நாட்டி வீட்டீர்கள். அதன் பொருட்டே இவ்விராஜதானிக்கு ஐக்கிய இயக்கத் தந்தையென தங்களைச் சொல்லலாம்.'

இவ்வஸ்திவாரக்கல்லை நாட்டவேண்டுமென்று நான் தங்களைக் கேட்டுக்கொள்ளுவதற்கு முன் தங்களிடம் ஒரு விண்ணப்பஞ் செய்துகொள்ளவேண்டியிருக்கின்றது. எங்கள் சங்கம் வேறு, கிராமம் வேறு, என்பது இல்லையென்று தங்களுக்குத் தெரிந்தவிஷயம். எங்கள் கிராமத்தின் குடிவசதியும் தாங்கள் அறியாததல்ல. எங்கள் கிராமத்திற்கு தாங்கள் விஜயஞ்செய்து இரண்டொருநாள் தங்கியிருக்க வேண்டுமென்று தங்களைக் கேட்டுக்கொண்டபோது, குடி நீர்க்கு என் செய்வீர்கள் என்று தாங்கள் கேட்டது ஞாபகமிருக்கலாம் எனவே, குடி நீர் வசதி எவ்வளவு குறைந்திருக்கிறதென்று தங்களுக்குத் தெரிந்தேயிருக்கின்றது. நடந்த வருஷத்தின் முன் வருஷத்தில் சில குறிப்பிட்ட ஐக்கிய சங்கங்களின் வழியாய் கவரன்மென்டார் சுகாதார வேலைகளை பரீக்ஷார்த்தமாய்ச் செய்துபார்த்தார்கள். அப்படிக் குறிப்பிடப்பட்ட சங்கங்களில் எங்கள் சங்கமும் ஒன்றாயிருந்து இதோ எதிரில் தெரியும் குளத்தை சீர்திருத்த 4,000 ரூபாய் சாங்கிஷன் செய்யப்பட்டது. பின் சுகாதார ஒழுங்கின்படி இந்தக் குளத்தை சீர் திருத்துவது சாத்தியமில்லையென்னுங் காரணத்தால் பணம் எங்களுக்குக் கொடுபடாமல் வேலை நின்றுபோயிற்று. இப்போது இக்கிராமத்திற்கு ஒரு மைல் தூரத்திற்கப்பால் கிணறு ஒன்று வெட்டி அதினின்று ஜலமிறைத்து இருப்புக்குழாய் வழியாய் இவ்வூருக்குக் கொண்டுவருவதென்னும் ஒரு ஏற்பாடு, எங்கள் மாஜி ரிஜிஸ்திரார் திவான்பஹதூர் எல். டி. சுவாமிகண்ணு பிள்ளையவர்களின் நல்லெண்ணத்தாலும் நன் முயற்சியினாலும், மதராஸ் டிப்டி சானிடெரி இன்ஜினியர் அவர்கள் உதவிகொண்டு செய்யப்பட்டு, ஐக்கிய சங்க ரிஜிஸ்திராரின் வழியாய், செங்கல்பட்டு ஜில்லா போர்டுக்கு ஒரு எஸ்டிமேட்டும் பிளா

னும் அனுப்பப்பட்டிருக்கிறது. நான் அந்த போர்டு மீட்டிங்குக்கு சமீபத்தில் போயிருந்தபோது இது சங்கதி ஆலோசனைக்குவந்தது. டிஸ்ட்ரிக்டு போர்டில் இப்போது பணமில்லாமையால் பணம் உண்டானபோது வேலையை எடுத்துக்கெள்ளப்படும் என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. ஐக்கிய சங்கங்களின் டிபார்ட்டுமெண்டுக்கு தலைவராயிருந்து எங்களை கடன்வாயினின்றும் மீட்க முற்பட்டீர்கள். இப்போது சுகாதார டிபார்ட்மெண்டின் உன்னத ஸ்தானத்திலிருப்பதால், நாங்கள் மண்ணுடன் சேர்ந்த ஜலத்தை குடித்து பலரோகங்களுக்கு ஆளாகாமல் உய்யும் பொருட்டு, டிஸ்டிரிக்டு போர்டுக்கு பணம் உதவியோ, வேறு வழியாலோ, எங்களுக்கு மேற்சொன்ன ஜல வசதியை உண்டுபண்ணி கொடுக்கவேண்டுமென்று தங்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

எல்லோரும் ஆவலாய் எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் தாங்கள் செய்ய இசைந்துள்ள சுபகாரியத்தை என்னுடைய பேச்சினால் இனி ஒரு நிமிஷமும் தாமதம்செய்ய சம்மதப்படேன்.

இவ்வஸ்திவாரக்கல் நாட்டும் சடங்கினை தாங்கள் செய்யவேண்டுமென்று என் பொருட்டாகவும் என் பாங்கின் இதர மெம்பர்களின் பொருட்டாகவும் கேட்டுக்கொள்ளுகிறேன்.'

பிறகு ஆனரெபில் மெம்பருக்கு கட்டிடத்தின் பிளான் காட்டப்பட்டது. அக்கிராசனாதிபதியால் அஸ்திவாரக்கல் இருக்கும் இடத்திற்கு அழைத்துக்கொண்டுபோக, அஸ்திவாரக்கல்லின் கீழ் ஏற்படுத்தியிருந்த இடத்தில் தற்போதைய நாணயங்களும் சமாசாரப் பத்திரிகைகளும் அடங்கிய ஒரு பெட்டகம் வைக்கப்பட்டது. அதின்பின் கௌன்ஸில் மெம்பர் தம்மிடம் கொடுக்கப்பட்ட வேலைப்பாடமைந்த விலையேறிய கொல்லரினால் சுண்ணாம்பைத்தடவி அஸ்திவாரக்கல்லை நிறுத்தினார். நிறுத்தி கல்சரியாய் நிறுத்தப்பட்டதென சொன்னார். பின்னர் அவர் மேடைமீது வந்து, கூட்டுறவினர்களைப்பார்த்து அடியில் வருமாறு சொன்னார்:—

கனவான்களே! உங்கள் எல்லோரையும் சந்திக்க நேர்ந்தமைக்கு மிகவும் சந்தோஷக்கின்றேன். இராஜாங்கத்தாரால் கோவாப்ரேடீவ் இலாகாவின் முதல் ரிஜிஸ்ட்ராராக என்னை நியமித்து ஐக்கிய இயக்கத்தை இந்த இராஜதானியில் சீக்கிரத்தில் பரவச்செய்தல்வேண்டும் என எனக்கு ஆக்ஞை தந்தபோது அதற்கென நான் உழைத்த உழைப்பிலும், கொண்ட கவலையிலும் பகிர்ந்து கொண்டவர்களில் பெரும்பாலோரை நான் இப்போது என்னெதிரில் காண்பதால் அக்காலத்திய ஞாபகம் இப்போது என் நினைவிற்கு வருகின்றது.

ஐக்கிய இயக்கத்தின் விதையை எவ்விடத்தில் ஊன்றலாம், எங்கே ஊன்றினால் அது செழித்து ஓங்கி வளரும், முதல் முதல் விதைக்கும்



இடத்தை நன்றாய் பரிசீலனை செய்து தீர்க்க விசாரித்தே நிர்ணயத்தல் வேண்டும், என இடத்தைக் குறித்து தயங்கிக் கொண்டிருந்தபோது டிஸ்திரிகட்டு ரிஜிஸ்ட்ராராயிருந்து சுமார் 3 வருடங்களுக்கு முன்னே காலஞ்சென்ற இவ்வூராரும் எனது நண்பருமான ம-ா-ா-ஸ்ரீ K. அப்பாசாமி முதலியார் என்னை இவ்வூருக்கு அழைத்து வந்தார். இதோ நம்மெதிரிலே யுள்ள ராய்சாயப் அருளையய நாயுடு காரும், ராவ்சாயப் மாரியப்ப முதலியாரவர்களும் இந்த கிராமத்தில் சங்கம் பலிக்கும் என்று நம்பிக்கை கொடுத்தார்கள்.

இப்படி கூறிய இவ்விருவரும் மிகவும் பெரிய குடும்பத்தைச் சேர்ந்தவர்களும், உலக விஷயங்களில் அதிக அனுபவமுள்ளவர்களும், ஆதலால் அவர்களுடைய வேண்டுகோளுக்கு உடன்பட்டு 1904 வருஷம் செப்டம்பர் மீ 7-ம் தேதி இவ்வூரில் ஒரு சங்கத்தை ரிஜிஸ்தர் செய்தேன். நான் எதிர்பார்த்தபடிக்கே இச்சங்கம் ஓங்கி, வளர்ந்து நல்ல சங்கமென பெயர் எடுத்திருக்கிறது. ராய் சாயப் அருளைய்ய நாயுடு முதலியோருடைய பெரும் ஊக்கமே இதன் விர்த்திக்கு முக்கிய காரணமென்பதற்கு, யாதொரு சந்தேகமுமில்லை.

இக்கட்டிடம் சீக்கிரம் கட்டப்பெற்று திறக்கப் படுமென்று நம்புகிறேன். நான் கவர்ன்மெண்ட் சர்வீஸிலிருந்து 30 வருஷத்திற்குள் செய்த வேலையில் ரிஜிஸ்ட்ராரானவுடன் கீழ்ச்சேரிக்கு நான்வந்து செய்தவேலை எவ்விதத்திலும் தாழ்ந்ததென்று நான் நினைத்ததில்லை. ஆனதுபற்றி மறுபடியும் ஒருமுறை கீழ்ச்சேரிக்குவர விரும்புகிறேன். கீழ்ச்சேரி கூட்டுறவினர் கட்டிடம் கட்டிமுடிந்ததும் கட்டிடம் திறந்து வைக்கும் சடங்குக்காகவும் என்னை அழைப்பார்களென்று நம்புகிறேன்.

இதைக்கேட்டதும், குழுமியிருந்த ஜனங்கள் எல்லோரும் கரகோஷம் செய்து அய்யரவர்கள் இந்தியர் பெறக்கூடிய மிகவும் உயர்ந்த நிலையிலிருந்தும் வெகு சாமானியரைப் போலவே தம்வாழ்நாளைக் கழிப்பதையும் அவருடைய அரியபெரிய குணங்களைக் கண்டும் மகிழ்ந்தார்கள். விவசாய பாங்கினரும் கரும்பு தின்னவும் கூலிவேண்டுமோ? பொன்கிடைத்தால் அதைமுடிந்து வைக்க கந்தையில்லையென்பாருமுளரோ? இலட்சுமி வலியவந்தால் வரவேண்டாமென்று யாரே கூறுவார்? என்பனவாகிய இனிய மொழிகளால் அவருடைய விருப்பத்தைச் சிரமேற்கொண்டு அங்ஙனமே அச்சமயத்திலும் அய்யரவர்களைக் கொண்டே திறக்கும் விழாவையும் செய்துகொள்ள இசைந்தார்கள்.

பிறகு ராய் சாயபு அருளைய்ய நாய்டு அவர்கள் வாசித்த வரவேற்பு பத்திரத்தில் கண்டிருந்த குடிஜல வசதியைக் குறித்து வர்ன்மெண்டார் அதைச் செய்து கொடுக்க தயாரா யிருப்பதாகவும் டிஸ்டிரிக்ட்

போர்ட்டு பிரசிடெண்டினுடைய முயற்சி வேண்டுவ தெனவும் அங்கு அப்போது விஜயஞ் செய்திருந்த டிஸ்டிரிகட் போர்ட்வைஸ் பிரசிடெண்டு ம-ா-ா-ஸ்ரீ வெங்கடராகவலு ரொட்டியார் அவர்களை அது விஷயமாய் கவனிக்கும் படிக்கும் சொன்னார், அவர்பேசி முடிந்ததும், பெண்பிள்ளை பாடசாலையின் சிறுமிகள் கையில் கொடி கொண்டு இன்பமிக பாடினார்கள், அதன் பின்னர். பண்டிதரத்தினம் புழலை திருநாவுக் கரசு முதலியார் ஆனரபில் மெம்பர்மீது பாடிய வாழ்த்து பாட்டுகள் படிக்கப்பட்டன.

பிறகு கரகோஷத்தின் மத்தியில் சபாநாயகருக்கும் மற்றவர்களுக்கும் மாலைகள் சாற்றினர்.

சபா நாயகருக்கு, கூட்டுறவினர் சுவாமி கோவிந்த நாயுடு அவர்கள் வந்த னோபசாரம் சொல்லிய பின்னர், சென்னை ரத்னு அண்டு கம்பெனியாராரில் புகைப்படம் பிடிக்கப்பட்டது. ஆன்ரெபில் மெம்பர் பின்னர் மோடார் ஏறி சென்னைக்குத் திரும்பினர்.

---

## ரெஜிஸ்ட்ரார் ஸர்குலர்.

### (2-6-1917).

ஸென்ட்ரல் பிராவின்ஸஸ் என்று சொல்லப்படுகிற நடுமாகாணத்தில் இருக்கும் ப்ரொவின்ஷல் கோவாப்ரேடிவ் பாங்கி 5-லக்ஷம் ரூபாய் இந்திய யுத்தக்கடனுக்கு கொடுத்திருக்கிறதாக ஷை மாகாணங்களின் கவர்ன்மெண்டார் வர்த்தமான பத்திரிகைகளில் பிரசுரம் செய்திருக்கும் உத்தரவினால் தெரியவருகிறது. இந்த இராஜதானியிலிருக்கும் எல்லா ஐக்கிய சங்கங்களும் தங்களால் கூடிய வரையில் தங்களிடம் அதிகமாயிருக்கும் கையிருப்புப் பணத்தையும் ஏற்கனவே வேறேபாங்கிகளில் வைக்கப்படாத ரிசர்வு பண்டு தொகைகளையும் யுத்தக்கடனுக்குக் கொடுப்பது மிகவும் விரும்பத்தக்கதென்று தோன்றுகின்றது.

ரிசர்வ் பண்டை வேறேபாங்கியில் ஏற்கனவே வைக்கப் பட்டிருக்கும் சந்தர்ப்பங்களில்கூட அந்த பாங்கிகள் தங்களுக்கு அசௌகர்யமில்லாமல் பூராவாகவோ அல்லது ஒரு பாகத்தையோ திருப்பிக்கொடுக்கக் கூடுமானால் அப்படிப்பட்ட தொகைகளையும் கூட யுத்தக்கடனுக்கு மாற்றிவிடலாம். இம்மாதிரி யுத்தக்கடனுக்குக் கொடுப்பதில் பணத்துக்குக் கொஞ்சமேனும் பயமில்லாமலும் லாபகரமாய் இருப்பது மன்றி சங்கங்கள் தாங்கள் நாட்டுக்கு செய்ய வேண்டிய பெரும் கடமையை மிகு திறமாய் செய்து காட்டியதாய் இருக்கும்.

(1) தபாலாபீசு மூலமாய் வைக்காமல் வேறே விஷயமாய் யுத்தக்கடனுக்கு பணம் கட்ட ஏற்பட்டிருக்கும் வழிகளுக்கு கெடு 1917-ம் ௵ ஜூன்௴ 15௳ யோடு முடிவாகிறது. இந்தக்காரணத்தினாலும் வேறே காரணங்களினாலும் சங்கங்கள் தபாலாபீசு மூலமாய் பணம் கட்டும் வழியை மாத்திரம் அநுசரிக்கக் கோரப்படுகின்றன. தபாலாபீசு மூல்யமாய் கட்ட 1917-ம் ௵ அக்டோபர் ௴ 15௳ வரையிற் 1917-௵த்திற்கு மேற்பட்டு 1917-௵த்திற்குள் திருப்பிக்கொடுக்கப்படுகிற ரூ 95-விலையுள்ள. ரூ 100-பத்திரங்கள் 5-வட்டியுள்ளன.



(2) ரூ 100-க்கு ரூ 100. கட்டவேண்டியதும் இன்கம்டாக்ஸ் இல்லாததும் $5\frac{1}{2}$ வட்டியுள்ளதும் 1920 ௵ அல்லது 1922-ம் ௵த்தில் திருப்பிக்கொடுபடவேண்டியதுமான யுத்த பத்திரங்கள்.

(3) 5-வருஷத்தில் ரூ 7-12-0-க்கு ரூ 10 வீதம் திருப்பிக்கொடுக்கக் கூடிய சர்டிபிக்கேட்டு.

மேற் சொன்னவைகளில் 2-வது, 3-வது, வழிகளில் யுத்தக் கடனுக்கு செலுத்துவது தான் ஐக்கிய சங்கங்களுக்கு மிகவும் தகுந்தது. ஏனெனில் அவ்வழிகளில் செலுத்தின பணம் சிறிது காலத்திற்குள்ளே வசமாகிவிடும். 3-வது வழி கடன் 5-வருஷத்தில் வாப்சாய் விடும். தவிரவும் 5-வருஷத்திற்குள்ளேயே வேண்டுமானால் சென்றகாலத்திற்குள்ள வட்டியையும் சேர்த்து தபாலாபீசுக்கே விற்று விடலாமாகையால் 3-வது வழி எல்லாவற்றையும் விட சிலாக்கியம். மேலும் வாங்கப்படும்பத்திரம் இந்த சர்ட்பிக்கேட்டுகளை அக்கவுண்டு ஜனரலிடம் பத்திரமாய் வைத்து வைக்க ஏற்பாடு செய்யலாம்.

(4) இதற்குமேல் விபரம் வேண்டுமானால் சங்கங்கள் தங்களுக்கு சமீபத்திலுள்ள தபாலாபீசுகளில் தெரிந்து கொள்ளலாம்.

(5) 1916-17 ௵ மாகிய நடக்கும் கோவாபரேடிவ் வருஷம் முடிந்தவுடன் கூடுமான சீக்கிரத்தில யுத்தக்கடன் பாண்டுகளில் போஸ்டாபீஸ் சர்டிபிக்கேட்டுகளிலும் அந்த வருஷத்தின் க்ஷேமநிதியையும் ஸென்டிரல் பாங்குகளுக்கு ஏற்கனவே அனுப்பப்படாத முன்வருஷங்களின் க்ஷேமநிதிகளையும் கட்டும்படி எல்லா சங்கங்களுக்கும் சிபார்சு செய்வார். இந்தசிபாரிசு எல்லா சங்கங்களும் ஏற்றுக்கொண்டு பணம் மேற் சொன்ன வழியில் செலுத்துமென்று நம்பப்படுகிறது.

---

# இரண்டாவது குண்டூர் ஜில்லா கான்பரென்ஸ்.

இரண்டாவது குண்டூர் டிஸ்திரிகட் கான்பரன்ஸ் 22-4-17ல் தெனாலிதாலூகாவிலுள்ள சாவலியில் மிகவும் தனிகரும், தர்மிஷ்டரும் தேசாபிமான சிந்தையுள்ளவருமான ம-ா-ா-ஸ்ரீ விஷ்ணு மொலகல நாகய்யகாரு அவர்களுடைய ஹாலில் நடைபெற்றது. கான்பரனஸ் நடந்த ஹாலும் டெலிகேட்டுகள் தங்கின இடங்களும் குளக்கரையை நோக்கியிருந்தமையால் உஷ்ணத்தின் பாதையில்லாமல் கான்பரன்ஸ் மிக ரம்மியமாய் நடைபெற்றது.

டிஸ்டிரிகட் கலெக்டரான இ. ஏ. டேவிஸ் துரையவர்கள் கான்பரன்ஸுக்கு பிரசிடெண்டாக ஏற்படுத்தப்பட்டிருந்தார். ஆனால் தேக அசௌகரியத்தால் திடீரென்று வரமுடியாமற்போகவே குண்டூர் ஹை கோர்டு வக்கீல் ம-ா-ா-ஸ்ரீ கொண்ட வெங்கடப்பய்யா பந்துலுகாரு அவர்களை பிரசிடெண்டாக இருக்கும்படி கேட்டுக்கொண்டதின்பேரில் அவரும் தடையில்லாமல் உடனே சம்மதித்தார். அவர் நன்றாய்ப்படித்தவர்; தேசாபிமானி, சுவப்பிரயோஜனத்தை பரோபகார விஷயத்தில் விசேஷமாய் தியாகம் செய்யக்கூடியவர். அவர் தான் ஆந்திர ஜாதியாரின் உத்தாரணத்தை நோக்கமாயுடைய ஆந்திரக்கிளர்ச்சியை ஆரம்பித்துப்பண்படுத்தி உருவாக்கிக் கொண்டுவந்தவர். தன் உத்தியோகத்தில் விசேஷ சம்பாத்தியம் வந்துகொண்டிருந்த காலத்தில் அது வேண்டாம் ஏன்று வெறுத்துவிட்டு மிக்க தேசாபிமான விஷயங்களைச் செய்து கொண்டிருக்கிறார். ஜனங்களுக்கு ஏற்பட்டிருக்கும் விசுவாசமும், நம்பிக்கையும் மிகுதியாதலால் அவர் பிரசிடெண்டாக ஏற்படுத்தப்பட்ட விஷயத்தில் எல்லாருக்கும் வெகு திருப்தி. 22-4-17 அதிகாலையில் வெங்கடப்பய்யா பந்துலுவை ஊர்கோல விமரிசையுடன் கான்பரன்சு ஹாலுக்கு அழைத்து வந்ததும் அங்கே வி. நாகய்யா பந்துலு, அவருக்கு பூமாலை புனைந்து விசேஷ ஆரவாரத்துடனும் குதூகலத்துடனும் அவருடைய அக்கிராசனத்திற்கு அழைத்துப்போனார். ஹால் மிக நெருக்கமாக டெலிகேட்டுகளாலும் ஜனங்களாலும் நிறைந்திருந்தது, சுமார் 2000 ஜனங்கள் இருக்கலாம். ராவ் பகதூர் சுப்பிரமணிய சாஸ்திரிகாரு, கே. நாகேசுவர ராவ் பந்துலுகாரு, திவான்பகதூர் எல். டி. சுவாமிக்கண்ணுபிள்ளை முதலிய அநேகபிரசித்திபெற்றவர்களும், மிராசுதார்களும் வக்கீல்களும் வந்திருந்தார்கள். இன்னும் வரக்கூடாமலிருந்த மெம்பர்களிடமிருந்து வந்த அநேக அநுதாபக்கடிதங்களும் படிக்கப்பட்டன.

கான்பரன்ஸ் நடவடிக்கைகள் காலை 7-30க்கு கடவுள்தியானத்துடன் ஆரம்பிக்கப்பட்டன. வரவேற்புக்கமிட்டியாரின் சேர்மனை மிஸ்டர் கே. ஸ்ரீராமலு இனிமையான உபசாரணை வார்த்தைகளால் டெலி



கேட்டுகளுக்கு நல்வரவு கூறின பிறகு இந்த ஜில்லாவில் அதிலும்
முக்கியமாய் தெனாலி, ரேபள்ளிதாலூகாக்களில், கோஆபரேஷன்
ஆரம்பமாகி விருத்தியடைந்த விஷயத்தை மிக இனிமையாய்ப்பேசி
ஜனங்களுக்கு இக்கிளர்ச்சியில் இருக்கும் அபிமானத்தையும் ஊக்கத்
தையும் அஸிஸ்டெண்டு ரிஜிஸ்ட்ரார் ம-ா-ா-ஸ்ரீ. கே. நாகேசுவரராவ்
பந்துலுகாரு அவர்கள் இதின் மேம்பாட்டை உத்தேசித்துச் செய்த
விசேஷப் பிரயத்தினங்களையும் வெகு அழகாக எடுத்துரைத்தார்.
மேலும் கோவாபரேடிவ் கிளர்ச்சிகள் தற்காலம் அவைகளின் கிரமங்களை
முற்றிலும் பற்றி நடக்கவில்லையென்றும், அதற்குக்காரணம் கோவாப
ரேடிவ் படிப்போதாமை தான் என்றும், இக்குறையை எம்மாதிரி
நிவர்த்தி செய்யலாம் என்றும் எடுத்துக்காட்டினார்.

பிறகு பிரசிடெண்டு நியமனம் ஆகி அவருடைய சுயநயமில்லாத
தேசீய ஊக்கத்தைப்பற்றி எழுதிய பாடல்கள் வாசிக்கப்பட்டன. பிரசி
டெண்டும் மிக்க ஆரவாரிக்கும் ஜனங்களின் மத்தியில் எழுந்து லளித
மும், இனிமையும் அர்த்த புஷ்டியும் உள்ள ஒரு வியாசத்தினால் கோவா
பரேஷனைப்பற்றிய முக்கிய ஆதாரங்களையும், இலக்ஷணங்களையும் எடுத்
துக்காட்டி அதற்கும் இந்தியாவின் கைத்தொழில் தேசீய முயற்சி இவை
களுக்கும் உள்ள சம்பந்தங்களையும் விவரித்துரைத்து ஜனங்களை கோ
வாபரேஷனில் விசேஷ சிரத்தை எடுத்துக்கொள்ளும்படி தூண்டினார்.

கான்பரன்ஸ் சாப்பாட்டிற்காக கொஞ்சம் கலைந்து பகல் 3-மணிக்கு
திரும்பவும் கூடிற்று. விஷயங்களை நிர்ணயிக்கும் கமிட்டியார் கான்பரன்
ஸில் வைக்கவேண்டிய விஷயங்களைப்பற்றி பிரஸ்தாபித்துக்கொண்டி
ருந்தபொழுது அநேக ரயத்துக்களும் மேற்படி விஷயத்தில் கலந்து
அவர்களின் அபிப்பிராயங்களைக் காட்டினதினால் அவர்களும் காலத்திற்
குத்தக்கபடி மிகவும் முன்னேறியிருப்பது நன்கு விளங்கிற்று.

பிரசிடெண்டும், முடிவில் ரயத்துகள் கான்பரன்சில் காட்டின புத்தி
சாலித்தனத்திற்கு மிகவும் மெச்சினார். பிரசிடெண்டுக்கும், வரவேற்
புக்கமிட்டியாருக்கும் மிக்க வந்தனம் அளித்ததோடு நடவடிக்கை முடிவு
பெற்றது. கான்பரன்ஸுக்கு வந்தவர்களில் சிலர் தங்கள் சொந்தக் காரி
யங்களின் சௌகரியங்களைக்கூட கவனியாமல் வந்திருந்தார்கள்.

# திருவண்ணாமலை தாலூக்கா கோவாபரேடிவ் கான்பரன்ஸ்

இக்கான்பரென்ஸ் ஜூலைமீ 4-மவ திருவண்ணாமலை விக்டோரியா ஸ்கூலில் பகல் 3 மணிக்கு கூடிற்று. திருவண்ணாமலை டிவிஷனல் ஆபீஸர் மிஸ்டர் ஏ. வி.டிகி. ரொஜேரியோ துரையவர்கள் அக்கிராசனம் வகித்தார். சுமார் 50 டெலிகேட்டுகளும் 150 இதர மெம்பர்களும் வந்திருந்தார்கள்.

கான்பரன்ஸ் ஆரம்பித்த உடன் திருவண்ணாமலை அர்பன் பாங்கி. தண்டிராம்பட்டு, அழகானந்தல், ஆராஞ்சி இந்த சங்கங்களின் ரிபோர்ட்டை சங்ககாரியதரிசிகளால் படிக்கப்பட்டன. யூனியன் பட்ஜெட் சாங்கிஷன் செய்யப்பட்டது. அடியில் கண்ட தீர்மானங்கள் அங்கீகரிக்கப்பட்டன:—

1. பள்ளிக்கூடங்கள் இல்லாத இடங்களில் சங்கங்கள் பள்ளிக்கூடங்கள் வைக்கும்படியும்;

2. சங்கங்களிருக்கும் கிராமங்களில் போர்டு ஸ்கூலின் மேற்பார்வையை சங்கங்களின் பஞ்சாயத்துக்குக் கொடுக்கும்படியும் ;

3. பொது நன்மையான மராமத்து வேலைகளின் கண்டிராக்டை சங்கங்களுக்கே கொடுக்கும்படியும் ;

4. சங்கங்களின் கடன் வாப்சு காலம் ஜூன்மீ 30வ யென்று நிணயிக்கும்படி 6மீ வட்டிக்கு பதில் வருஷ வட்டியே வாங்கும்படியும் ;

5. விதைகள் விற்க ஏற்பாடு செய்யும்படியும் ;

6. திருவண்ணாமலை டவுனுக்கு ஒரு கட்டட சங்கம் எற்படுத்தும்படியும் தீர்மானங்கள் செய்யப்பட்டன.

அக்கிராசனாதிபதியவர்கள், இந்த யூனியனானது மிகவும் பிரயோஜனகரமான வேலைகளை செய்திருப்பதாயும், நடை முதல் வருஷத்தில் இன்னும் விசேஷ அபிவிருத்தியை எதிர் பார்ப்பதாயும் சொல்லி முடித்தார்.

கனம் அஸிஸ்டெண்டு ரெஜிஸ்ட்ரார் ம-ா-ா-ஸ்ரீ ஏ. வேதாசலய்யர், B. A. அவர்களும், தாசில்தார் ம-ா-ா-ஸ்ரீ C. சுப்பைய முதலியார் B. A. அவர்களும் தாலூக் போர்டு பிரசிடெண்டு ம-ா-ா-ஸ்ரீ R. V. வெங்கிட சுப்பய்யர் M. A. அவர்களும் இன்னும் சில கனவான்களும் வந்திருந்தார்கள். மாலை 5 மணிக்கு மீட்டிங்கு கலைந்தது.

---

# மதராஸ் புல்லெடின் ஆப் கோவாபரேஷன்

என்னும்

# சென்னைக் கூட்டுறவுத்தொழில் வர்த்தமானி

சம்புடம் IX] 1917௵ ஆகஸ்டுமீ [இலக்கம் 2

## குறிப்புகள்.

### பம்பாய் குறிப்பு விதிகள்

கூட்டுறவு சட்டத்தின் கீழ் பம்பாய் கவர்ன்மெண்டார் சிலபுதிய விதிகளை நிர்ணயம் செய்திருக்கிறார்கள். ஆனால் பம்பாயில் கூட்டுறவுச் சங்கங்களும் மிகுந்த அதிருப்தியடைந்திருக்கின்றன. சென்ற ஜூலைமீ 27உ பம்பாய் சென்ட்ரல் கோஆபரேடிவ் பாங்கில் நடந்த மீட்டிங்கில் இதைப்பற்றி ஆலோசிக்கப்பட்டு ஆனரபில் மிஸ்டர் பஸூல்பாய் கரீம்பாய் அவர்கள் மூலமாக கவர்ன்மெண்டாருக்கு ஒரு மனுச் செய்யப்பட்டிருக்கிறது. அதை மற்றொரு பக்கத்தில் பிரசுரித்திருக்கிறோம். ஷை புதிய விதிகளினால் கூட்டுறவுச் சங்கங்கள் முன்னிலும்விட அதிகமாக கவர்ன்மெண்டு அமுலுக்கு உள்படுத்தப்படுவதாக ஷைசங்கங்கள் ஆக்ஷேபிக்கின்றன. அந்தப் புதிய ஒழுங்குகளில் முக்கியமானவைகளாவன :— (1) சங்கங்கள் இன்னதவணைக்கு மேலாகவும், இன்ன வட்டிக்குக்குறைவாகவும் கடன் வாங்கக் கூடாதென்பது (2) ஒரு ஜில்லாகலெக்டர் தன்னுடைய ஜில்லாவில் உள்ள எந்தக் கூட்டுறவுச் சங்கங்களின் மீட்டிங்குகளிலும் போய் அதின்மெம்பர்களுக்கு எந்தக்காரியத்தையும் குறித்துப் புத்திசொல்லலாமென்பது (3) எந்த சங்கமாவது, அதின்கமிட்டியாவது, அல்லது உத்தியோகஸ்தராவது ராஜரீகசம்பந்தமான அல்லது மத சம்பந்தமான எந்த விவகாரத்திலாவது சங்கத்தை உள்படுத்தக் கூடிய எந்த விஷயத்திலும் தலையிடலாகா தென்பது (4) முறிபட்டசங்கத்தின் மெம்பர்கள் கூடி மிச்சமாயிருக்கும் தொகைகளைப்பற்றி எவ்விதமான தீர்மானமும் செய்யலாகாதென்பது. இன்னும் இவைகளைப் போன்ற ஒழுங்குகளைக் குறித்து பம்பாய் ஐக்கிய நாணயச் சங்கங்கள் ஆக்ஷேபித்

திருப்பது சரியே ஆகும். இவ்விடத்தில் அவர்களுடைய ஆக்ஷேபணைகளையும் நியாயங்களையும் எடுத்து எழுதவேண்டியதில்லை.

ஆகிலும், கூட்டுறவுச் சங்கங்கள் எங்கே இராஜரீக விவகாரங்களில் இறங்கி விடுகின்றனவோ என்று கவர்ன்மெண்டார் அநாவசியமாகப் பயப்படுவதைப்பற்றி இவ்விடத்தில் சில வார்த்தைகள் கூறவிரும்புகிறோம். ஆதியிலிருந்தே இவ்விதமான அபிப்பிராயம் அதிகாரிகளுக்கு இருந்திருப்பதாகத் தெரிகிறது. இது வரைக்கும், ஒரு விதமான ஒற்றுமைப்பாடும், கல்வி அறிவும் இல்லாமலிருந்த அநேக நூற்றுக்கணக்கான குடிகளைக் கூட்டுறவுச் சங்கங்களில் ஒன்று கூட்டி அவர்களுக்கு அறிவும், ஒற்றுமை உணர்ச்சியும் உண்டாகச் செய்தால் ஒருவேளை அவர்கள் தங்கள் அறிவையும், ஒற்றுமைப்பாட்டையும் அரசாக்ஷிக்கு விரோதமாக துர் உபயோகப்படுத்தக் கூடுமென்று மாக்லகன் கமிட்டியார் ஆரம்பத்திலேயே ஐயுறவுப் பட்டார்கள், ஆகிலும், நாளது பரியந்தம் அப்படிப்பட்ட காரியத்தைக் கண்டதுமில்லை, கேட்டதுமில்லை யென்று அவர்களே ஒப்புக் கொள்ளுகிறார்கள். அப்படி ஒப்புக்கொண்டவர்கள், சர்க்கார் கூட்டுறவுச் சங்கங்களை யெல்லாம் தங்கள் அதிகாரத்தில் கட்டுப்படுத்திப் பூராவும் அவைகளை அடக்கி வைத்துக் கொண்டிருக்க வேண்டுமென்றும், அப்படிச் செய்வதற்கு ஒரு ரிஜிஸ்திரார் மாத்திரம் போதாதென்றும், ஒவ்வொரு ஆயிரம் சங்கங்களுக்கும் ஒரு உதவி (ஜாயிண்டு) ரிஜிஸ்திரார் இருக்க வேண்டுமென்றும், மேலும், ஜில்லா கலெக்டர்கள் தங்கள் ஜில்லாக்களிலுள்ள ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கத்தையும் சர்வ ஜாக்கிரதையாய்க் கவனித்துக் கொள்ளவேண்டுமென்றும் சிபாரிசுசெய்தது மிகவும் விந்தையே. ஆனால் ஜில்லா கலெக்டர்கள் எந்தச் சங்கத்தின் மீட்டிங்குகளுக்கும் போய் எந்தக் காரியத்தைக் குறித்தும் மெம்பர்களுக்குப் புத்தி சொல்லலாமென்றாவது, நியாயமானாலும் ஆகாவிட்டாலும் கலெக்டர் சொற்படி மெம்பர்கள் அவசியம் கீழ்ப்படிந்து நடந்து கொள்ள வேண்டுமென்றாவது மாக்லகன் கமிட்டி கூடச் சிபாரிசு பண்ணத்துணியவில்லை. இப்படிப்பட்ட ஒழுங்குகளைத்தான் இப்பொழுது பம்பாய் கவர்ன்மெண்டார் ஏற்படுத்தியிருக்கின்றனர். ஆனால் இதெல்லாம் அனாவசியம், அவ்வளவும் வீண்பயம்; சாதாரணமாக ஐக்கிய நாணயச் சங்கங்களின் மெம்பர்கள் ராஜரீக விவகாரங்களைப் பற்றிக் கனவு கூட காண்பதில்லை. அத்தி பூத்ததுபோல் அங்கு ஒருவர், இங்கொருவர் ராஜாங்க காரியங்களில் பிரவேசிப்பதைக் காண்பது மிகவும் அபூர்வம். மெம்பர்கள் விஷயம் இப்படியிருக்க, சங்கங்கள் ராஜாங்க மார்க்க சம்பந்தமான விவகாரங்களில் தலையிடுவது கிடையவே கிடையாது. பழைய கூட்டுறவுச் சட்டமும் விதிகளும் அவர்கள் அப்படித்



தலை யிடக்கூடாதென்று தடுத்துவைத்திருக்கின்றன. அப்படியிருக்க, இந்தப் புதிய விதிகள் எதற்காக? பட்டணங்களில் உள்ள விவசாயக் கலப்பில்லாத பெரிய சங்கங்களில் மட்டுந்தான் ஒவ்வொரு மெம்பர்கள் ராஜாங்க விவகாரங்களில் தலையிடுவதுண்டு. ஆனால் அவர்கள் எல்லோரும் அநேகமாய்ப் பெரிய மனிதர்களாகவேயிருக்கிறார்கள். அவர்கள் ராஜாங்கக் காரியாதிகளில் மாத்திரமல்ல, தேசத்தின் முன்னேற்றத்திற்குச் சாதகமான கல்வி, கைத்தொழில், வர்த்தகம், முதலிய மற்றச் சல துறைகளிலும், ஜனத்தலைவர்களாயிருக்கிறார்கள். அவர்களைத் தடுக்க வேண்டுமென்ற எண்ணம் கவர்ன்மெண்டாருக்கு இருக்குமென்று நாம் எண்ணவில்லை. ஏனென்றால், அப்படிப்பட்ட பெரியவர்கள் மெம்பர்களாயிருப்பதனால் கூட்டுறவுச் சங்கங்களுக்கு எல்லாவிதத்திலும் லாபமேதவிர, எவ்வகையாலும் இடைஞ்சலில்லை. பம்பாய் கவர்ன்மெண்டார் இப்பொழுது அமைத்திருக்கும் விதிகள் மெம்பர்களுக்கு வெகு நிர்ப்பந்தத்தை விளைக்கக்கூடியாதாயிருக்கிறது. இன்ஸ்பெக்டர்களும், சூப்பர்வைசர்களும், அநாவசியமாக மெம்பர்களின் காரியங்களில் தலை கொடுத்துக்கொண்டு மெம்பர்களுக்கு வீண் தொந்தரவும் இடைஞ்சலும் விளைவிக்கக்கூடும். ஒருவர் கூட்டுறவுச் சங்கங்களில் மெம்பராகச் சேரும்பொழுது, ராஜாங்க காரியங்களை அறிந்துகொள்ளவேண்டுமென்றும், மத விவகாரங்களில் பொழுதுபோக்கவேண்டுமென்றும் மெம்பராய்ச் சேருகிறதில்லை. ஆகையால், மெம்பர் ஸ்தானம் சம்பந்தப்பட்டமட்டில் அவர் மத விவகாரங்களிலும், ராஜரீக காரியங்களிலும் தலை கொடுக்கப்போவதில்லை. சபையைவிட்டு வீட்டுக்குப்போன பிறகு அவர் எது செய்தாலும், அதைக் கேட்க ஒருவருக்கும் அதிகாரமில்லை. அக்கிரமமான காரியம் எதையாவது செய்தால், அதைத் தண்டிக்க ஏற்கனவே நாட்டில் எத்தனையோ சட்டங்கள் இருக்கவேயிருக்கின்றன. ஆகையால், எந்த வகையில் பார்த்தாலும், இப்பொழுது பம்பாய் கவர்ன்மெண்டார் புதிதாக ஏற்படுத்தியிருக்கும் இந்த விதிகள் முற்றிலும் அநாவசியமும், பெரிய அநீதமும் ஆகும்.

கூட்டுறவு முயற்சிகளினால் மெம்பர்களுக்கு ராஜீய காரியங்களில் ஒருவிதமான பயிற்சியும், தேர்ச்சியும் ஏற்படுமென்பது உண்மையே. ஆனால் அப்படிப்பட்ட தேர்ச்சியினால் சகலருக்கும் நன்மையே தவிர ஒருவருக்கும் கெடுதலில்லை. கூட்டுறவுச் சங்கங்களில் சேருகிறவர்களுக்கு முதலாவது ஒற்றுமைப்பாடு உண்டாகிறது. இரண்டாவது, யோக்கியதையுள்ள நபர்களுக்கு ஓட்டு கொடுக்கும் பழக்கம் ஏற்படுகிறது. மீட்டிங்குகள் கூடுவதற்கும், மீட்டிங்குகளில் தங்கள் தங்கள் அபிப்பிராயங்களைத் தெளிவாக எடுத்துச் சொல்லுவதற்கும், தீர்மானங்கள் மூலமாகத் தங்கள் தங்கள் கோரிக்கைகளையும் நோக்கங்களையும்

நிறைவேற்றிக்கொள்வதற்கும், வேண்டிய அறிவும், ஞானமும், அப்பியாசமும் உண்டாகிறது. அம்மட்டோ? சுயநன்மைக்காகமட்டுமல்ல, பொது நன்மைக்காகவும் உழைக்கவேண்டுமென்ற ஆவல் ஒவ்வொரு மெம்பர்களும் தானாகவே உண்டாகிறது. கிராமகாரியங்களை ஊக்கமாயும், கிரமமாகவும் நிர்வாகம்பண்ணுகிற சாமர்த்தியம் ஏற்படுகிறது. இப்படிப்பல வழிகளாலும், சகலருக்கும் நன்மையே தவிர ஒருவருக்கும் இதனால் தீமை கிடையாது. குடிகளின் க்ஷேமத்தையும், நன்மையையும் உண்மையாகவே விரும்புகிற ஒவ்வொரு கவர்ன்மெண்டாரும், குடிகளுக்கு இப்படிப்பட்ட ஞானமும், பயிற்சியும் உண்டாகவேண்டுமென்று விரும்புவதுதான் நியாயம். அப்படி இல்லாமல், இதைப்பற்றிக் கவலைப்படுவதற்கும், பயப்படுவதற்கும் எள்ளளவேனும் நியாயமில்லை.

## இந்தியாவின் ஐக்கிய முயற்சியின் அபிவிருத்தியைப்பற்றி ஓர் மாறுன அபிப்பிராயம்

இந்தியாவில் கூட்டுறவு அபிவிர்த்தி அடைவதைப்பற்றி மிஸ்டர் அஸ்காலி என்பவர் மிகவும் அவநம்பிக்கையாக வங்காள எக்கனுமிக் ஜர்னல் என்னும் பத்திரிக்கையில் எழுதியிருக்கிறுர். வங்காளத்திலுள்ள டக்கா ஜில்லாவில் மட்டும் குடியானவர்களின் கடன் 4 கோடி ரூபாய்க்கு மேலாயிருக்கிறது. 100-க்கு 24 லிருந்து 150 வீதம் வட்டித்தொகை மாத்திரம் வருஷமொன்றுக்கு 2 கோடி ரூபாய்க்குமேல் வருகிறது. இப்பொழுது ஷை ஜில்லாவில் கூட்டுறவுச் சங்கங்கள் 150 குடியானவர்களில் 1 குடியானவருக்கு மாத்திரம்தான் கடன் கொடுத்து உதவுகின்றன. மற்ற குடிகளெல்லாம் சௌகார்களிடத்திலேயே கடன் வாங்குகிறுர்கள். இன்னொருவிதமாகப்பார்த்தால், குடிகள் ரூ. 1 சங்கங்களிடத்தில் கடன் வாங்கினுல் ரூ. 238 சௌகார்களிடத்தில் வாங்குகிறுர்கள். 10 வருஷகாலமாக இந்த ஜில்லாவில் கூட்டுறவு முயற்சிகள் நடந்து வந்தும், குடிகளின் நிலைமை இப்படியிருப்பதனுல் கூட்டுறவு முயற்சியால் குடிகளுக்கு நன்மை எப்பொழுது ஏற்படப்போகிறது என்பதாக மேற்சொன்ன அஸ்காலி யென்பவர் எழுதியிருக்கிறுர். இந்தியாவில் ஜனங்களின் வறுமையையும், முன் கடன்களையும், அறிவின்மையையும் கவனிக்குமிடத்து யாரும் அவநம்பிக்கைப்படுவது சகஜமே. ஆகிலும் கொஞ்சம் ஊன்றி யோசிக்குமிடத்து அப்படி அவநம்பிக்கைபடுவதற்கு இடமில்லை. குடிகளுக்கு இருக்கும் அபாரமான கடனை எந்தக்காலத்தில் அடைக்கிறது, எப்படி விமோசனம் அடைகிறது என்று மிஸ்டர் அஸ்காலீ கவலை யுறுகிறுர்.

ஆனுல் குடிகளுக்குக் கடன் இல்லாதகாலம் முன் இருந்ததுமில்லை, இனி இருக்கப்போகிறதுமில்லை. கடன் வாங்காமல் விவசாயி

கள் காலக்ஷேபம் செய்யமுடியாதென்று பிரசித்தி பெற்ற மிஸ்டர்
உல்ப் முதலிய பெரிய மேதாவிகளே கூறியிருக்கிறுர்கள். இந்த நாட்டில்
மட்டுமல்ல. நெடுங்காலமாக விவசாயச் சங்கங்கள் நடைபெற்று வருகிற
பிரான்ஸ், ஜெர்மனி, டென்மார்க் முதலிய ஐரோப்பிய நாடுகளில் கூட
குடியானவர்களுக்கு எந்தக் காலத்திலும் ஏராளமான கடன் இருந்து
கொண்டே யிருக்கிறது. அவர்கள் வரவு செலவுகளையும், நம்முடைய
குடியானவர்களின் வரவு செலவுகளையும் ஒப்பிட்டுப் பார்த்தால் நம்
முடைய குடியானவர்கள்பாடு தேவலையென்று சொல்லலாம். ஆனுல்
அவர்களுக்கும் நம்முடைய குடியானவர்களுக்குமுள்ள பெரிய வித்தி
யாசமென்னவென்றுல், அவர்கள் நிலக்கிரயம், சாகுபடி, நிலஅபிவிருத்தி
முதலிய காரியங்களுக்காக மாத்திரம் கடன் வாங்குகிறுர்கள், நம்
முடைய குடிகளோவென்றுல், கலியாணம், சாவு முதலிய காரியங்
களின் வீண்செலவுகளுக்காக கடன்வாங்கிக் கெட்டுப் போகிறுர்களென்
பது சகலருமறிந்தவிஷயம். ஆகையால் குடிகள் கடன் வாங்குவதைப்
பற்றி நாம் கவலைப்படக்கூடாது. அவர்கள் சரியான முகாந்திரம் பற்றிக்
கடன் வாங்கும்படி நாம் செய்யவேண்டும்.

கலியாணம், மரணம் முதலிய விஷயங்களில் டம்பமாகச் செலவு
செய்வதால் அந்தப்பொருள் அப்படியே அழிந்துபோகிறது. கடனும்
வட்டியுந்தான் மிஞ்சி நிற்கிறது. வருஷக் கணக்காகக் குடும்பத்துக்கு
அளவில்லாத துன்பத்தைக் கொடுக்கின்றது. ஆனுல் நிலம் வாங்குவது
சாகுபடி செய்வது, வியாபாரம் செய்வது, முதலிய காரியங்களுக்காகக்
கடன் வாங்கும் பொருள் அழியாமல், நல்ல லாபத்தையும், பிரதிபலனை
யும் சந்தோஷத்தையும் தருகிறது. ஆகையால் நம்முடைய குடியான
வர்கள் வீணுகக் கடன் வாங்குவதை விட்டுவிட்டுக் காரியமாய்க் கடன்
வாங்கப்படித்துக் கொள்வார்களாக. கூட்டுறவுச் சங்கங்களில் அவர்க
ளுக்கு இப்படிப்பட்ட படிப்பும், அப்பியாசமும் அமைவதால் கூட்டுறவு
முயற்சியை அபிவிர்த்தி செய்வது யாரையும் பொறுத்த கடமையாகும்,

இன்னொரு காரியம் கவனிக்கத் தக்கது. கடன் வாங்குவதைவிட,
என்ன வட்டிக்குக் கடன் வாங்குகிறுர்களென்பதையே நாம் முக்கிய
மாய்க் கவனிக்கவேண்டியது. டக்கா ஜில்லாவில் 100-க்கு 24-லிருந்து
100-க்கு 150 வட்டிக்குக் குடிகள் கடன் வாங்குவதாகத் தெரிகிறது,
அதாவது, சராசரி 100-க்கு 45 வட்டி கொடுக்கிறுர்களென்றுல் பெரிய
அநியாயமாகவே யிருக்கிறது. சென்னை ராஜதானியில் 100-க்கு சரா
சரி 24-க்கு மேல் வட்டி கொடுப்பதில்லை. வங்காளத்தில் ஒருவேளை
வட்டிவாசி அதிகமா யிருக்கலாமென்ற போதிலும், இவ்வளவு அதிகமா
யிருப்பது அநியாயமேயாகும். கூட்டு நாணயச் சங்கங்கள் உண்டான

பிறகு வங்காளத்தில் வட்டிவாசி குறைந்திருக்கிறதாவென்று தெரியவில்லை. இந்த சென்னை ராஜதானியில் அநேக இடங்களில் குறைந்திருக்கின்றன. ஐக்கியமாகாணங்களில் இப்பொழுது சௌகார்களைவிட ஐக்கிய நாணயச் சங்கங்களில் 100-க்கு 10 வட்டியைக் குறைத்துக் கொடுக்கிறார்கள். ஆகையால் காலவட்டத்தில் சௌகார்களும் 10 விதம் குறைத்துக்கொடுக்கவேண்டி யிருக்கிறது. இப்படி நாட்டில் வட்டி வாசிகள் குறைந்திருப்பதானது கூட்டுறவு முயற்சியால் விளைந்திருக்கும் முக்கியமான நன்மைகளில் ஒன்றாகும்.

கூட்டுறவுச் சங்கங்கள் கூடிய சீக்கிரம் அதிகரிக்கவில்லை யென்று மிஸ்டர் அஸ்காலி சொல்லுகிறார். ஆனால் இதுசரியா? மற்ற நாடுகளையெல்லாம் விட இந்தியாவில்தான் அதிசீக்கிரத்தில் கூட்டுறவு முயற்சிகள் அபிவிருத்தி அடைந்துவிட்ட தென்று சகலரும் சொல்லுகிறார்கள். சென்ற 10 வருஷத்துக்குள் இத்தேசத்தில் 20,000 சங்கங்கள் தலையெடுத்திருக்கின்றன. இனிமேல் சீக்கிரமாய் ஏராளமானசங்கங்கள் ஏற்பட்டு விடுமென்பது நிச்சயம். எப்படி நிச்சயமென்றால், ஆரம்பத்தில் எல்லாத் தேசங்களிலும் மெள்ள மெள்ளத் தலையெடுத்துப் பிறகுதான் தீவிரமாக அபிவிருத்தி அடைந்திருக்கின்றன. அப்படித்தான் நமது நாட்டிலும் அபிவிருத்தி அடையுமென்பதில் என்ன சந்தேகம்? ஆகவே சகல விஷயங்களையும் சீர் தூக்கிப்பார்த்தால் இந்தியாவில் கூட்டுறவு முயற்சி இன்னும் அதிக அபிவிர்த்தி அடையுமென்பது நிச்சயம் ஆதலால் மிஸ்டர் அஸ்காலியின் அவநம்பிக்கைக்கு யாதொரு ஆஸ்பதமுமில்லை.

---

## ஐக்கிய விவசாய யூனியன்.

நாகபூரில் பிரசுரிக்கப்படும் அக்ரிகல்சரல் கோவாப்ரேடிவ் கெஜட்டின் ஆகஸ்டு பிரதியில் மத்திய மாகாணங்களிலும் பேராரிலுமுள்ள ஐக்கிய முயற்சிக்காரர்களின் உபயோகத்திற்காக ஐக்கிய விவசாய யூனியன் மாதிரி பைலாக்கள் வெளியிடப்பட்டன. அதின் நோக்கங்கள் விசேஷமாய் விவசாயிகள் அனைவரும் விரும்பத்தக்கனவைகள்:— அவைகளாவன 1. நவீன விவசாயக்கருவிகளை உபயோகிப்பதில் மெம்பர்களுக்கு உதவிசெய்தல் 2. மெம்பர்கள் விவசாய முறையில் புது ஏற்பாடுகளை கூடிய சீக்கிரத்தில் அநுபோகத்திற் கொண்டுவரும்பொருட்டு, தகுந்த ஸ்தாபனங்களை யேற்படுத்துதல், 3, ஐக்கிய முயற்சியால் விவசாயத்திற்கு வேண்டிய விதை, கருவிகள், உழவுமாடு, எரு, முதலியவைகளை மொத்தமாய் குறைந்த கிரயத்திற்கு வாங்கவும், விளைபொருள்களை மொத்தத்தில் உயர்ந்த கிரயத்திற்கு விற்கவும், பிரயத்தனம் செய்தல்.



இம்மாதிரி யூனியனுக்குப் பங்கு முதல் ஒன்றுமில்லை. ஆனால் அதின் பொறுப்பு வரையறுக்கப்பட்டுள்ளது. அது அநேக கிராமங்களை சேர்ந்துள்ளாதாயிருக்கும் தனி நபர்களும் சங்கங்களும் அதில் மெம்பராகலாம்; ஆனால் அதில் சேரும் மெம்பர்களுக்கு யூனியன் எல்லைக்குள் ஸ்தாவர சொத்துக்களிருக்கவேண்டும்; தெரிந்தெடுக்கப்பட்ட கம்மிட்டி மெம்பர்களால் அது நிர்வகிக்கப்பட்ட போதிலும், விவசாய இலாகா டிப்டி டைரெக்டர் மேற்பார்வையிலிருந்து வரும். இம்மாதிரி யூனியன்களை ஐக்கிய முயற்சிக்காரர்கள் நம் இராஜதானியில் ஸ்தாபிக்க முயலுவார்களென எதிர்பார்க்கப்படுகிறது.

---

## ஷாம் ராவ் வித்தல் அர்பன் கோவாப்ரேடிவ் ஸொஸைட்டி.

ஷாம்ராவ் வித்தல் அர்பன் கோவாப்ரேடிவ் ஸொஸைடியின் சென்ற வருஷத்திய ரிபோர்ட்டை பார்வையிட்டால், அநேக மார்க்கங்களில் அச்சங்கம் அபிவிருத்தி யடைந்திருப்பதை நன்கறியலாம். சங்கங்களின், மெம்பர்கள் 1077-லிருந்து 1180-க்கும், பங்குத் தொகை ரூ. 34,051 லிருந்து ரூ. 39,217க்கும், கடன் கொடுக்கப்பட்ட துகை ரூ. 3,01,858 லிருந்து ரூ. 4,78,326க்கும், டிபாஸிட்டுகள் ரூ. 2,11,636-லிருந்து ரூ. 2,64,811க்கும் அதிகரித்திருக்கின்றன. ஆனால் பிரஸ்தாப வருஷத்திய நிகர்லாபம் ரூ. 9,128லிருந்து ரூ. 8,520க்குக் குறைந்துவிட்டது. இச் சங்கமானது வருஷந்தோறும் 100க்கு 5 வீதம் தன்னுடைய நிகர்லாபத்தில் ஷாம்ராவ் வித்தல் கல்வி நிதிக்குக் கொடுத்து வருகின்றது. அவ்விதத்துகை இவ்வருஷத்தில் சேர்ந்தது ரூ. 426. க்ஷேமநிதி 30,000க்கு உயர்ந்திருக்கின்றது; அவற்றில் ரூ. 5,000 யுத்தக் கடனில் போடப்பட்டிருக்கிறது. இப்பொழுது யெடுக்கப்பட்டுள்ள 4888 பங்குகள் போக, பாக்கியாகிய 3112 பங்குகள் விற்பனைக்கிருக்கின்றன. டிபாஸிட்டின் வட்டி வீதமானது $3\frac{1}{2}$-யிலிருந்து 5 வரையில் வகைக்குத் தகுந்தபடி யேற்பட்டிருக்கின்றது.

* * * *

பங்காளம் ஐக்கிய முயற்சிச் சங்கங்களுக்கு ரிஜிஸ்ட்ராராயிருந்த ரேய். J. M. மித்ரா பகதூர் அவர்கள் சென்மாதம் 29-தேதியில் தன்னுடைய வேலையை மிஸ்டர் J. T. தானவன் துரை அவர்களிடம் ஒப்பித்து விட்டு ஸிம்லா கவர்ன்மெண்டாரிடம் வேறு வேலை ஒப்புக்கொண்டார். அவர் சுமார் ஏழுவருஷகாலம் ரிஜிஸ்ட்ராராயிருந்தார், அவர் காலத்தில் ஐக்கிய யியக்கம் மிகவும் விசாலித்து ஓங்கி வளர்ந்தது.

* * * *

## ருஷியாவில் வியக்கத் தக்க அபிவிருத்தி.

ஐக்கிய முயற்சியின் பின் வளர்ச்சியைப்பற்றி ஒரிந்து பத்திரிகையில் ஓர் வியாசம் பிரசுரிக்கப்பட்டது. அதில் ருஷியாவில் ஐக்கியவியக்கம் முக்கியமாய் இந்த யுத்த காலந்திலேயே எவ்வளவு விரைவாய் அபிவிருத்தி யடைந்திருப்பதென தெளிவாய்க் காட்டப்படுகின்றது. மற்ற ஐரோப்பிய தேசத்தைக் காட்டிலும் ருஷியாவானது அநேக நிலமைகளில் நம்முடைய தேசத்திற்கு ஒத்திருத்தலால், அதின் அபிவிருத்தியை கவனிக்க நமக்கு அதிக ஆவலிருக்கவேண்டும். அந்தேசமானது விசேஷமாய் விவசாயிகள் நாடு, 100க்கு 86.7 ஜனங்கள் விவசாயத்தில் ஜீவித்து வருகிறார்கள். 1908 வருஷத்தில் சுமார் ரூ. 37,70,000 வியாபாரம் செய்துவந்த 65 பாற்சாலைகள் சேர்ந்து ஓர் யூனியன் ஏற்படுத்தப்பட்டது. 1916 வருஷத்தில் அதில் சேர்ந்த பாற்சாலைகளில் சங்கியை 1,000 ; அவைகள் வியாபாரஞ்செய்து வந்த தொகை ரூ. 10,50,00,000. 1905 வருஷத்தில் கூலிவேலை செய்பவர்களுக்கு ஸ்தாபிக்கப்பட்டிருந்த பிரிவினைச் சங்கங்கள் சுமார் 1,000-யிருந்தன ; 1914 வருஷத்தில் அவைகளின் சங்கியை 10,000 க்கும் இப்பொழுது சுமார் 20,000.க்கும் உயர்ந்திருக்கின்றது. இங்கிலாந்திலும் இந்தியாவிலுமுள்ள பிரிவினைச் சங்கங்கள் போலல்லாமல், ருஷியன் சங்கங்கள் விவசாயிகளுக்கு நன்மையைத்தருகின்றன. அவைகள் ஒழுங்காய் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. அவைகளில் அநேக யூனியன்களிருக்கின்றன. அவைகளெல்லாம் மொத்த விற்பனை செய்யும் சங்கங்கள். அவைகளில் ஒன்றாகிய மாஸ்கோ யூனியன், 1910 வருஷத்தில் சுமார் ரூ. 50 லக்ஷம் வியாபாரம் செய்துவந்த 393 சங்கங்கள் சேர்ந்துள்ளது ; ஆனால் 1914 வருஷத்திலோ சுமார் ரூ $5\frac{1}{2}$ கோட்டி தொழில் செய்து வரும் 1700 சங்கங்கள் சேர்ந்திருந்தன. நாணயச் சங்கங்களும் அம்மாதிரி அபிவிருத்தி யடைந்திருக்கின்றன.

---



# கிராமச்சங்கங்களும் அவைகளின் மேற்பார்வையும்.

[திருவண்ணாமலை ம-ா-ா-ஸ்ரீ M.S. சேஷாசலமய்யர் அவர்களெழுதியது]

மேற்கூறிய விஷயத்தைப்பற்றி ம-ா-ா-ஸ்ரீ ரேய் சாகெப், K. ராமஸ்வாமி அய்யர் அவர்கள் ஆங்கிலப்பிரதி கோவாபரேடிவ் புல்லடின் ஜூன்மீ சஞ்சிகையில் ஒரு வியாசம் வரைந்துள்ளார். இஃது கிராமச்சங்கங்களைப் பெரும்பாலும் சார்ந்ததாதலின் நம்பிரதேச ஐக்ய சங்கக்கூட்டத்தார் அனைவரும் அறிந்து தத்தம் அனுபவங்களைத் தெரிவிக்க முயலும்படி ஐயரவர்களின் வியாஸசாராம்சத்தையும் எழுதி எம் அனுபவ அபிப்ராயமுமிங்கு கொடுக்கத் துணிந்தேன். அய்யரவர்கள் தம் வியாசத்தில், "இதர தேசங்களில் குடிகளாலே பரவச்செய்யப்பட்ட ஐக்யபாவம் நம்மிந்தியாவில் ராஜாங்கத்தாரால் செய்யப்பட்டதென்றும், தக்க அஸ்திவாரமின்றி அதிக சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டனவென்றும், மேற்பார்வையின் பலத்தால் இப்போதிருக்கும் சங்கங்கள் சீர்ப்பட்டாலொழிய மேல்மேலும் புதியசங்கங்கள் ஸ்தாபிப்பது விரும்பத்தக்கதல்லவென்றும், ஐக்ய சங்க ராஜாங்க சிப்பந்திகளின் பார்வைக் குறைவாலேயே இவ்வளவு சீர்கேடான ஸ்திதி நேர்ந்ததென்றும், ஆதலின் சங்கங்களை சரிவரமேற்பார்வைசெய்து ஒழுங்குப்படுத்த வேண்டிய அவசியம் தற்காலம் எல்லாரும் ஒரு மனதாய் கவனிக்கவேண்டுமென்றும், அதற்காக அவர் முடிவாய் கீழ் குறித்துள்ள சில விதங்களால் மேற்பார்வையை கவனிக்கவேண்டுமென்று பிரேரேபித்திருக்கிறார்:—(1) பிரதேச யூனியன் என்னும் சங்கங்கள் சேர்ந்து ஏற்படுத்திக்கொள்ளும் ஸ்தாபனத்தையேற்படுத்துதல் (2) ராஜாங்க ஐக்ய சிப்பந்திகளை அதிகப்படுத்தல் (3) ஜில்லாபாங்கிகள் அந்தந்த ஜில்லாவிலுள்ள சங்கங்களை மேற்பார்வை செய்தல். இப்படி பிரேரேபித்திருப்பதில் அய்யரவர்கள் முதலாவதான பிரதேச யூனியன் (லோகல்யூனியன்) விஷயமானது மிக்க சிறந்ததாயினும் தற்காலம் கிராமங்களில் இம்மேற்பார்வையை சரிவர கவனித்து நடத்துவோர் அபூர்வமாயிருப்பதாயும் சூபர்வைஸர்களிடம் வேலை வாங்கும் திறனில்லாதிருப்பதாயும் அஸிஸ்டண்டு ரெஜிஸ்ட்ரார்களே உண்மையில் இச்சங்கங்களில் அதிகாரம் செலுத்துவதாயும் இப்படிபட்ட யூனியன்கள் தான் இப்போதிருக்கின்றனவென்றும், ஆதலால் லோகல் யூனியன்வகையால் மேற்பார்வை செய்வதானது அதிக தீங்கை விளைவிப்பதாகுமெனவும் சொல்லுகிறார். மறுபடி ஐக்ய கூட்டத்தார் பிரேரேபிக்கும் இரண்டாவதம்சமான ராஜாங்க ஐக்ய சிப்பந்திகளை அதிகப்படுத்தி மேற்பார்வை செய்வதென்னும் விஷயமாய் அய்யரவர்கள்,

ராஜாங்க ஐக்ய சிப்பந்திகள் செய்யும் வேலை நிஷ்பிரயோசனமானதென்றும் ஐக்ய சங்க விஷயமாய் உழைக்கும் அனுபவிகளுக்கன்றி மற்ரோரறிய மாட்டாராதலின் கவர்ன்மெண்டு கோவாபரடிவ் சிப்பந்திகளை ஜாஸ்திப்படுத்துவதில் பலனில்லையெனவும், தற்காலம் தேசாபிமானம் கொண்டு சுயநன்மையை சிறிது துறந்து வந்திருக்கும் இனிஸ்பெக்டர்கள் தங்கள் மேலதிகாரிகளின் ஸர்க்குலர் உத்திரவுகளால் விலங்கிடப்பட்டு தம்தமக்குத் தோன்றும் சிறு உபகாரமும் செய்யவியலாமலிருப்பதாயும் தெரிவிக்கிரூர்.

கடைசியாய், மூன்ருவதான ஜில்லாபாங்கிங் யூனியன்கள் அந்தந்த ஜில்லாக்களில் ஏற்படுத்தி அந்த ஜில்லாவிலுள்ள சங்கங்களை மேற்பார்வை செய்யும்படி செய்யும் விஷயம் ஒன்று மாத்திரம் தனக்கு பொருத்தமாயிருப்பதாயும் அதை பரிட்சிப்பதற்கு முன் ஒருவித அபிப்பிராயமும் தெரிவிப்பது சாத்தியமல்லவென்றும் தற்கால ஜில்லாபாங்கிகளின் ஸ்திதி யாவருக்கும் தெரியுமாதலின், டிரக்டர்களை தக்கோராய் நியமிக்கவும், வெகுகாலம் மேற்பார்வை வேலை பூராவும் ஷை பாங்கி காரியதரிசியோ மானேஜரோ கவனிக்கும்படி நேருமாதலால் அந்த காரியதரிசியை அல்லது மானேஜரை நியமிக்கும்பொழுது அதிக கவனத்துடன் தக்கவர்களாய் நியமிக்க வேண்டுமெனவும் கூடுமானல் கனம் ரெஜிஸ்திரார் அங்கீகாரம் செய்யும்படி விடவேண்டுமே யொழிய டிரக்டர்கள் தெரிந்தெடுத்தலுடன் முடிவாய் அங்கீகாரஞ் செய்தல் சரியல்ல வெனவும், நாளடைவில் டிரக்டர்கள் தங்கள் வேலையையும் பொறுப்பையும் அறியநேருவதுடன் லோகல் யூனியன்களும் ஸ்தாபிக்க ஹேதுவாகுமெனவும் வியாஸத்தை முடிவு செய்திருக்கிரூர்.

இவ்வியாசத்தில் ஆங்காங்கு விவரிக்கப்பட்டிருக்கும் விஷயங்களைப்பற்றி அபிப்பிராய பேதங்கள் உண்டென அவரே ஒத்துக்கொண்டபோதிலும் அய்யரவர்கள் பக்கச்சார்பாய் காட்டப்பட்ட பல அனுபவங்கள், இவ்விராஜதானியில் பலபாகங்களிலுமுள்ள ஐக்யர்களுக்கு முற்றுமாருன எண்ணத்தையும் ஆச்சரியத்தையும் விளைவிக்கிறதென்பதில் ஐயமில்லை. ஒருகால் எங்கேனும் ஒருவரிருவர் இவ்வியாஸத்திற் கொப்ப நடந்திருப்பினும் பொதுவாய் ராஜதானியிலுள்ள ஐக்ய பிரபாவத்தையே பாதிப்பதாய் பொதுப்படும்படி இவ்வியாஸம் கண்டிப்பதால், ஐக்யர்கள் தங்கள் அனுபவங்களை உள்ளபடி கொடுத்தல் அவசியமானது.

இதர தேசங்களில் சங்கங்கள் குடிகளின் பிரேரேபணையால் துவக்கப்பட்டு அவர்களாலேயே நடத்தப்பட்டு வருவதும் நம்மிந்தியாவில் ராஜாங்கத்தாராலேயே ஸ்தாபிக்கப்பட்டு பராமரிக்கப்படுவதும் வாஸ்தவமே. இது ஐக்கிய நிலைமைக்குச் சரியல்லவென்பதும் ஐக்ய விஷயங்



களை குடிகள் தம் சொந்தமாக்கிக்கொண்டாலொழிய ஐக்ய நிலை சரியானபடியிருப்பதாகாதென்பதும் கூடவாஸ்தவமே. 1902-ம் வருஷம் ஸர் பிரட்ரிக் நிக்கல்ஸன் துரையவர்கள் ஐக்ய பிரபாவம் நம்மிந்தியாவில் பரவப்பட வேண்டுமென ரிபோர்ட்டு எழுதிய காலத்திற்கு முன் ஐக்ய விஷயம் நம்தேசத்தில் யார் மனத்திலுமுதிக்க வில்லையே. இங்கிலாந்தில் லார்ட் ஓவன் முதலிய தேசாபிமானிகள் செல்வாக்குள்ள ராஜதந்திரிகளையும் உபேட்சித்து ஏழைக்குடிகளின் க்ஷேமத்தையே விரும்பி, அவர்களின் அன்பும் உதவியும்பெற்று ஐக்ய பாவத்தை நிலைநிறுத்தி தான் தண்டனைகளுக்கு முள்ளாகி கடைசியாய் தான் பட்ட சிரமத்துக்காக என்றும் புகழப்படும் அழியாப்பெரும்பேறடைந்தனர்.

அத்தகைய விஷயத்தை பல பெரு சுவதந்தரங்களுடனும் உதவிகளுடனும் 1904-ம் வருஷம் சட்டரூபமாய் வெளியிடும் காலத்திலாவது குடிகளின் பிரதிநிதிகள் (ராஜாங்க சம்மந்தமில்லா பிரமுகர்கள்) தங்கள் பொறுப்பில் சங்கங்களை ஸ்தாபித்தும் குடிகளுக்கு கற்பித்தும் ஐக்ய சம்பந்தமான எல்லா விஷயங்களையும் தாங்களே வைத்துக் கொள்வதில் அந்த சட்டமாவது அல்லது அதைக்கையாண்ட ராஜாங்கத்தாராவது ஆட்சேபித்தாரில்லை. ஜனப் பிரதிநிதிகளின் பராமுகம் ஜாஸ்தியாயிருந்த அன்னளில் முதல் ரெஜிஸ்திராராய் நியமிக்கப்பட்ட தற்காலம் எக்ஸிகூடிவ் கௌன்ஸில் மெம்பராயிருக்கும் ஆனரபில் திவான் பஹதூர் ராஜகோபாலாசாரியார் அவர்கள் ஜனப்பிரதிநிதிகளிடம் எவ்வளவு மன்ருடி சில சங்கங்கள் ஸ்தாபித்தாரென்பதை ஐக்கியர் யாருமறிவர். சின்னள் சென்று ஐக்கிய பாவத்தை விருத்தி செய்யப்பாடுபட்ட இரண்டாவது ரெஜிஸ்திரார் திவான் பஹதூர் R. ராமச்சந்திரராவ் அவர்கள் 1909-1910-ம் வருஷ அட்மினிஸ்டிரேஷன் ரிபோர்ட்டில் மேற்பார்வை என்றும் தலைப்பின்கீழ், ஸென்ட்ரல் பாங்கி என்னும் ஜில்லாபாங்கிகள் கிராமச்சங்கங்களை மேற்பார்வை செய்ய லாயக்கானதல்ல வெனவும் வேறு எவ்வித சிரத்தையு மில்லாமல் சங்கங்களின் விர்த்தியை மாத்திரம் கோரும் ஒருகூட்டம் அவர்களுக்குள் ஏற்படுத்துவதுதான் சரியான வழியெனவும் சங்கங்களுக்கு கடன் கொடுக்கும் (ஸென்டரல் அல்லது ஜில்லா) பாங்கிகள் மேற்பார்வை செய்தால் அவைகள் கொடுத்த கடன் பந்தோபஸ்தா யிருக்கிறதா வெனப்பார்க்குமே தவிர மற்றெவ்விதத்திலும் ஐக்ய பாவத்தை விர்த்தி செய்யாது என்றும், அக்கால மிருந்த 346 சங்கங்களையே கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தரைக் கொண்டு மேற்பார்வை சரிவர செய்வது சாத்தியமென்றும், ஜனப்பிரதிநிதிகளில் 100 பேராவது முன்வந்து உதவினலொழிய சங்கங்கள் ஈனஸ்திதியையடையுமெனவும், சொல்லியிருப்பது அவர் இவ்விஷயமாய் எடுத்துக்கொண்ட

மன்ப்பூர்வமான சிரத்தையையும் ஊக்கத்தையும் தீர்க்க ஞானத்தையும் தெரிவிக்கிறது. அக்காலமாயினும் நம் பிரமுகர்கள் ஐக்ய சங்கவிஷயமாய் உதவிசெய்ய முன் வந்தார்களில்லை. ஏழைக்குடிகளுக்குதவி செய்யும் நோக்கத்துடன் பிரேரேபித்த சட்டத்தை அமுலுக்குக் கொணர்ந்து ஐக்ய பாவத்தைப் பரவச் செய்யவேண்டுமென்றும் ராஜாங்கத்துக்கும் அதின் சிப்பந்திகளுக்கும் குடி கொண்டிருந்தது. ஐக்ய நன்மையை எதிர்பார்க்கும் கிராம குடிகளோ, படிப்பின்மையாலும் அனுபவ மின்மையாலும் சங்கங்களை ஏற்படுத்திக் கொள்ளவும் அவைகளை மேற்பார்வை செய்யவும் சக்தியற்றிருந்தார்கள். ஜனப்பிரதிநிதிகளான படிப்பாளிகளில் பெரும்பாலர் கனவிலும் ஐக்ய பாவத்தை நினையாமலிருந்தனர். ஆனால் பொதுஜன அபிப்பிராயத்தை வெளியிடும் சமாசாரப் பத்திரிகைகளும் கூட்டங்களும் சங்கங்கள் பரவவில்லை யெனக்கூக்குரலிடவே பின்னிட்ட 6 வருஷகாலங்களுக்குள் சமார் 1600 சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டன. இருக்கும் நிலைமையை நன்கறியாமல் ராஜாங்கத்தார் ஐக்கியபாவத்தில் பிரவேசிக்கலாகாதெனச் சில பிரமுகர்கள் கதறத் தலைப் படவே ராஜாங்கத்தாரும் கொஞ்சம் பராமுகம் காட்டத் தலைப்பட்டனர். சங்கங்கள் அதிகப்பட்டதுபோல் வேண்டிய சிப்பந்திகள் நியமிக்கப்படவில்லை. (சூப்பர்விஷன்) மேற்பார்வையை ஜனப்பிரதிநிதிகளைக் கொண்டே செய்ய சர்வ பிரயத்தனமும் ராஜாங்க ஐக்ய இலாகா சிப்பந்திகள் செய்துவருகிறார்கள். ஆகவே சுமார் 6,7 வருஷங்களுக்கு முன்னமேயே ஐக்ய இலாகாதாரர்கள் தங்களால் சங்கங்கள் சரிவர நடந்து வருகிற தென்பார்க்கப்போதுமான வைசதியில்லையெனவும் தெரிந்திருக்கிறார்கள். ஆயினும் பொதுஜன அபிப்பிராயத்திற் கிணங்கி ஐக்ய பாவத்தை பரவச்செய்யவும் அதிக சங்கங்களை ஏற்படுத்துவதாயும் ஜில்லா பாங்கிகள் சங்கங்களுக்கு கடன் கொடுப்பதில் பணம் ஜாக்கிரதையாய் கொடுக்கப்படுகிறதா வெனக்கவனித்துக் கொள்ளும்படியும், மற்றும் ஐக்ய விர்த்திக்கு சங்கத்தாரே ஒருங்கு சேர்ந்து வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து கொள்ளும்படியும் தெரிவித்திருக்கிறார்கள். அப்படிக்கிருந்தும் வெகு நாள் வரையில் டிஸ்டிரிக்ட்டு பாங்கிகளாவது மற்றுள்ள ஐக்யர்களாவது இப்பொறுப்பை யுணர்ந்தார்களில்லை. ஐக்ய இலாகாவானது இப்போதிய சங்கங்கள் சில சீர்கேடாயிருப்பதற்கு எவ்விதமும் பாத்தியமுடையதல்ல. ஐக்யர்களுக்கு மெய்யுணர்ச்சி யுதித்து பொறுப்பை யறியும் வரையில் சங்கங்களின் மேற்பார்வை ஐக்யர்களைக்கொண்டே டிபார்ட்மெண்டார் செய்ய வேண்டிய தவசியமாயிருக்கிறது. இதற்கு இப்போதமைக்கப்பட்டிருக்கும் சிப்பந்திகள் எவ்விதமும் போதா. நம் நிலைமையறியாமல், கவர்ன்மெண்டின் சம்பந்தம் சற்றும் கூடா தென்பிரமுகர்கள் சில காலமாய் கூக்குரலிடவும் "கூலியும் கொடுத்து எதிர் மூச்சும் போடு



வானேன்" என்று ராஜாங்கத்தார் தலையை உள்ளுக்கிழுத்துக்கொள்ள ஆரம்பித்தனர். ஆயினும், ஜனப்பிரதிநிதிகள், செய்கையில் ஒரு விதமும் ஆரம்பமின்றி எல்லாம் வாய்ப்பேச்சோடு நின்றதால், இந்த டிபார்ட்மெண்டை அடியோடு துலைக்கயியலாமல் "இருதலைக்கொள்ளி எரும்பு" போல் ஊசலாட விட்டிருக்கின்றனர்.

கவர்ன்மெண்டு சிப்பந்திகளின் மேற்பார்வை நிஷ்பிரயோஜனமானதென வியாஸகர் அபிப்பிராயப்படுகிறார். இவ்விஷயம் ஐக்யர்களில் பலர் அங்கீகரிக்கற்பாலதன்று. ஐக்ய இலாகாவில் ரெஜிஸ்திராராயும் சிப்பந்திகளாயும் பொறுக்கப்பட்ட கனவான்களை ஐக்யர் அறிவர். கலெக்டராயும் டிப்டிகலெக்டராயும் பெரும்பதவியில் மட்டற்ற அதிகாரத்தைக் கொண்டு கண்டோர் நடுங்கிக்கால்பணிய தம்மனோபீஷ்டப்படி நன்மையோ தீமையோ நினைக்கவுதவும் திவ்ய பதவியிலிருந்தோர் அவ்வனைத்தும் துறந்து குடிகளிலொருவராய் அவருடன் பழகி அவர் கஷ்ட சுகங்களையறிந்து பரிவுகொண்டு தம் தயாள சிந்தையால் அவருக்குதவ எண்ணியே சங்கங்களை ஸ்தாபித்து தங்களால் கூடிய வரையில் அவர்க்குபதேசம் செய்து, மெய்யறம் பூண்டு தாம் ராஜாங்க அதிகாரிகளென்பதை அடியோடு மறந்து துறவறம் பூண்டு எக்காலும் ஐக்யர்களை முன்னேற்றம் செய்யும் வழியையே யோசித்துக்கவலை கொண்டிருக்கும் டிபார்ட்மெண்டு சிப்பந்திகள் குடிகட்காக இது காறும் சுயநயம் விடுத்து தேசாபிமானம் கொண்டு உழைத்து வந்ததற்குக் கைம்மாறாக மேற்கண்ட அபிப்பிராயத்தைக்கொடுப்பதை ஐக்யரெவரும் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். தவிற நம்மவர்களுக்கு செய்நன்றி மறத்தல் அதிலும் ஐக்ய பாவத்தில் ஈடுண்ட ஐக்யர்களுக்கியல்பில்லையாதலால் இவ்வபிப்பிராயத்தை நாம் கண்டிக்கிறோம். ஒன்றிரண்டு காரணங்கள் எங்கேனும் ஏற்பட்டிருப்பினும் பொதுப்படையாய் டிபார்ட்மெண்டையே நிஷ்பிரயோஜனமாக்கியது மிக்க ஆட்சேபகரமானதுடன், இவ்வார்த்தைகளை நம்பி கவர்ன்மெண்டார் பின் வாங்கினால் ஐக்கிய சங்கங்களின் கதி அதோகதியாய் நாடெங்கும் கூக்குர லெழும்புமென்பதிற்சந்தேகமில்லை.

சங்கங்களின் மேற்பார்வையை, சங்கங்களால் ஸ்தாபிக்கப்பட்ட லோகல் யூனியன்களைக்கொண்டோ அல்லது டிஸ்டிரிக்ட்டு பாங்கைக் கொண்டோ பார்க்கவேண்டுமென்றும் என்பதையும் அவைகளில் எது தக்கதென்பதைப்பற்றியும் கீழ் யோசிப்போம். எவ்விதத்தினும், ஐக்யர் மேற்பார்வை செய்யப் பண்படுத்தவேண்டியராவர். தற்காலம் மேற்பார்வை தோரணையை ஐக்யர்களுக்குக் கற்பித்து தங்கள் சங்கங்களை தாங்களே பராமரிக்கவேண்டிய, அறிவையூட்டி, சரிவர நடத்தப்படுகிறதாவென சாட்சி பூதமாய் நிற்பதற்கு டிபார்ட்மெண்டார் வேண்

டிய அஸ்திவாரக்கல் நாட்டிவருகின்றனர். ஐக்யர்களுக்கு மன ஊக்கமும், பொறுப்பும், மேற்பார்வைத்திறனும் திருப்திகரமாய் ஏற்படும் காலம் வரையில், டிபார்ட்மெண்டார் இன்னும் பலமாயும் ஊக்கமாயும் மேற்பார்வை நடத்தவேண்டும். இப்போதிய டிபார்ட்மெண்டு சிப்பந்திகள் கொஞ்சமும் போதாதர்தலின் ஐக்யர்கள், டிபார்ட்மெண்டு சிப்பந்திகளை அதிகப்படுத்தக்கோருகிறார்கள். சங்கங்களால் நியமிக்கப்படும் சிப்பந்திகளைப்பழக்கவும், இப்போதியச் சங்கங்களின் எண்ணிக்கைக்கேற்றபடியும் மேற்பார்வைக்காக, தற்காலம் இருக்கும் சிப்பந்திகளைப்போல் இன்னுமொருமடங்கு கவர்ன்மெண்டார் தயை கூர்ந்து நியமித்து ஐக்யர்களுக்கு மேற்பார்வையின் பொறுப்பைப்போதித்து அதில் அவர்களைப் பழக்கினாலொழிய மற்றப்பிரேரேபணை யனைத்தும் வாய்ப்பேச்சாய் நிற்கும்.

இனி ஜில்லா பாங்க் மூலமாகவா அல்லது லோகல் யூனியனைக் கொண்டா மேற்பார்வை செய்வதுசீதமென்பதைப்பற்றி யோசிப்போம். 1909-1910 வருஷம் ரெஜிஸ்திராராயிருந்த கனம் திவான் பஹதூர் ராமச்சந்திரராவ் அவர்கள் சொல்லியபடி, ஜில்லா பாங்குகள் வட்டி லாவாதேவி செய்யுந்திறனுள்ளதன்றி ஐக்ய பாவம் மற்றெவ்விதத்திலும் பயன்படாவையாயிருக்கிறது. ஒவ்வொருவர் ஒன்றிரண்டு பாங்கிகளில் மன ஊக்கமும் கிராமச்சங்கங்களை அபிவிர்த்தி செய்து முன்னுக்குக்கொண்டுவர நோக்கமுங்கொண்டோராய்க் காணப்படுகின்றனர். இவர்களைக்கொண்டே இவர்கள் சேர்ந்திருக்கும் பாங்கிக்கே ஊக்கமிருப்பதாய் நினைப்பதியலாது. ஏனெனில், இவர்கள் இந்த பாங்கைச்சார்ந்து எக்காலுமிருப்பது நிச்சயமல்ல. பொதுவாய், ஜில்லா பாங்கிகள், பெருந்தொகைகளைச் செலுத்தும் பங்குக்காரர்களுடையதாதலின், அப்பெருந்தொகைக்குத் தக்க வட்டி பெறவேண்டுமென்னும் நோக்கத்துடனேயே கொடுக்கப்படுகிறதாதலின், லாபம் சம்பாதிக்கவேண்டிய வேலையை மாத்திரம் மேற்கொள்ள ஏற்றதன்றி கிராமச்சங்கங்களின் மேற்பார்வையைச் சரிவர நடத்தத்தக்கக் கூட்டமல்ல. அப்படியன்றி ஷை பாங்கியைச் சேர்ந்த ஒன்றிருவர் நன்னோக்கத்தால் ஏற்படினும், இவர்களன்றி மற்றோர்க்கு தமக்குவரவேண்டியவட்டி நோக்கமன்றி, மற்றெவ்வித நன்தொழிலிலும் ருசிக்காததும் தவிர, தங்கள் பணத்தையும் அதற்குவரவேண்டிய லாபத்தையும் சேர்ந்தவரையிலேயே ஜில்லா பாங்கின்மேற்பார்வை நிற்கும். மேற்பார்வைக்கு விடப்படும் சங்கங்களின் நிலைமையும் அப்பிரதேசவசதியும், குடிகளின் நடத்தையும், காலசம்பவங்களும் அவ்வப்பொது நேரில் சுபாவமாய் அறியக் கூடிய வளவுக்கு மிஞ்சி ஓர் மேற்பார்வையேற்கும் சங்கத்துக்கு அதிகாரவெல்லையிருந்தால் அதின்வேலை சரிவர நடவாதெனப் பலரும் அபிப்பிராயம் கொண்டிருக்கின்றனர். எப்படி



ஒவ்வொரு சங்கமும் அதில் சேரும் மெம்பர்களை நன்றாயறிந்து அவர்கள் நடவடிக்கைகளை கவனிக்கும்படி ஒருகிராமம் அல்லது இரண்டு கிராமங்களுக்குமேல் சேர்ந்திருக்கப் படாதென ஒப்புக்கொள்ளப் பட்டிருக்கிறதோ அப்படியே மேற்பார்வைச் சங்கமும், ஒன்றையொன்று அறியாத பலசங்கங்களையுடைய பெரும்பாகமாயிருத்தல் சரியல்ல. இக்காரணங்கொண்டும் ஒரு ஜில்லாவிற்கு ஓரே மேற்பார்வைச் சங்கம் இருப்பது பிரயோஜனகரமானதல்ல. மேற்பார்வை செய்யப் பழக்குவதற்கு ஜில்லா நகர்களிலுள்ளோரைப் போலவே கிராமங்களில் வசிப்போரிலும் லாயக்கானவராயும், ஐக்யபாவத்தை இன்னும் சீக்கிரத்தில் நடவடிக்கைக்குக் கொண்டுவரும் சுபாவமுடையோராயும், தம்போன்ற நடையுடை பாவனையுள்ள குடிகளிடம் சிரத்தையுள்ளவராயு மிருக்கின்றனர். ஆதலின் ஜில்லாபாங்குகளை மேற்பார்வைக்காகப் பழக்குவதாவது அல்லது ஏவுவதாவது பெரும் நன்மையை விளைவிக்குமென எதிர்பார்ப்பதற்கில்லை. ஆனால் ஜில்லா நகர்களில் மேற்பார்வைக்காக மாத்திரம் சங்கங்களின் பிரதிநிதிகளைக் கொண்டு ஒரு சபைசேர்த்து ஜில்லாவிலுள்ள லோகல் யூனியன் முதலியவைகளைப் பார்த்து ஓரே ரீதியாய் நடந்து வரவும், ஜில்லாவில் ஐக்ய பாவம் வேரூன்ற பொதுவாய் புத்திமதி சொல்லவும், ஏற்படுத்தினால், ஜில்லாவிலுள்ள ஐக்யப் பிரபாவங்கள் ஒரு மனப்பட்டு கோர்வையாகும்.

கிராமச்சங்கங்கள் சமீபத்திலிருக்கும் வரையில் ஆங்காங்கு லோகல் யூனியனைஸ்தாபித்து, அதில் சேர்ந்த சங்கங்களில் திறனுள்ள சிலபிரதிநிதிகளால் அச்சங்கங்களை மேற்பார்வை செய்வதும், அந்த யூனியன் தம்பொறுப்பை யறிந்து, வேறு உதவியின்றி மேற்பார்வை செய்யுந் திறமையடையும்வரையில், டிபார்ட்மெண்டார் மேற்பார்வையை அந்தயூனியனைக் கொண்டு செய்ய வேண்டுமென்பதும் யூனியனில் அனுபவமுள்ளோரின் அபிப்பிராயம். எப்படி தண்ணீரில் நீச்சம் கற்றுக் கொடுக்குமொருவன் தன் மாணவனைப் பிடித்துக்கொண்டு நீரில் விடுத்து அவனை கைகால்களைக் கொண்டே நீந்தும்படி செய்து இடையிடையே தான்விடுவது போல் காட்டுவதும், திறனில்லை யெனின் மறுபடி பற்றுவது மாயிருக்கிறானோ அப்படியே யூனியன்கள் திறனாகும் வரையில் டிபார்ட்மெண்டார் அவைகளை தூக்கிப்பிடித்துக் கொண்டே வரவேண்டும். அதுவன்றி நீச்சம் கற்கவிரும்பும் ஒருவனை யாதொரு உதவியுமின்றி திடீரென்று தண்ணீரில் விடப்பட்டால் மூழ்கியிறப்பது நிச்சயம். இதனாலேயே இப்பொழுதுயேற்பட்டிருக்கும் யூனியன்களில் அஸிஸ்டண்டு ரெஜிஸ்திநார்கள் பிரவேசித்து மேற்பார்வை கவனிப்பதை நன்றென்றே கொள்ளல் வேண்டும். ஆனால் யூனியனை ஏற்படுத்தி அதற்கு சுயேச்சையேயில்லாமல் எல்லாக்காரியங்களும் டிபார்ட்மெண்டாரே செய்து கொண்டிருந்

தாலும் பொறுப்பை யூனியன்களறிய மார்க்கமேற்படாது. எப்படி நீந்த விரும்பும் ஒருவனை ஒரு சமயத்திலாவது தண்ணீரில் உதவியின்றி விட்டு முழுகும் காலத்தில் பிடிக்காமல் சதாபிடித்துக்கொண்டே யிருந்தால் இந்த உதவியின் பலத்தால் நீச்சத்தை ஊக்கத்துடன் கற்காமலிருக்கிறானோ அப்படியே யூனியன்களும் ஒவ்வொரு சமயத்திலாவது பொறுப்பை யறியும்படி விடப்படா விட்டால், டிபார்ட்மெண்டின் உதவியையே நம்பி தங்கள் வேலையைக்கற்க சமயம் வாய்க்காது. இதையறிந்தே தற்போதிய யூனியன்களுக்கு சுயேச்சை பூராவும் கொடுக்கப்பட்டு தவறு நேரும் காலங்களில் மாத்திரம் அது எடுத்துக் காட்டப்படுகிறது.

---

## கூட்டுறவு முயற்சியும் கல்வி அபிவிர்த்தியும்.

H. E. லார்ட்பென்ட் லண்டு துரையவர்கள் சென்னை முதல் கோவாபரேடீவ் கான்பரன்ஸை திறக்கும்பொழுது “கூட்டுறவின் அபிவிர்த்தியும், நல்ல நிலைமையும், கல்வியின் வளர்ச்சிக்குத் தகுந்தாற் போலிருக்கும். கூட்டுறவு மனிதர்களுடைய இருதயத்திலும் மூளையிலும் வேறூன்ற வேண்டும் ******* நீங்கள் எல்லோர்க்கும் கல்வி போதிக்க வேண்டும். கூட்டுறவு இன்னதென்று அவர்கள் அறியும்படி செய்ய வேண்டும்.” என்று சொல்லியது, கூட்டுறவினர்கள் மறந்திருக்கமாட்டார்கள்.

கல்வி ஞானம் இல்லாமல், கூட்டுறவு பரவ முடியாதென ஸர். ஹென்றி வுல்ப் துரையவர்கள் சொல்லியுள்ளார். கூட்டுறவு என்னும் பயிர் கல்வி ஞானம் உள்ள பூமியிற்தான் நன்கு வேறூன்றக்கூடும். கல்வியின் வாசனை கிஞ்சித்தேனுமில்லாதவர்களுக்கு கூட்டுறவுபோதித்தால் கண்ணைக்கட்டி காட்டில் விடப்பட்டவர்கள் போல் தவிக்கிறார்கள் என்பதிற் சந்தேகமில்லை. கூட்டுறவு இன்னதென்பதை கல்வி யில்லாத ஜனங்கள் அறிகிறார்களில்லை. கூட்டுறவை நடத்துவதற்கே சக்தியுமற்றிருக்கிறார்கள். ஐக்கியசங்கம் விர்த்தியாவதற்கு மட்டுமே யல்லாது, ஐக்கிய சங்கம் ஸ்தாபனமாவதற்கே கல்வியின் ஞானம் ஜனங்களுக்கு வேண்டியிருக்கிறது. கல்வி இல்லாததால் கூட்டுறவு இன்னதென எத்தனையோ ஜனங்கள் அறிந்து கொள்ளவில்லை என்பதாக திவான் பஹதூர் ஆர். இராமச்சந்திரராவ் அவர்கள் சொல்லியிருக்கிறார்.

கூட்டுறவுச் சங்கம் வேண்டுமென்று ஜனங்கள் கோருவதற்கும், சங்கத்தைப் பரிபாலனம் செய்வதற்கும் ஜனங்களுக்கு கல்வி வேண்டும். கல்வியின் ஞானம் ஜனங்கள் பெறப்பெற கூட்டுறவின் பயிர் நன்கு தழைக்



கும். கூட்டுறவுச் சங்கத்தில் மெம்பராய்ச் சேர்ந்துள்ளவர்கள் எல்லோரும் படிப்பிக்கப்பட்டால் அல்லது படித்தவர்களானால் கூட்டுறவு முறை இப்போதிருக்கும் நிலைமையை விட எவ்வளவோ மடங்கு அதிகமாக உன்னத நிலையிலிருக்குமென்று யாவரும் மறுக்கவல்லார். கூட்டுறவு இன்னதென்பதை அதிகமாய் அறியாதவர்கள் சங்கங்களில் பிரசிடெண்டாகவும், காரியதரிசியாகவும் இருக்கிறார்கள்.

நீந்தத்தெரியாதவர்கள் ஜலத்தில் தள்ளப்பட்டால் என்ன பாடு படுகிறார்களோ அம்மாதிரியே படிப்பில்லாமல் கூட்டுறவில் இறங்கியவர்கள் தற்போது அடைந்திருக்கிறார்கள். கூட்டுறவுச் சங்கங்கள் செவ்வனே நடக்காததற்கு கல்வியில்லாததே காரணமென்று கூட்டுறவினர்கள் கண்டு கொண்டும் இவ்விஷயத்தைச் சற்றும் கவனியாதிருத்தல் மிகவும் பரிதபிக்கத்தக்க விஷயமே. ஐக்கிய சங்கங்கள் ஸ்தாபனமாகி சுமார் 13வருஷங்களாகியும் கல்வி விஷயம் கொஞ்சமும் மனதிற்படவில்லை. இவ்விஷயத்தைப் பற்றி கூட்டுறவினர்கள் கொஞ்சமும் சிரத்தை எடுத்துக் கொள்ளவில்லை. 1914-15வருஷத்தில் 115 சங்கங்களும், 1915-16 வருஷத்தில் 63சங்கங்களும் சென்னை இராஜதானியில் மூடப்பட்டன. இதற்குக் காரணமின்னதென்று தீரவிசாரணை செய்வோமாகில் மெம்பர்களுடைய கல்வியின்மையே காரணமென்று கண்டு கொள்வோம். கல்வி விஷயத்தைப் பற்றி கூட்டுறவினர்கள் தக்க முயற்சி எடுத்துக் கொள்ளாத பட்சத்தில், கூட்டுறவால் எவ்வளவு நன்மை பயக்குமென நினைத்திருக்கிறோமோ அவ்வளவுக்கு நேர் விரோதமானவையே விளையுமென்பதிற் கொஞ்சமேனும் சந்தேகமில்லை.

கூட்டுறவு விஷயத்தை பிரபலப்படுத்தவும், கல்வியூட்டவும் வேண்டுமென்று சென்னை மாகாண முதல் கான்பிரன்ஸிலேயே இவ்விஷயம் கவனிக்கப்பட்டு ஒரு ஸப்கமிட்டி ஏற்படுத்தப்பட்டும் இது பரியந்தம் இவ்விஷயத்தைக் குறித்து யாதொன்றும் திருப்திகரமாய் செய்ததாகத்தெரியவில்லை.

கோதாவரி ஜில்லா இரண்டாவது கோவாபரேடீவ் கான்பிரன்ஸில் அக்கிராசனம் வகித்தபோது “கூட்டுறவில் கல்வி விஷயத்தைக் குறித்து இன்று அதிகமாகப் பிரஸ்தாபமொன்றும் வரவில்லை. அது மிகவும் முக்கியமானதோர் விஷயம். ஏனெனில் கூட்டுறவு இன்னதென்றும் அதினால் இன்ன நன்மைகள் விளையுமென்றும் கிராமவாசிகள் அறியாவிடில் கூட்டுறவு சங்கங்கள் வேண்டுமென்று அவர்களே கோறி முன் வருவார்களென்று நாம் எதிர் பார்க்க முடியாது. சங்கங்களினுடைய போதனைக்காகவென இவ்வருஷம் டிபார்ட்டுமெண்டார் சில துண்டுப்பத்திரிகைகளை பிரசுரஞ்செய்துள்ளார்கள்” என்பதாக ரிவினியூ செட்டில்

மெண்டு கமிஷனர் ஆனரபில் L. E. பக்ளி துரையவர்கள் கூறியுள்ளார். டிபார்ட்டுமெண்டார் முன்பு பிரசுரஞ் செய்யப்பட்ட துண்டுப் பத்திரிகையாகிய "ஐக்கிய நாணயத்தின் பத்து விரல்" படிப்பில்லா ஜனங்களால் எப்படி அறியப்பட்டு பிரயோஜனமடைய முடியும். குருடன் முன்னால் எவ்வளவு விநோதமான வேடிக்கை செய்யினும் அவனுக்கு என்ன பயன் விளைவிக்குமோ அதேபயன்தான் கல்விஞானம் சற்றுமேயில்லாதவர்களுக்கு இத்துண்டுப்பத்திரிகைகள் விளைவிக்கும்.

கூட்டுறவின் மூல்யமாய் கல்வி போதிக்கவேண்டுமென்று சொல்லப்படுகிறதே யொழிய பிரத்தியட்சமாய் ஒன்றும் செய்வதாகத் தெரியவில்லை. கொஞ்சமேனும் இவ்விஷயத்தைக் குறித்து சிரத்தை கொண்டிருப்பதாகவும் காணப்படவில்லை.

கோவாபரேடிவ் ரிஜிஸ்தராருடைய 1914-15வருஷத்திய ரிப்போர்ட்டில் டிபார்ட்மெண்டாராவது அல்லது கௌரவ வேலை செய்பவர்களாவது கல்வி போதனா விஷயத்தில் என்ன செய்துள்ளார்களென்பது சொல்லப்படவில்லை யென்றும், இனி அனுப்பப்படும் ரிப்போர்ட்டுகளில் இவ்விஷயத்தைப்பற்றி குறிக்க வேண்டுமென்றும் போர்டார் சொல்லியுள்ளார். 1915-16 வருஷத்தில் இவ்விஷயத்தைக் குறித்து விஸ்தாரமாயாவது விபரமாயாவது ரிஜிஸ்தரார் சொல்லியிருப்பதாகத் தெரியவில்லை. கவர்ன்மெண்டாரால் கிராமச் சங்கங்களுக்கு இலவசமாக பட்வாடா செய்யப்படும் ஜில்லா கெஜட்டுகளினால் மெம்பர்கள் கல்வி விர்த்தியாகுமென்று சிலர் கனவு காண்கிறார்கள். கூட்டுறவு வாஸ்தவமாகவே மெம்பர்களுக்கு பயன் விளையவேண்டுமானால் கூட்டுறவு இன்னதென்பதை மெம்பர்கள் அறிய வேண்டும். ஐக்கிய சங்கங்களில் காணப்படும் பிழைகளுக்கெல்லாம் காரணம் "கூட்டுறவு இன்னதென்பதை மெம்பர்களுக்கு போதிக்காததே" என்று கோவாப்ரேடிவ் கமிட்டியாரே அபிப்பிராயங் கொண்டிருக்கிறார்கள்.

இங்கிலாந்து தேசத்திலும் மற்ற ஐரோப்பா நாடுகளிலும் கூட்டுறவு செழித்தோங்கியதற்குக் காரணம் "மெம்பர்களுடைய கல்வியும், அதன் மூலமாய் அவர்கள் அடைந்த கூட்டுறவு ஞானமும்," என்று கூட்டுறவு துறையில் இறங்கி யுள்ளவர்கள் எல்லோரும் ஒப்புக்கொள்ளக்கூடிய விஷயம்.

கூட்டுறவு மெம்பர்களுக்கு கல்வி அவசியமென்றும், இந்த அவசியத்தைக் கவனிக்க யாதொன்றும் செய்யப்படவில்லை யென்றும், ஏதாவது செய்வதாக சொல்லப்படுவதெல்லாம் ஏட்டுச் சுரக்காயே யொழிய கறிக்கு உதவக்கூடியது ஒன்றுமில்லையென்றும் உள்ளங்கை நெல்லிக் கனிபோல் எல்லோர்க்கும் தெரிந்த விஷயம்.



இக்குறையை நீக்க கூட்டுறவு முயற்சிக்காரர்கள் எல்லோரும் கவனிக்க வேண்டுவது அவசிய மாகையால் கீழே குறிப்பிட்டுள்ள ஸ்கீம் பயன்படுமாவென ஆலோஜிக்கத் தகுந்தது. சங்கங்களின் க்ஷேமநிதியில் 100-க்கு $1\frac{1}{2}$ வீதம் பொதுநன்மை பண்டுக்கென்று செலவழிக்கப் படுகிறது. இத்தொகையை ஒவ்வொரு சங்கமும் ஒவ்வொரு காரியத்திற்கு உபயோகப்படுத்துகிறது. சில சங்கங்களுக்கு இத்தொகையை எவ்விதமாய் செலவழிப்பதென்றே தெரியாது. தவிர, இன்னும் ஐந்து அல்லது ஆறு வருஷங்களுக்கு அநேக சங்கங்களுக்கு லாபமேயின்றி நஷ்டமேவரும். அப்படிக்கிருக்க பொதுநன்மை பண்டுக்கு இவைகள் ஒன்றும் செலவழிக்கமுடியாது. தவிரவும் 100க்கு $1\frac{1}{2}$ வீதம் சேரும் தொகை மிகவும் சொற்பம். இதனால் அதிகப்பயன் விளையுமென்று எதிர்பார்ப்பது தகாது.

ஒவ்வொரு கிராமச் சங்கமும் தான் வாங்கியுள்ள கடனின் பொறுப்பளவுக்குத் தகுந்தாற்போல் 100-க்கு அரை ரூபாயும் ஒவ்வொரு யூனியனும் தான்வாங்கும் ரிபேட்டில் 100-க்கு பதினைந்து ரூபாயும், ஒவ்வொரு சென்டரல் சங்கமும் தனக்கு வரும் நிகர லாபத்தில் 100-க்கு பன்னிரண்டரை வீதமும் மெட்ராஸில் இதற்காக வென்று ஏற்படுத்தப்படும் சங்கத்திற்குக் கட்டவேண்டும். இச்சங்கத்திற்கு "மெட்ராஸ் புரொவின்ஷியல் கோவாபரேடிவ் எடுகேஷனல் அஸோஸியேஷன்" என்று பெயரிடலாம். அல்லது புரொவின்ஷியல் கோவாபரேடிவ் யூனியன்காரர்கள் இக்காரியத்தையும் செய்யக் கூடுமென்று ஒப்புக்கொள்வார்களாகில் அவர்களிடம் ஒப்படைக்கலாம். புரொவின்ஷியல் கோவாபரேடிவ் யூனியன்காரர்கள் அவசியமாயின் இக்காரியத்திற்கென்று பிரத்தியேகமாய் சிப்பந்திகளை ஏற்படுத்திக் கொள்ளலாம். செய்யவேண்டிய காரியங்களாவன:—

(1) மாஜிக்லான்டன் மூலயமாய் ஜனங்களுக்கு கூட்டுறவு, விவசாயம், சுகாதாரம் இவைகளைப் போதிக்க இன்ஸ்பெக்டர்களை நியமித்தல்.

(2) ஐக்கிய சங்கங்கள் உள்ள கிராமங்கள் தோறும் புத்தகசாலைகளை ஏற்படுத்தல்.

(3) துண்டுப் பத்திரிகைகளை அச்சிட்டு இலவசமாய் பட்வாடா செய்தல்.

(4) மெம்பர்களுக்கு கூட்டுறவு பிரயோஜனப்படும் பொருட்டு இராப்பள்ளிக்கூடங்கள் ஸ்தாபனஞ் செய்தல்.

(5) கூட்டுத்தொழில் விஷயமான நாடகங்கள் கிராமங்களிலாவது யூனியன்கள் உள்ள இடத்திலாவது நடத்துதல்.

(6) கூட்டுத்தொழில் வர்த்தமானியில் விஷயங்கள் எளிதில் விளங்கும்படியாக கதை ரூபமாகவும் நாடகரூபமாகவும் பிரசுரஞ் செய்தல்.

(7) கூட்டுறவு விஷயமாய் வியாசங்கள் எழுதப்பரிசுகள் கொடுத்தல்.

(8) ஒவ்வொரு ஜில்லாவிலும் வருஷம் இரண்டு முறை கூட்டுறவு கான்பரன்ஸு கூடுதல்.

---

# ஐக்கிய முயற்சியின் அபிருத்தி.

## உசிலம்பட்டி கோவாபரேடிவ் யூனியன்.

1917ஹு ஆகஸ்டுமீ 6வ உசிலம்பட்டி கோவாபரேட்டிவ் யூனியன் ஆபீசில் 2-வது பஞ்சாயத்து மீட்டிங்கு நடைபெற்றது.

பின் வரும் தீர்மானங்கள் அங்கீகரிக்கப்பட்டன :—

1. கருங்கண்ணிப்பருத்தி சாகுபடி செய்வதற்கு லாயக்கான கரிசல் பூமியுள்ள 1. குறவக்குடி, 2. நாட்டப்பட்டி, 3. வாலாந்தூர், 4. அயோத்திபட்டி, 5. கணவாய்ப்பட்டி, 6. முத்தயன்பட்டி, இந்த ஆறு சங்கங்களின் உபயோகத்திற்காக 20 மூட்டை பருத்திப்பொதி வாங்க வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

2. கம்போடியா பருத்தி சாகுபடி செய்ய லாயக்கான 25 சங்கங்களுக்கு, 125 மூட்டை கம்போடியாப் பருத்தி விதை தருவிக்க வேண்டுமாயும், இந்த வருஷம் வாங்குகிற இவ்விதையிலிருந்து அடுத்த வருஷம் இந்த நாட்டுக்கு வேண்டிய பூறுவிதையும் சப்ளைசெய்ய வேண்டுமாயும், இவ்வருஷத்தில் ஒவ்வொரு சங்கத்திலும், பிரதி மெம்பர்களுக்கும் எவ்வளவு விதை வேண்டியிருக்குமென்பதற்கு சூப்ரவைசர் மூலமாய் லிஸ்டு தயாரித்து அனுப்பவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

3. 558 நம்பர் மேகிளார்பட்டி, 556 நம்பர் குறவக்குடி, 465 நம்பர் கட்டதேவன் பட்டி, 552 நம்பர் அய்யனுகுளம், 442 நம்பர் சிரிப்பட்டி, ஆகிய கோவாப்ரேடிவ் சொஸைட்டிகள் இந்த யூனியனில் ஒவ்வொரு ஷேர் எடுத்துக்கொண்டு மெம்பராய்ச் சேர்த்துக்கொள்ளும்படி தீர்மானிக்கப்பட்டது.

4. இதற்கு முன் கூடிய 1-வது சபை மீட்டிங்கில் 7-வது தீர்மானத்தில் சொல்லப்பட்டிருக்கிற ஒவ்வொரு சங்கத்தினிடமிருந்தும் வருஷம் 1-க்கு ரூ. 6 வீதம் வசூல் செய்யவேண்டுமென்றும் தீர்மானித்திருந்தபோதிலும் இந்த யூனியன் விஷயமாய் சூபர்விஷன் வகையறாச் சிலவுக்காக வசூலாகும் சூபர்விஷன் பண்டுத்துகையும் சென்டிரல் பாங்கிலிருந்து 100-க்கு 4 அணா வீதம் கொடுக்கும் துகையும் சேர்ந்து சிலவுக்குப் போதுமானதாகயில்லாவிட்டால் பிற்பாடு ஷை தீர்மானத்தின்படி வசூல் செய்து கொள்ளலாமென்று தீர்மானிக்கப்பட்டது.



8. முத்தியம்பட்டி சங்கம் பாக்கி ஜாப்தா வாசிக்கப்பட்டது. ஷை சங்கத்தில் இப்போதிருக்கும் பிரசிடெண்டை நீக்கி வேறு பிரசிடெண்டை நியமித்து சங்கம் பாக்கிகளை வசூலிக்க ஏற்பாடு செய்யவேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது. பிரசிடெண்டு முத்துக்கருப்பன் செட்டியார் தன்னுடைய வட்டிபாக்கி பூறாவையும் ஒரு மாசத்தில் செலுத்தி விடும்பக்ஷத்தில் ஒரு மாசம் வாய்தாவுக்கு, ஷையாரே பிரசிடெண்டாக இருந்து வரலாமென்றும் தீர்மானிக்கப்பட்டது. அப்படி செய்யாத பக்ஷத்தில் பஞ்சாயத்திலிருந்து நீக்கிவிட வேண்டியது அவசியம்.

9. குறவக்குடி சொஸைட்டி பாக்கி ஜாப்தா வாசிக்கப்பட்டது. இப்போதிருக்கும் பஞ்சாயத்தார்களை பூறாவையும் உடனே விலக்கி, வேறு பஞ்சாயத்தார்களை நியமித்து பாக்கிகளை கோர்ட்டு மூலமாக வசூல் செய்ய ஏற்பாடு செய்ய வேண்டியது. அப்படிச்செய்ய சாத்தியப்படாவிடில் ஷை சங்கத்தை கலைக்க உடனே சிபார்சு செய்யப்படும்.

10. கரையாம்பட்டி சொசைட்டியின் பாக்கி ஜாப்தா வாசிக்கப்பட்டது. ஷை சங்கத்தில் பிரசிடெண்டு முத்தய பிள்ளையும் தன்னுடைய குடும்பஸ்தரும் ரூ. 2,000 வரையில் கடன்வாங்கி அதைச் செலுத்தாமலும், தன்னுடைய கடன்களை மோசம் பண்ணவேண்டுமென்ற கெட்ட எண்ணங் கொண்டு தன்னுடைய நிலங்களை கிஸ்திபாக்கிகளுக்காக ஏலத்தில் விட்டு தனக்கு வேண்டிய மனிதனைக் கொண்டு ஏலத்தில் எடுத்து வைக்கும்படி ஏற்பாடு செய்திருக்கிறார். ஆகையால் அப்பேற்பட்ட குணமுடையவர் ஷை சங்கத்துக்கு பிரசிடெண்டாயிருக்க லாயக்கில்லை. ஆகையால் ஷை முத்தய்யபிள்ளையையும், மற்ற பஞ்சாயத்தார்களையும் நீக்கி வேறு பஞ்சாயத்தை நியமித்து பாக்கிகளை வசூல் செய்யவும், முத்தைய்ய பிள்ளை பேரில் கிரமினல் தரப்பில் நடவடிக்கைகள் நடத்தவும் வேண்டும். அப்படிச் செய்யச்சாத்தியப்படாவிட்டால் சங்கத்தைக் கலைத்து விட சிபார்சு செய்ய வேண்டியது.

இது விஷயமாய் ஏற்பாடு செய்ய,

(1) ம-ள-ள-ஸ்ரீ லிங்கப்பநாயக்கனூர் பெரிய மாயத்தேவன்,

(2) ,, பெருமாபட்டி ஓச்சாத்தேவர்.

(3) ,, அயோத்திபட்டி நாகருஜத் தேவர். இவர்களை சப் கமிட்டியாக நியமித்திருக்கிறது. ஷையார்கள் ஷை சங்கத்தை கூடிய சீக்கிரத்திற் போய்பார்த்து வேண்டிய காரியங்களைச் செய்து யூனியனுக்கு ரிப்போர்ட் செய்ய வேணுமாய்க் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

---

# தொளசம்பட்டி கோவாப்ரேடிவ் யூனியன்.

சேலம் ஜில்லா ஓமலூர் தாலூக்கா தொளசம்பட்டி கிராமத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் தொளசம்பட்டி கோவாபரேடிவ் யூனியன் லிமிடெட், 1916-17 வருஷத்திய மஹாசபை மீட்டிங்கு சென்ற ஜூலைமீ 31௳ பிற்பகல் சமார் 2-மணிக்கு தொளசம்பட்டியில் கூடியது. அன்றையதினம் சேலம் செக்ஷன் ஐக்கிய சங்கங்களின் அஸிஸ்டெண்டு ரிஜிஸ்தரார் ம-௱-௱-ஸ்ரீ A. வேதாசலய்யர், B. A அவர்கள் வழக்கம் போல் காலை 8 மணிக்கு தொளசம்பட்டிக்கு விஜயம் செய்தார்.

யூனியனில் சேர்ந்த 39 சங்கங்களிலிருந்து பிரிதி நிதிகளும் பஞ்சாயத்து மெம்பர்களும் இதர மெம்பர்களும், மற்றுமுள்ள கிராமத்தார்களுமாக சுமார் 500 மெம்பர்கள் அன்று காலை 9 மணிக்குள் கூடிவிட்டார்கள். மீட்டிங்கு கூடுவதற்காக கிராமப் பெருமாள் கோவிலுக் கருகாமையில் ஒரு சிங்காரமான கொட்டகை அமைக்கபட்டிருந்தது, சென்னை ஐக்கிய சங்கங்களின் ரிஜிஸ்திரார் மிஸ்டர் F. R. ஹெம்மிங்வே I. C. S. சேலத்திலிருந்து மீட்டிங்கு சமயத்து மோட்டாரில் விஜயம் செய்தார். ஷையார் ஊருக்கருகாமையில் வருமுன்னமே ம-௱-௱-ஸ்ரீ A. வேதாசலய்யர் அவர்களும் தொளசம்பட்டி நாணயச் சங்கத்தின் பிரஸிடெண்டும், யூனியன் சூப்ரவைஸராகிய ம-௱-௱-ஸ்ரீ கிருஷ்ணசாமி அய்யர் அவர்களும் மற்றுமுள்ள கூட்டுறவினர்களுடன் வாத்தியகோஷத்தோடு எதிர்ச்சென்று வரவேற்று மீட்டிங்கு கூடும் கொட்டகைக்கு விமரிசையுடன் அழைத்து வந்தார்கள்.

யூனியனில் அணைக்கப்பட்ட சங்கங்களின் நிலைமையைப்பற்றியும் அவைகளின் விவகாரங்கள் சம்பந்தமான கணக்குகளின் சுறுக்கமும், பொதுவாய் மேற்கொண்டு சங்கங்கள் நடந்து கொள்ள வேண்டிய ஏற்பாட்டைப்பற்றியும், முக்கியமாய் மத்தியஸ்தர் கோர்ட்டில் பாக்கிகளைக் குறித்து தாக்கல் செய்து தீர்ப்பு பெறும் விவரத்தைப்பற்றியும் ம-௱-௱-ஸ்ரீ A. வேதாசலய்யர், B. A. அவர்கள் விவரமாய் எடுத்து சொன்னார்.

பிறகு புதிதாக ஏற்படுவதாயுள்ள ஜில்லா பாங்கிங் யூனியனுக்கு தொளசம்பட்டி யூனியனிலிருந்து பிரதி நிதியாக ஜலகண்டபுரம் சொசைடி பிரஸிடெண்டு ம-௱-௱-ஸ்ரீ சிவலிங்க செட்டியார் அவர்களை தெரிந்தெடுக்கப்பட்டது. கூடிய சீக்கிரம் முடிவு கட்ட வேண்டிய நிலைமையிலிருக்கும் கஞ்சனையகம்பட்டி சங்கத்தின் சொல்ப பாக்கி தவிர யூனியனில் அணைக்கப்பட்ட யாதொரு சங்கத்திலிருந்தும் ஜில்லா பாங்காருக்குச் சேரவேண்டிய பாக்கி யாதொன்று மில்லாமலிருந்ததும், தவணைக்கு முன்பாகவே பெருந்தொகைகள் ஜில்லா பாங்குக்கு கட்டப்பட்டிருந்ததும் விசேஷமான புகழ்ச்சிக்கு காரணமாக இருந்தன.



யூனியன் நிர்வாகஸபைக்கு 9 மெம்புர்கள் நியமிக்கப்பட்டார்கள். கனம் ரிஜிஸ்தரார் அவர்கள் லோகல் டிபாசிட்டு பெறவேண்டிய அவசியத்தைப்பற்றியும் தற்கால பணமுடையினால் நீண்ட காலக் கடன் சாங்கிஷன் செய்வது கொஞ்சகாலத்திற்கு சௌகரியமில்லாமலிருப்பதைப் பற்றியும் கந்து லேவாதேவி நடத்தும் சங்கங்களின் விவகாரங்களைப் பற்றியும் இங்கிலீஷிலும் தமிழிலும் மெம்பர்களுடன் விசுவாசமாய் கலந்து பேசினார்கள். ஷையார் அபூர்வ வரவினால் சங்கங்களுக்கு விசேஷ ஊக்கமும் பெருமையும் உண்டானதாக மெம்பர்கள் மிகவும் கொண்டாடினார்கள்.

பிறகு துரை அவர்களுக்கும், A. வேதாசல அய்யர் அவர்களுக்கும் புஷ்ப ஹாரங்கள் போடப்பட்டன. மீட்டிங்கும் மாலை சுமார் 4½ மணிக்கு கலைந்தவுடன் வாத்திய கோஷத்துடன் ரிஜிஸ்தரார், அஸிஸ்டெண்டு ரிஜிஸ்தரார், இருவர்களையும் ஊருக்கப்பால் கொஞ்ச தூரம் வரையில் எல்லா மெம்பர்களும் சேர்ந்து வந்து உபசரணை செய்து ஆனந்த பரவசராய் வழி அனுப்பினார்கள்.

அயலூர்களிலிருந்து வந்த ஜனங்களுக்கு போஜன சௌகரியங்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தது.

---

# ஐக்கிய சங்கங்களும் அதன் நன்மைகளும்.

சென்னை இராயப்பேட்டை கோவாப்ரேடிவ் சொஸைடியில் 29-7-17-ல் ஞாயிற்றுக்கிழமை இரவு ஒன்பது மணிக்கு கூடிய மஹாசபை மீட்டிங்கில் மிஸ்டர் M. S. காமத், B. A., அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் ஒரு கோவாபரேடர் செய்த பிரசங்கத்தின் சுருக்கம்.

கடன் வாங்கும் வழக்கம், முதல் முதலில், எக்காலத்தில் எத்தேசத்தில், எஜ்ஜாதியாரிடத்தில் பிறந்த தென்பதற்குத் தகுந்த ஆதாரங்கள் கிடைக்கவில்லை. மனிதனுக்கு நாகரீகம் என்னும் காற்றுவீசவே கடன் வாங்கும் வழக்கம் அதிகரித்ததென்று ஒருவாறு நிர்ணயிக்கலாம். ஆகையால் நாகரீகத்திற்கும், கடன் வாங்கும் வழக்கத்திற்கும் நெருங்கிய சம்பந்தமுள்ளதென்று நிச்சயமாகின்றது.

புராதன ஜாதியார்களில் நாகரீகம் பெற்ற மதத்தினருள்ளும் கடன் வாங்கும் வழக்கம் இருந்து வந்ததாகத் தெரிகிறது. எப்படியெனில் கடன் வாங்கும் வழக்கத்தைக் கண்டிக்க பற்பல ஏற்பாடுகள் செய்யப்பட்டு வந்ததாக புராதன கிரந்தங்களினாலும் வேதங்களினாலும், அறிய

லாம். கடன் வாங்கும் வழக்கத்தைக் கண்டிப்பது அசாத்தியமென்று கண்ட பின்னர் வட்டி வாங்கக்கூடாதென்று கண்டித்தால் கடன் கொடுக்கும் வழக்கம் நிற்கவே கடன் வாங்கும் வழக்கம் அறவே ஒழிந்துபோகுமென்று எண்ணங்கொண்டு "வட்டி வாங்கக்கூடாதென்றும், வாங்குதல் பெரும் பாபம் என்றும்" சட்டம் ஏற்படுத்தினார்கள். மோசேயு இஸ்ரவேலரிடத்தில் வட்டி வாங்கக்கூடாதென்று தடுத்தார்கள். மஹம்மதிய வேதத்திலோ வட்டிக்குக்கடன் கொடுத்தவன், வட்டிக்கு கடன் வாங்கியவன், அம்மாதிரி பத்திரங்களை எழுதினவன், சாட்சி கையெழுத்து செய்தவன் முதலிய எல்லோரும் பாபிகளென்று கணடிப்பான சாபமிடப்பட்டிருக்கின்றது.

இக்காலத்தில் கடன் வாங்காமல் ஜீவனஞ்செய்யக் கூடியவர்கள் மிகவும் சொற்பத்திலும், சொற்பம் என்பதாக எல்லோரும் அறியவே கடன் சௌகரியமாய் வாங்கவும் அக்கடனை இலகுவாய் அடைக்கவும் வேண்டிய மார்க்கங்கள் தேட ஆரம்பித்துக் கடைசியாக கூட்டுறவு முறையைக் கண்டு பிடித்தார்கள்.

கூட்டுறவு முறை முதல் முதலில் ஜர்மனி தேசத்தில் 1849 வருஷத்தில் ரபேஸன் என்பவரால் ஸ்தாபிக்கப்பட்டது. பிறகு ஐரோப்பா முழுவதும் பரவியது. இங்கிலாந்து தேசத்தில் ஒரு மனிதனுக்கு வருஷ வருமானம் சரா சரி 45 பவுன், அதாவது ரூ. 675, என்றும் இந்தியா தேசத்தில் ரூ. 27 என்றும் கணக்கிடப்பட்டுள்ளது. இங்கிலாந்தில் ஒரு மனிதனுக்குள்ள வரும்படியில் இருபத்தைந்திலொரு பாகந்தான் இந்தியனுக்கு கிடைக்கிறதென்றால், இந்தியனின் வருமையைக்கூற முடியுமோ. வருமை யென்னும் நோயால் பீடிக்கப்பட்டு வருந்தும் இந்தியர்களுக்கு கூட்டுறவுமுறை எவ்வளவு பயன் விளைவிக்கக் கூடியதென்று சொல்லாமலே விளங்கும். எப்படியெனில் நம்மினும் இருபத்தைந்து பங்குக்கு அதிகமாய் வருமான முள்ளவர்களுக்கு பலனைக் கொடுக்கும் ஐக்கிய சங்கங்கள் நமக்கு அவசிய மில்லாமற் போகுமோ ?

இந்தியாவின் க்ஷேமத்திற்காகவே பாடுபட்டு உழைத்துவரும் ஸர் வில்லியம் வெட்டர்பர்ன் துரையவர்கள் இவ்விஷயத்தைக் குறித்து அடிக்கடி வற்புறுத்திவந்தார். 1895 வருஷம், ஸர்பிரடரிக் நிகல்ஸன் துரையவர்கள் இவ்விஷயத்தைக் குறித்து நீண்டதோர் ரிப்போர்ட்டும் சென்னை கவர்ன்மெண்டாருக்கு அனுப்பினார். லார்ட் கர்ஸன் துரையவர்கள் 1901 வருஷம் இவ்விஷயத்தைக் குறித்து விசாரணை செய்ய ஒரு கமிட்டியை நியமனஞ் செய்தார் ஸர் ஹென்ரி உல்ப் துரையவர்களின் அனுபவமும், அபிப்பிராயமும் இக்கமிட்டியாரவர்கட்கு மிகவும் உபயோககரமா



யிருந்தது. இந்தியாவின் நற்காலத்து பயனின் அறிகுறியாக 1904 வருஷத்தில் இந்தியா பத்தாவது ஆக்டாகிய கோவாப்ரேடிவ் சொஸைடி சட்டம் அமுலில் வந்தது. இச்சட்டத்தில் சிலகுறைகளிருந்ததால் சில சீர்திருத்தங்களுடனும், மாறுதல்களுடனும் 1912 வருஷத்தில் இந்தியா இரண்டாவது சட்டமாகிய கோவாபரேடிவ் சட்டம் அமுலுக்கு வந்தது.

இச் சட்டத்தின் கீழ்தான் உங்களுடைய சங்கம் சுமார் இரண்டு வருஷங்களுக்கு முன் ரிஜிஸ்டர் செய்யப்பட்டது. இங்குகூடியிருக்கும் எல்லோர்க்கும் பயனை விளைவித்து நீங்கள் எல்லோரும் முன்னுக்கு வருவதற்கு ஆதாரமாய் உள்ளது போலவே இந்தியாவிலுள்ள இலட்சக்கணக்கான ஜனங்கள் முன்னுக்கு வர ஆயிரக்கணக்கான சங்கங்கள் ஏற்பட்டிருக்கின்றன. சென்ற 1915-16 வருஷத்திய ரிப்போர்ட்டின் பிரகாரம் சென்னை இராஜதானியில் மட்டும் 1,800 சங்கங்கள் இருந்திருக்கின்றன. இச்சங்கங்களால் பயனடைந்த மெம்பர்கள் இலட்சத்து முப்பத்தாறாயிரத்து இருநூற்று எண்பத்தாறு பேர். இவ்வளவு சங்கங்களும், மெம்பர்களும் தேசத்திற்கு எவ்வளவு நன்மை பயக்க முடியுமென்பது நான் சொல்லி முடியாது. இருந்தாலும் இவைகள் நமக்குவேண்டிய க்ஷேமங்கள் முழுவதையும் கொடுத்துவிடுமென்று கூறும் கட்சியைச் சேர்ந்தவன் நானல்ல. வியாதியைத் தடுப்பதற்கு வகையறியாது அதை சொஸ்தஞ் செய்ய யேற்படும் ஆஸ்பத்திரிபோல் கடனில்லாமலே பிழைப்பதற்கு வகை தேட முடியாமல் குறைந்த வட்டியில் கடன் வாங்கிப் பிழைக்க வழிகள் தேடிகூட்டுறவு சங்கங்களை ஸ்தாபித்துக்கொண்டுள்ளோம்.

"வெயிலில் நடந்தாலன்றோ தெரியும் நிழலின் அருமை" என்பது நம் நாட்டுப் பழமொழி; நாம் ஏற்படுத்திக்கொண்டுள்ள சங்கங்களின் நன்மைகளை அறிய பணம் கிடைக்கும் வேறு மார்க்கங்களையும் அதிலுள்ள கஷ்ட நிஷ்டூரங்களையும் சற்று கவனிப்போம்.

(1) பந்துமித்திரர்களிடம் கடன் வாங்குவதில் கஷ்டங்கள் இல்லையாயினும் அநேக தொந்திரவுகளிருக்கின்றன. அவைகளை இங்கு விவரிக்க வேண்டுவதில்லை.

(2) நாட்டுக்கோட்டை செட்டிகள். இவர்கள் நபர் ஜாமீன்பேரிலும், நில அடமானத்தின்பேரிலும் கடன் கொடுக்கிறார்கள். இவர்கள் வாங்கும் வட்டி 24 முதல் 45 வரைக்கும் கடன் வாங்குபவருடைய அவசியத்திற்கும், நிர்ப்பந்தத்திற்கும் தகுந்தாற்போல் ஏற்படும். அடமானக் கடன்கள் வெகு சொற்பமேயாயினும் பெருந்தொகைகள் கொடுபட்டிருக்கும் ஜாமீன் கடன்களை கவனிப்போம். நூறு ரூபாய் கடன்

வாங்கி பத்து மாத தவணைகளில் கொடுக்க ஒப்புக்கொள்வதாக வைத்துக் கொள்வோம். 100-க்கு மாதம் இரண்டு ரூபாய் வட்டியானால் பத்து மாதத்திற்கு இருபது ரூபாயும் எழுத்துக்கூலி, ஸ்டாம்பு, வகையறாவில் ஒரு ரூபாய் போக பாக்கி வாங்குவது 79 ரூபாய். மாதம் 10 ரூபாயாக பத்து மாதங்கள் தரவேண்டும். மாதா மாதம் கொடுக்கத்தவறினால் மாதம் 1-க்கு ரூபாய் ஒன்றுக்கு மூன்று பைசா அபராதம் வட்டியுடன் செலுத்தவேண்டும். மாதா மாதம் செலுத்தும் தொகைக்கு எதிர் வட்டி ஏதாவது உண்டா ? அந்த விஷயம் கனவிலும் கிடையாது. நாட்டுக்கோட்டையார் வாங்கும் வட்டியை கணக்கிட்டுப் பார்த்தால் 100 க்கு வருஷம் 1-க்கு 450 வீதமும் ஏற்பட்டிருக்கிறது.

(3) **மார்வாரிகள்.** இவர்கள் நில அடமானத்தின் பேரிலும், நபர் ஜாமீன்பேரிலும் கொடுப்பது அதிகமாக கிடையாது. தங்க வெள்ளி நகைகளின் பேரிலும், பித்தளை செம்பு பாத்திரங்களின் பேரிலும், துணிகளின் பேரிலும் கடன் கொடுக்கிறார்கள். கோர்ட்டுக்குப்போதல் இன்னதென்பதே இவர்களுக்குத் தெரியாது. ஆறு மாதத்திற்குள் மீட்டுக்கொள்ளாவிட்டால் பண்டமறதி என்கிறார்கள். இவர்கள் வாங்கும் வட்டியோ மிகவும் நியாய வட்டி வென்கிறார்கள். அதாவது தங்க வெள்ளி நகைகளின்பேரில் கொடுப்பதற்கு ரூபாய்க்கு மாதம் 1-க்கு அரையணாவாம். பித்தளை, செம்பு பாத்திரங்களின்பேரில் கொடுப்பதற்கு ஒரு அணா, துணிகளின்பேரில் கொடுப்பதற்கு இரண்டணா. இதைத்தவிர பின்ஷின் சீட்டுகளின் பேரிலும் கடன் கொடுக்கிறார்கள். இதற்கு வட்டி ரூபாய்க்கு இரண்டணா.

(4) **நிதிகள்.** மேற்சொன்னவைகளெல்லாவற்றையும் விட நிதிகள் எத்தனையோ மடங்கு மேலானவைகள். கூட்டுறவு சங்கங்கள் ஸ்தாபனமாவதற்கு முன் ஜனங்களுக்கு அதிக உபகாரமாயிருந்தவைகள், கூட்டுறவு சங்கங்கள் ஏற்படுவதற்கு ஆதாரமாயிருந்தவைகள். அப்படியிருந்தும் இவைகளிலும் குறைகளுண்டு. காரிய நிர்வாகம் நடத்துபவர்களுடைய சுயப்பிரயோஜனத்திற்காகவே நிதிகள் ஏற்பட்டுள்ளதாக தெரிகிறது. சங்கத்தின் விதிகளை விலை கொடுத்து வாங்கவேண்டுமென்கிறார்கள். ஜனங்களுக்கு கடன் கொடுத்தலேயொழிய சிக்கனம் போதிக்க வேண்டுமென்பதில்லை. ஜனங்களுடைய சௌகரியத்தை தேடவேண்டுமென்னும் அக்கரையில்லை.

(5) **கவர்ன்மேண்டு கடன்கள்** விவசாயக் காரியங்களுக்கும், நிலம் சீர்திருத்தும் காரியங்களுக்கும் கூட்டுறவு சங்கங்கள் கொடுக்கும் வட்டியை விட குறைந்த வட்டிக்கு கவர்ன்மெண்டார் கொடுக்கிறார்கள். இக்கடன்களை வாங்குவதில் ஜனங்கள் மிகவும் கஷ்டத்தை யனுபவிக்கிறார்



கள். கிராம முன்சீபு கர்ணம் ரிவினியூ இன்ஸ்பெக்டர் இவர்கள் தயவை சம்பாதிக்கவேண்டியிருக்கிறது. தாலூக்கா ஆபீசு, டிவிஷனல் ஆபீஸ் கிளர்க்கு; டலாயத்து, தபேதார், இவர்களுடைய பிரியத்தை வாங்கவேண்டியிருக்கிறது. கோவாபரேடிவ் சங்கங்களில் வட்டி அதிகமாயிருந்தாலும் அங்கேயே கடன் வாங்கப் பிரியப்படுகிறார்களென்றும், கவர்ன்மெண்டு கடன்களில் ஜனங்களுக்கு அதிக நன்மையில்லை யென்றும் கவர்ன்மெண்டு அதிகாரிகளே ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். தவிர கடன் வாங்கும் வழக்கத்தைத் தவிர சிக்கனத்தை போதிக்க யாதொரு ஏற்பாடுகளும் கிடையா.

இப்படி ஒவ்வொருமுறையிலும் ஒவ்வொரு குறையிருக்கிறது. இக்குறைகளை நீக்கி ஜனங்களுக்கு சஞ்சீவியைப் போன்றுள்ளது கூட்டுறவு சங்கங்கள் மட்டுந்தான். சூரியன், சந்திரனில்லாமல் வாழமுடியாது. அன்னாகாரமின்றி உயிருடனிருக்க முடியாது, அது மாதிரியே கடன் வாங்காமலும் பிழைக்க முடியாதென்பது ஏற்பட்டு விட்டது. அக்கடனை கொடுக்கும் கூட்டுறவு சங்கங்களின் நன்மைகளை எளிதில் சொல்லி விடுவது சாத்தியமல்ல.

(1) சிக்கனத்தைப் போதிக்கின்றன. (2) சுய உதவியை கற்பிக்கின்றன. (3) கூட்டுறவை வளர்க்கின்றன. (4) துர் அப்பியாசங்களை போக்குகின்றன (5) குடிக்கும் வழக்கத்தை நீக்க ஆதாரமாயிருக்கின்றன (6) மெம்பர்களுக்குள் நேசத்தை பரவச்செய்கின்றன. (7) மெம்பர்களுக்குள்ள வழக்குகளை கோர்ட்டுக்குப் போகாமலே தீர்த்துக்கொள்ள ஹேதுக்கள் ஏற்பட்டுள்ளன. (8) கிராம சுகாதாரத்தை ஐக்கிய சங்கங்கள் கவனிக்க முன்வந்துள்ளன. (9) கிராமத்தின் ரஸ்தாக்களை சீர்திருத்த ஏற்பாடுகள் செய்கின்றன. (10) மெம்பர்களுக்கு வீடுகள் கட்டிக்கொள்ள பணம் கொடுத்துதவுகின்றன. குச்சுகளிலும், குடிசைகளிலும் கஷ்டப்பட்டு மீளா வியாதியால் மூழ்கிக் கிடப்பவர்கள் நல்ல வீடுகளை சுகாதார முறையில் கட்டிக்கொண்டு சுகமாய் வாழலாம். (11) குயினா, ஓமவாட்டர் முதலிய மருந்துகளை சங்கச் செலவில், வாங்கி வைத்து வேண்டியபோது மெம்பர்கள் உபயோகித்துக் கொள்ளலாம். (12) பள்ளிக் கூடங்களை ஸ்தாபித்துக் கொள்ளலாம் (13) கிராமத்திற்கு தண்ணீர்ப் பந்தல் ஸ்தாபனஞ் செய்துக் கொள்ளலாம் (14) பொதுக் கட்டடமொன்று கட்டிக் கொள்ளலாம் (15) பத்திரிகை வரவழைத்து பயனடையலாம் (16) புத்தகசாலை ஏற்படுத்தி பிரயோஜன மடையலாம். (17) கடைசியாய் இந்தியா தேசம் முழுவதும் கோருகிற சுய ஆட்சியை ஐக்கிய சங்கங்கள் மூலமாய் அடையலாம், (a) உங்கள் காரியத்தை நீங்களே நடத்திக்கொள்ளும் திறமையுண்டாகிறது (b) பிறரை ஆளும்

சாமர்த்தியம் ஏற்படுகின்றது (c) கணக்குகளை எழுதவும் காரிய நிர்வாகசத்திறமையும் போதிக்கின்றது. சுருக்கிக் கூறின் சுய ஆட்சிக்கு வேண்டிய அம்சங்களை யெல்லாம் கற்றுக்கொள்ள பள்ளிக்கூடம் போன்றிருக்கின்றது. சுய ஆட்சி யென்னும் மாளிகையில் ஏறுவதற்கு கூட்டுறவு சங்கங்கள் ஏணிப் படிகள் போல் அமைந்துள்ளன.

---

## அஸ்ஸாம் மாகாணத்தில் கூட்டுறவு முயற்சி.

கூட்டுறவு முயற்சி எந்த அளவில் பரவவேண்டுமோ அந்த அளவுக்கு அஸ்ஸாம் மாகாணத்தில் பரவவில்லை யென ஏற்படுகிறது. 1915-16 வருஷ ஆரம்பத்தில் 301 சங்கங்கள் இருந்தன. அவற்றுடன் பிரஸ்தாப வருஷத்தில் 33 சங்கங்கள் சேர்க்கப்பட்டன. ஆனால் 19 சங்கங்கள் முறியடிக்கப் பட்டன. ஆகவே 1915-16 வருஷக் கடைசியில் 315 சங்கங்கள் இருந்தன. இவற்றுள் சென்ட்ரல் சங்கங்கள் 10, சூபர்வைஸிங் யூனியன்கள் 2, நான் அக்ரிகல்சுரல் சங்கங்கள் 18, விவசாயச் சங்கங்கள் 285. முந்தின வருஷத்தில் ஏழு சென்டரல் சங்கங்கள் மட்டும் இருந்தபோது ஐம்பத்தேழாயிரம் ரூபாய்கள் கடனாக சங்கங்களுக்கு கொடுக்கப்பட்டன. பிரஸ்தாப வருஷத்தில் 10 சென்ட்ரல் சங்கங்கள் இருந்தும் நாற்பத்துநாலாயிரம் ரூபாய்கள் மட்டுமே கடன்களாக சங்கங்களுக்கு பட்வாடா செய்யப்பட்டுள்ளன. பிரஸ்தாபவருஷத்தில் கிராமங்களில் க்ஷாமமாயிருந்த படியால் சென்டரல் சங்கங்களுக்கு கொடுபட வேண்டிய தொகைகள் சரிவரக் கொடுபடவில்லை. அது காரணத்தினால் சென்டரல் சங்கங்களும் பெருந் தொகைகள் கடன் கொடுக்க முடியவில்லை. விவசாயச்சங்கங்களின் கடன் பொறுப்பளவு நான்கு இலட்சத்திற்கு கொஞ்சம் குறைவாக விருக்கின்றது. இத்தொகையில் சராசரி பாதித் தொகை சென்டரல் சங்கங்களிலிருந்து வாங்கிய தொகையாகும். நூற்றுக்கு இருபதுக்கு அதிகமான வீதம் மெம்பர்களுடைய டிபாசிட்டு தொகையாம். வட்டியின் வீதமோ இந்த இராஜதானியைக் காட்டிலும், அதிகமாகவும், பலவிதமாகவும் இருக்கின்றது. பிக்செட்டு டிபாசிட்டுகளுக்கு ஐந்து முதல் ஒன்பது வரைக்கும் வட்டி கொடுக்கப்படுகிறது. சங்கங்கள் $7\frac{1}{2}$ முதல் $12\frac{1}{2}$ வீதத்திற்கு கடன் வாங்கி மெம்பர்களுக்கு $12\frac{1}{2}$ முதல் $18\frac{1}{2}$ வரைக்கும் வட்டிக்கு கடன் கொடுக்கப் படுகிறது. ஒரு சங்கம் பாற்சாலையும் ஸ்டோர்ஸும் கலந்து வேலை நடத்தி வந்தது. கால் நடைகள் ரின்டர் பெஸ்டு வியாதியால் மாண்டு போகவே அச்சங்கத்திற்கு பிரஸ்தாப வருஷத்தில் நஷ்டம் அதிகமாக நேர்ந்தது. அச்சங்கம் சமீபத்தில் மூடப்படுமென்பதைக் கேட்க மிகவும் விசனிக்கி



றோம். சிலவிவசாயச் சங்கங்களின் விதிகள் நெசவுத் தொழிலுக்குவேண்டிய சாமான்கள் வாங்கி வியாபாரம் செய்யும்படியாக மாற்றப்பட்டுள்ளன. இதனால் விவசாயிகளுடைய ஸ்திரீகள் ஒழிந்த நேரத்தில் நெசவுத் தொழில் செய்யவும் சௌகரியங்கள் ஏற்பட்டுள. கொடிய மார்வார்களிடமிருந்து மெம்பர்கள் அநேகமாய் விடுவிக்கப்பட்டுள்ளார்கள்.

கூட்டுறவு பரவுவதற்கு முக்கிய தடையாயுள்ளது டிபார்ட்மெண்டார் சிப்பந்திகள் வேண்டிய அளவு இல்லாததே. ரிஜிஸ்தராரே பூராகால (Full time) உத்தியோகஸ்தரல்ல, அவருக்கு வேண்டிய உதவியும் கொடுக்கப்பட்டில்லை. படிப்பு விஷயத்தில் இம்மாகாணம் மிகவும் பின்னடைந்ததாதலால் ஒரு மெம்பராவது எழுதப் படிக்கத்தெரிந்தவனல்ல ரிஜிஸ்தரார் சிப்பந்திகளும் கௌரவ வேலை செய்பவர்களும் தாங்களே சங்கத்தின் கணக்கு பூராவும் எழுத வேண்டியதாகிறது. நெசவுச் சங்கங்கள் ஏற்படுத்தும் விஷயத்தில் மிகவும் சிரத்தை யெடுத்துக்கொள்ளவில்லை. ஹில்ஹட் நெசவுச் சங்கம் செய்த வேலையின் திறத்திலிருந்தும் நெசவாளிகளுக்கு கூட்டுறவின் பயனை தெளிவாய் போதித்ததிலிருந்தும் அம்மாதிரி சங்கங்கள் ஏற்பாடு செய்து கொள்ள அந்த ஜில்லாவின் எல்லாபாகங்களிலிருந்தும் மனுக்கள் வந்தன. அச்சங்கங்களை நடத்துவதற்கு சில நாட்களுக்காவது தகுந்த மேற்பார்வை வேண்டுமென்றும் அதற்குத் தன்னிடம் வேண்டிய மனுஷ்யாள் இல்லையென்றும் அம்மனுக்களை யெல்லாம் அங்கீகரிக்காது ரிஜிஸ்தாரரவர்கள் மறுதளித்து விட்டார்கள். கூட்டுறவால் ஜனங்களுக்கு படிப்பு விஷயத்திலும் சுகாதார விஷயத்திலும் ஏற்படக்கூடிய பயன்கள் அளவு கடந்து உள. ஆகையால் கூட்டுறவால் கவர்ன்மெண்டாருக்கு ஏற்படக்கூடிய சொற்ப செலவை யுத்தகாலமென்று நிறுத்தி வைத்தால் கூடாது. கூடிய சீக்கிரம் அஸ்ஸாம் மாகாண கவர்ன்மெண்டார் ரிஜிஸ்தாரரவர்களை முழுகால உத்தியோகஸ்தராயும் அவருக்கு வேண்டிய சிப்பந்திகளையும் நியமிப்பார்களென்று நம்பப்படுகிறது.

---

## பம்பாய் கூட்டுத்தொழில் வர்த்தமானி.

“பம்பாய் கூட்டுத்தொழில் வர்த்தமானி” மூன்று மாதத்திற்கொரு முறை வரும். இப்பத்திரிகைக்கு நமது அன்பார்ந்த மனப்பூர்வமான நல்வரவைக் கூறுகிறோம். இவ்வர்த்தமானியின் முதல் சஞ்சிகை சென்ற ஜூன் மாதம் வெளி வந்தது. கூட்டுறவின் வளர்ச்சியையும், வெவ்வேறு இடங்களில் நடக்கும் விஷயங்களை ஒருவருக்கொருவர் சொல்லிக்கொள்ளவும் இத்தகைய சஞ்சிகை யொன்றின் அவசியம் ஒவ்வொரு மாகாணத்தி

னும் வரவர அதிகமாக யேற்படுகின்றது. இத்தகைய பத்திரிகை யொன்றுமின்றி கூட்டுறவை திருப்திகரமாய் பரவச் செய்வது சாத்திய மாகாது. இம்மாதிரி சஞ்சிகை முதல் முதலில் நமது மாகாணத்தில் தான் "சென்னை கூட்டுத்தொழில் வர்த்தமானி" யென்னும் நாமத்துடன் ஏற்பட்டது. இப்பொழுது இதற்கு எட்டாவது ஆண்டு முடிவாகி ஒன்பதாம் ஆண்டு ஆரம்பமாயுள்ளது. இச்சஞ்சிகை ஏற்பட்டதற்கு மூல புருஷர் ஹானரபில், திவான் பஹதூர் ஆர். இராமச்சந்திர ராவ் அவர்கள். வங்காளம், மத்திய மாகாணங்கள், மைசூர் இவ்விடங்களிலெல்லாம் பிரத்தியேக சஞ்சிகைகள் பிரசுரஞ் செய்யப்படுகின்றன. பம்பாய் மாகாணத்திற்கு கூட்டுறவு விஷயமாய் வேண்டியவற்றை "வியாபாரமும், கூட்டுறவும்" யென்னும் வாரப் பத்திரிகை கவனித்து வந்தது இப்பத்திரிகை சுமார் இரண்டு வருஷ காலமாய் நின்றுவிட்டது. இந்தியா ஊழியச் சங்கத்தின் பம்பாய் கிளைச் சங்கத்தில் உள்ள "பம்பாய் கூட்டுறவு புஸ்தக சாலையின்" ஆதரவால் பிரஸ்தாப கூட்டுத்தொழில் வர்த்தமானி பிரசுரஞ் செய்யப்படுகிறது. இச்சஞ்சிகை நான்கு கனவான்கள் சேர்ந்த ஒரு கமிட்டியால் நடத்தப்படுகிறது. இவர்களில் "சரஸ்வதி கோவாபரேடிவ் ஹௌஸிங் சொசைடியைச் சார்ந்த ராவ் பஹதூர் தல்மகியும், பம்பாய் சென்டரல் கோவாபரேடீவ் பாங்கு மானேஜர் மிஸ்டர் வி. எல். மேதாவும் இருக்கிறார்கள்.

பிரஸ்தாப சஞ்சிகையில் அநேக முக்கிய விஷயங்கள் எழுதப்பட்டுள. சஞ்சிகையும் பார்வைக்கு நேர்த்தியாயிருக்கின்றது. சுயபாஷைகளிலும், இச்சஞ்சிகையை பிரசுரஞ் செய்ய சீக்கிரம் ஏற்பாடுகள் செய்வார்களென்று நம்புகிறோம். அப்படிச் செய்யாவிடில் இச்சஞ்சிகையின் பலனை ஒரு வகுப்பாரே அனுபவிப்பார்கள்.

இராஜப் பிரதிநிதியாகிய வைசிராயது எக்ஸிகியூடிவ் கௌன்சில் மெம்பராகிய ஹானரபில்-ஸர் கிளாட்ஹில் இச்சஞ்சிகைக்கு முகவுரை எழுதியுள்ளார். விவசாயிகளுடையவும், தொழிலாளிகளுடையும் தலையில் யேறியுள்ள அபாரபாரமான கடனின்பளுவை இலேசாக்க சர்க்கார் உத்தியோகஸ்தர்களும் சர்க்கார் உத்தியோகஸ்தர்களல்லாத கௌரவ வேலை செய்பவர்களும் ஒற்றுமைக்க வேண்டுமென கூறுகிறார். இந்தியா ஊழிய சங்கத்தார் ஆதரணையில் ஏற்படுத்தியுள்ள பம்பாய் தோட்டிகள் சங்கங்களையும், இயந்திரங்களில் வேலை செய்பவர்களுக்கென்று ஏற்பட்டுள்ள கடன் நிவாரண சங்கத்தையும் மாதிரியாக எடுத்துக் கூறுகிறார்.

* * * *

[illegible] டைரக்டராகிய ஹானரபில் மிஸ்டர் கீடிங்ஸ் என்பவர்



பருத்தியை கூட்டுறவு முறையில் வியாபாரஞ் செய்வதைக் குறித்து ஒரு வியாசம் எழுதியிருக்கிறார். பருத்தியை இம்முறையில் விக்கிரயம் செய்ய சமீபகாலத்தில் தார்வார் ஜில்லாவில் நான்கு சங்கங்கள் ஸ்தாபனஞ் செய்யப்பட்டுள்ளன.

பருத்தி விளைவிப்பவர்கள் தரகாளிகளால் எவ்வளவு மோசஞ் செய்யப்படுகிறார்களென்றும் பருத்தியை சேர்ப்பதிலும், [illegible] வதிலும் அஜாக்கிரதையினால் எவ்வளவு நஷ்ட மடைகிறார்க[illegible] விபரமாய் எழுதி யிருக்கிறார்.

* * * *

மத்திய மாகாணங்கள் ரிஜிஸ்தராராகிய மிஸ்டர் கி[illegible] என்பவர் சிறந்ததோர் வியாசம் எழுதியுள்ளார். அதில் அ[illegible]ங்கள் கூறியுள்ளது மிகவும் உண்மையானவைகளாகவே இருக்கின்றன. கூட்டுறவில் வேலை செய்வதற்கு கௌரவ வேலை செய்பவர்கள் இருக்கிறார்கள் என்பது வாஸ்தவமே. ஆனால் கூட்டுறவுமிகவும் திறனாயிருக்க வேண்டுமாயின் இவர்களின் தொகை அதிகமாகவேண்டும். கூட்டுறவின் விர்த்தியெல்லாம், கௌரவ உத்தியோகஸ்தர்களானாலும் சரி, சம்பளம் அதிகாரிகளாலும் சரி, அவர்களெல்லோரும் தேசத்தின் நன்மையால் வைத்துள்ள ஊக்கத்திற்கும் சிரத்தைக்கும் தகுந்தாற்போலிருக்கும்.

* * * * *

பம்பாய் ரிஜிஸ்தரார் மிஸ்டர் யூபாங்கு என்பவர் இந்தியா தேசத்தின் பல மாகாணங்களிலும் கூட்டுறவு முயற்சியின் வளர்ச்சியைப்பற்றி சிறந்ததோர் வியாசம் எழுதியிருக்கிறார்.

---

## சில சென்னை சொஸைடிகளின் 1916-1917 வருஷத்திய ரிபோர்டுகள்.

### தென்கன்னடத்திலுள்ள புத்தூர் ரூரல் கிரேடிட் சொஸைடி.

இச்சங்கத்தின் மெம்பர்களின் தொகை 485-லிருந்து 534-க்கு அதிகரித்திருக்கிறது. இதில் பல ஜாதி ஜனங்கள் அடங்கியுளர். வருஷ ஆரம்பத்தில் ஸ்திரீ மெம்பர்களின் தொகை 11 இருந்தது. வருஷக் கடைசியில் 20 ஆயிருக்கிறது. அவர்களில் கிளப்பு வைத்திருப்பவர் இருவர், பால்விற்பவர் 9, கூலிக்காரர்கள் 2, வியாபாரி 1, விவசாயி 1, [illegible]ப்பிடக் கூடிய தொழில் இல்லாதவர்கள் 5. ஜாதிக் கணக்கா[illegible]ால் 534 மெம்பர்களுள் 226 பிராமணர்கள், 4 ஜெயினர்கள், 138 இதர இந்துக்கள், 3 பிராடஸ்டெண்டு கிரிஸ்துவர்கள், 59 மகம்மதியர்கள், 104 ரோமன் காதலிக் கிரிஸ்துவர்கள் என்று இப்படி வகுக்கலாம். ஸ்திரீ

மெம்பர்கள் இருபதின்மருள் 3 பிராமணர்கள், 1 பிராமணரல்லாதவர், மற்ற 16 பெயர்களும் ரோமன் காதலிக்கிறிஸ்துவர்கள்.

ரோமன் காதலிக் கூட்டத்தார் தங்களுக்காக மானேஜிங் கமிட்டியில் பிரத்தியேக உரிமைக்காரர் வேண்டுமென்று கூடியமட்டும் மஹாசபை மீட்டிங்கில் பார்த்துமுடியாமற் போனபொழுது கமிட்டியிலுள்ள ஒருவர் அத்தகைய உரிமை அவர்களுக்கு கிடைக்கும் பொருட்டுதான் ராஜீனமா செய்ததினால் மெம்பர்களுள் உண்மையான கோவாபரேடிவ் ஊக்கம் இருக்கிறது என்பது, காட்டுகிறது. மெம்பர்களுள் அவ்வளவு சமரச ஒற்றுமை இருத்தல் கோவாபரேஷனின் விருத்திக்கு வெகு அனுகூலம்.

சொஸைடியின் பங்குத் தொகை 1,302 ரூபாயாக இருந்து 1366 ரூபாயாகவும், மெம்பர்களின் டிபாஸிட்டுத் துகை ரூ. 5,463 லிருந்து ரூ. 8,956 ஆகவும், மெம்பரல்லாதவர்களுடைய துகை ரூ. 19,306 லிருந்து ரூ. 22,271 ஆகவும் அதிகரித்திருக்கின்றன.

முந்திய வருஷக்கடைசியில் ஏற்படுத்திய கிரஹ உண்டி டிபாஸிட்டு ஏற்பாட்டினால் சில ஏழை மெம்பர்களுக்கு பணம் சேர்த்துவைக்க ஒரு பெரிய உபகாரியாக ஆயிருக்கிறது. இந்த ஏற்பாட்டில் ஜனங்களுக்கு உண்டாயிருக்கும் திருப்தியும் சந்தோஷமும் அளவல்ல. வீடுகளின் உண்டியல் பெட்டிகளின் துகை வருஷ ஆரம்பத்தில் 3 ரூபாயாக இருந்தது. வருஷக்கடைசியில் ரூ. 362-15-0-க்கு அதிகரித்திருக்கின்றது. இதனால் ஒரு மெம்பராவது இந்த சம்பள டிபாஸிட்டிலிருந்து பிரயோஜனம் சிறிதும் அடைய விரும்பவில்லையென்று தெறிகிறது. குழந்தைகள் பிறந்த உடன் அதன் பெயரால் பள்ளிக்கூடச்சம்பள ஏற்பாடு பண்டில் கொஞ்சம் கொஞ்சமாய்ச்சேர்த்து வைப்பது அவர்கள் பள்ளிக்குப் போகும் காலத்தில் மிக உபகாரமாயிருக்கும் என்பதை நன்கு அறியலாம். போஸ்டாபீசு சேவிங்க்ஸ் பாங்கியைப் போலும், புத்தூர் சென்டரல் பாங்கியைப் போலும் இருக்கவேண்டும் என்று கரண்டு அக்கௌண்டுகளின் வட்டி விகிதத்தை 100-க்கு $3\frac{1}{8}$-லிருந்து 3-க்குக்குறைத்திருக்கிறார்கள். இந்த வருஷத்தில் கொடுத்திருக்கிற கடன்கள் 1,118; சென்றவருஷத்திலோ 1,168. இதனால் கமிட்டியார் கடன் அப்ளிகேஷனை அங்கீகரிக்குமுன் வெகுவாக பொறுமானங்களையும் உண்மைகளையும் கவனிக்கிறார்கள் என்று பதிற தடையில்லை. அந்த 1,118 கடன் அப்ளிகேஷனில் 990 தான் அங்கீகரிக்கப்பட்டு ரூ. 65,776 கடன்கள் கொடுக்கப்பட்டன. சென்றவருஷத்தில் இவ்விதத்துகையோ ரூ. 52,490; முந்திய வருஷத்தில் 124 கடன் மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டன. 2 மனுதார்களே வேண்டாமென்று சொல்லிவிட்டார்கள், 2 மெம்பர்கள் வற்புறுத்திக் கேட்காமை



யால் ரிகார்டுசெய்யப்படன; கடன்கள் பெற்றுக்கொண்ட காரணங்கள் பலவுள, துகையில் பாதிக்கு மேல் வியாபாரத்திற்காக கொடுக்கப்பட்டிருக்கிறது. கடன் கொடுத்த ஒரு அதிசய அமிசம் என்னவென்றால் 100-க்கு 96-வீதம் நபர் ஜாமின்களின் பேரில் கொடுபட்டிருக்கின்றது.

இந்த வருஷத்தில் ஏற்பட்ட ஒரு சட்டம் என்னவென்றால் யாராவது மெம்பர் சொஸைடியிலல்லாமல் வெளியில் கடன் வாங்க நேரிட்டால் அந்த சமாசாரத்தை கமிட்டியாருக்கு முந்தித்தெரிவிக்க வேண்டும். தவறினால் பிறகு கமிட்டியாருக்கு அவசரத்தை தெரியப்படுத்தி மன்னிப்புக்கேட்க வேண்டுமென்பதே அத்தகைய மன்னிப்பு மனுக்களை கமிட்டியார் அபராதத்துடனோ அல்லாமலோ உசிதம் போல் தீர்மானிப்பார்கள். சீர்திருத்தங்களில் முக்கிய அமிசம் என்ன வென்றால் 50-ரூபாய்க்கு மேற்படாத சிறிய கடன்கள் விசேஷமாகத் துகையிலும் எண்ணிக்கையிலும் அதிகரித்திருத்தலே; இதர அமிசங்களில் கூட விசேஷ சீர்திருத்தங்கள் உண்டாயிருக்கின்றன. கடன் விநியோகங்கள் அநேக வழிகளில் செய்யப்பட்டிருக்கின்றன. கரும்பு ஆலைகளை வாங்கவும் பித்தளை வேலைகளுக்கும் கடன் கொடுபட்டிருக்கின்றது. லேவாதேவியின் விசேஷவிருத்தியினால், கூட்டுகடன், உண்டியல் முதலிய ஏற்பாடுகள் பிரபலமாயிற்று உண்டியல் ஏற்பாட்டினால் ஒரு கடனுக்கு மேல் கொடுத்தல் சாத்தியமில்லை. என்றாலும் இந்த இரண்டு ஏற்பாடுகளும் மிக சௌகரியமாக வருகிறவருஷத்தில் அனுஷ்டானத்திற்கு வரும். மானேஜ்மெண்டாரின் ஜாக்கிரதையினால் கடன் வாங்கின காரணத்தை அதிக்கிரமித்து அத்துகையை வேறுவழிகளில் உபயோகித்தல் அபூர்வமாகிக் கொண்டு வருகிறது.

கடன் காரர்களாலோ ஜாமீன்தார்களாலோ கால ஹரணமில்லாமல் கடன்கள் திருப்பிக் கொடுபடுகின்றன. சென்றவருஷத்தில் அபராத வட்டியின் வசூல் ரூ. 51-14-1 ஆக இருக்க, பிரஸ்தாப வருஷத்தில் ரூ 25-14-8 தான்; வருஷத்தில் வசூலான அபராதத் துகை ரூ. 15-12-6-ம் பொது நல பண்டுப் பணத்துடன் சேர்க்கப்பட்டது, காலங்கடந்த கடனை இல்லாமல் கவனித்து வந்திருக்கும் கமிட்டியார்களின் ஏற்பாடு மிகவும் வியக்கத் தக்கதே.

வருஷத்தில் வசூலான வட்டித் துகை ரூ. 2,400-2-3. வட்டி விகிதம் தினசரி பாக்கித்துகையின் பேரில் வருஷம் ஒன்றுக்கு 100-க்கு $9\frac{3}{8}$; அபராத வட்டியின் விகிதம் கூட வழக்க வட்டிக்குமேல் அதிகமாக $9\frac{3}{8}$. இந்த அதிக வட்டி வருமானத்தில் பாதியை ஒழுங்காய் கடன் திருப்பிக் கொடுப்பவர்களுக்கு பங்கிட்டுக் கொடுக்கப் படுகிறது.

பிரஸ்தாபவருஷத்தில் 6 ஜனரல் மீட்டிங்கும் 95 கமிட்டி மீட்டிங்கும், சென்றவருஷத்தில் முறையே 8, 98 மீட்டிங்குகளும் நடைபெற்றன; ஆனால் 156 கமிட்டி மீடிங்குகளில் 58 கோரம் இல்லாமையால் ஒற்றிவைக்க வேண்டியிருந்தது. முந்திய வருஷத்திலோ அம்மாதிரி 67 மீடிங்குகளை ஒற்றிவைக்கப்பட்டன.

இந்த சொஸைடியின் மெம்பர்களிடம் தோன்றிய மிக்க வியக்கத் தகுந்த குணங்களுள் ஒன்று என்னவென்றால் அவர்களுடைய பிராவிடெண்டு பண்டுத்துகையில் சேர்ந்த வட்டிகளையெல்லாம் சர்வெண்ட்ஸ் ஆப் இந்தியா சொஸைடிக்கு தாங்களாகவே கொடுத்தது தான். இத்துடன் திருப்தியடையாமல் புத்தூரில் ஏற்படும் கலியாண உபநயன காலங்களில் இதற்காக தர்ம வசூல் செய்யவேண்டுமென்று சொஸைடி ஏற்பாடு செய்திருக்கிறது.

ஏழை ஜனங்கள் கூட காரியம் இன்னது என்பதை நன்றாய் அறிந்து கொண்டபடியால் இந்த தேசாபிமான வேலையிலிருந்து வசூல்கள் ஏராளமாய் உண்டாவது மெச்சத் தகுந்ததே!

---

## பாளையங் கோட்டை அர்பன் கோவாபரேடிவ் க்ரெடிட் சொஸைடி.

இந்த சொஸைடி ஆரம்பித்து இது ஐந்தாவது வருஷ ரிபோர்ட்டு. வருஷக்கடைசியிலிருந்த மெம்பர்களின் தொகை 422. அவர்களால் எடுத்துக்கொள்ளப் பட்டிருக்கிற பங்குகளின் சங்கியை 1577, வசூலாயிருக்கிற மூலதனம் ரூ. 7,767. மெம்பர்களிடமிருந்து வந்த கடன் தொகைகளும் டிபாஸிட்டுத் தொகைகளும் சேர்ந்து ரூ. 16,251. மேற்படி பாபத்தில் அன்னியர்களிடமிருந்து வந்த தொகை ரூ. 23,229. வருஷத்தின் நிகரலாபம் ரூ. 1,134-8-5. இந்த வருஷத்திற்காக ஏற்பட்ட ரிசர்வ் பண்டுடன் சேர்ந்து மொத்த ரிசர்வ் பண்டுத்தொகை ரூ. 1,050-14-3. இந்த வருஷத்தில் கொடுத்திருக்கிற ரூ. 26,048 பொருமான 215 கடன்களில் ரூ. 50-க்கு குறைவான 114 கடன்கள் ஏழை மெம்பர்களின் உபயோகத்திற்காக் கொடுபட்டிருக்கின்றன. இந்த ரிபோர்டில் பரிதபிக்கக் கூடிய விஷயம் ஒன்று என்னவென்றால் ரூ. 1,569 பொருமான 31 கடன்கள் காலங்கடந்து விட்டன. மற்றது சொஸைடியைச் சேர்ந்த ரீடிங் ரூமைப் பற்றி மெம்பர்கள் விசேஷ சிரத்தை எடுத்துக் கொள்ளாமையே.



## மதுரை அர்பன் கோவாபரேடிவ் சொஸைடியும் ஸ்டோர்ஸும்.

இது சொஸைடியின் 11-வது வருஷத்திய ரிபோர்டாகும்; வருஷ ஆரம்பத்தில் 50 அஸ்ஸோஷியேட்கள் உள்பட 744 மெம்பர்கள் இருந்தார்கள். வருஷக்கடைசியிலோ அவைகளின் சங்கியை 797; வருஷத்தின் கடைசி நாளில் மெம்பர்களால் எடுத்துக் கொள்ளப்பட்டிருந்த பங்குகள் 1682. இன்னும் 318 பங்குகள் யெடுபடாமல் பாக்கியாய் நிற்கின்றன. "கடன் வாங்கி வியாபாரம் செய்வதை விடசொந்த முதலில் வியாபாரம் செய்யும் சொஸைடியின் அஸ்திவாரம் சிலாக்கியம்" என்பதை உணர்ந்து இந்த வருஷத்தில்சொஸைடியார் கூடியவரையில் மூலதனங்களை வசூல் செய்யப் பிரயத்தனம் செய்து ரூ.11,599 வசூல் செய்தார்கள்.

இந்த சொஸைடிக்கு இரண்டு கிளை ஆபீசுகள் இருக்கின்றன. ஒன்றுக்கு "ஜனரல் பிராஞ்சு"என்று பெயர், இது லேவாதேவியை கவனிக்கிறது. மற்றது "ஸ்டோர் பிராஞ்சு," அதில் மெம்பர்களுக்கு வேண்டிய மளிகை முதலிய இன்றியமையாத வஸ்துக்கள் விற்கப்படுகின்றன. அநேக முறைகளில் டிபாஸிட்டுகள் வாங்கப் படுகின்றன. அவைகளாவன, ஸ்திர டிபாஸிட்டு, கரண்டு டிபாஸிட்டு, ரெகரிங்கு டிபாஸிட்டு, சீட்டுபண்டு, வியாபார டிபாஸிட்டு; அம்மாதிரி மெம்பர்களிடமிருந்தும் அன்னியர்களிடமிருந்தும் பெறப்பட்ட தொகை ரூ. 94,493-1-7; முந்திய வருஷத்திலோ அத்தொகை ரூ. 93,124-9-11. ரூ. 77,435 பொருமான 842 கடன்கள் இந்த வருஷத்தில் மெம்பர்களுக்குக் கொடுபட்டிருக்கின்றன; சென்ற வருஷத்தில் அவ்வித இலக்கங்கள் 691 ரூ. 67,009; வருஷக் கடைசியில் நிலுவையிலிருந்த ரூ. 4,1974-ல் ரூ. 1,969காலம் கடந்தகடன்தொகை. இது ஒரு பெரிய தொகையல்ல. இந்த வருஷத்திய நூதன ஏற்பாடு ஒன்று என்னவென்றால் சுதேச சீட்டு பண்டுகள் யேற்படுத்தப்பட்டதே. ஏல மாதிரியில் 22 சீட்டுகள் ஆரம்பிக்கப்பட்டன. இதனாலாகிய வரும்படி ரூ. 1,867.1-9. சென்ற வருஷத்திலோ ரூ. 2,051-0-2 யென தீர்மானிக்கப்பட்டது. ஸ்டோர் பிராஞ்சில் ரூ. 48,765-க்கு இந்த வருஷத்தில் சாமான்கள் வாங்கப்பட்டிருக்கின்றன. விற்பனை ரூ. 52,521-9-2.; மொத்தலாபம் ரூ. 2506-4-4; சென்ற வருஷத்தில் மேற்படி லக்கங்கள் ரூ. 49249-10-7-ம், ரூ. 2791-6-2 மாக இருந்தன. இந்த வருஷம் லாபக்குறைவுக்குக் காரணம். சில சாமான்களின் விலை குறைந்துவிட்டது என்று சொல்லப்படுகிறது சொஸைடியின் மொத்த வியாபாரம் ரூ.9,41,378-க்கு உயர்ந்திருந்தலால் விசேஷ விருத்தியைக் காட்டுகிறது. சொஸைடி ரிசர்வ் பண்டு மிக

திருப்திகரமாய் ரூ. 14,435-6-7லிருந்து 16,705-10-0 ஆக உயர்ந்திருக்கிறது. ரிஜீஸ்ட்ரார் F. R. ஹெம்மிங்வே துரையவர்கள் அதைக் கடைசியாகப் பார்வை விட்ட காலத்தில் அடியில் வருமாறு சொல்லியிருக்கிறதினால் வேலை திருப்திகரமாய் செய்து வருவதை விளக்குகிறது.

"இந்த ஸ்டோரை பார்வையிட்டதாலும் அதைப்பராமரிப்பவர்கள் எனக்கு கணக்கு முதலிய எல்லாவற்றையும் காட்டும் காலத்தில் சூசிப்பித்த நோக்கங்களாலும் எனக்கு இவ்விஷயத்தில் மிகவும் சிரத்தையேற்பட்டது. இந்த ஸ்தாபனம் மிகவும் ஒழுங்காய் நடைபெற்றுவருவதெனத் தோன்றுகிறது. இதின் பின்வளர்ச்சி மிகவும் ஓங்கும். இது சகல நன்மையும் அடைய வேண்டும்."

---

## பம்பாய் ஐக்கியமுயற்சிக்காரர்களின் கண்டனம்

கோவாபரேடிவ் சட்டத்தின் கீழ் பம்பாய் கவர்ன்மெண்டார் பிரசுரஞ் செய்த விதிகளைக் குறித்து பம்பாய் கோவாபரேடர்கள் மாகாண கவர்ன்மெண்டாருக்கு ஓர் கண்டன விண்ணப்பம் செய்துள்ளார்கள். அந்த விண்ணப்பத்தின் சுருக்கம் பின் வருமாறு :

பம்பாய் நகரத்து கோவாபரேடர்கள் கூடிய பொது மீடிங்கின் பிரதிநிதிகளாகிய நாங்கள், கோவாபரேடீவ் சட்டமாகிய இந்தியா 1912 வருஷத்திய இரண்டாவது சட்டத்தின் 43-வது செக்ஷனின் கீழ் கவர்ன்மெண்டார் பிரசுரஞ் செய்துள்ள விதிகள் சிலவற்றிற்கு பின் கண்ட மறுப்புகள் உள்ளவென்றும், கவர்ன்மெண்டார் இவ்விதிகளைக் குறித்து ஆலோசனைச் சபையில் கவனிக்குங் காலத்து இக்கண்டனங்களை அனுசரித்து விதிகளைத் திருத்தவேண்டுமென்றும் அல்லது மாற்றவேண்டு மென்றும் கேட்டுக் கொள்ளுகிறோம்.

விதி 9.—கோவாபரேடிவ் சட்டத்தின் ஒன்பதாவது செக்ஷனின் கீழ் கூட்டுறவு சங்கத்தின் விதிகளெல்லாம் ரிஜிஸ்தாரால் அங்கீகரிக்கப்படவேண்டும். சங்கம் வாங்கக் கூடிய கடனுக்கு காலநிபந்தனையும் வட்டியின் அளவும் அநேக சங்கத்தின் விதிகளிலேயே நிர்ணயிக்கப்பட்டுள்ளன. இவ்விஷயத்தை எல்லாச் சங்கங்களிலும் கட்டாயமாக ஏற்படுத்தவேண்டுமாயின் இவ்விஷயத்தைக் குறித்து ஓர் வாக்கியம் ஐந்தாவது விதியில் சேர்த்தலே போதுமானது. அப்படிச் செய்து விடுவதால் சங்கங்களின் விதிகளை அங்கீகரிக்கும்போதே அவசியமாயின் வேண்டிய விதியை சேர்த்துக் கொள்ளும்படி ரிஜிஸ்தாரே தன்னுடைய அபிப்பிராயத்தை உபயோகிக்கலாம். கவர்ன்மெண்டார் செய்



துள்ள விதிக்கு இம்மாதிரிச் செய்வது மேலானது. எப்படியெனில் தான் வாங்கும் கடனின் பொறுப்பளவை தானே நிர்ணயித்துக் கொள்ளுவதால் பிறமனுஷ்யர்களுடைய நிர்ப்பந்தமில்லையென்பதை சங்கங்கள் உணரக் கூடும். கவர்ன்மெண்டாருடைய உத்தரவின் பேரில் ரிஜிஸ்தரார் நிர்ணயிக்கும் விதிகளைக் காட்டிலும் ஒரு சங்கம் தானே தனக்கென்று ஏற்படுத்திக் கொள்ளும் விதியானது மிகவும் மேலான ஆதாரமன்றோ?

விதி 18.—இவ்விதியானது, யாதொரு சங்கம் தானாகவே அல்லது அச்சங்கத்தின் அதிகாரிகளாலோ அல்லது அச்சங்கத்தின் உத்தியோகஸ்தர் அல்லது கமிட்டியாராலோ மதசம்பந்தமானவும் இராஜ சம்பந்தமானவும் வேற்றுமையைக் குறிக்கக்கூடிய விஷயங்களைக்குறித்து போதிக்கக் கூடாதென்றும் பேசக்கூடாதென்றும் தடுக்கிறது.

இவ்விதியானது கொஞ்சமேனும் அவசியமில்லாதது. ஏனென்றால் இது பரியந்தம் எச்சங்கமாவது இம்மாதிரி விஷயங்களில் சம்பந்தப்பட்டிருந்ததாகத் தெரியவேயில்லை. இவ்விஷயத்தைக்குறித்து எழுதும்போது கோவாபரேடீவ் கமிட்டியார் எழுதியுள்ளது யாதெனில் "இந்தியாவில் வேற்றுமையுண்டாக்கக்கூடிய மதவிஷயமான சமாசாரங்கள் எள்ளளவேனும் கூட்டுறவு சங்கங்களில் புகுந்திருப்பதாகத் தெரியவேயில்லை. இராஜாங்க விஷயத்திலோ இந்தியர்களுக்கு உபயோகப்படுமாறு பொது விஷயங்களிலெல்லாம் வேண்டிய உபகாரம் சங்கங்கள் புரிந்துள; இந்தியர்கள் கோருவதெல்லாம் தன்தேசத்தார் சுயஉதவியின் வழியில் முன்னுக்கு வரப்படவேண்டு மென்பதே."

இது சம்பந்தமாக ஊர்ஜிதப்படுத்த வேண்டுமென்று நாம் விரும்புவது யாதெனில் கூட்டுறவு முயற்சியானது, நற்காரியத்தையும் பொது நலத்தையும் தரக் கூடிய பொதுக்காரியங்கள் எல்லாவற்றிலும் கூடியுலாவவேண்டு மென்பதே.

கூட்டுறவென்பது ஒரு தேசத்தாரின் உறுப்புக்களின் முக்கியதோர் பாகமாகும். மனிதனது அவயவங்களில் இருதயமில்லையெனின் என்ன கதியாமோ அக்கதிதான் கூட்டுறவு சம்பந்தமற்ற தேசத்தாரது கதியும். ஆனது பற்றியே தேசத்தின் பொது விஷயத்திலிருந்து அது பிரிக்கப்படக் கூடாதது. கூட்டுறவின் மூல்யமாய் தேசத்திற்கு நன்மை பயக்க வேண்டுமென்று கருதப்படுமாயின், பொது விஷயங்களிலிருந்து கூட்டுறவின் சம்பந்தத்தை சற்றேனும் பிரித்து வைப்பது தகாது. தவிரவும் மதவிஷயங்களிலும், இராஜாங்க விஷயங்களிலும் சம்பந்தம் வைத்திருக்கும் பிரதம கூட்டுறவினர்களையும் கூட்டுறவு முயற்சியில் சம்பந்தம் வைத்துக் கொள்ளாதபடி தடுக்கக்கூடியதாயிருக்கிறது.

இவர்களுதவி கூட்டுறவுக்கு இன்றியமையாததாகும். ஆனது பற்றியே தான் இவ்விதி கூடாதென்று மறுப்பது.

விதி 19.—ஜில்லாகலெக்டரும், இவ்விஷயத்திற்கு மற்றுமுள்ளகவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களும் கூட்டுறவு சங்கங்களின் கணக்குகளை பரிசோதிப்பதற்கும், சங்கங்களுக்கு புத்தி கூறுவதற்கும் இது பர்யந்தம் தடை ஏற்பட்டதும் கிடையாது. ஒருவரேனும் மறுத்ததுங் கிடையாது. இவ்விஷயங்களை ஓர் சுதந்திரமாகவும் அதிகாரமாகவும் கொண்டாடுவதற்கு இது பர்யந்தம் இவ்விராஜதானியில் அவசியம் எற்பட்டதே கிடையாது. கோவாபரேடிவ் கமிட்டியாரேனும் இதைக்குறித்து யாதாவது சொல்லியதுங் கிடையாது. ஓர் சங்கத்தில் யோஜனைக்கு வருகிற யாதொரு விஷயத்தைக் குறித்தாவது பேசுவதற்கு கலெக்டருக்கு அதிகாரம் கொடுக்கப்படின் கூட்டுறவு முயற்சிக்கே தீங்குவிளையுமென கூறலாம். தவிரவும் கவர்ன்மெண்டாருக்கும் கூட்டுறவினர்களுக்கும் தற்காலம் இருந்துவரும் நேசபான்மைக்கே ஹானிவருமெனவும் கூறலாம். கூட்டுறவு முயற்சியில் கலக்டர் வைத்திருக்கும் சம்பந்தத்தால் கூட்டுறவு முயற்சிக்கு விளையக் கூடிய தீங்கை பாதுகாக்க வேண்டியதும் அவசியமாகிறது. ஏனெனில் கோவாபரேடிவ் கமிட்டியார்கூறியுள்ளதுபோல் அதிகாரி முரடராகவாவது, சிரத்தையற்றவராகவாவது அல்லது கூட்டுறவில் தோற்றமற்றவராகவாவது இருக்கும் படிநேரின் கூட்டுறவின் சுயவளர்ச்சியையும், சுவாதீனத்தையும், குறைக்கக் கூடியதாக யிருக்கும் அல்லது கூட்டுறவுக்கே கெடுதலை விளைவிக்கக் கூடியதாக விருக்கும். 1904-வருஷத்திய ஆக்டில்ஜில்லா கலெக்டருக்கு சில அதிகாரங்கள் கொடுக்கப் பட்டிருந்தன; அவ்வதிகாரங்கள் அவசியமல்லவென்றும், விரும்பத்தக்கதல்ல வென்றும், அனுபவத்தில் தோன்றியதால் புது ஆக்டாகிய 1912-வருஷத்திய இந்தியா இரண்டாவது ஆக்டில் நீக்கப்பட்டுள்ளன.

தற்காலம் கலெக்டருக்கு புது அதிகாரங்கள் கொடுக்கவேண்டுமென இவ்விதிகளில் கூறுவதானது கூட்டுறவு முறையை உத்தியோக சம்பந்தத்திலிருந்து பிரிக்கவேண்டுமென எண்ணி 1912-வருஷத்தில் ஆக்டை திருத்துப்பாடுசெய்ததற்கு விரோதமாகவும் மாறாகவும் இருக்கின்றது.

விதி 26.—சென்ற 1916 வ்ருஷம் மார்ச்சுமாதம் பூனா நகரில் நடந்த டிபார்ட்டுமெண்டாரது கான்பரன்ஸில் அங்கீகாரம் செய்யப்பட்ட தீர்மானங்களில் பின்கண்டது ஒன்று. "பொறுப்பு வரையறுக்கப்படாத ஐக்கிய சங்கங்களின், பரிசோதனை ஆடிட் பீஸ் இல்லாமலே இலவசமாக்ச் செய்யப்படவேண்டும். பிரைமெரி சங்கங்களுக்கு



ஆடிட்பீஸ் வசூல் செய்ய ஆரம்பஞ் செய்வதற்கு உரியகாலம் இன்னும் வந்துவிடவில்லை." இந்த தீர்மானத்திற்கு ரிஜிஸ்தரார் கொண்டுவந்த மாறுதல் யாதெனில் "பிரைமெரிசங்கங்களை பரிசோதனை செய்வதற்கு கவர்ன்மெண்டார் நியமிக்கக் கூடிய சிப்பந்திகளின் மொத்தத்தை நிர்ணயித்து விடவேண்டும். இச்சிப்பந்திகள் போதுமானதாக இல்லாத பட்சத்தில் ஆடிட்பீஸ் வசூல் செய்ய ரிஜிஸ்தராருக்கு அதிகாரமுண்டு. இந்த மாறுதல் அங்கீகாரஞ் செய்யப்படவில்லை. ஏனெனில் ரிஜிஸ்தராரைத் தவிர வேறொருவரும் இம்மாறுதலுக்கு ஒப்புக்கொள்ளவில்லை. இந்த கான்பரன்ஸுக்கு கௌரவ ஆர்கனைசர்களும், டிபார்ட்டுமெண்டு உத்தியோகஸ்தர்களும், சென்டரல் பாங்குகளின் சில பிரதிநிதிகள் மட்டுமே வந்திருந்தார்கள். இந்த கான்பிரன்ஸில் செய்யப்பட்ட இத்தீர்மானமானது ஆடிட்பீஸ் வசூல் செய்வதில் உத்தியோகஸ்தர்களுக்காவது இதரர்களுக்காவது எவருக்கேனும் கொஞ்சங்கூட சம்மதமில்லை யென்பதை ஊர்ஜிதப்படுத்துகிறது. டிபார்ட்மெண்டாரது கான்பரன்ஸில் முடிவுசெய்யப்பட்ட தீர்மானத்தின்பேரில் கவர்ன்மெண்டார் அமுல் செய்யும்படிக்கு கவர்ன்மெண்டாரை வேண்டுகிறோம்.

விதி 35 (7).—தற்காலம் ஏற்பட்டுள்ள விதிகளின் பிரகாரம் மூடப்பட்ட சங்கத்தினது தொகை ஏதாவது லிக்யுடேட்டரிடம் பாக்கி நின்றால் மூடப்பட்ட சங்கத்தின் மஹாசபையார் அத்தொகையை செலவு செய்வதைக் குறித்து தீர்மானஞ் செய்யலாம். ஆனால் பிரஸ்தாபத்தில் இருக்கும் விதியின் பிரகாரமோவெனில் மூடப்பட்ட சங்கத்தின் மீந்த தொகையானது சென்டரல்பாங்குக்காவது யூனியனுக்காவது மாற்றப்படவேண்டும். அல்லது ரிஜிஸ்தரார் அங்கீகாரஞ் செய்யும் வேறெக்காரியத்திற்காவது பிரயோஜனப் படுத்தப்படவேண்டும். "மீந்த ஆஸ்தி" என்பதே தெளிவாய் குறிக்கப்பட்டில்லை. மெம்பர்கள் சங்கத்திற்கு கொடுக்கவேண்டியதை முழுவதும் வசூல் செய்த பிறகு சங்கம் கொடுக்கவேண்டிய சகல கடன்களையும் தீர்த்து விட்டபிறகு மெம்பர்களுடைய பங்குத்தொகையின் பேரில் வருஷம் 1-க்கு நூற்றுக்கு பத்துவீதம் வட்டியாக கொடுபடாமல் நின்ற வருஷம் அல்லது வருஷங்களுக் கெல்லாம் பட்வாடா செய்து பாக்கி நிற்கும் தொகையே சங்கத்தின் "மீந்த ஆஸ்தி" என்பதாக நிர்ணயஞ் செய்யவேண்டும். சங்கம் தன்னுடைய உழைப்பினாலும், சிரமத்தினாலும் சேர்த்த க்ஷேமநிதியை சென்டரல் பாங்காவது யூனியனாவது அனுபவிக்க வேண்டுமென்பதில் கொஞ்சமேனும் நியாயமில்லை யென்றும் மெம்பர்களே கோறின் அப்படிச் செய்யலாமென்றும் நாம் வற்புறுத்துகிறோம் தற்காலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள விதியின் பிரகாரம் சங்கத்தின்

மீந்த தொகையின் பேரில் சங்கத்தின் மெம்பர்களுக்கு கொஞ்சமேனும் சுதந்தரமில்லாமற் போகிறது. தவிரவும் அத்தொகையை யூனியனுக்குகாவது, சென்டரல் பாங்குக்காவது சேர்த்துவிடவாவது அல்லது ரிஜிஸ்தராரால் கோரப்படுகிற காரியத்திற்கு உபயோகிக்கவாவது மெம்பர்கள் இணங்கவேண்டியதாகிறது. க்ஷேமநிதியை கஷ்டப்பட்டு சேகரிக்கவேண்டுமென்ற சிரத்தையே மெம்பர்களுக்கு இல்லாமற்போக இவ்விதி இடந்தருகிறது. மேலேகாட்டியுள்ள பிரகாரம் நிர்ணயிக்கப்படுகிற "மீந்த தொகை" சங்கம் மூடப்பட்ட பிறகு மெம்பர்களுக்குள் பிரித்துக் கொள்ளக் கூடாதென்று விதியேற்படுத்துவதில் ஆட்சேபனையில்லை. ஆனால் நாம் வற்புறுத்துவதெல்லாம் யாதெனில் மீந்துள்ள தொகையானது பெம்பர்களால் மஹாசபை மீடிங்கில் தீர்மானஞ் செய்யப்படுகிறபடியாவது அல்லது சங்கத்தின் விதிகளில் குறிக்கப்பட்டுள்ள பிரகாரமாவது சென்டரல் பாங்குக்காவது அல்லது யூனியனுக்காவது சேர்க்கப்படவேண்டும் அல்லது பொதுநன்மை காரியத்துக்கு உபயோகப்படுத்தவேண்டும். பொது நன்மை காரியங்களில் 1890-ம் வருஷத்து தர்மச் சொத்துக்களைப் பொருத்த ஆக்டின் இரண்டாவது செக்ஷனில் குறிக்கப்பட்டுள்ள காரியங்களுடன் கூட்டுறவின் மூல்யமாய் கல்விபோதனையும் ஐக்கிய இயக்கத்தை பரவச் செய்வதும் சேர்த்துக் கொள்ளலாம்.

OFFICE OF THE REGISTRAR ... DEC 1917

# மதராஸ் புல்லெடின் ஆப் கோவாபரேஷன்

என்னும்

# சென்னைக் கூட்டுத்தொழில் வர்த்தமானி

சம்புடம் IX] 1917ஸு செப்டம்பர்மீ [இலக்கம் 3

## பத்திராதிபர் குறிப்புகள்.

### வங்காள மாகாணத்திற்கு ஒரு மாகாண பாங்கு.

வங்காள மாகாணத்திற்கு ஓர் மாகாண பாங்கு ஸ்தாபனஞ் செய்வது தகுதியல்லவென்று சொல்லுங் காரணங்களை நாம் அறிந்து கொண்டதாகப் பாராட்டவில்லை. இவ்விஷயத்தைக் குறித்து நம் இராஜதானியிலும் சில நாட்களுக்கு முன் ஊக்கம் இருந்தது. ஆனால் மெட்ரூஸ் சென்டரல் அர்பன் பாங்கியே மாகாண பாங்கியின் அலுவலையும் சேர்த்து செய்வதற்கு வேண்டிய ஷரத்துக்களை கவர்ன்மெண்டார் ஏற்படுத்தி விட்டதால் இவ்வூக்கம் தற்காலம் மறைந்துபோய் விட்டது. 1915—16 வருஷக் கடைசியில் 39 சென்டரல் பாங்கிகள் 467 இலட்சம் துகையைக்கொண்டு லேவாதேவி செய்து வந்தன. சென்ட்ரல் பாங்கி ஒவ்வொன்றுக்கும் சுமார் இலட்சம் ரூபாய்க்கு சற்று அதிகமாகிறது: சென்டரல் பாங்கிகள் இத்தனை அதிகமாக உள்ள இடத்து இவ்வளவு குறைந்த லேவாதேவி இருப்பதே ஒரு மாகாண பாங்கு அவசியமென்று எல்லோரும் ஒப்புக்கொள்ளச் செய்கிறது. சென்ற வருஷம் லேவாதேவி நடந்துவந்த துகையில் முக்காற்பங்கு ஜமீன்தார்களால் மிஸ்டர் மித்திரா (மாஜி ரிஜிஸ்தரார்) விடாமுயற்சியில் டிபாஸிட் செய்யப்பட்டதென்று தெரிகிறது. இது காரணம்பற்றியே மாகாண பாங்கின் அவசியம் முக்கியமென ஏற்படுகிறது. மாகாண பாங்கு கூட்டுறவின் தக்க அஸ்திவாரத்தின்மேல் ஸ்தாபனஞ் செய்யப்படவேண்டும். சென்ட்ரல் பாங்கிகளுடன் மட்டும் அது லேவாதேவி வைத்துக்கொள்ள வேண்டும். சென்ட்ரல் பாங்கிகளுக்கு மானேஜிங் கமிட்டியில் தக்க நிலைமையையும் சுவாதீனமும் கொடுக்கப்பட வேண்டும். கூட்டுறவு முயற்சி

நன்றாய் வேறான்றி விட்டது. தற்காலம் உள்ள சென்டரல் பாங்கிகள் பண உதவி செய்கின்றனவே யொழிய வேறொன்றும் பிரயோஜனம் செய்வதாகத் தெரியவில்லை. சென்டரல் பாங்கிகளின் கொள்கையெல்லாம் இலாபஞ் சம்பாதிக்கவேண்டுமென்ற எண்ணம் யிருக்கலாம். அப்படியிருந்தால் கூட்டுறவு முயற்சிக்கு உபகாரஞ் செய்வதாக பேர்வைத்துக்கொண்டு சுயநலம் பாராட்டி சுயகாரியத்திலேயே நோக்கமாயிருக்கும் அப்பாங்கிகளின் செய்கைகளை அடக்க மாகாண பாங்கி அவசியமென்று கூறுவதை யாரும் மறுக்கவே மாட்டார்களென்பது திண்ணம்.

* * *

## அமலாபுரம் சூபர்வைஸிங் யூனியன்

காகினாடா அஸிஸ்டெண்டு ரிஜிஸ்தரார் மிஸ்டர் K. நாகேசராவ் பந்துலு ஜனங்களாலும், கவர்ன்மெண்டாராலும் மெச்சப்படுவது யாவருமறிந்த விஷயம். கோதாவரி ஜில்லா அமலாபுரம் சூபர்வைசிங் யூனியன் கவர்னிங் பாடியார் அணைக்கப்பட்டுள்ள சங்கங்களுக்கு அனுப்பிய சர்க்குலரை பிரசுரஞ்செய்வதற்காக அஸிஸ்டெண்டு ரிஜிஸ்தரார் நமக்கு அனுப்பியுள்ளார். அச்சர்க்குலர் தெலுங்கிலுள்ளதால் அதன் மொழிபெயர்ப்பை வேறுயிடத்தில் பிரசுரித்துள்ளோம். யூனியன் சூபர்வைஸர் இன்ஸ்பெக்ஷன் ரிமார்க்குகளின் ரிப்போர்ட்டின் பேரில் இச்சர்க்குலர் அனுப்பப்பட்டுள்ளது. யூனியன் கவர்னிங்பாடியாருடைய திறமையையும் ஊக்கத்தையும் இச்சர்க்குலர் நன்கு வெளிப்படுத்துகிறது. சர்க்குலர் அனுப்பப்பட்ட சொஸைடிகள் நல்ல சங்கங்களெனச் சொல்லுவதற்கில்லை. ஆனால் அந்த யூனியனுக்கு அணைக்கப்பட்டுள்ள சங்கங்களில் மாதிரிச் சங்கங்களென சொல்லலாம். சங்கங்களின் குறைகளெல்லாம் எங்கும் காணப்படுகிற சாதாரணவைகளேயாம்; ஆயினும் இவ்வித சாதாரணக் குறைகளை நீக்குவதால் யூனியன் சங்கங்களுக்கு அதிக நன்மையை விளைவிக்க முடியும். இப்போர்க்கொத்த சர்க்குலர்கள் வேறுயூனியன்களாலும், ஹானரெரி ஆர்கனைஸர்களாலும் அனுப்பப்பட்டால் அவைகளை சந்தோஷமாய் பிரசுரஞ்செய்வோம்.

ஒரு சங்கத்தின் மஹா சபையார் அதன் பிரசிடெண்டின் ஊக்கத்திற்காகவும், சுயநலம் கருதாது உழைப்பதற்காகவும் ரூ. 30 வருஷ சன்மானமாக கொடுத்தார்கள். ஆனால் அச்சங்கம் அணைக்கப்பட்டுள்ள யூனியன் கவர்னிங் பாடியாருடையவாவது, அஸிஸ்டெண்டு ரிஜிஸ்தராருடையவாவது சாங்கிஷன் இல்லாமல் இத்தொகை பட்வாடா செய்யப்பட்டது. சூபர்வைஸர் தணிக்கை காலத்தில் இத்தொகையை செய்யும்படியாக யூனியன் கவர்னிங் பாடியார் நிர்ப்பந்தித்தார்கள். இந்நிர்ப்பந்தத்தின் பேரில் சங்கத்தில் கொஞ்சம் அதிருப்தி ஏற்பட்டுள்ளதாக தோற்றுகிறது. சங்



கத்தின் விரோதிகள் இவ்வித அதிருப்திக்கு காரணமென்றும் இவர்களது மாயவலைக்குள் சங்கம் வராமல் பாதுகாத்துக் கொள்ள வேண்டுமென்றும் யூனியன் கவர்னிங் பாடியார் எச்சரிக்கை செய்திருக்கிறார்கள்.

* * *

இந்தியன் டிரஸ்டு ஆக்டை திருத்துப்பாடு செய்வதற்கான பில் ஹானரபிள்—ஸர்—பசுல்பாய் கரிம்பாய் இந்தியா சட்டசபையில் சென்ற மார்ச்சுமாதம் பிரேரணை செய்து அங்கிகரிக்கப்பட்டதென்பதை அறிய கூட்டுறவு முயற்சிக்காரர்கள் சந்தோஷப்படுவார்கள்.

* * *

## பம்பாய் கூட்டுறவு வர்த்தமானி.

சென்ற சஞ்சிகையில் சென்னை ரிஜிஸ்தராருடைய 1915-16 ரிப்போர்ட்டைக் குறித்து பின் வருமாறு எழுதியுள்ளது. "மற்றமாகாண ரிப்போர்டுகள் எல்லாவற்றிலும் இம்மாகாண ரிப்போர்ட்டே மிகவும் பெரிதாயுள்ளது. ஸ்டேட்டுமெண்டுகளும், ரிடர்ன்ஸுகளும் அனாவசியமாய் சேர்க்கப்பட்டுள்ளன". இந்த அபிப்பிராயத்துடன் நாம் ஒப்பமுடியவில்லை யென்பதைக் குறித்து வருத்தப்படுகிறோம். இப்போர்க்கொத்த ரிப்போர்ட்டுகளைக் குறுக்க இந்தியா கவர்ன்மெண்டார் செய்த ஏற்பாட்டுக்கு விரோதமாக நாம் முன்னம் எழுதியுள்ளோம். பிரஸ்தாப ரிப்போர்ட்டு முந்தின ரிப்போர்ட்டிலும் பாதிதானிருக்கிறது. நாளுக்குநாள் வளர்ந்துகொண்டும், விருத்தியடைந்து கொண்டுமிருக்கிற கூட்டுறவு முயற்சியின் ரிப்போர்ட்டை குறுக்குவதைக் குறித்து நம்முடைய வருத்தத்தை முன்னமேயே வெளியிட்டுள்ளோம். இந்த ரிப்போர்டில் ஸ்டேட்மெண்டுகள் அதிகமாக சேர்க்கப்பட்டுள்ளதைக் குறித்து பம்பாய் வர்த்தமானி கூறுகிறது. பிறமாகாணஸ்தர்களுக்கு இந்த ஸ்டேட்மெண்டுகள் அதிருப்தியைக் கொடுக்குமே யெனினும் இந்த மாகாணத்தாருக்கு அவசியமெனவும், முக்கிய மெனவும் கருதப்பட்டு மெச்சப்படுமென்று கூறுகிறோம்.

* * *

பம்பாய் கூட்டுத்தொழில் வர்த்தமானியிலிருந்து அடியிற்கண்ட மொழிப்பெயர்க்கப் படுகிறது எனினும் இதைவாசிப்போர் எல்லோருக்கும் இந்த சமாசாரம் ஓர் விதக்களிப்பைக் கொடுக்குமெனக் கருதுகிறோம்.

கோவாபரேடிவ் ரிஜிஸ்தராராகவிருந்த மிஸ்டர் H. R. கிராஸ்த்வைட் ரிஜிஸ்தரார் வேலையினின்று நீங்கியதுமே, மத்தியமாகாண கூட்டுறவு பிடரேஷன் கவர்னர் வேலையையும் ராஜிநாமா செய்து விட்டார். அவருக்குப் பதிலாக இந்தியர் ஊழியச்சங்கத்தின் மெம்பரும் பாலகாட்டு சென்ட்ரல் பாங்கியின் முக்கிய டைரக்டருமான ஹானரபில்

ராவ் பஹதூர் கெல்கார் கவர்னராக தெரிந்தெடுக்கப்பட்டுள்ளார். இவர் சென்ட்ரல் பாங்கிக்குக்கு பிரதம டைரேக்டராக இருப்பதுமன்றி மிஸ்டர் கிராஸ்த்வைட் கூறியுள்ள பிரகாரம் கூட்டுறவினர்களின் பார்லிமெண்டுக்கு பிரதம மந்திரியாகவும் இருப்பார்.

* * *

## கூட்டுறவு அச்சுக்கூடம்.

சதாநந்த கூட்டுறவு அச்சுக்கூடம் தென்கன்னட ஜில்லா உடுப்பியில் 16—6—1917ல் ரிஜிஸ்தர் செய்யப்பட்டு 10—8—17ல்வேலை ஆரம்பஞ் செய்யப்பட்டது. கூட்டுறவு முறையில் அச்சுக்கூடம் இந்தியா தேசம் முழுவதற்குமே இது பர்யந்தம் ஒன்றும் ஸ்தாபிக்கப்படவில்லை. இதுவே முதல் முதலில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. தனி நபர்களும், சங்கங்களும் இதில் மெம்பர்களாகளாம். இச்சங்கத்தின் பங்குகள் இரண்டு விதமாக பிரிக்கப்பட்டுள்ளன (1) சாதாரணப்பங்குகள், இதுபங்கு ஒன்றுக்கு 50 ரூபாய் (2) ஸ்பெஷல் பங்குகள்; இதுபங்கொன்றுக்கு 5 ரூபாய். குறைந்த வரும்படியுள்ளவர்களும் மெம்பர்களாக சௌகர்யம் ஏற்பட்டுளது. இச்சங்கம் 4,000 ரூபாயிக்கு சாமான்களும், மெஷின்களும் வாங்கியிருக்கின்றன. சங்கம் வேலை ஆரம்பித்ததினம் இருந்த ஊக்கத்தை நோக்கும்போது இச்சங்கத்திற்கும் இச்சங்கத்தில் சம்பந்தப்பட்டுள்ளவர்களுக்கும் அதிக நன்மைவிளையுமென்று கருதப்படுகிறது. இச்சங்கத்திற்கு நல் வரவு மிகவும் களிப்புடன்கூறுகிறோம். சங்கங்களும், மற்ற மெம்பர்களும் இச்சங்கத்திற்கு வேண்டிய உதவி புரிந்து போஷிப்பார்களென நம்புகிறோம்.

* * *

## வங்காள கவர்னர்களும், கூட்டுறவு முயற்சியும்.

கூட்டுறவு முயற்சியை பரவச் செய்வதில் வங்காளத்தின் தற்கால கவர்னரும் இவருக்கு முந்தி இருந்தவரும் எடுத்துக் கொள்ளும் சிரத்தைக்கு வங்காள சகோதரர்களைக் கண்டு நாம் பொறாமையடையவேண்டியதாகிறது. கூட்டுறவு முறையில் லார்ட் கார்மைகல் துரையவர்கள் எடுத்துக்கொண்ட ஊக்கத்தைப் போல் லார்ட் ரொனல்ட்ஷே துரையவர்களும் ஊக்கமெடுத்துக் கொண்டிருக்கிறார்கள். மற்ற மாகாண கவர்னர்களும் இவர்களைப் போலவே கூட்டுறவு முறையில் ஊக்கமெடுத்துக் கொள்ள வேண்டுமென்று விரும்புகிறோம்.

சென்ற ஜூலைமீ 16வ யன்றைக்கு டாக்காவுக்கு சமீபத்திலுள்ள மூன்று கூட்டுறவுச் சங்கங்களை விஜயஞ்செய்து கிராமத்தார்களுடன் ஒரு பகலை வெகு உல்லாசத்துடன் செலவழித்தார்.

அடுத்தநாள் பின்வரும் விஷயத்தை வங்காள நாட்டு கூட்டுறவுக்காரர்களுக்கு மிக்க அன்புடன் அனுப்பினர்.



"சென்ற ஜூலைமீ 16வ டாக்காவுக்கு சமீபமுள்ள பல கிராமங்களை விஜயஞ் செய்தேன். கிராம வாசிகளுடன் கூட்டுறவின் பயனைப் பற்றி வார்த்தையாடினேன். ஐக்கிய சங்கங்களின் கணக்கு புத்தகங்களை பரிசோதனை செய்தேன். அவைகள் நன்றாயும் ஒழுங்காயும் வைக்கப்பட்டுள்ளன. இப்பாகத்தில் கூட்டுறவு முயற்சியானது நாணயச்சங்கங்களும் மாத்திரம் பரவியுள்ளது. சங்கங்களின் மெம்பர்கள் அதிகரிக்க வேண்டிய அளவுக்கு அதிகரிக்க வில்லையெனினும், சங்கங்களில் பணம் குறைந்த வட்டிக்குக் கிடைக்கிறதென்கிற பிரயோஜனத்தை ஜனங்கள் உணர்ந்திருக்கிறார்கள். நான் பார்த்த சங்கங்கள் மூன்று வருஷத்திற்கு முன் ஸ்தாபிக்கப் பட்டவைகள். மெம்பர்கள் சங்கம் ஆரம்பித்தபோதிருந்த விதமே இருக்கிறார்கள். கூட்டுறவின் பயனை விவசாயிகள் சீக்கிரம் உணரவில்லை யென்பதே இதற்குக் காரணம்.

சங்கங்களில் சேர்ந்தவர்கள் கூட்டுறவின் பயனைப் புகழுகிறார்களென்பது மெச்சத்தக்க விஷயமே. மற்றவர்களும் இம்முயற்சியில் சேர இன்னும் சிலநாட்கள் ஆகவேண்டும்.

கூட்டுறவு முயற்சியால் ஜனங்களுக்கு அதிக நன்மையுண்டு. இம்முயற்சிக்கு என்னுடைய பூர்வமான அபிமானமும் உதவியும் உண்டு".

* * *

அனந்தபூர் செக்ஷன் அஸிஸ்டெண்டு ரிஜிஸ்தரார் மிஸ்டர் ஸ்ரீனிவாசராவ் தன் ஆதரணையின் கீழுள்ள ஒவ்வொரு ஜில்லாவிற்கும் கூட்டுறவு ஆரம்பஞ் செய்யப்பட்ட நாள்முதல் இது பர்யந்தம் கூட்டுறவு வளர்ச்சியைக் குறித்து ஒரு நோட் தயார் செய்திருக்கிறார். இக்குறிப்பு (நோட்) அந்தந்த ஜில்லாவிலுள்ள இன்ஸ்பெக்டர்களுக்கும், ஹானரெரி ஆர்கனைசர்களுக்கும்-மற்ற இதர இடங்களிலுள்ளவர்களுக்கும் மிகவும் பிரயோஜன முள்ளதாக இருக்கும். இக்குறிப்பில் ஓரே பார்வையில் தெரியும்படியாக கூட்டுறவின் வளர்ச்சி காட்டப்பட்டிருக்கிறது. கூட்டுறவு செழிப்பதும், செழிக்காது க்ஷீணிப்பதும் ஓரே பார்வையில் இக்குறிப்பிலிருந்து இலகுவாய் கண்டறிய முடியும். மற்ற அஸிஸ்டெண்டு ரிஜிஸ்தரார்களும் இவ்வண்ணம் செய்ய விரும்புகிறோம். கடப்பை ஜில்லாவிற்கு அவர் தயார் செய்த குறிப்பு வேறிடத்தில் பிரசுரஞ் செய்திருக்கிறோம்.

உள்ளதை உள்ளவாறே அந்த குறிப்பில் சொல்லப்பட்டுள்ளது. கூட்டியாவது குறைத்தாவது சொல்லப்பட்டில்லை. அந்த ஜில்லா கூட்டுறவினர்களுக்கு அக்குறிப்பு மிகவும் பிரயோஜனப்படுமென்று கருதுகிறோம். இக்குறிப்புக்கு அனுபந்தமாக பல ஸ்டேட்டுமெண்ட்கள் அனுப்பியிருக்கிறார். சஞ்சிகையில் இடமில்லாததால் அவைகள் பிரசுரிக்கப்படவில்லை.

அவர் பார்வைக்குள் இருக்கப்பட்ட ஜில்லாக்களெல்லாம் ஜனத்தொகை குறைவான ஜில்லாக்கள். தவிர, படிப்பிலும், மற்ற விஷயங்களிலும் பின்னடைந்தவர்கள். அனந்தபூர் ஜில்லாவில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள சங்கங்களெல்லாம் கூட்டுறவில் ஊக்கமும், சிரத்தையும் உள்ள தாசில்தாரொருவரால் ஸ்தாபிக்கப்பட்டன. சங்கங்கள் வேண்டுமென ஜனங்களிடமிருந்து மனுக்கள் வரவில்லையென அவர் கூறுவது கவனிக்கவேண்டிய விஷயமே. கூட்டியில் (Gooty) இருக்கிற Y. M. I. A. ஏஜண்டு கிறிஸ்தவ கிராமங்களில் கூட்டுறவு முயற்சியைக் குறித்து கவனிக்கிறார். கூட்டுறவை பரவச்செய்ய இவர் ஒருவர்தான் உத்தியோக முறையற்ற பிறமனுஷ்யாள்.

அஸிஸ்டெண்டு ரிஜிஸ்தரார் சிப்பந்திகளோ போதுமான அளவு இல்லை. இருப்பவர்கள் ஏற்கனவே ஸ்தாபிக்கப்பட்ட சங்கங்களை செம்மைப்படுத்துவதிலேயே முழுகாலத்தையும் செலவழிக்க வேண்டியதாயிருக்கிறது. புது சங்கங்களை ஸ்தாபிக்கவேண்டிய இடம் இருப்பதாக கடப்பை ஜில்லாவைக்குறித்து சொல்லுகிறார். வேறு ஜில்லாக்களைக் குறித்தும் அதே மாதிரி அவர் சொல்ல நேருமென நினைக்கிறோம்.

சங்கங்களின் மேற்பார்வை கவனிக்க வேண்டிய அளவு ஸ்தாபனமானவுடன் புது சங்கங்களை ஸ்தாபிக்கும் விஷயத்தில் டிபார்ட்டுமெண்டு சிப்பந்திகளுக்கு வேண்டிய சாவகாசமிருக்குமென்றும் பிரஸ்தாப வருஷத்திலும் இனி வரும் வருஷங்களிலும் புது சங்கங்கள் ஸ்தாபிக்கப்படவேண்டிய சௌகரியங்கள் இருக்குமென்றும் சொல்லுகிறார். அனந்தபூர் செக்ஷன் தனி செக்ஷனாக ஸ்தாபிக்கப்படும் பர்யந்தம் இந்த ஜில்லாக்கள் பெஜவாடா செக்ஷனுடன் சேர்ந்திருந்தமையால் பெஜவாடாவுக்கும் இந்த ஜில்லாக்களுக்கும் அதிக தூரத்தின் காரணத்தால் புது சங்கங்கள் ஸ்தாபிக்க சௌகர்யப்படவில்லையென்றும் சொல்லப்படவேண்டும். புது சங்கங்களை ஸ்தாபனஞ் செய்யும் விஷயமாய் கௌரவ உத்தியோகஸ்தர்கள் முன் வராதது விசனிக்கத் தக்க விஷயமே. பொது நன்மைக்கு ஊழியஞ் செய்ய முன் வந்துள்ளவர்களுடைய கடமையே யொழிய டிபார்ட்டுமெண்டார்மேல் அதிகக் குறை கூறுவதற்கில்லை. இக்குறை சீக்கிரம் நீங்கி பொது ஜன ஊழியஞ் செய்பவர்கள் முன் வந்து சங்கங்களை ஸ்தாபிக்க வேண்டிய ஏற்பாடுகள் செய்வார்களென நம்புகிறோம்.

* * *

## சரஸ்வத் கோவாபரேடிவ் கட்டட சங்கம் லிமிடெட்.

இந்தியாவிலுள்ள சட்ட சங்கங்களில் நன்றாயும் திருப்திகரமாய் வேலை செய்து வரும் சரஸ்வத் கோவாபரேடிவ் கட்டடசங்கம் சென்ற வருஷத்திற்கு முந்தின வருஷந்தான் வேலை துவக்கிற்று. அச்சங்கத்தின் இரண்டாவது வருஷாந்தர ரிப்போர்ட்டு சமீபத்தில் தான் சில மாதங்களுக்கு முன் வெளியிடப்பட்டது. இவ்வளவு குறுகிய காலமாகிய இரண்டு வருஷத்திற்குள் 42 குடும்பங்களுக்கு நேர்த்தியான கட்டடங்கள் தயார் செய்துள்ளதை நோக்க மிகவும் திருப்திகரமாயிருக்கிறது. இக்குடும்பங்கள் பம்பாயில் வசிக்கும் கன்னட சரஸ்வத் ஜனத்தொகையில் ஏழில் ஒருபாகம். சங்கத்தார் அஜ்ஜாதியாருடன் மிகவும் அதிகமாய் நேசம் பாராட்டுகிறார்கள். இப்பேர்க்கொத்த கட்டடங்கள் இன்னும் அதிகமாய் வேண்டியிருக்கின்றன. கட்டட சாமான்கள் அதிக விலையாய் இருப்பதாலும் பணம் கிடைப்பது அரிதாயிருப்பதாலும் இன்னும் அதிக கட்டடங்கள் கட்டுவதற்கு சௌகர்யங்கள் இல்லாமல் இருக்கின்றன. சங்கம் காம்பவுண்டு சுவர்கட்டவும், வேலைக்காரர்களுக்கு வெளி வீடுகள் கட்டவும் ஆரம்பஞ் செய்திருக்கிறார்கள். இந்த வேலைகளும் பூர்த்தி செய்யப்பட்டால் இலட்சத்து ஐம்பது ஐயாயிரம் ரூபாய் சங்கம் மொத்தம் செலவு செய்ததாகும். சங்கத்தின் மானேஜிங் கமிட்டியார்களையும், முக்கியமாய் ராவ்பஹதூர் டால்மேகியையும் நம்முடைய அன்பார்ந்த ஆசி கூறுகிறோம்.



* * *

## கோயம்பத்தூர் கட்டிட சொஸைடி.

சென்ற ஜூன்மாதம் 30தேதியில் கோவாப்ரேடிவ் கட்டிட சொஸைடிக்கு 4-வது ஆண்டு நிறைந்தது. அதின் இவ்வருஷ வேலையின் ரிபோர்டு சமீபத்தில் பங்குக்காரர்களால் பார்த்து அங்கீகரிக்கப்பட்டது; இச்சொஸைடி செய்யும் அலுவல்களும் அது விருத்தியடையும் விதமும் அதனால் ஜனங்களுக்கு ஏற்படும் நன்மைகளும் கீழ்காட்டியிருக்கும் சில முக்கியமான விஷயங்களினால் அறியலாம். 1908-ம் வருஷம்முதல் கோயமுத்தூரில் ஒவ்வொரு வருஷமும் ப்ளேக் என்னும் கொள்ளைநோய் பிடிக்கிற விஷயமும் அப்பொழுது சென்னை கவர்ன்மெண்டுக்கு சானிடரி கமிஷனராயிருந்து தற்காலம் இந்தியாகவர்ன்மெண்டு ஆபீசில் இருக்கிற மேஜர் கிளம்ஷா. ஐ. எம். எஸ். துரையவர்கள் ப்ளேக்நோய் இந்தப்பட்டிணத்தில் ஸ்திரமாக இருக்குமென்றும் குளிர்கால மாதங்களில் அப்புழுக்கள் விருத்தியடைவதற்கு சௌகரிய காலங்களென்றும் 1908-ம் வருஷத்தில் எழுதிவைத்திருப்பதை நேயர்கள் அறிவார்கள். இந்தக்கொள்ளை நோயுடன்கூட காலரா, அம்மை முதலிய வியாதிகளும் சேர்ந்து ஜனங்கள் உயிரை கொள்ளைகொள்ளையாய் வாரிக்கொண்டு போகின்றன. இப்பட்டணம் மிகவும் ஜனநெருக்கமுள்ளதாயிருக்கிறது. இந்தநெருக்கத்தை நிவர்த்தி செய்யும் வேலையை கவனிக்க ஆரம்பித்து பலவகுப்பினர்களுக்காக

12 ஸ்கீம்கள் வரையில் ஏற்றுக்கொண்டு நல்ல வேலைகளைச் செய்யத்தாராயயிருக்கிறார்கள். முனிசிபல் எல்லைக்குள் வீடுகள் கட்டுவதற்காகவாவது ரிபேர் செய்வதற்காகவாவது பிரியப்படும் மெம்பர்களுக்கு லகுவான ஏற்பாடுகளில் 20 வருஷகாலம் வரையில் கொஞ்சம் கொஞ்சமாய் எளிதாய்த் திருப்பி வாங்கிக்கொள்ள ஒப்புக்கொண்டு கடன்கள் கொடுக்கிறார்கள். வருஷக்கடைசி தேதியில் சொஸைடியில் 196 மெம்பர்களும், ஆரம்பத்தில், 176 பெயர்களும் இருந்தார்கள். இந்த 196 மெம்பர்களால் எடுத்துக்கொள்ளப் பட்டிருக்கும் பங்குகளின் தொகை 321. ஒவ்வொரு பங்கின் கிரயமும் ரூ. 60. எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கும் பங்குகளின் கிரயம் முற்றிலும்கொடுபடவில்லை. சேர்ந்திருக்கும் பங்குத் தொகை ரூ. 66,705. இந்தவருஷத்தில் கொடுத்திருக்கும் 18 கடன்களையும் சேர்த்து மொத்தக் கடன் துகை ரூ. 13350. சென்ற வருஷத்தில் கொடுத்திருக்கும் கடன்களின் சங்கியை 12. சென்ற வருஷத்தில் கொடுத்திருந்த மாதக்கடன் துகை ரூ 10,150. சொஸைடி கொடுத்திருக்கும் மொத்தக்கடன்கள் 75, அதில் 51 வீடுகள் கட்டுவதற்காகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. வர்த்தமான வருஷத்தில் சொஸைடி அடைந்த நிகரலாபம் ரூ. 1173—2—10. இதை அடியில் வருமாறு விநியோகிப்பதாய்த் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. ரிசர்வ்பண்டு ரூ. 293—5—8, சிக்ரிடேரிக்கு கௌரவச் சம்பளம் ரூ. 146—10—4, கொடுபட்டிருக்கிற மூலதனத்தின் மேல் பங்குக்காரர்களுக்கு 100க்கு 9 வீதம் டிவிடெண்டு கொடுக்கும் துகை ரூ. 604. பாக்கித்துகை அடுத்த வருஷக்கணக்கில் சேரும். இது வரையில் சேர்ந்திருக்கும் ரிசர்வ்பண்டின் மொத்தம் ரூ. 776—3—5

இந்த வருஷம் மெம்பர்பேரில்.இருந்த குறிப்பிட்ட காலடிபாஸிட் (Fixed deposit) துகை ரூ. 323—14—4. இதரர்பேரிலுள்ளது ரூ. 4364—3—8. மெம்பர்களின் ரெகரிங் டிபாஸிட்டுகள் ரூ. 529 அந்நியர்களின் துகையோ ரூ 4419 வருஷம் ஏறஏற சொஸைடியின் சுறுசுறுப்பும் அதிகமாகி அதன் வேலைகளும் மிக மெச்சத்தகுந்ததாகும் என்று நம்பலாம்.

---



# கிராம ஐக்கிய சங்கங்களும் அவைகளின் மேற்பார்வையும்.

[ஓர் கோவாபரேடர் எழுதியது.]

இது விஷயமாய் 1917-ம் வருஷம் ஜூன்மீ வெளியான நமது கூட்டுத்தொழில் வர்த்தமானி இங்கிலீஷ் பிரதியில் மதுரை ம-ா-ா-ஸ்ரீ ரேய் ஸாகேப் K. இராமசாமி அய்யரவர்கள் தன் அபிப்பிராயத்தை வெளியிட்டிருக்கிறார். அதில் தற்சமயம் சங்கங்கள் மேற்பார்க்கப்பட்டுவரும் மாதிரியையும் மேற்பார்வைக்கு ஏற்பட்டிருக்கும் சிப்பந்திகள் செய்யும் வேலையின் தன்மையையும் சொல்லிவிட்டு சங்கங்கள் திறமையாய்கையாளப்படுவதற்கு, (1) ஜாஸ்தி யூனியன்கள் ஸ்தாபிக்கப்பட வேண்டுமென்றும் (2) ஜாஸ்தி இன்ஸ்பெக்டர்களை நியமனம் செய்யவேண்டு மென்றும் (3) ஒரு ஜில்லாவில் டிஸ்திரிக்ட் பாங்கிங் அண்டு சூபர்வைசிங் யூனியன் ஸ்தாபிக்கப்பட்டு அவைகள் மூலமாய் சங்கங்கள் மேற்பார்க்கப்பட வேண்டு மென்றும் அபிப்பிராயங்கள் சொல்லப்படுவதாயும், அது விஷயமாய்த்தன் அபிப்பிராயத்தைச் சொல்லிவிட்டு யூனியன் ஸ்தாபிக்கப்பட்டு நடந்துவருவதில் அநேக இடங்களில் யூனியன் பஞ்சாயத்துதார்கள் திறமை யற்றவர்களாயிருப்பதால் அஸிஸ்டெண்டு ரிஜிஸ்ட்ரார்களும் அவர்கள் சிப்பந்திகளும் யூனியன்களை நடத்திவருகிறார்களென்றும் யூனியன்கள் ஏற்பட்டிருப்பதால் பணமுதவும் பாங்கிகள் சங்கத்தின் நிலைமையை தெரிந்து கொள்ளக் கூடவில்லை யென்றும் சொல்லி விட்டு இப்போதிருக்கும் ஏற்பாட்டின்படி யூனியன் ஏற்படுவதாயிருந்தால் யூனியன் இல்லாத காலத்திலிருந்த கெடுதலைவிட ஜாஸ்தி கெடுதலுக்கு ஆஸ்பதமென்றும் கூறியுள்ளார். இரண்டாவது இன்ஸ்பெக்டர்கள் விஷயமாய், தற்போதைய இன்ஸ்பெக்டர்கள் பாலியர்களாயும் அனுபோக மில்லாதவர்களாயும் ஐக்கிய இயக்கத்தின் தன்மையைத் தெரிந்து கொள்ளு முன் அவர்களுக்கு ஒரு பெரிய சர்க்கிள் சார்ஜு கொடுக்கப்படுவதால் அவர்கள் தங்கள் வேலையில் தவறுதல் செய்கிறது ஆச்சரிய மில்லை யென்றும், உத்தியோகப் பற்றுள்ள மேற்பார்வையானது சங்கங்கள் விருத்தியடைவதற்குத் தடையென்றும், தனித்தனியாய் ஒவ்வொருவருக்குமுள்ள பொறுப்பை அது கொன்று விடுகிறதென்றும் சங்க முன்னேற்றத்திற்கு இடஞ்சலென்றும் கவர்ன்மெண்டு பற்றுள்ள மேற்பார்வை நல்லதென்று சிலர் நினைத்தாலும் கடைசியாய் அது ஐக்கிய இயக்கத்திற்கு கெடுதலென்று ஐக்கிய இயக்கத்தில் வேலை செய்கிற சிலர்களால் நினைக்கப்படுகிறதென்றும் எழுதியிருக்கிறார். கடைசியாய் சூபர்வைசிங்வேலையை டிஸ்டிரிக்டு பாங்கிகள் ஏற்றுக் கொள்ளும் விஷயமாய்ப் பேசுவதில் அநேக டிஸ்

டிரிகட்டு பாங்கிகள் ஏற்கனவே சூபர்வைசிங் வேலையை ஏற்றுக் கொண்டிருப்பதாயும் அது பரீக்ஷையிலிருக்கிறதென்றும், அதைப்பற்றி திட்டமான அபிப்பிராயத்தைச் சொல்லுவதற்கு காலம் போதாதென்றும், டிஸ்திரிகட்டு பாங்கிங் யூனியன்கள் ஏற்படுவதில் முக்கிய அம்சம் என்னவென்றால் யூனியன் வேலை சரியாய் நடை பெறுவதற்கான தகுந்த யோக்கியதை உள்ளவர்களாயும் உள்ளன்புடன் வேலை செய்யப் பிரியமுடையவர்களாயுமுள்ள மெம்பர்கள் சேர்க்கப்படுகிறார்கள் என்றும், அப்பேர்ப்பட்டவர்களைப் பிரதிநிதியாக நியமிக்க யோக்கியதை யுடையவர்களாயிருக்கிறாரென்றும், இவ்வித யோக்கியதையுடைய மெம்பர்கள் கிராமச் சங்கங்களில் தற்சமயம் கிடையாதென்றும், இந்த சந்தர்ப்பத்தில் டிஸ்ட்ரிக்ட் பாங்கிங் யூனியன் காரியதரிசி மூலமாய் மேற்பார்வை செய்வதை விட உத்தியோகப்பற்றில்லாதவர்களால் செய்யமுடியாதென்றும் ஐக்கிய இயக்கத்தை அபிவிருத்திக்குக் கொண்டு வருவதில் சங்கங்களின் எண்ணிக்கையை விருத்தி செய்வதிலாவது அல்லது இன்ஸ்பெக்டர்களை ஜாஸ்திப்படுத்துவதிலாவது இல்லையென்றும் கிராம சங்கங்களை சரியாயும் அடிக்கடியும் மேற்பார்ப்பதை ஏற்படுத்தும் ஏற்பாட்டிலிருக்கிறதென்றும். இது விஷயமாய் இந்த ராஜதானியிலுள்ள எல்லா ஐக்கியஸ்தர்களும் கவனிக்கவேண்டுமென்றும் சொல்லி முடிக்கிறார்கள். அவர் சொல்லும் அபிப்பிராயத்தில் இன்ஸ்பெக்டர்களைப்பற்றிச் சொல்லுவது முற்றிலும் சரி. இன்னும் இன்ஸ்பெக்டர்கள் வேலைகளை சரியாய் செய்திருந்தால் சங்கங்கள் ஜாஸ்தி கெடுதல் அடைந்திராதென்பது உண்மை. இன்ஸ்பெக்டர்கள் சங்கத்தின் ரசீது புஸ்தகத்தின் எந்த ரசீதில் சரிபார்க்கப்பட்டது என்று கையெழுத்துச் செய்திருக்கிறாரோ அந்த ரசீதும் அதற்கு முந்தின ரசீதும் சிட்டாவில் தாக்கலாயிருப்பதும், எந்தத் தேதியில் கடன் பேரேட்டை சரிபார்த்து கையெழுத்து செய்தாரோ அந்த தேதியிலும் அப்பால் ஷை சங்கத்தை மறுபடி இன்ஸ்பெக்ஷன் செய்த தேதியிலும் கூட இல்லாமல் மாசக்கணக்காய் பத்திரமில்லாமலிருப்பதும் அப்பாலும் பூராத்துகைக்கு பத்திரமில்லாமலிருப்பதும், எந்த சிலவு சரி என்று ஒப்புக்கொண்டு பாஸ் செய்தார்களோ அந்த சிலவுக்கு வவுசர் இல்லாமலிருப்பதும் அதே சிலவு மறுபடியும் செய்ய நேரிடுவதும், ஆடிட் நோட் தயார் செய்தனுப்புவதில் ஆடிட் நோட்டில் ஒருவித துகையும் சங்கக் கணக்குகளில் ஒரு விதத் துகையு மிருப்பதும், சங்கங்களை மாதக்கணக்காயும் சில சங்கங்களை வருஷக்கணக்காயும் பார்வை யிடாமலும், சில சமயங்களில் இன்ஸ்பெக்டர்கள் சங்கத்தின் கணக்குகள் எழுத நேரிடுவதில் முறைப்படி இல்லாமல் அவசரத்துக்குத் தக்கதாக எழுதுவதும், சில சங்கங்களின் வியாச்சிய நடவடிக்கையை இன்ஸ்பெக்டர்கள் நடத்துவதில் வக்கீல் பிராதும் வகாலத்தும் எழுதி இன்ஸ்பெக்டர்கள்



பிரசிடெண்டிடம் கையெழுத்து வாங்கியும் வக்காலத்து ரிஜிஸ்தர் செய்ய இன்ஸ்பெக்டர் வாதியாகிய பிரசிடெண்டிடம் வக்காலத்திலும் பிராதிலும் கையெழுத்து வாங்கியும் வக்காலத்தை கிராம முனிசீபிடம் ரிஜிஸ்தர் செய்தும் வக்கீலுக்கு அனுப்பத்தயாராயிருக்கும் சமயத்தில் பிரதிவாதிகளுக்கு தகவல் தெரிந்து ஷை பிராதை மேலே அனுப்பக் கூடாதென்று கேட்க இன்ஸ்பெக்டர் பிரதிப் பிரயோஜனத்தை உத்தேசித்தோ அல்லது பிரதிவாதியின் தாக்ஷணியத்திற் குட்பட்டோ பிராதை தாக்கல் செய்யாமலிருந்ததினால் சங்கத்திற்கு நஷ்டமேற்பட விடும்படியாய் நடப்பதும், சங்கத்தில் அசிஸ்டெண்டு ரிஜிஸ்ட்ராரவர்களின் உத்திரவு மீறி சிலவு செய்ததை இன்ஸ்பெக்டர்கள் கவனித்தும் அதைக்குறித்து உடனே மேலான ஆபீசுக்கு ரிபோர்ட்டு செய்யாமல் பிரதிப் பிரயோஜனத்தை எதிர்பார்த்திருந்தோ அல்லது தாக்ஷணியத்திற்குட்பட்டோ பைனல் ஆடிட்வரை சும்மா விருப்பதும் காண்கின்றன. இன்ஸ்பெக்டர்கள் செய்யவேண்டிய வேலையை சரியாய் செய்வதில்லை என்றால் இப்பேர்ப்பட்ட இன்ஸ்பெக்டர்களை நம்பி சங்கம் விருத்தியடையுமென்று எப்படி நம்புவது. மேலும் மேற்படி விஷயங்களுக்குத் தகுந்த ஆதாரங்கள் இல்லாமற் போகவில்லை. இன்னும் சங்கங்களின் துகையை இன்ஸ்பெக்டர்கள் கையாடி அதை சரியான காலத்தில் சரியானபடி உபயோகிக்கவில்லையென்பதை ரூபிக்க உதாரணமும் இல்லாமற் போகவில்லை. இவ்விஷயங்களை கவனித்து உத்தியோகப்பற்றில்லாத மேற்பார்வை விசேஷமென்பதை நாம் ஒப்புக் கொள்ளவேண்டும். ஆனால் அவைகளை எவ்வாறு ஏற்படுத்திக்கொள்வது என்பது தான் கவனிக்க வேண்டிய விஷயம். இவைகளை கவனிக்குமுன் கவர்ன்மெண்டார் மேற்பார்வையை முற்றிலும் நீக்கி விடக்கூடாதென்பதை மனதிற் கொள்ள வேண்டும். இம்பீரியல் கமிட்டியார் அபிப்பிராயப்படி சூபர் ஆடிட்டை கவர்ன்மெண்டார் வசம் விட்டுவிட்டு மற்ற விஷயங்களைச் சங்கங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். இவ்விஷயத்தில் ஐயரவர்கள் டிஸ்ட்ரிக்ட் பாங்கி மேற்பார்வைதான் சிலாக்கியமென்றும், லோகல் யூனியன்கள் திறமையற்றது என்றும் வாதிக்கிறார் இது கொஞ்சமும் பொருத்தமாயில்லை. ஐயரவர்களின் வியாசத்தின் 5-வது பாராவைப் படிக்கும் ஒவ்வொரு ஐக்கியஸ்தரும் ஆக்சரியப் படாமலிருக்க முடியாது. லோகல் யூனியன் மானேஜிங் பாடியார் யோக்கியதை அற்றவர்களென்றும் அநேக யூனியன்களை அஸிஸ்டெண்டு ரஜிஸ்ட்ரார்களே நடத்துகிறார்கள் என்றும் சொல்லுவது எவ்விதமென்பதைத் தெரிந்துகொள்ள முடியவில்லை. மதுரை ராமனாதபுரம் ஜில்லாக்களில் இவ்விதலோகல் யூனியன்கள் சமீபம் வரையேற்படவில்லை. உசிலம்பட்டியில் ஏற்பட்டிருப்பதில் அதின் அனுபோ

கத்தை வைத்து சொல்லுவதாயிருக்கும் என்று நினைப்பதற்கு அது ஏற்பட்டு சொற்பகாலமே ஆகிறது. இராமனாதபுரம் ஜில்லாவில் லோகல் யூனியன்கள் ஏற்படுத்த முயன்றும் அதற்கு ஐயரவர்கள் முற்றிலும் விரோதமாய் நிற்பதனால் இன்னம் ஸ்தாபிக்க முடியவில்லை. யூனியன்கள் ஒன்றும் தன் சங்கங்களில் இல்லாமலிருக்க இதர இடங்களில் வேலை செய்துவரும் யூனியன்களைப்பற்றி ஐயரவர்கள் சொல்வது சரியாயிருக்குமா வென்று சந்தேகிக்கவேண்டியதாயிருக்கிறது. வடஜில்லாக்களில் யூனியன்கள் ஏற்பட்டு அவைகள் நன்றாய் நடைபெற்று வருவதின் ரிபோர்டுகளை மாகாண கான்பரன்சுகளில் கேட்டும் இன்னும் பத்திரிகை மூலமாய் டிபார்டுமெண்டார் வெளியிடும் ரிபோர்டுகளிலிருந்து தெரிந்துகொண்டும் ஐயரவர்கள் தங்கள் எண்ணத்தை மாற்றிக்கொள்ளாதது ஆச்சரியம். சூபர்வைசர்களை வேலை வாங்கும் சக்தி கிராம பஞ்சாயத்தார்களிடம் இல்லையென்று ஒரு குறை இவர்கள்மேல் சுமத்தப்படுகிறது. சில சங்கங்கள் திறமையற்ற பஞ்சாயத்தார்களால் நடத்தப்பட்டு வருவது வாஸ்தவமாயினும் ஒரு இலாகாவிலுள்ள 15, 20, சங்கங்களின் பஞ்சாயத்துதார்களும் மூடர்களாயிருக்க மாட்டார்களென்பதையும் அதில் யூனியன்களை வைத்து நடத்துவதற்கு 5 பெயர்கள் கிடையாமற் போதாதென்பதையும் ஐயரவர்கள் கவனியாதது விசனிக்கத்தக்கது. யூனியன்கள் ஏற்பட்டு விட்டால் முந்தியைவிட ஜாஸ்திகெடுதல் உண்டாகும் என்ற ஒரு சொல் ஐயரவர்கள் வாக்கிலிருந்து முதல் முதலாய் வெளியே வந்ததைப்பற்றி ஐயரவர்களுக்கு நாம் ரொம்பவும் வந்தனம் செலுத்தவேண்டும். யூனியன் விஷயமாய் தன் அபிப்பிராயத்தை வெளியிட்டிருப்பதில் மிஸ்டர் உல்ப் துரையவர்கள் டிஸ்திரிகட் பாங்கிகள் மேற்பார்வைக்கு அனுகூலமாயில்லை என்று சொல்லியிருப்பதை ஐயரவர்கள் மறந்து விட்டார்கள் போலும். ஐக்கிய இயக்கம் விருத்தியடைய வேண்டுமானால் சங்கங்கள் திறமையாயிருக்கவேண்டும். சங்கங்கள் திறமையாயிருக்க வேண்டுமானால் டிஸ்ட்ரிக்ட் பாங்கி யூனியனுக்கு சம்பந்தப்படாத லோகல் யூனியன்கள் வேண்டும். இந்தலோகல் யூனியன்களால் தான் முடியுமே தவிர ஐயரவர்கள் சொல்லுகிறபடி டிஸ்ட்ரிக்ட் பாங்கி யூனியனால் முடியாதென்பது என்தாழ்மையான அபிப்பிராயம். பாங்கியின் மேற்பார்வையில் விட்டுவிட்டால் கவர்ன்மெண்டு இன்ஸ்பெக்டர்பேரில் என்னதோஷங்கள் சுமத்தப்படுகின்றனவோ அவ்வளவும் நாளடைவில் டிஸ்ட்ரிக்ட் பாங்கியானது நியமிக்கும் சிப்பந்திகள்மேல் கட்டாயம் ஏற்படும். அதனால் சங்கங்களின் அபிவிருத்தி தடைப்படும். டிஸ்ரிக்ட் பாங்கியின் மேற்பார்வையினால்விசேஷ அனுகூலங்கள் ஏற்பட்டுவிடும் என்று சொல்லுவதற்கில்லை. மதுரை ராமனாதபுரம் டிஸ்ட்ரிக்ட் பாங்கார் சென்ற 1914-ம் வருஷ



முதற்கொண்டு ஷை 2 ஜில்லாக்களிலுள்ள சங்கங்களின் மேற்பார்வையை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். இதன் அனுபோகத்தை கவனிப்போம். டிஸ்ட்ரிக்டு பாங்கார் மேற்பார்வை பெற்றுக்கொண்ட பிறகுதான் மேற்படி இரண்டு ஜில்லாக்களிலும் சுமார் 15 சங்கங்கள் லிக்விடேடர் வசம் ஒப்பு விக்கும்படியாய் நேரிட்டது, கெட்ட சங்கங்களின் எண்ணிக்கை அதிகப்பட்டது. 1913-ம் வருஷத்தில் பாங்கி சிகரிடெரியவர்கள் அநேக சங்கங்களை இன்ஸ்பெக்ஷன் செய்து சரியாய் நடைபெற்று வருகின்றனவென்றும் சங்கத்தின்வேலை திருப்திகரமா யிருக்கிறதென்றும் ஷரா எழுதிய அநேக சங்கங்கள் 1914-ம் வருஷத்தில் இன்ஸ்பெக்ஷன் ஏற்றுக் கொண்டதில் கெட்ட நிலைமைக்கு வந்திருக்கின்றன. 1912-ம் வருஷத்தில் வடமலை புரத்தில் நடந்த கான்பரன்சின் பயனால் மதுரையில் பாங்கி ஏற்பட்டு சங்கங்களும் பாங்கும் ஒன்றுக்கொன்று சிநேக பாவத்திலிருந்தது ; 1914-ம் வருஷத்தில் இன்ஸ்பெக்ஷன் ஏற்றுக்கொண்டதில் ஒன்றுக்கொன்று சமரசமில்லாமல் அனாவசியமான நிருபங்களுக்கு இடங்கொடுத்துக் கொண்டிருக்கிறது. சென்ற 3 வருஷகாலமாய் மதுரை பாங்கார் மேற்பார்த்து வருவதில் 1913-ம் வருஷத்தில் டிஸ்ட்ரிக்ட் பாங்கில் தயார் செய்திருக்கிற ஜாப்தாவிற் கண்ட கெட்ட சங்கங்களில் எத்தனை சங்கங்களை அபிவிருத்திக்குக்கொண்டு வந்திருக்கிறார்கள். மேற்படி ஜாப்தாவில் கண்ட நல்ல சங்கங்களில் ஒன்று 1915-ம் வருஷத்தில் லிக்விடேட் செய்யும்படியாய் நேரிட்டது. சென்ற 1914-ம் வருஷம் முதல் டிஸ்ட்ரிக்ட் பாங்கின் டைரக்டர்கள் (சிகரிடெரி யவர்களைத்தவிர) எத்தனை பெயர்கள் சங்கங்களை மேற்பார்த்து தங்கள் அபிப்பிராயத்தைத் தெரியப்படுத்தி யிருக்கிறார்கள். இவைகளை கவனித்தால் ஒன்றுமே யிருந்ததாய்த் தெரியவில்லை. இப்படியிருக்க, டிஸ்ட்ரிக்ட் பாங்கியின் மேற்பார்வை திறம் என்று சொல்லுவதெப்படி ; இதனால் டைரக்டர்கள் தெரியாதவர்கள் என்று சொல்லவில்லை. எவ்வளவு தெரிந்தவர்களாயிருந்தாலும் அவர்களுக்கு சாவகாசமில்லாதவரை உபயோகமில்லை என்பது என் தாழ்மையான அபிப்பிராயம். இப்போதைய டைரக்டர்கள் மதுரை கஸ்பாவில் தங்கள் சொந்த வேலையுடன் இதர லோகோபகாரமான வேலைகள் எவ்வளவோ செய்துவருகிறார்கள். ஆனால் அவர்கள் மதுரைடவுனைவிட்டு வெளியே போகவேண்டுமானால் பகீரதப் பிரயத்தனமே தவிர வேறில்லை. இது விஷயமாய் 2, 3 தடவைகளில் டைரக்டர்களை வெளியிடங்களுக்கு விஜயம் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டும் அவர்களுக்கு சாவகாசமில்லாததால் முடியவில்லை என்பதை தெரிந்துகொள்ளப்பட்டிருக்கிறது.

டிஸ்ட்ரிக்ட் பாங்கியார் தங்கள் லேவாதேவி வேலையை சரியாய்ப் பார்க்க சாவகாசமிராது. அப்படியிருக்க ஜில்லாவிலுள்ள அநேக சங்கங்

களை மேற்பார்ப்பதென்றால் கஷ்டமான காரியமே. ஜாஸ்தியான சிப்பந்திகளை வைத்துப்பார்த்தால் முடியுமென்று பதில் சொல்லலாம். எவ்வளவு சிப்பந்திகளை ஏற்படுத்தினாலும் கிராமங்களிற் போய் வேலை செய்யக்கூடியது ஒரு மனிதர் தான். அம்மனிதர் வேலையை சரிபார்க்கக் கூடியவர் ஒருவர் அவர் சமீபத்திலிருந்தாலொழிய மற்றப்படி பிரயோஜனமில்லை.

இது விஷயமாய் என்னுடைய 9 வருஷ காலத்து அனுபோகத்தை வைத்துச் சொல்லுவதில் ஐக்கிய சங்கங்கள் விருத்திக்கு வரவேண்டுமென்கிற ஓர் எண்ணத்தை மனதில் கொண்டவர்கள் யூனியன் மூலமாய்த்தான் தங்கள் எண்ணத்தை நிரைவேற்றிக்கொள்ள முடியுமே தவிர டிஸ்ட்ரிக்ட் பாங்குகள் மூலமாய் முடியாதென்று ஏற்கனவே சொல்லியிருப்பதை மறுபடியும் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இது விஷயமாய் என் தாழ்மையான அபிப்பிராயத்தை வெளியிட்டிருப்பதில் டிபார்டுமெண்டாரும் டிஸ்ட்ரிக்ட் பாங்கிகளும் என்னை மன்னித்து தற்சமயம் ஐக்கிய இயக்கம் கோரிநிற்கும் (சூபர் விஷன்) மேற்பார்வையை இன்ன விதமாய்ச் செய்தால் சரியாயிருக்குமென்று ஆலோசிக்கவேண்டுமென்றும் இன்னும் ஒவ்வொரு ஐக்கியஸ்தர்களும் தங்கள் அபிப்பிராயங்களை வெளிப்படுத்தவேண்டுமென்றும் பிரார்த்தித்துக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

---

# சென்னை இராஜதானிக்கு ஓர் வித பாற்சாலை.

### ஓர் ஐக்கியஸ்தர் எழுதியது:

ஐரோப்பா தேசம் முழுவதும் கூட்டுறவு முறையில் பாற்சாலைகளை ஸ்தாபித்து ஆயிரக்கணக்கான மெம்பர்கள் பலனடைந்திருக்கிறார்கள். ஐரோப்பா தேசத்திற்கு நன்மை விளைவித்துள்ள பாற்சாலைகள் இந்தியா தேசத்திற்கு நன்மை விளைவியா தென்று இந்தியர்கள் கூற முடியாது. குழந்தைகளுக்கு நல்லபால் கிடைப்பது அரிதாயிருக்கின்றது; ஆழாக்குப்பாலுக்கு காற்படி ஜலம் சேர்க்கிறார்கள். சில சமயத்தில் அவசரத்தின்நிமித்தம் சாக்கடையின் கழிவு ஜலமும் சேர்க்கப்படுவதாக கேள்விப்பட்டுள்ளோம். இப்படி அசுத்தமான பாலைகுழந்தைகளுக்கு ஊட்டின் குழந்தைகளுக்கு அகாலமான மரணம் வர யாரைக்கேட்கவேண்டும். இந்தியா தேசத்தில் முழுவதுமே பன்னிரண்டுக்கதிகமாய் பாற்சாலைகள் கூட்டுறவு முறையில் ஏற்பட்டுள்ளதாகக் காணோம். சென்னை இராஜதானியில் ஒன்றேனும் ஏற்பட்டில்லாதது சென்னைவாசிகளின் சிரத்தைக்குறைவே யொழிய வேறில்லை.



படித்துள்ளவர்களும் பணக்காரர்களும் இவ்விஷயத்தில் சிரத்தைகொள்ளவில்லை. ஏனெனில் அதிகவிலை கொடுத்தோ அல்லது சொந்தப் பசுக்களைக்கொண்டோ நல்ல பால் அடைந்துவிடுகிறார்கள். ஏழைகளின் கஷ்டத்தை நிவர்த்தி செய்யவேண்டுமென்ற சிரத்தை கொஞ்சமேனும் அவர்களுக்குக் கிடையாது. இது காரணம்பற்றி கூட்டுறவு சட்டம் அமுலுக்கு வந்து பதின்மூன்று வருஷங்களாயும் சுமார் இரண்டாயிரம் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்பட்டுள்ள சென்னை இராஜதானியில் பாற்சாலை ஒன்றாவது கிடையாது. பாற்சாலைகள் கிராமங்களைவிட பட்டணங்களுக்கு அவசியமானவை. பட்டணங்களில் இவைகளை இலகுவாயும் நடத்திவர சௌகர்யங்கள் உண்டு. ஜனங்களுடைய தேகாரோக்கியத்தையும் சௌக்கியத்தையும் பாதுகாப்பாளர்களாகிய மெடிகல் டிபார்ட்டுமென்டாரும், கார்புரேஷன், முனிசிபாலடியார், முதலியவர்களும் கோவபரேடிவ் டிபார்ட்டுமெண்டுடன் யோஜனை செய்து ஒவ்வொரு நகருக்கும் ஒரு பாற்சாலையாவது ஸ்தாபிக்க ஏற்பாடு செய்யவேண்டும். இவ்விஷயத்தில் தக்க சிரத்தை எடுத்துக்கொள்ளும் பக்ஷத்தில் குழந்தைகளின் மரண எண்ணிக்கை ஓரே வருஷத்தில் குறைந்துபோக இடமுண்டென்று நாம் உறுதியாகக் கூறலாம். இத்தகைய சங்கங்களால் விளையக்கூடிய பலன்கள் எண்ணிறந்தவையே யாயினும் சிலவற்றை இங்கு கூறுவோம். இனியாவது சென்னைக் கூட்டுறவினர்கள் விழித்துக்கொள்ளுவார்களென்று நம்பியே இதை இங்கு வரையலானோம்.

### மெம்பர்கள் எல்லாரும் இடையர்களாயிருந்தால் அவர்களுக்கேற்படும் நன்மைகள்.

(1) பால்விற்கும் இடையர்களும் இதரர்களும் பசுக்களும் எருமைகளும் வாங்க பணமின்றி அதிக வட்டிக்கு நாட்டுக் கோட்டை செட்டிகளிடத்திலும், மார்வாரிகளிடத்தும் பணம் வாங்கி நஷ்டமடைகிறார்கள். தவிர சிலர் சிலதனவந்தர்களிடத்தில் பணம் அட்வான்ஸு வாங்கி பாலூற்றி வருகிறார்கள். இந்த தர்மக்கொள்ளை கலிகாலத்துக்கு ஏற்றதேவிட வேறெக்காலத்திலும் தலை நீட்டவும் யோக்கியதையற்றது. ஊரில் ரூபாய்க்கு நான்கு படி நல்ல பால் கிடைப்பது திண்டாட்டமாயிருக்கிறது. அப்படிக்கிருக்க அட்வான்ஸு வாங்கினதற்கு ரூபாய்க்கு ஐந்துபடி பால் வீதம் கொடுக்கவேணுமாம். இப்படி நஷ்டமடைகிறவர்களுக்கு பாற்சாலைகள் ஏற்படுத்தி குறைந்த வட்டிக்கு பணம் உதவி உபகாரஞ் செய்தால் தர்மமாகும்.

(2) மாட்டுக்கு தீவனம் சில்லரையாக வாங்கி நஷ்டமடைவதைக் காட்டிலும் மொத்தமாக வாங்கினால் குறைந்தவிலைக்கு மலிவாக வாங்க முடியும்.

(3) வீடுவீடாய்ச் சென்று பால்விற்பதில் கழிக்கப்படும் வீண் காலம் பிரயோஜனமாக செலவழிக்கப்படலாம்.

(4) சில்லரையால் பால் விற்று வீடுவீடாய்ச் சென்று பணம்வசூல் செய்ய வேண்டுமென விசாரம் கிடையாது.

(5) மெம்பர்களின் மாடுகளுடைய மேய்ச்சலுக்காக வென்று பொதுவில் நிலங்களை வாங்கிக் கொள்ளலாம் ஒவ்வொருவரும் பிரத்தியேகமாய் தனித்தனியே நிலம் வாங்கவேண்டுமாயின் சாத்திய மற்ற விஷயம்.

(6) பால் வாங்குவாரில்லையே யென்ற விசாரமும் ஏக்கமும், விலையில்லாமல் பால்கெட்டுப் போகுமே யென்ற துக்கமும் கொஞ்சமும் கிடையாது.

### வாடிக்கைக்காரர்களுக்கு உள்ள நன்மைகள்.

(1) வெளியில் கிடைக்கும்பாலுக்கும் பாற்சாலையில் வாங்கும் பாலுக்கும் எவ்வளவோ வித்தியாசம். பாற்சாலையில் கலப்பில்லாத சுத்தமான பால் கிடைக்கும்.

(2) பாலில் ஜலம் கொஞ்சமாவது கலந்திருக்கிறதென்னும் சந்தேகமின்றி பாலை வாங்கி உபயோகிக்கலாம்.

(3) பாற்சாலையில் வாங்கும் பாலால் வியாதியென்பதே வராது. ஏனென்றால்,

(a) பால் கறப்பதற்காக வைக்கப்படும் செம்புகளும் பாத்திரங்களும் மிகவும் சுத்தமாய் வைக்கப்படும்.

(b) பால் அளப்பதற்கும் பால்சேகரிப்பதற்கும் வைத்துள்ள பாத்திரங்கள் சோடா கரைத்த நீரால் கழுவப்பட்டு சுத்தமாக வைக்கப்படும்.

(c) பால் கறக்கிறவர்கள் வியாதிஸ்தர்களாயில்லாதபடிக்கும் 'பால் விற்பதிலும், சேகரிப்பதிலும் வியாதியஸ்தர்கள் சம்பந்தப்படாமலும் பாதுகாக்கப்படும்.

(d) பால் கறப்பதற்குமுன் மாட்டின் மடி சுத்தமாக சோப்பு (Soap) போட்டு கழுவப்படும்.

(e) மாடு எப்பொழுதும் சுத்தமாகவே இருக்கும்படி பார்க்கப்பட்டுவரும்.

(f) அசுத்தங்களை மாடுகள் சாப்பிடாதபடிக்கும், வியாதிகளை அதிகரிக்கும், வஸ்துக்களை மாடுகள் சாப்பிடாதபடிக்கும் பாதுகாக்கப்படும்.

(4) அளவில் குறைக்கப்படுமென்ற எண்ணம் கொஞ்சமேனும் இருக்கவேண்டியதில்லை.

(5) சுருக்கிச் சொல்லின் கூட்டுறவால் விளையக்கூடிய சகல பயன்களையும் எல்லாரும் அடைய இடமுண்டு.



# ஐக்கிய சங்கங்களுக்கு ஆரம்பத்தில் ஏற்படும் கஷ்டங்கள்.

பாளையங்கோட்டை ம-ா-ா-ஸ்ரீ N. கிருஷ்ணசாமி ராவ் அவர்கள் எழுதியது.

1904ம் வருஷம் ஐக்கிய நாணயச் சட்டம் ஏற்பட்ட பொழுது கவர்ன்மெண்டார் சில சங்கங்களை எப்படியாவது ஏற்படுத்தி அவைகளை நடத்திவரமுயன்றார்கள். பிறகு சங்கங்களை அதிகப்படுத்திக்கொண்டே போவதைவிட இருக்கும் சங்கங்களை நல்ல நிலைமையில் வைப்பது உசிதமென்று எண்ணினார்கள். இப்பொழுதோ சங்கங்களை சீர்திருத்துவதோடு புதுச்சங்கங்களையும் அதிகமாய் ஏற்படுத்தவேண்டுமென்று நினைக்கிறார்கள். சட்டம் ஏற்பட்டு 13 வருஷங்களாயும் போதுமான சங்கங்கள் ஏற்பட்டு விட்டனவென்று சொல்ல முடியாது. சுமார் 2000க்கு மேலானசங்கங்களும் அதில் 500,000 மெம்பர்களும் இருக்கிறார்கள். உண்மையாகவே இவ்வைக்கிய இயக்கம் சாமானிய ஜனங்களுக்குரியதே. நம்ஜனங்களுக்குள் கல்வி அபிவிர்த்தி விரைவாக ஏற்படும் வரையிலும் இக்கூட்டுறவை அதிகமாய் பரவச்செய்ய வேண்டுமென்று டிபார்ட்டுமெண்டார் கவலை யெடுக்கும் வரையிலும் சர்க்கார் உத்தியோகஸ்தரல்லாதவர்களுடைய உதவியை டிபார்ட்மெண்டார் பெரும் வரையிலும் இவ்வைக்கிய இயக்கம் மெதுவாகவே நடை பெற வேண்டிவரும்.

இதுவரை ஏற்பட்ட சங்கங்கள் ஆரம்பத்தில் பட்ட கஷ்டங்களை யோசிக்கும்போது சங்கங்களை ஏற்படுத்துவதிலும் நடைபெறச் செய்வதிலும் பலகுறைகள் உண்டென விளங்குகின்றன.

நான் திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள சங்கங்களை மாத்திரம்தான் அறிவேன். ஆகையால் என் அபிப்பிராயங்களெல்லாம் அச்சங்கங்களை பொருத்தனவே. தற்காலத்தில் மூன்று நகரச்சங்கங்களும் ஒரு விற்பனைச் சங்கமும், மூன்று விவசாயச்சங்கங்களும் சற்றேறக்குறைய ஐம்பது கிராமச்சங்கங்களும் இருக்கின்றன.

ஆனால் இத்தனை சங்கங்கள் இருக்கும் விஷயம் பட்டணங்களில் வசிக்கும் படிப்பில் மிக்க கனவான்களுக்குங்கூட தெரியாது. இச்சங்கங்களின் அங்கத்தினர்க்குள் எவ்விதமான உற்சாகமும் இருப்பதாய் பயிரங்கப்படவில்லை. தற்காலத்தில் கவர்ன்மெண்டார் சிற்சில விடங்களுக்குச் சென்று சாதாரணமாக புது விஷயங்களுக்கே உடன்படாத சுபாவமுள்ளவர்களுக்குள் உற்சாகம்உண்டாக்கி சிற்சில சங்கங்களை ஏற்படுத்தினார்கள். அவ்வுற்சாகத்தை மேல் மேலும் விர்த்தி செய்தாலொழிய

குறைவுள்ளச் சங்கங்களின் கூட்டுறவு சுபாவமே கெட்டுப்போகும். கூட்டுறவை அபிவிர்த்தி செய்வதற்கான எல்லாசெய்கைகளையும் செய்யவேண்டுமெனவும், கூட்டுறவு சம்பந்தமான விஷயங்களை யாரும் அறிய பரவச்செய்யவேண்டுமெனவும் ஒவ்வொரு சங்கத்திலும் உபவிதிகள் ஏற்பட்டிருக்கின்றன. ஆனால் இவைகள் விஷயமாய் சங்கங்கள் எம்மட்டில் பிரயாசைப்படுகின்றன என்பதும், அப்பிரயாசைக்கு டிபார்ட்மெண்டார் எவ்வளவு தூரம் உதவிபுரிகிறார்கள் என்றும் தெரியவில்லை.

சங்கங்கள் அதிகப்பட கவர்ன்மெண்டார் மேற்பார்வைக்குள்ள உத்தியோகஸ்தர்களை அதிகப்படுத்தி இருக்கிறார்கள். தற்காலத்தில் புதுச் சங்கங்களை ஏற்படுத்தும் பொறுப்பு, சர்க்கிள் இன்ஸ்பெக்டரை பொறுத்ததாய் இருக்கிறது. அவர்தான் மேலதிகாரியான அஸிஸ்டெண்டு ரிஜிஸ்ட்ரார் அவர்களுக்குக் கண்ணும் காதுமாய் இருக்கிறார். இப்பேற்பட்ட உத்தியோகஸ்தர் யார் என்று கவனிப்போமானால், அஸிஸ்டெண்டு ரிஜிஸ்டரார் அவர்கள் ஆபீஸில் கொஞ்சகாலம் குமாஸ்தாவேலை பார்த்தவராவது அல்லது S. S. L. C. ஸர்டிபிகேட் பெற்று 3 அல்லது 4 மாதம் மற்றொரு இன்ஸ்பெக்டரண்டை வேலை பழகின இளைஞராகவாவது இருக்கிறார். ஆனால் இவர்கள் பார்க்கவேண்டிய வேலையோ மிகப்பொறுப்புள்ளது. உலக அனுபோக மில்லாத இவ்விளைஞர்கள் ஒருதரம் அல்லது 2 தரம் ஒரு கிராமத்திற்குப் போய் பார்வையிட்டு அக்கிராமத்தில் ஒரு சங்கம் ஏற்படுத்த தகுதியான ஜனங்கள் இருக்கிறார்களா இல்லையா வென்று தீர்மானிக்க எப்படி முடியும். இவர்கள் வார்த்தையை மாத்திரம் நம்பிக்கொண்டிருக்காமல் அஸிஸ்டெண்டு ரிஜிஸ்ட்ராரும் அந்த கிராமத்தில் சங்கம் வைக்கத்தகுதியா இல்லையா வென்று தெரிந்து கொண்டாலொழிய சங்கம் வைப்பது பிரயோசனமற்றதாகும். சங்கம் ஏற்படுத்தின பிறகும் அது சரியாய் வேலை செய்து வருகிறதா வென்பதை அடிக்கடிப்போய் பார்த்து வேண்டுமென்றால் ஒழுங்குபடுத்தியும் அங்கன் வெளி உதவியன்னியில் விருத்தி யடையும் நம்பிக்கை வரும் வரையில் இன்ஸ்பெக்டராவது அஸிஸ்டெண்டு ரிஜிஸ்டிராராவது கவனித்து வரவேண்டும். அப்படி கவனித்துவர தனக்கும் தன் இன்ஸ்பெக்டருக்கும் அவகாசமில்லை என்று கருதினால் ஒவ்வொரு அஸிஸ்டெண்டு ரிஜிஸ்ட்ராரும் தன் இலாகாவிலுள்ள ஆனரரி ஆர்கனைஸரையாவது அல்லது பக்கத்திலுள்ள நல்ல சங்கத்தின் பிரசிடெண்டு அல்லது செக்ரடிரியையாவது அனுப்பி அச்சங்கத்தின் வேலையை கவனித்து வரச்செய்யவேண்டும். படிப்புக்குறைவினாலாவது அல்லது வேலைசெய்யும் பழக்கக்குறைவினாலாவது ஏற்படும் குறைகளை இவ்விதமாக நீக்கலாம் என்று காட்ட வே[illegible]. நகரச்சங்கங்களையும் கூட அஸிஸ்டெண்டு ரிஜிஸ்ட்ரார் அவர்கள் வருஷத்தில் பலமுறை பார்வையிட வேண்டும்; ஒரே ஊரில்



2,3-சங்கங்கள் இருந்தால் அவைகளின் பிரதிநிதிகளை கூட்டி ஒருவரோடொருவர் கலக்கச்செய்ய வேண்டும்; இப்படிச் செய்வது பெருங்கூட்டங்கள் கூட்டுவதற்கு அனுகூலம் ஆகும். இக்கூட்டங்களில் நடைபெறும் காரியாதிகளுக்கு சிலவாயினும் அவைகளால் ஏற்படும் பிரயோஜனங்கள் பல. கூட்டுறவுக்காரர்களுடைய உற்சாகத்தை தளரவிடாமல் செய்வதிலும், கூட்டுறவு முறைகளை பரவச்செய்வதிலும், சாதாரண ஜனங்களுக்கு இக்கூட்டுறவின் நிஜமான உபயோகங்களை ரூபிப்பதிலும் இக்கூட்டங்கள் உபயோகமுள்ளவைகளாய் இருக்கின்றன.

ஒரு கிராமவாசி ஏதோகாரணத்தால் சங்கம் நடந்துவரும் பக்கத்துக் கிராமத்துக்குப்போக நேரிட்டால் இந்த மாதிரி சங்கம் வைக்கவேணுமென்று உற்சாகம் அந்தச் சங்கத்தின் பிரெஸிடெண்டு அல்லது செக்ரெடிரி இடமிருந்து சங்கம் ஏற்படுத்தும் வழிகளைத் தெரிந்து கொண்டு தன் கிராமத்தில் வந்து மற்றவர்களோடு கலந்து தங்கள் கிராமத்தில் ஒரு சங்கம் வைத்து ரிஜிஸ்டர் செய்யவேணுமென்று டிபார்டுமெண்டாருக்கு மனு செய்து கொள்ளுகிறார். சுமார் 5-6 மாதங்கள் கழிந்த பிறகு இன்ஸ்பெக்டர் மனுவை எடுத்துக்கொண்டு ஷை கிராமத்திற்குப் போய் மனுதாரர்கள் உற்சாகம் இன்னும் குறையாதிருந்தால் விசாரித்து ஷை கிராமம் சங்கம் வைக்கத்தகுந்ததா அல்லதா என்பதையும் தெரிந்துகொண்டு திருப்தியாயிருந்தால் ரிஜிஸ்டர் செய்கிறார். ஒரு சங்கம் ரிஜிஸ்டர் செய்யபட்டதாக நினைத்துக் கொள்ளுவோம். இதன் பிறகுதான் இன்ஸ்பெக்டருக்குள்ள வேலையில் மிகக்கடினமும் சாமர்த்தியத்தைச் செலுத்த வேண்டியதுமான வேலை ஏற்படுகிறது. சங்கத்தை ஏற்படுத்துவதும் அதற்கு சரியான பஞ்சாயத்து ஏற்படுத்துகிறதும் சரியாய் சங்கத்தை நடத்துகிறவர்களிடம் ஒப்புவிக்கிறதுமான பொறுப்பு ஏற்படுகிறது. பஞ்சாயத்தார் நல்லவர்களாயிருப்பது மாத்திரம் போதாது; வேலை பார்க்கும் திறமையுள்ளவர்களாயிருந்தால் மாத்திரம் போதாது; கொஞ்சமாவது பொது நன்மையைக் கவனிக்கிறவர்களாக இருக்க வேண்டும்; டிபார்டுமெண்டாருடன் எழுத்து மூலமாய் நடவடிக்கை நடத்தவும் சங்கக்கணக்குகளை சரியானபடி எழுதப்படுகின்றனவா என்று பார்க்கத் திறமையுள்ளவர் ஒருவர் இருவர்கூட கிடைக்காத இடத்தில் சங்கம் ஏற்படுத்துவதில் பிரயோஜன மில்லை. கிராமாந்தரத்திலுள்ள கிராமமுனிசிப் அல்லது கர்ணம் முதலானவர்களை காரியதரிசியாக நியமித்து கணக்கு வழக்கு மேற்பார்வை முதலியனவும் அவரிடமிருக்கும்படி இப்பொழுது இலவிடங்களில் செய்வதுபோலச் செய்வதும் அவ்வளவு உசிதமல்ல. இந்தக் கிராம ஆபீஸர்களுக்கு வேண்டியவர்கள் வேண்டாதவர்கள் முன்னமே ஏற்பட்டிருக்கிறார்கள். கவர்ன்மெண்டு மேற்பார்வை உத்தியோகஸ்தர்களை தங்கள் இஷ்டப்படி நடக்கச் செய்யும் சாமர்த்தியம் இவர்களுக்கு

உண்டு. கக்ஷியிருக்கும் கிராமங்களிலோ இருகக்ஷிகளிலும் சேராதவர்களும் இருகக்ஷிக்காரர்களையும் ஒன்று படச்செய்யும் சக்தியுள்ளவர்கள் பஞ்சாயத்தாராக வேலை செய்யக் கிடைக்கும் வரை அவ்வூரில் சங்கம் ஏற்படுத்தக் கூடாது. ஆனால் கக்ஷியானது இரண்டே இருந்து அது ஜாதிமத வித்தியாசத்தால் ஏற்பட்டதாயிருந்தால் கக்ஷிக்கு ஒரு சங்கம் ஏற்படுத்தினால் இரண்டு சங்கங்களும் நன்றாக நடக்கும். எவ்விதத்திலும் ஒவ்வொரு கக்ஷியிலும் சிலரைத் தெரிந்தெடுத்து ஓரேபஞ்சாயத்தாக ஏற்படுத்தி நடத்தும் சங்கம் ஒரு போதும் விருத்தியடையாது. நம் திருநெல்வேலி ஜில்லாவிலே கக்ஷியில்லாத கிராமமே கிடையாது.

சங்கங்கள் அடிக்கடி அஸிஸ்டெண்டு ரிஜிஸ்ட்ரார் பார்வைக்கு பாத்தியப் பட்டதாகும். முக்கியமாய் வேலை நடவடிக்கைகளும் கணக்கு வைக்கும் வழிகளும் சங்கம் நடவடிக்கைகளை மேற்பார்க்கிறவர்களுக்கு நன்றாகத் தெரியச்செய்யவேண்டும். தவிரவும் புதுச் சங்கம் ஏற்படுத்தின உடனே அச்சங்கத்தார் அனுப்பும் கடிதங்களுக்கு உடனுக்குடன் பதில் முதலியன டிபார்டுமெண்டார் அனுப்பவேண்டும். இப்பொழுதிருக்கிறமாதிரி ஒரு சங்கம் ஏற்படுத்தி 10 மாதங்களாகியும் முதற்கடன் கூட சங்கத்திற்கு கிடைக்க மார்க்கமில்லாமலிருந்தால் அச்சங்கம் எப்படி விர்த்தியடையும்? வேலை செய்யப் பட்டவர்களுக்கு எப்படி உற்சாகம் உண்டாகும்?

சங்கத்தின் சாதாரண நடவடிக்கை தெரியாததால் எத்தனையோ சங்கங்களுக்கு நல்லபேரெடுக்க முடியாமற் போகிறது. உதாரணமாக, கடம்பூருக்கடுத்த சிங்கிரப்பேரிசங்கத்தின் காரியதரிசிக்கு பணம் கஜானா மூலமாய் எப்படி அனுப்புகிறதென்பதை நன்றாகத்தெரிந்து கொள்ளாததால் சென்டிரல் பாங்கிக்கு பணம் செலுத்தியும் கஜானாவில் கொடுத்த ரசீதை அனுப்பாமல் இருந்துவிட அனாவசியமாய் இரண்டு மாதங்களுக்கு அபராத வட்டி கட்டும்படி ஏற்பட்டுவிட, கிடைத்த கொஞ்சலாபமும் போய் நஷ்டமாக முடிந்தது.

மற்றொரு சங்கத்தில் பணம் எப்படி அனுப்புகிறதென்பது தெரியாமல் இன்ஸ்பெக்டரிருக்குமிடம் தேடிவர அவர் சர்க்கியூட்போயிருந்தபடியால் அவர் வரும் வரைகாத்திருந்து அபராத வட்டியுடன் பணம் அனுப்பினார்கள். இப்படி எல்லாம் நடப்பதற்கு சங்கத்தின் நடவடிக்கைகளை பஞ்சாயத்தார் அல்லது காரியதரிசி தெரிந்துகொள்ளாததேயாகும். இக்குறையை நிவர்த்திக்க பின்வரும் உபாயமொன்றே எனக்குப் புலப்படுகிறது. சௌகரியப் பட்டபொழுது பக்கத்திலிருக்கிற சங்கத்துக் காரியதரிசி பிரெஸிடெண்டுகளை கூட்டி நடவடிக்கை விவரங்களைத் தெரியச் செய்தல் அல்லது இன்ஸ்பெக்டர் இந்த சங்கங்களை பார்



162043

வையிடும் பொழுதெல்லாம் நடவடிக்கை விவரங்களை புதுச்சங்கங்களின் பிரெஸிடெண்டு; செக்ரெடிரி முதலியவர்களுக்குத் திருப்பித் திருப்பிச் சொல்லவேண்டும்; இதைத்தவிர வேறுமார்க்கமில்லை.

வாங்கிய கடனை மெம்பர்கள் சரியான காலங்களில் திருப்பிச் செலுத்துகிறதை சங்கங்கள் கவனிக்கவேண்டிய காரியங்களில் முக்கியமானதாகும். அதிலும் பஞ்சாயத்தார் கடன்களும் அவைகளை வாயிதா தவராமல் வசூலிப்பதுமே முக்கியமானதாகும். சிலகிராமச் சங்கங்களில் பஞ்சாயத்தார்கள் எழுதப் படிக்கத் தெரியாதவர்களாயும் இருக்கிறார்கள். அப்படி இருந்தால் கணக்கு எழுதுகிறவர் ஒரு விதமெழுதி மற்றொரு விதமாய் வாசித்துக் காண்பித்து ஏமாற்றி விடலாம். அந்த பஞ்சாயத்தில் சாங்ஷன் செய்யும் கடன் காரியதரிசி அல்லது பிரெஸிடெண்டுக்குச் சேரவேண்டியதாய் இருந்தால் பஞ்சாயத்தார் தீர்மானம் ஒரு விதம் இருக்கலாம்; நடவடிக்கை புஸ்தகத்தில் எழுதப்படுவது வேறு விதமாய் இருக்கலாம். சமீபத்தில் ஈராச்சி கிராமச் சங்கத்து செக்ரெடிரியின் பேரில் நடத்தப்பட்ட ஸெஷன்கேஸில் ஒரு பஞ்சம பஞ்சாயத்தார் பின் வருமாறு வாக்குமூலம் கொடுத்தார்:—"எனக்கு எழுதப்படிக்கத் தெரியாது. கையெழுத்துப் போட மாத்திரம் தெரியும். நான் நடவடிக்கைப் புஸ்தகத்தில் கையெழுத்து வைத்திருக்கிறேன். நாங்கள் செய்த தீர்மானப்படி எழுதப்படவில்லையென்பது இப்பொழுது நீங்கள் வாசிப்பதிலிருந்து தெரிகிறது." இப்படிக்கு பஞ்சாயத்தார் இருந்தால் அந்தப் பஞ்சாயத்து எப்படி சங்கத்து நடவடிக்கைகளை சரிவரநடத்தும். பஞ்சாயத்து ஏற்படுத்துவதில் தக்க கவனம் செலுத்த வேண்டும். தவிரவும் இன்ஸ்பெக்டர் ஷை சங்கத்தைப் பார்க்கப் போகும் பொழுதெல்லாம் மகா சங்கம் கூட்டியோ அல்லது மகா சங்கத்தார் சிலரையாவது வருத்தியோ பஞ்சாயத்தார் வாங்கி இருக்கிற கடன்களையும் அவர்கள் திருப்பிச் செலுத்தி இருக்கிற விபரங்களையும் தெரிவிக்க வேண்டும். இப்படிச் செய்தால் மகாசபை மெம்பர் தங்கள் பொறுப்பை உணர்ந்து வேலை செய்ய இடமுண்டாகும்.

பொதுவாய் பட்டணங்களில் வசிப்பவர்களில் படிப்பும் சாவகாசமும் முள்ளவர்கள்தான் பொதுஜனங்களுக்குக் கூட்டுறவு முறைகளை கற்பிக்கும் பாரத்தை ஏற்றுக்கொள்ளவேண்டும். இப்பேர்ப்பட்டவர்களில் ஒவ்வொருவருக்கும் ஏதாவது ஒரு கிராமத்தில் சில சம்பந்தங்கள் ஏற்பட்டிருக்கக் கூடும். இவர்களுக்குத் தான்வேண்டிய விஷயங்களை அறிந்துகொள்ள சௌகரியமும் மற்றவர்களுக்குத் தெரியச்செய்ய சாவகாசமும் உண்டு; இவர்கள் தங்களால் கூடிய மட்டும் கூட்டுறவு முறைகளைப் பரவச்செய்ய யாதொன்றும் செய்யாவிட்டால் கடவுள் அவர்

களுக்குக் கொடுத்திருக்கிற நன்மைகளை சரியானபடி உபயோகப்படுத்தினவர்களாக மாட்டார்கள். தங்கள் சொந்தப் பிரயோசனத்தை உத்தேசித்தும் கூட இவர்கள் இந்தவேலை செய்வது அவர்களுக்குப் பலன்கிடைக்க கூடியதாயிருக்கும். இப்படி ஏராளமானவர்கள் இக்கூட்டுறவைப் பரவச் செய்யமுயலும்வரை சங்கங்கள் அதிகரிக்க மாட்டாது. ஏற்பட்ட சங்கங்களும் விருத்தியடைந்து அங்கத்தினர்களுக்கு நன்மையுண்டாகும்படி நடைபெற இடமில்லை. நம்முடைய முயற்சி அவசியம் அதிகரிக்க வேண்டும். அப்பொழுதுதான் நம் நாடு செழிப்படைந்து நம் ஜனங்கள் வறுமை நோயினின்று நீங்கி சுகமும் சந்தோஷமும் அடைவார்கள்.

---

# கடப்பை ஜில்லாவில் ஐக்கியமுயற்சி

**அஸிஸ்டெண்டு ரிஜிஸ்ட்ரார் ம-ா-ா-ஸ்ரீ T. ஸ்ரீனிவாசராவ் அவர்களெழுதியது**

(1) தற்காலத்திய கடப்பை ஜில்லா முந்திய கடப்பை ஜில்லாவின் ஒருபாகம்தான். முன் இந்த ஜில்லாவில் அடங்கியிருந்த மதனப்பள்ளி, வாயல்பாடு தாலூக்காக்கள் புதியசித்தூர் ஜில்லாவிற்கும் கதிரி தாலுக்கா அனந்தபூர் ஜில்லாவிற்கும் 1910-11ல் மாற்றப்பட்டுப்போயின; இந்தக் குறிப்பு தற்காலத்திய கடப்பை ஜில்லாவிற்குள்ளடங்கிய சொஸைட்டிகளை மட்டும் பற்றியுளது.

(2) **சொஸைட்டிகள்.**—இந்த ஜில்லாவில் முதல் முதல் 1905-06ல் நந்தலூரில் ஒரு சொஸைடி ஏற்பட்டது. அது பொறுப்பு வரையறுக்கப்பட்ட விவசாயச்சங்கம்; அடுத்த 5 வருஷங்களிலும் அது யாதொரு வேலையும் செய்யவில்லை. 1911-12ல் ராயசோடி தாலுக்காவில் 15-ம் புலிவெண்டலா தாலுக்காவில் 5-ம் ஆக 20 சொஸைட்டிகள் ஆரம்பிக்கப்பட்டன; மறு வருஷம் முடிய அமைதியாயிருந்து பிறகு 1913-14ல் ஒரு சொஸைட்டி மூடப்பட்டுப் போயிற்று. அதற்கடுத்தவருஷத்தில் 4 புது சொஸைட்டிகள் ஏற்பட்டு இரண்டு பழைய சொஸைட்டிகள் மூடப்பட்டன. ஏற்பட்ட 4 சொஸைட்டிகளில் ஒன்று ஜில்லாவின் தலைநகரில் ஏற்பட்டவிவசாய மல்லாத சொஸைட்டி; அவ்விடத்தில் அதுவரையில் கொவாபரேடிவ் சொஸைட்டியே இல்லாமலிருந்து. 1915-16ல் 6 புதிய சொஸைட்டிகள் ஏற்பட்டன. பழைய சொஸைட்டிகளில் மூன்று மூடப்பட்டன. இவையெல்லாம் ராயசோடிதாலுக்காவில் நடந்த சம்பவங்கள். தற்காலம் இந்த ஜில்லாவில் பொறுப்பு வரையறுக்கப்பட்ட சொஸைட்டிகள் இரண்டு உள. அவற்றுள் ஒன்று நந்தலூரிலுள்ள விவசாய சொஸைட்டி, மற்றது கடப்பையிலுள்ள விவசாய மல்லாத சொஸைட்டி. இந்த இரண்டு தாலுக்காக்களிலும் அதாவது புல்லம்பேட்டை, கடப்பை தாலுக்காக்களில் வேறு சொஸையிட்டிகள் இடை



யாது. விவசாய சம்பந்தமும் பொறுப்பு வரையும் இல்லாத இதர 23 சொஸைட்டிகளும் ராயசோடி தாலுக்காவில் 18-ம், புலிவெண்டலா தாலூகாவில் 3-ம், ப்ரொடத்தூர் தாலூகாவில் 2-ம் ஆகியிருந்தன. ப்ரோடத்தூர் தாலூக்காவிலுள்ள இரண்டு சொஸைட்டிகளும் கிறிஸ்துவர் சொஸைட்டிகள்; பெரும்பாலும் அவைகளின் மெம்பர்கள் பஞ்சமர்கள். இதர ஜில்லாக்களைப் போலவே இந்த ஜில்லாவிலும் ஒரு கிராமமாவது சொஸைட்டி ஏற்படுத்த வேண்டுமென்று மனுவுடன் தானாக வரவில்லை. கூட்டியில் இருந்து கொண்டு அநேக ஜில்லாக்களுக்கு கௌரவ வேலை பார்த்து வருகிற, ஓய். எம். சி. ஏ. யின் ஒரு ஏஜண்டைத்தவிர வேறு தனி ஏஜண்டுகள் வேலையைப் பரவுவதற்கு ஏற்படவில்லை. ஆகவே ஏதாவது வேலைகள் ஏற்பாடு செய்ய நேரிட்டால் அது கோவாபரேடிவ் டிபார்டுமெண்டைச் சேர்ந்த கவர்ன்மெண்டு சிப்பந்திகளால் நடைபெற வேண்டியிருக்கிறது.

சொஸைட்டிகள் இருக்கிறதாலூக்காக்களின்கிராமசங்கியையும் அந்த தாலுக்காக்களிலுள்ள சொஸைடிகளின் சங்கியையும் ஒப்பிட்டால், 100-கிராமங்களுக்கு 5-சொஸைடிக்கும் குறைவாக இருக்கிறது. ஆனால் அந்த சொஸைடிகளின் தொகையை ஜில்லாவிலுள்ள எல்லதாலூக்காக்களின் கிராமத்தொகையுடன் ஒத்துப்பார்த்தாலோ 100-க்கு 2·8தான் இருக்கிறது. ஜில்லாமுழுதும் சொஸைடிகள் ஏற்படுத்த விசேஷ சௌகரியங்கள் இருக்கின்றன. “மேற் பார்வை ஏற்பாடு” (Supervision Scheme) என்று பிரேரித்திருக்கும் அலுவல் அமுலுக்கு வரவு வர்த்தமான வருஷத்தில் சொஸைடி ஏற்படுத்தும் வேலையும் அதிகப்பட இடமுண்டென்று நம்பலாம்.

**மெம்பராதல்.**—ஜில்லாக்கணக்குகளை கவனித்தால் வருஷாவருஷம் மெம்பர்களின் தொகை உறுதியாய் விருத்தியாகிறது. தாலூக்காக்களை கவனித்தால் கடப்பையிலுள்ள விவசாய சம்பந்தமில்லாத தனி சொஸைடி மெம்பர்களில் வியாபாரத்திலும் விருத்தி யடைந்து கொண்டே வர, புள்ளம்பேட்டை தாலூகாவிலுள்ள நந்தலூர் விவசாய சம்பந்தமுள்ள சொஸைடி இரண்டு வழியிலும் சுருங்கி வருகிறது. ராயசோடியில் விருத்தி யடைந்திருக்கிறது. புலிவெண்டலாவிலும் ப்ரொதட்டூரிலும் நிலவரமாயிருக்கிறது. ஒரு சொஸைடியின் சராசரி மெம்பர்களின் இலக்கம் ஜில்லாவாரியாய்ப் பார்த்தால் 63. 1915ளு ஜூன்மீ 30உயில் ராஜதானி சராசரி இலக்கம் 74 ஆக இருந்தது. விவசாயிகளும் அஃதல்லாதவர்களும் மொத்தத் தொகையில் 100-க்கு முறையே 62-ம், 20-ம் ஆகவும் மற்ற 18-ம் பலகலப்புத் தொழிலுள்ளவர்களாகவும் இருக்கிறார்கள். பிராமணர்கள் நூற்றுக்கு 16, இதர இந்துக்கள் 60

கிறிஸ்தவர்கள் 2, மகமதியர்கள் 20, பஞ்சமர்கள் 2. ஆனல் மேற்படி வகுப்பினரின் ஜில்லா ஜனத்துகையோ வென்ருல் முறையே நூற்றுக்கு 2, 69, 3, 11, 12. பஞ்சமர்களைத் தவிர இதர வகுப்பினர்களுக்கு சொஸைடிகளில் போதுமான உரிமை பாத்தியம் இருக்கிறது.

**தோழில் தனம்.**—மொத்தத்திலும், அதின் தனித்தனி பாபத்திலும் உண்மையான தொழில் தனம் உறுதியாய் விருத்தியடைந்திருக்கிறது. சென்ற இரண்டு வருஷங்களில் அடைந்திருக்கிற விருத்தியை மற்றைய வருஷங்களுடன் ஒப்பிடும்பொழுது அது அதிகமாகத்தான் இருக்கிறது. 1914-15ல் தொழில்தனம் சுமார் ரூ.16,000, 1915-16ல் ரூ. 18,000. மிகவும் அதிகமானதுகை (அதாவது ரூ. 85,312) 1915-16ல் ஆகியிருப்பதைக் காணலாம். அதில் பங்குத்தொகை ரூ. 7,288. மெம்பர்களிடமிருந்து வந்த கடன்களும் டிபாஸிட்டுகளும் ரூ. 4,428 மதருஸ் சென்டரல் அர்பன் பாங்கியிலிருந்து ஏடுத்த கடன்கள் ரூ. 57,073, கவர்ன்மெண்டு கடன்கள் ரூ. 240. இவ்வினங்களின் விகிதம் முறையே அடியில் காட்டியபடி யிருக்கிறது; அதாவது 8·54, 19·08, 5·20, 66·90, 0·28.

கடப்பை, ராயசோடி, ப்ரொடத்தூர் இடங்களில் தொழில்தனம் வருஷாவருஷம் விருத்தி யடைந்து கொண்டே வர புல்லம்பேட்டை புலிவெண்டலா-இவைகளில் க்ஷீணித்துக் கொண்டு வருகிறது.

**பங்குமூலதனம்.** நந்தலூர் விவசாய சங்கத்தின் ஒரு பங்குக் கிரயம் முதலில் ரூ. 5 ஆக உயர்த்தப்பட்டது. ஆனல் அது அமுலுக்கு கொண்டு வரப்படவில்லை. சொஸைடிதானகவே முறிவடைந்து கொண்டிருக்கிறது. கடப்பை விவசாயமில்லாத சொஸைடியில் ஒரு பங்கின் கிரயம் ரூ. 10 அங்கீகரிக்கப்பட்டவுடன் பங்குவீதாசாரம் கொடுக்கலாம். பாக்கித் துகையை இரண்டு மாதத்திற்கொருமுறை 8 அணு வீதம் கொடுக்கலாம். பாக்கியிருக்கும் சொஸைடிகள் 23-ல், 6 சொஸைடிகள் 1915-16ல் ஆரம்பிக்கப்பட்டன; அவைகளிலெல்லாம் பங்கு ஒன்றுக்குக் கிரயம் ரூ. 10; வருஷம் ஒன்றுக்கு ஒரு ரூபாய் வீதம் கொடுக்கலாம். மற்றைய 17 சொஸைடிகளில் முதலில் ஏற்பட்டபங்குக் கிரயம் ரூ. 1. 1915-16ல் இவைகளுள் 10 சொஸைடிகளில் இந்த வருஷத்தில் பங்குக் கிரயம் உயர்த்தப்படும்.

**க்ஷேமநிதி.**—1914—15.ம் வருஷக் கடைசிவரையில் சேர்ந்த க்ஷேமநிதி ரூ. 5346; சேர்ந்திருக்கும் தொழில் தனத்துடன் ஒப்பிடும் போது க்ஷேமநிதி 100க்கு 6.26 வீதம் கணக்காகிறது. இந்ததுகையில் ரூ 3545 தான் மதருஸ் சென்டரல் அர்பன் பாங்கியில் போட்டு வைக்கப்பட்டிருக்கிறது. ரூ 1801 அல்லது சுமார்மூன்றிலொருபங்கு துகை பாங்கிக்கு அனுப்ப வேண்டியதாயிருக்கிறது. சென்ற இரண்டு மூன்று வருஷங்களாக 9 சொஸைடிகள் பாங்கிக்கு பணம் அனுப்பாமலிருக்கின்றன.



இச்சொஸைடிகள் இதர விஷயங்களில்கூட கெடுதலாகத்தான் இருக்கின்றன. அவைகள் இந்த வருஷம் பிரத்தியேகமாய் கவனிக்கப்படும். 1915-16ல் அவைகளுள் 5 என்னுல் பார்வையிடப்பட்டன.

லாபநிர்த்தாரணம் செய்யும் ஏற்பாடு மாறுபட்ட நிமித்தமாய் 1915—16க்கு கடப்பை விவசாயமில்லாச்சங்கத்தைத்தவிர ஜில்லாவிலுள்ள வேறு ஒரு சொஸைடியும் லாபமடையவில்லை. அந்த வருஷம் லாபத்திலிருந்து க்ஷேமநிதிக்கு ரூ. 68 சேர்க்கப்பட்ட இந்த ஜில்லாவில் அது ஒரு சொஸைடிதான்.

**மெம்பர்களிடமிருந்தும் மற்றவர்களிடமிருந்தும் வந்தகடன்களும் டிபாஸிட்டுத்துகைகளும்,** சேர்ந்து ரூ. 20,711. இத்துகை தொழில் தனத்துடன் ஒப்பிடப்பட்டால் 100க்கு 24·28 ஆகயிருக்கிறது. மேற்படி துகையில் 100க்கு 70 பங்கு கடப்பை விவசாய சொஸைடியாலும் 23 பங்கு ராயசோடிவிவசாய சொஸைடியாலும் கொடுபட்டிருக்கின்றன. மற்றைய 7 பங்குகள் சொஸைடிகளால் கொடுபட்டிருக்கின்றன. அவைகளில் 6 தலைக்கு ரூ. 100க்கு அதிகமாகவும் 3 அதற்குக்குறைவாகவும் கொடுத்திருக்கின்றன.

**மதராஸ் சென்ட்ரல் அர்பன் பாங்கியிலிருந்து வாங்கினகடன் துகைகள்** 1915 ஜூன் மீ 30 தேதியில் ரூ. 53,095 ஆகயிருந்தது, பிரஸ்தாப வருஷத்தில் ரூ. 10,100 வாங்கி அதில் ரூ. 6122 திருப்பிக்கொடுக்கப்படவே 30-6-1916ல் மிகுதிக்கடன்தொகை ரூ. 57,073. புதிதாக ஆரம்பித்த சொஸைடிகளால் பெற்றுக் கொண்ட கடன்துகை ரூ. 4700-த் தவிர்த்து இந்தவருஷத்தில் லேவாதேவி அதிகம் ஏற்படவில்லை.

கடப்பை விவசாய மில்லாச் சொஸைடியானது மதருஸ் சென்ட்ரல் அர்பன்பாங்கியிலிருந்து யாதொரு கடனும் வாங்காமல் நடை பெறுகிறது.

கவர்ன்மெண்டாரிடமிருந்து கடன்பெற்றது நந்தலூர் சொஸைடி ஒன்றுதான். 1905-06ல் ரூ. 1200 வாங்கியிருந்ததில் ரூ. 240 இப்பொழுது நிலுவையாயிருக்கிறது.

**மெம்பர்களுக்குக் கடன் கோடுத்தல்.** முன்காட்டினபடி நந்தலூர் சொஸைடி கொடுத்திருக்கும் கடன்களின் சங்கியையும் துகையையும் கவனித்தால் அதன் வியாபாரம் முறிவடைந்து கொண்டிருக்கிறதென்று தெரிகிறது. கடப்பை விவசாயமில்லாத சொஸைடியும் ப்ரொதட்டூரிலுள்ள இரண்டு கிறிஸ்துவசொஸைடிகளும் விருத்தியடைந்து கொண்டுவருகின்றன. ராயசோடிலும் புலிவெண்டலாவிலுமுள்ள

சொஸைடிகள் ஏறக்குறைய முன் இருந்த ஸ்திதியிலேயே இருக்கின்றன. 1914-15ம் வருஷத்தில் வருஷவாரியில் முன் நடந்தவேலைவாதேவிகளைக் கணக்கிட்டுப்பார்த்து 1915-16ம் வருஷத்திய இனவகை இலக்கங்களோடு ஒத்துப்பார்த்தபொழுது 1915-16ல் ரூ. 2,3928 பொருமான 285 கடன்கள் கொடுபட்டிருப்பதையும் முந்திய வருஷங்களின் சராசரி கணக்குப்படி வருஷம் ஒன்றுக்கு ரூ. 32,685 பொருமான 354 கடன்கள் கொடுபட்டிருந்ததையும் பார்க்கலாம். 100க்கு மேற்படாத கடன்களின் எண்ணிக்கை 100க்கு 49 லிருந்து 46 ஆக குறைந்திருக்கிறது. ஜாமீன் பேரில் கொடுத்தகடன்களும் 100க்கு 79 லிருந்து 62 ஆக குறைந்திருக்கின்றன. இவைகளுக்கு ஈடாக ரூ. 100க்கு மேற்பட்ட கடன்களும் அடமானக் கடன்களும் அதிகரித்திருக்கின்றன. முந்திய கடன்களைத் தீர்ப்பதற்காக வாங்கின கடன்கள் 100க்கு 37 லிருந்து 41 ஆக விருத்தியடைந்திருக்கிறதெனச் சொல்லலாம்; கிருஷி விஷயங்களில் வாங்கிய கடன்களோ 100க்கு 55 லிருந்து 47 ஆக குறைந்திருக்கின்றன; கிருஷியல்லாத விஷயங்களுக்காக கொடுத்த கடன்கள் 100க்கு 8 லிருந்து 12 ஆக அதிகரித்திருக்கின்றன. ரூ. 100க்கு மேற்பட்ட கடன்களையும் அடமானக் கடன்களையுமே அதிகமாகவிரும்புதல் இதர ஜில்லாக்களைப்போல் இவ்விடத்திலும் தெளிவாய்த்தெரிகிறது. மேலும் பழைய கடன்களைத் தீர்ப்பதாற்காக விசேஷமாய் புதிய கடன்கள் வாங்குதலும் நன்றாய் விளங்குகின்றன.

**முதலையும் வட்டியையும் சொஸைடிகள் திருப்பிக்கொடுக்காமலிருத்தல்**-1916 ஜூன் 30உ யோடு முடிவாகிற மூன்று வருஷங்களில் கேட்டும் கொடுக்காத கடன் பாக்கிகள் 1913-14, 1914-15, 1915-16ல், முறையே 100க்கு 66·58, 42·53, 31·92 ஆக இருந்தன. ராஜதானியின் மேற்படி சராசரி முதல் இரண்டு வருஷங்களுக்கு மாத்திரம் முறையே 19ம், 9-8 ஆகும். இவ்வாறே வட்டி பாக்கிகளும் 100க்கு 12·25, 31·18, 10·38 ஆகும். இவ்வினத்தில் முதல் இரண்டு வருஷங்களுக்கு ராஜதானி சராசரி 6·1-ம், 12·2-ம் ஆக இருக்கின்றன. தற்காலத்திய பாக்கியின் நிலைவரம் அதிருப்திகரமாயிருந்த போதிலும் இம்மூன்று வருஷங்களில் உண்மையான முன்னேற்றமிருந்திருக்கிறது. எப்படியென்றால்; முதலின் துகை 1913—14ல் 66·58 லிருந்து 1915—16-ல் 32·92 ஆகவும், வட்டியில் 12·25 லிருந்து 10·38 ஆகவும் குறைந்திருக்கின்றன.

தாலூக்காக்களாக கவனித்தால் 1915—16ல் கடப்பை, புலிவெண்டலா ப்ரொதட்டூர் இவைகள் முதலிலாவது வட்டியிலாவது யாதொரு பாக்கியும் வைத்துக்கொள்ளவில்லை. ராயசோடி 100க்கு 56·67 முதலிலும் 14·5 வட்டியிலும், நந்தலூர் 100க்கு 71·18 முதலிலும் 1·38 வட்டியிலும் பாக்கி வைத்திருப்பதை கவனிக்கலாம்:



**சொஸைடிகளுக்கு மெம்பர்களால் வரவேண்டிய நிலுவைகள்.**— மிகவும் விருத்தியடைகின்றன. இந்நிலுவைகள் மிக்க அதிகமாயிருந்தன, 1914-15 வருஷத்தில் முதலிலும் வட்டியிலும் காலம் கடந்த துகைகள் மொத்த நிலுவைகளில் முறையே 100க்கு 47·8 ஆகவும் 64·4 ஆகவும் இருந்தன. 1916 ஜூன் 30உ யோடு முடிவடைகிற வருஷத்தில் கொஞ்சம் சீர்திருத்தம் காட்டப்பட்டது. முதலில் 100க்கு 47·2 ஆகவும், வட்டியில் 100க்கு 52·3 ஆகவும் குறைந்தன. முதலிலும் வட்டியிலும் நிலுவை பாக்கி கடப்பை சொஸைடியில் தான் மிகவும் கொஞ்சம். முறையே 100க்கு 1·73 ஆகவும் 0·93 ஆகவும் இருக்கின்றன. மேற்படி விஷயத்தில் அதிக நிலுவை வைத்திருப்பது நந்தலூர் சொஸைடியே. முதலிலும் வட்டியிலும் முறையே 100க்கு 67·51-ம், 70·36-ம் ஆக இருக்கிறது. புலிவெண்டலா சொஸைடிகளின் இலக்கம் 100க்கு 16·29ம், 13·08ம், ராயசோடி சொஸைடிகளில் 100க்கு, 52·32ம், 57·76ம் ப்ரொதட்டூர் சொஸைடிகளில் 100க்கு 42·10ம், 66·66ம் யிருக்கின்றன.

அடிக்கடியும் மிகக்கவனமாகவும் மேற்பார்வை செய்யப்பட வேண்டியது அத்தியாவசியமாயிருக்கிறது. இந்த ஜில்லா இன்ஸ்பெக்டர் பார்வையில் அனந்தபூர் ஜில்லாவைச்சேர்ந்த கதிரி தாலூகா கூட இருக்கிறது. அவருக்குள் இருக்கும் சொஸைடிகளின் துகை 42. அவ்வளவு விரிவான இடத்தையும் அவ்வளவு அதிக சொஸைடிகளையும் அவைகளின் நிலைமைக்குத்தக்கபடி போதுமான கவனத்துடன் ஒரு இன்ஸ்பெக்டர் பார்க்கமுடியாது. இதற்குப்பரிகாரம் என்னவென்றால், சூபர்வைசிங் யூனியன்களை ஏற்படுத்தி சிப்பந்திகளை அதிகப்படுத்தலே; அம்மாதிரி செய்வதற்கு வேண்டிய ஏற்பாடு இவ்வருஷம் எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரியாதுகளும் தீர்ப்புகளும் :—நந்தலூர் டிஸ்திரிகட் முனிசிப் கோர்டில் நந்தலூர் சொஸைடி மாத்திரம் சில பிரியாது தாகல் செய்தது. 1915-16ல் 5 பிரியாதுகள் தாகல் செய்து 6 தீர்ப்புகள் பெற்றிருக்கின்றன. இவையெல்லாம் ராயசோடி சொஸைடியாலேயே. 1916 ஜூன் 30உயில் 11 டிக்ரிகள் நிறைவேற்றுவதற்கு இருந்தன. அவற்றுள் ராயசோடி சொஸைடியினது 8, புல்லம் பேட்டையினது 3; சொஸைடிகளுக்கே பொதுவாய் கோர்டு விவகாரமென்றால் அறுவறுப்பு; ஆனால் கடன்களைத் திருப்பிக்கொடுக்கும் எண்ணம் ஒவ்வொருவருக்கும் தனக்காகவே ஏற்படாவிட்டால் கோர்டுவிவகாரம் தற்போதைவிட அதிகமாய் எடுத்துக்கொள்ளப்படவேண்டியது அவசியமே.

மீட்டிங்குகள் :—நந்தலூரைத்தவிர ஜில்லா (முழுவதுமுள்ள சொஸைடிகள் நடத்தின மீட்டிங்கின் சங்கியை, பஞ்சாயத்து மீட்டிங்கி, பொது மீட்டிங்கி) எல்லாம் திருப்திகரமாகயிருந்தன. நந்தலூர் ஒன்றுதான் இன்னொருதடவை இந்த விஷயத்தில் கண்டிக்கப்படவேண்டியதாயிருந்தது. 1915-16 வருஷம் முடிய அது ஒரு பஞ்சாயத்து மீட்டிங்கும் ஒரு ஜனரல் மீட்டிங்கும் மாத்திரம் தான் நடைபெற்றது. 1915-16ம் வருஷம் முடிவதற்குமுன் ஒரு ஜனரல் மீட்டிங்கிலாவது 1914-15ம் வருஷத்தின் தணிக்கை உத்திரவு கூட வைக்கப்படவில்லை.

**மானேஜ்மெண்டு சிலவு.**—1915-16ல் விவசாய சொஸைடி ஒன்றுக்கு முந்திய வருஷங்களைப் போல் குறைந்த சிலவாயில்லாமல் இந்த வருஷச் சம்பளச்சிலவு ரூ. 35க்கு அதிகரித்திருக்கிறது. விவசாயமல்லாத கடப்பை சொஸைடிக்கோ ரூ. 223 சிலவாயிருக்கிறது. செகிரிடெரிகளுக்கு தாராளமாய் சம்பளம் கொடுத்தால் தான் தங்கள் சொஸைடிகளில் விசேஷக் கருத்துடன் வேலை செய்வார்கள் என்று எனக்குத்தோன்றுகிறது. நடைபெறும் வருஷத்தில் அம்மாதிரி செய்ய நான் எத்தனிக்கிறேன்.

**முறிவடைதல்.**—இதுவரையில் 6 சொஸைடிகள் முறிவடைந்தன. 1913-14ல் ஒன்றும் (நெ. 901, எட்டுலெய்யகாரி கொட்டப்பள்ளி) 1914-15ல் இரண்டும் (நெ. 803 திம்மசமுத்திரம், நெ. 873, பிடிநெம்செர்லா). 1915-16ல் மூன்றும் (நெ. 73ு பெட்டிவேடு. 740 ஹஸனபுரம், 787 ஒபட்டிநெனிகல்வா) ஆக 6. 1913-14லும், 1914-15லும் முறிவடைந்த மூன்று சொஸைடிகளின் மூடும் அலுவல்கள் சட்டக்கிரமப்படி நிறைவேறின. பெட்டி நெனிகல்வாவினதும் இதர இரண்டு சொஸைடிகளின் மூடும் வேலைகளும் நடை பெற்றுக்கொண்டு வருகின்றன. இவைகளை முறிக்கும் வேலைகளுக்கு இன்ஸ்பெக்டர் நியமிக்கப்பட்டிருக்கிறார் :—

**கான்பரன்ஸுகள்.**—1914-15வரையில் இந்த ஜில்லாவில் யாதொரு கான்பரன்சும் நடைபெறவில்லை. 1915-16ல் ராயசோடிதாலூகாவில் 4 வெவ்வேறு மத்திய ஸ்தலங்களில் நான்கு ஸ்தல கான்பரன்சுகள் நடைபெற்றன. அவைகளுக்கு 14 சொஸைடிகள் அழைக்கப்பட்டன. அவைகளுள் 9 சொஸைடிகள் ஒப்புக்கொண்டு 145 மெம்பர்கள் ஆஜரானார்கள். அவர்களுக்கு கோவாபரேஷனின் நோக்கங்களையும் சொஸைடிகளை சரிவர நிர்வகிக்கும் வழிகளையும் பற்றி உபந்நியாசங்கள் நடந்தன.

**கட்டிடங்கள்.**—1910-11ல் நந்தலூர் விவசாய பாங்கி ஒரு கட்டிடத்தை ரூ. 400க்கு வாங்கி அதன் சீர்திருத்தங்களுக்காக 1912-13ல் ரூ. 289—12—6 சிலவழித்திருக்கிறது. அதின் தற்போதைய விலை



ரூ. 420 ஆக மதிப்பிடப்படுகிறது. கட்டிடம் மிகவும் ஜீர்ணஸ்திதியில் இருக்கிறது.

**புதியமாடல் பைலாக்களை அப்படியே அனுஷ்டித்தல்.**—1915-16ல் 10 சொஸைடிகள் அவ்விதம் அனுஷ்டித்தன. இந்த வருஷம் ஆரம்பித்த 6 சொஸைடிகளும் சமீப மாடல் பைலாக்களையே அனுஷ்டித்தன. கடப்பையிலுள்ள விவசாயமில்லாத சொஸைடியையும், விருத்திக்கு வரும் நோக்கமே இல்லைபோலிருக்கிற நந்தலூர் விவசாய சொஸைடியையும் தவிர இன்னும் 7 விவசாய சொஸைடிகள் சமீப மாடல் பைலாக்களை அனுஷ்டிப்பதற்கு இருக்கின்றன. இந்த வருஷத்தில் அவைகள் அம்மாதிரி அனுஷ்டிக்கும்படி செய்யலாம்.

**மேற்பார்வை ஏற்பாடு :**—புல்லம்பேட்டை, ப்ரொதட்டூர், கடப்பை தாலூக்காக்களில் 4 சொஸைடிகள் ஒன்றுக்கொன்று வெகு தூரத்திலும் ஜில்லாவிலுள்ள இதர சொஸைடிகளினின்றும் விலகியும் சிதறிக்கிடக்கின்றன. ராயசோடியிலுள்ள 18 சொஸைடிகள் ஒரு ஒடுக்கமான விஸ்தீர்ணத்திற்குள் அமையவில்லை. ஆனால் அவைகள் ஒரு ரெவின்யூ, தாலூக்காவுக்குள் இருக்கின்றன. புலிவெண்டலா தாலூகாவிலுள்ள மூன்று சொஸைடிகள் ராயசோடியிலுள்ள சில சொஸைடிகளினின்றும் கொஞ்சம் தூலைவில் இருக்கின்றன. ராயசோடி, புலிவெண்டலா தாலூகாக்களில் 21 சொஸைடிகளைக் கண்காணிக்க ஒரு சூபர்வைசிங் யூனியன் ஏற்படும். இந்த தாலூகாக்கள் மேற்பார்வைக்காக முறையே ரூ. 362-ம் ரூ. 46-ம் கொடுக்க முடியும்.

இந்த சொஸைடிகள் மிகக்குறைந்த ஸ்திதியிலிருக்கின்றன. அடிக்கடியும் இடைவிடாமலும் மேற்பார்வை யில்லாவிட்டால் விருத்தியடைவதற்கு ஏதுவில்லை. ஒரு சூபர்வைசிங் யூனியன் ஏற்படுத்தி அதனால் ஏற்படும் சூபர்வைசரின் உதவியினால் இவ் வருஷத்தில் தற்கால ஸ்திதியைச் சீர்படுத்த வேண்டிய பிரயத்தனங்கள் செய்யப்படும். ராயசோடி விவசாய சொஸைடிக்குப் பிரசிடெண்டாயிருக்கிற ம-ா-ா-ஸ்ரீ பள்ளி சேஷாசார்லுகாரு மிக சாமர்த்தியசாலி. அவர் தன் சொஸைடியின் விருத்திக்காக எவ்வளவோ சிரமம் எடுத்துக்கொண்டு பக்கத்து சொஸைடிகளின் அபிவிருத்திக்காகவும் சிபார்சு செய்து கொண்டு உழைத்து வருகிறார். பிரஸ்தாபிக்கும் யூனியனுக்கு அவரை பிரசிடெண்டாக வைத்துக் கொள்வதினால் வர்த்தமான வருஷத்தில் சிலாகிக்கத்தகுந்த சில சீர்திருத்தங்கள் ஏற்படும் என்று நினைக்க இடமுண்டு.

# தென் கன்னடத்தில் ஏற்பட்ட முதல் இந்திய கோவாப்ரேடிவ் அச்சியந்திரசாலை.

கோவாப்ரேடிவ் மார்க்கம் இதுவரையில் பிரவேசித்திருக்காத புதுமையான வழியில் தென்கன்னடம் ஜில்லா ஒரு ஏற்பாடு செய்திருக்கிறது அதாவது கோவாப்ரேடிவ் மேற்கோள்களை அனுசரித்து ஒரு அச்சியந்திரசாலை ஏற்படுத்தியதே. சென்னை கோவாப்ரேடிவ் சொஸைடிகளுக்கு ரிஜிஸ்த்தராராக-விருந்த திவான் பகதூர் எல். டி. ஸ்வாமிக்கண்ணு பிள்ளையவர்களின் தயவினாலும் காலிகட் அஸிஸ்டெண்டு ரிஜிஸ்டராராகிய மிஸ்டர் பி. கே. குன்ஹு-ன்னிமீனன் அவர்களின் தயவினாலும் 1917 ஜூன் மாதம் 16ம்தேதியில் கோவாப்ரேடிவ் சொஸைடிகளின் ஆக்டுப்படி ரிஜிஸ்தர் செய்யப்பட்டு காலிகட்டு செக்ஷன் முக்கிய இன்ஸ்பெக்டர், மிஸ்டர் சி. என். கிருஷ்ணசாமி அய்யரவர்களால் 1917 ஆகஸ்டு மீ 20-ம் தேதியில் உடுப்பியில் இதின் வேலை ஆரம்பிக்கப்பட்டது. உடுப்பியில் சதானந்தா அச்சுயந்திரசாலை என்ற பெயருடன் ஏற்கனவே வேலைசெய்து கொண்டிருந்த ஒரு அச்சியந்திர சாலையின் மெஷின்களையும் சாமான்களையும் வாங்கி விடுவதாய்த் தீர்மானித்து ஆரம்பித்த தினத்திலேயே சுமார் ரூ. 4,000 பொருமான சாமான்களையும் மெஷின்களையும் வாங்கி விட்டார்கள். இந்த சொஸைடியின் பைலாக்கள், ஏழைகளும் சொஸைடி சிப்பந்திகளும் கூட சௌகரியமாய் பங்கு எடுத்துக்கொள்ளும் பொருட்டு அதற்காக்‌வென்றே பங்கு ஒன்றுக்கு ரூ. 5 வீதம் ஒருவகுப்புப் பங்குகள் சாதாரணவகுப்புப் பங்குகளோடு (அதாவது பங்கு ஒன்றுக்கு ரூ. 50) சேர்க்கப்பட இடங்கொடுக்கும்படி அமைக்கப் பட்டிருக்கின்றன. என்றாலும், இவ்விருவகுப்புப் பங்குக்காரர்களுக்கும் பாத்திய உரிமையிலும் சுதந்திரத்திலும் யாதொருவித்தியாசமுமில்லை. தனி நபர்கள் சேருவதோடு இதர கோவாப்ரேடிவ் சொஸைடிகளும் ரிஜிஸ்தரான கம்பெனிகளும்கூட பங்குகள் எடுத்துக்கொண்டு மெம்பர்களாவதற்கு பைலாக்கள் இடங்கொடுக்கின்றன. ரிஜிஸ்தரான சொடிகளைச் சேர்க்க அட்வொகேட் ஜனரலே சம்மதித்து அபிப்பிராயம் கொடுத்ததாகத் தெரிகிறது. ஆரம்பித்த தினத்திலேயே 23 தனி மெம்பர்களும், 2 கோவாப்ரேடிவ் சொஸைடியார்களும் ப்ரிண்டிங் சொஸைடியில் சேர்ந்து மொத்தம் 64 பங்குகள் எடுத்துக்கொண்டார்கள். சதானந்தா ஓர்க்ஸிலுள்ள சிப்பந்திகளை யெல்லாம் சேர்த்து அவர்களுக்காக அச்சாபீஸின் சொந்தக்காரர்கள் மாறின விஷயத்தையும் அவர்களுக்கு புதிய எஜமானராய் வந்திருப்பது கோவாப்ரேடிவ் சொஸைடி யாராயிருப்பதினாலாகும் நன்மையையும் பற்றி ஒரு உபந்நியாசம் நடைபெற்றது. உபந்நியாசம்



முடியும் வரையில் விசேஷ உற்சாகமே விளங்கிற்று. இந்த சொஸைடி "சதானந்தா கோவாப்ரேடிவ் ப்ரிண்டிங் ஓர்க்ஸ், லிமிடெட்" என்ற பெயருடன் வேலைசெய்கிறது. இந்தியா முழுவதுக்கும் இது தான் முதல் கோவாப்ரேடிவ் அச்சுசாலையா யிருப்பதோடு நாளது வரையில் இம்மாதிரி சொஸைடியே எங்குமில்லாமல் தனியாகவும் இருக்கிறது.

பலமான டைரக்டர்கள் ஏற்படுத்தப் பட்டிருக்கிறார்கள். பிரசிடெண்டாகிய மிஸ்டர் என். ராஜகோபால கிருஷ்ணராவ் கன்னட பாஷையில் நன்றாய்ப் பழகிய பத்திராதிபர். மேலும் சதானந்தா அச்சியந்திரசாலையில் வெகுகாலமாய் சம்பந்தப்பட்டவர். மானேஜராயிருக்கிறவருக்கு அச்சுவேலைகளின் நுணுக்கங்களெல்லாம் நன்றாய்த் தெரியும். பழைய சதானந்தா பிரஸ்ஸின் வேலைத் திறத்திற்கு இவருடைய சாமர்த்தியம் தான் காரணம்.

மேற்காட்டிய காரணங்களினால் இந்தப் புதிய பிரஸ்ஸை ஆதரிக்க இந்தியாவில் உள்ள எல்லா கோவாப்ரேடர்களும் தவராமல் வருவார்களென்றும் அதனால் இதற்கு ஆரம்பம் முதல் ஒப்புயர் வில்லாத ஜெயமே உண்டாகும் என்றும் நம்பலாம்.

ஏற்கனவே வேலைகள் வெகுவிரைவாக வந்து விழுந்து கொண்டிருக்கின்றன. சீக்கிரத்தில் மூல தனத்தை விருத்திசெய்து அதிக மெஷின்களும், சாமான்களும் வாங்கவேண்டியது மிக்க அவசியமாக நேரிடும். ஏற்கனவே 5 பாஷைகளில் அச்சுவேலை நடந்து கொண்டிருக்கிறது (இங்கிலீஷ், கன்னடம், தேவநாகரம், மராட்டி, ஹிந்தி). மலையாளம் கூட சேர்க்கப்படுவதாக உத்தேசம். தென்கன்னடத்திலுள்ள எல்லா சொஸைடிகளும் உபயோகிக்கிற ரிஜிஸ்தர்கள், பாரம்கள் இவைகளை யெல்லாம் தயாரித்து சப்ளைசெய்யும் வேலையை இந்த அச்சாபீஸ் சமீபத்தில் எடுத்துக் கொள்ளும்; மலையாளம் அச்சுவேலை ஏற்பட்ட உடனே ரிஜிஸ்தர்களும் பாரங்களும் பக்கத்திலுள்ள மலையாளம் ஜில்லாவின் சொஸைடிகளுக்குக்கூட சப்ளைசெய்ய ஏற்றுகொள்வது சாத்தியமாகும். இந்த அச்சாபீஸின் பலவித முயற்சிகளில் மதராஸ் ப்ரோவின்ஷியல் கோவாப்ரேடிவ் யூனியனை "சென்னைக் கூட்டுத்தொழில் வர்த்தமானி" என்னும் பத்திரிகை கன்னடபாஷையிலும் வெளியிடலாம் என்பதைப்பற்றி கேட்டுக் கொண்டிருக்கிறோம் என்பதும் ஒன்று. யூனியன், அவ்வாறு செய்யத் தீர்மானித்தால் தென்கன்னடத்தில் சென்டரல் பாங்கி அதை நடத்தும் வேலையை ஒப்புக்கொள்ளும். இந்த சொஸைடியும் அச்சிடுவதற்கு ஜவாப்தாரி ஆகும்.

## கோயமுத்தூர் டிஸ்ட்ரிக்ட் அர்பன் பாங்கி லிமிடெட்

இந்த பாங்கி மெம்பர்களின் வருஷப்பொது மீட்டிங்கு சமீபத்தில் நடை பெற்றது. அப்பொழுது ஜூன்மாதம் 30-ம் தேதியோடு முடிவாகிற பாங்கியின் 12 மாதத்திய ரிபோர்டு அங்கீகரிக்கப்பட்டது. சென்ற வருஷத்திய டைரக்டரின் ரிபோர்ட்டுகளைப் பரிசீலனை செய்த காலத்தில் ரிஜிஸ்ட்ரார் அவர்கள் பாங்கு எல்லாவகையிலும், முன்னேற்றமடைந்திருக்கிறதென்றும் இதற்கு நிர்வாகசபையார் மிகவும் கௌரவிக்கப்படவேண்டுமென்றும் எழுதியிருக்கிறார். சிக்ரிடேரி ம-ள-ள-ஸ்ரீ சி. என். கிருஷ்ணசாமி அய்யரவர்கள் பாங்கியின் வேலை மிகவும் நன்கு மதிக்கும்படும்படியான உபயோகமுள்ள வேலைகளைச் செய்து கொண்டிருக்கிறார். சென்ற ஜூன் மாதக்கடைசியில் 965 பங்குகள் எடுத்துக்கொண்டு 14 ரிஜிஸ்தர் செய்யப்பட்ட சொஸைடிகளைச்சேர்த்து 175 மெம்பர்களிருந்தார்கள்; வருஷக்கடைசியிலிருந்த மூலதனத்துகை ரூ. 77,520, ஜூன் மாதம் 30-ம் தேதியில் மெம்பர்களிடமிருந்து வந்த டிபாஸிட்டுத்துகை ரூ. 7,415; அன்னியர்களிடமிருந்து வந்தது ரூ. 3,12,363; தவிர பாங்கியில் கோவாபரேடிவ் சொஸைடிகளின் ரிசர்வ் பண்டுத்துகை ரூ. 38,300-ம்; குறிப்பிட்ட கால டிபாசிட்டுகள் (Fixed deposits) ரூ. 31,643-ம் இருந்தன.

இந்த வருஷத்தில் பாங்கியார், செங்கற்பட்டு, கிருஷ்ணா முதலிய இடங்களிலுள்ள சென்டரல் பாங்கிகளுக்கு ரூ. 15,200 வரையில் கடன்கள் கொடுத்திருக்கிறார்கள்; ரூ. 15,040 மெம்பர்களுக்குக் கடனாகக்கொடுக்கப்பட்டிருக்கிறது. தாராளமாய் பிக்ஸட், கரண்டு, டிபாஸட்டுகள் வந்து விழுதலும், எதேஷ்டமாகக்கடன்கள் கொடுத்தலுமே பாங்கியின் திருப்திகரமான வேலையைக்காட்டும். டிஸ்திரிகட் பாங்கி லேவாதேவிகள் வைத்திருக்கிற கோயமுத்தூர், மலையாளம், நீலகிரி இந்த மூன்று ஜில்லாக்களிலுள்ள சொஸைடிகளின்துகை 161-லிருந்து 214-க்கு விர்த்தி யடைந்திருக்கிறது. இவ்வதிக எண்ணிக்கையில் மலையாளம் ஜில்லாவில் 23-ம் கோயமுத்தூரில் 20-ஆகவும் இருக்கின்றன.

இந்த வருஷத்தின் நிகரலாபம் ரூ 11,657; சென்றவருஷத்திலோ ரூ. 10,869. இத்துகை அடியில் வருமாறு பங்கிடப்படும். ரிசர்வ்பண்டுக்கு ரூ. 2,914, சிகிரிடேரியின் கௌரவச்சம்பளம் ரூ. 1457, கொடுக்கப்பட்டிருக்கிற பங்குத்துகையில் 100-க்கு 9 வீதம் டிவிடென்டு ஏற்பட்டிருக்கிறது. ம-ள-ள-ஸ்ரீ ராவ் பகதூர் டி. எஸ். பாலகிருஷ்ண அய்யர்வர்கள் பாங்கு வேலைக்காகத்தன் வீட்டின் ஒருபாகத்தில் இடங்கொடுத்ததற்காக அவருக்கு நிர்வாகசபையார் மிகவும் வந்தனமளித்தார்கள். கோவாபரேடிவ் க்ரெடிட் சொசைடிகளுக்கு 6 வருஷகாலமாய் ரிஜிஸ்ட்ராராக இருந்து அக்காலம் முழுதும் பாங்கியின் முன்னேற்றத்தில் இடைவிடாத கவனம் செலுத்திவந்த திவான்பகதூர் எல். டி ஸ்வாமிக்கண்ணு பிள்ளையவர்களுக்கும் போர்டார் வந்தனம் அளித்தார்கள்.



---

## கோயமுத்தூர் அர்பன் பாங்கியும் ஸ்டோரும்.

சென்ற ஜூன்மாதம் 30உ யில் மேற்படி சங்கத்தின் 12வது ஆண்டு நிறைந்தது. இந்த வருஷத்திய டைரக்டரின் ரிபோர்ட்டை கௌரவ காரியதரிசி மிஸ்டர் கே. ஆர். சுப்பராய அய்யரவர்களும், மெம்பர்களின் ஜனரல் மீட்டிங்கில்வைக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது; அதில் பின்வரும் முக்கியமான விஷயங்கள் விளங்குகின்றன.

வருஷக்கடைசித்தேதியில் 371 மெம்பர்களிருந்தார்கள். அவர்கள் பங்கு ஒன்றுக்கு ரூ. 5 வீதமுள்ள ஏ. வகுப்புப் பங்குகள் 371-ம், பங்கு ஒன்றுக்கு ரூ. 25க்குபாத்தியப்பட்ட பி. வகுப்பு பங்குகள் 18 [illegible]-ம். உடைத்தாயிருந்தார்கள். சொஸைடியில் இரண்டு வகைவியாபாரங்கள். நடக்கின்றன.

எல்லாவிதச் சரக்குகளும் வியாபாரம் செய்யும் ஸ்டோர் ஒன்று; மற்றது மெம்பர்கள் எல்லோருக்கும் நல்ல விஷயங்களுக்கு குறைந்த வட்டியில் கடன் கொடுக்கும் பாங்கி வியாபாரம். ஸ்டோர் வியாபாரத்தில் இந்த வருஷம் ரூ. 53,000 பொருமானசரக்குகள் ஹெட்ஆபீசிலும் மூன்றுகிளை ஆபீசிலும் ப்ளேக்கினால் பட்டணமெல்லாம் 3 மாதம் சுத்தமாய் காலியாக்கப்பட்டிருந்தும் விற்பனையாயிருக்கின்றன. ஸ்டோர் வியாபாரத்தில் இந்த வருஷம் ஏற்பட்ட லாபம் முந்திய வருஷங்களெல்லாவற்றைக் காட்டிலும் அதிகம். சொஸைடியின் புத்தகங்களின்படி 1917 ஜூன்மாதம் 36 தேதியில் டிபாஸிட்டுத்துகை ரூ. 12,741; 130 கடன்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன; சென்றவருஷத்தில் கொடுத்திருந்த கடன்களின் மொத்தம் 113. இவ்வருஷத்தின் நிகரலாபம் ரூ. 1700; இத்துகை பைலாக்களின்படி ரிஜிஸ்ட்ராரவர்களின் சிபார்சுப்பிரகாரம் விநியோகிக்கப்படும்.

---

## கூட்டுறவும் சன்மார்க்கமும் *

உங்கள் அன்பின் பேரில் எனக்குள்ள ஒரே பாத்தியதை யாதெனில் சிலமாதங் களுக்குமுன் மிஸ்டர் இயூபாங்கி கூட்டுறவின் அம்ஸங்களை இயந்திரங்களில் வேலைசெய்யும் கூலியாட்களுக்கு போதிக்க ஒரு மீடிங்கு கூட்டினார். அந்த மீடிங்குக்கு அவருடன் நானும் போயிருந்தேன். அந்தக் கூலியாட்கள் வசித்துக் கொண்டிருந்த இடமோ எவ்வளவு கேவலமாய் இருக்கமுடியுமோ அவ்வளவு கெட்ட ஸ்திதிலியிருந்தது. சமீபத்தில் அங்கு பெய்திருந்த மழையால் இடம் இன்னும் கேவல ஸ்திதிக்கு வந்துவிட்டது. கூட்டுறவு முயற்சியின் வளர்ச்சியை தன் சொந்த விஷயமாகவே பாவித்துக் கொண்டிருக்கும் மிஸ்டர் இயூபாங்கியின் ஊக்கம் இக்காரியத்தில் இல்லாதிருக்கும் பட்சத்தில் இக்காரியத்தில் நான் தலையிட்டிருக்க பின்னடைந் திருப்பேனென்ற உண்மையை ஸங்கோஜமின்றி ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால் நாங்கள் இருவரும் ஒருபழையவும், அநேகமாய் ஒடிந்தும் போயிருந்த பெஞ்சியின்பேரில் உட்காரவைக்கப்பட்டோம் எங்களைச் சுற்றிலும் ஆண்களும், பெண்களும், குழந்தைகளும் உட்கார்ந்திருந்தார்கள். அக்கூட்டத்தில் ஒருவனுடன் மிஸ்டர் இயூபாங்க் சம்பாஷணை செய்ய ஆரம்பித்தார். அவன் அக்கூட்டத்திலுள்ளவர்களில் ஒன்றும் தெரியாதவனென்று சொல்லுவதற் கில்லாதபடிக்கு அவன் முகத்தில் ஜாடைகள் இருந்தன. "அகத்தினழகு முகத்தில் தெரியும்" என்பதல்லவோ நம்மிந்திய தேசத்தின் பழமொழி என்றல்லவோதெய்வப் புலமை திருவள்ளவ நாயினார் கூறியுள்ளார். அவனிடமும் மற்றவர்களிடமும் மிஸ்டர் இயூபாங்க் குஜராத்தி பாஷையில் பேசி முடிந்தவுடன் நானும் அந்த ஜனங்களுக்கு கொஞ்சம் சொல்லவேண்டுமென வேண்டினர். முதல் முதலில் மிஸ்டர் இயூபாங்கு பேசிய மனிதனுக்கு கூட்டுறவு முறையில் நம்பிக்கையில்லாததாக சந்தேகிக்கும்படி தெரியவந்தது. ஆனதுபற்றி கூட்டுறவால் விளையும் சன்மார்க்கதைக்குறித்து பேசவேண்டுமென இயற்கையாகவே எனக்குத் தோன்றிற்று. நான் அச்சமையம் பேசிய மாதிரியை மிஸ்டர் இயூபாங்க் பிரியப்பட்டதாக நான் அறியலானேன். ஆனதுபற்றியே தான் கூட்டுறவால் விளையக்கூடிய சன்மார்க்கங்களைக்குறித்து சில நிமிஷங்களுக்கு பேசி உங்களது பொறுமையை தொந்திரவுசெய்ய வேண்டுமென்று மிஸ்டர் இயூபாங்கு என்னை வரவழைத்தாரென்று நான் நம்புகிறேன்.

* 17-9-8 1917-ல் நடந்த பம்பாய் மாகாண கோவாப்ரேடிவ் கான்பிரன்ஸுக்கு மிஸ்டர் M. K. கார்தியவர்களால் அனுப்பப்பட்ட வியாசத்தின் சுருக்கம்



கூட்டுறவில் பிரத்தியக்ஷமாய் வேலை நடத்தும் தொழிலைக் குறித்து எனக்கு கொஞ்சமேனும் தெரியுமென்று சொல்லுவதற்கில்லை. கூட்டுறவு தன்னுடையதே யென்று சொல்லும்படி அம்முறையில் அவ்வளவு தூரம் என் சகோதரர் தேவதார் பயின்றுளார். அவர் செய்யும் ஒவ்வொரு விஷயத்திலும் இயற்கையாகவே எனக்கும் பிரியம் ஏற்படுவதன்றி அவா எடுத்துக் கொண்டிருக்கும் விஷயத்தில் ஏதோ நன்மையுண்டென்றும் அவ்விஷயத்தை பயிலுவதில் கஷ்டம் கொஞ்சம் அதிகமாகவே யிருக்குமென்றும் என்னை நினைக்கச் செய்கிறது. கூட்டுறவு சம்பந்தமான சில புத்தகங்களை மிஸ்டர் இயுபாங்க் எனக்கு அனுப்பி வைத்தார். சம்பரானில் கூட்டுறவு முயற்சியின் பயனை கவனிக்கும் பாக்கியம் எனக்கு கிடைத்தது மிகவும் அருமையான தென்றே சொல்ல வேண்டும்.

மிஸ்டர் இயூபாங்கின் முக்கிய கொள்கைகள் பத்தையும் பார்த்திருக்கிறேன். அவைகள் பத்து கற்பனைகள் போன்றிருக்கின்றன. பேஹார் மாகாணத்து மிஸ்டர் கால்லின்ஸுடைய பன்னிரண்டு கொள்கைகளையும் பார்த்திருக்கிறேன். அவைகள் முந்தியுள்ள பன்னிரண்டு சட்டங்களின் நியாயத்தை ஞாபகப்படுத்துகின்றன. விவசாய பாங்குகள் என்று சொல்லப்படுகிற மாதிரி பாங்குகள் சம்பரானில் இருக்கின்றன. கூட்டுறவு முயற்சியின் வளர்ச்சியையும் விர்த்தியையும் காட்டுவதற்கு அப்பாங்குகள் திருஷ்டாந்தமெனில் கூட்டுறவு முயற்சி முயன்றும் துறையில் இறங்க வேண்டிய அதைரியத்தை அவைகள் கொடுக்கின்றன. ஆனாலோ அதே இடத்தில் அதே மாதிரியில் மிஸ்டர் ஹிட்ஜ் என்னும் கிறிஸ்தவ பாதிரி யொருவர் வேலை செய்து வருகிறார். அவர் யார் யாருடன் கலந்து வேலை செய்கிறாரோ அவர்களுக்கு கூட்டுறவைப்பற்றி நம்பிக்கையும், உறுதியும் ஏற்படுகிறது. மிஸ்டர் ஹாட்ஜ் கூட்டுறவில் மிக்க பிரியங் கொண்டவர். தன்னுடைய ஊக்கத்தாலும் சிரத்தையாலும் விளையும் பயன்களையும், நன்மைகளையுங் கூட கூட்டுறவு முயற்சியின் நடவடிக்கையால் நேர்ந்தவை யென்று கூறும் புண்ய சீலர். இவ்விரண்டு விஷயங்களையும் கவனித்த எனக்கு அவரவர்கள் எடுத்துக் கொண்ட சிரத்தையும் ஊக்கமுமே ஒன்று பலனடைந்ததற்கும் இன்னொன்று வீணானதற்கும் காரணங்களென்று தோன்றின.

கூட்டுறவு முறையில் மட்டுமல்ல, எவற்றிலுமே நான் அவாவுடையவன். சென்ற இருபத்தைந்து வருஷகாலமாய் என்னுடைய அநுபவமும், பரீட்சார்த்தமும் மிகவும் ஜாக்கிரதையோடும், நிதானத்தோடும் காரியத்தை கையாளும் அவாவைக் கற்பித்துள்ளது. ஒரு காரியத்தில் கண்ணுயிருப்பவர்கள் தனக்குத் தெரியாமலே அக்காரியத்தைக் குறித்து

அளவுக்கு மிஞ்சியே புகழுகிறார்கள். சிற்சில சமையங்களில் அக்காரியங்களிலேயேயுள்ள குறைகளையே நன்மைகளென பாராட்டி பெருமையடைகிறார்கள். இவ்வளவெல்லாம் முன் ஜாக்கிரதைகளோடு இருக்கும் நான் கூட அஹமதாபாத்தில் நான் நடத்திவரும் சங்கத்தை உலகத்தின் கண்ணுள்ளவற்றில் சிலாக்கியமென கூறுகின்றேன். அவ்விஷயமொன்றே எனக்கு ஊக்கத்தைக் கொடுக்கின்றது.

ஸர்-டானியல் ஹாமில்டனுக்கு கூட்டுறவென்பதே மதமாய்விட்டது. சென்ற ஜனவரிமீ 13௳ ஸ்காட்டிஷ் சர்ச்காலேஜ் மாணவர்களுக்கு கூட்டுறவைப்பற்றி பேசினார். கூட்டுறவின் பயனைக் குறிக்கும்பொருட்டு ஸ்காட்லாந்து தேசம் இருநூறு வருஷங்களுக்கு முன் யென்னிலையில் இருந்ததென்பதைச் சொன்னார். தரித்திரத்தில் மூழ்கியிருந்த அத்தேசம் கூட்டுறவால் முன்னுக்கு வந்ததென்பதை ரூபித்தார். அத்தேசம் முன்னுக்கு வந்ததற்கு இரண்டு சக்திகள் வேலைசெய்தன எனக் கூறினார். ஒன்று ஸ்காட்லாண்டு சர்ச்-மற்றொன்று ஸ்காட்லாண்டின் பாங்குகள் சர்ச் (கோவில்) மனிதர்களை தயார் செய்தது. பாங்குகள் வேண்டிய பண உதவி செய்தன. கடவுளுடைய பயத்தையும் பக்தியையும் கோவில்கள் போதித்தன. இப்போதனையே மதிதனுக்கு நல்லறிவைக்காட்டும். கோவிலைச் சார்ந்த கிராம பள்ளிக்கூடங்களெல்லாம் மாணாக்கர்களுக்கு சன்மார்க்கத்தில் பயில்வைத்தன. கடவுளின்பேரில் நம்பிக்கை வைக்கவும், பக்திகொள்ளவும் மனிதர்கள் கற்பிக்கப்பட்டார்கள். இவ்வித நம்பிக்கையின், ஸ்காட்லாண்டு பாங்கிங்முறை கட்டப்பட்டது.''

ஸ்காட்லாண்டு பாங்கின்முறை இவ்வளவு சித்திபெறுவதற்கு காரணம் குணத்தையும், நடத்தையும் அஸ்திவாரமாக கொண்டுள்ளதே என்று ஸர்-டானியேல் கூறுகின்றார். இவ்விஷயத்தைக் குறித்த மட்டில் அவருடன் நாமும் முற்றும் ஒப்புகிறோம். ஏனெனில் குணமின்றேல் கூட்டுறவில்லை என்பது எல்லோரும் ஒப்புக்கொள்ள வேண்டிய விஷயமே. ஆனால் இன்னும் அதிகம் அவர் கூறுகின்றார். "இந்தியாவின் முன்னேற்றத்தைக்குறித்து நீங்கள் என்ன கனவு காணினும் இவ்விஷயத்தை மட்டும் நீங்கள் மறக்கலாகாது. அஃயாதெனில் இந்தியாவை முன்னுக்கு கொண்டுவரச்செய்து உலகத்தின் கண்ணுள்ள தேசங்களில் இந்தியாவும் தகுந்ததோர் ஸ்தானத்தை வகிக்க வேண்டு வதற்கு அவசியமானதைச் செய்ய ஆங்கிலேய அரசாட்சி இங்கு இருக்கின்றது. இந்தியாவை முன்னுக்கு கொண்டுவர ஹேதுவான ஆயுதம் ஆங்கிலேயர் அர்சாட்சியார் கையிலுள்ளது கூட்டுறவேயாகும்." ஸர் டானியல் அபிப்பிராயத்தில் இந்தியாவில் தற்காலமுள்ள சகல குறைகளையும் தீமைகளையும விலக்க கூட்டுறவு ஒன்றுபோதுமான



தென்றே, கூட்டுறவை விரிவானதாய் குறித்து கவனியுங்கால் ஒரு சார்பில் இது விஷயம் சரியெனவே கூறலாம். ஆனால் கூட்டுறவை வரையறுத்து ஸர்-டானியல் பேசியதைக்கொண்டு கவனிக்கும் போது இஃதெல்லாம் அபிமானியின் அவாவினால் கூறப்படும் அதிகப்புகழ்ச்சியே யென நான் நினைக்க நேருகிறது. அவர் கூறுவதை கவனிக்கலாம் "நாணயமென்பது அஃதாவது நம்பிக்கையும், நன்றியும் வரவர உலகத்தின் கண் அதிகசக்தியை அடைந்துள்ளது; நம்பிக்கையும் நன்றியுமே மலைபோலுள்ள தடைகளையும் விலக்கவல்லன. இவற்றின் மூலமாய்த்தான் இந்தியாவின் வெற்றியும் சமாதானமும் கிடைக்க மார்க்கமுண்டு."

அபிப்பிராயங்கள் ஒன்றுக்கொன்று முரண்படுவது பிரத்தியட்சமாயிருப்பதை இங்கு காணலாம். உலகத்தின்கண் நாளுக்கு நாள் பலமடைந்து வருகிற நாணயம் என்பதில் சன்மார்க்கமென்பது வெகு சொற்பமாயுள்ளது. நம்பிக்கையும் நன்றியும் முழுமையுமே சன்மார்க்கப்பகுதிகள். இது காரணம் பற்றியே சன்மார்க்க சம்பந்தமில்லா நாணயமும், சன்மார்க்கங்களாகிய நம்பிக்கையும் நன்றியும் ஒன்றோடொன்று ஒவ்வா.

தென் ஆபிரிக்காவில் பாங்கிங் விவகாரங்களில் அனுபவமுள்ள நூற்றுக் கணக்கானவர்கள் அடிக்கடி கூறும் விஷயம் என் மனதில் நன்றாய் வேரூன்றியுள்ளது. அஃது யாதெனில் யார் அதிக போக்கிரியாயிருக்கிறாரோ அவரே பாங்கிகளுடன் அதிக நாணயத்தை காப்பாற்றுகிறார். ஒருவன் சன்மாரக்கரா துன்மார்க்கரா வென்பதை பாங்கிகள் கவனிப்பதில்லை. அவருடைய பிராமிசரி நோட்டுகளையும் ஓவர் டிராப்டுகளையும் அவன் ஒழுங்காய் தவணை சொல்லாது தவக்கமின்றி கொடுப்பதை மட்டும் பாங்கிகள் கவனிக்கின்றன நாணயமென்பது நாகசர்ப்பத்தைப் போல் நம்மைச் சூழ்ந்துள்ளது. அது நாக மென நாம் கவனிக்காத பக்ஷத்தில் நம்முடைய நாசம் நமக்குத் தெரியாமலே வந்து விடுமென்பதை அறிய வேண்டும். நாணயமென்னும் பாஷாண காற்றினால் அநேக குடும்பங்கள் சீரழிந்து விட்டன, கூட்டுறவு முறையினும் சரியே அல்லது வேறு மார்க்கமாயினும் சரியே; நாணயத்தால் கேடழிந்தவர்கள் அநேகர். ஐரோப்பாதேசம் இந் நாணயத்தாலேயே முன்னுக்கு வந்துள்ளது. அவ்விடத்திய தீமைகளைப் போக்கியுள்ளது; ஆனால் இந்தியர்கள் நாமோ அவ்விஷயம் நமக்கும் பலன்படுமோ வென ஏங்கியிருக்கிறோம். யாருடைய பையில் அதிக பணமுள்ளதோ அவரே கோர்ட்டிலும், சண்டையிலும் ஜெயிப்பாரென்பது இன்றைக்கு மெய்யாயிருப்பது போல வேறெந்நாளும் மெய்யாயிருந்ததில்லை. கடன் வாங்கும் வழக்கத்தைக் குறித்து இவ்வளவு அதிசயமாய்

சொல்லியதற்குக் காரணம் கூட்டுறவு முறையினால் இந்தியாவிற்கு எவ்வள நன்மை விளையக் கூடுமென்பதை நிர்ணயிக்க வேண்டு மென்பதற்கே சன்மார்க்கத்தை கங்கணங்கட்டிக்கொண்டு போதிக்கவேண்டும்; அந்த அளவுக்கு மட்டுமே கூட்டுறவால் இந்தியாவிற்கு நன்மை வரும்.

(பின் வரும்.)

---

# அமலாபுரம் சூபர்வைஸிங் யூனியன்

**பின்வரும் குறிப்புக்கள் அமலாபுரம் சூபர்வைஸிங்க் யூனியன் தன்னுடன் சேர்ந்துள்ள சங்கங்களுக்கு அனுப்பிய விளம்பகளிலிருந்து எடுக்கப்பட்டன :—**

I

*ஐக்கியநாணயச் சங்கத்தின் பிரசிடெண்டுக்கு :*

*தங்களுடைய சங்கத்தைப் பரிசோதித்ததில் அடியில் கண்ட பல குறைவுகள் இருக்கிறதாக நமது யூனியன் சூப்பர்வைசர் தெறியப்படுத்தியிருக்கிறார். ஆகையா ல்அந்தக் குறைகளை கூடிய சீக்கிரம் சரிப்படுத்தி எங்களுக்கு அறிவிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளப் படுகிறது*

1916-ம் வருஷத்தில் தங்களுடைய சங்கத்தில் யாதொரு வேலையும் நடக்கவில்லை. இதற்கு பஞ்சாயத்தார் அங்கத்தினர்களின் சிரத்தைக் குறைவேகாரணமென்று தெரியவருகிறது.நமது ஜனங்களுக்கு ஐக்கியம், அந்நியோந்நிய சகாயம், சிக்கனம், செட்டு முதலிய நற்குணங்கள் உண்டாகி க்ஷேமம் அடையவேண்டு மென்பதை உத்தேசித்து இராஜாங்கத்தார் ஐக்கியச் சங்கங்களை ஏற்படுத்தியிருக்கிறார்களென்பதுசகலருமறிந்த விஷயம், இனிமேலாவது, மெம்பர்கள் தங்கள் சங்கத்தை முன்னுக்குக் கொண்டுவரும்படியாக ஜாக்கிரதையுடன் பிரயத்தினஞ்செய்து வருவார்களென்று நம்புகிறோம்.

2............

3. தங்கள் சங்கத்தின் கையிருப்பில் தற்பொழுது ரொக்கமாக ரூ. 153-5-6 இருக்கிறது. மெம்பர்கள் கடன் வாங்காமலிருக்கும் பக்ஷத்தில் தாங்கள் சென்ட்ரல் பாங்கியில் வாங்கியிருக்கும் கடனை அடைப்பதற்கு ஷை தொகையைச் செலுத்தி யிருக்கவேண்டியது. அப்படிக் கடனை அடைத்து விட்டால் அதற்கான வட்டித்தொகை சங்கத்துக்கு மிச்சமாகும். எப்பொழுதும், 50 ரூ-க்குமேல் கையிருப்பில் வைத்திருக்கக்கூடாது.



4. 8-வது 30 மெம்பர் இறந்துபோய் விட்டபடியால், தயவுசெய்து அவருடைய கணக்குகளை முடித்து அவருடைய பங்குமுதலை வாபீஸ் செய்துவிட வேண்டியது.

5. சென்ட்ரல் பாங்கியில் தாங்கள் புதிதாக வாங்கியிருக்கும் கடன் தொகையின் தவணையென்ன? எத்தனை தடவையில் கடனை அடைப்பதாகப்பேச்சு? சில பெயருக்கு நீடித்த தவணைக்குக் கடன் கொடுத்திருக்கிறீர்கள்? ஆனால் கொஞ்சம் எளியவர்களா யிருக்கப்பட்டவர்களை மெம்பர்களாக எடுத்துக்கொண்டு அவர்களுக்குக்கடன் கொடுத்து உதவி செய்தால் நன்மையாயிருக்கும்.

6. மாதவாரியாகத் தங்களுக்கு, நேரிடும் வரவு செலவுகளைப்பற்றிய கணக்கு வழக்குகளை இனிமேல் ஒழுங்காக அனுப்பிக் கொண்டிருக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

II.

*ஐக்கிய நாணயச் சங்கத்தின் தலைவருக்கு:*

*தங்கள் சங்கத்தைச் சோதித்த நமது யூனியன் சூப்பர்வைசர் தங்கள் சங்கத்தில் கீழ்க்கண்ட குறைவுகளிருப்பதாகத் தெரிவித்திருக்கிறார். கூடியசீக்கிரம் அக்குறைவுகளைச் சரிப்படுத்தி எங்களுக்குத் தெரிவிக்க வேண்டு மென்று கேட்டுக் கொள்ளப்படுகிறது.*

1. தவணைகழிந்தும், அடைக்கப்படாமல் ரூ. 700 வரைக்கும் 7 கடன்கள் தங்கள் சங்கத்திலிருக்கின்றன. கிரமமாய் கடனைத்திருப்பிக் கொடுப்பதிலும், மற்றக்காரியங்களிலும், மற்ற மெம்பர்களுக்கு வழிகாட்டியாக இருக்கவேண்டிய சங்கங்களின் ஷை 700 ரூபாயில் 300 ரூ: வரைக்கும சுதாவில் கடன்வாங்கி யிருந்தும் அதை யின்னும் அடைக்காமலிருப்பது மிகவும் விசனமாயிருக்கிறது. ஷை கடன்களை 1916 ம் ஹூ அக்டோபர்மீ முடிவுச்குள்ளாகத் திருப்பிக்கொடுத்திருக்கவேண்டியது. ஆனால் இது பரியந்தம் கொடுக்கவில்லை. நமது யூனியன் நிர்வாக மெம்பர்களில் ஒருவர் யிருக்கும் ஷை சங்கங்களின் தலைவர் தாமே இப்படிக் கடன்களை வெகுகாலம் வரைக்கும் அடைக்காமல் விட்டுவைத்திருப்பது கொஞ்சமேனும் அழகாயில்லை. ஆகையால் உடனே அக்கடன்களை வசூலித்து யூனியனுக்கு ரிபோர்ட் செய்ய வேண்டியது.

2. சென்ற ஏப்ரல்மீ 30உ நடந்த யூனியன் மீட்டிங்கிக்கு தங்கள் சங்கத்தின் பிரதிநிதியை அனுப்புவதற்கு ரூ. 5—0—0 செலவு என்தாகத் தங்கள் சங்கத்தின் கணக்குப் புத்தகத்தில் பதிவு வைத்திருக்கி

றது. யூனியன் மீட்டிங்கிக்கு வருகிற ஒவ்வொரு மெம்பருக்கும் ரூ. 1 படி கொடுப்பது தான் யூனியன் ஒழுங்கு என்பது தங்கள் சங்கத்தின் தலைவருக்குத் தெரிந்தேயிருக்கிறது. ஆகையால் ரூ. 5 கொடுத்தது ரொம்பவும் ஜாஸ்தியென்று அவர் மனதில் பட்டிருக்கவேண்டும்- ஐக்கியச் சங்கங்களின் பணத்துக்கு ஜவாப்தாரிகளாயிருக்கும் யூனியன் மெம்பர்கள் சங்கத்தின் பணத்தைச் செலவிடுவதில் மகாசிக்கனமாகவும், செட்டாகவும் இருக்க வேண்டியதே நியாயம். ஷை ரூ. 5 க்கும் பஞ்சாயத்தார் அனுமதி கொடுத்தார்களா இல்லையா என்பதைத் தெரிவிப்பதோடு, இந்தக் குற்றத்தை உடனே பரிகரிக்க வேண்டியது.

3. இதர விஷயங்களில் சங்கத்தின் தலைவர் தமது கடமைகளைச் சரிவர நிறைவேற்றியிருப்பதைப்பற்றியும், சகல ஜாதி மெம்பர்களும் சங்கத்தில் சேர்ந்திருப்பதைப்பற்றியும், பஞ்சாயத்தில் ஒரு ஜாதிக்குமட்டும் இடங்கொடாமல், நாலுஜாதிகளுக்கும் இடங்கொடுத்திருப்பதைப்பற்றியும், பஞ்சாயத்து வெகு நேர்த்தியாக வேலை செய்து வருவதைப்பற்றியும், யூனியன் மெம்பர்கள் சந்தோஷப்படுவதுடன், பஞ்சாயத்தாருக்குத் தங்கள் வந்தனத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறார்கள்.

---

# மதராஸ் புல்லெடீன் ஆப் கோவாபரேஷன்

என்னும்

## சென்னைக் கூட்டுத்தொழில் வர்த்தமானி

சம்புடம் IX] 1917௵ அக்டோபர் ௴ [இலக்கம் 4.

## பத்திராதிபரின் குறிப்புகள்.

### கௌரவ அஸிஸ்டெண்டு ரிஜிஸ்ட்ரார்கள்.

இவ்விஷயமாய் இம்மாதத்தின் முதலில் கவர்ன்மெண்டார் உத்திரவு பிறந்தது. கௌரவ அஸிஸ்டெண்டு ரிஜிஸ்ட்ரார்களைக் குறித்து முதல் முதல் ஈரோட்டில் நடந்த கோயம்புத்தூர் கோவாபரேடிவ் கான்பிரன்ஸில்தான் பிரஸ்தாபம் செய்யப்பட்டது. இச்சஞ்சிகையிலும் இரண்டொரு வியாசங்கள் இவ்விஷயத்தில் வெளிவந்தன. சென்னை பூர்த்தாண கோவாபரேடிவ் கான்பிரன்ஸுக்கு இவ்விஷயமாக மிஸ்டர் K. S ஸ்ரீனிவாசன் B.A., B.L. (மாஜி கோவாபரேடிவ் ரிஜிஸ்ட்ரார் ஆபீஸ் மானேஜர்) ஒரு வியாசம் அனுப்பி வைத்தார். இதைத் தவிர வேறெவ்விதமும் முக்கியமானதாய் குறிப்பிடக்கூடியதாக இல்லை. கவர்மெண்டாரும் ரிஜிஸ்ட்ராரும் இதைப்பற்றி யோசனை செய்துக் கொண்டிருந்தார்கள். கௌரவ அஸிஸ்டெண்டு ரிஜிஸ்ட்ரார்களுடைய அதிகாரத்தை ஒரு தாலுக்காவுக்கு அல்லது சுமார் ஐம்பது சங்கங்களுக்கு நிர்ணயிப்பதாக கவர்ன்மெண்டார் அபிப்பிராயம், ஏனெனில் அப்பொழுதுதான் ஒரு சங்கத்தை வருஷத்தில் இரண்டுதரமாவது இவர்கள் பார்வையிடக்கூடும்.

இப்பொழுது சர்க்காரால் நியமிக்கப் பட்டுள்ள அஸிஸ்டெண்டு ரிஜிஸ்ட்ரார்கள் செய்யும் வேலைகளையெல்லாம், இவர்களும் செய்யவேண்டியதாகும். வக்கீல்களும், இதரர்களும் ஜனங்களுக்குள் அதிக அதிகார சக்தியை உடையவர்கள், கௌரவவேலைக்கு லாயக்கில்லை என்று கருதப்படுகிறது. ஏனெனில் இவர்களுக்கு ரையத்துகள் பேரில் அளவுக்கு மீறி அதிகாரம் செலுத்த இடமுண்டு. கௌரவ அஸிஸ்டெண்டு ரிஜிஸ்

ட்ரார் வேலைக்கு லாயக்குள்ளவர்களெனத் தோன்றுபவர்கள் பெயரை சர்க்கார் அஸிஸ்டெண்டு ரிஜிஸ்ட்ரார்கள் சிபார்சு செய்யவேண்டும். இதுவரையில் மூவர்களுடைய பெயர்தான் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதுவும் ஓரே அஸிஸ்டெண்டு ரிஜிஸ்ட்ராரிடமிருந்துதான்.

இந்தியாவில் கூட்டுறவு முயற்சியானது உலகத்தில் வேறெப்பாகங்களிலும் உள்ளது போலவே சர்க்கார் சம்பந்தமில்லாததாக இருக்க வேண்டுமென்பதாக கணக்கற்ற தடவைகளில் அதிகாரிகளால் சொல்லப்பட்டுள்ளது. ஜனங்கள் இவ்விஷயங்களில் வேண்டிய சிரத்தை எடுத்துக்கொள்ளாததால் கவர்ன்மெண்டார் எடுத்துக்கொள்ளுகிறார்களென்றும், ஜனங்கள் இவ்விஷயங்களில் தக்க சிரத்தை எடுத்துக்கொள்ள ஆரம்பஞ் செய்தால் கவர்ன்மெண்டார் தங்கள் சம்பந்தத்தை நீக்கிக் கொள்ளுவார்களென்றும், ஜாயின்டு ஸ்டாக் கம்பெனிகளில் கவர்ன்மெண்டார் எவ்விதசம்பந்தம் வைத்திருக்கிறார்களோ அவ்வித சம்பந்தம் கூட்டுறவு முயற்சியிலும் வைத்துக்கொண்டு தற்கால அதிகாரத்தை நீக்கிக்கொள்ளுவார்களென்றும் பலதடவைகளில் கூறப்பட்டுள்ளது. இவ்வபிப்பிராயம் ஜனங்களுக்கு சர்வசம்மதத்தைக் கொண்டுள்ளது. கௌரவ அஸிஸ்டெண்டு ரிஜிஸ்ட்ரார்களை ஸ்தாபிக்கும் விஷயம் ஜனங்களால் விரும்பப்படுகிறது. ஆனால் சொற்பவிஷயத்தில் கவர்ன்மெண்டார் பின்னடைந்திருப்பது மிகவும் வருத்தமாயிருக்கின்றது. கௌரவ அஸிஸ்டெண்டு ரிஜிஸ்ட்ரார்கள் தங்கள் சொந்த செலவிலேயே வேலை கற்றுக்கொள்ள வேண்டியதென்றும், வேலையை ஒப்புக்கொண்ட பிறகும், சிப்பந்திகளும் குமாஸ்தாக்களும் கொடுக்கப்படமாட்டார்களென்றும் கவர்ன்மெண்டு உத்திரவு கூறுகின்றது. இவ்விஷயத்தில் கவர்ன்மெண்டு உத்திரவு பின்னடைந்திருப்பதற்காக இவ்விராஜதானியின் எல்லா பிரதான பத்திரிகைகளும் கண்டனஞ்செய்திருக்கின்றன. சென்னை "மெட்ரூஸ் டைம்ஸ்" பத்திரிகை பின்வருமாறு கூறுவதை நாமும் முழுவதும் ஆமோதிக்கிறோம்.

கௌரவ அஸிஸ்டெண்டு ரிஜிஸ்ட்ரார் தன் வேலையில் பிரியப்பட்டு வேலைசெய்ய வேண்டுமென ஏற்படுகிறது. கூட்டுறவு கௌரவ வேலைக்கு மிகவும் நல்ல விஷயமே. பொதுவிஷயங்களில் சிரத்தையுள்ளவர்கள் தங்களுக்கு வேண்டிய அவகாசமும், அதிகப் பணமும் இருக்குமாயின் கௌரவ அஸிஸ்டெண்டு ரிஜிஸ்ட்ரார்கள் வேலையை ஒப்புக் கொள்ளலாம். ஆனால் அஸிஸ்டெண்டு ரிஜிஸ்ட்ரார்கள் இன்னொருவருடைய அதிகாரத்து உட்பட்டு வேலைசெய்ய வேண்டியவர்களாதலால், இதரர்களுடைய கட்டளைகளை நிறைவேற்ற தன்னுடைய பணத்தை செலவழிக்க எதிர்பார்த்து அளவுக்கு மிஞ்சி அதிகமே யாகும்.



கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தரல்லாத இதர கூட்டுறவினர்களுடைய அபிப்பிராயத்தை கவர்ன்மெண்டார் கலந்து அவர்கள் அபிப்பிராயத்தையும் இவ்விஷயத்தில் கொண்டு உத்திரவு செய்திருப்பார்களாயின் மிகவும் நலமாய் இருந்திருக்கும். ஆனால் இப்பொழுதும் அதிக தாமதமாகவில்லை. கூட்டுறவினர்கள் தங்கள் அபிப்பிராயத்தை அனுப்ப வேண்டுமாய்க் கோருகிறோம்.

கொயம்புத்தூர் ம-ா-ா-ஸ்ரீ C. N. கிருஷ்ணசாமி அய்யரவர்கள் ஆங்கிலேய வர்த்தமானிக்கு கௌரவ அஸிஸ்டெண்டு ரிஜிஸ்ட்ரார்களைப் பற்றி ஓர் அருமையான வியாசமெழுதியிருக்கிறார். அஸிஸ்டெண்டு ரிஜிஸ்ட்ரார்களையும் இன்ஸ்பெக்டர்களையும் அதிகமாய் நியமிக்கவேண்டியிருப்பதால், ஏற்படும் செலவுகளைப்பற்றி கவர்ன்மெண்டார் ஆலோசிக்கவே, கவர்ன்மெண்டாரைச் சாராத சில ஐக்கியமுயற்சிக்காரர்கள் ஒன்றுகூடி, கௌரவ அஸிஸ்டெண்டு ரிஜிஸ்ட்ரார்களை நியமிக்கும் பொருட்டு ஸ்கீம் ஒன்றை தயார்செய்து அனுப்பினார்கள். ம-ா-ா-ஸ்ரீ கிருஷ்ணசாமி அய்யரே அந்த ஏற்பாட்டுக்கு ஜவாப்தாரியாவார். அதாவது.—இப்பொழுது அஸிஸ்டெண்டு ரிஜிஸ்ட்ரார்களின் விஷயமாய் செலவாகிறதை கணக்கிட்டால், ஜில்லா ஒன்றுக்கு ரூ. 200 சராசரி விழுகிறது. ஒவ்வொரு கௌரவ அஸிஸ்டெண்டு ரிஜிஸ்ட்ராருக்கும் ஒரு ஜில்லாவின் பொறுப்பைக்கொடுத்து, பிரயாணச் செலவுகளெல்லாம் சேர்த்து சராசரி ரூ. 150-ம், சிப்பந்தி ஆபீஸ் முதலிய செலவுகளுக்காக ரூ. 50-ம், அவருக்குக் கொடுக்கவேண்டும். தேர்ந்தெடுக்கப்படுபவர் மாதத்தில் 15 நாள்களுக்குக் குறையாமல் பிரயாணஞ் செய்யவேண்டும். யூனியன் சூபர்வைசர்கள் அதிகமாய் நியமிக்கப் படுவதால், இன்ஸ்பெக்டர்களை அதிகப்படுத்த வேண்டியதில்லை. ஆகையால் இவ்வித ஏற்பாட்டில் கவர்ன்மெண்டாருக்குச் செலவு அதிகப்படாது. இவ்விதம் வேலைசெய்யும் கனவான்கள் அதிகமாயில்லையெனச் சொல்லப்படுகிறது. இந்த உத்தியோகத்திற்குவரும் கனவான்களுக்கு அதிகத்தகுதி உரிமை வைக்கக்கூடாது. பென்ஷன் வாங்கிக்கொண்ட உத்தியோகஸ்தர்களும், ஸென்ட்ரல் பாங்கிகளின் காரியதரிசிகளும், படிப்பாளிகளாயுள்ள மிராஸ்தார்களும் நியமிக்கப்படலாம். சிலமாதகாலம் பழக்கப்பட்டால் போதும், இவ்வித யோசனையை இவர் கோவாபரேடிவ் கம்மிட்டியாரின் முன்னால் சாக்ஷியம் சொன்னபோது கூறியுள்ளார். இப்பொழுது வெளியிடப்பட்ட கவர்ன்மெண்டாரின் உத்திரவினால், கௌரவ அஸிஸ்டெண்டு ரிஜிஸ்ட்ரார்கள் தாங்களே பிரயாணச் செலவுகள் செய்யவேண்டியதா யிருக்கிறது. அவ்வாறு ஒருவரும் இந்த உத்தியோகத்தை ஒப்புக்கொள்ள மாட்டாராதலால், கவர்ன்மெண்

டார் இவ்வுத்திரவை மாற்றி அவர்களுக்குப் பிரயாணச் செலவுகள் கொடுப்பார்களென எதிர்ப்பார்க்கப்படுகிறது.

### H. E. சென்னை மாகாண கவர்னரவர்கள்.

வங்காள மாகாணத்தில் லார்ட் மைகல், லார்ட் ரொனல்ட்ஷே இவர்கள் ஐக்கிய சங்கங்களை பார்வையிட்டு, கூட்டுறவினர்களுக்கு ஊக்கத்தைக் கொடுத்த கண்யமானவழக்கம் நம்மாகாணத்திலும் பரவாது போகவில்லை யென்பதை நோக்க மிகவும் சந்தோஷப்படுகிறோம். H. E. லார்ட் பென்ட்லான்ட் துரையவர்கள் மேற்குக்கரை ஜில்லாக்களுக்கு விஜயஞ்செய்த சமயத்தில் மங்களூருக்கு சமீபத்திலுள்ள பரங்கிபெட்டு கிராமத்திற்குச் சென்று அங்குள்ள ஐக்கிய சங்கத்தைப் பார்வையிட்ட விஷயத்தை தென்கன்னடம் சென்ரல் பாங்கு செக்ரிடெரி மிஸ்டர் M. ஆநந்தராவ் அனுப்பிய குறிப்பினால் அறியலானோம். 1915 ஞு மே மாதத்தில் தான் ஒரு சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது. தற்காலம் 170 மெம்பர்கள் வரையில் இருக்கிறார்கள். இவர்களில் சுமார் 50 பேர் மாப்பிள்ளைமார்களும், 40 பேர் கிறிஸ்துவர்களுமாவார்கள். 1916-17 ஞு மெம்பர்களிடமிருந்தும் வசூலாகவேண்டிய ரூ. 6,200ம் வசூலாகிவிட்டது. கெடுக்கடந்தகடன் ஒன்றேனும் கிடையாது. இதனாலேயே சங்கம் மிகவும் நன்றாய் வேலைசெய்து வருவதாக ஏற்படுகின்றது. இச்சங்கம் ஏற்பட்டதின் பயனாக கிராமத்தார்களுக்குப் பொதுக்காரியங்களில் ஊக்கமும், சிரத்தையும் ஏற்பட்டிருக்கிறது.

இதன் காரணார்த்தமாக பொதுக் காரியங்களுக்கு அநேக சபைகள் கிராமங்களில் ஸ்தாபனமாயிருக்கின்றன. அவைகளில் சிலவற்றை இங்கு கூறுவோம்; விவகாரங்கள் மத்தியஸ்தர் மூலமாய் எளிதில் தீர்க்கப்படுகின்றன, புஸ்தகசாலை யொன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளது, கிராமத்தில் ஒரு தெரு போடப்பட்டது, கிராமத்தில் எலிமெண்டெரி பாட்சாலை யொன்று ஸ்தாபிக்கப் பட்டுள்ளது. பள்ளிக் கூடமானது சென்ற மார்ச்சு மாதந்தான் ஸ்தாபிக்கப்பட்டது. அப்போது 9 பிள்ளைகளிருந்தார்கள். செப்டம்பர் மாதக் கடைசியிலோ, 91 பிள்ளைகள் வரைக்கும் சேர்ந்து விட்டார்கள். இவர்களில் 27 பேர் மாப்பிள்ளைகள், மாப்பிள்ளைகளுக்கென்று பிரத்தியேக பள்ளிக்கூடமிருந்தும் இப்பள்ளிக் கூடத்தில் சேர்ந்துள்ளார்கள். மாதம் ஒன்றுக்கு சம்பளமும் சந்தாவுமாக ரூ. 21 தான் கிடைக்கிறது. ஆனால் மாதம் 1க்கு ரூ. 80 செலவாகிறது. பாக்கித்தொகை சங்கத்து பஞ்சாயத்து மெம்பர்களாலும், இன்னும் இதர இரண்டொரு மெம்பர்களாலும் கொடுக்கப்படுகிறது. இப்பள்ளிக்கூடத்திற்கு ஸ்திரமான நிதி ஏற்படுத்தும் விஷயமாய்ச் சங்கத்தின் லாபத்தில் ஒரு பாகம் பள்ளிக்கூடத்திற்குக் கொடுக்க



வேண்டுமென யோசனை செய்யப்பட்டு வருகிறது. கூட்டுறவினர்களால் ஏற்படுத்தப்பட்ட பள்ளிக்கூடங்களில் இந்த ஜில்லாவிற்கு இதுவே முதற் பள்ளிக்கூடம், இதரர்களும் இவ்வழியை பின்பற்றுவார்களென நினைக்கின்றோம், இச்சங்கத்தின் மெம்பர்களுடைய ஊக்கத்திற்கும் சிரத்தைக்கும் நம்முடைய மனப் பூர்வமான ஆசிகூறுகிறோம்.

### ஓர் மதிப்புரை.

கல்கத்தா பிரஸிடென்ஸி காலேஜ் எகநாமிக்ஸ் புரொபெஸரும், வங்காள கோவாபரேடிவ் சஞ்சிகையின் உபபத்திரிகாசிரியருமாகிய, மிஸ்டர் பஞ்சனநந்ததாஸ் மூகர்ஜீ, M. A. அவர்கள் எழுதியுள்ள "இந்தியாவில் கூட்டுறவு முயற்சி" யென்னும் புத்தகத்தின் இரண்டாம் பதிப்பின் காப்பி யொன்றை நமக்கு அனுப்பியுள்ளதற்காக நாம் கடமைப்பட்டுள்ளோம். இப்புத்தகத்தின் மதிப்புரை எழுதுவதில் தாமதமானதற்கு வருத்தப்படுகிறோம். இந்தியாவின் கூட்டுறவைப்பற்றி புஸ்தகங்கள் குறைந்திருப்பதற்கு இப்புஸ்தகம் ஒன்று புதிதாய் சேருவதைக்குறித்து மிகவும் சந்தோஷப்படுகிறோம். சமீபகாலம் வரைக்கும் வங்காளமாகாணத்தில் கோவாபரேடிவ் ரிஜிஸ்ட்ராராக விருந்த மிஸ்டர் ராவ் பஹதூர், J. M. மித்ரா என்பவர் சொல்லியிருப்பதுபோலவே இப்புத்தகத்தில் இந்தியாவின் கூட்டுறவு முயற்சியைப்பற்றி நாளது பரியந்தமுள்ள விஷயங்கள் யாவும் சுருக்கி சொல்லப்பட்டுள்ளது.

பட்டப்பரீட்சைகளுக்கு வாசிக்கும் மாணவர்களுக்கே முக்கியமாக பயன்பட இப்புத்தகம் எழுதப்பட்டது. அவர்களுக்கு இப்புத்தகம் மிகவும் பிரயோஜனப்படக் கூடியதே. இந்தியாவிலும் பர்மாவிலும் காணப்படுகிற கூட்டுறவு முறையின் சங்கங்களின் பிரதிமாதிரிகளுக்கும் பிரத்தியேகமாய் ஒவ்வொரு அத்தியாயம் எழுதியுள்ளார். 1912-ம் வருஷத்திய கோவாபரேடிவ் ஆக்டும் அங்கங்கு விஷயம் விளக்கி சேர்க்கப்பட்டுள்ளது. பிரதேசங்களில் கூட்டுறவு முயற்சியின் வளர்ச்சியைப்பற்றி சுருக்கமாக ஓர் அத்தியாயம் சேர்த்துள்ளார், ஆனால் இவ்விஷயம் இன்னும் அதிக விபரமாக கொடுத்திருக்கவேண்டுமென்பது நமதெண்ணம். ஆக்ஸ் போர்டு யூனிவர்ஸிடி கோவாபரேடிவ் சொஸைடியைக் குறித்து இரண்டாவது அத்தியாயத்தில் கூறப்பட்டுள்ள விஷயம் கலாசாலைமாணவர்களுக்கு அதிக பயன்கொடுக்கக்கூடும்.

இப்புத்தகம் 450 பக்கமுள்ளது. விலை ரூ. 4-8-0, யுத்தகால விலையாயிருந்தபோதிலும் மிகவும் அதிகமென்றே தோன்றுகிறது.

* * *

காஞ்சீபுரம் ம-ா-ா-ஸ்ரீ P. இராமச்சந்திரசாஸ்திரி நமக்கு பின் வருமாறுள ழுதியுள்ளார்:—

"கீழ்கண்ட விஷயத்தை பிரசுரிக்க வேண்டுகின்றேன்:— செங்கற் பட்டு செக்ஷன் அஸிஸ்டெண்டு ரிஜிஸ்ட்ரார் காஞ்சிபுரத்தில் சென்ற அக்டோபர் மாதம் 16, 17, 18 தேதிகளில் இன்ஸ்பெக்டர் சூபர்வைஸர்களுடைய கான்பிரன்ஸு ஒன்று கூட்டினார். அந்த கான்பிரன்ஸில் அடியிற்கண்டவிஷயங்கள் ஆலோசனைக்கென்று பிரசுரிக்கப் பட்டிருந்தன.

(1) மெட்ருஸ் சென்ட்ரல் ஆர்பன் பாங்காருக்கு சங்கங்கள் பணம் அனுப்புவதற்கு வேண்டிய மார்க்கம். லோகல் யூனியன்களுக்கு அணைக்கப்பட்டுள்ள சங்கங்கள் மெட்ருஸ் சென்ட்ரல் ஆர்பன் பாங்காருக்கு நேரே பணம் அனுப்பும்போது சங்கங்கள் யூனியனுக்கு மாதமாதம் அனுப்பும் D. C. B. ஸ்டேட்மெண்டில் யூனியனுக்கு விபரம் தெரிவிக்கவேண்டும்.

(2) பணம் அனுப்புவதற்கு ஏற்படும் செலவுகள், தற்காலம் வழக்கத்திலிருக்கும் விதமென்ன ?

(3) யூனியன் கவர்னிங்பாடி மெம்பர்களுக்கும் ஜனரல்பாடி மெம்பர்களுக்கும் பிரயாணப்படி கொடுக்கும் விஷயம். தற்காலம் கொடுக்கப்படும் தொகையென்ன ? அத்தொகை எவ்விதம் நிர்ணயிக்கப்பட வேண்டும் ?

(4) இன்ஸ்பெக்டர்களுடையவும் சூபர்வைஸர்களுடையவும் டைரி விஷயம்.

(5) பிரஸ்தாப வருஷத்தில் சங்கங்கள் சென்ட்ரல் பாங்குக்கு அனுப்பியுள்ளதும், அனுப்பவேண்டியதையும் குறிக்கும் ஜாபிதா D. C. B. தயார் செய்யும் விஷயம். எந்த பாரத்தில் தயார் செய்யப் படவேண்டுமென்பது; இவ்விஷயத்தைக்குறித்து மாதமாதம் அஸிஸ்டெண்டு ரிஜிஸ்ட்ராருக்கு அனுப்பவேண்டிய ஸ்டேட்மெண்டைக் பற்றியதும், யூனியனுக்கு அணைக்கப்படாத சங்கங்களைக் குறித்து என்ன செய்வது ?

(6) யூனியனுக்கு அணைக்கப்படாத சங்கங்களை யூனியனுககு அணைக்கும் விஷயம், புது யூனியன் ஏற்படுத்தும் விஷயம்.

(7) இன்ஸ்பெக்டர் சர்க்கில் சார்ஜ்ஜுகளை மாற்றும் விஷயம்.

(8) சங்கங்களின் குரூப் மீட்டிங்குகளை நடத்த தகுந்த இடங்கள் எவையெனத் தீர்மானஞ் செய்தல்.

அஸிஸ்டெண்டு ரிஜிஸ்ட் ராருடைய 3-11-17 ஸர்க்குலரை பார்க்க.



## ஈரோடு ஆர்பன் பாங்கு லிமிடெட்.

இந்த பாங்கி மெம்பர்களின் மஹா சபை மீட்டிங் சமீபத்தில் 4-11-17ல் நடைபெற்றது. அப்பொழுது ஜூன் மாதம் 30-தேதியோடு முடிவு பெற்ற பாங்கியின் ஒரு வருஷத்திய ஆடிட் ஆர்டர் வாசிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது. மேற்படி உத்திரவில் கள்ளிக்கோட்டை செக்ஷன் அஸிஸ்டெண்டு ரிஜிஸ்ட்ரார் அவர்கள் சென்ற வருஷத்தில் இந்த பாங்கியானது நன்றாய் வேலை செய்திருப்பதாகவும், திருப்திகரமாயிருப்பதாகவும் அதற்கு, டைரெக்டர்களில் முக்கியமாக பிரஸிடெண்டு ம-ா-ா-ஸ்ரீ, வக்கீல் S. T. வெங்கட்டரமணய்யர் B.A.,B.L., அவர்களை மெச்சிக்க வேண்டுமென்று எழுதியிருக்கிறார்.

2. சென்ற வருஷக் கடைசியில் 508 மெம்பர்களிருந்தார்கள். அவர்களில் 228 பேர் பிராமணர்கள், 200 பிராமணரல்லாதவர்கள், 15 பேர் கிறிஸ்துவர்கள் ; 28 பேர் மகம்மதியர்கள் 250 பஞ்சமர்கள் 14 அஸோஸியேஷன்கள். 30-6-17 வரை எடுத்துக்கொள்ளப்பட்ட 4, 422 பங்குகளுக்குச் செலுத்திய மூலதனத் தொகை ரூ. 15,448.

3. டிபாசிட்டுகள் : பிரஸ்தாப வருஷத்தில் வந்த குறிப்பிட்ட கால டிபாசிட்டுகள் ரூ.1[illegible],370, மாதாந்திர டிபாஸிட்டு ரூ.3,214, கரண்டு டிபாசிட்டுகள் ரூ. [illegible]0,888-14-5 மெம்பர்களுக்கும் மெம்பரல்லாதவர்களுக்கும் வாப்சு செய்ததுபோக 30-6-17-ல் பாக்கி நின்ற குறிப்பிட்ட கால டிபாசிட் தொகை ரூ. 17,304 மாதாந்திர டிபாசிட் தொகை ரூ. 2,635, கரண்டுடிபாசிட் ரூ. 4,203-10-7. முந்திய வருஷக் கடைசியி லிருந்த குறிப்பிட்ட காலடிபாசிட் ரூ. 10, 500, மாதாந்திர டிபாசிட் ரூ 21,901, கரண்டு டிபாசிட் 3,1[illegible]7-4-8. இதனால் ஜனங்களுக்கு பாங்கியின் விசுவாசமும் நம்பிக்கையும் அதிகரித்து வருகின்றது என்று விளங்கும்.

4. சென்றவருஷத்தில் பாங்கியானது ரூ. 39,384 மெம்பர்களுக்கும், ரூ. 700 இரண்டு கிராம ஐக்கிய நாணய சங்கங்களுக்கும் கோயமுத்தூர் ஜில்லா பாங்கிற்கு டிபாசிட்டாக ரூ. 2,000 கடன் கொடுத்திருக்கின்றது. தவிர இந்தியா கவர்ன்மெண்டிற்கு யுத்தத்திற்காக 100-க்கு $5\frac{1}{2}$ ரூ. வீதம் ரூ. 1,000மும், கடன் கொடுத்திருக்கின்றது. அசலின் பொருட்டு மெம்பர்களிடமிருந்து பிரஸ்தாப வருஷத்தில் ரூ. 22,336 வந்ததுபோக பாக்கி நிற்கும் தொகை ரூ. 34,368.

5. பாங்கியின் நிகரலாபம் ரூ. 1945-15-0; இதில் க்ஷேமநிதிக்கு ரூ. 486-7-9 ம் ஈரோடு மஹாஜன ஹைஸ்கூலுக்கு படிப்பின்பொருட்டு 145-5-2 ம் போக பாக்கி நிற்கும் தொகையை மெம்பர்களுக்கு 100-க்கு ரூ. 9 வீதம் டிவிடெண்டாக பட்வாடா செய்யபட்டது.

## கிரஹச் சங்கம்.

நிஜாம் ஷித்தியா இலாகாவில் உத்தியோகம் செய்துவரும் மிஸ்டர் G. A. சந்தாவர்கர் என்பவர் இந்திய நகரங்களில் செய்யவேண்டிய விஷயங்களைப் பற்றி மைசூர் இக்கனமிஸ் ஜர்னலுக்கு ஓர் வியாசம் எழுதியிருக்கிறார். வீடுகட்டுவதைப் பற்றியும், ஜன நெருக்கத்தை நீக்கும் விஷயத்தையும் அவ்வியாசத்தின் பெரும்பான்மை கூறியுள்ளார் காருண்ணியமான எண்ணத்தைக் கைக்கொண்டு ஏழைகளுக்கும் கீழ்வகுப்பினர்களுக்கும் வீடுகள் கட்டிக்கொடுத்து நியாயமான வாடகையைவாங்கி கொள்ளும்படி கவர்ன்மெண்டாரையும், தனிகர்களையும் கேட்டுக் கொள்ளுகிறார். தொத்துவியாதிகள் பரவுங்காலங்களில் ஏழைகளுக்கு தற்காலமுதவும் ஸ்திரமில்லாக் குடிசைகளை கட்டுவிக்க கவர்ன்மெண்டார் ஏராளமான திரவியம் சிலவு செய்கிறார்கள். இதில் பாதித்தொகையைக் கொண்டே ஸ்திரமான கட்டிடங்கள் அவர்களுக்குக் கட்டிவைக்கலாம். சுமார் 100 வீடுகள் அடங்கியுள்ள ஓர் வார்ட்டுக்கு ரூ, 30,0000 பிடிக்கும்; அத்தொகைக்கு 100 க்கு 3 விதம் வட்டிகணக் கிட்டுப்பார்த்தால் மாதமொன்றுக்கு ரூ. 75 அந்த வார்டு வரும்படி கொடுக்கவேண்டும். ஆகையினால் ஒவ்வொரு வீட்டுக்கும் மாதமொன்றுக்கு ரூ. 1 வாடகை வைத்தால் ரூ. 100 வரும்; அதில் ரூ. 20 வார்டு பழுதுபார்ப்பதற்கு வைத்துக் கொள்ளலாம். இவ்வாடகையை இரட்டித்தாலும், குடியிருக்கும் ஏழைகளால் பொறுக்க முடியும். அப்பொழுது சிலவு செய்த பணத்தின்மேல் 5 வீதம்வட்டி கிடைக்கும். முதல் எப்பொழுது கிடைக்குமென்பதைப்பற்றி அவர் குறிப்பிடவேயில்லை.

நடு வகுப்பினர்களுக்கு, அதாவது விசேஷமாய் ரூ. 60 லிருந்து ரூ. 100 வரையில் சம்பளம் வாங்கும் வேலைக்காரர்களுக்கு, சௌக்கியமான பாகத்தில், நகரத்திற்கு வெளியிலிருந்தாலும் சரி, குடியிருப்புக்குத் தகுந்தமாதிரி வீடுகளைக்கட்டி ரூ. 8 லிருந்து ரூ. 12 வரையில் வாடகைக்கு விடவேண்டுமென அபிப்பிராயப்படுகிறார். ஒவ்வொரு ராஜதானியிலும் ஆர்பன் ஹௌஸ் பில்டிங் கோவாபரேடிவ் அஸ்ஸோஸியேஷன் ஒன்றை யேற்படுத்தவேண்டுமென சுட்டிக்காட்டுகிறார். அதின் முக்கியமான நோக்கமாவது, வீடுகளைக் கட்டவும், பழுது பார்க்கவும், இவ்விஷயங்களில் அவைகளை மேற்பார்வை செய்தலுமாகும், ரிஜிஸ்ராரின் ஆதரணையின்கீழ் அது வேலை செய்யும்; சுகாதாரமான விஷயங்களை உத்தேசித்து, ஸானிடெட்ரி இன்ஜினீர் ஒருவரையும், மெடிகல் ஆபீஸர் ஒருவரையும் சம்பளம் கொடுத்து வைத்து வேலை நடத்தவேண்டும் அவருடைய உத்தேசத்தின்படி, இந்த அஸ்ஸோஸியேஷனுக்கு மூலதனம் பாதி ஜனங்களாலும், பாதிகவர்ன்மெண்டாராலும் கொடுக்கப்படவேண்டும்.



# கூட்டுறவும் சன்மார்க்கமும்.

(முன்தொடர்ச்சி)

சன்மார்க்கமாயும் நாணயமாயும் இருக்கவேண்டுமென்று விரும்புகிறவர்கள் தங்களுடைய ஏழைமையினாலாவது, சாவுக்காரர்களுக்கு கொடுக்கவேண்டிய அதிக வட்டியினாலாவது அவ்விதமிருக்க அசக்தராயிருக்கும் பட்சத்தில் அவர்களுக்குத்தான் கூட்டுறவு உபகரிக்கவேண்டுமென ஏற்படுகிறது. தாழ்ந்த வட்டியில் பணம்வாங்கும் சௌகர்யங்களால் மனிதன் துர்மார்க்கனாக மாறமுடியாது. துன்மார்க்கன் சன்மார்க்கனாக மாறமுடியாது; நல்லவர்களாக மாறவேண்டுமென அபிப்பிராயப்படுபவர்கள் எல்லோரையும் உதவிசெய்ய வேண்டுமென்று கவர்ன்மெண்டாருடையவும் பரோபகாரிகளுடையவும் நற்புத்தியை நாடுகின்றது.

ஒருவனுக்கு செல்வம் மிகுந்திருந்தால் அவன் சன்மார்க்கனாகவுமிருக்கிறானென நாம் அடிக்கடி நம்புகிறோம். இந்தியா தேசத்திற்கு நன்மை பயக்கவேண்டுமெனா ஸ்தாபிக்கப்பட்டுள்ள கூட்டுறவு முயற்சியானது குறைந்த வட்டிக்கு பணம் கொடுப்பதென்ற ஒரு கருத்தாகிய தாழ்ந்த நிலைமைக்கு வராதபடி நாம் பார்க்கவேண்டிய தவசியம்.

இக்காரணம்பற்றி கோவாபரேடிவ் கமிட்டியார் அபிப்பிராயத்தைப் பார்க்க மிகவும் சந்தோஷப்பட்டேன். அவர்கள் கூறியுள்ளது யாதெனில், பாமர ஜனங்களுடைய சீர் திருத்தையும் முன்னேற்றத்தையும் கவர்ன்மெண்டார் கோருவார்களாகின் சன்மார்க்கத்தை அஸ்திவாரமாக்கொண்டுள்ள கூட்டுறவைப்பற்றி கவனிக்கவேண்டுமே யொழிய கூட்டுறவின் இலக்ஷணங்கள் இன்னதென்பதே தெரியாதவர்களாகிய அஞ்ஞானத்தார்களுடைய கூட்டுறவின்முயற்சி எவ்வளவு அதிகமாயிருப்பினும் அதை கவனிக்கக்கூடாது. இவ்வார்த்தைகளை ஆதாரமாகக்கொண்டு, ஐக்கிய சங்கங்கள் எவ்வளவு ஸ்தாபனமாய் இருக்கின்றன வென்பதிலிருந்து கூட்டுறவின் வளர்ச்சியை நிர்ணயிக்காது கூட்டுறவினர்களுடைய சன்மார்க்க நிலைமையைப்பற்றி கூட்டுறவின் முயற்சியின் அபிவிருத்தியை நிர்ணயிக்கவேண்டும். அப்படிச்செய்யப்படும் பட்சத்தில் ஐக்கியசங்கங்களின் தொகையை அதிகப்படுத்துவதை கவனிப்பதைக் காட்டிலும் இருக்கும் சங்கத்தின் மெம்பர்களுடைய சன்மார்க்கத்தை விர்த்தி செய்வதில் ரிஜிஸ்ட்ரார்களும் கவனிப்பார்கள்; ரிஜிஸ்தரார்கள் ரிஜிஸ்தர் செய்த சொஸைடிகளின் எண்ணிக்கையிலிருந்தல்ல, இருக்கும் சங்கத்தின் மெம்பர்களுடைய சன்மார்க்கத்தின் நிலைமையிலிருந்து அவர்கள் பிரமோஷன் கவனிக்கப் படவேண்டும். இப்படிச் செய்வதானது ஒவ்வொரு மெம்பருக்கும் கடன் கொடுக்கப்பட்டுள்ள ஒவ்வொரு பைசாவும் எக்காரி

யத்திற்கு செலவழிக்கப்பட்ட தென்பதை கவனிப்பதாகும். ஐக்கிய சங்கங்களை நிர்வசிப்பவர்கள் தங்கள்மெம்பர்களுக்கு கொடுக்கப்படும் பணம், கள்ளு, சாராயக் கடைகளுக்காவது சூதாடும் கொட்டகைக்காவது போய்ச் சேராவண்ணம் பார்த்துக்கொள்ள வேண்டும். சூதாட்டத்திற்காவது மதுபானத்திற்காவது போகமுடியாமல் தடுக்க முடியுமானால் நாட்டுக்கோட்டை செட்டிமார்களுடையவும் சாவுக்காரர்களுடையவும் அதிகவட்டிவாங்கும் கொடுந்தன்மையை நான் மன்னித்து விடுவேன்.

மஹாஜனங்களாகிய சாவுக்கார்களைக்குறித்து இங்கு ஒரு விஷயம் சொல்லவிரும்புகிறேன். கூட்டுறவு நூதனமுறையல்ல. பயிர்களை நாசஞ்செய்யும் பறவைகளையும் குரங்குகளையும் துரத்துவதற்கு எல்லோரும் சேர்ந்து ஒன்றாகவே காரியத்தை நடத்துகிறார்கள். தானியம் அடிக்க களம் பொதுவாக எல்லோருக்கும் ஒன்றேவைத்துளர்; ஆடு மாடு முதலிய கால். நடைகளை மேய்க்க பொது நிலங்களை விட்டுவிடுகிறார்கள். கொடூரமான ஒரு சாவுக்காருக்கு விரோதமாய்ச் சேர்ந்துள்ளதைப் பார்க்கிறோம். ரையத்துகளின்மேல் சாவுக்காரருக்கு உள்ள நிர்ப்பந்தத்தின் காரணமாக கூட்டுறவின் பயன் இல்லாமற் போய்விடுமோ வென ஐயமேற்பட்டது; எனக்கு இவ்விஷயத்தில் சற்றேனும் அச்சமில்லை. சாவுக்கார் தீங்கின் அவதாரமாயிருந்தபோதிலும் கூட்டுறவின் முன்புகுனிய வேண்டியதே யாகும்; ஏனெனில் கூட்டுறவு சன்மார்க்கத்தை போதித்து சன்மார்க்கத்தை விளைவிக்கக்கூடிய மார்க்கமென்று அவன் அறிவான். ஆனால் சாம்பராணியில் சாவுக்கார்களின் நடத்தையிலிருந்து இவ்வபிப்பிராயத்தை நான் மாற்ற வேண்டியவனாகிறேன். ஏனென்றால், அவர்கள் எப்போதுமே கொடூரமாயில்லை. எப்போதுமான அநியாய வட்டியை அவ்வளவும் கொடுக்கவேண்டியதென்று கட்டாயப் படுத்துவதில்லை. அச்சாவுக்கார்கள் அநேக சமயங்களில் அவர்களிடம் லேவாதேவி வைத்துள்ளவர்களுக்கு உதவி புரிந்துள்ளார்கள். கஷ்ட சமயங்களிலும், தொந்திரவு நேர்ந்துள்ள சமயங்களிலும் உதவிபுரிந்துள்ளார்கள். இவற்றிலிருந்தே ஓர் அபிப்பிராயத்தை நான் ஊர்ஜித்து விட்டதாக நினைக்கவேண்டாம். நான் கூறுவதெல்லாம் யாதெனில், கொடியபாதகரென சொல்லப்படும் சாவுக்கார்களை சீர்திருத்தி அவர்களை நல்வழிக்குக் கொண்டுவந்து பரோபகாரியாக இருக்கச்செய்ய முடியாதோ என்பதே. அச்சாவுக்கார்களை கூட்டுறவில் சேர்த்து உபகரிக்கச் செய்ய முடியாதோ? அல்லது அவர்களை இவ்வழிகளுக்கெல்லாம் கொண்டுவந்து சீர் திருத்த முடியாதென்று நிர்ணயிக்கப் பட்டுள்ளதோ?

கூட்டுறவு முறையில் புராதன தொழில்களை விர்த்தி செய்ய முயலுவது எல்லோர்க்கும் தெரிந்த விஷயம். நெசவுக்காரர்களின் நிலைமையை



சீர்திருத்த நான் எடுத்துள்ள முயற்சியில் கவர்ன்மெண்டார் எனக்கு உதவி செய்வதைக் குறித்து பகிரங்கமாய் நன்றி பாராட்டுகிறேன். நெசவுக்காரர்களை முன்னேற்றவேண்டி மார்க்கங்கள் பலவுள வென நான் பரீக்ஷார்த்தம் செய்து வருவதில் தெரியவருகிறது. கைநெசவு க்ஷீணித்துப் போவதை இந்திய அபிமானிகள் ஒருவரேனும் பார்த்துக் கொண்டிருக்க மாட்டார். இத்தொழிலால் ஏழை ஜனங்கள் ஜீவனம் செய்து வர ஒரு மார்க்கமிருந்ததென்றும், தானியம் விளைவில்லாமல் பஞ்சம் நேரிட்ட காலத்தும் இது ஒரு பாதுகாப்பாயிருக்கு மென்றும் டாக்டர் மான் என்பவர் கூறியிருக்கின்றார். இத்தொழிலை விர்த்தி செய்ய பிரயத்தனப்படும் ஒவ்வொரு ரிஜிஸ்தராரும் இந்தியாவுக்கு நன்மை செய்தவர்களாவதன்றி இந்தியர்களுடைய நன்றிக்கும் பாத்திரப் பட்டவர்களாவார்கள். நான் முயலும் விஷயங்களெல்லாம் எவையெனில் (1) புராதீன கைநெசவை அதிகப் பயன்படுமாறு எவ்விதம் சீர்திருத்தஞ் செய்யலாமென்றும், (2) கவர்ன்மெண்டு உத்தியோகத்தில் மோகம் வைக்கும் இளைஞர்களுக்கு இத்தொழிலில் அதிக நன்மை யுள்ளதென்று போதிக்கவும், (3) நெசவுத்தொழிலை விட்டுவிட்டவர்களை பின்னும் அத்தொழிலை பின்பற்றவும். முதலிரண்டு விஷயங்களைக் குறித்து தற்காலம் நானொன்றும் சொல்லுவதில்லை, மூன்றாவது விஷயத்தைக் குறித்துகொஞ்சம் சொல்ல விரும்புகிறேன். நெசவுத் தொழிலை விட்டுவிட்ட ஐந்து குடும்பங்களை மீட்டு இத்தொழிலையே செய்ய செய்துள்ளேன். அவர்களுக்கு வேண்டிய நூலை ஆஸ்ரமம் வாங்கித் தருகின்றது அவர்களால் நெய்யப்பட்டவைகள் ரொக்க விலைகொடுத்து வாலிண்டியர்கள் கடைவிலைக்கு வாங்கிவருகிறார்கள். நூல் வாங்கக் கொடுக்கும் பணத்திற்கு மட்டும் ஆஸ்ரமத்திற்கு வட்டி நஷ்டம் ஏற்படுகிறது. நூல்வாங்கி பணம்கொடுத்த கடன்களினால் நஷ்டம் ஒன்றும் இது பரியந்தம் ஏற்படவில்லை. அவ்விதம் நஷ்டம் ஒன்றும் அதிகமாய் ஏற்படா [illegible] கடன்கள் சொற்ப தொகைகளாகவே கொடுக்கப் படுகின்றன. மற்ற லேவாதேவிக ளெல்லாம் ரொக்க லேவாதேவிகளாகவே நடக்கின்றன. நெய்து முடிந்த துணிகள் உடனுக்குடன் விலையாகி விடுகின்றன. ஆகையால் நூல் வாங்கி கொடுக்கப்படும் முன் பணத்தின் மேல் நேரும் வட்டி நஷ்டம் மிகவும் சொற்பம். ஆரம்பம் முதல் கடைசி வரையில் சன்மார்க்க முறையிலேயே சகல நடவடிக்கைகளும் நேரிடுகின்றன. சிநேகிதர்களின் பொருளுதவியாலேயே ஆஸ்ரமம் நடந்து வருகிறது. ஆகையால் வட்டி நஷ்டத்தை கவனிக்க வேண்டுமென்ற அவசியம் மேற்படவில்லை. நெசவுக்காரர்கள் மேல் வட்டியைச் சுமத்துவது கூடாத காரியம். பிரிந்துபோன குடும்பங்கள் பின்னும் ஒன்று சேர்ந்துள்ளன. ஒவ்வொருவருக்கும் கொடுக்க வேண்டிய கடன் இவ்வளவென்று முன்

னமேயே நிர்ணயிக்கப் படுகிறது. இக்குடும்பத்தார்களுடைய கல்வி விஷயத்தையும் இனி கவனிப்பதாக எண்ணி யுள்ளோம். இவ்விஷயம் அசாத்தியமான காரியமல்ல; ஏனென்றால் கருணைக் கடவுள் விரும்பின் இவ்விஷயம் வெகு சீக்கிரம் கைகூடும்.

---

# ஒரு கிராம ஐக்கிய நாணயச்சங்க பஞ்சாயத்து மீட்டிங்கு.*

[புதுக்கோட்டை டவுன்பாங்கி காரியதரிசி ம-ா-ா-ஸ்ரீ, G. சுந்தரேச அய்யரவர்களால்]

இடம்.—காரியதரிசி வீடு.

**ஆஜர்.**

1. கப்பய்யர், காரியதரிசி.
2. இராமஸ்வாமிபிள்ளை, பிரஸிடெண்டு.
3. சுப்பன் செட்டியார், கஜான்ஜி.
4. வேம்புவய்யர் } மெம்பர்கள்.
5. அய்யாவய்யர் } மெம்பர்கள்.

மணி அய்யர்.—கிராம பள்ளிக்கூட உபாத்தியாயரும் சங்கம் கிளர்க்கும்.

**காரியதரிசி**—வாருங்கள்—அய்யாவய்யரவாள்—ஏன் இவ்வளவு நாழி?

**அய்யாவய்யர்**—படுத்துக்கொண்டிருந்தேன், தூங்கிவிட்டேன், ஏன் மீட்டிங்குக்கு ஒருவரும் வரவில்லை. கூப்பிடவந்தவுடன் தான் விழித்துக்கொண்டேன். அதோ வருகிறார் இராம ஸ்வாமிபிள்ளை. அவர் எப்பொழுதும் சரியாய்வருவார்.

**காரியதரிசி.**—வரவர மீட்டிங்கு கூடுவதற்குப் போதுமான மெம்பர்கள் கிடைப்பது துர்லபமாயிருக்கிறது. வெகுநேரம் கார்க்கவேண்டியதாயிருக்கிறது. எல்லோரும் சரியாய் வந்தால் மீட்டிங்கில் வேலை 10 நிமிஷத்தில் முடிந்துவிடும். யாரை யார் சொல்லலாம்?

**இராமஸ்வாமிபிள்ளை**—கோபித்துக் கொள்ளக்கூடாது. ஜனங்களுக்கு கல்வி யபிவிருத்தியாக வேண்டாமா? பட்டணம் முதலிய இடங்களில் கூட அநேக மீட்டிங்குகள் மெம்பர்கள் வராததினால் கூடுகிறதில்லை. நான் ஏதோ இதுமட்டும் நடக்கிறதேயென்று சந்தோஷப் படுகிறேன். இன்னம் சில ஊரில் பார்த்தால் தெரியும். கல்வியறிவு வளர வளர நம் உணர்ச்சியும் அதிகப்படும். தேசத்தைப்

* சென்ற புதுக்கோட்டை கோவாப்ரேடிவ் கான்பரென்ஸில் வாசிக்கப்பட்டது.



பிடித்தபாவம், மகான் கோக்கலே பிறந்துவிட்டார். இருந்தால் கல்வியை பரவச்செய்ய எவ்வளவோ செய்திருப்பார்.

**காரியதரிசி**—ஆமாம் வாஸ்தவந்தான். எனக்கு கூட்டுறவி லிருக்கிற ஆஸ்த்தை என்னை இவ்வாறு சொல்லும்படி செய்தது. எல்லா இடங்களிலும் இப்படித்தானா?

**அய்யாவய்யர்**—Sir! அதிருக்கட்டும். என்னமோ கான்பிரென்ஸாமே, என்னமோ அமக்களப்படுகிறதே. நாம் ஒன்றும் சொல்லக்கூடாது. என்னத்திற்கு இந்த ஆடம்பரமெல்லாம்?

**இராமஸ்வாமிபிள்ளை**—ஆ! இதென்ன! தாங்கள்கூட இப்படிச் சொல்லுகிறீர்கள். கான்பிரென்ஸ் எங்கும் நடக்கிறது. சென்னையில் வருஷத்திற்கு ஒருமுறை இராஜதானி கூட்டுறவுச் சங்கக்கான்பிரென்ஸ் கூடுகிறது. சென்னைகவர்னர் கூட ஒருமுறை அக்கிராசனம் வகித்தார்கள். அங்கே அநேக விஷயங்கள் ஆலோஜிக்கப் படுகின்றன. எப்படி காங்கிரெஸ் மகா ஸபையில், தேசத்திற்கு வேண்டிய பொது விஷயங்களைப் பற்றி யோஜிக்கப்படுகின்றனவோ அதுபோல் கூட்டுறவு கான்பிரென்ஸில் கூட்டுறவு சம்பந்தமான விஷயங்கள் யோஜிக்கப்படும். கான்பிரென்ஸ்கள் அடிக்கடி கூடினால் தான் ஜனங்களுக்கு விஷயங்கள் நன்கு புலப்படும். அநேகர் கூடி தங்கள் அபிப்பிராயங்களை வெளியிட்டு ஆலோஜனை செய்து ஒரு முடிவிற்கு வரக்கூடும். இதில் சிரத்தையில்லாதவர்களும் அநேகர் வருகிறார்கள். இதில் ஏதோ இருக்கிறது என்று விஷயத்தை கொஞ்சம் கவனிப்பார்கள். தாங்கள் நிர்வாகசபை மெம்பராக இருந்து இப்படிச் சொல்லக்கூடாது.

**அய்யாவய்யர்**— இல்லை இல்லை, மன்னிக்கவேண்டும். என்னைக் கேட்டார்கள். நான் ரூ 5 நன்கொடை கொடுத்திருக்கிறேன். எனக்கு என்னமோ படாடோபமாய் தோன்றியது. சொன்னேன், கான்பிரென்ஸில் அவ்வளவு பிரயோசனம் இருக்கிறதா?

(வேம்புவய்யர் வருகிறார்).

**காரியதரிசி**—வாருங்கள் உங்களுக்குத்தான் காத்துக்கொண்டிருக்கிறோம். இன்னம் ஒருவர் வந்தால் மீட்டிங்கு கூடலாம்.

**வேம்புவய்யர்**—இவ்வளவுதானா நாழியாயிற்றே என்று நினைத்துக்கொண்டிருந்தேன். செட்டியாரைக் கூட்டிக்கொண்டு வருகிறதுதானே?

**காரியதரிசி**—மணி, செட்டியாரை கையோடு வரவேண்டுமென்று கூட்டிவா.

(மணி போய் கூப்பிட)

**செட்டியார்**—கொஞ்சம் ஜோலியிருக்கிறது. அவசியம் வரவேண்டுமோ?

**மணி**—அவசியம் வரத்தான் வேண்டும். முக்கிய விஷயங்கள் இருக்கின்றன. பணம் இன்னம் அதிகமாய் கடன் பாங்கியிலிருந்து வாங்கப்போகிறார்கள். கட்டாயம் வரவேண்டும்.

**செட்டியார்**—இதேதுடா அப்பா தொல்லை. கணக்குப்பிள்ளை! பெட்டியை பார்த்துக்கொள், இதோ போய்விட்டு வருகிறேன். சம்பளமில்லாச்சேவகம்? வீண்வம்பு, யார் ஊரிலே பணமில்லை என்று அழுதா, எதற்கு இந்த உபத்திரவம். வேண்டாமென்றால் விடமாட்டேன் என்கிறார்கள்.

**மணி**—இப்பொழுது எல்லாம் சொல்லுவீர், நீங்கள் துரை வரபோது எல்லாம் செட்டியார் தான் என்று சொன்னால் முதல் முதல் அக்ஷதை போட்டுக்கொள்வீர்.

**செட்டியார்**—(சிரித்துக்கொண்டு) அதுசரி, கௌரவமிருக்கு, சந்தேகமில்லை, தாசில்தார் எஜமான்கூட நம்மகிட்ட இப்ப மதிப்புக்கொஞ்சம் கூடத்தான். அதற்கு முன் அவ்வளவு இல்லை. பாங்கி விஷயமென்றால் திவான்பேஷ்கார் கூட உடனே பார்க்க வரச்சொல்லுகிறார்கள்.

**மணி**—பொது ஜனத்திற்கும் கொஞ்சம் பாடுபடவேண்டும். எல்லாம் சுயகாரியபுலியாய் மட்டும் இருக்கக்கூடாது.

**காரியதரிசி**—வாருங்கள் செட்டியார், ஏது இவ்வளவு நாழி?

**செட்டியார்**—வரத்தான்புறப்பட்டேன், அதற்குள் அய்யரும் வந்தார்கள். கொஞ்சம் ஜோலியிலிருந்து விட்டேன்.

**அய்யாவய்யர்**—மீட்டிங்கு வேலையைப் பார்ப்போம், சீக்கிரம் பேபர்களை எடுமய்யா?

**காரியதரிசி**—வெங்கிட்டராமய்யர் இரண்டு ஷேருக்கு மனுக்கொடுத்திருக்கிறார்.

**இராமஸ்வாமி**—சரி சேர்த்துக்கொள்ளலாம்—மேலே.

**காரியதரிசி**—மீரா லெவ்வை ராவுத்தர் துகை ரூ 100 கடன் வேண்டுமென்று கேட்கிறார். ஆதம்சா ராவுத்தர் ஜாமீன் போட்டிருக்கிறார்.

**வேம்புவய்யர்**—எதற்காக கேட்கிறார்?

**காரியதரிசி**—குடும்பசெலவு என்று சொன்னார். என்னசெலவு என்று கேட்டேன், சரியாய் சொல்லவில்லை. வரச்சொன்னேன், வந்திருக்கிறார்.

**இராமஸ்வாமிபிள்ளை**—ராவுத்தரே, எதற்க்காக ரூ 100 உமக்கு?

**ராவுத்தர்**—எல்லாம் குடும்பச்செலவுக்குத்தான். அய்யா, கொடுக்கிறதாகவிருந்தால் கொடுங்கள், இல்லாவிட்டால் இல்லை என்று சொல்லுங்கள், எதற்காக இருந்தால் உங்களுக்கு என்ன? பொருக்குடியாக்கும், எடுத்துக்கொண்டு கொழும்புச்சீமைக்கு போய்விடுவேனென்று எண்ணுகிறீர்களோ, வீடு இருக்கு, நிலபுலம் இருக்கு, என்ன கேள்வி—அப்பவே இது சர்க்கார்தொல்லை என்று சொன்னார்கள்.



**வேம்புவய்யர்**—என்ன ராவுத்தர் கோபித்துக் கொள்ளுகிறார், ராவுத்தரே சற்றுப்பொறும், யார் எப்படிப்போனால் என்ன என்பதற்காகவா சங்கம் ஏற்பட்டிருக்கிறது. ஜனங்கள் அபிவிருத்திஅடையவேண்டும், வீணாய் போகக்கூடாது, அவசியமான காரியங்களுக்கு அவசியமான செலவு செய்யவேண்டும், வீண்செலவு செய்யக்கூடாது, இன்ன இன்ன காரியங்களுக்கு மட்டும் கடன் கொடுக்கவேண்டும், என்ற இந்த விஷயங்கள் எல்லாம் கூட்டுறவு சங்கங்களில் கவனிக்கவேண்டும், சங்கங்கள் சாவுக்காரரைப்போல் அல்ல. கடன் பெற்றவன் க்ஷேமத்தைகவனிக்கவே இவைகள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. நாங்கள் எல்லோரும் எதற்காக பாடுபடுகிறோம். எங்களுக்கு ஏதாவது இலாபமா? நல்லகாரியமென்று தானே?

**ராவுத்தர்**—எஜமான் மன்னிக்கவேண்டும், படிக்காதவன்தானே சாமி, என்னமோ கேட்டதும் தொந்திரவாக தோன்றியது சாமி, எது வேண்டுமோ கேளுங்கள் சொல்லுகிறேன்.

**அய்யாவய்யர்**—அப்பா ரூ 100 எதற்கு.

**ராவுத்தர்**—பிள்ளையை நாகூருக்கு எடுத்துப்போக வேண்டியிருக்கு, அதற்காகத்தான்.

**அய்யாவய்யர்**—அதற்கு ரூ 100 பிடிக்குமா?

**ராவுத்தர்**—ஆமா, இப்பொழுதுதான், ரயில்சார்ஜ் எல்லாம் அதிகமாமே? இச்சண்டை எப்பொழுது ஓயுமோ தெரியவில்லை.

**வேம்புவய்யர்**—எப்படி திருப்பிக் கொடுக்கப்போகிறாய்?

**ராவுத்தர்**—அதை யாருகண்டா, என்னமாவது ஆடுமாடை வித்தடிச்சு டயன்படி கட்டிவிடுகிறேன், சாமி.

**அய்யாவய்யர்**—அப்படி ஆடுமாடு விற்றுக் கட்டுவானே, செலவு அவ்வளவு செய்யவேண்டாம். சக்தியில்லா விட்டால் சாமி கோபித்துக் கொள்ளமாட்டார். மிதமாய் செலவுசெய், ரூ 50 போதும். மாதம் ரூ 4, 5, கொடுத்துக்கொண்டுவா. சிறு வியாபாரத்தி லிருந்து மீதம் வருவதை கடனுக்கு செலுத்து.

**ராவுத்தர்**—சாமி அப்படியே செய்கிறேன் நல்ல புத்தி சொல்லித்து இன்றைக்கு.

**காரியதரிசி**—என்ன ரூ 50 சாங்கிஷன் செய்வோமா?

**செட்டியார்**—அப்படியே சரி. அடுத்த மனு என்ன?

**காரியதரிசி**—கருப்பய்யா ரூ 25 கடன் கேட்கிறான், சுப்பன் ஜாமீன் போட்டிருக்கிறான்.

**செட்டியார்**—சன்னாசி மகன் கருப்பய்யாவா? மகா இழுவைக்காரன், அவன் முன்னே வாங்கியிருந்தானே சரியாய் வந்ததா?

**காரியதரிசி**—இல்லை, டயன்படி செலுத்தவில்லை. ரூ 10 பாக்கி நேற்று தான் செலுத்தினான். இன்று மனுக்கொண்டு வந்துவிட்டான்; இதோ நிற்கிறான்.

**இராமஸ்வாமி**—ஏண்டா கருப்பய்யா, ஏன் இப்படி தாமதம். நேற்று ரூ 10 கொடுத்துவிட்டு இன்று எதற்காக ரூ 25 கேட்கிறாய்? ஏன் சரிவர கொடுக்கவில்லை?

**கருப்பய்யா**—இல்லை-சாமி-பஞ்சகாலமாப் போச்சு என்ன செய்கிறது. டயன்படி கொடுக்காவிட்டால் எனக்குத்தானே நஷ்டம், அபராத வட்டிபோட்டு வாங்கிவிடுவார்கள். எஜமானுக்கு ரொம்ப நஷ்டமாக்கும்!

**இராமஸ்வாமி**—எஜமானுக்கு ஒரு பைசாக்கூட லாபமில்லையப்பா, டயன்படி பணத்தை சரியானபடி கொடுக்கவேண்டியது என்பது தான் முக்கியமான ரூல். இச்சங்கங்களில் வட்டி அதிகம் கொடுத்தால் உனக்கும் நஷ்டம், சங்கத்திலும் கெடுத்தவரி கொடுப்பவர்களின் கணக்கு அதிகமாகும். நேற்று ரூ 10 எப்படி கொடுத்தாய்?

**கருப்பய்யா**—சாமி கடுக்கனை அடகுவைத்து வாங்கிவந்தேன். இன்று இங்கு வாங்கித்தருகிறேன் என்று சொல்லிவந்தேன்.

**வேம்புவய்யர்**—சரி, போ.

**காரியதரிசி**—அவ்வளவு திருப்தியாயில்லை. மனுவைத் தள்ளிவிடலாம், பணம் சரியாய்வராது.

**செட்டியார்**—அப்படியே செய்துவிடலாம். பட்டணத்திலெல்லாம் சண்டைக்கித் தயாரா யிருக்கிறார்களாமே. கச்சேரிக ளெல்லாம் 4 மணிக்கு அப்புறம் கிடையாதாமே.

**அய்யாவய்யர்**—என்காதிலும்பட்டது. என்னமோ.

**வேம்புவய்யர்**—எல்லாம் கடைவீதிப்பொய். அப்படி யொன்றுமில்லை. வருஷத்திற்கு ஒருமுறை கோட்டையை சீர்திருத்துவார்கள். அதிலிருந்து கட்டிவிட்டு விட்டார்கள் இன்னம்.

**காரியதரிசி**—டயன் ஆகிறது. வேலையிருக்கு. நல்லய்யாசேர்வை மாடு வாங்குவதற்கு என்று நம்மிடம் ரூ 100 வாங்கிக்கொண்டு போய், காலணா வட்டிக்கு பக்கத்தில் கடன் கொடுத்திருக்கிறதாக மனு வந்தது. விஜாரித்தேன் சேர்வையே ஒப்புக்கொள்ளுகிறான்.



**செட்டியார்**—நமக்கு என்ன அது, அவன் தெருவிலே போட்டுவிடுகிறான், இப்படியெல்லாமா விசாரிக்கிறது? பணம் சரியாய்வருமா? புள்ளி நல்ல புள்ளியாவென்று மட்டும்தான் விசாரிக்கலாம். வீடு கட்டுவதற்கு பணம் வாங்கி நெல்லுவாங்கப்படாதா? நகை செய்யக்கூடாதா? இதென்ன வேடிக்கை அய்யா நன்றாய் இருக்கிறது.

(கோவாப்ரேடிவ் இன்ஸ்பெக்டர் வருகிறார்.)

**வேம்புவய்யர் & காரியதரிசி**—வாருங்கள், வாருங்கள், இப்பொழுதுதான் வருகிறீர்களோ நல்ல சமயத்திற்கு வந்தீர்கள், ஒரு விவகாரம் நடந்துக்கொண்டிருக்கிறது.

**இன்ஸ்பெக்டர்.**—இப்பொழுதுதான் வருகிறேன், விவகாரம் என்ன கேட்போம்.

**அய்யாவய்யர்.**—எல்லாம் வீண்பேச்சு பேசுகிறார்கள். பள்ளிக்கணக்கு புள்ளிக்குதவாதென்பது சரியாயிருக்கிறது. எதற்கு கடன் வாங்கினானோ அதற்குத்தான் உபயோகப் படுத்தவேண்டுமாம். நம் காரியதரிசி சொல்லுகிறார். உளுந்துவாங்க என்று சொல்லி கொள்ளு வாங்கக்கூடாதாம்.

**இன்ஸ்பெக்டர்.**—என்னமோ அவருக்கு தோன்றினதைச்சொன்னார், தங்கள் அபிப்பிராயம் என்ன? இவ்விசாரணை எல்லாம் கூடாதா? அல்லது அப்படி விசாரிப்பது பாபமென்றா?

**அய்யாவய்யர்.**—அதெல்லாம் நமக்கென்னய்யா? பணம் நஷ்டம் வாராமல் கொடுக்கவேண்டியது. அவ்வளவுதான் முடியும். ஊர் விசாரணை செய்ய நம்மால் முடியுமா?

**இன்ஸ்பெக்டர்.**—முடியாமல் இருக்கலாம். முடிகிற கேஸ்களில் விசாரிக்கவேண்டுமென்பதுதான் சரியானது. கூட்டுறவு விதிகளில் ரூல் 27ஐ பாருங்கள். கூட்டுறவு சங்கங்களுக்கும் இதர லேவாதேவி சங்கங்களுக்கும் முக்கிய வித்தியாசம் இதுதான். இந்த கேஸில் இதோ விசாரணை செய்திருக்கிறார். இதன்மேல் action எடுக்கவேண்டியதுதான்.

**செட்டியார்.**—என்ன செய்கிறது. அப்படி எல்லாம் விசாரித்தால் ஜனங்கள் ஓடிப்போய்விடுவார்கள். சங்கங்களில் சேரமாட்டார்கள்.

**இன்ஸ்பெக்டர்.**—செட்டியார் சொல்வது சரி. ஆனால் ஐக்கிய நாணய சங்கங்களின் கொள்கைப்படி சங்கம் நடத்தாமல் உண்டியல் கடையைப்போல் சங்கம் நடத்துவதற்கு சங்கம் இல்லாமல் இருந்தாலும் நல்லதுதான். ஆனால் உடனே செய்யவேண்டுமென்று ஒருவரும் சொல்லவில்லை. இப்பொழுது உங்கள் கோட்டைக்கு ஒரு கேஸ் வந்திருக்கிறது. இதில் action எடுத்துக்கொள்ளுங்கள். மெம்பர்களுக்கு சங்கங்களில் பிசகு செய்யக்கூடாது என்று ஒரு

எண்ணம் உண்டாகும். கொஞ்சம் கொஞ்சம் advance செய்தால்தான் உங்கள் சங்கம் நல்ல சங்கமாகலாம்.

**செட்டியார்.**—அது சரி—அப்படிச் செய்யலாம், ஆனால் திடீரென்று அவசரப்பட்டு ஒன்றும் செய்யக்கூடாது. இதில் பணத்தை வசூல் செய்துவிட வேண்டியதுதான்.

**காரியதரிசி.**—பணத்தை வாங்கின காரியத்திற்கு உபயோகப் படுத்தாமல் ரூல் 27-க்கு புறம்பாய் நடந்த சேர்வையிடமிருந்து பணத்தை உடனே வசூல் செய்ய ஏற்பாடு செய்யவேண்டும் என்று தீர்மானம் செய்யலாம்.

**வேம்புவய்யர்.**—அப்படியே செய்யலாம்.

**காரியதரிசி.**—வீரப்பன் மகன் ஆண்டி தன்னை சங்கத்தில் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்றும் தனக்கு 5 பங்குகள் கொடுக்கவேண்டும் என்றும் மனுக்கொடுத்திருக்கிறான்.

**இராமஸ்வாமி.**—ஆர் அந்த ஆண்டி?

**காரியதரிசி.**—வீரப்பன் என்று ஒரு கங்காணி இருந்தான். அவன் மகன்

**செட்டியார்**—ஆர், அந்த மாட்டுக்கேஸில் அகப்பட்டுக் கொண்டானே அவனா? அந்த கேஸ் என்ன ஆச்சு.

**வேம்புவய்யர்.**—அதில் இவனுக்கு ரூ. 100 அபராதம் போட்டார்கள். அது 4-வருஷம் ஆச்சு.

**அய்யாவய்யர்.**—இப்போது அவன் ரூ. 5,000-க்கு நிலம் வாங்கி இருக்கிறான் என்று கேள்வி, எப்பவோ கேஸில் அகப்பட்டுக்கொண்டால் நமக்கென்ன? Inspector ஐ கேட்போம், ஏன் ஐயா இவனை சேர்த்துக்கொள்ளலாமா?

**இன்ஸ்பெக்டர்.**—ஐக்கிய நாணய சங்கங்களில் character மெம்பர்களுக்கு முக்கியம். நல்லகுணம் அவசியமானது. யோக்கியனையும், கண்ணியமுள்ளவனையும் இருப்பவனையும், நாணயமுள்ளவனையும் மட்டுமேதான் சங்கங்களில் சேர்த்துக் கொள்ளவேண்டும். கிரிமினல் கேஸ்களில் தண்டனைப்பட்டவனையும், பொய், புரட்டு சொல்பவனையும் சேர்த்துக் கொள்ளக்கூடாது. நாணயம் மிகவும் முக்கியமே ஒழிய ஐவேஜி முக்கியமாகாது. ஒருவனிடம் ரூ. 10,000 ஐவேஜி இருக்கலாம், நாணயமிராது, வேறொருவனிடம் ஐவேஜி சுவல்பமாய் இருக்கலாம், நாணயம் இருக்கும். இவன் சங்கத்திற்கு நல்ல மெம்பர்.

**இராமஸ்வாமி.**—இவன் மனுவை தள்ளிவிடுவோம், கிரிமினல் கேஸில் தண்டனைப் பட்டிருக்கிறான், இவன் சங்கத்தில் மெம்பராயிருக்க லாயக்கில்லை என்று கண்டெழுதிவிடுங்கள்.



**காரியதரிசி.**—அப்படி செய்வதில் ஆக்ஷேபனையில்லை. அப்படியே செய்துவிடலாம்.

**செட்டியார்.**—இன்னம் என்ன நிரம்ப வேலை யிருக்கோ, நாழிகையாயிற்றே.

**காரியதரிசி,**—இன்று வேலை அதிகமிருக்கு, இன்னம் அரைமணி யாகும், சமீபத்தில் இறந்துபோன மகாதேவய்யர் சம்சாரம், மங்களத்தம்மாள் ரூ. 200 டிபாஸிட் செய்வதாயும், வட்டி தனக்கு ஸ்பெஷல் கேஸாக மாதமாதம் வேண்டுமென்றும் எழுதியிருக்கிறார்கள்.

**இராமஸ்வாமி.**—வட்டி மாதமாதம் கொடுக்கலாமா?—மூன்று மாதத்திற்கு ஒரு முறை கொடுப்போமே.

**செட்டியார்.**—அந்த அம்மாள் நம்பி நம்மிடம் டிபாஸிட் செய்யவருவது மிக்க ஆச்சரியமானது. இதுசமயம் தவரவிடக்கூடாது. வட்டி மாதமாதம் கொடுக்கலாம்.'

**வேம்புவய்யர்.**—அப்படியே செய்யலாம். டிபாஸிட்கள்தான் அதிகம் சேர்க்கவேண்டும்.

**இன்ஸ்பெக்டர்.**—அதுதான் அவசியம். டிபாஸிட் சேரச்சேரத்தான் சங்கம் நல்ல சங்கம் என்று சொல்லப்படும். எச்சங்கங்கள் ஸென்டிரல் பாங்கியிலிருந்து அதிகக்கடன் வாங்காமல் உள்ளூரிலேயே டிபாஸிட் வாங்குகிறதோ அவைகளைத்தான் முதல் கிளாஸ் சங்கம் என்று சொல்வார்கள்.

**காரியதரிசி.**—அதுதான் Sir சொல்லிக்கொண்டிருக்கிறேன். செட்டியார் மனது வைத்தால் டிபாஸிட் அதிகம் கிடைக்கும்.

**இன்ஸ்பெக்டர்.**—செட்டியாரே! நீங்கள்தான் இச்சங்கத்தை நல்ல அபிவிருத்திக்கு கொண்டுவரவேண்டும், டிபாஸிட்கள் சேர்க்க வேண்டும்.

**செட்டியார்.**—அதற்குத்தான் சிரமப்படுகிறேன், சொன்னால் ஜனங்களுக்கு எங்கே தெரிகிறது, தாசில்தார் எஜமான் கொஞ்சம் ஜாடையாய்ச்சொன்னால் கேட்பார்கள். என்னமோ மாட்டேன் என்கிறார். அந்த நாளில் தாசில்தார் என்றால் கிடுகிடென்று நடுங்குவார்கள். இந்த நாளில் மெடியே போய்விட்டது. எல்லாம் ரூலும் சட்டமும்தான்.

**இன்ஸ்பெக்டர்.**—அது கிடக்கிறது, தாசில்தார் உதவி அவசியமில்லை, நீங்கள் ஏதாவது டிபாஸிட் செய்திருக்கிறீர்களா?

**காரியதரிசி.**—அதுதான் அவாளை வெகுநாளாய் கேட்டுக்கொண்டிருக்கிறேன். இதோ அதோ என்று சொல்லுகிறார்கள். வெள்ளனூ

சங்கம் ரிஜிஸ்தரான அன்று ஆண்டியப்பனம்பலகாரன் ரூ 500 அரை வட்டிக்கு டிபாஸிட் செய்திருக்கிறான்.

**செட்டியார்.**—நான் பணம் வந்தவுடன் ரூ 300 டிபாஸிட் தருகிறேன், காரியதரிசி விடமாட்டார்போல் இருக்கு.

**காரியதரிசி.**—இன்னம் கடன் மனுக்கள் ஏராளமாயிருக்கின்றன. பணம் கையில் இல்லை. அதற்காக டவுன் பாங்கியிலிருந்து ரூ 1,500 கடன் வாங்கினால் நல்லது. அதற்காக மனு தயார்செய்துவைத்திருக்கிறேன்.

(இன்னும் வரும்)

---

# கிராமங்களும் ஐக்கிய நாணயச் சங்கங்களும்.*

நமது மாட்சிமை தங்கிய பிரிட்டிஷ் ராஜாங்கத்தார்களால் நமக்கு ஏற்படுத்தி யிருக்கிற கணக்கில்லாத நன்மைகளில் ஐக்கிய நாணய சங்கங்களை ஏற்படுத்தி கிராமங்களில் "கழுகுக்கு மூக்கில் வேர்த்தார்ப்போல்" எப்பொழுது என்று கார்த்துக் கொண்டிருக்கிற சாவ்கார்களினின்றும் எளியவர்களை தப்பிவிக்கும்படி செய்தது நமது ராஜாங்கத்தாருடைய ஜீவகாருண்யத்தை மிகவும் நன்கு எடுத்துக் காட்டும்; நெல் வட்டிக்குக் கடன் வாங்கி மாசூல் காலத்தில் வரும் நெல்லை குடித்தனக் காரருடைய எளிமையினாலோ அல்லது ஈசுவர செயலால் மழையில்லாமையினாலோ அல்லது பயிருக்கு வரும் நோவினாலோ கடன் வாங்கியவருக்குக் கொடுத்து வட்டிக்குக் கூட காணாமல் முதல் யெப்பொழுதும் போல் குறையாமலும் தவணைவட்டியும் ஜாஸ்தியாகிக் கொண்டு "தேள்கொட்டினவுடன் விஷம் ஏறுவது போல்" மென்மேலும் ஜாஸ்தியாகி கடைசியாக குடித்தனக்காரன் உள்ளகாணியையும் கடனுக்குக்கொடுத்துவிட்டு ஊரில்கூட இல்லாமல் பிழைப்புக்காக கங்காணிகளின் ஆசை வார்த்தையில் மயங்கி கொளும்பு, பிஜி, முதலிய விடங்களுக்குப் போகும்படி நேருகிறதும் அவர்கள் போகிற இடங்களில் அடையும் சுகமும் எல்லாருக்கும் தெரிந்ததே. கடன் கொடுக்கிறவர்கள் கிராமங்களில் கொடுத்தால் நெல் வட்டிக்கு, கிராமங்களில்லாத இடங்களில் கொடுத்தால் (நகரவாசிகள்) ரூபாய் வட்டிக்கும் தவணை வட்டியும் கண்டு தான் கொடுக்கிறது வழக்கம். சாவகார்களில் ரூ. 1,000 முதலுள்ளவர் வருஷத்தில் மூன்று பங்கு முதலுள்ளவர்களாகிறதும் கடன் வாங்குகிறவர்கள் ரூ 1,000 ஆஸ்தியுள்ளவராயிருந்தால் ரூ 1,000 கடன் வாங்கினால் ஆறு வருஷத்தில் உள்ள ஆஸ்தியையும் இழந்து விடுகிறதும் எல்லாருடைய

* சிவகங்கை வக்கீல் ம-ள-ள-ஸ்ரீ R. லக்ஷ்மண அய்யங்கார் அவர்களால் மதுரை ராமநாதபுரம் கான்பரென்ஸில் வாசிக்கப்பட்டது.



அனுபவத்திலும் பார்த்திருக்கலாம். அப்பேர்கொத்தவர்களிடம் போகாமல் ஏற்பாடு செய்திருப்பது ஜனங்களுக்கு முக்கியமான சாதகம்.

ஐக்கிய நாணயச் சங்கங்கள் ஏற்படுவதில் மற்ற சாதகங்களுமிருக்கின்றன. அவைகளில் முக்கியமானவற்றைமட்டும் இவ்விடத்தில் எடுத்துக் கூறப்படும். சங்கங்கத்தின் பேர்மாத்திரத்தினாலேயே அதின் அங்கத்தினர்களுக்குள் ஐக்கியத்தையும், நாணயத்தையும் உண்டு பண்ணவேண்டும். கிராமச் சங்கங்கள் எல்லாம் வரையில்லாத பொறுப்புடன் கூடியவைகள்; அதாவது மெம்பர்களில் எவர் வாங்கும் கடனுக்கும் எல்லாம் தனித்தனியே ஜவாபுதாரியாக இருக்கிறார்கள். அதனால் கடன் வாங்கும் காலத்தில் அத்தியாவசியமாக தேவையிருந்தால் மட்டும் வாங்குகிறார்களே யொழிய சாதாரணமாய் எக்காலத்திலும் வாங்குகிறதில்லை. அப்படி வாங்கும் கடனையும் தவணைப்படி வட்டியையும் அசலையும் செலுத்த ஒரு ஊக்கமும் ஏற்படுகிறது. அப்படிச் செலுத்தாமற் போனால் தன்னுடன் மெம்பர்களாயிருக்கிற வர்களுடையவும் மானேஜிங் கமிட்டிமெம்பர்களுடையவும் மனஸ்தாபத்துக்கு உள்ளாக வேண்டிவரும் சங்கங்களின் மெம்பர்கள் தாங்கள் வாங்கும் கடனை சரிவரத்தவணைப்படி செலுத்தினால் சங்கங்களுக்கு ஸென்ட்ரல் பாங்கிலிருந்து சலிசாய்க் கடன் வாங்கலாம். சங்கங்கள் சரியாக நடந்து வந்தாற் தான் ஸென்ட்ரல் பாங்குகளிலும் டிபாஸிட் செய்ய மற்றவர்களுக்கு எண்ண முண்டாவதுடன் ஸென்ட்ரல் பாங்கும் மற்ற பாங்குகளில் சலிசாகக் கடன் வாங்கக் கூடும். ஸென்ட்ரல் பாங்கு சலிசாக கடன் வாங்கக் கூடிய விஷயத்தில் சங்கங்களுக்கும் வட்டிசலிசாகக் கொடுப்பார்கள். சங்கத்தின் மெம்பர்களுக்கும் குறைந்தவட்டி யேற்படும். ஸென்ட்ரல் பாங்கை உயிராகவும் சங்கங்களை உடலாகவும் பாவித்து உடல் அங்கங்கள் புஷ்டியாயுமிருக்கிற ஸ்திதியில் உயிர் ஹானியில்லாமல் நீடூழி வாழும்.

சங்கத்தின் காரியங்களை நிர்வாகம் செய்கிறவர்கள், சரியாக நடத்துகிற விஷயத்தில் நிர்வாகத்தார்களிடத்தில் மெம்பர்களுக்கு ஒரு நம்பிக்கையும் விசுவாசமும் உண்டாகிறது. ஒருவருக்கொருவர் ஏதாவது மனஸ்தாபம் நேரிட்டாலும் நிர்வாகத் தாரிடம் சொல்லிக் கொள்ளலாமென்று தோன்றுகிறது. அவர்களிடத்தில் தெரியப்படுத்தினால் நியாயத்தை தெரிந்துசொல்லி உபயத்திராளுக்கும் புத்திமதி சொல்லி விவகாரங்களைப் பைசல் செய்ய ஹேது வுண்டாகிறது. அப்படிச்செய்து விடும் பட்சத்தில் கோர்ட்டுகளுக்குப் போகாமல் பணச்செலவு மில்லாமல் சீக்கிரத்தில் தங்களுக்குள்ள விவகாரங்களும் தீர்ந்து ஐக்கியத்திற்கு வருத்தமில்லாமல் சமாதானமாகி விடுகிறார்கள். "கோர்ட்டு அடுத்தான் ஓடு எடுத்தான்" என்ற பழமொழி உண்டு. கோர்ட்டுகளுக்குப் போய் கெட்டுப்

போனவர்கள் அநேகர்களைப் பார்த்திருக்கலாம். கிராமங்களில் ஏற்படும் விவகாரங்கள் நீதியுடன் பைசலாக யதார்த்தமும் தெரியும்.

சங்ககாரியங்கள் சரிவர நடக்கும் விஷயத்தில் தங்களங்கத்திர்களுக்கு வேண்டிய சுகாதார சாதகங்களை நிர்வாக கம்மிட்டியாரைக் கொண்டே சர்கார்தரப்பில் நடத்திக்கொண்டு வருகிறார்கள். இங்கு ஒரு சொஸைட்டியைக் கொண்டு தாலூகா போர்டார் கிணறு வெட்டியதும் வடமலைபுரம் சொஸைட்டியைக் கொண்டுரோட் போட்டு வைத்ததும் எல்லாருக்கும் தெரிந்ததே. அவ்விதம் நம்பிக்கை மட்டும் ஏற்படுகிற விஷயத்தில் கிராம காரியங்களில் தாங்கள் பிரவேசிக்கிறதை நிறுத்திவிட்டு சர்க்காரில் எல்லாவற்றையும் இதிலுள்ளவர்களுக்கே விட்டுவிடுவார்கள். அவ்விதம் ஏற்பட்டால் எவ்விடத்திலும் நம்முடைய நாட்டுக்கு இப்பொழுதுநடந்துகொண்டுவருகிற சண்டைக்குப்பிற்பாடு 'ஹோம்ரூல்' அல்லது சுய ராஜ்ஜியம் கொடுக்கப் போகிறதாகச் சொல்வதற்கு நம்மை தயாரித்துக் கொண்டிருப்போம். இப்பொழுதும் அநேகம் பேர்கள் நாம் சுயராஜ்ஜியத்துக்கு லாயக்குள்ளவர்களா வென்பதை சந்தேகித்து கான்பரன்ஸுகளிலும் மற்ற சபைகளிலும் பேசுகிறார்கள். ஐக்கிய சங்கங்களில் பயிற்சியுள்ளவர்கள் அவ்விதம் பேசத் துணியார். கள்ள நாட்டில் ஐக்கிய நாணயச் சங்கங்கள் ஏற்பட்ட பிற்பாடு அவர்கள் தங்கள் தொழிலை விட்டு நாணய வியவசாகிகளாயிருப்பதும் மிகவும் தாழ்ந்த ஜாதியென்று ஜனங்கள் எண்ணுகிற பள்ளர்களில் ஒருவர் ஒரு சொஸைட்டிக்குப்பிரஸிடெண்டாக விருந்து சொஸைட்டியின் காரியங்களை சரிவர நடத்தி வருகிறதும் நன்றாய்த் தெரியவருகிறது. ஒருவருடைய மேன்மையும் தாழ்மையும், நாணயத்தையும் யோக்கியதையும் பொருத்ததேயொழிய ஜாதியை மட்டும் பொருத்ததல்ல. நந்தனுருக்கு ஈசுவரன் அருள்புரிந்ததும் எல்லாருக்கும் தெரிந்த விஷயம். இங்கிலாந்தில் முன் ஸெக்ரீடெரி ஆப் ஸ்டேட் ஆக விருந்த லார்ட்மார்லி அவர்கள் நிருபண சபைகளை சீர்திருத்தி அதிகப் பிரதிநிதிகளை யேற்படுத்திய காலத்தில் இந்தியாவில் பொது காரியங்களுக்கெல்லாம் நீங்கள் ஆஸ்பதமாக வைத்துக்கொண்டு ஏற்படுத்த வேண்டுமென்று சொல்லி யிருக்கிறார்கள். பூர்வ காலங்களில் சங்கங்களிலுள்ள பஞ்சாயத்து மூலமே சகல காரியங்களும் சேர்ந்து வந்திருக்கின்றன. பஞ்சாயத்தும் போய்விட்டது. ஊர்களில் கட்சி, கோர்ட்டுகளுக்குப் போதல், பொருள் இழத்தல் எல்லாம் ஒன்றின்மேலொன்று ஏற்பட்டு விட்டன. இப்பேர்க்கொத்த ஸ்திதியில்லாமல் மறுபடியும் கிராமவாசிகளுக்கு முந்தின ஸ்திதி யேற்பட வேண்டுமானால் அதற்கு ஐக்கியநாணயச் சங்கங்கள் முக்கிய சாதனமாகும். சங்கங்கள் காரியங்களை சரிவர நடத்துவதில் ராஜாங்கத்தாருக்கு கிராமவாசிகளிடத்



தில் நம்பிக்கையும் ஏற்படுகிறது. கிராமவாசிகளும் கோர்ட்டுகளுக்கும் போகாமல் உள்நாட்டிலேயே தங்கள் விவகாரங்களைத் தீர்த்துக் கொள்ளக் கூடியதாயு மிருக்கிறது. இமயமலையிலிருந்து கன்னியா குமரி வரையெந்தவிடத்திலும் பிரஸ்தாபிக்கப்படுகிற சுய ராஜ்ஜியத்தை அடைகிறதற்கு இச்சங்கங்களே அப்பியாசப் பள்ளிக் கூடங்களா யிருக்கின்றன.

---

# ஐக்கிய முயற்சியின் அபிவிருத்தி.

## ஹடாப்ஸர் கோவாப்ரேடிவ் சொஸைட்டி.

பம்பாய் கவர்னரான லார்ட் வெல்லிங்டனின் அக்கிராசனத்தின் கீழ் சென்ற செப்டம்பர் மாதம் 6-ம் தேதி இச்சொஸைட்டியின் 7-வது வருஷத்திய மீட்டிங் ஹடாப்ஸரில் நடைபெற்றது. சுமார் 3,000 விவசாயிகளும், 500 ஸ்திரீகளும் ஆஜராயிருந்தார்கள். அவர்களில் சிலர் தொலைதூரங்களிலிருந்து வந்திருந்தார்கள். இந்தியா ஊழிய சங்கத்தைச் சேர்ந்தவரும் இச்சொஸைட்டியை ஆரம்பித்தவருமான மிஸ்டர் தேவதார் என்பவர் சென்ற 7 வருஷங்களில் இச்சொஸைட்டி செய்த வேலையைப் பற்றிய சுருக்கமான ரிபோர்டு ஒன்றைப் படித்தார். அதன் சாராம்ஸம் வருமாறு:—"இந்தியாவின் மாதிரி சொஸைட்டி" என்று டைம்ஸ் ஆப் இந்தியா பத்திரிகையால் நாமதேயம் இடப்பெற்ற, இந்த சொஸைட்டி இவ்வூர் விவசாயிகளின் சௌகரியத்திற்காக 1910-ம் வருஷத்தில் இந்தியா ஊழிய சங்கத்தின் மெம்பர்களால் ஆரம்பிக்கப்பட்டது. முதல் வருஷக் கடைசியில் 89 மெம்பர்கள்தான் இருந்தார்கள் அதன் பிறகு அவர்களின் தொகை 161 ஆயிற்று, அதில் ஸ்திரீ மெம்பர்களின் சங்கியை 19. அவ்விடத்திலுள்ள பிராமணர், மகாராட்டியர், மாலிகள், தையற்காரர்கள், நாவிதர்கள், வண்ணார்கள், பஞ்சமர்கள், லிங்காயத்தார்கள், மகமதியர்கள், இந்திய கிறிஸ்துவர்கள் ஆகிய அநேக வகுப்பினர்கள் மெம்பர்களாக சேர்ந்திருக்கிறார்கள். 1910-11,ல் கிராமத்திலுள்ள மெம்பர்களிடமிருந்தும் மற்றவர்களிடமிருந்தும், வெளியூரார்களிடமிருந்தும் வந்த டிபாஸிட்டுத் தொகை ரூ. 5,374 இதில் ரூ. 100 ஸ்திரீகளிடமிருந்து வந்தது. 1916–17ல் இத்தொகைகள் முறையே ரூ. 47,393-ம், ரூ 8,897ம் ஆயிற்று. 1910-11ல் மெம்பர்களுக்குக் கொடுத்திருந்த கடன் தொகை ரூ. 9,273. 1916-17ல் அவ்விதம் கொடுக்கப்பட்ட தொகை ரூ. 97,817. மெம்பர்கள் சாதாரணமாய் விவசாய விஷயங்களுக்காக கடன் வாங்கி அவைகள் சம்பந்தமான எரு, விதை, மாடு, கருவிகள் முதலியன வாங்கவும், கிஸ்திகள் கொடுக்கவும், புதுக்கிணறுகள் தோண்டி தரிசுகளைச் சீர்திருத்துதல், முதலியன

செய்யவும் உபயோகிக்கிறார்கள். கடன்களில் அநேகம் ஒரு வருஷத்திற்குள் முடியக் கூடியவை. டிபாஸிட்டுத் தொகைகளுக்கு கொடுக்கும் வட்டி 100க்கு $5\frac{1}{2}$ முதல் $6\frac{1}{4}$ வரையில் காலவரம்புக்குத் தக்கபடியும், கடன்களின் பேரில் சொஸைட்டி விதிக்கும் வட்டி 100-க்கு $9\frac{3}{8}$ வீதமுமாக இருக்கிறது. சொஸைட்டிக்கு உள்ளூர் டிபாஸிட்டுகள் நன்றாய்ச் சேருகின்றன. கிராமங்களிலுள்ள குழந்தைகளுக்கு வித்தியாதான சௌகரியத்தின் பொருட்டு "வித்தியா நிதி" என்று ஒரு பண்டு கிராமத்தார் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அத்தொகை இப்பொழுது சுமார் ரூ. 2,000 ஆயிருக்கிறது. சொஸைட்டியின் சேமநிதித்தொகை இப்பொழுது ரூ. 11,520, அதில் ரூ. 7,000 யுத்தக் கடன் பத்திரத்தில் போடப்பட்டிருக்கிறது.

இந்த சொஸைட்டிக்கு அநேக பிரமுகர்களுடைய பேட்டி ஏற்பட்டது; அவர்களுள் ஸர் ராபட் கார்லைல், ஸர் ரிச்சர்ட் லாம்ப், ஸாங்லிதேசத் தலைவர், கோவபரேஷன் கமிட்டியின் மெம்பர்கள், இண்டோர் மகாராஜா ஸாஹேப் ஹோல்கார் அவர்களுடைய பிரதிநிதிகள் முதலியோருள்ளார்கள்.

இந்த சொஸைடியினால் மெம்பர்களுக்கு ஏற்பட்ட சௌகரியங்கள் பலவுள. இலகுவான வட்டிக்கு முதல் கொடுத்ததினால் மெம்பர்கள் விவசாய விஷயங்களில் நவீனச் சீர்திருத்த ஏற்பாடுகளை அனுஷ்டிக்க இடமுண்டாயிற்று. கரும்பு விவசாயம் அதிகமான பூமிகளில் பரவிற்று, ரசாயனச் செயற்கை எருக்கள் வருஷாவருஷம் வாங்கி உபயோகிக்கப்படுகின்றன. கிராமத்தார்கள் புதுமாதிரிக் கலப்பைகளில் சுமார் 60 வாங்கி யிருக்கிறார்கள். 10 புதிய கிணறுகளும் கட்டியிருக்கிறார்கள். கிராமத்தில் விசேஷச் சீர்திருத்தங்கள் பல இப்பொழுது ஏற்பட்டிருக்கிறதற்கும், இந்த சொஸைட்டிதான் காரணமென்று சொல்லப்படுகிறது. கிராமத்தில் தற்காலம் 50 பைஸிக்கில்களும், (Bicycles) 12 தையல் யந்திரங்களும் இருக்கின்றன. மெம்பர்கள் தங்களுக்குள்ளே தனிமையாக ஒரு மளிகைக்கடை ஏற்படுத்தி அது அநேக மெம்பர்களுடைய ஆதரணையினால் நன்றாய் விருத்தியடைந்துக் கொண்டிருக்கிறது. கோவாப்ரேடிவ் முறையில் ஒரு கரும்பாலையும ஏற்படுத்தியிருக்கிறார்கள். சுமார் 12 மெம்பர்கள் சேர்ந்து பொதுப் பிரயோஜனத்திற்காக ஏறக்குறைய ரூ. 2,000 பெறுமான வீடு ஒன்று கட்டியிருக்கிறார்கள்; அதில் ஒருசிறிய புஸ்தகசாலையும் (Library) படிக்குமிடமும் (Reding room) ஏற்படுத்தியிருக்கிறார்கள். அவ்விடத்தில் அவர்கள் பல விஷயங்களைப் பற்றி விவகரித்தல் மிக ஒழுங்காயும் அழகாயும் இருக்கிறது. உயர்தரப் படிப்பின் உபயோகத்தை அறிந்து



அதன் விருத்திக்கென்று ஒரு நிதி ஏற்படுத்தி யிருக்கிறார்கள். அதில் இப்பொழுது ரூ. 2,000க்கு மேல் சேர்ந்திருக்கிறது. பம்பாயிலுள்ள "மிஸ் ப்ளோரன்ஸ் நைடிங்கேல் வில்லேஜ் ஸானிடேஷன் கமிட்டி' யாரின் உதவியைக்கொண்டு கிராம சுகாதாரவிருத்திக்காக "ஸானிடேரிகமிட்டி" ஒன்று ஏற்படுத்துவதாக பிரஸ்தாபமிருக்கப் படுகிறது. தகுந்தமூலதனம் ஏற்படும்போது தங்கள் விளைபொருள்களின் விற்பனைக்காக பூனாவிலாவது, இவ்விடத்திலாவது மொத்த வியாபாரக்கடை ஒன்று ஏற்படுத்த வேண்டும் என்று மெம்பர்களுக்கு ஒரு அபிப்பிராயமிருக்கிறது. இத்துடன் நில்லாமல் குடிகளின் பொறுப்பு இன்னதென்பதை ஒவ்வொரு மெம்பருக்கும் போதித்து சண்டை பூசல், கோர்டுக்குப் போதல் முதலிய வியாச்சிய விவகாரங்களைத் தடுத்து சகோதர பாபம் விசேஷமாய் ஏற்பட வேண்டிய காரியங்களைச் செய்து பஞ்சம், கொள்ளை நோய், தீவிபத்து முதலியவைகளை வராமற் தடுக்கவும், வந்தால் நிவர்த்திக்கவும் என்று ஒவ்வொருவரும் தங்கள் சக்திக்கியன்றவரையில் சகாயம் செய்யும்படி நிதி ஒன்று ஏற்படுத்தி இம்மாதிரி இச்சங்கம் எல்லாருக்கும் உண்மையான லௌகிக முறைகளைக் கற்றுக் கொடுத்திருக்கின்றது. சுருங்கச் சொல்லின் இந்த சொஸைடி மெம்பர்கள் கிராம விவகாரங்கள் பலவற்றையும் வெகு அழகாய் தாங்களே நடத்திக் கொண்டு தன் மெம்பர்களின் ஒழுக்கங்களை சீர்படுத்திய ஆக்ஷியில் பிரதம பாடத்தை அழகாய்க் கற்றுக் கொடுத்திருக்கிறது.

சொஸைடியின் செகரிடெரியான ராய் சாஹேப் லக்ஷ்மணராவ் சாசேன் அவர்கள், வித்தியாபண்டியிலிருந்து ரூ. 800-யையும் மாதம் ஒன்றுக்கு ஒருபையனுக்கு ரூ. 2-ம், ஒருபெண்ணுக்கு ரூ. 2-ம், ஸ்காலர்ஷிப் என்னும் உபகாரச் சம்பளம் கொடுக்கத்தீர்மானித்தபடி இந்த ஸ்காலர்ஷிப் (உதவிச்சம்பளம்) கவர்னர்பேரிலும் அவர் சம்சாரத்தின் பேரிலும் வழங்க பிரியப்படுவதாகத் தெரிவிக்கவே அவர்களும் ஒப்புக்கொண்டதின் பேரில் அப்படியே யேற்படுத்தப்பட்டது.

## கவர்னரவர்களின் உபந்நியாசம்.

கவர்னரவர்களும் விசேஷ ஆரவாரக் கிளர்ச்சியில் எழுந்துதான் அன்று கோவாப்ரேடர்களுக்கு மத்தியில் இருக்கக் கிடைத்ததினால் தனக்கு ஏற்பட்ட மிகுந்த சந்தோஷத்தையும் அதிலும்தான் விவசாய சொஸைடியாரின் மத்தியில் இருக்க ஏற்பட்ட விசேஷ ஆனந்தத்தையும் எடுத்து விளக்கினார். தேச க்ஷேமத்திற்கு விவசாயந்தான் ஆதாரமென்றும் இந்தியாவில் எவ்வளவு விவசாய கோவாப்ரேடிவ் சொஸைடிகள் எற்படக் கூடுமோ அவ்வளவும் ஏற்பட்டால் தனக்கு வெகு சந்தோ

ஷம் உண்டாகுமென்றும் சொன்னார். ஹாடாப்ஸர் வெகு இன்பமான இடமாகையால் அவ்விடத்திற்குத் தான் வரப்பெற்றதே தனக்கு இன்னொருவித ஆனந்தம் என்றும் மேலும் இந்ததேச கவர்ன்மெண்டில் சம்பந்தப்பட்ட அநேக பிரமுகர்களும் அநேக முக்கியமான பிரஜைகளும் கூடியிருக்கும் காக்ஷிகிடைக்கப்பெற, தான் அதிர்ஷ்ட சாலியாயிருக்க வேண்டுமென்றும் சொன்னார். ஹடாபஸ்ர் கோவாபரேடிவ் கிரெடிட் சொஸைடி இந்த ராஜதானிக்கே ஒரு திலகம்போன்ற சங்கம்; இந்தியா சொஸைடி எல்லாவற்றிற்குமே திலகம் போன்றது என்றும் சொல்லலாம். என்றாலும் அதன் முன்னேற்றம் இன்னும் கொஞ்சம் நிதானமாக இருத்தல் நலம் என்று அபிப்பிராயப்பட்டார். ரிபோர்டில் வெகுமுக்கியமென்று தனக்குப்பட்டது வியாஜ்ய விவகாரங்களைப் பற்றியது என்றார், வியாஜ்ய விவகாரங்களினால் ஏற்படும் மகத்தான கஷ்டங்களை நிவர்த்திக்க இச்சொஸைடி நல்லமார்க்கமாயிருந்து அத்தகைய விஷயங்களைக் குறைத்துவரும் நன்மையும் மிகவியக்கத் தக்கதென்றார். அநேக கௌரவமானபோட்டாபோட்டி வேலைகளை உண்டாக்கி அதனால் கோவாபரேஷனும் சுய ஒத்தாசையும் தங்களுக்குள் ஏற்படுத்தப்பெற்றார்கள்; இந்த நிலைமையில் இந்திய ஊழியச் சங்கத்தாரையும் முக்கியமாய் தன்னுடைய பழைய நேசரான மிஸ்டர் தேவதாரையும் இத்தகைய வேலையில் இவ்வளவு ஊக்கம் எடுத்துக்கொண்டு இந்தியர்களின் பிரயோஜனத்திற்காக இடைவிடாது அவர்கள் உழைப்பதற்காக தான் சந்தோஷப்படுவதை பகிரங்கமாய்ச்சொல்ல இதுவே சமயம் என்று சொன்னார். இந்தியர்களுக்கு கௌரவம் உண்டாகவேண்டுமானால் இந்திய ஊழியசங்கத்தார்களைப்போல் தங்களால் இயன்ற முழுப்பிரயத்தனங்களும் செய்தே தீரவேண்டும் என்றும் ஒவ்வொரு இந்தியர்கள் மனதிலும் நல்ல எண்ணங்களும் தீர்மானங்களும உண்டாகும்படி செய்யாவிட்டால் தேச ஜனங்களை சீர்திருத்தல் சாத்தியமாகாதென்றும் எடுத்துக்காட்டினார்.

இம்மாதிரி எண்ணங்களைப் பரவவைப்பதில் தனக்கு வெகு திருப்தி இருப்பதினால்தான், தான் அன்று அங்குவந்ததாகவும் சொன்னார். உபாயமாக ஆரம்பித்து இப்பொழுது கிளைச்சங்கங்களை ஏற்படுத்தி சொந்தமாக எண்ணை இஞ்சினும் கரும்பாலையும் ஸ்தாபித்து பிண்ணாக்குகள் சேகரிக்க டிபோ ஏற்படுத்துந் தறுவாயில் இருப்பதென்றும் மெச்சினார். இதரவிஷயங்களை கவனிக்கப் புகுந்த ஸ்திரீகளிடம் தனக்கு எப்பொழுதும் மிக கௌரவ மதிப்புவுண்டென்றும் நல்ல ஸ்திரீகள் சண்டை விஷயமாய் எவ்வளவு உழைத்து யுத்தக்கடன்களிலும் தங்கள் பணங்களை ஈடுபடுத்தி ஒத்தாசை செய்கிறார்கள் என்றும் தான் அதற்காக அவர்களுக்கு மிகவும் வந்தன மளிப்பதாகவும் சொன்னார். இம்மாதிரி



அறிகுறிகளினால் வரவர க்ஷேமகரமே ஏற்படும் என்று அவர்கள் நம்பிக்கையுடன் எதிர்பார்க்கலாம் என்றும், விவசாய கோவாபரேஷனில் உண்மையான தேசாபிமான முள்ள கௌரவமுள்ள ஜனங்கள் முன்னுக்கு வந்து உழைக்கவேண்டும் என்றும், இம்மாதிரி எண்ணம் இந்தியா முழுவதும் பரவினால் இந்தியாவுக்கு வெகு நன்மைகள் அவசியம் உண்டாகும் என்றும், தேசீயச்சீர்திருத்தங்கள் வெகு அழகாய் ஏற்பட்டு விடுமென்றும் அம்மாதிரி ஏற்படுதல் தனக்கு வெகு திருப்தியென்றும் நல்ல புத்திமதிகள் கொடுக்கக்கூடிய மேதாவிக் கூட்டங்கள் ஏற்படுகிற வரையில் வேலை அழகாய் நடைபெறுதென்றும் அபிப்பிராயப்பட்டார். கடைசியாக கவர்னரவர்கள் இந்த சொஸைடி இதுவரையில் செய்திருக்கும் அழகான வேலைகளினால் இனிமேன் மேலும் அபிவிருத்தி யடையுமெனக் கூறினார்.

## திருநெல்வேலி ஜில்லா கவர்ன்மெண்ட் உத்தியோகஸ்தர்களின் கோவாபரேடிவ் சொஸைடி.

திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள கவர்ன்மெண்ட், உத்தியோகஸ்தர்களுக்காக ஏற்பட்ட இச்சங்கம் 1916 வருஷம் ஜனவரி மாதம் 26-ம் தேதி ரிஜிஸ்தர் செய்யப்பட்டு அடுத்த மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டது. நமது பார்வைக்கு அனுப்பப்பட்ட இந்த ரிபோர்ட் அதன் இரண்டாவது வருஷத்தியது. மெம்பர்களின் சங்கியை முந்திய வருஷத்தில் 199-ஆக இருந்தது, இப்பொழுது 563-ஆக அதிகரித்திருக்கிறது. இதில் அதன் தூத்துக்குடி கிளை ஆபீசில் சேர்ந்த 25 பெயர்கள் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். கொடுக்கப்பட்டிருக்கிற பங்குத்தொகை ரூ. 1,130 லிருந்து ரூ. 2,595 ஆயிருக்கிறது. மெம்பர்களிடமிருந்தும், அன்னியர்களிடமிருந்தும் வந்த டிபாஸிட் தொகை ரூ. 3,100. இத்தொகையால் ரூ. 3,000 ஒரு அன்னியனுடையது. இச் சொஸைடியின் வேலையில் கவனிக்கத்தக்கது ஒன்று, என்னவென்றால் இதுவெளி யிடங்களில் கடன்வாங்கப் போகிறதில்லை திரவிய ஒத்தாசையை உள்ளூரிலேயே பெறுகிறது. அங்கிருக்கும். "ஸௌத் இந்தியன் பாங்கி" தேவையான தொகை கடன் கொடுக்க ஒத்துக்கொண்டிருக்கிறது, அம்மாதிரி அந்தபாங்கிலிருந்து பெற்றகடன் தொகை ரூ. 12,221-3-2 அதில் சுமார் ரூ. 8,886 இந்த வருஷத்தில் திருப்பிக் கொடுக்கப்பட்டது. ரூ. 12,0[illegible]0 அடங்கிய 195 கடன்கள் மெம்பர்களுக்குள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ரூ. 50ம் அதற்குட்பட்டதுமான கடன்கள் மொத்தத்தில் 100-க்கு 31 பாகமாயிற்று: 31 கடன்கள் விவசாயத்திற்காகவும் 64 கடன்கள் வியாபாரம் முதலியவற்றிற்காகவும் ஏற்பட்டன. இந்த சொஸைடியினால் மெம்பர்களுக்கு ஏற்பட்ட உபயோகம் பலவுள.

இந்த சொஸைடியின் உதவியினால் ரூ. 1,92. அடங்கிய 26 கடன்கள் அதிகவட்டிக்கு மெம்பர்கள் பேரில் இருந்தவை அடைபட்டன. உபாயசம்பளத்திலுள்ள கவர்ன்மெண்ட் உத்தியோகஸ்தர்கள் அநேகர் அறுவடை காலங்களில் மொத்தமாய் நெல் வருஷாந்தர சாமான்கள் முதலியன வாங்கிக்கொள்வதற்காக கடன்கள் கொடுத்து ஒத்தாசை செய்யப்பட்டார்கள். அப்படிப்பட்ட கடன்கள் 97, தொகை ரூ. 5,495; அதாவது மொத்தம் கொடுத்திருந்த கடன்களில் சுமார் அரைப்பங்கு. இதை தவிர 18 பெயர்கள் தங்கள் வீடுகளை ரிபேர் செய்தார்கள், 3 பெயர்கள் நிலங்களை சீர்திருத்திக் கொண்டார்கள், இருவர் தங்கள் குழந்தைகளின் வித்தியாப்பியாசத்திற்காக உபயோகப்படுத்தினார்கள், மூவர்கள் தங்கள் குடும்பங்களிருந்த வியாதியஸ்தர்களுக்கு ஸிகிச்சை செய்தார்கள், ஒரு கடன் பிரஸவ செலவிற்காக கொடுக்கப்பட்டது. சுருங்கச் சொல்லின் உபாயவரும்படியுள்ள ஜனங்களுக்கு சௌகரியமான ஏற்பாடுகளில் கடன் கொடுத்ததினால் அவர்களும் மென்மேலும் சுவாதீன சுதந்திரர்களாகயிருக்கிறார்கள். இந்த ஜில்லாவில் விசேஷமாய் உபாயசம்பளத்திலுள்ள கவர்ன்மெண்ட் உத்தியோகஸ்தர்களுக்கு இச்சொஸைடி மிக நன்மைகளை விளைவிக்கின்றன.

அநேகமாய் எல்லா மெம்பர்களும் தங்களுடைய கடன்களை வெகு ஒழுங்காகக் குறிப்பிட்டபடி கொடுத்தார்கள் வர்த்தமான. வருஷத்தின் கடைசிதினத்தில் காலங்கடந்து நிலுவையிலிருந்த தொகை ரூ. 204-7-6 தான், நடந்திருக்கும் விசேஷ லேவாதேவிகளை கவனித்தால் இது ஒரு பெரிய தொகையல்ல, இந்த வருஷத்தின் நிகரலாபம் ரூ. 86-6-4. சென்ற வருஷத்திய லாபம் ரூ. 65-13-0. பங்குத்தொகையின் பேரில் 100க்கு 6வீதம் டிவிடெண்டு கொடுத்த பிறகு மேற்படி லாபம் கிடைத்தது. இரண்டு பொது சமூக மீட்டிங்குகளும் (General body meeting) மானேஜிங் கமிட்டியார் மீட்டிங்குகள் 21-ம் நடைபெற்றன. பின்கூறியவைகளில் இரண்டு மீட்டிங்குகள் "கோரம்" இல்லாமையினால் ஒத்திவைக்கப்பட்டன.

ஒன்றரை வருஷத்திற்குள் இவ்வளவு திறமையாய் வேலைநடத்தியதற்கு மானேஜிங் கமிட்டியாரை மிகவும் கௌரவப்படுத்த வேண்டும்.



## தஞ்சாவூர் ஜில்லா கோவாபரேடிவ் எரு சொஸைடி.

இது இந்தஜில்லாவில் எரு விஷயத்திற்காக ஏற்படுத்தப்பட்ட முதற் சங்கம். அது 1916 வருஷம் அக்டோபர் மாதத்தில் வேலைசெய்ய ஆரம்பித்தது. நமது பார்வைக்கு அனுப்பப்பட்ட அவர்களுடைய வேலையின் ரிபோர்ட்டு 9 மாதத்திய கணக்குத்தான் பிரஸ்தாப வருஷத்தின் கடைசி நாளில் 87 மெம்பர்கள் இருந்தார்கள். அவர்களில் 43 பெயர்கள் ஸொஷியேட்ஸ் அவர்கள் பொதுவாய் ஸொஸைடிக்கு எலும்புகள் சம்பாதித்துக் கொடுக்கிறது, ஆனால் அதில் பங்கெடுத்துக் கொள்ளாதவர்களுமான பறையர்கள். இதர மெம்பர்களால் எடுத்துக் கொள்ளப்பட்ட பங்குகளின் தொகை 49, அதற்காக வசூலான ரூ. 445.

மேற்குறித்த காலத்தில் "நீடாமங்கலம் அக்ரிகல்சரல் பாங்கி"லிருந்து ரூ. 596-8-4 கடன்கள் வாங்கப்பட்டன. அதில் ரூ. 213 வருஷக் கடைசியில் நிலுவையிலிருந்தது. 6-டன் 53 ராத்தல் எலும்புகள் ரூ. 188-14-10-க்கும், 1டன் பாஸ்பாடிக் நாட்யூல்ஸ், ரூ. 25-க்கும் வாங்கப்பட்டன. உடைக்கும் டுகலவு, மில்செலவு உள்பட அவைகளின் மொத்த விலை ரூ. 404-6-9 ஆயிற்று. இதர தினுசான எருக்கள் அதாவது மானாவாரி அலரி, இலுப்பக்கட்டி, மீன்பிச்சி இவைகளும் எடுக்கப்பட்ட நெல் விதைகளும் ரூ. 1036-10-3-க்கு வாங்கப்பட்டன, அவைகளின் விக்கிரயம் ரூ. 920-15-7. வருஷத்தின் மொத்த லாபம் ரூ. 111-12-5. இந்த வருஷத்தில் ஒரு பொது மீடிங்கும், 3 கமிடி மீடிங்குகளும் நடந்தன. அவைகளில் ஒன்றாவது "கோரம்" இல்லை என்று ஒத்திவைக்கப் படவில்லை என்பதை கவனிக்க திருப்தியாயிருக்கிறது. மெம்பர்கள் அடைந்த சௌகர்யங்கள் பலவுள. எருவிற்கும் ஷாப்புகளில் ஸாதாரணமாய் பாஸ்பாரிக், ஆஸிட், எலும்பு உரமும் விற்கப்படுகிறது. பாஸ்பாரிக்ஆஸிட்மாவு, பாஸ்பேட்டும், மீன்பிச்சியும் டன் ஒன்றுக்கு முறையே 30 முதல் 80 ரூ. வரையிலும், 125 முதல் 130 ரூ. வரையிலும் விற்கப்படுகின்றன. இந்த சொஸைடியிலிருந்து மெம்பர்கள் வாங்கும் விலையோ என்றால் முறையே ரூ. 65, ரூ. 37-8-0. எருவினுடைய தறம் எல்லாவற்றிலும் ஒரேமாதிரிதான். மேலும் விலையில் இவ்வளவு சகாயம் இருப்பதோடுகூட மெம்பர்களுக்கு தாங்கள் செலுத்திய பங்கு தொகையின் பேரில்டிவிடெண்டு கிடைத்தது. அப்படிக் கிடைத்த தொகையின் மொத்தம் இவ்வருஷத்திற்கு ரூ. 250 இச்சங்கத்தை நிர்வகிப்பவர்கள் வியவசாய இலாகா டிப்டி டைரக்டர் அவர்களோடு அடியிற்கண்ட விஷயங்களை குறித்து ஆலோசனை செய்து அவரிடமிருந்து பெற்றபுத்தி மதிக்கு மிகவும் நன்றி பாராட்டுகிறார்கள். அவையாவன;—

(1) ஸொஸைடிக்கு கவர்ன்மெண்டு உத்திரவுப் பிரகாரம் எருதின் சம்ரக்ஷணைக்காக ரூ. 100 இனாம் கொடுக்கும் ஏற்பாட்டை அநுஸரித்து ஒரு பொலிவுகாளை வாங்குதல்.

(2) மெம்பர்களுக்குத் தேவையான பல்வித பாஸ்பாடிக் எருக்களின் மதிப்பை ஏற்படுத்தல்.

(3) மங்க நெல்லூர் பூமியில் மாதிரிக்கு நெல்விளைவித்தல்.

(4) குறிப்பிட்ட நெல்விதைகளை மெம்பர்களுக்குள் பங்கிட்டு கொடுத்தல்.

(5) ஜுன்மாதம் முதல் அக்டோபர் முடியும் வரையில் ஏற்றிய எருக்களை உபயோகிக்கும் விதம் மெம்பர்களுக்கு தெரிவித்தற்பொருட்டு வியவஸாய இன்ஸ்பெக்டர் ஒருவர் அவசியம்.

இந்த ஸொஸைடியின் நிர்வகிப்போர்களுக்கு, அதிலும் முக்கியமாய் ராய் ஸாஹேப். எ. ஸேதுராமய்யர் அவர்களுக்கு, இந்த ஆரம்ப காலத்திலேயே இவ்வளவு முன்னேற்றம் உண்டானதைப் பற்றி மிகவும் கௌரவிக்க வேண்டும்.

---

## வியவசாயமும் கூட்டுறவும்.*

சென்ற சஞ்சிகையில் எழுதியிருந்தபடி ஒரு கிராமத்தில் ஒரு ஐக்கிய நாணயச்சங்கம் ஏற்பாடு செய்யவேண்டுமானால், அந்த இலாகா ஐக்கிய சங்கங்களின் அஸிஸ்டெண்டு ரெஜிஸ்ட்ராரவர்களுக்கு மனுப்போட்டு, அவர் அனுப்பும் சிப்பந்திகளின் மூலமாய் வேலையை நடத்திக்கொள்ள வேண்டும். ஒரு கிராமத்திற் சங்கம் ஸ்தாபிப்பதற்கு ஆரம்பிப்பதற்கு முன் சில விஷயங்களைக் கவனிக்க வேண்டியிருக்கிறது. சங்கமேற்பட்டு அதிற் சேர்ந்த மெம்பர்களின் உபயோகத்திற்காக வேண்டிய தொகையை வெளியிருந்து ஷை மெம்பர்களின் ஜவாப்புதாரியின் பேரில் கடன்வாங்கிக்கொள்ள வேண்டு மென்று சொல்லியிருந்தேன். ஆகையால், சேருகிற மெம்பர்கள் நாணயமுடையவர்களும் சொத்துப் பொறுப்பு உள்ளவர்களுமாக இருக்கவேண்டியது அவசியமாகிறது சங்கத்திற் சேருகிறவனுடைய நோக்கம், தான் பட்டிருக்கும் கடன்களிலிருந்து நிவிர்த்தியாகித் தனக்கு வேண்டிய சௌகர்யங்களைச் சங்கத்தின் மூலமாய்ச் செய்து கொண்டு விருத்தி யடையவேண்டு மென்றிருந்தால் தான், தனக்கும் மற்ற மெம்பர்களுக்கும் பிரயோஜன முண்டு. அப்படியின்றி சுவல்ப ஆஸ்தியும் அதிலிருந்து சுவல்ப வரும்படியுமுள்ள ஒருவன், அதிகக்கடன் பட்டிருந்தால் அவனைச் சங்கத்திற் சேர்த்துக்கொண்டு கடனிலிருந்து அவனை விடுவிக்கமுயல்வது அசாத்தியமாகும். ஒருவன் கழுத்

* பூ. சின்னசாமி ஐய்யர் 'ஜனோபகாரியில்' எழுதியிருக்கிறார்.



துவரையில் சேற்றில் அமிழ்ந்திருந்தால் அவனைத் தூக்கிவிடுவது அஸாத்தியம். அன்றியும், தூக்கி விடப்போகிறவனுக்கும் அபாயமாவதுபோல தலைக்குமேல் கடனை வைத்துக்கொண்டிருப்பவனைச் சங்கத்திற் சேர்த்துக்கொண்டால், அவனால் ஏற்படும் நஷ்டத்திற்கு மற்றவர்களும் பாத்தியப்படுவார்கள். ஆதலால், மெம்பர்களைச் சேர்ப்பதில் மிகவும் ஜாக்கிரதையாயிருக்கவேண்டும்: நல்ல நடவடிக்கையில்லாத ஒருவனைச் சங்கத்திற் சேர்த்துக்கொண்டு அவனால் நஷ்டமடைந்து அவனைப் பிறகு சங்கத்திலிருந்து நீக்குவது, கண்கெட்டபிறகு சூர்யநமஸ்காரம் செய்வதுபோலாகும்.

குடியானவனுக்கு ஏற்பட்ட கடன் சுவல்பகாலமாய் இருக்கும் கடனன்று ; அனேகவருஷகாலமாய் : சில கேசுகளில் தலைமுறை தலைமுறையாய் வளர்ந்துக்கொண்டுவந்த கடனாதலால், அவன் ஒரு சங்கத்திற் சேர்ந்து அதிலிருந்து பணத்தை வாங்கிக் கொடுத்துவிட்டால் கடன் தீர்ந்துப்போகவில்லை. குப்பு செட்டியிடமிருந்த கடன் சங்கத்தின்பேரில் மாறியதே ஒழிய வேறன்று. குடியானவன் நல்ல ஸ்திதிக்கு வரவேண்டுமானால், தான் பட்டிருக்கும் கடனிலிருந்து நீங்கிச் சௌக்யமடையவேண்டுமானால், அவன் தனக்கிருக்கும் சுவல்ப ஆஸ்தியையும் சாவுகாரிக்கு விற்றுவிட்டுப் பரதேசியாய் போகாமலிருக்கவேண்டுமானால் இரண்டேவழிகள்தான் உண்டு. அவனுக்கு திடீரென்று ஒரு புதையல் அகப்படபோகிறதுமில்லை ; அதனால் அவன் கடன்தீர்ந்து அவன் பணக்காரனாகபோகிறதுமில்லை. முதலாவது தன் செலவை குறைக்கவேண்டும்: இரண்டாவது, தன் வரும்படியை அதிகப்படுத்தவேண்டும். தலைமுறை தலைமுறையாய்க் கலியாணம் முதலிய காரியங்களுக்குச் செய்துகொண்டு வந்த முறைகளை விட்டுவிட்டு, ஒரு ரூபாயில் ஒரு மோதிரம் வாங்கி மாற்றிக்கொண்டு செலவைக் குறைக்க அவனால் முடியாது; வீட்டிலிருக்கும் பாட்டிக் கடையை யெடுத்துக்கொள்வாள். இப்படிப்பட்ட செலவைக் குறைக்கக்கூடிய சீர்திருத்தங்கள் காலக்கிரமத்தில் ஆகவேண்டுமே யொழிய ஒரு நாளில் அல்லது 10 வருடங்களில் முடிகிற காரியமன்று. ஆகையால், அவனுக்கிருக்கும் மற்றொரு வழியாவது, வரும்படியை அதிகப்படுத்துவதேயாம். குடியானவனுடைய வரும்படி நிலத்திலிருந்தேதான் என்பது தெரிந்தவிஷயம். நிலத்திற்கு போடவேண்டிய எரு, தழை முதலியவைகளைப் போட்டுச் சாகுபடிசெய்தால்தான் தகுந்தபலன் கிடைக்குமென்பதும் தெரிந்தவிஷயம். நிலத்திற்குவேண்டிய தீனிபோடாமல் 40 கலம் விளையவேண்டுமென்றால் எப்படி கிடைக்கும் ? ஆகையால், முதல் முதல் ஒருவன் சங்கத்திற்சேர்ந்தவுடன், தன் முன்கடனைத் தீர்க்கவேண்டுமென்கிற ஆவலைவிட்டு, வியவசாயச் செலவு

களுக்காகக் கடனைவாங்கி வியவசாயத்தை விருத்திசெய்தால் அதிலிருந்து கிடைக்கும் அதிக வசூலைக்கொண்டு கொஞ்சங்கொஞ்சமாய் முன்கடனை தீர்த்துவிடலாம். மிகவும் அவசரமான கடனைமாத்திரம் சங்கத்திலிருந்து வாங்கிக் கொடுக்கலாமே யொழிய, அவன் வாங்கக்கூடிய அளவுக்குச் சரியாய் முன் கடனுக்காக வாங்கிக்கொடுத்துவிட்டால், சமயத்தில் வியவசாயத்திற்கு வேண்டிய பணம் சங்கத்திற் கிடைப்பது கஷ்டமாகிறது.

ஒரு சங்கம் திருப்திகரமாக வேலைசெய்து வருகிறதென்பதைக் கேட்கும்போது, அந்தச்சங்கத்தின் பஞ்சாயத்தார்களின் கெட்டிக்காரத்தனம் வெளியாகிறது. பஞ்சாயத்தார்கள், ஏழைகளுக்கு வேண்டும்போது அவர்களுடைய நிலைமையை அநுசரித்துக் கடன்கொடுத்தும், கடன்களை வாய்தா தேதிகளில் தவறாமல் வசூல்செய்தும், வாங்கிய கடன் தொகை சரியானவழியில் உபயோகப்படுத்தப்பட்டதாவென்று கவனித்து மெம்பர்களை விருத்திக்குக் கொண்டுவந்தும், சங்கத்தை நல்ல ஸ்திதிக்குக் கொண்டு வரவேண்டும். ஷை காரியங்களைச் சரியாகச் செய்யவேண்டுமானால், பரோபகார சிந்தையுடையவர்களும், கௌரவமுடையவர்களும் பிரதிப் பிரயோசனத்தை எதிர்பாராமலும் தாக்ஷண்ணியமில்லாமலும் சங்கத்தின் விதிகளை அநுசரித்து நடவடிக்கைகளை நடத்தக்கூடியவர்களும்தான் பஞ்சாயத்தார்களாக நியமிக்கப் படவேண்டும்.

பிரதிப்பிரயோசனமில்லாத காரணத்தினாலேயே வேலையைச் சரியாகச் செய்யாத பஞ்சாயத்தார்கள் ஷை வேலைக்கு லாயக்கானவர்களல்லர். பஞ்சாயத்தார்கள் தாங்கள் வாங்கும் கடன்களைச் சரியாகத் தவணைத்தேதிகளில் கட்டிக்கொண்டுவருவதே இதரமெம்பர்களும் அதேமாதிரி செய்ய நல்ல வழியாகும். சங்கத்தின் விதிகளுக்கு விரோதமாய்ப் பஞ்சாயத்தார்களே தவணைத்தேதிகளில் கட்டத்தவறினால், அவர்கள் எப்படி இதர மெம்பர்களின் பாக்கியைக்கேட்க முன்வருவார்கள்? இதனால் சங்கத்தின் பொதுவுபயோகத்திற்காகக் கடன் கொடுத்த ஸென்ட்ரல்பாங்காருக்குச் சரியான தேதிகளில் அஸல்வட்டிகளைக் கொடுக்கத் தவறுதல் நேரிடுகிறது அப்படி இரண்டுமுறை தவறினால், சங்கத்தினுடைய நாணயம் கெட்டுப் போகிறது. சங்கத்தின் நாணயத்தைக் காப்பாற்றவேண்டுமானால், மெம்பர்களில் ஒவ்வொருவரும் தங்கள் நாணயத்தைத் தவறாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

பஞ்சாயத்தார்கள் செய்யவேண்டிய வேலைகளில் மிகவும் முக்கியமானது என்னவென்றால், சங்கத்தைச் சேர்ந்த மெம்பர்களுக்குக் கடன் சாங்ஷன்செய்கிற வேலைதான். இந்த வேலையை அவர்கள் எவ்வளவுக்கெவ்வளவு ஜாக்கிரதையாகச் செய்கிறார்களோ, அவ்வளவுக்கவ்வளவு சங்கம் க்ஷேமமடையும்.



கடன் சாங்ஷன் செய்வதில் பஞ்சாயத்தார்கள் கவனிக்கவேண்டிய அம்ஸங்களில் சிலவற்றைக் கீழே சொல்லுகிறேன்:—

கடன் உபயோககரமான காரியத்திற்காக வாங்கப்படுகிறதா என்பதைக்கவனிக்க வேண்டும். வாங்குகிற கடன் அவசியம்தானா. இந்தப் பணம் இல்லாமல் வேலை முடியாதா என்பதையும் கவனிக்கவேண்டும். ஒரு மெம்பர் தக்க ஜாமீனோடு கடனுக்கு மனுப்போட்டுவிட்டால் போதுமானது என்று பஞ்சாயத்தார்கள் நினைக்கக்கூடாது. ஒரு காரியத்திற்காகக் கடன் மனுவு போட்ட பிறகு, அந்தக் காரியத்திற்கே கடன் தொகையை உபயோகப்படுத்துகிறானா என்பதை கவனித்து, துர்வினியோகப்படுத்தினால் உடனே வசூல் செய்துவிடவேண்டும். எப்பொழுது எல்லாவித உபயோகமான காரியங்களுக்கும் கடன் கொடுக்கலாமென்று விதிகள் இருக்கின்றனவோ; பொய்சொல்லி ஒரு காரியத்திற்காக வாங்கி மற்றொரு காரியத்திற்குத் தொகையை உபயோகிப்பது ஐக்ய நாணயச் சங்கக்கோட்பாடுகளி லொன்றாகிய நாணயத்திற்கு விரோதமாகும் கடன் பட்வாடா செய்யும்போது, பஞ்சாயத்தார்கள் கடன்வாங்கும் மெம்பர்களைப்பார்த்து, வாங்கும் கடன் தொகையைச் சரியானவழியில் செலவழிக்கவேண்டுமென்றும், சிக்கனமாய்க் குடித்தனஞ்செய்து வருஷவரியில் கொஞ்சங்கொஞ்சமாய் வரும்படியிலிருந்து கடனைத் திருப்பிச்செலுத்தத் தங்களாலானவரையில் பிரயத்தனஞ் செய்யவேண்டுமென்றும் வற்புறுத்த வேண்டும். ஜாமீன்பேரில் வென்னிலையாய்க் கடன்கொடுக்கிறதாயிருந்தால் ஜாமீனாக நிற்கும் நபர் யோக்கியர்தானா, கடன் வாங்குபவரை நன்றாய் கவனித்து வாய்தா தேதிகளில் திருப்பிச் செலுத்தும்படி அவருக்கு போதிக்க தகுந்தவரா, சந்தர்ப்பம் நேரிட்டால் சங்கத்திற்கு நஷ்டம் வராதபடி ஜாமீன்தாரரிடத்திலிருந்து வசூல் செய்யமுடியுமாவென்னும் விஷயங்களை நன்றாய்க் கவனிக்கவேண்டும். சாதாரணமாக, ஜாமீன் கடன்கள் சொற்பகாலத் தவணைகளுக்கு மாத்திரம் கொடுக்கப்படவேண்டும். வருஷக்கணக்கில் வாயிதா கொடுக்கும்போது அடமானக் கடனாகவே கொடுப்பது உசிதம். நபர் ஜாமீன்பேரில் கொடுக்குங் கடன்களுக்கு ஜாமீனாக நிற்க ஒப்புக்கொள்பவர், கடன் வாங்குபவரின்பேரில் ஏற்படுத்திய போலீஸ் உத்தியோகஸ்தன்மாதிரி யாகிறார். கடன்வாங்கும் மெம்பர் பணத்தை வீண்செலவு செய்கிறாரென்று தெரிந்தவுடனே ஜாமீன்தார் தன்னுடைய க்ஷேமத்தை உத்தேசித்து ஜாக்கிரதையாய் இருக்கவேண்டும். வாங்கப்பட்ட கடன்தொகைக்கு ஜாமீன்தாரரும் பொறுப்பாய் ஏற்படுகிறபடியால், உடனே அவர் சங்கத்துப் பஞ்சாயத்தார்களிடம் கடன் வாங்கின அந்த மெம்பரின் நடவடிக்கைகளைப்பற்றித் தெரிவித்து, துர்வினியோகப்பட்டது என்று ஏற்பட்டவுடனே, பஞ்சாயத்தார்கள், கட

ளிக்குநோட்டீஸ்கொடுத்து வசூல்செய்துவிட ஏற்பாடுகள் செய்யவேண்டும். சொத்து அடமானமாக வாங்கிக்கொண்டு கடன் கொடுக்கும்போதும் பஞ்சாயத்தார்கள் அதிக ஜாக்கிரதையாய் இருக்கவேண்டும். சொத்தில் கடன்வாங்குபவருக்கு இருக்கப்பட்ட பாத்தியதை, இதரர்களுக்கு இருக்கப்பட்ட பாகம், முன் அடமானம், உயில் முதலிய வில்லங்கங்கள் இவைகளையெல்லாம் கவனிக்கவேண்டும். அடமானக்கடனைக் கொடுப்பதில் இன்னொரு அசந்தர்ப்பம் நேரிடுகிறது; என்னவென்றால், கடன்வாங்கும் மெம்பர், தான் சங்கத்திற்கு நஷ்டம் நேரிடாதபடி தகுந்த பொறுப்புக் கொடுத்துவிட்டபடியால், சாவகாசமாய்த் தான் இஷ்டப்பட்டபோது கடனைத்திருப்பிக் கொடுக்கலாமென்று நினைக்கிறான். பஞ்சாயத்தார்களும், தவணைத்தேதிகளில் கட்டாதவிஷயத்தில், ஆதாரம்தான் இருக்கிறதே யென்று நினைத்துக்கொண்டு தகுந்த நடவடிக்கைகளைச் சீக்கிரத்தில் நடத்துகிறதில்லை.

கையிருப்புத்தொகை அதிகமாய் வைத்துக்கொண்டிருக்கக் கூடாது. வசூலாகும் பணத்தைச் செலவழிக்க ஏற்பாடுகள் செய்யவேண்டும், சங்கம் வாங்கியிருக்கும் வெளிக்கடன்களுக்காகத் திருப்பிச் செலுத்திவிட்டு, வேண்டும்போது மறுபடியும் வாங்கிக்கொள்வதுதான் மிகவும் உசிதமானது.

தவணை தவறியவர்களுக்கு மறுபடியும் சங்கத்தின் வசூலிலிருந்து கடன்கொடுத்து, வாய்தா தவறிய கடனுக்காக வரவு வைத்துக்கொள்ளும் "அட்ஜஸ்ட்மெண்டு" என்கிற வழக்கம் மிகவும் கண்டிக்கத்தக்கது. இப்படி பழைய வாய்தாத்தவறிய கடன்களுக்காகப் புதுப்பத்திரம் எழுதி புதுப்பித்தால் மெம்பர்களுடைய கடன் வருஷவாயில் குறைந்துகொண்டு வருவதுபோய் அதிகரித்துக்கொண்டேவரும். கடைசியில் வசூலிக்கமுடியாத கேசுகள் அதிகமாய்விடும். மேலும் முன் தவறிய மெம்பர்களுக்கே மறுபடியும் "அட்ஜஸ்ட்" செய்வதற்குக் கடன் கொடுப்பதைவிட, அவர்களின் பாகமாகாது சகோதரர்கள், பெண்சாதி முதலியவர்களை மெம்பராகச்சேர்த்து அவர்களின்பேரில் கடன் கொடுப்பது அதிகப்பிசகு. இந்தவிஷயத்தில் பஞ்சாயத்தார்கள் அதிக ஜாக்கிரதையாய் இருக்கவேண்டும்.

முக்கியமாக பஞ்சாயத்தார்கள் யோக்கியர்களாயும், சங்கத்தின்வேலை தங்களுடைய சொந்தவேலையென்று பாவிக்கப்பட்டவர்களாயும் இருக்கவேண்டும். சங்கத்தின் பணம் தங்கள் சொந்தம்போல் கையாளுதற்கு உபயோகப்படுத்தாமல், தங்கள் சொந்தப்பணத்தை வெளியிற் கொடுத்தால், எவ்வளவு ஜாக்கிரதையாய்க் கொடுப்பார்களோ, அவ்வளவு ஜாக்கிரதையாய்ச் சங்கத்து விஷயத்திலும் இருத்தல்வேண்டும. சண்டை



சச்சரவுகள் இராமல் உள்ளூரிலேயே மத்தியஸ்தர்கள் மூலமாய்த் தகரார்களைத் தீர்த்துக்கொள்ளவேண்டும். கணக்கு வகைராக்களைச் செவ்வையாய் அப்போதைக்கப்போது எழுதிவைத்துக் கொள்ளாமல், இரண்டு மூன்று மாதங்களுக்கொருமுறை எழுத உட்காரக்கூடாது. சங்கத்தின் விஷயமாய் ஏற்படும் சாதல்வார்செலவுகளைக் கூடியவரையில் அதிகப்படுத்தாமலிருந்தால்தான் க்ஷேமநிதி அதிகரித்துத் தெய்வாதீனமாய் ஏற்படும் நஷ்டங்களுக்கு உபயோகமாய் இருக்கும். டிபார்ட்மெண்டு உத்தியோகஸ்தர்கள் செய்யும் ரிமார்க்குகளைக் கவனித்து, செய்யவேண்டிய சீர்திருத்தங்களை உடனுக்குடனே செய்துக்கொள்ளவேண்டும். அடிக்கடி மேற்பார்வை செய்துகொண்டேயிருப்பது சங்கத்திற்கு க்ஷேமகரமேயன்றி வேறன்று. கடைசியாக, எல்லா மெம்பர்களும் ஒற்றுமையாய், அவரவர்கள் தங்களால் ஆகவேண்டியவேலைகளைச் செய்துகொண்டுவந்தால், ஐக்கிய நாணயச்சங்கங்களினால் நமது குடியானவர்களுக்குத் தற்காலமிருக்கும் கஷ்டங்கள் நிவிர்த்தியாகுமென்பதில் சந்தேகமேயில்லை.

## அயர்லாந்தில்
## ஓர் ஐக்கிய மாறுபாட்டின் வரலாறு.

வங்காளத்து கோவாபரேடிவ் ரிஜிஸ்ட்ரரான மிஸ்டர் ஜே. தோனேவன் துரையவர்கள் மேற்குறித்த விஷயத்தைப் பற்றி ஒரு அருமையான வியாசம் எழுதியிருக்கிறார். அதன் சாராம்ஸம் வருமாறு:—

அயர்லாந்து தேசத்தின் கோவாபரேஷன் சம்பந்தமாய் டங்களோ என்னும் இடத்தை மிகக் கியாதியடையும்படி செய்தவரும், மலை அடிவாரப்பக்கத்தில் பிறந்தவருமான பாட்ரிக் கல்லாகர் என்பவரைத் தெரிந்துக்கொள்ள ஒருவன் நல்ல பாக்கியம் செய்திருக்கவேண்டும். தெரிந்துக்கொண்ட பிறகு அவரை ஒருகாலும் மறக்கமுடியாது. சமீப காலங்களில் டங்களோவில், அல்லது அயர்லாந்தில் பிறந்திருக்கும் ஜனங்களுக்கு மகத்தான உபகாரங்களைச் செய்திருக்கிறவர்களுள் மிஸ்டர் கல்லாகர் ஒருவராவர். அவர் குழந்தையா யிருந்தபொழுது எழுதப் படிக்கக் கொஞ்சம் கற்றுக் கொள்வதற்கு முன்னமே "இன்மையுளின்னாதது யாதெனின் இன்மையுள், இன்மையே இன்னாத்து" என்ற வள்ளுவர் வாக்கிற்கிணங்க அவருடைய கஷ்டகாலத்தினால் உள்நாட்டுப் பட்டணமொன்றில் ஒருகடுமையான எஜமானிடத்தில் பரம அற்ப ஊழியத்திற்கு சில வருஷகாலம் ஆட்படவேண்டி யிருந்தது. இவ்வடிமைவேலையிலிருந்து விடுபட்டவுடன் ஸ்காட்லாண்டுக்கு வேலை

செய்யப் போனார். ஆனால் எல்லாருக்கும் உள்ளதுபோல ஜனன பூமிக்கு
போகவேண்டுமென்கிற ஆசை அவரை விட்டதில்லை. ஆகவே டங்க
ளாவில் மலையடிவாரத்திலுள்ளபனியால் அலங்கரிக்கப்பட்ட வீட்டின்
பேரிலேயே மிக்க ஆவலுடன் திரும்பவும் வந்து வெளிதேசங்களுக்குப்
போய் கடைசியாக "ஊழி பெருவலியாவுளமற்றொன்று சூழினும் தான்
முந்துறும்" என்ற நாயனார் வாக்கின்படி குழந்தைப்பருவங்களில் தன்
னிடம் இருக்கவொட்டாமல் வெளியே துரத்தின அந்த கடினமான
குளிர் பிரதேசத்திலேயே மறுபடி தங்கவேண்டியது அவசியமாயிற்று.

ஒருநாள் தங்கள் குடிசைகளிலிருந்து அவரும் அவர் தகப்பனாரும்
மலைப்பக்கத்திலுள்ள தங்கள் சிறிய குடிசைகளிலிருந்து பக்கத்திலிருந்த
கிராமத்திற்கு சாமான்கள் வாங்கப்போனார்கள். அங்கே அவர் தகப்பனார்
ஒரு கடையில் 6 குண்டு எடையுள்ள மாவு ரொக்கத்திற்கு வாங்கிவிட்டு
தன்மகனை இவரைப்பார்த்து வண்டியில் இடம் இருக்கிறது இன்னும்
தனக்கு மாவு வேண்டியிருந்தால் மற்றொரு 6 குண்டு வாங்கினால்
தனிவண்டிச்செலவு இல்லாமற்போகும் என்றார். இவரும் சரி என்
றதன்பேரில் கையில் பணமில்லாமையால் இன்னொரு 6 குண்டு மாவு
கடனாகவாங்கினார். ஒரு மாதத்திற்கெல்லாம் பணம்வசூலுக்கு கடைக்
காரன் வந்தபொழுது அவனுடைய கணக்கில் தன் தகப்பனாருக்குப்
போட்ட விலைக்குமேல் 100-க்கு 20 விழுக்காடு அதிகம் கூட்டியிருந்த
தைப்பார்த்து ஒருமாதத்திற்கு ரூ. 100-க்கு ரூ. 20 அதிக வசூல் என்
றால் ஒருவருஷத்திற்கு 100-ரூபாய்க்கு வட்டிமாத்திரம் ரூ. 240 ஆகிறது
என்றும் இதுமகா அக்கிரமம் என்றும் சொல்லி வெகு கோபத்துடன்
பணம் கொடுக்கமாட்டேன் என்று கிராமத்திற்குத் திரும்பி கிராமத்தா
ரெல்லாரையும் ஒன்றுகூட்டி அவர்கள் கடைக்காரர்களால் மோசம்
செய்யப்படும் விவரத்தைக்காட்டி அவர்களுக்கு ஸ்காட்லாந்தில் கோவாப
ரேஷன் என்று ஒன்று ஏற்பட்டிருப்பதைப்பற்றி தான் கேள்விபட்ட
விஷயங்களில் கொஞ்சம் சொன்னார்.

ஒரு அற்பமான குடிசையில் அவர் ஒரு கோவாபரேஷன்
சபை ஏற்படுத்தினார். அவ்விடத்திய ஜனங்களும் கடைக்காரர்களும்
முதலில் இவர்களை பரிகாசம்செய்து பார்த்தார்கள். அதனால் பிரயோ
ஜனமில்லையென்று கண்டு தங்களுக்குத்தெரிந்த எல்லாவித இடுக்கண்
களையும் செய்தார்கள். கல்லாகரின் தலைமைக் கீழிருந்த அச்சிறிய
கூட்டம் நிர்ப்பயமாக "மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்டுஞ்சார்
எவ்வெவர்தீமையும் மேற்கொள்ளார்.—செவ்வி, அருமையும் பாரார்
அவமதிப்புங் கொள்ளார் கருமமே கண்ணாயினார்" என்றபடி ஒன்றை
யும் லக்ஷியம் செய்யாமல் தங்களுடைய ஸ்டோரை மென்மேலும்



விருத்தி செய்தார்கள். கடைசியாக ஸ்டோரை கிராமத்திற்கே மாற்றி
அந்த சிறிய தெருவிலுள்ள பெரிய ஒரு வீட்டில் வியாபாரத்தை நடத்த
வே அதிக ஜனங்கள் தினந்தோறும் வாங்கவந்து மெம்பர்கள் அதிகரித்து
லாபம் பெருகிற்று. என்றாலும் கடைக்காரர்களின் உபத்திரவத்திற்குக்
குறைவில்லை. உதாரணமாக ஒருவர் ஸ்டோரில் வந்து ஐயா, கல்லாகரே,
உங்களிடமிருந்து சாமான்கள் வாங்க எனக்கு மிக விருப்பமிருக்கிறது.
நான் இதில் மெம்பராய் சேரலாமென்றால் கடைக்காரன் தன்னுடைய
பாக்கி 5 பவுனைக் கொடுத்தாலொழிய விடமாட்டேன் என்கிறான், என்
றார். உடனே கல்லாகர் 5 பவுனை எடுத்து அவன்கையில் கொடுத்து
பழைய கடனைத்தீர்த்து மெம்பராகச் சேர்த்துக்கொண்டபிறகு அந்த
மெம்பருக்கு இப்பொழுது கோவாபரேடிவ் பாங்கியில் டிபாஸிட்டுத்
தொகை நிரம்ப இருக்கிறது. கோவாபரேடிவ் விதை ஒருதரம் சரியாய்
விதைக்கப்பட்டு செழிப்பான கிளைகளுடன் கொண்டுவரப்பட்டு விட்
டால் அது பிறகு வெகு ஜாஸ்தியாய் விரிந்து பரவும். சென்ற வருஷம்
ஒருவகை விற்பனைச்சங்கம் ஏற்படுத்தியது நான் அங்கிருந்தபொழுது
அந்த பாங்கியில் டிபாஸிட்டிலிருந்த தொகை சுமார் 3,000 பவுன் இருக்க
லாம். இவையெல்லாம் ஏழைகளுடைய டிபாஸிட்டுகளே. இரண்டு மூன்று
வருஷங்களுக்குமுன் அவர்கள் சாப்பாட்டிற்கில்லாமல் பட்டினி கிடந்து
கொண்டு தங்கள் குழந்தைகளை அமெரிக்காவுக்கும் ஸ்காட்லாந்திற்கும்
வயிற்றுப் பிழைப்புக்காக அனுப்பிக் கொண்டிருந்தார்கள். ஸ்டோரின்
வியாபாரம் வருஷத்திற்கு 10,000 பவுனுக்குக் குறைவில்லை.' இரண்டு
மூன்று குதிரைவண்டிகள் முதல்தரமான சுத்தமான சாமான்களை சுற்
றுப்புறங்களில் சில மைல் தூரங்களிலிருக்கும் மெம்பர்களுக்கு அக்கம்
பக்கவிலைகளைவிட சரசமாகக் கொண்டுபோய் கொடுத்துக் கொண்டிருக்
கின்றன. வருஷக்கடைசியில் லாபங்களும் மெம்பர்களுக்குள்; போன
ஸாகப் பங்கிடப்படுகின்றன. ஸ்டோர்வேலையும் பாங்கிவேலையும் வெகு
அழகாய் செழித்தோங்குகையில் இதர விஷயங்களிலுங்கூட கோவாப
ரேஷன் கிளைவிட்டோங்கியது. இந்த பொட்டலான மலைப்பிராந்தியங்
களிலிருந்து நல்ல குமரர்கள் ஒவ்வொரு வருஷமும் வெளி நாடுகளுக்குப்
பிழைக்கப்போக வேண்டியிருந்தது. அழகான கன்னிகைகளும் பலசாலி
களான குமரர்களும் அமெரிக்காதேசத்துப்பட்டணங்களை நோக்கிப்போய்
அங்கு ஆக்ஷேபணையுள்ள இடங்களில் கஷ்டஜீவனம் செய்யவேண்டி
யிருந்தது. ஒவ்வொரு கோடைகாலத்திலும் ஆள்சேர்க்க கங்காணிகள்
வருவதும் இந்த பாலிய ஜனங்கள் இனத்தாரைவிட்டுப் பிரியும் துக்கத்
துடனும் ஆனால் க்ஷேமமடையலாமென்ற நம்பிக்கையுடனும் போவ
தும் போகுமிடங்களில் கஷ்டமே மிகுதியாகயிருப்பதும், விசேஷமாய்
பாலிகைகளுடைய பரிதாபமான நிலைமையும் கோவாபரேடர்களுடையம

னதை மிகவும் கவர்ந்தன. சில அன்புள்ள ஜனங்கள குடிசைகளில் கைத்தொழில்வேலைகளை ஆரம்பஞ் செய்வித்து அவைகளை ஆதரிக்கவென்று ஒரு சங்கம் கூட்டினார்கள். பெண்கள் ஸ்டாக்கிங்குகள், சொக்காய்கள் முதலியவைகளைத் தயார்செய்ய அவைகளை விற்பனைசெய்யும் விஷயத்தில் உபகரிக்கும்பொருட்டு உள்ளூர் கமிட்டி ஒன்று ஏற்பட்டது. இந்த ஏற்பாடு வங்காளத்தில் இப்பொழுது நடைபெறும்தரகு வியாபாரத்தைப்போலிருந்தது. கமிட்டியார்கள் தரகர்கள்கையில் சீக்கிரத்தில் சிக்கிக்கொண்டார்கள். அவர்கள் கம்பளிகளை பெண்களுக்கு நல்ல லாபத்தில் விற்றார்கள். பெண்களும் ஸ்டாக்கிங் முதலியவற்றை லாபமில்லாமல் விற்கவில்லை. என்றாலும் அந்தலாபம் போதவேபோதாது. மேலும் சரக்குகளுக்கு ரொக்கம் கொடுக்காமல் தேயிலை சர்க்கரைமுதலிய சாமான்களாக கொடுத்துக் கழித்தார்கள், அதிலும் மிகுந்த லாபத்தை அடைவதுடன் அச்சரக்குகளை கலப்பிடம் செய்யுங்கால் விசேஷ லாபத்தையும் அடைந்தார்கள், பெண்கள் வாரம் ஒன்றுக்கு சொற்பத் தேயிலைக்கும் சர்க்கரைக்கும் வேலை செய்து கொண்டிருந்ததைப் பார்த்தபிறகுதான் டங்களோ கோவாபரேடிவ் சொஸைட்டிக்கு முந்திய வேலைகளோடு இன்னொரு வேலையையும் மேற்கொள்ளவேண்டும் என்னும் தீவிரம் ஏற்பட்டது. ஒரு அன்பார்ந்த பின்லே யென்னும் பெயரையுடைய பாதிரி கோவாபரேடிவ் எண்ணம் பரவிவரும் சில பெண்களுக்கு ஒரு "நிட்டிங்" யந்திரத்தை இனாமாகக்கொடுத்தார். மிஸ்டர் கல்லாகரும் அவர்களால் செய்யப்படும் சரக்குகளை ரொக்கத்திற்கு விற்பனைசெய்து கொடுக்க ஏற்பட்டார். சென்ற வருஷம் நான் டங்களோவில் இருந்தகாலத்தில் சுமார் 100 "நிட்டிங்" மெஷின்களில் 100 பெண்கள் ஒரு பெரிய அழகிய கட்டிடத்தில் உல்லாசமாய் வேலைசெய்துக் கொண்டிருக்கக் கண்டேன். அவர்கள் வேலை செய்யும் காலங்களும் சுகாதார கவனிப்புகளும் ஊதியமும் வெகு திருப்திகரமாயிருந்தன. அப்பொழுது அவர்களெல்லாரும் காக்கியினால் கைகளுக்கு அங்குஸ்தான்கள் (gloves) செய்துக்கொண்டிருந்தார்கள். பெல்ஜியச் சேனைகளுக்காக அக்கவர்ன்மெண்டிலிருந்து ஒரு பெரிய ஆர்டர் அங்குஸ்தான்களுக்காக வந்திருந்தது. பெல்ஜியர்களின் ஒத்தாசைக்காகப் போய்க்கொண்டிருந்த பிரிட்டிஷ் சேனைகளுக்காகவும் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டிலிருந்து இன்னொரு பெரிய ஆர்டர் வந்தது.

இப்பெண்கள் வாரம் ஒன்றுக்கு ஒரு பவுனுக்குமேல் சம்பாதித்தார்கள். கொஞ்சதூரத்திற்கப்பால் முதலாளிகளின் தொழிற்சாலையில் வேலைசெய்யும் பெண்களுக்கோ வாரத்தில் சராசரி 6 அல்லது 8 ஷில்லிங்குக்குமேல் சம்பாதிக்க முடிகிறதில்லை. மேலும் வேலைசெய்யும் ஏற்பாட்டை ஒப்பிடவே முடியாது. டங்களோவில் உள்ளூர் பள்ளியிலுள்ள



உயர்ந்தபடிப்பை கற்றுக்கொண்டாலொழிய தொழிற்சாலையில் வேலைக்கேற்றுக்கொள்வதில்லை. தினம் 7 அல்லது 8 மணிக்குமேல் வேலைச் செய்யக்கூடாது. அதிலும் சாப்பாட்டிற்கு ஒரு மணிநேரம் விடப்படும். மாலையில் வீட்டிற்குப் போகும்பொழுது வேலையை ஒருவரும் விட்டிற்குக்கொண்டுபோகக் கூடாது. இராப்பகலாக வாரமெல்லாம் உழைத்து அற்ப ஊதியத்தைப்பெறும் அப்பெண்களுக்கு இம்மாதிரி ஏற்பாட்டில் முதலில் நம்பிக்கையில்லை. மலையிலுள்ள தங்கள் குடிசைகளுக்கு வாரம் ஒன்றுக்கு 4 பவுன் விதம் சம்பாத்யம் கொண்டுபோகும் மூன்று பெண்களை நான் நேரில்பார்த்தேன். இரண்டு வருஷத்திற்குமுன் 4 பவுனை ஏககாலத்தில் கனவிலும் அவர்கள் பார்த்ததில்லை. அவர்களும் அப்பணத்தை தாறுமாறாய் செலவழிக்காமல் குடும்ப சௌகரியங்களுக்கு வேண்டியதுபோக மீதியை பாங்கியில்போட்டு வைத்தார்கள். தங்கள்வீட்டுக்கு வேண்டியவைகளை கோவாப்ரேடிவ் ஸ்டோர்களிலே வாங்கி வந்தார்கள். இந்த பெண்களைவிட உற்சாகமும் சந்தோஷமும் தேகசௌக்யமும் வாய்ந்தவர்களை நான் ஒருபோதும் பார்த்ததில்லை. கோவாப்ரேஷன் இல்லாவிட்டால் இவர்களுள் 100-க்கு 90 பங்கு நகரங்களிலுள்ள ஆக்ஷேபிக்கும் இடங்களில் கஷ்ட ஜீவனம் செய்துக்கொண்டிருப்பார்களென்பது திண்ணம்.

இவையெல்லாம் விரோதமின்றி எளிதாய் முடியவில்லை. ஆளுகை விஷயத்தில் ஆராய்ச்சியோரும், பாதிரிகளும்கூட வெகு இடையூறுகளுண்டாக்கினார்கள். ஆனால் கோவாபரேஷன் எல்லாவற்றையும் ஜெயிக்கும்படி வேரூன்றியது வெகு ஆச்சரியம். ஒவ்வொரு பெண்களும் வெகு இனிமையாய் கோவாபரேடிவ் ஒழுக்கங்களை தங்கள் தாய்மதத்திற்கு அடுத்தபடியாய்க் கொண்டாடினார்கள்.

இம்மாறுபாடுகளை உண்டாக்கியவர் பாட்ரிக் கல்லாகரே. சொஸைட்டியின் எல்லாவேலைகளையும் சொல்வதற்கே சங்கோஜப்படக்கூடிய அவ்வளவு அற்பச்சம்பளம் பெற்றுக் கொண்டு அவரே நிர்வகிக்கிறார். அவருக்கு கர்வமே கிடையாது. தான் உலகத்திற்குச் செய்யும் பேருதவியின் மகிமை தனக்கே தெரியாதுபோலிருப்பவர். அவருடைய மேலான குணம் தன்னுடைய தைரியத்திலும் சக்தியிலுமே சார்ந்திருத்தல். அவரைப் பார்ப்பதும் அவருடன்பேசுவதும் வெகு இன்பம் விளைவிக்கும். அவர் இப்பொழுது அவ்விடத்திய மாஜிஸ்ட்ரேட்டாக இருக்கிறார். 'கௌண்டி கௌன்ஸ'லில் ஒரு மெம்பராகவும் நியமிக்கப்பட்டிருக்கிறார். எந்தவேலையிலிருந்தபோதிலும் அவரைக் கோவாபரேடிவ் வேலையிலிருந்து பிரிக்கமுடியாது. அவர் ஜனங்கள்கூடுமிடங்களிற் சென்று கோவாபரேஷனை எல்லாருக்கும் வெகு உருக்கமாய் போதிப்பார். நான்

வங்காளத்துக் கோவாபரேடர்களுக்குமுன் இவ்வளவுதூரம் அவரைக் குறித்துச் சொன்னதற்காக என்னை அவர் மன்னிப்பதோடுகூட நான் சொன்ன கதைகளில் குற்றங்குறைகளிருந்தாலும் மன்னிப்பாரென்றும் நம்புகிறேன். அவரை நினைக்கும்போதெல்லாம் வெகு வியப்போடும் என் தேசத்தனராகவும் நான்மேற்கொண்ட விஷயத்திலேயே உழைப்பவராகவும் இருப்பதைப்பற்றி மிக கௌரவத்தோடும் பாராட்டுகிறேன்.

# மதராஸ் புல்லெடீன் ஆப் கோவாபரேஷன்

என்னும்

# சென்னைக் கூட்டுத்தொழில் வர்த்தமானி

சம்புடம் IX] 1917௵ நவம்பர் ௴ [இலக்கம் 5

## பத்திராதிபரின் குறிப்புகள்.

### கௌரவ அஸிஸ்டெண்டு ரிஜிஸ்ட்ரார்கள்.

கௌரவ அஸிஸ்டெண்டு ரிஜிஸ்ட்ரார்கள் விஷயமாய் கவர்ன் மெண்டார் சமீபத்தில் பிரசுரம்செய்த உத்திரவைப்பற்றி நம்முடையமுன் பிரதியில் ஒருவாறு கண்டனம்செய்ய வேண்டியதாயிற்று. பிறகுசென்ற சட்டநிருபண சபையில் ம-ா-ா-ஸ்ரீ ஆனரபில் ராவ்பகதூர் V. K. ராமா னுஜாசாரியார் அவர்கள் இவ்விஷயமாய் கௌரவ அஸிஸ்டெண்டு ரிஜிஸ்ட் ராார்களுக்கு தங்கள் வேலைகளை ஒழுங்காய்ப் பார்க்கும் வண்ணம் வேலைகற் றுக்கொள்ளும் பொழுது பிரயாணச் சிலவுகளும், அப்புறம் அவர்களுக்கு வேண்டிய சிப்பந்திகளும் கவர்ன்மெண்டார் கொடுத்துதவும்படி மேற் கூறிய உத்திரவை திருத்தவேண்டுமென தீர்மானங் கொண்டுவந்தார் ஆனரபில் மிஸ்டர் B. வெங்கிடபதிராஜ அத்திர்மானத்தை ஆமோதித் துப்பேசினார். அவ்விஷயங்கள் கவர்ன்மெண்டாரின் ஆலோசனையிலிருக் கிறதென்றும், இந்தியா கவர்ன்மெண்டாரின் அங்கீகாரத்திற் குட்பட்டு, பிரயாணச் சிலவுகளும் சிப்பந்திச்சிலவுகளும் கொடுக்கப்படு மென்றும், ஆனரபில் மிஸ்டர் கார்டியு அவர்கள் கவர்ன்மெண்டாருக்காக அத்தீர் மானத்தை ஒப்புக்கொண்டார். பொதுஜனங்களின் விருப்பத்திற்கு இணங்கிய கவர்ன்மெண்டாருக்கு நாம் வந்தன மளிக்கிறோம்.

### மக்ளாகன் கம்மிட்டியும் லோகல் கவர்ன்மெண்டுகளும்.

ஆனரபில் மிஸடர் V. S. ஸ்ரீனிவாச சாஸ்திரியார் இந்தியா சட்ட நிருபண சபையில் கேள்வி கேட்டதின்பேரில், கோவாப்ரேடிவ் கம்மிட்டி

யாரின் சிபார்சுகளின்பேரில் லோகல் கவர்ன்மெண்டார் கொடுத்த அபிப் பிராயங்களை இந்தியா கவர்ன்மெண்டார் பிரசுரித்தனர். இந்தியா கவர்ன் மெண்டார் முடிவான ஏற்பாடு செய்வதின்முன் அவ்வபிப்பிராயங்களை பொதுஜனங்கள் தற்கிக்கவேண்டுமென்றதே அந்த ஆனரபில் மெம் பரின் நோக்கம்.

இவ்வித லோகல் கவர்ன்மெண்டார்களின் அபிப்பிராயங்கள் அந்த ந்த ராஜதானியிலுள்ள ரிஜிஸ்டராரின் ஆலோசனைகளாகும். ரிஜிஸ்ட ரார்களின் சூசனைகளுக்கு மாறா யிருப்பவைகள் கொஞ்சமே; பர்மா தேசம் தவிர, பாக்கி லோகல் கவர்ன்மெண்டார்கள், ஒருவராவது கம் மிட்டியாரின் சிபார்சுகள் முழுமையும் ஒப்புக்கொள்ளவில்லை. பர்மா ரிஜிஸ்டராராகிய மிஸ்டர் இங்கிலீஷ் துரையவர்களின் சாதுரியத்தினால் தம்முடைய அபிப்பிராயங்களையே மற்ற கம்மிட்டியார்கள் அங்கீகரிக்கும் படி செய்தது யாவரும் அறிந்ததாகும். இவ்விஷயத்தைப்பற்றி ஒன்று அல்லது இரண்டு ரிஜிஸ்டரார்கள் குறிப்பிட்டதாகத் தெரிய வரு கிறது.

ஆக்ஷேபணைக்கிடமுள்ள விஷயங்களில், ஒவ்வொரு லோகல் கவர்ன்மெண்டாரும் தங்களுடைய வழக்கங்களை ஒத்தே பேசியிருக்கி றார்கள்.

இந்த ராஜதானியின் ஐக்கிய முயற்சிக்காரர்கள் இந்த கவர்ன்மெண் டாரின் அபிப்பிராயங்களை அறிய ஆவலுடையவர்களா யிருப்பார்க ளென்றே அவைகளை வேறிடத்தில் பிரசுரம் செய்திருக்கிறோம்.

### வீடு கட்டிக் கொடுக்கும் சங்கங்கள்.

சென்ற செப்டம்பர் மாதம் 19-ந்தேதியன்று இராஜப் பிரதிநிதியின் சபை கூடின போது, வீடுகட்டிக் கொடுக்கும் கூட்டுறவுச் சங்கங்க ளின் விஷயமாய் கனம் V. S. ஸ்ரீனிவாச சாஸ்திரிகள் கவர்ன்மெண் டைப் பல கேள்விகள் கேட்டார். அத்தகைய சங்கங்களுக்கு இன்னின் னவாறு ராஜாங்கத்தில் உதவி கொடுக்கப்பட முடியுமென்பதையே அக் கேள்விகள் வெளியிடுவதாயிருந்தன. ஆயினும், கவர்ன்மெண்டாரோ அவ்விஷயமாய் அபிமானமின்றி உபேட்சையான மனப்பான்மை கொண்டுவிட்டனர். இது ஆச்சரியமேயாம். உதாரணமாக ஏழை ஜனங்களின் குடியிருப்புக்காக வீடு கட்டிக்கொடுக்கும் கூட்டுறவு சங்கங் களுக்கு 30 லிருந்து 50 வருஷகாலம்வரையில் தவணை வாரியாகச் சுலப மாய்த்திருப்பிக்கொடுக்கும்படி மூலதனம் தேவையென்பது கவர்ன்மெண் டுக்குத் தெரியுமா? என்று அவர் ஒரு கேள்வி கேட்டார். அதற்கு கவர்ன் மெண்டாரோ அவ்வளவு நீண்ட காலத்தில் திருப்பிக் கொடுக்கும்படி



யாய் அச்சங்கங்களுக்கு மூலதனம் தேவையென தங்களுக்குத் தெரியா தெனச் சொல்லிவிட்டனர். இது இப்படியிருக்க மற்றொரு கேள்விக்கு அவர்கள் பதில் சொன்னதாவது :—

சுகாதார முறைப்படி வீடுகளைக் கட்டிக் கொடுக்க ஆதரவளிக்க வேண்டி அச்சங்கங்களுக்கு ராஜாங்கத்திலிருந்து கடன் தேவையென 1915-ம் வருஷத்தில் பம்பாய் கவர்ன்மெண்டார் யோசனைகள் சொல்லி யனுப்பினார்கள். ஆயினும் அந்த யோசனையை ஏற்றுக்கொள்ள இந்தியா கவர்ன்மெண்டால் முடியவில்லை. எவ்வாறெனில், கூட்டுறவுச் சங்கங்க ளுக்கு திரவியசகாயஞ் செய்வதற்க்காக ஏற்பட்டிருக்கும் ஸெண்ட்ரல் பாங்கிகள் அல்லது அவைபோன்ற ஸ்தாபனங்கள் ஆகிய இவைகளிட மிருந்தே அச்சங்கங்கள் கடன் பெறவேண்டுமென்பது கவர்ன்மெண்டார் கருத்து. 1915-ம் வருஷத்திலே அவ்விதம் இந்தியா கவர்ன்மெண்டார் தீர்மானித்திருப்பதைக் கொண்டும், அவ்விஷயமாய் இச்சமயம் உள்ள தலைவர்களைக் கொண்டும், அச்சங்கங்களுக்கு இராஜாங்கத்திலிருந்து முன்பணம் கொடுக்க வேண்டாமோ என்ற விஷயத்தைப் பற்றி ஆலோ சிப்பதற்கு இந்தியா கவர்ன்மெண்டுக்கு உத்தேச மில்லை.

மேற் கண்டவாறு இந்தியா கவர்ன்மெண்டார் சொல்லவே முடி வில் கனம் சாஸ்திரிகள் ஒரு யோசனை சொன்னார். அதாவது, அச் சங்கங்கள் விலைக்கு நிலங்களைவாங்கல் விற்றல், வாடகைக்கு விடுதல் முத லிய வழிகளையும் இன்னும் ஏற்ற உபாயங்களையும் அனுஷ்டிக்கும்படியாக அவைகளுக்கு முனிஸிபல் ஸபைகளும், ஜில்லா தாலுக்கா போர்டுகளும் திரவிய சகாயஞ் செய்யுமாறு மாகாண கவர்ன்மெண்டுகள் சட்டஞ் செய்யலாமென்பதாகும். அச்சங்கங்களுக்கு அவ்விதம் ஆதரவளிக் கும் படியான அவசியமில்லையென்று இந்தியா கவர்ன்மெண்டார் கருதி விட்டார்கள். கருதிவிடவே அவ்விஷயமாய் ஏதேனுஞ் செய்யத் தயாரா யில்லை.

வீடு கட்டிக்கொடுக்கும் பிரயத்தனங் கொண்டுள்ளகூட்டுறவுச் சங்கங்கள் பம்பாயிலும் சென்னையிலும் இருப்பதால் அச்சங்கங் களுக்கு மட்டும் மேற்சொன்னபடி விசேஷமான சட்டஞ் செய்யும்படி பொதுவாகத் தேவையில்லையெனச்சொல்லிவிடலாம். ஆயினும், கூட் டுறவுமுயற்சியை பிரபலப்படுத்தி ஜனங்களுக்கு நன்மை செய்வதில் பிற ருக்கு கிரேட்பிரட்டன் தேசம் வழிக்காட்டிப் போயிருக்கையில் இந்தியா வில் அக்கூட்டுறவு முயற்சிவிஷயமாய் இராஜாங்கத்தார் அபிமானம் காட்டவேண்டுமென்று நாம் எதிர்பார்ப்பது கிரமமேயாகும். வீடுகட்டிக் கொடுப்பதற்கு சங்கங்களுக்கு ராஜாங்கத்தில் உதவவேண்டுமென மூன்று

வருஷத்திற்கு முன்னமேயே இந்தியாகவர்ன்மெண்டுக்கு பம்பாய் கவர்ன்மெண்டார் சிபார்சு செய்திருப்பதைக் கேட்டு நாம்சந்தோஷப் படுகிறோம். ஆகவே நம்து மாகண கவர்ன்மெண்டாரும் அவ்விதமே மேற்படி விஷயத்தில் அபிமானங் காட்டுவார்களென்பது நமது நம்பிக்கை. இந்த ஸந்தர்ப்பத்தில் ஒருவிஷயம் தெளிவாய்ப் புலப்படுகிறது; அதுயாதெனில்:— பொதுஜனங்கள் ஒன்றுசேர்ந்து தங்கள் அபிப்பிராயங்களை தைரியமாய் வெளியிட்டாற்தான், இந்தியா கவர்ன்மெண்டார் இவ்விதமாயுள்ள தங்கள் அபிப்பிராயத்தை மாற்றிக் கொள்வார்கள்.

## விவசாய விருத்தி.

மைசூரில் பிரசுரமாகும் "மைசூர் எக்னாமிக் ஜர்னல்" என்னும் சஞ்சிகையில் பம்பாய் மாகாணத்தின் விவசாய இலாகாத் தலைவரான மிஸ்டர் கீடிங் என்பவர் விவசாய சம்பந்தமான ஒரு வியாசம் எழுதியிருக்கிறார். சென்ற நூற்றாண்டுக்குள் ஐரோப்பாவில் கோதுமை முதலிய தானியங்களில் மாசூல் விளைவானது இரண்டு மூன்று பங்கு அதிக மென்று அந்தவியாசத்தில் அவர் குறிப்பிட்டிருக்கிறார். அம்மாதிரி மாசூல் பெருகியிருப்பதற்கு முக்கியமான துணைக்காரணங்கள் என்னவென்றால்:— (1) செம்மையும் சீருமான விதை; (2) சீர் செய்யப்பட்டதும் அதிகமுமான உரம் அல்லது எரு; (3) தானியப்பயிர்கள் தக்கவாறு மாற்றி மாற்றி வருதல்; (4) நிலங்களை நன்கு பண்படுத்தல். இவ்வித துணைக் காரணங்களில் முதன்மையானது உரமேயாம்; நல்ல உரத்தை ஏற்றவாறு உபயோகப்படுத்தினால் மாசூல் நூற்றுக்கு 50 வீதம் அதிக மாகும்படி செய்யலாம். ரசாயன சாஸ்திர உரங்களைமட்டும் உபயோகிப்பதனால் அப்படி நூற்றுக்கும் ஐம்பது வீதம் மாசூல் அதிகமாய் வருமென்றதல்ல, மாட்டுத் தொழுவம் பட்டி முதலிய இடங்களிலிருந்து கிடக்கும் உரத்தை அதிகமாக உபயோகப்படுத்தினால் அதிகமான மகசூல்கிடைக்கும். இந்த உரம் அதிகமாகக் கிடைக்க வேண்டுமாயின் கால்நடைகள் அதிகமாயிருக்க வேண்டும். அத்துடன் ஸாரமும் ரஸமுமான தீனிகளை கால்நடைகளுக்கு உபயோகப்படுத்தினால் உரம் இன்னும் நல்லதாயிருக்கும். உரத்திற்கு அடுததாற்போல் முக்கியமானது நல்ல வேளாண்மையேயாம். நல்ல வெளாண்மை இங்கிலாந்தில் முக்கியமாய் மதிக்கபபடுகிறது. கழனிஅல்லது வயல்களுக்கு வடிமடை, சீரான விதை, தானிய வகைப் பயிர்க்கள்மாற்றி மாற்றிவருதல் முதலியவைகள் நல்ல வேளாண்மையின் அம்சங்களாம். பம்பாயிலுள்ள தார்வார் ஜில்லாவில் தகுந்த பருத்தி நிலமொன்றின் மாசூலை ஒன்றுக்கு இரண்டுமடங்கு அதிகரிக்க செய்ய முடியுமென்பது மிஷ்டர் கீடிங் என்பவரின் கருத்தாகும். சீரான விதையினால் மாசூலை நூற்றுக்கு 20 மட்டும், நல்ல வேளாண்மையால்



மாசூல் நூற்றுக்கு 33 பங்கும், கழனிகளுக்கு நன்கு வரப்புக் கட்டுவதினால் மாசூலை நூற்றுக்கு 20 பங்கும், உரத்தினால் மாசூலை நூற்றுக்கு 30 பங்கும், அதிகரிக்கச் செய்யலாமென அவர் மதிப்பிடுகிறார்.

இந்த சமுகத்தாருக்கு அருகாமையிலுள்ள தகுந்த பருத்தி நிலமொன்றின் மாசூலை நூற்றுக்கு 60 வீதம் அதிகரிக்க செய்யலாமெனவும் அவர் கருதுகிறார். அவ்விதம் மாசூல் அதிகரிக்கச் செய்வதற்கு சீரான உரமும் நல்ல வேளாண்மையும் ஆதாரங்களாகும்.

## விசேஷக் கூட்டுறவு கிராமம்.

பெங்காளம் கோவாபரேடிவ் ஜர்னல் என்ற பத்திரிகையின் உப பத்திராதிபர் மிஸ்டர் மூக்கர்ஜி என்பர் பின்வருமாறு கருத்துள்ளவற்றை எழுதியிருக்கிறார் :—

தேசத்தின் நாலாபக்கங்களிலும் நாட்டுப் புறங்களிலே சமீபகாலத்திற்குள் கூட்டுறவுமுயற்சியால் பல அபிவிருத்திகள் ஏற்படுள்ளன. உதாரணமாக ஐக்கிய நாணயச் சங்கங்களும் தானியங்களின் விஷயத்தில் கவனஞ் செலுத்தும் சங்கங்களும், நீர்ப்பாய்ச்சுதலை கவனிக்கும் சங்கங்களும், விதைகளைத் தேடிக் கொடுத்து வினியோகஞ் செய்யும் சங்கங்களும் உரம் அல்லது எருவைச் சேகரித்து வினியோகஞ் செய்யும் சங்கங்களும், விவசாய உபகரணங்களைத் தேடிக் கொடுக்குஞ் சங்கங்களும், பாற்சாலைகளும் இத்தேசத்தில் இருக்கின்றன. கூட்டுறவுமுறையில் பல வைத்தியசாலைகளையும் பாடசாலைகளையும் வைத்து நடத்தும் சங்கங்களும் ஏற்பட்டு நடந்து வருகின்றன. கைத் தொழிலை கவனித்து ஆதரிக்கும் சங்கங்களும் செம்படவர்களுக்கு உதவி புரியும் சங்கங்களும் இருப்பதைக் கேட்டிருகிறோம். கூடிய வரையில் மிகவும் சிறியதாயிருக்கும் தேசத்திற்குள் கூட்டுறவு முயற்சி சம்பந்தமாய் எத்தனை விதமான சங்கங்களை ஏற்படுத்த முடியுமோ அத்தனை விதமான சங்கங்களை தமதுக்குள் ஏற்படுத்த கூடிய பரோபகாரியான ஜமீன்தாரொருவர் இல்லாமற் போய்விடுமோ? அவ்விதம் ஒரு ஜமீன்தார் பலவாரு கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்தினால் கூட்டுறவு முயற்சிக்கு அவர் போஷகராயிருப்பதுடன், தமது குடி மக்களாகிய விவசாயிகளின் நிலைமையை உயர்த்துபவர் ஆவார்.

அவ்விதம் பலவாறான கூட்டுறவுச் சங்கங்களுடன் விசேஷகிராமமொன்று உண்டாகுமாயின், கூட்டுறவு முயற்சிக்காரர் பலருக்கும் அக்கிராமம் புண்ணிய ஸ்தலம் போலாகும்; அதாவது பலர் அக்கிராமத்தைப் பார்வையிட்டு, அங்கே ஏற்பட்டிருக்கும் பலவாறான கூட்

டுறவுச் சங்கங்களையும் நேரில் பார்த்துணர்ந்து, அவ்வழியைப் பின்பற்றுவதற்கு அனுகூலமாய் இருக்கும். கண் காட்சி சாலைகளும் சித்திர வேலைப் பாடான விஷயங்கள் சேர்த்து வைக்கப்பட்டிருக்கும் இதர காட்சி சாலைகளும் மனிதனுடைய பொருப்புள்ள முயற்சிகளை நிதர்சனமாய் எடுத்துக் காட்டுவதைக் காட்டிலும் மேற்சொன்ன கிராமமே ஒன்று விசேஷம் எடுத்துக் காட்டுவதாகும். மேலும் அத்தகைய விசேஷச் கூட்டுறவு கிராமங்களோ கூட்டுறவு முயற்சியை எவ்வளவு தூரம் விசாலித்து அபிவிருத்தி செய்யலா மென்பதற்கு ஓர் அறிகுறியாயிருக்கும். கூட்டுறவு முயற்சியில் ஏராளமான பெயர்கள் சேர்ந்து உழைப்பதற்கு ஓர் ஸாதனமாகும்.

## தென் கன்னடத்தில் தாலுக்கா கான்பரன்ஸுகள்.

மற்ற கூட்டுறவு முயற்சிகளால் தென் கன்னடம் ஜில்லா முதன்மையாயிருப்பது போல் கூட்டுறவு முயற்சி சம்பந்தமாய் தாலுக்கா கான்பரன்ஸுகளைக் கூட்டுவதிலும் முதன்மை ஸ்தானத்தை அடைத்திருக்கிறது. அந்த ஜில்லாவில் உப்பனங்காடி மங்களூர் ஆகிய தாலுகாக்களிலே சமீபத்தில் கூட்டுறவுச் கான்பரன்ஸுகள் கூடியிருக்கின்றன. அக்கான்ப்ரன்ஸுகளின் நடவடிக்கைகளைப் பார்த்தால் அம்மாதிரியான கூட்டங்களைக் கூட்டுவதிலும், கடன்களைத் திருப்பி கொடுப்பதில் தாமதம், கையிருப்பில் ஏராளமான பணம் வைத்துக்கொள்ளுதல் முதலியவைகளால் ஏற்படுங் குற்றங்களை எடுத்துக் காட்டுவதிலும், உத்தியோகப்பயிற்சி யில்லாத கூட்டுறவு முயற்சிக் காரர்கள் சிரமத்தை ஒரு பொருட்டாக மதிக்காமல் உழைத்தது நன்கு புலப்படும். உப்பனங்காடி கான்பரன்ஸிலே ஸாரமான பலவுபாயங்கள் ஆலோசனைக்கு வந்தன. அதில் முக்கியமானது கூட்டுறவுச் சங்கத்தினர்களின் நன்மையை யநுசரித்து பிரத்தியேகமாக இன்ஷியூரன்ஸ் சங்கமொன்றையேற்படுத்துவதைப்பற்றியாகும். அந்த யோசனை மிகவும் நல்ல யோசனையே. எவ்வாறெனில் இன்ஷியூர்ன்ஸ் செய்து கொடுப்பதால் மெம்பர்களிலே ஏழைகளாயுள்ளோருக்கு விருத்தாப்பிய திசையில் ஜீவன அபயமாக திரவிய சகாயம் கிடைப்பதோடு கூட்டுறவுச் சங்கங்களில் கடன் பாக்கியிருக்கும் மூலபுருஷன் தன் கடனைத்தீர்க்காது இறந்துவிட்டால் அப்போது துணையாய் அல்லது ஜாமினாய் நின்றவர்களுக்கு வெகுதூரம் உதவியாகவுமிருக்கும். இம்மாகாணத்திலே கூட்டுறவு முயற்சி சம்பந்தமாய் விசித்திரமாயுள்ள சங்கங்களிலே மேலே சொல்லப்பட்ட இன்ஷியூர்ன்ஸ் சங்கமும் ஒன்றாகும். ஆகவே அத்தகைய சங்கமானது எவ்வாறு நடைபெறுகின்றதென ஆவலுடன் எதிர்பார்க்கப்படும்.



## ஆட்டுரோமம்.

ஆட்டுரோமத்தைக் கட்டாகவிற்பனை செய்யும் உபாய விஷயமாய் கனடா கவர்ன்மெண்டார் தீவிரசிரத்தை காட்டிவருகின்றனர். கட்டாக ஆட்டு ரோமத்தை விற்கும் முயற்சி பிரபலமாகுமானால் ஏற்படும் பலன்களாவன (1)வியாபாரத்திலே வாங்குவோருக்கும் விற்போருக்கும் கிடைக்கும் பலனின்று லாபத்தைக் கொண்டு வெளிவரும் தரகர்கள் என்பேர் இல்லாது போகின்றன (2) ஆட்டுரோமத்தைச் சேகரித்து வைப்போருக்கு நல்லவிலை கிடைத்து வருகிறது;

அதனால் ஆட்டுரோமத்தை மென்மேலும் அதிகமாய் சேகரிப்பதற்கு ஒருவிதஆதரவும் தூண்டுதலும் ஏற்பட்டுள்ளன. ஆட்டுரோமத்தை சாஸ்திரவிதிப்படி தரவாரியாகப்பாகுபடுத்தி வருவதினால் ரோமத்திற்காக ஆடுகளைவைத்து வளர்ப்பிக்கும் தொழிலில் பல அபிவிருத்திகள் உண்டாயிருக்கின்றன. எப்படியென்றால் ஆடுகளிலிருந்து ரோமத்தைக் கத்தரித்து எருவிடும் முறையிலும் அந்தரோமத்தைக் கெடாமல் பத்திரப்படுத்திவைக்கும் முறையிலும் நூதனமான நல்ல உபாயங்கள் கையாடப்படுகிறது.

## இருப்புக் கலப்பைகள்.

ஷோலாபூர் ஜில்லாவின் வடபாகத்திலே மிகவும் செம்மையான இரும்புக்கலப்பைகளை விவசாயிகள் பெரும்பாலும் உபயோகித்து வருகின்றனர். சில கிராமங்களிலே சுமார் 2) அல்லது 50 கலப்பைகள் நாள் தோறும் உபயோகிக்கப்பட்டுவருகின்றன. மாதீ தாலுக்காவிலுள்ள குர்துலா என்னும் கிராமத்திலே ஒரு மார்வாடியானவர் தம்மிடம் சுமார் ஆறுகலப்பைகள் வைத்திருக்கிறார். விவசாயிகளுக்கு அக்கலப்பைகளை வாடகைக்குக் கொடுக்கவே அவர் அவைகளை வைத்திருக்கிறாரென்று கவனிக்கத்தக்கது. அவர் கேட்கும்வாடகை ஒரு கலப்பைக்கு ஒரு நாளுக்கு ஆறு அணாதான். விவசாய டிப்போக்களுக்கும், விவசாய கருவிகளை வாங்கி விற்கும் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் இப்போது நல்ல சமயம் வாய்த்திருக்கிறது.

* * *

பார்ஸி தாலுக்காவிலுள்ள பங்கான் என்னும் கிராமத்தில் நல்ல அந்தஸ்திலுள்ள மகாராஷ்டிரா விவசாயி ஒருவர் கூட்டுறவுச் சங்கங்களில் 40 ஆயிரம் ரூபாய் வட்டிக்கும் போட்டு வைத்திருக்கிறார். அத்தனமானது உண்மையில் பூமியின் கீழ் புதைத்து வைக்கப்பட்டிருந்தது. ஆகவே அதை உபயோகிக்குமுன் அதன் மீதுள்ள தூசு தும்புகளைபோக்கி சாயம் செய்யவேண்டியதாயிற்று.

## இலங்கையில் ஐக்கிய முயற்சி.

சமீபத்திலுள்ள இந்தியாவின் ஐக்கிய யியக்கத்தை கவனிக்குங்கால் இலங்கையில் நடந்துவரும் ஐக்கிய முயற்சியானது அவ்விடத்து கவர்ன் மெண்டாருக்காவது ஜனங்களுக்காவது கொஞ்சமும் கௌரவம் கொடாது. 1904ம் வருஷத்திய இந்தியா ஆக்ட்டைப்போல் இந்த கவர்ன் மெண்டில் 1911ம் வருஷத்தில் ஓர் சட்டம் ஏற்பட்டு இரண்டு வருஷங் களுக்குப் பிறகு தான் முதல் கோவாபரேடிவ் சொஸைடி ஆரம்பிக்கப் பட்டது. 1912-14ல் 21 சொஸைடிகளும், 1913—15-ல் 23 சொஸை டிகளும், 1915—16ல் ஒரே சொஸைடியும் 1916—17ல் 16 சொஸைடி களும், ஆகமொத்தம் 71 சொஸைடிகள் ஸ்தாபிக்கப் பட்டிருக்கின் றன. இவைகளுள் 18 சொஸைடிகள் வேலை செய்யவில்லை. ஏற்க னவே இரண்டு சொஸைடிகள் முறிவடைந்தன. இதர சொஸைடிக ளும் சரிவர வேலை செய்யாவிட்டால் அவைகளுக்கும் இக்கதிதான் ஏற்படும் என்று கூறவேண்டியது அவசியம். இவ்வதிருப்திகரமான விஷயங்களின் காரணங்களுள் ஜனங்கள் ஐக்கியமுறையின் நோக் கங்களையும் பிரயோஜனங்களையும் தெரியாமை முக்கியமானதாகும்; இக்குறைகள் ரிஜிஸ்ட்ராரவர்களின் சிப்பந்திகளும் உத்தியோக முறையினின்றும் விலகிய கோவாபரேடர்களும் ஊக்கத்துடன் முன் னேற்றமாய் சிரமப்பட்டாற் தான் நீங்கும். சொஸைடிகளை ஏற்படுத்து வதற்காக கௌரவ ஸ்தாபனர்கள் சேரும் பொருட்டு இந்தராஜாங்கத்தார் என்ன ஏற்பாடுகள் செய்திருக்கிறார்களென்று தெரியவில்லை. சொஸை டிகள் ஸ்தாபனமாகமால் நின்று போயிருப்பதற்கு ரிஜிஸ்ட்ரார் காட்டிய மற்றொரு காரணமாவது,1915-ல் ஏற்பட்ட கலகமே. ஆயினும் அவைக ளிற் சில இவ்வருஷமே வேலை ஆரம்பித்திருக்கின்றன. காலங்கடந்த கடன்களைப்பற்றி ரிஜிஸ்ட்ட்ரார் சொல்வதாவது-கிராமத்தரர்கள் கெடுவுக் குள் கடன்களைத்திருப்பிக் கொடுக்காமலிருத்தல் அபூர்வம்; இவ்விஷ யத்தில் நல்ல புத்திமதிகளைக்காட்டுவது படித்த மெம்பர்களின் கடமை யாயிருக்க இவர்கள் விசேஷமாய் நிலுவைக்காரர்களாகிறார்கள். ஆகவே இலங்கை கிராமத்தார்கள் இங்குள்ள கிராமத்தார்களைவிட மிக ஒழுங் குள்ளவர்களெனத் தெரிகிறது. சொஸைடிகளின் வட்டி வீதங்கள் ஓர் வித ஏற்பாட்டில் இல்லை. 6 முதல் 12 வரையில் இருக்கின்றன. டிபா ஸிட்டுத் தொகைகளின் மேற் கொடுபடும் உயர்ந்த வட்டி 100க்கு 4 யெனத் தோன்றுகிறது.

## கைத்தொழில் போதனை.

மைசூர் இராஜ்யத்திலுள்ள கோலாரிலே வீட்டுக்கைத் தொழிலைக் கற்றுக் கொடுக்கும் வகுப்பொன்று ஏற்பட்டது; அவ்வகுப்பில் சுமார் 20 ஸ்திரீகள் சேர்ந்து போதனை பெற்று வருகிறார்கள்.

# இம்பீரியல் கோவாபரேடிவ் கமிட்டியாரின் சிபார்சுகளின்பேரில் சென்னை கவர்ன்மெண்டாரின் அபிப்பிராயம்.

I. கமிட்டியார் செய்த பின்வரும் சிபார்சுகளை மதராஸ் கவர்ன் மெண்டார் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள் :—

சிபார்சு, நெ. 51. அதிகமாயிருக்கும் டிபாஸிட்டுகளை கிராமச் சங்கங்கள் ஸென்ட்ரல் பாங்கிகளுக்கு அனுப்புவதும், ஸென்ட்ரல் பாங் கிகள் அத்தொகைகளுக்கு பிரத்தியேக வட்டிகள் கொடுப்பதும்.

78. பைலாக்களில் வட்டி வீதங்களையும் குறிப்பிடுதல்; வெளி யிடங்களைக்காட்டிலும் அவைகள் குறைவாயிருத்தல் அவசியமாயினும், க்ஷேமநிதி க்ஷீணமடையுமாறு அவ்வளவு குறைவாய் நிர்ணயிக்கப்படக் கூடாது.

89. சங்கங்கள் வெளியுதவிகளை நாடாமல் சுய இச்சையாய் ஒங்கும் வரையில், கடன் வாங்கும் வட்டி வீதத்திற்கும், கொடுக்கும் வட்டி வீதத்திற்குமுள்ள தாரதம்மியம் அதிகமா யிருக்கவேண்டும்.

9.. தணிக்கையும், மேற்பார்வையும் அடிக்கடியிருத்தல், அவ சியம்.

97 ரிஜிஸ்ட்ராருடையவும், அஸிஸ்டெண்டு ரிஜிஸ்ட்ரார்களுடை யவும் சிப்பந்திகள் வேண்டுமளவு இருக்கவேண்டும்.

98. சங்கத்தின் நிலைமையை பூராவும் விசாரணை செய்தல் தணிக் கையைச் சேர்ந்ததாகும்.

99. தணிக்கை சிப்பந்திகள் ரிஜிஸ்ட்ராருக்கு ஜவாப்தாரியாயிருப்ப துடன் அவரின்கீழ் அடங்கியிருக்கவேண்டும்.

103. தணிக்கை உத்தரவின் விதத்தை குறிப்பிடவேண்டும்.

10.. கீழ்வகுப்பினர்களது பொறுப்பு வரையறுக்காத சங்கங் களின் தணிக்கை செலவுக்கு கவர்ன்மெண்டார் உதவுதல் நியாயமெனத் தோன்றல்.

111. ஸென்ட்ரல் பாங்கிகள் வக்கீல்களாலும் வேறு தொழிலாளி களாலும் நிர்வகிக்கப்படலாம்.

115. ஸென்ட்ரல் பாங்கிகளின் சிப்பந்திகளுக்குத் தகுந்தபடி சம்பளம் கொடுக்கவேண்டும்.

120-121. ஸென்ட்ரல் பாங்கிகளின் பங்குகள் ஒரு வகைத்தா யிருத்தல் நல்லது.

12?. ஸென்ட்ரல் பாங்கியின் பங்குக்காரர் ஒவ்வொருவருக்கும் ஒரு வோட்டுத்தா னிருக்கவேண்டும்.

124. தனி நபர்களின் பங்குத் தொகைகள் முழுமையும் கொடுபட்டிருக்கவேண்டும். ஆனால் சங்கங்கள் எடுத்திருக்கும் பங்குகளுக்கு தவணைகளில் செலுத்திவரலாம்.

125. பங்குத் தொகையின் பாக்கியானது ஏற்பட்ட பங்கின் விலையின்பேரில் கணக்கிடப்படவேண்டுமே யொழிய அதின் மார்க்கட்டின் விலையின்பேரில் மதிக்கப்படக்கூடாது.

126. டிவிடெண்டு வீதம் குறைவாகும்படி ஓர் ரூல் ஏற்படவேண்டும். பங்குக்காரர்கள் விசேஷமாய் சங்கங்களாயிருந்தால், டிவிடெண்டின் உயர்ந்த எல்லையானது கடன் கொடுக்கும் வட்டி வீதமாகும். மெம்பர்கள், தனி நபர்களாயிருந்தால் டிபாஸிட்டு வட்டியைக் காட்டிலும் 2 அல்லது 3 வீதம் அதிகரிக்கலாம். போனஸ்கள் (Bonuses) கொடுபடக்கூடாது.

129. பாங்கிகளில் ஸேவிங்ஸ் (Savings) அக்கௌண்டுகள் ஏற்படவேண்டுமானால், அவ்வித டிபாஸிட்டு தொகையில் முக்காற்பங்கு பாங்கியில் எப்பொழுதும் புரளும்படியான தொகையா யிருக்கவேண்டும்.

130. ஸெண்ட்ரல் பாங்கிகள் எவ்விடத்திலிருந்தும் டிபாஸிட்டுகளைப் பெறலாம்.

133. டிபாஸிட்டுகள் கெடுத்தவறாமல் திருப்பிக்கொடுப்பதில் மிகவும் ஜாக்கிரதை யெடுத்துக்கொள்ளவேண்டும்.

134-135. இராஜதானி பாங்கியுடனாவது, அல்லது ஸ்திரமான ஜாயிண்டு ஸ்டாக்கு பாங்கிகளினுடனாவது ஸெண்ட்ரல் பாங்கிகள் வைத்துக்கொள்ளும் நாணயக்கடன்கள் பணம் புரளும் மார்க்கமாகும்.

136. இராஜதானி பாங்கி ஏற்பட்டபிறகு ஸெண்ட்ரல் பாங்கிகள் ஒன்றுக்கொன்று கடன்கொடுத்தல் நிற்கவும்.

137. டிபென்ஸர்களைக் காட்டிலும் நீண்டகாலக் கடன்கள் மேலானவை.

142. கடன் வாங்கும் சங்கங்களின் மெம்பர்களினது ஆஸ்தியையும், மீதம் பிடிக்கும் சக்தியையும் யூனிய னிருக்குமிடங்களில் யூனியனும், மற்ற விடங்களில் ஸெண்ட்ரல் பாங்கிகளும் நிர்ணயிக்கவேண்டும்.

146. சரிவர நிர்வகிக்கப்படும் கிராமச் சங்கங்களுக்கு ஈடில்லாமல் நாணயக் கடன் கொடுக்கலாம்.

147. சாதாரணமாய் பிராமிஸரி நோட்டின்பேரில்தான் சங்கம் கடன்வாங்கவேண்டும். சங்கங்கள் ஸெண்ட்ரல் பாங்கியிலிருந்து வாங்கும் கடனுக்கு அதிலெடுக்கப்பட்ட பங்குகள் ஈடாகயிருக்கக்கூடாது; ஆனால் அவைகளின் „டிபாஸிட்டை அடமானமாக' வைக்கலாம்.

149. மெம்பர்கள் திருப்பிக் கொடுத்துவரும் கடன்தொகைகளை ஸெண்ட்ரல் பாங்கியில் போடவேண்டும்.



150. கெடுக்கடந்த கடன் தொகைகள் நிலுவையிலுள்ள சங்கங்களின்பேரில் ஸெண்ட்ரல் பாங்கிகள் சாதாரணமாய் ஸிவில் கோர்ட்டுக்குப் போகக்கூடாது, ஆனால் ஆக்ட்டின் 39-வது ஸெக்ஷன்படி நடவடிக்கை யெடுத்துக் கொள்ளும்படி ரிஜிஸ்ட்ராரை கேட்டுக் கொள்ளவேண்டும்.

156. பணம் புரளும் மார்க்கங்களை, மூன்று மாதத்திற் கொருமுறை சோதனை செய்து ஒழுங்கு படுத்திக் கொள்ளவேண்டும்.

157. அதிகமாயிக்கும் நிதிகளை பிரொவின்ஷியல் பாங்கிக்கு அனுப்ப வேண்டும்.

158. பகிர்ந்துக்கொடுக்க நிகரலாபத்தைக் கணக்கிடும்பொழுது ஸெண்ட்ரல் பாங்கிகள் தங்களுக்கு முன்னமேயே சேரவேண்டியதும் ஆனால் தற்காலம் வரையில் கொடுபடாதிருந்ததுமான வட்டித் தொகைகளை சேர்க்கக் கூடாது.

161. ஸெண்ட்ரல் பாங்கிகள் தேர்ச்சியடைந்த வெளி ஆடிட்டர்களாலும் அல்லது ரிஜிஸ்ட்ராரின் சிப்பந்திகளாலும் தணிக்கை செய்யப்படலாம்.

164-174. பிரொவின்ஷியல் பாங்கியைப்பற்றியது:

176-178. (அதுவே).

181. காரண்டு அக்கௌண்டுகள் வைத்திருக்கும் தனி நபர் மெம்பர்களின் செக்குகளுக்கு ஸ்டாம்பு வேண்டாமென்று ஏற்பட்டிருப்பது அனாவசியம்.

182-183. ஐக்கிய இயக்கத்திற்கு கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்கள் திரவிய உதவியும், மனப்பூர்வமாய் உள்ளூர அதில் உழைப்பவர்களுக்கு மனோதைரியம் கொடுக்கவும் அனுமதி கொடுத்தல்.

184. ஆனால் அவர்களுக்கென்றேற்படுத்திய சங்கங்களில் மாத்திரம் மெம்பர்களாகலாம்.

186. ஜில்லா உத்தியோகஸ்தர்களிடம் ரிஜிஸ்ட்ராரின் அதிகாரங்களை மாற்றுவது சிபார்சு பண்ணத்தக்கதன்று.

190. டிபார்ட்டுமெண்டுகளுக்கு தலைவராயிருக்கும் ஜில்லா கலெக்ட்டர்களுக்கு எப்படி பிரயாணப்படி கொடுக்கப்படுகிறதோ அவ்விதமே ரிஜிஸ்ட்ராருக்கும் கொடுக்கவேண்டும். கோவாபரேடிவ் கமிட்டியாரின் ரிபோர்ட்டில் அநுபந்தம் 3-ல் கூறியுள்ளபடி மற்ற இராஜதானிகளிற் சென்று அங்கேயுள்ள ஐக்கிய முறைகளை நன்கறியும்படி அவருக்கு அனுமதி கொடுக்கவேண்டும்.

**II.** கமிட்டியாரின் மற்ற சிபார்சுகளுக்கு பின்வரும் குறிப்புகளை மதராஸ் கவர்ன்மெண்டார் அனுப்பி யிருக்கிறார்கள் :—

1. சிபார்சு, நெ. 8. (கால்நடை இன்ஷியூரென்ஸ் சங்கங்களுக்கு கவர்ன்மெண்டாரின் திரவிய சகாயம்):—சென்னை இராஜதானியில் இதுவரையில் யாதொரு கால்நடை இன்ஷியூரென்ஸ் சங்கமும் ஏற்படவில்லை, அல்லது இனி சமீபகாலத்திலாவது ஏற்படுமென்று தோன்றவில்லை. இவ்விஷயத்தில் கவனங்கொண்டு குறிப்பிட்ட ஸ்தலங்களில் இவ்வித சங்கங்களை ஸ்தாபித்து அவைகளின் பயனைத் தெரியப்படுத்தும்படி ரிஜிஸ்ட்ராருக்கு புத்திமதி சொல்லப்பட்டிருக்கிறது. தற்காலத்தில் ஓர் ஸெண்ட்ரல் கால்நடை இன்ஷியூரென்ஸ் சங்கத்தை யேற்படுத்துவதைப்பற்றி, ஹிஸ் ஹெக்ஸலென்ஸி கவர்னரும் அவர் கௌன்ஸிலர்களும் பின்னால் யோசிக்கலாமென்று அபிப்பிராயப் படுகிறார்கள்.

2. சிபார்சு, நெ. 12. (ஐக்கிய விவசாயச் சங்கங்களுக்கும் விவசாய இலாகாவுக்குமுள்ள சம்பந்தம்):— நல்ல விதைகளையும், விவசாயக் கருவிகளையும் மெம்பர்களுக்குக் கொடுத்துதவுதற்கென்று ஸ்தாபிக்கப்பட்ட சங்கங்களுக்கு விவசாய இலாகாவானது உதவி செய்துக்கொண்டு வந்தது; இவ்விதச் சங்கங்கள் ரிஜிஸ்ட்ராரின் அதிகாரத்தின் கீழிருக்க வேண்டும். இவ்விஷயத்தில் கமிட்டியார் செய்த சிபார்சுகள் ஆலோசனையிலிருக்கின்றன.

3. சிபார்சு, நெ. 18. (சிறு தொழிலாளிகளுக்கும் கீழ்வகுப்பினர்களுக்கும் ஸ்தாபிக்கப்படும் ஏழையான நகரச்சங்கங்களுக்கு கவர்ன்மெண்டார் உதவிசெய்தல்):—நகரத்திலுள்ள ஏழை வகுப்பினர்களின் சங்கங்களுக்கே பிரத்தியேகமாய் உதவிசெய்யக் கவர்ன்மெண்டார் ஆலோசனை செய்துக்கொண்டிருக்கிறார்கள். இதுவரையில் தோட்டிகளுக்கு முனிஸிபாலிடியால் ஏற்படுத்தப்பட்ட சங்கங்களைச் சேர்த்து, இவ்வித வகுப்பினர்களுக்கு 29 சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டன.

4. சிபார்சுகள், நெ. 50, 58, 59. (சங்கத்தின் கடன்வாங்கும் சக்தியையும், ஒவ்வொரு மெம்பர்களின் சாதாரண நாணயத்தின் எல்லையையும் நிர்ணயித்தல்):—இந்த இராஜதானியில் சங்கம்ரிஜிஸ்ட்ராகும் காலத்தில், பைலாக்களினாலேயே கடன் வாங்கும் சக்தியின் எல்லையானது நிர்ணயிக்கப்படுகிறது. கமிட்டியாரின் ரிபோர்ட்டில் 141-வது பாராவிற் கூறியபடி சொத்து விவர ஸ்டேட்மெண்டால் அவ்வெல்லை குறிக்கப்படுகிறது. இது முதலில் கொஞ்ச வருஷங்களுக்குப் போதுமென் அனுபோகத்தில் தெரியவருகிறது. மெம்பர்களின் மஹாசபை மீட்டிங்கின் தீர்மானத்தினால்தான் ஏதாவது மாறுபாடுகளை உண்டுபண்ணலாம். வேண்டியகாலத்தில் இவ்விதஞ் செய்வதே யொழிய வருஷத்திற் கொருமுறை செய்வதல்ல.



மஹா சபையின் மெம்பர்கள் வருஷத்திற்கு வேண்டிய கடன் தொகைகளை ஒருவித நிச்சயத்துடன் முன்பு அறியும் நிலைமையில்லாதவர்களாயிருக்தலால் ஹிஸ் ஹெக்ஸலென்ஸியும்; கௌன்ஸில் மெம்பர்களும் வருஷந்தோறும் இவ்வெல்லையை மாற்ற யோசிக்கும்படி வற்புறுத்தினால் அவ்வெல்லை மிகவும் உயர்ந்துவிடுமென பயப்படுகிறார்கள். உண்மையில் இவ்விதம் வருஷ ஆராய்ச்சியானது யாவரும் கவனிக்கத்தகாத சாமானிய ஸ்திதியில் வந்துவிடும். கடன் வாங்கிக்கொள்ளும் விஷயத்தில் பஞ்சாயத்தார்கள் தங்கள் அதிகாரங்களை கெட்டவழிகளில் உபயோகப் படுத்துவதற்கு [கமிட்டி ரிப்போர்ட்டின் பாரா 59 (6)]. இந்த இராஜதானியில் தகுந்த பாதுகாப்பு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது, அதாவது:—சங்கத்தை ரிஜிஸ்ட்டரினின்றும் ரத்துசெய்தல், அல்லது பஞ்சாயத்தார்களுக்கும் அவர்களின் பந்துக்களுக்கும் கடன் கொடுப்பதாயிருந்தால், மஹாசபையின் உத்தரவின்பேரில்தான் கொடுக்கலாமென்று பைலாவொன்று ஏற்படுத்தல்.

ஸெண்ட்ரல் பாங்கிகளும், அல்லது யூனியன்களும் தங்களைச் சேர்ந்த சங்கங்களின் கடன் எல்லையை நிர்ணயிப்பதில் மேற்கூறிய கெடுதல்கள் யாதொன்றுமில்லாமையாலும், அவைகள் அதை குறிப்பதில் ஆக்ஷேபனை யொன்றுமில்லை.

5. சிபார்சு நெ. 67. (உற்பத்தியில்லாத மற்ற விஷயங்களுக்குக் கொடுபடும் கடன்களின் காலமானது 2 வருஷத்திற் கதிகமாகாமலும், உற்பத்தி விஷயங்களுக்கு உதவும் கடன்களின் காலமானது அக்காரியங்களின் நோக்கத்திற்குத் தகுந்தாற்போலவுமிருத்தல்):—கடன் கொடுக்கும் அதிகாரிகளாகிய பஞ்சாயத்தார் அல்லது நிர்வகிக்கும் அதிகாரிகள் கடன் கொடுக்கும்பொழுதே கடன் பத்திரத்தில் திருப்பிச் செலுத்த வேண்டிய கெடுக்களையும் குறிக்கவேண்டிய தவசியமென்று சங்கங்களின் பைலாக்கள் தகுந்தபடி திருத்தப்பட்டுவருகின்றன. ஆனால் காலத்தை நிர்ணயிக்கும்பொழுது கடன் வாங்குகுபவரின் சக்தியையும் உத்தேசித்த காரியங்களையும் கவனிக்கப்படும். திருப்பிக்கொடுக்கும் தவணைகளை தள்ளிப்போட்டுக்கொள்ளும் வழக்கத்தை நிறுத்திவிடவேண்டுமென ரிஜிஸ்ட்ராருக்கு புத்திமதி சொல்லப்பட்டிருக்கிறது. சமீபத்தில் ரிஜிஸ்ட்டர் செய்யப்பட்ட சங்கங்களிலெல்லாம் கமிட்டியார் சொல்லியபடி நீண்ட காலக்கடன்களும், குறுகிய காலக் கடன்களும் ஒழுங்காய் ஏற்படுத்தப்பட்டன. இவ்விஷயத்தில் பாகஸாலா நாணயச் சங்கத்தின் பைலாக்கள் ஒப்பிடத் தகுந்ததா யிருப்பதால், அதின் காப்பி ஒன்றுளது;

அதை அனுப்பப்பட்டிருக்கிறது. பழைய கடன்களைத் தீர்க்கக்கொடுக்கும் கடன்களை கமிட்டியார் உற்பத்தி விஷயத்தைச் சாதாரணவைகளுடன் சேர்க்கவில்லையென மதராஸ் கவர்ன்மெண்டார் அறிகிறார்கள். இந்த இராஜதானியில் இவ்விதக் கடன்களுக்கு 5 வருஷம் அல்லது இன்னும் அதிக காலதவணைகள் கொடுக்கிறார்கள். இவ்விஷயம் நீங்கலாக, குடித்தனம், கலியாணம், வியாஜ்ஜியம் முதலிய காரியங்களுக்குக் கடன் கொடுப்பதில் இரண்டுவருஷம் எல்லையை ஏற்படுத்தலில் யாதொரு ஆக்ஷேபனையுமில்லை; ஆனால் பர்மாவைபோல் இவ்விஷயமாய் பிரத்தியேக பைலாக்களை யேற்படுத்தல் அனாவசியமென இக்கவர்ன்மெண்டார் கருதுகிறார்கள்.

6. சிபார்சு, நே. 80. (கடன்களை குறித்த காலங்களில் தவறாமல் கொடுப்பதும், வசூலாகாத நிலுவைக் கடன்களைக் காட்டுங் கணக்கு விவரமும்):—கடன்கள் சரியான காலங்களில் கொடுபடும்படி எச்சரிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படுகின்றன. அக்கௌண்டுகள் தள்ளிப்போடப்பட்ட தவணைகளையும், கடன்வாங்குபவர் ஒவ்வொருவருக்கும் தம்முடைய சொந்தக்கடன் விஷயத்திலும் அல்லது தாம் மற்றவர்களுக்கு ஜாமீனாயிருப்பதிலும் ஏற்படும் நிலுவைகள் இன்னதென்பதையும் தெளிவாய் விளக்குகின்றன. கமிட்டியார் ரிபோர்ட்டின் 74-வது பாராவில் கூறியுள்ள அக்கௌண்டு முறையை இந்த இராஜதானியில் ஏற்படுத்துவது அவசியமா வென்பதை ரிபோர்ட்டு செய்யும்படி ரிஜிஸ்ட்ராரைக் கேட்டிருக்கிறது.

7. சிபார்சு, நே. 88. (கிராம நாணயச் சங்கங்கள் தங்களிடத்தில் போடப்பட்ட டிபாஸிட்டுகளை சரியான காலங்களில் திருப்பிக் கொடுக்கச் சக்தியுடைத்தாயிருந்தால் அச்சங்கங்களின் க்ஷேமநிதிகளைத் தங்கள் தொழிலிலேயே உபயோகப்படுத்த அனுமதி கொடுத்தல்):—இந்த இராஜதானியைச் சேர்ந்தமட்டில் கிராம நாணயச் சங்கங்கள் தங்கள் க்ஷேமநிதிகளை தங்கள் சாமானியத் தொழில்களில் உபயோகப் படுத்தச் சொல்லுதல் நல்லதென இந்த கவர்ன்மெண்டார் நினைக்கவில்லை. க்ஷேமநிதிதான் சங்கங்களுக்குப் பணம் புரளக்கூடிய மார்க்கம். அது ஸென்ட்ரல் பாங்கியில் டிபாஸிட்டு செய்யப்பட்டுள்ளது; வேண்டும் சமயத்தில் பாங்கியானது அத்தொகையை முழுமையுமாவது அல்லது ஓர் பாகத்தையாவது, கொடுக்கத்தகுந்த நிலைமையிலிருக்கிறது. இவ்வழக்கமே நடந்தேறி வருவது அவசியம்; ஏனென்றால், கிராம நாணயச் சங்கங்களுக்கு திடீரென்று பணத்தேவைகள் ஏற்பட்டாலும் அவைகளை ஸமாளிக்க மார்க்கமிருக்கிறது. சங்கங்கள் ஒரு சமயத்தில் முறிவடைந்தாலும் இந்த நிதியானது எளிதியாய் வரக்கூடிய ஓர் ஸொத்தாகும்.



9. சிபார்சு, நே. 9?. (ஆடிட் செய்பவரின் நாமதேயங்கள்):—ஆக்டின் 35, 36 ஸெக்ஷன்களில் குறிக்கப்பட்ட "சோதனை," "விசாரணை" முதலியவார்த்தைகளை உபயோகப் படுத்துவதில் கமிட்டியாரின் சிபார்சுகளை, ஹிஸ் ஹெக்ஸலென்ஸியும், கௌன்ஸிலர்களும் அங்கிகாரஞ் செய்கிறார்கள். ஆனால் கவர்ன்மெண்டு சிப்பந்திகள் தணிக்கை செய்தபோதிலும், அவர்களுக்கு 'இன்ஸ்பெக்டர்' என்ற நாமதேயத்தை வைக்க அபிப்பிராயப் படுகிறார்கள். சங்கங்கள் தங்கள் செலவில் நியமித்துக்கொள்ளும் சிப்பந்திகளை சூபர்வைஸரெனக் கூப்பிடலாம்.

10. சிபார்சு, நே. 96. (ஒவ்வொரு இராஜதானியிலும் இரண்டு மேலான உத்தியோகஸ்தர்களை நியமிப்பதைப் பற்றியது):— இப்பொழுது இந்த இராஜதானியில் சுமார் 1,8?0 சங்கங்கள் சேர்ந்துள்ள ஐக்கிய இயக்கமானது, ரிஜிஸ்ட்ராரின் ஆளுகையிலிருக்கிறது. அவருக்குதவிசெய்ய 6 அஸிஸ்டெண்டு ரிஜிஸ்ட்ரார்களிருக்கிறார்கள். இந்த இராஜதானியானது 6 ஸெக்ஷன்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொன்றும் ஒவ்வொரு அஸிஸ்டெண்டு ரிஜிஸ்ட்ரார் வசத்திலிருந்து வருகின்றது. தற்காலத்தில் இங்கே ஜாயிண்ட் ரிஜிஸ்ட்ராரை நியமிக்க அவசிய மில்லையென மதராஸ் கவர்ன்மெண்டார் அபிப்பிராயப் படுகிறார்கள். ரிஜிஸ்ட்ராரின் வேலை காலியாவதற்கு முன்னமே சமாசாரம் தெரிவதால், அவருக்குப் பின் வருபவரைப் பழக்க ஏற்பாடு எடுத்துக்கொள்ளப்படுகிறது. மேலான அதிகாரிகள் எல்லா தேசங்களிலுள்ள ஐக்கிய முறையின் நூல்களை நன்கு கற்றவர்களா யிருக்க வேண்டுமென்று கமிட்டியார் சொல்வதை, இக்கவர்ன்மெண்டார் அங்கீகரிக்கிறார்கள். ஆனால் ஐரோப்பிய ஐக்கிய முறையில் சுயமாகவே அனுபோக முள்ளவர்களா யிருப்பது உபயோகமுள்ளதா யிருந்தபோதிலும் இங்கு அத்தியாவசியமென கவர்ன்மெண்டார் நினைக்கவில்லை. இந்த விஷயத்தில் கண்டிப்பான விதி ஒன்றை யேற்படுத்துவது அனாவசியமெனத் தோன்றுகிறது.

11. சிபார்சுகள், நே. 100, 101, 10?. (பிரதம தணிக்கையும் மேற்பார்வையும் சங்கங்கள் தாங்களே செய்துக்கொள்ளுதலும், மேலான தணிக்கையை மாத்திரம் கவர்ன்மெண்டார் வைத்துக்கொள்ளுதலும்):-கமிட்டியாரின் சிபார்சுகளை ஹிஸ் ஹெக்ஸலென்ஸி கவர்னவர்கள் சாதாரணமாய் ஒப்புக்கொள்ளுகிறார்; ஆனால் பிரதமதணிக்கைக்கும், மேற்பார்வைக்கும் முறையே இருவகை சிப்பந்தி வரிசைகளை போஷிக்கும்படி சங்கங்கள் தகுந்த நிகரலாபம் பெறவில்லையென அபிப்பிராயப் படுகிறார்.

1916ஹு பிப்ரவரி மாதத்தில் வெளியான 233-வது நெ. கவர்ன்மெண்டு உத்தரவின்படி வருஷந்தோறும் மேலான தணிக்கை செய்யும் பொருட்டு கவர்ன்மெண்டு ஆடிட்டர்களையும் நியமித்து தங்களால் அவ்வழியில் எவ்வளவு தூரம் உதவி செய்யமுடியுமோ அவ்வளவு தூரம் உதவி செய்து வருகிறார்கள். சங்கங்களினால் நியமிக்கப்பட்ட சூபர்வைஸர்கள் சங்கங்களின் பிரதமதணிக்கையும் மேற்பார்வையுஞ் செய்துவருகிறார்கள். ஸெண்ட்ரல் பாங்கிகளுடனும், சம்பந்தப்பட்ட யூனியன்களுடனும் கலந்துகொண்டு சூபர்வைஸர்களுக்கும், கவர்ன்மெண்டு ஆடிட்டர்களுக்கு முன்னமே இன்னவேலைகளெனவும் நிர்ணயிக்கும்படியான விதிகளை யேற்படுத்தும்படி ரிஜிஸ்ட்ராரைக் கேட்கப்பட்டிருக்கிறது புதியச் சங்கங்களை ஸ்தாபிப்பதில் பழைய சங்கங்களுக்கு அதிக ஆவலிருப்பதற்குக் காரணமில்லாததாலும், அவ்விஷயத்தில் அவைகளை செலவு செய்யச் சொல்லுவது நியாயமில்லாததாலும், ஐக்கிய ய்யக்கத்தைப் பரவச்செய்ய சங்கங்களின் மேற்பார்வை சிப்பந்திகளிடம் ஒப்புவிப்பதைக்காட்டிலும் கவர்ன்மெண்டாரின் சிப்பந்திகளிடமே கொடுத்துவிடுதல் நல்லதென கவர்னரவாகளும் அவர் கௌன்ஸிலர்களும் அபிப்பிராயப்படுகிறார்கள்.

**கவர்ன்மேண்டு ஆடிட்டர்களின் அந்தஸ்தும், சம்பளமும்**:—இப்பொழுதிருக்கும் 5 இன்ஸ்பெக்டர்களின் கடமைகளாவன, ஏற்கனவே ஸ்தாபிக்கப்பட்ட சங்கங்களை சோதனை செய்வதும், அவைகளின் வருஷத்தணிக்கைச் செய்வதும், புதிய சங்கங்களை ஸ்தாபிப்பது மாகும். இவர்களின் 9 பெயர்களின் சம்பளங்கள் ரூ. 0-விருந்து ரூ. 60 வரையிலிருக்கின்றன; பாக்கியுள்ள ஐவர்கள் சீப் இன்ஸ்பெக்டர்களென வழங்குவார்கள்; அவர்களின் சம்பளங்கள் ரூ. 60-விருந்து ரூ. 15 வரையிலிருக்கின்றன. இப்பொழுது கூறப்பட்ட ஸ்கீமானது அமுலுக்கு வந்தால், இன்ஸ்பெக்டர்களின் சங்கியை குறைந்துவிடு மென்றும், அவர்களின் சம்பளத்தை அதிகப்படுத்துவது அவசியமானால் அதற்குப் பிரத்தியேக நிதி ஒன்றை யேற்படுத்த வேண்டுமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

கவர்ன்மெண்டு ஆடிட்டர்களுக்குத் தகுந்த ஓய்வுகாலங்களும், சமயம் நேர்ந்தபொழுது வேறுபிரத்தியேக வேலைகளையும் கொடுக்க வேண்டுமென கமிட்டியார் சொல்லுவதை கவர்ன்மெண்டார் ஒப்புக்கொள்ளுகிறார்கள்.

**கவர்ன்மேண்டா ரல்லாத தணிக்கை சிப்பந்திகளும், சூபர்வைஸர்களும்**,—முன்னமேகூறிய 233 நெ. கவர்ன்மெண்டு உத்தரவின்படி, ஸெண்ட்ரல் பாங்கிகளாலும், யூனியன்களாலும் போஷித்து வரும்படியான மேற்பார்வை சிப்பந்திகள் பாங்கிகளால் நியமிக்கப்பட்டு ஆளப்படுவார்கள்.



ஆனால் வருஷ மேலான தணிக்கை மாத்திரம் கவர்ன்மெண்டு ஆடிட்டர்கள் செய்துவருவார்கள். கமிட்டியார் சிபார்சு செய்தபிரகாரம் பிரதம வருஷத்தணிக்கை சங்கங்களின் பொறுப்பில் விழுந்துவிடும் காலத்தில், பிரொவின்ஷியல் ஆடிட் யூனியன் ஒன்று ஏற்படுவதில் யாதொரு ஆக்ஷேபணையுமில்லையென ஹிஸ் ஹெக்ஸெலன்ஸியும் அவர் கௌன்ஸிலர்களும் கருதுகிறார்கள்.

**தணிக்கை, மேற்பார்வை நிதிகள்**:—கமிட்டியார் கூறியுள்ள பிரகாரம் தணிக்கை, மேற்பார்வை, செய்வதற்குப் பிரத்தியேக நிதிகளை யேற்படுத்த முயற்சிகளெடுக்கப்பட்டிருக்கின்றன.

12. சிபார்சு நே. 10 .—(தணிக்கை, மேற்பார்வை செய்யும் சிப்பந்திகளுக்கு படிப்பு உரிமை அனுவசியம்):—இப்பொழுது இவ்வித சிப்பந்திகளுக்குப் படிப்பு உரிமைகள் வேண்டியதில்லையென கமிட்டியாரின் அபிப்பிராயம் அந்தந்த இராஜதானிகளின் நிலைமைகளுக்குத் தகுந்தாற்போல் மாறுதலடைய வேண்டுமெனத் தோன்றுகிறது. படிப்பாளிகளான சிப்பந்திகள் ஏராளமாய்க் கிடைக்கக்கூடுமிடங்களில் லோகல் கவர்ன்மெண்டார் தங்களுக்குத் தோன்றிய வரையில் படிப்புரிமை வைப்பதில் யாதொரு ஆக்ஷேபணையு மிருக்கக் கூடாது.

13. சிபார்சு. நே:—1 7. (கியாரண்டீயிங்கு யூனியன்கள்)—கியாரண்டீயிங்கு யூனியன்களின் விஷயமானது கவர்ன்மெண்டாரின் யோஜனையி லிருப்பதால், அவைகளைப்பற்றிய அபிப்பிராயம் பின்பு கூறப்படும்.

14. சிபார்சு. நே. 108:—(கிராம நாணயச் சங்கங்கள் ஜாமீன் கடன்களும் வேறு நாணயக் கடன்களும் ஜாயிண்ட் ஸ்டாக்கு பாங்கிகளில் வாங்குவதைக் காட்டிலும் செண்ட்ரல் பாங்கிகளில் வாங்குவது உசிதம்):—கமிட்டியாரின் சிபார்சின்படியே இந்த இராஜதானியில் இவ்விஷயம் நடந்தேறி வருகின்றது. பொதுப்பு வரையறுக்கப்பட்ட சங்கங்களுக்கு வசூலான பங்குத் தொகைக்கு அதிகமாக செண்டரல் பாங்கிகள் கடன் கொடுக்க மறுக்கின்றன. இராஜதானி பாங்கி ஒன்று ஸ்தாபிக்கப்பட்ட பிறகு இவ்விதச் சங்கங்களின் மொத்த ஜாமீன்களுக்குத் தகுந்தபடி பணமுதவ யேற்பாடுகளெடுத்துக் கொள்ளப்படும்.

15. சிபார்சு. நே. 109-11.—(செண்ட்ரல் பாங்கிகளின் நிர்மாணமும் நிர்வாகமும்) கமிட்டியாரின் சிபார்சுகள் இக்கவர்ன்மெண்டார் ஒப்புக்கொள்ளுகிறார்கள். அவர்கள் கூறியுள்ள மாதிரி ஓர் பாங்கியானது சமீபத்தில் ஸ்தாபிக்கப்பட்டது.

16. சிபார்சு. நெ. 112—(சென்ட்ரல் பாங்கியின் விவகார யெல்லை)—இந்த இராஜதானியில் மூன்று சென்ட்ரல் பாங்கிகளின் விவகார யெல்லைகள் ஒவ்வொன்றும் ஒரு ஜில்லாவின் யெல்லைக்கதிகமாயிருக்கின்றன. ஓர் ஜில்லாவில் நூறுசங்கங்கள் ரிஜிஸ்ட்டரானபிறகு, இவைகள் பங்குகள் எடுத்துக் கொள்ளுமா வென்று விசாரித்தப் பிறகு அனுகூலமா யிருந்தால் ஓர் ஜில்லா பாங்கிங் யூனியனை யேற்படுத்துவது வழக்கம். கமிட்டியாரின் சிபார்சுகள் அனுசரிக்கப்படும்.

17. சிபார்சு நெ. 113—(சென்ட்ரல் பாங்கிகளையாவது அல்லது பிரொவின்ஷியல் பாங்கின் கிளைகளையாவது ஏற்படுத்துதல்)—நாணயப் பொறுப்புள்ள யூனியன்கள் இந்த இராஜதானியிலில்லை. ஐக்கிய முயற்சித் தொழிலில் பொதுஜனங்கள் சேர்ந்து உழைத்து அதில் அனுபோகமடைவதற்குத் தகுந்த ஸாதனமா யிருப்பதால், பிரோவின்ஷியல் பாங்கியின் கிளைகளை ஸ்தாபிப்பதைக் காட்டிலும் சுய இச்சையாய் சென்ட்ரல் பாங்கிகளை ஒவ்வொரு ஜில்லாவிலும் யேற்படுத்துவது நல்லதென ஹிஸ் ஹெக்ஸலன்ஸியும் அவர் கௌன்ஸிலர்களும் அபிப்பிராயப்படுகிறார்கள்.

18. சிபார்சு. நெ. 116—(அணைக்கப்பட்ட சங்கங்களுக்கு மாத்திரம் சென்ட்ரல் பாங்கிகள் பணமுதவுதல்)—சென்ட்ரல் பாங்கியின் நிர்வாகத்தில் கிராம நாணயச் சங்கங்களின் பிரதிநிதிகளிருந்தால் மாத்திரம் அப்பாங்கியில் பங்கெடுத்துக் கொள்ளும்படி கிராம நாணயச் சங்கங்களை கட்டாயப் படுத்துவது இந்த இராஜதானியின் வழக்கம். மற்றப்படி கமிட்டியாரின் சிபார்சை கவர்ன்மெண்டார் ஒப்புக்கொள்ளுகிறார்கள்.

19. சிபார்சு. நெ. 117—(நாணயத்தைச் சாராத மற்றச்சங்கங்களுக்குக் கடன் கொடுக்கும்பொழுது தகுந்த ஈடு வாங்குதல்)—இவ்விஷயமா யேற்படும் விதிகள் மிகவும் விரிவுள்ளதா யிருப்பது நல்லது; மற்றப்படி, முன்பாராவில் கூறியுள்ளதற்குட்பட்டு கமிட்டியாரின் சிபார்சை கவர்ன்மெண்டார் அங்கீகரிக்கிறார்கள்.

20. சிபார்சு. நெ. 118—(லேவாதேவி செய்யாமல் கடன்களின் அக்கௌண்டுகளை மாத்திரம் சமரசப்படுத்தும் சென்ட்ரல் பாங்கிகள்)—இம்மாதிரி சென்ட்ரல் பாங்கிகள் இந்த இராஜதானியிலில்லை.

21. சிபார்சு. நெ. 119—(சென்ட்ரல் பாங்கிகளுடன் அணைப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட பிரவேசக் கட்டணவரியை நீக்கிவிடுதல்)—இந்த இராஜதானியில், அக்கௌண்டு புஸ்தகங்கள், பாரங்கள், ஆபீஸ் ஸாமான்கள் முதலியவைகளை வாங்குவதால் ஏற்படும் ஆரம்பச் செலவுகளுக்கு ஈடாகும்படி, கிராமச் சங்கங்களிடமிருந்து சென்ட்ரல் பாங்கிகள் ஒரு சிறு கட்டண வரியை வசூல் செய்கின்றன. இதுவிஷயமாய் யாதொரு அசௌகரியமும் கஷ்டமும் ஏற்படவில்லை. அதைப்பற்றிய முறைப்பாடும் வரவில்லை. இப்பொழுது நடந்து வரும் வழக்கத்திலிருந்து யாதொரு மாறுதலும் செய்ய கவர்ன்மெண்டார் நினைக்கவில்லை.



22. சிபார்சு. நெ. 122—(சங்கங்கள் வாங்கும் கடன் தொகைக்குத் தகுந்தாற்போல் சென்ட்ரல் பாங்கிகளில் பங்கெடுத்துக்கொள்ளல்). சென்ட்ரல் பாங்கிகளின் நிர்வாகத்தில் கிராம நாணயச் சங்கங்களின் பிரதிநிதிகள் தகுந்தபடியிருக்க ஏற்பாடு செய்தால், கமிட்டியாரின் சிபார்சை அங்கீகரிப்பதில் மதராஸ் கவர்ன்மெண்டாருக்கு ஆக்ஷேபணையில்லை.

23. சிபார்சு. நெ 127—(சென்ட்ரல் பாங்கிகளில் கிராமச் சங்கங்கள் டிபாஸிட் செய்தல்)—88-வது சிபார்சைபற்றிக் கூறும்பொழுதே இவ்விஷயமானது தீர்ந்து விடப்பட்டது.

24. சிபார்சு. நெ. 128 (சென்ட்ரல் பாங்கிகளில் கரண்ட் அக்கௌண்டுகள் வைப்பது சரியல்ல)—இவ்விஷயமானது ஆலோசனையிலிருப்பதால், ஹிஸ் ஹெக்ஸலன்ஸியும் கௌன்ஸிலர்களும் தங்கள் அபிப்பிராயத்தை பின்பு கூறுவார்.

25. சிபார்சு. நெ. 131—(டிபாஸிட்டுகளின் காலங்கள்)—கமிட்டியார் முன்பு யோசித்தபடி கடன்கள் திருப்பிக்கொடுபடும் காலங்களைக் குறுக்குவதற்குக் கடுமையான விதியொன்றை யேற்படுத்தினால் ஸ்திரமான சீர்திருத்தங்களொன்றுக்கும் சங்கங்கள் கடன் கொடுக்க முடியாமற் போய்விடும். ஹிஸ் ஹெக்ஸலன்ஸி கவர்னரும் கௌன்ஸிலர்களும் அவ்வாறு விதியை ஏற்படுத்துவதற்கு ஆக்ஷேபிக்கிறார்கள். ஸ்திரமான சீர்திருத்தங்களுக்குப் பணமுதவுதல் ஐக்கியவியக்கத்தின் முக்கிய நோக்கங்களில் ஒன்றென்று நினைக்கிறார்; அப்படிச் செய்வதில் அநேக கஷ்டங்களிருந்தபோதிலும், இவ்விஷயத்தை நன்றாய் சூசனை பண்ணி ஓர்விதமுடிவு செய்வதின்முன் இப்பொழுதிருக்கும் வழக்கத்தை விடுவதாக அபிப்பிராயப்படவில்லை. விவசாயிகள் கவர்ன்மெண்டாரிடமாவது அல்லது சாவகாரர்களிடமாவது ஸ்திரமான சீர்திருத்தங்களுக்கு கடன் வாங்காமற் செய்து அவர்கள் கடன்கள் தகுந்த ஜாமீனில் பெறும்படி க்ஷேம நிதிகளாலும் வேறு பணம் புரளக்கூடிய மார்க்கங்களினாலும் சென்ட்ரல் பாங்கிகளை பலப்படுத்துவது கவர்ன்மெண்டாரின் நோக்கம். ஆனால் ஜாயிண்டு ஸ்டாக் கம்பெனியிலிருந்து கடன் வாங்குவதில் அதிக நம்பிக்கை வைக்கவேண்டாமென்று கமிட்டியார் சொல்வதை கவர்ன்மெண்டார் அங்கீகரிக்கிறார்கள்.

26. சிபார்சு. நெ. 132—(கமிட்டியார் சொல்லும் சிபார்சுகளை அமுலுக்குக் கொண்டு வருவதாயிருந்தால், சென்ட்ரல் பாங்குகள் வாங்கும்

வட்டியில் மூன்றுவீத வட்டி வித்தியாச மிருக்கவேண்டும்) இந்த இராஜதானியில் சென்ட்ரல் பாங்கிகள் சாதாரணமாய் ஸ்திரமான டிபாஸிட்டுகளுக்கு 6 வீதம் வட்டி கொடுத்து சங்கங்களுக்குக் கொடுக்கும் கடன்களின்பேரில் 7½ வீதம் வட்டி வாங்கியும் வருகின்றன; சங்கங்கள் மெம்பர்களிட மிருந்து 9⅜ வீதம் வாங்குகின்றன. கவர்ன்மெண்டார் சங்கங்களின் க்ஷேம நிதிகளை அதிகப்படுத்துவதில் மிக்க கவலையுள்ளார்கள். சென்ட்ரல் பாங்கிகளுக்கும் கிராமச்சங்கங்களுக்கும் லேவாதேவியில் 3 வீதம் வட்டி வித்தியாச முண்டாகும் ஏற்பாட்டை கவர்ன்மெண்டார் சந்தோஷத்துடன் எதிர்பார்க்கிறார்கள். சூபர்விஷனுக்காக ஓர் நிதி உண்டாகும் வண்ணம், சங்கங்களுக்கு கடன் கொடுக்கும் வட்டியை 100-க்கு ½ வீத முயர்த்தும்படி பாங்கிகள் தூண்டப்பட் டிருக்கின்றன தனி நபர் மெம்பர்களுக்கு கொடுக்கும் கடன் வீதத்தைக் கொஞ்சம் உயர்த்தும் விஷயமானது கவர்ன்மெண்டாரின் யோஜனையிலிருக்கிறது. இதைத் தவிர வேறொன்றும் செய்வது இப்பொழுது சாத்தியமில்லை யென்றும், ஆனால் கமிட்டியாரின் சிபார்சானது தங்கள் நோக்கித்தி லிருக்குமென்றும் கவர்ன்மெண்டார் கூறுகிறார்கள்.

27. சிபார்சு, நே. 138:—(பங்கு முதலும் க்ஷேம நிதியும் சேர்ந்து மொத்தக் கடன் தொகையில் 100-க்கு 12½ வீதத்திற்குக் குறைவுபடக் கூடாது)—கவர்ன்மெண்டார் கமிட்டியாரின் சிபார்சை சாதாரணமாய் ஒப்புக்கொள்ளுகிறார்கள்; ஆனால் இந்த இராஜதானியைச் சேர்ந்தமட்டில் இந்த சிபார்சானது சமீபத்தில் பூர்த்தி யடையுமெனத் தோன்றவில்லை.

28. சிபார்சு, நே. 139:—(சென்ட்ரல் பாங்கிகள் தனி நபர்களுக்குக் கடன் கொடுக்கவாவது அல்லது வெளியிடங்களில் லேவாதேவி செய்யவாவது கூடாது)—இந்த இராஜதானியில் சென்ட்ரல் பாங்கிகள் தனி நபர் மெம்பர்களுக்கு அவர் டிபாஸிட்டு செய்த தொகைகளின் பேரில் கடன் கொடுக்கின்றன. ஹிஸ் ஹெக்ஸலென்ஸி கவர்னரவர்கள் இவ்வேற்பாடு ஆக்ஷேபிக்கத் தகுந்ததென கமிட்டியாரின் அபிப்பிராயத்தை ஒப்புக்கொண்ட போதிலும், இப்பொழுது திடீரென ஏதாவது மாறுதல்கள் செய்தால் தீமைகள்தான் நேரிடுமென நினைக்கிறார். சென்ட்ரல் பாங்கிகள் வெளியிடங்களில் லேவாதேவி வைத்துக் கொள்ளக் கூடாதென்ற கமிட்டியாரின் சிபார்சானது இங்கு அனுபோகத்திலிருப்பதை ஒத்திருக்கின்றது.

29. சிபார்சுகள், நே. 140, 1[4]1:—(தன்னுடன் அணைக்கப்பட்ட சங்கங்களின் நாணய வெல்லையை சென்ட்ரல் பாங்கி அறியும் வழி):—56, 58, 59—சிபார்சுகளைப் பற்றிக்கூறும் பொழுதே இவ்விஷயம் பிரஸ்தாபிக்கப் பட்டிருக்கிறது.



30. சிபார்சுகள், நே. 1[4]3—144.—'வருஷத்தில் ஒரு காலத்திலாவது அல்லது இரண்டு காலங்களிலாவது மாத்திரம் கடன்கள் கொடுபடவேண்டும். யூனியன்களின் சிபார்சுகளை யெடுத்துக் கொள்ளவேண்டும்)—இந்த இராஜதானியில் வருஷத்தில் எக்காலத்திலும கடன்கள் கேட்டு வாங்கப்படுகின்றன. இந்த இரண்டு சிபார்சுகளில் பிரஸ்தாபிக்கபட்ட அளவு சென்ட்ரல் பாங்கிகளின் நடவடிக்கைகளின்பேரில் அதிகாரம் செலுத்துவது விரும்பதக்கதல்லவென கவர்ன்மெண்டார் அபிப்பிராயப் படுகிறார்கள்:

31. சிபார்சு, நே. 1[3]5:—(டிபாஸிட்டுகளின் காலங்கள்):—131-நே. சிபார்சைப் பற்றிச் சொல்லும்பொழுது இவ்விஷயமும் கூறப்பட்டுள்ளன.

32. சிபார்சு, நே. 14[8]:—(கடன்களின் வட்டி வீதங்கள்)—இச்சிபார்சின் விஷயமாய் கவர்ன்மெண்டார், ரிஜிஸ்ட்ராரை இன்னும் சில தகவல்களைக் கேட்டிருக்கிறார்கள்.

33. சிபார்சுகள், நே. 151, 155:—(சென்ட்ரல் பாங்கிகளின் பணம் புறளும் மார்க்கங்கள்).—ஹிஸ் ஹெக்ஸலென்ஸி கவர்னரவர்கள் இச்சிபார்சுகளை ஒப்புக் கொண்டிருக்கிறார்.

1915 வரு ஜூன்மாதம் 30 தேதியோடு முடிவுபெறும் வருஷத்தில் இந்த இராஜதானியின் க்ஷேமநிதியின் மொத்தத்தொகை ரூ. 8·24 லக்ஷம், கமிட்டியார் சொல்லிய குறைவு யெல்லைக்கு (ரூ. 14·20 லக்ஷம்) மிகவும் தாழ்ந்திருக்கிறது. க்ஷேமநிதி தகுந்தபடி உயரும் வரையில், 1912 வருஷத்திய ஆக்ட்டு, 32-வது செக்ஷன். I (a), (b) பிரிவுகளில் குறிக்கப்பட்டபடி, பணமெளிதில் புறளக்கூடிய கவர்ன்மெண்டு பேபர்களில் போடவேண்டுவது அவசியமென கவர்னரவர்கள் நினைக்கிறார்; ஆனால் அட்வகேட் ஜனரலாகிய ஆனரபில் கார்பட்டு துரையவர்கள் 32-வது செக்ஷன் (a) யிலிருந்து (d) வரையிலுள்ள பிரிவினைகளிற் காட்டியபடி எந்த ஸெக்கூரிடிகளிலாவது அந்த நிதியைப் போடலாமென்றும், இந்த அதிகாரத்தை வேறுவிதி ஒன்றை யேற்படுத்தி எடுக்கமுடியாதென்றும், 43-வது ஸெக்ஷன்படி ஆக்ட்டில் கூறிய எண்ணங்களை வழக்கத்திற் கொண்டுவர மாத்திரம் கவர்ன்மெண்டார் விதிகளையேற்படுத்தலா மென்றும் சுட்டிக் காட்டுகிறார். அப்படியேதாவது ஆக்ட்டில் சீர்திருத்தஞ் செய்யவேண்டு மானால் செய்யக்கேட்டுக் கொள்ளப் படுகிறது.

சிபார்சு, நே. 15[?]—(சட்டத்தில் குறிப்பிட்ட பிரகாரம் மாத்திரம் க்ஷேமநிதி போட்டுவந்த பாங்கிகள், திடீரென்று வரும் வேறு செலவுகளுக்கென்றாவது அல்லது வசூலாகாத கடன்களை உத்தேசித்தாவது ஓர்

நிதி யேற்படுவதவசியம்.)—1912ஞ்வருத்திய ஆக்ட்டு 43-வது ஸெக்ஷன் படி பொறுப்பு வரையறுத்த சங்கங்களின் நிகரலாபங்கள் 9 வீதத்திற்கு அதிகமாகர்த டிவிடெண்டுக்கும், 'பொதுநன்மை நிதி'க்கு 7½ வீதமுஞ் செல்லானதுபோக பாக்கியுள்ளதை க்ஷேமநிதிக்குச் சேர்க்கவேண்டிய தென கவர்னரவர்கள் உத்தேசிக்கிறார். சட்டத்திற் சொல்லிய குறைந்த வெல்லையாகிய 25 வீதத்தைக் காட்டிலும் இவ்வித வேற்பாட்டில் க்ஷேமநிதித்தொகை உயருமென நினைக்கப்படுகிறது. இம்மாதிரி யோசனை கைக் கூடுமானால், வசூலாகாத தொகை நிதியென ஒன்றை யேற்படுத்துவது அனாவசியம்.

34. சிபார்சு, நே. 160:—(பணமெளிதில் புறளும் தகுந்த மார்க்கங்களிருக்குமிடங்களில், கட்டிட நிதி ஒன்றை யேற்படுத்திக் கொள்ளலாம்)—க்ஷேமநிதிகள் வேண்டுமளவு சேரும்வரையில், கட்டிட நிதிகளைப்பற்றியே பேசுவது சரியல்லவென கவர்ன்மெண்டார் அபிப்பிராயப் படுகிறார்கள். இந்த இராஜதானியில் சென்ட்ரல் பாங்கியின் ஆபிஸும் விவசாயசாமான்கள் விற்கும் டிப்போவும் ஒரே கட்டிடத்திலிருந்து வருகிறதில்லை.

35. சிபார்சு, நே. 162:—(சென்ட்ரல் பாங்கிகளின் ஆஸ்திக்கடன் ஸ்டேட்மெண்டுகளும், வருஷாந்திர ரிபோர்ட்டுகளும் விவரமாய் பிரசுரிக்கப் படவேண்டும்).—போர்ட் ஸெண்டு ஜார்ஜ் கெஜட்டிலாவது அல்லது ஜில்லா கெஜட்டுகளிலாவது, சென்ட்ரல் பாங்கிகளின் தணிக்கை உத்தரவுகளும், வரவு செலவு, ஆஸ்திக்கடன், லாபநஷ்ட ஸ்டேட்மெண்டுகளும் பிரசுரிக்கப்படுகின்றன.

## இராஜதானி பாங்கி.

36. சிபார்சு, நே. 175:—(இராஜதானி பாங்கியின் பணம் எளிதில் புறளக்கூடும் மார்க்கங்கள்).—இந்த சிபார்சை கவர்ன்மெண்டார் அங்கீகரிக்கிறார்கள்; ஆனால் பணம் புறளக்கூடிய தொகைகளுக்கும், மொத்த கடன்களுக்குமுள்ள வீதாசாரமனது, கமிட்டியார் உத்தேசித்ததைவிட அதிகமாயிருத்தல் நல்லதென அபிப்பிராயப்படுகிறார்கள்.

## போது உதவி.

37. சிபார்சு, நே. 180:—(ஸப் ரிஜிஸ்ட்ரார்களுக்கு பீஸ் கொடுத்தல்).—இந்த ராஜதானியில் ரிஜிஸ்ட்ரேஷன் பீஸிலிருந்து ஸப்ரிஜிட்ரார்களுக்கு பீஸ் கொடுத்தல் வழக்கத்திலில்லை.

38. சிபார்சு, நே. 185:—(கவர்ன்மெண்டு வேலைக்காரர்களும், சங்கங்களின் நிர்வாக கமிட்டிகளும்).—கமிட்டியாரின் சிபார்சுகளை கவர்ன்மெண்டார் ஒப்புக்கொள்ளுகிறார்கள். அவைகள் இந்த இராஜதானியில் வழங்கிவருதை ஒத்திருக்கின்றன. கெஜட்டுஆபீஸர்கள் தாங்கள் மெம்பர்களாயிருக்கும் கிராம நாணயச்சங்கங்களிலிருந்து கடன் வாங்குவதை நிறுத்த வேண்டுமென கவர்னவர்கள் நினைக்கிறார்.



39. சிபார்சு, நே. 187-(சங்கங்களுக்கும் ஜில்லா அல்லது ஸப் டிவிஷன் ஆபீஸர்களுக்குமுள்ள சம்பந்தங்கள்):—இந்த இராஜதானியில் கலெக்ட்டர்களாவது அல்லது ஸப்டிவிஷன் ஆபீஸர்களாவது சென்ட்ரல் பாங்கிகளின் ஹெக்ஸ் அபிஷயல் சேர்மனாகவாவது அல்லது அவைகளின் நிர்வாகக் கமிட்டியிலாவதிருந்ததில்லை. அவர்கள் அவ்வுத்தியோகங்களை வகிப்பது சரியல்லவெனத் தோன்றுகிறது. ஐக்கிய வியக்கத்தின் வளர்ச்சியானது ஐக்கிய முயற்சிக்காரர்கள் எவ்வளவு தூரம் தங்கள் காரியங்களை தாங்களே பொறுத்துக்கொண்டு நிர்வகித்து வருவதைச் சார்ந்திருக்கிறது, கவர்ன்மெண்டாரின் ஆளுகை குறைவாயிருந்தால் இவ்வூக்கம் ஓங்கும். இந்த ஆலோசனையினாற்தான் கமிட்டியாரின் சிபார்சுகளுக்கு மாறாக இக்கவர்ன்மெண்டார் அபிப்பிராயப் படுகிறார்கள்.

40. சிபார்சு, நே. 189:—(ரிஜிஸ்ட்ரார்களின் அந்தஸ்தும் சம்பளமும் உயர்தல்):—ரிஜிஸ்ட்ராரின் உத்தியோகமானது கலெக்ட்டர் கிரேடில்சேர்ந்தது; ரிஜிஸ்ட்ரார் சம்பளத்தின் எல்லையை நிர்ணயிக்க வேண்டுமென்பதை கமிட்டியார் மறுப்பது, இக்கவர்ன் மெண்டார் சரியெனவொப்புக் கொள்ளுகிறார்கள். ஆனால் ஸ்தலப்படிகளை அதிகப்படுத்துவது அனாவசியமென நினைக்கிறார்கள். கோடைகாலத்தில் கவர்ன்மெண்டார் மலை ஸ்தலங்களுக்குப் போவதாயிருந்தால் ரிஜிஸ்டராரின் ஆபீஸும் அப்பொழுது அங்கு போகவேண்டுமென கமிட்டியார் சொல்வதை இக்கவர்ன்மெண்டார் ஒப்புக்கொள்ளவில்லை. அவசரமான காரியங்களில் ரிஜிஸ்ட்ரார் மாத்திரம் உதகமண்டுக்குப் போய் வந்தால் போதுமென நினைக்கிறார்கள்.

41. சிபார்சு, நே. 191:—(ஜாயிண்டு ரிஜிஸ்ட்ரார்களும் அஸிஸ்டெண்டு ரிஜிஸ்ட்ரார்களும்):—96-வது சிபார்சுவிஷயமாய்க் கூறியதைப் பார்க்கவும்.

42. சிபார்சுகள், நே. 194, 195.—(இந்த இராஜதானியில் டெவலெப்மெண்டு கமிஷனர் ஒருவரை நியமித்தல்):—ஐக்கிய முயற்சி, விவசாயம், முதலிய முக்கிய விஷயங்களில் அவசியமான காரியங்கள் முடிவு பெறுவதில் தாமதங்கள் ஏற்படாவண்ணம், கவர்ன்மெண்டாருக்கும், டிபார்ட்மெண்ட் தலைவர்களுக்கும் நடுவில் ஓர் டெவலப்மெண்ட் கமிஷனரை நியமிப்பதை இக்கவர்ன்மெண்டார் ஆக்ஷேபிக்கிறார்கள்.

மேலும் இவர்களுக்குள் அதிகாரங்களைப் பிரிப்பதில் கஷ்டங்களிருக்கின்றனவென்றும் நினைக்கிறார்கள்.

43. சிபார்சு, நே. 196:—(இராஜாங்க விஷயமாயாவது மதவிஷயமாயாவது அபிப்பிராயபேதங்களுள்ள சங்கத்தீர்மானத்தையும், நிர்வகித்து வரும் கமிட்டியின் செய்கைகளையும் ரெத்து செய்ய ரிஜிஸ்ட்ராருக்கு அதிகாரங்கொடுத்தல்)—இவ்விஷயங்கள் ஏதாவதிருந்தால் கவர்ன்மெண்டார் ஆக்ட்டின் 43-வது செக்ஷன்படி விதியொன்றை யேற்படுத்துவதில் யாதொரு ஆக்ஷேபணையுமில்லை யெனவும் ஆனால் சங்கங்களின் நோக்கங்கள் ஏற்கனவே பைலாக்களில் குறிக்கப்படுதலால் இவ்விஷயமாய் பொது விதி ஒன்று இப்பொழுது அவசியமில்லை யெனவும் அபிப்பிராயப்படுகிறார்கள்.

44. சிபார்சு, நே. 19:—(இந்தியா கவர்ன்மெண்டுக்காக தேர்ச்சியடைந்த கோவாபரேடிவ் அட்வைஸர் ஒருவரை நியமித்தல்):—கோவாபரேடிவ் அட்வைஸர் ஒருவரை நியமிப்பது அனாவசிய மென்றும் அபிவிருத்தியடையும் குறிக்கப்பட்ட மார்க்கங்களிலிருந்து ஏதாவது இராஜதானியின் ஐக்கிய யியக்கம் மாறுபட்டு விலகினால் வருஷா வருஷம் கூடும் இராஜதானி ரிஜிஸ்ட்ரார்களின் கான்பரென்ஸுகளால் ஒழுங்கு படக்கூடுமென்றும் பெரிய தேசமாகிய இந்தியாவில் இராஜதானிகளின் ஐக்கிய வளர்ச்சியானது ஒன்று பட்டாற் போலிருக்க முடியாததினால் இவ்வுத்தியோகஸ்தரை நியமிப்பதில் அதிக ஸாதனங்கள் ஏற்படாதென்றும் இக்கவர்ன்மெண்டார் அபிப்பிராயப்படுகிறார்கள்.

---

# ஒரு கிராம ஐக்கிய நாணயச்சங்க பஞ்சாயத்து மீட்டிங்கு.

(140-ம் பக்கத் தொடர்ச்சி.)

**செட்டியார்**—வேண்டியதேயில்லை, உள்ளதை வைத்துக்கிட்டுக் கொண்டு வித்தால் போதும். ஏராளமாய் பணம் வாங்கக்கூடாது. அப்புறம் பொருப்பு யாருடையது? வேண்டாம்.

**இராமஸ்வாமி பிள்ளை**—இப்படிச்சொன்னால் சங்கம் எப்படி நடக்கும், மனுக்களுக்கு பைசல் சொல்லுகிறதுமில்லை, ஊரில் டிபாஸிட்டும் கிடைக்கிறதில்லை, கொடுக்கிறேன் என்று சொன்னால் டவுன் பாங்கிலும் வாங்குவதில்லை, இதென்ன இப்படிச் சொன்னால் சங்கம் விருத்தியாவது எப்படி?

**அய்யாவய்யர்**—ஸெக்ரிடரி கோபித்துக் கொள்ளுகிறார். செட்டியாரே! இந்தத்தடவை மட்டும் வாங்குவோம்.



**இன்ஸ்பெக்டர்**—சங்கம் (Progress) ஆகவேண்டும், பணங்கிடைத்தால் டவுன் பாங்கிக்கு கொடுத்துவிடலாம், நிர்ப்பந்தம் கிடையாது.

**செட்டியார்**—வட்டி ரூ 100-க்கு ரூ-$7\frac{1}{2}$ கேட்கிறார்கள், குறைத்துக் கொடுத்தால் என்ன? பணந் தான் ஏராளமாயிருக்கே.

**இன்ஸ்பெக்டர்**—கொஞ்சங் கவனிக்கவேண்டும், டவுன் பாங்கியில் ரூ 10[illegible]-க்கு ரூ [illegible]-வட்டிக்கு டிபாஸிட்டு வாங்குகிறார்கள், 100-க்கு ரூ $7\frac{1}{2}$-க்கு சங்கங்களுக்கு கொடுக்கிறார்கள், 100-க்கு ரூ $1\frac{1}{2}$-லாபம், நீங்கள் $7\frac{1}{2}$-க்கு வாங்கி 9[illegible]-க்கு கொடுக்கிறீர்கள், உங்களுக்கு $1\frac{1}{2}$-லாபம். இதிலென்ன அக்கிரமமிருக்கு, உங்களுக்குச் செலவும் குறைச்சல்.

**செட்டியார்**—ஓகோ! அப்படியா, ஏராளமாய் பணம் வாங்கவில்லையோ டவுன்பாங்கில் இனாமாய் ஸர்க்காரில்? அப்படியல்லவா எண்ணிக் கொண்டிருந்தேன்.

**இன்ஸ்பெக்டர்**—இல்லவே இல்லை, எல்லாம் டிபாஸிட்டுத்தான், டவுனில் டிபாஸிட்டுகள் வருகிறது. பணத்தட்டு அவர்களுக்குக் கிடையாது.

**காரியதரிசி**—அப்படியானால் ரூ 1,000-க்கு மனு அனுப்புகிறோம், inspector சீக்கிரம் அனுப்பினால் காரியம் ஆகும். (யாரோ ஒருவர் ஸெக்ரிடெரி காதில் இரகசியமாய் ஏதோ சொல்லிவிட்டுப் போய்விட்டார்) மறந்துவிட்டேன், பஞ்சாயத்து மெம்பர் பஞ்சாபகேசய்யர் ரூ 200 கடன் கேட்கிறார். அவசியமாம், அதுதான் இப்போது அந்தப் பையன் வந்து சொல்லிப் போனது.

**இராமஸ்வாமி பிள்ளை**—அவருக்கு எதற்கு பணம்? பஞ்சாயத்து மெம்பர்கள் கூடியவரையில் சங்கத்தில் பணம் வாங்காமலிருப்பது நல்லது, எப்பொழுதோ படித்தேன், சென்னை கான்பிரன்ஸில் ஒரு தீர்மானம், பஞ்சாயத்து மெம்பர்களுக்கு கடன் வேண்டுமானால் ஜெனரல் மீட்டிங்கில் வைத்துத்தான் கொடுக்கவேண்டு மென்று சொல்லப்பட்டது.

**இன்ஸ்பெக்டர்**—ஆம் ஆம், ஒரு தீர்மானம் எழுதப்பட்டிருந்தது, பஞ்சாயத்து மெம்பர்கள் கடனே வாங்கக்கூடாதென்ற நிர்ப்பந்தம் ஏற்படுத்துவது அவ்வளவு நியாயமில்லையென்று நினைக்கிறேன். சில இடங்களில் 10-பேர் சேர்ந்து சங்கம் ஸ்தாபிக்க மனு செய்கிறது. ரிஜிஸ்ட்ரானவுடன் டிஸ்டிரிக்ட் பாங்கியிலிருந்து ரூ 2,000, 3,000 வாங்கி இவர்கள் பிரித்து எடுத்துக் கொள்ளுகிறது, இப்படிச் செய்தால் ஊரிலுள்ள பலருக்கு சங்கத்திலிருந்து பணங்கிடைப்பது சாத்தியமில்லை, இதற்காகவே மேலே சொன்னமாதிரி ஒரு ரூல் ஏற்படுத்த வேண்டுமென்று பிரேரேபணை செய்யப்பட்டது.

**செட்டியார்**—நான் தருகிறேன் வாங்கிக் கொள்ளட்டும், இச்சங்கத்தில் வாங்குவானேன் ?

**காரியதரிசி**—பஞ்சாயகேசய்யர் கோபித்துக் கொள்ளுவார், சங்கத்திற்கு நாம் பாடுபடுவது, நமக்கு சமயத்தில் பணம் கிடையாதென்று சொல்லுவதாவென்று அன்றே நான் ஜாடையாய்ச் சொன்னபோது கூறினார். இந்தத்தடவை கொடுத்து விடுவோம்.

**வேம்புவய்யர்**—சரி, சாங்கிஷன் செய்யலாம்.

**அய்யாவய்யர்**—நேற்று சப்மாஜிஸ்ட்ரேட் தண்டித்தாரே அந்தப்பயலை—சரியான தண்டனை, இப்படி 4-பேரை மடக்கினால்தான் ஊரடங்கும்.

**செட்டியார்**—சாக்ஷி ருசு, ருசுவென்றுகேட்டால் எங்கேயிருந்து வரும். திருடுகிறவன் ஆளைவைத்துக் கொண்டா திருடுவான். என்னமோ அப்பீல் பண்ணினால் என்ன ஆகிறதோ? அதை யார் கண்டார்கள்.

**காரியதரிசி**—செட்டியார், கொஞ்சம் மன்னிக்க வேண்டும், மனுக்களிருக்கின்றன; சின்னையா பிள்ளை ரூ. 50 கடன் கேட்கிறார், முருகய்யா பிள்ளை ஜாமீன் பேரில்.

**வேம்புவய்யர்**—முன் அவர் வாங்கி யிருந்தாரே, சரியாய் வந்ததோ ?

**காரியதரிசி**—வட்டி எல்லாம் ஜாடாவாய் கொடுத்துவிட்டார், நாளையோடு டைம் முடிவாகிறது. இந்தக் கடனை வாங்கி முன்கடனுக்கு அப்படியே வரவுவைத்துக் கொள்ளும்படி சொன்னார்.

**இராமஸ்வாமி பிள்ளை**—அது என்ன! சரியாயில்லையே? இப்படி வரவு வந்ததுபோல் கணக்கில் காட்டலாமா? அதென்னமோ எனக்கு சரியாய் தோன்றவில்லை.

**செட்டியார்**—அதிலென்ன பாதகம், இன்றைக்கு பணங்கொடுத்துவிட்டு நாளையதினம் கடன் வாங்குகிறது மாதிரிதானே.

**இன்ஸ்பெக்டர்**—இதற்கு (Book adjustment) என்று சொல்லுவது. இப்படிச் சில சங்கங்களில் செய்கிறார்கள். அது பிசகு கூட்டுறவு சங்கங்களில் ஏற்படக்கூடிய குறைகளில் இது ஒன்று, இக்குறையில்லாமல் பார்த்துக் கொள்ளவேண்டும். டைம்படி செலுத்த முடியாவிட்டால் காரணத்தைக் கண்டெழுதி ஒரு பாகத்தை செலுத்திவிட்டு மறு டைம் பெற்றுக் கொள்ளலாம்.

**வேம்புவய்யர்**—அவர் கேட்கும்விதம் கடன் கொடுக்க முடியாதென்று மனுவை தள்ளிவிடலாம்.

**அய்யாவய்யர்**—ஏன் செட்டியாரே, என்னமோ புகார் மனுவாமே, நேற்று தாலுகாவில் ஏதோ இரகசியமாய் விசாரித்துக்கொண்டிருந்தார்களே, வேலை தொலைந்து விடும்போலிருக்கு.



**செட்டியார்**—ஆமாம், இதற்குமுன் 10 தடவை இந்தமதிரி விசாரணையாய் விட்டது. எமகாதகர், எப்படியாவது தப்பித்துக்கொண்டு விடுவார்.

**வேம்புவய்யர்**—இந்தத் தடவை கொஞ்சம் பலமாயிருக்கிறதாகக் கேள்வி, தாஸில்தாரும் கொஞ்சம் காரமாக—

**காரியதரிசி**—Sir! Sir! வேலை யிருக்கு, டவுன் பாங்கிக்குப் போயிருந்தபொழுது டவுன் பாங்கி காரியதரிசி டைம்படி கொடுக்காதவர்களிடமிருந்து தொகை வசூலிக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று சொன்னார். ஒரு லீஸ்டு தயார் செய்திருக்கிறேன்.

**வேம்புவய்யர்**—அந்த இரண்டு பேர்மேல் பிராது செய்தோமே அது என்ன ஆயிற்று.

**இராமஸ்வாமி பிள்ளை**—தொகை கொடுத்து தீர்த்துவிட்டதாகச் சொன்னார்களே, வாஸ்தவமா ?

**காரியதரிசி**—தீர்த்துவிட்டார்கள், பங்குத் தொகைகளையும் கணக்கில் வரவு வைத்துக்கொண்டு விட்டேன். அவர்களை சங்கத்திலிருந்து நீக்கி விடவேண்டும்.

**செட்டியார்**—ஏன்? அவர்கள் கடன் கேட்டால் இல்லையென்று சொல்லி விடுவோம். தள்ளுவானேன் ?

**இராமஸ்வாமி பிள்ளை**—ரூல் புஸ்தகம் எங்கே.

**காரியதரிசி**—மணி ! ரூல் புக் ஒன்று கொண்டுவந்து கொடும். ரூல் 45 அல்லது 46-ஐ பாருங்கள்.

**இராமாஸ்வாமி பிள்ளை**—(புஸ்தகத்தை எடுத்து) 47-வது ரூல் (படிக்கிறார்).

**அய்யாவய்யர்**—ஆம்! இவர்களைத் தள்ளிவிடலாம், தீர்மானம் எழுதி விடுங்கள்.

**காரியதரிசி**—சரி எழுதி விடுகிறேன், இன்னம் 4, 5 கேஸுக்கு பிராது செய்யவேண்டியதாயிருக்கிறது, ஆனமட்டும் சொல்லிப் பார்த்தேன், பணம் பிராதில்லாமல் வராது.

**இராமஸ்வாமி பிள்ளை**—சொஞ்சம் பார்த்துக்கொண்டு செய்வோம். ஏதோ arbitration பஞ்சாயத்து நியமித்து ரிஜிஸ்ட்ராரே தீர்மானஞ் செய்து விடலாம். ரூலிருக்கிறதாம், அப்படி யிருந்தால் கோர்ட்டுக்கு அலைவதும் அங்கே ஈரங்கி மாற்றி மாற்றி யெழுத்தடிப்பதும் இந்த வாதை இராது. இன்ஸ்பெக்டருக்குத் தெரியுமோ?

**இன்ஸ்பெக்டர்**—ஆமாம், ஏதோ ரூல் கெஜெட்டில் வந்திருக்கிறது

செவ்வையாய்ப் பார்க்கவில்லை, பார்த்து ரிஜிஸ்ட்ராரையும் கலந்துக் கொண்டு சொல்லுகிறேன், அப்புறம் பிராது செய்யலாம்.

**செட்டியார்**—ரொம்பச் சரி, அப்படியே செய்யலாம்.

**அய்யாவய்யர்**—ஊரெல்லாம் புரளியாயிருக்கே, சண்டைக்கு எல்லாரையுங் கட்டாயப்படுத்திப் போகச்சொல்லப் போகிறார்களாமே, நிஜமா, அது.

**இராமஸ்வாமி பிள்ளை**—நீங்கள் பயப்படவேண்டாம், உங்களை அப்படிக்கெல்லாம் தொந்திரவு செய்யமாட்டார்கள். இந்தியாவிலேயே பாதுகாப்புக்காக ஒரு சைன்னியம் ஏற்பாடு செய்கிறார்கள், நிர்ப்பந்தங் கிடையாது. ஏற்கனவே அனிபெஸண்டு அம்மாள் ஆயிரம் பேர் சேர்த்து வைத்திருக்கிறாள். ஒன்றென்றால் பத்தென்று சொல்லுவது ஜனங்களின் சுபாவம். ஸெக்ரிடெரி கோபித்துக் கொள்ளப் போகிறார் அப்புறம் என்ன Sir?

**காரியதரிசி**—ஆடிட் ரிபோர்ட்டு வந்திருக்கிறது, லாபத்தைப்பற்றி நாம் எழுதி யிருந்ததை ரிஜிஸ்ட்ராரவர்கள் அங்கீகரித்திருக்கிறார்கள். நமக்கு லாபம் ரூ. 340-10-0 பொதுஜன நன்மைக்கு ரூ. 25-வரையில் செலவிடலாம். அதைப்பற்றி யோசித்து மஹா ஜனஸபை கூட்டவேண்டும்.

**அய்யாவய்யர்**—என்ன செய்யலாம், சுவல்பமாய் இருக்கு பணம்.

**இன்ஸ்பெக்டர்**—ஒரு சிறு மீடிங் ரூம் ஏற்படுத்தலாமே. மாதத்திற்கு சுவல்ப சந்தா ஏற்படுத்திக்கொண்டு பணம் வசூல் செய்து அப்பணத்தையுஞ் சேர்த்து மெம்பர்களுக்கு படிக்க ஒரு ரீடிங் ரூம் ஏற்படுத்தலாம்.

**இராமஸ்வாமி**—பேஷ் நல்ல எண்ணம், அதற்கு ரூல் 'கோவாபரேடிவ் சங்க ரீடிங் ரூம்' என்று பெயர் கொடுத்துவிடுவோம். சுதேசமித்திரன், பிழைக்கும்வழி, விவேகபோதினி இவைகளை முதலில் வரத்துவோம்.

**செட்டியார்**—என் கடையின் பக்கத்தில் ஒரு காலியிடம் இருக்கிறது அங்கு ஒரு கொட்டகை போட்டுத்தருகிறேன். அங்கு ரீடிங் ரூம் வைக்கலாம்.

**காரியதரிசி**—நம் மீட்டிங்குகளைக்கூட அங்கு வைக்கலாமே?

**செட்டியார்**—பேஷாய் வைக்கலாம்.

**காரியதரிசி**—மஹா ஜனஸபை மீட்டிங்கு வருகிறமாதம் 10-ம் தேதி கூட்டுவோம்.



**வேம்புவய்யர்**—சரி, அப்படியே எல்லாம் முடிந்ததா?

**காரியதரிசி**—இல்லை, இல்லை கொஞ்சம் பாக்கியிருக்கு, நம் ஊர் குளம் மராமத்தில்லாமல் வீணாய்ப்போகிறது, ஸர்க்காரில் கவனிக்கவில்லை, கவனித்தாலும் மராமத்து இலாகாவில் செலவும் அதிகமாகும், தாமதமுமாகும். சென்ற வருஷம் ரூ. 200 ஸர்க்காரில் சாங்கிஷன் செய்தார்கள், வேலை நடக்கவில்லை. நம் சங்க மார்பத்தாய் பணத்தை வாங்கி அவ்வேலை முடிக்க வேண்டுமென்று சில மெம்பர்கள் ஒரு கடிதம் எழுதியிருக்கிறார்கள்.

**செட்டியார்**—அது நம்மால் முடியாது, நாம் வேலை செய்தால் ஐம்பது பேர்கள் அளக்கவந்து விடுவார்கள். இது சரி அது தப்பு என்று கண்டுபிடிப்பதிலேயே கண்ணாய் இருப்பார்கள். அந்த துன்பம் நமக்கு வேண்டாமய்யா.

**இராமஸ்வாமி**—ஒரு கண்டிராக்டராய் இருந்தால் நீங்கள் சொல்லுவது சரிதான், மேஸ்திரிமுதல் இஞ்சினியர் வரை உமேதுவார் செய்யவேண்டும். சங்கம் ஒரு body, பலர் சேர்ந்த பப்ளிக் சங்கம். அதினால் தொந்திரவு அதிகமிருக்காது, ஸர்க்காரில் ஒப்புக்கொள்ளவேண்டுமே, அதுதான் சிரமம்.

**காரியதரிசி**—அப்படி சுலபமாய் ரா-தர்பாரில் ஒப்புக்கொள்வார்களா? சென்னை இராஜதானியில் சில இடங்களில் இம்மாதிரி சில சங்கங்கள் நன்றாய் வேலை செய்தபோதிலும் ரெவினியூ போர்டில் ஒப்புக்கொள்ள வில்லையே. என்னமோ முயற்சிச் செய்வோம் அங்கு நல்ல வேளையாய் ரிஜிஸ்ட்ரார் இப்பொழுது நேரே கவர்ன்மெண்டுக்கு கீழ் இருக்கிறார்.

**இன்ஸ்பெக்டர்**—(சிரித்துக்கொண்டு) இங்கும் சங்கங்கள் தங்கள் வேலையை சரிவரப்பார்த்தால் போதுமென்று ரா-தர்பார் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இருந்தாலும் idea நல்லதுதான். ஸ்டேட் சூப்பரின்டெண்டை பார்த்துச்சொன்னால் காரியம் நடக்கும்.

**அய்யாவய்யர்**—இது முக்கிய விஷயம், இன்னம் கொஞ்சம் யோசிப்போம் அடுத்த மீட்டிங்கில் வைக்கலாம், அப்புறம்.

**காரியதரிசி**—ஒரே பேபர் பாக்கி, ஆலங்குடியில் கோவாபரேடிவ் கான்பிரென்ஸாம். நம் சங்கத்திலிருந்து ஏதாவது நன்கொடைவேண்டுமென்று லெட்டர் வந்திருக்கிறது. என்ன பிரேரேப[illegible]கள் நம் சங்கத்திலிருந்து அனுப்பலாம் என்றும் கேட்கிறார்கள்.

**இராமஸ்வாமி**—கான்பிரென்ஸ் நல்லது, அடிக்கடி கான்பிரென்ஸ்கள் நடக்கவேண்டும். ரூ. 5 நம் சங்கத்திலிருந்து கொடுக்கலாம்.

**செட்டியார்**—ரூ. 5 கொடுக்கலாம், யார் கான்பிரென்ஸுக்கு இங்கிருந்து போகிறது.

**வேம்புவைய்யர்**—காரியதரிசியையும் செட்டியாரையும் பிரதிநிதிகளாக அனுப்புவோம், பாக்கிப் பேரும் போகலாம், சமீபத்திலிருக்கிறது போவோம்.

**காரியதரிசி**—எனக்கு ஒரு பிரேரபணை யனுப்பலாம் என்று தோன்றுகிறது, கிராமத்தில் குளமராமத்து, ரோட் சரிப்படுத்தல், இவை போன்ற வேலைகளை நன்றாக ஐக்கிய நாணய சங்கங்கள் வேலை செய்யும் ஊர்களில் மேற்படி சங்கத்தின் நிர்வாக ஸபையார்களிடம் ஒப்புவித்து வேலைநடத்துவது ஜனங்களுக்கு நல்ல காரியமென்றும் அதனால் ஸர்க்காருக்கும் லாபகரமாயிருக்குமென்றும். இனி அவ்வேலைகளை சங்கங்களைக்கொண்டு செய்ய ஈ-தர்பார் அவர்கள் முயற்சி யெடுக்கவேண்டியது என்றும் இக்கான்பிரென்ஸ் அபிப்பிராயப்படுகிறது, இதுதான்.

**வேம்புவய்யர்**—செய்யலாம், கான்பிரென்ஸுக்கு யார் வருவார்கள் ?

**அய்யாவய்யர்**—ஸ்டேட் சூப்பிரன்டென்டெண்டு அவர்கள் அக்கிராஸனம் வகிப்பார்கள். ஈ-திவான் அவர்கள் இன்னும் அநேக உத்தியோகஸ்தர்கள், வக்கீல்கள், சங்கங்களிருந்து மெம்பர்கள், எல்லோரும் வருவார்கள். கல்யாணம்போல் நடக்கும்.

**அய்யாவய்யர்**—இது யார் முயற்சி.

**இன்ஸ்பெக்டர்**—K. S. இராமச்சந்திரய்யர் என்று ஒரு பிரிட்டிஷ் பென்ஷன் பெற்ற தாஸில்தார் ஆலங்குடியில் வந்திருக்கிறார். அவர் விவசாயபோதகர், K. R. சங்கரய்யர் பிதா அவருக்கு ஊக்கம் அதிகம். ஜெயிலில்கூட மதஸம்பந்தமாய் உபந்நியாசம் செய்கிறார். அவர் முயற்சிதான் முக்கியம்.

**செட்டியார்**—முன் பட்டணமிருந்து ஒரு கலெக்டர் வந்தாரே, அவர் நம் சங்கங்களைப்பற்றி என்ன சொல்லுகிறார் ?

**இன்ஸ்பெக்டர்**—அவர் நம் ஸமஸ்தானத்தில் சங்கங்கள் நன்றாய் நடக்கின்றனவென்று சிலாக்கியமாய் சொல்லியிருக்கிறார்கள். காப்பி அனுப்புகிறேன்.

**செட்டியார்**—இன்று வெகுவிஷயங்கள் நடந்திருக்கின்றன. தாங்கள் வந்தது நல்லசமயம். நான்போய் வருகிறேன், நாளை தங்களைப் பார்க்கிறேன், வேறு ஒன்றும் இல்லையே இனி ?

**காரியதரிசி**—நாழிகையாய் விட்டது. பிராவிடெண்டு பண்டு, கூட்டுச் சீட்டு, மாத்வாரி டிபாஸிட்டு—இவைகளைப்பற்றி யோசித்து விதிகள் ஏற்படுத்தவேண்டும். க்ஷேமநிதியைப் பற்றி யோசிக்கவேண்டும். நாம் வாங்கக்கூடிய கடன் தொகையை அதிகப்படுத்த வேண்டும். 900 பங்குகள் இருக்கிறது, பங்குகளை ஜாஸ்தியாக்க வேண்டும். இவைகளைப்பற்றி ஜெனரல் மீட்டிங்கில் பேசுவதற்கு முன் நாம் யோசித்து ஒரு முடிவுக்கு வர வேண்டும்.



**செட்டியார்**—நல்லது யோசிப்போம் அடுத்த மீட்டிங்கில் (இன்ஸ்பெக்டரைப் பார்த்து மறுபடியும்) நான் போய் வருகிறேன்.

**இன்ஸ்பெக்டர்**—சரி, நான் சொன்னதுமட்டும் மறக்கக்கூடாது, டிபாஸிட்.

**அய்யாவய்யர்**—நாழிகையாயிற்று, போவோமா Sir, இன்றிரவு நம்வீட்டிலேயே போஜனம் வைத்துக் கொள்ளவேண்டும். பஞ்சாபிகேசய்யருக்கும் சொல்லியனுப்புகிறேன். ஸெக்ரிடெரியும் வருவார்.

**இன்ஸ்பெக்டர்**—எதற்கு இவ்வளவு ஏற்பாடு ?

**அய்யாவய்யர்**—நல்ல நிலவிருக்கிறது, வேடிக்கையாய். ஒரு நாழிகை போக்கலாமென்றுதான், ஸெக்ரிடெரி வருகிறார்களா, இப்படி போய் விட்டு வருவோம்.

**காரியதரிசி**—வருகிறேன், மணி ! பேபர்களையெல்லாம் எடுத்து ஜாக்கிரதையாய் வை, Inspector Sir உங்களால் இன்றைக்கு நல்ல காரியம் முடிந்தது. செட்டியார் நீங்கள் இல்லாவிட்டால் சரிவர வந்திருக்கமாட்டார், என்ன செய்கிறது. ஐவேஜீ ஏராளமாயிருக்கிறது. விஷயம் தெரியவில்லை. இழுத்துப்போட்டுக் கொண்டுதான் காரியமாகவேண்டியிருக்கிறது.

**இன்ஸ்பெக்டர்**—எல்லோரும் கான்பிரென்ஸுக்கு வரவேண்டும்.

**காரியதரிசி**—வருகிறோம், அதில் என்ன ஆக்ஷேபணை உங்களிடம் இன்னம் சில விஷயங்களைப் பற்றி யோசிக்க வேண்டும். சாப்பாட்டுக்குமேல் பேசுவோம்.

---

## சேலம் ஜில்லா பாங்கியின் தணிக்கை உத்தரவு

சீப் இன்ஸ்பெக்டரான ம-ா-ா-ஸ்ரீ ஆர். தேசிகாசாரியார் அவர்களால் தணிக்கை செய்யப்பட்டபடி 1917 ஜூன் மாதம் 30-ந் தேதியோடு முடியும் "சேலம் ஜில்லா பாங்கி"யின் வருஷக் கணக்குகள் ஒப்புக்கொள்ளப் பட்டன. பிரஸ்தாப வருஷத்தில் மூன்று மெம்பர்கள் தள்ளப்பட்டு ஒரு புதிய மெம்பர் சேர்ந்த பிறகு வருஷக் கடைசி நாளில்

65 மெம்பர்களிருந்தார்கள். 1916-17-ல் பங்கு ஒன்றுக்கு ரூ. 50 விலையுள்ள 1,000. பி. வகுப்புப் பங்குகள் ஏற்படுத்தப்பட்டு இவைகள் கிராம நாணயச் சங்கங்களால்தான் எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமென்று பிரத்தியேகமாய் வைக்கப்பட்டது. இதன் நோக்கம் என்னவென்றால், நாளடைவில் ஜில்லா பாங்கியை பாங்கிங் யூனியனாகச் செய்து கிராம நாணயச் சங்கங்களும் அதன் லாபத்தில் பங்கு பெற வேண்டுமென்பதுதான். இவ்வேற்பாட்டின் காரணமாக, கிராம நாணயச் சங்கங்கள் 226. பி. வகுப்புப் பங்குகளை எடுத்துக்கொண்டு அதற்காக ரூ. 11,800 கொடுத்திருக்கின்றன. ஆகவே பாங்கியின் கொடுபட்டிருக்கும் பங்குத் தொகை ரூ. 50,000 லிருந்து ரூ. 61,300 க்கு உயர்ந்திருக்கிறது. ஏற்படுத்தப்பட்ட 1,000 பங்குகளையும் இன்னம் இரண்டொரு வருஷங்களில், சொஸைடிகள் எடுத்துக்கொண்டு விடுமென்று நம்பலாம்.

1916-17-ல் மெம்பர்களிடமிருந்து வந்த டிபாஸிட்டுத் தொகை ரூ. 69,471-13-2. முந்திய வருஷத்தில் அத்தகைய தொகை ரூ. 70,155. அதாவது இந்த வருஷம் கொஞ்சம் குறைவு. அந்நியர்களிடமிருந்து வந்த டிபாஸிட்டுகள் இவ்வருஷம் அதிகம். அதாவது ரூ. 143,830; முந்திய வருஷத்திலோ அத் தொகை ரூ. 122,382 1917 ஜூன் 30-ந் தேதியில் சேலத்திலுள்ள மதராஸ் பாங்கியின் கிளை ஆபீஸிலிருந்து அதிகமாகப் பற்றிக்கொண்ட தொகை ரூ. 33,303. இதரசொஸைடிகளிலிருந்து வந்த கடன்களும் டிபாஸிட்டுத்தொகைகளும் ரூ. 128,329 லிருந்து ரூ. 218,081-8-4 க்கு அதிகரித் திருக்கின்றன. 1915-16-ல் பாங்கியானது மெம்பர்களுக்கும் சொஸைடிகளுக்கும் கொடுத்திருந்த கடன்களின் தொகை முறையே ரூ. 8,195, ரூ. 121,015. 1916-17-ல் இத்தகைய தொகைகள் ரூ. 3,790, ரூ. 215,646-3-1. பிரஸ்தாப வருஷத்தில் லேவாதேவிக்ள் அதிகரித்தன. ஜில்லா பாங்கிக்குக் கொடுக்கவேண்டிய கெடுக் கடந்த தொகை ரூ. 15,133-11-4. இதில் ரூ. 134,97-1-4 முடிவடைந்துக் கொண்டிருக்கும் சங்கங்களைப் பற்றியது. 1915-16-ம் வருஷத்தின் லாபத்திலிருந்து, கொடுபட்டிருக்கும் பங்குத் தொகையின் பேரில் 100-க்கு 9 வீதம் டிவிடெண்டு கொடுக்கும்படி தீர்மானிக்கப் பட்டது.

இவ்வருஷம் பங்குக்காரர்களுக்குச் சேரவேண்டிய டிவிடெண்டை முற்றிலும் கொடுத்தாய் விட்டது. 30-6-17-ல் கொடுபடாமல் மிகுந்திருக்கும் ரூ. 67-3-0 முந்திய வருஷத்தின் டிவிடெண்டுத் தொகையின் பாக்கியாகும். இது சீக்கிரம் கொடுபடவேண்டும். பிரஸ்தாப வருஷத்தில் பாங்கிக்குக் கிடைத்த நிகர லாபம், ரூ. 8,863-14-10. இதில் கெடு மீறி



வசூலாகாமலிருக்கும் வட்டித்தொகை ரூ. 155-10-0 சேர்க்கப்படவில்லை. லாபத்தைக் கீழ்க்கண்டபடி விநியோகிக்க வேண்டும்.

(1) நான்கில் ஒரு பங்கு க்ஷேம நிதி பண்டு ... ரூ. 2,215-15-9

(2) 100-க்கு 9-க்கு மேலில்லாமல் மெம்பர்களுக்கு கொடுக்க வேண்டிய டிவிடெண்டு ... ... ,, 6,647-15-1

மேற்படி ரூ. 2,215-15-9 லிருந்து 1917 ஜூன் 30-ந் தேதி வரையில் க்ஷேம நிதியின்பேரில் ஏற்பட்டிருக்கும் வட்டித் தொகை அதாவது 58-9-8-யைக் கழித்து மிகுதித் தொகையோடு கையிருப்புத் தொகை ரூ. 1,631-6-1-ம் சேர்த்து மதராஸ் ஸென்ட்ரல் அர்பன் பாங்கிக்கு அனுப்பி விடவேண்டும், அல்லது யுத்தக் கடன் பத்திரமாவது வாங்கவேண்டும். கவர்ன்மெண்டாரின் விதிப்படி செல்லான பங்குத் துகையின்பேரில் 100-க்கு 9 வீத டிவிடெண்டுக்குமேல் யேற்படக் கூடாது.

டிவிடெண்டு பகிர்ந்து கொடுப்பதற்குத் தேவையான தொகை ரூ. 4,644-12-0 ; இத்தொகைக்குமேல் அதிகமாகச் சேர்ந்திருக்கும் ரூ. 2,003-3-1ம் க்ஷேமநிதி பண்டில் சேர்க்கப்படவேண்டும். இம்மாதிரியாகச் சேர்க்கப்பட்ட ரூ. 1,210-2-10 உள்பட மொத்த க்ஷேமநிதித் தொகை ரூ. 1,617-1-0 ஆகிறது; ஸெக்ரிடேரி அவர்களுக்கு 1915-16-ம் வருஷத்திற்காக ரூ. 300-ம்; 1916-17-க்கு ரூ. 500-ம், கௌரவச் சம்பளமாக பொது நிதியிலிருந்து கொடுக்கப்பட்டு நிகழும் வருஷத்திய கணக்கில் பற்று எழுதப்பட்டது. கிராம நாணயச்சங்கங்களிலிருந்து வசூலான வட்டியில் 30-ல் ஒரு பங்கு விழுக்காடு "ஜில்லா மேல்பார்வை நிதி"க்காக பாங்கில் கொடுத்த தொகை ரூ. 1,034.

கணக்குகள் திருப்திகரம் என்று இன்னும் சொல்ல முடியாது. ரிஜிஸ்ட்டர்களில் சரிவர பதிவுகள் செய்யப்படவில்லை. மாதம் ரூ. 12 சம்பளத்தில் இரண்டாவது குமஸ்தா ஒருவர் நியமிக்கப் பட்டிருக்கிறார். ஆனால் ஜில்லா பாங்கியின் கணக்குகளை வைப்பதற்கு அவரால் அதிக உபயோகமில்லை. பாங்கிங் தொழிலிலும் கணக்கு வைக்குந்தொழிலிலும் போதுமான பரிச்சயமுள்ள திறமைவாய்ந்த குமாஸ்தாக்களை நியமிக்க வேண்டிய அவசியத்தைப்பற்றி கவனிக்க பாங்கியின் டைரக்டர்கள் முயலவேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்படுகிறது. மேலும் பாங்கிங் கணக்கு வைப்பதற்கு இந்த வேலைகளில் போதுமான அனுபவம் வாய்ந்த ஸெக்ரிடேரி அல்லது மானேஜர் ஒருவர் சம்பளம் ஏற்பாட்டின் பேரில் நியமிக்கப்படவேண்டும் என்றும் அப்படியிருந்தால் அவர் நாள்

முழுவதும் பாங்கியிலிருந்துக் கொண்டு தேவையானபொழு தெல்லாம் வேலை செய்யலாம் என்றும் பிரஸ்தாபிக்கப்படுகிறது; அப்படிப்பட்ட உத்தியோகஸ்தர் டைரக்டர் ஸ்தானத்தில் இருக்கவேண்டிய அவசிய மில்லை.

---

# தென்கன்னடத்தில் கோவாபரேஷன்.

## தாலூகா கான்பரன்ஸுகள்.

தென்கன்னட ஜில்லாவிலுள்ள காஸர்காடில் நடைபெற்ற "முதல் தாலூகா கோவாபரேடிவ் கான்பரன்ஸை" ப்பற்றி புல்லடின் பத்திரிகையில் முன் விஸ்தாரமாய் எழுதியிருந்த விஷயம் புல்லடினைப் படிப்பவர்களுடையநினைவில் இருக்கலாம். அத்தகைய இரண்டாவது கான்பரன்ஸ் 1917 அக்டோபர்மீ 2௳ உப்பானங்காடி தாலுகாவிலுள்ள புத்தூரில் நடைபெற்றது. அச்சமயம் அறுவடைகாலமானதால் மெம்பர்கள் வருவார்களோ என்று மிகவும் சந்தேகமாயிருந்தது. ஆனால் 20 சொஸைடிகளுள் 18 சொஸைடிகளிலிருந்து 35 மெம்பர்கள் வரையில் வந்ததைப் பற்றி கான்பரன்ஸை ஏற்பாடு செய்தவர்களுக்கு சந்தோஷம். இக்கான்பரன்ஸை ஏற்படுத்தினவர்களின் நோக்கம் அதன் ஆலோசனைகளை கூடியவரையில் தமது நடவடிக்கைகளில் காட்டவேண்டும் என்பதும் அப்படிச் செய்வதற்கு எல்லாரும் கான்பரன்ஸில் அனுவசியமாய் வந்து கூடுவதற்குப் பதிலாக சொஸைடிகளை நிர்வகிக்கும் விஷயங்களில் விசேஷ ஈடுபடுவோர்வந்து கவனிப்பதனால் நன்மைகள்விளைவிக்குமென்பதை உத்தேசித்தே கான்பரன்ஸுக்கு அழைத்த கடிதங்களில் பொதுவாய் ஜனங்களை விளிக்காமல் பஞ்சாயத்தார்களை குறிப்பாக அழைக்கப்பட்டிருந்தது. ஸென்ட்ரல் பாங்கியின் வைஸ்பிரஸிடெண்டும் ஸெக்ரிடேரியும் அந்த இலாகா சூபர்வைஸரும் வந்திருந்தார்கள்.

கான்பரன்ஸின் காலைப்பொழுதில் சில குறிப்பிட்ட சொஸைடிகளின் ரிபோர்ட்டுகள் படிக்கப்பட்டன. இது எதற்காகவென்றால் சமூகத்தின் முன்னிலையில் சொஸைடிகளில் ஏற்படுத்தியிருக்கும் நல்ல விஷயங்களையும் இன்னும் ஏற்படுத்தக்கூடிய நல்ல விஷயங்களையும் கவனிக்கும்படி செய்வதோடு வேலைக் கிரமத்தில் அவைகளுக்கு வரக்கூடிய குறைகளையும், பெருங்குற்றங்களையுந் தெரியச்செய்யலாம் என்பதே; பஞ்சாயத்தார்கள் கடன் வாங்குதல், திருப்பிக் கொடுப்பதில் ஒழுங்கீனம், கையிருப்புத் தொகை அதிகமாய் வைத்தல், பஞ்சாயத்தார் மீட்டிங்கு நடத்தாமலே நடத்தினது போல் மினிட்டுப் புத்தகத்தில் எழுதி வைத்தல், ஆகிய இவ்விஷயங்களில் குற்றங்களை அங்கு கூடியிருந்தவர்களின் விசேஷ கவனத்திற்கு இலக்காக்கப்பட்டன.



இவ்விஷயங்களுக்குச் சம்பந்தமான கேள்விகள், உதாரணமாக, கடன் வாங்கும் காரணத்திற்குத் தக்கபடி காலநிர்ணயம் செய்தலும், அவர்களுடைய நிலைமையும் வரும்படியும், மீதிபிடிக்கும் சக்தியும், மனித ஜாமீன் அல்லது அடமான ஈடுகள் பெறவேண்டிய அவசியமும், புது மனுதாரராகச்சேர விரும்புகிறவர்கள் இதர சொஸைடிகளில் மெம்பர்களல்லவென்றாவது அப்படியிருந்தால் அவ்வித பந்தங்களிலிருந்து விடுவித்துக் கொண்டதாகவாவது முச்சலிக்கா ஒன்று பெறவேண்டிய அவசியமும் ஆகிய இவைகளெல்லாம் விஸ்தாரமாய் விவரிக்கப்பட்டது. கிராமத்தில் யாராவது புதிதாக வசிக்கவந்தவர்கள் சொஸைடியில் சேர விரும்பினால் அவர்கள் முன் இருந்த இடங்களிலுள்ள சொஸைடிகளிலிருந்து பள்ளிக்கூடங்களின் விடுகை ஸர்டிபிகேட்டைப்போல் தங்களுக்கு அவைகளில் யாதொரு லேவாதேவி பாக்கிகளும் இல்லை என்பது முதலியவற்றைக்குறிக்கும் ஸர்டிபிகேட்டு கொண்டுவரவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. மேலும் ஒரு மெம்பருக்குத்தான் குடியிருக்கும் இடமாற்றலினால் தன்மெம்பர் உரிமைநீங்கி அவரும் நிலுவைகளைக் கொடுக்காமலாவது அல்லது அம்மாதிரி நாணய விரோத நிலைமையிலாவது இருந்தால் அவர்போயிருக்கும் இடத்தைப்பற்றி சம்பந்தப்பட்டசொஸைடிக்கு விவரம் தெரிவிக்கப்படவேண்டும். கோவாபரேடிவ் மெம்பர்கள் தங்கள் குடும்பங்களுக்கு பொருளாதாரங்கள் உண்டாக்கும் பொருட்டு ஒரு விதமான சிறிய இன்ஷியூரன்ஸ் ஏற்படுத்தப்படும் நலத்தைப்பற்றியும் பிரஸ்தாபிக்கப்பட்டது. இவ்வேற்பாட்டின் அவசியமும் அனுகூலமும் சொஸைடியில் ஜாமீன் கொடுத்து கடன் வாங்கும் மெம்பர்கள் திடீரென்று இறக்குங்காலத்தில் ஜாமீன் மெம்பருக்கு உபத்திரவும் கொடுக்காமல் எவ்வளவு சகாயமாயிருக்கும் என்பது நன்குவிளங்கும். சாதாரண இன்ஷியூரன்ஸ் சொஸைடிகளில் இத்தகைய சிறியஏற்பாடுகள் கிடையாது. ஏனென்றால் அவர்கள் லாபத்தின் பேரிலேயே நோக்கமுள்ளவர்கள் அதனால் விசேஷமாய் ஏழையாயிருக்கும் கோவாபரேடர்களுக்கு அக்கம்பெனிகள் பிரயோஜனமில்லை, ஆகையால் இதற்காக பிரத்தியேக ஏற்பாடு செய்யவேண்டும் என்றும், அதற்குவேண்டிய தகுந்த கணக்குகள் முறைகள் முதலியவைகளைத் தயாரித்துக் கொண்டு கான்பரன்ஸின் பொழுது இன்னும் விசேஷமாய் கவனிக்கப்பட வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

பிற்பகலின் நடவடிக்கைகள் சொஸைடிகளின் நிர்வாகத்தைப்பற்றிய பொதுவிஷயங்கள்தான். இவைகளில் ஒன்று என்னவெனில், பெரிய சொஸைடிகளை சிறியவைகளாகப்பிரித்து சராசரி ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒவ்வொரு சொஸைடி வீதம் ஏற்படுத்தக்கூடிய அழகிய

மார்க்கத்தை அநுசரிக்கும் உசிதம்; மற்றது அடிக்கடி சொஸைடிகள் பொதுமீட்டிங்குகள் கூடி கோவாபரேஷன் விஷயங்களைப் படிப்பிக்கும் வேலையை நடத்தல்; இன்னொன்று மெம்பர்களுக்கு வேண்டிய விவசாயக் கருவிகளை மொத்தமாய் வாங்க சொஸைடிகள் ஏற்பட வேண்டும் என்பதும் மெம்பர்களுடைய விளைபொருள்களையும் சேர்த்து மொத்தமாய் விற்கவும் என்பதுமே.

கான்பரன்ஸில் பிரஸ்தாபிக்கப்பட்ட மிகவும் முக்கியமான அனுஷ்டிக்க வேண்டிய விஷயங்களுள் அடியிற் கண்டவைகளையும் சொல்ல வேண்டும்; அவையாவன, மெம்பர்கள் ஏற்கனவே வெளிகளிலிருந்து வாங்கியிருக்கக் கூடிய கடன்களை அடைத்து வைத்தல், (2) சூபர்வைஸிங் யூனியன்களை மேல் பார்வைக்காக ஏற்படுத்தல், (3) மெம்பர்களுக்கு பாஸ் புத்தங்கங்கள் கொடுப்பதில் எல்லா சொஸைடிகளிலும் 10 ரூபாய் பங்கின் முறைமையை அனுஷ்டித்தல். முதலிய விஷயத்தைப்பற்றி கான்பரன்ஸின் தீர்மானம் என்னவென்றால் மெம்பர்கள் சொஸைடிகளில் சேருவதற்குமுன் வெளிகளில் வாங்கின கடன்களுக்கும் சேர்ந்த பிறகு வெளிகளில் வாங்கின கடன்களுக்கும் வித்தியாசம் இருக்கவேண்டும் என்பதே; பிந்திய வழக்கம் ஏற்பட்டால் இம்பீரியல் கமிட்டியின் நோக்கத்தை அனுசரித்து கான்பரன்ஸிலும் அத்தகையோர் அப்படி செய்ய ஆலோசித்தவுடன் சொஸைடிகளின் கமிட்டியார்களுக்கு முந்தியே எச்சரிக்க வேண்டியது அவசியமென்று தீர்மானிக்கப்பட்டது; சூபர்வைஸிங் யூனியன்களின் மேற்பார்வையைப்பற்றி இப்பொழுது அவசரமில்லை யென்றும் போதுமான திறமையுள்ள கௌரவ வேலை செய்பவர்கள் கிடைக்கும் வரையில் காற்கலாமென்றும் தீர்மானிக்கப்பட்டது. மெம்பர்களுக்கு பாஸ் புஸ்தகம்கொடுக்கும் விஷயம் அங்கீகரிக்கப்பட்டு கள்ளிக்கோட்டை அஸிஸ்டெண்டு ரிஜிஸ்ட்ரார் அவர்களோடுகலந்து யோசித்து முந்தியே தயாரித்துவைக்கப்பட்டிருந்த மாதிரிப் புஸ்தகம் ஒன்று எல்லாருக்கும் காட்டப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது. 10 ரூ. பங்கைப்பற்றிய "பைலா" படிக்கப்பட்டு அதன் அவசியமும் குறித்துக் காட்டப்பட்டது. எல்லாரும் அதை அனுஷ்டிக்க சம்மதித்தார்கள். வருஷா வருஷம் விருத்தியடைந்து வரும் கன்னட கோவாபரேடர்களின் சௌக்கியத்திற்காக கன்னட பாஷையிலும் புல்லடின் பத்திரிகை ஏற்படுத்தல் நலம் என்றும் அதற்காக சென்னைக் கூட்டுத்தொழில் வர்த்தமானியின் அதிகாரிகளைத் தூண்டி கன்னடத்தில் ஒரு புல்லடின் ஏற்படுத்தச் சொல்லவேண்டுமென்றும் அங்கு வந்திருந்தவர்கள் முன்னிலையில் பிரஸ்தாபிக்கப்பட்டது. எல்லாரும் ஏகோபித்து அங்கீகரிக்கவே இவ்விஷயத்தை ஊர்ஜிதப் படுத்தவேண்டிய முயற்சிகளை சீக்கிரம் செய்யவேண்டுமென்று



தீர்மானிக்கப்பட்டது. அடுத்த விஷயம் புத்தூர் பஞ்சமர்களின் கோவாபரேடிவ் சொஸைடின் நோக்கமும் கருத்தும் இன்னதென்பதை எல்லாருக்கும் விவரிக்கப்பட்ட. இதை விவரிக்கவேண்டிய காரணம் என்னவென்றால் தாலூகாவிலுள்ள ஜனங்கள் சிலருக்கு இந்தப் புது ஏற்பாட்டின் நிமித்தியமாய் கொஞ்சம் மனஸ்தாபமிருப்பதாகக் காணப்பட்டது. செய்வதற்கும் பிரஸ்தாபித்தற்கும் இன்னம் வெகு விஷயங்கள் இருந்தபோதிலும் நேரமாய் விட்டபடியால் கான்பரன்ஸ் கலையவேண்டியது அவசியமாயிற்று. ஆனாலும் தற்காலத்திற்கு மிகவும் முக்கியமுள்ள பொதுநலத்தைப் பற்றிய இரண்டு விஷயங்கள் குறிப்பிடப்பட்டன. அவையாவன; அடுத்த "கிறிஸ்துமஸ்" காலத்தில் மங்களூரில் ஏற்படவேண்டிய கைத்தொழில், விவசாயக் காக்ஷிகளும், தொழில் கற்றுக்கொடுக்க வேண்டிய விஷயங்கள் கூட்டம் கலையும்பொழுது வெகு நேரமாயிற்று. ஆலோசனைகளும் அனுவாதங்களும் வெகு ஏற்பாடாகவும் புத்தி பூர்வமாயுமிருந்தது. நடந்த விஷயங்களிலெல்லாம் ஒவ்வொருவரும் மிக்க சிரத்தைக் காட்டினார்கள். அந்த நாள் வெகு சுறுசுறுப்பாயும் இனிமையாயும் கழிக்கப்பட்டது. தவிர சிற்றுண்டி முதலிய சௌகரியங்களோடு சகோதர பாவனையும் இனிது விளங்கிற்று. அங்கு காட்டப்பட்ட அன்பும் சகோதர பாவனையும் அடிக்கடி "கோவாபரேடிவ் நியூஸ்" பத்திரிகையில் காணப்படும், இங்கிலீஷ் கோவாபரேடர்களின் வசந்தகாலப்பள்ளிப் பொழுதுபோக்கின் இனிமையை நினைவூட்டுகின்றன. கான்பரன்ஸின் பயன் வெகு விசேஷமானதென்றே சொல்லவேண்டும். எல்லாருக்கும் ஏற்பட்ட ஒரு மனஸ்தாபம் என்னவென்றால்: கான்பரன்ஸை மற்றொரு நாள் வைத்துக்கொள்ள முடியவில்லை என்பதே. எல்லா டெலிகேட்டுகளும் இத்தகைய கான்பரன்ஸ் அடிக்கடி கூட்டப்பட வேண்டுமென்றும் அப்படி கூடுதல் ஒரு நாளோடு முடிவடையக்கூடாது என்றும் ஆதங்கப்பட்டார்கள். இம்மாதிரி கான்பரன்ஸ் மூன்று மாதத்திற் கொருமுறை கூட்டப்படலாமா என்பது ஆலோசனையிலிருக்கிறது.

---

# தென்கன்னடம் ஸென்ட்ரல் கோவாபரேடிவ் பாங்கி.

### நான்காவது வருஷத்திய நடவடிக்கை.

இந்த பாங்கியின் வருஷப் பொதுமீட்டிங் மங்களூரிலுள்ள காஸ்மாபாலிடன் கிளப்பில் 1917 நவம்பர் மாதம் 25-ம்தேதியில் நடைபெற்றது. வெகு தனிப்பங்குக்காரர்களும், பங்கெடுத்துக் கொண்ட சொஸைடிகளின் பிரதிநிதிகளும் தவிர கோவாபரேடிவ் சொஸைடிகளின் ரிஜிஸ்ட்ராரான மிஸ்டர் எப். ஆர். ஹெம்மிங்வே அவர்களும்

கள்ளிக்கோட்டை ஸெக்ஷன் அஸிஸ்டெண்டு ரிஜிஸ்ட்ராரான மிஸ்டர் பி. கே. குன்ஹுண்ணிமேனன் அவர்களுங்கூட வந்திருந்தார்கள். டைரக்டர்கள் கொடுத்தபிரகாரம் வருஷக்கணக்கு எல்லாராலும் ஏகோபித்து அங்கீகரிக்கப்பட்டது. ரிபோர்டில் காட்டப்பட்ட முக்கிய அம்ஸங்களுள் நீடித்தகால டிபாஸிட்டுகள் முன் வருஷத்தில் 100க்கு 35-ம் வர்த்தமான வருஷக் கடைசியில் (1916-17) 100க்கு 66-ம் இருக்கிறது அச்சுவேலை செய்யப்படும் சொஸைடி புத்தூர் பஞ்சமர்களின் சொஸைடி முதலிய புதுமாதிரி சொஸைடிகள் பாங்கியாரால் இவ்வருஷம், ஏற்படுத்தப்பட்டன டிபாஸிட்டு விஷயமாய் ஜனங்கள் கொடுக்கும் இடைவிடாத ஆதரணையினால் பாங்கியார் பிரஸ்தாப வருஷத்தில் இதர டிஸ்ட்ரிக்ட் பாங்கிகளுக்குக்கூட ரூ. 49,000 கடன் கொடுக்க சக்தர்களானார்கள். இவ்வருஷத்தில் இரண்டு புது வகுப்பு டிபாஸிட்டுகள் ஏற்படுத்தப்பட்டன. அவைகளாவன, (1) பள்ளிச்சம்பள டிபாஸிட்டுகள், (2) எண்டௌமெண்டு டிபாஸிட்டுகள் என்று சொல்லும் எதிர் பாராச்சந்தர்ப்பங்களுக்கு உதவும் டிபாஸிட்டுகள்; முந்தியது ஒரு குறிப்பிட்டகாலம் முடியும் வரையில் ஒரு குறிப்பிட்ட தொகையை சேர்த்து மொத்தமாய் ஒரு ஏற்பாட்டுடன் கொடுத்தல்; பிந்தியது இன்ஷியூரன்ஸ் கம்பெனிகளின் ஏற்பாடுபோல் ஆனால் அவைகளைப் போல் அதிகத் தொகைகள் இல்லாமல் அதற்குப் பதிலாக உபாயத் தொகைகளில் இன்ஷியூரன்ஸ் ஏற்படுத்தல்; இவ்வேற்பாட்டைக் கைப்பற்றி ஜனங்கள் விசேஷ நன்மை யடைவார்களென்று நம்பப்படுகிறது.

டிவிடெண்டு 100க்கு $7\frac{1}{2}$ என்று ஏகோபித்து தீர்மானிக்கப்பட்டது; ரிஸர்வ்பண்டுத் தொகையை எப்போதும்போல் மதராஸ் ஸென்ட்ரல் அர்பன் பாங்கியில் வைப்பதற்கு பதிலாக போஸ்டாபீஸ் காஷ் ஸர்டிபிகேட் வாங்குவதில் உபயோகிக்கவேண்டுமென்ற விஷயம் விசேஷமாக விவாதிக்கப்பட்டு கடைசியில் பணத்தின் கிராக்கியை உத்தேசித்துக் கிடைக்கும் தொகைகளை யெல்லாம் கோவாபரேடிவ் கிளர்ச்சியிலே தான் வைத்துக்கொள்வது உசிதம் என்று கண்டு க்ஷேமநிதித் தொகையை மதராஸ் ஸென்ட்ரல் அர்பன் பாங்கியிலேயே கட்டிவைக்க வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

மீட்டிங்கின் காரியபாகம் முடிந்தவுடன் ரிஜிஸ்ட்ரார் அவர்களை பேசும்படி கேட்டுக்கொண்டதன் பேரில் அவரும் பாங்கியின் அவ்வருஷத்திய திறமையான வேலையைப்பற்றி மெம்பர்களைக் கொண்டாடி கொண்டாடி ஒரு பிரேரேபணையும் செய்தார். அதாவது மெம்பர்களுடைய விளைபொருள்களை மொத்தமாய் சேர்த்து விற்றல், மெம்பர்



களுக்கு அவசியமான வஸ்துக்களை அந்தந்த சொஸைடிகளில் பொதுவாய் வாங்கி வைத்தல் ஆகிய இவ்விரண்டு காரியங்களையும் முயற்சித்துப் பார்க்கலாமென்ற விஷயமே; முடிவாகப் பாங்கியின் மானேஜ்மெண்டார் அன்று தனக்கு அந்த ஜில்லாவிலுள்ள கோவாபரேடர்களெல்லாருங் கூடியிருந்ததைப் பார்க்கவும் அவர்களுடன் சம்பாஷிக்கவும் சந்தர்ப்பம் கொடுத்ததற்காகத் தான் மிகவும் வந்தனம் சளிப்பதாகச் சொன்னார்.

ரிஜிஸ்ட்ரார் அவர்களும் அஸிஸ்டெண்டு ரிஜிஸ்ட்ரார் அவர்களும் அன்று விஜயஞ் செய்து மீட்டிங்கிற்கு உதவி செய்ததற்காகவும் காஸ்மாபாலிடன் கிளப்பு அதிகாரிகள் இடங்கொடுத்ததற்காகவும் அவர்களுக்கு மனப்பூரணமான வந்தனமளித்த பிறகு மீட்டிங்கு கலைந்தது.

---

## கர்னூல் ஜில்லாவில் ஐக்கிய முயற்சி.

அனந்தபூர் ஷெக்ஷன் கோவாப்ரேடிவ் சொஸைடிகளின் அஸிஸ்டெண்டு ரிஜிஸ்டராரான மிஸ்டர் டி. ஸ்ரீனிவாசராவ் அவர்கள் மேற்குறித்த ஜில்லாவில் 1904-ல் கோவாப்ரேடிவ் கிரெடிட் சொஸைடி ஆக்டு ஏற்பட்டது முதல் ஐக்கிய இயக்கத்தின் அபிவிருத்தியைப்பற்றி அதின் சாராம்சம் பின்வருமாறு எழுதியிருக்கிறார்.

கோவப்ரேடிவ் சொஸைடியின் 1904-ம் வருஷத்திய 10-வது ஆக்டு ஏற்பட்டு சொல்ப்காலமாவதற்குள் இந்த ஜில்லாவில் இரண்டு சொஸைடிகள் ஏற்பட்டன; ஒன்று பள்ளியில் விவசாய நாணயச் சங்கங்கம்; மற்றது கர்னூல் நகரீ பிரிவினைச் சங்கம்; இவைகளில் 1908-09 ௵ வரையில் யாதொரு முன்னேற்றமும் இல்லை; அந்த ஷத்தில் கர்னூலில் நகர நாணயாபாங்கி ஒன்று ஏற்படுத்தப்பட்டது. அடுத்த வருஷம் யாதொரு புது சொஸைடியும் ஏற்படவில்லை. 1910-11ல் டோன் தாலூக்காவில் 14 கிராமச் சங்கங்கள் ஏற்பட்டன. அதிற்கடுத்த வருஷம் அத்தாலுக்காவிலேயே 5 கிராமச்சங்கங்கள் டோனில் (Dhone) ஒன்றும் கர்னூல் தாலுக்காவில் 4-ம் ரிஜிஸ்டர் செய்யப்பட்டன. 1914-15 வருஷம் வரையில் புதிதுஒன்று ஏற்படவில்லை; அவ்வருஷத்தில் நந்தியால் தாலுக்காவில் விவசாய மில்லாத கிறிஸ்துவ சொஸைடியும், சிர்வேல் தாலுக்காவில் இரண்டு விவசாயகிறிஸ்துவ சொஸைடிகளும், கோயில் குண்டுளா தாலுக்காவில் அத்தகைய சொஸைடி ஒன்றும், ஆக நான்கு சொஸைடிகள் ரிஜிஸ்தர் செய்யப்பட்டன. 1915-16-ல் கோயில்குண்டுளா தாலுக்காவில் ஒன்றும்; பட்டிக்கொண்டா தாலுக்காவில் ஒன்றும் ஆக இரண்டு விவசாய நாணயச் சங்கங்கள் ஏற்பட்டன. 1916 ௵ ஜுன் 30-ம்

தேதி வரையில் ஏற்பட்டிருந்த 28 சொஸைடிகளுள், கர்னூலில் 4, டோனில் 16; பட்டி கொண்டாவில் 1. சிர்வேலில் 2, கோயில் குண்டுளாவில் 2, ஆக இப்படி 5 தாலூக்காகளில் 25 விவசாய சொஸைடிகள் இருக்கின்றன. சிர்வேலிலுள்ள இரண்டு சொஸைடிகளிலும் கோயில் குண்டுளாவில் ஒரு சொஸைடியிலும் மெம்பர்கள் பஞ்சமர்களே.

இதர 3 சொஸைடிகளுள் கர்னூலில் ஒன்றும் நந்தியாலில் ஒன்றும் ஆக இரண்டு, நாணயச் சங்கங்களாகவும் கர்னூலில் இன்னொன்று விற்பனைச் சங்கமாகவும் இருக்கின்றன. இந்த ஜில்லா சொஸைடிகளை அந்தந்த தாலூக்காக்களிலுள்ள கிராமங்களின் சங்கியுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் 100-க்கு 5·6 விழுக்காடாகவும், இந்த ஜில்லா முற்றிலுமுள்ள கிராமசங்கியோடு ஒப்பிட்டால் 100-க்கு 3·5 விழுக்காடாகவும் இருக்கின்றன. சென்ற இரண்டு வருஷங்களில் ஏற்பட்ட 4 கிறிஸ்துவ சொஸைடிகள், ஒய். எம். சி. ஏ. ஏஜண்டு ஒருவரால் ஆரம்பிக்கப்பட்டன.

பட்டிகொண்டா, நந்தியால், சிர்வேல், கோயில் கொண்டுளா இந்த 4 தாலூகாக்களிலும் சென்ற இரண்டு வருஷங்களில் ரிஜிஸ்தர் செய்யப்பட்ட 6 சொஸைடிகளுள், 5 சொஸைடிகள் 1915-16ல் தான் ஏற்படுத்தப்பட்டன. அந்த ஒரு சொஸைடியும் 1915 ஜூன் 25-ம் தேதிவரையில் ஏற்படவில்லை. ஆகையால் இச்சங்கங்களின் வேலையைப்பற்றி விசேஷமாய் ஆராய்ச்சி செய்யவேண்டிய அவசியமில்லை. இக்குறிப்பு பாக்கியிருக்கும் கர்னூல் தாலூக்காவிலுள்ள 6 சொஸைடிகளையும் டோன் தாலூக்காவிலுள்ள 16 சொஸைடிகளையே பற்றியது. இந்த ஜில்லாவின் மெம்பர்களின் சங்கியை மென்மேலும் விருத்தியடைந்து கொண்டுவருகிறது. அதற்குக் காரணம் கர்னூல் தாலூக்காவில் அதிக மெம்பர்கள் சேருவதும் புது சொஸைடிகள் ரிஜிஸ்தராவதுமே. டோன் சொஸைடியின் ஜன சங்கியை ஏறக்குறைய நிலைவரமாகவே இருக்கிறது. இந்த ஜில்லாவிலுள்ள மெம்பர்களின் சங்கியை சராசரி ஒவ்வொரு சொஸைடிக்கும் 50. டோனில் 32, கர்னூலில் விவசாயமில்லாச் சங்கங்கள் 246, விவசாயமுள்ளது 56. விவசாய சொஸைடிகளின் சங்கியை இராஜதானி சராசரி இலக்கத்தைவிட மிகக்குறைவு; அவ்விலக்கம் 1915 ஜூன் 30 தேதியில் 74 ஆக இருந்தது. விவசாய மெம்பர்கள், அல்லாதவர்கள், இரண்டும் கலந்தவர்கள், இவர்களின் சங்கியை மொத்தத்தில் முறையே 100க்கு 11·49, 38·93, 18·53. மொத்த மெம்பர்கள் ஜாதிவாரியாக— பிராமணர்கள் 10·68, இதர இந்துக்கள் 51·96, கிறிஸ்துவர்கள் 9·98, மகமதியர்கள் 23·66, பஞ்சமர்கள் 4·1 இதரவகுப்பினர்களுமாக இருக்கிறார்கள்.


# மதராஸ் புல்லெடீன் ஆப் கோவாபரேஷன்

என்னும்

## சென்னைக் கூட்டுத்தொழில் வர்த்தமானி

சம்புடம் IX] 1917ஹு டிசம்பர் மீ [இலக்கம் 6.


## பத்திராதிபரின் குறிப்புகள்.

### நமது வந்தனம்.

இம்மாகாணத்திலுள்ள கூட்டுறவு முயற்சிக்காரர்களுக்கு சிரத்தை கொடுக்கும்படியாக இம்மாதத்திய முக்கியசம்பவம் யாதெனில்: இம்மாதம் 22, 23 தேதிகளிலே பச்சையப்பன் மண்டபத்தில் ஆறுவது சென்னை மாகாண கூட்டுறவு கான்பரன்ஸின் வருஷக் கூட்டம் நடைபெற்றதாகும். அதில் கனம் திவான்பகதூர், P. ராஜகோபாலாச்சாரியார் C.I.E. அக்கிராசனம் வகித்திருந்தார். மிஸ்டர் மாண்டேகுவின் விஜயத்தினாலும் வழக்கம்போல் கூடிய ஏராளமான இராஜ்யக் கூட்டங்களினாலும், தென்னிந்தியா ஜன சமூகத்தியரின் கவனம் பல துறைகளில் சென்றிருந்தும், நமது கூட்டுறவு கான்பரன்ஸ் இனிது நிறைவேறியதைப்பற்றி நாம் சந்தோஷப்படவேண்டும், நமது கான்பரன்ஸின் நடவடிக்கைகளைப் பற்றி நாம் தற்சமயம் அதிகம் சொல்வதாக உத்தேசமில்லை. ஏனென்றால்: அடுத்த மாதச் சஞ்சிகையில் அந்நடவடிக்கைகளைப் பற்றி அபிப்பிராயம் கொடுப்பதாக உத்தேசித்திருக்கிறோம். அப்பொழுது கான்பரன்ஸின் நடவடிக்கைகள் எல்லாம் அந்தச் சஞ்சிகையில் பிரசுரிக்கப்படும். கான்பரன்ஸில் வாசிக்கப்பட்ட ஆங்கில வியாசங்கள், தமிழ் வியாசங்கள் ஆகிய இவற்றின் விவரங்களை இப்பொழுது நாம் பிரசுரஞ் செய்திருக்கிறோம். அவ்வியாசங்களின் கர்த்தாக்கள் வியாசங்களைத் தயாரிக்க சிரமம் எடுத்துக்கொண்டதற்கும், அருமையான யோசனைகளைச் சொல்லியிருப்பதற்குமாக அவர்களுக்கு நாம் வந்தனமளிக்கிறோம். முக்கியமாக, திருவாங்கூர் ரிஜிஸ்ட்ரார், மிஸ்டர் C. கோவிந்தபிள்ளையும், வங்காளத்தைச் சேர்ந்த மிஸ்டர் P. முக்கர்ஜியும் தங்களுடைய மாகாணத்தின்

# மதராஸ் புல்லெடின் ஆப் கோவாபரேஷன்

என்னும்

## சென்னைக் கூட்டுத்தொழில் வர்த்தமானி

சம்புடம் IX] 1917௵ டிசம்பர் ௴ [இலக்கம் 6.

## பத்திராதிபரின் குறிப்புகள்.

### நமது வந்தனம்.

இம்மாகாணத்திலுள்ள கூட்டுறவு முயற்சிக்காரர்களுக்கு சிரத்தை கொடுக்கும்படியாக இம்மாதத்திய முக்கிய சம்பவம் யாதெனில்: இம்மாதம் 22, 23 தேதிகளிலே பச்சையப்பன் மண்டபத்தில் ஆறாவது சென்னை மாகாண கூட்டுறவு கான்பரன்ஸின் வருஷக் கூட்டம் நடைபெற்றதாகும். அதில் கனம் திவான்பகதூர், P. ராஜகோபாலாச்சாரியார் C.I.E. அக்கிராசனம் வகித்திருந்தார். மிஸ்டர் மாண்டேகுவின் விஜயத்தினாலும் வழக்கம்போல் கூடிய ஏராளமான இராஜ்யக் கூட்டங்களினாலும், தென்னிந்தியா ஜன சமூகத்தியரின் கவனம் பல துறைகளில் சென்றிருந்தும், நமது கூட்டுறவு கான்பரன்ஸ் இனிது நிறைவேறியதைப்பற்றி நாம் சந்தோஷப்படவேண்டும், நமது கான்பரன்ஸின் நடவடிக்கைகளைப் பற்றி நாம் தற்சமயம் அதிகம் சொல்வதாக உத்தேசமில்லை. ஏனென்றால்: அடுத்த மாதச் சஞ்சிகையில் அந்நடவடிக்கைகளைப் பற்றி அபிப்பிராயம் கொடுப்பதாக உத்தேசித்திருக்கிறோம். அப்பொழுது கான்பரன்ஸின் நடவடிக்கைகள் எல்லாம் அந்தச் சஞ்சிகையில் பிரசுரிக்கப்படும். கான்பரன்ஸில் வாசிக்கப்பட்ட ஆங்கில வியாசங்கள், தமிழ் வியாசங்கள் ஆகிய இவற்றின் விவரங்களை இப்பொழுது நாம் பிரசுரஞ் செய்திருக்கிறோம். அவ்வியாசங்களின் கர்த்தாக்கள் வியாசங்களைத் தயாரிக்க சிரமம் எடுத்துக்கொண்டதற்கும், அருமையான யோசனைகளைச் சொல்லியிருப்பதற்குமாக அவர்களுக்கு நாம் வந்தனமளிக்கிறோம். முக்கியமாக, திருவாங்கூர் ரிஜிஸ்ட்ரார், மிஸ்டர் C. கோவிந்தபிள்ளையும், வங்காளத்தைச் சேர்ந்த மிஸ்டர் P. முக்கர்ஜியும் தங்களுடைய மாகாணத்தின்

சொல்லியிருக்கிறார். ஆயினும் அந்த யோசனைகளைத் தமது யூகத்தை கொண்டே சொல்லியிருப்பதாக அவர் ஒப்புக்கொள்ளுகிறார்.

"தொழில் முறையில் கூட்டுறவு" என்ற விஷயத்தைப்பற்றி கோயமுத்தூர் மிஸ்டர் C. N. கிருஷ்ணசுவாமி ஐயர் ஒரு வியாசம் எழுதியிருக்கிறார். அதில் அனுபவத்தில் நடைபெறக்கூடிய இரண்டு நல்ல யோசனைகளை அவர் சொல்லியிருக்கிறார். அந்த யோசனைகளாவன: கூட்டுறவு முறையில் ஓடு தயாரிப்பதற்குற்ற தொழிற்சாலையை ஏற்படுத்தலாமென்பதும், கூட்டுறவு முறையிலேயே இம்மாகாணத்தின் கூட்டுறவுச் சங்கங்களுக்கு உபயோகமாகும்படி ஓர் அச்சுக்கூடத்தை ஏற்படுத்தலாமென்பதுமாம். 'லைப் இன்ஷ்யூரன்ஸ்' எனப்படும் ஜீவன் அபய திரவிய சகாய சாலைகளை ஏற்படுத்தலாமென்பதில் கூட்டுறவு முயற்சிக்காரர்கள் கவனஞ் செலுத்தவேண்டுமென்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார். தொழில் சம்பந்தமான கூட்டுறவு முயற்சியிலே, பாடசாலைகளை கூட்டுறவுச் சங்கங்கள் நிர்வகித்து நடத்தலாமென்பதும் ஒன்றாகுமென அவர் சொல்லியிருக்கிறார். கோயமுத்தூரிலே பெற்றோர்களின் கூட்டுறவு யூனியன் என்ற (Parents' Co-operative Union Ltd.) சங்கமொன்று சடுதியில் ஸ்தாபிக்கப்படுமென்று அவர் உறுதிகூறி யிருப்பதனால், அதை நாம் விசேஷ சிரத்தையுடன் எதிர்பார்த்திருக்கிறோம்.

## பழமரங்களையும் செடிகளையும் வளர்த்தல்.

கிறிஸ்துமஸ் வாரத்திற்கு முந்திய வாரத்தில் "ஹிந்து" பத்திரிகையின் வருஷாந்திர அனுபந்தம் வெளியாயிற்று. இந்திய அர்த்த சாஸ்திரத்தில் சிரத்தையுடையவர்களுக்கு உபயோகப்படும்படி ரஸமான பல வியாசங்கள் அந்த அனுபந்தத்தில் காணப்படுகின்றன. அத்தகைய வியாசங்களில் ஒன்று என்னவென்றால். பழமரங்களையும் செடிகளையும் வளர்க்கவேண்டு மென்பதாகும். அவ்வியாசத்தை எழுதியிருப்பவர் மிஸ்டர் சங்கர ராவ். விவசாயத்தில் கருத்துடைய பலரும் நெல், கரும்பு, பருத்தி முதலிய பயிர்களில் இதுவரையில் கவனஞ் செலுத்திவந்திருக்கிறார்களே யல்லாமல், பழமரங்களையும் செடிகளையும் வைத்து வளர்ப்பதில் கவனஞ் செலுத்தவில்லையேயென அவர் வருத்தப்படுகிறார். முக்கியமான அறுவடை தீர்ந்தவுடனே, விவசாயிகள் காய் கறிகளைப் பயிரிடுவதிலும் வியாஜ்ய விவகாரம் ஆடுவதிலுமே காலங்கழிக்கின்றனரென்று அவர் சுட்டிக்காட்டுகிறார். பழமரங்களை ஏராளமாக வளர்ப்பதனால், வருஷமுழுவதும் விவசாயிகளுக்கும் மிராசுதார்களுக்கும் நல்ல பலன் கிடைக்கும்படி கல்விகற்ற இந்தியர் வழிகாட்டலாம். "நல்ல பதவியிலுள்ளோரும் பழமரங்களை வளர்ப்பதிலுள்ள விசேஷத்தையும் பலனையும் உணர்ந்துக்கொள்ளாமலிருத்தல் விசனிக்கத்தக்கதே யாகும்." பழமரங்



களை வைத்து வளர்க்க நம்தேசத்தில் இயற்கையாகவே நல்ல சௌகரியங்கள் இருக்கின்றன. இருந்துமென்ன? தோட்டங்களை வைத்து வளர்ப்பதில் ஐரோப்பியர் மிக்க சிரத்தை காட்டுகின்றனர்; இந்தியரோ பெரிதும் அலட்சியமாய் இருக்கிறார்கள். விலையேறப்பெற்ற சாதனங்களைக்கொண்டு எம்மாதிரியான பழவகையும் எக்காலத்திலும் கிடைக்கும் வண்ணம் ஐரோப்பியர் பயிரிட்டுவருகிறார்கள். "லண்டனிலுள்ளவர்களோ தங்களது வீட்டு ஜன்னல்களில் மிகச்சிறிய சட்டிகளைவைத்து, அவைகளில் பழங்களையும் பூச்செடிகளையும் பாடுபட்டு வளர்த்துவருதல் குறிப்பிடத்தக்கதாகும்" காய்கறி பதார்த்தங்களையே எடுத்துக்கொள்வோரின் தொகை இத்தேசத்தில் மிக அதிகம். இப்படியிருந்தும், உடலுக்குப் போஷணையைத் தரக்கூடிய பழவகைகளை இந்தியர் பயிரிடவில்லையேயென மிஸ்டர் ராவ் வெகு கவலையுடன் சொல்லுகிறார். பழமரங்களைப் பயிர் செய்வதனால் நல்ல பலன் கிடைக்குமென்பதோடு, மரங்களை வைத்து வளர்த்தல் உல்லாச வேலையுமாகும். ஆகவே பலரும் அதில் கவனஞ் செலுத்துவார்களாக.

## ஓர் இடாலிய சங்கத்தின் விசேஷ சரிதம்.

இடாலி தேசத்திலுள்ள மிலான் என்னும் நகரில் "யூனியன் கோவாபரேடிவ்" என்ற கூட்டுறவுச் சங்கமொன்று உளது. பண்டங்களை வாங்கி விற்பதே அதன் நோக்கம். அது 1886-ம் வருஷத்தில் ஏற்பட்டது. அப்பொழுது அதில் 134 பேர் மெம்பர்கள். அதன் மூலதனம் 85 பவுன்; உணவுப் பதார்த்தங்களை அச்சங்கம் வாங்கி விற்கவில்லை. ஆனால் ஆங்கிலத்தில் நெக்டைஸ், காலர்ஸ் (Neck ties and collars) என வழங்கும் கழுத்துப்பட்டைகளிலேயே அது வியாபாரம் செய்யத் தலைப்பட்டது. ஒருவருஷம் முடிவதற்குள் குடைகள், மிதியடிகள், துணிமணிகள் முதலியவைகளை விற்கவும், தையல்வேலையை வெகுவாகச் செய்து பொருள்தேடவும், அது முயன்றுவிட்டது. வருஷக் கடைசியிலே, அதில் 600 பேருக்குமேல் மெம்பர்கள் சேர்ந்துவிட்டார்கள்; மூலதனமும் 4,600 பவுனாய்விட்டது, என்றால், ஒருவருஷ காலத்திற்குள் அச்சங்கம் எவ்வளவுதூரம் வலுத்துவிட்டதென்பது வெளிப்படையாகும். மூன்றாவது வருஷத்திலே அச்சங்கம் ஆகாரப்பொருள்களை விற்க முன்வந்தது. ஐந்தாவது வருஷத்திலே அதில் சேர்ந்திருந்த மெம்பர்கள் 3761 பேர்; மூலதனமோ 33 ஆயிரம் பவுன்; வருஷம் முழுவதும் நடந்த வியாபாரத்தின் மதிப்பு 98 ஆயிரம் பவுனாகும். தனது மெம்பர்களின் உபயோகத்திற்காக ஏழாவது வருஷத்திலே அச்சங்கம் ஒரு கிளப் ஏற்படுத்தியது. ஒன்பதாவது வருஷத்திலே ரொட்டியை விற்க அச்சங்கம் தலைப்பட்டதுடன், மற்றொரு சங்கத்திற்குச் சேர்ந்த 16 ரொட்டிக்கடை

களையும் ரொட்டிசுடும் சாலை யொன்றையும் வாங்கியது. அடுத்த வருஷத்திலே விறகும் நிலக்கரியும் அதனால் விற்கப்பட்டுவந்தன. பன்னிரண்டாவது வருஷத்திலே அச்சங்கத்திலிருந்த மெம்பர்கள் 5 ஆயிரம் பேராவர்; அவர்களில் 1,800 பேர் ஸ்திரீகள்; வருஷமுழுவதிலும் நடந்த வியாபாரத்தின் மதிப்பு இரண்டு லட்சம் பவுன்; அடுத்த வருஷத்திலே கோதுமை மிகவும் கிராக்கியாய்விட்டது. ஆகவே கோதுமையின் விலை மிகவும் ஏறியிருந்தது. ஆதலால், ஏழைகளுக்கு உபயோகமாய் இருக்குமாறு வாங்கின விலைக்குக் குறைவாகவே கோதுமையை அச்சங்கம் விற்கலாயிற்று. அதனால் அச்சங்கத்திற்கு மிக்க நஷ்டம். இடாலி தேசத்திய பொருள்களை அன்னிய தேசங்களில் பிரபலமாக்கவேண்டி, பதின்மூன்றாவது வருஷத்திலே பெர்லின் நகரில் (ஜெர்மனியின் தலைநகரம்) கிளைச்சங்கமொன்றை ஏற்படுத்தியது. இத்துடன், கூட்டுறவு முயற்சியின் லட்சியத்தைப் பிரசித்தப்படுத்த வேண்டி, நிபுணர்களைக் கொண்டு பிரசங்கம் செய்வித்தது; மெம்பர்களின் உபயோகத்திற்காக புஸ்தகசாலைகளை ஏற்படுத்தியது; பத்திரிகைகளையும் புத்தகங்களையும் மெம்பர்களுக்கு வாங்கிக்கொடுத்தது. தொழிலாளிகளின் மக்களுக்கு ஆரம்பக் கல்வி கிடைப்பதற்காக அவர்களுக்கு உபகாரச் சம்பளமும் கொடுத்துவந்தது. மெம்பர்களுக்குச் சாதகமாய் இருக்கவேண்டி, 1900-ம் வருஷத்தில் பூங்காவன நகரமொன்றை ஏற்படுத்தியது. முடிவில், ஜனங்களுக்குப் பாலை வினியோகிக்கவும் ஏற்பாடு செய்தது. இதனால் ஜனங்களுக்கு மிக்க நன்மை உண்டு. மகாயுத்தத்தினால் அச்சங்கம் அவ்வளவாக பாதக மடையவில்லையென அறிகிறோம். எப்படியென்றால், 1915-ம் வருஷத்திலே அச்சங்கத்திற்குக் கிடைத்த லாபம் 93 ஆயிரம் பவுன் எனவே கூட்டுறவு முயற்சியினால் எவ்வளவு விசேஷமான காரியங்களை நடத்திப் பலனடையலா மென்பதற்கு மேற்படி சங்கமே சிறந்த உதாரணமாகும். ஆதலினால், பண்டங்களை வாங்கி விற்கும் நோக்கத்தைக்கொண்டு இத்தேசத்தில் ஏற்பட்டிருக்கும் சங்கங்களெல்லாம் மேற்கண்ட சங்கத்தின் விசேஷத்தைக் கவனித்துப் பலனடைய முயலுமாக.

## சங்கங்களை முறிக்கும் விதம்.

ஐவேஜ்களையும் கடன்களையும் பைஸல் செய்து முறிக்கும்படி நேரும் சங்கங்களைக் கலைத்துவிடும் முறையில் இன்னின்ன சீர்திருத்தம் செய்யலாமென்பதாக பம்பாயில் பிரசுரமாகும் நமது சகோதர பத்திரிகை யொன்றில் மிஸ்டர் G. H. தேசெ என்பவர் ஒரு வியாசம் எழுதியிருக்கிறார். அவர் சொல்லும் யோசனைகளில் முக்கியமானவற்றை இங்கே சுருக்கிச்சொல்வோம். கலைத்துவிடும்படி நேர்ந்திருக்கும் சங்கத்திற்



குக் கொடுக்கவேண்டிய கடன்தொகையைக் கொடுக்காமல் தவறிப்போயிருப்பவர்கள், அவர்களுக்கு ஜாமீனாய் நின்றவர்கள், அச்சங்கத்தில் பணம் போட்டிருப்பவர்கள், ஆகிய பலரும் தம்முன் ஆஜராகும்படி கட்டாயப்படுத்த விக்விடேடர் (அதாவது சங்கத்தைக் கலைப்பதற்காக நியமிக்கப்படுவோர்) என்னும் அதிகாரிக்கு அதிகாரம் கொடுத்துவிடவேண்டும். சங்கத்திற்கு வசூலாகவேண்டிய பண விஷயத்தில் சமரஸமான அதாவது ராஜியான ஏற்பாட்டைச் செய்துவிட்ட ரிஜிஸ்ட்ராரின் அனுமதியின் மேல் அவருக்கு அதிகாரம் கிடைக்கவேண்டும், அவருடைய உத்தரவுகளைக் கோர்ட்டில் ஆஜர்செய்ய நேரிடும் காலத்திலே அவரே நேரிலாவது வக்கீல் மூலமாயாவது கோர்ட்டில் பிரசன்னமாயிருக்க வேண்டுமென்றில்லாமல், அவரது உத்தரவுகளைத் தபால் மூலமாய் கோர்ட்டில் ஆஜர்செய்யும் வண்ணம் ஏற்பாடாகவேண்டும். அச்சங்கத்திற்குவரவேண்டிய தொகைகளை ஸம்மரியாக வசூல் செய்துவிடுமாறு ஏற்படவேண்டும். கோர்ட் ஆப் வார்ட்ஸ் (Court of Wards) என்ற சபையார் தங்களது ஆதீனத்துக்குட்பட்ட எஸ்டேட்டுகளுக்கு வரவேண்டிய கடன்தொகையை ஸம்மரியாக வசூல்செயயும்படி அதிகாரம் பெற்றிருக்கும்போது மேற்படி சங்கங்களுக்கு வரவேண்டிய கடன் தொகையையும் அவ்வாறே ஸம்மரியாக வசூல்செய்ய ஏற்பாடு செய்யலாமென அவர் சொல்லுகிறார்.

## ஏழைகளுக்கு வீடுகட்டிக் கொடுத்தல்.

ஏழைகளின் உபயோகத்திற்காக இராஜாங்கத்தார் வீடுகட்டிக்கொடுக்க வேண்டுமென்று மைசூர் ஸானிடரி கமிஷனரான டாக்டர் M. ஸ்ரீனிவாசராவ் அங்கே பிரசுரமாகும் "மைசூர் எகனமிக் ஜர்னல்" என்னும் பத்திரிகையில் நல்ல வியாசமொன்று எழுதியிருக்கிறார். மாதம் ஒரு ரூபாய் முதல் மூன்று ரூபாய் வரைக்கும் அவைகளை வாடகைக்கு விட்டுவிடலாமென்பது அவரது கருத்து. ஏழைகளுக்காக இராஜாங்கத்தார் வீடுகட்டிக் கொடுக்கவேண்டு மென்பதற்கு அவர் சொல்லியிருக்கும் பலமான காரணம் என்னவென்றால்: சரிவர இல்லாத வீடுகளின் நிலைமையை அனுசரித்தே ஏற்படும் பிளேக், கழலைநோய் முதலியவைகளைத் தடுத்துவிடலா மென்பதாகும். பின்னும் அவர் சொல்லி யிருப்பதாவது:—"பிளேக் வியாதியானது முக்கியமாக எலிகளைப் பற்றியதேயாகும். மனிதர்களை அவ்வளவாகச் சார்ந்ததல்ல எலிகள் தாராளமாய் வசிக்கும் வீடுகளிலே மனிதர்கள் வசிப்பதினால்தான் பிளேக் என்ற கொள்ளை நோய் தோன்றுகிறது. ஆகவே எலிகள்வராதபடி வீடுகளைக் கட்டவேண்டுமென்பதேமுக்கியமானகருத்தாகும். ஏழைகளுக்கு வீடுகட்டிக்கொடுக்கும் விஷயத்தை இராஜாங்கத்தார் ஏற்றுக்கொள்வார்களாயின், எலிகள் வராத

படி வீடுகளைக் கட்டிவிட முடியும்''. கழலை அல்லது காசநோய் ஜனசமூகத்தினருக்குள் தோன்றிப் பரவி விட்டபின் அதைப் போக்குவதைக் காட்டிலும் அந்நோய் வராதபடி ஆதிமுதலிலேயே தடுத்துவிடுவதுதான் சிக்கனமான முறையாகுமென்று அவர் சொல்லுகிறார். இது மிகவும் உத்தமமாகும். ஆதலின், ஏழைகளுக்காக வீடுகட்டிக் கொடுப்பதில் பணத்தைப்போட்டால் சுகாதாரம் சௌகரியமா யிருக்குமென்பதோடு கூலியாட்களும் திறமையாக வேலைசெய்து ஜீவிக்க முடியுமென அவர் முடிவாய்ச் சொல்லியிருக்கிறார்.

### திருவாங்கூரில் விவசாய அபிவிருத்தி.

நெல்வயல்கள், தென்னைமரங்கள், கரும்புப்பயிர் ஆகிய இவைகளுக்கு நல்ல உரத்தைப்போட்டு சாகுபடிசெய்வதில் திருவாங்கூரிலே சென்ற ௵-ம் நல்ல மாசூல் கிடைத்திருக்கிறது; பல தாலூக்காக்களிலே அம்மாதிரி பரிட்சைபார்த்ததில் பலன் கிடைத்திருக்கும் விவரம் என்னவென்றால்: தகுந்த உரத்தை உபயோகித்த ஒரு வயலின் மாசூலானது 868 ராத்தலிலிருந்து 2,520 ராத்தலாக உயர்ந்திருக்கிறது. நூறு தென்னை மரங்களிலே முன்னம் 1,193 காய்களே கிடைத்திருக்க, இப்போது 4,164 காய்கள் கிடைத்திருக்கின்றன. கரும்புப் பயிரிலும் அவ்வாறே நல்ல மாசூல் கிடைத்துளது. ஆகவே கரும்பு சாகுபடி முன்னையிலும் அதிகமாய்விட்டது. அங்குள்ள விவசாயப் பண்ணைகள் இரண்டில் இராப்பாடசாலைகளை இராஜாங்கத்தார் ஏற்படுத்தி யிருக்கின்றனர். விவசாயிகளின் மக்களுக்கு அப்பாடசாலைகளிலே விவசாயங்கள் போதிக்கப்பட்டு வருகின்றன.



## விவசாய நாணயச் சங்கங்கள்.

சேலத்திலுள்ள கம்பயநல்லூர் கூட்டுறவு யூனியன் காரியதரிசியாகிய, ம-ா-ா-ஸ்ரீ மிஸ்டர் T. ராஜா ராவ் அவர்கள் எழுதிய வியாசத்தின் ஸாராம்சம் என்னவென்றால் :—

நமது மாட்சிமைதங்கிய இராஜ சக்கிரவர்த்தி இந்தியாவுக்கு விஜயஞ்செய்த காலத்தில், டில்லிநகர் முனிஸிபல் சபையார் அவருக்கு வந்தனப்பத்திரமொன்று சமர்ப்பித்தனர். அதற்கு அவர் பதிலளித்தபொழுது "கூட்டுறவுமுறை இத்தேசத்தில் ஏற்பட்டுத் தக்கபலன் கொடுக்கும்படி முயற்சி செய்யப்படின், இத்தேசத்திலே விவசாயம் வெகு சிறப்பான நிலைமையை அடைந்துவிடுமென நான் எதிர்ப்பார்க்கிறேன்'' என்று சொன்னார். அத்தகைய கூட்டுறவுமுறை இங்கே எவ்வளவுதூரம் ஏற்பட்டுளது? அதனால் எவ்வளவுதூரம் பலன் கிடைத்திருக்கிறது? என்று ஒவ்வொருவரும் சிந்தித்துப் பார்க்கவேண்டும். விவசாயிகளின் திரவிய நிலைமையை உயர்த்தவேண்டுமென்பதே ஆதிமுதல் உள்ள முக்கியமான விஷயம். அவ்விஷயத்தில் கவர்ன்மெண்டார் கவனஞ் செலுத்திவருகிறார்களென்பது உண்மைதான். அதற்காக ஆங்காங்குள்ள நிலைமைக்கு ஏற்றவாறு பலவாறான சட்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அவை போதாவென்று கூட்டுறவுச் சங்கங்களின் சட்டமென்று ஒருசட்டத்தையும் கவர்ன்மெண்டார் ஏற்படுத்தி யிருக்கிறார்கள். விவசாயிகளும் கைத்தொழிலாளிகளும் சில்லரை வியாபாரிகளும் இதரர்களுக்கும் அதிகவட்டி வாங்குவோரின் வலையிலிருந்து நீங்கவேண்டுமென்பதே அச்சட்டத்தின் கருத்து. ஜனங்களில் பெரும்பாலர் எழுத்துவாசனை யில்லாதவர்கள். ஆகவே நாணயம் கிடைக்கும்படியான சங்கங்களை ஏற்படுத்திக்கொள்ள வேண்டுமென்று அவர்களுக்கு எளிதில் போதிக்க முடியவில்லை. பலவாறான துறைகளில் கூட்டுறவுமுயற்சி பிரபலமடைய வேண்டுமென கவர்ன்மெண்டார் கருதியிருக்கின்றனர். விவசாயிகள் முதலியோருக்கு நாணயங் கிடைக்கும் துறையைத்தவிர இதர துறைகளில் கூட்டுறவு முயற்சியைப் பிரபலமடையச் செய்வதிலேயே அதிக கவனம் செலுத்தப்படுகிறது. விவசாயிகளுக்கு நாணயம் கிடைக்கும் விஷயமாய் எவ்வளவுதூரம் இதுவரையில் முயற்சி செய்யப்பட்டுளது? அதனால் விவசாயிகளுக்கு எவ்வளவுதூரம் அனுகூலமுண்டு? என்பதுதான் நன்கு தெரியவில்லை. சில கிராமநாணயச் சங்கங்கள் வேலை செய்துவரும் தோரணையை நான் கவனித்து வந்திருக்கிறேன். அவைகள் தக்க தீவிரங் காட்டுவதாக எனக்குப் புலப்படவில்லை. விவசாயச் சங்கங்களின் நிர்வாகிகளிற் பலரும் தங்களிடமுள்ள சில ஆயிரம் ரூபாயை மெம்பர்களுக்குக் கடனாகக் கொடுத்து விடுவதுண்மைதான். மெம்பர்கள் அத்தொ

கையைப்பெற்று பழைய கடனைத் தீர்க்கிறார்கள். லாபகரமான வேலையில் அவர்கள் அப்பணத்தைப் போடுவதில்லை. இப்படியிருக்க கிராமச் சங்கங்களின் நிர்வாகிகளோ மெம்பர்களுக்குக் கடன் கொடுத்தவுடன், பேசாமல் இருந்து விடுகிறார்கள். விவசாயிகளின் பழைய கடன் தீர்ந்தால்மட்டும் போதாது. வருஷமுழுவதும் தங்களது வாழ்வை நடத்திக் கொள்ளவும், விவசாய வேலைகளைச் செய்யவும் அவர்களுக்குப் பணம் வேண்டும். அதற்கெல்லாம் சங்கத்திலிருந்து அவர்களுக்குப் பணவுதவி கிடைக்காமற்போனால், கடன் கொடுப்போரை அவர்கள் நாடிச் செல்லவேண்டி யிருக்கிறது. ஆகவே, விவசாயிகள் கடன்காரரின் கையில் அகப்பட்டுக்கொள்ளக் கூடாதென்பதற்காக விவசாயச் சங்கங்கள் ஏற்பட்டிருப்பினும் கடன்காரர்களின் கையில் அவர்கள் மறுபடியும் சிக்கிக்கொள்ளுகின்றனர். மெம்பர்களுக்குக் கிரமமாய் பணவுதவி வேண்டும்பொழுதெல்லாம் விவசாய நாணயச்சங்கம் உதவிபுரிந்தாற்தான், அச்சங்கம் இருப்பதனால் பலன் உண்டு.

தற்சமயம் நம்து விவசாயிகள் அனுஷ்டித்துவரும் விவசாய முறை திருப்தியாகவே இல்லை. பரம்பரையாகவுள்ள விவசாய உபகரணங்களை உபயோகிப்பதனாலும், எரு வேண்டிய அளவு கிடைக்காததனாலும், பஜாரில் மகசூலுக்கு விலை கிடைக்காததனாலும், விவசாயம் தற்சமயம் க்ஷீணதிசையில் இருக்கிறது. விவசாயமுறையை அபிவிருத்தி செய்ய விவசாய இலாகா முயன்றுவரினும், இந்திய விவசாயிகளின் பூர்வகாலமுறை இன்னும் ஒழியவில்லை. விவசாய அபிவிருத்தியில் விவசாயச்சங்க நிர்வாகிகள் தக்க கவனம் செலுத்துவார்களாயின், விவசாயத்தை முன்னுக்குக் கொண்டுவரமுடியும். அவசியமான விவசாய உபகரணங்களையும் எருவையும் விதைகளையும் தேடிக்கொடுப்பதற்கு கூட்டுறவுச் சங்கங்கள் நல்ல கருவியாகும். விவசாயப் பொருள்களுக்கு நல்ல விலை கிடைக்கும்படி பார்க்கவேண்டியது மற்றோர் அம்சமாகும். மகசூலை விற்பனை செய்யுங் காலத்திலும் நமது ஸாவுகார் வந்து தலையிட்டு விடுகிறார். மகசூலை மொத்தமாக விற்பதற்கு இப்பொழுது பணக்காரர்களால்தான் சாத்தியமாகிறது. போக்குவரத்துகள் சரியாய் இருந்தால், கிராமாந்தரங்களில் உள்ளோர் நகருக்குச்சென்று மகசூலை நல்ல விலைக்கு விற்கமுடியும். ஆனால் கிராம ரஸ்தாக்கள் சரிவர இல்லை. இவ்விஷயத்தில் கவர்ன்மெண்டார் அவ்வளவு கவனம் செலுத்தவில்லை. ஆதலின் வெகுதூரத்திலுள்ள பஜாருக்குத் தன்மகசூலை ஒருவன் கொண்டுபோக முடியாதபொழுது, வீட்டு வாசலில் கிடைக்கும் விலைக்கே மகசூலை மாறிவிடவேண்டியிருக்கிறது. ஸாவுகார்களோ விவசாயிகளின் தலைக்கடையில் வந்து மகசூலை வாங்கிவிடுகின்றனர். இத்தீமை தொலையவேண்டுமானால், கூட்டுறவுச் சங்கம் தனது மெம்பர்களின் மகசூல்களைச்சேகரித்து



மொத்தத்தில் விற்க முயலவேண்டும். அவ்வாறு மகசூலைச் சேகரித்து பஜாரில் கொண்டுபோய் மொத்தமாக விற்பதனால், விவசாயிகளுக்கும் பலன் உண்டு என்பதோடு, விவசாயிகளால் சங்கத்திற்கு வரவேண்டிய கடன் தொகையையும் சுலபில் கிடைத்துவிடும். இப்படிச் செய்யவேண்டும், அப்படிச் செய்யவேண்டுமென்று இதுவரை எவ்வளவோ சொல்லப்பட்டிருக்கிறது. அவ்வாறே காரியத்தை நடத்துபவர்கள்தான் தேவை. வார்த்தையின்படி காரியம் நடக்கவேண்டுமாயின், கூட்டுறவு லக்ஷியத்தை நன்றாக எல்லாருக்குள்ளும் பரவச்செய்யவேண்டும். கூட்டுறவின் நன்மைகளை கிராமவாசிகளின் காதில் எப்பொழுதும் ஓயாமல் ஓதிக்கொண்டே யிருக்கவேண்டும். கூட்டுறவு லக்ஷியத்தையும் பயனையும் குறித்து தேசபாஷைகளில் பிரசங்கங்கள் செய்விப்பதும், துண்டுப் பத்திரிகைகளைப் பிரசுரிப்பதும் சிறந்த மார்க்கமாகும். கூட்டுறவுக் கான்பரன்ஸ் கூடும் பொழுது, ஒவ்வொரு சங்கத்தின் வருஷாந்திர ரிபோர்ட்டும் படிக்கப்படுகிறதல்லவா? அவ்வாறே கூட்டுறவு முயற்சியில் சம்பந்தப்பட்டுள்ள ஒவ்வொருவரும் அந்தந்த வருஷத்தில் என்னவேலை செய்தார்களென்ற விவரம் கான்பரன்ஸுகளில் தவறாமல் படிக்கப்படவேண்டும். இது நல்ல உபாயமென எனக்குத் தோன்றுகிறது.

---

## பால் பண்ணைகளை வைத்து நிர்வகிப்பதெப்படி?

### கூட்டுறவு முறையில் ஒரு பால் சங்கம்.

நீடமங்கலம் ம-ா-ா-ஸ்ரீ, ராய் சாகிப் எ. சேதுராமய்யர் அவர்கள் எழுதிய வியாசத்தின் விவரம் என்னவென்றால் .—

பட்டணங்களுக் கருகாமையில் பால்பண்ணைகளையும் காய்கறித்தோட்டங்களையும் வைத்து நிர்வகித்தால் லாபம்கிடைக்குமென்பது கிருஷிகர்களின் அனுபோகம். பிரஸ்தாபவிஷயத்தில் எனக்கும் சிறிது அனுபோகம் உண்டு. ஒரு நல்ல தோட்டத்தை வைத்து நடத்தினால் ஒருகுடும்பச் செலவுக்கான பாதிப் பணம் கிடைத்துவிடும். கறவை மாடுகளில் போடும் பணத்துக்கு கஸர் லாபம் அவற்றின் எருவேயாகும். பால்பண்ணைகளில் இது ஓர் முக்கிய அம்சம். ஸர்க்கார் பால்பண்ணைகளில் போட்ட முதலுக்கு சராசரி 100-க்கு 10 வீதம் இந்த இனத்தில் கஸர் லாபம் கிடைத்து விடுவதாகச் சொல்லப்படுகிறது.

1910-ம் வருஷமுதல் நான் 400 ரூபாயில் 8 பசுக்களும் எருமை மாடுகளும் வாங்கி சம்ரட்சித்து வருகிறேன். இவற்றில் நான்கு என்றைக்கும் கறவைமாடுகளா யிருக்கும். பாக்கிப் பாதி சினையாயிருக்கும்.

ஒரு பசு அல்லது எருமை கறவையாயிருந்தால் அதன் தினப்படிச் செலவு அடியில் வருமாறு:—

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| அரிசித் தவிடு ... | 0 | 0 | 6 |
| பருத்திக்கொட்டை ... | 0 | 0 | 6 |
| பிண்ணாக்கு ... | 0 | 0 | 6 |
| வைக்கோல் ... | 0 | 0 | 9 |
| புல் ... ... | 0 | 0 | 9 |
| மாட்டுக்காரப்பையன் ... | 0 | 0 | 6 |
| ஆக மொத்தம் | 0 | 3 | 6 |

ஒரு சினை மாட்டுக்குப் பிடிக்கும் செலவு விவரம்:—

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| வைக்கோல் ... | 0 | 1 | 0 |
| புல் ... | 0 | 1 | 0 |
| மாட்டுக்காரப்பையன் ... | 0 | 0 | 6 |
| ஆகமொத்தம் | 0 | 2 | 6 |

எனவே நான்கு கறவை மாடுகளுக்கு தினப்படி 14 அணாவுக்கு மேலாகாது. நான்கு சினைமாடுகளுக்கும் சராசரி பிடிக்கும் தினசரிச் செலவு 5 அணா என்று வைத்துக்கொள்ளலாம்; ஏனெனில் அவை 6 மாதங்கள் போய் மாட்டு மந்தைகளிலேயே இடையனுடைய மேற்பார்வையிலிருக்கும்.

ஆகமொத்தத்தில் மேலே சொன்ன கணக்குப்படி கூட்டிப்பார்த்தால், நாள் ஒன்றுக்கு 8 மாடுகளுக்கும் சேர்ந்து செலவு ரூ. 1-3-0 ஆகிறது.

நாளொன்றுக்கு 6 சேர் அதாவது பட்டணம்படி ஒன்றுக்குக் குறையாமல் பால் கிடைக்கும். ஒரு படி 4½ அணா வென்று வைத்துக் கொண்டாலும், 4 மாடுகளின் பாலைக்கொண்டு தினந்தோறும் ரூ. 1-2-0 சம்பாத்தித்துவிடலாம். இது ஒரு புறமிருக்க, வருஷா வருஷம் 35 ரூ. பெறுமானமுள்ள 3 கன்றுக்குட்டிகளை விற்றுவந்திருக்கிறேன். கன்றுக்குட்டி விற்பனையில் நாளொன்றுக்கு சராசரி கிடைக்கும் வருமானம் 1½ அணாவாகிறது. ஆகவே ஏற்கெனவே சொல்லிய 1-2-0 ரூபாயுடன் இந்த 1½ அணாவையும் சேர்த்தால் மொத்த வருமானம் நாள் ஒன்றுக்கு 1-3-6 வீதம் ஆகிறது.



நிற்க, ஒரு மாதத்தில் ஒரு மாட்டிலிருந்து சாணம் எடுத்தால் ஒரு வண்டி எருவாகிறது. அம்மாதிரி 8 மாடுகளுக்குச் சேர்த்துப் பார்த்தால், சராசரி மாதம் 6 வண்டி எருவுக்குக் குறையாது. எனவே அந்த இனத்தில் 6 ரூபாய் கிடைத்து விடுகிறது.

அடியிலிருந்து கணக்குப் பார்ப்போம். 400 ரூபாய் முதல்போட்டு மாடுகள் வாங்கினேன். மாதம் 7 ரூபாய்க்குக் குறைவில்லாமல் வருமானம் கிடைத்திருக்கிறது, மாடுகளுக்கு வயதாகி அவைகளின் மதிப்புக் குறைந்து போய்விடும் என்று கேட்கலாம். மாட்டு விலையில் 100-க்கு 10 வீதம் பிரதி மாதமும் தள்ளி விடுங்கள்; அதுபோக பாக்கி கஸர் லாபம் ரூ. 3-10-0 ஆகும். அதாவது நான் போட்ட முதலுக்கு குறைந்த பட்சம் 100-க்கு 10 வீதம் கிடைத்து விடுகிறது.

பம்பாய் கவர்ன்மெண்டார் 30 ஆயிரம் ரூபாயைப் போட்டு ஒரு பால் பண்ணையை பரீட்சார்த்தமாய் நடத்திப் பார்த்தார்கள். அவர்களுக்கும் 100-க்கு 10 வீதமே கஸர் லாபம் கிடைத்திருக்கிறது. எனவே பால் பண்ணை வைத்தால் லாபம் கிடைக்கிற தென்பது பிரத்யக்ஷம். பட்டணங்களுக் கருகாமையில் அவற்றை வைப்பதைப்பற்றியே நான் இவ்வளவு தூரம் சொன்னேன்.

சென்னைக் கருகில் நாம் ஒரு பாற்சாலையை கூட்டுறவு முறையில் அமைக்கமுடியுமா என்பதைக் கவனிப்போம்.

இத்தேச ஜனங்களுக்கான ஆகாராதிகளில் பால் சம்பந்தமான பண்டங்களே முக்கியமானவை. சுத்தமான பால் கிடைக்காததனாலேயே சிசு மரணங்கள் தென் இந்தியாவில் அதிகமாயிருக்கின்றன. பாலைக் குடித்து விட்டே ஒருவன் சும்மாவிருக்கலாம். அது சுலபமாய் ஜீரணமும் ஆகிறது. பால் சுத்தமாயிருக்கிறதா என்பதைமட்டும் கவனிக்கவேண்டும். அசுத்த ஜலத்துடன் பாலைக் கலக்கிறார்களென்பதை அறியாதார் இல்லை. மாடுகளுக்கு மேய்ச்சல் பூமிகளும் போதுமான அளவு கிடையாது. மாட்டுக் கொட்டில்களைச் சுத்தமாய் வைத்திருப்பதில்லை. மாடுகளுக்கு நன்றாய்த் தண்ணீர் காட்டுவதில்லை. நல்ல மாடுகளை ஸரிவர வளர்க்க வேண்டும். முனிஸிபல் நகரங்களில் கூட்டுறவு முறையில் பால் சங்கங்களை ஸ்தாபித்தால், இக்குறைகளை நிவர்த்தி செய்து விடலாம்.

வருஷாவருஷம் நெல்லூரிலிருந்து சென்னைக்கு ஐயாயிரம் பசுக்கள் கொண்டுவரப்படுவதாகக் காண்கிறது. சென்னை மாட்டுக்காரர்களோ அற்ப ஜீவனக்காரர்கள். கூட்டுறவினால் ஆயபலன்களை அவர்கள் அறியமாட்டார்கள். கூட்டுறவுச் சங்க நிபுணர்கள் அவர்களுக்குப் புத்தி சொல்லவேண்டும். கூட்டுறவினால் ஏற்படக்கூடிய நன்மைகளை அவர்களின் மனதில் பதியும்படி எடுத்துச்சொல்லி, அவர்களுக்குள் நாட்

டாண்மைக் காரர்களாயுள்ளவரை பிரஸ்தாப கூட்டுறவுச் சங்கங்களில் சேரும்படி செய்ய வேண்டும்.

மாட்டுக்கார நாட்டாண்மைக் காரர்களின் உதவியைக் கொண்டு பால் ஸப்ளைக்கான ஒரு சங்கத்தை ஸ்தாபிப்பது கஷ்ட சாத்தியமானகாரியம் அல்ல, சென்னை நகரின் ஒவ்வொரு வார்டு அல்லது பிரிவிலும் அத்தகைய சங்கங்களை ஸ்தாபிக்கலாம். ஆரம்பத்தில் ஜார்ஜ். டவுனுக்குப் பக்கமாய் ஒரு சங்கத்தை பரீட்சார்த்தமாக ஸ்தாபிக்கவேண்டும். பால் ஸப்ளை செய்யக்கூடிய மாட்டுக்காரர்களை அச்சங்கத்தின் அங்கத்தினர்களாகச் சேர்த்து, கார்பொரேஷன் அதிகாரிகளின் உதவியால் அவர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்கவேண்டும். கார்பொரேஷன் அதிகாரிகள் 6 ஆயிரம் ரூபாயில் 100 பசுக்களுக்குப் போதுமான ஒரு கொட்டிலைத் தயாரிக்கவேண்டும். சுமார் 200 அடி நீளமும் 36 அடி அகலமும் உள்ள ஒரு கொட்டில் அமைத்தால் போதுமானது. ஒவ்வொரு பசுவுக்கும் 32 சதுர அடி விஸ்தீரணம் வேண்டியிருக்கும். அக்கொட்டிலுக் கடுத்தாற்போல் தவிடு பிண்ணாக்கு, தண்ணீர்த்தொட்டி முதலியவை தயாராய்ச்சேகரித்து வைக்க மற்றோர் கட்டடமும் வேண்டும். மாட்டுக்காரர்களுக்கு வாசவசதிகள் அக்கட்டடத்திலேயே செய்து கொடுக்கலாம். அதற்கு மொத்தம் ஆயிரம் ரூபாய்க்கு மேல் ஆகாது. பரோபகாரிகளான கொடைவள்ளல்களுக்கு 10 ஆயிரம் ரூபாயில் மாட்டுக் கொட்டில்கள் கட்டிவைப்பது சிரமமான காரியமல்ல. மாட்டுக்காரர்களிடமிருந்து வாடகை வசூலித்து விடலாம். சென்னை முனிஸிபாலிட்டியார் தண்டையார்பேட்டையிலுள்ள தங்கள் பண்ணையிலிருந்து மாடுகளுக்கு வேண்டிய தீனியை ஏற்பாடு செய்துகொடுக்கலாம். உயர்ந்த இரண்டு ஜாதியில் பொலிகாளைகளை முனிஸிபாலிட்டியார் வாங்கிக் கொடுக்கவேண்டும். 50 ஏக்கர் நிலத்திலிருந்து 100 மாடுகளுக்கு வேண்டிய அளவு புல் கிடைத்துவிடும். ஒவ்வொரு மாட்டுக்கும் நாள் ஒன்றுக்கு ஒரு அணா பெறுமானமுள்ள பச்சைப்புல்போதுமானது. அதாவது மாடு ஒன்றுக்கு 50 ராத்தல் புல் வேண்டியிருக்கும். புல்லின் விலையை மாட்டுக் காரர்களிடமிருந்து வசூலித்துவிடலாம். மாடுகளையும் சாமான்களையும் அடமானமாய் வைத்து மேற்படி பால் சங்கத்தார் தங்களுக்கு வேண்டிய பணத்தை 'மதராஸ் ஸெண்ட்ரல் பாங்கி' யிலிருந்து சுலபமாய்ப் பெற்றுக்கொள்ளலாம். மாட்டுக்காரர்கள் மாதத்தவணைகளில் வாங்கிய கடனைத் திருப்பிகொடுத்து விடவேண்டும். சங்கத்தின் அங்கத்தினர்களாகிய மாட்டுக்காரர்களுக்கு கைமேல் பலன் கிடைக்குமென்று நான் சொல்லவேண்டியது அனாவசியம். ஆரம்பத்தில் கவர்ன்மெண்டின் விவசாய இன்ஸ்பெக்டரைக்கொண்டு சங்கத்தை மேற்பார்வையிடச் சொல்லவேண்டும்.



கூட்டுறவு முறையில் ஒரு பாற்சாலை ஸ்தாபிக்க இதுதான் வழி. இதையனுசரித்து நடந்தால் சென்னையில் பால் கஷ்டம் அதிகமாயிராது. சுத்தமான பாலும் அருமையாயிராது. ஆதியில் சிறிது கஷ்டமாய்த்தானிருக்கும். ஆயினும் ஊக்கந்தளராது வேலையை நடத்திவந்தால், காரியம் கட்டாயம் சித்திபெறும்.

---

# கிராம முன்னேற்றத்திற்கு கூட்டுறவு ஆதாரம்.

திருவாங்கூரிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களின் ரெஜிஸ்டிராராகிய ம-ள-ள-ஸ்ரீ, C. கோவிந்த பிள்ளை அவர்கள் B.A., B.L., எழுதிய வியாசத்தின் விவரம் யாதெனில்:—

இந்தியாவிலிருந்த புராதனமான சபைகளில் கால வசத்தால் அழிந்து போனது கிராம சபை ஒன்றாகும். அக்கிராம சபை எவ்வளவோ விசேஷமானது. கிராமஜனங்களின் க்ஷேமலாப அபிவிருத்திக்கு கிராமசபை பெரிதும் அனுகூலமாய் இருந்த தென்பதை யாரும் மறுக்க முடியாது. முன்னம் கிராமசபை இருந்து வந்ததனால், பொது நன்மை தங்களது நன்மையாகுமெனப் பலரும் கருதி, ஒற்றுமையுடன் உழைத்து வந்தனர். தற்காலம் எவ்வளவோ அபிவிருத்தி முறைகள் ஏற்பட்டிருப்பினும், பொது நன்மை தங்களது நன்மையே யாகுமென முன்னம் ஜனங்களுக்கு ஒரு மனதான கருத்து இருந்ததுபோல் இப்பொழுது ஏற்படவில்லை.

தற்சமயமுள்ள நிலைமையை எல்லாவிதத்திலும் அபிவிருத்தி செய்துவிட அக்கிராம சபை முறை போதாதாயினும், அச்சபையினால் கிடைக்கக் கூடிய விசேஷபலன்களை நாம் அலட்சியஞ் செய்து விடுவதற்கில்லை. கிராம அபிவிருத்தி ஏற்படவேண்டுமென்று இப்பொழுது பல முயற்சிகள் செய்யப்படுகின்றன. ஆனால் பொது நன்மை. தங்களது நன்மை யாகுமென்று முன்னம் ஜனங்களுக்கு ஒருமையான கருத்து இருந்தது போல் இப்பொழுதும் இருக்குமாயின், கிராம முன்னேற்றம் வெகுதூரம் ஏற்பட்டிருக்கும். ஆதலின், பொது நன்மையே தங்களது நன்மையென்ற ஏகமனதான கருத்து ஜனங்களுக்கு உண்டாகும் வரையில் அவ்விதமான முயற்சிகளையெல்லாம் நாம் செய்து வரவேண்டும். அத்தகைய ஒருமனதான கருத்து உதிக்கும்வரையில் நமது முயற்சிகள் யாவும் பயன் தந்துவிட்டன வென்று நாம் சொல்லமுடியுமா? எனவே அத்தகைய ஏகமனதான கருத்து ஏற்படுவதற்கு என்ன செய்யவேண்டுமென்பதே முக்கியமான பிரச்னையாகும்.

அதற்கு கூட்டுறவு முயற்சியே சிறந்த முயற்சிகளில் ஒன்றாகும். கூட்டுறவு முயற்சியினால், கிராமவாசிகள் அனைவரும் ஒரு மனதாயிருந்து, எல்லாருக்கும் பொதுவான நோக்கங்களையும் ஆவல்களையும் கொண்டு ஒருமிக்க உழைக்க முடியும். பிறருடைய நன்மையைத் தங்களுடைய நன்மையாகக் கருதுதல், பரஸ்பரம் உபகாரமாய் இருத்தல், பரஸ்பரம் அபிமானம் காட்டுதல் ஆகிய இவைகளெல்லாம் கூட்டுறவு முயற்சியினால் கிடைக்கக் கூடிய பலன்களாகும். அவ்வாறு நமக்குப் பலன்கள் கிடைக்கும் பொழுது, கிராம முன்னேற்றம் சரிவர ஏற்படும்.

கூட்டுறவு முயற்சியில் ஒரு துறையிலேயே நாம் கவனஞ் செலுத்தி வந்திக்கிறோமென்று நம் மீது ஒரு புகார்கூறப்படுகிறது. கூட்டுறவு முயற்சியில் பல துறைகள் இருக்க நாணயம் கிடைக்கும் துறையிலேயே நமது கவனம் வெகுவாகச் சென்றிருக்கிறதென்பதை, நாம் ஒப்புக்கொள்ள வேண்டும். மூலாதாரமான கூட்டுறவு முயற்சி ஜனங்களுக்குள் உதிக்குமாயின், கூட்டுறவு முறையை ஏற்படுத்தும் விஷயமாய் நாம் உழைப்பதெல்லாம் வீணாய்ப்போகா. கூட்டுறவு முயற்சியிலே இதர துறைகளில் இறங்கி உழைப்பின், நமது திரவிய நிலைமையை உயர்த்த நாம் வழி தேடுபவர்களாவோம். கூட்டுறவு முயற்சியை பிரபலப்படுத்தும் விஷயமாய் நாம் அனுஷ்டித்துவரும் முறையைக் கண்டு எவரும் அவமானம் அடைவதற்கில்லை. ஒரு குழந்தையானது நடக்கமுயலுமுன் நிற்கக்கற்றுக் கொள்ள வேண்டுமல்லவா? ஐக்கிய நாணயச்சங்கங்களை வைத்து நடத்துவதற்கு விசேஷமான ஞானம் வேண்டியதில்லை. ஆகவே கிராமத்தார்களுக்கு நாணயம் கிடைக்கும்படி செய்வதே கூட்டுறவு முயற்சியின் முதல் அம்சமென நாம் கருதினோம், ஐக்கிய நாணய முயற்சியில் முதல் முதலாக நமக்கு சிரத்தை ஏற்பட்டதற்கு மற்றொரு காரணமும் உண்டு. அதாவது ஹிமஸ்ஸேது பரியந்தம் அனைவரும் பண உதவி வேண்டுமென்றிருத்தலாகும். ஆகவே அவ்விதம் அவர்களுக்கு பணவுதவி கிடைக்கும்படி செய்வதுநமது முதற்கடமையாகும். இந்தியாவில் கோடிக்கணக்கான ஜனங்கள் இருந்துவரும் போழுது, சுமார் 17 ஆயிரம் சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. அதிகமல்ல; இன்னும் எவ்வளவோ அதிகமான சங்கங்கள் ஏற்படவேண்டும். ஐக்கிய நாணயச் சங்கங்கள் தங்களது வேலையைச் சரிவர செய்துவிடின், அதாவது விவசாயிகளுக்கு தக்க பணவுதவி செய்துவிடின், கூட்டுறவு முயற்சியிலே இதர துறைகளில் நாம் நிச்சியமாய் இறங்குவோம்.

சரசமானவட்டிக்கு சௌகரியமாகப் பணம் கிடைத்துவிடும்படி செய்வதே கூட்டுறவு சங்கங்களின் வேலையாகுமென்றுநாம் கருதியிருந்துவிடக்கூடாது. அவ்விதம் கருதியிருந்து விட்டால், அது தப்பாகும். சரச



வட்டிக்கு சௌகரியமாகப்பணம் கிடைக்கும்படி ஐக்கிய நாணயச்சங்கங்கள் முயலுவதோடு ஜனங்களுக்குள் சுய உதவி பரஸ்பர உபகாரம் புத்திசாலித்தனம், ஆகிய குணங்கள் உதிக்கும்படியும் முயலவேண்டும். அதுவே மிகவும் முக்கியமாகும்.

பணவுதவி வேண்டிய சிலவிவசாயிகள் ஒன்றுகூடி ஒரு சங்கம் ஸ்தாபித்து, சௌகரியமான வட்டிக்குப் பணத்தை அடைந்துவிட்டால் அப்பணத்தைக் கிரமமாக உபயோகித்துப் பலனடையாதுபோயின் கூட்டுறவு முயற்சியின் உண்மையான லட்சியம் கைக்கூடிவிடாது. ஐக்கிய நாணயச்சங்கத்தின் மெம்பர்களுக்கு அச்சங்கத்திலிருந்து பணவுதவி கிடைப்பதின் கருத்தென்ன? தற்சமயமுள்ள கடன் பளுவிலிருந்து நீங்கிவிடவேண்டுமென்பதுமட்டுமல்ல கடனாகப் பெற்றதனத்தை புத்திசாலித்தனமாய் உபயோகித்து அதிலிருந்து இன்னும் வருமானத்தைப் பெருக்கிக்கொள்ளவேண்டுமென்பதுமாகும். இந்த லட்சியமும் உணர்ச்சியும் நன்கு கவனத்தில் வைக்கப்படுமானால் காலக்கிரமத்திலே மெம்பர்கள் கூடியவரையில் பணவிஷயத்தில் சுதந்தரர்களாகி விடமுடியும். பணவுதவிக்காக அந்நியரின்கையை எதிர்பார்த்திருக்க வேண்டிய அவசியம் குறைவதால், மெம்பர்கள் தங்களுடைய ஜீவனோபாயத்தில் அதிக சிரத்தையும் ஊக்கமும் காட்டி, வரவரத் தமது வருமானத்தைப் பெருக்கிக் கொள்ள் முடியும். திரவிய நிலைமை சௌகரியமாயிருந்தால்தான் சன்மார்க்க நிலைமையும் சௌகரியமாயிருக்க முடியும். சமூக அபிவிருத்தி வேண்டுமென்பதற்கு அறிகுறியாயுள்ளவைகள் என்னவெனில்; பாடசாலைகளையும், வாசகசாலைகளையும் ஏற்படுத்தல்; தகுந்த ஊதியமும் கௌரவமும் உள்ள துறையில்மக்களுக்குப் பயிற்சி கொடுத்தல், சுகாதார நிலைமையை அபிவிருத்தி செய்துகொள்ளுதல், வியாஜ்ய விவகாரங்களைத் தடுத்தல்; இன்னும் முன்னேற்றத்திற்குரிய இதர காரியங்களைச் செய்தல், ஆகிய இவைகளாகும்.

மேற்சொன்ன வழிகளில் இரண்டொருவர் தனித்தனியே முயலுவதனால் மட்டும் காரியசித்தி ஏற்பட்டுவிடாது. பலரும் ஒன்று சேர்ந்து முயற்சி செய்யவேண்டுமென்ற எண்ணம் உதிக்கவேண்டும். அவ்வாறே உதிக்கும். அதனால், பலவாறான ஜாதிமத வித்தியாசங்களுள்ள மனிதருக்குள்ளும் ஒற்றுமை ஏற்படும். சமூகத்தின் நன்மையைக் கவனிக்குமளவில், அற்பமான அபிப்பிராயபேதங்களை ஒழிக்கும்படி நேரும். ஆகவே கூட்டுறவு முயற்சியினால் ஹிந்துக்கள், மகம்மதியர், கிறிஸ்துவர், ஆகிய பற்பல வகுப்பினரும் ஒன்றாய்க் கூடி பரஸ்பரம் நம்பிக்கையும் அபிமானமும் கொண்டு, பொது நன்மையிலே பாடுபடும்படியாகும். சௌகரியமாக் நாணயம் கிடைப்பதினால், நூதனமுறைகளை யனுஷ்டித்து விவசாயத்தை

அபிவிருத்தி செய்யலாம்; தொழில் முயற்சிகள் வளரும், வியாபாரம் பெருகும்; கடும் வட்டிவாங்குதல் என்ற தீயவழக்கமும் தொலையும்; சுருங்கச்சொன்னால், சௌகரியமாய் நாணயம் கிடைப்பதற்கு வழி யுண்டானதே ஜனங்கள் வரவர சமாதானமும் ராஜபக்தியும் ஒழுங்கும் கொண்டு வாழவும் முடியும். இதனால் இத்தேசத்திற்கே ஒரு பெருமையுண்டு. இவ்வாறுஜனங்கள் முன்னேற்றமடையும்பொழுது, கிராமமுன்னேற்றம் இலகுவில் கைகூடிவரும்; வியாஜ்யவிவகாரங்கள் ஆடும் சுபாவம் ஜனங்களுக்குள் இருந்து வருகிறது. ஆகவே கிராமஜனங்களுக்குள் பரஸ்பரம் ஒற்றுமை ஏற்பட்டுவிடும்பொழுது அந்த சுபாவத்தைத்தொலைக்க ஒற்றுமையைவிடச் சிறந்த திறமையான சாதனம் எதுவுமில்லை. வியாஜ்யவிவகாரம் ஆடுவதில் செலவிடப்படும் ஏராளமான தனமும், ஊக்கமும், காலமும் தடுக்கப்படுமாயின் நமது கிராமங்களைக் கைத்தூக்கிவிடுவதில் நாம் வெகுதூரம் காரியசித்திப் பெற்றவர்களாவோம். ஜனங்களுக்கு சௌகரியமாய் நாணயம் கிடைக்கும்படி செய்வதே வியாஜ்யவிவகாரத் தீமையை ஒழிப்பதற்கு ஒருவித உபாயமாகும். இனி தகராறுகளை யெல்லாம் தகுந்த மத்தியஸ்தர்களிடம் சொல்லிக்கொண்டு தீர்த்துக்கொள்வதென்ற சுபாவமும் ஏற்பட்டுவிடுமேயானால், வியாஜ்ய விவகாரத்தீமை இன்னும் தணிந்துவிடும். தகராறுகளைத் தீர்த்துவைக்கும் தக்க மத்தியஸ்தர்களாக ஐக்கிய நாணயச் சங்கங்கள் பேர்பெற்றுவிட்டால் வியாஜ்ய விவகாரம் ஆடுவதென்று ஜனங்களுக்குள்ள சுபாவம் கட்டாயம் மாறிப்போகும். இதற்காக உண்மையான கூட்டுறவு முயற்சியும் உணர்ச்சியும் பிரபலமாகி ஸ்திரப்படவேண்டும். மறுபடியும் நமது கிராமங்கள் கதிமோட்சம் அடைவதற்கு கூட்டுறவு முயற்சியே சிறந்த மார்க்கமென்பதில் சந்தேகம் வேண்டாம். கிராமங்களில் அபிவிருத்தி ஏற்பட்டால், அந்த அபிவிருத்தி தேசமெங்கும் வீசும், சமாதானமாகவும் திருப்தியாகவும் வாழ்ந்துவர ஜனசமூகத்தினர் உணர்ந்துகொள்வார்களாயின் முன்னேற்றத்திற்குரிய வழி சுலபமாய்விடும். ஜீவனோபாயத்திற்குத் தக்க வழியும் சாதனமும் இல்லாதிருப்பதினாலேயே அதிருப்தியும் அமைதியின்மையும் உதிக்கின்றனவெனலாம். கூட்டுறவு முயற்சியினால் கிடைக்கக்கூடிய முழுப்பலனையும் அடைவதென்று நாம் தீர்மானித்துவிடின் எவ்வளவோ நன்மை யுண்டு.

---



# கட்டிடச் சங்கங்களுக்குப் பணமுதவும் மார்க்கங்கள்.

சென்னை பிரஸிடென்ஸி காலேஜ் ஆசிரியர், ம-ா-ா-ஸ்ரீ, T. S. சுப்பிரமணிய ஐயர் எழுதிய வியாசம் என்னவென்றால் :—

உண்ண உணவும் உடுக்கத் துணியும் குடியிருக்க வீடும் வாழ்வின் இன்றியமையாத தேவைகளாகும். ஜனநெருக்கமான பட்டணங்களிலே வசிப்பவர்களின் ஏற்றத்தினால் கல்வி சுகாதாரம் முதலியவற்றில் செலவழிக்கப் போதியவளவு பணம் மிஞ்சுவதில்லை. மேலும் வீட்டுவாடகை ஆளை அழுத்தி விடுகிறது. வீட்டுக்காரர்களையே அது கொழுக்கச் செய்கிறது. சொந்தத்தில் குந்தக் குச்சு இல்லாதவர்கள் தவிக்க வேண்டிவருகிறது. வாடகை கொடுத்துக் கொண்டு குடியிருப்போருக்கும் பலவகைக் கஷ்டங்கள் இருந்தே தீருகின்றன. வீடுகளைப் பழுது பார்க்கும் 'விஷயங்களில்' வீண் மனஸ்தாபமும், குடியிருப்போர் செய்யும் செலவுகளுக் கேற்ப் பிரதிப்பிரயோஜனம் இல்லாமற் போவதும், குடியிருப்போரின் மிகுதியால் வீட்டு விலை உயரஉயர வாடகை உயர்வதும், அவற்றில் முக்கியமாய்க் குறிப்பிடத்தக்க ஊழல்களாகும்.

இக்கஷ்டங்களை நிவர்த்திக்க ஒரே வழிதான் உண்டு. அவனவனுக்குச் சொந்தத்தில் ஒரு வீடு வாங்கிக் கொள்வதே ஒழுங்கான முறையாகும். அனாவசியமான கஷ்டங்கள் அதன் மூலமாய் ஒழிந்துபோம். அவனவன் தன் இஷ்டத்தையும் சௌகரியத்தையும் உத்தேசித்து வாழ்ந்தால் அப்போது சாத்தியமாகும்.

அதற்கு இரண்டு விஷயங்கள் தேவை. முதலாவது ஒரு வீடு அல்லது ஸ்தலத்தை யார் விற்கப் போகிறார்கள் என்று தேடிப்பிடிக்க வேண்டும். பிறகு அதனை வாங்கப் போதியவளவு பணம் வேண்டும். இந்த வியாசத்தின் தலைப்பக்கத்தில் குறிப்பிட்ட கூட்டுறவுச் சங்கங்களே இது விஷயத்தில் ஏழைகளுக்கு உபகாரமா யிருக்கக் கூடும். அத்தகைய சங்கங்களில் சேருவோர் தங்களுக்கு வேண்டியவளவு கடன் வாங்கிக் கொள்வதோடு, பின்னிட்டு தங்களைப் போலுள்ள பிறருக்கும் உபகாரமாயிருக்க முயலவேண்டும். சங்கத்தின் பணத்தைக் கடனாக வாங்கிக் கொள்வோர் தாம் கட்டிக்கொள்ளும் வீட்டை அடமானமாக வைத்துத் நாளாவட்டத்தில் அதனைத் திருப்பிக் கொடுத்து, வீட்டை சொந்தமாக்கிக் கொள்ளவேண்டும். அவ்வாறு சங்கமும் கணக்கைமீறி ஒருவனுக்கு முன்பணம் கொடுத்து விட்டு ஏமாறக் கூடாது.

வாச வசதிகள் தேடிக் கொடுக்கும் கூட்டுறவுச் சங்கங்களில் கடன் வாங்குவதற்கும் சாதாரணமாய்க் கடன்காரர்களிடம் அடமானப் பத்தி

ரங்கள் எழுதிக் கொடுப்பதற்கும் எவ்வளவோ வித்தியாசங்கள் இருக்கின்றன. அவையாவன:—1. சாதாரண பந்தகப் பத்திரத்தில், கடன் வாங்குவோன் ஒரு தவணையைக் குறிப்பிடாமல் பரஸ்பரம் நோட்டீஸ் கொடுத்தபின் முதலைக் கொடுத்துத் தீர்க்கச் சம்மதிக்கிறான். கூட்டுறவுச் சங்கத்திற்கு எழுதிக்கொடுக்கும் பத்திரத்தில் அசல் தொகையின் ஒரு பாகத்தையும் அவ்வப்போதைய வட்டியையும் குறித்த ஒருதவணைக்குள் கொடுத்துத் தீர்ப்பதாய் ஒப்புக்கொள்ளுகிறான். 2. சாதாரண பத்திரத்தில் கடன் தீர்க்கும் தேதியைக் குறிப்பிடுவதில்லை; கடன் வாங்குவோர் விசேஷகவலைகொண்டு தன்சொத்தை மீட்கப் பிரயத்தனப்படுகிறான்; கூட்டுறவுச் சங்கத்தாருக்கு எழுதிக் கொடுக்கும் பத்திரத்திலோ ஏதோ சில வருஷங்களைத் திட்டமாய்க் குறிப்பிட்டு அதற்குள் பத்திரத்தின் நிபந்தனைகளைச் சுலபமாய் பூர்த்திசெய்து விடுகிறான். 3. சாதாரண பந்தகப் பத்திரத்தில் கடன் வாங்குவோருக்கு கவலையும் ஆபத்தும் இருந்துகொண்டே யிருக்கும். கூட்டுறவுச் சங்கப்பத்திரத்திலோ அவ்வப்போது (அதாவது மாதம்மாதம்) ஓயாத கடன் தீர்ந்தது என்ற திருப்தி உண்டாவதற்குற்ற சமய மேற்படுகிறது.

இத்தேசத்தில் மேற்கண்ட கூட்டுறவுச் சங்கங்களை ஸ்தாபிப்போர் பிரிட்டிஷ் அமெரிக்கன் சங்கங்களைப்பார்த்து அவற்றின் அனுபோகத்தைக்கொண்டு நிர்வகிக்க பிரியத்தனப்படவேண்டும். வாசவசதிகள் தேடிக் கொடுக்கும் சங்கங்களால் இங்கிலாந்தில் 2 லட்சத்து 50 ஆயிரம் பேர் பலனடைந்திருக்கிறார்கள். வருஷந்தோறும் 20 ஆயிரம் பேருக்குமேல் பத்திரங்கள் எழுதிக்கொடுத்து கடன் வாங்கிக் கொள்ளுகிறார்கள். வருஷா வருஷம் 1 கோடி பவுன் அங்கு கடன் கொடுத்து உதவப்படுகிறது. அமெரிக்காவிலும் அம்மாதிரியேதான் நடந்துவருகிறது.

நம்பிக்கையுள்ள மனிதர்களால் இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் சங்கங்கள் நிர்வகிக்கப்படுகின்றன. செலவுகளைக் குறுக்கி, லாபத்தைப் பெருக்கி சங்கத்தின் வேலையை அவர்கள் திறமையாய் நடத்திவருகிறார்கள். அத்தேசங்களில் 100-க்கு 4 வீதம் வட்டி கொடுத்து பெருத்த தொகைகளைக் கடனாக வாங்குவதற்குற்ற சௌகரியங்கள் இருக்கின்றன. இத்தேசத்திலோ 7 அல்லது 8 வட்டிக்குக்குறையாமல் கொடுத்தாலன்றிப் பணம் அகப்படுவதில்லை. பிரஸ்தாப கூட்டுறவுச் சங்கங்களை பரோபகாரிகளே ஆதியில் ஸ்தாபித்துக் கைதூக்கி விடவேண்டும். ஆனால் அனுபவத்தில், அவர்கள் இத்தகைய விஷயங்களுக்கு முன் வந்திருப்பதாகத் தெரியவில்லை. தன்கையே தனக்குதவி என்ற மூதுரையைப் பின்பற்றி சங்கத்தின் மெம்பர்களே முதல் போட்டு நிர்வகித்தால் சங்கமும் சீக்கிரத்தில் அபிவிருத்தியடையும். கவர்ன்மெண்டாருடைய சகா



யத்தையும் எதிர்பார்த்து சும்மா நிற்கக்கூடாது. ஏழைகளாயுள்ளவருக்கே பெரும்பாலும் வீடுகள் வேண்டியிருப்பதால், அவர்கள் ஒருமித்து சீட்டுப் பணம் வசூலிக்க முயற்சி செய்யவேண்டும். அதன் விவரங்களை அடியில் குறிப்பிடுகிறேன்:—

மாதமொன்றுக்கு 20 ரூபாய் கொடுப்பதாக 50 பேர் ஆரம்பத்தில் சேர்ந்து ஒரு சங்கம் ஸ்தாபிக்கிறார்களென்று வைத்துக்கொள்வோம். மாதக்கடையில் மொத்தம் வசூலாகும் தொகை ரூ. 1,000. எனவே பிரதி இரண்டு மாதங்களுக்கும் 2 ஆயிரம் ரூபாய் சேர்ந்து விடுகிறது, அதைக்கொண்டு, 500 ரூபாய்க்கு ஐந்து மனைகள் வாங்கி மேலே ஆயிரத்து ஐந்நூறு ரூபாய் செலவு செய்தால் ஒழுங்கான வீடொன்று கட்டிவிடலாம். முதல் இரண்டு மாதங்களுக்குப்பின் கட்டின வீட்டை ஏலம் கூறி ஜாஸ்தி தொகைக்கு கேட்கும் மெம்பர்கள் அதைப் பெறும்படி செய்யவேண்டும். அவ்வாறு ஏலம் எடுத்துக் கொண்டவர் சங்கத்திற்கு ஒரு பந்தகப் பத்திரம் எழுதிக்கொடுத்து, பாக்கித் தொகையை ஏதோ ஒரு தவணைக்குள் கொடுத்துத் தீர்க்கும்படி செய்யவேண்டும். இந்தப் பிரகாரம் செய்தால் 7 அல்லது 8 வருஷத்திற்குள் 50 மெம்பர்களுக்கும் வாச வசதிகள் ஏற்பட்டுப்போகும். சங்கத்தின் நிதியில் அவரவர்கள் சக்திக்கு ஏற்றவாறு பணத்தைப் போட்டுவைத்தால் சங்கத்தின் வேலை தீவிரமாய் நடந்தேறும். சீட்டுப் பணம் போடுவதை நம் ஜனங்கள் அறியாதவர்களல்லர். மேற்சொல்லிய முறையை அனுசரித்து நடந்தால், குடியிருக்க வீடில்லாக் கஷ்டம் நிச்சயமாய் ஒழிந்துபோகும்.

---

# சென்னைக்கு ஓர் விவசாய ஸ்தாபனச் சங்கம்.

கல்கத்தா பிரஸிடென்ஸி கலாசாலையில் அர்த்த சாஸ்திர புரொபஸரும், "வங்காள கோவாபரேடிவ் ஜர்னல்" என்ற சஞ்சிகையின் உதவி ஆசிரியருமான மிஸ்டர் P. முக்கர்ஜி, M.A., F.R.E.S. எழுதிய வியாசத்தின் விவரம் யாதெனில் :—

விவசாய அபிவிருத்தியை நாடி விவசாயச்சங்கங்களை ஏற்படுத்த வேண்டுமென்ற நோக்கமுடன் அயர்லாந்தில் ஏற்பட்டுள்ள (Irish Agricultural Organisation) என்ற பெருமை தங்கிய சங்கத்தினால் அயர்லாந்தில் செல்வ நிலைமை வெகுதூரம் உயர்ந்திருக்கிறது. அச்சங்கத்தை நிர்வகித்து நடத்திவந்திருப்பவர் ஸர் ஹொரேஸ் பிளங்கெட் என்பவர். கூட்டுறவு முயற்சியில் சிரத்தை வாய்ந்த உழைப்பாளிகள் எல்லாருக்கும் இவ்விஷயம் தெரிந்திருக்கும். அயர்லாந்தின் செல்வ நிலைமை

உயர்வதற்கு அங்கே என்ன முயற்சி கையாளப்பட்டதோ அவ்வாறே இங்கிலாந்திலும் ஸ்காட்லாந்திலும் முயற்சியுண்டு. முன் சொன்ன இருநாடுகளிலும் அத்தகையச் சங்கங்கள் இருக்கின்றன. இங்கிலாந்தையும் ஸ்காட்லாந்தையும் விட அயர்லாந்தைப்போல சென்னை மாகாணமும் முக்கியமாக விவசாயமகாணமாகும். விவசாயத்தை அபிவிருத்தி செய்யவேண்டி, சென்னை மாகாணத்திலுள்ள உத்தியோகஸ்தரல்லாத உழைப்பாளிகளின் தொகை கொஞ்சமல்ல. ஆயினும் உழைப்பாளிகளோ ஒன்றுகூட்டி அமைக்கப் பட்டிருக்கவில்லை. உழைப்பாளிகளின் முயற்சியினால் கிடைத்துள்ள பலனும் முயற்சிக்கு ஏற்றவாறு இல்லை. தவிர, சென்னையில் கூட்டுறவு முயற்சினால் விவசாயிகளுக்குப் பெரு நன்மையும் கதிமோட்சமும் ஏற்படவேண்டியது மிகவும் அவசியமாயிருக்கையில், கூட்டுறவு முயற்சியைப் பிரபலப்படுத்துவதற்குள்ள வழிகளும் ஒன்று கூட்டியமைக்கப்படவில்லை. இதை எவரும் மறுக்க முடியாது. அடிக்கடி கட்டாயத்தின்மேல் கூட்டுறவு முயற்சியை அபிவிருத்தி செய்துவிட முயலுதல் ஆகாதகாரியம். கூட்டுறவு வேண்டுமென்ற அவாவையும், கோரிக்கையையும் ஆங்காங்கு ஜனங்களுக்குள் பலமாய் ஊட்டவேண்டும். இதற்காக ஒரு சங்கம் அவசியமே. அச்சங்கத்தில் ஜமீன்தார்களும், குடிமக்களும், ஹிந்துக்களும், மகம்மதியரும், உத்தியோகஸ்தர்களும், உத்தியோகஸ்தரல்லாதவர்களும், சுருங்கச்சொன்னால் மனித சமூகத்தின் ஒவ்வொருவகையினரும் ஒன்றாகச் சேர்ந்து, ஜனங்களின் திரவிய நிலைமையும் சன்மார்க்க நிலைமையும் உயரும் வண்ணம் ஒருமித்து உழைக்கலாம். விவசாய அபிவிருத்தியை நாடி விவசாயச் சங்கங்களை ஏற்படுத்த வேண்டுமென்ற நோக்கத்துடன் அயர்லாந்திலே ஏற்பட்டிருக்கும் சங்கத்தைப்போல் சென்னை மாகாணத்திலும் ஒரு சங்கம் ஏற்படவேண்டுமென்ற விஷயத்தை இக்கான்பரன்ஸ் கவனிக்க வேண்டும். இங்கிலாந்தில் ஏற்பட்டிருக்கும் சங்கத்தின் நோக்கம் என்னவென்றால்:—

"நிலத்தின் சொந்தக்காரர்களாகவோ நிலத்தைத் ஆண்டு அனுபவிக்கிறவர்களாகவோ நிலத்தில் வேலை செய்பவர்களாகவோ நில விஷயத்தில் சம்பந்தப்பட்டிருக்கும் அனைவருக்குள்ளும் கூட்டுறவை உண்டு பண்ணுதல்; விவசாய சம்பந்தமாய் வேண்டிய பொருள்கள், உபகரணங்கள் முதலியவற்றை விலைக்கு வாங்கவும், மகசூலை விற்பனை செய்யவும், விவசாயத்திற்கு உபயோகமாகக் கடன் கொடுத்துதவவும், விவசாய பாங்கிகள் ஏற்படுத்தவும், இன்னம் விவசாயத்திற்கு அநுகூலமாயுள்ள இதர காரியங்களைச் செய்யவும், கருத்து வாய்ந்த விவசாயக் கூட்டுறவு சங்கங்களை ஏற்படுத்தல்."



அச்சங்க விஷயமான வேலையைச் செய்யும்போது, அயர்லாந்தில் இருப்பதுபோல, மதசம்பந்தமான விஷயத்தையும் ராஜ்ய சம்பந்தமான விஷயங்களையும் சேர்த்துக் கொள்ளாமல் விலக்கிவிடவேண்டும். மத சம்பந்தமாகவோ ராஜ்ய சம்பந்தமாகவோ உள்ள வேலையை மேற்படி சங்க வேலையுடன் சேர்த்து விடாமல் இருக்கவேண்டும். மேலும், அயர்லாந்தில் இருப்பதுபோல, அச்சங்கமானது வியாபாரஞ் செய்யாததாய் கூட்டுறவு முயற்சியின் லட்சியத்தைப்பிரசுரம் செய்வதாயும், அது சம்பந்தமான யோசனை சொல்லுவதாயும் இருத்தல் வேண்டும். அத்தகைய சங்கம் ஏற்படுமானால், கூட்டுறவு முயற்சியை பிரசுரப் படுவதற்காக ரிஜிஸ்ட்ராருக்கு உள்ள கடமைகள் குறையும். அயர்லாந்தில் இருக்கும் சங்கத்தைப்போல சென்னையில் அவ்வித சங்கம் ஏற்பட்டால், கீழே கண்ட காரியங்களை அச்சங்கம் செய்யலாகும்.

(1) கூட்டுறவு முயற்சி சம்பந்தமாய் பிரசுரம் செய்யவோ ஆலோசனை சொல்லவோ மெம்பர்களை அனுப்புதல்.

(2) புதிதாக ஏற்படவேண்டிய சங்கங்களுக்கு வழிகாட்டுவதாக சங்கவிதி முறைகளை நிர்மாணித்துத்தருதல்.

(3) கூட்டுறவு முயற்சி சம்பந்தமாய்த் தக்க மனிதர்களைக் கொண்டு பிரசங்கம் செய்வித்தல்.

(4) அச்சங்கத்தின் சார்பாக ஏற்படும் சங்கங்களுக்கு வேண்டிய விஷய விவரங்களை சேகரித்துக் கொடுத்தல்.

(5) கூட்டுறவு முயற்சி சம்பந்தமான நூல்களும் பத்திரிகைகளுமடங்கிய புஸ்தகசாலைகளை ஏற்படுத்தல்.

(6) பொது நன்மையை உத்தேசித்து பரஸ்பரம் சங்கங்களுக்குள் ஒரு மனதான காரியம் நடக்கும்படி பார்த்தல்.

(7) விவசாயக் கூட்டுறவு சம்பந்தமாய் துண்டுப் பத்திரிகைகளைப் பிரசுரஞ் செய்தல்.

(8) கூட்டுறவுச் சங்கங்களில் வேலை பார்ப்பவர்களுக்குப் போதனை முறையான வகுப்புகளை ஏற்படுத்திப் பயிற்சிசெய்வித்தல்.

மேலே சொல்லிவந்த மாதிரியில் சங்கத்தை ஏற்படுத்தும் விஷயமாய் பம்பாய் மாகாணம் முன்வந்திருக்கிறது. எப்படியென்றால், சமீபத்திலே அங்கே மாகாணக் கூட்டுறவு கான்பரன்ஸ் நடைபெற்ற பொழுது அத்தகைய சங்கமொன்று ஸ்தாபிக்கப்பட வேண்டுமென்று ஒரு தீர்மானம் அந்தக் கான்பரன்ஸில் அங்கீகாரமாய் விட்டது.

ஆகவே வங்காள மாகாணத்தினரும் சென்னை மாகாணத்தினரும் அவ்விஷயத்திலே பின்னுக்கு நிற்கக்கூடாது. அவ்விஷயத்தை இக்

கான்பரன்ஸில் சிரத்தையுடன் கவனித்துப் பார்த்து அத்தகையச்சங்கம் ஏற்படுவதற்குற்ற திட்டயோசனைகள் தயாரிக்கப்படுமென நான் எதிர் பார்க்கிறேன். அயர்லாந்தில் ஸர் ஹொரேஸ் பிளங்கெட் என்பவர் அவ் விஷயமாய் உழைத்ததுபோலவே இங்கே ஒருவர் உழைக்க முன்வர வேண்டும். அன்னாரொருவரை இம்மாகாணத்தில் கண்டுபிடித்தல் அவ் வளவு கஷ்டமல்ல.

---

# கூட்டுறவு முறையில் தானியங்களை விநியோகித்தல்.

தஞ்சை, மிஸ்டர் T. R. ஸ்ரீனிவாச ஐயங்கார் அவர்கள் B.A., L.T., M.R.A.S. எழுதிய வியாசத்தின் விவரம் என்னவென்றால்:—

இம்மாகாணத்திலே கூட்டுறவுச் சங்கங்களின் தொகை வெகுவாய் அதிகரித்திருக்கிறதென்பது உண்மைதான். சங்கத்தினரின் தொகையும் அவைகளின் மூலதனமும் அவைகளுக்கு மூலதனம் கிடைப்பதற்கேற்ற சாதனங்களும் அதிகமே ஆயினும் கூட்டுறவுமுயற்சியின் முழுப்பலனையும் அடைந்து சித்திபெறுவதற்கு இன்னும எவ்வளவோ தூரம் அம்முயற்சி பரவவேண்டும்; சங்கமெம்பர்களுக்கு நாணயம் கிடைப்பதிலேயே இயன்றளவும் முயற்சி செய்யப்பட்டுளது.

மாகுல், தொழிற்பொருள்கள் ஆகிய இவைகளைப் பெருக்கும் விஷயமாகவும் விநியோகஞ்செய்யும் விஷயமாகவும் இதுவரையில் அவ்வளவாக தீவிர முயற்சி காட்டபடவில்லை.

நகரங்களுக்கு அருகாமையிலுள்ள பிரதேசங்களிலே வசிப்போரில் பெரும்பாலரும் நிலபலமில்லாதவர்கள். அன்னாடம் வாழ்வுக்கு வேண்டிய முக்கியமானதானியங்களை எவ்வாறு அடைவதென்பதிலேயே அவர்கள் பெருங்கவலையுடன் இருக்கிறார்கள். அவர்கள் ஏழைகளாயினும் சரி, பணக்காரர்களாயினும்சரி, தரகர்கள் கடை நடுவில் புகுந்து அவர்களுடைய தனத்திற்கு ஏற்றவாறு தானியம் கிடைக்காதபடி செய்துவிடுகிறார்கள். அதிலும், நகரங்களுக்கு அருகாமையிலுள்ள பிரதேசங்களிலே வசிப்போரில் ஒருவர் எவ்வளவுக்கவ்வளவு ஏழையாயினும் கடனுக்கு சாமான்கள் வாங்கமுடியாமலும் இருக்கிறாரோ அவ்வளவுக்கவ்வளவு அவருடைய பணம் தரகருக்கு போய்விடுகிறது. கையில் இரண்டொரு காசு உடையவர்களும்வேண்டிய அளவு தானியத்தை வாங்கிவைத்துக் கொள்ளக்கூடிய சக்தியுள்ளவர்களும் தங்களுக்கு ஒரு வருஷத்திற்கு வேண்டிய தானியத்தை வாங்கி சேகரித்துக்கொள்ள முடிகிறது, ஆயினும் மிராசுதாரராயுள்ள ஒருவர் அறுவடையானதும் விலைசரசமாயிருக்

கும்பொழுது, நல்லதானியத்தை வேண்டுமளவு கொடுக்கக் கூடிய நண்பனாய் இல்லாதுபோனால், தானியத்தைவாங்கிச் சேகரித்துவைத்துக் கொள்வதில் அவர்களுக்கும் மிக்க கஷ்டங்கள் உண்டு.

மொத்தமாக ஒரு வருடத்திற்கு வேண்டிய அளவு தானியத்தை மிராசுதாரரிடமிருந்து சரசமான விலைக்குப்பெற முடியாமற்போனால், மண்டிக்குப்போய் தானியங்களை வாங்கி வைத்துக்கொள்ள வேண்டும். அல்லது சில்லரையாக விற்கும் வியாபாரியை யடைந்து மாதாமாதம் தனக்கு வேண்டிய அளவு தானியத்தை வாங்கிக்கொள்ளவேண்டும். இம்மாதிரி தானியங்களை வாங்குவதில் எவ்வளவோ கஷ்ட நஷ்டங்கள் உள. தானிய மண்டிக்குப்போனால் மனிதக்கழுகைப் போன்ற தரகன் கம்பளியில் வீற்றிருந்து தானியத்தை வாங்க வருவோரின்மீது கண்ணாயிருந்து தனது பையை நிரப்பிக்கொள்வதிலேயே திருஷ்டியாயிருக்கிறான். கழுகு தனது வல்லமை பொருந்திய கண்களினால் வெகுதூரம் ஊடுருவிப் பார்ப்பதுபோல் தரகனும் மண்டியில் வந்து நிற்கும் தானிய வியாபாரிகளின் தொகை எவ்வளவு? பஜார் பருவம் எப்படி? வாங்க வந்திருப்போரின் மனப்பான்மை எவ்வாறு? விற்கவந்திருப்போரின் தன்மை எப்படி என்ற பல அம்சங்களையும் தனது கூரிய திருஷ்டியால் சீர்தூக்கிப் பார்த்து, விலையை உயர்த்திவிட்டுத், தனது பையை நிரப்பிக் கொள்வதிலேயே கண்ணுங் கருத்துமாய் இருக்கிறான். கிராமாந்தரங்களிலிருந்து தானியங்களை விற்றுப்போவதற்காக மண்டிக்கு வந்திருப்பவர்களை நேரில்கண்டு தானியங்களை வாங்கிவிட முயன்றாலோ, தரகன் தனது சூழ்ச்சி வலையை விரிக்கிறான், அதாவது தானியத்தை விற்க வந்திருப்போனை யணுகி, அதிகவிலை தருவதாகச்சொல்லி அவனைத் தன் வசஞ் செய்துக்கொள்ளுகிறான். எனவே தானியத்தை விற்க வந்திருப்போனை யணுகி நேரில் சகாயமாய் வாங்கிவிடலாமென்று கருதுகிறவர்களோ தங்களுடைய எண்ணம் குலைந்து மனவருத்தத்துடன் வீடு திரும்புகின்றனர். ஆதலின் அம்முயற்சியில் மனமொடிந்துப்போய் சில்லரை வியாபாரியிடமிருந்து தானியத்தை வாங்குவதென்று தீர்மானித்தாலோ, இரண்டு தரகர்களுக்கு தரகு கொடுத்து வாங்கினால் எவ்வளவு விலை கொடுக்கவேண்டுமோ அவ்வளவு விலைக்கே தானியத்தை வாங்க வேண்டும்; இதைத்தவிர வேறு வழியில்லை. ஆயினும் இவ்வாறு வாங்குவதால் அதிகத் தொல்லையில்லை. தானியத்தை வீட்டுவாசலில் கொண்டு வந்து கொடுத்துவிட சில்லரை வியாபாரி சம்மதிக்கிறான்; ரொக்கம் கொடுத்து வாங்குவதைவிடச் சிறிது அதிகமாய் விலைகொடுக்க இசைந்தால், கடனுக்குக்கொடுக்கவும் சில்லரை வியாபாரி தயாராயிருக்கிறான். ஆகவே வேறு வழியில்லையென்று கடனுக்கே பலரும் தானியங்களை

வாங்குகின்றனர். மொத்தமாய் தானியம் வாங்கக்கூடிய அதிர்ஷ்டசாலிகளின் கதி இவ்வாறென்றால் பரம ஏழைகளாயுள்ளவர்களின் கதி என்னவென்று சொல்லவும் வேண்டுமோ?

வியாபார விஷயம் இவ்வாறு இருப்பதனால் கூட்டுறவு முறையில் தானியவகைகளை வினியோகஞ் செய்வதற்கு நல்ல சந்தர்ப்பமிருக்கிறது. எவ்வாறெனில், அந்நோக்கத்தைக்கொண்டு ஒரு சங்கத்தை ஏற்படுத்தலாம். அச்சங்கத்தின் அங்கத்தினருக்கு ஒரு வருஷகாலத்திற்கு, அல்லது ஒரு மாதகாலத்திற்கு எவ்வளவு தானியம் வேண்டுமென்பதைக் கவனித்து, சமீபத்தில் எங்கு சௌகரியமாகவும் சரசமாகவும் தானியம் கிடைக்குமென்பதை ஆராய்ந்துப் பார்த்து வாங்கி, மெம்பர்களுக்கு வினியோகஞ் செய்யலாம். தானியத்தில் பரிச்சயம் வாய்ந்த மெம்பரின் உதவியைக் கொண்டு, முதலில் தானியத்தை வாங்கவேண்டும். அப்பால் வியாபாரம் பெருத்து, தானியத்தை வாங்கி வினியோகஞ் செய்வதற்குப் பொறுப்புவாய்ந்த மானேஜரொருவரை நியமிக்கும்படியான நிலைமைவந்தால், அப்பொழுது சம்பளத்திற்கு ஒரு மானேஜரை நியமிக்கலாகும். ஒவ்வொரு மெம்பருக்கும் ஒரு மாதத்திற்கு எவ்வளவு தானியம் வேண்டுமோ அதன் கிரயத்திற்கு ஏற்றவாறு ஒரு தொகையை அவர்களிடமிருந்து சங்கத்தின் மூலதனமாக வசூலிக்கலாம். மெம்பர்களாய் இல்லாதவர்களை சங்கத்தின் ஸகாக்களாகச் சேர்த்துக்கொண்டு, குறிப்பிட்ட ஓரளவு தொகையை அவர்களிடமிருந்து வசூலிக்கலாம். அத்தொகையானது பரம ஏழைகளாலும் கொடுக்கப்படக்கூடிய தொகையாக இருத்தல் வேண்டும். தவிர அத்தொகையை எக்காரணங்கொண்டும் திருப்பி வாங்காதபடி திட்டப்படுத்திவிடவேண்டும்.

மிகவும் சௌகரியமான பருவகாலத்திலே தானியத்தை மொத்தமாக சந்தையிலிருந்து மானேஜரே வாங்கலாம். அல்லது, லாபத்தையே திருஷ்டியாகக் கொள்ளாமல், தானியத்தை மொத்தமாய் வாங்கிக்கொடுக்கும்படி ஒரு கண்டிராக்டரை திட்டப்படுத்தலாம். இனி தானியங்களை சுத்தஞ்செய்யவும், குத்தி செம்மை செய்யவும், ஒரு அரிசி யந்திரசாலையை திட்டப்படுத்தலாம். அல்லது ஆட்களைக்கொண்டு அந்த வேலைகளைச் செய்விக்கலாம்.

வினியோகஞ் செய்யுமுறை விரிவாகும்பொழுது, கூடுமானால் சங்கமே அரிசி யந்திரசாலை யொன்றை வைத்து நடத்தலாம். கூட்டுறவு முயற்சியில் அவ்வாறு அரிசி யந்திரசாலை யொன்று ஏற்பட்டு நடக்குமாயின் அது நலமாயிருக்கும். சங்கத்திலிருந்து மெம்பர்களுக்கும் ஸகாக்களுக்கும் வினியோகஞ் செய்யப்படும் தானியத்தின் விலையானது அவ்



வப்பொழுதுள்ள பஜார் பருவத்தைக் காட்டிலும் குறைந்திருக்கக்கூடாது. குறைந்திருக்குமாயின், தானியத்தை வாங்கி விற்கும் வியாபாரிகள் போட்டிபோட முன்வந்து விடுவார்கள். அப்படி போட்டி ஏற்பட்டுவிட்டால் கூட்டுறவு முயற்சியானது ஆரம்பத்திலேயே நசித்துப் போகும்படி நேரும். போட்டி, விரோதம், லாபம் என்ற வார்த்தைகளுக்குக் கூட்டுறவு முயற்சியில் இடங்கொடுத்துவிடக்கூடாது. ஆனால் தானியத்தை மொத்தத்தில் வாங்கி விற்பதிலே லாபம் இருக்க வேண்டியதுதான். சிக்கனமாக மேற்பார்வை பார்ப்பதாலும்., தானியங்களை ஜாக்கிரதையுடன் வாங்குவதாலும், கையாளுவதாலும் லாபம் கிடைக்கும். மூலதனத்தில் போட்டிருக்கும் பங்குத் தொகைக்கு லாபம் வேண்டுமென்ற ஆவலைப் போக்கிவிட வேண்டும். தானியம் உயர்தரமாய்க் கிடைக்க வேண்டுமென்பதையும், தானியங்களை மெம்பர்களின் வீட்டிற்குக் கொண்டுபோய்ச் சேர்ப்பதில் கூலிச்செலவு இல்லாமல் இருக்க வேண்டு மென்பதையும், சரியான காலத்தில் தகுந்த அளவுப்படி சரிவர தானியங் கிடைக்கவெண்டு மென்பதையும், விசேஷமாக கவனிக்கவேண்டும். சங்கங்களில் ஸகாக்களாக இருப்போருக்கு லாபத்தில் பங்கு இருக்கக்கூடாது.

சங்கத்தின் நிர்வாகிகளையும் மெம்பர்களையுமே எல்லாம் சார்ந்திருக்கின்றன. கூட்டுறவு முயற்சியோ வியாபாரமோ பிரபலமடைந்து பெருகுவதற்கும், நசித்துப்போய் விடுவதற்கும் அவர்களே காரணம். தக்க நாணயம் ஏற்பட்டு விடுமாயின், சங்கங்களுக்கு வெளியில் பணம் இலகுவில் கிடைக்கும். மெட்ராஸ் பாங்கி, இந்தியன் பாங்கி இவைகளிடமிருந்தும் பணவுதவி பெறலாகும். அத்தகைய கூட்டுறவு முயற்சியை சித்தி பெறச் செய்வதில் இடைநடுவே எவ்வளவோ இடையூறுகள் நேரினும் அவைகளை ஒரு பொருட்டாக மதிக்கக்கூடாது. வேண்டுமென்றால், வேரிலும் காய்க்குமென்பது பழமொழியல்லவா?

---

## சங்க காரியதரிசிகளுக்குப் பயிற்சி கொடுத்தல்.

தென் கன்னடத்திலுள்ள புத்தூரிலிருக்கும் தென் கன்னடம் ஸெண்ட்ரல் கேவாபரேடிவ் பாங்கியின் உதவித்தலைவரான, மிஸ்டர் M. சிவராவ் எழுதிய வியாசத்தின் ஸாராம்சம் என்னவென்றால்:—

மைசூர் கூட்டுறவு கான்பரஸ் கூடியபொழுது, இந்தியர் ஊழிய சங்கத்தைசேர்ந்த, மிஸ்டர் N.M. ஜோஷி என்பவர், கூட்டுறவுச் சங்கங்களின் காரியதரிசிகளுக்குப் பயிற்சி கொடுக்க வேண்டுமென்ற விஷயமாய் ஒரு

வியாசம் வாசித்தார். அவருடைய யோசனையின் வண்ணம், காரியதரிசிகளைப் பயிற்சி செய்விப்பதற்காக வருஷந்தோறும் ஆயிரக்கணக்கான ரூபாய் செலவு செய்யவேண்டும். ஒவ்வொரு வருஷத்திலும் குறிப்பிட்ட ஒரு காலத்திலே அவர்களைப் பயிற்சி செய்விப்பதற்கென்று ஒரு வகுப்பை ஏற்படுத்தவேண்டும். தற்சமயம் சங்கங்களின் காரியதரிசிகளாய் இருப்போர் அவ்வகுப்பில் சேர்ந்து பயிற்சிபெறப் போவதற்கும் வருவதறகும் உள்ள செலவை அவர்களுக்குக் கொடுக்கவேண்டும்; வகுப்பில் சேர்ந்து வாசிக்குங் காலத்திலே அவர்களுக்கு நேரும் சாப்பாட்டுச் செலவையும் கொடுக்கவேண்டும். சுமார் 10 நாள் காலம் அவர்களுக்குப் பயிற்சி கொடுக்கவேண்டும். உத்தியோகஸ்தர்களும் உத்தியோகஸ்தரல்லாதவர்களும் அடங்கிய ஒரு சபையார் அவ்விஷயத்தை மேற்பார்வை பார்த்து வரவேண்டும். ரிஜிஸ்ட்ரார் அச்சபைக்குத் தலைவராய் இருத்தல் வேண்டும்; வகுப்பில் சேர்ந்து பயிற்சி பெற்றதும், அவர்களை பரீட்சை செய்ய வேண்டும். அப்பரீட்சையை ஜூனியர் பரீட்சை, ஸீனியர் பரீட்சை என்று பாகுபடுத்தி, ஜூனியர் பரீட்சையில் தேறுவோருக்கு மாதம் 5 ரூபாய் வீதமும், ஸீனியர் பரீட்சையில் தேறுவோருக்கு மாதம் 10 ரூபாய் வீதமும் சங்கங்களிலிருந்து ஊதியம் கொடுத்து வரவேண்டும். கூட்டுறவு முயற்சியின் அம்சங்களிலும் காரியங்களிலும் நல்ல பயிற்சியும் ஞானமும் பெற்றவர்களே காரியதரிசிகளாய் இருக்கவேண்டுமென்பதும், அப்படியானால், சங்கங்கள் சரிவர நடை பெறுமென்பதும், மிஸ்டர் ஜோஷியின் கருத்தாகும். அந்த யோசனை மிகவும் சிலாகிக்கத்தக்கதே ஆயினும் அந்த யோசனையின்படி நடப்பதாயின், அதில் கஷ்டங்களும் ஆட்சேபங்களும் ஏற்படும். எப்படி ஏற்படுமென்பதைப் பற்றி கவனிப்போம்.

சங்கங்களிலே காரியதரிசி பதவியை வகிப்போர் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். ஆகவே காரியதரிசி வேலையை ஒருவர் நெடுக நிரந்தரமாய் வகிப்பதென்ற நிச்சயமில்லை. அப்படியிருக்க, ஏராளமான செலவில் காரியதரிசிகளைப் பயிற்சிக்கு அனுப்புவது உசிதமாகுமா? காரியதரிசி தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்ற விதியின் கதி என்ன? காரியதரிசி வேலைக்காக ஒருவர் பயிற்சிபெற்று வந்திருக்கும்பொழுது, அவரைத் தானே மீண்டும் மீண்டும் தேர்ந்தெடுக்க வேண்டும். அவ்விதமாக சாசுவதமாய் ஒருவரே காரியதரிசியா யிருக்கும்பொழுதும், அவர் பயிற்சி பெற்ற நிபுணராய் இருக்கும்பொழுதும், தாம் சொல்லுவதே சட்டமாயிருக்க வேண்டுமென அவர் பிடிவாதி புருஷராக ஆய்விடக்கூடும். எதற்கும் நிபுணரொருவர் வேண்டியது தான். என்றாலும் அவர்களைவைத்து நிர்வகிப்பது பெருங் கஷ்டமாய் முடிந்துவிடும். கிராமத்திலுள்ள சங்கத்திற்கு அத்தகைய காரியதரிசி நியமிக்கப்பட்டு விடுவாராயின், இதர மெம்



பர்களுக்கு சுதந்தரம் இல்லாமற் போய்விடும்; அச்சங்கம் அவர் ஒருவராலேயே நடத்தப்படுஞ் சங்கமாக ஆய்விடும். இவ்வாறு ஆய்விடுவதற்கு நாம் இடங்கொடுக்கவே கூடாது. சங்கங்களின் காரியதரிசிகள் கௌரவத்திற்காக வேலை பார்க்க வேண்டியிருக்க, அவர்களுக்கு ஊதியம் கொடுக்க வேண்டுமென மிஸ்டர் ஜோஷி சொல்வது உசிதமாயில்லை. மாதம் 5 அல்லது 10 ரூபாய் ஊதியம் கொடுப்பதென்று ஏற்பட்டுவிடின், தன்னுடைய சம்பளம் உயரவேண்டுமென அவர் சங்கத்தின் அங்கத்தினரை நத்திவரும்படி நேர்ந்துவிடும். தற்சமயம் தேசத்திலே கட்சிப் பிரதி கட்சிகளும் சச்சரவுகளும் போட்டிகளும் இருப்பதனால், இத்தேசத்தில் கூட்டுறவு என்பது இருந்திருக்கவில்லை யென்று சொல்வதற்கில்லை. கூட்டுறவு முயற்சியின் லட்சியங்களை சாமானிய அறிவுள்ளவனும் சுளுவில் உணர்ந்து கொண்டு விடமுடியும். ஆகவே, அபரிமிதமான செலவில் காரியதரிசிகள் பயிற்சி செய்யப்படவேண்டுமென்று எனக்குத் தோன்றவில்லை.

மங்களூரிலுள்ள போதனாமுறைப் பாடசாலையிலே பயிற்சி பெறும் ஆசிரியர்களுக்கு கூட்டுறவு முயற்சி போதிக்கப்பட்டு வருகிறது. சுமார் நூறு ஆசிரியர்கள் அப்பாடசாலையில் பயிற்சி பெற்று வருகிறார்கள். அப்பாடசாலையில் உதவி போதகராயிருக்கும் மிஸ்டர் மங்கேசராவ் B.A., L.T. அவர்களுக்கு கூட்டுறவு முயற்சியில் நல்ல ஞானமுண்டு. அவ்விஷயத்தில் அவர் நிபுணர்; தென் கன்னடத்திலே அம்முயற்சி பிரபலமடைய வேண்டுமென அவர் மிக்க ஊக்கம் காட்டிவருகிறார். அவ்வப்போது அந்த ஆசிரியர்கள் நல்ல கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கூட்டிக்கொண்டுபோகப் பட்டு, கூட்டுறவு முயற்சி நடைபெறும் விஷயத்தில் நிதர்சனமான ஞானம் ஊட்டப்படுகிறார்கள். ஆதலின், கூட்டுறவு முயற்சியில் பழக்குவதற்கென்று விசேஷமான திரவியம் செலவு செய்யப்படாமலேயே அப்பாடசாலையிலிருந்து பலர் பயிற்சிபெற்று வெளிக்கிளம்புவார்கள். அவ்வாறு வெளிக்கிளம்புவோர் ஆங்காங்கே கூட்டுறவு முயற்சியை பிரசித்திப்படுத்தி வருவார்கள். அப்பாடசாலையின் போதகராகிய மிஸ்டர் பி. மங்கேசராவின் யோசனையின்மேல்தான் ஆசிரியர்களுக்கு மேற்கண்டவாறு கூட்டுறவு முயற்சி விஷயம் போதிக்கப்பட்டு வருகிறது. அவ்வாறு போதித்து வருவதால், கூட்டுறவு முயற்சி நன்கு பரவமுடியுமென நான் கருதுகிறேன்.

## உற்பத்திச் சங்கத்தின் கஷ்டங்கள்.

இந்தியன் பாங்கியைச் சேர்ந்த ம-ா-ா-ஸ்ரீ, V. சந்திரசேகர ஐயரவர்கள் B.A. எழுதிய வியாசத்தின் ஸாராம்சம் என்னவென்றால் :—

மாம்பலத்திலுள்ள கூட்டுறவுச்சங்கம் 1911-ம் வருஷத்தில் ஏற்பட்டது. அங்கே யந்திரசாலைகளை அமைப்பதும், கூட்டுறவு முறையில் தொழில் முயற்சியைச்செய்வதும், அதன் நோக்கங்களில் ஒன்றாகும். திருவல்லிக்கேணி விற்பனைச் சங்கத்தில் நெருங்கியசம்பந்தம் வாய்ந்தவர்களே அந்த மாம்பலசங்கத்தை ஸ்தாபித்தனர். கலப்படமில்லாத சுத்தமான நல்லெண்ணெயை திருவல்லிக்கேணி சங்கத்திற்கு ஸப்ளைசெய்து வருவதென்றே மாம்பலசங்கத்தின் முக்கிய மெம்பர்கள் கருதினர்போலும். அவ்வாறே மாம்பலத்துக்குச்சென்று காலிமனைகளை வாங்கினர், சங்கத்தின் தஸ்தாவேஜ்களில் காணும் வண்ணம் 100-க்கு 18 ரூபாய் வீதம் லாபம் கிடைக்குமென்று அவர்கள் எதிர்பார்த்தனர். மூலதனத்தின் பங்குத்தொகைக்கு நூற்றுக்கு $6\frac{1}{4}$ ரூபாய் வீதம் வட்டி கட்டிக்கொடுப்பதாகவும் மெம்பர்களுக்கு வாக்களித்தனர்; கொஞ்சகாலம் அச்சங்கத்தின் வேலை சரிவர நடந்துவந்தது. அச்சங்கத்தினரால் தயாரிக்கப்படும் நல்லெண்ணெயை திருவல்லிக்கேணி சங்கத்தினர் வாங்கிக்கொண்டு ஆதரவளித்து வந்தவரையில், எல்லாம் சரியாக இருந்து வந்தது. ஆனால் எண்ணெயை வாங்கிக்கொண்டு ஆதரிப்பதில் திருவல்லிக்கேணி சங்கத்தினர் சோர்ந்தவுடனே, மாம்பல சங்கத்திற்குக் காலம் விபரீதமாய்விட்டது. பஜாரில் கொண்டுபோய் எண்ணெயை விலைக்கு விற்றதில், மாம்பல சங்கத்தினருக்கு நஷ்டம் உண்டாகத் தலைப்பட்டுவிட்டதைக் கவனிக்கவேண்டும். தவிர நிதானமற்றவர்களின் மேற்பார்வைக்கு அச்சங்கம் அடங்கியிருந்ததையும் சொல்லவேண்டும். ஆகவே, உற்பத்திச் சங்கம் சரிவர நடக்கவேண்டுமாயின் :—

(1) சங்கத்தின் மெம்பர்கள் அனைவரும் உண்மையிலே கூட்டுறவு முயற்சியில் சிரத்தைகொண்டவர்களாய் இருக்கவேண்டும்; கூட்டுறவு முயற்சியில் கருத்தாயில்லாமல் லாபத்திலேயே கண்ணாயிருப்பவர் கூடாது; பொது நன்மைக்காகப் பரித்தியாகம் செய்யக்கூடியவர்களே முக்கியம்.

(2) உற்பத்திச் சங்கங்களுக்கு தாராளமாய்ப் பணவுதவி கிடைக்கவேண்டும். சுயலாபத்தையே பெரிதாக மதித்தலாகாது. இச்சங்கத்தின் பொருளை வாங்கிவிற்கும் சங்கமானது கிரமப்படி எல்லாவிதத்திலும் உதவிசெய்துவராதுபோனால் பயனில்லை.

(3) கூட்டுறவு முயற்சியில் தீவிரமும் சிரத்தையும் உள்ளவர்களே



சங்கநிர்வாகிகளாக இருக்கவேண்டும். நிர்வாக பதவிகளை வகிக்க வேண்டுமென்ற கருத்துடையவர்களால் எந்த முயற்சிக்கும் ஆபத்துநேரும்.

(4) இதர இடங்களிலிருந்து போட்டியென்பது ஏற்படாமல் பாதுகாத்துக்கொள்ளவேண்டும்; பண்டத்தைத்தயாரிக்கும் சங்கத்திலிருந்து பண்டத்தை விலைக்கு வாங்கும் சங்கமோ அச்சங்கத்தின் நன்மையையே முக்கியமாக கவனித்து அதற்கு ஆதரவளித்துவரவேண்டும். உயர்தரமான சாமான்கள் கிடைப்பதே கூட்டுறவு முயற்சியின் லட்சியமாகுமென்பது நமது கருத்து. சாமான்களை விலைக்குவாங்கி ஆதரிக்கும் சங்கமானது மலிவாக சாமான்கள் எங்கே கிடைக்கும் என்பதில் அவ்வளவு கருத்தாய் இருத்தலாகாது. சாமான்களிற் கலப்படஞ்செய்து விற்பதே தொழிலாயிருக்குமிடத்தில் உற்பத்திச்சங்கம் விலையில் போட்டிபோட முடியாது, திருவல்லிக்கேணி சங்கத்தினர் போட்டிக்கு இடங்கொடுத்துவிட்டதினாலேயே, மாம்பலச் சங்கத்திற்கு நஷ்டம் ஏற்படலாயிற்று.

சாமான்களை வாங்கி ஆதரிப்பதற்காக உள்ள சங்கத்தினர், உண்மையில் கூட்டுறவு முயற்சியிலே சிரத்தை கொண்டிருப்பவர்கள், ஆகில் இவர்கள் மாம்பல சங்கத்தைப்போன்ற சங்கங்களைக் கைதூக்கி விடமுடியும்.

---

## கூட்டுறவுச் சங்கங்களும் அவைகளின் மேற்பார்வையும்.

ம-ா-ா-ஸ்ரீ, மதுரை ரேய் ஸாஹிப் K. ராமசுவாமி ஐயரவர்கள் B.A., B.L. எழுதிய வியாசம் என்னவென்றால்:—

பிரைமரி சொஸைடிகள் அல்லது சங்கங்கள் தக்க மேற்பார்வையில் நடத்தப்பட வேண்டுமென்பது முக்கியமான விஷயம். அதிகாரிகள் அவைகளை மேற்பார்வை பார்ப்பதற்குப் பதிலாக லோகல் யூனியன்களே அவைகளின் மேற்பார்வையை நடத்திவரவேண்டுமென்பதே சித்தாந்தம்; இந்த சித்தாந்தத்தை ஆட்சேபித்துப் பேசுவதற்கில்லை. ஆயினும் அதை அனுஷ்டானத்துக்குக் கொண்டுவருவதில் பல கஷ்டங்கள் ஏற்படும். அவ்விஷயமாய் தீர்மானமான திட்டமொன்று ஏற்படுமுன் அவ்விஷயத்தின் பற்பல அம்சங்களையும் ஆராய்ந்து பார்த்தால்தான் என்னென்ன கஷ்டங்கள் ஏற்படுமென்று உணர்ந்துக்கொண்டு, அக்கஷ்டங்கள் நேராதிருப்பதற்குற்ற வழியை மேற்கொள்ள முடியும்.

ஒவ்வொரு பிரைமரி ஸொஸைடி அல்லது சங்கமும் அதன் அருகாமையிலுள்ள லோகல் யூனியனுடனாவது இதர யூனியனுடனாவது ஒன்றுபட்டதாக இருக்க வேண்டுமென்று பலர் கருதுகின்றனர். இந்த ஏற்பாடு எங்கும் அனுஷ்டிக்கப்பட முடியாது. பல இடங்களிலே குறிப்

பிட்ட ஒரு பிரதேசத்துக்குள் சொஸைடிகள் ஏற்பட்டிருக்கின்றன. இவ்வாறான இடங்களிலே லோகல் யூனியனை ஏற்படுத்தல் எளிதாய் இருந்திருக்கிறது.

சில இடங்களிலோ திக்குக்கு ஒரு சொஸைடி வீதம் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே அவ்விடங்களிலுள்ள சங்கங்கள் லோகல்யூனியனுடன் ஒன்று பட்டிருத்தல் முடியாத காரியமாகும். ஆதலின் திக்குக்கு ஒரு சொஸைடியாக இல்லாமல் ஆங்காங்கே பல சொஸைடிகள் ஏற்படும் வரையில், அந்த சொஸைடியானது வெகுதூரத்திலுள்ள லோகல் யூனியனுடன் ஒன்றுபடவேண்டும். இல்லையேல் காத்திருக்கவேண்டும்.

அமைப்பிலும் நிர்வாகத்திலும் நகரபாங்கியானது கிராமபாங்கியை விடப் பலவிதத்தில் மாறுபட்டிருக்கிறது. அந்த நகரபாங்கிகளில் பலவோ லோகல் யூனியனுடன் ஒன்றுபட இஷ்டப்படவில்லை. ஏதேனும் இரண்டொரு நகரபாங்கிகள் லோகல் யூனியனுடன் ஒன்றுபட்டிருந்தால் அவைகளோ கிராமச் சங்கங்களுக்கு மேல் மிக்க ஆதிக்கத்தையடையும்.

இனி லோகல் யூனியன்களுக்கும் ஜில்லா யூனியன்களுக்கும் பரஸ்பரம் சம்பந்தா சம்பந்தம் எப்படி யிருக்கவேண்டுமென்ற விஷயத்தை ஆலோசித்துப் பார்க்கவேண்டும். சில ஜில்லாக்களிலே ஸென்ட்ரல் பாங்கிகள் இருக்கின்றன. அவைகளின் பங்குக்காரர்களோ தனித்தனி நபர்களாய் இருக்கின்றனர். சொஸைடிகளின் மேற்பார்வையை ஏற்றுக்கொள்ள அவைகளுக்கு இஷ்டமில்லாதிருப்பதோடு, சொஸைடிகளுக்கும் அவைகளுக்குள்ள நன்மைகள் பரஸ்பரம் முட்டுப்படுவதால், சொஸைடிகளின் மேற்பார்வையை வகிக்க யோக்கியதை யற்றவைகளாகவும் இருக்கின்றன. இத்தகைய ஜில்லாக்களிலே மேற்பார்வை பார்ப்பதற்காக ஜில்லா யூனியன்களை ஏற்படுத்தலாமென்று சிலர் சொல்லுகிறார்கள். ஆகவே ஒரு ஜில்லாவில் மூன்றுவிதமான வெவ்வேறு சங்கங்கள் ஏற்படும். அவைகள் ஒவ்வொன்றுக்குமுள்ள பரஸ்பர சம்பந்தம் ஒழுங்குபடுத்தப் படவேண்டும். ஆனால் தனித்தனி நபர்களடங்கிய ஸென்ட்ரல் பாங்கியில் சொஸைடிகளையும் பங்கெடுத்துக்கொள்ளும்படி செய்யவேண்டுமென்று யோசனை யிருப்பதால், ஒரு ஜில்லாவிலே மூன்றுவிதமான வெவ்வேறு சங்கங்கள் இல்லாமற்போய்விடும். அப்படி ஆய்விடும்பொழுது, ஒவ்வொரு ஜில்லாவிலும் மேற்பார்வை பார்ப்பதற்கென்று தனியே ஒருவித சங்கமும், சொஸைடிகளுக்குப் பணஉதவி செய்வதற்காகத் தனியே ஒரு சங்கமும் இருக்கவேண்டுமா? அல்லது ஜில்லா பாங்கிகளே மேற்பார்வை பார்க்கும் வேலையையும் பணவுதவி செய்யும் பொறுப்பையும் ஏற்றுக்கொள்ளும்படி செய்துவிடக் கூடுமா? என்ற விஷயத்தை யோசிக்கவேண்டும் இது நிற்க, ஜில்லா யூனியன்கள், லோகல்



யூனியன்கள் ஆகிய இவைகள் பிரைமரி சொஸைடிகளை மேற்பார்வை பார்க்கும் விஷயமாய் ஒவ்வொன்றுக்கும் முறையே இருக்கவேண்டிய வேலை எப்படி என்பதைப்பற்றி ஆராய்ந்து பார்க்கவேண்டும். ரெஜிஸ்டிரார், அஸிஸ்டெண்டு ரெஜிஸ்டிரார், பாங்கிகளின் காரியதரிசிகள் ஆகிய இவர்கள் மேற்படி விஷயத்தைக் குறித்து இவ்வருஷ ஆரம்பத்தில் கலந்துபேசினார்கள். அவ்விஷயத்திலே அபிப்பிராய பேதங்கள் ஏற்பட்டன. ஆகவே முடிவான தீர்மானம் ஏற்படவில்லை.

1. குறிப்பிட்ட ஒரு பிரதேசத்தில் இருக்கும் பிரைமரி சொஸைடிகள் ஒன்றாய்க்கூடி ஒரு யூனியனாக ஏற்பட்டுவிடும்பொழுது, அவைகளின் காரியத்தில் இதரர் தலையிடாமல், அவைகளே தங்களது விஷயத்தை கவனித்துக்கொள்ளும்படி அவைகளை விட்டுவிடுதல் நலமாகும். சுதந்தரமாக அவைகள் தங்களது காரியங்களை நடத்திக்கொண்டு வரும்பொழுது, அவைகளில் இதரர் தலையிடுவதாயின், அவைகளுக்குள்ள பொறுப்பு தளர்ந்துவிடும். யூனியனாகச் சேர்ந்திருப்பதின் பலனும் கெட்டுப்போம்: பெரும்பாலான சொஸைடிகளும் அவைகளின் மெம்பர்களும் தங்களது கடமையை நன்கு உணர்ந்து கொண்டு நடக்காமல் இருந்தால் அப்பொழுது ரெஜிஸ்டிராரோ ஜில்லா பாங்கிகளோ தலையிடலாகும்.

2. பண விஷயமான பொறுப்பு ஜில்லா பாங்கிகளையே சார்ந்திருப்பதால், அவைகளின் பணத்திற்கு பங்கம் நேரிடுமென்று தோன்றும்பொழுது, காரியங்களை சரிப்படுத்த அவைகளுக்கு அதிகாரம் இருக்க வேண்டும். ஒரு யூனியனுடைய நிர்வாகம் சீர்கெட்டிருக்குமாயின், பிரைமரி சொஸைடிகளின் காரியம் கெட்டுப்போம். அதனால், ஜில்லா பாங்கியின் பணத்துக்குப் பங்கம் நேரலாம். அப்பொழுது அவ்விஷயத்தில் ஜில்லா பாங்கி தலையிட அதிகாரம் பெற்றிருக்க வேண்டும்.

3. ஒவ்வொரு சொஸைடி அல்லது சங்கமும் திறமையுடன் நடக்கும்படி பார்ப்பதே லோகல் யூனியனின் பிரதம காரியமாகும். சரிவர நடைபெறும் வண்ணம் சொஸைடிகளை அவ்வப்போது பார்வையிட்டு அவைகளின் நிலைமையை உயர்த்தவேண்டும். பிரைமரி சொஸைடிகளுக்கு கடன்கொடுக்கும்படி லோகல் யூனியன் சிபார்சுசெய்வதோடு கடனில் பாக்கிவிழும் தொகையையும் வட்டியையும் வசூல் செய்யவும் வேண்டும். இக்காரியங்கள் எல்லாம் சரிவர நடைபெறின், ஜில்லா யூனியன் தலையிடுவதற்கில்லை. ஒரு லோகல் யூனியனானது மேற்சொல்லிய தனது காரியங்களை சரிவர நடத்தத்தவறினால், ஜில்லா யூனியன் அவ்விஷயத்தில் கட்டாயம் தலையிடவேண்டும்.

4. லோகல் யூனின்களும் ஜில்லா யூனியன்களும் முறையே தங்கள்தங்களது கடமைகளை சரிவரச் செய்துவரின், அவைகளின் விஷ

யத்தில்தலையிட அஸிஸ்டெண்டு ரெஜிஸ்டிராருக்கு அவசியம் ஏற்படாது. ஆனால் அவ்விருவகை யூனியன்களுக்கும் தகராறு ஏற்படின், அப்பொழுது அவரது உதவி நாடப்படும். அவ்விருவகை யூனியன்களில் ஏதேனுமொன்று அவரது யோசனையின்படி நடக்காமற்போனால், அவர் விசாரணை செய்து, தவறுதலாயிருக்கும் சங்கத்தைக் கலைத்துவிடும்படி சிபார்சு செய்யலாம்.

சில இடங்களிலே யூனியன்களின் விஷயமாய்ச் செலுத்தப்படும் அதிகாரத்தை அஸிஸ்டெண்டு ரெஜிஸ்டிராரே வகிக்கிறார். பிரைமரி ஸொஸைடிகளை மேற்பார்வை பார்ப்பதற்காக ஸூபர்வைஸர் என்ற ஒருவரை அந்தயூனியன் நியமிப்பதென்பது பெயர்மாத்திரமே யாகும். ரெஜிஸ்டிராரே அந்த ஸூபர்வைஸரை நியமிக்கிறார். ஆகவே ஸூபர்வைஸர்களோ அஸிஸ்டெண்டு ரெஜிஸ்டிராரின் அதிகாரத்துக்கு உட்பட்டவர்களாய் இருக்கிறார்கள்.

ஜில்லா பாங்கிக்கும் லோகல் யூனியன்களுக்கும் உள்ள பரஸ்பர சம்பந்தா சம்பந்த விஷயங்களில் கௌரவ அஸிஸ்டெண்டு ரெஜிஸ்டிரார் தலையிட வேண்டுமென்பது விரும்பத்தக்கதல்ல. ஜில்லா யூனியன்களும் லோகல் யூனியன்களும் தங்கள் தங்கள் வேலைகளை சரிவர நடத்திவந்து ஒற்றுமையுடன் இருக்குமாயின், அஸிஸ்டெண்டு ரெஜிஸ்டிரார் தலையிடும் படியான அவசியம் ஏற்படாது.

மேலே சொல்லப்பட்டுவந்த விஷயங்கள் மிகவும் முக்கியமானவை. ஆகவே அவ்விஷயங்களை யோசிப்பதற்காக ஒரு சிறிய கமிட்டி ஏற்படவேண்டும். லோகல் யூனியன்கள், ஜில்லா யூனியன்கள், பிரபல நகர பாங்கிகள், இதர சங்கங்கள் ஆகிய இவைகளின் பிரதிநிதிகளைக் கொண்டு அக்கமிட்டி அமைக்கப்பட வேண்டும். அக்கமிட்டியார் கவனிக்க வேண்டிய விஷயங்களாவன:—

(1) மிகவும் சௌகரியமாய் இருக்கும் வண்ணம், ஒரு லோகல் யூனியனுக்குள் அடங்கியிருக்க வேண்டிய பிரைமரி ஸொஸைடிகள் எவ்வளவு? அதன் மொத்த மூலதனம் எவ்வளவாக இருக்க வேண்டும்?

(2) விவசாயவிஷயமாய் நாணயத்தைத்தேடிக்கொடுக்காமல், இதரகாரியங்களைக் கவனிக்கும் விவசாய சங்கங்களையே பெரும்பாலும் தன்னுட்கொண்ட ஒரு லோகல் யூனியனுடன் நகரபாங்கிகள் போன்ற பிரைமரி ஸொஸைடிகளை ஒன்றுபடுத்திவிடுதல் நலமா? ஒவ்வொரு விதமான சங்கங்களுக்கும் பிரத்தியேகமான யூனியன்களை ஏற்படுத்துவது நலமா?

(3) லோகல் யூனியனானது ஜில்லாயூனியனுக்கு உட்பட்டிருக்கவேண்டுமா? அல்லது அவ்விரு யூனியன்களும் ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாமல் சுயேச்சையாக இருக்கவேண்டுமா? எப்படியானாலும், அவ்விருவகை யூனியன்களுக்கும் முறையே வேலைவிவரம் எப்படியிருக்கவேண்டும்? அவைகளுக்குள்ள பரஸ்பர சம்பந்தத்தை ஒழுங்குபடுத்துவதெப்படி?



(4) ஒவ்வொரு லோகல் யூனியனின் எல்லா மெம்பர்களும் அடங்கியிருக்கும் ஜில்லா பாங்கிங் யூனியன் இருக்கும் இடங்களிலே சங்கங்களின் மேற்பார்வையை வகிப்பதற்காகப் பிரத்தியேகமான ஜில்லாயூனியன் ஏற்பட வேண்டுமா?

(5) மேற்பார்வை வேலையை நடத்தும் விஷயமாய் அஸிஸ்டெண்டு ரெஜிஸ்டிராரின் உதவியை எவ்வளவுதூரம் நாடவேண்டும்?

(6) ஸூபர்வைஸர்கள் என்போரை நியமித்து அவர்களின்மீது அதிகாரஞ் செலுத்துவதற்கு அஸிஸ்டெண்டு ரெஜிஸ்டிராருக்கு உரிமை இருப்பதா? லோகல் யூனியன், அல்லது ஜில்லா யூனியன் ஆகிய இரண்டில் ஒன்றுக்கு உரிமை இருப்பதா?

(7) கூட்டுறவு முயற்சியின் தற்சமய நிலைமையைக் கவனிக்குமளவில், கௌரவ அஸிஸ்டெண்டு ரெஜிஸ்டிரார்களை நியமிக்க வேண்டியது அவசியமா? அல்லது உசிதமா?

(8) முதல் தணிக்கைப் பரிசோதனையை லோகல் யூனியன், ஜில்லா யூனியன் ஆகிய இரண்டில் எந்த யூனியன் நடத்தவேண்டும்?

(9) சுயேச்சையாயுள்ள பிரைமரி ஸொஸைடிகள், யூனியன்கள், ஸெண்டிரல் பாங்கிகள் ஆகிய இவைகளின் தணிக்கையை நடத்த இம்மாகாண முழுவதிற்கும் ஆடிட் யூனியன் ஒன்றை ஏற்படுத்தல் நலமா? அல்லது ரெஜிஸ்டிராருடைய அங்கீகாரத்துக்கு உட்பட்டு ஒவ்வொருசங்கமும் தானே தனது ஆடிட்டரை நியமித்துக் கொள்வதா?

(10) மேற்பார்வை பார்ப்பதற்காக வசூலிக்கப்பட்டு ஜில்லா யூனியனிடமிருக்கும் நிதித்தொகையை லோகல் யூனியன், ஜில்லா யூனியன் ஆகிய இரண்டும் தாமே தமது ஸூபர்வைஸர்களை நியமித்துக்கொள்ளும் பொழுது அவைகளுக்குள் பகிர்ந்து கொள்வதெப்படி?

---

## தொழில் முறையில் கூட்டுறவு.

கோயமுத்தூர் ம-ள-ள-ஸ்ரீ C. N. கிருஷ்ணசுவாமி ஐயரவர்கள் M. A., L. T., எழுதிய வியாசத்தின் ஸாராம்சம் என்னவென்றால்:—

ஜனங்களுக்குச் சுலபமாய் நாணயம் தேடிக்கொடுப்பது ஒருபுறமிருக்க, தொழில் முறையில் கூட்டுறவு முயற்சியைப் பிரபல்மடையச் செய்தல் மிகவும் நலமாகும். தொழில் முறையில் கூட்டுறவை யுண்டுபண்ண இதுவரையில் என்ன முயற்சி செய்யப்பட்டிருக்கிறதென்று பார்ப்போம். நெசவுத் தொழிலாளிகளின் நன்மையை யனுசரித்து

இரண்டொரு கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்பட்டிருக்தல் உண்மைதான். ஆயினும், அத்தகைய சங்கங்களில் இன்றளவும் சம்பந்தப்பட்டிருப்பவர்களோ தொழில்முறையில் கூட்டுறவுமுயற்சி யானது கூடிய சீக்கிரம் பலன் கொடுத்துவிடு மென்று சொல்லுகின்றனர். அச்சொல் எப்படியாயினும் ஒருவிஷயம் நிச்சயம். நெசவுக்காரர்களால் தயாரிக்கப்படும் துணிமணிகள் அவர்களின் கையைவிட்டகன்றதும், அத்துணிமணிகளை உடனே விற்றுப் பணமாக்கும் அம்சந்தான் கஷ்டமாயிருக்கிறது. ஆயினும் நான் சொல்லப்போகும் யோசனைகளில் அத்தகைய கஷ்டமிராது.

முதலாவதாக என்க்குத்தோன்றும் யோசனை என்னவென்றால், செங்கல் அறுப்போரின் நன்மையை அநுசரித்து செங்கல் அறுப்போருக்கென்று தனியே கூட்டுறவுச்சங்கத்தை ஏற்படுத்தலா மென்பதாகும். கட்டடம் கட்டுவதற்குரிய சாமான்களின் விலை பெரிதும் ஏறிவிட்டதென்ற கூக்குரல் இருக்கிறது. கூக்குரல் இருப்பினும் பரிகாரந் தான் தேடப்படவில்லை. கட்டடம் கட்டும் தொழிலில் சிரத்தை வாய்ந்த சங்கங்கள் கட்டடம் கட்டுவதற்குரிய சாமான்களை மொத்தத்தில் வாங்கி மெம்பர்களுக்கு வினியோகம் செய்யலாம். வியாபார தோரணையிலேயே சங்கங்கள் தங்களது காரியங்களை நடத்தவேண்டுமாயினும், அச்சங்கங்கள் தங்களது மெம்பர்களின் நன்மைகளை உற்று நோக்கவேண்டும்.

கட்டடச்சங்கம் ஏற்கெனவே யிருக்க, செங்கல் அறுப்போரின் சங்கம் ஏற்படின், ஒன்றுக்கொன்று ஆதரவாய் இருக்கும். செங்கல் அறுப்போர் பலர் என்னை வந்து கண்டுகொண்டு, செங்கல் அறுப்போரின் சங்கமென ஒரு சங்கத்தை ஏற்படுத்தவேண்டுமென்று சொல்லினர். ஆகவே, அம்மாதிரி செங்கல் அறுப்போருக்குள் ஒருவித தீவிரம் இருக்கையில், கூட்டுறவுச் சங்கங்களின் இலாகா அதிகாரிகள் அவ்விஷயத்தில் கவனஞ்செலுத்தி, அவ்விதமே சங்கங்களை ஏற்படுத்த முயலலாம். அத்தகைய சங்கங்களுக்கு அதிக மூலதனம் வேண்டியதில்லை. செங்கல்கள் தயாரானவுடனே, அவைகள் விலையாகிவிடும். அம்முயற்சியில் நஷ்டம் நேர்ந்துவிடுமோவென்ற அச்சம் கிடையாது. வருஷமுழுவதும் அத்தொழிலாளிகளுக்கு வேலையிருக்கும்.

மேற்சொல்லிய மாதிரியில், ஓடுகள் அறுக்கும் தொழிலிலும் கூட்டுறவையுண்டு பண்ணலாம். திருச்சூருக்கு அருகாமையில் ஓடறுக்கும் தொழிற்சாலைகள் ஆறு, ஏழு இருப்பதாகத் தெரியவருகிறது. அவைகள் நல்ல ஸ்திதியில் இருக்கின்றன. சிலதொழிற் சாலைகள் ஒருவராலேயே நடத்தப்படுகின்றன. மற்றவைகளோ இரண்டு மூவரால் கூட்டாய் நடத்தப்பட்டு வருகின்றன. ஓடறுக்கும் தொழிற்சா-



லைகளாகிய பேஸல் மிஷன் தொழிற்சாலை, ஹெங்கீஸ் தொழிற்சாலை ஆகிய இவைகளின் ஓடுகள் மிக்க பிரபலம் அடைந்துள்ளன. கள்ளிக்கோட்டையிலாவது மங்களூரிலாவது வேறு இடங்களிலாவது அத்தொழில் முறையில் கூட்டுறவு முயற்சியை ஏன் உண்டுபண்ணக்கூடாது? அஸிஸ்டெண்டு ரெஜிஸ்டிரார்கள் இவ்விஷயத்தில் உடனே கவனம் செலுத்துவார்களாக.

இனி, கூட்டுறவு முறையில் அச்சுக்கூடங்களை வைத்து நடத்தலாம். தென்கன்னடத்திலே அத்தகைய அச்சுக்கூடம் ஒன்று ஏற்பட்டிருக்கிறது. அது இனிது நடைபெறுமாக. பெரிய ஜில்லாக்கள் ஒவ்வொன்றிலும் அவ்விதமே கூட்டுறவுமுறையில் அச்சுக்கூட மொன்று ஏற்படுத்தலாகும். மாகாண கூட்டுறவுச் சங்கத்தினர் (Provincial Co-operative Union) ஏன் ஓர் அச்சுக்கூடத்தை வைத்துநடத்தக்கூடாது? அச்சங்கத்தினர் அச்சுக்கூடமொன்றை வைத்து நடத்தினால் கூட்டுறவுச் சங்கங்களுக்கெல்லாம் பலவிதத்தில் நன்மைகிடைக்கும். முதலில் 25 ஆயிரம் ரூபாயைக்கொண்டு ஓர் அச்சுக்கூடத்தை ஏற்படுத்திவிடலாம். அத்தொகையைச் சேகரித்தல் அவ்வளவு கஷ்டமாகாது.

கூட்டுறவு முறையில் இன்ஷியூரன்ஸ் கம்பெனிகளை ஏற்படுத்தலாம். இவ்விஷயத்தைப்பற்றி இதுவரையில் ஆலோசனை ஏற்படாதிருப்பது ஆச்சரியமே. தற்சமயமுள்ள சந்ததியாருக்கும் இனிவரப்போகும் சந்ததியாருக்கும் அத்தகைய கம்பெனிகள் மிக்கபலன் தருவனதாய் இருக்கும். அக்கம்பெனிகளை கூட்டுறவுமுறையில் ஏற்படுத்தலே சாலச்சிறந்தது. இச்சமயம் பல இன்ஷியூரன்ஸ் கம்பெனிகள் இருக்கின்றன. அவைகள் அநேகமாக இங்கிலாந்தில் ஏற்பட்டவை. இப்பொழுதுள்ள கம்பெனிகளிலே ஒருவிதத்தில் கஷ்டம் ஏற்படுகிறது. எப்படி யென்றால், அக்கம்பெனியின் மூலதனத்தில் பங்கு எடுத்துக்கொண்டிருக்கும் பங்குக்காரர்களுக்கும் இன்ஷியூர் செய்திருக்கும் பாலிஸி ஹோல்டர்களுக்கும் இயற்கையிலேயே மாறுபாடு உண்டு. பங்குக்காரர்களோ தாங்கள் எவ்வளவு அதிகமாய் லாபம் அடைந்துவிடலா மென்பதில் கண்ணாயிருக்கின்றனர். அக்கம்பெனிகளிலே ஆயிரக் கணக்கான ரூபாய்க்குத்தான் இன்ஷியூர் செய்யவேண்டி யிருக்கிற தேயொழிய, 50 அல்லது 100 ரூபாய்க்கு இன்ஷியூர் செய்யமுடியுமா? இவ்வாறான காரணங்களினால் சாமானிய ஜனங்கள் இன்ஷியூர் செய்ய முடியவில்லை.

லைப் இன்ஷியூரன்ஸ் கம்பெனிகள் அதாவது ஜீவன அபய திரவிய சகாய சாலைகளின் நோக்கம் என்ன? திக்கற்றவர்களுக்கு ஆதரவளிப்பதே யாகும். அம்மாகாணத்திற்குப் பொதுவாக கோவாபரேடிவ் இன்ஷியூரன்ஸ் யூனியன் என்ற கம்பெனி ஏற்படுகிறதென்று வைத்துக்

கொள்வோம். இம்மாகாணத்திலுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் எல்லாம் அக்கம்பெனியின் பங்குக்காரர்களாகச் சேர்ந்து, அதில் மூலதனம் போடலாம். கூட்டுறவுச் சங்கங்களில் மெம்பர்களாய் இருப்பவர்களெல்லாரும் தங்கள் தங்கள் சங்கத்தின் மூலமாக அதில் இன்ஷியூர் செய்து கொள்ளலாம். குறைந்தது 50 ரூபாய் முதல் 5 ஆயிரம் ரூபாய்வரையில் இன்ஷியூர் செய்யலாகும். இவ்வாறு ஒரு கம்பெனி ஏற்பட்டு நன்கு நடக்குமாயின், அவசியமான செலவுகளும் க்ஷேமநிதிக்குச்சேரவேண்டிய தனம் முதலியவைகளும் போக, மிஞ்சும் லாபத்தை அக்கூட்டுறவுச்சங்கங்களே பகிர்ந்தெடுத்துக் கொள்ளலாம். அச்சங்கங்களோ அவ்வாறு கிடைக்கும் லாபத்தைத் தங்கள் தங்கள் மெம்பர்களுக்குப் பிரித்துக் கொடுக்கலாம். டென்மார்க் தேசத்தில் அவ்விதம் கம்பெனி ஏற்பட்டு நன்றாய் நடந்து வருகிறது.

கடைசியாக, கூட்டுறவுமுறையில் கல்விச்சாலைகளை நடத்தலாகும் இந்த இனத்தில் கூட்டுறவுமுயற்சி மிகவும் அவசியமென்பது எனது கருத்து. இக்காலத்தில் கல்விச்செலவு பெரிதும் பெருத்துவருகிறது. அவ்வளவு செலவுசெய்து கல்விகற்றும் அதற்குத் தக்கபலன் கிடைக்கிறதா என்பது கேள்வி. எங்குபார்த்தாலும், கல்விச் சாலைகளை வைத்து நடத்துவோருக்கும் அவைகளில் வேலை செய்வோருக்கும் அவ்வளவாக சமரஸம் இல்லை. மாறுபாடே அதிகமாயிருக்கிறதெனலாம். இதுதான் இப்படியென்றால், ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்குந் தான் பரஸ்பரம் விசேஷ அன்புண்டா? கல்வியும் கூட்டுறவும் ஒன்றுக்கொன்று கை கோர்த்துக்கொண்டு போகுமாறு செய்வதே நமது கருத்தாய் இருக்க இவ்விஷயத்தில் வேண்டும். ஆரம்ப முயற்சியாக பிரைமரி கல்விச்சாலைகளைக் கூட்டுறவுமுறையில் ஏற்படுத்தலாம்.

இந்த நோக்கத்தைக் கொண்டு, பெற்றோர்களின் கூட்டுறவுச் சங்கமென கோயமுத்தூரில் ஒருசங்கத்தை ஏற்படுத்துவதாக உத்தேசமிருக்கிறது. அம்முயற்சி சரிவர நடந்து பலனளிக்குமாயின், பல பாடசாலைகளை அவ்விதமே கூட்டுறவு முறையில் நடத்தமுடியும். கூட்டுறவு முறையிலேயே கல்விச்சாலைகளை நடத்தும்பொழுது, பெற்றோர்கள் அதில் சிரத்தைகாட்டும்படி நாம் செய்யலாகும். எவ்விஷயத்திலும் தன் கையே தனக்குதவியென்ற வாக்கியத்தைக் கடைப்பிடித்து நடப்பதே மேல். அதிலும் கல்வி யம்சத்தில் அவ்வாக்கியத்தைக் கடைப்பிடித்து நடத்தல் மிகவும் விரும்பத்தக்கதாகும்.

---



## கூட்டுறவு சங்கங்களும் பொலிகாளைகளும்.

நீடாமங்கலம் ரேய்ஸாஹிப் மிஸ்டர் A. சேதுராம ஐயரவர்களின் வியாசத்தினது ஸாராம்சம் என்னவென்றால்:—

1917-18-ம் வருஷத்திய சென்னை விவசாய காலண்டரின் 41-வது பக்கத்தில் பின்வரும்விஷயம் காணப்படுகிறது:—

"பொலிகாளைகளை வளர்ப்பதற்காக விவசாய சங்கங்களுக்கோ கூட்டுறவுச் சங்கங்களுக்கோ குறிப்பிட்ட ஓரளவு தொகையை வினியோகம் செய்யும்படி விவசாய இலாகாத் தலைவருக்கு கவர்ன்மெண்டார் அதிகாரம் கொடுத்திருக்கின்றனர். மாடுகளை வளர்த்துவருவோருக்கும் அவ்விதம் பணவுதவி செய்யப்படலாம். வினியோகிக்கப்படும் தொகையானது ஒரு நபருக்கு நூறு ரூபாய்க்கு மேற்படாது. விவசாய இலாகாத் தலைவரால் நிர்ணயிக்கப்படும் வண்ணம், நிபந்தனைகளின்படி நடப்பின், வருஷக் கடைசியில் அத்தொகை வினியோகிக்கப்படும்.

அந்நிபந்தனைகளின் முக்கிய அம்சம் யாதெனில் (1) பொலிகாளையானது விவசாய இலாகாவினால் அங்கீகரிக்கப்பட்டதாக இருக்கவேண்டும். (2) காளை சரிவர பாதுகாக்கப்படவேண்டும். (3) காளை உபயோகிக்கப்பட்ட விவரமும் அதன் பலனும் தெரியும்வண்ணம் குறிப்பு எழுதி வைக்கப்படவேண்டும்.

ஒரு காளைக்காக ஒருவருஷத்தில் பணவுதவி செய்யப்பட்டிருப்பினும், விவாய இலசாகாத் தலைவரின் யுக்தப்படி மறுவருஷங்களிலும் அக்காளைக்காகப் பணவுதவி புரியலாம்."

மேற்கண்ட விவரத்தைப் பார்த்தால் கவர்ன்மெண்டின் மனப்போக்கு எவ்வாறு இருக்கிறதென்று நன்குபுலப்படும். அம்மனப்போக்கின்படி காரியம் நடந்திருக்கிறதா? எனக்குத் தெரிந்தவரையில் இம்மாகாணத்திலுள்ள கூட்டுறவுச் சங்கங்களில் எதற்கும் அந்த அறிக்கையின்படி பணவுதவி கிடைக்கவில்லை. தஞ்சை ஜில்லாவிலுள்ள கூட்டுறவுச் சங்கத்தினர் 1917-ம் வருஷம் மார்ச்சு மாதம் 14-ந் தேதியன்று, திருச்சியிலுள்ள விவசாய இலாகா உதவித்தலைவரானமிஸ்டர் ஸாம்ப்ஸன் என்பவருடன் அவ்விஷயமாய்க் கலந்து பேசினார்கள். நூறுரூபாய்க்கு பொலி எருமைக்கடா ஒன்று வாங்கிக்கொடுப்பதாக அவர் வாக்களித்தார். நீடாமங்கலத்திலே சுமார் 100 எருமைகளும் 100 பசுக்களும் இருக்கின்றன. அங்குள்ள விவசாய சங்கத்தின் அங்கத்தினருக்கு அக்கால்நடைகளிற் சில சொந்தமாகும். தகுந்த பொலி எருமைக்கடாக்கள் நீடாமங்கலத்தில் இல்லை. ஆகவே நீடாமங்கலத்திலிருந்து 9-மைல் தூரத்திலுள்ள வலங்கிமான் கிராமத்துக்கு நாங்கள் எங்களது எருமைகளை ஓட்டிக்

கொண்டு போகவேண்டி யிருக்கிறது. பொலிகடாவின் உபயோகத்தை ஒருமுறை அடைவதற்காக எங்களுக்கு நேரும் செலவு ரூபாய் இரண்டு. கூட்டுறவுச் சங்கத்தினருக்கும் இதரர்களுக்கும் உபயோகமாய் இருக்க வேண்டி, பொலிகடா ஒன்று வாங்குவதாக மேற்படி சங்கத்தின் நிர்வாகிகள் ஏப்ரல் மாதத்தில் தீர்மானித்தனர்.

மேலே சொல்லப்பட்ட நிபந்தனைகளின் முதல் அம்சம் திருப்திகரமாய் இருக்கவேண்டி, நல்லகடா ஒன்றைச் சேகரித்துத் தரும்வண்ணம் விவசாய இலாகாவின் உதவித்தலைவருக்கு அந்நிர்வாகிகள் எழுதிக்கொண்டார்கள். மேலே சொல்லப்பட்ட 2,3 நிபந்தனைகள் சரிவர அனுஷ்டிக்கப்படுகிறனவா யென்று நானே மேற்பார்வை பார்த்துவரக்கூடுமென அவர் சம்மதித்திருந்தார். சங்கநிர்வாகிகள் எழுதிய கடிதத்தை கால்நடைகளின் விஷயத்தைக் கவனிக்கவும் உதவித்தலைவருக்கு அவர் அனுப்பினார். அதற்குக் கிடைத்த பதில் என்னவென்றால்: "நீடாமங்கலத்திலுள்ள விவசாயபாங்கிக்கு பொலி எருமைக்கடா வேண்டுமென்பதை யொட்டி எங்கே நல்ல கடா கிடைக்குமென்று பார்க்கப்பட்டு வருகிறது. ஆயினும் தேவைக்கு ஏற்றவாறான கடா இச்சமயம் கிடைக்குமென்று எனக்குத் தோன்றவில்லை; என்றாலும் விஷயம் ஞாபகத்தில் இருக்கும்."

காரியத்தை எப்படியேனும் பைசல்செய்து போடவேண்டுமென்ற கருத்துடனேயே அத்தகைய பதில் கொடுக்கப்பட்டிருக்கிறதென்று எனக்குத் தோன்றுகிறது. கடாவை வாங்கவேண்டி, தஞ்சை கூட்டுறவு எருச்சங்கத்திற்கு நீடாமங்கலம் விவசாயபாங்கி நூறுரூபாய் கொடுக்குமாறு ரெஜிஸ்டிரார் சம்மதித்திருந்ததனால், மேற்படி விஷயத்தை அவருக்கு அறிவிக்கும்படி சென்னை மாகாண கூட்டுறவு யூனியனையும் அச்சங்கத்தினர் கேட்டுக்கொண்டனர். விவசாய இலாகாவின் உதவித்தலைவருக்கு மறுபடியும் அவ்விஷயத்தைப்பற்றி ஞாபகமூட்டியும் இதுவரையில் பலன் கிடைக்கவில்லை. சென்ற மாதத்திலே கனம் V. K. ராமானுஜாச்சாரியாரை நான் கண்டு, விஷயத்தை அவரிடம் சொல்லி, சட்டசபையில் கேள்வி கேட்கும்படி வேண்டிக்கொண்டேன். பொலிகாளைக்காகப் பணவுதவி புரியும்படி சென்னை கவர்ன்மெண்டார்வெளியிட்டுள்ள அறிக்கையின் நம்பரைத் தமக்குத் தெரிவிக்கும்படி அவர் சொன்னார், அந்த நம்பரைக்கண்டுபிடித்துத் தெரிவிக்க என்னால் முடியவில்லை. அவரும் சட்டசபையில் கேள்வி கேட்கவில்லை. அந்த அறிக்கையின்படி நீடாமங்கலம் கூட்டுறவுச்சங்கத்திற்குப் பலன் கிடைக்கும் வண்ணம் நான் பலமுறை முயன்றும் பலிக்கவில்லை. ஆகவே கடைசியாக இக்கான்பரன்ஸை வேண்டிக்கொள்ளுகிறேன். பின்கண்ட தீர்மானம் இக்கான்பரன்ஸில் நிறைவேறின், நலமாயிருக்கும்.

"பொலிகாளைகளை வளர்ப்பதற்காக கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பணவுதவி புரியவேண்டுமென கவர்ன்மெண்டார் அறிக்கையிட்டிருப்பினும், இம்மாகாணத்தில் சரிவர நடைபெறும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு இதுவரையில் அவ்வாறு பணவுதவி கிடைக்கவில்லை. ஆகவே, கூட்டுறவுச் சங்கங்களின் ரெஜிஸ்டிராருடன் விவசாய இலாகாத் தலைவர் கலந்துகொண்டு, பொலிகாளைகளுக்காக இன்னின்ன சங்கங்களுக்குப் பணவுதவி புரிவதென்று திட்டப்படுத்துவாராக. அவ்விஷயமாய் நீடாமங்கலம் பாங்கியின் வேண்டுகோள் உடனே பூர்த்தி செய்யப்படவேண்டும்."

---

## வீடுகட்டும் சங்கத்திற்குறிய கஷ்டங்கள்.

இந்தியன் பாங்கியைச்சேர்ந்த மிஸ்டர் V. சந்திரசேகர அய்யரவர்கள் B. A. எழுதிய வியாசத்தின் ஸாராம்சம் பின்வருமாறு:—

மாம்பலத்திலுள்ள மாம்பலம் கூட்டுறவுச் சங்கத்தின் ஒருநோக்கம் என்னவென்றால், "சங்க மெம்பர்களுக்குக் கட்டடங்களை அமைக்குமாறு மாம்பலம் கிராமத்திலும் ஸைதாப்பேட்டை தாலூக்காவைச் சேர்ந்த இதர கிராமங்களிலும் காலிமனைகளை விலைக்கு வாங்குதலும் சொந்தமாக்கிக் கொள்ளுதலு மாம்.

இந்த நோக்கத்தைக்கொண்டு அச்சங்கம் 1912-ம் வரு ஏப்ரலில் பதிவு செய்யப்பட்டது. பங்கு ஒன்று 50 ரூபாய் வீதம் 400 பங்குகள் கொண்டு 20 ஆயிரம் ரூபாய் சங்கத்தின் மூலதனமாகு மென்று திட்டமாயிற்று. வசூலான மூலதனமோ 15 ஆயிரம் ரூபாய்.

இந்த 15 ஆயிரம் ரூபாயையும் கையிருப்பில் வைத்துக்கொண்டு எண்ணெய் இறக்கும் தொழிலை ஏற்படுத்துவதற்குற்ற காலிமனைகளையும் வாங்கினார்கள். வீடு கட்டிக்கொடுக்கும் நோக்கத்துடன் தென்னிந்தியாவில் முதன்முதல் ஏற்பட்ட சங்கம் இதுதான். காலிமனைகளை வாங்குவதற்குமட்டும் 15 ஆயிரம் ரூபாய் ஆய்விட்டது. இத்தொகையை அவ்வப்போது கடனாக வாங்கினார்கள். 15 ஆயிரம் ரூபாய் மூலதனத்திலிருந்தும் 10 ஆயிரம் ரூபாய் செலவுசெய்து விட்டனர். வீடு கட்டுவதற்குற்ற காலிமனைகளை திட்டப்படுத்தி அவைகளை மெம்பர்களுக்குப் பிரித்து கொடுத்தகாலத்திலேயே பலபல மெம்பர்கள் அம்மனைகளை ஏற்றுக்கொண்டனர். ஆயினும் மனைகளுக்குரிய முழுக்கிரயத்தையும் அவர்கள் கொடுக்கவில்லை. கிரயத்தைக் கொடுக்கவேண்டுமென்று வற்புறுத்தியும் பலனில்லை. வீடு கட்டும் வேலையோ நான்குவருஷகாலம் நடக்கவில்லை. கடன் வாங்கிய பணமோ தீர்ந்தபாடில்லை. வட்டி வளர்ந்துக்கொண்டிருக்கிறது. சங்கத்

தைச்சேர்ந்த எண்ணெய் இறக்கும் தொழிலிலிருந்து கிடைக்கும் லாபத்தைக்கொண்டு வட்டி ஈடுசெய்யப்பட்டுவருகிறது. சங்கத்தில் எவரும் ஏராளமான தொகையை வட்டிக்குப் போடவில்லை. கவர்ன்மெண்டிலிருந்தும் சங்கத்திற்குக் கடன் கிடைக்கவில்லை. வீடுகள் கட்டிக்கொடுக்கப்படுமென்றும், அதில் குடியிருக்கலாமென்றும், அதற்குரிய தொகையை சௌகரியமான தவணைவாரியில் செலுத்தலாமென்றும், வாக்குறுதி சொல்லப்பட்டதன் மேல்தான் பலர் மெம்பர்களாகச் சேர்ந்தார்களாம். வீடுகள் கட்டுவதற்கு எங்கிருந்து பணம் கிடைக்குமென்று சங்கத்தின் நிர்வாகிகள் எதிர்பார்த்தனரோ அறியேன். அச்சமயத்திலே கூட்டுறவுச் சங்கங்களை அதிகரிக்க வேண்டுமென்று கவர்ன்மெண்டுக்கு ஆவல் இருந்ததுபோலும் ஆகவே கவர்ன்மெண்டிலிருந்து பெரியகடன் தொகையைப்பெற்று விடலாமென சங்கநிர்வாகிகள் கருதினார்களென்று காணப்படுகிறது. மகாயுத்தம் ஏற்பட்டுப் போய்விடவே அக்கருத்து வீணாய்ப் போய்விட்டது. தற்சமயம் சங்கத்தின் நிலைமை யாதெனில், காலி மனைகளில் மூலதனம் முடங்கிக் கிடக்கிறது. கவர்ன்மெண்டிலிருந்தாவது அல்லது மெம்பர்களிடமிருந்தாவது பெருந் தொகை வட்டிக்குக் கிடைக்கவில்லை. வேறு இடங்களிலிருந்து பணம் பெறவும் சங்கத்தினால் ஆகவில்லை. எனவே வீடுகள் கட்டுவதற்குற்ற கூட்டுறவு முயற்சியைச் செய்வதற்கு முக்கியமாக முதலில் பணமே வேண்டும். மெம்பர்கள் பணங்கொடுக்கக் கூடாதோ வென்றால், சங்கம் எப்படியாவது பணத்தைத்தேடி வீடு கட்டித்தர வேண்டுமென்று மெம்பர்கள் கருதியிருப்பதாகக் காண்கிறது. இது எப்படி முடியுமென அவர்கள் ஆலோசித்துப் பார்க்கவில்லை. அச்சங்க மெம்பரொருவருக்கு ஒரு காலிமனை வெகு காலத்திற்கு முன்பே திட்டமாயிற்று. அதற்குரிய கிரயத்தை அவர் இன்னும் கொடுக்கவில்லை. தான் வசிப்பதற்குச் சௌகரியமான வீட்டை அச்சங்கம் கட்டிக்கொடுக்குமென்று தான் எதிர் பார்த்திருப்பதாக அவர் வாதிக்கிறார். வீடு கட்டுவதற்காகச் சங்கத்திற்குப் பணம் கிடைக்க வேண்டி, தன்னால் என்னமுயற்சி செய்யப்பட்டதென அவர் சிந்தித்துப் பார்க்கவில்லை. சங்க விஷயமாய் மெம்பர்கள் அலட்சியமாக இருத்தல் ஆச்சரியமே. இப்படியிருந்தும் சங்கத்தின்மீது குறை கூறுவதற்கு அவர்கள் தாமதிப்பதில்லை.

ஆதலின் சங்கத்திற்கு ராஜாங்கத்திலிருந்து பணவுதவி கிடைக்காதிருக்கையிலும், வீடுகளை கட்ட அச்சங்கத்திற்குப்பணம் வேண்டியிருக்கும் பொழுது மெம்பர்களின் கூட்டுறவு கிடைக்காதிருக்கையிலும், வேறு இடங்களில் கடன் வாங்குவதைத் தவிர சங்கத்திற்கு வேறு வகையில்லை. கோவாபரேடிவ் பாங்கிகளோ கடன் கொடுக்கத்



தயாராய் இல்லை. சொத்தின்மீது ஈடாகக் கடன் வாங்குவதென்றால், பிறர் அதிக வட்டிக்குத்தான் பணம் கொடுப்பார்கள். பம்பாயில் ஸ்தாபிக்கப்பட்ட ஸரஸ்வத் மனைகட்டும் சங்கமொன்று முன்னம் இதே நிலைமையில் இருந்தது. அப்பால் பொது நலத்தில் சிரத்தைவாய்ந்த ஸர் பிரபாசங்கர பட்டணி என்பவர் 25 ஆயிரம் ரூபாய் கொடுத்தார். அவ்விதம் பணவுதவி கிடைத்தபின்புதான், வீடுகட்டும் விஷயத்தில் அச்சங்கம் அபிவிருத்தி காட்ட முடிந்தது. வீடுகள் கட்டுவதற்குற்ற பணத்திற்கு வழி தேடிக்கொள்ளாமல், கிடைத்ததனத்தைக் கொண்டு காலி மனைகளை வாங்கிப் பணத்தை முடக்கிவிட்டதே மாம்பல சங்கம் ஆதி முதல் செய்த பெரும் பிழையாகும். சிறிது பணவுதவியிருந்தால் அச்சங்கம் வீடுகளைக்கட்ட முடியும். இத்தேசத்திலே பல தர்ம ஸ்தாபனங்கள் இருக்கின்றன. அவைகளிலிருந்து பணவுதவி செய்யலாம். எதற்கும் மகாயுத்தம் முடியவேண்டும். வேறு வகையில்லை. ஆதலின் நோக்கம் ஈடேறுவதற்கு யாரேனும் பணவுதவி செய்யவேண்டும். இல்லையேல் என்ன செய்வது, வீடு கட்டுவதில் பணம் போட்டால் லாபம் உண்டு. ஈட்டு சொத்து மிகவும் பத்திரமானது. ஆகவே பொதுநல சிரத்தை வாய்ந்த புண்ணியவானொருவர் பணவுதவி புரிய முன்வர வேண்டும். பணவுதவி கிடைக்கவில்லையே யென்பதுதான் பெருங்கஷ்டமாய் இருக்கிறது.

---

## கூட்டுறவு சங்கங்களின் மாகாணபிடரேஷன்.

உத்திரமேரூர் ம-ா-ா-ஸ்ரீ O. M. வெங்கிடநாத அய்யங்கார் அவர்களெழுதியது.

இப்பொழுது இந்த இராஜதானியிலும் மற்ற இராஜதானிகளிலும் சற்றேறக்குறைய ரிபிஸன் என்பவருடைய வழியான சங்கங்களை நடத்துகிறோம். ஆனால் முற்றிலும் அவருடைய வழியை அனுசரிக்கவில்லை என்பது திண்ணம். இந்த வகையில் சங்கங்களை அடர்த்தியாக ஏற்படுத்தி அவைகளை யூனியன்களாகச் செய்திருக்கிறோம். தவிரவும் இப்பொழுது இந்த இராஜதானியில் ஒரு இராஜதானி பாங்கியும் (Apex Bank) இராஜதானியூனியனும் (Co-operative Union) நடைபெற்று வருகின்றன.

இவைகளில் ஒன்றுக்கொன்று தொடர்ச்சியான சம்பந்தம் அதிகமில்லை. தொடர்ச்சியான சம்பந்தம் ஏற்பட்டால்தான் நம்முடைய அலுவல்களை நாமே பார்க்கும் திறமை நமக்கு வாய்க்கும். அம்மாதிரி எப்பொழுது உண்டாகுமோ அப்பொழுதுதான் இந்த இராஜதானியில் கூட்டுறவுச்சங்கம் வேரூன்றினதாகக் கருதப்படும்.

இப்பொழுது நாணய வகையில் (Credit) ஐக்கிய நாணயச்சங்கங்களை ஒன்றுபடுத்தி யூனியன்களாக்கி யிருப்பதனால், நல்ல வேலைகள் நடத்தப்படுகின்றன வென்று அனைவரும் அபிப்பிராயப் படுகிறார்கள். என்னுடைய அற்பஅனுபவத்திலும் அது சரியென்று சொல்லத்துணிவேன்.

நம் ராஜதானியில் உள்ள யூனியன்கள் மேல்பார்வை மாத்திரம் (Supervision) வைத்துக்கொண் டிருக்கின்றன. பணலாவாதேவி கிடையாது. மற்ற இராஜதானிகளிலோ சிலஇடங்களில் பண லாவாதேவி மேல்பார்வையும் வைத்துக் கொண்டு இருக்கின்றன. யோசிக்கு மிடத்தில் நம் இராஜதானியில் நடந்து வரும் (Supervising Union) மேல் பார்வை பார்க்கும் யூனியன்தான் சரியாகும். நாம் எப்பொழுது ஜில்லா பாங்கியும் இராஜதானிபாங்கியும் ஏற்பாடுசெய்தோமோ அப்பொழுது பண லாவாதேவி யூனியனுக்கு வேண்டியதில்லை. எப்பொழுது சொல்ப வட்டிக்கு நாட்டுப் புறங்களில் பணம் அகப்படுமோ அப்பொழுது யூனியனுக்கும் பணலாவாதேவி இருக்கலாம். அதுவரையில் ஜில்லா பாங்கிகளுக்கு இருந்தால் போதும். ஒரு ஜில்லாவில் சுமார் 100 சங்கங்கள் ஏற்படுமானால் கட்டாயமாய் ஜில்லா பாங்கி வேண்டும்.

ஒவ்வொரு ஜில்லா பாங்கிக்கும் பணலாவாதேவியோடு மேல்பார்வையும் (Supervision) இருக்கத்தான் வேண்டும். ஸ்திரமான மேல்பார்வைக்கு யூனியன் இருக்கும் பொழுது ஆழ்ந்த சூபர்விஷன் வேண்டுவதில்லை, தவிரவும் இந்த சூப்ரவைசிங்கு யூனியனுடைய ஸ்வாதீனமும் அழியக் கூடாது. இந்த யூனியன்கள் சரிவர தங்கள் கடமைகளை செலுத்துகின்றனவா வென்று கவனித்து, அசிரத்தையான காலங்களில் அவைகளை தங்கள் வேலையில் பிரவர்த்திக்கும்படி செய்து, ஊக்கத்துடன் வேலை செய்யும்படி தூண்டவேண்டிய கடமைகளை மாத்திரம் ஜில்லாபாங்கி அனுசரித்தால் போதும் தவிரவும் சூப்ரவிஷனுக்காக ஒரு ஜில்லாவில்ஏற்படும் தொகைகளைச் சேர்த்து செலவுதிட்டங்களை சமாளித்து வரவேண்டிய பொறுப்பும் அதற்கு ஏற்பட்டிருக்கிறது. இப்படி ஏற்பட்டதால் லோகல் யூனியன்களின் விவகாரங்கள் குறைவதாக எண்ணக் கூடாது. அதற்கு ஏற்பட்ட "பட்ஜெட்டு" களுக்கும் "ரூல்" களுக்கும் அந்தந்த யூனியனுக்கே ஸ்வாதீனம் இருக்கவேண்டும்.

இந்தமாதிரி ஒரு ஜில்லாவில் ஏற்படும் சூப்ரவிஷன் பண்டானது ஜில்லாவில் ஏற்பட்ட யூனியன்களுக்கு சூப்ரவிஷன் பணம் குறைவாக வசூலாகும் காலங்களில் ஒன்றுக்கொன்று தாரதம்மிய மில்லாமல் பணக்குறைவுக்கு நிறைவு ஏற்பாடு செய்வதற்காகவே ஜில்லாபாங்குக்கு இந்த சூப்ரவிஷனும் இருக்கவேண்டும் என்பதாகும். இம்மாதிரி



இருந்தால்தான் சூப்ரவிஷன் என்னும் யந்திரம் ஓடும்: ஒரு யூனியனுக்கு எப்பொழுதுமே லாவாதேவி ஒன்றுபட்டுஇருக்கும் என்று நினைக்க ஒண்ணாது. சிலவருஷங்களில் ஒரு யூனியனில் லாவாதேவி அதிகரிக்கும். சிலவருஷங்களில் குறைவுபடும். குறைவுபடும் காலத்தில் சூப்ரவிஷன் பண்டுக்காக எவ்விடம் போகிறது; ஆகையால் சூப்ரவிஷன் பண்டு ஒரு ஜில்லாவிற்கு மொத்தமாய் ஏற்பாடு செய்வதுதான் தகுதியாகும். தவிரவும் நீடித்துநடக்கும்.

இந்த ஜில்லாபாங்கிகளில் சங்கங்களின் பிரதிநிதிகளும் யூனியன் பிரதிநிதிகளும் அதிகமிருப்பதால், சங்கங்களின் ஸ்வாதீனமும் ஜில்லா பாங்கியின் பொருப்பும் குறைவுபடா. இம்மாதிரியாக செங்கல்பட்டு ஜில்லாவில் ஆரம்பமாகி வேலை நடந்தேறிவருகிறது. ஜில்லா சூப்ரவிஷனை ஜில்லாபாங்கிக்கே இல்லாமல் தனிமையாக, ஜில்லா சூப்ரவிஷன் கமிட்டி என்று ஏற்படுத்தினால் எம்மாதிரியாக நடக்கும் என்பதை சற்று யோசிக்கவேண்டும். ஒருக்கால் ஜில்லாபாங்கியின் லாவாதேவி அதிகரிக்குமாயின், இம்மாதிரி லாவாதேவி வேறு, (Banking); சூப்ரவிஷன் வேறாக (Supervision) இருக்கலாம். எப்போதும் ஒன்றுபட்டு நடக்கிறதே உசிதமும் கூட்டுறவின் தாத்பரியத்தின் ஸ்வரூபமெனலாம். இப்பொழுதே வேலைசெய்ய மனிதர்கள் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. ஆகையால் சூப்ரவிஷனையும் லாவாதேவியையும் பிரித்திருப்பது தப்பு என்று சொல்லவில்லை. அனுபோகத்தில் பார்க்க வேண்டும். இது சரியாஇருக்கும் பக்ஷத்தில் இதை அனுசரிக்கலாம்.

இம்மாதிரி ஒரு ஜில்லாவில் சூப்ரவிஷனும் பண லாவாதேவியும் ஒன்றுபட நடந்தாலும் சரி, ஒரு ஒழுங்கு கண்டிப்பாய் ஏற்படும். அப்படி ஒரு ஜில்லாவில் ஏற்படுமாயின், ஒரு இராஜதானிக்கும் ஏற்படுவது நிரம்பவும் உத்தமமாகும். அப்படி ஏற்பட்டால்தான் ஒரு இராஜதானிக்கு இந்த கூட்டுறவுமுயற்சி வேரூன்றி நிலைபெற்றதாக நினைக்க இடம் இருக்கும். கூட்டுறவில் சூப்ரவிஷன் குறைவானால் சங்கங்கள் கேவலஸ்திதியை அடையுமென்று நான் செங்கல்பட்டு ஜில்லாமுதல் கான்பரன்சிலேயே சொல்லி இருக்கிறேன். ஆகையால் சூப்ரவிஷன் எப்பொழுது பலப்படுகிறதோ அப்போதுதான் சங்கம் ஆழ்ந்து பலப்படும். சற்றேறக்குறைய எல்லா ஜில்லா பாங்கிகளும் சூப்ரவிஷன் (Supervision) ஏற்பாட்டை அனுசரித்து இருப்பதாக ஏற்படுகிறது. எப்போது ஜில்லா பாங்கிகள் சூப்ரவிஷன் ஏற்பாடு செய்கின்றதோ இனி உண்டாகும் ஜில்லாபாங்கிகள் சூப்ரவிஷனுடன் வேலை துவக்கும் என்பதில் ஐயமில்லை. அப்படித் துவக்கினால்தான் பிரையோஜனப்படும். இப்போது இருக்கப்பட்ட ஜில்லாபாங்கிகள் சேர்ந்து சூப்ரவிஷன் (Supervision)

விஷயத்திலும் ஒன்றுபடவேண்டும். நாணய விஷயத்தில் எப்படி ஜில்லா பாங்கிகள் இராஜதானி பாங்கியில் ஷேர் அதாவது பங்கு எடுத்துக்கொண்டு ஒன்றுபடச் சேர்ந்ததோ அம்மாதிரியாகவே சூப்ரவிஷனிலும் ஒன்றுபடச் சேரவேண்டியது மிகயுக்தமாகும். அதற்கு என்னவழியென்றால், இராஜதானி பாங்கி (Apex Bank) அந்த சூப்ரவிஷனை எடுக்கும்படி செய்யலாம். ஆனால் இரண்டு தடைகள் இருக்கின்றன. அதாவது ஏற்கனவே இராஜதானி கோவாபரேடிவ் யூனியன் (Provincial Co-operative Union) ஒன்று ஏற்பாடாகி, இப்போது நாம் வேலைகளை நடத்திவருகிறோம். இந்த யூனியன் எண்ணங்களில் சூப்ரவிஷனும் ஓர் எண்ணம். மற்றொன்று பண லாவாதேவி ஏராளமாக நடந்துகொண்டுவர வேண்டியிருப்பதால் அதற்கென்றே செலவிட பிரயத்தனங்கள் உண்டுபண்ண வேண்டியிருக்கிறது. ஆகையால் இந்த இராஜதானி யூனியனுக்கே சூப்ரவிஷன் ஏற்படுவது யுக்தமாக இருக்கும். அப்படி சூப்ரவிஷன் ஏற்படுமாயின், எப்படி ஜில்லாபாங்கின் சூப்ரவிஷன் பண்டுகள் ஒன்றாக ஏற்படுகிறதோ, அப்படி இராஜதானிக்கு சூப்ரவிஷன் பண்டு ஏற்படுவது நலமாகும். அதற்காக எல்லா சூப்ரவிஷன் பண்டிலிருந்து 100-க்கு 10 ரூ. வீதம் கொடுக்கும் பக்ஷத்தில் ஓர் நிதியாகச் சேர்ந்து தக்க ஏற்பாடுடன் நடத்தலாம்.

தற்காலம் சூப்ரவிஷன் (Supervision) என்னும் வேலையானது ஜனங்கள் கையில் விட்டு, ஆடிட்டுமாத்திரம் கவர்ன்மெண்டு இடம் இருக்கவேண்டியதான ஏற்பாடுகள் துவக்கமாகி நடக்கவேண்டிய விஷயங்களை நாம் அனுசரித்து வருகிறோம். அதாவது அதனுடைய ஆரம்பம் செங்கல்பட்டு ஜில்லாவில் துவக்கப்பட்டு நடந்துக்கொண்டு வருகிறது. ஆனால் இன்னம் பூர்த்தியாக நடப்பதாகச் சொல்லக்கூடாது. அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்து வேலைதுவக்கமாயிற்று. இன்னம் இரண்டொருவருஷத்தில் சாதகம் ஏற்படும். இம்மாதிரி ஏற்படும் பக்ஷத்தில் நமக்கும் ஒரு ஸ்வாதீனம் உண்டாவதோடு, கவர்ன்மெண்டிக்கும் அதிகச் செலவு ஏற்படாது. நாம் ஒரு ஸ்வாதீனம் அடையவேண்டுமானால் கொஞ்சம் செலவும்செய்து கஷ்டமும்பட்டால்தான் காரியம் சாதகமாகும்.

ஆகையால் நாம் ஆரம்பத்திலேயே இந்த யோசனைகளைச் செய்து இந்த இராஜதானி யூனியனும் (Provincial Co-operative Union) பயன்படுமாறு சங்கங்களை சங்கலித்தொடர்போல் எல்லாவகையும் செய்ய ஆரம்பித்தல் நலமாகும்.



## பஞ்சாயத்து மத்தியஸ்தம்.

உத்திரமேரூர் ம-ா-ா-ஸ்ரீ O. M. வெங்கிடனாத அய்யங்காரவர்கள் எழுதியது.

இப்பொழுது இராஜதானியில் 1912 ௵த்திய 2-வது ஆக்டாகிய கூட்டுறவுச் சட்டத்தின் கீழ் நடந்துகொண்டுவரப்பட்ட சங்கங்களில் உள்ள மெம்பர்கள் தாம்பெற்ற கடனை சரியாக கட்டாமல் தவறிப் போனாலும், அல்லது சங்கங்களில் சண்டை சச்சரவு முதலிய அபிப்பிராய பேதங்கள் உண்டானாலும், அவைகள் ஸிவில் கோர்ட்டுக்கு பிரதமத்தில் போகாமல் மத்தியஸ்தர்களைக்கொண்டு பைசல் செய்யும்படி நாம் இராஜதானியில் நடக்கும் கான்பரன்சுகளில் இது விஷயமாய் பல தீர்மானங்கள் செய்திருக்கிறோம். அவைகளை அனுசரித்து காருண்ணிய கவர்ன்மெண்டாரும் ஷை ஆக்டு 23-வது செக்ஷனை அனுசரித்து சென்ற 1915-௵ அக்டோபர்மீ 2உ யன்று சட்டத்தை அனுசரித்த விதிகளை ஆசாரத்திற்குக் கொண்டுவரும்படி கெஜட்டில் சில விதிகளை பிரசுரித்திருக்கிறார்கள். அந்தப் பிரசுரத்தில் மேல்படி மத்தியஸ்தம் அல்லது பஞ்சாயத்து விஷயமாய் 12-வது ரூலில் ரெஜிஸ்ட்ராருக்காவது அவருடைய உத்திரவு பெற்றவர்களுக்காவது ஷை மத்தியஸ்த பிராதை விசாரித்து முடிவுசெய்ய அதிகாரம் கொடுத்திருக்கிறார்கள். அப்படிக் கொடுத்திருப்பதில் ரெஜிஸ்ட்ரார் தம் இஷ்டப்படி தம்மிடம் வந்த பிராதை தமக்கு யுக்தமாகத் தோன்றிய நபர் இடம் அனுப்புவதற்கு இடம் கொடுக்கவில்லை. அதில் சிறிய விஷயம் ஒன்று அடங்கி இருக்கின்றது. அதாவது வாதிப் பிரதிவாதிகளை யோசித்து சம்மதத்தின்பேரில் வேறு ஒருவரை பஞ்சாயத்து அல்லது மத்தியஸ்தராக நியமிக்கலாமே யல்லது, தம்மிடம் பிராது வந்தவுடன் தானே தான் இஷ்டப்பட்டவர்களுக்கு, விசாரித்து முடிவு செய்வதற்கு கொடுக்க அதிகாரம் இருப்பதாகத் தோன்றவில்லை. இந்த வேலையை ஒரு ரெஜிஸ்ட்ரார் அல்லது அசிஸ்டெண்டு ரெஜிஸ்ட்ரார்கள் எப்படி செய்துமுடிப்பார்கள்? சாதாரணமாய் வாதிப் பிரதிவாதிக்கு எவ்வித நோட்டீஸ் கொடுத்தாலும் பேசுவதில்லை. கடன் விஷயத்திலே கேட்கவேண்டியதில்லை. ரெஜிஸ்ட்ரார் நோட்டீஸ் கொடுத்தாலும் பதில் சொல்லுவதில்லை. அல்லது கோர்ட்டில் தாவா செய்தாலும் அதிகமாக எதிர்வாதம் செய்யவும் முன்வருகிறதில்லை. இம்மாதிரி மெம்பர்கள் அனுபோகத்தில் இருக்கிறார்கள். ஐக்கிய நாணயச் சங்கத்தார் அடிக்கடி கோர்ட்டில் தங்கள் விவாதங்களை முடிவு செய்துகொள்வது யுக்தமல்ல; எந்த விவாதத்தையும் தங்களுக்குள் முடிவு செய்துக்கொள்வதுதான் நிரம்பவும் மேன்மையான காரியம். இது இப்போதிய சமயத்திற்கு முடியாத காரியமாதலால் இவர்களுடைய விவாதங்களை பொதுவாக இருக்கப்

பட்டவர்கள் முடிவுசெய்யும் பக்ஷத்தில் மனஸ்தாபத்திற்கு இடமில்லாமலும் நியாயத்திற்கு பழுதில்லாமலும் நடக்கும்.

இதற்காகவேதான் மத்தியஸ்தராக இருந்து தீர்மானிக்க ரெஜிஸ்ட்ரார் அல்லது அஸிஸ்டெண்டு ரெஜிஸ்ட்ரார் அவர்களுக்கு அதிகாரத்தை கவர்ன்மெண்டார் கொடுத்திருக்கிறார்கள். இப்பொழுது இராஜதானியில் இருக்கப்பட்ட சங்கங்கள் சுமார் 2,000-க்கு மேல் இருக்கும். அவைகளுக்கு அஸிஸ்டெண்டு ரெஜிஸ்ட்ரார்களை நியமித்திருக்கிறார்கள். இவர்களுக்கு ஸீவில் சம்பந்தமான மத்தியஸ்த தீர்ப்புசெய்யவும் அல்லது தம்மிடம் பிராது செய்யவும் உபவாதிகளுடைய சம்மதத்தின் பேரில் தாவாக்களை விசாரித்து முடிவுசெய்ய கவர்ன்மெண்டார் அதிகாரம் கொடுத்திருப்பதில், மத்தியஸ்த விஷயம் சீக்கிரமாகவும் அதிகாரிகளுக்கு தொந்தரவு இல்லாமலும் முடிவுபெற சற்று கடினமாக இருக்கிறது.

இந்த மத்தியஸ்தம் ஒரு அதிகாரியைக்கொண்டு முடிப்பதைக் காட்டிலும் கூட்டுறவினர்களே முடித்துக்கொள்வதுதான் தரமாக இருக்கும். அதாவது விவாதமுள்ளவர்கள் தங்களுக்குள் எப்படி முடிவுசெய்வதென்றால் தங்களைப்போன்ற கூட்டுறவினர்களைக்கொண்டே அந்த விவாதங்களை பைசல் செய்யவேண்டும் என்பதாகும். ஒரு சங்கத்தில் மனஸ்தாபம் அல்லது விவாதம் உண்டானால், அந்த சங்கத்தில் சிலரையும் அயலூரிலுள்ள மற்ற சங்கங்களில் சிலரையும் பொருக்கி ஜாப்தா ஏற்படுத்தவேண்டும். அல்லது விவாதமுள்ள சங்கமானது எந்தயூனியனைச் சேர்ந்ததோ அந்த யூனியனின் நிர்வாக சபையாருக்கு அல்லது யூனியனில் சேராத சங்கமானால் ஜில்லா பாங்கியின் டைரக்டர்களுக்கு விவாதங்களைப் பைசல் செய்யும்படி விடுவதுதான் கூட்டுறவின் தாத்பரியமாகும்.

அம்மாதிரியாக கூட்டுறவினர்களே பைசல் செய்வதற்கு ரெஜிஸ்டார் அவர்களுக்கு பூரண அதிகாரம் இருக்கவேண்டும். அதாவது தம்மிடம் பிராதுவந்ததும், யூனியன் நிர்வாக சபையார் அல்லது ஜில்லாபாங்கி டைரக்டர்களை விசாரித்து முடிவுசெய்யும்படி அனுப்புவதுதான் யுக்தமாக இருக்கும். தூரத்திலிருப்பவரைக் காட்டிலும் அக்கம்பக்கத்தில் உள்ளவர்களுக்கு உண்மை நன்றாய் விளங்கும். கவர்ன்மெண்டார் செய்த ரூல்களில் "பார்ட்டிகளுடைய சம்மதத்தின்பேரில்" மத்தியஸ்தர் அல்லது மத்தியஸ்தர்கள் என்று இருப்பது தப்பென்று நான் சொல்லவில்லை நான் இவ்விடத்தில் எடுத்துக்காட்டுவது என்னவெனில் பிரதிவாதியாயிருக்கிறவன் நோட்டீஸ்கொடுத்தால் ஒன்றும் பேசுவதில்லை. ஆகையால் பார்ட்டிகளைக் கேளாமல் மத்தியஸ்தர் ஜாப்தாவில் கண்ட ஒன்று அல்லது மூன்று நபர்களுக்காவது, யூனியன் நிர்வாக சபையாருக்காவது, ஜில்லா பாங்கி டைரக்டர்களுக்காவது பிராதுகளை விசாரிக்கும்படி ரெஜிஸ்டிரார் அவர்களுக்காவது அசிஸ்டெண்டு ரெஜிஸ்ட்ரார் அவர்களுக்காவது அதிகாரம் இருக்கவேண்டுமாகையால், இதுவிஷயமாக கவர்ன்மெண்டு ரூலில் "பார்ட்டிகளின் சம்மதத்தின்பேரில்" என்கிற பதங்களை நீக்கிவிட்டால் நன்றாகவிருக்கும் என்று நினைக்கிறேன்.

---


# மதராஸ் புல்லெடின் ஆப் கோவாபரேஷன்

என்னும்

# சென்னைக் கூட்டுத்தொழில் வர்த்தமானி

சம்புடம் IX] 1917ஆ ஜனவரி மீ [இலக்கம் 7.


## பத்திராதிபரின் குறிப்புகள்.

### சென்னை மாகாண கூட்டுறவு கான்பரன்ஸ்.

சமீபத்தில் சென்னை மாகாண கூட்டுறவு கான்பரன்ஸின் ஆறாவது வருஷக்கூட்டம் நடைபெற்றதல்லவா? அக்கூட்டத்தின் நடவடிக்கைகளைக் கூடியவரையில் விரிவாக இம்மாத சஞ்சிகையில் பிரசுரம்செய்திருக்கிறோம். அதை நம் நேயர்கள் கவனிப்பார்களாக. அக்கூட்டத்தின் உபசரணைக் கமிட்டிக்கு ராவ்பகதூர் K. B. ராமனுதய்யர் தலைவராய் இருந்தார். அவர் தமது வரவேற்புப் பிரசங்கத்தில் தாராளமாகவும் மனம் விட்டும் விஷயங்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார். கூட்டுறவு முயற்சியானது ஜனங்களுக்குள் ஒற்றுமையை உண்டுபண்ணக்கூடிய ஒருவகைச் சக்தியாகும். ஆகவே, பரஸ்பரம் விலகிநிற்கும் சுபாவமானது இதர சங்கங்களில் வெகுவாகப் பிரதிபலிப்பதுபோல், கூட்டுறவுச் சங்கங்களிலே அவ்வளவு பிரதிபலிக்கவில்லையென அவர் சொல்லியிருக்கிறார். இவ்வாறு அவர் கூறியிருப்பதனால், கிறிஸ்தவர்களுக்கென்று தனியே கூட்டுறவுச் சங்கங்கள் இருப்பதுபோல் வகுப்புவாரியாகசங்கங்கள்ஏற்படுவதைப்பற்றி அவருக்கு மனப்பிடித்தம் இல்லை. ஆயினும் பஞ்சமர்களுக்குத் தனியே சங்கங்கள் ஏற்படுவதைப்பற்றி அவருக்கு அவ்வளவாக ஆட்சேபம் கிடையாது. அக்கூட்டத்தில் அக்கிராசனம் வகித்த கனம் திவான்பகதூர் P. ராஜகோபாலாச்சாரியார் செய்த பிரசங்கம் சிறப்புற்றதாகும். எப்படியென்றால்: அவரது பிரசங்கத்திலே விஷயங்கள் யாவும் மனப்பூர்வமாய் நேர்முறையில் எடுத்துச் சொல்லப்பட்டுள்ளன. சென்ற பலவருஷங்களில் இருந்த சங்கங்களின் சராசரித்தொகையைக்காட்டிலும் 1916-17ம் வருஷத்தில் உள்ள சங்கங்களின் தொகை சுமார் இருமடங்கு அதிகம்.

அக்கணக்கு விவரத்தை அவர் எடுத்துக் காட்டியபின், பிராமணர்—பிராமணரல்லாதார், ஹிந்துக்கள்—மகம்மதியர், அமிதவாதிகள்—மிதவாதிகள் என்ற பலவகையான கட்சிப் பிரதிகட்சி வாதங்கள் எதுவும் கூட்டுறவுச் சங்கங்களில் தலைகாட்டும்படி யாரும் விட்டுவிடக்கூடாதென மிகவும் அழுத்தந் திருத்தமாய்ச் சொல்லியுள்ளார். மேற்கண்ட மாதிரியான ராஜீயக்கட்சிப் பிரதிகட்சி வாதத்தினுல் சீர்குலைந்துபோன கூட்டுறவுச்சங்கங்களை மனதில் வைத்துக்கொண்டே அவர் அவ்விதம் சொல்லியிருக்கிருரென்பதைக் கவனிக்கவேண்டும். கூட்டுறவுச் சங்கங்களிலே அத்தகைய ராஜீயக்காற்று வீசின், யாது நேருமென அவர் முன்னறிந்து சொன்னுரென்று மட்டும் பிறர் கருதிவிடவேண்டாம். நடந்த சம்பவத்தையே அவர் குறிப்பாகக் கூறியிருக்கிருர். இராஜாங்கத்தின் அங்கத்தவர்களில் ஒருவர் அவ்வாறு கட்சிப் பிரதிகட்சிகளைக் காட்டக்கூடாதென்று உரைத்திருப்பதை நாம் சந்தோஷத்துடன் ஏற்றுக்கொள்வதற்கு விசேஷ காரணமொன்றுளது. செல்வாக்குள்ள பிரமுகர்கள் சிலர் வகுப்பு வித்தியாச முயற்சிகளுக்கு ஆதரவுகாட்டுவதாக சிலருக்குள் ஒருவித நம்பிக்கை இருப்பினும், அந்நம்பிக்கைக்கு ஆதாரமில்லை யென்பதற்கு அவரது பேச்சு ஒரு சான்ருகும். மிஸ்டர் ராஜகோபாலாச்சாரியின் வார்த்தையைக் கவனிக்குமளவில், கூட்டுறவுச் சங்கவிஷயங்களிலே அத்தகைய கட்சிப் பிரதிகட்சிக்கு இராஜாங்கத்தினர் ஆதரவளிக்கவில்லை யென்பது புலப்படும்.

## தீர்மானங்கள்.

இனி அக்கூட்டத்திலே பத்து தீர்மானங்கள் நிறைவேறின. சிறிது வாதம் நடந்ததன்மேல் இரண்டு தீர்மானங்கள் நிறுத்திக்கொள்ளப் பட்டன. அத்தீர்மானங்கள் பலவும் அவசியம் நிறைவேற வேண்டுமென்பது வெளிப்படை. கூட்டுறவு இலாகா அதிகாரிகள், இராஜாங்கத்தார், உத்தியோகப்பற்றில்லாத கூட்டுறவு முயற்சிக்காரர், ஆகிய இவர்களுக்குள் பரஸ்பரம் நல்லெண்ணமும் அபிமானமும் இருக்கவேண்டுமென்பது இரண்டு தீர்மானங்களின் கருத்தாகும். இந்த சந்தர்ப்பத்தில் ஒருவிஷயத்தை நாம் குறிப்பிடவேண்டும். அது என்னவென்ருல்: கூட்டுறவுச் சங்கங்களின் ரெஜிஸ்ட்ரார் என்ற அதிகாரியானவர் அவ்விதம் பரஸ்பரம் அபிமானத்தையும் ஒத்துழைப்பையும் உண்டுபண்ணுவதில் சிரத்தை கொண்டிருக்கிருர். தவிர கூட்டுறவுச் சங்கங்களின் பலவாருன விஷயங்களை விவகரித்து ஒரு முடிவுக்கு வருவதற்காக அதிகாரிகளையும் முக்கியமான சங்கங்களின் பிரதிநிதிகளையும் ஒன்ருய்க் கூட்டிவைத்து ஆலோசனை செய்யவும் உத்தேசங் கொண்டிருக்கிருர். மாகாண கான்பரன்ஸின் ஆருவது வருஷக்கூட்டம் நடைபெற்றபின், சென்ற டிசம்பர் 24-ந் தேதியன்று

சில பிரதிநிதிகளை வரவழைத்து, மூதன் முதலாவதாகக் கலந்து ஆலோசனை செய்திருக்கிறார். இது நிற்க, கிராமாந்தரங்களிலே மண் எண்ணெய் கிடைப்பது கஷ்டமாய் இருக்கிறது. ஆகவே மண் எண்ணெயை இறக்குமதி செய்யும் சென்னையிலுள்ள கம்பெனிகளுடன் கலந்துபேசி, கிராமங்களிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கு அந்த எண்ணெய் டப்பிகள் இலகுவில் கிடைக்கும்வண்ணம் ரெஜிஸ்ட்ரார் ஏற்பாடு செய்ய வேண்டுமென ஒரு தீர்மானத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. முன்னம் விளக்குகளுக்கு விளக்கெண்ணெய்முதலிய எண்ணெய்கள் கையாளப்பட்டுவந்தன. இப்பொழுதோ அந்த எண்ணெய்களெல்லாம் போய்விட்டன. மண் எண்ணெய்யே வெகுவாக உபயோகிக்கப்பட்டு வருகிறது. எனவே அவசியமான பொருள்களில் மண் எண்ணெய் ஒன்றாகும். இது சம்பந்தமான தீர்மானத்தில் தஞ்சை ஜில்லாப் பிரதிநிதிகள் பெரிதும் தீவிரமாய் இருந்தனர். அவ்விஷயமாய் ஏற்கெனவே ரெஜிஸ்ட்ரார் முயற்சி எடுத்துக்கொண்டிருப்பதைக் கேட்டு நாம் சந்தோஷம் அடைகிறோம். சிறிது விவாதம் நடந்தபின் இரண்டு தீர்மானங்கள் நிறுத்திக் கொள்ளப்பட்டனவென்று மேலே சொன்னோமல்லவா? அவ்விரண்டில் ஒரு தீர்மானம் என்னவென்றால்: கிராமாந்தரங்களிலே கூட்டுறவு முயற்சி விஷயமாய் மிகுதியும் சிரத்தைகாட்டி உழைப்போரை மெச்சி, இதரர்களும் அம்மாதிரியே நடக்கும்வண்ணம் தூண்டுவதற்காக அவர்களுக்கு ரெஜிஸ்ட்ராரால் கௌரவ பத்திரமொன்று அளிக்கப்பட வேண்டுமென்பதாகும். அவ்வாறு கௌரவப் பத்திரம் அளிப்பதாயின், அசூயைகள் உண்டாகி விடக்கூடுமென்றும், அதோடு உத்தியோகப் பற்றில்லாதவர்களின் கூட்டத்திலே அத்தகைய தீர்மானம் நிறைவேறின் அது சுயமதிப்புக்கு ஒத்ததாயிராதென்றும், சிலர் வாதித்தார்கள். ஆயினும், வங்காளம், பம்பாய் மாகாணங்களின் கூட்டுறவுக் கூட்டங்களிலே அம்மாதிரியான தீர்மானம் அங்கீகாரமாயிருக்கிறதென்பதை நாம் இங்கே எடுத்துச் சொல்லுதல் பொருந்தும்.

### குற்றம் பிடிக்கும் "நியூ இந்தியா"

இத்தேசத்தில் கூடும் கூட்டுறவு கான்பரன்ஸுகளிலே நமது மாகாண கூட்டுறவு கான்பரன்ஸுதான் உத்தியோகஸ்தரல்லாதவர்களாலேயே நடத்தப்பட்டு வருகிறது. மேலும் அதன் நடவடிக்கைகளிலெல்லாம் சுதந்திரமும் சுயேச்சையுமான உணர்ச்சி பிரதிபலித்து வருகிறது. இவ்வாறிருக்க, நமது மாகாணக் கூட்டுறவு கான்பரன்ஸைப்பற்றி "நியூ இந்தியா" பத்திரிகை பிரதிகூலமாய் குற்றங்கண்டு பிடிக்குமென்று நாம் எதிர்பார்க்கவில்லை. எதிரிடையாக அப்பத்திரிகை குற்றங்கண்டு பிடித்திருப்பதற்கு யாது காரணமோ நாம் அறியோம்.

ஆயினும், எதிலேனும் அதிகாரிகளின் சம்பந்தம் எவ்வளவு அதிகமாகவோ குறைவாகவோ இருப்பினும், அதைக்கண்டு அப்பத்திரிகைக்கு மனம் சகிப்பதில்லை. ஆதலின், அதிகார வர்க்கத்தினரின்மீது அப்பத்திரிகைக்கு வெறுப்பு இருப்பதனாலேயே, அப்பத்திரிகை நமது கான்பரன்ஸைப்பற்றிக் குறைகூறுகிறதுபோலும். நமது மாகாணத்திலே கூட்டுறவு முயற்சி மெதுவாகவே அபிவிருத்தியடைந்து வருகிறதென்று மிஸ்டர் K. B. ராமனுதய்யர் அழுத்தமாய்ச் சொல்லவில்லையேயென அவர்மீது அப்பத்திரிகை புகார் உரைக்கிறது. வருங்காலத்திலே கூட்டுறவு முயற்சியானது ஜாதி மதவித்தியாச கட்சிப் பிரதிகட்சிகளினால் சீர்குலைந்து போய்விடக்கூடாதென்று மிஸ்டர் ராஜகோபாலாச்சாரியார் சொன்னதற்காக அவரைக் குற்றம்கூறுகிறது; கூட்டுறவு முயற்சிக்காரர்கள் அதிகாரிகளின் செல்வாக்குக்கு உட்பட்டுவிட்டார்களென அப்பத்திரிகை உத்தேசங்கொண்டு, கான்பரன்ஸிலே விவாதம் வெகு அமரிக்கையாய் நடந்ததே யென்று அப்பத்திரிகை குற்றம் பிடிக்கிறது; கூட்டுறவு முயற்சிக்காரர் ஒவ்வொருவரும் காங்கிரஸ் மகா சபையின் தாஸர்களாகி, தேச முன்னேற்றத்திற்குரிய முயற்சி யெதுவும் ஓங்காதிருப்பதற்குக் காரணமான நிர்வாகமுறையைத் தொலைத்துவிட வேண்டுமெனவும் அப்பத்திரிகைசொல்லுகிறது. அப்பத்திரிகை குற்றம் பிடித்திருப்பதை யெல்லாம் கவனித்துப் பார்ப்போம். இம்மாகாணத்திலே கூட்டுறவு முயற்சியானது இதர மாகாணங்களைப்போல் அவ்வளவு அபிவிருத்தியடையாமல், மெதுவாக இருக்கிறதேயென நாம் பல தடவைகளில் நமது அதிருப்தியைக் காட்டியிருக்கிறோம். தவிர நமது கான்பரன்ஸும் முன் தடவைகளில் அவ்வாறே அதிருப்தி காட்டாமற் போகவில்லை. ஆனால், சென்ற வருஷத்திலே இம்மாகாணத்தில் கூட்டுறவுச் சங்கங்களின் தொகை பெருகியிருக்கிறதே. இவ்விஷயமாய் தமது பிரசங்கத்தில், மிஸ்டர் ராஜகோபாலாச்சாரியார் எடுத்துச் சொல்லிய புள்ளி விவரங்களை "நியூ இந்தியா" பத்திரிகை சிந்தித்துப்பார்க்குமாக. எனவே கூட்டுறவு முயற்சி அபிவிருத்தி யடையவில்லையே யென்ற பழங்கதையை மீண்டும் எடுத்துரைப்பதற்கில்லை. யாரேனும் தமது ராஜீய அபிப்பிராயங்களை விட்டுவிட வேண்டுமென மிஸ்டர் ராஜகோபாலாச்சாரியார் சொன்னாரில்லை. கூட்டுறவுச்சங்கங்களிலே ராஜீய அபிப்பிராயபேதங்களைக்கொண்டுவந்து புகுத்திவிட வேண்டாமென்றுதான் அவர் சொன்னார். கூட்டுறவுச்சங்க விஷயங்களிலே ஜாதி மாத ராஜீயக் கட்சிவாதங்கள் தலைகாட்டுவதில் உயர்தர அதிகாரிகளுக்கும் கவர்ன்மெண்டின் மெம்பர்களுக்கும் சம்பந்தம் இல்லாமற் போகவில்லை யென்றும், ஆகவே அக்கட்சிவாதங்கள் தலைகாட்டலாமென்றும் அப்பத்திரிகை கருதுவதுபோல் தோன்றுகிறது. ஒரு கட்சியார் தவறிவிட்டால் மற்றக் கட்சியாரும் அவ்வாறே



தவறி, அக்கட்சிவாதங்களை மேற்படி சங்கவிஷயங்களில் கொண்டுவந்து புகுத்திவிடலாகுமோ? நியூ இந்தியாவின் மனப்பான்மையை உற்று நோக்குமளவில், நண்பர்கள் சொல்வதும் செய்வதுமெல்லாம் நன்மை, இதரர்கள் சொல்வதும் செய்வதுமெல்லாம் தீமை, என்று சிலர் சொல்லும் வசனம் நமக்கு ஞாபகத்திற்கு வருகிறது. அதிகாரிகளாகட்டும், காங்கிரஸ் மகாசபையின் தாஸர்களாகட்டும், சுய ஆட்சி விரோதிகளாகட்டும், இவர்கள் அனைவரும் எப்பொழுதும் நன்மையையே சொல்லியும் செய்தும்வருவார்கள், அல்லது எப்பொழுதும் தீமையையே சொல்லியும் செய்துவருவார்களென நாம் பெரும்போக்காய் நம்பிவிடுவதற்கில்லை. கூட்டுறவு கான்பரன்ஸின் விஷய கமிட்டியார் ஆலோசனை நடத்திவந்தபொழுது "நியூ இந்தியா" பத்திரிகையின் பிரதிநிதி யொருவர் பிரசன்னமா யிருந்திருப்பாரானால், உத்தியோகஸ்தரல்லாத கூட்டுறவு முயற்சிக்காராகள் காட்டிய சுயேச்சையும் சுதந்திரமுமான உணர்ச்சியை மட்டுமல்லாமல், ரெஜிஸ்ட்ரார், அஸிஸ்டெண்டு ரெஜிஸ்ட்ரார்கள் ஆகிய இவர்கள் அருமையான யோசனை சொன்னதையும் அவர் கண்டுகொண்டிருக்கலாம். கூட்டுறவு முயற்சிக்காரர் ஒவ்வொருவரும் காங்கிரஸ் மகாசபையின் தாஸர்களாய் இருக்கவேண்டுமென்று அப்பத்திரிகை சொல்லுகிறது; இதற்கு மாறான அபிப்பிராயம் கொடுக்கக்கூடிய் பிறர் இல்லையோ? அடுத்த குறிப்பில் நாம் சொல்லியுள்ள உண்மை விஷயங்களைப் பார்த்தால், கண்மூடித்தனமான உற்சாக புருஷர்களுக்கு விஷய விவரம் நன்கு புலப்படும்.

## "ஜஸ்டிஸ்" பத்திரிகை.

மிஸ்டர் ராஜகோபாலாச் சாரியாரின் பிரசங்கத்தின் மேல "நியூ இந்தியா" பத்திரிகை குற்றம் பிடித்ததைப் பற்றி நாம் ஆச்சரியமடைந்தோம். ஜஸ்டிஸ் பத்திரிகையும் அவரது பிரசங்கத்தைக் கண்டு குற்றங் கூறியிருப்பதைப்பற்றி நமக்கு அவ்வளவு ஆச்சரியமில்லை. கூட்டுறவுச் சங்கங்களெல்லாம் அதிகாரிகளின் சம்பந்தத்தைத் தொலைக்கவேண்டி, காங்கிரஸ் மகாசபையின் தாஸர்களடங்கிய சங்கமாக வேண்டுமென்று "நியூ இந்தியா" பத்திரிகை விரும்புகிறது. ஜஸ்டிஸ் பத்திரிகையோ வென்றால், தான் பிராமணர்களுக்கும் இதரர்களுக்கும் மூட்டிவிட்டிருக்கும் விசித்திரமான சமரஸபாவம் கூட்டுறவுச்சங்கங்களுக்குள் பெரிதும் பிரதிபலிக்க வேண்டுமென்று ஆசைப்படுகிறது.

பத்திரிகையிலே தலையங்கம் எழுதுவோர் கூட்டுறவு கான்பரன்ஸைப்பற்றிக் குற்றங் கூறுமுன் கூட்டுறவு முயற்சியின் லட்சியங்களைச் சிறிதேனும் அறிந்திருக்கவேண்டுமென்று நாம் எதிர் பார்த்தோம்.

கூட்டுறவின் மிகவும் முக்கியமானதும் சாமானியமானதுமான இரண்டு லட்சியங்கள் என்னென்ன? கூட்டுறவில் போட்டி கூடவே கூடாதென்பது ஒன்று; கூட்டுறவு முயற்சியானது பரஸ்பரம் ஆதரவை உண்டுபண்ணுவதாகும். இது "ஜஸ்டிஸ்" பத்திரிகைக்குத் தெரியவில்லை. ஆகவே கூட்டுறவுச் சங்கத்தில் போட்டியிருக்க வேண்டுமென்று சொல்லுகிறது. அச்சங்கத்திலே பிராமணர்களும் பிராமணரல்லாதாரும் உத்தியோகப் பதவிக்கும் யோக்கியா பத்திரத்துக்கும் பட்டத்துக்கும் போட்டி போடுகிறார்களென்பது அப்பத்திரிகையின் உத்தேசமாயிருக்கிறது. கூட்டுறவு என்றால் பரஸ்பரம் ஆதரவு வேண்டுமென்பதை அப்பத்திரிகை உணர்ந்திருக்குமாயின், "கூட்டுறவுச் சங்கங்களின் அங்கத்தினரிலே பெரும்பாலோர் பிராமணரல்லாதாராவர், ஆகவே மற்றவர்களாகிய பிராமணர் அச்சங்கங்களை விட்டு விலகிக்கொண்டபோதிலும் கூட்டுறவு முயற்சியின் முன்னேற்றம் தடைபடாது" என்று எழுதியிருக்குமா? கூட்டுறவுச் சங்கங்களிலெ "அம்மற்றவர்கள்" அதியவசியமென யாரேனும் சொன்னார்களோ?

## ஒருசங்கத்தின் கதி.

ஜஸ்டிஸ் பத்திரிகையில் அவ்வாறு எழுதியவர் தாம் எந்தப் பிரசங்கத்தைக் குறித்துக் குற்றங்கூறினாரோ அந்தப் பிரசங்கத்தை அவர் படித்துப்பார்த்தாரா? அப்பத்திரிகை சொல்லியிருப்பதாவது:—"ஒரு சங்கமானது கட்சிப் பிரதிகட்சியினால் சீர்கெட்டுப் பிளவுப்பட்டுப் போய்விட்டதனால், ஏதோ மகத்தான ஜலப்பிரளயம் வந்துவிடுமென்று சொல்லப்படுகிறது. பிராமணரல்லாதாரின் இயக்கம் தோன்று முன்னமேயே கட்சிப் பிரதிகட்சி வேறுபாடுகள் ஏற்பட்டிருக்கின்றன. இப்படியிருக்க, பிராமணர்—பிராமணரல்லாதார் என்ற கட்சி காரணமாக அச்சங்கம் சீர்கெட்டுப் போய்விட்டதென்று சொல்லுவதேனோ?" ஒருசங்கத்திலே பிளவு ஏற்பட்டதென்று மிஸ்டர் ராஜகோபாலாச்சாரியாருக்குச் சொல்லப்பட்டதெனவும், ஆகவே அப்பிளவானது பிராமணரல்லாதாரின் இயக்கத்தினாலேயே ஏற்பட்டதென்று மிஸ்டர் ராஜகோபாலாச்சாரியார் திடீரென்று தீர்மானித்துவிட்டாரெனவும், ஜஸ்டிஸ் பத்திரிகையில் மேற்கண்டவாறு எழுதியவர் அபிப்பிராயப்படுகிறார். இவ்விஷயமாய் சந்தேகம் உண்டாகும்படி மிஸ்டர் ராஜகோபாலாச்சாரியார் பேசவில்லையே. ஆனால் "ஒரு சங்கமானது அடிமுதல் நுனிவரையில் பிராமணர்—பிராமணரல்லாதார் என்ற கட்சியினால் பிளவுபட்டுக் கிடக்கிறது" என்றே தெளிவாய்ச் சொல்லியிருக்கிறார். உத்தேசமாக அவர் அவ்விதம் பேசவில்லை. உள்ளவிஷயம் நமக்குத் தெரிவதுபோலவே அவருக்கும் தெரியும். ஆதலின் உள்ளவிஷயத்தை மனதில் வைத்துக்கொண்டே அவர் அவ்விதம்



பேசி யிருக்கிறாரென்பதைக் கவனிக்கவேண்டும். உள்ளவிஷயத்தை நாம் இங்கே சுருக்கிச்சொல்வோம்.

## உள்ளவிஷயம் என்ன ?

சமீபகாலத்திலே ஒரு ஜில்லாவில் ராஜீயவிஷயமாய் மிகவும் பிரமாதமான விவாதம் உண்டு. அந்த ஜில்லாவிலே சுமார் இரண்டரை வருஷங்களுக்குமுன் ஸூபர்வைவிஸிங் யூனியன் அதாவது மேற்பார்வை பார்க்கும் சங்கம் ஒன்று ஏற்பட்டது. அச்சங்கத்தில் இரண்டு வருஷகாலம் வரையில் ஒரு பிராமணர் தலைவராய் இருந்தார். அப்பொழுது அச்சங்கம் சரிவர நடந்துவந்தது. அச்சங்கத்தின் தலைவர் பிராமணராய் இருந்ததனால் அச்சங்கம் சரிவர நடந்துவந்ததென்று சொல்லும் வண்ணம் ஒரு பிராமணர் தலைவராய் இருந்தாரென்று நாம் சொல்லவரவில்லை. அவருக்குப்பின் பிராமணரல்லாதாரொருவர் அச்சங்கத்தின் தலைவராக வந்தார். அவர் படிப்பாளி, வாலிபர், மிட்டாதாருமாவர்; சென்ற சில வருஷகாலமாகவே கூட்டுறவு முயற்சியில் சிரத்தை கொண்டவர்; இவ்வளவு யோக்கியதை இவருக்கு இருப்பதனால், கூட்டுறவு முயற்சிக்கு இவர் நல்ல துணையாயிருப்பாரென்ற நம்பிக்கையின் மேலேயே இவரைத்தலைவராகத் தேர்ந்தெடுத்தனர். ஆயினும் துரதிருஷ்டம் தோன்றத்தலைப்பட்டு விட்டது. எப்படியென்றால்: பிராமணர்—பிராமணரல்லாதார் என்ற ராஜீயக்கட்சிவாதத்துக்கு இவர் ஆளாய்விட்டார், ஆகவே இவர்தாம் அச்சங்கத்தின் தலைவரென்ற ஹோதாவில் பிராமணத் துவேஷத்தைப் பரப்பலானார்; சங்கங்களின் மெம்பர்களும் காரியநிர்வாகிகளுமான பிராமணர்களைக் காணும்பொழுது, அவமதிப்பாகப்பேசலானார்; அந்த ஸூபர்வைவிஸிங் யூனியனிலே பிராமணர் அதிகமாயிருந்து கைமேலாய் இருந்தனரென்று சொல்வதற்கில்லை. எப்படியெனில்: அந்த யூனியனுக்கு உட்பட்ட 59 சங்கங்களில் 2,632 பேர் மெம்பர்கள்; 195 பேர் பஞ்சாயத்தார்கள், அவர்களில் முறையே 164 பேரும் 34 பேருமே பிராமணராவர். இந்த மிட்டாதாரின் முக்கியமான செய்கைகளில் ஒன்றை உதாரணமாக எடுத்துக்கூறுவோம். ஒரு சங்கமானது சரிவர சுறுசுறுப்பாய் நடைபெறாமல் இருந்தது. அச்சங்கத்திற்குத் தீவிர சிரத்தை ஊட்டவேண்டி, மேற்படி யூனியனின் நிர்வாக சபையினர் அச்சங்கமுள்ள கிராமத்தில் கூடினர். அதே தடவையில் அச்சங்கத்தின் பொதுக்கூட்ட மொன்றையும் கூட்டிவைத்தார்கள். அப்பொழுது புதிய பஞ்சாயத்து சபையொன்று ஏற்பட்டது. அச்சபையில் பிராமணரல்லாதார் நால்வரும் காரியதரிசியான ஒரு பிராமணரும் மெம்பர்களாயினர். கூட்டம் கூடும்பொழுது அந்த மிட்டாதார் பிரசன்னமாயிருக்க

வில்லையென்று காண்கிறது. மறுநாள் இந்த மிட்டாதார் அந்தப் பிராமண காரியதரிசியைத் தருவித்து, "நீர் கணக்கு வழக்கு எழுதவேண்டாம், மாதம் 5 ரூபாய் சம்பளத்தில் ஒரு குமாஸ்தாவைப் போடவேண்டும்" என்று தெரிவித்தார். சங்கத்தின் மூலதனம் 300 ரூபாய்க்கு அதிகப்படாமலிருக்கையில், மாதம் 5 ரூபாய் சம்பளத்திற்கு ஒரு குமாஸ்தாவை நியமிக்க வேண்டியதேனோவென்று மிட்டாதாரைக் கேட்டதற்கு, சங்கங்களிலிருந்து பிராமணர்களைத் தொலைத்துவிடவே அவ்வாறு செய்யப்படுகிறதென்று மிட்டாதார் சொன்னாராம். இப்படியிருக்க விஷயம் தலைமீறி விட்டது. 1917ம் வருஷம் ஜூலை மாதம் 31ந் தேதியன்று, அந்த யூனியனின் பொதுக்கூட்டம் நடைபெற்றது அதில் ரெஜிஸ்ட்ராரும் அஸிஸ்டெண்டு ரெஜிஸ்ட்ராரும் பிரசன்னமாயிருந்தனர். அப்பொழுது மிட்டாதாரின்மீது மெம்பர்களுக்கு அதிருப்தி யிருந்தும், மிட்டாதாரே தலைவராக மறுபடியுந் தேர்ந்தெடுக்கப்பட்டார். நிர்வாகசபைக்கு சில பிராமணர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அந்த ஜில்லாவிலே ராஜீய கான்பரன்ஸ் நடந்த தீவிரத்தில் மிட்டாதார் ஈடுபட்டு, யூனியனின் பொதுக் கூட்டமொன்றை ஒரு கிராமத்தில் கூட்டிவைத்து, ஜூலை மாதம் 31ந் தேதியில் சரிவர நிர்வாகசபை மெம்பர்கள் தேர்ந்தெடுக்கப்படவில்லையென்றும், ஆகவே அந்த எலக்ஷன்கள் செல்லாவென்றும், மறுபடியும் புதிதாக எலக்ஷன் நடைபெற வேண்டுமென்றும், அதில் பிராமணர்களைத் தேர்ந்தெடுக்கக் கூடாதென்றும் சொன்னார். உடனே, பிராமணர்கள், பிராமணரல்லாதார் ஆகிய பல மெம்பர்களும் மிட்டாதாரின் வார்த்தையை ஆட்சேபித்துப் பேசினார்கள். அதனால் விரும்பத்தகாத அம்சங்கள் தோன்றியனவென்று தோன்றுகிறது. முடிவில் யூனியன் தலைவரானவர் கூட்டத்தைக் கலைத்துவிட்டு, ஸூபர்வைஸரிடமிருந்து மினிட் புத்தகத்தை பலவந்தமாய் எடுத்துக்கொண்டு போய்விட்டார். அருவருப்பும் அவமதிப்பும் அடைந்த மெம்பர்களோ ஒரு கூட்டங் கூடி, தலைவரின் செய்கையைக் கண்டித்து, யூனியன் தலைவரென்ற பதவியிலிருந்து அவரைத் தள்ளிவிட்டு, மேற்படி விஷயத்தை அஸிஸ்டெண்டு ரெஜிஸ்டராருக்கு அறிவித்தார்கள். தற்சமயம் அந்த யூனியனானது தூங்கிக்கிடக்கிறது. யூனியன் சம்பந்தமான தஸ்தாவேஜுகளெல்லாம் அஸிஸ்டெண்டு ரெஜிஸ்டராருக்கே அனுப்பப்பட்டு வருகின்றன. உள்ள விஷயவிவரம் இவ்வாறிருக்கையில், மிஸ்டர் ராஜகோபாலாச்சாரியாரின் எச்சரிக்கை மிகவும் அவசியமென மூளைக் கொதிப்பில்லாத யாரும் ஒப்புக்கொள்ளுவார்கள்."

பிராமணர்—பிராமணரல்லாதார் என்ற கட்சிப் பிரதிகட்சியினால் கூட்டுறவு முயற்சிக்கு ஆபத்துவந்துவிடுமோவென மிஸ்டர் K.B. ராமனுஜய்யர் தமது வரவேற்புப் பிரசங்கத்தில் அச்சங்காட்டி யிருக்கிறாரென்



பதாக "ஜஸ்டிஸ்" பத்திரிகை கருதுகிறது. இந்த சந்தர்ப்பத்திலே நமக்கு ஒரு பழமொழி ஞாபகத்துக்கு வருகிறது. அது என்னவென்றால், வேண்டா மனைவிக்கு கால்பட்டால் குற்றம், கைபட்டால் குற்றம் என்பதாகும். அப்பழமொழியை ஆதாரமாகக் கொண்டாலல்லாமல் அப்பத்திரிகை அவ்வாறு கருதுவதன் காரணம் நமக்குப் புலப்படாது. ஒரு முறைக்குமேல் அவரது பிரசங்கத்தை நாம் வாசித்துப் பார்த்தோம். பிராமணர்—பிராமணரல்லாதார் என்ற கட்சிப் பிரதிகட்சியைப் பற்றி அவர் தமது பிரசங்கத்தில் பிரஸ்தாபிக்கவே யில்லை. ஆனால், "பிளவு ஏற்படுவதற்கும் அதனால் நாம் ஹிந்துக்கள் முகம்மதியர் ஸிக்கியர் என்ற வேற்றுமை ஏற்படுவதற்கும் நாம் இடங்கொடுத்துவிடக் கூடாதென்று அவர் சொல்லித்தானிருக்கிறார். இவ்வாறு அவர் சொல்லியதனால் பிராமணரல்லாதாரின் இயக்கத்திற்கு அவர் சவுக்கடிகொடுத்துப்பேசினாரென்று நாம் கருதிவிட அவசியமுண்டோ? பிளவு உண்டு பண்ணும்படியான விபரீத முயற்சிகளைப் பற்றியே அவர் பொதுவாகக் கூறினார். தவிர, இதர முயற்சிகளிலே அப்பிளவு தீவிரமாய் இருப்பது போல், கூட்டுறவு முயற்சியில் இல்லை யெனவும் சொல்ல அவர் மறந்துவிடவில்லை. ஜனசமூகத்திலே அத்தகையப் பிளவுகள் இல்லையென்று "ஜஸ்டிஸ்" பத்திரிகை மறுக்குமாயின், அதனுடன் நாம் வாது புரிய மாட்டோம். பொதுவாக அப்பிளவுகளைப்பற்றி அவர் பிரஸ்தாபிக்கலானாரென்பதை அப்பத்திரிகை கண்டுகொள்ளுமாக. ஜனாச்சாரத் திருத்த விஷயமாய் அவருக்குள்ள பிரபல அபிமானம் யாருக்கும் தெரியும்.

## சென்னையில் இராஜப்பிரதிநிதியின் பேச்சு.

சமீபத்திலே இந்நகருக்கு இராஜப்பிரதிநிதி விஜயஞ்செய்திருந்த காலத்தில், சென்னை தொழிற்காட்சியைத் திறந்து வைத்தபொழுது மிகவும் முக்கியமான பிரசங்கமொன்று செய்திருக்கிறார். தவிர பல யோசனைகளும் அவரது பிரசங்கத்தில் காணப்படுகின்றன. யுத்தத்திற்கு அவசியமான பொருள்களைத் தயாரித்துக் கொடுக்கவும், இதுவரையில் அன்னிய தேசங்களிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டுவந்த பல சாமான்களை இங்கேயே செய்துகொடுத்து கப்பல் பஞ்சத்தைக் குறைக்கவும், நமது மாகாணத்தில் செய்யப்பட்டுள்ள முயற்சிகளெல்லாம் அப்பிரசங்கத்தில் சுருக்கமாகக் காணப்படுகின்றன. யுத்தத்துக்கு உபயோகமான இன்னும் பல சாமான்களை நம் மாகாணத்திலிருந்து சேகரித்துக் கொடுத்திருக்க முடியும். அதற்கு இங்கே பெரிய தொழில் முயற்சிகளும் சாலைகளும் இல்லை. என்றாலும் நமது மாகாணத்தினரும் தங்களாலான உதவியைச் செய்யமுடிந்தது. தவிர, இம்மாகாணத்திலே

தொழில் முயற்சிகளையும் சாலைகளையும் எவ்வளவு தூரம் விசாலமாக ஏற்படுத்தலாமென்பதையும் இம்மகா யுத்தம் சுட்டிக்காட்டியுளது. இது சந்தோஷமேயாகும். அவருடைய பிரசங்கத்திலே மிகவும் திருப்திகரமான நற்செய்தி யென்னவென்றால், “தொழில் சம்பந்தமாய் இராஜாங்கத்திற்கு இருந்த பழைய கொள்கை ஒழிந்து புதைக்கப் பட்டுப்போய் விட்ட” தென அவர் அறிவித்திருப்பதாகும். இம்மாகாணத்தைப்பற்றிய மட்டில், தொழில் முயற்சி சம்பந்தமாய் இராஜாங்கத்தாருக்கு இருந்த பழைய கொள்கையை உத்தியோகஸ்தர்களும் உத்தியோகஸ்தரல்லாதவர்களும் சேர்ந்து முன்னமேயே கண்டித்துப் பேசியிருக்கின்றனர். இப்படியிருந்தும், இந்தியா மந்திரிகளாய் இருந்தவர்கள் அக்கொள்கையை மாற்றுவதற்கு மனமொப்பவில்லை. ஏனென்றால், ஆங்கில ஓட்டர்களை அவர்கள் புறக்கணித்து விடுவதற்கு முடியாமல் இருந்தது. இப்பொழுதோ அப்பழைய கொள்கை மாறிப்போய்விட்டதென்று சொல்லும்படி யுத்தம் கட்டாயப்படுத்திவிட்டதைப்பற்றி நாம் மகிழ்ச்சியடைவோம். ஆதலின், மிஸ்டர் A. சாட்டர்டன் இங்கே தொழில் இலாகாத்தலைவராய் இருந்த காலத்தில் அலுமினியம் தொழிற்சாலை குரோம் தோல் தொழிற்சாலை ஆகிய தொழிற்சாலைகள் ஏற்பட்டபொழுது தொழில் இலாகாவின் கொள்கை சமுகமாய் இருந்ததுபோலவே சடுதியில் அத்தகைய கொள்கையை இப்பவும் தொழில் இலாகா அதிகாரிகள் அனுஷ்டிப்பார்களென நாம் எதிர்பார்க்கிறோம்.

## விவசாயத் தொழில் முறைகள்.

விவசாயத் தொழில் முறைகளைப் பற்றி இராஜப்பிரதிநிதி பேசியிருப்பதையே இங்கு நாம் விசேஷமாக் கவனிப்போம். அவ்விஷயமாய் அவர் பேசியிருப்பதை நம் நேயர்கள் அறியவேண்டி அவ்வாக்கியங்களை யெல்லாம் மற்றொரு பக்கத்தில் அப்படியே பிரசுரித்திருக்கிறோம். பருத்தித் தொழில் முயற்சி, மணிலாக் கொட்டைத் தொழில் முயற்சி, அவுரித் தொழில் முயற்சி, ஆகிய இம்முயற்சிகளை எவ்வளவோ தூரம் பிரசித்தமடையச் செய்யலாமென்று அவர் சுட்டிச் சொல்லிவிட்டுப் பின்னும் சொன்னதாவது:—“சென்னை மாகாணத்தின் விவசாயப் பொருள்கள் அபிவிருத்தியடைவதற்கு இரண்டு அம்சங்களை முக்கியமாக கவனிக்க வேண்டும். பருத்தி, மணிலாக் கொட்டை, அவுரி இவைகளில் கலப்படஞ் செய்யப்படுகிறது. அவ்வாறு கலப்படஞ் செய்யும் வழக்கத்தை முதலில் தடுத்துவிடவேண்டும். இது ஓர் அம்சம். இனி மகசூலுக்குயில் மகசூலை விற்கவேண்டும். இது இரண்டாவது அம்சமாகும், இவ்விரண்டு அம்சங்களையும் நீங்கள் தீவிர சிரத்தையுடன் கவனிப்பீர்களாக”



தென்னைமர சம்பந்தமான தொழில் முயற்சிகள் யுத்த ஆரம்பகாலத்திலே மிகவும் பாதகப்பட்டனவென்பதையும், கயிறுதிரிக்கும் தொழிலின் முன் அமர்ந்திருந்த ஆயிரக்கணக்கான தொழிலாளிகளின் ஜீவனோபாயம் நின்றுபோய்விடும்படி இருந்ததையும், அச்சமயத்தில் யுத்ததளவாட இலாகா ஏற்பட்டு அத்தொழிலாளிக்குக் கைகொடுத்து உதவியதென்பதையும், அவர் குறிப்பிட்டுக் கூறினார். யுத்தம் நின்றுவிட்ட பிறகும் அத்தொழில்கள் நிலைத்திருக்கும் வண்ணம் அத்தொழிலாளிகளுக்குள் கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்தி அத்தொழில்களைப் பாதுகாக்கவேண்டும். மேலும் இச்சமயம் நமது தேசத்திலே இன்னும் பலவாறான சாமான்கள் செய்யப்பட்டு வருகின்றனவென்று இராஜப்பிரதிநிதி சொல்லியுள்ளார். அன்னிய நாட்டு வியாபாரிகளின் போட்டி ஏற்படும்பொழுது அச்சிறிய தொழில்கள் பலவும் நசுக்கப்பட்டுப் போகுமென்பதில் சந்தேகமில்லை. ஆதலினால் கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்தி, அத்தொழில் முயற்சிகளில் சிலவற்றையாவது பாதுகாக்க நம் சகோதரர்கள் முயலவேண்டுமென நாம் மனப்பூர்வமாய் வற்புறுத்துவோம்.

## கூட்டுறவும் கடன்குறைவும்.

மைசூர் சமஸ்தானத்திலே முன்னம் கூட்டுறவுச் சங்கங்களின் ரெஜிஸ்ட்ராராக இருந்தவர் மிஸ்டர் K. சந்தி என்பவர். கூட்டுறவுச் சங்கங்களின் முயற்சி காரணமாக ஜனங்களின் கடன்சுமை எவ்வளவு தூரம் குறைந்திருக்கிறதென்பதைப்பற்றி “மைசூர் எகனமிக் ஜர்னல்” என்ற சஞ்சிகையில் அவர் ஒரு வியாசம் எழுதியிருக்கிறார். அது மிகவும் முக்கியமானதாகும்; அந்த வியாசத்திலிருந்து சிலபாகங்களை மற்றோரிடத்தில் பிரசுரஞ் செய்திருக்கிறோம். அந்த சமஸ்தானமெங்கும் அவ்விஷயமாய் 48 பரிசோதகர்களால் நடத்தப்பட்ட பரிசீலனையின் முடிவுகள் அவ்வியாசத்தில் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கின்றன. அப்பரிசோதகர்கள் நிபுணர்களாயில்லாததாலும், சாஸ்திர ரீதிப்படி பரிசீலனை நடக்காததனாலும், அவ்விசாரணையின் முடிவுகளை பெரும்போக்கான அல்லது உத்தேசமான முடிவுகளென்றே மதிக்கவேண்டுமென அவர் எச்சரிக்கை செய்திருக்கிறார். சென்ற நான்குவருஷகாலத்திலே கூட்டுறவுச் சங்கமெம்பர்களின் கடன்சுமை குறையவில்லை யென்பதும், நான்குவருஷத்துக்குப் பின்பும் சாவுகார்களுக்கே மெம்பர்கள் பெரிதும் கடன்பட்டிருக்கிறார்களென்பதும், அவ்விசாரணையிலிருந்து வெளிப்படும் முக்கிய அம்சங்களாகும். நடை முதல் வருஷத்தில் அவ்விஷயமாய் மைசூரிலே மிகவும் குறிப்பான பரிசீலனை நடத்தப்படுமென அவ்வியாசத்தில் சொல்லப்பட்டுளது. ஆகவே, அதை நாம் மிக்க ஆவலுடன் எதிர்பார்த்திருக்கிறோமென்று சொல்லவும் வேண்டுமோ? இதற்குள், இம்மாகாணத்திலே குறிப்பான சில இடங்க

ளில் அவ்விதம் பரிசீலனை நடத்திப் பார்க்கவேண்டுமென உத்தியோகஸ்தர்கள். உத்தியோகஸ்தரல்லாதவர்கள் ஆகிய கூட்டுறவுக்காரர்களை நாம் பலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம்.

## கூட்டுறவும் ராஜீயவிஷயமும்.

ஐக்கிய மாகாணங்களிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களின் கான்பரன்ஸ் சென்ற டிசம்பர் மாதம் 18-ந் தேதி நடைபெற்றது. அம்மாகாணத் தலைவரான ஸர் ஜேம்ஸ் மெஸ்டன் அக்கான்பரன்ஸைத் திறந்து வைத்த பொழுது, ஒரு பிரசங்கம் செய்திருக்கிறார். அது மிகவும் விசேஷமான பிரசங்கமாகும். ஆகவே நமது நேயர்கள் அப்பிரசங்கத்தை முக்கியமாக கவனிக்கவேண்டும். அவருடைய பிரசங்கத்திலே மிகவும் விசேஷமான அம்சம் யாதெனில், சுய ஆட்சிக்கானபயிற்சியும் அனுபவமும் அடைவதற்கு கூட்டுறவுமுயற்சி தக்க சாதனமாகுமென அவர் மனம்விட்டுச் சொல்லியிருப்பதாகும். ராஜீயவிஷயமான ஊழியத்தை நன்கு செய்வதற்கு அக்கூட்டுறவு முயற்சியிலே ஏற்ற சமயமும் சந்தர்ப்பமும் சௌகரியமும் உண்டென அவர் சுட்டிக்காட்டி, அம்முயற்சியில் ராஜீயவாதிகள் கலந்துகொள்ளவேண்டுமெனவும் சொல்லியிருக்கிறார். பின்னும் அவர் சொல்லியிருப்பதாவது:—“உண்மையான சுய ஆட்சியில் அனுபவமும் பயிற்சியும் பெறுவதற்கு கூட்டுறவு முயற்சியே நம் கையிலுள்ள சாதனமாகும். ஆகவே அதில் கலந்துகொண்டு உழைக்கவேண்டுமென ராஜீயவாதிகளை நான் மீண்டும் வேண்டிக்கொள்ளுகிறேன். புத்திசாலித்தனமாய் ஓட்கொடுப்போரைப் பெறுவதற்கு அக்கூட்டுறவு முயற்சியே நிச்சயமான கருவியாகும். புத்திசாலித்தனமாய் ஓட்கொடுப்போரை நாம் அடையாது போனால், இந்தியாவிலே ஜவாப்தாரியான ஆட்சியானது பேர்மாத்திரையாய் முடிந்துவிடும். எனவே, பொதுஜன ஊழியம் புரிவதற்கு இதோ தெளிவான அவசியம் உளது:” சுய ஆட்சியை யடைவதற்குச் சாதனமாய் கூட்டுறவு முயற்சி இருக்கிறதாதலின், ராஜீயவாதிகளே அதில் கலந்து உழையுங்களென இதுவரையில் எந்த உயர்தர அதிகாரியும் அவ்வளவு தெளிவாகச் சொன்னாரில்லை. வங்காள கவர்னராயிருந்த லார்டு கார்மைகேலும், சென்னை நிர்வாகசபை மெம்பராயிருந்த ஸர் P. S. சிவசுவாமி ஐயரும், இன்னும் இரண்டொருவரும் கூட்டுறவு முயற்சியினால் ராஜீய முன்னேற்றதிற்குச் சாதகமேற்படுமென்று சொல்லியிருக்கிறார்களென்பதுண்மைதான். ஆயினும், அவர்களுடைய வார்த்தைகளோ மேற்கண்டபடி அவ்வளவு தெளிவாக இருக்கவில்லை. தெளிவாகச் சொல்லிவிட்டால் மேலதிகாரிகளால் கண்டிக்கப்பட நேருமோ வெனவே அவர்கள் அஞ்சியிருந்ததாகக் காண்கிறது. இதற்கு முன்னம் அவ்வாறு ஸர் ஜேம்ஸ் மெஸ்டன் தெளிவாய்ப் பேசியிருப்பதாகவும் நமக்குத் தெரியவில்லை.



மனம்விட்டு விஷயத்தைச் சொல்லுவோமானால், ராஜீயவிஷயமான நன்மையை அடைந்துவிடுவதற்கு கூட்டுறவுச் சங்கங்கள் கையாளப் படுமோவென்றே கவர்ன்மெண்டார் இன்றளவும் கருதியிருந்தனர். கூட்டுறவு முயற்சிவிஷயத்தைக் கவனித்து ஆலோசனை சொல்வதற்காக முன்னம் நியமிக்கப்பட்டிருந்த ஸர் எட்வர்டு மக்ளாகன் கமிட்டியாரும் அவ்விதம் ஆபத்து நேர்ந்துவிடுமோவென்று கருதியே கூட்டுறவுச் சங்கங்களில் அதிகாரிகளின் மேற்பார்வை யிருப்பதற்காக ஜாயிண்ட் ரெஜிஸ்ட்ரார்களை நியமிக்கவேண்டுமெனவும், அச்சங்கங்களை ஜில்லா கலெக்டர்கள் கண்காணித்து வரவேண்டுமெனவும், சொன்னார்கள். விஷத்தைக் கண்டால் விலகிபோய்விடுவதுபோல், ராஜீயவாதிகளைக்கண்டு கூட்டுறவு இலாகா அதிகாரிகள் விலகிப்போவதை நாம் அறிவோம். என்றாலும் அதிகாரிகளின் மனப்பான்மை சுமுகமாக மாறியிருக்கிறது. ஏனென்றால்: இந்தியாவில் ஜவாப்தாரியான ஆட்சியை ஏற்படுத்துவதே லட்சியமெனவும், அதற்கு ஏற்றவாறு ஜனங்களுக்குச் சாதனம் கிடைக்குமெனவும், இந்தியா மந்திரி விளம்பரம் செய்திருப்பதே காரணமாகுமென்பது நம் கருத்து. மேற்கண்ட லட்சியத்தில் ஸர் ஜேம்ஸ் மெஸ்டன் பக்தி விசுவாசங்கொண்டே கூட்டுறவு முயற்சியில் ராஜீய வாதிகள் கலந்துழைக்கவேண்டுமென அவர் அழைத்திருக்கிறார். ஆதலின் இம்மாகாணத்திலும் இந்தியாவின் இதர இடங்களிலுமுள்ள அதிகாரிகள் ஸர் ஜேம்ஸ் மெஸ்டனுடைய விசேஷ வார்த்தையைப் பின்பற்றி நடப்பார்களா? மேலும் துஷ்ட மிருகத்தைக்கண்டு விலகி நிற்பதுபோல் ராஜீய வாதிகளைக் கண்டு விலகி நிற்காமலும் இருப்பார்களா?

கூட்டுறவு முயற்சியில் ராஜீய வாதிகள் கலந்துழைக்கவேண்டுமென்பதனால், கூட்டுறவுச் சங்கங்களிலே அவர்கள் தங்களது கட்சிவாதத்தைக் கொண்டுவந்து புகுத்திவிடவேண்டுமென்பதல்ல. கூட்டுறவுச் சங்கங்கள் ராஜீய சங்கங்களல்லவாயினும், ராஜிய விஷயத்துக்கு அனுகுணமான கல்வியை அச்சங்கங்களிலிருந்து உணர்ந்துகொள்ளலாகும். ராஜீய விஷயத்துக்கு அனுகுணமான ஞானமும் கல்வியும் கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து கிடைக்குமென்பதனாலேயே அச்சங்கங்களின் மெம்பர்களுக்கும் அல்லது பஞ்சாயத்தார்களுக்கும் ஓட்கொடுக்கும் சுதந்திரம் கிடைக்கவேண்டுமென்று ஏற்படுகிறது. ஸ்தல சுய ஆட்சி சபைகளிலே ஸ்தானம் வகிக்கவோ ஸ்தானம் வகிப்போருக்கு ஓட் கொடுக்கவோ அப்பஞ்சாயத்தார்களுக்கு சுதந்திரம் கிடைக்கவேண்டுமென பல கூட்டுறவு கான்பரன்ஸ்கள் தீர்மானித்திருக்கின்றன. மாகாண சட்ட சபையிலும் இராஜப் பிரதிநிதியின் சட்டச்சபையிலும் தங்களுடைய பிரதிநிதிகள் ஸ்தானம் வகிக்கவேண்டுமென வங்காள மாகாண

கூட்டுறவுக்காரர்கள் கேட்டிருக்கிறார்கள். கலாசாலைக் கல்வி, ஓரளவு வியாபார அனுபவம், நிர்வாகப் பயிற்சி, ஓரளவு வரி செலுத்தல், ஒரு வகை அந்தஸ்தான வாழ்வு, ஆகிய இவைகளில் ஒன்றேனும் ஒருவருக்கு இருப்பின், பொது ஜன காரியங்களை நிர்வகிப்பதற்கு அவருக்கு யோக்கியதை யுண்டெனவும், ஓட் கொடுக்கும் சுதந்திரம் அவருக்கு உண்டெனவும் கவர்ன்மெண்டார் திட்டப்படுத்தி யிருக்கிறார்கள். கூட்டுறவுச் சங்கத்தை நிர்வகித்து நடத்துவதானது பொதுஜன காரியங்களை யுணர்ந்து நிர்வகிப்பதிற்குத் தக்க பயிற்சியை ஊட்டுவதாகும். ஆகவே கூட்டுறவுச் சங்கங்களின் பஞ்சாயத்தார்களுக்கு ஓட் கொடுக்கும் சுதந்திரத்தை யளிப்பதில் கவர்ன்மெண்டார் தாமதங் காட்டக் காரணம் உண்டோ?

---

# சென்னை மாகாண கூட்டுறவு கான்பரன்ஸ்.

## ஆறாவது வருஷக்கூட்டம்.

### 1917 டிசம்பர் 22, 23 தேதிகளில் நடைபெற்றது.

### முதல்தின நடவடிக்கைகள்.

முந்திய மூன்று வருஷங்களைப் போலவே சென்னை மாகாண கூட்டுறவு கான்பரன்ஸின் ஆறாவது வருஷக் கூட்டம் சென்னை மாகாண கூட்டுறவு யூனியனால் கூட்டப்பட்டது. சென்னை பச்சையப்பன் மண்டபத்திலே 1917-ம் வருஷம் டிசம்பர் 22ந் தேதி சனிக்கிழமை யன்று அக்கூட்டம் ஆரம்பமாயிற்று. சென்னை நிர்வாகசபை மெம்பர்களில் ஒருவரான கனம் திவான் பஹதூர் P. ராஜகோபாலாச்சாரியார் அதில் அக்கிராசனம் வகித்தார். வழக்கம் போலவே உபசரணைக் கமிட்டி ஒன்று அமைக்கப்பட்டது. மாகாணத்தின் பற்பல பாகங்களிலிருந்தும் முக்கியமான கூட்டுறவுக் காரர்களில் சுமார் 37 பேர் அக்கமிட்டியில் மெம்பர்களாய் இருந்தனர். கூட்டத்தில் பிரசன்னமாயிருந்த பிரதிநிதிகளின் தொகை சுமார் 228 ஆகும். இதற்கு முன் இவ்வளவு பிரதிநிதிகள் பிரசன்னமாயிருந்ததில்லை.

அக்கூட்டத்தை நடத்துவதற்கு திரவிய சகாயம் வேண்டுமென்று நாம் கேட்டுக்கொண்டதற்கிணங்க, பல பிரைமரி சங்கங்களும் ஸெண்ட்ரல் பாங்கிகளும் தாராளமாகப் பணங்கொடுத்து உதவின. அதற்காக நாம் மிக்க வந்தனமளிக்கவேண்டும்.

அக்கூட்டத்தின் முன் 16 வியாசங்கள் ஆலோசனைக்கு வந்தன. அவ்வியாசங்களில் மூன்று தமிழ் வியாசங்களாகும். அவ்வியாசங்கள் அச்சடிக்கப்பட்டு பிரதிநிதிகளுக்கு வழங்கப்பட்டன.



கூட்டத்தின் முதல் தினத்திலே பிரதிநிதிகள் பகல் 1 மணிக்குக் கூடினார்கள். அப்பொழுது, விஷய ஆலோசனைக்கமிட்டிக்கு ம- ா-ா-ஸ்ரீ ராவ்பஹதூர் K. B. ராமநாதய்யரை சேர்மனாகவும் சுமார் 50 கனவான்களை மெம்பர்களாகவும் தேர்ந்தெடுத்தார்கள்.

மாலை 3 மணிக்கு கான்பரன்ஸின் நடவடிக்கைகள் ஆரம்பமாயின. திவான் பஹதூர் P. ராஜ கோபாலாச்சாரியார் அக்கிராசனாதிபத்தியம் வகித்திருந்தார். மாகாணத்தின் பல பாகங்களிலிருந்தும் பல பிரதிநிதிகளும் கனவான்களும் விஜயஞ் செய்திருந்தனர். விஜயஞ்செய்திருந்தவர்களில் முக்கியமான சில கனவான்களைச் சொல்லுவோம்.

கனம் திவான் பஹதூர், R. ராமச்சந்திரராவ்; கூட்டுறவு சங்கங்களின் ரெஜிஸ்ட்ராராகிய மிஸ்டர் F. R. ஹெமிங்வே; கொல்லங்கோடு ராஜாவாகிய தேவராஜா C. I. E. மிஸ்டர் N. பட்டாபிராமராவ்; டாக்டர் C. B. ராமராவ்; மிஸ்டர் T. A. ராமலிங்கஞ் செட்டி; ராவ் பஹதூர் K. B. ராமநாத ஐயர்; மிஸ்டர் B. ஹனுமந்தராவ்; கூட்டுறவுச் சங்கங்களின் உதவி ரெஜிஸ்ட்ரார்களான மெஸ்ஸர்ஸ் A. வேதாசலம் ஐயர்; P. மீனாட்சி சுந்தரம் பிள்ளை; T. ஸ்ரீனிவாசராவ்; K. நாகேசுவரராவ் பந்தலு; P. K. குன்ஹுண்ணி ராமன் மீனன்; M. K. வேங்கடாச்சாரியார்; D. அருளானந்தம் பிள்ளை; D. ஆனந்த ராவ்; பாப்பா நாடு ஜமீன்தார்; ராவ் பகதூர் T. S. பாலகிருஷ்ண ஐயர்; R. A. காயத்திரி நாத ஐயர்; T. R. வேங்கடராம சாஸ்திரி; S. ஸத்திய மூர்த்தி ஐயர்; P. A. சுப்பிரமணிய ஐயர்; ராவ்பகதூர் Y. நாராயண ராவ்; C. N. கிருஷ்ண சுவாமி ஐயர்; ரெய் ஸாஹிப் R. ராமசுவாமி ஐயர்; K. சேஷகிரி ராவ்; கம்பைய நல்லூர் ஜமீன்தார்; ஆகிய இவர்களும் விஷய ஆலோசனைக் கமிட்டியின் இதர மெம்பர்களும் பிரசன்னமாயிருந்தனர்.

### உபசரணைப் பிரசங்கம்.

உபசரணைக் கமிட்டியின் தலைவரான மகா-ா-ா-ஸ்ரீ ராவ் பகதூர் K. B. ராமநாத ஐயரவர்கள் கான்பரன்ஸின் பிரதிநிதிகளை வரவேற்றுச் செய்த பிரசங்கம் என்னவென்றால்:—

சென்னை மாகாண கூட்டுறவு யூனியன், உபசரணைக் கமிட்டி ஆகிய இரண்டின் பெயரால் உங்களை இக்கூட்டத்தில் மனப்பூர்வமாய் வரவேற்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்திருக்கிறது. இக்கூட்டத்தில் அக்கிராசனம் வகிப்பவருக்கு நம் கூட்டுறவு முயற்சியில் மிக்க அபிமானம் உண்டு; இம்மாகாணத்திலே கூட்டுறவு முயற்சி ஏற்பட்ட காலத்திலிருந்து அவ்விஷயமாய் இவருக்கு இருப்பது போன்ற நெருங்கிய விஷய ஞானம் எவருக்கும் இல்லை யெனலாம். ஆகவே அத்தகையவரைத் தலை

மையாகக்கொண்டு, இக்கூட்டத்தின் நடவடிக்கைகள் இனிது நிறைவேறுமென நாம் நம்பியிருக்கிறோம்.

## கூட்டுறவும் மிஸ்டர் சுவாமிக்கண்ணும்.

சென்ற வருஷத்திலே கூட்டுறவு சம்பந்தமான விஷயங்கள் எல்லா விதத்திலும் அபிவிருத்தியடைந்துள்ளன. புதிதாக ஏற்பட்ட பிரைமரி சங்கங்கள், அல்லது யூனியன்கள் ஆகிய இவைகளின் தொகையைக் கவனிப்போமானாலும் நல்ல முன்னேற்றம் உண்டு.

பாக்கியுள்ள கடன்தொகைகளில் வசூலான தொகையைப் பார்த்தாலும் திருப்திகரமான முன்னேற்றம் ஏற்பட்டுளது. கூட்டுறவு முயற்சி சம்பந்தமாய் சென்ற வருஷத்திலே நடந்த பெரும்பாலான காரியங்களைக் கவனிக்குமளவில், திவான் பகதூர் L. D. சுவாமிக்கண்ணு பிள்ளையின் பெயர் நம் ஞாபகத்திற்கு வரும். நமக்கு அசௌகரியங்கள் நேர்ந்தபொழுது மிஸ்டர் சுவாமிக்கண்ணுபிள்ளை நமக்கு மிக்க உதவி புரிய காத்திருந்தாரென்பதும், அவர் நம்மிடம் விரிவான அபிமானங்காட்டினாரென்பதும், அதிகாரிகளின் அதிகாரதோரணை அவ்வளவாக இல்லாமலிருக்க அவர் எவ்வளவு சாமர்த்தியமாய் முயன்று வந்தாரென்பதும், அவரை நன்கு உணர்ந்திருப்பவர்களுக்கு முழுவதும் புலப்படும். கூட்டுறவுச் சங்கங்களின் ரெஜிஸ்ட்ராராக அவர் இருந்த காலத்திலே, குறிப்பாக ஏற்பட்டுள்ள அபிவிருத்தி யாதெனில், கவர்ன்மெண்ட் ஊழியர்கள், பஞ்சமர்கள், கிறிஸ்தவர்கள் ஆகிய இவர்களுக்கு தனித்தனியே கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்பட்டதாகும். ஏற்கெனவேயுள்ள கூட்டுறவுச் சங்கங்களின் காரியங்களிலே கவர்ன்மெண்ட் ஊழியர்கள் இவ்வளவு தூரந்தான் கலந்துகொள்ளலாமென ஒரு வரம்பு இருப்பதனால், கவர்ன்மெண்ட் ஊழியர்களுக்குத் தனியே கூட்டுறவுச் சங்கம் ஏற்படுதல் அவசியமாய் இருந்திருக்க வேண்டும். கூட்டுறவு முயற்சிவிஷயமாய் உத்தியோகஸ்தர்களை நம்மிலிருந்து பிரித்து, அவர்களுக்குத் தனியே சங்கங்கள் ஏற்படுத்தியதானது அவ்வளவு விரும்பத்தக்கதல்லவென உத்தியோகப்பற்றில்லாதவர்களாகிய நம்மில் சிலர் கருதினோம். ஆயினும், கூட்டுறவுமுயற்சியில் உத்தியோகஸ்தர்கள் கலந்துகொள்வதைப் பற்றி தற்சமயம் கவர்ன்மெண்டாருக்குள்ள மனப்பான்மை எவ்வளவுகாலம் நீடித்திருக்கிறதோ அவ்வளவுகாலம்வரையில், கவர்ன்மெண்ட் ஊழியர்களுக்கும் கூட்டுறவு முயற்சியினால் பலன் கிடைக்கும்வண்ணம் செய்வதற்கு அவர்களுக்குத் தனியேசங்கங்களை ஏற்படுத்துவதுதான்சரியாகும். பஞ்சமர்களைப்பற்றியோவென்றால், பஞ்சமர்களின் தேவைகளைக் கவனிப்பதற்கு பிரத்தியேகமாக சங்கங்கள் இல்லாமற்போயின், ஜா[illegible]ச்சாரமுறையிலே உயர்ந்த அந்தஸ்துள்ளவர்கள் ஏற்கெனவேயுள்ள சங்கங்களிலிருந்து அப்பஞ்சமர்களை விலக்கி



விடுவார்களென்று சிலர் சொல்ல நான் கேள்விப்பட்டிருக்கிறேன். திருவல்லிக்கேணி ஸ்டோர்ஸ் எனப்படும் சங்கத்திற்கு எழும்பூரிலுள்ள கிளைச் சங்கத்திலே ஒருசமயத்தில் பஞ்சமர் பலர் மெம்பர்களாக இருந்தார்கள். அப்பொழுது அவர்களுக்கு ஏதேனும்கஷ்டமோ அசௌகரியமோ இருந்ததாகத் தெரியவில்லை. ஆனால் அப்பஞ்சம மெம்பர்களின் தொகையோ வரவரக் குறைந்துவிட்டது. பஞ்சமர்களுக்குத் தனியே சங்கங்கள் ஏற்படுதல் நலமாயிருக்கலாம். இந்தியர்களிலே இதர வகுப்பினர்களைப் போலவே தங்களுக்கும் சரிசமமான உரிமைகள் உண்டென்று பஞ்சமர்கள் சொல்லி, தங்களுடைய உரிமைகளை நிலைநாட்டிக்கொள்ள முயலுங்காலம் ஒரு நாள்வரும். அந்நாளிலே பஞ்சமர்களுக்குத் தனியே சங்கங்கள் ஏற்படும்படியான அவசியம் இராது.

கிறிஸ்தவ சமூகத்தினருக்குத் தனியே சங்கங்கள் ஏற்படுவதற்கு அவ்வாறு வியாஜம் இருப்பதாக நான் நம்பவில்லை. மதத்தினால் அவர்கள் வேறுபட்டிருப்பினும், கூட்டுறவு முறையினால் எல்லாரும் ஒருமைப்பட்டிருக்கமுடியும். இங்கே நம்மவருக்குள் பிளவு ஏற்படுவதற்கான பலவாறான சுபாவங்கள் இருக்கின்றன. இது துர்அதிருஷ்டவசமே யாகும். ஆதலின் கூட்டுறவு முயற்சியானது யாவரையும் ஒருமைப்படுத்தக்கூடிய ஒருவகைச் சக்தியாக இருக்கையில், ஏற்கெனவேயுள்ள மாறுபாடான சுபாவங்களை வற்புறுத்துவதுபோல் தனியான சங்கங்கள் அச்சமூகத்தினருக்கு ஏற்பட்டிருக்க வேண்டியதில்லை.

மிஸ்டர் சுவாமிகண்ணுபிள்ளையின் நிர்வாகமுறையிலே மற்றொரு முக்கியாம்சம் என்னவென்றால், பாங்கிங் யூனியன்களை ஏற்படுத்தியதாம். லோகல் யூனியன்களின் தொகை அதிகரித்திருப்பதனாலும், அந்த யூனியன்களுடன் ஒன்றுபட்டிருக்கும் பிரைமரி சங்கங்களின் தொகை வளர்ந்திருப்பதனாலும், வருங்காலத்தில் நல்ல பலன் கிடைக்கலாம்.

## வியாசங்கள்.

கான்பரன்ஸின் முன் பல வியாசங்கள் ஆலோசனைக்கு வந்திருக்கின்றன. அவைகளில் சிலவற்றை இங்கே குறிப்பிடுவோம். வாசவசதிகள் கட்டிக்கொடுக்கும் சங்கங்கள், அவைகளுக்கு ஏற்படும் கஷ்டங்கள், அவைகளை நன்கு நிர்வகிப்பதற்குற்ற யோசனைகள் ஆகிய விவரங்களடங்கிய வியாசங்கள் இருக்கின்றன. விவசாயச் சங்கங்களை ஏற்படுத்தல், விவசாயத்துக்கு மிகவும் ஜீவாதாரமான பொலிகாளைகளை வளர்த்தல், கூட்டுறவுச் சங்கங்களின் காரியதரிசிகளுக்கு எவ்வாறு பயிற்சி கொடுத்தல், அவ்விஷயமாய் ஆசிரியர்களை எவ்வாறு உபயோகிக்கலாம், என்ற பல விஷயங்களைப்பற்றிச் சொல்லும் வியாசங்களும் இருக்கின்றன. நம் வேண்டுகோளுக்கிணங்கி வியாசங்களை எழுதியனுப்பி அன்

புடன் உதவிய கனவான்களுக்கு நான் மனப்பூர்வமாக வந்தனமளிக்க வேண்டும்.

## கோவாபரேடிவ் "புல்லெட்டின்".

கோவாபரேடிவ் புல்லெட்டின் என்ற சஞ்சிகையானது சென்ற ஜுலை மாதம் முதல் மாதந்தோறும் பிரசுரமாகி வருகிறது. கூட்டுறவு முயற்சியை பிரசித்தப்படுத்தும் நண்பர்கள் அப்பத்திரிகைக்கு, ஆங்காங்கு கூட்டுறவுச் சங்க விஷயமாயுள்ள அனுபவங்களைக் கொண்டு நல்ல நிருபங்களையும் வியாசங்களையும் எழுதியனுப்பியும், அப்பத்திரிகையின் சந்தாதாரர்களாகச் சேர்ந்தும், அதற்குரிய சந்தாவை தாமதமின்றிச் செலுத்தியும், ஆதரவளிக்கலாம். அப்பத்திரிகையானது வியாபார தோரணையில் நடத்தப்படவேண்டி யிருக்கிறது. ஆதலின் சடுதியில் சந்தாவைக் கொடுத்தால், இருமடங்கு உதவியதுபோலாகு மென்பதை யாவரும் கவனித்து, பாக்கி சந்தாவையும் நடை முதல் வருஷ சந்தாவையும் சீக்கிரம் செலுத்துவார்களாக. மாகாணத்தின் மேற்குப்புற ஜில்லாக்களிலே கூட்டுறவு முயற்சியில் பெரிதும் சிரத்தை காட்டப்படுகிற தென்பதற்கு உதாரணமாக, அப்பத்திரிகையை கன்னட பாஷையிலும் பிரசுரிக்க வேண்டுமென்று பலர் விரும்புகின்றனர். தகுந்த ஆதரவு கிடைக்குமாயின், கன்னட பாஷையிலும் அப்பத்திரிகையை மூன்று மாதத்திற்கு ஒரு முறை வெளியாகும்படி நாங்கள் ஏற்பாடு செய்ய முடியும்.

## எனது அனுபவம்.

இரண்டு கூட்டுறவுச் சங்கங்களில் எனக்கு நேர்முகமான அனுபவம் உண்டு. அதன் விவரத்தை இங்கே எடுத்துக் கூறுகிறேன். சங்கங்களை நிர்வகித்து நடத்த முதன் முதல் முன்வருகிறவர்கள் உற்சாக புருஷர்களாய் இருக்கிறார்கள். அச்சங்கமானது தங்களுடைய சொந்த சங்கமென அவர்கள் கருதியிருப்பதுபோல், சங்கத்தின் காரியங்களைக் கவனிக்கிறார்கள். ஆதியிலே சங்கத்தில் ஏற்படும் குறை யென்னவென்றால், ஒழுங்கான ஏற்பாடு இல்லாமலிருப்பதும், சரிவர கணக்கு வழக்கு இல்லாதிருப்பதுமாம். எனவே சங்கத்தின்மீது குணதோஷங்கள் கூற சமயம் வாய்க்கிறது! குணதோஷங் கூறுகிறவர்களோ மிகவும் பிரமாதமாய்க் குற்றம் கண்டுபிடிக்கிறார்கள்; ஒரு துரும்புபோன்ற விஷயத்தைப் பற்றியும் பிரமாதமாக சச்சரவுபோடுகின்றனர். மிகவும் அற்பமான விஷயத்தைக் குறித்தும் பிரமாதமான தோஷங் கூறப்படும் பொழுது, சங்கத்திற்கு ஏதோ பெருத்த நஷ்டம் ஏற்பட்டுவிட்டதென்று அங்கத்தினர் கருதிவிடுகிறார்கள். இவ்வாறு புகார் ஏற்பட்டுவிடவே முதன்முதல் நிர்வாகிகளாக முன்வந்தவர்கள் விலகிக்கொள்ள, புதிய



நிர்வாகிகள் முன்வருகிறார்கள். நிர்வாகிகளிலே விரும்பத்தகாத யாரேனும் இருப்பார்களானால், சங்க காரியங்களிலே அல்லல் ஏற்பட்டுவிடுகிறது. ஒழுங்கான ஏற்பாடும் தீவிரமும் இருக்குமாகில், நிர்வாகிகளிலே விரும்பத் தகாதவர்கள் போக்கிவிடப் படுவார்கள். அவ்வாறு போக்கிவிட்டு, அங்கத்தினரின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்களைச் சேர்த்துக்கொண்டு வேலையைக் கவனிப்பார்கள். அப்பொழுது, சங்கத்தில் ஏற்கெனவே ஏதேனும் குற்றங்குறை இருப்பின், அது சரிப்பட்டுப் போகுமென்ற நம்பிக்கை மெம்பர்களுக்கு உதிக்கிறது.

## முடிவுரை.

கூட்டுறவு முயற்சியில் ஏற்படும் மிகவும் முக்கியமான கஷ்டம் என்னவென்றால், சரியான உணர்ச்சியும் நடக்கையும் வாய்ந்த கூட்டுறவுக்காரர் கிடைக்க வேண்டு மென்பதாகும். போட்டி ஏற்பட்டுவிடுகிறது; அயலாரை ஏமாற்றிவிட வேண்டுமென்ற உணர்ச்சியும் இல்லாமற் போகவில்லை. சங்கம் நிர்வகித்தலில் தீவிர சம்பந்தமில்லாத அங்கத்தவர்களோ தாம் சங்கத்தின் மெம்பர்களென்றுகூட சிரத்தை காட்டாது போய்விடுகிறார்கள். இனி, நாமோ நமக்குப் பதிலாக ஊழியம் புரிவோருக்குத் தீமைகருதுகின்றோம். மேலும் சங்க விஷயமாய் நாம் நமது கடமையைச் செய்து தீர்க்க வேண்டாமோ என்பதையும் மறந்து விடுகிறோம். அதோடு சங்கத்திலே இதரர் நல்ல வேலை செய்திருப்பதையும் நாம் பாராட்டுவதில்லை.

இராஜீய விஷயமாய் நமது ஜனங்கள் ஊழியம் புரிவதைக் காட்டிலும் கூட்டுறவு விஷயமாய் நாம் நல்ல ஊழியம் புரிந்திருக்கிறோமென நான் சொல்லலாகுமோ? நமது பரம்பரையை யனுசரித்து, பிளவுண்டு பண்ணும்படியான சுபாவங்கள் தலைகாட்டுவதின் தீமை எவ்வளவென்பதை நாம் பட்டறிந்திருக்கிறோம். பிளவுண்டு பண்ணும்படியான சுபாவம் இருப்பதனால், சமூகத்திலே ஒவ்வொருவரும் தான் சமூகத்தினின்று விலகி தனிமையில் நிற்பதைக்கண்டு பெருமை கொள்ளும்படியிருக்கிறது. சமீபத்திலே அத்தகைய சுபாவங்கள் பெருத்திருக்கின்றன; ஆயினும் கூட்டுறவு முறை என்பதனாலேயே யாவரும் ஒருமைப்பட்டு ஏகமனதாய் இருக்க இடமுண்டு. கூட்டுறவு முயற்சியில் பிளவுண்டு பண்ணும்படியான சுபாவங்களுக்கு இடங்கொடுத்து, ஹிந்துக்கள், முகம்மதியர், ஸீக்கியர், கிறிஸ்தவர் என்ற பாகுபாட்டுக்கு நாம் காரணமாய்விடின் நாம் மதியீனர்களாவோம்.

## அக்கிராசனாதிபதியின் பிரசங்கம்.

உபசரணைப்பிரசங்கம் முடிந்தபின், கனம் திவான் பகதூர் P. ராஜகோபாலாச்சாரியார் அக்கிராசனம் வகிக்க வேண்டுமென்று மிஸ்டர்

N. பட்டாபிராமராவ் பிரேரித்தார். அவ்வாறே கனம், ஆச்சாரியார் அக்
கிராசனத்தில் அமர்ந்து செய்த பிரசங்கம் பின்வருமாறு :—

## முன்னுரை.

கனவான்களே ! மாகாண கூட்டுறவு கான்பரன்ஸின் ஆருவது
வருஷக் கூட்டத்தில் பிரசன்னமாயிருக்கும் உங்கள் முன்னிலையில் பேச
எனக்கு மிக்க சந்தோஷமே. முன்னம் கூட்டுறவுச் சங்கங்களின் ரெஜி
ஸ்ட்ராராக இருந்த ஒருவர் அவ்வாறு உங்கள் முன்னிலையில் பேசவந்
ததுபற்றி உங்களுக்கும் சந்தோஷமாயிருக்கு மென்பது எனது துணிவு.
வருஷ மொருமுறைகூடும் இச்சபையின் முன்னே, போனவருஷம் நடந்
துள்ள வேலைவிவரங்களை சுருக்கமாய் எடுத்துச் சொல்லுதல் வழக்கம்;
கூட்டுறவுச் சங்கங்களின் வருஷாந்திர ரிபோர்ட் சீக்கிரம் வெளியாகப்போ
வதால், வேலை விவரத்தைப் பற்றி விரிவாய்ச் சொல்லவேண்டிய அவசிய
மில்லை. ஆகவே கூட்டுறவு முயற்சி எவ்வளவு முன்னேறியிருக்கிறதென்
பதற்குச் சிலபுள்ளிகளை மட்டும் குறிப்பிடுகிறேன். வருஷ ஆரம்பத்திலே
11 ஸெண்ட்ரல் பாங்கிகள் இருந்தன: அவைகளில் 7 பாங்கிகள் பணவுதவி
புரிந்துவந்ததோடு, மேற்பார்வையையும் நடத்திவந்தன. பிரைமரி சங்கங்
களை மேற்பார்வை பார்ப்பதையே நோக்கமாகக்கொண்ட 31 யூனியன்
கள் இருந்தன. இன்னும் 1602 விவசாய சங்கங்களும் விவசாய சம்பந்த
மல்லாத 157 இதரசங்கங்களும் இருந்தன ; கூட்டுறவுமுயற்சியின் ஆரம்
பகாலத்திலே ஏற்பட்டதும், அம்முயற்சி விஷயமாய் மிக்க ஊக்கம் காட்
டியிருப்பதுமான சென்னை ஸெண்ட்ரல் பாங்கியானது பிரஸ்தாபவருஷத்
திலே மாகாணபாங்கியாக மாற்றப்பட்டது. நிர்வாகத்தை நடத்திவரும்
யூனியன்களில் ஒன்ருன விசாகப்பட்டணம் யூனியனுனது ஸெண்ட்ரல்
பாங்கியாக மாறியது. வேலூரில் ஒன்றும் பர்ஹாம்பூரில் ஒன்றுமாக
இரண்டு ஸெண்ட்ரல் பாங்கிகள் புதிதாக ஏற்பட்டன. இவைகளைத்தவிர,
மேற்பார்வை பார்ப்பதையே நோக்கமாகக் கொண்டு 27 யூனியன்களும்
325 விவசாய சங்கங்களும் விவசாய சம்பந்தமல்லாத 67 இதர சங்கங்
களும் பிரஸ்தாபவருஷத்தில் ஸ்தாபிக்கப்பெற்றன. மேற்கண்ட விவசாய
சங்கங்களில் 6 சங்கங்கள் இவ்வருஷம் கலைக்கப்பட்டுப்போயின.

எனவே வருஷமுடிவில் 13 ஸெண்ட்ரல் பாங்கிகளும் மேற்
பார்வை பார்க்க 57 யூனியன்களும் 1921 விவசாய சங்கங்களும் விவ
சாய சம்பந்தமல்லாத 224 இதர சங்கங்களும் இருந்திருக்கின்றன. பல
வாருன சங்கங்களிலும் அங்கத்தினராய் இருந்தவர்களின் தொகை முன்
னம் 1,35,197 ; இப்பொழுதோ 1,63,121 ஆகும். அவைகளின்
மொத்த மூலதனம் முன்னம் 16[illegible] லட்சத்து 99 ஆயிரம் ரூபாய்; இப்
பொழுதோ 204 லட்சத்து 99 ஆயிரம் ரூபாய் ; பணவுதவி புரியும்



பாங்கிகளிலிருந்து பிரைமரி சங்கங்களுக்கு முந்திய வருஷத்தில் 59
லட்சத்து 47 ஆயிரம் ரூபாய் கிடைத்திருக்க, இவ்வருஷத்திலோ 71
லட்சத்து சொச்சம் ரூபாய் கிடைத்துளது. சங்கங்களின் மொத்த
க்ஷேமநிதி முன்னம் 8 லட்சத்து 49 ஆயிரம் ரூபாயாக இருந்தது. இப்
பொழுது 9 லட்சத்து 62 ஆயிரம் ரூபாயாக உயர்ந்திருக்கிறது.

ஆதலின், சங்கங்களின் தொகையையும் அங்கத்தினரின் தொகை
யையும் கவனிக்குமளவில், வெகுவாக முன்னேற்றம் உண்டென்பதில்
தடையில்லை. தொகைவளர்ச்சியை மட்டும் கவனித்து, வெகுவாக முன்
னேற்றம் ஏற்பட்டு விட்டதென்று கருதியிருந்துவிடுதல் அவ்வளவு சரி
யல்ல.

## உண்மையான பலன் கிடைக்கும் வழி.

கூட்டுறவு முயற்சியினுல் உண்மையான பலன் கிடைக்க வேண்
டின், ஜனசமுகத்திலே எல்லா வகுப்பினரும் அங்கத்தினராக இருத்தல்
வேண்டும். எல்லாச் சங்கங்களிலுமுள்ள 1,63,221 அங்கத்தினரில்
29,236 பேர் பிராமணர்; 1,02,026 பேர் பிராமணரல்லாத ஹிந்துக்கள்;
12,134 பேர் கிறிஸ்தவர்; 9,011 பேர் மகம்மதியர்; 7,999 பேர் பஞ்சமர்;
இதரர்கள் என்போர் 2,715 பேராவர் ; பிரஸ்தாபவருஷத்திலே, 1,516
பஞ்சமர்புதிதாகச் சேர்ந்திருக்கிருர்கள். அதாவது வருஷ ஆரம்பத்தில்
6,483 பேர் இருந்திருக்க, வருஷக்கடைசியில் 7,999 பேர் இருந்திருக்கி
ருர்கள், பஞ்சமர்கள் மட்டு மடங்கிய சங்கங்கள் 15 ஆகும். சுமார் 102
சங்கங்களிலே ஒவ்வொரு சங்கத்திலும் 25 பேருக்குமேல் பஞ்சமராவர்;
48 சங்கங்களிலே ஒவ்வொன்றிலும் சரிபாதிபேருக்கு மேல் பஞ்சமராவர்;
தோட்டிகளுக்கென்று பிரஸ்தாப வருஷத்திலே 5 சங்கங்கள் ஏற்பட்டன;
இம்மாகாணத்திலே அவர்களுக்காக 25 சங்கங்கள் உள ; முனிஸிபாலி
டிகளில் வேலை செய்யும் தோட்டிகளின் நன்மைக்காக அச்சங்கங்கள்
ஏற்பட்டிருப்பதனுல், அவ்விஷயமாய் முனிஸிபல் ஸபைகளெல்லாம்
உதவிபுரிய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன். செம்படவர்
களுக்கு நாணயம் தேடிக்கொடுக்க 11 சங்கங்களும், வாசவசதிகளைத்
தேடிக்கொடுக்க ஒரு சங்கமும், உள; மீன் இலாகா உதவித் தலைவரான
மிஸ்டர் கோவிந்தனுடைய முயற்சியினுலேயே அச்சங்கங்கள் ஏற்படலா
யின ; படகர்களுக்காக 6 சங்கங்களும் தோடர்கள் என்போருக்காக
ஒரு சங்கமும் இவ்வருஷம் ஏற்பட்டன ; ஆகவே படகர்களுக்கு 13
சங்கங்களும் தோடர்களுக்கு ஒன்றும் ஆக 15 சங்கங்கள் உள. இம்மா
காணத்திலே கூட்டுறவு முயற்சியானது தேச லட்சியத்தை யனுசரித்
திருக்கிற தென்பதில் தடையில்லை. அவ்வாறு இருக்க வேண்டுமென்

## கட்சிப் பிரதிகட்சி வேண்டாம்.

தேசத்திலேஇராஜீயவிஷமாகவோ வேறுவிஷயமாகவோ தோன்றும் கூர்மையான அபிப்பிராயபேதங்கள் கூட்டுறவு முயற்சியில் கொண்டு வந்து புகுத்தபடுமாயின், அம்முயற்சிக்கு அதைக்காட்டிலும் தீமை விளைவிக்கக்கூடியது வேறெதுவுமில்லை. ஆகவே கூட்டுறவு முயற்சிக்காரர்கள் தங்களது இராஜீய அபிப்பிராயங்களை நம் கூட்டுறவுச் சங்கங்களில் தலைகாட்டவிடக்கூடாதென் நான் மிக்க மனப்பூர்வமாய் எடுத்துக் கூறுகிறேன். ஏதோ ஆபத்துகள் நேரக்கூடுமென்று உத்தேசமாக நான் அவ்விதம் சொல்லவில்லை. ஆனால் எனக்குத் தெரிந்த தகவல்களைக்கொண்டே உரைக்கிறேன். ஒரு யூனியனுடைய அடிமுதல் நுனிவரையில் பிராமணர்—பிராமணரல்லாதார் என்ற கட்சியினால் பிளவுபட்டுக் கிடக்கிறது. ஜில்லா பாங்கியொன்றின் நிர்வாகமெம்பர்கள் சமீபத்திலே தேர்ந்தெடுக்கப்பட்டகாலத்தில், அக்கட்சிப் பிரதிகட்சியைக்கொண்டே எலக்ஷன்கள் நடைபெற்றிருக்கின்றன. மற்றொரு சங்கமோ மொஹரம்—தஸரா பண்டிகைகளின் சச்சரவு காரணமாக சின்னாபின்னப்பட்டுக் கிடக்கிறது. இன்னும் வேறொரு சங்கமோ மிதவாதிகள்—அமிதவாதிகள் என்ற வேறுபாட்டினால் பாழாக்கப்பட்டுக்கிடக்கிறது. எனவே இராஜீய விஷயம், ஜனாச்சார விஷயம், மதவிஷயம் ஆகிய விஷயங்களால் பலவாறான வகுப்பினருக்கும் ஜாதியினருக்கும் ஏற்படக்கூடிய மாறுபாடுகள் கூட்டுறவுச் சங்கங்களில் வந்துபுகுந்து கட்டுக்கடங்காமற் போகுமுன்பே, சங்கங்களில் அத்தகைய மாறுபாடுகள் தலைகாட்டாவண்ணம் அறவே அகற்றி விடவேண்டுமென்று கூட்டுறவு முயற்சியில் சிரத்தைவாய்ந்த ஒவ்வொருவரையும் நான் கேட்டுக் கொள்ளுகிறேன். இவ்வாறு நான் சொல்லும்பொழுது என்னை எவரும் வேறுவிதமாக நினைக்க வேண்டாம். யாவரும் தனது இராஜீய விஷயத்தை விட்டுவிடவேண்டுமென்று நான் சொல்லவில்லை. இச்சமயம் தேச ஜனங்களின் மனதைக் கவர்ந்திருக்கும் இராஜீய விஷயம், ஜனாச்சார விஷயம், மதவிஷயம் ஆகிய விஷயங்களை யாவரும் நெருங்கிக் கவனிக்காமல் இருந்து விடவேண்டுமெனவும் நான் கூறவில்லை. அப்பலவாறான விஷயங்களைப்பற்றி யாவரும் தங்களது தீவிரமான அபிப்பிராயங்களைச் சொல்லாமலிருந்து விடவேண்டுமென்றாவது நான் உரைக்கவில்லை. ஆனால் நான் எல்லாரையும் கேட்டுக்கொள்வதென்ன? கூட்டுறவு முயற்சியில் சம்பந்தப்பட்டுள்ள யாவரும் தங்களது இதர அபிப்பிராய பேதங்களை மறந்து, கூட்டுறவு முயற்சியை நன்கு பலப்படுத்தி, சங்கங்களை அபிவிருத்தி செய்யவேண்டுமென்றே வேண்டிக் கொள்ளுகிறேன்.



## காலத்தில் செலுத்திவிடவேண்டும்.

இனி கூட்டுறவு முயற்சியில் அடுத்த படியாக மிகவும் முக்கியமான விஷயம் யாதெனில், கடன்களையும் அதன் வட்டித்தொகைகளையும் சரியான காலத்தில் தவறாமல் செலுத்தி வரவேண்டுமென்பதாகும். சென்ற 1917-ம் வருஷத்திலே இவ்விஷயத்தில் சிறிது அபிவிருத்தி ஏற்பட்டுளது. ஆனால் விவசாய சங்கங்கள், விவசாய சம்பந்தமல்லாத இதரசங்கங்கள் ஆகிய இவைகளுக்கு வரவேண்டிய பாக்கித்தொகைகள் சரிவர வந்திருக்கின்றனவென்று அவ்வளவு திருப்திகரமாய்ச் சொல்லுவதற்கில்லை. சங்கங்கள் நன்கு நடைபெறவேண்டின், அவைகளுக்கு வரவேண்டிய கடன் தொகை, வட்டித்தொகை ஆகிய இவைகளை குறித்தகாலத்தில் திருப்பிக் கொடுத்துவிட வேண்டுமென்பதே முக்கியமாகும். ஆனால், சங்கங்களின் தொகை வளர்ந்திருப்பதற்கு ஏற்றவாறு, அவைகளை மேற்பார்வைபார்க்கும் யூனியன்களின் தொகை அதிகரிக்காமல் இருப்பதினாலும், யுத்தங்காரணமான வியாபாரமுறையினால் பணப்பழக்கம் முட்டுப்பட்டதனாலும் தென்னாற்காடு முதலிய இடங்களிலே புயல் காற்று வீசி ஜனங்களுக்கு நஷ்டம் நேர்ந்ததனாலும், கிருஷ்ணா முதலிய இடங்களில் வெள்ளப்பாழ் உண்டானதாலும், கோயமுத்தூர் முதலிய இடங்களில் பிளேக் வியாதி தோன்றியதனாலும், பாக்கித்தொகை சரிவர வசூலாகாமற் போனதற்கு ஒருவிதத்தில் காரணம் சொல்லலாம். என்றாலும், கிராமங்களிலுள்ள கூட்டுறவுக்காரர்கள் தங்களது கடமைகளை உணர்ந்துகொண்டு, அவைகளை நிறைவேற்றும் வண்ணம் அவர்களுக்கு கூட்டுறவு முயற்சியின் லட்சியத்தை இன்னும் எவ்வளவோ எடுத்துக்காட்டி வற்புறுத்த இடமில்லாமற் போகவில்லை. இது மிகவும் சிரமத்திற்கு இடமான வேலைதான்; ஆகவே அபிவிருத்தி மெதுவாகத்தான் இருக்கும். இதை நான் அறிவேன். ஆதலினால் தான், கூட்டுறவு முயற்சிக்காரர்கள் தங்களது கடமையை உணர்ந்து இடைவிடாமல் இவ்விஷயமாய் வேலையை நடத்தி வரவேண்டும்.

## மேற்பார்வை முக்கியம்.

கூட்டுறவு முயற்சி விஷயமாய் இச்சமயம் உள்ள மிகவும் முக்கியமான தீமைகளில் ஒன்று என்ன? சங்கங்களின் மேற்பார்வை தகுந்தபடி இல்லாதிருப்பதே யென்று சொல்லலாகும். தகுந்த மேற்பார்வை இல்லாதிருப்பதனாலேயே பலசங்கங்களில் நிலுவை அதிகமாக ஏற்பட்டிருக்கவேண்டும். கிராமங்களிலுள்ள சங்கங்களை அடிக்கடி போய்ப் பார்த்து, அவைகளுக்கு உற்சாகம் ஊட்டிவராமற்போனால், கிராமங்களிலுள்ள கூட்டுறவுக்காரர்கள் தங்களது கடமைகளையும் பொறுப்புகளையும்

மறந்துவிடும்படி நேரும். ஆகவே யூனியன்கள் அடிக்கடி மேற்பார்வை நடத்திவருவதுதான் சிறந்த பரிகாரமாகும். வருஷக் கடைசியில் உள்ள 13 ஸெண்ட்ரல் பாங்கிகளிலே 12 பாங்கிகள் பணவுதவி புரிந்து வருவதோடு மேற்பார்வைவேலை நடத்திவந்திருப்பதையும் மேற்பார்வை பார்ப்பதற்காகவே 57 யூனியன்கள் இருப்பதையும், கண்டு நான் திருப்தியடைகிறேன். மேற்பார்வை பார்ப்பதற்காக உள்ள யூனியன்கள் போதா ; கிராமாந்தரங்களிலுள்ள சங்கங்களின் மேற்பார்வையை நடத்திவருவதற்காகவுள்ள யூனியன்களின் தொகை வெகுவாக வளரவேண்டும். அத்தகைய யூனியன்கள் ஜனநாயக சங்கங்களாகும். அதனால் ஜனங்களின் அறிவும் ஞானமும் பெருகும்; ஆதலால் மேற்பார்வை நடத்தும் யூனியன்களின் தொகையை எவ்வளவு அதிகமாக்கக் கூடுமோ அவ்வளவு அதிகமாக்கவேண்டும்.

## யூனியன்கள்.

ஜில்லா யூனியன்களின் விசேஷத்தைக் குறைத்துக் கூறுவதாக எனக்குச்சிறிதும் உத்தேசங் கிடையாது. லோகல் யூனியன்களின் சுதந்திரத்தைக் குறைக்காமலேயே ஜில்லா யூனியன்கள் நல்ல வேலை புரியலாகும். லோகல் யூனியன்களுக்கு எதிரிடையாய் நடக்க ஜில்லா யூனியனென்று கருதின்;காரியம் கெட்டுப்போம். வருஷக்கடைசியில் உள்ள 2,145பிரைமரி சங்கங்களிலே சுமார் 1,758 சங்கங்கள் ஏதோ ஒருவகையானமேற்பார்வைக்கு உட்பட்டுள்ளன; ஆயினும் அந்தச் சங்கங்களிற் பல சங்கங்கள் நெருங்கி மேற்பார்வைபார்க்கபடவில்லை. இதற்குவேண்டுமளவு லோகல் யூனியன்கள் இல்லாமற்போனதேயாகும். தேசத்தில் ஆங்காங்கே லோகல் யூனியன்கள் நிரம்பிக்கிடக்குமாறு அந்த யூனியன்களை நாம் அதிகமாக்கவேண்டும். ஒரு ஜில்லாவிலே ஜில்லா யூனியனும் பிரைமரி சங்கங்களும் மட்டும் இருந்தால் போதா; அவ்விரண்டுக்கும் இடைநடுவே தொடர்பு உண்டுபண்ணும்படியான லோகல் யூனியன்கள் இருந்தாற்தான்,காரியம் நன்கு நடக்கும். ஒரு பெரிய வட்டம் அல்லது ஒரு பெரிய தாலூக்காவுக்கும் ஒரு ஜில்லா யூனியன் மட்டும் இருந்தால் போதாது.

## பணவிஷயம்.

பணவிஷயம் மிகவும் முக்கியமான அம்சமாகும். சங்கங்களில் பலவோ் விவசாய ஐக்கிய நாணயச்சங்கங்களாகும். ஆகவே இதர இடங்களில் கிடைப்பதைக் காட்டிலும் சௌகரியமான வட்டிக்கு இலகுவாய் விவசாயிகளுக்குப்பணம் கிடைக்கும்படி முயலவே அச்சங்கங்கள் ஏற்பட்டுள்ளன. புதிய சங்கங்கள் ஏற்படுவதற்கு அனுசரணையாக இன்னும் பலருக்கும் பணவுதவி கிடைக்க வழிபிறக்காதுபோனால், புதிய சங்கங்கள் ஏற்படுவதில் பயனிராது. பணவுதவி செய்வதற்காக ஆதியில் ஏற்பட்ட பழைய



சங்கங்களின் பணத்தெம்பு இதற்குள் குறுகிப் போயிருக்கவேண்டும். ஆகவே அவைகளால் இனி செய்யக்கூடிய பணவுதவியும் குறைவாகத்தான் இருக்கும். ஆதலின், பணவுதவி செய்வதற்காக ஏற்கனவேயுள்ள சமீபகாலபாங்கிகளை வலுப்படுத்தவேண்டு மென்பதோடு, புதிய பாங்கிகளை ஏற்படுத்த வேண்டியதும் அவசியமாகும். கோவாபரேடிவ் பாங்கிகள் ஏற்பட்டால், ஏற்கனவேயுள்ள நிதிகள் பாதகப்பட்டுப்போமென சிலர் கருதுகின்றனர். அக்கருத்து தவறாகும்.

## இதர சங்கங்கள் வேண்டும்.

ஐக்கிய நாணயச் சங்கங்களைத்தவிர இதரவிதமான விவசாய சங்கங்களின் தொகை வளரவில்லையேயென்றும், இம்மாகாணத்தின் கூட்டுறவு முயற்சியில் அது ஒரு குறையாகு மென்றும், பலர் பலதடவைகளில் வற்புறுத்தியிருக்கின்றனர். வருஷக்கடைசியில் உள்ள 1,9[illegible]1 விவசாயசங்கங்ளிலே 1,90[illegible] சங்கங்கள் நாணயத்தைத் தேடிக்கொடுக்கும் சங்கங்களாய் இருக்கின்றன. பண்டங்களை வாங்கி விற்பதற்கு 12 சங்கங்களும், பண்டங்களைப் பெருக்கவும் விற்கவும் 2 சங்கங்களுமே உள. விவசாய சம்பந்தமல்லாத இதர சங்கங்களின் தொகை கூடியவரையில் ; அவ்வாறான திருப்திகரமாயிருக்கின்றன சங்கங்கள் 224 உண்டு. அவைகளில் 19 சங்கங்கள் நாணயந்தேடிக் கொடுக்கும் சங்கங்களாகும். 15 சங்கங்களோ சாமான்களை வாங்கிவிற்கும் சங்கங்களாகும். 2 சங்கங்களோ பண்டங்களின் உற்பத்தியைக் கவனிப்பவை. 10 சங்கங்களோ வாசவசதிக்கான சாதனம் தேடிக்கொடுப்பவை. நாணயந்தேடிக்கொடுப்பது ஒருபுறமிருக்க, இதர நோக்கங்களையுடைய சங்கங்கள் ஏராளமாக ஏற்படும் வரையில், கூட்டுறவு முயற்சியினால் நல்ல பலன் கிடைத்துவிட்டதென்று சொல்லிவிடமுடியாதெனப் பலர் சொல்லியிருக்கிறார்கள். அதையே நான் மீண்டும் எடுத்துச் சொல்லவேண்டும். மொத்தமாக சாமான்களை வாங்கி விற்கும் விஷயமாய் எவ்வளவோ பலன் அடைய இடமிருக்கிறது. மெம்பர்களின் நன்மையைக் கவனித்து சாமான்களை வாங்கி விற்பதற்குற்ற பிரைமரி சங்கங்கள் ஏராளமாய் ஏற்பட்டால் போதும். புது மாதிரியான சங்கங்கள் வேண்டுமென்பதல்ல. மிகவும் ஆசைக்கிடமாய் இல்லாமல், மேற்சொன்னபடி பிரைமரி சங்கங்களை ஏற்படுத்துவது அவ்வளவு கஷ்டமாயிராது. விவசாய சம்பந்தமாய் விதைகள், விவசாய உபகரணங்கள், முதலியவைகளைத் தேடிக்கொடுப்பதற்கும், மகசூல்களை மொத்தத்தில் வாங்கி விற்பதற்கும் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுகையில், அவ்விஷயமாய் நெருங்கி ஒத்துழைக்க வேண்டுமென்று கூட்டுறவு இலாகா அதிகாரிகளுக்கும் விவசாய இலாகா அதிகாரிகளுக்கும் சில தினங்களுக்கு முன் கவர்ன்மெண்

டார் அறிக்கை யிட்டிருக்கின்றனர். ஆகவே, நாணயங் தேடிக்கொடுப்பதைத் தவிர, இதர அம்சங்களைக் கவனிக்கும் சங்கங்கள் ஏற்படும் விஷயமாய்த் தீவிர ஊக்கம் காட்டப்படுமென நான் நம்புகிறேன்.

### முடிவுரை.

தகராறுகளும் வழக்குகளும் ஏற்படும் விஷயமாய் இரண்டொரு வார்த்தை சொல்லுகிறேன். பிரஸ்தாப வருஷத்திலே 1071 தாவாக்கள் தாக்கலாயினவென்று எனக்குத் தெரியவருகிறது. வருஷக் கடைசியிலே 217 தாவாக்கள் பைசலாகாமல் இருந்திருக்கின்றன. தவிர வருஷக்கடைசியிலே 1,588 டிக்கிரிகள் நிறைவேற்றப்படும் தருவாயில் இருந்திருக்கின்றன. இம்மாதிரி ஏராளமான வழக்குகள் ஏற்பட்டிருத்தல் சரியல்ல. கோர்ட்டுகளுக்குப் போகாமல் மத்தியஸ்தமாகவே தீர்ந்துபோவதற்கு இனி முயற்சி செய்யப்படுமென்று நான் நம்பியிருக்கிறேன். கோர்ட்டுகளில்போய் சச்சரவுகளைப் பைசல் செய்துகொள்ளுவதில் தாமதம் கட்டாயம் ஏற்படும். முன்னம் 1906-ம் வருஷத்திலே ஸிம்லாவில் கூட்டுறவு கான்பரன்ஸ் நடைபெற்றது. அதில் நானும் பிரசன்னமாயிருந்தேன். கூட்டுறவுச் சங்கங்களின் விஷயமாய் ஏற்படும் தகராறுகளைக் கோர்ட்டுக்குக் கொண்டுபோதல் உசிதமல்லவென்றும், கிஸ்திபாக்கியை ஜப்திசெய்து வசூல் செய்வதுபோல் சங்கங்களின் நிலுவையை வசூல் செய்துவிடவேண்டுமென்றும், ரெஜிஸ்ட்ரார்களிற் சிலர் யோசனை சொன்னார்கள். இவ்விஷயம் எனக்கு ஞாபகம் இருக்கிறது அத்தகைய யோசனை அனுஷ்டிக்கப்படவில்லை. என்றாலும், கோர்ட்டுகளுக்குப்போய் வழக்குகளைத் தீர்த்துக்கொள்ளுதல் என்ற வழக்கத்தை எவ்வளவு குறைக்கலாமோ அவ்வளவு குறைக்கவேண்டுமென்பதே எனது யோசனை. கடன் கொடுக்கும்பொழுது உஷாராய் இருக்கவேண்டுமென்பதோடு, சரியான காலத்தில் கடனை வசூலிக்கவும் முயற்சி செய்தால், கோர்ட்டுகளுக்குப்போகவேண்டிய அவசியம் குறையும். இது மிகவும் முக்கியமான அம்சம். ஆகவே எல்லாச்சங்கங்களும் இவ்விஷயத்தில் தக்க கவனம் செலுத்துமாக.

“கனவான்களே! எனது பிரசங்கம் முடிந்துவிட்டது. இச்சபையின் முன்னிலையில் ஆலோசனைக்கு வரும் தீர்மானங்களைப் பற்றி இச்சபை பூர்த்தியாகும் காலத்தில், நான் இரண்டொரு வார்த்தைகள் சொல்லவேண்டிய அவசியம் இருக்கலாம். கூட்டுறவு முயற்சியில் சம்பந்தப்பட்டுள்ள எனது பழைய நண்பர்களாகிய உங்கள் மத்தியில் இருக்கும்படி சமயம்வாய்த்ததற்கு நான் சந்தோஷப்படுகிறேன். நான் சொல்லிவந்ததில் நீங்கள் புதிய விஷயங்களை உணர்ந்துகொள்வதைவிட



உங்களிடமிருந்து புதிய விஷயங்களை நான் உணர்ந்துகொள்ளக் கூடுமென நினைக்கிறேன்.”

### அபிமானச் செய்திகள்.

மேற்கண்டவாறு அக்கிராசனாதிபதி தமது பிரசங்கத்தைச் செய்ததும், கூட்டத்தின் நோக்கங்களிடம் அபிமானங் காட்டிப் பல கனவான்களிடமிருந்து வந்திருந்த செய்திகள் படிக்கப்பட்டன. திருவாங்கூர் ரெஜிஸ்ட்ராரான மிஸ்டர் கோவிந்த பிள்ளை, மிஸ்டர் N. சுப்பராவ் பந்துலு, திவான் பகதூர் L. D. சுவாமிக்கண்ணு பிள்ளை, மிஸ்டர் M. சிவராவ், மிஸ்டர் K. G. வேங்கடசுப்பையா ஆகிய இவர்கள் தந்திச் செய்திகள் அனுப்பியிருந்தனர்.

அப்பால், புதுக்கோட்டை நெசவுக்காரர்களின் சங்கம், கீழச்சேரி விவசாய பாங்கி, தெனாலி தாலூக்கா கோவாபரேடிவ் யூனியன் ஆகிய இவைகளின் ரிபோர்ட்டுகள் படிக்கப்பட்டன. இத்துடன் கான்பரன்ஸின் முதல்தின நடவடிக்கைகள் முற்றுப் பெற்றன. உடனே விஷய ஆலோசனைக் கமிட்டியார் கூடி, தீர்மானங்களைக் குறித்து ஆலோசனை செய்தனர்.

### இரண்டாள் நாள் நடவடிக்கைகள்.

இரண்டாம் நாள் காலை கான்பரன்ஸ் மறுபடியும் கூடினபோது, மோலாசூர் கூட்டுறவுச் சங்கத்தின் ரிபோர்ட்டும் கைக்களூர் தாலூக்கா யூனியன் ரிபோர்ட்டும் சபைமுன் வாசிக்கப்பட்டன. பிறகு தீர்மானங்கள் ஒன்றின்பின் ஒன்றாய்க் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டன. அவைகளின் விவரம் பின்வருமாறு :—

### நிலங்களின் அபிவிருத்தியைப் பற்றிய சட்டம்.

மிஸ்டர் வி. என். கிருஷ்ணசாமி அய்யர் பின்கண்ட ஒரு தீர்மானத்தைப் பிரேரித்தார் :—“நிலங்களின் அபிவிருத்தியைப் பற்றிய சட்டம் எந்த நோக்கத்தைக் கொண்டு ஆதியில் நிறைவேற்றப்பட்டதோ அந்நோக்கங்களைப் பூர்த்திசெய்துவைக்குமாறு, கூட்டுறவுச் சங்க ரெஜிஸ்ட்ரார், ஸென்ட்ரல் பாங்கிகளையும் யூனியன்களையும் பொறுக்கியெடுத்த சில கிராமச் சங்கங்களையும் கலந்துகொண்டு கவர்ன்மெண்டால் அங்கீகரிக்கப்பட்ட கிராமச் சங்கங்கள் மூலமாய் அந்நோக்கங்களைப் பூர்த்தி செய்து வைக்கவேண்டும்”. அத் தீர்மானத்தை அவர் பிரேரித்துப் பேசியதாவது:—பிரஸ்தாப சட்டம்செய்து 30 வருஷங்களுக்கு மேல் ஆய்விட்டது. விவசாயிகளின் நன்மையை உத்தேசித்து அச்சட்ட நிபந்தனைகளின்படி நாளதுவரையில் கவர்ன்மெண்டார் நடந்துகொள்ள வில்லை. இத்தீர்மானம் அங்கீகரிக்கப்படுமாகில் விவசாயி

களுக்கு விசேஷ நன்மையுண்டாகு மென்பதில் சந்தேகங்கிடையாது. ஸர் டின்ஷா, வாச்சா முதலிய நிபுணர்கள் சொல்லி யிருப்பதைப் பார்த்தால் என்னுடைய தீர்மானத்தின் அவசியம் நன்கு விளங்கும்.

மிஸ்டர் பிரசன்ன ராகவாச்சாரியார் மேற்படி தீர்மானத்தை ஆமோதிக்க, மிஸ்டர் வி. செல்லபதி ராவால் அது ஆதரிக்கப்பட்டு சபையோரால் ஏகோபித்து அங்கீகரிக்கப்பட்டது.

## கூட்டுறவு முயற்சியும் தொழிலபிவிருத்தியும்.

"தெரிந்தெடுத்த ஸ்தலங்களில் ஓடு, செங்கல், சிமிட்டி முதலிய தயாரிக்கும்பொருட்டு ஆங்காங்கு தொழில்சம்பந்தமான கூட்டுறவுச் சங்கங்களை ஸ்தாபிக்கும் விஷயத்தில் கூட்டுறவுச் சங்கங்களும் கைத்தொழில் கூட்டுறவு இலாகாக்களும் தீவிரசிந்தை கொள்ளவேண்டும்" என்ற மற்றொரு தீர்மானத்தை கோயமுத்தூர் மிஸ்டர் எ. எஸ். வைத்தியநாத ஐயர் பிரேரித்துப் பேசியதாவது:—கூட்டுறவுச் சங்கங்களின் உதவியைக் கொண்டு செங்கல், ஓடு, முதலிய சாமான்களைச் சுலபமாய் தயாரித்து விடலாம் என்பதுதான் இத்தீர்மானத்தின் நோக்கம். அது விஷயத்தில் யாரும் இதுவரை சிரத்தை காட்டியதாய்த் தெரியவில்லை. தற்சமயம் மேற்படி தொழில்களை நடத்திவருவோருக்கு கூட்டுறவுச் சங்கங்களினால் ஆகக்கூடிய உபயோகத்தை எடுத்துச்சொன்னால் இம்மாகாணத்தில் கூடியசீக்கிரம் தொழிலபிவிருத்தி யேற்படுமென்பதிற் றடையில்லை.

பிறகு தெனாலி மிஸ்டர் சங்கமேச்வர ராவ் மேற்படி தீர்மானத்தை ஆமோதித்து தெலுங்கு பாஷையில் சிலவிஷயத்தைப் பேசினார். மற்றும் சிலர் தீர்மானத்தைத் தாங்கிப் பேசினார்கள். அக்கிராசனாதிபதி தீர்மானத்தைச் சபையாரின் அங்கீகாரத்திற்கு விடுமுன் பிரஸ்தாப கூட்டுறவுச் சங்கங்களுக்குப் போதியவளவு மூலதனம் வேண்டியிருக்கும் என்று எச்சரிக்கையாய்ச் சில புத்திமதிகள் சொன்னார். முடிவில் தீர்மானம் ஒரு மனதாய் நிறைவேறப்பட்டது.

## விவசாயிகளுக்கு வேண்டிய கருவிகள்.

"விவசாயிகளுக்கு வேண்டியிருக்கும் கருவிகளையும் வீட்டு உபயோகத்துக் கின்றியமையாத சாமான்களையும் வாங்கி விற்பதற்காக ஏற்பாடுகளைச் செய்யும் பொருட்டு ஸ்தல யூனியன்களும் ஜில்லா யூனியன்களும் கிராமச் சங்கங்களும் ஒன்றுகூடி ஆலோசிக்க வேண்டும்." என்று நீடாமங்கலம் ராய் சாகிப் எ. சேதுராமய்யர் ஒரு தீர்மானத்தைக் கொண்டுவந்து, தமது ஜில்லாவில் பிண்ணாக்கு வாங்கி விற்பனை செய்யும் விஷயத்தில் தமக்கு விசேஷ அனுபவமுண்டென்றும்



மொத்த விலைக்குச் சாமான்களை வாங்கிச் சில்லரையாய் விற்பதில் லாபம் கிடைக்கு மென்பதைத் தாம் சொல்லவேண்டிய தனாவசிய மென்றும், சொல்லி மேற்படி தீர்மானத்தை அங்கீகரிக்கும்படி வேண்டினார்.

வடமலைபுரம் மிஸ்டர் ஆர். அனந்தராவ் தீர்மானத்தை ஆமோதிக்கையில், விவசாயக் கருவிகள் மாத்திரமல்ல, விவசாயப் பொருள்களையும் வாங்கி விற்கவேண்டுமென்றுகேட்டுக் கொண்டார். மதுரை ராய் சாகிப் கே. ராமஸ்வாமி அய்யர் தீர்மானித்ததைத் தாங்கிபேசினார். கடைசியில் தீர்மானம் ஒரு மனதாய் நிறைவேறியது.

## மாகாண கூட்டுறவு அச்சுக்கூடம்.

"கூட்டுறவுச் சங்கங்களின் சௌகரியத்தை யுத்தேசித்து மாகாணக் கூட்டுறவு அச்சுக்கூடமொன்றை ஸ்தாபிக்கும்படி மாகாணக் கூட்டுறவு யூனியனை இச்சபை கேட்டுக் கொள்ளுகிறது" என்ற ஒரு தீர்மானத்தை மிஸ்டர் வி. என். கிருஷ்ணசாமி ஐயர் பிரேரித்துப் பேசியதாவது :—போன வருஷத்திலும் இதே விஷயமாய் நாம் ஒரு தீர்மானம் செய்தோம். ஆனாலும் அது போதியவளவு கவனிக்கப்படவில்லை. எத்தனையோ ஜில்லாபாங்கிகளும் ஸென்ட்ரல் அர்பன் பாங்கிகளும் இருக்கின்றன. இவ்வற்றிற்கான புத்தகங்கள், ரெஜிஸ்டர்கள், நோட்டீசுகள் முதலியவைகளை அச்சிட்டுக் கொடுக்க ஓர் அச்சுக்கூட மிருந்தால் அதற்கு வேலை சரியாயிருக்கும். கூட்டுறவுச் சங்கங்கள் வருஷாவருஷம் புத்தகங்கள் முதலியவைகள் அச்சிட எத்தனையோ ரூபாய் செலவிடுகின்றன. அதைக்கொண்டு ஓர் அச்சுக்கூடம் வாங்கிப்போட்டால் எவ்வளவோ உபகாரமாயிருக்கும். செலவில் சிக்கனம் செய்துகாட்டுவது கூட்டுறவுச்சங்கத்தின் நோக்கங்களில் ஒன்றல்லவா? அச்சுக்கூட வேலையாட்களுக்கும் லாபத்தில் ஒரு பகுதியைச் சன்மானமாகக் கொடுத்து அவர்களை முன்னுக்குக் கொண்டுவரலாம். சங்கத்தின் அங்கத்தினரும் லாபமடையலாம். அடுத்த வருஷம் நாம் மறுமுறை கூடுமுன் இக்காரியத்தை நிறைவேற்றிவைப்பீர்களென்று நான் நம்புகிறேன், என்று பேசிமுடித்தார்.

தென் கன்னடத்தைச் சேர்ந்த மிஸ்டர் M. அனந்தராவ் தீர்மானத்தை ஆமோதித்துத் தமது விரிந்த அனுபவத்தையும் சொன்னார் நெல்லூர், மிஸ்டர் கே. வி. ராகவாச்சாரியார் தெலுங்கில் தீர்மானத்தை ஆதரித்து தற்போதுள்ள கஷ்டத்தைச் சபையோருக் கெடுத்துச் சொன்னதோடு, அச்சுக்கூடமொன்றை ஸ்தாபித்தால் வேலை யிருந்து கொண்டே யிருக்கும் என்று தைரியம் சொன்னார். பிறகு தீர்மானம் ஓட்டுக்கு விடப்பட்டு அது நிறைவேறியது.

நிபுணர்களைக் கலந்துக் கொள்ளவேண்டும்.

"கூட்டுறவுச்சங்க ரெஜிஸ்ட்ரார் அடிக்கடி அஸிஸ்டெண்டு ரெஜிஸ்ட்ரார்களுடன் கான்பரன்ஸ் கூடும்போது, ஸெண்ட்ரல்பாங்கிகளின் பிரதிநிதிகளையும் மற்றும் கூட்டுறவு நிபுணர்களையும் அக்கான்பரன்ஸுகளுக்கழைத்து ஆலோசனை கேட்கவேண்டும்" என்ற தீர்மானத்தை ரெஜிஸ்ட்ரார் பெற்றுக்கொண்டுவிட்டதாக அக்கிராசனாதிபதி அறிவித்தார்.

**இலாகா விதிகளை மாற்றும்போது அனுசரிக்கவேண்டிய முறை.**

"தற்போதைய விதிகளை மாற்றும்போதாவது புதியவிதிகள் செய்யும்போதாவது இனி கூட்டுறவுச் சங்கங்களைக் கலந்துக்கொண்டே செய்யவேண்டும்." என்ற ஒரு தீர்மானத்தை திருச்சினாபள்ளி ராவ் பகதூர் நாராயண ராவ் பிரேரித்து இதுவரை கூட்டுறவுச் சங்கங்களைக் கலந்து யோசியாமல் செய்திருக்கும் விதிகளால் பல இடைஞ்சல்கள் உண்டாயிருக்கின்றனவென்று சொன்னார்.

விஜயநகரம் மிஸ்டர் எம். வெங்கடரங்கய்யா தீர்மானத்தை ஆமோதித்துப் பின்வருமாறு பேசினார்:—கவர்ன்மெண்டார் நல்ல எண்ணத்துடன்தான் எந்தவிதிகளையும் செய்கிறார்களாயினும், கூட்டுறவுச் சங்கங்களுக்கு பலவிதமான கஷ்டங்கள் அதன் மூலமாய் உண்டாகி வருகின்றன. சங்கங்களின் லாபத்தில் 100-க்கு 50 வீதம் க்ஷேம நிதிக்கு போய்ச் சேரவேண்டுமென்று கவர்ன்மெண்டார் ஒரு விதி ஏற்படுத்தி, பின்னிட்டு அதை 25 என்று மாற்றியதை இதற்கு திருஷ்டாந்தமாகச் சொல்லலாம். கௌரவ ரெஜிஸ்ட்ரார்களின் பிரயாணப்படி விஷயமாய்ச் செய்துள்ள மற்றோர் விதியையும் இச்சந்தர்பத்தில் குறிப்பிடுவது பொருந்தும். டவுன் பாங்கிகள், ஜில்லா ஸெண்ட்ரல் பாங்கிகள் முதலியவற்றின் ஆலோசனையைக் கேட்டு நடந்துகொண்டால் உத்தமமாயிருக்கும்.

பாளையங்கொட்டை மிஸ்டர் என். கிருஷ்ணஸாமி ராவ் தீர்மானத்தை ஆதரித்து, அன்னிய நாடுகளில் வழங்கும் விதிகள் இந்தியாவுக்கு ஒவ்வாதென்றும் அனுபவத்தின்மேல் எது உசிதமென்று தோன்றுகிறதோ அதைத்தான் செய்யவேண்டுமென்றும் வாதித்தார்.

அக்கிராசனாதிபதி பின்வருமாறு பேசினார்:—இப்படிச் செய்வதினால் கவர்ன்மெண்டுக்கும் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் பரஸ்பரம் அனுகூலமுண்டு. சங்கங்களின் நன்மையை உத்தேசித்து கவர்ன்மெண்டார் செய்யும் விதிகள் அத்தகைய சங்கங்களின் அபிப்பிராயத்தைக் கேட்டு விசாரித்தபின்பே செய்வது ஒழுங்காகும். சங்கங்களுக்கும் அம்முறை திருப்தியைத் தரக்கூடும். எந்தமாறுதல்களும் புதிய விதிகளும் கெஜட்டில் பிரசுரிக்கப்படுகின்றன. நீங்களெல்லோரும் சமயோசிதமான அபிப்பிராயத்தை அவ்வப்போது கவர்ன்மெண்டுக்கு எடுத்துச் சொல்லவேண்டும்.



கெஜட்டில் பிரசுரம் செய்தால் அதை எல்லோரும் வாசிப்பதில்லையென்று இச்சந்தர்பத்தில் சிலர் ஆட்சேபித்தனர். ஜில்லா கெஜட்டிலும் அவற்றை இனிமேற்பட பிரசுரிக்க ஏற்பாடு செய்வதாக அக்கிராசனாதிபதி சொன்னார். தீர்மானம் கடைசியாய் நிறைவேறியது.

**தணிக்கை செய்யும் யூனியன்.**

அப்பால் ஆலோசனைக்கு வந்த தீர்மானம் என்னவென்றால்:—கணக்கு வழக்கு எழுதிவைக்குமுறை ஒரேதன்மையாய் இருக்கவேண்டி, மாகாண பாங்கிகள், ஜில்லா பாங்கிகள், நகர பாங்கிகள் ஆகிய இவைகளின் கணக்கு வழக்குகளை தணிக்கை செய்வதற்காக ஒரு யூனியனை ஏற்படுத்தவேண்டிய தவசியம்; தவிர, ரெஜிஸ்ட்ராரின் அங்கீகாரம் பெற்று, வேண்டிய அளவு ஆடிட்டர்களை நியமிக்கவேண்டும். கணக்கு வழக்குப் பார்ப்பதற்காக சங்கங்களிலிருந்து இவ்வளவு பணம் கிடைக்கவேண்டுமென்று அவ்வப்பேது அந்த யூனியன் திட்டப்படுத்துமாக.

மேற்கண்ட தீர்மானத்தை ரெய் ஸாஹிப் K. ராமசுவாமி ஐயர் பிரேரித்துப் பேசியதாவது:—

"கணக்கு வழக்கு மேற்பார்வையை இச்சமயம் கவர்ன்மெண்டாரே வகித்து வருகின்றனர். மேலும் கணக்கு வழக்குப் பார்க்கும் முறையே பலவாறான ஜில்லாக்களில் பலமாதிரியாக இருக்கிறது. ஏனென்றால் ஆடிட்டர்கள் என்ற யோக்கியதாப் பத்திரம் பெற்றுள்ள பரிசோதகர்களோ தங்களுடைய ஜீவனோபாயத்தை யனுசரித்து சங்கங்களின் கணக்கு வழக்குப்பார்க்கும் பரிசோதனையை நடத்தி வருகிறார்கள். சங்கங்களிலிருந்து திரவிய சகாயம் பெற்று, தணிக்கை செய்வதற்காகவே யூனியன் ஒன்றை ஏற்படுத்தவேண்டும்."

இவ்வாறு அவர் பேசியபின், சித்தூர், மிஸ்டர் V. கிருஷ்ணசாமி ஐயர் மேற்படி தீர்மானத்தை ஆமோதித்து, சங்கங்களின் தொகை பெருத்துவருவதனால், அத்தகைய யூனியன் ஒன்று ஏற்படவேண்டியதவசியமேயாகு மென்றார்.

மிஸ்டர் C. N. கிருஷ்ணசுவாமி ஐயர் அத்தீர்மானத்தை ஆதரித்துப் பேசிவந்தபொழுது, மேற்கண்ட மாதிரியில் யூனியன் ஏற்படுத்தல் உசித மென்றார். பிறகு, ராவ் பகதூர் நாராயண ராவ் ஒரு திருத்தப் பிரேரணை கொண்டுவந்தார். ஒவ்வொரு ஜில்லாவுக்கும் அத்தகைய யூனியன் ஒன்று ஏற்படவேண்டுமென்பதே அவரது திருத்தப்பிரேரணையாகும். அவ்வாறு ஒவ்வொரு ஜில்லாவுக்கும் கணக்கு வழக்குப்பார்க்கும்

யூனியன் ஏற்படும்பொழுது, அஸிஸ்டெண்டு ரெஜிஸ்ட்ரார்களின் வசமே அந்த யூனியன்கள் இருக்கவேண்டுமென்றும், கணக்குவழக்குப் பார்ப்பதற்காக மாகாணம் முழுவதற்கும் ஒரு யூனியன் இருந்தால் போதாதென்றும் சொன்னார்.

மிஸ்டர் V. C. ரெங்கசுவாமி ஐயங்கார் அத்தீர்மானத்தை எதிர்த்துப் பேசினார். கூட்டுறவுச் சங்கங்களின் தணிக்கைசெய்வதை ரெஜிஸ்ட்ராரே பார்க்கவேண்டுமென்று சட்டம் இருக்கிறதென்பதும், ஆகவே அவரோ அல்லது அவரால் நியமிக்கப்படும் மனிதர்களோதான் தணிக்கைசெய்யவேண்டுமென்பதும், மிஸ்டர் ஐயங்காரின் கட்சியாகும்.

முடிவில், ரெய் ஸாஹிப் K. ராமசுவாமி ஐயர் சொன்னதாவது :— பிரைமரி சங்கங்களின் தணிக்கைகளை அந்த யூனியன் மேற்பார்வை பார்க்கவேண்டுமென்று தீர்மானத்தில் சொல்லப்படவில்லை. ஜில்லா பாங்கிகள், அல்லது அவைபோன்ற பெரிய சங்கங்கள் ஆகிய இவைகளின் கணக்குவழக்குகளைக் கவனிக்கவே ஒரு யூனியன் வேண்டுமென்று தீர்மானத்தில் சொல்லப்பட்டுளது. பின்னால் ஒரு கான்பரன்ஸில் பிரஸ்தாப விஷயம் யோசிக்கப்படப் போவதனால், இச்சமயம் தீர்மானத்தை நான் நிறுத்திக் கொள்ளுகிறேன்

**சந்தாப்பட்டி ரசீது.**

ஐக்கிய நாணயச்சங்கங்களிலெல்லாம் பாஸ் புக் (Pass Book) என்னப்படும் சந்தாப்பட்டி ரசீது கொடுக்கப்படும் வழக்கம் ஏற்படவேண்டுமென்று ஒரு தீர்மானத்தை மிஸ்டர் V. C. ரெங்கசுவாமி ஐயங்கார் பிரேரிக்க, அதை மிஸ்டர் நாராயண ராவ் ஆமோதிக்க, மிஸ்டர் சுவாமி கோவிந்தன் நாயுடு ஆதரித்துப்பேச, முடிவில் தீர்மானம் அங்கீகாரமாயிற்று.

**கௌரவ யோக்கியதா பத்திரம்.**

பின்பு கீழச்சேரி ரேய்ஸாஹிப் அருளைய நாயுடு பின்கண்ட தீர்மானத்தைப் பிரேரித்தார்:—

"கிராமங்களிலுள்ள சங்கங்களிலே உழைப்பவர்களுக்கு உற்சாகம் ஊட்டவேண்டி, அவர்களுக்கு ரெஜிஸ்ட்ராரால் கௌரவ யோக்கியதா பத்திரமொன்று கொடுக்கப் படவேண்டும். அவ்வாறு ரெஜிஸ்ட்ரரால் கௌரவ யோக்கியதாபத்திரங்கள் வழங்கப்படின், கூட்டுறவு முயற்சிக்காரர்கள் மேன்மேலும் ஊக்கங்காட்டி உழைக்க இடமேற்படும்."

அத்தீர்மானத்தை மசூலிப்பட்டணம், மிஸ்டர் V. நாராயண ராவ் ஆமோதித்துப் பேசிய காலையில், கௌரவ யோக்கியதாபத்திரம் வழங்கப்படின், சங்கங்கள் போட்டி போட்டுக்கொண்டு முன்னேற முடியுமென்றும், மெம்பர்கள் சிரத்தையுடன் உழைக்க ஒரு தூண்டுதல் ஏற்படுமென்றும், சொன்னார்.



தீர்மானத்தை ஆதரித்து தெனாலி மிஸ்டர் L. சங்கமீசுவர ராவ் பேசியதாவது : "சங்கங்களின் விஷயமாய் கவர்ன்மெண்டார் தக்க கவனம் செலுத்துகிறார்களென்று கிராமங்களிலுள்ள சங்கங்களின் அங்கத்தினருக்கு ஒருவித நம்பிக்கை இருக்கிறது. ஆகவே அந்த அங்கத்தினர் தங்கள் சங்கவிஷயமாய் மிக்க ஊழியம் புரிவதில்லை. கௌரவ யோக்கியதா பத்திரம் கொடுப்பதென்ற வழக்கம் ஏற்படின், சங்கங்களுக்குப் புதிய அந்தஸ்து அளிப்பதுபோலாகும்."

அப்பால், கல்யாணதுர்க்கம் மிஸ்டர் N. பீமசேன ராவும் மிஸ்டர் வேங்கடசுப்ப ரெட்டியும் தீர்மானத்தை ஆமோதித்துப் பேசினார்கள். பின்பு, மிஸ்டர் V. S. ராமசாமி சாஸ்திரியார் பேசியதாவது:— "கௌரவ யோக்கியதா பத்திரம் வழங்கப்பட வேண்டுமென நாமே கேட்பது விரும்பத்தக்கதல்ல. அதிலும் ரெஜிஸ்ட்ராராவது அல்லது கவர்ன்மெண்டாராவது கௌரவ யோக்கியதாபத்திரம் வழங்க வேண்டுமென்று நாம் கேட்பதானது அவமானமாய் இருக்கிறது. அந்தகைய பத்திரம் வழங்கப்பட வேண்டிய அவசியமில்லை. கௌரவ யோக்கியதா பத்திரம் வழங்கப்பட்டால் கூட்டுறவுக்காரர்களின் சுயமதிப்பு போய் விடும். மேலும் கிராம சங்கங்களிலே சிக்கல்களும் உண்டாகும். மெம்பர்களின் உழைப்பைப் பாராட்டி சில சங்கங்கள் மெடல்களை வழங்கி வருகின்றன. ஆகவே, அம்மாதிரி சங்கங்களே ஏதேனும் உற்சாகம் ஊட்டும் வழியை அனுசரிக்கலாம். கூட்டுறவு முறையில் கண்ணியமாய் ஊழியம் புரிவோருக்குப் பரிசு ஏன் வழங்கப்படவேண்டுமோ எனக்குத் தெரியவில்லை. உழைப்பே அவர்களது பலனாகும். கூட்டுறவு முயற்சியானது அன்னிய தேசத்திலிருந்து இங்கே இறக்குமதி செய்யப்பட்ட சரக்கல்ல. நம் தேசத்திலே பூர்வகாலம் முதல் கூட்டுறவு இருந்து வந்திருக்கிறதே. தேசத்திற்கு நன்மை புரியும் ஒருவனுக்குப் பிறர் பரிசு வழங்கவேண்டுமென்று அவசியம் உண்டோ ?"

மிஸ்டர் ஸ்ரீராம ஐயங்காரும் தீர்மானத்தை எதிர்த்துப் பேசினார். கௌரவ யோக்கியதாபத்திரம் வழங்குவதாயின், சங்கங்களுக்குள் தொல்லை ஏற்படுமென்றும், கூட்டுறவு முயற்சியின் முன்னேற்றம் தடைபடுமென்றும், தஞ்சை மிஸ்டர் T. R. ஸ்ரீனிவாச ஐயங்கார் சொல்லி, தீர்மானத்தை எதிர்த்துப் பேசினார். முடிவில் தீர்மானம் நிறுத்திக் கொள்ளப்பட்டது.

இத்துடன், சபையானது இடைவேளை போஜனத்திற்காகக் கலைந்து மறுபடியும் 3-45 மணிக்குக் கூடியது.

## கடனை எளிதில் வசூலிக்கும் முறை.

கலைக்கப்பட்டுப் போகும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வரவேண்டிய கடன் தொகையை ஸம்மரி முறை மூலமாக வசூல் செய்யும்படி கவர்ன்மெண்டார் அதிகாரங் கொடுக்கவேண்டுமென ஒரு தீர்மானத்தை ஸ்ரீவில்லிப்புத்தூர் மிஸ்டர் A. ஸ்ரீனிவசாச்சாரியார் பிரேரித்து, டிக்கிரியை நிறைவேற்றி அப்பால் பணம் வசூலிப்பதென்ற முறை கஷ்டமாயிருப்பதால், ஸம்மரி முறை மூலமாகக் கடனை வசூலிக்கும் வண்ணம் அதிகாரம் கிடைத்தல் நலமென்றார்.

அத்தீர்மானத்தை சேலம், மிஸ்டர் C. V. ராமராவ் ஆமோதித்துப் பேசியபொழுது, கலைக்கப்பட்டுபோன ஒரு சங்கத்திற்கு வரவேண்டிய கடன் தொகையை நாலுவருஷ காலமாய்த் தம்மால் வசூலிக்க முடியாமல் இருப்பதை எடுத்துக்காட்டினார்.

பின்பு, மெஸ்ஸர்ஸ் சின்னரங்க கவுண்டர், இலட்சுமி நாராயணராவ் ஆகிய இருவரும் தீர்மானத்தைத் தாங்கிப் பேசியபின், தீர்மானம் நிறைவேறியது.

## மண் எண்ணெய்.

அப்பால் நீடாமங்கலம் ரெய் ஸாஹிப், A. சேதுராம ஐயர் பிரேரித்த தீர்மானம் யாதெனில்:—"வெளி ஜில்லாக்களிலே மண் எண்ணெய் கிடைப்பது மிகவும் கஷ்டமாய் இருக்கிறது, ஆகவே சென்னையில் அந்த எண்ணெயில் வியாபாரஞ் செய்யும் கம்பெனிகள் வெளி ஜில்லாக்களிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கு அந்த எண்ணெயை ஸப்ளை செய்யும் வண்ணம் ரெஜிஸ்ட்ரார் உதவிபுரிவாராக. அவர் எம்மாதிரி நிர்ணயிக்கிறாரோ அம்மாதிரியே சங்கங்கள் அந்த எண்ணெயை விலைக்கு விற்றுவருமாக."

இத்தீர்மானத்தை அவர் பிரேரித்து, மண் எண்ணெய் மலிவாய்க் கிடைக்காததனால் ஏழைகள் மிகவும் கஷ்டப்படுகிறார்களென்று சொன்னார்.

பிறகு மிஸ்டர் வேங்கடசுப்பிரமணிய ஐயர் அத்தீர்மானத்தை ஆமோதிக்க, ஓங்கோல் மிஸ்டர் நாராயணராவ் ஆதரிக்க, முடிவில் தீர்மானம் அங்கீகாரமாயிற்று.

## மத்தியஸ்தர்கள்.

கடைசியாக உத்தரமேரூர், மிஸ்டர் O. M. வேங்கடநாத ஐயங்கார் பிரேரித்த தீர்மானம் பின்வருமாறு:—

"கூட்டுறவுச் சங்கங்களின் சம்பந்தமான தகராறுகளைத் தீர்த்துவைக்க உபயகட்சிக்காரர்களின் சம்மதத்தின்மேல் மத்தியஸ்தர்களை ரெஜிஸ்ட்ரார் நியமிக்கும்பொழுது, உபயவாதிகளின் சம்மதம் கிடைப்பதற்குச் சிறிது காலம் மாத்திரம் காத்திருந்தாற் போதுமென விதிமுறைகள் திருத்தப்படவேண்டும்."



இத்தீர்மானத்தை மிஸ்டர் M. S. சேஷாச்சலம் ஐயர் ஆமோதிக்க, மெஸ்ஸர்ஸ் சின்னைய நாயுடு, M. வேங்கடரங்க ஐயா ஆகிய இருவர்
யஞம் ஆதரித்துப் பேச, முடிவில் ஏகமனதாக தீர்மானம் அங்கீகரிக்கப்பட்டது.

## அக்கிராசனாதிபதியின் முடிவுரை.

அப்பால் அக்கிராசனாதிபதி செய்த முடிவுரைப் பிரசங்கத்தின் ஸாராம்சம் என்னவென்றால்:—

நிதானமும் புத்திசாலித்தனமுங் கொண்டு நடவடிக்கைகள் நடந்த
தைப்பற்றி நான் சந்தோஷப்படுகிறேன். கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்
திவிடுதல் சுலுவுதான். ஆனால், சங்கங்கள் சரிவர நடைபெறுவதற்கும்,
நன்கு மேற்பார்வை பார்க்கப்படுவதற்கும், அங்கத்தினருக்குள் ஒற்றுமை
வேண்டும். இம்மாகாணத்திலே கூட்டுறவு முயற்சி இவ்வளவு தூரம் அபி
விருத்தியடைந்திருப்பதைப்பற்றி நீங்கள் சந்தோஷப்படலாகும். எல்லாச்
சங்கங்களும் யூனியன்களாக ஒன்றுபட்டிருக்கின்றன. யூனியன்களோ
ஜில்லா பாங்கிகளாக ஒருமைப்பட்டிருக்கின்றன; ஜில்லா பாங்கிகளோ
மாகாண பாங்கியாக ஒன்று சேர்ந்துள்ளன. சிற்சில விஷயங்களைப்பற்றி
உங்களுக்குள் அபிப்பிராய பேதம் இருக்கலாம். ஆயினும் அந்த அபிப்
பிராயபேதங்களால் மிகத்தப்பான விரோத உணர்ச்சியும் கூட்டுறவு முயற்
சிக்கு இடையூறும் ஏற்படும்படி முற்றிவிடக்கூடாது. தாங்கள் இன்ன
குற்றஞ் செய்துளோமென்று சங்கங்கள் தெரிந்துகொண்டவுடன், அவை
களைப் பரிகரிக்கவேண்டும்; குற்றங்களை எடுத்துக் காட்டுவோரிடம் கோபங்
கொள்ளக்கூடாது. கவர்ன்மெண்டின் ஆதரவைக்கொண்டு கூட்டுறவு
முயற்சி ஏற்பட்டது. நெடுங்காலம் அம்மாதிரியே கவர்ன்மெண்டார் ஆத
ரவுகாட்டி வருவார்களாவென்று அப்பொழுதே பலர் கேட்டனர். கூட்
டுறவுச் சங்கங்களை இனிமேல் ஜனங்களே நிர்வகித்து காரியங்களை நடத்
திக்கொள்ள முடியுமென்று கவர்ன்மெண்டுக்குத் தெரியவரின், அச்
சமயத்திலே கவர்ன்மெண்டார் விலகிக்கொள்வார்கள். ரெஜிஸ்ட்รா
ருக்கும் சங்கங்களுக்கும் பரஸ்பரம் நல்லெண்ணமும் அபிமானமும்
இருக்க வேண்டியதவசியம். குறைகளை எவ்வாறு நன்கு திருத்தி விட
லாமென அவர் சிரத்தையுடன் இருக்கிறார். அவரது முயற்சி சித்திக்கு
மாக. கூட்டுறவுச் சங்கங்களிலே இராஜீய விஷயத்தைக் கொண்டுவந்து
புகுத்திவிடக்கூடாது.

நடவடிக்கைகள் யாவும் தமிழிலும் தெலுங்கிலுமே நடைபெற்
றன. அப்பால் அக்கிராசனாதிபதிக்கு வந்தனமும் சக்ரவர்த்தி பெருமா
னுக்கு ஆசிவசனமும் சொல்லப்பட்டவுடன் சபை முற்றுப் பெற்றது.

# புதுக்கோட்டை நெசவுக்காரர்களின் சங்கம்.

மாகாண கூட்டுறவு கான்பரன்ஸின் முன்னிலையில் வாசிக்கப்பட்ட சங்கங்களின் ரிபோர்ட்டுகளிலே, புதுக்கோட்டையிலுள்ள, நெசவுக்காரர்களின் கூட்டுறவுச் சங்கத்தின் ரிபோர்ட்டு யாதெனில்:—

புதுக்கோட்டை ஸமஸ்தானத்திலே கூட்டுறவு முயற்சியின் மிக்க ஸாரமான அம்சம் யாதெனில் பட்டு நெசவுக்காரர்களாகிய ஸௌராஷ்டிரர்களுக்கும் பருத்தி நெசவுக்காரர்களாகிய பஞ்சமர்களுக்கும் உதவியாய் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்பட்டிருப்பதாகும்.

ஆதியிலே சமஸ்தானத்தில் வந்து குடியேறினவர்களில் பட்டு நெசவுக்காரர்கள் ஒரு வகுப்பினராவர்; அத்தொழிலில் அவர்கள் பேர் பெற்றவர்கள். என்றாலும் பல காரணங்களால் அவர்கள் க்ஷீணதிசையடைந்து விட்டனர். அவர்களைக் கைதூக்கிவிடாது போயின், அவர்கள் பசிப்பிணிக்கு ஆளாகி, அவர்களது தொழிலே நசித்துப்போய் விடுமென்று தோன்றியது. ஆகவே "ஸ்ரீவேணுகோபால ஸௌராஷ்டிர கூட்டுறவுச் சங்கம்" என்ற சங்கமொன்று ஏற்பட்டது. அச்சங்கத்தினால் தற்சமயம் 50 குடும்பங்கள் ஆதரவு பெற்றுவருகின்றன.

**இராஜாங்க உதவி**:-அச்சங்கத்திற்குப் பணக்கஷ்டம் நேரவில்லையே என்றால், அதற்கு இராஜாங்கத்தின் திரவிய சகாயமேகாரணம். ஆதியிலே அச்சங்கத்திற்கு வட்டியின்றி இராஜாங்கத்திலிருந்து 2 ஆயிரம் ரூபாய் கிடைத்தது. அப்பால், சொற்பவட்டிக்கு மறுபடியும் இராஜாங்கத்தார் இரண்டாயிரம் ரூபாய் கொடுத்து உதவினார்கள். சங்கத்திற்குக் கிடைக்கும் லாபத்தொகையிலிருந்து வருஷவாரியாக அக்கடன் ஈடு செய்யப்பட்டுவருகிறது. சமஸ்தானத்திலுள்ள நகர பாங்கியிலிருந்து கணக்குக்குமேல் ஆயிரம் ரூபாய் வாங்கிக்கொள்ளலா மென்றும் ஏற்பாடு உண்டு.

**மூலதனம்**:—சங்கத்தின் மூலதன விஷயம் மிகவும் ரஸமாயிருக்கும். சங்கத்தின் அங்கத்தினர் ஒவ்வொருவரும் சிறிதுசிறிதாக மூலதனபங்குத் தொகையைக் கொடுக்க வேண்டுமென்பது கட்டாயமாகும். எப்படி என்றால், சங்கத்தின் பண்டகசாலையிலிருந்து அவர்கள்விலைக்கு வாங்கும் சாமான்களின் மதிப்பு எவ்வளவோ அம்மதிப்பில் ஒவ்வொரு ரூபாய்க்கும் ஒவ்வோர் அணாவீதம் அவர்கள் செலுத்தவேண்டும். மூலதனத்தின் ஒவ்வொரு பங்கும் 25 ரூபாய் பெறுமானமுள்ளது. அந்த 25 ரூபாயும் சேரும் வரையில் மேற்கண்டவாறு ரூபாய்க்கு ஓரணாவீதம் அவர்கள் செலுத்திவரவேண்டுமென்பது விதி. இம்மாதிரி சங்கத்திற்கு மூலதனம் சுமார் 1,500 ரூபாய் சேர்ந்துளது.



**நிர்வாகம்**:—நெசவுக்காரர்களே அச்சங்கத்தின் அங்கத்தினர்களாயினும், சங்கத்தை நிர்வகித்து முன்னுக்குக் கொண்டுவருவதற்குத் தக்கபடிப் பும் யோக்கியதையும் வாய்ந்தவர்கள் சங்கத்தில் சேர்த்துக்கொள்ளப் படலாமென்று விதி. தற்சமயம் சங்கத்தின் நிர்வாக கமிட்டியிலே சில நெசவுக்காரர்களும் இரண்டு வக்கீல்களும் இரண்டொரு சமஸ்தான அதிகாரிகளும் மெம்பர்களாய் இருக்கிறார்கள் சமஸ்தான அதிகாரியொருவர் சங்கத்தின் ஒரு காரியதரிசியாவர், நெசவுக்காரரொருவரும் காரியதரிசியாய் இருக்கிறார். இவருடன்சேர்ந்து அவர் வேலைபார்த்து வருகிறார். சங்கத்தினால் தயாரிக்கப்படும் துணிகளை விலைக்குவாங்கக் கூடியவர்களான சிலரும் மெம்பர்காளாய்ச் சேர்ந்திருக்கிறார்கள்.

**சங்கத்தின்வேலை**.—பட்டு, பருத்திநூல், சாயச்சரக்கு ஆகிய இவைகளை அச்சங்கம் மொத்தத்தில் வாங்கி கடன்கட்டில் அங்கத்தினருக்கு சில்லரையில் கொடுத்துவருகிறது. லாபத்தை உத்தேசித்து விலை ஏற்றம் செய்யப்படுவதில்லை, இதர கடைகளில் விற்கும் விலையைவிடச் சிறிது குறைவாகவேஇருக்கும். வருஷமுடிவில் கஸர்லாபமானது பங்கிடப்பட்டு, அங்கத்தினரால் போடப்பட்டிருக்கும் மூலதனத்துக்கு ஏற்றவாறு அவர்களின் மூலதனத்துடன் சேர்த்துவிடப்படுகிறது. மிக்க ஏழைகளாயும் நம்பிக்கைக்கு அவ்வளவு பாத்திர மல்லாதவர்களாயும் இருப் போரின் நன்மையைக் கருதி, இரண்டு தறிகளை அச்சங்கம் வாங்கி வைத்திருக்கிறது. மேற்சொல்லப்பட்டவர்கள் தினந்தோறும் வந்து அத் தறியில் வேலைசெய்தால் அவர்களுக்குக் கூலிகொடுக்கப்படும். அக்கூலித் தொகையிலே ஓரளவானது நிறுத்திக் கொள்ளப்படும் அது; அவர்களுடைய பணமாக சங்கத்தில் சேர்த்து வைக்கப்படுகிறது; இம்மாதிரியான ஏற்பாடு சமீபகாலத்தில் உண்டாயிற்று. ஆகவே அந்த ஏற்பாடு எப்படி பலன்தருகிறதென்பதை யாரும் ஆவலுடன் எதிர்ப்பார்த்திருக்கிறார்கள்.

**கோள்வினை விற்பனை** :—பட்டு நெசவுக்கு அதிககாலம் பிடிக்கிறது. தான் வாங்கியுள்ள பட்டைக்கொண்டு, ஓர் ஏழைநெசவுக்காரன் துணி நெய்து விற்பதற்கு 4 அல்லது 6 மாதகாலமாகும். இதற்கு ஓர் உபாயம் அனுஷ்டிக்கப்படுகிறது. அது என்னவென்றால், தக்க அந்தஸ்திலுள்ள சில வியபாபாரிகளை சங்கம் குறிப்பிட்டிருக்கிறது, அவ் வியாபாரிகளிடம் பட்டுத்துணியை நெசவுக்காரன் விலைகட்டிக் கொடுத் துவிட்டால், கடன் கட்டில் சங்கத்திலிருந்து அவன் பெற்றுக்கொண்ட பட்டுநூலுக்குக் கிரயம் அவனிடமிருந்து வந்துவிட்டதென்று கொள் ளப்படுகிறது. அப்பால் அவன் மீண்டும் சங்கத்திலிருந்து கடன் கட் டில் பட்டுநூல் பெறலாம். 1915-16 ம் வருஷ ரிபோர்ட்டின்படி சங்கத்தின் அங்கத்தினர் 48 பேர் மூலதனப்பங்குகள் 99 ; 1916 ஜூலை

வரையில் வசூலாயிருக்கும் மூலதனம் ரூ 1,025—0—7. இராஜாங்கத்திலிருந்து வாங்கிய கடனில் திரும்பக் கொடுக்கப்பட்ட தொகை ரூ. 657—10—0; லாபம் ரூ. 318—1—3.

## கோள்வினை.

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| பட்டு முதலியன வாங்கிய வகையில் ... | 4,902 | 0 | 9 |
| ஷை சில்லரைச் செலவுகள் ... | 47 | 15 | 6 |
| துணிகள் வாங்கின வகையில் ... | 42 | 15 | 5 |
| வருஷ ஆரம்பத்தில் கையிருப்பிலுள்ள சரக்கு | 988 | 2 | 0 |
| | 5,981 | 1 | 8 |
| விற்பனையில் லாபம் ... | 186 | 12 | 4 |
| ஆகக்கூடுதல் தொகை | 6,167 | 14 | 0 |

## விற்பனை.

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| நூல் விற்ற வகையில் ... ... | 4,972 | 0 | 0 |
| ரொக்க விற்பனை ... ... | 8 | 4 | 0 |
| சில்லரை விற்பனை ... ... | 4 | 11 | 3 |
| வருஷக்கடைசியில் கையிருப்பு சரக்கு ... | 1,182 | 14 | 9 |
| ஆகக்கூடுதல் தொகை | 6,167 | 14 | 0 |

# கான்பரென்ஸுக்கு அனுப்பப்பட்ட சில வியாசங்களைப்பற்றிய குறிப்புகள்.

இம்மாகாணத்திலே சங்கங்களின் மேற்பார்வையை வகித்துவரும் யூனியன்களுக்குள்ளும் அதிகாரிகளுக்குள்ளும் அடிக்கடி முட்டுப்பாடு ஏற்படுகிறது. ஆகவே அந்த யூனியன்களுக்குள் இருக்கவேண்டிய சம்பந்தா சம்பந்தத்தை ஒழுங்குபடுத்திவிட வேண்டுமென மதுரை, ரெய் ஸாஹிப், K. ராமசுவாமி ஐயர் தமது வியாசத்தில் சொல்லுகிறார். தமது வியாசத்திலே தாம் சொல்லியுள்ள யோசனைகள் எல்லாராலும் அங்கீகரிக்கப்படுமென்று அவருக்கு நிச்சயம் ஏற்படவில்லை. ஆகவே, அவ்விஷயத்தைக் குறித்து ஆலோசனை செய்து பார்க்க ஒரு கமிட்டியை நியமிக்க வேண்டுமென்பது அவரது சிபார்சாகும். தவிர, அதன்படி லோகல் யூனியன்கள், லேவாதேவி செய்யும் யூனியன்கள், பொறுக்கியெடுத்த நகரபாங்கிகள், முதலியவைகளின் பிரதிநிதிகள் அக்கமிட்டியில் மெம்பர்களாய் இருக்கவேண்டும். மேலும் பரஸ்பரம் யூனியன்களுக்குள் இருக்கவேண்டிய சம்பந்தாசம்பந்தத்தைக் குறித்து அக்கமிட்டியார் தீர்மானங்கொடுப்பதோடு, ரெஜிஸ்ட்ராருக்கும் அஸிஸ்டெண்டு ரெஜிஸ்ட்ராருக்கும் எவ்வளவு தூரம் அதிகாரம் இருக்கவேண்டுமென்பதையும் தீர்மானிக்க வேண்டும். இவ்விஷயம் மிகவும் முக்கியமானது. ஆதலின் அவர் சொல்லியிருக்கும் வண்ணம் கூடிய சீக்கிரத்தில் ஆலோசனை நடக்குமென நாம் நம்புகிறோம்.



மாம்பல சங்கங்களுக்குள்ள கஷ்டங்களைச் சுட்டிக்காட்டி மிஸ்டர் V. சந்திரசேகர ஐயர் இரண்டு வியாசங்கள் எழுதியிருக்கிறார். எண்ணெய் தயாரிப்பதற்காக மாம்பலத்தில் ஏற்பட்டுள்ள சங்க மானது திருவல்லிக்கேணியிலுள்ள ஸ்டோர்ஸின் காரணமாகவே கஷ்டப்படும்படி ஆயிற்றென்று கேட்க நமது நேயர்கள் வருத்தப்படுவார்கள். கட்டடங்கட்டிக் கொடுப்பதற்காக மாம்பலத்தில் ஏற்பட்டுள்ள மற்ற சங்கமோ அதன் மெம்பர்களின் அசட்டையினாலும் தொழிலனுபவமின்மையினாலுமே சிரமப்படும்படி நேர்ந்துவிட்டது. திருவல்லிக்கேணி ஸ்டோர்ஸின் நிர்வாகசபையில் சமீபத்தில் மாறுதல்கள் ஏற்பட்டிருப்பதனால் மாம்பலத்திலுள்ள எண்ணெய் தயாரிக்கும் சங்கமானது பூர்வ க்ஷேமஸ்திதிலைமையை அடையுமென நாம் எதிர்பார்க்கிறோம்.

நீடாமங்கலம், ரேய் ஸாஹிப் A. சேதுராம ஐயரும் இரண்டு வியாசங்கள் எழுதியிருக்கிறார். ஒரு வியாசம் பொலிகாளைகளின் வளர்ப்பைப் பற்றியதாகும். அவ்விஷயமாய் பணவுதவி செய்வதாக சமீபத்தில் கவர்ன்மெண்டார் அறிக்கை செய்திருப்பினும், விவசாய இலாகா உபேட்சையாய் இருப்பதை ஜனசமூகத்தினருக்கு எடுத்துச் சொல்லவேண்டுமென்பதே அவ்வியாசத்தின் கருத்து. கான்பரன்ஸில் அக்கிராசனம் வகித்த திவான்பகதூர், ராஜகோபாலாச்சாரியார் அவ்விஷயத்தைக் கவனித்திருப்பாரென நாம் நம்புகிறோம். சென்னைக்கு அருகிலே கூட்டுறவு முறையில் பால் ஸப்ளை செய்யக்கூடிய சங்கமொன்றை ஸ்தாபித்து நடத்த முடியுமென அவர் தமது இரண்டாவது வியாசத்தில் சொல்லியிருக்கிறார்,

சென்னை பிரஸிடென்ஸி கலாசாலை புரொபஸர், T.S. சுப்பிரமணிய ஐயர் கடைசிவியாசத்தை எழுதியவர். சீட்டு பண்டு முறையில் கட்டடம் கட்டும் சங்கமொன்றை ஸ்தாபிக்கலாமென அவர் அவ்வியாசத்தில் குறிப்பிட்டிருக்கிறார். அவர் தமது யோசனைகளை அனுபவத்திற்குக் கொண்டுவருவாரென நாம் எதிர்பார்க்கிறோம்.

## தமிழ் வியாசங்கள்.

கான்பரன்ஸின்முன் ஆலோசனைக்கு வந்த வியாசங்களில் மூன்று வியாசங்கள் தமிழில் இருந்தன. அவைகளிலே இரண்டு வியாசங்களை உத்தரமேரூர், மிஸ்டர் O. M. வேங்கடநாத ஐயங்கார் எழுதினார். அவ்விரு வியாசங்களில் ஒன்றானது சங்கங்களின் மேற்பார்வையைப் பொது

வாய்ப் பார்த்துவருவதற்காக மாகாண யூனியன் ஏற்படவேண்டுமென்று வற்புறுத்துவதாகும். மற்றொன்றோ கூட்டுறவுச் சங்கங்களுக்கும் மெம்பர்களுக்கும் தகராறு ஏற்படின், அதைத் தீர்ப்பதற்கு மத்தியஸ்தரொருவர் நியமிக்கப்படும் விஷயமாய் மாகாண கவர்ன்மெண்டார் ஏற்படுத்தியுள்ள சட்டத்தைத் திருத்தவேண்டு மென்பதாகும். இனி மூன்றாவது வியாசமானது திருவண்ணாமலை, மிஸ்டர் M. S. சேஷாசல ஐயரவர்களால் எழுதப்பட்டது. அவ்வியாசங்களின் ஸாரத்தைக் கீழே காணலாம். தமது முதல் வியாசத்திலே மிஸ்டர் O. M. வேங்கடநாத ஐயங்கார் சொல்லியிருப்பது யாதெனில்:—

சங்கங்களின் மேற்பார்வை விஷயமாய் இப்பொழுது பொதுவாக அங்கீகாரமாயுள்ள கொள்கை என்னவென்றால், சங்கங்களின் மேற்பார்வையானது உத்தியோகஸ்தரல்லாத கூட்டுறவாளர்களின் கைக்குள் வரவர உட்பட்டு விடவேண்டும்; தவிர, சங்கங்களின்கணக்குப் பரிசோதனை மட்டும் கவர்ன்மெண்டுக்கு உட்பட்டிருக்க வேண்டுமென்பதுமாம். இக்கொள்கையை யனுசரித்துத்தான் மேற்பார்வை பார்க்கும் யூனியன்களும் அப்பால் ஜில்லா யூனியன்களும் ஏற்படுத்தப்பட்டன. பணவிஷயமான பொறுப்புகளை ஏற்றுக்கொள்ள மேற்பார்வை பார்க்கும் யூனியன்கள் மறுத்துவிட்டன. ஆனால் ஜில்லா யூனியன்களோ, லேவாதேவித் தொழிலையும் மேற்பார்வை பார்க்கும் தொழிலையும் ஒருமிக்க ஏற்றுக்கொண்டிருக்கின்றன. கூட்டுறவு முயற்சியானது தனது சொந்தபலத்தைக் கொண்டு ஸ்திரமாய் ஏற்படவேண்டுமானால் இம்மாகாணத்திலுள்ள ஒவ்வொரு சங்கமும் மேற்பார்வை பார்க்கும் யூனியனுடனோ அல்லது ஜில்லா யூனியனுடனோ ஒன்றுபடவேண்டும். பணவுதவி செய்யும் யூனியன்களோ அவைகளுக்கு மேலான ஒரு யூனியனுடன் ஒன்றுபடவேண்டும். பணவுதவி அல்லது லேவாதேவி செய்யும் யூனியன்களுக்கு மேலாக இப்பொழுது இரண்டு யூனியன்கள் இருக்கின்றன. அவ்விரண்டில் ஒன்று சென்ட்ரல் அர்பன் பாங்கி; மற்றொன்று புரொவின்ஷியல் கோவாபரேடிவ் யூனியன். சங்கங்களின் மேற்பார்வையையும் அவைகளுக்குப் பணவுதவி செய்தலையுமாகிய இருவகை வேலைகளையும் வகிக்கக் கூடிய ஒரே ஸ்தாபனம் இருந்தால் அது விரும்பத்தக்கதுதான். ஆனால், அம்மாதிரி இப்பொழுது செய்துவிடலாமென்பது முடியாத காரியம். எப்படியென்றால், முதலாவதாக புரொவின்ஷியல் கோவாபரேடிவ் யூனியன் இருக்கிறது. இந்த யூனியனோ சங்கங்களின் மேற்பார்வை பார்ப்பதையும் ஒரு நோக்கமாகக் கொண்டிருக்கிறது. இரண்டாவதாக, சென்ட்ரல் அர்பன் பாங்கியோ லேவாதேவி செய்வதிலேயே பெரிதும் கவனஞ் செலுத்தி வருகிறது. பணமில்லையாதலின், மேற்பார்வை பார்க்கும் வேலையை புரொவின்ஷியல் கோவாப



ரேடிவ் யூனியன் செய்ய முடியவில்லை. ஆகவே சங்கங்களை மேற்பார்வை பார்ப்பதற்காக ஒவ்வொரு ஜில்லாவிலும் வசூலிக்கப்படும் நிதித்தொகையிலிருந்து நூற்றுக்கு 10 வீதம் அந்த யூனியனுக்குக் கொடுத்துவிடவேண்டுமென்று யோசனையுண்டு. அப்படியானால் இம்மாகாணத்திலே சங்கங்களை மேற்பார்வை பார்க்கும் விஷயத்தில் அந்த யூனியன் இதர யூனியன்களுக்கு மேலான அதிகாரப்பதவியை வகிக்கமுடியும், தவிர, இம்மாகாணத்திலுள்ள ஒவ்வொரு சங்கத்தையும் அந்த யூனியனுடன் சம்பந்தப்படுத்திவிடலாம்.

மத்தியஸ்த விஷயமாயுள்ள விதிமுறையைச் சீர்திருத்த வேண்டுமென்று தாம் எழுதியுள்ள வியாசத்தில் மிஸ்டர் O. M. வேங்கடநாத ஐயங்கார் சொல்லியிருப்பதாவது:—

சங்கங்களுக்கும் அவைகளின் அங்கத்தினருக்கும் தகராறு ஏற்பட்டுவிடின், அதைத் தீர்த்துவைப்பதற்காக மத்தியஸ்தம் ஏற்படும்படியான உபாயம் செய்யப்படவேண்டுமென இம்மாகாணத்தில் கூடிய பல கான்பரன்ஸுகளில் வற்புறுத்தப்பட்டிருக்கிறது. மத்தியஸ்த ஏற்பாடு உண்டாய்விட்டால், நியாயஸ்தலங்களுக்குச் சென்று தகராறுகளைத் தீர்த்துக்கொள்ள வேண்டிய அவசியம் இல்லாமற் போய்விடும். மெம்பர்களுக்கும் சங்கத்திற்கும் தகராறு ஏற்படின், அத்தகராறுகளை ரெஜிஸ்ட்ராரே தீர்த்துவைக்கலாமென்றும், அல்லது உபயகட்சிகளின் சம்மதத்தையனுசரித்து மத்தியஸ்தரொருவரை ரெஜிஸ்ட்ரார் நியமிக்கலாமென்றும், சட்டத்தில் விதியிருக்கிறது. தற்பொழுதுள்ள விதியின்படி, உபயகட்சிகளின் சம்மதித்தின் மேல் மத்தியஸ்தரொருவரை அவர் நியமிக்க வேண்டும்; அல்லது தாமே அத்தகராறைத் தீர்த்துவைக்க வேண்டும். அனுபவத்தைப்பார்த்தாலோ குறிப்பிட்ட ஒருவரை மத்தியஸ்தராக நியமிக்க உபய கட்சிகளில் யாரேனும் ஒருவரிடமிருந்து ஆட்சேபம் ஏற்படுகிறது. தவிர ரெஜிஸ்ட்ராரே எல்லாத்தகராறுகளையும் தாமே தீர்த்துவைக்க முடியவில்லை. ஆகவே, மத்தியஸ்தரொருவரை திட்டப்படுத்தும் விஷயமாய் உபயகட்சியாரும் குறிப்பிட்ட ஒரு காலத்திற்குள் ஏகோபித்த அங்கீகாரம் கொடுக்கவேண்டு மென்றும், அப்படிகொடுக்கத்தவறினால் ரெஜிஸ்ட்ராராலேயே ஒருவர் மத்தியஸ்தராக நியமிக்கப்பட்டு விடலாமென்றும், விதியைத் திருத்திவிட வேண்டும். இந்த சந்தர்ப்பத்தில் ஒரு யோசனை சொல்லலாம். அதாவது, தகராறு ஏற்பட்டுள்ள பிரதேசத்திலிருக்கும் லோகல் யூனியனின் நிர்வாககமிட்டியோ ஜில்லாபாங்கியின் நிர்வாக கமிட்டியோ அத்தகராறைத் தீர்த்துவைப்பதற்கு ஏற்றவர்களாவர்.

---

# கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம்.*

## சில ஒழுங்குத் தவறுகளும் புதிய யோசனைகளும்.

[சென்னை ஹைகோர்ட் வக்கீல், மிஸ்டர் எஸ். ஸத்தியமூர்த்தி ஐயர் எழுதியது.]

1904-ம் வருஷத்தில் கூட்டுறவுச் சங்கங்களைப்பற்றிய சில ஒழுங்குகளைச்செய்து ஒரு சட்டத்தைப் பிறப்பிக்க யோசனையாகுமுன், இந்தியாவில் பற்பல விடங்களில் கூட்டுறவுச் சங்கங்கள் ஸ்தாபிக்க முயற்சிகள் செய்யப்பட்டுவந்தன. என்றாலும் சட்ட பூர்வமாய் சில விதிகள் ஏற்படுத்தினாலொழிய, அச்சங்கங்கள் திறமையாய் வேலைசெய்ய முடியாதென்று பின்னிட்டு ஒரு யோசனை தோன்றிற்று. ஏற்கெனவேயிருந்த கம்பெனிச்சட்டம் பிரஸ்தாப சங்கங்களை ஒழுங்குபடுத்தப் பிரயோசனப் படாததாய்க் காணப்பட்டது. இங்கிலாந்திலும் அத்தகைய கஷ்டங்கள் ஆதியில் ஏற்பட்டதுண்டு. கடன் கொடுக்கும் பாங்கிகளைப் பற்றிய மசோதா பார்லிமெண்ட் பிரபுக்கள் சபையின்முன்பாக ஆலோசனைக்கு வந்தபோது, மிஸ்டர் உல்ப் என்றவர் தமது சாட்சியத்தில் 1904 வருஷத்திய சட்டத்தைப்பற்றிப் பின்வருமாறு குறிப்பிட்டார்:—

"1904-ம் வருஷத்தில் லார்ட் கர்ஸன் இந்தியாவில் இராஜப்பிரதிநிதியாயிருந்தபோது, ஸர் தாமஸ் ராலீயின் முயற்சியால் இந்தியா வெங்கும் கூட்டுறவுச் சங்கங்களை ஸ்தாபிக்க ஒரு சட்டம் செய்யப்பட்டது. அச்சங்கத்தின்படி கடன்கொடுக்கும் பாங்கிகள் இருவகைப்படும். அவற்றில் ஒன்று பெருத்த கைத்தொழில் ஸ்தலங்களுக்கும், மற்றது சிறிய ஜில்லாக்களுக்கும் உபயோகமாயிருக்கும்படி அப்பாங்கிகளைப் பகுத்து ஏற்பாடு செய்தார்கள்."

வாஸ்தவமான கூட்டுறவுமுயற்சி இந்தியாவில் தலையெடுக்கவும் விவசாய அபிவிருத்தி நாளடைவில் ஏற்படவுமே 1904-ல் மேற்படி சட்டம் செய்யப்படலாயிற்று. சட்டம் செய்தபின் விசேஷ முற்போக்கு உண்டாயிற்று என்பதைச் சொல்லவும் வேண்டுமோ? 1906-7ல் 843 சங்கங்கள் மொத்தம் ஸ்தாபிக்கப்பட்டு நடந்துவந்தன. 23 லட்சத்து சொச்சம் ரூபாய் மூலதனம்போட்டு 90 ஆயிரத்து 844 பேர் அச்சங்கங்களின் அங்கத்தினராய்ச் சேர்ந்துழைத்தார்கள். 1911-12ல் சங்கங்களின் தொகை 8177க்கு உயர்ந்துவிட்டது. மெம்பர்களின் தொகையும் மூலதனமும் அதற்குத் தகுந்தாற்போல் அதிகப்பட்டே வந்தன. ஆனால் பற்பல விதமான கூட்டுறவுச் சங்கங்கள் ஸ்தாபிக்கப்படவில்லை. அவற்றை ஒழுங்குக்குக் கொண்டுவர 1904-ம் வருஷத்திய சட்டம் போதுமானதாயில்லை.

* சென்ற கான்பரென்ஸுக்கு அனுப்பட்ட வியாசம்.



இதையறிந்து இந்தியா கவர்ன்மெண்டார் 1912ல் மற்றோர் சட்டம் பிறப்பித்தார்கள். கடன் கொடுத்துதவுவதற்கு மட்டும் பழையசட்டப்படி வசதிகள் இருந்தன. இப்புதிய சட்டத்தின்படி மற்றும் பலகாரியங்களுக்கும் சாதகமாயிருக்கக்கூடிய கூட்டுறவுச்சங்கங்களையும் ஸ்தாபிக்க இடமேற்பட்டது. பழையசங்கங்களின் பெயரும் நவீன தோரணையில் லிமிடெட் என்றும், லிமிடெட் அல்லாததென்றும் மாற்றப்படலாயிற்று. சட்டப்படி எல்லாச்சங்கங்களையும் பதிவு செய்யவேண்டுமென்று திட்டப்படுத்தப்பட்டது. இதன் பலனாக கூட்டுறவு முயற்சி விசேஷமாய் வியாபிக்க வாரம்பித்தது. 1914 வருஷத்தில் 14,881 சங்கங்கள் போல் மொத்தம் கணக்கிடப்பட்டன. சங்கங்களின் மூலதனம் 7 கோடியே 45 லட்சத்து சொச்சத்துக்கு உயர்ந்துவிட்டது.

அச்சங்கங்களின் தொகையைப் பார்க்குமளவில் கூட்டுறவு முயற்சி இந்தியாவில் வலுத்திருப்பதாகக் காணப்படுகிறது. ஆயினும் குணதோஷம் சொல்லுவோர் இல்லையென்று நினைத்துவிடக் கூடாது. கூட்டுறவு நிபுணர்கள்கூட பிசகுகள் இருக்கின்றனவென்பதை ஒப்புக்கொள்கிறார்கள். பிரஸ்தாப சட்டத்தில் குணதோஷம் சொல்லும்படியாயிருக்கும் முக்கிய அம்சங்களை இச்சமயம் குறிப்பிட்டால், அடுத்தாற்போல் சட்டத்தைத் திருத்தும்போது அவை கவனிக்கப்படுமென்று நான் நினைக்கிறேன்.

சட்டத்தின் பூர்வபீடிகையிலேயே ஆட்சேபிக்கத்தக்க சில வசனங்கள் காணப்படுகின்றன. தன் கையே தனக்குதவி என்ற மூதுரையும் சிக்கனமாய்ச் செலவு செய்யவேண்டு மென்பதுமே கூட்டுறவு முயற்சியின் பிரதான நோக்கங்கள் என்று சொல்லிவிட முடியுமா? பரஸ்பரம் நம்பிக்கையும், ஒத்துழைப்பும் சமூகவாழ்வின் மேன்மையும் கூட்டுறவு முயற்சியால் வளரும் என்பதை நான் குறிப்பிட வேண்டிய தனாவசியம். இவற்றையெல்லாம் சட்டத்தின் பூர்வபீடிகையில் கண்டுவிடவேண்டு மென்றர்த்தமல்ல. கூட்டுறவு முயற்சி பலன்தரும் என்று சொல்லாமலே பூர்வபீடிகையை அடியிற்கண்டவாறு திருத்திவிடலாம். "விவசாயிகள் முதலானவர் இருக்குமிடத்தில் கூட்டுறவுச் சங்கங்களை விசேஷமாய் ஸ்தாபிப்பது சாத்தியமாகும்படி முன்னையிலும் அதிகமாய் வசதிகள் செய்து கொடுக்கவேண்டிய அவசியம் வந்திருப்பதனால்" என்று திருத்திவிடலாம்.

சட்டத்தில் பூர்வபீடிகைக்கு மற்றோர் குணதோஷமும் சொல்லலாம். விவசாயிகளுக்கும் விசுவகர்மாக்களுக்கும் கூட்டுறவு முயற்சி இன்றியமையாதது என்று சொல்லுவதற்குப் பதிலாக பொதுவாய் அம்முயற்சி இன்றியமையாதது என்று சொல்லிவிட்டால் அழகாயிருக்

கும். ஏனெனில் பணக்காரர்கள் நீங்கலாகவுள்ள ஏழைகள் விவசாயிகள் மாத்திரமல்ல, சாதாரணக்கூலிகளுக்கும், தொழிற்சாலையாட்களுக்கும், ஜட்கா வண்டிக்காரர்களுக்கும் தோட்டிகளுக்கும், வண்ணான், அம்பட்டன் முதலானவர்களுக்கும் கூட்டுறவுச் சங்கங்களில் பலன் விளையாதா ?

இதுநிற்க, கூட்டுறவுச் சங்கத்தின் ரெஜிஸ்ட்ராருக்கு என்னென்ன யோக்கியதை யிருக்கவேண்டும் என்று சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. கூட்டுறவு முயற்சியைப்பற்றி ஏகாதிபத்திய கமிட்டியார் தங்கள் ரிபோர்ட்டில் எழுதியிருப்பதாவது:— "ஒரு சங்கத்தைப் புதிதாய்ப் பதிவு செய்துவிட்டுச் சும்மா இருந்து விடுதல்கூடாது. சங்கத்தினால் உண்டாகக்கூடிய பிரயோஜனத்தை பொது ஜனங்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும். அது வெகு கஷ்டமான காரியம். அதற்குப் பொறுமை வேண்டும். பிரசங்கங்கள் செய்து துண்டுப் பிரசுரங்கள் ஆங்காங்கு வழங்கவேண்டும். கிராமங்களில் கூட்டுறவுமுயற்சியை மேற்பார்வையிடுவதற்காக அனுபவத்தைக்கொண்டு ரெஜிஸ்ட்ரார்கள் தக்கபெயர் வழிகளை நியமித்து நேரில் புத்தி சொல்லவேண்டும். வீண்பேச்சில் பிரயோஜனமில்லை; ஜனங்களுக்கு எந்த விதத்தில் சுலபமாய் அறிவூட்டலா மென்பதை ரெஜிஸ்ட்ரார்கள் அறிந்திருக்கவேண்டும்."

ரெஜிஸ்ட்ராரின் யோக்கியதை இப்படியெல்லாம் இருக்கவேண்டியிருந்தும், மாகாண கவர்ன்மெண்டார் தங்கள் இஷ்டப்படி ரெஜிஸ்ட்ரார்களை நியமித்து வருவது விரும்பத்தக்கதல்ல. கூட்டுறவு சம்பந்தமாய் ஞானமும் அனுபவமும் உள்ளவரே மேற்படி உத்தியோகத்துக்குத் தெரிந்தெடுக்கப்பட வேண்டுமென்று பிரஸ்தாப சட்டத்தில் ஒருஷரா சேர்த்துவிட வேண்டும்.

கூட்டுறவு முயற்சியைப் பரவச்செய்வதற்கென்று யார் முன்வந்த போதிலும், அவர்களுடைய சங்கங்களைப்பதிவு செய்ய தற்போதைய சட்டம் இடங்கொடுக்கின்றது. கூட்டுறவு முயற்சியில் அச்சங்கம் நடத்தப்படும் என்று நிச்சயமாய்த் தெரிந்தாலன்றி, அவற்றை கவர்ன்மெண்டார் பதிவு செய்யக்கூடாது. நிற்க, ஜாதி வகுப்பு, குலம் வர்க்கம் என்ற ஒரே அம்சத்தை ஆதாரமாகக் கொண்டு ஒரு சங்கம் அமைக்கப்படுமானால், அச்சங்கத்தின் மெம்பர்களால் கூட்டுறவு முயற்சிவிருத்தியடையாது. ஒரே தொழில் செய்வோர்தான் ஒரு சங்கத்தின் அங்கத்தினர்களாய்ச் சேரலாமென்றிருத்தல் போதுமானது.

பதிவு செய்யப்பட்ட சங்கங்கள் சட்டத்திற்குள் கட்டுப்பட்டு சங்கத்தின் விதிகளை மனந்தோன்றியபடி மாற்ற தற்போதைய சட்டம் இடங்கொடுக்கிறது. ரெஜிஸ்ட்ரார் அத்திருத்த விதிகளை அங்கீகரித்துக்



கையொப்பமிடக் கட்டுப்பட்டிருக்கிறார். அதை மீறி நடப்பதுண்டு என்ப
தற்கு ஒரு திருஷ்டாந்தம் சொல்லுகிறேன். திருவல்லிக்கேணி அர்பன்
கோவாபரேடிவ் சொஸைடியின் ஆலோசனை சபையில் நானும் ஒரு
மெம்பர். அச்சபைக்கு டைரக்டர்களைத் தெரிந்தெடுக்க அதிகாரமுண்டு.
டைரக்டர்களை விலக்கிவிடவும் அச்சபையார் யோசனை சொல்லலாம்.
சமீபத்தில் நாங்கள் ஓர் ஏற்பாடு செய்தோம். அதாவது, இரண்டு
மெம்பர்கள் நோட்டீஸ் கொடுத்தால், ஆலோசனை சபையைக் கூட்ட
வேண்டும் என்ற விதியை புதிதாகச் சங்கத்தின் விதிகளில் சேர்க்கும்படி
சொன்னோம். ரெஜிஸ்ட்ரார் அதை நாளது வரையில் ஒப்புக்கொண்ட
தாய்த் தெரியவில்லை. ரெஜிஸ்ட்ராரின் இஷ்டப்படி சங்கத்தின் விதிகளை
மாற்றவேண்டும் என்பது கூடாது. எந்தத்திருத்த விதிகளையும் ரெஜிஸ்ட்
ரார் அங்கீகரித்தே தீரவேண்டும்.
மற்றும் சில திருத்தங்கள் செய்யவேண்டி யிருக்கின்றன. ஓட்
கொடுக்கும் சுதந்திரம் லிமிடெட் கம்பெனியின் ஒவ்வொரு மெம்பருக்
கும் இருக்கவேண்டியதுதான் கிரமமாகும். சங்கங்களின் மேற்பார்
வையை கலெக்டர்களிடத்தில் ஒப்பிவைக்கக்கூடாது. எந்த விஷயத்தி
லும் கலெக்டர் ஆதிக்கம் பெற்றிருக்கவேண்டுமென்று விதி ஏற்பட்
டிருக்கிறதா ? அந்தந்த சங்கங்கள் அததற்கு அனுகூலமாய் எந்த விதிகள்
வேண்டுமானாலும் செய்துகொள்ளலாமென்று விட்டுவிடுவதுதான் வி
வேகமாகும். நிர்வாக உத்தியோகஸ்தர்களிடத்தில் ஒப்பிவைக்கப்பட்டிருக்
கும் அதிகாரம் சிற்சில அம்சங்களில் எடுபட்டுப்போனால் நலமாயிருக்
கும். ஸ்டாம்பு செலவு, பதிவுசெய்யும் செலவு ஆகிய இவைகளை வேண்டா
மென்று விதிவிலக்குகள் செய்ய கவர்னர் ஜெனராலுக்கே அதிகாரமிருக்
கிறது. எல்லாச் சங்கங்களுக்கும் அத்தகைய விதிவிலக்குகள் பொருந்
தும்படி சட்டம் செய்துவிடவேண்டும். வேண்டுமானால் சிற்சில விசேஷ
சந்தர்ப்பங்களில் ரெஜிஸ்ட்ராருக்கு அதுவிஷயத்தில் அதிகாரங்கொடுக்க
லாம்.
பதிவுசெய்யப்பட்ட ஒருசங்கம் மற்றோர் சங்கத்திற்கு கடன் கொடுக்
கலாம் என்று ரெஜிஸ்ட்ரார் சொல்ல அதிகாரம் பெற்றிருப்பது சிலசம
யங்களில் விபரீதமாய் முடிகிறது. ரெஜிஸ்ட்ராருக்கு அந்தப்பொறுப்பே
வேண்டியதில்லை. சிற்சில சங்கங்களுக்கு அந்த அதிகாரத்தைச் சட்டப்
படி கொடுத்துவிடவேண்டும். ரெஜிஸ்ட்ராரின் யோசனையை அனுசரித்து
சங்கத்தின் பணத்தை எங்கேயாவது போட்டுவைக்கலாம். கண்டிப்
பான விதிகள் அது விஷயத்தில் கூடாது. மொத்தலாபத்தில் 100-க்கு 10
வீதத்திற்குமேல் தர்மகாரியங்களுக்குக் கொடுக்கக்கூடாதென்று கண்டிப்
பான நிர்ப்பந்தம் கூடாது. இன்னின்ன தர்மகாரியங்களுக்குக் கொடுத்
துதவலாம் என்று நிர்ணயித்துவிட்டால் போதுமானது. தர்ம நிதிகளைப்

பற்றிய சட்ட விதிகளை ஓரளவு தளர்த்தி, பரஸ்பரம் மதாபிமானம் பரவும்படி ஏற்பாடு செய்தால் நலமாயிருக்கும்.

சட்டத்தில் இவ்வளவு ஊழல்கள் இருக்கின்றனவே யென்று நான் சுட்டிக்காட்டுவதாக நினைக்கக்கூடாது. தற்போதுள்ள சட்டத்தினால் எவ்வளவோ நன்மை யுண்டாயிருக்கிறது என்பதை நான் மறக்கவில்லை. எனக்குப் பிரத்தியக்ஷமாய் அனுபோகமில்லையாயினும் இடைஞ்சல்களெனத் தோன்றும் சிற்சில குணதோஷங்களையே இவ்வியாசத்தில் நான் எடுத்துக் காட்டியுள்ளேன். அவை வாஸ்தவமான ஊழல்களென்று மற்றவர்களுக்குப் பட்டால் அடுத்தாற்போல் சட்டத்தைத்திருத்தி யமைக்கும்போது மேற்சொல்லிய விஷயங்களும் கவனிக்கப்பட வேண்டுமென்று கவர்ன்மெண்டாரைக் கேட்டுக்கொள்கிறேன். எந்தச் சட்டம் செய்தபோதிலும் அதில் குணதோஷம் சொல்லாதிருக்க மாட்டார்களென்பதையும் நான் அறிவேன். சட்டத்தினால் நீதிநெறிகளை ஒழுங்குபடுத்த முடியாது. ஆனால், செய்யும் சட்டங்களை மட்டும் ஒழுங்காய்ச் செய்யவேண்டும்.

---

## உற்பத்தி, வியாபார முதலிய சங்கங்களை ஏற்படுத்துதல்*

திருவண்ணாமலை ம-া-া-ஸ்ரீ M. S. சேஷாசலம் அய்யர் அவர்கள் எழுதியது :—

ஐக்கிய சங்கங்கள் நமது மாகாணத்தில் பெரும்பாலும், கடன் கொடுக்கும் விஷயமொன்றுக்கே ஸ்தாபிக்கப் பட்டிருப்பதால் கடனுக்காதாரமாய் வைக்கக்கூடிய சொத்துள்ளவர்களையே ஆதரிக்கிறதன்றி, சொல்ப சொத்துள்ளவர்களையும் சொத்தே இல்லாத தொழிலாளிகளையும் சேர்த்து உதவிசெய்ய இயலாமல், அவர்கள் தங்கள் கஷ்டம் நிவர்த்தியாகாமலே வருந்துகின்றனர். நமது நகரங்களில் இத்தகைய தொழிலாளிகள் ஏராளமாயிருக்கின்றனர். தரித்திரநிலைமையால், இவர்கள் பெரும் கடன்காரர்களாய் தம் தொழில்களைக்கூட அநேகர் விட்டுவிட்டு வேறுவேறுவழிகளில் ஜீவிக்கின்றனர். உண்மை, நாணயம் இவ்விரண்டும் பணம் சம்பாதிப் பதில் எதிராயிருப்பதால் பலர் துரபிப்பிராயப்பட்டு மோசத்தாலேயே ஜீவிக்க சிலசில தொழிலாளிகள் முயல்வதால், தொழிலாளிகளால் செய்யப்படும் எல்லாசாமான்களிலும் பொது ஜனங்களுக்கு அவநம்பிக்கை உண்டாய் விட்டது.

நகரங்களிலே அந்தந்தத் தொழிலுக்கும் ஒரு சங்கம் ஏற்படுத்தி தொழிலாளிகளின் நாணயத்தை விருத்தி செய்வதால் பொதுஜனங்களுக்கு கலப்படமில்லாத பொருள்கள் கிடைக்குமென்பதுடன் தொழிலாளிகளின் ஸ்திதியும் அபிவிர்த்தியாகும்.

---

* சென்ற கான்பரென்ஸுக்கு அனுப்பட்ட வியாசம்.



பால் தயிர் விற்கும் கன்னடியர் அல்லது யாதவர், எண்ணெய் ஆடும் வாணியர், மண்பாண்டம் செய்யும் குயவர், விவசாயக்கருவிகள் செய்யும் விசுவப்பிராமணர், செப்புப் பாத்திரம் செய்யும் கன்னார் முதலிய பல தொழிலாளிகளும் தற்காலம் அவரவர்கள் தொழிலைச் செய்யமுடியாமல் தம் தொழில்களை அடியோடு விட்டுவிட்டனர். இதனால் கிராமங்களுக்குக்கூட இக்கைத்தொழில் சாமான்களை பல மைல்களிலிருந்து வரவழைத்து விற்கும்படி ஏற்பட்டிருக்கிறது. ஜனங்கள் நம்தொழிலாளிகள் செய்யும் சாமான்களுக்கு குறைந்த விலையே கொடுப்பதென்னும் துர்வழக்கம் ஏற்பட்டதால் நாணயத்துடனிருந்தவர்களும் வேறு வழியின்றி மோசமும் புரட்டும் செய்ய ஆரம்பித்தனர். தொழிலாளிகளின் வார்த்தையைவிட சரக்கின் குணமே தெரியாத வியாபாரியின் வார்த்தையில் விதி இல்லாமல்மதிப்புவைக்கும் படி நேரிட்டது. நம்மூரில் செக்காடி விற்பனைக்கு வரும்வாணியர் எண்ணெய் எல்லாம் கலப்படமானதென்றும், கடைகளில் அயலூர்களிலிருந்து பீப்பாய்களில் வரும் எண்ணெய் இதை விட சிலாக்கியமானதாயும் மதிக்கப்படுகிறது.

இதன்முடிவு கலப்பில்லாமல் செய்யப்படும் நல்லெண்ணெய் அப்பட்டமாய் கிடைப்பதரிதாய் விட்டது. தொழிலாளிகள் கொண்டுவரும் பால், இவை தயிர், நீர் கலப்பானதென்னும் எண்ணத்தால் ஜனங்கள் விலையைக் குறைக்கவே, மோசம் அதிகரித்தது. மேனாடுகளிலிருந்து வரும் பீங்கான் கோப்பை முதலியன சற்று ஒழுங்காயும் சுத்தமாயும் இருத்தலின், அவற்றையே ஜனங்கள் வாங்குவதால் மண்பாண்டங்கள் செய்யும் தொழிலே மறந்துபோய்விட்டது. இப்படி பலவகைத் தொழிலும் நசித்துப்போய், நம் தேசஜனங்களனைவரும் பயிரையே ஜீவனோபாயத்திற்காக எதிர்பார்த்து வருவதால், வருஷாவருஷம் பஞ்சத்திற்கும் பயிரிடுவோர் தரித்திரராவதற்கும் காரணமாகிறது. தவிர க்ஷீணித்துப்போயிருக்கும் நெசவுத்தொழிலும் புராதனமாயிருந்த பலவகைத் தொழில்களும் ஆரம்பிக்கப்பட்டு செவ்வனே நடைபெற்றால், ஜனங்களுக்கு வேண்டிய அவசியமான பொருள்களான துணி மணிகளும் உணவுப்பொருள்களும் விலை சரசமாயும் கலப்பில்லாமல் உண்மையானதாகவும் கிடைக்கும். கைத்தொழில்கள் நசித்தால் பிழைப்பின்றி கடன்வாங்கி சாப்பிட்டுவந்து கடன் கொடுக்க மார்க்கமில்லாமல் பட்டினிகிடந்து சாகும் எண்ணிறந்த குடும்பங்களையும், பினங்கு முதலிய தேசங்களுக்கு ஸாவுகார்களின் தொந்தரவு பொறுக்கமுடியாமல் ஓடும் பலகுடும்பங்களையும் காப்பாற்றலாம் தேசத்தின் உற்பத்தி சக்தி அதிகரிக்கப்பட்டு நாட்டில் செல்வமும் வளரும்.

இத்தகைய பெருந் தர்மத்தை சீர்தூக்கிச் செய்ய இதன் நன்மைகளை யெதிர்பார்க்கும் நாமேயன்றி நம்மில் சம்பந்தமற்ற மற்ற

இதரர்களாலாகாது. நமது காருண்ய கவர்ன்மெண்டாரும் ஐக்கியசட்டத்தின் கீழ், இத்தகைய கைத்தொழிலாளிகளின் விஷயத்தின் கூட்டுறவு சங்கங்களை நடத்த அனுமதி கொடுத்திருப்பதுடன் முக்கியமாய் ஷை சங்கங்கள் ஒழுங்காய் நடைபெற வேண்டிய உதவிகளும் செய்யத் தயாராயிருக்கிறார்கள். அப்படியிருந்தும் இவ்வகைச் சங்கங்கள்பல ஏன் ஏற்படுத்தப்படவில்லை என்பதற்குச் சில காரணங்கள் உண்டு அவையாவன:—

1. இத்தொழிலாளிகள் வெகுவாய்ப் படிப்பில்லாதவர்களாயும், தரித்திரத்தினால் அதிகமான பொய், சூது, குடி முதலிய துர் அப்பியாசங்கள் நிறைந்தவர்களாயு மிருத்தலால், இதரர்கள் உதவி செய்ய பயந்திருத்தல்.

2. தங்களுக்குள் ஒற்றுமையும் பொதுநலப் பிரியமுமில்லாமல் சுய நன்மைக்கே மன்றாடும் வழக்கம் குடி கொண்டிருப்பது.

3. இவர்களுக்கு பாங்கிகளிலிருந்து கடன்வாங்குவதற்குப் போதுமான ஆஸ்தியில்லாதிருப்பது.

இத்தியாதிகாரணங்களால் இச்சங்கங்கள் வெகுவாக ஏற்படவில்லை. சிலவிடங்களில் ஒன்றிரண்டுமாத்திரமே காணப்படுகின்றன. ஆனால் சங்கங்களை ஏற்படுத்தி இத்தொழிலாளிகளை சரிவர மேற்பார்த்து வந்தால் தரித்திரத்தின் கொடுமையால் ஏற்பட்ட இத்துர்க்குணங்கள் அனைத்தும் நீங்கி அவர்கள் அபிவிர்த்தி அடைவார்கள் என்பது சில சங்கங்களின் அனுபவத்தினால் நிதர்சனமாய்த் தெரிகிறது.

ஆகவே, தேசாபிமானம், பிரஜாபிமானம் குடிகொண்ட நம் பிரமுகர்கள் ஆங்காங்கு தொழிலாளிகளை ஒருங்குசேர்த்து, சங்கங்கள் ஏற்படுத்தி அவைகளை மேற்பார்த்துவரின் நம்தேசத்திற்கு பெரிய நன்மை செய்தோராவர். தேசகாலப்படி ஷை தொழிலாளிகள் சங்கம் வைக்கப்பட வேண்டுமாயினும், ஊக்க முள்ளோர் யாவருக்கும் ஓர் குறிப்பாக தொழிலாளிகளின் சங்கங்கள் ஏற்படுத்துவதற் கனுகூலமாகும்படி சிலவற்றை இங்கு சுருக்கிச்சொல்லின், ஆங்காங்குள்ள சாதகப்படி பலவித சங்கங்களை, ஏற்படுத்தலாம்.

### பால்காரர் சங்கம்.

பசு, எருமை, ஆடு முதலியவைகளை வளர்த்து அவைகளினின்று கிடைக்கும் பால், தயிர், முதலியவற்றை விற்று ஜீவிப்போர்களை ஒன்று சேர்த்து ஒரு சங்கமாக்கி, அவர்களின் கால்நடைகளுக்கு வேண்டிய தீவனத்தை மொத்தமாய் வாங்கி, பகிர்ந்துகொடுப்பதால், தக்கலாபமடையும்படி செய்வதுடன், கலப்பின்றி பால் தயிர் இவைகளை ஒன்று சேர்த்து நம்பிக்கையோடு விற்கும்படி செய்வதால் பொது ஜனங்களுக்கு ஆரோக்கியத்தை உண்டாக்கவும் முடியும். உண்மையான சரக்குகள் கிடைக்கும்



தனித்தனியே கொண்டுபோய் நாள் முழுவதும் விற்று காலத்தைக் கழிக்கும் இத்தொழிலாளிகளுக்கு சங்கத்தில்விற்க ஏற்பாடுசெய்வதால் சாவகாசம் ஏற்பட்டு தம் குடும்பத்தைக்கவனிக்கவும் முடியும். தவிர இவர்கள் ஒவ்வொரு வருக்கும் கிடைக்கும் வருமான மின்னதெனக் கணக்கேற்படுவதால் சிக்கனமாயிருக்கும்படி இடமேற்படும். நாளடைவில் குடி முதலிய துர்க்குணங்களைவிட்டு முதலாளிகளாகவும் சௌகர்யம் ஏற்படும்.

### தச்சர் கருமார் சங்கம்.

தச்சுவேலை கருமாரவேலைசெய்யும் தொழிலாளிகளைச்சேர்த்து ஏற்படுத்தி, தச்சுவேலை சாமான்களான பயிரிடும் கருவிகள், ஏர், நுகத்தடி, வண்டி, பிரமுகர்களுக்குத் தேவையான பெட்டி, நாற்காலி மேஜை முதலியவைகளும் கருமாரத் தொழிலில் விவசாயக்கருவிகளான மண்வெட்டி, அரிவாள், கொடுவாள், கட்டப்பாரை முதலிய பல கருவிகளும் மொத்தமாய் செய்விக்கபடின், மெம்பர்களுக்கு வேலைக்குத் தகுந்தகூலி கிடைக்கும் இவைகளை விற்பதால் கிடைக்கும் லாபத்தின் பாகத்தையும் இவர்களே அடைந்து ஐக்கிய பாவத்தில் சிக்கனத்தால் முன்னேற்றமடையலாம்.

### எண்ணெய் உற்பத்திச் சங்கம்.

பெரிய கிராமங்களிலும் நகரங்களிலும் எண்ணெய் ஆடும் செக்கென்னும் யந்திரங்கள் பல இருக்கின்றன. அந்தச் செக்காட்டிகளை ஒருங்கு சேர்த்து, சங்கங்கள் ஏற்படுத்தி கலப்படமில்லாத எண்ணெய்களை சங்கம் விற்கும்படி செய்து அதனால் பொது ஜனங்களின் நம்பிக்கையையும் மெம்பர்களுக்கு அவகாசத்தையும் லாபத்தையும் செல்வத்தையும் உண்டாக்கலாம்.

### சூளை சங்கங்கள்.

ஒவ்வொரு பட்டணத்திலும், வீடுகள் புதுப்பிப்பதும் கட்டுவதும் சகஜமாயிருக்கிறது. அதற்குவேண்டிய செங்கல், சுண்ணாம்பு, ஓடுமுதலியவைகளை யாரோ ஒருவர் முதல்வைத்து கூலியாட்களைக் கொண்டு செய்வித்து அதிகவிலைக்கு விற்று, ஏராளமான லாபமடைகிறார். இந்த வேலைகள் செய்யத் தெரிந்தவர்களைச் சேர்த்து சங்கமாக்கி பிரமுகர்களின் திரவிய சகாயத்தால் வேலை செய்யப்பட்டால் வட்டிபோக மீதியாகும் லாபத்தால் இக்கூலிகள் நல்ல நிலைமையை யடைந்து க்ஷேமம்பெறலாம். திரவிய சகாயம் செய்பவர்களுக்கு சங்கத்தில் செய்யப்படும் சாமான்களே ஜவாப்பாயிருக்கின்றன.

### நெசவு சங்கங்கள்.

தற்காலம் நமது நாட்டுப்புறங்களிலுள்ள நெசவுக்காரர்கள் வெகுவாய் ஷை தொழிலையே விட்டுவிட்டு பயிர் செய்கின்றனர். சிலர் சொந்தப் பயிருமில்லாமல் கூலிவேலை செய்கின்றனர். நெசவுத் தொழிலை இன்னும

செய்துவரும் சிலர் நம்பிரதேசத்தார் உடுக்கும் வஸ்திரங்களை நெய்தால், சீர்மைத் துணிகளுடன் போட்டியாய் விற்க முடியாமல் சொற்பவிலையே கிடைப்பதால் கூலியே கிட்டாமல் அந்தநெசவைவிட்டு கம்பாயம் என்னும் முகம்மதியர் துணியை குத்தகைக்கு நெய்து வருகிறார்கள். இவைகளுக்கு மதராஸிலும் இன்னும் பல இடங்களிலுமுள்ள முதலாளிகளான வியாபாரிகள் நூல்களை இவர்களுக்குக் கொடுத்து அதின்கணக்குப்படி இத்தனை கஜம் துணி கொடுக்கவேண்டுமென்று நிபந்தனை ஏற்படுத்திக் கொள்வதால் தினம் 1-க்கு 0—4—0 க்குமேல் ஒரு நெசவுக்காரனுக்கு கூலிகிடைப்பதுகூட கஷ்டமாயிருக்கிறது. ஆனால் அந்த நூலின் விலையும் அந்த துணிகள் "மேனல்மீன்" முதலிய பிரதேசங்களில் விற்கும் விலையையும் வட்டி நஷ்டத்தையும் கழித்துப்பார்த்தால் குறைந்தது பழைய காலத்தறிகளில் வேலை செய்யும் ஒரு நபர் நாள் 1-க்கு பத்து அணாவும் பிளைஷட்டில் என்னும் காலாட்டித்தறியில்வேலை செய்பவன் குறைந்தது ஒரு நாளைக்கு ரூ. 1-8-0 கூலியாக சம்பாதிக்கமுடியும். ஆனால் இதற்கு முதல் வைத்து நூல்களை சொல்பவிலைக்கு மொத்தமாய் வாங்கவும் உற்பத்தியாகும் சரக்குகளை தாமதமின்றி இதரதேசங்களில் சரியான விலைக்கு விற்கவும் வியாபார ஞானமும் தக்க திரவியமும் தேவையாயிருக்கின்றன. இவ்விரண்டும் கிடைக்கு மிடங்களில் நெசவுக்காரர்களை மிகவும் ஆதரிக்கலாம். மற்ற இடங்களில், நெசவுக்காரர்கள் இப்போது கொஞ்சம் கொஞ்சமாய் வாங்கும் நூலுக்கு அதிக கிரயம் கொடுக்கிறார்கள். இதனால் வியாபாரிகள் அடையும் லாபத்தை நிவர்த்திசெய்து அதையும் நெசவுக்காரரே அடையும் பொருட்டு மொத்தத்தில் நூல் பேல்கள் தருவித்து சங்கத்துக்கு சேரும் செலவைச்சேர்த்து சொல்ப லாபத்துக்குக் கொடுக்கலாம். உற்பத்தியாகும் சரக்குகளுக்கு எங்கே நல்ல விலை கிடைக்குமோ அங்கு விற்பனைக்கு ஏற்பாடு செய்து லாபத்தை மெம்பர்களுக்கு கொடுக்கலாம். தவிர சங்கத்தில் நூதனத் தறிகள் தருவித்து எல்லா நெசவுக்காரரும் லாபகரமாய் வேலை செய்யும் படியும் ஏற்பாடு செய்யலாம்.

## நெல் குத்துவோர் சங்கம்.

அநேக இடங்களில் வியாபாரிகள் தினந்தினம் நெல்லை அளந்து கொடுத்து மறுதினம் கூலிபோக இவ்வளவு அரிசி கொடுக்க வேண்டுமென்று திரும்பி வாங்குகிறார்கள். முதலுள்ளவர்கள் நெல்லை கிரயத்துக்கு வாங்கி, குத்தி விற்றால் தக்க லாபம் கிடைக்கிறது. நெல் குத்துவோர்கள் ஒருங்கு சேர்ந்து ஒரு சங்கம் ஏற்படுத்திக்கொண்டு பொதுவில் நெல் வாங்கிக் குத்தி ஏற்றுமதி செய்தால், வழக்கம்போல் கிடைக்கும் கூலிமாத்திரமல்லாமல், அரிசி ஏற்றுமதி செய்வதால் கிடைக்கும் லாபமும் இவர்களுக்கே சேரும்.



## ஸ்டோர் அல்லது வியாபார சங்கங்கள்.

அந்தந்த தேசங்களிலே உற்பத்தியாகாமல் வெளியூர்களிலிருந்து தருவிக்கப்படும் பல சரக்குகளைத் தருவித்து விற்கும் கடைகளில் சரக்குகளை ஜனங்கள் வாங்குகிறார்கள். வியாபாரிகள் தங்களுக்கு லாபம் வரும் மார்க்கத்திலேயே கருத்துள்ளவர்களாதலின், மட்டமான சரக்குகளை சொல்ப விலைக்குக்கொண்டு, அதிக விலைக்கு விற்பதும் சரக்குகளில் கலப்பு முதலிய சூது செய்வதும் சகஜமாயிருக்கின்றன. தக்க முதலும், வியாபார ஞானமும் கிடைக்கும் இடங்களில் மெம்பர்கள் சேர்ந்து இவ் வியாபார சங்கங்களை ஏற்படுத்துவதால் வியாபாரிகள் செய்யும் புரட்டுகளுக்கு இடமில்லாமல் போவதுடன் மெம்பர்களுக்கு கலப்பில்லாத உண்மையான சரக்குகள் சரியான விலைக்குங் கிடைக்கும்.

## தானியச் சங்கம்.

கிராமங்களிலே விவசாயிகள் வருஷத்திற் கொருதரம் தர்மபண்டு மாதிரி நபருக்கு கொஞ்சம் தானியம் சேர்த்து, ஒரு பொது நிதியாக்கி அதைத் தங்களுக்குள் தானிய வட்டிக்கே கொடுத்து திருப்பிவாங்கி விர்த்தி செய்தால், பஞ்சகாலத்தில் தாங்கக்கூடிய ஒரு தானியக் குவியலை ஏற்படுத்திக் கொள்ளலாம். இது ஒவ்வொரு கிராமத்திலும் அத்தியாவசியமானது. இப்போதிருக்கும் கடன் சங்கங்களே தங்கள் விதிகளில் வேண்டிய புதிய விதிகளை சேர்த்துக்கொண்டு தானியங்களைச் சேர்த்து வைக்கலாம்.

## பஞ்சமர் முதலிய கீழ்வகுப்பார் சங்கம்.

மிருகங்களுக்கும் கீழ்த்தரமான நிலைமையிலிருக்கும் வகுப்பார் அநேகர் நம்தேசத்திலிருக்கின்றனர். அவர்கள் தங்களது வேலையின் பலனைத் தாங்களடைய மாட்டாமல் தீராக்கஷ்டத்தை யனுபவிப்பது பிரசித்தம். ஆகவே, பரிதாபமும் தயாளமுமுள்ள பல கனவான்கள் இவர்களை முன்னுக்குக் கொண்டுவர ஆங்காங்கு பள்ளிக்கூடங்கள் முதலியன ஸ்தாபித்து உதவிவருகின்றனர். இவர்களின் வேலையினால் கிடைக்கும் கூலி முழுவதும் இவர்களே அடையவும், இவர்களுக்கு பலவகைத் தொழில்களைக் கற்றுக்கொடுத்து அதை விருத்தி செய்யவும் சங்கங்களை ஏற்படுத்தல் வேண்டும்.

ஆங்காங்கு குடியேறி இருக்கும் ஜனங்களின் சுபாவத்துக்கேற்றவாறு பற்பல சங்கங்கள் சிரத்தையுள்ளோருக்குத் தானாகத் தோன்றுமென்பதும், அச்சங்கங்கள் விர்த்தியாகி அதைச் சேர்ந்தவர்களை முன்னிலைக்குக் கொண்டுவர அத்தகையோர் பாடுபடுவார்களென்பதும் நிச்சயம். தற்காலம் நமது கூட்டுறவு இலாகாதாரும் இத்தகைய சங்கங்களை வைக்க வேண்டிய உதவிகளனைத்தும் செய்யத் தயாராயிருப்பதால் நாமும் அவர்க

ளுடன் கலந்துழைத்து ஐக்கிய பாவனையானது ஏழை ஜனங்களுக்கு உதவுமாறு முயலுவோமாக.

---

## ஸர் ஜேம்ஸ் மெஸ்டனுடைய பிரசங்கம்.

ஐக்கியமாகாண கூட்டுறவு கான்பரன்ஸ் சமீபத்தில் நடைபெற்ற பொழுது, அதன் துவக்கத்தில் ஸர் ஜேம்ஸ் மெஸ்டன் செய்த அருமையான பிரசங்கத்தின் முக்கியமான ஸாராம்சம் என்ன வென்றால்,—

உங்களது முயற்சியில் எனக்கு மிக்க சிரத்தையுண்டு; உங்களுக்கு ஆதரவளிக்க வேண்டுமென்றும் எனக்கு விருப்பம் உளது. இவ் விஷயம் உங்களுக்குத் தெரியும். இந்தியாவுக்கு மிக்க திரவியவன்மை பிறப்பதற்கு இக்கூட்டுறவு முயற்சியே மேலான சாதனமென்பது எனது கருத்து. கூட்டுறவு முயற்சியின் முக்கியமான முதல் நோக்கமென்ன? இத்தேசத்திலே பணம் பெரிதும் விரயம் செய்யப்படுகிறது. ஆதலின் அப்பணவிரயத்தைத் தடுத்தல் இம்முயற்சியின் முதல் நோக்கமாம். தன்னுடைய பணத்தை மூலையில் ஒளித்துவைக்காமலும், கல்யாணம் முதலிய இனங்களில் கண்டபடி செலவுசெய்யாமலும் போதிப்பதற்கு இம்முயற்சி தக்க ஆதாரமாகும். இரண்டாவதாக கூட்டுறவு முயற்சியானது ஜனங்கள் ஒருமித்து வேலைசெய்வதற்கும் கண்ணியமாய் வாழ்வதற்கும் அன்னியரை நம்புவதற்கும் வழிகாட்டுவது போலாகிறது. மூன்றாவதாக இம்முயற்சியானது உண்மையான சுய ஆட்சியில் பயிற்சி அடைவதற்கு உற்ற சாதனமாகும். பொது நன்மையைக் கவனிக்குமளவில் சுய நலத்தை ஓங்க விடக்கூடாதெனவும், வெகுஜனவாக்குக்குக் கட்டுப்பட வேண்டுமெனவும், இம்முயற்சி போதிக்கும். எனவே கூட்டுறவு முயற்சியினால் மிக்க நன்மைகள் ஏற்படுமென்றிருக்கும் பொழுது, இந்தியாவின் க்ஷேமலாபவாழ்வில் கருத்துடைய அனைவரும் இம்முயற்சியில் கலந்துகொண்டு உழைக்கவேண்டுமென நான் மிகவும் சிபார்சுசெய்வேன். தவிர, இம்முயற்சியில் கலந்துகொண்டு தீவிரசிரத்தை காட்டிவருவோருக்கும் மனப்பூர்வமான வந்தனமளிப்பேன். திரவிய நிலைமை உயருவதற்கும் இராஜீயமுன்னேற்றம் ஏற்படுவதற்கும் இம்முயற்சி தக்க கருவியாய் உளது. கிராமங்களிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களில்தான் கூட்டுறவு லட்சியத்தை நன்கு பரவச்செய்ய முடியும். தங்களது காரியத்தைத் தாங்களே நிர்வகித்து நடத்திக்கொள்வதற்கும், பரஸ்பரம் பொறுப்பை ஏற்றுக்கொண்டு பலனடைவதற்கும் கிராமங்கள் தக்க ஸ்தலங்களாகும். கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுவதனால், பழய கடனைத் தீர்த்துக் கொள்ளுவதற்கு இலகுவாயிருக்கிறதென்பதைமட்டும், கிராமவாசிகள் உணர்ந்துகொண்டால் போதாது.



162043

செட்டாய் வாழ்ந்துவந்து பணத்தைமிச்சம் பிடித்து வங்கிக்குப்போட்டு வைப்பதற்கும், அச்சங்கங்களே கல்விச்சாலைகள் போலாகுமென்று கிராமவாசிகள் உணர்ந்து கொள்ளவேண்டும். மேற்கண்ட அம்சங்களிலே கிராமவாசிகளுக்கு ஞானம் உண்டுபண்ணுவதுதான் ஸென்ட்ரல் பாங்கியின் காரியம். கூட்டுறவுச்சங்கங்களின் அங்கத்தினர் தங்களது பொறுப்பையும் கடமையையும் உணர்ந்துகொண்டு நடக்கும்வண்ணம்ஸென்ட்ரல் பாங்கிகள் முயலாதுபோயின் அதன் நிலைமை சீர்கெட்டுவிடும்

இனி ஸென்ட்ரல் பாங்கியானது கூட்டுறவு லட்சியத்தை நூதனமாக எந்தெந்தவிதத்தில் பரவச்செய்யலாமென்று பார்த்திருந்து, புதிய சங்கங்கள் ஏற்படும் வண்ணம் முயன்று அவைகளுக்குப் பணவுதவி செய்ய வேண்டும். தவிர, சீர்கேடாய்ப் போய்விட்ட சங்கங்களை விட்டு விடவேண்டும். இதனால் நஷ்டம் உண்டானாலும். பரவாயில்லை.

ஸென்ட்ரல் பாங்கிகள் வேலைபுரிவதற்கு எவ்வளவோ மார்க்கங்கள் இருக்கின்றன. லாபத்தொகையை எவ்வளவு அதிகமாக அடையலாமென்பதில் கண்ணுங் கருத்துமாயிராமல் உண்மையான கூட்டுறவு முயற்சியை எவ்வளவுதூரம் விசாலிக்க முடியுமென்று கவனித்திருந்து அவ்வாறே செய்யுமாயின், ஸென்ட்ரல்பாங்கியின் லட்சியம் கைகூடிவிடுகிறதெனலாம்.

கூட்டுறவு முயற்சி பிரபலமடையவேண்டி உழைப்போர் பலர் இருக்கிறார்கள். ஆயினும், போதுமான அளவு உழைப்பாளிகள் இல்லை. கூட்டுறவு முயற்சியானது கிராமாந்தரங்களிலே இப்பொழுதுதான் தலைகாட்டத் தலைப்பட்டுளது. மூவகையான இந்தியரின் உதவி தேவையென நான் கருதுகிறேன். முதலாவதாக ஸென்ட்ரல் பாங்கியின் டைரக்டர்களை நான் வேண்டிக் கொள்ளுவதென்னவென்றால், ஒவ்வொருவரும் காரியங்களை நடத்துவதில் தங்கள் தங்களுக்குத் தனியே பொறுப்பு உண்டென்று உணர்ந்துகொள்ள வேண்டும்; கூடுமானால் பிரைமரி சங்கங்களை நேரில்சென்று பார்வையிட்டு அவைகள் எப்படி நடந்து வருகின்றனவென்று தெரிந்துகொள்ளவேண்டும்; அல்லது அவைகளை மேற்பார்வை பார்க்கும் ஸூபர்வைஸர்களுடன் அடிக்கடி கலந்துபேசி, பிரைமரி சங்கங்கள் எப்படி நடந்துவருகின்றனவென்று கவனித்து வரவேண்டும், எவ்வளவுக்கெவ்வளவு சிரத்தையும் உழைப்பும் அதிகமோ அவ்வளவுக்கவ்வளவு அதிக நன்மை ஏற்படும். சிரத்தையும் உழைப்பும் எவ்வளவுக் கெவ்வளவு குறைகிறதோ அவ்வளவுக் கவ்வளவு காரியம் கெட்டுப்போம்.

இரண்டாவதாக நாட்டுப்புறங்களிலுள்ள கனவான்களை வேண்டிக் கொள்வதென்ன வென்றால், பொதுநல ஊழியம் புரிவதற்கு இப்பொ

முதே கூட்டுறவு முயற்சிதான் கைமேலுள்ள சிறந்த வழியாகும். ஆகவே கூட்டுறவு முயற்சியின் லட்சியங்களை நன்கு உணர்ந்துகொண்டு அந்தலட்சியங்களை அக்கம் பக்கத்தினருக்கு எடுத்துக்கூறி, பிரைமரி சங்கங்களில் சேர்ந்து உழைத்துவரவேண்டும்.

மூன்றாவதாக இராஜீய வாதிகளை வேண்டிக்கொள்ளுகிறேன். உண்மையான சுய ஆட்சிக்கு அடிப்படையாக நம்மைக்குள் அமைந்துள்ள சாதனம் கூட்டுறவு முயற்சியேயாம். சுய ஆட்சியை சுலபமாய் சீக்கிரம் அடைவதற்கு இம்முயற்சியே ஏற்றவழி. ஓட் கொடுக்கும் சுதந்திரத்தை உணர்ந்து அதற்குத்தபடி ஓட் கொடுப்போரின் தொகுதியை அமைப்பதற்கு இம்முயற்சியைவிடச் சிறந்த சாதனம் எதுவுமில்லை. ஓட் கொடுக்கும் சுதந்தரத்தை நன்கு உணர்ந்து ஓட் கொடுப்போரின் தொகுதியை நாம் எய்தாதுபோயின், இந்தியாவிலே ஜவாப்தாரியான சுய ஆட்சி என்பது பேர் மாத்திரையாய் முடிந்துவிடும், ஆதலின்; பொதுநல உழைப்பில் ராஜீய வாதிகள் பலன் பெறுவதற்கு இம்முயற்சியாகிய சாதனம் இருக்கிறது. அவ்விதம் இராஜீய வாதிகள் பொதுநல சேவகம் புரிவார்களாக.

## இராஜப் பிரதிநிதியின் பிரசங்கம்.

சமீபத்திலே சென்னை தொழிற்காட்சியை H. E. இராஜப்பிரதிநிதி திறந்து வைத்தபொழுது செய்த பிரசங்கத்தின் முக்கியமான ஓர் அம்சம் என்னவென்றால்:—

விவசாயவிஷயத்தில் அபிவிருத்தி உண்டு பண்ணுவதற்குற்ற இரண்டொரு அம்சங்களைக் குறிப்பிடுகிறேன். முதலில் அவுரியைப் பற்றிச் சொல்லுகிறேன். இந்தியாவிலே மற்ற மாகாணங்களைக் காட்டிலும் சென்னை மாகாணத்தில்தான் அவுரி மிகவும் அதிகமாய் விளைகிறது; ஆயினும் நீலத்தொழில் அபிவிருத்தியடைய வேண்டுமானால் ஸுமட்ரா பயிருக்குப் பதிலாக ஜாவா வகையைக் கையாளவேண்டும். தவிர தொழில் முறை சரிவர இருத்தல்வேண்டும்; பிறகு சரக்கை விற்பனை செய்வதில் ஒழுங்கான ஏற்பாடு வேண்டும்; கடைசியாய் கலப்படம் என்ற மோச வழக்கத்தை ஒழிக்கவேண்டும். ஜாவாவகையை இச்சென்னையில் நன்கு பயிரிட்டால் மகசூல் அதிகமாகக் கிடைக்கும். அல்லாமலும், பீஹார் மாகாணத்திலே ஜாவா வகைவிதையே மிகவும் தேவையாய் இருப்பதால், அம்மாகாணத்திற்கு வேண்டிய விதையையும் ஸப்ளை செய்யலாகும். நீலவிஷயத்தில் எவ்வாறு அபிவிருத்தி யுண்டுபண்ணலாமென்று மிஸ்டர் மார்ஸ்டன் பரிசீலனை செய்துவருகிறார். அவர் நீலச்சரக்கு நிபுணராக நியமிக்கப்பட்டிருப்பதனால், நீலத்தைத் தயாரிப்போருக்கு அவரால் தக்க ஆதரவும் யோசனையும் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. நீலச் சரக்குக்கு நல்லவிலை கிடைக்க வேண்டுமாயின், இத்தேசத்தில் மட்டுமல்



லாமல் இங்கிலாந்திலும் அதை விற்பதற்குற்ற கிரமமான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டியதவசியம். நீலத்தை இங்கிலாந்திலே நன்கு விற்று முதல் செய்வதற்காக பீஹார் தோட்டக்கார சங்கத்தினர் இங்கிலாந்திலே தக்க ஏற்பாடு செய்திருக்கின்றனர். ஆகவே சென்னையிலிருந்து நீலச்சரக்கை ஏற்றுமதி செய்வோர் அச்சங்கத்தினரின் ஏற்பாட்டைக் கைக்கொண்டு பலனடையலாம்.

தொழில் முறைக்கு உபயோகமாகக் கூடிய இதர பயிர்களிலே பருத்தியும் மணிலாக் கொட்டையும் முக்கியமாகும். அவ்விரு சரக்குகளிலும் வியாபாரம் பெருத்துவருகிறது. வருங்காலத்தில் இன்னும் நல்லவியாபாரம் ஏற்படுமெனவும் தோன்றுகிறது. ஆயினும் அவ்விரு சரக்குகளுக்கும் மேனாட்டு பஜாரிலே மதிப்பு குறையாதிருக்க வேண்டுமாயின், அவ்விரு சரக்குகளையும் சரிவரக் கையாளவேண்டும், மேலும் விலைக்கு விற்பதற்குற்ற தக்க ஏற்பாடுகளையும் செய்துவைத்துக் கொள்ள வேண்டும்.

இதற்கு அவ்விரு சரக்குகளையும் பயிரிடும் விவசாயிகளுள் மட்டுமல்லாமல், வியாபாரிகளுக்குள்ளும் கூட்டுறவு ஏற்பட்டால்தான் முடியும். நல்ல ஜாதிப் பருத்தியை பயிரிடுவதற்குற்ற பரிசீலனையை விவசாய இலாகா அதிகாரிகள் செய்து பார்த்திருக்கின்றனர். அவ்வாறே பயிரிட்டு, கலப்படம் இல்லாமல் விற்று வந்தால், சாதாரணமான பருத்திக்குக் கிடைப்பதைக் காட்டிலும் அதிக விலை கிடைக்கும். சரக்கு நயமாய் இருக்கவேண்டு மென்பதோடு, அதை விலைக்கு வாங்குபவர்களிடமே நேராகவும் விற்கவேண்டுமாயின், பருத்தி விவசாயிகளுக்குள் கூட்டுறவு வேண்டும். அவ்வாறே கூட்டுறவு வேண்டுமென்பதை விவசாயிகள் உணர்ந்துகொள்ளத் தலைப்பட்டிருப்பதாகக் காண்கிறது. இது திருப்திகரமே யாகும். பருத்தி விதைகளை மொத்தத்தில் வாங்கி விநியோகம் செய்வதற்காகத் திருநெல்வேலி ஜில்லாவிலே சங்கமொன்று ஏற்பட்டுளது. சுத்தமான பருத்திவிதை கிடைப்பதற்கு அச்சங்கம் முக்கியமான சாதனமாய் இருக்கும். அல்லாமலும் மொத்தத்தில் பருத்தியை விற்பதற்கும், பருத்தியை சுத்தமாகப் பயிரிட வேண்டுமென்றும், மத்திய புருஷர் அல்லது தரகரின்றி விலைக்கு வாங்குவோரிடமே அதை நேராக விற்கவேண்டு மென்றும் வற்புறுத்திச் சொல்லவும் வேண்டுமோ? இதற்கு கூட்டுறவுச்சங்கமே தக்க சாதனமாகும்.

இம்மாகாணத்திலே வருஷந்தோறும் 700 லட்சம் ரூபாய் பெறுமானமுள்ள மணிலாக்கொட்டை பயிராகிறது. கொட்டையை விலைக்கு விற்பதில் விவசாயிகள் ஒன்றுசேர்ந்து முயற்சி செய்வார்களாயின், அவர்களுடைய லாபம் அதிகரிக்குமென்பதில் தடையில்லை. சென்னையில் விளையும் மணிலாக்கொட்டையிலே தகுந்தவளவு எண்ணெய்

இருக்கிறது. ஆயினும், இதரதேச சரக்குகளுக்குக் கிடைக்கும் விலையை விட இம்மாகாணத்தின் சரக்குக்குக் குறைவான விலையே கிடைக்கிறது. இதற்குக் காரணம் என்ன? கடலையை உடைத்துப் பருப்பு எடுக்க அனுஷ்டிக்கப்படும் வேலை முறையானது கர்னாடக முறையாய் இருக்கிறது. தோலை எடுப்பதற்காகக் கடலைக்கு ஈரம் ஊட்ட வேண்டியதாயிருப்பதால், அத்தகைய பருப்பிலிருந்து தகுந்தவளவு எண்ணெய் கிடைப்பதில்லை. யந்திரங்களின் உதவியைக்கொண்டு தோலை எடுத்தால் அக்கஷ்டம் நீங்கிவிடும். ஆனால் யந்திரங்களை வாங்கி அவைகளையமைப்பதற்கு விவசாயிகள் ஒன்றாய்க்கூடி முயலவேண்டும்.

சுருங்கச் சொன்னால் சென்னையில் விவசாயப் பொருள்கள் அபிவிருத்தியடைவதற்கு இரண்டு அம்சங்கள் ஜீவாதாரமானவை. (1) எல்லாப் பொருள்களிலும் கலப்படம் செய்யப்படுகிறது. இது கூடவே கூடாது (2) பொருள்களுக்கு நல்லவிலை கிடைக்கவேண்டி, அவைகளைக் கூட்டுறவு முறையில் விற்கவேண்டும். இவ்விரு அம்சங்களையும் சென்னைமாகாணவாசிகள் நன்கு கவனிப்பார்களாக. கலப்படஞ்செய்தல் என்ற கெட்டவழக்கம் இந்தியாவில் பரவிக்கிடக்கிறது. அதனால் மிக்க பாதகம் ஏற்படுவதாக எனக்கு அடிக்கடி தகவல் எட்டுகிறது. ஆதலின் சரக்கு நயமாய் இல்லாமற்போயின், நல்ல பிரிசமும் விலையும் கிடைக்காதென்பதை உங்களுக்கு நான் வற்புறுத்துவேன்.

# மதராஸ் புல்லெடீன் ஆப் கோவாபரேஷன்

என்னும்

# சென்னைக் கூட்டுத்தொழில் வர்த்தமானி

23 APR 1918

சம்புடம் IX] 1918ளு பிப்பரவரி மீ [இலக்கம் 8

## பத்திராதிபரின் குறிப்புகள்.

### திருவல்லிக்கேணி ஸ்டோர் சங்கத்திற்கு ஒரு யோசனை.

மைசூர் கூட்டுறவு கான்பரன்ஸ் நடைபெற்றபொழுது, திருவல்லிக்கேணியிலுள்ள 'திருவல்லிக்கேணி ஸ்டோர்ஸ்' என்ற சங்கம் வேலை செய்து வருவதைப்பற்றி மிஸ்டர் ஸத்தியமூர்த்தி அய்யர் ஒரு வியாசமெழுதி அக்கான்பரன்ஸுக்கு அனுப்பினார். பண்டங்களைத் தயாரித்து விற்கும் நோக்கத்தோடுகூடிய சங்கங்கள் இல்லாததினால்தான், சுத்தமான பண்டங்களை அச்சங்கம் விற்பனை செய்துவர முடியவில்லையென அவ்வியாசத்தில் அவர் குறிப்பிட்டிருந்தார். அவ்விஷயம் உண்மையேயாயினும், சுத்தமான பண்டங்கள் கிடைப்பதிலும், அவ்விதம் பண்டங்களைத் தயாரிக்கும் சங்கங்களிடத்திலும் அத்திருவல்லிக்கேணி சங்கம் தக்க சலிகை காட்டவில்லை யென்பதை ஒப்புக்கொள்ளவேண்டும். இந்த சந்தர்ப்பத்திலே மாம்பலத்தில் எண்ணெய் உண்டுபண்ணுவதற்கு ஏற்பட்ட சங்கத்தினிடம் அச்சங்கம் நடந்துகொண்ட மாதிரியை நாம் குறிப்பிட வேண்டியிருக்கிறது. அச்சங்கத்திலே 'பொது நன்மைக்கான நிதி' என்ற நிதியில் சேர்ந்திருக்கும் 16 ஆயிரம் ரூபாயும் சங்க மெம்பர்களுக்கு உபயோகமாகும்படி வைத்தியசாலையை ஏற்படுத்துவதில் செலவிடப்படலாமென அவர் சொல்லுகிறார். உண்மையில் ஏழைகளாய் இருப்போருக்கு நலந்தருவனவற்றை அச்சங்கம் இதுவரையில் எதுவுஞ் செய்யவில்லையேயென அவர் சொல்லுவது சரியே, ஏழைகளுக்கு உதவியாயிருக்கும்படியான காரியத்தில் அச்சங்கம் ஏற்கெனவே முற்பட்டிருக்கவேண்டும். ஆயினும் என்ன? இனியாவது முற்படவேண்டும். முதலாவது, ஏழைகளுக்கு அச்சங்கம் செய்யவேண்டிய உதவி யாதென்னில்: கூலிவேலை செய்து ஜீவிப்போர் வசிக்குமிடத்திலே கிளைச் சங்கங்களை ஏற்படுத்தி

முக்கியமான உணவுப் பொருள்களை விற்றுவர வேண்டும். ஏழை ஜனங்கள் புழுங்கல் அரிசியையே உபயோகித்து வருகின்றனர். அத்தகைய அரிசியை அச்சங்கம் மொத்தத்தில் வாங்குவது அவ்வளவு கஷ்டமல்ல. கூலிவேலை செய்யும் ஏழைகளுக்கு அப்பண்டங்களை விற்பதில் பஜார் விலைப்படியே விற்கவேண்டுமென்றில்லாமல், கொள்முதலைவிடச் சிறிது தூக்கிவிற்றால்போதும். கூலிவேலை செய்வோர் விலை சரஸத்தையே பெரிதாக மதிப்பார்கள். ஆகவே இவ்விஷயத்தை ஆலோசித்து பார்த்து முடிவு செய்யும் அச்சங்கத்தினர் ஒரு கமிட்டியை நியமிப்பார்களென்றும், அந்த யோசனையில் மிஸ்டர் ஸத்தியமூர்த்தி அய்யர் சிரத்தை காட்டுவாரென்றும், நாம் ஆவலுடன் நம்பியிருக்கிறோம்.

* * *

மைசூரிலே கூட்டுறவுச் சங்கங்களின் மெம்பர்களது திரவிய நிலைமை எவ்வாறிருக்கிறதென்று உத்தேசமாய்ப் பரிசீலனை செய்யும் வண்ணம் அங்கே ரிஜிஸ்ட்ராராய் இருந்த மிஸ்டர் சந்தி என்பவர் ஏற்பாடு செய்தாரென்பது நம் நேயர்களுக்குத் தெரியும். அவ்வாறு நடந்த பரிசீலனை பரீக்ஷார்த்தமாய் நடத்தப்பட்ட பரிசீலனையேயாகுமெனவும், ஆகவே, சமீபத்தில் தக்க பரிசீலனை நடத்த ஏற்பாடு செய்யப்படுமெனவும் அவர் சொல்லியிருந்தார். அவருக்குப் பதிலாக ரிஜிஸ்ட்ராராய் வந்திருப்பவரோ கூட்டுறவு இலாகாவில் வேலைபார்ப்பவர்களாலேயே அப்பரிசீலனை நடத்தப்படும்பொழுது அதற்கு இரண்டு மூன்று வருஷகாலமாகுமென்று சொல்லியிருக்கிறார். இரண்டு மூன்று வருஷ காலத்திற்குள் அங்கே அம்முயற்சி இன்னும் வெகுதூரம் அபிவிருத்தியடைந்து வருமாதலின் மீண்டும் பரிசீலனை நடத்தும்படி நேருமே. அதிகாரிகளை நியமிப்பதிலும் அவர்களுக்கு சம்பளத்தை அதிகப்படுத்துவதிலும் மைசூர் ஸமஸ்தானத்தார் கேட்டுக் கொடுப்பார்களாகக் காணப்படவில்லை. ஆதலால் அப்பரிசீலனையை நடத்துவதற்காகத் தனியே சில சிப்பந்திகளை நியமித்து பரிசீலனை நடத்துவதுதான் உசிதமாகும். ‘முக்கியமாக எருவை வாங்கி வினியோகஞ்செய்யும் நோக்கங்கொண்ட விவசாயச் சங்கங்களை ஏற்படுத்துவதற்காக பிரத்தியேகமாக ஓர் இன்ஸ்பெக்டர் திட்டமாயிருப்பதை நாம் சந்தோஷத்துடன் குறிப்பிடவேண்டும். நெசவுக் காரர்களின் சங்கங்களை ஏராளமாய் ஏற்படுத்தவும், பண்டங்களை விற்கும் நாயகமான சங்கங்களுடன் அவைகளை ஒன்றுபடுத்திவிடவும், அதோடு நெசவுத்தொழிலை போதிக்கும் பாடசாலை யொன்றை ஏற்படுத்தவும் உத்தேசமிருக்கிறது. கூட்டுறவு முயற்சியிலே இந்த அம்சத்தைக் கவனிப்பதற்குப் பிரத்தியேகமாய் ஓர் அதிகாரி நியமிக்கப்படக்கூடும்.



ஒரு சங்கத்தின் நிதிகளை பஞ்சாயத்தார்களே ஏகபோகமாய் அனுபவித்து வருவதும், ஏழைகளாயுள்ள மெம்பர்களுக்கு அந்நிதியின் உதவியில்லாமற் போகும்படி செய்வதுமான தீமையைப் போக்க வேண்டி ஓர் உபவிதி ஏற்பட்டுளது. ஓரளவுக்குமேல் பஞ்சாயத்தார்கள் கடன் எடுத்துக்கொள்வதாயின் அதற்கு சங்கத்தின் ஜெனரல் பாடி (அதாவது) மகாநாட்டின் அனுமதி வேண்டுமென்பதே அந்த உபவிதியின் ஸாரமாகும். இவ்விஷயமாய் மைசூரில் என்ன ஏற்பாடு செய்திருக்கிறார்களென்றால், சங்கத்தின் நிதிகளிலிருந்து நூற்றுக்கு 20 பங்குக்குமேல் பஞ்சாயத்தார்கள் தங்களது சொந்த உபயோகத்துக்கு எடுத்துக்கொள்ளக்கூடாதென்பதே. சங்கத்தின் நிதியிலே நூற்றுக்கு 20 பங்கு என்றால், சங்கத்தின் மூலதனத் தொகையிலே நூற்றுக்கு 20 பங்கா? அல்லது மெம்பர்களுக்குக் கடன் கொடுக்கும்படியாக அவ்வப்போது சங்கத்தில் கிடைக்கக்கூடிய தொகையில் நூற்றுக்கு 20 பங்கா? என்று நமக்கு நிச்சயமாய்த் தெரியவில்லை.

* * *

சென்னைமாகாண கூட்டுறவுயூனியனின் மகாநாடு சமீபத்தில் கூடிய பொழுது, புதிய உபவதி யொன்று ஏற்பட்டது. அதாவது, மேற்படியூனியனின் பிரஸிடெண்ட், வைஸ் பிரஸிடெண்ட், ஜாயிண்டுகாரியதரிசிகள், நிர்வாக கமிட்டியால் தேர்ந்தெடுக்கப்படும் இருவர், ஆகிய இவர்களைக் கொண்டு ஸ்டான்டிங் கமிட்டி என்ற நிரந்தரகமிட்டி யொன்றை ஏற்படுத்துவதாகும். மேற்படி யூனியனின் நிர்வாக கமிட்டியின் அங்கீகாரத்துக்கும் மேற்பார்வைக்கும் உட்பட்டு அந்த நிரந்தர கமிட்டியார் மேற்படி யூனியனின் நிர்வாகப் பொறுப்பனைத்தையும் கவனித்து வருவார்கள். நிர்வாக கமிட்டியிலே 32 மெம்பர்கள் இருக்கின்றனர். அவர்கள் இம்மாகாணத்தின் பற்பல பாகங்களிலும் வசிப்பவர்கள். ஆகிய அக்கமிட்டியார் கூட்டம் கூடுதலிற் சிரமமாய் இருக்கிறது. முக்கியமான விஷயத்தைப்பற்றி மெம்பர்களின் அபிப்பிராயத்தை தபால் மூலமாய்த் தெரிந்துகொள்ளலாமென்றாலும் அதிலும் காலதாமதம் ஏற்படுகிறது. அதனால்தான் நிரந்தர கமிட்டியை ஏற்படுத்தினால், மிக்க சௌகரியமாய் இருக்கும். இவ்வாறு யோசனை சொல்லியவர் ரிஜிஸ்ட்ராரேயாவர். ஆகவே அந்த உபவிதியை அவர் அங்கீகரித்திருக்கிறார்.

மேற்படி யூனியனின் மகாநாட்டிலே மற்றொரு தீர்மானமும் நிறைவேறியது. அது என்னவென்றால், நகரங்களிலுள்ள ஏழைச்சங்கங்களை மேற்பார்வைபார்க்கும் வேலைக்காக நூறு ரூபாய் செலவிடவேண்டுமென்றும், விடுபட்ட ஜில்லாக்களிலே (Ceded districts) கூட்டுறவு விஷய

மாய் பிரசங்கம் செய்வதற்காக நூறு ரூபாய் செலவிடவேண்டுமென்றும், நாணயந்தேடிக் கொடுப்பதல்லாமல் விவசாயிகளுக்கு வேண்டிய சாமான்களை சேகரித்துக் கொடுக்கத்தகுந்த இதர விவசாயச் சங்கங்களை ஏற்படுத்த இருநூறு ரூபாய் செலவிடவேண்டு மென்றும், ஜில்லாகான்பரன்ஸுகள் இதுவரையில் நடைபெறாத ஜில்லாக்களிலே கான்பரன்ஸுகளை நடத்திவைக்கமுன்னூறு ரூபாய் செலவிடவேண்டு மென்பதுமே.

* * *

தமது ஆதீனத்துக்கு உட்பட்ட பிரதேசங்களிலே கூட்டுறவு முயற்சியைப் பிரவித்தப்படுத்துவதற்கான ஏற்பாடு இல்லையேயென அனந்தப்பூர்வட்டம் உதவி ரிஜிஸ்ட்ரார் குறிப்பிட்டிருந்ததை நண்பர்கள் மறந்திருக்கமாட்டார்கள். அந்த ஜில்லாவிலே பிளேக்வியாதி தோன்றியிருப்பதினால், அங்கே மேற்படி வேலையை உடனே நடத்த முயன்று சௌகரியமான காலத்தை எதிர்ப்பார்த்திருக்க வேண்டும். விவசாயச் சங்கங்களை ஏற்படுத்தும் விஷயமாய் உதவிபுரியவேண்டுமென்று ஸ்ரீடாமங்கலம், ரேய் ஸாஹிப் A. சேஷுராம ஐயர், கல்யாணதுர்க்கம், மிஸ்டர், N. பீமசேனராவ், குண்டூர்ஜில்லாவைச் சேர்ந்த மிஸ்டர், B. ஹனுமந்தராவ், ஆகிய இவர்களைக் கேட்டிருக்கிறோம். அந்தந்த இடங்களிலே மேற்படி வேலையைச் செய்வதற்கு அவர்களே சிறந்த புருஷர்களாம். அவர்கள் எல்லோரும் நமது வேண்டுகோளுக்கு இணங்கி யிருக்கிறார்கள். பல ஜில்லாக்களிலே இதுவரையில் ஜில்லா கான்பரன்ஸுகள் நடைபெறவில்லை. அத்தகைய ஜில்லாக்களிலெல்லாம் கான்பரன்ஸுகளைக் கூட்டிவைப்பது கூடுமானகாரியமாகத்தான் இருக்க வேண்டும்.

* * *

இச்சென்னை நகரிலுள்ள சில சங்கங்களின் ஆடிட் ஆர்ட்ர்கள், அதாவது, கூட்டுறவு இலாகா அதிகாரிகளால் தணிக்கை செய்யப்பட்டு அதன்மேல் செய்யப்பட்ட உத்தரவுகள், நமது பார்வைக்கு வந்திருக்கின்றன. அச்சங்கங்களிலே சிந்தாதிரிப்பேட்டை சங்கத்தின் வேலை மிகவும் சரிவர நடந்திருக்கிறது. அச்சங்கத்தின் அங்கத்தினரது தொகை 161 ஆக முன்னே இருந்தது. இப்பொழுதோ 247 ஆகும். மெம்பர்களால் அதில் டிபாஸிட்டு செய்யப்படும் தொகையும் 444 ரூபாயிலிருந்து 5,736 ரூபாயாக உயர்ந்திருக்கிறது. இதரர்களால்போட்டு வைக்கப்படும் தொகை 2,080 ரூபாயிலிருந்து 3,580 ரூபாயாக உயர்ந்திருக்கிறது. அச்சங்கத்திற்குக் கிடைத்துள்ள நிகர லாபம் ரூ. 432-12-0; சேமநிதிக்கு எடுத்து வைக்கப்படும் திரவியமும் காரியதரிசிக்கு கௌரவச் சம்பளமா கொடுக்கப்படும் தொகை முதலியனவும் போக, சங்கத்தின் அங்கத்தினருக்கு லாபமாகப் பிரித்துக் கொடுக்க



படுவதற்கு உள்ள தொகை ரூ. 216-5-0; நூற்றுக்கு 9 வீதம் லாபம் கிடைக்கும் சங்கத்தின் சரிவர வேலை நடந்துவந்திருப்பதுபற்றி அச்சங்கத்தினரையும் அதன் தலைவராகிய ராவ் ஸாஹிப் T. இலட்சுமண நாயக்கரையும் நாம் பாராட்டவேண்டும்.

திருவல்லிக்கேணி மத்வ கூட்டுறவுஸ்டோரை ஏற்படுத்தியது தவறாகும். பிராமணர்களில் சிறு பகுதியினராயுள்ள மாத்வ வகுப்பினருக்காகவே அச்சங்கம் ஏற்பட்டது. பண்டங்களை வாங்கிவிற்கும் சங்கங்களிலே மிகப் பெரிய சங்கமாகிய திருவல்லிக்கேணி சங்கத்தினருகில் அந்த மாத்வ சங்க பண்டகசாலை ஏற்பட்டுளது. அந்த் மத்வ சங்கத்தை ஏன் பதிவு செய்திருக்கவேண்டுமோ தெரியவில்லை. 10 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள் கூட்டுறவுச் சங்கத்தின் விதிகளுக் கிணங்க நடக்கத் தயாராயிருப்பதைக் கண்டு, சட்டப்படி அதைப் பதிவுசெய்து தீரவேண்டுமென்று கருதியே ரிஜிஸ்ட்ரார் அச்சங்கத்தைப் பதிவுசெய்தார்போலும். அச்சங்கத்திலுள்ள அங்கத்தினரின் தொகை 52 ; 2,500 ரூபாய்க்கு சாமான்களை விற்று மொத்தத்தில் 14 ரூபாய் லாபம் அடைந்திருக்கிறது. அதாவது ஒரு ரூபாய்க்கு ஒரு காசு லாபம். சில்லரை வியாபாரத்திலே ரூபாய்க்கு தம்பிடி லாபத்துடன் உலகத்திலே எங்கேயாவது வியாபாரம் நடத்தப்படுகிறதா என்ன? சங்கமெம்பர்கள் ஒவ்வொருவரும் சராசரி மாதமொன்றுக்கு 4 ரூபாய்க்கு அதில் சாமான் வாங்கியிருக்கிறார்கள். அச்சங்கத்திற்கு 170 ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. தவிர, அச்சங்கத்தின் கணக்கு வழக்குகள் சரிவர இல்லையென்றும் அறியவருகிறோம். ஆதலின், சீக்கிரம் அச்சங்கம் சீர்திருத்தவேண்டும் ; இல்லையேல் ஒழித்துப்போடவேண்டும்.

* * *

மைசூர் சமஸ்தானத்திலுள்ள கூட்டுறவுச்சங்கங்களின் 1915-16-ம் வருஷத்திய ரிபோர்ட்டின்மேல் 'மைசூர் எக்னாமிக் ஜர்னல்' பத்திரிகையின் டிசம்பர் மாதத்திய பிரதியில் ஒரு விமர்சனம் காணப்படுகிறது. காலந்தவறியகாலத்தில் அவ்விமர்சனம் வெளியாயிருக்கிறதென்பது வெளிப்படை. தாழ்ந்த வகுப்பாருக்குத் தனியே சங்கங்கள் ஏற்படவேண்டுமென்று மிஸ்டர் சுவாமிக்கண்ணுபிள்ளைக்குள்ள அபிப்பிராயத்தை அவ்விமர்சனக்காரர் சிலாகித்துப் பேசியிருக்கிறார். தவிர அத்தகைய சங்கங்களுக்கு ஆதரவளிப்பதற்காக ஸென்ட்ரல் பாங்கிகள் சிறிதுபணத்தை ஒரு பொருட்டாக மதியாமல் கொடுத்துவுதவ வேண்டுமென்றும், அச்சங்கத்தின் கணக்குவழக்குகளை எழுதிவைப்பதற்காக குமஸ்தாக்களை கவர்ன்மெண்டாரே ஏற்படுத்திக் கொடுக்கவேண்டுமென்றும் அவர் சொல்லுகிறார். மேற்பார்வைபார்க்கும் யூனியன்களைப்பற்றிய குறிப்புகள் ரிபோர்ட்டில் சொல்லப்பட்டிருந் திருக்கவேண்டுமென்

பது அவரதுவிருப்பம். சொல்லப்படுவது நல்லதுதான். இனி கணக்கு வழக்கில் மேற்பார்வை பார்க்கும் பொறுப்பில் ஸுபர்வைவிஸிங் யூனியனால் கவர்ன்மெண்டுசிப்பந்திகளுக்கு சகாயம்உண்டாமென்று அவர் கேட்டிருக்கிறார். இல்லையென்றே சொல்லவேண்டும்போற் தோன்றுகிறது.

## இந்தியர் ஊழியன்.

“இந்தியர் ஊழியன்” (Servant of India) என்ற பெயருடன் புதிய வாராந்திரப் பத்திரிகை ஒன்று பிரசுரமாயிருக்கிறது. அதன் முதல் பிரதியில் பின்கடை விஷயம் காணப்படுகிறது. “இதென்ன தற்செயலாய் நடந்த கார்யமா? அல்லது கோட்பாடா? தற்சமயத்திலே இந்தியாவின் எந்த மாகாணத்திலும் இந்தியரொருவர் கூட்டுறவுச் சங்கங்களின் ரிஜிஸ்ட்ராராக இல்லை. சிறிதுதாலத்திற்கு முன்பு, வங்காளம், சென்னை, ஐக்கியமாகாணங்கள் ஆகிய இவைகளில், இந்தியர் ரிஜிஸ்ட்ரார்களாக ஏககாலத்தில் இருந்தனர்.. இந்தியர் ரிஜிஸ்ட்ரார்களாக இருப்பதனல், அம்முயற்சிக்குப் பங்கம் உண்டென்று எவரும் சொல்லவில்லை. சென்னையிலே ரிஜிஸ்ட்ரார் ஆனவர் எப்பொழுதும் இந்தியராக இருந்தார். தவிர அவர் ஸிவில் ஸெர்விஸ் உத்தியோக வகுப்பைச் சேர்ந்தவராயும் இருக்கவில்லை. சென்ற வருஷம் ஜூன் மாதத்தில் அந்த உத்தியோக வகுப்பைச்சேர்ந்த ஒருவர் புதிதாய் ரிஜிஸ்ட்ராராக வந்திருக்கிறார். ஸிவில் ஸெர்விஸ் உத்தியோகவகுப்பைச் சேர்த்தவர்களே அந்த ரிஜிஸ்ட்ரார் பதவியை ஏகபோகமாய் தற்சமயம் வகித்துவருகின்றனர். இந்தியரே ரிஜிஸ்ட்ராராக இருக்கவேண்டுமென்பது நமது கருத்து.”

ஏதோ ஒரு காரணங்கொண்டு இந்தியர் ரிஜிஸ்ட்ராராக இல்லாமல் ஸிவில் ஸெர்விஸ் வகுப்பினர் வந்திருக்கிறார்களோ வென்று அப்பத்திரிகை கருதுவதை நாம் அங்கீகரிக்கவில்லை. ஆயினும் கிராமங்களில் பழக்க வழக்கங்களையும் சுபாவங்களையும் அறியக்கூடிய ஒருவர் ரிஜிஸ்ட்ராராய் இருக்கவேண்டுமென்று நாம் முன்னம் சொல்லியிருப்பதை மீண்டும் சொல்லுவோம். ஆனல், இந்தியரல்லாத ஒருவர் ரிஜிஸ்ட்ராராக இம்மாகாணத்தில் இப்பொழுது இருப்பதில் நாம் எந்தவிதமான அசௌகரியத்தையும் கண்டதில்லை.

* * *

இந்தியாவிலே மார்வார்பாஷை பேசும் ஜனங்கள் சுமார் 30 லட்ம சம்பேர் இருக்கின்றனர். அவர்களில் பாதிப் பேர்தான் மார்வார் என்னும் பிரதேசத்தில் இருக்கிறார்கள். மீதியுள்ள பாதிப்பேரோ இந்தியாவெங்கும் பலபட்டணங்களிலும் நகரங்களிலும் வசித்து வருகிறார்கள். அவர்களுக்குப் பூர்வீகமான பிரதேசத்தில் மழை யில்லாததினுற்தான் அவர்கள் இந்தியாவிலே பற்பல இடங்களிலும்போய் வசிக்கும்படியிருக்கிறது. சொந்தப்பிரதேசத்தைவிட்டு வெளியேவந்துவசிப்பவர்களில் பெரும்பாலோர் ஆண்மக்களாவர். சொந்தப்பிரதேசத்தில் வீடுகளிலேயே தங்கிவிடுவோர் பெண்மக்கள். எவ்வளவுபணம் இருந்த போதிலும் அந்தஸ்தாய் வசித்துக்கொண்டு ஆசையிறப்பதில்லை. கிராமச் சந்தைகளுக்கு மூட்டை முடிச்சுகளைத் தூக்கிச்செல்வதில் அவர்களுக்கு யாதொரு அகௌரவம் ஏற்படுவதும்கிடையாது. குடிமுதலிய தீயவழக்கங்கள் அவர்களிடம் கிடையா. வரம்பு கடந்து செட்டாய் இருப்பதே இதற்கெல்லாம் காரணம். அவர்களிடம் லோபத்தனம் விசேஷமாயுள்ளது. ஆனல் சாவு வாழ்வுகளில் அவர்கள் ஏராளமானபணத்தைச் செலவிடுவார்கள். இது அவர்களது ஜனச்சார வழக்கம். பணத்தை மிச்சம் பிடித்து கடுமையான கிருபணத்துவம் காட்டுவதும், சாவுவாழ்வுகளில் ஏராளமான தனத்தைச் செலவிடுவதும், தப்பான முறையாகும்.



* * *

பழமரஞ்செடிகளைவைத்து வளர்ப்பதும், காய்கறிபதார்த்தங்களைப் பயிர்செய்வதும், விவசாயத்தில் முக்கிய அம்சங்களை நம் தேசத்தார் வெகுவாக அலட்சியம் செய்துவிட்டனர். பழமரங்களையும் செடிகளையும் காய்கறிபதார்த்தங்களையும் பயிர்செய்வதற்கு இயற்கையிலே நம் தேசம் மிகவும் சௌகரியமாயிருந்தும் நம் தேசத்தில் பெரும்பாலர் காய்கறி சாப்பிடுபவர்களாயிருந்தும், அத்துறைகளில் நம் தேசத்தார் அலட்சியமாய் இருப்பதுபெரிதும் ஆச்சரியமேயாம். அத்துறைகளில் அலட்சியமாய் இருக்கலாகாதென மைசூர் சமஸ்தானவாசிகள் முன்வந்திருப்பதாகக் காணப்படுகின்றனர். அங்குள்ள விவசாயகமிட்டியார்மேற்கண்டவிஷயத்தில் சமஸ்தானமெங்கும் தீவிரமுயற்சி எடுத்துக்கொள்ளத் தலைப்பட்டிருக்கிறார்கள். பழமரஞ் செடி கொடிமுதலிய பயிர்களில் கவனத்தை செலுத்துவதற்காக ஹார்டிகல்சரல் இன்ஸ்பெக்டர் என்று ஒருவர் அங்கே ஒரு ஜில்லாவில் சம்பளமின்றி வேலை பார்த்துவருகிறார். இதர ஜில்லாக்களிலே அத்தகைய ஸப் இன்ஸ்பெக்டர்கள் சம்பளம்பெற்று வேலைபார்த்து வருகிறார்கள். பழமரஞ் செடிகொடிகளை வைத்துவளர்ப்பதின் பலன் என்னவென்பதை அவர்கள் ஜனங்களுக்கு எடுத்துச்சொல்லி, பழமரக்கன்றுகளைத் தேடிக்கொடுத்து அவைகளை நன்குபயிரிடும் வகையையும் சுட்டிக்காட்டி வருகின்றனர். அந்த சமஸ்தானத்திலே லால்பாக் என்ற அழகிய பெரிய பூஞ்சோலை இருப்பதை நம் நேயர்கள் அறிவார்கள். பழமரஞ்செடிகளைப் பயிரிடும்விதத்தைச் சொல்லிவைப்பதற்காக ஒருவகுப்பை ஏற்படுத்தவேண்டுமென்று விவசாயக்கமிட்டியார் சொன்னதின்மேல், அவ்வாறே ஒரு வகுப்பை கவர்ன்மெண்டார் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அவ்வகுப்பில் 12 மாணிட்டர்கள் கவர்ன்மெண்டிலிருந்து உபகாரச்சம்பளம் பெற்று பயிர்ச்சியடைந்து வருகிறார்கள். ஆங்காங்குள்ள சபைகள் பழமரஞ் செடிகொடிகளைவைத்து வளர்க்க இஷ்டப்படின், அச்சபையாருக்கு மேற்படி விவசாய கமிட்டியார் இனமாய் கன்றுச்செடிகளைக் கொடுத்து

உதவுவதோடு, இன்ஸ்பெர்ட்டரையும் கொடுத்து உதவுகிறார்கள். பழமரஞ்செடிக் கன்றுகளை உண்டுபண்ணுவதற்கான தோட்டங்களை ஏற்படுத்தவும் சமஸ்தான கவர்ன்மெண்டார் உத்தேசங் கொண்டிருக்கிறார்கள்.

* * *

விவசாய சம்பந்தமல்லாதனவும் நாணயத்தைத்தேடிக் கொடுக்கும் இதர சங்கங்களை ஏற்படுத்தவேண்டு மென்பதே மிஸ்டர் M. S. சேஷாசல ஐயரர் சென்ற சென்னை கான்பரென்ஸுக்கு எழுதிய வியாசத்தின் பொருளாகும். சொத்து ஜாமீன் கொடுப்போருக்கு நாணயம் தேடிக்கொடுக்கும் விஷயத்திலேயே கூட்டுறவு முயற்சி சம்பந்தமான உழைப்பு இதுவரை அதிகமாயிருப்பதனால், பரம ஏழைகளும் சிறிதும் சிக்கனமில்லாதவர்களுமான கைத்தொழிலாளிகளின் விஷயம், அசட்டைசெய்யப்பட்டுப் போய்விட்டதென அவர் வருத்தப்படுகிறார். அக்கைத்தொழிலாளிகளிற் சிலர் தவறுதலாய் நடந்துக்கொள்வது காரணமாக அவ்வினத்தாரனைவர்களுக்கும் நாணயம் என்பது கிடைக்காமற் போய்விட்டது. ஆகவே அவ்வினத்தார் பலர் வேலையின்றி நிர்க்கதியாய்விட்டனர். அயோக்கியத்தனம், சிக்கனமின்மை, மதுபானம், முதலிய பல துர்க்குணங்களுக்கு அவர்கள் ஆளாய் விட்டார்கள். அவர்களுடைய ஏழ்மைத்தனத்துக்கும் அறியாமைக்கும் அத்துர்க்குணங்களே காரணம். ஆதலின் அவர்களைக் கைதூக்கி விடுவதற்கு கூட்டுறவு முயற்சியும், கல்வியுமே நல்ல சாதனங்கள். கூட்டுறவு முயற்சி அவர்களுக்குள் பரவப்பரவ, அவ்வினத்தாரிலே ஜன்மதேசத்தைவிட்டுப் போய்விடும் பெருந்தொகை குறையும், பஞ்சமும் நீங்கி ஏற்றமுமே தோன்றும். க்ஷாமகாலத்திலே அவர்கள் அதிகக் கஷ்டபடவேண்டியிராது. கைத்தொழில்கள் பல அபிவிருத்தியடையும். ஆகவே யாவரும் அம்மாதிரிச் சங்கங்களை ஏற்படுத்த முயலவேண்டுமென அவர் சொல்லுகிறார். உதாரணமாக, மொத்தத்தில் மாட்டுத் தீவனத்தை வாங்கி சில்லரையில் விநியோகஞ் செய்வதையும், நல்ல பால் கிடைக்க வழிதேடுவதையும் நோக்கமாகக் கொண்டு பால் காரர்களின் நன்மையைக் கவனிக்கும் சங்கங்களை ஏற்படுத்தவேண்டும். கட்டில்கள், நாற்காலிகள் முதலிய சாமான்கள் செய்யவும் தச்சர், கொல்லர்களுக்கு உபயோகமாக சங்கங்களை ஏற்படுத்தவேண்டும். செங்கலறுப்போர், ஸெயண்டுசெய்வோர் ஆகிய இவர்களுக்காக சங்கங்களை ஏற்படுத்தவேண்டும். சரஸமாய் நூல்கட்டுகளை வாங்கிக்கொடுக்கவும், தயாராகும் துணிகள் விற்பனையாகும்படி பார்ப்பதில் கவனஞ்செலுத்தி நெசவுக்காரர்களின் நன்மையை யனுசரிக்கும் சங்கங்களை ஏற்படுத்தவேண்டும்.



# ஐக்கிய இயக்கத்தின் அபி விருத்திக்குத் தேவை.

[அனக்காவூர் கோவாபரேடிவ் யூனியன், ம-ா-ா-ஸ்ரீ P. நாராயணசாமி அய்யரவர்களால்.]

1904-ம் வருஷத்தில் இந்தியாவுக்கு கோவாபரேடிவ் ஆக்ட் கவர்ன்மெண்டாரால் ஏற்படுத்தப்பட்டு அதன் பலனாக இதுவரையில் சுமார் 2,500க்கு அதிகமான சொஸைடிகள் இந்த சென்னை இராஜதானியில் ஸ்தாபனமாகி விருத்திகரமாய் நடந்துவருவதால், ஏழை கிருஷிகர்கள், ஸ்வல்ப வியாபாரிகள், சிறிய கைத்தொழிற்காரர்கள் முதலிய ஏழை ஜனங்கள் சாவுகாரர்களிடம் அதிகவட்டிகொடுத்து கெட்டுப்போகாமல் சௌகர்யம் உண்டாய் வருவதாய், கவர்ன்மெண்டாரால் வருஷப்பிரதிவருஷம் அறியப்பட்டுவருகிறது. இவ்விதம் கோவாபரேடிவ் டிபார்டுமெண்டுக்கு அங்கத்தினர்களாயிருப்பவர்கள் ஸ்வப்பிரயோசனம் கருதாத பொதுநலப்பிரியமுள்ள கௌரவவான்கள் அதிகமிருந்து உழைக்கவேண்டியிருக்கிறது. நம் இராஜதானியில் மேற்கண்ட கனவான்கள் அதிக விருப்பத்தோடு உழைத்துவருவதினாலேயே டிபார்டுமெண்டு ஏற்பட்ட இவ்வளவு சீக்கிரத்தில் பெருகி வளர்ந்திருக்கிறது. இன்னும், நற்குணம் வாய்ந்த முன்சொன்ன கனவான்கள் லக்ஷக்கணக்காக நம் சென்னை இராஜதானிக்கு தேவையாயிருக்கிறது. இன்னும் எவ்வளவோ கோவாபரேடிவ் விருத்தியையும் எதிர்நோக்கி நிற்கிறது. இந்த டிபார்டுமெண்டுக்கு கவர்ன்மெண்டார் செய்துவரும் உபகாரத்திற்கு நம் இராஜதானி ஜனங்கள் முழுவதும் வந்தனமளிக்க கடமைப்பட்டுள்ளோம்.

மேற்கண்ட கோவாபரேடிவ் கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களான, ரிஜிஸ்ட்ரார், அஸிஸ்டெண்டு ரிஜிஸ்ட்ரார், இன்ஸ்பெக்டர் இவர்களின் முக்கிய ஒத்துழைப்பு இவ்வளவு விருத்திக்கு காரணமென்பதும், இனியும் மேற்கண்டவர்களும், உத்தியோகஸ்தரல்லாத ஐக்கிய முயற்சிக்காரர்களும் அபிப்ராய பேதமில்லாமல் ஒத்துழைப்பார்களேயானால், நம் மாகாணமுழுவதும் கோவாபரேடிவ் மாகாணமாய்விடும் என்பதிற் சந்தேகமில்லை.

கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களால் ஐக்கிய முயற்சிவேலைகள் பூராவும் எதிர்பாராமல், அவர்கள் சங்கியையைக்காட்டிலும் அநேக பதின்மடங்கு அதிக சங்கிய்யுள்ள உத்தியோகஸ்தரல்லாத கோவாபரேடிவ் மேதாவிகள், கலந்து வேலைசெய்தால் அதிக அபிவிருத்திக்கு தோஷ்யமுண்டு. மேற்கண்ட இருதிறத்தவர்களும் சற்றும் எந்தவிஷ

யத்திலும் மனச்சோர்வின்றி தங்கள் வாழ்நாட்களை லோகோபகார விஷயமாய்க் கழித்தால் நம் இராஜதானி நன்மையடையும்.

இந்த ஐக்கியமுயற்சி, கவர்ன்மெண்டாரால் பிரஜாநுகூலமாக விருத்திசெய்யப்பட்டு வருகிறதென்பதை அறிந்து கொள்ளாமல், கவர்ன்மெண்டு உத்தியோகத்திலுள்ளவர்கள் இவ்விஷயத்தை கௌரவிக்காமலிருப்பது, கோவாபரேடிவ் விருத்திக்கு ஓர் சிறிய பாதகமாயிருக்கலாமென்பது சிலர் அபிப்பிராயம். ஒவ்வொரு கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களும் அவரவர்களின் சம்பந்தமான படிப்பும், எழுத்தும், வேலையிலுழைப்பும், தினகால அளவுக்கு அதிகப்பட்டிருப்பதால், வேறுவிஷயங்களை கவனிக்க அவகாசமில்லை என்பது சில உத்தியோகஸ்தர்களின் அபிப்பிராயம். சாமான்ய கிராமங்களில் வசிக்கும் எழுத்தறிவில்லாத ஜனங்களுக்கு பிரைமரி படிப்பு அதிகமே! ஹைஸ்கூல் உள்ளவிடங்களில் ஸ்கூல் பைனல் அதிகமாய்த்தோன்றுகிறது; ஆனால் காலேஜ் உள்ளவிடங்களிலோ, யெம். ஏ, எல். எல். டி. பரீக்ஷைகள் செய்தும் சாமான்யமாய் தோன்றப்பட்டு, மேலும் மேலும் சாஸ்திரபடிப்புகளில் விசேஷ டைட்ல்கள் பெற்றிருக்கும் மேதாவிகளைக்கண்டு ஒருவாறு சாந்தமடைந்து, ஒவ்வொருவரும் இன்னும் அறிவின் விருத்தியை தேட வேண்டுவது அவசியமென்று அடக்கங்கொண்டிருக்கிறார்கள். அம்மாதிரியே கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களுமிருந்து ஒத்து உழைப்பின் யாதொரு தீமையும் விளைவிக்காது.

ஐக்கியமுயற்சி விருத்தியடைய வேண்டுமானால் கவர்ன்மெண்டு சகல டிபார்டுமெண்டு உத்தியோகஸ்தர்களும் இதை அபிமானித்து தங்களால் ஐக்கியமுயற்சிக் காரர்களுக்கு ஆகவேண்டிய காரியங்களை காலதாமதமின்றி நியாயப்படி செய்துவிட்டால் போதுமானது.

இதையே, இந்தியா கவர்ன்மெண்டாரும் 17-6-14-இல் செய்திருக்கும் "இந்தியாவில் கோவாபரேஷன்" என்னும் வியாசத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது; அதாவது "டிஸ்டிரிக்ட் ஆபீஸர்கள் கோவாபரேடிவ் இலாகாவை சேராததினாலேயே இந்த இலாகாவை கவனியாதிருத்தலாகாது. அவர்கள் எப்பொழுதும் இத்துடன் சேர்ந்தேயிருக்கவேண்டும்; ரெவின்யூ சட்டங்கள் எப்படி அத்தியாவசியமாயிருக்கிறதோ அப்படியே கோவாபரேடிவ் பத்ததிகளும் வழக்கங்களும் ஆகிவிட்டன. அவர்கள் முக்கியமாய் என்னவிஷயங்கள் கோவாபரேடிவ் சொஸைடியைக் கொண்டு ஜில்லாவேலைகள் சரிவர நடக்க உபயோகிக்கலாமென்பதை கவனித்தல், அதாவது பொதுஜன அபிப்ராயம், கல்வியின் அபிவிருத்தி, சுகாதாரம், முதலியவற்றை பற்றியும் அச்சொஸைடியின் தற்பித்



தினால் உண்மையான கிராம பஞ்சாயத்துக்கு எவ்வளவு தூரம் இடமாகுமென்பதும் தெரிந்து கொள்ளலாம்.

ஓர் ஊரின் நிலைமையை தெரிந்துகொள்ளவேண்டுமென்றால் கர்ணம் மணியகாரர்களைக் கொண்டே தெரிந்து கொள்ளப்பட்டதாய் கருதப்பட்டு வருகிறது. அதில் குடிகளுக்கும் மேற்கண்ட உத்தியோகஸ்தர்களுக்கும் அபிப்ராய பேதமிருந்தால் உண்மையை தெரிந்து கொள்ள முடிவதில்லை.

இந்த ஐக்கியநாணயச் சங்கங்களோ ஊரிலுள்ள சகல ஜன அபிப்ராயத்தின்படி மெம்பர்களை தேர்ந்தெடுத்து, அவர்களிலும் நற்குணம், திறமைவாய்ந்த கனவான்களை பஞ்சாயத்தார்களாக இரண்டு வருஷத்திற்கொருமுறை தேர்ந்தெடுக்கப்பட்டு சங்கபரிபாலனம் நடந்துவருவதால் சங்கத்திலிருந்து கவர்ன்மெண்டுக்கு கிடைக்கும் சங்கதிகள் உண்மை நிலைமையாயிருக்குமென்பதில் ஐயமில்லை.

உதாரணமாக, செட்டில்மெண்டு தீர்வைபோடுவதற்கு ஜலாதார நிலைமையையும், நிலவளமையையும் கவனிப்பதற்காக, 1915-ம் வருஷம் வந்த செட்டில்மெண்டு கமிஷனர் பக்ளிதுரை அவர்களே ஒரு கிராமச் சங்கத்திற்குவந்து பார்வையிட்டு ஊர் நிலைமை தெரிந்துகொண்டிருக்கிறாரென்றால் மற்றுமுள்ள உத்யோகஸ்தர்கள் ஐக்கிய சங்கங்களை கவனிக்காதிருத்தல் பரிதாபகரமே யாகும்.

ஐக்கிய சங்கம் ஸ்தாபனமாய் சுமார் பத்துவருஷங்களாக கனம் ரிஜிஸ்ட்ரார் அவர்களால் ஆடிட் ரிபோர்ட்டுகளில் சொஸைடிகள் நன்றாய் வேலைகள் நடப்பதாய் கண்டிருக்கப்பட்ட கிராமங்களிற்கூட, ஜனங்களுடைய நிலைமையை கவர்ன்மெண்டார் அறிந்துகொள்ளாமல் நடவடிக்கைகளுக்கு பேதமாய், அதிகாரிகளால் தீர்மானம் கிடைத்து வருவதால் இக் குறையை புல்லடினில் பிரசுரித்து, நிவர்த்தி செய்துகொள்ள சாதகமேற்படுமென்று எழுதத் துணிந்ததாகும்.

---

## சங்க அங்கத்தினரின் கடன்சுமை குறைந்திருக்கிறதா?

கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்பட்டிருப்பதனால், அச்சங்கங்களின் அங்கத்தினரது கடன்சுமை குறைந்திருக்கிறதா? இல்லையா என்ற விஷயத்தைப்பற்றி மைசூர் சமஸ்தான கூட்டுறவுச் சங்கங்களின் ரிஜிஸ்ட்ராரான மிஸ்டர் K. சந்தி என்பவர் அங்கே பிரசுரமாகும் "மைசூர் எகனமிக்

ஜர்னல்" என்ற பத்திரிகையில் ஒரு வியாசம் எழுதியிருக்கிறார். அவ்வியாசத்தின் முக்கியமான, சில விவரங்கள் பின் வருமாறு:—

கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்பட்டிருப்பதனால், அச்சங்கங்களின் அங்கத்தினரது கடன் சுமை எவ்வளவுதூரம் குறைந்திருக்கிற தென்பதை உத்தேசமாய்க் கண்டுகொள்ளுமாறு கூட்டுறவு இலாகா இன்ஸ்பெக்டர்களிற் சிலரை பரிசீலனை செய்யுமாறு சொன்னேன். ஒவ்வொரு இன்ஸ்பெக்டரும் தனது வட்டத்தில் இருக்கும்படியான சங்கங்களில் நல்ல சங்கமொன்றையும் சாதாரணமான சங்கமொன்றையும் எடுத்துக்கொண்டு பரிசீலனை நடத்தும்படி திட்டமாயிற்று. கீழே கண்ட அம்சங்களைப்பற்றிய தகவல்கள் சேகரிக்கப்பட்டன.

(1) சங்கங்களுள்ள கிராமங்களிலே வசிக்கும் குடும்பங்கள் எத்தனை?

(2) அங்கத்தினரின் தொகை எவ்வளவு? சங்கமேற்பட்டு எத்தனை வருஷகாலமாயிற்று?

(3) சங்கம் ஏற்படுவதற்குமுன் மெம்பர்களுக்கிருந்த கடன் தொகை எவ்வளவு?

(4) தற்சமயம் மெம்பர்களால் சங்கத்திற்கும் இதரர்களுக்கும் கொடுக்கப்படவேண்டிய கடன்தொகை எவ்வளவு?

(5) சௌகரியமான திரவிய நிலைமை வாய்ந்த மெம்பர்கள் எத்தனைபேர்? முன்போலவே திரவிய நிலைமையிலிருப்போர் எத்தனை பேர்? எத்தனை மெம்பர்களுடைய திரவிய நிலைமை கேவலமாய் இருக்கிறது?

(6) சங்கம் ஏற்பட்டதனால் அதிலிருந்து உதவிபெற்று மூலதனத்திலாவது நிலத்திலாவது அபிவிருத்தியடைந்தவர்கள் எத்தனைபேர்?

(7) தாழ்ந்த வகுப்பாரிலே எத்தனைபேருக்கு சங்கத்திலிருந்து பலன் கிடைத்திருக்கிறது?

இவ்வாறு 32 தாலூக்காக்களில் பரிசீலனை செய்யப்பட்டது. 170 கிராமங்களில் பரவியுள்ள 48 சங்கங்கள் பொறுக்கி எடுக்கப்பட்டன. மொத்தத்தில் 2,114 நபர்களைப்பற்றி பரிசீலனை நடந்தது. சங்கங்கள் ஏற்பட்டகாலத்திலே மெம்பர்கள் மொத்தக்கடன் தொகை ரூ. 5,54,616 அதாவது சராசரி தலைக்கு 260 ரூபாய் கடனாகும், தற்சமயத்திலோ மெம்பர்களின் மொத்தக்கடன் தொகை 5,55,296 ரூபாய் பரிசீலனையானது. கூடியவரையில் சரிவரவே நடத்திருந்தபோதிலும் மெம்பர்களின் கடன் சுமையானது அப்படியே இருந்திருக்கின்றதென்பது வெளிப்படை. தவிர மெம்பர்கள் சங்கங்களுக்கு எவ்வளவு கடன்



பட்டிருக்கிறார்களோ அதைவிட சாவுகாரர்களுக்கே அதிகமாக கடன் பட்டிருக்கிறார்களென்று புலப்படுகிறது. அதாவது மொத்தத்தில் மெம்பர்களால் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கொடுபடவேண்டிய தொகை சுமார் இரண்டரை இலட்சமாகும்; சாவுகாரர்களுக்கோ சுமார் $3\frac{1}{2}$ லட்சமாகும். சங்கங்களைக் காட்டிலும் நீண்டகாலத்தவணைக்கு சாவுகாரர்கள் கடன் கொடுப்பதனாலேயே மெம்பர்கள் சாவுகாரர்களிடமே அதிகமாகக்கடன் பட்டிருக்கவேண்டும். ஆதலின், ஒவ்வொரு சங்கமும் கூடுமானால் ஒவ்வொரு வருஷத்திலும் அல்லது மூன்று வருஷத்திற்கு ஒரு முறையும் மெம்பர்களின் திரவிய நிலைமையைப் பரிசீலனை செய்யவேண்டியிருக்கிறது. உண்மையில் கடன் தொகை எவ்வளவென்று சொல்லுங்களென மெம்பர்களைக் கேட்டால், அவர்கள் இதென்ன நமது நிலைமையில் சங்கம் தலையிடுகிறதென நினைக்கலாம் என்றாலும் உத்தேசமாக மெம்பர்களின் கடன் சுமை இவ்வளவென்பதை கிராம சங்கங்கள் அறிந்துகொள்ளுதல் அவ்வளவு கஷ்டமாயிராது. சமஸ்தானத்திலே இவ்வருஷத்தில் அவ்விஷயமாய் விரிவான பரிசீலனை நடத்தவேண்டுமென்று யோசனையிருக்கிறது.

---

# தென்னாற்காடுஜில்லா சூபர்வைஸிங் யூனியன் (லிமிடெட் நெ. 1844)

### கவர்னிங்பாடி மெம்பர்கள் செய்துகொள்ளும் அறிக்கை.

ஐக்கிய முறைசங்கங்கள் தென்னாற்காடு ஜில்லாவில் கொஞ்சம் அபிவிருத்தியாகி யிருக்கின்றன. கூட்டுறவினர்கள் மட்டுமே சேர்ந்த சங்கங்கள் 112-ம், அவைகளின் மேற்பார்வைக்கு ஏற்பட்டிருக்கும் யூனியன்கள் ஐந்தும் இவைகளையெல்லாம் அன்னியோன்யமாய் அணைக்கும் இந்த ஜில்லா மேற்பார்வை யூனியனும் நடந்துகொண்டுவருகின்றன. இந்த சங்கங்களுக்கெல்லாம் தன உதவி மதராஸ் ஸெண்ட்ரல் அர்பன் பாங்கினாலேயே, சற்றேறக்குறைய முழுவதும் செய்யப்படுகிறது.

இந்த ஜில்லா மேற்பார்வை சங்கமானது மதிப்பாயிருக்கும்படியான அளவு ரொக்கத்தில் பங்குத்தொகையை கட்டி மெம்பர்களாய் சேரத்தக்கன கனவான்களை போதுமானவரையில் சேர்த்துக்கொண்டு ஜில்லா பாங்கிங் யூனியனாக மாற்றிக்கொண்டால் நம்முடைய சங்கங்களுக்கு தனவுதவி விஷயத்தில் அதிகமான அநுகூலங்கள் உண்டாவது மன்றி, இப்போது சங்கங்கள் இல்லாமலும் வெகு அவசியமாய் வேண்டுமான விடங்களில் புதுசங்கங்கள் ஏற்படவும் உபகாரமாயிருக்கும்.

இந்த ஜில்லாவில் விவசாயிகளுக்கு வரும்படியில் முக்கியமார்க்கமாயிருந்த, மணிலா, அவுரி இந்த இனுசுகளுக்கு உண்டாயிருக்கும் வர்த்

தக மயக்கத்தினாலும் சென்ற வருஷம் சம்பவித்த விபரீத புயல்காற்றின் நஷ்டங்களாலும் கிராமங்களில் விவசாயிகளுக்கு நேரிட்டிருக்கும் பணத்தின் முடை அதிகமாகவிருக்கின்றது. இந்த சமயத்தில் ஐக்கிய முறை வழியில் சங்கங்களை விருத்திசெய்யவேண்டியது அதிக அவசியமென்பதை நாங்கள் சொல்லவேண்டியதில்லை.

இந்த ஜில்லாவில் இருக்கிற சங்கங்களுக்கு வேண்டிய பண உதவியை பூராவும் செய்யவேண்டுமான அவ்வளவு டிபாஸிட்டுகள் இச்சமயம் இந்த பாங்கிங் யூனியனுக்கு வருமென்று நாங்கள் எதிர்பார்க்கவில்லை. ஆனாலும் சுமாரான அளவு பங்குகள் கனவான்கள் எடுத்துக்கொண்டு பங்குத்தொகையும் கூடியவரையில் செலுத்தினார்களானல் இந்த ஜில்லா பாங்கிங் யூனியன் சங்கங்களுக்கு வேண்டிய பூராபணம் சம்பாதிக்கும் வரையில் மதராஸ் ஸெண்ட்ரல் பாங்கினுடைய பண உதவியை எதிர்பார்க்கலாம்.

இந்த உத்தேசத்தைக்கொண்டு இந்த ஜில்லா மேற்பார்வை, யூனியனை பாங்கிங் யூனியனாக மாற்றுவதற்கு கனம் ரிஜிஸ்ட்ரார் அவர்களுடைய அநுமதியும் அங்கீகாரமும் பெற்று மசோதாவாய் இத்துடன் சேர்த்திருக்கும் விதிகளை ஏற்படுத்தியிருக்கிறோம். இந்த ஜில்லாவின் க்ஷேமத்தைக்கருதிய எல்லா கனவான்களையும் இந்த பாங்கிங் யூனியன் ஏற்படவும் அது, ஐக்கிய சங்கங்களுக்கு செய்யவேண்டிய பண உதவியில் சிறப்புள்ளதாயிருக்கும்படியாகவும் தங்களால் கூடியவரையில் உதவி செய்யவேணுமாய் கேட்டுக்கொள்ளுகிறோம். இந்த ஜில்லா மேற்பார்வை யூனியன் ஜில்லா பாங்கிங் யூனியனாக மாறின வுடனே இப்போதிருக்கும் கவர்னிங்பாடியார்க்கு பதிலாய் ஜில்லா பாங்கிங் யூனியனுக்கு ஏற்பட்ட விதிகளை யனுசரித்து டைரக்டர்கள் பொறுக்கி எடுப்பார்கள்.

குறிப்பு:—பாங்கிங் யூனியனின் முக்கியவிஷயங்கள்.

1. மூல திரவியம்:— பங்கு ஒன்றுக்கு 50 ரூபாயுள்ளவும் 4,000 பங்குகள் கூடியவுமான இரண்டு லக்ஷம் ரூபாய்கள். இதில் 2,000 பங்குகள் சங்கங்களுக்காக நிறுத்தப்பட்டிருக்கின்றன. பங்குத்தொகை பூராவும் சேரும்போதே கட்டலாம், இல்லாவிட்டால் ரூ. 10-வீதம் 5-தவணையில் கட்டப்படவேண்டும். பங்கு எடுத்துக்கொண்டிருக்கும் நபர்களுக்கு ஒரு தவணைக்கு அடுத்த தவணை மூன்று மாதத்திற்குக் குறையாமலும் பங்கு எடுத்துக்கொண்ட சங்கங்களுக்கு ஆறு மாதத்திற்குக் குறையாமலும் ஏற்படுத்தப்படும்.

2. ஒவ்வொரு நபர் 20 பங்குகள் வரையில் தான் எடுக்கலாம்.

3. பொறுப்பு:— வரையருக்கப்பட்டது (லிமிடெட்.)



4. பாங்கிங் யூனியன் வாங்கும் டிபாஸிட்டுகளுக்கு வட்டி 100-க்கு
வருஷம் ஒன்றுக்கு $6\frac{1}{2}$-ரூபாய்க்கு மேற்படாமல் கொடுக்கப்படும். இதரர்
களுடைய டிபாஸிட்டிற்கு முன் மெம்பர்களுடைய டிபாஸிட்டுகள் அங்
கீகரிக்கப்படும்.

5. தென் ஆற்காடு ஜில்லாவிலுள்ள ஐக்கிய சங்கங்களுக்கு கடன்
கொடுக்கவே இந்த பாங்கிங் யூனியனுடைய தனம் முக்கியமாய் உபயோ
கிக்கப்படும். ஆனல் அவரவர்களுடைய டிபாஸிட்டுகளின் ஈட்டின்
பேரில் மற்ற மெம்பர்களுக்கும் கடன் கொடுக்கலாம்.

6. நிர்வாக சபையார் 15 பேர்கள். அதில் 7 பேர் பங்கெடுத்துக்
கொண்ட நபர்களாலும் மற்றவர்கள் பங்கெடுத்துக்கொண்ட சங்கங்க
ளாலும் மகாசபைமீட்டிங்கில் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். நிகரலாபத்தில்
100-க்கு 25 வீதம் வருஷம் க்ஷேம நிதிக்கு சேர்க்கப்படும். மிச்சமிருக்
கப்பட்டதொகையில் ஏறக்குறைய பூராவும் வருஷம் ஒன்றுக்கு 100-க்கு
9 க்கு மேற்படாமல் பங்குத்தொகைகளின் பேரில் ஈவாக பிரித்துக்
கொடுக்கப்படும்.

7. கணக்குகள் வருஷாவருஷம் கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்
களால்தணிக்கை செய்யப்பட்டு கனம் ஐக்கிய சங்க ரிஜிஸ்ட்ரார் அவர்
களுடைய அதிகார தோரணையுடன் பாங்கிங் யூனியன் நிலைமையைப்பற்றி
மேற்படி தணிக்கையின் சாராம்சத்தை பிரசுரம் செய்யப்படும்.

8. எல்லாவித சர்க்கார் உத்தியோகஸ்தர்களும் இந்த பாங்கிங் யூனி
யனில் பங்கு எடுத்துக்கொள்ளலாம். டிபாஸிட்டுகளும் செய்யலாம்.

---

# செங்கற்பட்டு ஜில்லா மணிமங்கல யூனியன் ஜெனரல் பாடி மீட்டிங்.

1918 வருஷம் பிப்ரவரி மாதம் 23 தேதி பகல் 3-மணிக்கு 1669 நெ. சிங்கப்பெருமாள் கோவில் சங்கம் பங்காளாவில் மேற்படி யூனியன் ஜெனரல் பாடி மீட்டிங்கு கூடிற்று.

இந்த ஜெனரல்பாடி மீட்டிங்குக்கு ம-ா.ா-ஸ்ரீ யூனியன் பிரஸிடெண்டு K. C. ஸ்ரீனிவாச சாரியர் அவர்களை சபாநாயகராய் இருக்கும்படி எல்லா மெம்பர்களாலும் அங்கீகரிக்கப்பட்டது.

## யூனியனின் வருஷாந்த்ர ரிபோர்ட்டு.

1. மேற்படி மணிமங்கலம் கோவாபரேடிவ் சூபர்வைஸிங் யூனியனானது 1916-ம் வருஷம் அக்டோபர் மாதம் 30-ந் தேதி ம-ா-ா-ஸ்ரீ, கனம்பொருந்திய அஸிஸ்டெண்டு ரிஜிஸ்ட்ரார் சுப்பிரமணிய அய்யர் அவர்களால் ரிஜிஸ்டர் செய்யப்பட்டு வேலை ஆரம்பிக்கப்பட்டது.

2. இப்போது யூனியன் வேலை ஆரம்பித்து 1 வருஷம் 4 மாதமாகிறது. யூனியன் ஆரம்பத்தில் 18 சங்கங்கள் அணைக்கப்பட்டன. வருஷக் கடைசியில் 20 சங்கங்கள் அணைக்கப்பட்டிருந்தன. நாளது 1917-18 வருஷத்தில் 2280 நெ. தத்தனூர் 1, 526 நெ. போந்தூர் 2, 710 நெ. மாடம்பாக்கம் 3. இந்த மூன்றும் சேர்ந்து 23 சங்கங்கள் அணைக்கப்பட்டிருக்கின்றன. யூனியன் 2 மகாசபை மீட்டிங்குகளும் 7 கவர்ணிங்பாடி மீட்டிங்கும் நடந்திருக்கின்றன.

3. சென்ற 1916-17 வருஷத்தின் கணக்குகள் பரிசோதித்து ம-ா-ா-ஸ்ரீ, கனம் அஸிஸ்டெண்டு ரிஜிஸ்ட்ரார் அவர்கள் யூனியனில் அணைத்த சங்கங்களின் பைனல் ஆடிட் தணிக்கை செய்து ஸர்டிபிகெட் செய்தபடி அடியில் கண்ட சங்கங்களின் நிலைமையை சுருக்கமாய் குறிக்கப்பட்டிருக்கிறது:—

4. நெ. 149 மணிமங்கலம் சங்கம் சுமார் 8 வருஷகாலமாய் வேலை ஆரம்பித்து வருகிறது. பஞ்சாயத்தார் சிரத்தையாய் இல்லை என்றும் கோர்ட்டு செலவு வகையரா அதிகமாய் செலவழிப்பதை சுருக்கமாக கவனிக்க வேணுமாய் கண்டிருக்கிறது. மேற்படி சங்கத்தில் சில கேஸுகள் முக்கியமாய் தாக்கல் செய்யவேண்டிய காரணம் இருந்ததைப்பற்றி கோர்ட்டுக்கு போகும்படி நேர்ந்தது. இனி அம்மாதிரி நடக்காமல் நிரம்ப கவனமாய் தகுந்தபடி மெம்பர்களுக்கு கடன் கொடுத்தும் சரியான காலத்தில் வசூல் செய்தும் மேற்படி மெம்பர்கள் கடன்களை கோர்ட்டுக்கு போகாமல் வசூல் செய்தும் மேற்படி சங்கம் செக்ரிடெரி ம-ா-ா-ஸ்ரீ, மு. ஆறுமுக முதலியாரும் மற்றும் பஞ்சாயத்தார்களும் ஒத்துழைக்கவும் மெம்பர்களுக் கெல்லாம் ஊக்கத்தை ஊட்டுவார்களென்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

5. 1576 நெ. மாகாண்யம் கோதண்டராம சங்கம் வேலை ஆரம்பித்து சுமார் 2 வருஷகாலமாகிறது. சென்ற வருஷத்தில் சிப்பந்தி செலவு வகையரா 46-0-8 செலவழிந்து இருப்பதை கவனிக்க சங்கம் சிக்கனத்தை கவனிக்கவில்லை என்று ஆடிட் உத்தரவினால் ஏற்படுகிறது. இனி அம்மாதிரி அதிக செலவு செலவழியாமல் சங்கம் நல்ல வேலை செய்யுமென்று நம்பப்படுகிறது. சங்கத்தின் செக்ரிடெரியும் யூனியன் கவர்ணிங்பாடி மெம்பருமாகிய ம-ா-ா-ஸ்ரீ, கி. செல்லத்தய்யங்கார் அவர்கள் தளராத ஊக்கத்துடனும் விடாமுயற்சியுடனும் சங்கத்தின் வேலை பார்ப்பதுடன் சங்கத்திற்கு டிபாஸிட் பெறுதலும் யூனியனுக்கு நல்ல பெயரைக் கொண்டுவருவதுடன் அன்னாருக்கு யூனியனார் நன்றி பாராட்ட கடமைப்பட்டிருக்கின்றார்கள்.



6. 1669 நெ. சிங்கப்பெருமாள் கோவில் சங்கம் வேலை ஆரம்பித்து சுமார் 2 வருஷமாகிறது. சங்கம் பஞ்சாயத்தார்கள் சிரத்தையாய் வேலை செய்வார்களென்றும் அந்தந்த கால தவணைப்படி மெம்பர்களிடம் அசல் வட்டி பாக்கிகளை செலுத்தும்படி முயற்சி செய்வார்களென்றும் நம்பப்படுகிறது.

7. 1863 நெ. மேல்ரோஜாபுரம் சங்கம் வேலை ஆரம்பித்து சுமார் $1\frac{1}{2}$ வருஷமாகிறது. சங்கம் புதிதாயும் லேவாதேவி மிகவும் குறைவாயும் நடக்கிறது. இன்னும் புதிய மெம்பர்கள் தகுந்தவர்களாக சேர்த்து பஞ்சாயத்தார்கள் லேவாதேவியை அதிகப்படுத்த முயற்சி எடுத்துக் கொள்ளுவார்களென்று எதிர்ப் பார்க்கப்படுகிறது.

8. 1282 நெ. கீழ்க்கரணைசங்கம் வேலை ஆரம்பித்து இப்போது $3\frac{1}{2}$ வருஷமாகிறது. சென்றவருஷத்தில் இருந்த 28 மெம்பர்களே யிருந்தார்கள், சங்கம் இன்னும் புதிய மெம்பர்களை சேர்க்காமலிருப்பது விசனிக்கக்கூடியதா யிருக்கிறது. ஸெக்ரிடெரி ம-ா-ா-ஸ்ரீ, ஜெயரங்க நாயுடு அவர்கள் சங்கம் விர்த்திக்குக் கொண்டு வருவார் என்று நிரம்ப நம்பப்படுகிறதுடன் பஞ்சாயத்தாரும் ஒத்துழைக்க வேண்டியது.

9. 706 நெ. கூடுவாஞ்சேரி சங்கம் ஆரம்பித்து சுமார் $5\frac{1}{2}$ வருஷமாகிறது. மெம்பர்கள் வரவர குறைந்துக்கொண்டே வருகிறார்கள். பிரஸ்தாப வருஷம் முழுமைக்கும் ஒரு மகாசபை மீட்டிங்கும் ஒரு பஞ்சாயத்து மீட்டிங்கும் நடந்திருக்கிறது. இதனால் சங்கத்தின் மெம்பர்களும் பஞ்சாயத்தார்களும் எவ்வளவு சிரத்தையோடு வேலை பார்த்தார்களென்று நன்றாக விளங்குகிறது. இதில் பிரஸிடெண்டு ஒருவர்தான் சங்கத்தை நடத்திவருகிறார். இந்த வருஷத்திலாவது புதியமெம்பர்கள் சேர்க்கப்பட்டு ஊக்கத்துடன் வேலை செய்வார்களென்று நம்பப்படுகிறது.

10. 545 நெ. நந்திவரம் சங்கம் வேலை ஆரம்பித்து சுமார் $6\frac{1}{2}$ வருஷமாகிறது. மெம்பர்களுடைய சிரத்தை குறைவாக இருக்கிறது. தவணை கடந்த கடன்கள் மிகுதியாக இருக்கின்றன. இதற்கு பழைய பஞ்சாயத்தார்களுடைய அசிரத்தையே காரணமாகும். இப்பொழுது புதிதாக ஏற்படுத்தி இருக்கும் பிரஸிடெண்டு ம-ா-ா-ஸ்ரீ ராமசாமிமுதலியார் அவர்கள் மிகுந்த ஊக்கத்துடன் வேலைபார்த்து வருகிறார். மற்ற பஞ்சாயத்து மெம்பர்களும் அவருடன் கூட ஒத்துழைத்தால் சங்கம் மென்மேலும் விருத்தியடையும்.

11. 544 நெ. மாடம்பாக்கம் சங்கம் வேலை ஆரம்பித்து சுமார் $6\frac{1}{2}$ வருஷமாகிறது. வேலை ஆரம்பித்த நாள்முதல் பஞ்சாயத்தார்கள் சிரத்தையில்லாமலே வேலைபார்த்துவருகிறார்கள். சங்கம் சிப்பந்திச் செலவு அதிக

மாயிருக்கிறது, தவணை கடந்தபாக்கிகளும் அநேகமாயிருக்கின்றன. இது விஷயத்தில் செக்ரிடெரி மகா-ா-ஸ்ரீ கேசவலு நாயுடு அவர்கள் செம்மை யாக கவனித்து பிரஸ்தாப வருஷத்தில் ஊக்கத்துடன் வேலை செய் வார்களென்று எதிர்பார்க்கப்படுகிறது.

12. 436 நெ. ஆதனூர் சங்கம் வேலை ஆரம்பித்து சுமார் 6½ வருஷமாகிறது. சென்ற வருஷத்தில் சுமார். 1450 ரூபாய் ஸென்ட் ரல் பாங்கிக்கு கடன்கள் தவணைகடந்து நின்றன. இந்தப்பெரிய தொகையை யூனியனார் முயற்சியினாலும் ம-ா-ா-ஸ்ரீ இன்ஸ்பெக்டர் அவர் கள் முயற்சியினாலும் மேற்படி பாக்கிகளை மிக்க சிரமத்துடன் வசூல் செய்து அனுப்பப்பட்டது. பிரஸ்தாப வருஷத்தில் ஸென்ட்ரல் பாங் கிக்கு அசல் பாக்கிகள் இதுகாலபரியந்தம் செலுத்தப்படவில்லை. இவ் வருஷம் பஞ்சாயத்தார்களே சிரத்தையுடன் வசூல்செய்து முன்வரு ஷம்போல் அல்லாமல் செலுத்துவதுடன் தங்கள் சங்கத்தின் பேரையும் அதனால் யூனியன் அடைந்த நல்லபேரையும் நிலைநாட்டுவார்களென கருதப்படுகிறது.

13. 438 நெ. கரிசங்கால் சங்கம் வேலையாரம்பித்து சுமார் 7½ வருஷமாகிறது. சென்ற வருஷத்தில் தவணைகடந்திருந்த மெம்பர்க ளின் பாக்கிகளை வசூல் செய்திருப்பதை நோக்க மிக்க திருப்திகரமாக இருக்கிறது. இத்தகைய ஊக்கத்திற்கு மேற்படி சங்கத்தின் ஸெக்ரிடெ ரியும் யூனியன் பிரஸிடெண்டுமாகிய, ம-ா-ா-ஸ்ரீ K. C. ஸ்ரீநிவாசா சாரியர் அவர்கள் விடாமுயற்சியே காரணமாகும். சங்கம் பிரஸ்தாப வருஷத்தில் புதியகடன்கள் பெற்று லேவாதேவியை விர்த்திசெய்யக் கூடுமென்ற எண்ண மிருக்கிறது. ஆனால் சங்கம் ஸெக்ரிடெரி அவர் கள் டிஸ்ட்ரிக்ட் பாங்கிங் யூனியனுக்கு ஷேர் எடுத்துக் கொண்டது போக பாக்கிஷேர் செலுத்தமாட்டேனென்று நிராகரிப்பது ம-ா-ா-ஸ்ரீ கனம் அஸிஸ்டெண்டு ரிஜிஸ்ட்ரார் அவர்களுடைய அபிப்பிராயத்துக்கு மாறுதலாயிருக்கிறது. அது விஷயம் ஸெக்ரிடெரி அவர்கள் தீர்க்கா லோசனை செய்யவேணுமாய் கோரப்படுகிறது.

14. 252 நெ. தாம்பரம் சங்கம் வேலையாரம்பித்து சுமார் 8 வருஷ காலமாகிறது. சங்கம் வேலையாரம்பித்த காலமுதல் மெம்பர்கள் முன் னிருந்தபடியே இருக்கிறார்கள். சங்கத்தின் லேவாதேவி சுமார் 300 ரூபாய்க்குக் குறைந்துவிட்டது. இக்குறைவை யூனியனார் தக்கசமயத்தில் கவனித்து ரூ. 2,000 சிபார்சு செய்து, தருவித்துக்கொடுத்தல் வாடிய பயிர்களை தழைக்கச்செய்யும் வானம்போல் ஆகும். இனி மேற்படி சங்கத் திய ஸெக்ரிடெரி பஞ்சாயத்தார்கள் இவர்களின் ஊக்கத்தினால் எதிர்பா ராத நலம் பெறக்கூடுமென்று நம்பப்படுகிறது.



15. 710 நெ. P. மாடம்பாக்கம் சங்கம் வேலை துவக்கி சுமார் 6 வருஷ காலமாகிறது. யூனியனில் அணைக்கப்பட்டு சுமார் 3 மாத காலமே ஆகின்றன, சென்ற 6 வருஷகாலமாக சங்கத்தின் ஸெக் ரிடெரி அவர்கள் ஸென்டரல் பாங்கிக்கு யாதொரு அசல் பாக்கிகளும் செலுத்தாமல் இருந்தது மிகுந்த விசனத்தை உண்டுபண்ணக்கூடிய தாயிருக்கிறது. மெம்பர்களிடமிருந்து பணம் வசூல் செய்துகொண் டிருந்தும். ஸென்ட்ரல் பாங்கிக்கு பணம் செலுத்தாமல் இருந்த கார ணம் தெரியவில்லை. மேலும் மூன்று வருஷகாலமாய் லோன் லெட்ஜர் சங்கத்தில் இல்லாமல் வெளியில் வைத்திருந்தது மிக்க ஆக்ஷேபகர மான விஷயம். இதை அதிகாரிகளும் கவனித்து இருந்தார்களென்றே சொல்லவேண்டும். பூ. டி. மு. கோ. ஒரு வக்கீலிடம் ரூ. 40 கொடுத் திருப்பதாயும், அவர் ஷை சங்கமெம்பர்களுக்கு இரண்டு மூன்று ரெஜிஸ்டர் நோட்டீசுகள் கொடுக்கப் பட்டதாகவும், மற்ற மிகுதி தொகைக்கு யாதொரு தகவலும், மூன்று வருஷகாலமாக தெரியாம லிருப்பது இவ்விடத்தில் குறிக்காமலிருக்க முடியவில்லை. இவ்வித ஸ்திதி யிலிருந்த சங்கத்தை நல்லஸ்திதிக்குக் கொண்டுவர யூனியனார் செய்த முயற்சியானது வீணாகவில்லை. சென்ற ஒரு வாரத்திற்குமுன் ஸெக்ரி டெரி அவர்கள் சுமார் ரூ. 1,000 ஸென்ட்ரல் பாங்கியில் செலுத்தி இருப்பதை நோக்க ஆச்சரியத்தையும். மகிழ்ச்சியையும் தருகிறது. 3 வருஷகாலமாய் வெளிக்குக்காட்டாத லோன்லெட்ஜரை ம-ா-ா-ஸ்ரீ இன்ஸ்பெக்டர் T. கிருஷ்ணசாமி ஐய்யங்கார் அவர்கள் பெருமுயற்சி யாலும் சாதுர்யத்தினாலும் அகப்படாமலிருந்த ஸெக்ரிடெரி அவர்கள் அகப்பட்டு வேறு ஒருவித வழியுமில்லாமல். நமது யூனியன் ஸூபர் வைஸர் அவர்களிடம் ஒப்பி வைத்ததைக் கேட்க நமது யூனியன் மிக்க சந்தோஷத்தை யடைந்தது. இம்மாதிரி கர்ன கடூரமான குறைகளுக்கு இடம் தராமல் சங்கம் ஸெக்ரிடெரி ம-ா-ா-ஸ்ரீ யயாதி முதலியார் அவர் களும் பஞ்சாயத்தார்களும் யூனியனார்க்கும் மற்ற எல்லாருக்கும் திருப்தி கரமாக நடந்துக்கொள்ளுவார்களென்று நம்பப்படுகிறது.

16. 1134 நெ. சித்தாலபாக்கம் சங்கம் வேலை ஆரம்பித்து சுமார் 3½ வருஷமாகிறது. சங்கத்தின் பிரஸிடெண்டும் யூனியன் கவர்னிங் பாடி மெம்பருமாகிய ம-ா-ா-ஸ்ரீ, S. ஸ்ரீனிவாச சாரியர் அவர்களும் மற்ற பஞ்சாயத்தார்களும் ஒத்துழைத்து வேலைபார்ப்பதை கவனிக்க யூனியன் மிக்க சந்தோஷத்தை அடைந்திருக்கிறது. இத்தகையார் கவர்னிங்பாடி மெம்பரா யிருப்பதினால் அருகாமையில் இருக்கும் சங்கங்களை தங்கள் சங்கத்தைப்போல் கவனிப்பாராகில் யூனியனுக்கு நல்ல கீர்த்தியுண்டா கும்.

17. 1668 ரெ. பழைய பல்லாவரம் சங்கம் வேலை ஆரம்பித்து சுமார் 2 வருஷமாகிறது. சங்கத்தின் பிரஸிடெண்டும் பஞ்சாயத்தார்களும் ஒத்துழைத்து வேலை பார்ப்பதை நோக்க யூனியன் ரொம்ப திருப்தி யடைந்திருக்கிறது. சங்கம் ஏழை எளியோர்களுக்கு சிறு கடன்களாக கொடுக்க முயன்றால் கோவாபரேஷன் என்பது தெளிவுற விளங்கும்.

18. 1670 ரெ. கீழ்கட்டளி சங்கம் வேலை ஆரம்பித்து சுமார் 11 வருஷமாகிறது. சங்கம் சிறுகடன்களாகக் கொடுக்க முயலவேண்டும். சென்ற வருஷத்தில் 22 பஞ்சாயத்து மீட்டிங்குகளும் ஒரு மகாசபை மீட்டிங்கும் நடத்தியிருப்பதை நோக்க மிக்க சந்தோஷத்தைத் தருவதுடன் இவ்வருஷத்திலும் இன்னும் சிறப்புறுமென்று நம்பப்படுகிறது.

19. 840 ரெ. காட்டரம்பாக்கம் சங்கம் வேலை ஆரம்பித்து சுமார் $5\frac{1}{2}$ வருஷமாகிறது. சங்கத்தில் தவணைகடந்த கடன்கள் காலத்தில் வசூலாகிறதில்லை. தனியாக ஒரு குமாஸ்தா ஏற்படுத்தி இருப்பதினால் இனி கடன்கள் தவணைகடவாமலிருக்கும்படி ஸெக்ரிடெரி அவர்களும் பஞ்சாயத்தார்களும் கவனிக்க வேண்டுமென்றும் மற்றும் கடன் கொடுக்கும் விஷயத்தில் பஞ்சாயத்தார்கள் பெரிய தொகைகள் எடுத்துக்கொள்ளாமல் இருக்கவும், சென்ட்ரல் பாங்கி பாக்கிகளை தவணை காலங்களில் தப்பாமல் செலுத்தவும் பஞ்சாயத்தார்கள் ஒத்துழைக்க வேண்டுமென்றும் கோரப்படுகிறது. சங்கத்தின் பஞ்சாயத்து மெம்பரும் யூனியன் கவர்ணிங்பாடி மெம்பருமாகிய, ம-ா-ா-ஸ்ரீ ராகவ நாயகர் அவர்கள் இனி சங்கத்தை நல்ல நிலைமைக்குக் கொண்டுவருவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

20. 548 ரெ. அமரம்பேடு சங்கம் வேலை ஆரம்பித்து சுமார் $6\frac{1}{2}$ வருஷகாலமாகிறது. இச்சங்கத்தில் ஸென்ட்ரல் பாங்கி பாக்கிகள் செலுத்தப்படாமலிருக்கின்றன. தவணை கடந்த மெம்பர்களின் கடன்களும் மிகுதியாய் இருக்கின்றன. சங்கத்தின் ஸெக்ரிடெரியும் யூனியன் கவர்ணிங்பாடி மெம்பருமாகிய, ம-ா-ா-ஸ்ரீ நல்லதம்பி முதலியார் அவர்கள் இவ்விதக் குறைகளை வைத்திருப்பது மிக்க விசனகரமாயிருக்கிறது. இவ்வருஷத்திலாவது முன் ஜாக்கிரத்தையாக தக்க முயற்சி எடுத்துக்கொண்டு வசூல் விஷயத்தை கவனித்து ஸென்ட்ரல் பாங்கிக்கு காலத்தில் செலுத்துவார்களென்று நம்பப்படுகிறது. பஞ்சாயத்தார்களுக்குள் ஒற்றுமை குறைவாக இருக்கிறது.

21. 437 ரெ. சோமங்கலம் சங்கம் வேலை ஆரம்பித்து சுமார் $6\frac{1}{2}$ வருஷமாகிறது. இது நல்ல நிலைமையிலுள்ள சங்கங்களி லொன்று. யூனியன் அிணைக்கப்பட்ட சங்கங்களுக்குள் ஸென்ட்ரல் பாங்கிக்கு திருப்பி செலுத்தும் தொகைகளுக்கு ஒரு தாமாவது பினல்வட்டி செலுத்த



வில்லை. இதற்குக் காரணம் காலத்தில் பாக்கிகளை செலுத்துகிறதும், மெம்பர்களிடமிருந்து வசூல் செய்வதுமாகும். சங்கத்தின் பிரஸிடெண்டு, ம-ா-ா-ஸ்ரீ ரங்கசாமி முதலியார் அவர்கள் பஞ்சாயத்தார்களின் சகாயமின்றியே சங்கத்தை நல்ல நிலைமையில் வைத்திருப்பதற்கு யூனியன் நன்றிபாராட்டக் கடமைப் பட்டிருக்கிறது.

22. 140 ரெ. மலைப்பட்டு சங்கம் வேலை ஆரம்பித்து சுமார் $7\frac{1}{2}$ வருஷகாலமாகிறது, சங்கத்தின் பஞ்சாயத்தார்கள் ஒருவருக்கும் சிரத்தையில்லை என்று ஏற்படுகிறது. ஆனால் மெம்பர்களும் அதேபாடத்தை நன்றாக கற்றுக்கொண்டார்களென்று ஏற்படுகிறது. இவ்வித அதிக அசிரத்தையினால் சங்கம் சீர்திருத்த முடியாத நிலைமைக்கு வந்துக்கொண்டிருக்கிறது. யூனியனும் கவர்ணிங்பாடி மெம்பர்களும் ஒரு வருஷகாலமாக முயற்சி எடுத்தும் உவர் நிலத்தில் நெல் முளை வித்தாற்போலாயிற்று. இதற்காக சங்கத்தின் பிரஸிடெண்டு ம-ா-ா-ஸ்ரீ ஆறுமுக நாயகர் அவர்கள் பிரயாசை எடுத்துக்கொண்டும் யாதொரு பலனும் காணாமல் லீவுவாங்கிக்கொண்டார். கோர்ட்டில் தாக்கல் செய்து வசூல் செய்ய சங்கத்திற்கு கையிருப்பு பணமில்லாமல் ஒன்றும் செய்ய முடியாமலிருக்கிறது. இவ்வித சந்தர்ப்பத்தில் யூனியனும் தக்க முயற்சி செய்து நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமென நம்பப்படுகிறது.

23. 1579 ரெ. கொளத்தூர் சங்கம் வேலை ஆரம்பித்து சுமார் $7\frac{1}{2}$ வருஷமாகிறது. யூனியனில் அிணைக்கப்பட்ட சங்கங்களுக்குள் இது முதன்மையானதாகச் சொல்லலாம். சங்கம் ஸென்ட்ரல் பாங்கிபாக்கிகளை சரியான காலத்தில் செலுத்துவதும் மெம்பர்களிடமிருந்து தவணைப்படி கண்டிப்பாய் வசூல் செய்வதிலும் சிரமம் யெடுத்துக்கொள்வதை நோக்க மிக்க களிப்பையுண்டாக்குகிறது. மற்றும் சிப்பந்தி செலவும் கண்டின்செண்டு செலவும் குறைவாக செய்திருப்பதும் சிக்கனமென்பதை நன்கு விளக்குகிறது. இவ்விதப் பெருமைக்கு, காரணம் சங்கத்தின் பிரஸிடெண்டும் யூனியன் கவர்ணிங்பாடி மெம்பருமாகிய, ம-ா-ா-ஸ்ரீ K. K. கிருஷ்ணமாசாரியார் அவர்களுடைய விடா முயற்சியாகும்.

24. 139 ரெ. குண்டுபெரும்பேடு சங்கம் வேலை ஆரம்பித்து சுமார் $7\frac{1}{2}$ வருஷமாகிறது, சங்கம் முன்னைக்காட்டிலும் யூனியன் மூலமாய் லேவாதேவியை விர்த்திசெய்திருப்பது மிகவும்திருப்திகரமான விஷயம். இனிமேல் சங்கம் பஞ்சாயத்தார்கள் பட்வாடா செய்த கடன்களை சரியான காலத்தில் வசூலித்து சென்ட்ரல் பாங்கிக்கு அனுப்புவார்களென்று எதிர்பார்க்கப்படுகிறது. மேற்படி சங்கம் ஸெக்ரிடெரியாக இருந்து இறந்துபோன தோமாஸ் நாயுடு அவர்கள் முயற்சியும் உதவியும் இன்னும் கொஞ்சகாலம் ஆயுள்விர்த்தியில்லாததினால் சங்கத்திற்கு நஷ்டத்தையும்

விசனத்தையும் உண்டாக்கி விட்டது. இப்பொழுது ஏற்பட்டிருக்கும் புதிய ஸெக்ரிடெரி அவர்கள் பழைய ஸெக்ரிடெரி அவர்களைப் போல் சங்கத்தை விர்த்திக்கு கொண்டுவருவாரென்று நம்பப்படுகிறது.

25. 526 நெ. போந்தூர் சங்கம் ஸென்ட்ரல் பாங்கி பாக்கிகளை செலுத்துவதும் மெம்பர்களிட மிருந்து வசூல் செய்வதும் யூனியனுக்கு திருப்தியை உண்டுபண்ணுகின்றன. பஞ்சாயத்து மீட்டிங்குகளும் ஜனரல் பாடி மீட்டிங்குகளும் அதிகமாக நடத்த முயலவேண்டும். இவ்வருஷத்தில் தளராத ஊக்கத்தோடும் சிரத்தை எடுத்துக்கொண்டு புதிய கடன்கள் பெற்று லேவாதேவி விர்த்தி செய்து நல்ல நிலைமையை அடையுமென்று விரும்பப்படுகிறது.

26. 2280 நெ. தத்தனூர் சங்கம் வேலை ஆரம்பித்து சுமார் 7, 8 மாதங்களாகின்றன. சங்கத்தின் கணக்குகளை ஒழுங்காயும் சரியாகவும் வைக்கவேண்டுமென்று ஸெக்ரிடெரி அவர்களை கேட்டுக் கொள்ளப்படுகிறது. சிறுகடன்கள், கொடுத்து லேவாதேவிசெய்வதை நோக்க திருப்திகரமாயிருக்கிறது.

27. இதுகாறும் சங்கங்களின் நிலைமையை பற்றி விரிவாக சொல்லப்பட்டது. இனி நடக்கிற வருஷத்தில் யூனியன் கவர்ணிங்பாடி மெம்பர்களும் சங்கங்களின் பஞ்சாயத்தார்களும் ஸெக்ரிடெரிகளும் பிரஸிடெண்டுகளும் சேர்ந்து எவ்விதத்திலும் யூனியனுடைய மேன்மையையும் சங்கங்களுக்கு கீர்த்தியையும் உண்டாக்குமென்பது இங்கு நோக்கத் தக்கது.

சென்ற வருஷத்தைப்பற்றி இனி விவரித்து பேசுவதில் பிரயோசனமில்லை. ஆகையால் இவ்வருடத்தில் எவ்வாறு ஸென்ட்ரல் பாங்கிக்கு பாக்கிகள் இல்லாமலும் மெம்பர்களிடமிருந்து தவணைப்படி சரியானகாலத்தில் வசூல் செய்வதும் இங்கு அவசியம் கவனிக்க வேண்டும். இவ்வருஷம் நமது யூனியன் முதன்மையான இடம் பெறவேண்டுமென்றால் ஒவ்வொரு சங்கமும் பஞ்சாயத்தார்களும் தங்களாலான முயற்சியைத் தேடவேண்டும். முயற்சியில்லாமல் போனால் யாதொன்றும் கைகூடாது. இது பற்றியே—“முயற்சி திருவினையாக்கும்,

முயற்றின்மை யின்மை புகுத்திவிடும்.”

என்பதுபோல் முயற்சியுடையார் இகழ்ச்சி யடையார் என்னும் ஆன்றோர் மொழிகளுக்கு இணங்கி ஒவ்வொரு மெம்பரும் தத்தம் சங்கங்களை ஒழுங்காக நடத்துவார்களானால், அதைப்போன்ற ஆனந்தம் யூனியனுக்கும் மற்றும் மேலதிகாரிகளுக்கும் வேறொன்றுமில்லை. இம்மாதிரி ஜெனரல் பாடி மீட்டிங்குகள் அல்லது கான்பிரன்சுகள் நடைபெருமானால் யூனியனிலுள்ள ஒவ்வொரு மெம்பர்களும் தம்தம் குறைகளை



செவ்வையாய் தெரிந்துக்கொண்டு சீர்திருத்திக்கொள்ள விசேஷ இடமிருக்கிறது. எவ்வெவ்விடத்தில் குறைகளிருக்கின்றனவோ அவ்வவ்விடத்தில் யூனியன் கவர்ணிங்பாடி மீட்டிங்கினாலும் இன்னும் இதரவழிகளினாலும் அக்குறைகளை நீக்க யூனியன் சித்தமாக இருக்கிறது. இந்த கோவாபரேஷன் என்னும் கூட்டுறவு சங்கத்தில் ஒவ்வொருவரும் பிரதிபலன் இல்லாமல் வேலைசெய்ய வேண்டுமென்று ஏற்பட்டிருக்கிறது. இது

‘மழை பெறும் பொ்ருளுமுண்டோ வையத்து வாழ்வார்மாட்டு,’

என்பதுபோல யாதொரு பிரதிப்பிரயோசனமில்லாமல் உழைப்பவர்களே உலகத்தில் எல்லாரினும் மேலானவர்களென்று கூறப்படுகிறது. ஆகையால் இனி நடக்கிற வருஷத்தில் இங்கு இருக்கும் ஒவ்வொருவரும் தம்மாலியன்ற அளவு செய்ய சித்தமாயிருப்பாராகில் அடுத்த வருஷத்தில் யூனியன் அடையும் ஒரு பெரும் புகழை எல்லோரும் ஆனந்திக்க இடமிருக்கும். இவ்வருஷத்தில் மிகவும் பிரயாசையுடன் வேலைசெய்த யூனியன் கவர்ணிங்பாடி மெம்பர்கள் எல்லோருக்கும் சங்கங்களின் மெம்பர்கள் பிரஸிடெண்டுகள் காரியதரிசிகள் எல்லோருக்கும் யூனியன் மனமார்ந்த வந்தனத்தை செலுத்த கடமை பட்டிருக்கிறது.

---

## நிருபம்.

### புல்லெடின் பத்திராதிபருக்கு,

அன்புள்ள ஐயா!

மாகாண கூட்டுறவு கான்பரன்ஸில் அக்கிராசனம் வகித்தவர் தமது முடிவுரையில் பின்வருமாறு சொல்லியிருக்கிறாரென்று பத்திரிகைகளில் காணப்படுகிறது:—

“கூட்டுறவுக்காரர்களிடமுள்ள குற்றங்குறைகளை அதிகாரிகள் எடுத்துக்காட்டும்பொழுது கூட்டுறவுக்காரர்கள் தங்களது மேலான அதிகாரிகளுடன் சச்சரவுசெய்யாமல், ஒருமித்து அக்குற்றங் குறைகளை நிவர்த்திசெய்ய வழிதேடவேண்டும். சங்கங்களை மெம்பர்களே திறமையாக நடத்திக்கொள்ளச் சக்தி வாய்ந்து விட்டார்களென்று புலப்படும்பொழுது சங்கங்களின் விஷயத்தில் தலையிடாமல் விலக்கிக் கொள்ள கவர்ன்மெண்டார் எப்பொழுதும் தயாராய் இருக்கிறார்கள். அதுவரையில் சங்கங்களின் விஷயத்திலே கவர்ன்மெண்டாருக்கு ஓரளவு அதிகாரம் இருக்கத்தான் வேண்டும்”

மேற்கண்ட வாக்கியங்களைப் பார்த்தால், இம்மாகாணத்திலே சில சங்கங்களின் நடவடிக்கைகளைப் பற்றி பிரமாதமான கண்டனம் ஏற்பட்டிருக்கிறதென்பது வெளிப்படை. இது இப்படியிருக்க, இம்மாகா

ணத்திலே செங்கற்பட்டு ஜில்லாவில் கூட்டுறவு இலாகா அதிகாரிகள் என்ன செய்கிறார்களென்பதற்கு இரண்டொரு உதாரணங்கள் சொல்லுகிறேன்.

செங்கற்பட்டு ஜில்லாவில்தான் முதன் முதல் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்பட்டன. சங்கங்களை நெருக்கி மேற்பார்வை பார்ப்பதற்காக இந்த ஜில்லாவில்தான் ஆதியில் லோகல் யூனியன்கள் ஏற்பட்டன. அப்பால், ஜில்லா பாங்கிங்யூனியன் ஒன்றை ஏற்படுத்த வேண்டுமென்றும் தோன்றியது. அப்படியே ஜில்லா யூனியனும் ஏற்பட்டது, அந்த யூனியனிலே ஓர் உபவிதி என்ன வென்றால் :—"பிரைமரி சங்கங்கள் லோகல் யூனியன்கள் ஆகிய இவைகளின் மேற்பார்வையை நடத்துவதும், பொதுவாய் நன்மைக்குத்தக்க விஷயங்களைப்பற்றி யோசனை சொல்லுதலும், சங்கங்களுக்கு உதவி புரிதலும், நிர்வாக சபையின் கடமையாகும். இதற்காக, வேண்டிய அளவு ஸூபர்வைஸர்களை அச்சபை நியமிக்கும்."

மற்றோர் உபவிதி என்ன வென்றால்:—"ஸூபர்வைவிங் பண்டு என்ற வகையில் கொடுக்கப்படும் தொகையெல்லாம் ஜில்லாவிலுள்ள ஒவ்வொரு சங்கத்தினாலும் ஜில்லாபாங்கிங் யூனியனில் செலுத்தப்படவேண்டும். தவிர, மேற்பார்வைக் கென்று பிரைமரி சங்கங்களிலிருந்து வசூலாகும் தொகையும், இதர சங்கங்களிலிருந்து கிடைக்கும் தொகையும் சேர்த்து ஸூபர்வைவிங் பண்டு என்று சேர்த்துவைக்கப்படும். இதை ஜில்லாயூனியன் நிர்வகித்துவரும்."

இவ்விதிகள் இன்னும் இருக்கின்றன. ஆயினும் ஜில்லா யூனியன் ஏற்பட்ட பிறகு, 4 அல்லது 5 லோகல் யூனியன்கள் ஏற்பட்டிருக்கின்றன. இந்த லோகல் யூனியனின் உபவிதிகளோ ஜில்லா யூனியனின் மேற்கண்ட உபவிதிகளுக்கு மாறாக ஏற்பட்டிருக்கின்றன. ஜில்லா யூனியனை எதுவும் கேட்காமலேயே உதவி ரெஜிஸ்ட்ராரானவர் சில தினங்களுக்குமுன் ஒரு ஸூபர்வைஸரை நியமித்திருக்கிறார். ஆனால் அந்த ஸூபர்வைஸருடைய சம்பளமானது ஜில்லா ஸூபர்விஷன் பண்டிலிருந்து கொடுக்கப்பட வேண்டுமாம். இதைத்தவிர, பிரைமரி சங்கங்களை உதவி ரெஜிஸ்ட்ரார் மேற்பார்வை பார்த்து உத்தரவு செய்திருப்பதில், பிரைமரி சங்கங்களெல்லாம் தங்களது மேற்பார்வைக்காகச் செலுத்தும் தொகையை ஜில்லா யூனியனில் செலுத்தாமல் லோகல் யூனியன்களில் செலுத்தவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்.

யூனியன்களின் விதி ஒருபுறமிருக்க, கூட்டுறவு இலாகாவோ வேறுவிதமாக உத்தரவிட்டிருக்கின்றனர். அந்த உத்தரவுக்கு நாங்கள்



கட்டுப்பட்டிருக்க வேண்டும். யூனியன்களின் விதிகள் ஒருவிதமாயும் அதிகாரிகளின் உத்தரவு வேறு விதமாகவும், இருக்கையில், கூட்டுறவுக்காரர்கள் மேலதிகாரிகளுடன் சச்சரவுசெய்யாமல், குற்றங்குறைகளை நிவர்த்திசெய்துகொள்ள வேண்டுமென்று சொல்லப்படுகிறார்கள் !

P. ராமச்சந்திர சாஸ்திரி,

காஞ்சிபுரம்.

---

# ஹோஸூர் தாலுக்கா கோவாப்ரேடிவ் கான்பரென்ஸ்

சேலம் ஜில்லா ஒஸூர்தாலூக்கா கோவாபரேடிவ் கான்பான்ஸ் 1918 வருஷம் ஜனவரி மாதம் 26ந் தேதி சனிக்கிழமை இரவு சுமார் 8½ மணிக்கு கெலமங்கலம் சனாதனதர்மபோதின சபா கட்டடத்தில் ம-৷৷-৷৷-ஸ்ரீ C. முனிசாமி கவுடு அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் நடைபெற்றது. மேற்படி சபை கட்டடம் விநோதமான சித்திரப் படங்களாலும் வாழை மாவிலை முதலிய தோரணங்களாலும் விசேஷமாய் விசாலமான பந்தலாலும் அலங்கரிக்கப்பட்டது. ஹோஸூர் டவுன்பாங்கைத் தவிர மற்ற எல்லா சங்கத்திலிருந்தும் பிரதிநிதிகளும் ஊக்கமுள்ள ஐக்கியஸ்தர்களும் அபிமானமுள்ள இதர ஜனங்களும்கூடி மொத்தம் 200 பேர்கள் அன்றிரவு 7-மணிக்குள் கூடிவிட்டார்கள். உள்ளூர்வாசிகள் தவிர மற்ற எல்லாருக்கும் போஜன சௌகரியங்கள் செய்யப்பட்டிருந்தது. பாண்டுவாத்தியம் முழங்கவும் சபையைச் சேர்ந்த பள்ளிக்கூடச் சிறுமிகள் பாரதகீதம் பாடவும் மகாநாடுகூட ஆரம்பித்தது. கெலமங்கலம் செக்ரிடெரி ம-৷৷-৷৷-ஸ்ரீ K. வெங்கடாசாரியார் அவர்கள் பிரதிநிதிகளையும் மற்றவர்களையும் அன்புடன் வரவேற்றார். பின்பு வழக்கப்படி சபை அக்கிராசனாதிபதி தெரிந்தெடுக்கப்பட்டார்.

பிறகு கெலமங்கலம் சங்கம் பிரசிடெண்டு ம-৷৷-৷৷-ஸ்ரீ A. வெங்கடரமணய்யகாரு தங்கள் சங்கத்து ரிபோர்ட்டை படித்து சங்கங்கள் ஸ்தாபனமான காரணத்தால் ஜனங்களுக்கு இதுவரை எவ்வளவு அநுகூலங்கள் ஏற்பட்டிருக்கின்றன வென்று எடுத்துச் சொன்னார். ராணி மூகனூர் சொஸைடி பிரசிடெண்டு ம-৷৷-৷৷-ஸ்ரீ N. பத்மநாபய்யர் அவர்கள் தமிழ் "கூட்டுத்தொழில் வர்த்தமானி" பத்திரிகை கடைசியாக வெளிவந்த சஞ்சிகையில் விஸ்தாரமாய் எழுதிப்பட்டுள்ள "புதுக்கோட்டை டவுன் பாங்கில் ஒரு பஞ்சாயத்து மீட்டிங்" என்ற பாகத்தை வசித்தார். கூடியிருந்த பஞ்சாயத்து மெம்பர்களும் இதரமெம்பர்களும் அதில் பிரஸ்தாபிக்கப்பட்ட விஷயங்களால் தாங்கள் செய்யவேண்டிய காரியங்களை தெரிந்து கொண்டவர்களானார்கள். தர்மபுரி சர்க்கில்

கோவாபரேடிவ் இன்ஸ்பெக்டர் மிஸ்டர் R. நாராயணசர்மா ஹொஸூர் தாலூக்கா சங்கங்களை சேர்த்து ஒரு கோவாபரேடிவ் யூனியன் வைக்க வேண்டிய விஷயமாயும் அதை நடத்திவரும் விவரத்தை பற்றியும் பிரஸ்தாபித்தார். மிஸ்டர் வெங்கடாசாரியார் இந்த தாலூகாவில் ஐக்கியமுயற்சியின் விருத்தி அம்சத்தைப் பற்றியும் சிற்சில சங்கங்களில் தனக்குத் தோன்றின குறைவுகளையும் பஞ்சாயத்து மெம்பர்களின் அசிரத்தையையும் ஒற்றுமைக் குறைவையும் பற்றி பிரசங்கம் செய்தார். இவ்விதமான குறைவுகள் நீடித்திருந்தால் சங்கங்களின் அபிவிருத்தியின் முன்னேற்றத்திற்கு இடையூறாயிருக்குமென்று எடுத்துக்காட்டினார்.

இதன் பிறகு டங்கணி கோட்டை டவுன் பாங்கி பிரசிடெண்டு ம-ா-ா-ஸ்ரீ நீலகண்டப்ப செட்டியார் அவர்கள் சுருக்கமாய் பரோபகாரார்த்தமாய் தனவான்கள் செய்யும் சொல்ப பொருளுதவியைக் கொண்டு பொது ஜனங்களுக்கு நிரம்பவும் அனுகூலம் செய்ய முடியமென்றும் அதற்கு திருஷ்டாந்தமாக கெலமங்கலத்தில் தர்மத்திற்கு ஒரு இராபாடசாலை ஏற்பாடு செய்யப்பட்டதைக் காட்டிப்பேசினார்.

இந்தமகா நாட்டின் நடவடிக்கைகளுள் ஒருவிசேஷம் என்னவென்றால் இப்போதிய சங்கங்களை இன்ஸ்பெக்ஷன் செய்து கவனித்து வருவதற்கும் ஜாஸ்தி சங்கங்கள் ஏற்பட முயற்சி செய்து வருவதற்கும், பொதுவாய் ஒரு கோவாபரேடிவ் யூனியன் செய்யவேண்டிய முக்கிய அம்சங்களை நடத்திவரவும், சங்கங்களிலிருந்து 13 மெம்பர்களை மேல்பார்வை கமிட்டியாக தெரிந்து எடுக்கப்பட்டது ரொம்பவும் சிலாக்கியமாகக்காணப்படும்.

பின்வரும் தீர்மானங்கள் அங்கீகரிக்கப் பட்டவைகளுள் முக்கியமானவை:—

1. ஐக்கிய நாணயச்சங்க சட்டமானது 1904 வருஷத்திலேயே அனுஷ்டானத்திற்கு வந்து விட்டதென்றாலும் இது மூலமாய் யாதொரு அனுகூலமும் வெகு நாள்வரையடையாத ஹோஸூர் தாலுக்கா வாசிகள் சென்ற 1916-ம் ௵ கடைசிலாவது 7 ஐக்கியச் சங்கங்கள் ஸ்தாபிக்கப் பெற்றார்களென்பதைப்பற்றி கோவாபரேடிவ் டிபார்ட்மெண்டாருக்கு விசேஷ வந்தனமளிப்பதுடன் சுற்றேரக்குறைய 20 கிராமங்களுடைய இந்த ஹோஸூர் தாலுக்காவில் கூடிய சீக்கிரம் பிரதி ஊரிலும் ஐக்கியச் சங்கங்கள் ஏற்படுத்த முயற்சி எடுத்து சங்கங்களை பிரபலப் படுத்தவும் ஐக்கியமுறையை அபிவிருத்திக்கு கொண்டுவரவும் சேலம் செக்ஷன் ம-ா-ா-ஸ்ரீ அசிஸ்டெண்டு ரிஜிஸ்ட்ரார் அவர்களைப் பிரார்த்திக்க ஏகோபித்து தீர்மானிக்கப்பட்டது.



இதுவரை ம-ா-ா-ஸ்ரீ சேலம் அசிஸ்டெண்டு ரிஜிஸ்ட்ராருக்கு இந்த தாலுக்காவிலிருந்து சுமார் மூன்று மாதங்களுக்குமுன் புதிய சங்கங்களுக்காக அனுப்பப்பட்டிருக்கும் பாகலூர், உத்தின பல்லிதளி, கும்பளாபுரம், கெலமங்கலம் பஞ்சமர் சங்கம், கெலமங்கலம் ஏழைகளின் சங்கம், முதலிய மனுக்களை இன்னும் ஆலஸ்ஸியம் செய்யாமல் கிருபைகூர்ந்து உடனே ரிஜிஸ்ட்ர் செய்வித்து ஐக்கியசங்கங்களை இந்த தாலுக்காவில் பலப்படுத்த வேண்டுமாய் பிரார்த்தித்துக் கேட்டுக்கொள்ள தீர்மானிக்கப் பட்டது.

2. சேலம் ஜில்லா பாங்கியா தங்கள் கடன்களின்பேரில் கடன் வாங்கின சங்கங்களினுடையவும் அவைகளின் மெம்பர்களினுடையவும் சவுகர்யங்களையும் வருமான காலத்தையும் அனுசரிக்காமல் கண்டிதமாய் ஆறு மாதத்திற்கு ஒருமுறை வட்டி வசூலிப்பது பலவகையிலும சங்க மெம்பர்களுக்கு விசேஷ நஷ்டத்தை உண்டாக்குவதால் மதராஸ் ஸெண்ட்ரல் பாங்கு, மதுரை இராமனாதபுரம் சென்ட்ரல் பாங்கு முதலிய பாங்குகளில் கடன் புட்டுவாடாவானது எப்படி யிருந்தபோதிலும் வருஷத்திற்கு ஒருமுறையே மாசூல் விற்று முதல்காலத்தை அனுசரித்து அசல் வட்டி தவணைகளில் வாங்கிவருவதுபோல் சேலம் டிஸ்டிரிக்டு பாங்காரும் ஷை ஏற்பாட்டையே அனுசரித்து சங்கங்களுக்கு விசேஷ சவுகரிய முண்டாகும்படி செய்ய மேற்படி பாங்காரை கேட்டுக்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டது.

2. ஜில்லாபாங்காருக்கு அப்பொழுதுக்கப்பொழுது செல்லாக வேண்டிய அசல்வட்டித்தவணைகளை கட்டியானபிறகு பாக்கி இருக்கும் வசூல் மொத்தத்தை சங்கங்களிலேயே வைத்துக்கொண்டு மறுபடியும் மெம்பர்களுக்குக் கடன் கொடுக்க அனுமதி கொடுக்க வேண்டுமென்றும், மெம்பர்களுக்கு தேவையில்லாத தொகையை இத்தாலூக்காவில் திருப்திகரமாய் வேலை செய்துவரும் சங்கங்களில் எதற்காவது தேவையிருந்தால் சர்க்கில் இன்ஸ்பெக்டரின் அபிப்பிராயம் கேட்டு பரஸ்பரம் லேவாதேவி செய்துகொள்வது அவசியமாகத் தோன்றுவதால் அவ்விதம் செய்வதற்கு அனுமதி கொடுக்கவேண்டுமாயும் சேலம் அசிஸ்டெண்டு ரிஜிஸ்ட்ராரவர்களைக் கேட்டுக்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டது.

5. கிராமவாசிகளை பூராவும் கொள்ளைகொள்ளும் 6 மாதக்கந்துக்காரர்கள் மார்வாடிகள் லேவாதேவிகாரர்களின் வியாபாரங்களை ஒழித்து ஏழை ஜனங்களை கஷ்ட நஷ்டங்களிலிருந்து நிவர்த்தி செய்தற்பொருட்டும், சங்கங்களில் உபாயஜீவனமுள்ளவர்கள் அப்போதைப்போது அவசர செலவுகளுக்காக கேட்கும் சில்லரைக்கடன்களுக்காகவும், சர்

வட்டி முதலிய குறைந்தவனைகளுக்கு சில்லரை வியாபாரிகள், கைத்தொழிலாளிகள், முதலியவர்களுக்கு அட்வான்ஸ் கொடுப்பதற்காகவும், எதிர்பாராத சாவு, வியாதி முதலிய அத்யாவசியமான செலவுகளுக்கு தக்க சமயத்தில் உதவி செய்யும் பொருட்டும், பிரதிசங்கத்திலும் பரீக்ஷார்தமாக சுமார் 6 மாதகாலத்திற்கு ரூ. 200 வரையில் கைஇருப்புத் தொகைவைத்து மேற்படி கடன்களின் பேரில் ரூபாய் 1-க்கு மாதம் 1க்கு பைசா 2 விதம் வட்டி வசூலிக்கும்படி செய்தும் வட்டி நஷ்டமேற்படுவதாய்த் தோன்றும் சங்கங்களில் இந்த ஏற்பாட்டை தக்ஷணமே ரத்துசெய்து விடலாமென்றும் இந்த தாலூக்கா சங்கங்களில் இம்மாதிரி ஏற்பாடு அவசியமாய் இருக்க வேண்டுமென்றும் இவ்வித ஏற்பாட்டிற்கு ம-ா-ா-ஸ்ரீ சேலம் அசிஸ்டெண்டு ரிஜிஸ்ட்ரார் அவர்களின் அனுமதி கொடுக்கவேண்டுமென்றும் கமிட்டி பிரார்த்திக்க தீர்மானிக்கப்பட்டது.

6. சட்டப்படி ஒருதாலூக்கா கோவாபரேடிவ் யூனியன் ரிஜிஸ்ட்டர் செய்யப்பட்டு வேலை தொடங்கும் வரை தற்சமயம் ஏற்பட்டிருக்கும் ஐக்கியச்சங்கங்கள் தங்களுள் ஒரு மேற்பார்வை கமிட்டியாரை தக்ஷணமே நியமித்துக்கொண்டு லோகல் யூனியன் செய்யவேண்டிய சகல வேலைகளையும் கவனித்து வரவேண்டுமாயும் குறிப்பிடப்பட்ட மெம்பர்களடங்கிய கமிட்டி ஒன்றைத் தெரிந்தெடுக்க வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது.

7. நம் நாட்டில் கல்வி அபிவிருத்திக்குறைவால் ஐக்கியசங்சங்கள் போதுமானபடி அதிகரிப்பதற்கு இடமில்லாமலிருப்பதாலும் அவி விவேகமே பொது ஜனங்களிடத்தில் குடிகொண்டிருப்பதால் தங்கள் முன்னேற்றத்திற்கு வேண்டிய சௌகரியங்களை தேடிக்கொள்ள அசக்தர்களாயிருக்கிறபடியாலும், பிரதி ஐக்கியஸ்தரும் தங்களாலானமட்டும் பிரயாசப்பட்டு ஆங்காங்கே எல்லாஜாதியாருக்கும் (முக்கியமாய் பஞ்சமர்களுக்கு) பிரைமரிப்படிப்பிற்காவது பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்த முயற்சி செய்யவேண்டுமென்றும், தங்கள் சங்கத்து பொதுநன்மை பண்டுகளை முக்கியமாய் வித்யாபி விருத்திக்கு செலவிட்டு வரவேண்டுமென்றும், இது விஷயமாய் வித்தியா இலாகா செய்யும் முயற்சிகளுக்கு உதவியாய் இருக்க வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

8. ஐக்கியஸ்தர்களை ஜில்லா தாலூக்காபோர்டுகளிலும் கிராமப் பஞ்சாயத்துகளிலும் மெம்பர்களாக தெரிந்தெடுக்க வேண்டியது அவசியமென்றும் அதற்குத்தகுந்தபடி சம்பந்தப்பட்டசட்டங்களை சீர்திருத்தம் செய்ய வேண்டுமென்றும் மாக்ஷிமை தங்கிய கவர்ன்மெண்டாரைக் கேட்டுகொள்ள தீர்மானிக்கப்பட்டது.

9. தேவஸ்தானம் பண்டுகள் கோர்டு ஆப் வார்ட் பண்டுகள் முதலிய பொது நிதிகள் பல இடங்களிலும் சிதறி குறிப்பிட்ட ப்ரயோஜனங்களுக்கு திருப்திகரமாய் உபயோகப்படாமல் மேற்படி நிதிரக்ஷகர்களாய் ஏற்படுபவர்கள் கையிலகப்பட்டு யாவருக்கும் உபகாரமாயிராமலும் சிற்சில விடங்களில் சொற்பவட்டியே கிடைத்து வருவதாலும் பந்தோபஸ்தும் ஜாஸ்திவட்டியும் கிடைக்ககூடிய ஐக்கிய சங்கங்களிற் போடப்பட்டால் இருத்திரத்தாருக்கும் விசேஷ அனுகூலம் ஏற்படுமாகையால் அந்தந்த சட்டங்களை முறையே சௌகரியமாய் மாற்றவேண்டுமாய் காருண்ய கவர்ன்மெண்டாரை வினயத்துடன் பிரார்த்திக்கும்படி தீர்மானிக்கப்பட்டது.

10. ஐக்கிய சங்கங்களுள் விசேஷ சகோதரபாவனையும் அனுகூலமும் ஏற்படும்பொருட்டு பிரதி ஐக்கியசங்கமும் கூட்டங்கள் கூட்டி ஒவ்வொருசங்கத்தின் குறைகளையும் நடவடிக்கைகளையும் குறித்து கலந்து பேசி ஒழுங்குபடுத்திக்கொள்வது உசிதமென்று தீர்மானிக்கப்பட்டது.

---



## மொலசூர் கிராம நாணயச் சங்கத்தின் ரிபோர்ட்டு.

சென்ற சென்னை கோவாப்ரேடிவ் கான்பரென்ஸில் பின்வரும் ரிபோர்ட்டு வாசிக்கப்பட்டது:—

மொலசூர் கிராமம் செங்கற்பட்டு ஜில்லாவில் சென்னையிலிருந்து காஞ்சீவரம் போகும் பெரிய ரஸ்தாவில் 32-வது மையிலிலிருக்கிறது.

இந்த கிராமத்தில் பூர்வீகமாயிருந்த சில இந்துக்களும் பின்னிட்டு அதாவது 100 வருஷத்திற்கு பிறகு வடக்கே கிருஷ்ணா ஜில்லாவிலிருந்து வந்து குடியேறிய சிலகிறிஸ்துவர்களும்தான் இந்த கிராமத்தின்குடிகளாகும்.

இந்த கிராமத்தில் பெரிய ஏரிகளாவது அல்லது சதாபாயும் ஆற்றுக்கால்களாவது கிடையாது. இவர்கள் அனுபவிக்கும் நிலங்கள் இதற்கு முன் குடியிருந்தவர்கள் தங்களுக்கு உதவாததென்று தள்ளிவிட்ட மேட்டுப்பாங்கான புஞ்சை நிலங்கள்தான் இவர்களுக்கு ஆதாரம்.

இந்த கிராமத்தின் சங்கமானது 1908-ளு மார்ச்சு மாதம் 19உ ரிஜிஸ்டர் செய்யப்பட்டுப் ஏப்ரல் மாதம் 24உ வேலைசெய்யத் தொடங்கிற்று.

இந்த சங்கத்தில் இந்த கிராமத்திலிருக்கப்பட்ட யாவரும் மெம்பர்களாய்ச் சேர்ந்திருக்கிறார்கள். யாவருமென்றால் கிறஸ்துவர்கள், இந்துக்கள் மொத்தம் எங்கள் கிராமத்தில் எங்கள் கிராமமுனிஸீப், கிராமத்

தலையாரி, வெட்டியான், நீர்கட்டி, தச்சன், கருமான், வண்ணான், நாவிதன் ஆக எல்லாக்குடிகளும்தான். இப்பொழுது இருக்கும் மொத்த மெம்பர்கள் 115. இதன் குடியேறிய கிராமங்களிலொன்றாகிய சேந்தமங்கலம் கிராமத்திலும் ஒருசங்கம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. இந்த கிராமத்திலிருந்து குடியேறிய கிராமங்கள் 4. மேற்படி நாலு கிராமங்களில் இருக்கப்பட்டவர்களும் இவைகளின் தாய்கிராமமாகிய இந்த மொலசூர் கிராமத்தி லிருக்கப்பட்டவர்களும் எல்லாரும் பொதுவாய்த் தானிருக்கிறார்கள்.

இந்த சங்கத்தின் மெம்பர்களை இதரவிடங்களில் கடன் படவொட்டாமல், மதராஸ் சென்ட்ரல் பாங்கில் ரூ. 9.000-மும், சென்னையில் ஓர் கனவானிடத்தில் ரூ. 1,.00மும் கீழ்ச்சேரி விவசாய பாங்கில் ரூ. 2,000மும், ஆக ரூ. 12.000 வரையில் கடன் வாங்கி எல்லா மெம்பர்களுக்கும் கடன்கள் கொடுத்துக்கொண்டு வரப்பட்டன. பிறகு வெளியில் கடன்வாங்கினால் நமது கிராமத்தின் பணமெல்லாம் வட்டி ரூபமாய் வெளியே போகிறதென்றுதெரிந்துக்கொண்டு இந்த கிராமத்திலேயே மிகுதியான பணத்தை எல்லாம் கட்டாயப்படுத்தி வாங்கிக்கொண்டு மேற்படி, வாங்கியிருந்த கடன்களில் ரூ. 11,500 கொடுத்து விட்டோம். இன்னும் மதராஸ் சென்ட்ரல் பாங்கிக்கு நாங்கள் ரூ. 500 தான் கொடுக்க வேண்டும். இப்பொழுது எங்கள் சங்கத்தில் மெம்பர்களிடத்திலும் எங்கள் கிராமக்கோவிலிலும் கடன்களாகவும் டிபாஸிட்டுகளாகவும் வாங்கியிருக்கும் தொகை ரூ. 8,000 . இதுவரையில் எங்கள் சங்க மெம்பர்களுக்குக் கொடுத்த கடன்கள் யாவத்தும் சல்லீசாய் வசூல் செய்துக்கொண்டு வருகிறோம்.

எங்கள் சங்கத்தின் க்ஷேமநிதிக்கு இதுவரையில் நாங்கள் செலுத்தியிருப்பது ரூ. 1,370-2-11. இதில் ரூ. 116-4-0 சென்னை யுத்தபண்டுக்காக கடன்கொடுத்திருக்கிறோம். கனவான்களே! நாங்கள் க்ஷேம நிதிக்கு பணம் செலுத்தியதைப்பற்றி ஒருவிசேஷம். எங்கள் சங்கம் ஆரம்பித்த வருஷத்தில் ஏறக்குறைய இரண்டு மாதகாலத்தில் கோஆப்ரேடிவ் வருஷம் முடிந்தது. மேற்படி வருஷத்தில் கனம் ரிஜிஸ்ட்ரார் அவர்கள் எங்களுக்கு அனுப்பிய ஆடிட் உத்திரவில் எங்கள் சங்கத்திற்கு மேற்படி வருஷத்திற்கு லாபம் ரூ. 4-13-0 என்றும், அதை உடனே மதராஸ் சென்ட்ரல் பாங்கிக்கு அனுப்பவேண்டியது தென்றும் கண்டிருந்தது. சென்ட்ரல் பாங்கார் அனுப்பிய உததிரவொன்றில் க்ஷேமநிதிக்காக அனுப்பும் தொகைகள் 5 ரூபாயுக்குக் குறைவுபட்டிருந்தால் மேற்படி தொகைக்காக வட்டி கொடுக்கப்படாது என்றும் கண்டிருந்தது. நாங்கள் மேற்படி ரூ. 4-13-0 அனுப்பினால் எங்களுக்கு வட்டிகிடைக்காதென்று ரூ. 5



அனுப்பி அதற்கு வட்டி எட்டணா பெற்றுக்கொண்டோம், எங்கள் மூன்றணாவுக்கு மூன்றணாவும் கிடைத்தது. அதோடுவெட்டியும் எட்டணா கிடைத்தது. கடந்த வருஷத்திலும் கனம் ரிஜிஸ்டரார் அனுப்பிய ஆடிட் உத்திரவில் எங்கள் சங்கத்தின் க்ஷேமநிதிக்காக மதராஸ் சென்ட்ரல் பாங்காரும் காஞ்சிவரம் டிஸ்டிரிக்ட் பாங்காரும் க்ஷேமநிதி வட்டியில் பற்று வரவு செய்துக்கொண்ட தொகைபோக மிகுதி தொகை ரூ. 103-10-5 என்றும், அதை க்ஷேமநிதிக்காக கவர்ன்மெண்டு யுத்த பண்டுக்காக போஸ்டாபீஸில் செலுத்தி காஷ் ஸர்டிபிகேட்டுகள் வாங்கிக்கொள்ள வேண்டிய தென்றும் உத்தரவு செய்தார். நாங்களோ மேற்படி தொகை செலுத்தினால் 5 வருஷங்களுக்கு ரூ. 150 வராதென்றும், மேற்படி தொகையுடன் ரூ. 1_-9-7 சேர்ந்து ரூ. 116-4.0 அனுப்பினால் ரூ. 150 பெற்றுக்கொள்ளலாமென்றும் அந்தப்படிக்கே செலுத்தி போஸ்டாபீஸ் 150 ரூ. காஷ் ஸர்டிபிகேட்டுக்கள் பெற்றுக்கொண்டோம்.

எங்கள் சங்கத்தைபற்றி கனம் ரிஜிஸ்ட்ரார் அவர்களும் அஸிஸ்டெண்டு ரிஜஸ்ட்ரார் அவர்களும் புகழ்ந்துரைத்த வாக்கியங்களில் கண்ணுக் கழகிய மணிமாலைகளைவிட செவிக்கினிய புகழ்மாலையாக உங்களை மகிழ்விக்கும் ஒரு வாக்கியம் மாத்திரம் சொல்லுகிறேன். இந்த சங்கம் திருப்திகரமாய் வேலை செய்திருக்கிறதென்று சொன்னார். கனவான்களே! மேற்குறித்த விஷயங்களைமாத்திரம் வெளிப்படுத்த நான் இங்கு வரவில்லை. இவைகளெல்லாம் கனம் ரிஜிஸ்ட்ரார் அவர்களின் வருஷாந்திர ரிபோர்ட்டுகளினாலும் தங்களுக்குத்தெரியவரும். சங்கங்கள் இருக்கவேண்டிய நிலைமையை பற்றியும் அவைகளுக்கு ஏற்பட்ட கஷ்டத்தைப் பற்றியுமே தெரிவிக்க நான் இங்கு வந்தேன். முதலாவது, கனம் ரிஜிஸ்டரார் அவர்களின் போதனையின்படி எங்கள் சங்கத்தில் நாங்கள் சில ஏற்பாடுகளை செய்துக்கொண்டோம்.

ஒரு சங்கம் சரியான சங்கமென்று சொல்லவேண்டுமானால் அதற்கு மூன்று குணங்கள் இருக்கவேண்டும். முதலாவது அந்த சங்கத்தில் அந்த கிராமத்தில் இருக்கப்பட்ட யாவரும் மெம்பர்களாய் சேர்ந்திருக்க வேண்டும். இரண்டாவது சங்கமெம்பர்களை இதரவிடங்களில் கடன்கள் படவொட்டாமல் ஜாக்கிரதையாய் கிரமமான செலவுகளுக்கெல்லாம் அவர்களுக்கு வேண்டிய போதெல்லாம் சங்கத்திலேயே கடன்கள்கொடுக்கவேண்டும். மூன்றாவது சங்கத்தின் லாவாதேவிக்குத் தேவையான பணமெல்லாம் அந்த கிராமத்திலேயே சம்பாதித்துக் கொள்ள வேண்டியது.

ஒரு மனிதன் ஐக்கிய நாணயச்சங்க மெம்பரென்றால் அவனுக்கும் மூன்று குணங்கள் இருக்கவேண்டும். முதலாவது, தனக்குப் பணந்தே

வையானால் சங்கத்திலேயே கடன்வாங்கிக்கொள்ள வேண்டியது. இதர விடங்களில் கடன்படக்கூடாது. இரண்டாவது தனக்குப் பணம் மீதியானால் சங்கத்திலேயே கடனாகவோ டிபாஸிட்டாகவோ கட்டிவைக்க வேண்டும். இதர விடங்களில் கடன்கள் கொடுக்கக்கூடாது. மூன்றாவது தனக்கும் பிறருக்கும் ஏதாவது சச்சரவுகள் நேரிட்டால் தன் சங்கத்து பஞ்சாயித்து மூலமாகவே தீர்த்துக்கொள்ள வேண்டியது. மேற்படி சங்கத்திற்கு இருக்கவேண்டிய மூன்று குணங்களும் மேற்படி மெம்பருக்கு இருக்கவேண்டிய மூன்று குணங்களும் எங்கள் சங்கத்திலும் மெம்பர்களிடத்திலும் இருக்கும்படியாய் கடவுள் தயவால் நிறை வேற்றி விட்டோம்.

எங்கள் சங்கம் லோகல் யூனியன்களுக்காகவும் டிஸ்டிரிக்ட் பாங்கிங்கு யூனியனுக்காகவும் இதுவரையில் செலுத்தியிருக்கும் தொகை சற்றேறக்குறைய ரூ. 200. இதில் ரூ. 40 பங்குத் தொகைக்காகச் செலுத்தியது. மிகுதி ரூபாய் யாவற்றும் மேல் விசாரணை செய்ததற்காக செலுத்தியது. கனவான்களே! ஒரு விஷயத்தை யோசியுங்கள், எங்கள் சங்கத்திற்காக வருஷம் 1 க்கு ரூ. 20 விழுக்காடு 5 வருஷங்களுக்கும் ரூ. 43-2-3 கடந்த வருஷத்திற்கும் யூனியனுக்காக வரிவாங்கிக்கொண்டார்கள். நமது தேசத்தின் மற்ற எந்த தொழிலுக்காவது இவ்வளவு வரி விதித்திருக்கிறார்களா? கவனியுங்கள். இந்த அநியாய வரிசெலுத்த எங்களால் முடியவே முடியாதென்று கடந்த 17—12—17ல் கூடிய எங்கள் மஹாசபையார் தீர்மானித்துக்கொண்டார்கள். இந்த வரியின் அநியாயத்தை பற்றியும் இவ்வளவு வரிவிதிக்காமலே சங்கங்களை ஒழுங்காய் பரிபாலிக்கலாமென்கிறதற்குவுண்டாகிய நியாயங்களையும் பின்னால் தீர்மானங்கள் நடக்கும்போது சொல்லிக் கொள்ளுகிறேன்.

கடைசியில், இந்த மொலகூர் கிராம நாணயச்சங்கமானது எங்கள் கிராமத்தில் இந்தசங்கத்தை ஸ்தாபித்துக்கொடுத்த ஸ்ரீமான் ராய்சாஹேப் ஸி. அருணைய நாயுடு அவர்களுக்கும் நமது சங்கங்களுக்கும் யாதொரு கோணலில்லாமல் பாதுகாத்து வருகிற கனம் பொருந்திய ரிஜிஸ்ட்ரார், அஸிஸ்டெண்டு ரிஜிஸ்ரார் அவர்களுக்கும் நமது சங்கங்களின் பிதாவாகிய இதோ அக்கிராசனத்தில் வீற்றிக்கும் ஆனரபில் திவான் பஹதூர் பி. ராஜகோபாலாசாரியார் அவர்களுக்கும் நமது காருண்ய கவர்ன்மெண்டாரவர்களுக்கும் மிகவும் வந்தனம் சொல்லுகிறது.

# அநுபந்தம்

## ஆறுவது மதராஸ் ப்ரோவின்ஷியல் கோவாபரேடிவ் கான்பரென்ஸ் வரவேற்புக் கமிட்டி மெம்பர்கள்.

1 விஜயநகரம் ராஜா.
2 மங்கநல்லூர், ராய் சாஹேப் எ. ராமராவு.
3 கோயமுத்தூர் ராய் சாஹேப் டி. ஏ. ராமலிங்க செட்டியார்.
4 ஆனரபில் எஸ். ஆர். எம். எம். எ. அண்ணாமலை செட்டியார்.
5 ஆர். கே. பிரசன்ன வெங்கடேசராவு.
6 மிஸ்ஸஸ் ஒயிட் ஹெட் அம்மாள்.
7 டி. ஆர். வெங்கட்டராம சாஸ்திரியார்.
8 எம். அனந்த ராவு.
9 ஆனரபில் ராவ் பஹதூர் எம். ராமச்சந்திர ராவு.
10 கொல்லங்கோடு, ராஜா வாசுதேவராஜா, ஸி. ஐ. இ.
11 ராய் சாஹேப் ஸி. அருணைய நாயுடு.
12 ராவ் பஹதூர் எம். ஸி. கிருஷ்ணவர்மராஜா.
13 செல்லப்பள்ளி குமார ராஜா.
14 ஸ்ரீவில்லிபுத்தூர் ஏ. ஸ்ரீனிவாசாசாரியார்.
15 ராய் சாஹேப் ஏ. சேதுராம அய்யர்.
16 ஸி. என். ஸ்ரீனிவாச அய்யங்கார், ஹோசூர் ரிமௌண்டு டிபோ.
17 விட்டல் வி. ராஜலக்ஷ்நாத் ஸ்வாமிஜி.
18 திவான் பகதூர் ஏ. கிருஷ்ணசாமி அய்யங்கார்.
19 ஆனரபில் ஏ. சூரியநாராயண ராவ்.
20 ஓ. எம். வெங்கடநாத அய்யங்கார்.
21 பாப்பனூடு ஜமீன்தார்.
22 கே. வி. சேஷய்யங்கார்.
23 எஸ். ஸத்யமூர்த்தி அய்யர்.
24 பி. எஸ். வெங்குசாமி அய்யர்.
25 கள்ளிப்பட்டு கே. வி. கிருஷ்ணசாமி நாயகர்.
26 பாளையங்கோட்டை என். கிருஷ்ணசாமிராவு.
27 என். பட்டாபி ராமராவு.
28 எம். எஸ். சேஷாசல அய்யர்.
29 எம். ஷிவராவ்.
30 திவான் பஹதூர் எல். ஏ. கோவிந்தராகவ அய்யர்.
31 கே. வி. ராகவாசாரி.
32 கம்பைநல்லூர் கே. சேஷகிரிராவு.
33 கும்பகோணம் வி. ஆர். ஸ்ரீனிவாச அய்யங்கார்.
34 வடமலைபுரம் ஆர். ஆனந்த ராவு.
35 ராவ் பஹதூர் டி. எஸ் பாலகிருஷ்ண அய்யர்.
36 வி. எஸ். ராமசாமி சாஸ்திரி.
37 ராவ் பஹதூர் கே. பி ராமநாத அய்யர்.

## II. சங்கங்களின் நன்கொடை.

| ந. | ஜில்லா. | சொஸைடியின் நம்பரும் பெயரும். | | தொகை. |
|---|---|---|---|---|
| | | | | ரூ. |
| 1 | சென்னை | 15 | திருவல்லிக்கேணி அர்பன் கோ. ஆப். சொஸைடி | 50 |
| 2 | ,, | 18 | மதராஸ் சென்ட்ரல் அர்பன் பாங்க் ... | 50 |
| 3 | ,, | 1031 | மதராஸ் போஸ்டு அண்டு டெலிகிராப், கோவாபரேடிவ் சொஸைடி ... | 9 |
| 4 | ,, | 900 | மதராஸ் ஸிடி கோவாபரேடிவ் பாங்க் ... | 5 |
| 5 | செங்கல்பட்டு | 381 | சின்னக்காஞ்சீவரம் அர்பன் பாங்க் ... | 5 |
| 6 | ,, | 922 | மாம்பலம் கோவாபரேடிவ் சொஸைடி ... | 5 |
| 7 | ,, | 468 | படலம் ,, ... | 2 |
| 8 | ,, | 1560 | செங்கல்பட்டு ஜில்லா பாங்கிங் யூனியன் ... | 5 |
| 9 | ,, | 3 | பெரிய காஞ்சீவரம் டவுன் பாங்க் ... | 5 |
| 10 | ,, | 1580 | திருவள்ளூர் கோவாபரேடிவ் யூனியன் ... | 3 |
| 11 | ,, | 628 | ஈக்காடு கோவாபரேடிவ் சொஸைடி ... | 2 |
| 12 | ,, | 1 | திரூர் கோவாபரேடிவ் சொஸைடி ... | 1 |
| 13 | ,, | 623 | திருவள்ளூர் அர்பன் கோவாபரேடிவ் சொஸைடி | 5 |
| 14 | ,, | 192 | மதுராந்தகம் ,, ... | 1 |
| 15 | ,, | 989 | மதுராந்தகம் பாக்கம் ,, ... | 1 |
| 16 | ,, | 1599 | சாலவாக்கம் கோவாபரேடிவ் யூனியன் ... | 3 |
| 17 | ,, | 1005 | புல்லரம்பாக்கம் கோவாபரேடிவ் சொஸைடி ... | 2 |
| 18 | ,, | 623 | திருவள்ளூர் அர்பன் ஸ்டோர்ஸ் ... | 1 |
| 19 | ,, | 375 | செங்கல்பட்டு அர்பன் கோ. ஆப். சொஸைடி ... | 3 |
| 20 | தஞ்சாவூர் | 27 | மன்னார்குடி அர்பன் பாங்க் ... | 2 |
| 21 | ,, | 1023 | தஞ்சாவூர் ஜில்லா சென்ட்ரல் பாங்க் ... | 5 |
| 22 | ,, | 8 | நிக்கல்ஸன் டவுன் பாங்க் ... | 5 |
| 23 | ,, | 378 | ஸ்ரீகமலாம்பிகா அர்பன் பாங்க் ... | 3 |
| 24 | திருச்சினுப்பள்ளி | 30 | லால்குடி ரூரல் பாங்க் ... | 1 |
| 25 | ,, | 178 | திருச்சினுபபள்ளி ஜில்லாசென்ட்ரல் பாங்க் ... | 10 |
| 26 | ,, | ... | வரதம்பேட்டை செண்ட் மேரிஸி கோ.ஆப்.சொ. | 3 |
| 27 | ,, | 1050 | திருச்சினுப்பள்ளி கோ. ஆப். க்ரெடிட்பாங்க்... | 7 |
| 28 | ,, | 19 | நாமக்கல் அர்பன் பாங்க் | 5 |
| 29 | மதுரை | 81 | ஒத்தக்கடை கோவாபரேடிவ் சொஸைடி ... | 3 |
| 30 | ,, | 1048 | ஊத்தங்குடி ,, ... | 3 |
| 31 | ,, | 28 | மதுரை அர்பன் கோவாபரேடிவ் சொஸைடி ... | 15 |
| 32 | ,, | 975 | மதுரை ராமனுதபுரம் சென்ட்ரல் பாங்க் ... | 15 |
| 33 | ராமனுதபுர | 950 | சங்கரலிங்கபுரம் கோவாபரேவ் சொஸைடி ... | 1 |
| 34 | ,, | 995 | வத்திராப்பு ,, ... | 1 |



| ந. | ஜில்லா. | சொஸைடியின் நெம்பரும், பெயரும். | | தொகை. |
|---|---|---|---|---|
| | | | | ரூ. |
| 35 | ராமனுதபுரம் | 1077 | செங்கமல நாச்சியார்புரம் கோ.ஆப்.சொஸைடி | 1 |
| 36 | ,, | 292 | திருத்தாங்கல் ,, ... | 1 |
| 37 | ,, | 147 | வடமலைபுரம் ,, ... | 1 |
| 38 | ,, | 1336 | சிவகங்கை ,, ... | 2 |
| 39 | சேலம் | 115 | போட்டிபுரம் ,, ... | 5 |
| 40 | ,, | 1709 | கமலாபுரம் ... | 2 |
| 41 | ,, | 601 | மத்திகிரி அர்பன் பாங்க் ... | 5 |
| 42 | ,, | 151 | சேலம் ஜில்லா அர்பன் பாங்க் ... | 15 |
| 43 | ,, | 25 | சேலம் அர்பன் கோ. ஆப். சொஸைடி ... | 10 |
| 44 | ,, | 976 | ஓமலூர் செட்டிப்பட்டி ,, ... | 1 |
| 45 | ,, | 165 | நெய்க்காரப்பட்டி ,, ... | 2 |
| 46 | ,, | 169 | துளசம்பட்டி ,, ... | 2 |
| 47 | ,, | 290 | மாரமங்கலம் ,, ... | 2 |
| 48 | ,, | 289 | மனத்தாள் ,, ... | 2 |
| 49 | ,, | 291 | அமரகுண்டி ,, ... | 2 |
| 50 | ,, | 1261 | கண்டசாரப்பட்டி ,, ... | 2 |
| 51 | ,, | 327 | ம. நல்லகவுண்டன்பட்டி ,, ... | 2 |
| 52 | ,, | 1259 | உப்பாரப்பட்டி ,, ... | 1 |
| 53 | ,, | 1257 | பெரியேரிப்பட்டி ,, ... | 1 |
| 54 | ,, | 290 | டி. மாரமங்கலம் ,, ... | 1 |
| 55 | ,, | 777 | கங்கவல்லி ,, ... | 2 |
| 56 | ,, | 116 | ஜலகண்டபுரம் ,, ... | 2 |
| 57 | ,, | 1694 | ஆவடத்தூர் ,, ... | 1 |
| 58 | ,, | 1689 | செலாவடி ,, ... | 1 |
| 59 | ,, | ... | கரிப்பட்டி ,, ... | 1 |
| 60 | கோயமுத்தூர் | 1413 | திருப்பூர் கோ ஆப் ரேடிவ் அர்பன் பாங்க் ... | 5 |
| 61 | ,, | 1674 | காரமடை வேதவல்லி கோ. ஆப். சொ. ... | 1 |
| 62 | ,, | 427 | கோயமுத்தூர் டிஸ்ட்ரிக்ட் அர்பன் பாங்க் ... | 25 |
| 63 | ,, | 1081 | ,, கோவாபரேடிவ் பில்டிங் சொஸைடி. | 5 |
| 64 | ,, | 26 | ,, ,, ஸ்டோர்ஸ் ... | 5 |
| 65 | ,, | 1348 | குரும்பபாளையம் கோவாபரேடிவ்சொஸைடி... | 2 |
| 66 | வடஆற்காடு | 570 | திருவண்ணமலை ,, ... | 3 |
| 67 | ,, | ... | தண்டலம் நாவலூர் ,, ... | 1 |
| 68 | ,, | 1187 | வெள்ளநாயகனேரி ,, ... | 1 |
| 69 | தென் ஆற்காடு | 1055 | செல்லன் குப்பம் ,, ... | 1 |
| 70 | ,, | 46 | திண்டிவனம் அர்பன் பாங்க் ... | 5 |
| 71 | ,, | 1449 | கண்டமனடி கோவாபரேடிவ் சொஸைடி ... | 1 |

| நெ. | ஜில்லா. | சொஸைடியின் நெம்பரும், பெயரும். | தொகை. ரூ. |
|---|---|---|---|
| 72 | அனந்தபூர் | 502 ஹிந்துபூர் கோ. ஆப். சொஸைடி... | 5 |
| 73 | ,, | 1562 குத்திலண்டன் மிஷன் ,, பாங்க். | 1 |
| 74 | ,, | 371 பெனுகொண்டா அர்பன் ,, ... | 5 |
| 75 | ,, | ... பெனுகொண்டா டிவிஷன் ,, யூனியன் | 5 |
| 76 | ,, | 201 நரசாபுரம் கோ. ஆப். சொஸைடி ... | 3 |
| 77 | குண்டூர். | 530 குண்டூர் டிஸ்ரிக்ட் பாங்கிங் யூனியன் ... | 5 |
| 78 | ,, | 393 சின்னகட்லவர்ரு கோ. ஆப். சொஸைடி... | 1 |
| 79 | கிருஷ்ணா. | 1422 கிருஷ்ணா ஜில்லா கோ ஆப் ரேடிவ் பாங்க் ... | 1 |
| 80 | திருநெல்வேலி. | 1010 பாளையங்கோட்டை ,, ... | 5 |
| 81 | தென்கன்னடம். | 1113 தென்கன்னடம் சென்ட்ரல் பாங்க் ... | 5 |
| 82 | ,, | 181 புத்தூர் கோ. ஆப். சொஸைடி ... | 2 |
| 83 | ,, | 960 பைண்டூர் ,, ... | 3 |
| 84 | சித்தூர். | 59 சித்தூர் டவுன் பாங்க் ... | 5 |
| 85 | மலையாளம். | 937 மங்காடா கோ. ஆப். சொஸைடி ... | 3 |
| 86 | ,, | 784 வேலஞ்சேரி ,, ... | 2 |
| 87 | ,, | 1534 கன்னனூர் அர்பன் ... | 1 |
| 88 | ,, | 1334 புழ்தி ,, ... | 1 |
| 89 | நெல்லூர். | 24 கூடூர் ,, ... | 4 |
| 90 | கஞ்சம். | ... கஞ்சம் ஜில்லா பாங்கிங் யூனியன் ... | 5 |
| 91 | கர்னூல். | 109 கர்னூல் அர்பன் பாங்க் ... | 5 |

## III. டெலிகேட்டுகளின் ஜாப்தா.

| நெ. | ஜில்லா. | சொஸைடியின் நெம்பரும் பெயரும். | டெலிகேட்டின் பெயர். |
|---|---|---|---|
| 1 | அனந்தபூர். | 201 நரசாபுரம் கோ. ஆப். சொ. | என். பீமஸேனராவு |
| 2 | ,, | 306 கங்காவரம் ,, | பிரஸிடெண்டு |
| 3 | ,, | 60 உரவகொண்டா ,, | ஷை |
| 4 | ,, | 47 தர்மாவரம் ,, | எச். சங்கரராவ் |
| 5 | செங்கல்பட். | 468 படாளம் ,, | பிரஸிடெண்டு |
| 6 | ,, | 437 சோமங்கலம் ,, | ஷை |
| 7 | ,, | 679 சேலை ,, | டி. முருகேச முதலியார் |
| 8 | ,, | 1282 கீளகரணை ,, | ஆர். ஜே. ஜீரங்கநாயுடு |
| 9 | ,, | 685 பழைய சிவரம் ,, | எஸ். குப்புஸாமி ஐயங்கார் |
| 10 | ,, | 854 இரும் கரும்பாக்கம் ,, | எம். சாமிநாத முதலியார் |
| 11 | ,, | 460 தண்ணீர்க்குளம் ,, | ஜி. சேஷாத்ரி ஐயங்கார் |
| 12 | ,, | 676 திருவெங்கானை ,, | டி. பிரஸன்ன ராகவாசாரி |
| 13 | ,, | 1669 சிங்கப்பெருமாள்கோயில் | வி. கோவிந்தராகவலு நாயுடு |
| 14 | ,, | 1 திரூர் ,, | கே. ராஜரத்தின நாயுடு |
| 15 | ,, | 91 திருப்பாண்டியூர் ,, | பி. பாபய்ய நாயுடு |
| 16 | ,, | 375 செங்கல்பட்டு அர். ,, | பி. ராஜகோபாலாச்சாரி |
| 17 | ,, | ஷை ஷை | பி. பி. கிருஷ்ணமாசாரி |
| 18 | ,, | ஷை ஷை | டி. சிவக்கொழுந்து முதலியார் |
| 19 | ,, | 1668 பழைய பல்லாவரம் ,, | எம். கிருஷ்ணஸாமி அய்யர் |
| 20 | ,, | 613 முக்குந்தகிரி ,, | எம். கே. சக்கரவர்த்தி அய்யங். |
| 21 | ,, | 485 போரூர் ,, | பி. ஷண்முக முதலியார் |
| 22 | ,, | 767 திருப்பாசூர் ,, | ஏ. எஸ். டிப்புஸாகிப் |
| 23 | ,, | 1578 செங்கல்பட்டு அகரம் ,, | எம். ஸ்ரீராமஐயங்கார் |
| 24 | ,, | 334 ஆலப்பாக்கம் ,, | எஸ். இ. ஸ்ரீனிவாச ஐயங்கார் |
| 25 | ,, | 97 அக்கமாபுரம் ,, | சி. கோபால் பிள்ளை |
| 26 | ,, | 343 கூவம் ,, | திருப்பாதகுருக்கள் |
| 27 | ,, | 1626 திருமாக்குடல் ,, | மாசிலாமணி முதலியார் |
| 28 | ,, | 748 சிட்டனக்காலூர் ,, | நடனமூர்த்தி முதலியார் |
| 29 | ,, | 139 குண்டுபெரும்பேடு | எஸ். தாமஸ் நாயுடு |
| 30 | ,, | 132 மதுராந்தகம் பாங்கி | டி. ராகவாசாரி |
| 31 | ,, | ஷை ஷை | டி. திருவேங்கடாசாரி |
| 32 | ,, | ஷை கோ. ஆப். யூ. | என். கே. கணபதி முதலியார் |
| 33 | ,, | 3 காஞ்சீவரம் டவுன் பாங்க் | ஏ. வி. சுப்பிரமணிய அய்யர் |
| 34 | ,, | ஷை ஷை | சி. ரத்ன முதலியார் |
| 35 | ,, | 11 நென்மேலி கோ. ஆப். சொ | கோபாலசாமி அய்யர் |
| 36 | ,, | 248 அருங்குணம் ,, | வடிவேலு முதலியார் |
| 37 | ,, | 892 எகாத்தூர் ,, | கைலாச நாயகர் |
| 38 | ,, | 226 களத்தூர் ,, | கே. ஏ. தேசிகாசாரி |
| 39 | ,, | 1134 சித்தளபாக்கம் ,, | பொன்னுரங்கமுதலியார் |

| நெம்பர். | ஜில்லா. | சொஸைடியார் நம்பரும், பெயரும். | டெலிகேட்டின் பெயர். |
|---|---|---|---|
| 40 | செங்கல்பட். | 95 வளர்புரம் கோ.ஆப்.சொ | எம். பாப்பையா நாயுடு |
| 41 | ,, | 99 நரசிங்கபுரம் ,, | வெங்கடாசல முதலியார் |
| 42 | ,, | 225 சாலவாக்கம் ,, | எஸ். மாணிக்க முதலியார் |
| 43 | ,, | 179 ஒரகடம் ,, | கோவிந்தாசாரி |
| 44 | ,, | 628 ஈக்காடு ,, | துரைசாமி முதலியார் |
| 45 | ,, | 313 பள்ளியகரம் ,, | கே. ராமசந்திர முதலியார் |
| 46 | ,, | 1253 செம்பியம் ,, | டி. அப்பாராவ் நாயுடு |
| 47 | ,, | 92 மொலசூர் ,, | பி. சின்னையா நாயுடு |
| 48 | ,, | 453 ஒழுகரை ,, | சி. சோணாஜலம் |
| 49 | ,, | 1150 கேசவநல்லத்தூர் ,, | சி. சுப்பிரமணிய அய்யர் |
| 50 | ,, | 541 இருளஞ்சேரி ,, | டி. கணபதி முதலியர் |
| 51 | ,, | 632 திருமுஷி , | பி. கிருஷ்ண மூர்த்திராவு |
| 52 | ,, | 16?6 நட்டப்பேட்டை ,, | என். ஏகாம்பர முதலியார். |
| 53 | ,, | 1559 சாலவாக்கம் கோ. ஆப். யூ. | ஏ. வி. துரைசாமி ஐயர் |
| 54 | ,, | 1646 பாபரம்பாக்கம்சொஸைடி | இ. சுப்பிரமணி நாயகர் |
| 55 | ,, | 1278 நாயபாக்கம் ,, | ஏ. என். ராகவலுநாயுடு |
| 56 | ,, | 1277 மானல்லூர் ,, | விரப்ப செட்டி |
| 57 | ,, | 894 கொன்னூர் ,, | சி. அருணசல முதலியார் |
| 58 | ,, | 623 திருவள்ளூர் அர். பாங்க் | கே. மாதவராவு |
| 59 | ,, | 581 விடையூர் சொஸைடி | சி. கிருஷ்ணசாமி |
| 60 | ,, | இடையர்பாக்கம் | ஸெக்ரிடெரி |
| 61 | ,, | 187 கட்டியம்பந்தல் ,, | டி. சபாபதி முதலியார் |
| 62 | ,, | 406 மாம்புதூர் ,, | என். பெத்த செட்டியார் |
| 63 | ,, | 2 கிளச்சேரி விவசாய பாங்க் | சி. சவ்ரையா நாயுடு |
| 64 | ,, | 1560 செங்கல்பட்டு ஜில்லா பாங்கின் யூனியன் | W. ஜீவரத்னம் பிள்ளை. |
| 65 | ,, | 989 மதுராந்தகம் பாக்கம் கோ. ஆ. சொஸைடி | எம். அங்கிரசாமி நாயுடு |
| 66 | ,, | 5?5 ஸ்ரீபெரும்புதூர் ,, | என். கிருஷ்ணராவு |
| 67 | ,, | 1577 பிஞ்சிவாக்கம் ,, | கண்ணய்ய பிள்ளை |
| 68 | ,, | 370 புதுப்பட்டி ,, | கே. கிருஷ்ணசாமி பிள்ளை. |
| 69 | ,, | 539 பெரம்பாக்கம் ,, | மணவாள முதலியார். |
| 70 | ,, | 677 எச்சூர் ,, | என். ஸ்வாமி அய்யர் |
| 71 | ,, | 744 பெரும்பேர் ,, | ஸெக்ரிடேரி |
| 72 | ,, | 381 உத்திரமேரூர் யூனியன் | ஓ.எம். வெங்கடநாத அய்யங்கார் |
| 73 | ,, | 41 உத்திரமேரூர் ,, பாங்க் | ஏ. ஹனுமந்தராவு. |
| 74 | ,, | 1625 ரெட்டிபட்டி ,, சொ. | என். கோவிந்த செட்டி. |
| 75 | ,, | 2196 மனப்பாக்கம் ,, | எம். சந்தசாமி. |
| 76 | ,, | 37 ஜமீன் நுங்கம்பாக்கம் ,, | சுப்பராயலு நாயுடு |
| 77 | ,, | 2012 பிள்ளைப்பாளையம் ,, | எம். தேவசிகாமணி முதலியார் |
| 78 | ,, | 115 போட்டிபுரம் | கே. என். விஜயராகவையர். |



| நெ. | ஜில்லா. | சொஸைடியின் நெம்பரும் பெயரும். | டெலிகேட்டின் பெயர். |
|---|---|---|---|
| 79 | சேலம். | 115 போட்டிபுரம் கோ. ஆப். சொஸைடி | கே. சுந்தரராஜ அய்யங்கார. |
| 89 | ,, | ராமகிருஷ்ணம்பாடி ,, | பத்பனுபய்யர். |
| 81 | ,, | 165 செய்க்காரப்பட்டி ,, | என். குப்புசாமி அய்யர் |
| 82 | ,, | 254 பொன்னேரி ,, | என். சுப்பராவு. |
| 83 | ,, | 151 சேலம் ஜில்லா அர்பன் பாங்க் ... | பி. எல். ராமசாமி நாயகர். |
| 84 | ,, | ,, ,, ... | சி. வி. ராமாராவு. |
| 85 | ,, | ,, ,, ... | எஸ். கே. சடகோப முதலியார் |
| 86 | ,, | 169 துளசம்பட்டி கோ. ஆப். | டி. சி. இருஷ்ணசாமி அய்யர். |
| 87 | ,, | 1709 கமலாபுரம் ஷை சொ. | கே. சீதாராமய்யர். |
| 88 | ,, | ,, ,, ... | கே. ஆர். ராஜகோபாலய்யர். |
| 89 | ,, | 777 நாங்கவல்லி ,, ... | தியாகராஜ செட்டி. |
| 90 | ,, | 43 பாகல்பட்டி ,, ... | கே. சித்தய்ய பண்டாரம். |
| 91 | ,, | 116 ஜலகண்டபுரம் ,, ... | வெங்கடாசல அய்யர். |
| 92 | ,, | 125 கம்பைநல்லூர் கோ. ஆப். | டி. ரூஜாராவு. |
| 93 | ,, | 125 ,, ஷை யூ. சொ. | சி. பி. சுந்தரராவு. |
| 94 | ,, | 1689 எல்லாவடி ,, ... | எம். அர்த்தநாரி ஐயர். |
| 95 | ,, | 1691 ஆவடத்தூர் ,, ... | ஏ. கே. ரங்கசாமி செட்டி. |
| 96 | ,, | 25 சேலம் அர்பன் ,, ... | வி. இருஷ்ணய்ய செட்டி. |
| 97 | ,, | ,, ,, | எஸ். எல்லப்ப செட்டியார் |
| 98 | ராமநாதபுரம் | 1337 ஸ்ரீ வில்லிபுத்தூர் ,, ... | ஏ. ஸ்ரீனிவாசா சாரியார். |
| 99 | ,, | 1077 செங்கமலநாச்சியார் புரம் ஷை சொஸைடி ... | ரங்கசாமி நாயுடு |
| 100 | ,, | 292 திருத்தங்கல் ,, ... | வேதமூர்த்தி முதலியார். |
| 101 | தென் ஆற்காடு. | 148 கள்ளக்குறிச்சி ,, ... | தியாகபிள்ளை. |
| 102 | ,, | 1487 வெங்கனூர் ,, ... | திருமால் கவுண்டர். |
| 103 | ,, | 71 முடியனூர் ,, ... | குழந்தைவேலு முதலியர். |
| 104 | ,, | 717 ஓலக்கூர் ,, ... | ஸெக்ரிடேரி |
| 105 | சித்தூர் ஜில்லா. | 1233 பாகசாலா ,, ... | கே. இருஷ்ணராஜு. |
| 106 | ,, | 59 ஜமீன் சித்தூர் ,, | குப்புசாமி ஆசாரி. |
| 107 | ,, | 624 மருதவல்லிபுரம் ,, ... | பி. நாராயணசாமி ரெட்டி. |
| 108 | ,, | 1173 ராஜாரத்னபுரம் ,, ... | வீராசாமி ரெட்டி. |
| 109 | ,, | 59 சித்தூர் அர்பன் ,, ... | பி. சி. ராகவய்யர். |
| 110 | ,, | ,, ,, ... | எம். வி. இருஷ்ணசாமி அய்யர். |
| 111 | கோயமுத்தூர். | 597 ஈரோடு அர்பன் பாங்க். | எஸ். டி. வெங்கட்ராமய்யர். |
| 112 | ,, | ஈரோடு பெருந்துறை கோ. ஆப். யூனியன் | எஸ். ஆர். ரங்கசாமி அய்யங்கார் |
| 113 | ,, | 1674 காரமடை வேதவல்லி சொஸைடி ... | வி. என். கோபாலகிருஷ்ணய்யர் |
| 114 | ,, | 427 கோயமுத்தூர் ஜில்லா அர்பன் பாங்க் | சி. என். இருஷ்ணசாமி ஐயர். |
| 115 | ,, | ,, ,, ... | ராவ் பகதூர் டி. எஸ். பாலகிருஷ்ண அய்யர். |

| நெ. | ஜில்லா. | சொஸைடியின் நெம்பரும் பெயரும். | டெலிகேட்டின் பெயர். |
| --- | --- | --- | --- |
| 116 | கோயமுத்தூர். | 988 விஜயமங்கலம் கோ. ஆப். யூனியன் ... | கே. எம். சின்னரங்கய்ய கவுண்டர் |
| 117 | ,, | 184 கம்புலியம்பட்டி கோ வாப்டேவ் சொஸைடி ... | கே. எம். ரங்கய்யா கவுண்டர் |
| 118 | ,, | 409 மேட்டுப்புதூர் ,, ... | எம். என். அருணாசல கவுண்டர் |
| 119 | ,, | 1170 நடுப்பட்டி ,, ... | வையாபுரி கவுண்டர் |
| 120 | ,, | 344 சுல்லிபாளயம் ,, ... | கிருஷ்ணசாமி கவுண்டர். |
| 121 | ,, | 423 துடுப்பட்டி ,, ... | முத்துமாணிக்க முதலியார் |
| 122 | ,, | 1308 செட்டிப்பாளயம்,, ... | மாமுண்டி சுப்பய்யர் |
| 123 | ,, | 26 கோயமுத்தூர் அர்பன் பாங்க் & ஸ்டோர்ஸ் ... | எ. எஸ். வைத்தியநாதய்யர் |
| 124 | ,, | 1081 கோமுத்தூர் கோ. ஆப். பில்டிங் சொஸைடி. | ஸெக்ரிடெரி |
| 125 | ,, | 414 விருமண்டபாளையம் கோ.ஆப். சொஸைடி. | வி. எஸ். ராஜு கவுண்டர் |
| 126 | ,, | 417 வடமுகம்காங்கயம் பாளையம்சொஸைடி. | ராமசாமி ரெட்டி |
| 127 | ,, | 665 குணம்பட்டி ,, ... | வட்மலை கவுண்டர் |
| 128 | ,, | 185 கைகோலபாளையம்,, ... | பழனிசாமி கவுண்டர் |
| 129 | ,, | 1444 கவுண்டச்சிபாளையம் சொஸைடி ... | ஆர். அருணாசல கவுண்டர் |
| 130 | திருச்சிறுப் பள்ளி. | 1050 திருச்சி, கோ. ஆப். சென்ட்ரல் பாங்க் ... | பி. எஸ். சுந்தரமய்யங்கார் |
| 131 | ,, | 1405 திருச்சி கோ. ஆப். ஸ.... | எஸ். அர்புதசாமி உடையார் |
| 132 | ,, | பி. திருமங்கலம் கோ. சொ.... | டி. எஸ். ராஜு அய்யர் |
| 133 | கிருஷ்ண. | 1422 கிருஷ்ணா ஜில்லா பாங்க். | வி. நாராயணராவ் |
| 134 | ,, | 1457 எல்லூர் முனிசிபல் சர்வன்ட்ஸ் கோ. ஆப். சொ. | எம். நரசிம்மம் |
| 135 | ,, | 743 வேமண்டா ,, ... | நாக பைரணவ மய்யர |
| 136 | ,, | 1796 கொருகொள்ளு ,, ... | ஜி. கிருஷ்ணய்யா |
| 137 | ,, | 1541 கைக்களூர் தாலுகா கோ. ஆப். யூனியன் | ஜி. வெங்கடாசலபதி |
| 138 | ,, | 1617 பெஜவாடா முனிசிபல் சர். கோ. ஆப். சொ.... | சி. எஸ். ராமசாமி அய்யர் |
| 139 | ,, | 1651 பெஜவாடாகவர்ன்மெண். சர்வெண்டஸ் கோ ஆப். சொ. | எஸ். ஆர். கிருஷ்ணசாமி அய்யர் |
| 140 | ,, | பெத்தபாலபரு கோ.ஆப். | சி. எஸ். சௌத[illegible]வர்ம ராஜா |
| 141 | மலையாளம். | 937 மாங்காடு [illegible]டி சொ. | ராவ் பகதூர் எம். ஸி. கிருஷ்ண |
| 142 | ,, | ,, ,, ... | எம். சி. உதயவர்ம ராஜா. |
| 143 | ,, | 1538 கள்ளிக்கோட்டை அர்பன் பாங்க் ... | வி. கிருஷ்ண மேனன் |
| 144 | பல்லாரி. | 1638 கம்ப்ளி கோ. ஆப். சொ. | கே. சுப்பா சாஸ்த்ருலு |
| 145 | ,, | பல்லாரி ,, ... | பி. பீமராவு |
| 146 | வட ஆற்காடு. | 1185 நாட்டரம்பள்ளி ,, ... | சி. சாமுண்டி கவுண்டர் |
| 147 | ,, | 1464 கணியனூர் ,, ... | சி. சீதாராமய்யர் |
| 148 | ,, | 215 சிறுகரும்பூர் ,, ... | எஸ். நடேச முதலியார் |
| 149 | ,, | 233 குடிமல்லூர் ,, ... | தியாகராஜ அய்யர் |
| 150 | ,, | அனக்காவூர் யூனியன்... | பி. நாராயண அய்யர் |



| நெ. | ஜில்லா. | சொஸைடியின் நெம்பரும் பெயரும். | டெலிகேட்டின் பெயர். |
| --- | --- | --- | --- |
| 151 | வட ஆற்காடு. | 456 வாலாஜா ஆலபாக்கம் கோ. ஆப். சொஸைடி.. | ஏ. தேப்பெருமாளையங்கார். |
| 152 | ,, | 1148 காவேரிபாக் யூனியன் ,, | ஏ. கோவிந்தாசாரி. |
| 153 | ,, | ,, ,, ,, | பூபதி ஜகநாத ராஜு. |
| 154 | ,, | 1463 வலயத்தூர் சொஸைடி. | எம். எல்லப் பிள்ளை. |
| 155 | ,, | 4 காவேரிபாக் ,, ... | ஏ. வெங்கட்டராகவாசாரி. |
| 156 | ,, | ,, ,, ... | பூபதி சக்ரவர்த்தி ராஜு. |
| 157 | ,, | 1177 பலாகுர் ,, ... | என். வெங்கடசுப்பய்யா. |
| 158 | ,, | 914 எலப்பாக்கம் ,, ... | ஐ. முனுசாமி நாயுடு. |
| 159 | ,, | 64 அனக்காவூர் ,, ... | ஏ. வி. ஏகாம்பர ஐயர். |
| 160 | ,, | ,, ,, ... | பி. பெரியதம்பி முதலியார். |
| 161 | ,, | 846 ரகுநாதசமுத்ரம் ,, ... | எஸ். ரங்கசாமி அய்யர். |
| 162 | ,, | 1290 ஆரணி கொளத்தூர் ,, ... | கே. ராமசந்திர சாஸ்திரி. |
| 163 | ,, | 1442 ரெட்டிகுப்பம் ,, ... | மாணிக்க முதலியார். |
| 164 | ,, | 235 ஒழுகூர் ,, ... | ஓ. வீரராகவ தீக்ஷதர். |
| 165 | ,, | 1462 கலவை சின்ன சமுத்ரம் | ஆர். வெங்கட சுப்பய்யா. |
| 166 | ,, | 473 சுமைதாங்கி ,, ... | எஸ். துரைசாமி பிள்ளை. |
| 167 | ,, | 1557 தேவிகுப்பம் ,, ... | ஏ. ராஜகோபால் அய்யர். |
| 168 | ,, | 1327 கட்டகாம்பாளையம் ,, ... | எம். கே. விசுவநாதய்யர். |
| 169 | ,, | 1492 விராலூர் ,, ... | வி. சேஷய்யர். |
| 170 | ,, | 1606 பாலூர் ,, ... | ஆர். நாராயணசாமி முதலியார். |
| 171 | ,, | 1326 போளூர் யூனியன் ,, ... | எம். குப்புசாமி ஐயர். |
| 172 | ,, | 1293 பெரியகரம் ,, ... | பி. சாமா அய்யர். |
| 173 | ,, | 1738 கண்ணமங்கலம் ,, ... | வி. அருணாசல அய்யர். |
| 174 | ,, | 847 கலவை ,, ... | கே. சின்னசாமி குருக்கள். |
| 175 | ,, | ,, ,, ... | கே. துரைசாமி முதலியார். |
| 176 | ,, | 1385 திருவண்ணாமலை கோ. ஆப். யூனியன் ... | எம். எஸ். சேஷாசல அய்யர். |
| 177 | ,, | திருவண்ணாமலை கல்லேரி கோ. ஆப். சொஸைடி. | ஆர். கோவிந்தபிள்ளை. |
| 178 | ,, | போளமல்லூர் ,, ... | பி. அருணாசல சாஸ்திரி. |
| 179 | ,, | 1175 இடையஞ்சேது ,, ... | எஸ். அப்பாவு. |
| 180 | ,, | வயலூர் ,, ... | எஸ். அருணாசல அய்யர். |
| 181 | ,, | 1914 வளவட்டி ,, ... | கே. முத்துகுமாரசாமி பிள்ளை. |
| 182 | ,, | 472 திருமலைச்சேரி ,, ... | டி. சீதாராம முதலியார். |
| 183 | ,, | 12 வடமாங்கூர் ,, ... | வி. ஏ. அருணாசல முதலியார் |
| 184 | ,, | ,, ,, ... | எம். பெரியதம்பி முதலியார். |
| 185 | மதராஸ். | 1874 கிறிஸ்துவ கோ. ஆப். சென்ட்ரல் பாங்க் ... | ப்ரோமுலிக் |
| 186 | ,, | மாம்பலம் சொஸைடி.. | ராவ் பகதூர். கே. பி. ராமநாத [ஐயர். |
| 187 | ,, | 15 திருவல்லிக்கேணி ,, ... | பி. எஸ். சுப்பிரமணிய அய்யர். |
| 188 | ,, | ,, ,, ... | வி. எஸ். வெங்கட்டராமய்யா. |
| 189 | ,, | ,, ,, ... | எஸ். சிவராமய்யர். |
| 190 | ,, | ,, ,, ... | வி. சுப்பிரமணிய அய்யர். |
| 191 | ,, | ,, ,, ... | சத்தியமூர்த்தி அய்யர். |
| 192 | ,, | 900 மதராஸ் லேடி பாங்க் ... | என். எஸ். சங்கரன். |

| | ஜில்லா. | சொஸைடியின் நெம்பரும் பெயரும். | டெலிகேட்டின் பெயர். |
|---|---|---|---|
| 193 | மதராஸ். | 1361 மதராஸ் எலிமெண்டரி டீசர்ஸ் சொஸைடி ... | சி. எஸ். ராமஸ்வாமி அய்யர். |
| 194 | ,, | 1636 பெரம்பூர் காப்ளர்ஸ் ... | ஆதிமூலம். |
| 195 | ,, | 1130 மதராஸ் ப்ரொவின்ஷியல் கோ. யூனியன் ... | வி. வெங்கட சுப்பய்யா. |
| 196 | ,, | மதராஸ் போஸ்ட் அண்ட் டெலிகிராப் சொஸைடி. | பூர்ணய்யா. |
| 197 | விசாகப் பட்டணம். | 1358 விஜயநகரம் கோ. பாங்க் | எம். வெங்கடரங்கய்யா. |
| 198 | நீலகிரி. | கெய்டி கோ. யூனியன்... | ராவ்சாகேப் எச். ஜே. பெல்லி [கௌடர். |
| 199 | ,, | ஹொப்பதல்வி கோ. ஆப். சொஸைடி... | எச். எம். ஜவரை கௌடர். |
| 200 | ,, | 1004 தெனிலே ,, ... | டி. என். பாதே கௌடர். |
| 201 | ,, | 1119 நந்தாலா ,, ... | எம். கரிச்ச கௌடர். |
| 202 | ,, | குந்திகொடிமண்டு ,, ... | செரியார். |
| 203 | ,, | 2022 பாலகோலா ,, ... | பி. தாதய்யா கவுண்டர். |
| 204 | தென் கன்னடம். | 1113 தென்கன்னடம் கோ. பாங்க். | எம். அனந்த ராவ். |
| 205 | தஞ்சாவூர். | 8 நிக்கல்ஸன் டவுன் பாங்க். | டி. என். சீதாராம பிள்ளை. |
| 206 | ,, | ,, ,, ... | டி. ஆர். ஸ்ரீனிவாசய்யங்கார். |
| 207 | ,, | 9 மெலட்டூர் அக்ரிகல்சரல் பாங்க் ... | எஸ். நாராயணசாமி அய்யர். |
| 208 | ,, | 1023 தஞ்சாவூர் டிஸ்டிரிக்ட் அர்பன் பாங்க் ... | லக்ஷ்மிவராக அய்யங்கார். |
| 209 | ,, | ஆதமங்கலம் கோ. சொ. | ஆர். வெங்கட சுப்பிரமணியம். |
| 210 | கடப்பை. | 1414 கடப்பா டவுன் பாங்க்... | ஜே. கிருஷ்ணமூர்த்தி ராவ். |
| 211 | குண்டூர். | குண்டூர் பாங்க் யூனியன். | எப். எல். நாராயண காரு. |
| 212 | ,, | 1452 தெனாலி தாலுகா ,, ... | எல். சங்கமேசுவர ராவு. |
| 213 | ,, | 1453 கொல்லூருபார்வதி பாங்க் | வி. பூர்ணம் காரு. |
| 214 | ,, | 393 சின்னகட்டலவர்ரு கோ. ஆப். சொஸைடி ... | பி. ஹனுமந்த ராவ். |
| 215 | ,, | 96 ஓங்கோல் அர்பன் பாங்க். | பி. எல். நாராயண ராவ். |
| 216 | மதுரை. | 28 மதுரை அர்பன் கோ. ஆப். சொஸைடி அண்ட் ஸ்டோர்ஸ் ... | பி. என். பஞ்சாபகேசய்யர். |
| 217 | ,, | 975 மதுரை ராமனுத் ஸெண்ட்ரல் பாங்க் ... | ரேய்சாகேப் கே. ராமசாமி [அய்யர். |
| 218 | ,, | ஊத்தங்குடி ,, ... | டி. காவேஸ்வரா அய்யர். |
| 219 | நெல்லூர். | 24 கூடூர் ,, ... | பி. வெங்கட்டசுப்ப ரெட்டி. |
| 220 | ,, | 983 முதுகுரு ,, ... | இ. வெங்கடசுப்ப ரெட்டி. |
| 221 | ,, | 1559 சூலூர்ப்பேட்டை ,, ... | எஸ். முனுசாமி செட்டி. |
| 222 | கர்நூல். | 478 வேல்துர்தி ,, ... | ராமராவு. |
| 223 | ,, | தேவன்கொண்டா ,, ... | பி. படே சாயபு. |
| 224 | கெஞ்சம். | கெஞ்சம்டிஸ்ரிக்ட் பாங்க் யூனியன் ... | எ. சூரியநாராயண மூர்த்தி. |
| 225 | ,, | பார்லிகிமிடி கோ. பாங்க் | கனகாசலம் பந்துலு. |
| 226 | திருநெல்வேலி. | பாளையங்கோட்டை அர்பன் சொஸைடி ... | { என். கிருஷ்ணசாமி ராவ். |
| 227 | ,, | ,, ஸ்டோர்ஸ்... | { |

1-JUL 1918

# மதராஸ் புல்லெடின் ஆப் கோவாபரேஷன்

என்னும்

# சென்னைக் கூட்டுத்தொழில் வர்த்தமானி

சம்புடம் IX] 1918ஆு மார்ச்சு மீ [இலக்கம் 9

## பத்திராதிபரின் குறிப்புகள்.

### சென்னையில் ஐக்கிய முயற்சி.

1916-17 ஆுத்திய ரிஜிஸ்ட்ரார் ரிபோர்ட்டின்பேரில் ஏற்பட்ட கவர்ன்மெண்டு உத்திரவைப் பார்வையிட்டால், சென்னை இராஜதானியில் ஐக்கிய முயற்சியானது சென்ற அநேக வருஷங்களைக் காட்டிலும் பிரஸ் தாப வருஷத்தில் அபிவிருத்தி யடைந்திருக்கின்றன வென்றே நாம் சொல்லவேண்டும். மேற்பார்வை செய்யும் யூனியன்கள் யாவரும் மேச் சம்படி 29-லிருந்து 56-க்கும் அவைகளுடன் அணைக்கப்பட்ட சங்கங் கள் 604-லிருந்து, 1,294-க்கும் அதிகரித்திருக்கின்றன. இதனால் இவை களெல்லாம் நன்றாய் வேலை செய்கின்றனவென்று இங்கு நாம் சொல்ல வில்லை. சுமார் 421 சங்கங்கள் அவ்வருஷத்தில் ரிஜிஸ்டர் செய்யப் பட்டன; ஆனால் 6 சங்கங்கள்தான் முறிவடைந்தன. எல்லாச் சங்கங் களின் தொழில் தனம் ரூ. 139 லக்ஷத்திலிருந்து ரூ. 205 லக்ஷத்திற் கும், அவைகளின் செலுத்தப்பட்ட பங்கு தனம் ரூ. 16. 12 லக்ஷத்தி லிருந்து ரூ. [illegible] லக்ஷத்திற்கும் [illegible]யர்ந்திருக்கின்றன. இந்தியா முழு வதுக்கும் ஒன்றே யெனச் சொல்லும்படியான ஓர் கோவாபரேடிவ் அச் சாபீஸ் தென் கன்[illegible]த்திலும், நிலங்களை சீர்திருத்தி ஐக்கிய முறையில் சாகுபடி செய்ய ஓர் சங்கமும் ஸ்தாபிக்கப்பட்டன. பஞ்சமர்கள் வீடு கள் கட்டிக்கொள்ள ஐக்கிய முறையில் அவர்களுக்கு காலி மனைகள் கொடுப்பிக்க ஓர் ஏற்பாடு, கவர்ன்மெண்டார் செய்திருக்கிறார்கள்.

மதராஸ் ஸெண்ட்ரல் பாங்கியானது இராஜதானி பாங்கியாகமாறின போதிலும், ஐக்கிய யியக்கத்தில் யாதொரு அபிவிருத்தியும் காணப்பட வில்லை. புதிதாக மூன்று ஸெண்ட்ரல் பாங்கிகள் வேலை தொடங்கின;

இன்னும் சில பாங்கிகள் சமீபத்தில் ஏற்படுமென நம்பப்படுகிறது. ஸாவ்காரர்களும் ஜாயிண்டு ஸ்டாக் பாங்கிகளும் போட்டா போட்டியுடன் லேவாதேவி செய்துவரும் திருநெல்வேலியில் ஓர் ஸெண்ட்ரல் பாங்கியேற்படக் கூடும் அறிகுறியை ரிபோர்ட்டானது தெரிவிக்கவில்லை. ஆனாலும் சமீபத்தில் ஓர் பங்கானது அங்கே ஸ்தாபிக்கப்பட்ட படியால், ஐக்கிய வியக்கம் இடைஞ்சல்களுள்ள அவ்விடத்திலும் விசாலிக்குமென்பதிற் சந்தேகமில்லை. திருச்சினாப்பள்ளி ஸெண்ட்ரல் பாங்கி ஒன்றுதான் சங்கங்களை மெம்பர்களாகச் சேர்க்கவில்லை. ஸெண்ட்ரல் பாங்கிகளைச் சேரவேண்டிய பாக்கித் தொகைகளெல்லாம், சென்ற வருஷத்தைக்காட்டிலும் பிரஸ்தாப வருஷத்தில் மிகவும் திருப்திகரமாய் வசூலிக்கப்பட்டன. மதராஸ் ஸெண்ட்ரல் பாங்கிக்கும், தஞ்சாவூர் ஜில்லா பாங்கிக்கும் சேரவேண்டிய முறிவடைந்த சங்கங்களின் பாக்கித் தொகைகள் அதிகரித்தன. கிருஷ்ணா, மதுரை, ராமனாதபுரம் ஜில்லாக்களிலுள்ள சங்கங்கள் தங்கள் தங்கள் ஸெண்ட்ரல் பாங்கிகளுக்கு ஏராளமான பாக்கிகள் கொடுக்கவேண்டியதைக் கேட்க விசனிக்கிறோம்.

கணக்கிடுவதில் ஓர்வித விஜித்ர முறையை அனுசரிப்பதினால், நம்முடைய விவசாய சங்கங்கங்கள் சென்ற வருஷத்தில் நஷ்ட மடைந்திருக்கின்றனவென டிபார்ட்மெண்டார் காண்பித்திருக்கிறார்கள்; ஆனால் அவ்வகைச் சங்கங்கள் மற்ற இராஜதானிகளிலெல்லாம் இலாபமடைந்திருக்கின்றன. நம்முடைய சங்கங்கள் வேறு இராஜதானிகளிலுள்ளவைகளுடன் ஒப்பிடப்பட்டால். நாம் வெட்கமடையும்படியாக நம் சங்கங்கள் அவ்வளவு கேவல ஸ்திதிக்கு வந்திருப்பதாகத் தெரியவில்லை. டிபார்ட்மெண்டார் கைக்கொண்ட கணக்கின் முறையே அத்தோற்றத்திற்குக் காரணமாகும், சாதாரணமான கணக்கு வகையை அனுஷ்டிக்கும்படி இந்தியா கவர்ன்மெண்டார் கட்டாயப் படுத்தாதது ஆச்சரியத்தைத் தருகின்றது. ஆனாலும் வருஷக் கடைசியில் மெம்பர்கள் சங்கங்களுக்கு கொடுக்க வேண்டிய கடன் நிலுவைகளைப் பார்த்தால் யாவருக்கும் சந்தோஷத்தைத் தராது. விவசாய சங்கங்களின் குறைவுகளுக்கு முக்கியகாரணம் ஒன்றுதான்; அதாவது தகுந்த மேற்பார்வை யின்மை. முந்தின வருஷத்தில் ஏற்பட்ட பாக்கித் தொகையைக் காட்டிலும பிரஸ்தாப வருஷத்திலிருப்பது குறைவாயில்லை. மெம்பர்கள் சங்கங்களுக்கு கொடுக்க வேண்டிய நிலுவைகளின் விவரம், அசலில் சுமார் 100-க்கு 29 வீதமும், சென்ற வருஷங்களில் செல்லாகாத வட்டித்தொகையில் 100-க்கு 50 வீதமும் பிரஸ்தாப வருஷத்தில் கொடுபட வேண்டிய வட்டியில் 27 வீதமுமாகும். சில ஜில்லாக்களில் பாக்கியே கிடையாது. வேறு சில



ஜில்லாக்களில் வசூலாக வேண்டிய தொகையில் 100-க்கு 60 வீதம் பாக்கியா யிருக்கிறது, மிஸ்டர் M. ஷிவராவும், அவர் சிநேகிதர்களும் ஐக்கிய முயற்சி விஷயமாய் சிரத்தையுடன் உழைத்ததினால் உயர்ந்த தன்மையை யடைந்த தென்கன்னடம் ஜில்லாவானது எல்லா ஜில்லாக்களிலும் மிகவும் திருப்திகரமாய் வேலை செய்து வருகின்றது; ஆனால் மதுரை ஜில்லாவோ எல்லாவற்றிற்கும் தாழ்மையா யிருக்கின்றது. மற்ற ஜில்லாக்களுடன் ஒப்பிட்டால், மதுரையானது மேற்பார்வை விஷயத்திய குறைவாகச் சொல்லமுடியாது; அப்படி யிருந்தும் இவ்வளவு தாழ்ந்த நிலைமைக்கு வந்தது ஒரு புதுமையாயிருக்கிறது.

வடஸர்க்கார்ஜில்லாக்களில் புதுச்சங்கங்கள் அதிகத் தேவையாயிருக்கின்றன. ரிஜிஸ்ட்ராருக்கு அனுப்பப்பட்ட 192 விண்ணப்பங்களில் ரூ. 134 சங்கங்கள் ரிஜிஸ்டர் செய்யப்பட்டன; பாக்கி 67 மனுக்கள் தள்ளப்பட்டன. பைசலாகாதது ஒன்றுமில்லை. சென்னையிலும், கள்ளிக்கோட்டையிலுமுள்ள அஸிஸ்டெண்டு ரிஜிஸ்ட்ரார்கள் கேட்டவுடனே சங்கங்கள் கொடுப்பதாகத் தோன்றுகிறது. கள்ளிக்கோட்டை ஆபீஸுக்கு வந்த 86 மனுக்களில், 78 அங்கீகரிக்கப்பட்டன; பாக்கி 8 பைசலாகவில்லை; ஆகையினால் யாதொன்றும் ரத்துசெய்யப்படவில்லை. சென்னைக்கு வந்த 9 மனுக்களும் ஒப்புக்கொள்ளப்பட்டன. தென்னாற்காடுக்கு அனுப்பப்பட்ட 79 மனுக்களில் 29 பைசலாகாமலிருந்தன.

விவசாயமல்லா நாணயச்சங்கங்கள் அபிவிருத்தியடைந்திருக்கின்றன. அவைகளின் சங்கியை 13[illegible]-லிருந்து 193-க்கும், அவைகளின் தொழில்தனம் ரூ. 20 லக்ஷத்திலிருந்து ரூ. 45 26 லக்ஷத்திற்கும், அவைகளின் நிகர்லாபம் ரூ. 61,372லிருந்து ரூ. 83,312-க்கும், அதிகரித்திருக்கின்றன. இச்சங்கங்களில் பெரும்பான்மை கீழ்வகுப்பினர்களுக்கென்றே ஸ்தாபிக்கப்பட்டன. 48 சங்கங்களில் சுமார் 50 வீதம் இவ்வகுப்பினர்கள் மெம்பர்களா யிருக்கிறார்கள். அவைகளில் 28 சங்கங்கள் முனிஸிபாலிடி வேலைக்காரர்களுக்கு ஏற்படுத்தப்பட்டன. முனிஸிபா[illegible] சேர்மன்கள் டிபார்ட்மெண்டாருடன் கலந்து தங்கள் வேலைக்காரர்களுக்கு இம்மாதிரிச் சங்கங்களை அதிகப்படுத்துவார்களென்றும் முன்போல் அஸிஸ்டெண்டு ரிஜிஸ்ட்ரார்களின் இவ்விஷயமான முயற்சியானது ஒருநாளும் வீணாகாதென்றும் நம்பப்படுகிறது. கிறிஸ்தவ வாலிபர்களின் கிளை சபைகளின் காரியதரிசிகள் மிகவும் புகழத் தகுந்த வேலைகள் செய்திருக்கிறார்கள். 11 சங்கங்கள் அவர்களின் முயற்சியால் ரிஜிஸ்டர் செய்யப்பட்டன. இன்னும 18 சங்கங்கள், மேற்பார்வையேற்பாட்டை யெதிர்பார்த்திருத்தலால், ரிஜிஸ்டராகாமலிருந்தன. சமீபத்தில் இவைகள் ரிஜிஸ்டர் செய்யப்பட்டதாகக் கேள்விப்படு

கிறேம். செம்படவர்களின் சங்கங்கள் 14-க்கும் மலையில் வசிக்கும் மலையாளிகளின் சங்கங்கள் 15-க்கும் அதிகரித்திருக்கின்றன.

காஞ்சீவரம் நெசவுக்காரர்களின் யூனியனானது முன்னமே ஏற்பட்ட நஷ்டங்களையெல்லாம் ஈடுபடுத்தி லாபமடையும்படி வேலைசெய்ததைக் கேட்க மிகவும் சந்தோஷமாயிருக்கிறது. ப்ரஹாம்பூரில் புதிதாய் ஸ்தாபிக்கப்பட்ட நெசவுக்காரர்களின் சங்கமானது பங்காளம் ரிஜிஸ்ட்ராரின் மூலமாய் ரூ. 800 பெறுமான பட்டுநூலை வாங்கிற்று. அந்நூல் மிகவும் உயர்ந்ததாயும், விலையில் நயமாயுமிருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஸ்டோர்களும், கட்டிடச் சங்கங்களும் அவ்வளவு கவனத்துடன் வேலை செய்ததாகத் தெரியவில்லை. இந்த இராஜதானியில் உற்பத்திச்சங்கம் ஒன்றேயான மாம்பலச் சங்கமானது மிகவும் நஷ்டத்தில் வேலைசெய்திருக்கிறது.

மத்தியஸ்தம் செய்யும் கேஸுகளில் அஸிஸ்டெண்டு ரிஜிஸ்ட்ராரின் தீர்ப்புகள் ஸிவில் கோர்ட்டில் நிறைவேறப்படுதலில் சில இடையூறுகளிருப்பதென கேள்விப்பட ஆச்சரியமாயிருக்கிறது. பெனுகொண்டா ஜில்லா முன்ஸீபானவர், கவர்ன்மெண்டார் உண்டாக்கிய விதிகள் ஆக்ட்டின் 43-வது ஸெக்ஷனிற் கூறிய அளவுக் கதிகமாயிருப்பதென்று, தம்மிடம் நிறைவேறுவதற்கு வந்த இரண்டு மனுக்களைத் தள்ளிவிட்டார். காக்கினாடா ஸெக்ஷனில் சில கேஸுகள் இவ்விதத் தீர்ப்பையே கைக்கொண்டு தள்ளிவிடப் பட்டதாக தெரியவருகிறது, உண்மையாய் ஆக்டில் மேற்படி தவறுதல்களிருந்தால், அவைகளைத் திருத்த நம் கவர்ன்மெண்டார் இந்தியா கவர்ன்மெண்டாருக்குத் தெரியப்படுத்துவார்களென்பதிற் தடையில்லை.

* * *

மதராஸ் ப்ரொவின்ஷியல் கோவாபரேடிவ் யூனியனானது, மூன்று ஐக்கிய முயற்சிக்காரர்கள், நாணயத்தைச் சாராத சங்கங்களையாவது அல்லது ஏற்கனவே ஸ்தாபிக்கப்பட்ட சங்கத்துடன் நாணயமல்லாத சேர்க்கையையாவது ஸ்தாபிக்கக் கேட்டுக்கொண்டதற்கு, அக்கனவான்களும் ஒப்புக்கொண்டார்கள். அவர்களில் ஒருவராகிய ம-ா-ா-ஸ்ரீ, ரேய் ஸாஹிப் ஏ. சேதுராமய்யர் அவர்கள் இவ்விஷயமாய் தாம் வேலை செய்ததைப் பற்றி ஓர் குறிப்பு அனுப்பியிருக்கிறார். சமீபத்தில் திட்டை சங்கத்தையும், மெலட்டூர் பாங்கியையும் பார்வையிட்டு, அங்கங்கே மஹாசபைகளைக் கூட்டி, கிராமச் சங்கங்களின் மூலமாய் விவசாயத்தை எப்படி அபிவிருத்தி செய்யலாமென மெம்பர்களுக்கு நன்கு அறிவித்தார். அவ்விரு சங்கங்களும் தங்கள் மெம்பர்களுக்கு விவசாயவிஷயமாய் உதவி செய்யும்பொருட்டு பின்வரும் பைலாவை யேற்படுத்திக்கொண்டு தஞ்சாவூர் ஜில்லா எரு சங்கத்தில் பங்குகளெடுத்தன:—ஐக்கிய முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட நெல்லுவிதைகளையும் தஞ்சாவூர் ஜில்லாவுக்கு வேண்டிய எருக்களையும் (உதாரணமாக, எலும்புத் தூள்கள், மச்சயெருக்கள், புண்ணாக்குகள், பச்சை யெலைகள்) விவசாயத்திற்கு வேண்டிய கருவிகளையும் வாங்கி மெம்பர்களுக்கு விற்பதும் (2) அனுபோகத்தில் கொண்டுவரும் பொருட்டு, விவசாயக் கருவிகளின் நவீன உபயோகங்களைப்பற்றி போதனை செய்து அறிவைப்புகட்டியும், இன்னும் இம்மாதிரி வேலைகளைச் செய்தலுமாகும். பின்பு விஷ்ணுபுரம் ஐக்கிய சங்கத்தைப் பார்வையிட்டு இவ்விஷயமாய் போதனை செய்தார். இவ்வளவு குறுகிய காலத்தில் சங்க ஸ்தாபன விஷயமாய் உழைத்த ரேய் சாஹிப் அவர்களுக்கு நாம் நன்றி பாராட்ட கடமைப் பட்டுள்ளோம்.



* * *

சென்னை ஜனசமூக ஊழிய சங்கத்தின் வருஷாந்தரமீட்டிங் சென்ற ஜனவரி மாதம் நடை பெற்றபொழுது, கூட்டுறவு முயற்சியின் விசேஷத்தைக்குறித்து கூட்டுறவுச் சங்கங்களின் ரிஜிஸ்ட்ரார் பலமாய் பேசினர். தவிர, ஏழை ஜனங்களின் திரவிய நிலைமையும் சன்மார்க்க நிலைமையும் உயருவதற்கு கூட்டுறவு முயற்சியை விடச் சிறந்த சாதனம் இல்லையாதலின், ஏழைகளின் நன்மையை உத்தேசித்து அவர்களுக்காக கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்துவதில் சலியா ஊக்கம் காட்டவேண்டுமென்றும் கூறினர். மீண்டும் அவர் சொன்னதாவது:—தேசத்தின் அபிவிருத்தி பரவுவதற்கு கூட்டுறவு விஷய ஞானமே மிகவும் சிறந்த ராஜ்ய ஞானமாகும். பிரஜாபத்திய விசேஷங்களை யெல்லாம் அக்கூட்டுறவு முயற்சியினால் உணர்ந்து கொள்ளலாமென்பதோடு, இன்னும் பல நன்மைகளும் உண்டாகும்.

* * *

## மைசூர் சமஸ்தானத்தில் கூட்டுறவு முயற்சி.

மைசூர் சமஸ்தானத்திலே கூட்டுறவுமுயற்சியின் விவரத்தைக் காட்டக்கூடிய வியாசமொன்று மைசூர் எகனாமிக் ஜர்னலில் ரெஜிஸ்தார் மிஸ்டர் ரங்காராவினால் எழுதப்பட்டுள்ளது. அதன் சாராம்சம் என்னவென்றால் :—மைசூரில் சுமார் 12-வருடத்திற்குமுன் கூட்டுறவு முயற்சி ஏற்பட்டது. இப்போதுள்ள நிலைமையைப் பார்க்க அம்முயற்சி வெகுவாகப் பிரபலமடைந்திருக்கிறது அதன் புள்ளி விவரங்கள் பின்வருமாறு.—

| வருஷம். | சங்கங்களின் தொகை. | மெம்பர்களின் தொகை. | மூலதனம் | மொத்த பணப்பூர்வம் | மொத்த கஸர் லாபம். | மொத்த ரிஷமநிதி. |
|---|---|---|---|---|---|---|
| | | | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா, |
| 1905—06 | 5 | 362 | 14,243 | 48,556 | ... | 132 |
| 1906—07 | 15 | 1,191 | 28,085 | 1.60,124 | ... | 160 |
| 1907—08 | 27 | 2,521 | 64,126 | 4,77,067 | 5,295 | 924 |
| 1908—09 | 45 | 4,551 | 1,35,499 | 9,79,650 | 6,449 | 2,340 |
| 1909—10 | 70 | 6,301 | 2,16,261 | 13,77,278 | 10,471 | 5,831 |
| 1910—11 | 111 | 9,043 | 3 ,71.194 | 20,72,413 | 19,324 | 6,549 |
| —191112 | 208 | 13,148 | 6,75,312 | 34,83,955 | 34,836 | 18,833 |
| 1912—13 | 343 | 24,538 | 12,89,338 | 59,52,081 | 62,520 | 30,600 |
| 1913—14 | 530 | 45,479 | 21,47,340 | 96,28,522 | 1,18,604 | 56,239 |
| 1914—15 | 725 | 53,267 | 30,85,747 | 131,13,546 | 1,61,521 | 96,669 |
| 1915—16 | 800 | 64,857 | 44,21,688 | 172,58,813 | 2,17,976 | 1,59,626 |
| 1916—17 | 974 | 72,392 | 57,63,067 | 215,02,185 | 2,63,205 | 2,34,740 |

தாழ்ந்த வகுப்பாருக்கு கூட்டுறவு முயற்சியினால் பலன் கிடைக்க வேண்டி, பிரத்தியேகமாக கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. அவ் வகுப்பினருக்கென்றே பிரத்தியேகமாய் ஏற்பட்டுள்ள சங்கங்கள் அவ் வளவாகப் பலனளிக்கவில்லை என்பது அனுபவத்தால் கண்ட விஷயம். ஆதலால், செம்மையாக நடந்துவரும் சில சங்கங்களிலே அவ்வகுப்பி னரைச்சேர்த்துக்கொள்ளவேண்டுமென்று உத்தேசம் உண்டு. அவ்வகுப் பினருக்கென்றுதனியே புதிய சங்கங்கள் ஏற்படின், தக்க அந்தஸ்துள் ளவர்களையும் போதுமான உணர்ச்சி யுள்ளவர்களையும் அச்சங்கங்களில் சேருமாறு முயற்சி செய்யப்பட்டு வருகிறது. இவ்வாறு செய்து, அவ் வகுப்பினரின் சங்கங்களுக்கு தக்க திரவிய சகாயமும் பணவுதவியும் கிடைக்கும்படியான வழியைத் தேடவேண்டுமென்று எதிர்பார்க்கப் படுகிறது.



சங்கங்களின் நிதிகளைத் தாங்களே ஏகபோகமாய் ஆண்டு அனுப வித்துவர வேண்டுமென்று சில சங்கங்களின் கமிட்டி மெம்பர்கள் கருதுகின்றனர். மைசூர் சமஸ்தான கூட்டுறவுக் கான்பரன்ஸின் ஏழாவது வருஷக்கூட்டம் சென்ற அக்டோபர் மாதம் கூடியபொழுது அவ்விஷயத்தைப் பற்றி யுவராஜா குறிப்பிட்டு சொல்லியிருக்கிறார்.

சங்கங்களிலுள்ள நிதியிலே நூற்றுக்கு 20 வீதத்திற்குமேல் கமிட்டி மெம்பர்கள் கடனாக எடுத்துக்கொள்ளக் கூடாதென ஒரு வியதி ஏற்படுத் தப்பட்டுளது. மலைநாட்டிலுள்ள விவசாயிகள் கடன் சுமையால் அழுத் திக்கிடக்கின்றனர். இவ்விஷயத்தில் பிரத்தியேகமான கவனம் செலுத் தப்பட்டுவருகிறது. மலைநாட்டிலே குறிப்பான இரண்டு கிராமங்களிலுள்ள விவசாயிகளின் திரவிய நிலைமையை கவனித்து பரிசீலனை நடத்தப்பட் டது. அதன் ரிபோர்ட்டு வெளியாகவில்லை. எனினும் அப்பரிசீலனையால், மேல் ஆகவேண்டிய காரியம் என்ன வென்று நாம் யூகித்துக் கொள்ள முடியும். கூட்டுறவு முயற்சியினால் மெம்பர்களுக்கு எவ்வளவு தூரம் நன்மை கிடைத்துளதென்பதைக் கண்டறிவதற்காக ஒரு பரிசீலனை நடந் தது. அப்பரிசீலனை வேலையை கூட்டுறவு இலாகா உத்தியோகஸ்தர்க ளிடமே இச்சமயம் ஒப்படைக்கப்பட்டிருப்பதால், அப்பரிசீலனை முற் றுப் பெறுவதற்கு இரண்டு அல்லது மூன்று வருஷகாலமாகும்.

அப்பரிசீலனைக்காக பிரத்தியேகமான உத்தியோகஸ்தர்களை நியமித் தால், அதில் ஏற்படும் செலவுக்கு ஏற்றவாறு பிரதிப் பிரயோஜனம் கட் டாயம் கிடைக்கும்.

விவசாய விஷயத்திலும்தொழில் முறையிலும் கூட்டுறவுமுயற்சியை உண்டு பண்ண ஏற்கெனவே சிறிது பிரயத்தனம் யிருந்தது இப்பொழுது அத்துறைகளில் தக்க கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. ரெஜிஸ் தாரர் விவசாய இலாகாத்தலைவர், கைத்தொழில் இலாகாத்தலைவர், பொருளாதார கான்பரன்ஸின் காரியதரிசி ஆகிய இவர்கள் கூடி அவ் விஷயத்தைப்பற்றி கலந்து பேசியிருக்கிறார்கள். அதற்காக என்ன செய்யவேண்டு மென்று திட்டம் ஒன்றும் போடப்பட்டிருக்கிறது. விவசாயத்திற்கு வேண்டிய எருவை வாங்கிவிற்கும் நோக்கத்துடன் விவசாயச் சங்கங்களை ஏற்படுத்துவதற்காக ஓர் இன்ஸ்பெக்டர் திட்ட

மாயிருக்கிறார். தொழில் முறையில் கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்தி நன்கு நடத்துவதாயின், மூலப்பொருள்களைச் சேகரித்து அவைகளைத் தொழில் முறைப் பண்டங்களாகச் செய்யும் விசேஷ ஸகல காரியங்களையும் அச்சங்கங்களே நடத்திவர வேண்டுமாதலின், அவ்விதமே சங்கங்களை ஏற்படுத்தி நடத்தவேண்டுமென்று ஏற்பாடா யிருக்கிறது. பரீக்ஷார்த்தமாய் அச்சங்கங்களை கைத்தொழில் இலாகாவே சிறிதுகாலம் நடத்தி, அப்பால் அவைகளை ஜனங்களிடம் ஒப்படைத்து விடவேண்டுமென்பது யோசனை.

நெசவுக்காரர்கள் உள்ள பிரதேசங்களிலே நெசவுக்கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்தவேண்டுமெனவும், வியாபாரம் நடத்திவரும் பண்டகசாலைகளுடன் அச்சங்கங்களை ஒன்றுபடுத்தி விடவேண்டுமெனவும், அதற்கு அனுகுணமாக நெசவுத்தொழிற் பாடசாலையை அமைத்துவிடவேண்டுமெனவும், யோசனை யிருக்கிறது. பஜாரில் எத்தகைய ஜவுளி பிடித்தமாயிருக்கிறதென்பதைக்கண்டு கைத்தொழில் இலாகா சொல்லிவரவேண்டும். இத்துறையில் கூட்டுறவு முயற்சியைக் கவனிக்க ஒரு இன்ஸ்பெக்டரை பிரத்தியேகமாய் நியமிப்பதாக உத்தேசம். மைசூர்புரொவின்ஷியல் கோவாபரேடிவ்பாங்கி, பெங்களூர்ஸென்ட்ரல் கோவாபரேடிவ் பாங்கி ஆகிய இரண்டும் ஒன்றாக சேர்க்கப்பட்டுவிட்டது, பல ஜனங்கள் விருப்பமாகும், அவ்வாறு அப்பாங்கும் ஒன்றாகச் சேர்க்கப்பட்டுப்போயின வென்பதைக் கவனிக்கவேண்டும்.



# ஸ்ரீவில்லிபுத்தூரில் நடந்த ஐக்கியசங்க கான்பரன்ஸ் விஷயமாய் ஒரு சம்பாஷணை.

1918 ௵ மார்ச்சு ௴ 31.

பிள்ளையவர்கள்—(முதலியாரவர்களைப்பார்த்து) ஏது அவசரமாய் வண்டி தயார்செய்யப் படுகிறதே? என்னவிசேஷம்? எங்குபோக? இப்பொழுது ரஜாநாள், கோர்ட் இல்லையே?

முதலியாரவர்கள்—உமக்கு விடிந்தால் கோர்ட்டுக்குப் போகவும், எவன் அடிபிடி சண்டைசெய்து கொண்டு வருவான் என்றுபார்க்கவும், எப்போதும் கோர்ட்டு கோர்ட்டென்று திரியவும், உமக்கு நேரம் சரியாய்ப்போகிறது. உலக முற்போக்கைக்கவனிக்க உமக்கு சாவகாசமேது?

பி.—என்ன அவசரமென்றால் இல்லாததை யெல்லாம் சொல்லுகிறீர். நீர் கோர்ட்டுக்குப் போகாமலிருக்கிறீரா?

மு—ஆம்; கோர்ட்டுக்குப் போகவேண்டியதை எவ்வளவுதூரம் விலக்கலாமோ அவ்வளவு விலக்கித்தான் பார்க்கிறோம். நீராவிஷயத்தில் போகத்தான்வேண்டும்.

பி—சரி, அந்தவிவகாரம் இப்பொழுது எதற்கு? தாங்கள்போகும் ஊர் எது? சொன்னால் எனக்கு உபகாரமா யிருக்குமா வென்பதைப் பார்க்கிறேன்.

மு—ஸ்ரீவில்லிபுத்தூருக்கு.

பி—நல்லது எனக்கும் அங்கேதான்ஜோலி. தங்கள்ஜோலி யென்ன? வண்டி எப்பொழுது திரும்பும்?

மு—ஸ்ரீவில்லிபுத்தூரில் ஐக்கியசங்க கான்பரன்ஸ் நடக்கிறது. அதற்காகப்போகிறோம். வண்டிதிரும்பும் விஷயம் இப்பொழுது சொல்ல முடியாது.

பி—என்ன புதுப்பேரா யிருக்கிறதே. தாங்கள் உச்சரித்த மூன்று வார்த்தைகளையும் நான்கேட்டதே யில்லை. இருக்கட்டும், அதற்காகத் தாங்கள் போவதில் ஏதும் லாபமுண்டா? சிலவுதானே.

மு—நீர் எப்போதும் லாபத்தைக் கருதக் கூடியவரென்று முன்னமே சொன்னேன். இப்போது நான் போகுங் காரியம் எனக்கு ஒருவிதத்திலும் திரவிய லாபம் கிடையாது. அனேக புதுவிஷயங்களைத் தெரிந்து கொள்ளலாம். அதனால் என்மூளை கொஞ்சம் விர்த்தியாகும்.

பி—அப்படியானால் அது பள்ளிக்கூடமோ? தாங்கள் இத்தனை வயதுக்குமேல் பள்ளிக்கூடத்துக்குப் போவது ஆச்சரியந்தான்.

மூ—வாஸ்தவத்தில் இப்பொழுது நான்போகுமிடம் பள்ளிக்கூடந்தான், ஆனால் பிள்ளைகளைப்போல் கட்டாயமாய் பாடம் ஒப்பிவிக்க வேண்டியதில்லை. எனக்குத்தெரிந்த சிலவிஷயத்தைச் சொல்லியும் இன்னும் மற்றவர்கள் சொல்லுவதில் நமக்குத் தெரியாத விஷயங்கள் அனேகமிருக்குமாகையால் அதை தெரிந்துகொள்வதில் அது பள்ளிக்கூடத்துக் கதிகந்தான்.

பி—என்ன விஷயத்தைப்பற்றி தாங்கள் சொல்வதும், தாங்கள் தெரிந்து கொள்வதும்.

மூ—ஐக்கிய இயக்கத்தைப்பற்றி.

பி—ஏது 4-வது புதிய வார்த்தை ஒன்று வருகிறதே, இந்த அர்த்தம் தெரியாத வார்த்தையை உபயோகிக்க வேண்டாம். நன்றாய் எல்லாருக்கும் தெரியும்படியான வார்த்தையை உபயோகியுங்கள்.

மூ—உமக்கு அர்த்தம் தெரியவில்லை என்றால் அதற்கு நான் என்ன செய்வது. பொது விஷயங்களை கவனிப்பதில்லை. பத்திரிகைகளை பாருமென்றால் உமக்கு கசப்பாயிருக்கிறது. பணச்செலவு வேண்டாம் பிறருடைய செலவில் பாருமென்றாலும் அது உமக்கு வேதனையா யிருக்கிறது. அப்படிக்கிருக்க உமக்கு எப்படி அர்த்தமாகும். உம்மைப்போல் சில லாடவுட்கள் இருப்பதினாலேதான் கிராமங்களில் ஐக்கிய தேவதை இருந்தவிடத்தில் விவகார தேவதை குடிகொண்டிருக்கிறது.

பி— ஏது இன்றுவிடிந்து உம்மிடம் வந்ததுமுதல் எனக்குத்தக்க புத்திகொடுத்து வருகிறீரே. விஷயத்தை தயவுசெய்து சொல்லும். எனக்கு வேலையிருக்கிறது போகவேண்டும்.

மூ—நமதூரில் ஒரு ஐக்கிய சங்கமிருந்தும் இந்த 2 தாலூக்காக்களிலும் 50 சங்கங்களுக்கு மேலிருந்தும் இன்னும் ஐக்கிய சங்கமென்றால் தென்று தெரிந்து கொள்ளாத குறை யாருடையது ?

பி—நமதூரில் என்ன சங்கமிருக்கிறது? எனக்குத் தெரிந்தமட்டில் சீட்டு விளையாட்டு, சூதாடுதல் முதலிய சங்கங்கள்தானிருக்கிறது. மற்றது எனக்குத் தென்படவில்லையே.

மூ—சரி, உம்முடைய குணத்தைப்போல்தான் உமக்கு சங்கங்கள் தென்படும். உம்முடைய நிலத்தை பயிர் செய்யும் சிவனிக்கும்பன் சென்ற ஐப்பசிமாதத்தில் ரூ. ·0 கடன்வாங்கி பருவத்தில் உம்முடைய நிலத்தை சாகுபடி செய்தானே அதையாவது நீர் தெரிந்து கொண்டீரா?

பி—என் நிலத்தை அவனுக்குக் குத்தகைவிட்டேன், அவன் பயிர் செய்தாலென்ன, தருசு போட்டாலென்ன, சித்திரைமாதத்தில் ரூ. 200 கட்டவேண்டும். இல்லாதவரை பயலை விட்டுவிடுவேனா என்னிடத்தில் அடை ஓலை வாங்கினதும் ரூ. 30 கடன் கேட்டான். நல்ல புள்ளிதான் கொடுக்கலாமென்றிருந்தேன். வட்டி ரூ. 1-க்கு பைசா 4 வீதம் கேட்டேன். மேலும் வழக்கம்போல் ரூ. 1-க்கு 1-படி உளுந்து கொடுக்க வேணுமென்றும் கேட்டேன். வேண்டாமென்று போய்விட்டான். அப்பால் விசாரித்ததில் மேற்படி சமுசாரி தன் இஷ்டன் ஒருவன் மூலமாய் கம்பெனியில் ரூபாய் கடன் வாங்கினதாய் தெரிந்தது. அதற்கு மிதற்கு மென்ன சம்பந்தம்.



மூ—மேற்படியான் சங்கத்தைத்தான் கம்பெனி என்று சொல்லுகிறான்.

பி—இதுதானா! அது எனக்குத் தெரியுமே, இதற்கு கூட்டமென்ன? உமக்குத்தெரிந்ததை சொல்லுவதும் உமக்குத்தெரியாததை தெரிந்து கொள்வது மென்னயிருக்கிறது. ஒன்றுமே தெரியாத பழங்கிழவிகள் கூட லேவாதேவி வியாபாரம் செய்து லாபம் சம்பாதிக்கிறார்கள். உங்கள் சங்கங்கள் வட்டக்கடைக்கு சமதிதான்.

மூ—நன்றாயிருக்கிறது. லேவாதேவி செய்யும் பழங்கிழவிகளுக்கிருக்கும் புத்தியைவிட உம்முடையபுத்தி மட்டுதான். நம்முடைய ஊரில் பழங்கிழவிமுதல் பால்ய ஸ்திரீகள் வரை சங்கத்தில் மெம்பராய்ச் சேர்ந்து சங்கத்தின் நன்மையை அனுபவித்து வந்திருக்கிறார்கள். நீர் ஒன்றையும் கவனியாமல் இச்சங்கத்தை வட்டக்கடைக்கு சமதி என்று சொல்லுகிறீர் அதன் விஷயமென்ன? வட்டி என்ன? இச்சங்கத்தின் அமைப்பு, நிர்வாகம், வட்டிவிகிதம் இதுகளை கவனியாமல் பிதற்றுதையும்.

பி—இச்சங்கத்தின் விஷயம் கடன் கொடுத்து தவணையில் வாங்குகிறது, வட்டக்கடையும் அப்படித்தான். நீர் இவ்வளவுதூரம் ஆவேசம் கிளம்பிப் பேசுவதால் ஏதோ சொற்பவிசேஷமுண்டு என்று நினைக்க வேண்டியதாயிருக்கிறது. அதை கொஞ்சம் சொல்லும்.

மூ—இச்சங்கம் லேவாதேவி செய்துவருவதில் விவசாயிகளுக்கு நிரம்பவும் சௌகரியம். சகாயவட்டிக்கு கடன் வாங்கிக்கொண்டு மாசூல் காலத்தில் கட்டிவிடலாம். நல்லசாமான்களை வாங்கிக்கொள்ளலாம். இன்னும் இச்சங்கம் தன் மெம்பர்களுக்குள் சிக்கனம், சுயஉதவி, பரஸ்பர நம்பிக்கை, காரிய நிர்வாகத்தில் சக்தி, கல்வி முதலிய நல்ல குணங்கள் கற்பிக்கும். இதற்காகத்தான் இந்த் இராஜதானியில் அனேக பெரிய பிரபுக்களும் உத்தியோகஸ்தர்களும் பாடுபடுகிறார்கள். இதன் தன்மையை சுருக்கிச்சொன்னால் இது ஒரு காமதேனுவுக்குச் சமானமென்று சொல்லலாம். காமதேனு கேட்கும் விஷயங்களை எல்லாம் கொடுக்குமென்!

திற் தடையில்லை என்று நாம் புராணங்களில் கேட்டிருக்கிறோம். அந்த காமதேனுவை ஐக்கிய இயக்கமாக நம்மிந்தியாவில் அவதரித்திருக்கிறது.

பி—சரிதான். எங்கெங்கேயோ சுற்றி கடைசியில் புராணகதையில் வந்துமுடிந்தது. நீர் சொல்லுகிறபடிகாமதேனுவைப்போலவானால் நினைத்ததெல்லாம் கொடுக்குமா? ஓஹோ என்னுடைய அனுபவத்தில் ரொக்க லேவாதேவி தான்செய்துவருகிறதென்றும் அதுவும் சிலவிடத்தில் கோர்ட்டில் வியாஜ்ஜியம்முதலிய நடவடிக்கை நடக்கிறதென்றும் தெரிகிறது. மற்றப்படி ஒன்றுமே எனக்குத்தெரியாது.

மு—வாஸ்தவந்தான். நீர்சொல்லுகிறபடி இம்மாதிரி ஸ்தாபனங்களில் வியாஜ்ஜியம் வராமலிருப்பதுதான் நல்லது. அங்கு முடியாதவரை போகத்தான் வேண்டும். நீர் தெரிந்துக்கொண்டது போராது. ஐக்கிய சங்கம் பலவிதம். இப்பக்கத்தில் நாணயச்சங்கந்தான் ஜாஸ்தி; நாணயமல்லாத இதர சங்கங்கள் ஸ்தாபிக்கவேண்டியதற்காகவே இந்த கூட்டம் கூட்டப்படுகிறது. இன்னும் விவசாயிகளுக்கு வேண்டிய நயமான விதை, உறம், கருவிகளை தருவித்துக்கொடுக்கவும், விவசாயிகள் மாசூலை மொத்தமாய் சேகரித்து விற்கவும், இப்படி மொத்தமாய் விற்பதில் மத்திய தரகர்களுடைய லாபம் மெம்பர்களடையும் ஏற்பாட்டில் சங்கங்களிருக்கின்றன. மேலும் விவசாயிகளுக்கும் மற்றவர்களுக்கும் வேண்டிய சாமான்கள் சகாயமாயும் நயமாயும் விற்கக்கூடிய பண்டசாலை (Stores) பலசரக்கு ஜவுளி முதலியவைகள் இன்னும் சமூக முன்னேற்றம் தேசமுன்னேற்றத்திற்கும் வேண்டிய முக்கிய விஷயங்களை தனித்துச்செய்ய சாத்தியப்படாதவிஷயங்களை கூட்டுறவின் தன்மையை பிரயோகித்து செய்யக்கூடிய சங்கங்களிருக்கின்றன. ஆகையால் இச்சங்கத்தை காமதேனுக்கு சமானமென்று சொல்வதிற் குற்றமில்லை.

பி—அதெப்படி எனக்குச் சொல்ல வேண்டுமே.

மு—அதெல்லாம் இவ்வளவு அவசரமாய் இவ்விடத்தில் சொல்ல முடியாது.

பி—பின் எங்கே வரவேண்டும்? எப்பொழுது.

மு—ஸ்ரீவில்லிபுத்தூருக்கு 31—3—18ல்.

பி—எந்த இடத்தில்.

மு—ஹிந்து ஹைஸ்கூலில்.

பி—அங்குயார் சொல்வார்கள்.

மு—இதற்கென்றே அனேகர் வருவார்கள் அவர்கள் பிரசங்கத்திலிருந்தும் பத்திரிகை ரிப்போர்ட்டு படிப்பதிலிருந்தும் தெரிந்து கொள்ளலாம்.



பி—அங்கு நான் எப்படி வருகிறது, நான் இச்சங்கத்தில் சேராதவனே.

மு—வாஸ்தவந்தான். உம்மை நான் அழைத்துச் செல்லுகிறேன். மேலும் கூட்டுறவு கூட்டத்தில் இம்மாதிரி நிபந்தனை இல்லை, யாரும்வரலாம். ஆனால் பேசவேண்டுமானால் அக்கிராசனாதிபதி உத்தரவு வேண்டும்.

பி—அக்கிராசனாதிபதி என்ற வார்த்தையும் புதிதாயிருக்கிறது.

மு—கூட்டத்துக்கு தலைவரா யிருப்பவரை அக்கிராசனாதிபதி என்று செல்லுகிறது.

பி—அவர்கள் யார்.

மு—ஸ்ரீவில்லிபுத்தூர் அடிஷனல் டிஸ்டிரிக்ட் முனிசீபு ம-ா-ா-ஸ்ரீ A. சேஷகிரிராவ் அவர்கள் B. A. B. L,

பி—ஏது! சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் கூட இதில் சேருகிறார்களா?

மு—இந்த இயக்கம் சர்க்கார் உதவியால்தான் முன்னுக்கு வந்ததும் வரப்போவதும். ஆகையால் அவர்கள் அக்கிராஸனம் வகிப்பதில் தடையில்லை.

பி—பின்னும் இந்தக் கூட்டத்திற்கு யார் யார் போகிறார்கள்.

மு—அநேகம்பேர் வருவதாய் தோன்றுகிறது. இன்னும் பக்கத்து ஊர்களிலும் எல்லாரும் வருவார்கள். பட்டணம் ரிஜிஸ்ட்ரார், அஸிஸ்டெண்டு ரிஜிஸ்ட்ரார்கள் வருவார்கள். ஸ்ரீவில்லிபுத்தூரிலேயே ஜாஸ்தி கூட்டம் வரும்; பெரிய கூட்டமாயும் விமரிசையாயுமிருக்கும்; எல்லாரும் போய் பார்க்கவேண்டியது தான்; சீக்கிரம் வாரும் போவோம்.

பி—நல்லது இதோ வந்து விட்டேன். இன்னும் எனது ஆட்களையும் வரச்சொல்லிவிட்டு வருகிறேன். இன்று விடிந்து எனது நன்மைக்கே உம்மைச் சந்தித்தேன். உமக்கு நான் வந்தனம் செலுத்தவேண்டும்.

மு—விஸ்தீனமெல்லாம் பிறகு பார்த்துக் கொள்ளுவோம். நீர் இந்தக் கூட்டத்துக்கு வருவதாய் ஒப்புக்கொண்டு புறப்பட சித்தமானீரே அது தான் எனக்கு ஆயிரம் வந்தனம் கொடுத்ததுபோல். உமக்கு பகவான் நால்லபுத்தி கொடுத்தது போல் எல்லாருக்கும் புத்திகொடுத்து ஐக்கிய இயக்கத்தை இப்பக்கத்தில் நிலை நிறுத்தட்டும். சுபம் சுபம் சுபம்.

——— ———

# கிராமச் சங்கங்களின் பஞ்சாயத்தார் அறியவேண்டிய விஷயங்கள்.

திருவண்ணாமலை ம-ா-ா-ஸ்ரீ, M. S. சேஷாசலமய்யர் அவர்கள் எழுதியது.

சங்கங்களில் கொடுத்திருக்கும் கடன்கள் எதற்காக கொடுக்கப்பட்டதோ அதன்படி உபயோகிக்கப்பட்டதாவென அறியவேண்டியது முக்கியமான விஷயம். இதில் சங்கங்கள் சரிவர கவனியாவிடில் கடன்கள் துர்வினியோகப்படுவதும் தவிரவிர்த்தியம்சமில்லாத விஷயங்களில் செலவிடப்பட்டு திருப்பிக்கொடுக்க மார்க்க மேற்படாமல் கடன்வாங்கின மெம்பர் இதர கடன் களால் மேன்மேலும் கடன்காரர்களாக நேரிடுகிறது. எந்த சங்கத்தில் சேரும் மெம்பர், தனக்கிருக்கும் கடனை சிறுகச் சிறுகக் குறைத்து கைமுதலை விருத்திசெய்யாமல், கடனை வருஷா வருஷம் மேன்மேலும் வளரவிடுகிறாரோ, அவரை சங்கமெம்பராய் வைத்திருப்பது சங்கத்திற்கும் பஞ்சாயத்திற்கும் பெரும் அவமதிப்பையுண்டாக்கும். ஆதலின் கடனைக் குறைத்துக்கொள்ள பஞ்சாயத்தாரின் புத்திமதிக்கொப்பி வீண் செலவுகளை நீக்குவதையும் காலா காலங்களில் லயகரமான பயிர் செய்வதையும், ஏற்றுக்கொள்ளாமல் சிக்கனமின்றி யிருப்பதாய் தோன்றும் மெம்பர்களை நிவர்த்திப்பது நலம்

மெம்பர்களை சேர்ப்பதில் பஞ்சாயத்தர் நன்னடத்தை, நாணயம், சத்தியம், முதலியன வுள்ளவர்களா யிருக்கிறார்களா வெனவும் இனி பஞ்சாயத்தின் புத்திமதிக்குள்பட்டு தன்னையும் இதரமெம்பர்களையும் விர்த்திசெய்ய முயல்கிறாரா வெனவும் நன்கு தேர்ந்தே மெம்பர்களைச்சேர்க்கவேண்டும். சங்கமெம்பர்கள் எல்லாரும் சகோதரர்போல் பாவித்து எல்லாரின் கஷ்ட சுகங்களையும் சமமாய் பங்கிடுசெய்துகொண்டு தம்தம் புத்தி மதிகளாலும் மற்றெல்லா வுதவிகளாலும் எல்லாரையும் நடத்தையிலும், பதவியிலும், முன்றேற்ற மடையபாடு படாமல், சுபாயம் கருதி மற்ற மெம்பர்களின் லாபநஷ்டங்களை தனக்கு சம்பந்தமில்லை யெனவும், தனக்கே எல்லா சுகமும் வேண்டுமெனவும் தேடுபவர்களை சீர்திருத்த முடியாதெனத் தோன்றில், அவர்களின் பதவியும் பொறுப்பும் சங்கத்துக்கு எவ்வித பலமாயினும் அவர்களை நீக்குவதேநல்லது.

இத்தகைய ஆழ்ந்த விசாரணையின்றி மேற்பார்வையாய் நடத்தப்படும் சங்கத்தில் மெம்பர்கள் ஏற்றுக் கொண்டிருக்கும்போது கடனுக்கு ஏற்பட்டிருக்கும் ஜவாப்தாரீதனம் கடினை அனுபவியாத மெம்பரையும் பாதிக்கும். உதாரணமாய் சிக்கனமில்லாத துர்நடத்தையுள்ள ஒருவனை மெம்பராய் சேர்த்துகடன் கொடுக்கும் சங்கத்தில் அந்தக்கடன் திருப்



பிக் கொடுக்க மார்க்கமின்றி நஷ்டம் நேர்ந்தால் அந்தகடனை அனுபவியாத சொத்துள்ளவர்களான இதரமெம்பர்களில் யாதானுமொருவரிடமிருந்தாவது, எல்லாரிடமும் பங்கு வீதாசாரப்படியாவது வசூல் செய்ய நேரிடுகிறது. ஆகவே ஐக்ய சங்கங்களில் ஒருவனுக்குள்ள ஆஸ்தியையே பெரிதாய் பாராட்டாமல் நல்ல நடத்தையும் நாணயமுமே பெரிய ஜவாப்பாக நிற்கிறது. கடன்கள் முன் கடனுக்கே கொடுக்கப்பட்டால் எல்லாகேஸ்களிலும் திருப்பிக்கொடுக்க சக்தி இல்லாதவைகளில் ஆபத்தாய் முடிகிறது. ஆதலின் பஞ்சாயத்தார் கடன் சாங்கிஷன் செய்வதில் ஒவ்வொன்றிலும் சிநேகம், பந்துத்வம், தாட்சண்யம், விரோதம் முதலியவைகளை கொஞ்சமும் கவனியாமல், கொடுக்கும், கடனை திருப்பிக் கொடுக்க மார்க்க முண்டாவெனவும், கடன் கோரும் விஷயம் லாபகரமானதாவெனவும், இந்தக் கடனால் அந்த மெம்பரின் சுகத்தை விர்த்தி செய்யப்படுகிறதா வென்பதும் பஞ்சாயத்தார் ஒவ்வொருவரும் கலந்து ஆழ்ந்துயோசித்துப் பேசி தீர்மானம் செய்யவேண்டும்.

சங்கமெம்பர்களின் விவசாயத்தை அபிவிர்த்தி செய்வதே அவர்களின் பதவியை சற்று முன்னுக்குக்கொண்டுவர மார்க்கமாகும். ஒவ்வொரு சங்கமும் கிணறுவெட்டவும், நிலம் சீர்திருத்த விவசாயக் கருவிகளும் உழவுமாடுகளும், விதை, எருவு முதலியவைகளை வாங்கவும்தேவையான திரவியசகாயம் மெம்பர்களுக்கு முதன்மையாய் செய்ய வேண்டியதசியம். தவிர நூதனவிவசாயக் கருவிகளை பொதுவில்தருவித்து மெம்பர்களுக்கு உபயோகிக்கும்படி செய்வதும், வேண்டியவிதை எருக்கள் பொதுவில் வாங்கி மெம்பர்களுக்குக் கொடுப்பதும் சங்கத்தின் வேலையாகும். மாசூல் அறுவடைகாலங்களில் மெம்பர்களுக்கு சங்ககடன்வாப்சோ, சர்க்கரர் கிஸ்தோ நேர்ந்தால் மெம்பர்கள் மாசூலை குறைந்த விலைக்கு விற்க நேரிடுவதால் குடிகளுக்கு நஷ்டமுண்டாகிறது. சங்க பரிபாலகர்கள் இப்படிநஷ்டம் உண்டாகும்படி நேராமல் மெம்பர்களின் மாசூல்களை வாங்கிவைத்துக்கொண்டு அவைகளுக் கேற்றவளவு அவர்களின் ரொக்கசெலவைக் கொடுத்து சரியான விலை வரும்போது அவர் சம்மதத்தின்பேரில் விற்று கிடைக்கும் தொகை யனைத்தும் செலவுபோக மெம்பருக்கு சேரும்படி செய்வது பெரிய உபகாரமும் ஜக்யபான்மையுமாகும். இதற்கனுகுணமாகும்படி ஒவ்வொரு யூனியனிலும் ஒரு ஸ்டோர் வைக்கப்பட்டால் அங்குஜக்கிய சங்கங்களின் மெம்பர்களின் மாசூலை சரியான விலைக்கு விற்க அவர்கள் வேண்டிய ஏற்பாடு செய்வதுடன் கிராமங்களில் மெம்பர்களுக்குத் தேவையான உப்பு, புளி முதலிய உணவுப் பொருள்களும் மொத்தமாய் சப்ளை செய்வார் களாதலால் சங்கத்தில் மொத்தமாய் வாங்கிவந்து மெம்பர்களுக்கு பங்கிடு செய்து

கொடுக்கலாம். இப்படி வாங்கும் தினுசுகளிலும் விற்கும் தினுசுகளிலும் 100-க்கு 25-க்குக் குறையாமல் அதிக கிரயம் தற்காலம் இதரர்களுக்கு லாபரூபமாய்ப் போய் சேருவதால் இதைமெம்பர்களே அடையும்படி சங்கங்கள் ஏற்பாடு செய்ய வேண்டும்.

கிராமங்களில் 4வருஷத்திற் கொருமுறை மழையின்மையால் பஞ்சமுண்டாகிறது. அக்காலத்தில் பயிரிடுவோருக்கும் மாசூல் கிடைக்காமல் போவதால் ஜீவிப்பதற்கே மார்க்கமில்லாமல் செலுத்த வேண்டிய பகுதிகள் கிடைப்பதில்லை. உணவு பொருள்கள் முதல் எல்லா சாமான்களும் அதிக விலைக்கு விற்கும். அப்படிப்பட்ட காலங்களில்தான் விவசாயிகள் எந்த நிபந்தனைக்கும் உள்பட்டு கடன்வாங்குதை பின்னிட்டுத் தீர்க்க மார்க்கமின்றி வருந்துகிறார்கள். ஒவ்வொரு கிராமத்திலும் பொதுபண்டாக வருஷாவருஷம் சங்கமெம்பர்களிடம் உணவுதானியமான நெல், கேழ்வரகு, கம்பு, சோளம் இவைகளில் எவையாயினும் அவரவர் டிபாஸிட்டாக பங்கு வீதாசாரம் சேகரித்து சங்கத்தில் பத்திரப்படுத்தப்படவேண்டும். தவிர எந்த மெம்பராயினும் ஒரு காலத்தில் அதிக மாசூலை விற்பனை செய்ய விரும்பினால் சங்கத்தில் டிபாஸிட்டாக வாங்கிக்கொண்டு மெம்பர்களுக்குத் தேவையான காலங்களில் அதையே விதைக்காகவும் சாப்பாட்டிக்காகவும் கடனாகக் கொடுத்து பின்மாசூலில் வசூலிக்கலாம். இப்படி குறைந்தது 5வருஷங்களுக்கு ஒவ்வொரு மெம்பரும் செலுத்திய பிறகு தானியம் பகுதி செலுத்த வேண்டியதில்லை. இம்மாதிரி ஒரு பொது தானிய நிதி சேர்க்கப்படும் சங்கங்கள் சிறிது காலத்தில் எற்படும் பஞ்சத்தையும் தாங்கக்கூடிய ஒரு பலமான களஞ்சியமாய் கிராமத்தைக் காப்பாற்ற முடியும்.

சங்கங்களில் தற்காலம் கடன் கோருபவர் தவிர இதரர்கள் சேருவதில்லை. கிராமஸ்தர்களான ஒவ்வொரு குடும்பமும் சங்கத்தில் சேர்ந்து சங்க பஞ்சாயத்தை கிராமப் பிரதிநிதியாக்க வேண்டிய தவசியம். அப்போதுதான் கிராமத்துக்கு வேண்டிய சகல பொது நன்மைகளிலும் சங்கம் தலையிட நேரிடும். சுயநன்மை என்பது மறந்து பொதுநலமும் ஒற்றுமையும் ஸ்திரப்பட்டு ஐக்ய பத்தியம் விர்த்தியாகும். இதற்கு கிராமவாசிகளுக்கு அடிக்கடி கூட்டங்கள் கூடி ஐக்ய பத்தியத்தின் நன்மைகளைப் போதிக்கும்படி சங்கங்கள் பிரயத்தனம் செய்ய வேண்டும். கிராமங்களில் திருவிழாக்கள், பண்டிகைகள்முதலிய விசேஷதினங்களில் பொதுக்கூட்டம் கூடவும் ஐக்ய பிரபாவங்களை அக்காலம் பிரசிங்கிக்கவும் ஏற்பாடு செய்ய வேண்டும். சங்க மெம்பர்களுக்கும் மாதத்திற் கொருமுறை தவறாமல் சபை சேர்த்து பொது நன்மையான ஒவ்வொரு விஷயங்களைபற்றியும் போதிக்க வேண்டும். இதற்கு காரிதரிசி, பிரசிடெண்டுகள் கூடிய



வரையில் தாங்கள் ஐக்ய விஷயங்களை அறிந்துகொண்டு இதரர்களுக்கு கற்பிக்க வேண்டும்.

குடிகள் தங்களின் சொல்ப மீதிதொகைகளை மற்றவர்களுக்கு வட்டிக் கொடுப்பதென்னும் துர்வழக்கம் நிறுத்தப்படவேண்டும். விவகாரஞானமில்லாமலும் கடன் நல்விஷயங்களில் உபயோகிக்கப்படுகிறதாவெனக் கவனியாமலும் கொடுக்கும் கடன்கள் பெரும்பாலும் நஷ்டப்படுகிறதும் தவிர பொது நன்மைக்கும் இடஞ்சலுண்டாக்குகிறது. ஆகவே கிராமத்தின் மீதியனைத்தும் அவர்களின் சங்கத்தில் டிபாஸிட்டாக வாங்கப்பட்டால் அத்தொகைக்கு நியாயமான வட்டி கிடைப்பதுடன் கிராமவாசிகளின் பதவியை உயர்த்த ஒரு பெரு முதலாகும். தவிர கிராமவாசிகளுக்குள் தற்காலம் உண்டாகும் விரோதம், கக்ஷி, வீண்செலவு, பொறாமை, முதலிய சகல துர்க்குணங்களும் தலைகாட்டாது ஓடும். ஒருவருக்காக மற்றொருவர் கடன்விஷயம் இன்னதென்று தெரியாமலும் கடன் வாங்குபவரின் நிலைமையறியாமலும் ஜாமீன் நிற்பதும், தன்னால் வழக்கிடசக்தி யின்றி கிராமத்தில் குடிகளை மோசம் செய்தே ஜீவிக்கும் ஒன்றிரண்டு போக்கிரிகளின் துணையைப் பற்றி அவர்கள் போதனைக்குள்பட்டு பொய் அசத்திய முதலியவைகளை செய்வதும், தவிர தம் ஆஸ்திகளையும் விற்று கோர்ட் செலவில் அழித்து ஓட்டாண்டியாவதும், இவை முதலிய பல கெட்டநடத்தைகளை அடியோடு துலைக்க கிராமவாசிகளே நடவடிக்கை எடுத்து தம் போதனைகளாலும் உண்மையான முயற்சிகளாலுமே தடைப்படலாமன்றி இதரர்கள் எவ்வளவு முயன்றும் பயன்படாது. ஆதலின் ஐக்யசங்கங்களே இத்தொழிலைக் கைக்கொள்ள வேண்டும். ஆரம்பத்தில் தம் மெம்பர்களாவது கோர்ட்டுகளுக்குப்போய் வீண்செலவு செய்யாமல் அவர்களுக்குள்ளுண்டாகும் சகல வியாஜ்யங்களையும் தாமே விசாரித்து பைசல் செய்ய வேண்டும்.

கொஞ்சகாலமாய் கிராமங்களில் டம்பத்துக்காக செய்யப்படும் வீண் விரயங்களை நிறுத்த சங்கங்கள் முயலவேண்டும். சுபாசுப காரியங்களில் மெம்பர்கள் அனாவசியமான செலவுகளை செய்வதாய்த் தெரிந்தால் முன் எச்சரித்து அவைகளை நிறுத்தி அவசியமான செலவை மாத்திரம் சுருக்கமாய்ச் செய்யும்படி போதிக்க வேண்டும். மீறி நடக்கும் கிராமவாசி விஷயத்தில் பொது நன்மையைக்கோரும் சுத்தமான குடிகள் தாங்கள் அந்த காரியங்களில் தலையிடாமலும் அதற்கு தம் அனுசரணையைக் காட்டாமலும் தம் மனப்பூர்வமான வெறுப்பை அவருக்கு வெளிப்படுத்துவது அவரது க்ஷேமத்தை விருத்தி செய்யும். இப்படியே மதுபானம், பொய் பேசல், பொறாமை, துர்நடத்தை, களவு, மோசம் முதலிய சகல கெடுதிகள் இவைகளை யுடையவர்களிடம்

கொஞ்சகாலமும் சகவாசம் செய்யாமலும் அவர்களுக்கு யாதொரு உதவியையும் செய்யாமலும் கிராமவாசிகள் யாவரும் தம் வெறுப்பை யவர் உணரும்படி செய்தால், நிச்சயமாய் துர்க்குணங்களை விட்டு சீக்கிரம் திருந்துவாரென்பதில் ஐயமில்லை. ஆனால் இப்படி கெட்ட நடத்தையை கையாளுபவர்களையும் சீர்திருத்த முயலவேண்டியதன்றி எவ்விதத்திலும் கெடுதிசெய்யக் கூடாது. இது நல்லோரின் இயற்கையல்ல.

---

## கீழச்சேரி விவசாய பாங்கின் 1916-17 வருஷத்திய ரிபோர்ட்டு

இந்த ரிபோர்ட்டு சென்ற சென்னை கூட்டுறவு கான்பரென்ஸில் வாசிக்கப்பட்டது.

சென்னை இராஜதானியில் ஐக்கிய நாணயச் சங்கங்கள் ஸ்தாபிக்க முதல் முதல் தேடிய இடங்களில் கீழச்சேரியுமொன்று. இந்த பாங்கு 1904 வருஷம் செப்டம்பர் மாதம் 7-ம் தேதி ரிஜிஸ்ட்டர் செய்யப்பட்டு அதே தேதியில் வேலை ஆரம்பிக்கப்பட்டபடியால் 13 வருஷம் பூர்த்தியாகி விட்டது.

**விவகாரம் எல்லை:**—இந்த பாங்கு முதலில் பல கிராமங்கள் சேர்க்கப்பட்டு தற்காலம் கீழச்சேரி, கோவிந்தமேடு இரண்டு கிராமங்களில் தான் விவகாரம் நடத்தப் படுகின்றது. நீக்கிவிட்ட பல கிராமங்களிலும் பிரத்தியேக சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டு கீழச்சேரி கோவாபரேடிவ் யூனியனில் அணைக்கப்பட்டிருக்கின்றன.

**மெம்பர்கள்:**—1916-17 வருஷம் முதலில் இருந்தவர்கள் 113; அதே வருஷத்தில் புதிதாக சேர்ந்தவர்கள் 12 பெயர், ஆக மெம்பர்கள் 124-ல் விலகினவர்கள் 28 போக வருஷக்கடைசியில் இருந்தவர்கள் 96. இதற்கு காரணம் சென்ற வருஷத்தில் 2 கிராமங்கள் நீக்கப்பட்டதே. ஜூலை முதல் புதிதாக சேர்ந்தவர்கள் 2 பெயர். ஆக தற்காலமிருக்கும் மெம்பர்கள் 98. இதில் பிராமணர் முதற்கொண்டு பஞ்சமருள்பட எல்லா ஜாதிகளும் சேர்ந்திருக்கின்றன.

**பங்குத் தொகை.**—பங்கு 1-க்கு ரூ. 1 வீதம் வருஷ முதலில் இருந்த பங்குகள் 1,208, புதிதாக சேர்ந்த பங்குகள் 96 ஆக 1304க்கு விலகின மெம்பர்கள் வாபஸ் செய்துக்கொண்ட பங்குகள் 405 போக வருஷக்கடைசியிலிருந்த பங்குகள் 899. ஜூலை முதல் புதிதாக சேர்ந்த பங்கு 10, விலகின பங்கு 10 போக தற்காலம் இருக்கும் பங்குகள் 899-க்கு ரூ. 899-0-0.

**கடன்கள்:**—கடன் வாங்கக்கூடிய அளவு ரூ. 35,000; இந்தபாங்கு



கடன் வாங்காமல் டிபாஸிட்டுகள் மூலமாகவே அடியில் கண்டபடி பணம் சம்பாதித்திருக்கின்றது.

| | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|
| பிக்செட் டிபாஸிட் மெம்பர்களால் | ... | 1,826 | 0 | 0 |
| மெம்பர்களல்லாதவர்களால் | ... | 21,304 | 0 | 0 |
| சேவிங்ஸ் டிபாஸிட் | ... | 110 | 0 | 0 |
| கர்ரென்ட் டிபாஸிட் | ... | 718 | 3 | 11 |
| ப்ராவிடெண்ட் டிபாஸிட் | ... | 1,585 | 8 | 5 |
| | ஆக ரூ. | 25,543 | 12 | 4 |

பிக்செட் டிபாஸிட்டுகளுக்கு வருஷம் 1-க்கு 100-க்கு 5, 6, 6¼, 6½ வீதமும், சேவிங்ஸ் டிபாஸிட்டுகளுக்கு 6 வீதமும், கர்ரென்ட் டிபாஸிட்டுகளுக்கு 3 வீதமும், ப்ராவிடெண்ட் டிபாஸிட்டுகளுக்கு 6¼ வீதமும் வட்டி கொடுக்கப் படுகிறது.

இதுவுமல்லாமல் கவர்ன்மெண்டாரிடமிருந்து வாங்கப்பட்டிருந்த கடன் ரூ. 2,000-க்கு செல்லுபோக சென்ற வருஷத்தில் பாக்கி நின்றது ரூ. 200. இதுவும் ஜூலைக்குப் பிறகு செலுத்தப்பட்டு பாக்கி பூச்சியமாகி விட்டது.

சர். டி. எம். அமில்டன் துரையவர்களிடமிருந்து வாங்கியிருந்த கடன் ரூ. 500-க்கு செல்லுபோக பாக்கிநிற்கும் தொகை ரூ. 150. இந்த கடன்களுக்கு ரூ. 100-க்கு முறையே 4-3 ஆக வட்டி கொடுக்கப் படுகிறது.

**மெம்பர்களுக்கு கொடுக்கும் கடன்கள்:**—இந்தசங்கம் இரண்டு மெம்பர்களின் ஜாமீன்பேரில் மாத்திரந்தான் கடன் கொடுத்து வருகிறது. இந்தப்படிக்கு சென்ற ஜூன் மாதம் 30 தேதி மெம்பர்களின் பேரில் நின்றிருக்கும் கடன்கள் 102-க்கு ரூ. 9,367. எங்கள் சங்கத்தின் மெம்பர்களுக்கு மாத்திரம் கடன் கொடுக்க ரூபாய் 10,000 போதும். ஆனால் டிபாஸிட்டு மூலமாக அதிக தொகை பெற்றிருக்கிறபடியால் கீழச்சேரி கோவாபரேடிவ் யூனியனில் அணைக்கப்பட்டுள்ள சங்கங்களுக்கு கடன் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த வகையில் சென்ற வருஷத்தில் கொடுத்திருக்கும் கடன் ரூ. 17,050-0-0.

**வட்டி:**—மெம்பர்களுக்கு கொடுக்கும் கடன்களுக்கு வருஷம் 1-க்கு 100-க்கு ரூ. 9-6-0 வீதமும், இதர சங்கங்களுக்கு கொடுக்கும் கடன்களுக்கு ரூ. 7-8-0 வீதமும் வசூலிக்கப்படுகின்றது. இந்த வகையில் வசூலான வட்டிமொத்தம் ரூ. 2,500-5-0.

**தவணை தவறிய கடன்கள்** :—இந்த சங்கத்தில் சாதாரணமாய் தவணை தவறிய கடன்கள் கிடையாது. ஆனால் சென்ற வருஷத்தில் இந்த சங்கத்திலிருந்து நீக்கி விடப்பட்ட கொண்டஞ்சேரி கிராமத்தில் 4 தவணை தவறிய கடன்களிருந்து உடனே பைசலாகிவிட்டன.

சென்ற வருஷத்தில் நிகரலாபம் ரூ. 1,099-10-7; இதில் பங்குத் தொகைக்கு 100-க்கு $6\frac{1}{4}$ வீதம் டிவிடெண்டும், 100-க்கு $7\frac{1}{2}$ வீதம் பொது நிலபண்டுக்கும் சேர்த்தது போக மீதி க்ஷேமநிதியில் சேர்க்கப் படும்.

**க்ஷேம நிதி**:—சென்ற ஜூன் மாதம் 30 தேதி வரையில் மதிராஸ் சென்ட்ரல் அர்பன் பாங்கியிலும் செ. டி. பா. யூனியனிலும் இருக்கும் தொகை ரூ. 3,205-9-3, இத்துடன் நாளது வருஷத்திய லாபமும் சேர்க்கவேண்டும்.

ரூபாய் 300 வார் சர்டிபிக்கேட்டுக்காக இச்சங்கம் ரூ. 232-8-0 கட்டியிருக்கிறது.

**சங்கத்தினால் விளைந்தபலன்**:—மாக்ஷிமைதங்கிய ஜார்ஜ் சக்ரவர்த்தி அவர்களுக்கு டில்லியில் மகுடாபிஷேகமகோற்சவம் நடந்த சென்ற 1911ளு டிசம்பர்மீ 12வ அவர் பெயரால் ஊர்சுற்றிலும் ரோட் போடப் பட்டது. பல ஸிவில், கிரிமினல் வழக்குகள் பைசல் செய்யப்பட்டன. ஊரில் 12முதல் 24வரையில் இருந்தவட்டி 9முதல் 12வரையில் குறைந் தது. மெம்பர்களுக்கு அவசரமானபோது கடன் கிடைக்கிறதினால் தங் கள் காரியங்களை சுலபமாய் நிறைவேற்றிக் கொள்ளுகிறார்கள்.

**விசேஷ சம்பவம்** :—இந்த பாங்கிக்கு ஓர் நிரந்தரமான கட்டடம் கட்டவேண்டுமென்று மகாசபையின் தீர்மானத்தின்பேரில் கனம் ரிஜிஸ்ட்ராரவர்களின் சாங்கிஷனும் பெற்று சென்ற ஜூலை மாதம் 23தேதி 1000 ஜனங்கள் புடைசூழ இதோ அக்கிராசனம் வகித்திருக்கும் ஆனரபில் திவான் பஹதூர். பி. இராஜகோபலாச்சாரியார் அவர்களின் திருகரங்களால் வெகு சிறப்பாக அஸ்திவாரக்கல் நாட்டப்பட்டது.

1916-17 வருஷத்திய கணக்குகள் அஸிஸ்டெண்ட் ரிஜிஸ்ட்ராரவர் கள் சோதனை செய்து எழுதிய ஆடிட்உத்தரவு கீழ்கண்டவாறு இருக் கிறது:—

இவ்விராஜதானியில் ஐக்கிய இயக்கம் முதல்முதல் ஆரம்பித்த இடங் களில் இது ஒன்று. இதனுடைய அந்தஸ்தும் செல்வாக்கும் நாளுக் குநாள் விருத்தியடைந்து வருகிறது மிகவும் சந்தோஷிக்கத் தகுந்தது. வருஷக்கடைசியில் குறிப்பிட்டிருந்த 4 தவணை கடந்த கடன்களும் ஜூலை மாதம் முதலிலேயே வசூலாயிருந்தது. சங்கத்துக்கு வேண்டிய திரவியம்



முழுவதும் பிரஸிடெண்டின் முயற்சியினாலேயே (வருஷம் 1க்கு 100க்கு) 5 முதல் $6\frac{1}{2}$ வட்டி கொடுத்து வாங்கி நடத்திவருகிறது. சங்கத்தில் மிதம் தொகைகளை யூனியன் சங்கங்களுக்கு வருஷம் 1க்கு 100க்கு $7\frac{1}{2}$ வீதம் கடன் கொடுத்துவருகிறது. சங்கத்தின் விஷயத்தில் பிரஸிடெண்டு செக்ரிடெரிகளுடன் மற்ற பஞ்சாயத்தார்களுக்கும் ஐக்கிய இயக்கம் மேலும்மேலும் விர்த்தியடைய சதா பாடுபடும் ராய் ஸாஹேப், C. அரு ளய்யநாயுடு அவர்களும் சங்கத்தின் காரியதரிசியாகிய, C. சவரய்யநாயுடு அவர்களுக்கும் மங்கள வாழ்த்து கூறுகிறார்.

தற்காலம் நடக்கும் மகா கோரமான யுத்தம் சீக்கிரம் முடிவடை யவும், நமது மாக்ஷிமைதங்கிய ஜார்ஜ் சக்கரவர்த்தியவர்கள் ஜயபேரிகை யுடன் வெற்றிபெறவும் வேண்டுமாய் இச்சங்கம் கடவுளை சதா பிரார்த் திக்கின்றது.

---

## தணிக்கை உத்திரவுகள்.

### மதுரை, ராமனாதபுரம், சென்ட்ரல் பாங்கியின் 1916 - 17 வருஷத்திய தணிக்கை உத்திரவு.

மேற்படி பாங்கியின் கணக்குகள் 1917-ம் வருஷம் ஜூன் மாதம் 30-தேதியுடன் முடிவாகும் கோவாபரேடிவ் வருஷத்திற்கு ம-ா-ா-ஸ்ரீ வ. பாலசுப்பிரமணிய பிள்ளை யவர்களால் தணிக்கை செய்யப்பட்டு படி அங்கீகரிக்கப்பட்டன. (1) வரவுசெலவுகள் (2) ஆஸ்தி, கடன் (3) இலாபநஷ்டம் ஸ்டேட்மெண்டுகளை அவர் தயார் செய்தார். பிரஸ் தாப வருஷத்தில் 11 புதிய சொஸைடிகள் பாங்கியுடன் சேர்ந்தன. அவற்றுள் இரண்டு, விவசாய சம்பந்தமல்லாதன; மற்றைய 9-ம் விவசாயச் சங்கங்கள். 14 சொஸைடிகள் முறிவடைந்து கொண் டிருப்பதனால் அவைகள் மெம்பர் ஜாப்தாவிலிருந்து நீக்கப்பட்டன. வருஷக் கடைசியில் 68 தனி நபர்களும் 158 சொஸைடிகளும் மெம்பர்களாக இருந்தார்கள். இவ்விலக்கங்கள் முந்தியவருஷக் கடைசி யில் முறையே 71-ம், 161 மாக இருந்தன.

பாங்கியின் கொடுபட்டிருக்கும் பங்குத்தொகை ரூ. 58,833 லிருந்து ரூ. 63,452 ஆக உயர்ந்தது. இதில் ரூ. 21,220 சொஸைடி களின் பங்குகள். மெம்பர்களிட மிருந்து வந்தடிபாஸிட்டுத் தொகை கள் ரூ. 96,778-10-11லிருந்து ரூ. 1,20,257-6-2 ஆகவும், மற்றவர்களி டமிருந்துவந்த டிபாஸிட்டுகள் ரூ. 3,37,535லிருந்து ரூ. 3,94,217-10-10 ஆகவும் உயர்ந்தன. சென்ட்ரல் சொஸைடிகளுக்கு கொடுக்க வேண் டியதொகை ரூ. 90,000 லிருந்து ரூ. 30,000 க்கு குறைந்தது.

பாங்கி இந்தவருஷம் சொஸைடிகளுக்கு ரூ. 1,45,403-9-4 கடனாக கொடுத்திருக்கிறது. முந்திய வருஷத்தில் இத்தகைய தொகை ரூ. 94,097-10-9. மொத்தம் வசூலாக வேண்டியதொகை ரூ. 1,63,768-4-11 லிருந்து (முன்பணம் வசூல்தொகை ரூ. 53,596 நீங்கலாக) ரூ. 1,05,962-8-11 வசூல் செய்யப் பட்டது. ஆகவே ரூ. 57,800-12-0 அதாவது 100க்கு 35 விழுக்காடு காலங் கடந்த நிலுவையாக ஏற்பட்டுவிட்டது. முறிவடைந்த சொஸைடி சம்பந்தமான நிலுவைகளை நீக்கிக் கணக்குப்பார்த்தால் வசூலிக்கப்பட வேண்டியதொகைக்கும் காலங்கடந்த நிலுவைக்கும் உள்ளசராசரி வீதம் 100க்கு 24 ஆகிறது. சொஸைடிகளிலிருந்து வட்டிக்காக வரவேண்டிய தொகை ரூ. 74,012-11-2 அதில் ரூ. 69,638-4-0 வசூலிக்கப் பட்டது. ஆகவே காலமீறின வட்டி பாக்கி தொகை ரூ. 4,374-7-2.

பிரஸ்தாப வருஷத்தில் பாங்கி அடைந்த நிகரலாபம் ரூ. 17,398-5-1 இதன் விநியோகம் வருமாறு :—

| | | | | |
|---|---|---|---|---|
| (1) | சேம நிதி ... ... | ரூ. 4,099 | 9 | 4 |
| (2) | காரியதரிசிக்கு கௌரவச் சம்பளம் | ரூ. 2,049 | 12 | 7 |
| (3) | பரிசோதனைக்கும் மேற்பார்வைக்கும் ஏற்பட்ட நிதி ... ... | ரூ. 2,049 | 12 | 8 |
| (4) | டிவிடெண்டு ... ... | ரூ. 8,199 | 2 | 6 |

டிவிடெண்டுத் தொகையானது கொடுபட்டிருக்கும் பங்குத்தொகையின் பேரில் 100-க்கு 9-க்கு மேற்படாமலிருக்க வேண்டும். ஏதாவது அதிகம் இருந்தால் அது சேமநிதியில் சேர்க்கப்பட வேண்டும்.

பிரஸ்தாப வருஷத்தில் பாங்கியார் 6 சூபர்வைஸர்களை நியமித்து போதுமான பழக்கம் கொடுத்த பிறகு 6 டிவிஷன்களுக்கு அனுப்பினார்கள். மேற்பார்வை திறமாய் அமையும் பொருட்டு மதுரை ஜில்லாவிலுள்ள உசிலம்பட்டி டிவிஷனுக்கு ஓர் லோகல் யூனியன் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஜில்லா பாங்கியின் பண ஆதரவைக்கொண்டு இந்த வருஷத்தில் அதிக யூனியன்கள் ஸ்தாபிக்கலாம் என்று நம்பப்படுகிறது.

பாங்கி திருப்திகரமாய் வேலைசெய்து கொண்டிருக்கிறது. வழக்கப்படி ம-ா-ா-ஸ்ரீ ராய் சாஹேப் கே. ராமஸாமி அய்யரவர்கள் அதன் திறமானவேலையின் பொருட்டு மிகவும் உழைத்திருக்கிறார்.

### தஞ்சாவூர் ஜில்லா கோவாபரேடிவ் சென்ட்ரல் பாங்கியின் 1915-17 வருஷத்திய தணிக்கை உத்திரவு.

தஞ்சாவூர் ஜில்லா பாங்கியின் கணக்குகள் 1917 ஜூன் 30-தேதியோடு முடிவாகிற கோவாபரேடிவ் வருஷத்திற்கு பப்ளிக் அக்கௌண்டாண்டும் ஆடிட்டருமாகிய ம-ா-ா-ஸ்ரீ ஜி. நரசிம்மம் அவர்களால் தணிக்கை செய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட்டன. (1) வரவு செலவுகள் (2) இலாப நஷ்டம் (3) ஆஸ்திகடன் ஸ்டேட்மெண்டுகள் அவர் தயாரித்திருக்கிறார்.



பிரஸ்தாப வருஷத்தில் பாங்கில் பங்கு எடுத்துகொண்டிருக்கிற சொஸைடிகளின் சங்கியை 73 லிருந்து 82 ஆக அதிகரித்தும் அத்தகைய தனி நபர்களின் சங்கியை 116 லிருந்து 115 ஆகக்குறைந்தும் இருக்கிறது. பங்குத் தொகை ரூ. 61,000த்திற்கு கையொப்பமேற்பட்டிருப்பதில் முந்திய வருஷத்தில் ரூ. 22,240-ம் இந்த வருஷத்தில் ரூ. 23,620-ம் வசூலானதாக காட்டப்படுகிறது.

டிபாஸிட்டுத்தொகைகள் முந்திய வருஷம் ரூ. 2,94,482 இவ்வருஷம் அது ரூ. 2,85,594 ஆகக்குறைந்துவிட்டது; ஏனென்றால் யுத்தக் கடன் பத்திரங்களில் ஈடுபடுத்துவதற்காகமெம்பர்கள் டிபாஸிட்டிலிருந்து பணம் எடுத்து விட்டார்கள். பாங்கியில் சேகரித்து வைத்திருந்த சங்கங்களின் சேமநிதித்தொகை இந்த டிபாஸிட்டுடன்சேர்த்து ரூ. 38,405 லிருந்து ரூ. 42,270 ஆயிற்று.

இவ்வருஷத்தில் கிராம நாணயச் சங்கங்களுக்கு ரூ. 50,236 பொருமான 25 கடன்கள் பாங்கி கொடுத்திருக்கிறது. முந்திய வருஷத்திலோ அத்தகைய தொகை ரூ. 24,597. முந்திய வருஷத்தில் திருப்பி வசூலான கடன்தொகை ரூ. 78,739; இவ்வருஷத்திலே ரூ. 62,836.

பிரஸ்தாப வருஷத்தில் பாங்கி அடைந்த நிகரலாபம் ரூ. 4,040-3-9. முந்தியவருஷத்திலோ ரூ. 2,066-13-2 தான். இதில் 4-ல் ஒருபங்கு அதாவது ரூ. 1,010-0-11 சேமநிதிக்குப் போகவேண்டியது. நிர்வாக சபையார் லாபத்தில் 8-ல் ஒரு பங்கு அதாவது ரூ. 505-0-5 செகிரிடேரிக்கு கௌரவச் சம்பளமாகக் கொடுக்கப்படவேண்டு மென்றும் கொடுபட்டிருக்கிற பங்குத் தொகையின் பேரில் 100-க்கு $7\frac{1}{2}$ வீதம் டிவிடெண்டு கொடுக்கப்படவேண்டு மென்றும் பிரஸ்தாபிக்கிறார்கள். இதற்கு ரூ. 1,709-12-1 ஆய்விடும். மிகுதித் தொகையில் ரூ. 307-10-0 மூன்றுமாதத்திய வேலைச் செலவுக் கென்று எடுத்து வைப்பதாய் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. இது போனால் நிகர கையிருப்பு ரூ. 507-12-4 ஆகிறது. 18 நெ. டைலா பிரகாரம் மேற்பார்வைக் கென்று வைக்கவேண்டிய தொகைக்காக இவ் வருஷம் யாதொன்றும் எடுத்து வைக்கப்படவில்லை. அதற்காக ரூ. 440 எடுத்துவைப்பதாகபோர்ட்டார் இப்பொழுது பிரஸ்தாபிக்கிறார்கள். இவ் விதம் செய்யப் பைலாவாவது சட்டமாவது கிடையாது. ஆகையால் பிரஸ்தாப வருஷக்கணக்கில் இந்த ரூ. 440 பண்டிலிருந்து வரவேண்டிய பாக்கியாக எடுக்கப்பட்டு மேற்படி ரூ. 507-12-4 முழுவதையும் சேமநிதி

யில் சேர்த்ததின்பேரில் அச்சேமநிதி ரூ. 3,349-10-1 ஆகும். மதராஸ் சென்ட்ரல் அர்பன் பாங்கியில் ஏற்கனவே சேர்க்கப்பட்டிருக்கும் சேம நிதியின்பேரில் 1916-17-க்கு ஏற்பட்ட வட்டித்தொகை ரூ. 88-[illegible]-9-ஐக் கழித்துக்கொண்டு ஷைபாங்கிற்கு ரூ 651-9-6-ஐ இந்த பாங்கி அனுப்பும் படி கோரப்படுகிறது. ரூ. 775-0-0 ஏற்கனவே போஸ்டாபீஸ் யுத்தக் கடன் பத்திரத்தில் வைக்கப்பட்டிருக்கிறது.

இந்த வருஷம் பாங்கி நல்ல வேலை செய்துகொண்டு வருகிறது. டைரக்டர்களும் அதை சிகிரிடேரி சீனிவாசய்யங்கார் அவர்களும் மிக வும் நன்கு மதிக்கப் படுகிறார்கள்.

## செங்கற்பட்டு டிஸ்ட்ரிக்ட் பாங்கிங் யூனியன் 1916-17-ம் வருஷத்திய தணிக்கை உத்திரவு.

1917 வருஷம் ஜூன்மாதம் 30-ம் தேதியோடு முடிவாகிற கோவாபரேடிவ் வருஷத்திற்கு காஞ்சீபுரத்திலுள்ள செங்கற்பட்டு டிஸ்ட்ரிக்ட் பாங்கிங் யூனியனின் கணக்குகள் அஸிஸ்டெண்டு ரிஜிஸ்ட்ரார் ம-ள-ள-ஸ்ரீ, டி. அருளானந்தம் பிள்ளை யவர்களால் தணிக்கை செய்யப்பட்ட பிரகாரம் அங்கீகரிக்கப்பட்டன: (1) வரவுசெலவுகள். (2) லாபநஷ்டங்கள் (3) ஆஸ்திகடன்கள் ஆகிய இவைகளைக் காட்டும் ஸ்டேட்மெண்டுகள் அவரால் தயாரிக்கப்பட்டன.

வருஷஆரம்பத்தில் 238 சொஸைடிகள் பங்குக்காரர்களா யிருந்தன. பிரஸ்தாப வருஷத்தில் 4 தனிமெம்பர்களும் 22 சொஸைடிகளும் பங்குக்காரர்களாய்ச் சேர்ந்தார்கள். ஆகவே வருஷக் கடைசியில் இந்த 4 மெம்பர்களாலும் 260 சொஸைடிகளாலும் எடுத்துக் கொள்ளப்பட்டிருந்த பங்குகளின் மொத்தம் 1,343. அதற்காக கொடுக்கப்பட்ட தொகை ரூ. 8,274. வருஷ ஆரம்பத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டிருந்த பங்குகளின் மொத்தம் 1278 தொகை ரூ. 5,486.

இந்த பாங்கிங் யூனியன் சென்ற இரண்டு வருஷமாக வேலைசெய்து வந்த போதிலும் மெம்பரல்லாதவர்களிடமிருந்து வந்த டிபாஸிட்டுத் தொகைகள் ரூ. 5,085 தான். வருஷக்கடைசியில் இருந்த மொத்த டிபாஸிட்டுத் தொகை ரூ. 10,085. வருஷம் கடைசியில் செங்கற்பட்டு ஜில்லாவிலுள்ள சொஸைடிகளின் சேமநிதித் தொகையாக இந்த பாங்கிங் யூனியனில் டிபாஸிட்டு செய்யப்பட்டிருப்பது ரூ. 21,438-3-6. இதர சென்ட்ரல் சொஸைடிகளிடமிருந்து வந்த கடன்களின் மொத்தம் 1917 ஜூன் 30-ம் தேதியில் ரூ. 4,17,000. வருஷக்கடைசியில் வாங்கப்பட்டிருந்த மொத்தக்கடன் தொகை ரூ. 5,30,323-3-6. ஆனால் வருஷ ஆரம்பத்திலிருந்த கடன் தொகையின் மொத்தம் ரூ. 2,51,484-6-6.

பிரஸ்தாப வருஷத்தில் சொஸைடிகளுக்குக் கொடுக்கப்பட்ட கடன்களின் மொத்தம் 165க்கு தொகை ரூ. 3,09,799. இவ்வகையில் சென்ற வருஷத்திய இலக்கம் 12௦ ம், ரூ. 2,62,700-ம் ஆக இருந்தன. வருஷக் கடைசியில் நிலுவையிலிருந்த கடன்களின் இலக்கங்களும் தொகைகளும் முறையே 280, ரூ. 5,10,211. இவ்வினத்தில் 1916 ஜூன் 30ம் தேதியின் இலக்கம் முறையே 120, ரூ. 2,53,550.

யூனியன் அடைந்த நிகரலாபம் ரூ. 1,236-4-1. அதன் விநியோகம் வருமாறு:—

100க்கு 25 விழுக்காடு சேமநிதி பண்டு—ரூ. 309-1-1.

100க்கு 7½ விழுக்காடு பொதுநல பண்டு—ரூ. 92-11-6.

டிவிடெண்டுக்கு உரித்தான மிகுதித் தொகை—ரூ. 834-7-6.

சேமநிதித் தொகையை அவ்வினத்தில் சேரவேண்டிய வட்டியைக் கழித்து மதராஸ் சென்ட்ரல் ஆர்பன் பாங்கியில் கட்டிவைக்க வேண்டியது யூனியனது மொத்தச் சேமநிதி ரூ. 834-0-2 ஆகிறது. (524-15-1+309-1-1) பங்குக்காரர்களுக்கு கொடுத்திருக்கிற தொகையின்பேரில் 100க்கு 7½ வீதம் டிவிடெண்டு பங்கிடும்படி உத்தரவாயிருக்கிறது. பங்குத் தொகையின்பேரில் கொடுக்கவேண்டிய 100க்கு 9 வீதம் ஏற்படும் டிவிடெண்டுக்கும் வாஸ்தவமாகக் கொடுத்த அதாவது 7½ வீதம் கொடுத்த டிவிடெண்டுக்கும் உள்ள வித்தியாசத்தை பைலா 29 ஏ. பிரகாரம் டிவிடெண்டை சமரசப்படுத்தும் பண்டில் சேர்க்கவேண்டும். நிகரலாபத்தில் மிகுதி ஏதாவது இருந்தால் சேமநிதிக்குக் கொண்டுபோகவேண்டும்.

டிபாஸிட்டுகளும் தனிமெம்பர்களின் பங்குகளும் அதிகமாய்ச் சேரும்படி யூனியன் தீவிரமான பிரயத்தனம் செய்யவேண்டும். 400 தனிமெம்பர்கள் சேருவதற்கு சட்டம் இடங்கொடுத்திருந்தும் 10 பங்குகள்தான் எடுக்கப்பட்டிருக்கின்றன.

---

## ஸ்ரீவில்லிபுத்தூர், சாத்தூர் தாலுக்காக்களின் கோவாபரேடிவ் கான்பரன்ஸ்.

ஸ்ரீவில்லிபுத்தூர், சாத்தூர் கோவாபரேடிவ் தாலுக்கா கான்பரன்ஸானது 1918ஞு மார்ச்மீ 31உ பகல் 12-மணிக்கு ஸ்ரீவில்லிபுத்தூர், இந்து ஹைஸ்கூலில் கூடிற்று. அக்காலத்தில் ஸ்ரீவில்லிபுத்தூர் அடிஷ

னல் டிஸ்டிரிக்ட் முன்சீப், ம-ா-ா-ஸ்ரீ A. சேஷகிரி ராவ், B. A., B. L., அவர்கள் அக்கிராசனம் வகித்தார். ஐக்கிய சங்கங்களின் ரிஜிஸ்ட்ரார் மிஸ்டர் F. R. ஹெம்மிங்வே துரையவர்களும் மதுரை செக்ஷன் அசிஸ்டெண்ட் ரிஜிஸ்ட்ரார் ம-ா-ா-ஸ்ரீ P. மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை யவர்களும் ஸ்பெஷல் டிப்டி கலெக்டர், ம-ா-ா-ஸ்ரீ D. ஆனந்த ராவ் அவர்களும் விஜயம் செய்திருந்தார்கள். ஷை 2 தாலுக்கா சங்கங்களின் பிரதிநிதிகளும் ஸ்ரீவில்லிபுத்தூர் கஸ்பாவிலிருந்தும் அநேக பிரமுகர்களும் வந்திருந்தார்கள். கான்பரன்ஸ் சரியாய் 12-மணிக்கு ஆரம்பமாயிற்று. வரவேற்புச் சபை பிரஸிடெண்டும் ஸ்ரீவில்லிபுத்தூர் ஐக்கிய நாணயச் சங்கம் காரியதரிசியுமான மிஸ்டர் V. வெங்கிட சுப்பய்யர், விஜயஞ் செய்திருக்கும் பிரதிநிதிகளையும் இதர கனவான்களையும் நல்வரவேற்று ஒரு உபந்நியாசம் செய்தார். ஷை உபந்நியாசத்தில் ஐக்கிய சங்கங்களின் தன்மையைப் பற்றியும் நடக்க வேண்டிய வழிகளைப் பற்றியும் சவிஸ்தாரமாய் பேசியிருக்கிறது. ஷையார் பிரசங்கம் பூராவையும் மறு சஞ்சிகையில் காணலாம். அப்பால் பிரஸிடெண்ட் அவர்கள் எழுந்து தன்னுடைய அருமையான பிரசங்கத்தைப் படித்தார்கள்.

பிரஸிடெண்ட் அவர்களின் உபந்நியாசம் முடிந்ததும் கான்பரன்ஸ் ஸெக்ரிடேரி கான்பரன்ஸுக்கு வரக்கூடாமையைப்பற்றி கனவான்கள் எழுதிய கடிதங்களைப் படித்தார். அவைகளில் முக்கியமானவர்கள்: திவான் பஹதூர் L. D. சுவாமி கண்ணு பிள்ளையவர்கள், ஆனரபில் ராவ் பஹதூர் V. K. இராமானுஜாச்சாரியார் அவர்கள். அப்பால் கான்பரன்ஸ் ஸெக்ரிடேரிகளில் ஒருவராகிய மிஸ்டர் R. ஆனந்த ராவ் இரண்டு தாலுக்காக்களின் ஐக்கிய சங்கங்களின் சரித்திரத்தைப் படித்தார். அதில் சில முக்கிய விஷயங்கள் அடங்கியிருப்பதுடன் அங்கங்கே சங்கங்கள் நடக்க வேண்டிய மாதிரியைப் பற்றி கற்பனையாய் சொல்லப்பட்டிருக்கிறது. அப்பால் ஸ்ரீவில்லிபுத்தூர் ஐக்கிய நாணயச் சங்கத்தின் பிரஸிடெண்ட் மிஸ்டர் A. ஸ்ரீனிவாசாரியார் "ஸ்ரீவல்லிபுத்தூரில் ஐக்கிய முறையும் கைத்தொழிலும்" என்னும் விஷயமாய் ஒரு இனிமையான வியாசம் படித்தார்.

செங்கமலநாச்சியார்புரம் ஐக்கிய நாணயச் சங்கம் ஸெக்ரிடேரி மிஸ்டர் V. ரங்கசாமி நாயுடு கால்நடை மேய்ச்சல், கால்நடை இன்ஷியூரன்ஸ் விஷயமாய் ஒரு வியாசம் படித்தார்.

மிஸ்டர் R. ஆனந்த ராவ் ஐக்கிய முறையில் மாகூல் விற்பனையைப் பற்றி ஒரு வியாசம் படித்தார்.

அப்பால் சிற்றுண்டிக்காக கான்பரன்ஸ் கலைந்து, மறுபடியும் மாலை 3-மணிக்கு கூடப்பட்டது.



இதனடியிற்கண்ட தீர்மானங்கள் கவனிக்கப்பட்டன. ஒவ்வொரு தீர்மானமும் முறையே பிரேரேபித்து ஆமோதித்து முடிந்ததும் தர்க்கிக்கப்பட்டு பின்பு முடிவுக்கு வந்தது. அந்தக் காலத்தில் கனம் ரிஜிஸ்ட்ராரவர்கள் ஒவ்வொரு தீர்மானத்தைப் பற்றியும் தன் அபிப்பிராயத்தை வெளிப்படுத்தி தீர்மானத்தின் சாராம்சத்தை சபையோர்களுக்கு மிகவும் தெளிவாய் விளக்கிச் சொன்னது இப்பக்கத்து ஐக்கிய இயக்கத்தை நன்கு வேரூன்றச் செய்யும் என்பது திண்ணம்.

பின்வரும் தீர்மானங்கள் கான்பரன்ஸால் அங்கீகரிக்கப்பட்டன:—

1. ஸ்ரீவில்லிபுத்தூர், சாத்தூர் தாலுக்காகளிலுள்ள விவசாயிகளின் சௌகரியத்தை உத்தேசித்து விவசாயச் சங்கங்களுக்கு வேண்டிய சாமான்களை சப்ளைசெய்ய சௌகரியமான இடங்களில் நாணயச் சங்கங்கள் மெம்பராகவுள்ள மத்திய விவசாயச் சங்கங்கள் ஸ்தாபிக்கவேண்டுமென்று இந்தக் கான்பரன்ஸ் டிபார்ட்மெண்டாரை கேட்டுக்கொள்ளுகிறது.

2. சங்கம் தன் மெம்பருக்கு விவசாயத்துக்கும் கிஸ்துக்காகவும் குறுகிய காலக்கடன் கொடுக்கும்போது அறுவடை காலத்துக்குப் பின் விலைகள் ஏறி லாபம் கிடைக்கும்படியாக விற்று கடனைத் தீர்க்க யேதுகரமாய் திருப்பிக் கொடுக்கும் காலத்தைக் குறிப்பிட வேண்டுமென்று இந்தக் கான்பரன்ஸ் தீர்மானிக்கிறது.

3. மெம்பர்களின் மாகூலை மொத்தமாய் சேகரித்துவிற்று மத்திய தரகர்கள் அடையும் லாபத்தை மெம்பர்கள் அடையும்படி செய்யவேண்டிய வேலையை உடனே யேற்றுக்கொள்ள வேண்டுமென்று இக்கான்பரன்ஸ் அபிப்பிராயப்படுகிறது.

4. ஸ்ரீவில்லிபுத்தூர், சாத்தூர் தாலுக்காவிலுள்ள சங்கங்களை மேற்பார்வைசெய்ய சூபர்வைஸிங் யூனியன்கள் ஸ்தாபிக்க வேண்டுமென்று இந்தக் கான்பரன்ஸ் அபிப்பிராயப்படுகிறது.

5. ஒரு குறிப்பிட்ட எல்லையிலுள்ள ஐக்கிய சங்கங்கள் செய்யும் வேலைகளை ஒன்றுக்கொன்று தெரிந்துகொள்ளும் பொருட்டும் அவ்விதம் தெரிந்து கொள்ளுவதில் ஏற்படும் குணதோஷங்களை விவரித்துப்பேசி சங்கங்களை நல்ல நிலைமையில் வைப்பதற்கு சௌகரியமாக இருக்கும் பொருட்டும் அப்போதைக்கப்போது சிறு கூட்டங்கள் கூடவேணுமாய் அபிப்பிராயப்படுகிறது.

6. ஐக்கிய இயக்க அபிவிருத்தியை உத்தேசித்து கிராமங்களில் கல்வி அவசியமென்பதையும் அது இல்லாமல் ஐக்கிய இயக்கத்தின்

வளர்ச்சி தடைப்பட்டு நிற்கிறதையும் தெரிந்து கொண்டிருப்பதால் கல்வி அபிவிர்த்தியையும் ஐக்கிய இயக்க அபிவிர்த்தியையும் உத்தேசித்து சங்கம் ஏற்பட்டு வேலை நடந்துவரும் கிராமத்தில் பள்ளிக்கூடங்களிருந்தால் ஐக்கிய சங்க மெம்பர்கள் தங்கள் பிள்ளைகளை பள்ளிக்கூடத்துக்கு கட்டாயமாய் அனுப்ப வேண்டுமென மெம்பர்களைத் தூண்டவேண்டுமென்றும் பள்ளிக்கூடங்கள் இல்லாதவிடங்களில் அவைகளை ஸ்தாபித்து கொடுக்கவேண்டுமென்றும் கவர்ன்மெண்டாரை டிபார்ட்மெண்டார் மூலமாய் கேட்டுக்கொள்ள இக்கான்பரன்ஸ் தீர்மானிக்கிறது.

7. சங்கங்களில் ஜாஸ்தி கையிருப்புத்தொகை வைத்திருப்பதை தடுக்கும் பொருட்டும் சங்கங்கள்சென்ட்ரல் பாங்கிக்கு பணம் அனுப்புவதிலும் வாங்குவதிலும் ஜாஸ்தி செலவும் நேரிடுவதால் தாலுக்கா ஹெட்குவாட்டர் சங்க மூலமாயாவது அல்லது யூனியன் மூலமாயாவது அனுப்புவது உசிதமாவென்று யோசித்து நடத்த கேட்டுக்கொள்ளுகிறது.

8. சங்கங்களின் பத்திரங்களை வியாச்சியம் செய்ய நேரிடும் சில சமயங்களில் சட்ட சம்பந்தமான நடவடிக்கைகளில் தவறுதல்கள் ஏற்பட்டு சங்கங்களுக்கு நஷ்டம் உண்டாவதால் அதைத் தடுக்கும் பொருட்டு மெம்பர்கள் கடனுக்காகத் தொகை செலுத்தும் காலங்களில் பத்திரத்தில் கடன் வாங்கினவர்கள், ஜாமீன் நின்றவர்கள், இவர்களிடம் கையெழுத்து வாங்கிவருவது அவசிய மென்றும் அப்படி வாங்கி வந்தாலும் 3 வருஷத்துக்கொருதடவை கட்டாயமாய் பத்திரங்களை புதுப்பித்துக் கொள்ளவேண்டுமென்றும் இந்தக் கான்பரன்ஸ் அபிப்பிராயப்படுகிறது.

9. ஸ்ரீவில்லிபுத்தூர் கஸ்பாவில் ஐக்கிய இயக்கம் பரவவேண்டியதற்காக நெசவு சங்கம், வாற்புவேலை, ஐக்கிய ஸ்டோரஸ், மாடு மேய்க்கும் சங்கம், கால்நடை இன்ஷியூரன்ஸ், பள்ளிக்கூடங்களில் ஐக்கிய முறையில் புஸ்தக விற்பனைசாலைகள், முதலிய நாணயமில்லாத இதர சங்கங்களை வேண்டிய விசாரணை செய்து ஸ்தாபிக்கவேண்டுமென கேட்டுக்கொள்ளுகிறது.

10. மதுரை இராமனாதபுரம் சென்ட்ரல்கோவாபரேடிவ் பாங்கானது ஜாஸ்தி தூரமாயிருப்பதை உத்தேசித்தும ஷை பாங்கில் இந்த இரண்டுதாலுக்கா பிரதிநிதிகள் இல்லாமலிருப்பதாலும் ஸ்ரீவில்லிபுத்தூர், சாத்தூர் தாலுக்காக்களுக்காவது அல்லது ஒரு பாகத்திற்காவது பாங்கிங் யூனியன் ஒன்றை ஸ்தாபிக்க-வேண்டுமென இந்தக் கான்பரன்ஸ் தீர்மானிக்கிறது.

11. சென்ட்ரல் பாங்குகள் டிமோகிரஸியாயிருக்க (Democracy) வேண்டியதற்காக சங்கங்களின் பிரதிநிதிகள் ஜாஸ்திப்படுத்துவதில்



யூனியன்களின் பிரதிநிதிகள் அவசியமிருக்கவேண்டியதென இக்கான்பரன்ஸ் தீர்மானிக்கிறது.

ரிஜிஸ்ட்ராரவர்கள் சபையில் பெரும்பாலும் தமிழில் பேசினது கிராமங்களிலிருந்து வந்திருக்கும் பிரதிநிதிகளுக்கு ஐக்கிய இயக்கம் விஷயமாய் நிரம்பவும் ஊக்கத்தைக் கொடுத்திருக்கிறது.

தீர்மானங்கள் நிறைவேறின பிறகு கனம் பிரஸிடெண்ட் அவர்கள் முடிவுரைப் பிரசங்கமானது சங்கங்களுக்கு புத்திமதியாகவிருந்தது. அதில் டிபார்டுமெண்ட் உத்தியோகஸ்தர்கள் இதில்காட்டும் ஊக்கத்தையும் உழைப்பையும் பற்றி சிலாக்யமாய் பேசி சங்கங்களில் தவணை தவறியிருக்கும் கடன்களைப்பற்றி பேசிவிட்டு மறுதட்வை கூடும் போது தவணைதப்பின கடன்கள் இல்லை என்பதாக கேட்பதில் தனக்கு மிகசந்தோஷ முண்டாகுமென்று சொல்லி கனம் ரிஜிஸ்ட்ராரவர்களுக்கும் அசிஸ்டண்ட் ரிஜிஸ்ட்ராரவர்களுக்கும் வந்தன மளித்து கான்பரன்ஸை முடித்தார்கள்.

அப்பால் வரவேற்புச்சபை சேர்மென் வழக்கம்போல் பிரஸிடெண்ட், அவர்களுக்கும் ரிஜிஸ்ட்ரார் அஸிஸ்டண்ட் ரிஜிஸ்ட்ரார், ஆகிய இவர்களுக்கும் விவசாய டிபார்டுமெண்டார் தங்கள் பிரதிநிதியை அனுப்பியிருந்ததற்காக அவர்களுக்கும், மதுரை ம-ா-ா-ஸ்ரீ ராவ் சாகேப் K. இராமசாமி அய்யர், பாளையங்கோட்டை, மிஸ்டர் N. கிருஷ்ணசாமி அவர்கள் ஆகிய இவர்களுக்கும் ஸ்கூல் கமிட்டியாருக்கும் வந்தனமளித்து கான்பரன்ஸ் கலைந்தது.

மேற்படி நடவடிக்கைளின் மத்தியில் அரைமணிநேரம் புகைப்படம் பிடிப்பதற்காக கான்பரன்ஸ் கலைந்தது. கான்பரன்ஸ் நடவடிக்கை பூராவும் தமிழிலேயே நடத்தப்பட்டது.

கான்பரன்ஸுக்கு இரண்டு தினங்களுக்கு முன்னமேயே ரிஜிஸ்ட்ரார், அஸிஸ்டெண்ட் ரிஜிஸ்ட்ரார்கள் ஸ்ரீவில்லிபுத்தூருக்கு விஜயம் செய்து கான்பரன்ஸில் கவனிக்கவேண்டிய விஷயங்களைப்பற்றிப் பேசி தீர்மானங்கள் எழுதவேண்டிய முறையைப்பற்றி கற்பனைகொடுத்தது கான்பரன்ஸ் ஸ்தாபகர்களுக்கு நிரம்பவும் உபகாரமாயிருந்தது. அநேக சங்கங்களின் கணக்குகளை ரிஜிஸ்ட்ரார் நேரில்பார்த்து பஞ்சாயத்தார்களுடன் நேரில் தமிழில் பேசினது, சங்கம் பஞ்சாயத்தார்களுக்கு நிரம்பவும் உற்சாகம்கொடுத்தது. கணக்குகளைப் பார்த்து கணக்கிலிருக்கும் குணதோஷங்களை பஞ்சாயத்தார்களுக்கு விவரித்துக் காட்டினார்கள். கான்பரன்ஸ் முடிந்த மறுதினம் கனம் ரிஜிஸ்ட்ராரவர்கள் தன் அஸிஸ்டெண்ட் ரிஜிஸ்ட்ரார்களுடன் ஸ்ரீவில்லிபுத்தூர்

நெசவுதொழில் செய்யும் சாலியர் குடியிருப்புக்குச் சென்று சாலியர்களுடைய நிலைமையை நன்றாய்த்தெரிந்துகொண்டு அவர்களுக்கு வேண்டிய உதவி செய்வதாய்ச் சொல்லியிருக்கிறார்கள். இவர்களுடன் சுமார் 4-மணி நேரம் தமிழில் பேசி உற்சாகத்தை உண்டாக்கினார்கள். அப்பால் மாலையில் வெங்கலவார்ப்பு வேலைசெய்யும் கன்னார்கள் தெருவிற்குப்போய் அவர்கள் செய்யும் வேலைப்பாடான சாமான்களைப்பார்த்து ஷை வேலைக்காரர்களுக்கு உபகாரம் செய்ய சங்கம் ஸ்தாபிப்பது உசிதமென்று அபிப்பிராயப்பட்டிருகிறார்கள்.

கான்பரன்ஸ் முடிந்த மறுதினத்திலேயே கான்பரன்ஸின் 4-வது தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதாவது ஸ்ரீ வில்லிபுத்தூரில் ரூபர் வைஸிங் யூனியன் ஒன்று ஸ்தாபித்து வேலைதுவக்கம் செய்யப்பட்டது.

---

# ஐக்கிய இயக்க அபிவிருத்திக்குத் தேவை.

ஒரு கோவாபரேடர் எழுதினது.

நமது சென்னைக் கூட்டுத்தொழில் வர்த்தமானியில் 9-வது வால்யூம் 8-வது இலக்கம் 313-வது பக்கத்தில் அனக்காவூர் யூனியன் ம-ா-ா-ஸ்ரீ, P. நாராயணசாமி அய்யரவர்கள் எழுதியிருக்கும் வியாசத்தின் 2-வது பாராவில் உத்தியோகஸ்தரல்லாத ஐக்கிய முயற்சிக்காரர்களும், டிபார்டுமெண்ட் உத்தியோகஸ்தர்களும் அபிப்பிராயபேதங்கள் இல்லாமல் ஒத்துழைக்க வேண்டுமென்று பொருள் படும்படியாய் எழுதியிருக்கிறார். இது முற்றிலும் உண்மையே. எங்கும் இந்த அபிப்பிராயங்கள் இருந்துகொண்டுதான் வருகிறது. இது நிற்க, உத்தியோகஸ்தரல்லாத ஐக்கிய முயற்சிக்காரர்களுக்குள்ளேயே அபிப்பிராயபேதங்கள் ஏற்பட்டு அப்பேர்ப்பட்ட அபிப்பிராயபேதத்தால் ஐக்கிய இயக்கம் செழிக்க இடமில்லாமல் தவிக்கிறது. அப்பேர்ப்பட்ட அபிப்பியாயபேதங்கள் நமக்குள் இல்லாமற் செய்துகொண்டு அப்பால் அதின் மேல் கவனிக்கவேண்டும். ஐக்கிய இயக்கத்தில் பணக்காரர்கள், எளியவர்கள், படித்தவர்கள், படியாதவர்கள், கிராமவாசிகள், பட்டணவாசிகள் என்ற வித்தியாசம் பாராட்டாமல் ஒருவருக்கொருவர் சமத்துவமென்று நினைத்து வேலை செய்வதுதான் விரும்பத்தக்கது. இப்பால் பணம் படைத்த சில ஐக்கியஸ்தர்களால் எளிய ஐக்கியஸ்தர்கள் இகழப்பட்டு வருவதை நோக்கி அதைத் தடுக்குமாறு சில விஷயங்களை ஐக்கிய இயக்க அபிவிர்த்தியை உத்தேசித்து எழுதியிருப்பதில் தயவுசெய்து இதை பிரசுரம்



செய்ய வேணுமாய் பத்திராதிபரை கேட்டுக்கொள்ளப்படுகிறது. நம்மிந்தியர்களின் அபிவிர்த்திக்காக ஐக்கிய சங்கங்கள் ஏற்பட்டு வேலை நடந்து வருகிறது. அதில் ஏளியவர்களும், பணக்காரர்களும் சேர்ந்து வருவதில், அதிகநன்மை எளியவர்கள் அடைந்து வருகிறார்களென்பது யாவரும் ஒப்புக்கொள்ளுவார்கள். ஒரு கிராமத்தில் ஒரு ஐக்கிய சங்கம் ஏற்பட்டால் அதை நடத்துவதற்கு ஒரு எளியவரும் அந்த எளியவரைத் தூண்டி வேலை வாங்குவதற்கு சில பணக்காரர்களும் வேண்டியது அவசியந்தான். ஆனால் அனுபவத்தில் பணக்காரர்கள் முதலில் ஒதுங்கி நின்று எளியவர்கள் ஒன்றுசேர்ந்து தங்களுக்காக ஒரு சங்கம் வைத்து நடத்திவருகையில் எளியவர்கள் அடையும் சௌகரியத்தையும் நிர்வகிக்கும் தன்மையையும் கண்டு தாங்களும் அவ்விதப் பலன்களடைய வேண்டுமென்று ஆசைக்கொண்டு பின்னால் சங்கத்தில் சேர்ந்து முன் எளியவர்கள் செய்த வேலையின் பலனை பின்வந்த வலியவர்கள் அனுபவிக்கிறார்கள். சிற்சில இடத்தில் வலியவர்கள் ஆதியிலேயே சேர்ந்து எளியவர்களைக்கொண்டு வேலை நடத்தி அதின் பயனை வலியவர்கள் அடைகிறார்கள். இந்த ஏற்பாடு தான் எங்கும் நடந்துவருகிறது. இவ்விதம் நடந்துவருவதில் ஐக்கிய சங்கங்கள் எளியவர்களுக்குத்தான் முக்கியமாய் கருதப்பட்டதென்பதை கவனிக்கவேண்டும். அனுபவத்தில் எந்த சங்கத்திலும் எளியவர்களே ஜாஸ்தியாயிருக்கிறார்கள். எளியவர்களிருக்கவேண்டியதென்பதையும் அவர்களுக்காகத்தான் சங்கங்கள் கருதப்பட்டதென்பதையும் எப்போதும் மறக்கக்கூடாது. ஆனால் முழுவதும் எளியவர்களேயிருந்தாலும் வலியவர்களும் சிலர் இருக்கத்தான் வேண்டும். வலியவர்கள் சிலர் இருந்தால்தான் அவர்களை உத்தேசித்து விவகாரங்கள் சரியாய் நடக்குமென்று ஜனங்கள் நம்புவார்கள். இதை உத்தேசித்து சில வலியவர்கள் இருக்கவேண்டியது அவசியந்தான். ஆனால் வலியவர்கள் தங்களுக்கு விசேஷ பாத்தியம் கொண்டாடாமல் இருக்க வேண்டியது அவசியம். எப்படி ஒரு சங்கத்துக்கு எளியவர்களும், வலியவர்களும் அவசியமென்று கருதப்பட்டதோ அவ்விதமே ஒரு இலாகாவில் ஐக்கிய இயக்கம் பரவச்செய்ய வலியவர்களும் எளியவர்களும் வேண்டும். ஒரு இடத்தில் வலியவர்கள் உதவியால் காரியாதிகள் சுலபமாய் முடியும். மற்றொரு இடத்தில் எவ்வளவு வலியவர்களிருந்தாலும் எளியவர்களுக்குத்தான் சொல்சக்தி ஏற்பட்டிருக்கும் இவர்கள் சகாயத்தால் காரியாதிகள் சுலபமாய் முடியும். உதாரணமாக:—
ஒரு இடத்தில் ஐக்கிய சங்க கான்பரன்ஸ் நடந்தது. மேற்படி கான்பரன்ஸுக்கு சமீபத்திலுள்ள சங்கங்கள் சந்தா தொகை கொடுத்து உதவின. மேற்படி கான்பரன்ஸுக்கு இரண்டு காரியதரிசிகள் தெரிந்தெடுக்கப்பட்டார்கள். அதில் ஒருவர் எளியவர்; ஆறு சங்கங்களிடத்தில் மதிப்பு

பெற்றவர். மற்றொரு காரியதரிசி பணக்காரரும் செல்வாக்கும் உடையவர். கான்பரன்ஸ் நடந்த மறுதினம் ஒருசங்கம் காரியதரிசி தன் சங்கத்து சந்தாவைச்செலுத்த மேற்படி இரண்டு காரியதரிசிகளிருக்குமிடத்திற்கு வந்தார். அக்காலத்தில் ஷை ஸர்க்கில் சூபர்வைஸரும் வந்திருந்தார். சங்க காரியதரிசி சந்தாத்தொகை எவ்வளவு செலுத்த வேண்டுமென்று கேட்டார். அப்பொழுது கான்பரன்ஸ் காரியதரிசிகளில் ஒருவர் ஒரு குறிப்பிட்ட தொகையைச் சொன்னார். கான்பரன்ஸுக்கு அதுவரை செலவா யிருக்கும் தொகையையும் பின்னால் செலவு செய்யவேண்டி யிருக்கும் தொகையையும் உத்தேசித்து சங்கம் செய்யும் லேவாதேவி முதலிய விவரங்களை யோசித்து ஷை தொகை சொல்லப்பட்டது. ஆனால் கேட்ட காரியதரிசிக்கும் ஸர்க்கில் சூபர்வைஸருக்கும் ஷை தொகை ஜாஸ்தியென்று தோன்றியதினால் தாங்கள் ஒருதொகையைச் சொன்னார்கள். இந்த 2 அபிப்பிராயத்தையும் கேட்ட சங்கம் காரியதரிசி முன் சொன்ன எளிய காரியதரிசியின் அபிப்பிராயத்துடன் கலந்து முன் சொன்ன தொகையை செலுத்திவிட்டார். இதினால் எளியவர்களுக்கும் வலியவர்களைக் காட்டிலும் சிற்சில இடத்தில் மதிப்புண்டென்று ஏற்படுகிறது. ஆகையால் ஐக்கிய இலாகா அபிவிர்த்திக்கு வலியவர்கள்தான் வேண்டுமென்றும் எளியவர்களிடத்தில் அவர்கள் சேரக் கூடாதென்று வாதிப்பதானது நல்ல யோசனையாய் கருதப்படாது. ஐக்கிய இயக்கமானது எளியவர்கள் இல்லாமற்போனால் இவ்வளவு முன்னேற்ற மடைந்திரா தென்பதை பற்பல ரிப்போட்டுகள் புலடின்கள் முதலிய பிரசுரங்களைப் பார்த்தால் தெரியவரும். சில பணம்படைத்த ஸ்ரீமான்களும் ஐக்கிய இயக்கத்தில் ஈடு பட்டவர்களென்று பேரெடுத்தவர்களா யிருந்தும் சிலர்கள் தங்களுக்குத்தான் பணமும் கௌரவமும் ஏற்பட்டு விட்டதென்று எண்ணி எளியவர்களை ஐக்கிய இயக்கத்தில் சேர்க்காமல் உதைத்துத் தள்ள பிரயத்தினப் படுகிறார்கள். இவர்கள் புத்தியை நாம் என்னவென்று சொல்லுவது? இவர்களின் செல்வமானது அவர்கள் முயற்சியாலும் அவர்கள் குடும்பத்தை சேர்ந்த மற்றவர்கள் முயற்சியிலும் சேர்ந்திருக்கலாம். அது எப்படியு மிருக்கட்டும். இந்த ஐக்கிய இயக்கம் இவர்களை கௌரவிக்கும்படி முன்னேற்ற மடைந்தது எப்படி? அட்டை மனிதர் தேகத்தின் இரத்தம் உருஞ்சுவதுபோல் இவ்வெளியவர்களிடம் உருஞ்சி வேலைவாங்கி இவர்கள் வேலையின் பயனாய் தங்களுக்கு கௌரவம் வந்ததை மறந்துபோய் எளியவர்களை அவமதிக்கத் தொடங்குவது அவர்கள் கொண்ட கௌரவத்துக்கு அழகாயிராது. எளியவர்களும் தன்னைப்போல வந்துவிட்டால் என்ன செய்வதென்று எண்ணங்கொண்டு இப்படி சில செல்வம் படைத்தவர் வேலை செய்து வருவதை நோக்க நமக்கு விசனகரமா யிருக்கிறது. இந்த இடத்தில் ஷை யார்களுக்கு சில வார்த்தைகளைச் சொல்ல



அனுமதி வேண்டப்படுகிறது. செல்வம்படைத்த கௌரவஸ்தர்களே! நீங்கள் இவ்விதம் சொல்வதானது உங்களுக்கு எந்த வழியில் கௌரவம் கிடைத்ததோ அந்த வழியை விருத்தித்துக் கொண்டு வராமல் தடுத்து விடுவதா யிருக்கிறது. நீங்கள் இவ்வழியைத் தடுத்துவிட்டால் மேன்மேலும் கௌரவம் பெருகுவதெப்படி? ஐக்கிய இயக்க அபிவிர்த்தியை உத்தேசித்து இம்மாதிரி செய்யாமலிருக்க இஷ்டப்படா விட்டாலும் இன்னும் உங்களுக்கு ஜாஸ்தி கௌரவம் அடைய ஆசை யிருக்குமட்டும் அதை உத்தேசித்தாவது ஐக்கிய இயக்கத்துக்கு கெடுதல் செய்யாதீர்கள். ஐக்கிய இயக்கம் இன்று குழந்தைப் பருவமா யிருக்கிறது. உங்களை கௌரவித்ததைப்போல் எத்தனையோ பெயர்களை கௌரவிக்கக் காத்திருக்கின்றது. நீங்கள் ஐக்கிய இயக்கத்தி லிருக்கும் எளியவர்களை அவமதிக்க ஆரம்பித்தால் பொன் முட்டையிடும் வாத்தைக் கொன்று எல்லா முட்டைகளையும் மொத்தமா யடைய வேண்டுமென்று நினைத்தவன் பாடாய் முடியும். ஆகையால் இனி மேலாவது விழித்துக்கொண்டு எல்லாரையும் சமத்துவமாய் நடத்த வழிதேடவேண்டும். நமது தேசத்தார் ஹோம்ரூல் ஹோம்ரூல் என்று ஒருபுறத்தில் கதற ஐக்கியஸ்தர்களாகிய நாம் ஒருவருக்கொருவர் பின்ன அபிப்பிராயப்பட்டு, ஒற்றுமையை இழந்து நின்றால் நம்மை ஆளும் ஐரோப்பியர்கள் நம்மை எவ்வாறு நினைப்பார்கள். உங்கள் க்ஷேமத்தைக் கருதுவதுபோல் உங்கள் அயலார் க்ஷேமத்தையும் கருதுங்கள். ஐக்கிய இயக்கத்தின் அபிவிர்த்தியில்தான் நமது தேசம் உன்னத நிலைமையை அடையவேண்டும். தேசத்தின் அபிவிர்த்தியை உத்தேசித்து ஐக்கிய தேவதை உங்களுக்கு நல்ல எண்ணத்தைப் புகட்டட்டும். இந்த வியாசம் ஐக்கிய இயக்கத்தின் அபிவிர்த்தியை உத்தேசித்து எழுதியிருப்பதாக வலிய ஐக்கியஸ்தர்கள் உணர்ந்து மேன்மேலும், எளியவர்களை ஐக்கிய இயக்க சம்பந்தப்பட்ட மட்டில் தங்களுக்கு சமத்துவமாய் நடத்தவேணுமாய் பிரார்த்திக்கப்படுகிறார்கள்.

---

## மூன்றாவது குண்டூர் ஜில்லா கோவாபரேடிவ் கான்பரன்ஸ்.

மூன்றாவது குண்டூர் ஜில்லா கான்பரன்ஸ் சென்ற மார்ச்சுமாதம் 3-ம் தேதி போனூரிலுள்ள எட்வர்ட் ஸெகண்டரி ஸ்கூலில் குண்டூர் கலெக்டர் இ. ஏ. டேவிஸ் துரையவர்களின் அக்கிராசனத்தின்கீழ் நடைபெற்றது. ஜில்லாவிலுள்ள அநேக சொஸைடிகளின் டெலிகேட்டுகளும் வெகு உத்தியோகஸ்தர்களும் உத்தியோக உரிமை யில்லாத கனவான்களும் வந்திருந்தார்கள். அநேக தீர்மானங்கள் முற்றிலும் ஆராய்ச்சி செய்து அங்கீகரிக்கப்பட்டன. கான்பரன்ஸ் முடியுமுன் பிரஸிடெண்டு

ஏதோ அவசரமாய்ப் போகவேண்டி யிருந்ததினால் பாக்கியிருந்த விஷயங்களை கோவாபரேடிவ் சொஸைடி ரிஜிஸ்ட்ராரான எப். ஆர். ஹெமிங்வே துரையவர்கள் கவனிக்க ஒப்புக்கொண்டு சௌகரியமாய் இனிது முடித்தார்.

காண்பரன்ஸால் நடைபெற்ற முக்கியமான தீர்மானங்களுள் சில வருமாறு:—

1. இப்பொழுது நடப்பதுபோல் கக்ஷிக்காரர்கள் விவாதமுள்ள தங்கள் பணங்களை தாலூகா ட்ரெஷரிகளில் கட்டி வைப்பதற்கு பதிலாக கோவாபரேடிவ் பாங்கிகளில் கட்டிவைக்க ஹைகோர்ட்டார் அனுமதி கொடுக்க வேண்டப்படுகிறது.

2. ப்ராவிடண்டு பண்டு முதலியவைகளை லோகல் போர்டுகளும் முனிசிபாலிடிகளும் கோவாபரேடிவ் பாங்கிகளில் போட்டுவைக்கக் கூடும்படி அவைகளின் சட்டங்களில் தேவையான மாறுதல்களை கவர்ன்மெண்டார் செய்ய கேட்டுக்கொள்ளப்படுகிறது.

3. லோகல் போர்டுகளிலும் முனிசிபாலிடிகளிலும் கோவாபரேடிவ் சொஸைடிகளின் பஞ்சாயத்தார்கள் ஆஸ்தானம்பெற அருகர்களாகலாம் என்று கவர்ன்மெண்டார் சட்டத்தில் மாறுபாடு செய்ய வேண்டுகிறது.

4. கோவாபரேடிவ் பஞ்சாயத்தார்கள் குளங்கள், கிணறுகள், மற்றுமுள்ள சுகாதார வேலைகள் இவைகளைப் பரிசோதித்து தங்கள் தங்கள் கிராமங்களுக்குவேண்டிய ஜலப்பிரிவினையை ஒழுங்கு படுத்தலாமென்று கவர்ன்மெண்டு அதிகார மளிக்கவேண்டுமென தீர்மானிக்கிறது.

5. கிஸ்திகாலங்களில் கவர்ன்மெண்டார் ப்ரொவின்ஷியல் பாங்கிகளின் மூலமாய் டிஸ்ட்ரிக்ட் பாங்கிகளுக்கு தாங்கள் கொடுக்கும் வட்டி விகிதப்படியே கொஞ்சகாலத் தவணைக்கு கடன் கொடுக்க கேட்டுக் கொள்ளப்படுகிறது.

6. குண்டூர் ஜில்லா ஜட்ஜி அவர்கள் மன்னவா கோயில் "ட்ரஸ்டுத் தொகையை" அவ்வூர் கோவாபரேடிவ் சொஸைடியிலும் தெனாலி டிஸ்ட்ரிக்ட் பாங்கியிலும் டிபாஸிட்டு செய்ய அனுமதிகொடுத்ததற்காக அவருக்கு நன்றிபாராட்டுவதுடன் அத்தகைய கருணையை இதர கோயில்களின் ட்ரஸ்டுத்தொகை விஷயங்களிலும் காட்டும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

7. கோவாபரேடிவ் சொஸைடிகளால் அனுப்பப்படும் மணியார்டர்களில் பைசாக்கள் இருந்தாலும்கூட அங்கீகரிக்கும்படி போஸ்டல் டிபார்டுமெண்டுக்குக வர்ன்மென்டார் அனுமதி கொடுக்க வேண்டுகிறது.



8. பம்பாய் இராஜதானியில் இருப்பதுபோல் இவ்விராஜதானியிலும் கோவாபரேடிவ் பாங்கிகளால் கொடுக்கப்படும் மணியார்டர் கமிஷனில் 100-க்கு 12 அணாவீதம் திருப்பிக்கொடுக்கும் ஏற்பாட்டை அனுஷ்டிக்க கவர்ன்மெண்டார் உத்திரவு அளிக்க கேட்டுக்கொள்ளப்படுகிறது.

---

## உடுப்பி தாலூகா கோவாபரேடிவ் காண்பரன்ஸ்.

உப்பினங்காடி, மங்களூர் தாலூகாக்களிலுள்ள சொஸைடிகளைப் போலவே இத்தாலூகா சொஸைடிகளும் சென்ற டிசம்பர்மாதம் 31-ம் தேதி காண்பரன்ஸ் கூடிற்று. அநேக சொஸைடிகளின் மெம்பர்கள் கிறிஸ்தவர்களாயிருந்தமையால் வருஷ ஆரம்பத்தில் அச்சொஸைடிகளின் பஞ்சாயத்தார்களுக்கு வீட்டைவிட்டு வருவது கஷ்டமா யிருந்திருக்க வேண்டும். என்றாலும் 21 சொஸைடிகளின் பிரதிநிதிகள் வந்திருந்தார்கள். செண்ட்ரல் பாங்கியின் வைஸ் பிரஸிடெண்டும் சிகரிடேரியும், மங்களூர் ஸர்க்கில் கோவாபரேடிவ் சொஸைடிகளின் இன்ஸ்பெக்டரும், உடுப்பி ஸர்க்கில் சூபர் வைஸரும் கூட ஆஜரா யிருந்தார்கள். அங்கு வந்திருந்த அநேகருக்கு காண்பரன்ஸென்றால் இன்னதென்றே தெரியாதாகையால் அதன் நடவடிக்கைகளை, கவனிக்க வெகு ஆவலுடனிருந்தார்கள். ஆகையால் நடத்தப்பட வேண்டிய நடவடிக்கைகளின் பூர்வ பீடிகையுடன் காண்பரன்ஸ் துவக்கப்பட்டது. ஒவ்வொரு சொஸைடியின் ரிபோர்டும் படிக்கப்பட்டு அவைகளிலுள்ள நுட்பங்கள் ஆக்ஷேபணை சமாதானங்களுடன் ஆராயப்பட்டது. வரவேற்புக் கமிட்டி, பிரஸிடெண்டின் உபந்நியாசம், தீர்மானங்கள் முதலிய ஆடம்பரங்களோடு கூடிய காண்பரன்ஸ் பொதுஜனங்களின் மனதில் இவ்வியக்கத்தின் பலத்தை ஒருவாறு பதிவிக்குமே ஒழிய சொஸைடிகளின் அந்தரங்கமான நடவடிக்கைகளை அதிகமாய் சீர்படுத்த முடிந்ததில்லை. சொஸைடிகளின் சுய ஆளுகையில் திறமை உண்டாகும் விஷயத்தை கவனித்தால், அது ஆங்காங்கு சாதாரணமாய் கூட்டப்படும் மீட்டிங்குகளினால்தான் முடியும். ஏனென்றால் அப்பொழுதுதான் அவரவர்களுடைய மனதிலுள்ள விஷயங்களை காண்பரன்ஸ் போலல்லாமல் தாராளமாய் விட்டுப் பேசலாம்.

இவ்வேற்பாட்டை அனுசரித்து ஆஜராயிருந்த பிரதிநிதிகள் அவரவர்களுடைய சொஸைடியின் ரிபோர்டுகளை வாசித்தார்கள். அப்படிப் படிக்கும்பொழுதே அவ்வவற்றின் விசேஷக் குறிப்புகளைக் குறித்துக் கொண்டு பிறகு அவ்விஷயங்கள் விரிவாய் ஆராய்ச்சி செய்யப்பட்டன. இம்மாதிரி காண்பரன்ஸின் உண்மையான உபயோகம் சுமார் 4-மணி நேரத்திற்குள் அடியிற்கண்ட விஷயங்களை கவனித்திருப்பதினால் தெரியலாம். ஏற்பாடான காண்பரன்ஸா யிருந்தால் வரவேற்பு வியாசம்,

பிரஸிடெண்டு வியாசம் தீர்மானங்கள் பிரேரேபித்து ஆமோதித்து ஸ்தாபிக்கும் டம்பம், கல்வியை ஒட்டிய வாசகம் இவைகளில் விசேஷகாலம் கழிந்து இவ்வளவு விஷயங்கள் கவனிக்கப்பட்டிருக்க முடியாது. ஆராய்ச்சி செய்த விஷய சூசிகை வருமாறு:—

1. சொத்துக்களைக் குறிக்கும் ரஜிஸ்டர் புஸ்தகத்தின் அவசியமும் உபயோகமும்.

2. கடன்களின் கால நிர்ணயங்களை ஒழுங்கு படுத்தல்.

3. ரஜிஸ்ட்ராருக்கும் மத்தியஸ்தர்களுக்கும் முன் வைக்க வேண்டிய விஷயம் இப்படிப்பட்டதுதான் என்பது.

4. "பழைய கடன்கள்" என்பதின் சரியான அர்த்தம்.

5. கிறிஸ்தவக் கோவிலின் ஆதிக்கத்திலுள்ள சொஸைடிகள்.

6. பொறுப்பு எல்லை வரம்பில்லாச் சொஸைடிகளில் பங்குக் கிரயத்தை அதிகப்படுத்தல்.

7. ஸ்தாவர சொத்துக்களின் பேரில் இன்ன ஏற்பாடுகளுடன் இவ்வளவு கடன்தான் கொடுக்கலாம் என்பது.

8. டிபாஸிட்டுத் தொகைக்குக் கொடுக்கக் கூடியவட்டி.

9. சொஸைடி மெம்பர்களின் பங்குத்தொகை இவ்வளவிற்கு மேற்படக்கூடாது என்றவரம்பு ஏற்படுத்தலாமா?

10. காலங்கடந்த கடன்கள்.

11. கடன் மனுவை கவனிக்குங் காலத்தில் கேட்கும் கேள்விகளின் பத்ததி.

12. அதிகத் தொகை கையிலிருத்தல்.

13. சொஸைடிகளின் மெம்பர்களுக்கு சிறிய இன்ஷியூரன்ஸ் ஏற்பாடு செய்தல்.

14. கூட்டாக வாங்கி விற்றல்.

15. ஒரு யூனியன் ஏற்படுத்துதல்.

விஷயங்களை யெல்லாம் விவரமாய் எழுத இடம் போதாதாகையால் இதன் கடைசித்தீர்மானங்கள் புத்தூர் மங்களூர் கான்பரன்ஸுகளில் முந்தி நடந்து, நமது சஞ்சிகையில் வெளியிட்டிருந்ததை ஒத்திருந்தன என்று சுருக்கிச் சொல்லுகிறோம். ஆயினும் ஒருவிஷயம் குறிப்பிடத் தகுந்தது. ஒரு சொஸைடி யுத்தக்கடனுக்கு உதவிசெய்வதற்கென்று இரண்டு கடன்கள் மெம்பர்களுக்குக்கொடுத்திருக்கிறது. இதைப்பற்றிய விவாதம் கவனிக்கத் தகுந்ததாயிருந்தது. ஆனால குறித்த காரணம் பைலாவின் எல்லைக்குள் அகப்படவில்லை யென்று காட்டப்பட்டது. மெம்பர்கள் சிற்றுண்டி யருந்திய பிறகு எல்லாருடைய மனதிலும் கான்பரன்ஸ் செய்த வேலையின் உபயோகம் வியக்கத் தக்கதென யாவரும் நினைத்தார்கள்.



## மலையாளம் வள்ளுவநாடு கோவாபரேடிவ் கான்பரன்ஸ்.

பெரிண்டல்மன்னா கோவாபரேடிவ் யூனியனைச்சேர்ந்த வள்ளுவநாடு தாலூகாவிலுள்ள எல்லாச்சொஸைடிகளும், பெரிண்டல்மன்னாவில் சென்ற பிப்ரவரிமாதம், 16-ம் தேதியன்று நடைபெற்ற கான்பரன்ஸில் கூடின. தற்காலம் அந்த யூனியனில் மொத்தம் 2 700 மெம்பர்களடங்கிய 22 சொஸைடிகள் சேர்ந்திருக்கின்றன. அவைகளின் தொழில் தனம் ரூ. 52,000. ஷை தாலூகாவில் இன்னம் 7 சொஸைடிகள் சமீபத்தில் ஆரம்பிக்கப்பட்டன. இவைகளும் யூனியனில் சேர்க்கப்படவேண்டும். கோவாபரேடிவ் டிபார்ட்மெண்டு விவசாய டிபார்ட்மெண்டு ஆகிய இரண்டையும் ஒற்றுமைப்பதில் இதுதான் முதல் பிரயத்தனம்.

டிஸ்ட்ரிக்ட் பாங்கியின் செகிரிடேரியும் இக்கான்பரன்ஸுக்கு பிரஸிடெண்டும் ஆகிய மிஸ்டர் வி. கே. மேனன் அவர்களும் அஸிஸ்டெண்டு ரிஜிஸ்ட்ரார் அவர்களும், விவஸாய அஸிஸ்டெண்டு டைரக்டர் அவர்களும் முதல்தினமே வந்துவிட்டார்கள்.

சொஸைடிகளின் பிரதிநிதிகள் 70 பெயர்களிருந்தார்கள். யூனியனுக்கு பிரஸிடெண்டும் மாலப்புரம் தாலூகா போர்டின் "உத்தியோக உரிமையில்லாப் பிரஸிடெண்டுமான" ராவ் பகதூர். எம். சி. கிருஷ்ண வர்மராஜா அவர்கள் தாலூகாவின் தூலதூரத்தில் அலுவலின் பேரில் போயிருந்தவர் சரியாய் ஒருமணிக்கு அவர் வரவுக்காக எதிர்பார்த்துக் கொண்டு டெலிகேட்டுகள் தங்கியிருந்த லோகல் ஹைஸ்கூல் ஹாலில் வந்து சேர்ந்தார்.

பிறகு யூனியன் பிரஸிடெண்டு நன்குயமைத்துள்ள வார்த்தைகளினால் டெலிகேட்டுகளை நல் வரவேற்ற பின் பேசின விஷயங்களின்சாரம்சம் வருமாறு:—இந்த ஜில்லா கோவாபரேடர்கள் தங்கள் விஷயங்களைப்பற்றிப் பேச மூன்று வருஷங்களுக்குமுன்—அதாவது 1914-மே மாதத்தில்-கள்ளிக்கோட்டையில் ஆனரபில் மிஸ்டர், பக்லி துரையவர்களின் அக்கிராசனத்தின்கீழ் கான்பரன்ஸ் கூடினார்கள், நீலகிரி, தென் கன்னடம், கோயமுத்தூர், மலையாளம் ஆகிய இந்த ஜில்லாக்களி லிருந்து டெலிகேட்டுகள் வெகு சிரத்தையுடன் வந்திருந்தார்கள். அதுமுதல் கோவாபரேடிவ் இயக்கம் மலையாளத்தில் மிகவும் விருத்தியடைந்திருக்கிறது. அதிலும் முக்கியமாய் இந்த வள்ளுவநாடு தாலூகாவில் 29 சொஸைடிகளும் அவைகளைப் பராமரிக்க ஒரு சூபர்வைஸிங் யூனியனும் ஏற்பட்டிருப்பது மிக்க சந்தோஷத்தைக் கொடுக்கக் கூடியது. கான்பரன்ஸுக்கு, விவசாய டைரக்டரவர்கள் வந்தது தனக்கு விசேஷ சந்தோஷத்தை உண்டாக்கினதென்றும், கோவாபரேஷன், விவசாயம் ஆகிய

இவ்விரு இயக்கத்தையும் ஒன்று சேர்க்கவேண்டு மென்பது தனக்கு வெகு நாளாய் ஆசையென்றும் விவசாய டிபார்ட்மெண்டின் வேலை மலினமடைந்து கொண்டிருக்கிறது என்ற புகாருக்கு கொஞ்சம் ஆதாரம் இருக்கிறதென்றும், ஆனால் டிபார்ட்மெண்டையாவது ஜனங்களையாவது தன்னால் குற்றங்கூற முடியாதென்றும் ஏனென்றால் டிபார்ட்மெண்டார் ரயத்துக்களுக்கு நல்ல மார்க்கங்களைக் காட்டலாமே ஒழிய வேண்டிய மெஷீன்களை வாங்கப்பணமும் கொடுக்கமுடியாதாகையால் இதுமுதல் அவர்கள் கோவாபரேடர்களோடு சேர்ந்தால் தாலூகாவின் க்ஷேமத்தின் நிமித்தம் அவர்களுடைய அனுபவத்தை அனுஷ்டானத்திற்குக் கொண்டுவரப் பார்க்கலாம் என்றும் சொல்லிமுடித்தார். பிறகு வி. கே. மேனன் அவர்கள் சேர்மன் ஆக எடுக்கப்பட்டார்.

பிரஸிடெண்டு அவர்களும், 3½-லக்ஷம் ஜனத்தொகையுள்ள 181 அம்சங்களுடன்கூடிய ஒரு தாலூகாவில் 3,000 கோவாபரேடர்கள் தான் இருக்கிறார்கள் என்பது மிகக்குறைவென்றும் இவ்விஷயத்தை சீர்திருத்த தக்கமுயற்சி எடுத்துக்கொள்ளப் படவேண்டுமென்றும் ஒவ்வொரு அம்சத்திலும் ஒரு கோவாபரேடிவ் சொஸைடி ஏற்படவேண்டிய விஷயத்தில் ஈடுபட்டு உழைத்தல் நம்முடைய முயற்சியின் லக்ஷியமாயிருக்கவேண்டும் என்றும் சொல்லி இரண்டு பிரேரணைகள் செய்தார். அதாவது (1) சொஸைடிகளின் தொகையை அதிகப்படுத்துதல் (2) தாலூகாவில் கிடைக்கக்கூடிய எருக்களை அதிகப்படுத்தி அதைசரிவர சேமித்து உபயோகிக்கும் விதத்தை ஆதரித்தல்.

அநேக சொஸைடிகளின் ரிபோர்டுகள் படிக்கப்பட்ட பிறகு மறுநாளைய மீட்டிங்கிற்கு வேண்டிய விஷயங்களை ஆராய்வதற்கு ஒரு கமிட்டி ஏற்பட்டது. மிராசுதாரர்களும் முக்கியமாய் நம்பூதிரிகளும் இவ்வியக்கத்தில்விசேஷமாய்ச் சேர்ந்திருந்தது மிகவும் திருப்தியாயிருந்தது. இத்தாலூகாவிலுள்ள மிக்க தனிகர்களில் ஒருவரான பத்தக்கார மாணக்கல் நம்பூதிரிப்பாத் என்பவர் அன்பாயளித்த சிற்றுண்டிகளை எடுத்துக்கொண்ட பிறகு 5 மணிக்கு சபைகலைந்து பக்கத்திலுள்ள வயல்களில் யூனியன் உத்தியோகஸ்தர்களால் ஏற்படுத்தி வைக்கப்பட்ட உழவு ஏற்பாடுகளைப் பார்க்கச் சென்றார்கள்.

## தீர்மானங்கள்.

இக்கான்பரன்ஸுக்கு முன்வைக்கப்பட்ட தீர்மானங்கள் இரண்டு வகை. ஒன்று சொஸைடிகளைச் சீர்திருத்த தக்கவழிகளை அனுசரித்தல்; மற்றது ஜனங்களின் பொருளபிவிருத்திக்காக கைக்கொள்ள வேண்டிய மார்க்கங்கள். எல்லா விவகாரங்களும் மலையாளபாஷையில் நடந்தன. அஸிஸ்டெண்டு ரிஜிஸ்டிராரும், விவஸாய அஸிஸ்டெண்டு டைரக்டரும் ஆங்காங்கு வேண்டியவிஷய சூசனைகளில் தங்கள் அனுபவத்தை காட்டிக் கொடுத்தார்கள். இன்று யூனியன் பிரஸிடெண்டான ராவ் பகதூர், எம். வி. கிருஷ்ணவர்மராஜா அவர்கள் டெலிகேட்டுகளுக்கு சிற்றுண்டியுதவினார். பிறகு கீழ்கண்ட தீர்மானங்கள் அங்கீகரிக்கப்பட்டன.



1. டிபார்ட்மெண்டாரால் தற்காலம் ஏற்படுத்தப்பட்டிருக்கும் சொத்து விவர ஸ்டேட்மெண்டு மிகவும் சிக்கலாயிருப்பதால் சீர்திருத்தப் படவேண்டும். பெரிண்டல்மன்னா கோவாபரேடிவ் யூனியனை ஆளும் கமிட்டியார் இச்சீர்திருத்த ஏற்பாட்டிற்காக நியமிக்கப்பட்டார்கள். அவர்கள் இன்னம் ஒரு மாதத்திற்குள் அஸிஸ்டெண்டு ரிஜிஸ்ட்ராருக்கு ரிபோர்டு அனுப்பவேண்டும்.

2. பஞ்சாயத்தார்கள் டிஸ்ட்ரிக்ட் பாங்கிக்கு எழுதிக்கொடுக்கும் ப்ராமிஸரி நோட்டுகள் மலையாளம் பாஷையில் எழுதப்படவேண்டும். அவைகள் ரிஜிஸ்டர் செய்யப்படவேண்டியதில்லை. இப்பிரேரணையை அங்கீகரிக்கவேணுமாய் டிஸ்ட்ரிக்ட் பாங்கியைக் கேட்டுக்கொள்ள வேண்டும்.

3. "பாஸ்புக்" (மெம்பர்களின் தனிக்கணக்குப்புத்தகம்)முறையை கூடியவரையில் சொஸைடிகள் ஏற்படுத்தி அனுஷ்டிக்கவேண்டும்.

4. மலையாளம் டிஸ்ட்ரிக்ட் கோவாபரேடிவ் பாங்கியில் பணம் போட்டுவைப்பதின் சௌகரியங்களை எல்லாரும் அறியும்படி பகிரங்கப்படுத்த ஒரு கமிட்டி ஏற்படுத்தவேண்டும்.

5. பெரிண்டல்மன்னா கோவாபரேடிவ் யூனியனின் எல்லைக்குள் மிருக எருக்கள், பச்சை எருக்கள் இவைகளை விருத்திசெய்ய வேண்டிய வழிகளை அனுஷ்டிக்கவேண்டும்.

விவசாய அஸிஸ்டெண்டு டைரக்டர் மீன் எருக்களின் சௌகரியங்களை டெலிகேட்டுகளுக்குச் சொல்ல ஐந்து பெயர்கள் அதைப் பரிக்ஷைபார்க்கப் பிரியப்பட்டார்கள்.

6. இத்தாலூகாவில் 20 சொஸைடிகள் இருப்பது மிகத்திருப்தியாயிருந்தபோதிலும் ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு சொஸைடி ஏற்படுத்திவிடுவதில் மிகத் துரையுடன் உழைக்கவேண்டும். இவ்வெண்ணம் சீக்கிரம் கைகூடும் பொருட்டு அஸிஸ்டெண்ட் ரிஜிஸ்ட்ராரின் கீழ் விவசாயப் பழக்கமும் பெற்ற ஒரு கோவாபரேடிவ் இன்ஸ்பெக்டரை வள்ளுவனாடுதாலுகா வுக்கென்றே கொடுக்கும்படி கவர்ன்மெண்டை கேட்டுக்கொள்ளவேண்டும்.

7. சாதாரணக் கலப்பையைவிட மெஸ்டன் கலப்பைகள் அதிக உபயோகமுள்ளதாய்த் தெரிகிறதினால் அவைகளை மெம்பர்கள் அடைய வழிதேடவேண்டும்.

8. கிணறுவெட்டி குளங்களை சீர்படுத்தி விவசாய விருத்திசெய்ய ஈடுபடும் மெம்பர்களுக்கு பஞ்சாயத்தார் கடன் கொடுக்கலாம்.

9. தானியம், விதைகள் எப்பொழுதும் வேண்டிய இதர பண்டங்கள் இவைகளைப் பொதுவில் வாங்கி விற்கவேண்டும்.

10. அறுவடைகாலங்களில் நெல்லைப்பிடித்துக் கட்டிவைத்து கஷ்டமான காலங்களில் சொற்பலாபத்திற்கு தேவையான மெம்பர்களுக்கு விற்கவேண்டும்.

11. மெம்பர்களின் பங்குக்கிரயம் 10 ரூபாயாக உயர்த்தப்படவேண்டும்.

12. பலவிதமான டிபாஸிட்டுகளில் இப்போதையவிட இன்னம் விசேஷமாய் ஜனங்கள் பணம்போட்டு வைக்கும்படி தூண்டப்படவேண்டும்.

13. பெரிண்டல் மன்னாவில் ஒரு கோவாபரேடிவ ஹோட்டல் ஏற்படுத்தப் படவேண்டும்.

14. இத்தீர்மானங்களின் காபிகள் பெரிண்டல் மன்னா யூனியனிலுள்ள எல்லாச் சொஸைடிகளுக்கும், கள்ளிக்கோட்டையிலுள்ள மலையாளம் டிஸ்ட்ரிக்ட் கோவாபரேடிவ் பாங்கிக்கும் கள்ளிக்கோட்டை கோவாபரேடிவ் சொஸைடிகளின் அஸிஸ்டெண்டு ரிஜிஸ்ட்ரார் அவர்களுக்கும் அனுப்பவேண்டும்.

28 JUN 1918


# மதராஸ் புல்லெடீன் ஆப் கோவாபரேஷன்

என்னும்

# சென்னைக் கூட்டுத்தொழில் வர்த்தமானி

சம்புடம் IX] 1918ளு ஏப்ரல் மீ [இலக்கம் 10


## பத்திராதிபரின் குறிப்புகள்.

### முதல் பம்பாய் கோவாபரேடிவ் கான்பரேன்ஸ்.

பம்பாய் இராஜதானியில் உத்தியோகஸ்தரல்லாத ஐக்கிய முயற்சிக்காரர்களின் முதல் கான்பரென்ஸ் சமீபத்தில் நடைபெற்றது. ஐக்கிய முறையில் கைதேர்ந்தவரும், இம்பீரியல் கோவாபரேடிவ் கமிட்டியில் மெம்பரா யிருந்தவருமான ஆனரபில் லாலுபாய் ஸாமல்தாஸ் அவர்கள் அதில் அக்கிராசனம் வகித்தார். அக்கிராசனத்திற்கு இவரைப் பார்க்கிலும் உரிமை யுடையவர் யாவர்? கூட்டுறவு கான்பரன்ஸ் இது முதன்மையா யிருந்தபோதிலும், இதற்கே அக்கிராசனம் வகிக்க உத்தியோகப் பற்றில்லாத கனவான் ஒருவர் நமக்கு வாய்த்தது மிகவும் புகழத்தக்கது. மற்ற இராஜதானிகள் இவ்வுதாரணத்தை கைக்கொள்ளுமென நாம் நம்புகிறோம்.

அக்கிராசனாதிபதியின் பிரசங்கமானது ஐக்கிய முறையில் தம்முடைய முதிர்ந்த அனுபவத்தையும் அருமையான சூசனைகளையும் காட்டும். சமீபத்தில் ஏற்படக்கூடும் இராஜாங்க சட்ட சீர்திருத்தங்களில், ஜனப்பிரதிநிதிகள் விவசாயக் கூட்டுறவு இலாகாக்களை அடக்கி ஆளும் அதிகாரம் வகிப்பார்களென கூறுகிறார். ஆகையினால் கவுன்ஸில்களுக்கு அனுப்பும் நம் பிரதிநிதிகளுக்கு மாத்திரமல்லாமல் ஐக்கிய வியக்கத்தின் அபிவிருத்தியை முன்னுக்குக் கொண்டுவரும் உத்தியோகப் பற்றில்லாத கனவான்களுக்கும் ஐக்கிய முறையை கற்பித்துக் கொடுப்பது மிகவும் அவசியமாகும். கூட்டுறவு முறையில் உழைப்பதற்கு உத்தியோகப்பற்றில்லாத கனவான்கள் அதிகமாய் வரவில்லையென மிஸ்டர் ஹூபெல்பு துரையவர்கள் அனுதாபப் படுவது தப்பான அபிப்பிராயமென்றும், இந்தி

யாவில் ஐக்கிய வியக்கம் அவர்கள் உதவியன்னியில் இவ்வளவு உயர்ந்த
நிலைமையை யடைந்திரா தென்றும், அவருக்கு இந்தியாவைப் பற்றிய
உண்மையான சமாசாரம் எட்டாததினால் இவ்விதம் கூறுகிறாரென்
றும் இவர் அதை மறுக்கிறார். உத்தியோகஸ்தர்களின் ஆளுகையிலிருக்
கும் வரையில் இவ்வியக்கம் அபிவிருத்தி யடையாதென்ற எண்ணம்
இருக்கும், தற்சமயத்திலேயே இவ்விஷயத்தில் உழைக்க அநேக தேர்ச்சி
யடைந்த கனவான்கள் வந்ததே தமக்கு ஓர் ஆச்சரியமென்றார். இதற்
குக் காரணம் சொல்லாமலே விளங்கும். மிகவும் ஏழையாயும், படிப்பு
மில்லாத தம் சகோதரர்களை முன்னுக்குக் கொண்டுவர வேண்டுமென்ற
தேசாபிமானமும், இக்கனவான்களைத் தம் வேலையில் உதவி புரியவேண்டு
மென்ற ரிஜிஸ்ட்ராரின் அவாவும் இதற்குக் காரணமாகும். சுய அர
சாட்சியின் தோற்றம் யாவர் மனதிலிருக்கும் இச்சமயத்தில், ஐக்கிய
இயக்கத்தை அடக்கி ஆளுவதில் உத்தியோகப் பற்றில்லாதவர்களிடம்
தகுந்த அதிகாரம் கொடுத்தா லொழிய, ரிஜிஸ்ட்ரார்கள் எவ்வளவு சாமர்த்
தியர்களா யிருந்தாலும், புதிதாய் கௌரவ உழைப்பாளிகளைச் சேர்ப்பது
மிகவும் அரிது. யந்திரங்களில் வேலைசெய்யும் கூலியாட்களுக்கும், முனி
ஸிபாலிட்டிகளில் வேலைசெய்யும் கீழ் வகுப்பினர்களுக்கும் சங்கங்கள்
ஸ்தாபிப்பதில் பம்பாய் இராஜதானி முதன்மையாகும். இவைகளை நிர்வகிக்
கவும், வேண்டும்பொழுது பணம் உதவவும், கடன் நிவர்த்தி செய்யும்
(Debt Redemption Committee) கமிட்டி யேற்பட்டு மிகவும் தீவிர
மாய் வேலைசெய்து வருகின்றன. கிரஹச் சங்கங்கள் அநேக இடையூறுக
ளிருந்த போதிலும் ஒருவிதமாய் நடந்து வருகின்றன. இந்தியா கவர்ன்
மெண்டின் உதவி கைகூடுமானால், சமீபத்தில் ஸ்தாபிக்கப்படும் ஸெண்ட்
ரல் கோவாபரேடிவ் இன்ஸ்டிடியூட் (Central Co-operative Institute)
ஆனது இவ்விதச் சங்கங்களை அபிவிருத்தி செய்வது தன்னுடைய
பொறுப்பில் ஒன்றாக வைத்துக்கொள்ளும். இனிமேல் செய்ய வேண்
டிய விஷயங்களைப்பற்றி அவர் கூறியதாவது:—வியாபாரமும் தொழி
லும் ஓங்கிய பம்பாய் நகர் மத்திய ஸ்தானமாயிருக்கும் பயனாய் நகரிலுள்
ளவர்களுக்கும், இராஜதானியிலுள்ள இதரர்களுக்கும் ஐக்கிய இயக்கத்
தின் முக்கிய தேவைகள் பலவுள. வெளியிடங்களிலுள்ள சில சங்கங்கள்
தங்கள் மெம்பர்களுக்கு, விவசாயக் கருவிகளும், சுத்தமாயும் இடை
குறைவில்லாமலுமுள்ள எருவும், தொழிலுக்கு வேண்டிய சாமான்களும்,
நியாயமான விலைக்கு வாங்கிக் கொடுக்க முடியவில்லை. மெம்பர்களின்
விளைவு பொருள்களை மொத்தமாய் விற்றுக் கொடுப்பதிலும் கஷ்டப்படு
கின்றன. இவ்விரு வழிகளிலும் கிராம நாணயச் சங்கத்திற்கு உதவி
புரிய, பங்காளத்தில் புதிதாய் ஏற்பட்டதுபோல், ஓர் சங்கத்தை இங்கு
ஸ்தாபிக்க ஆலோசிப்பது உத்தமம். பொறுப்பு வரையறுத்த நகரச் சங்



கங்களுக்கு திரவிய சகாயம் செய்ய கோவாபரேடிவ் பாங்க் ஒன்று நக
ரில் ஏற்படுவது அவசியம். என் முக்கியமான, மற்றொரு ஆலோசனை
யென்னவென்றால்: நகருக்காக அநேக கிளைகளையுடைய ஓர் கோவாப
ரேடிவ் ஸ்டோர்ஸாவது அல்லது ஒவ்வொரு பிரத்தியேக ஸ்தலத்திற்கு
ஒவ்வொன்றென அநேக ஸ்டோர்ஸ்களாவது உண்டாவது அத்தியா
வசியம்.

கான்பரென்ஸுக்கு அநேக வியாசங்கள் அனுப்பப்பட்டன. தீர்
மானங்களெல்லாம் அவைகளைப் பொறுத்திருந்ததினால், தர்க்கித்துப்
பேசுவதற்கு மிகவும் சௌகரியமா யிருந்தது. ஐக்கிய முறையின் எவ்
வகைகளையும் சார்ந்திருந்தன.

* * * * *

## கடன்களைத் தாமதமின்றி வசூல் செய்தல்.

கிராமச் சங்கங்களாகட்டும், ஸெண்ட்ரல் சங்கங்களாகட்டும், தங்
களுக்கு வரவேண்டிய கடன் தொகையைச் சிறிதும் தாமதமின்றி ஸம்
மரியாக வசூல் செய்யும்படி அவைகளுக்கு அதிகாரம் இருக்க வேண்டு
மென்று இம்மாகாணத்திலுள்ள கூட்டுறவு முயற்சிக்காரர்களிற் சிலர்
விரும்புகின்றனர். அவ்விதம் விரும்புவோரின் தொகை அதிகமாக
இல்லை யென்பது சந்தோஷகரமானது. கடன் தொகைகளைச் சடுதியில்
வசூலிப்பதற்காக ரிஜிஸ்ட்ராரோ அல்லது அவரால் நியமிக்கப்பட்ட மத்
தியஸ்தரொருவரோ தீர்ப்புச்சொல்லி விடலாமென்று எண்ணம். கூட்டு
றவு விஷயத்தை ஆராய்ந்து பார்த்துச்சொல்ல நியமிக்கப்பட்ட மக்லாகன்
கமிட்டியார் சொல்லியிருக்கிறார்களாயினும், ஸிவில் கோர்ட்டுகளின் மூல
மாகவே அத்தீர்ப்பை நிறைவேற்ற வேண்டுமென அவர்கள் அபிப்பிராயம்
கொடுத்திருக்கிறார்கள். மத்திய மாகாணத்திலுள்ள கூட்டுறவு முயற்சிக்
காரர்கள் மேற்கண்ட அக்கமிட்டியின் அபிப்பிராயத்தோடு சம்மதப்பட்டு
நின்று விடவில்லை யென்று காணப்படுகிறது. எப்படியென்றால்: கூட்டு
றவு முயற்சி விஷயமாய் அம்மாகாணத்திலே நடைபெற்று வரும் ஆதார
பத்திரிகையாகிய "அக்ரிகல்சரல் அண்டு கோவாபரேடிவ் கெஜட்"
(Agricultural & Co-operative Gazette) என்ற சஞ்சிகையின் ஸெப்
டம்பர் அக்டோபர் மாதங்களின் பிரதியில் மேற்படி விஷயத்தைப்
பற்றி விவாதம் நடந்து வந்தது. ஸெண்ட்ரல் பாங்கிகளுக்கு பிரைமெரி
ஸொஸைடிகளிலிருந்தே வரவேண்டிய பாக்கித்தொகையைப் பற்றி விவா
தம் ஏற்பட்டது குறிப்பிடத்தக்கதாகும். சிறிதும் தாமதமின்றி ஸம்ம
ரியாய் வசூல் செய்துவிடவேண்டுமென்று வாதித்தவர்களின் கட்சி என்ன
வென்றால்:—

கூட்டுறவு விஷயம் பலமாகப் பரவினும் வேண்டுமென்று கடனைத்
திருப்பிக்கொடுக்கக் கூடாதென்றும், மத்திய பாங்கிகளை மோசஞ்செய்து
விடவேண்டுமென்றும், கருத்துடைய சில சங்கங்கள் இருக்கலாமாம்.
ஆகவே, அதிக வட்டியை எதிர்பாராமல் அச்சங்கங்களுக்குக் கடன்
கொடுத்து உதவும் பாங்கிகளுக்கு விசேஷமான பாதுகாப்புவேண்டுமாம்.
இவ்வாறு ஒருசாரார் சொல்ல, மற்றொருசாரார் சொல்வதென்னவெனில்:
கூட்டுறவு பாங்கிகளுக்கு அத்தகைய விசேஷ பாதுகாப்பு அவசியமில்லை
யென்பதாகும். கூட்டுறவு பாங்கிகளோ பொதுவாக விவசாயகருக்கே
கடன் கொடுக்கிறது! விவசாயர்கள் யோக்கியத்துக்குப் பேர்பெற்றவர்
கள். கபடு சூது தெரியாதவர்கள்; அவர்களுடைய காரியம் திடீரென்று
முழுகிப்போய் விடும்படியானதல்ல. வருஷந்தோறும் கிடைக்கும் லாபத்
தொகையில் நூற்றுக்கு 25 பங்கு வீதம் ஸெண்ட்ரல் பாங்கிகள் க்ஷேம
நிதிக்குச் சேர்த்துவிடுகின்றன. தவிர கடன் தொகைகளிலே சிலவாராக்
கடன் ஆய்விடலாமென்று ஒவ்வொரு பாங்கியும் தயாராய் இருக்கவேண்
டும். கூட்டுறவு விஷயங்களிலே வாராக்கடன் அம்சம் இருக்கவே இரா
தென்று நம்பியிருப்பதற்கில்லை. ஸெண்ட்ரல் பாங்கியினால் பங்குக்காரர்
களுக்குப் பாகித்துக்கொடுக்கப்படும் வட்டியும் லாபத்தொகையும் மிகவும்
குறைவாயில்லை. இப்படி யெல்லாமிருக்க, மீண்டும் சொல்லப்படுவ
தென்றால்:—தான் பெறும் பணத்திற்குக் கூடுமானவரையில் பிரதிப்பிர
யோஜனம் இருக்கவேண்டுமென்றும் தான் பணம்போடுவது காரணமாக
தேசத்தின் சொல்பநிலைமை உயரவேண்டுமென்றுமே, ஸெண்ட்ரல் பாங்
கிகளில் ஒரு பங்குக்காரன் பணத்தைப்போடுகிறான். கேவலம் வட்டிக்கு
மட்டும் அவன் பணத்தைப்போடுபவனாய் இல்லை. தேசாபிமானியாகவும்
இருக்கிறான். பங்குக்காரர்கள் தாங்கள் கூட்டுறவு முயற்சிக்காரர்க
ளென்பதைக் கவனித்து, தங்களுடைய பாங்கிகளிலும் சங்கங்களிலும்
எவ்வளவுக் கெவ்வளவு சிரத்தைகாட்டுகிறார்களோ, அவ்வளவுக்
கவ்வளவு கெட்ட சங்கங்கள் ஏற்படாமல் இருக்கும். நல்ல சங்கங்கள்
க்ஷீணதிசை யடையாமலும் இருக்கும். இவ்வுண்மையில் பங்குக்
காரர்கள் தவறுவார்களாயின், அவர்களுடைய பங்குத்தொகைக்கு
எதிர்பார்த்தவரையில் லாபம் கிடைக்காதிருக்கும்பொழுது, அவர்க
ளிடம் அபிமானம் காட்டுவதற்கில்லை. ஸம்மரியாகக் கடன் தொ
கையை வசூலித்து வரும்படி ஸெண்ட்ரல் பாங்கிக்கு அதிகாரம்
கிடைத்துவிடின், அதனால் ஏற்படக்கூடியதென்னவென்று பார்ப்போம்.
ஸெண்ட்ரல் பாங்கிகளின் நிர்வாகிகளுக்குள்ள பொறுப்புகள் குறைந்து
போம். கடனை வசூலிப்பதற்குற்ற உபாயத்தை மிகவும் சௌகரியப்
படுத்தி, கெட்ட சங்கங்களினால் நஷ்டம் ஏற்படக்கூடுமென்ற கருத்தை
யும் குறைத்துவிட்டால், ஜாக்கிரதையான மேற்பார்வையும் கவனமும்



மறைந்துபோம், அல்லது குறைந்துபோம். பொதுநன்மைக்கான காரி
யத்திலே தங்கள் தங்களுக்குள்ள பொறுப்பையுணர்ந்து நடப்பதற்கு
கூட்டுறவு முயற்சி ஒருவித ஆதாரமாய் இருப்பதால், கூட்டுறவு முயற்சிக்
காரர்களுக்குள்ள நிலைமையும் பாதகமடைந்துபோம். ஆகவே, விசேஷ
மான பாதுகாப்பு வேண்டுமென்பது அவசியமல்ல.

* * * * *

## அஸ்ஸாமில் கோவாபரேஷன்.

1916—17-ம் வருஷத்தில் அஸ்ஸாம் கூட்டுறவு முயற்சியில் முன்
னேற்றம் காணப்படவில்லை. அநேக காரணங்களினால் சொஸைடிகள்
வெகுவாய் ரிஜிஸ்டர் செய்யமுடியாமல் தள்ளிவைக்கவேண்டியதாயிற்று.
அவற்றுள் முக்கிய காரணம் ஜனங்கள் காலத்தின் அசௌகரியத்
தினால் விவசாயக்கடன்களையும் தர்ம உதவிகளையும் நம்பி ஜீவிக்க வேண்டி
யிருந்தது. மேற்பார்வைக்குப் போதுமான சிப்பந்திகளும் முழுக்காலமும்
வேலை செய்யக்கூடிய ரிஜிஸ்ட்ராரும் இல்லாமலிருந்தது கவனிக்கத்
தக்க இதரமுக்கிய காரணங்கள். மொத்தத்தில் சொஸைடிகளின் எண்
ணிக்கை 315லிருந்து 344-க்கும், மெம்பர்கள் 15,7,92லிருந்து 16,732
க்கும், தொழில் தனம் ரூ. 18,232லிருந்து ரூ. 19,700-க்கும் அதிகரித்
திருக்கின்றன. ரூ. 1,42,098—யை சுமார் 2,793 கடன்களாக சொஸைடி
களில் மெம்பர்களுக்குக் கொடுத்திருக்கின்றன. வருஷக் கடைசியில்
மெம்பர்களிடமிருந்து வரவேண்டிய கடன்களின் நிலுவை ரூ. 3,90,005
இதில் கெடுமீறியதொகை ரூ. 2,03,678 இது அனுதாபிக்கக்கூடிய விஷ
யமே. மேற்பார்வைச் சிப்பந்திகளை கவர்ன்மெண்ட் அதிகப்படுத்தினால்
ஒழிய இவ்விஷயத்தை சீர்படுத்த வேறு வழியில்லை.

பிரஸ்தாபவருஷத்தில் 11 சொஸைடிகள் மூடப்பட்டன. வருஷக்
கடைசியில் 31 சொஸைடிகள் முறிவடைவதற்கு இருந்தன. முறிவடை
யும் ஏற்பாடு விசேஷமாய் ஸப் டிப்டி கலெக்டர்கள் முதலிய டிபார்ட்
மெண்டுக்கு அன்னியமான உத்தியோகஸ்தர்களிடம் ஒப்புவிக்கப்பட்
டிருப்பதினால் மிகவும் தாமதமாய் நடந்து வருகிறது. வியாஜ்ய விவகாரங்
களில் மத்தியஸ்தர்கள் மூலமாய் ஏற்பாடுகள் செய்ய ரிஜிஸ்ட்ராருக்கு
இஷ்டமில்லை. ஏனென்றால் ஸிவில் கோர்ட் மூலமாய் தீர்மானிக்கப்படு
வதே திறம் என்று அவர் நம்புகிறார்.

விவசாய சம்பந்தமில்லாத 18 சொஸைடிகளும் திருப்திகரமாக
வேலைசெய்திருக்கிறதாகத் தெரிகிறது. விசேஷ வெளி ஒத்தாசையில்லா
மல் அவைகளே பொருளுதவி செய்துகொள்ளுகின்றன. ரூ. 1,0,09,00
அடங்கிய 592 கடன்கள் மெம்பர்களுக்குக் கொடுத்ததில் ரூ. 39,173

வருமான 246 கடன்கள் பழைய கடன்களை நிவர்த்திப்பதற்காக கொடுக்கப்பட்டன. இவ்வருஷம் மெம்பர்களிடமிருந்து வரவேண்டிய கடன்களின் நிலுவை ரூ. 27,307 முந்திய வருஷத்தில் இருந்த இத்தகைய தொகை ரூ. 30,093. நெசவு சாமான்களை சப்ளை செய்வதற்கென்று வடக்கு கௌஹாடியில் ஒரு சொஸைடியும், வில்ஹெட்டில் நெசவுகாரர்களுக்காக 4 புது சொஸைடிகளும் ஏற்பட்டிருப்பதைக்கேட்க எல்லோருக்கும் திருப்தியை உண்டாக்கும்.

ஸென்ட்ரல் பாங்கிங் யூனியன்களில் பலர் தங்கள் தேவைக்குப்போதுமான பணத்தை உள்ளூரில் அடைய முடியவில்லை என்று சொல்லப்படுகிறது. இவ்விஷயத்தில் ப்ரொவின்ஷியல் பாங்க் மிக்க உபயோகமுள்ளதென்று ரிஜிஸ்ட்ராரவர்களுக்கு நன்ருய்ப் புலப்பட்டிருந்தாலும் முழுக்காலமும் வேலை செய்யக்கூடிய ரிஜிஸ்ட்ரார் ஏற்படும் வரையில் சிபார்சு செய்யமாட்டார். அவ்வேற்பாடும் கவர்ன்மெண்டார் சமீபத்தில் செய்வார்களென்று நம்ப இடமில்லை.

* * * *

## திருவாங்கூரில் கோவாபரேஷன்.

சண்டையினால் ஏற்பட்ட தற்கால சிரம நிலைமையிலும்கூட திருவாங்கூர், கோவாபரேஷன் விஷயத்தில் விசேஷ முன்னேற்றம் அடைந்திருப்பதை கோவாபரேடிவ் சொஸைடிகளின் சமீப வருஷ ரிபோர்டினால் அறியலாம். புது சொஸைடிகளுக்கு திரவிய சகாயம் செய்ய, ஸென்ட்ரல் பாங்கியின் தனம் மிகப்போதாமையா யிருந்ததினால் விசேஷ சிரமமாயிருந்தது. ஆதலால் புது சொஸைடிகளுக்கு வந்த மனுக்களை ரிஜிஸ்டர் செய்ய முடியாமல் இருக்கும் சொஸைடிகளை ஒழுங்கு படுத்திப் பலப்படுத்துவதில் டிபார்ட்மெண்டின் முயற்சி செலுத்தப்பட்டது. சொஸைடிகளின் தொகை 24 லிருந்து 40-க்கும், மெம்பர்களின் தொகை 945 லிருந்து 2,034-க்கும், கொடுபட்டிருக்கும் மூலதனம் ரூ. 13,778 லிருந்து 25,151-க்கும், க்ஷேமநிதி பண்டு ரூ. 300 லிருந்து ரூ. 2,078-க்கும் அதிகரித்திருக்கின்றன. மெம்பர்களின் சங்கியை துரிதமாய் விருத்தியடைந்திருப்பதினால் பொது ஜனங்களுக்கு கோவாபரேஷனின் உபயோகம் நன்கு புலப்பட்டிருக்கிறது என்பது தெளிவாய் விளங்குகிறது. பிராமணர்கள் முதல் புலையர்கள் வரையில் எல்லா வகுப்பினரும் மெம்பர்களா யிருக்கிறார்கள். அவர்களுள் கிறிஸ்தவர்களின் தொகை அதிகம். ரூ. 68,257 வரையில் 990 கடன்களாக கிராம நாணயச் சங்கங்களால் அவைகளின் மெம்பர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதில் ரூ. 24,589 பழைய கடன்களை நிவர்த்திப்பதற்காகவும் ரூ. 14,932 வியாபார விஷயத்திற்காகவும், ரூ. 11,923 விவசாயச் செலவுகளுக்காகவும்



விநியோகப்பட்டிருக்கின்றன. ஆகவே விவசாயம், வியாபாரம், கைத்தொழில் இவைகள் தகுந்த ஆதரவை பெற்றிருக்கக் காணலாம். புலையர்களுக்கு ஒத்தாசை செய்யும்பொருட்டு ஒரு விவசாய நாணயசங்கம் ஏற்பட்டிருக்கிற விஷயம் மிகவும் திருப்திகரமா யிருக்கிறது. வலையர்களுக்காகவும் சேணியர்களுக்காகவும்கூட சில நாணயச் சங்கங்கள் ஏற்பட்டிருக்கின்றன. மூன்று பிரிவினைச் சங்கங்களுள் (Distributive Societies) திருவனந்தபுரம் ஸ்டோர்ஸ் நல்லவேலை செய்திருப்பதாகவும் கிரமமாக அது விருத்தி யடைந்துகொண்டிருப்பதாகவும் தெரிகிறது. இக்கிளர்ச்சி ஆரம்பித்து இவ்வளவு சொற்ப காலத்திற்குள் இவ்வளவு முன்னேற்றம் காட்டி யிருப்பதற்கு ரிஜிஸ்ட்ரார் அவர்களை மிகவும் கொண்டாடுகிறோம்.

* * * *

## சங்கங்களும் கீழ்தரக் கல்வியும்.

பேகார், ஒரிஸ்ஸா மாகாண கோவாபரேடிவ் கான்பரென்ஸைத் திறக்கும்பொழுது ஸர் எட்வர்ட் கேயிடு அவர்கள் கூறியதாவது:— ஐக்கிய வியக்கத்தின் அபிவிருத்தியானது கீழ்தரப்படிப்பின் அபிவிருத்தியுடன் நெருக்கமாய் இணைக்கப்பட்டிருக்கிறது. படிப்புள்ள மெம்பர்கள்தான் ஐக்கிய முயற்சியில் சேர்ந்து நன்ருய் புத்திசாலித் தன்மையுடன் உழைத்து அதன் பயன்களையடைய அதிக சௌகரியங்களிருப்பதால், சங்கங்கள் தங்கள் தங்கள் எல்லைகளுக்குள்ள ஜனங்களுக்கு கீழ்தரக்கல்வி கொடுக்க பொறுப்பு வகித்துக் கொள்ளவேண்டுவதவசியம். ஸ்தல பள்ளிக்கூடங்களின் உபாத்தியாயர்களை சரியாய் மேற்பார்வை பார்த்தும் அடக்கி ஆளுகை செய்தும் வரக்கூடுமானதால், சங்கங்கள் கல்வியின் தன்மையை உயர்த்தி அபிவிருத்தி செய்ய முடியும். கீழ்தரக்கல்வியை விசாலப்படுத்துவதில் சங்கங்களை முன் காட்டிலும் அதிக சிரத்தை யெடுத்துக்கொள்ள வேண்டுமென ரிஜிஸ்ட்ரார் சொல்வதை நான் அங்கீகரிக்கிறேன் இக்கல்வி விஷயத்தை மனதிற் கொண்டு வித்தியா இலாகா டைரெக்டரை அக்கான்பரென்ஸில் ஆஜராகி நடவடிக்கைகளில் கவனம் செலுத்தும்படி ஏற்கனவே சொல்லியிருந்தார்.

கிராமாந்தரங்களில் இன்னும் விசேஷமாய் பரவவேண்டிய இக்கீழ்தரக்கல்விக்கு இவ்விதத் தூண்டுகோல் ஓர் இராஜாங்கத்துக்குத் தலைவராயுள்ளவர் கொடுத்தால், அதின் அபிவிருத்தியைக் கேட்கவும் வேண்டுமா? நம்முடைய இராஜதானியிலும் வித்தியா இலாகாக்காரர்கள் இவ்விஷயத்தில் கிராமச்சங்கங்களின் ஒற்றுமையை நாடி, அக்கல்வி அதிக வேகமாய் பரவும்படி செய்வார்களென நாம் நம்புகிறோம்."

* * * *

## பொலிகாளைச் சங்கங்கள்.

அமெரிக்காவிலுள்ள யுனைடெட் ஸ்டேட்ஸில் 1916௵ கடைசியில் 32 பொலிகாளைச் சங்கங்களிருந்தன. அவைகளில் 120 காளைகளும் 650 மெம்பர்களுமிருந்தார்கள். இச்சங்கத்தின் முக்கிய நோக்கமாவது:— மெம்பர்களுக்கு வேண்டிய காலத்து பொலிகாளைகளை உபயோகத்திற்குக் கொடுத்தலாகும். சிறு பசுக் கூட்டங்களுடையவர்களும், பொலிகாளையொன்று சொந்தத்தில் வாங்கிக்கொள்ள சக்தியற்ற வருமான குடியானவர்கள் 1[illegible] அல்லது 20 பெயர்கள் சேர்ந்து ஐக்கிய முறையில் இவ்விதச் சங்கம் ஒன்று ஏற்படுத்துகிறார்கள். பசுக்கூட்டங்களை சௌகரியப்படி 5 வகையாகப் பிரித்து, ஒவ்வொரு வகைக்கும் ஓர்காளையை நியமிக்கிறார்கள். கன்று உற்பத்தியில் க்ஷீணம் வராமலிருக்கவேண்டி இரண்டு வருஷத்திற்கொருமுறை காளைகளை ஒருவகையிலிருந்து மற்றொரு வகைக்கு மாற்றிக்கொண்டேயிருக்கிறார்கள். ஒரு மெம்பர் தம் பசுமாடுகளுக்குத் தகுந்தபடி ஓர் காளை விலையில் ஏற்பட்ட வீதாசாரம் கொடுத்தால் சுமார் 10 வருஷத்திற்கு நல்ல காளைகளை உபயோகப்படுத்திவரலாம். அவ்விதம் உபயோகப்படுத்தி வருவதினால், நல்ல கன்றுகள் உண்டாகி அவைகளின் விலைகள் சுமார் 100-க்கு 65 வீதம் உயர்ந்திருக்கின்றன. இம்மாதிரிச் சங்கங்களை நம் இராஜதானியிலும் ஏற்படுத்த முயலலாம்.

# ஸ்ரீவில்லிபுத்தூர் சாத்தூர் தாலூக்காக்களில் ஐக்கிய முயற்சியின் அபிவிருத்தி.*

வடமலைபுரம் ம-ள-ள-ஸ்ரீ, R. ஆனந்தராவ் அவர்களால்.

ஐக்கிய சங்க ஆக்டானது நம்மிந்தியர்களின் நன்மையை உத்தேசித்து 1904-ம்௵தில் ஏற்படுத்தப்பட்டது. ஷை ஆக்ட் ஏற்பட்ட மறு வருஷத்தில் ஸ்ரீவில்லிபுத்தூரில் ஒரு சங்கம் ஸ்தாபிக்கவேண்டுமென்றும் இப்போது வேலைசெய்து வருகிற சாஸ்வத நிதியை இந்த ஆக்டின் கீழ் ரிஜிஸ்டர் செய்துவிட வேண்டுமென்று ஷை சாஸ்வத நிதியைப் பெற்றெடுத்த காலஞ்சென்ற ஸ்ரீமான் R. சடகோபசாரியாரவர்கள் பிரயத்தினப்பட்டதும் மெம்பர்கள் சம்மதம் கொடுக்காததினால் அவரின் எண்ணம் நிறைவேறாமற்போனதும் உங்களில் அநேகம் பெயர்களுக்கு ஞாபகமிருக்கலாம். ஷை ஆக்டை நானும் ஷையாரும் கவனித்ததில் இந்த ஆக்டின் கீழ் சில சங்கங்கள் ஸ்தாபிக்கவேண்டுமென்ற எண்ணம் ஏற்பட்டிருந்தாலும் நான் சுயமாய் செய்வதற்கு இடமில்லாமலிருந்ததால் உடனே முடியவில்லை. அப்பால் நான் வடமலைபுரத்தில் சுயமாய் காரியாதிகள் நடத்த ஏற்பட்டதில் ஷையூரில் சங்கம் ஸ்தாபிக்கவேண்டுமென்று 1908-ம் ௵த்தில் மனுச்செய்ததில் 1909-ம் ௵ ஜனவரி௴ 8௳ ரிஜிஸ்டர் செய்யப்பட்டு 1909-௵ பிப்ரவரி௴ 14௳ வேலை ஆரம்பம் செய்யப்பட்டது. அப்பால் இப்பாகத்தில் அநேக சங்கங்கள் ஸ்தாபிக்கவேண்டுமென்ற எண்ணம் ஏற்பட்டதுடன் அப்போது ரிஜிஸ்ட்ராராயிருந்த ம-ள-ள-ஸ்ரீ திவான் பகதூர் R. இராமச்சந்திர ராவ் அவர்களும் ஜாஸ்தி சங்கம் ஸ்தாபிக்க முயற்சி எடுக்க வேண்டுமென்று யோசனை சொன்னார். அந்த யோசனையை நிறைவேற்றுவதற்கு விதிகளை மறுமுறை நாங்களும் சொந்தத்தில் அச்சடித்தும், ஐக்கிய நாணயச் சங்கங்களின் உபயோகத்திற்கென்று ஓர் துண்டு பத்திரிகையை பிரசுரம் செய்தும், ஸ்ரீவில்லிபுத்தூர் சாத்தூர் தாலூக்காவிலுள்ள முக்கிய கிராமங்களுக்கு இனாமாக அனுப்பினோம். அநேககிராமங்களுக்குச்சென்று உபதேசித்ததின்பயனாய், 1910-ம் ௵த்தில் 1[illegible] சங்கமும், 1911-ல் 12-ம், 1912-ல் 8-ம், 1913-ல் 10-ம், 1914-ல் [illegible]-ம், 1915-ல் 4-ம், 1916-ல் 1-ம், 1917-ல் 2ம், ஆக 61 சங்கங்கள் ஏற்பட்டதில் 1915, 1916-ம் ௵த்தில் பலாரிஷ்ட நோயால் பீடிக்கப்பட்டு அற்பாயுளில் மாண்டுபோன 10 சங்கங்கள் போக மீதி 51 சங்கங்கள் இப்போது வேலைசெய்து வருகின்றன. இந்த 51 சங்கங்களில் இப்பாகத்து கௌரவஸ்தாபகரால் 15-ம், கவர்ன்மெண்டு இன்ஸ்பெக்டர்களால் 13-ம் இரண்டு பேர்களும் சேர்ந்து 23 சங்கங்களும் ஸ்தாபிக்கப்

* இவ்வியாசம் சாத்தூர் ஸ்ரீவில்லிபுத்தூர் தாலூக்கா கான்பரென்ஸில் வாசிக்கப்பட்டது.

பட்டன. இதனுல் இப்பக்கத்தில் ஐக்கிய இயக்கமானது. உத்தியோகப்பற் றில்லாதவர்களால் ஜாஸ்தியாய் கவனிக்கப்பட்டதாய் ஏற்படுகிறது. 51 சங்கங்களில் 1-சங்கம் விவசாயிகளல்லாத சங்கமும், பாக்கி 50-சங்கமும் விவசாயிகள் சங்க மாகும். 1 சங்கம் தவிர பாக்கி 50-சங்கமும் நாண யச் சங்கமாக யிருக்கிறது.

2. சங்க மெம்பர்கள் மொத்தம் 3,410 பேர்களில் பிராணர்கள் 346, பிராமணரல்லாத இந்துக்கள் 2825, கிறிஸ்துமதஸ்தர்கள் 50, மகம்மதியர்கள், 13, பஞ்சமர்கள், 126, இதர வகுப்பினர்கள் 50. இவர்களில் விவசாயத்தையே தொழிலாகக் கொண்டவர்கள், 8,100; விவ சாயமில்லாத இதர தொழிலையுடையவர்கள் 180. இரண்டு முடைய வர்கள் 130.

3. மெம்பர்களின் பங்குத் தொகை ரூ. 18286. இந்த தொகையை ஷி மெம்பர்கள் கடனுக வாங்கியிருக்கும் 2,18,089 ரூபாயுடன் ஒப்பிட்டு பார்த்தால் மேற்படி தொகையை கடனுக வாங்குவதற்காக ஏற்பட்ட கட் டாய நிபந்தனைக்காக செலுத்தியதாய் தோன்றுகிறதே தவிர இவைகள் தங்கள் மீதத்தை மனப்பூர்வமாகப் போட்டவர்களாக இல்லை. எப்படி யாவது இத்தொகை இவர்களுக்கு ஒரு மிச்சமாகவே கருதப்படும். கடன் வாங்கும்போது மேற்படி நிபந்தனை இல்லாமல் வாங்குவதென்றல் மேற் படி சொற்ப தொகையும் மீதமிராதென்பது நிச்சயம். பங்குத்தொகை வசூல் செய்திருப்பதில் 1,000 ரூபாயுக்கு மேல் வசூல் செய்திருக்கும் சங்கங்கள் 3. வடமலைபுரம் ரூ. 1,588, ஸ்ரீவில்லிபுத்தூர், ரூ. 1,229, மங் கலம், ரூ. 1,017.

4. சங்கங்கள் மெம்பர்களிடத்திலும் மெம்பர்களல்லாதவர்களி டத்திலும் வாங்கியிருக்கும் டிபாஸிட்டுத்தொகை ரூ. 17,395. இதினல் மெம்பர்கள் சங்கத்தில் கடன் வாங்குவதுதான் முக்கிய மாய் கருதுவதைக் காட்டுகிறது. எப்படி கடன் வாங்க சங்கத்தை நாடுகி றேமோ அவ்விதம் தங்கள் மீதத்தையும் வைப்பதற்கு நாடவேண்டும். 500 ரூபாய்க்குமேல் ஜாஸ்தியாய் டிபாஸிட்டுகள் வாங்கியிருக்கும் சங்கங் கள் 7, ஸ்ரீவில்லிபுத்தூர் ரூ. 5,363, வர்த்திராயிருப்பு 3,186, எதிர்கோட் டை 1,474. மங்கலம் 1,017, தடங்கம் 695, நத்தம்பட்டி 661, சுப்பிர மணியபுரம் 529. இதில் ஸ்ரீ வில்லிபுத்தூர் சங்கத்தை முக்கியமாய் குறிப் பிடத்தகுந்தது. சங்கம் ஸ்தாபித்து 3-வருஷத்தில் ஜாஸ்தியான டிபாஸிட் டுகள் வாங்கி யிருக்கிறது. மேற்படி யூரில் 20-வருஷ காலமாய் ஒரு சாஸ் வத நிதியும் 6-வருஷகாலமாய் மற்றெரு நிதியும் வேலைசெய்து வருவதில் இச்சங்கம் புதிதானலும் ஜாஸ்தி டிபாஸிட்டுகள் வருவதால் இச்சங் கத்தை ஜனங்கள் ஜாஸ்தியாய் நம்புகிருர்களென்பதைக் காட்டுகிறது.



5. 3-4வது பாராக்களில் கண்ட தொகையுடன் மெம்பர்களுக்கு கடன் கொடுப்பதற்காக சங்கங்கள் மதுரை இராமநாதபுரம் சென்ட்ரல் கோவாபரேடிவ் பாங்கில் ரூ. 1,91,998-ம், மதராஸ் சென்ட்ரல் பாங்கில் ரூ. 10,070-ம், கடன் வாங்கப்பட்டிருக்கின்றன. சென்ட்ரல் பாங்குகள் இவ்வளவு ஜாஸ்தியான தொகையை மெம்பர்கள் ஏற்றுக்கொண்டிருக் கும் வரையறுக்கப்படாத பொறுப்பு ஒன்று இருப்பதால்தான் கொடுத்து உதவுகிருர்கள். 3,410 மெம்பர்களின் கடன்போக நிகர ஆஸ்தியானது, ரூ. 1,12,93,400 என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. மேல் கண்டபடி பலமான ஜாமீனிருப்பதால் சென்ட்ரல் பாங்கிகள் கொடுத்து உதவுகிறது போல் லோகல் டிபாஸிட்டர்களும் கொடுத்து உதவவேண்டும். இத்தொ கைகளைக்கொண்டு சங்கங்கள் தங்கள் விவகாரத்தை நடத்தி வருவதில் தங்களை அவசரத்துக்கு உதவிய தாய்ச் சங்கத்தை ஆதரிப்பதில் சில சங் கங்கள் பின்னடைந்திருக்கிறது. அதாவது 30—6—17-முடிய பாங் குக்கு செலுத்த வேண்டிய தவணைத் தொகையானது அசலில் 19 சங்கங் களின்பேரில் ரூ. 23,656-ம், வட்டியில் 16 சங்கங்களின்பேரில் ரூ. 3,875—15—9-ம், பாக்கியிருப்பதை நோக்க விசனகரமாயிருக்கிறது. இதில் பெத்து செட்டிபட்டி, சுகிரவாரப்பட்டி, முதலிபட்டி, நாட்டார் மங்கலம், சாத்தூர், சாத்தூர் புதுக்கோட்டை, இந்த 6 சங்கங்கள் 1 பைசாகூட அசலுக்கு செலுத்தாம லிருப்பதைப் பார்க்க இச்சங்கங் கள் ஐக்கியமுறையை இன்னும் சரியாய் அனுசரிக்கவில்லை என்று ஏற் படுகிறது. நடக்கிற வருஷத்திலாவது இக்குறையை நீக்கிக்கொள்ள முயலவேண்டும். இச்சங்கங்கள் இவ்விதமாய் ஜாஸ்தி பாக்கி வைத்திருப் பதால் டிபார்ட்டுமெண்டார் கணக்கு எடுக்கும்போது டிஸ்டிரிட்டு பாங் கியின் பாக்கி ஜாஸ்தி என்று சொல்ல நேரிடுவதில் சங்கங்களே அதற்கு ஜவாப்தாரியாக யிருக்கின்றன. சில சங்கங்கள், பாங்கிவேறு, சங்கம் வேறு, என்று நினைத்திருப்பது நீங்கி பாங்கியும்சங்கமும் ஒன்றே, பாங் கின் லாபநஷ்டமும் சங்கத்தைக் பொறுத்தது, சங்கத்தின் லாபநஷ்டம் பாங் கைப் பொறுத்ததென்றஎண்ணம் பாங்காருக்கும் சங்கத்தாருக்கும் உண் டாகும் வரையில் இக்குறை இருக்கத்தான் செய்யும். பாங்கும் சங்க மும் பரஸ்பர சகோதர பாவனையாக நினைத்து வேலைசெய்வது விரும் பத்தக்கது.

6. மேலே கண்ட 3 வழிகளில் சங்கங்கள் தொகைவாங்கி தங்கள் மெம்பர்களுக்கு கடன் கொடுத்திருப்பதில் 30—6—17-ல் 3,042 கடன் களின்பேரில் ரூ. 2,18,089 சங்கங்களுக்கு வரவேண்டியதா யிருக்கிறது. இதில் 1951 கடன்களுக்கு ரூ. 92,122 தவணைப்படி செல்லாகாமல் பாக் கியிருக்கின்றன. இது 100-க்கு 42 வீதம் பாக்கி யேற்படுகிறது; இதை கவனிக்கும்போது, ஐக்கியஸ்தர்களுக்கு சில வார்த்தை சொல்ல வேண்டி

யதாயிருக்கிறது. சங்கம் ஸ்தாபனத்தின் நோக்கம் மெம்பர்கள் தெரிந்து கொள்ளவில்லை. சங்கத்தை கடன்வாங்கும் வட்டக்கடைபோல் நினைக்கிறார்கள். இது முற்றிலும் பிசகு. வாங்கிய கடன் ஒரு குறிப்பிட்ட காலத்தில் கொடுக்க வேணுமென்ற நிபந்தனையை ஒப்புக்கொண்டு கடன் வாங்கினவர்கள் அப்பால் அதை நிறைவேற்றுதவரையில்தான் செய்த வாக்குத்தத்தம் தவறிப்போய் அதினால் ஒரு பழிக்கு ஆளாகவேண்டுமே என்றபாவம் மனதிலிருந்தால் இம்மாதிரி தவறுதல்நேரிடாது. ஸாவகார் களிடத்திலும் இன்னும் மற்றஇடங்களிலும் கடன்வாங்கி அங்கு ஒழுங்கு தப்பி நடப்பின் ஒரு குறைவாகத் தோன்றுததால் இதிலும் அம்மாதிரி நடக்கிறார்கள். வரும்படி ஜாஸ்தியாய் சம்பாதிக்கும் மெம்பர்கள்கூட தங்கள் வரும்படியை உத்தேசித்து சங்கத்தை அலக்ஷியம் செய்து விடுகிறார்கள். தான் இந்த கடனை மோசம் செய்வதாயில்லை என்றும் கண்டித்து கேட்டால் உடனே கொடுக்கக்கூடிய சக்தி இருக்கிறதென்றும் மனதில் கொண்டு இதை அலக்ஷியம் செய்கிறார்கள். இந்த அலக்ஷியமே பின்னால் மற்றவர்கள் தன்னை அலக்ஷியம் செய்ய காரணமென்பதை மறந்து விடுகிறார்கள். இச்சங்கம் அப்பேற்பட்ட கெட்ட எண்ணங்களைப் போக்கி ஒரு சரியான முறையை கற்பிக்க யேற்பட்டிருக்கிற தென்றும் சொற்ப தொகைகொடுத்துகேளாமலே வேண்டிய உபசாரணைகள் செய்து ஒன்றை பத்தாகப் பெருக்கி லாபம் சம்பாதிக்கும் வட்டக்கடைபோல் இச் சங்கமல்லவென்று நினைக்கவேண்டும். எந்த மெம்பர் இவ்விஷயத்தில் தவறுகிறாரோ அவர் ஐக்கிய இயக்கத்தை நன்றாய்த் தெரிந்து கொள்ள வில்லை என்று யேற்படும். ஐக்கிய சங்கமெம்பர்கள் கவனிக்க வேண்டிய முக்கிய விஷயங்களை தெரிந்துகொள்ள 1915-ம் செப்டம்பர் மாசத்து தமிழ்ப்புல்லட்டினில் ஐக்கிய சங்கங்களின் இலக்ஷணங்கள் என்றும் வியாசத்தை தயவுசெய்து பார்த்தால் தெரியவரும். சில சந்தர்பத்தில் தொ கைகொடுக்க முடியாமற் போகலாம்; அப்படிப்போவது அபூர்வம். அந்த சமயத்தில் தன் அசௌகரியத்தை தெரிவித்து மறுதவணை கேட்டுக் கொள்ள வேண்டும். இவ்வாறு மெம்பர்கள் பாக்கிவைத்திருப்பதால் சென்ற வருஷத்திய வருஷாந்திர ரிப்போர்ட்டை பரிசீலனை செய்து கவர்ன்மெண்டார் வெளியிட்டிருக்கும் தீர்மானத்தில் நமது ஜில்லா வில் ஜாஸ்தி பாக்கிவைத்திருப்பதை எடுத்து காட்டியிருக்கிறார்கள். இக்குறையை நடப்பு வருஷத்திலாவது நிவர்த்திசெய்ய முயலவேண்டும்.

7. சங்கங்கள் வேலை நடத்துவதில் ஏற்படும் முக்கிய செலவு கள் பலவுள்ள; இவ்வகையில் சிப்பந்திசெலவு 30,617 ரூபாய். 51 சங்கங் களின் பேரில் ரூ. 1,568 சராசரி ரூ. 30-12-2 ஆகிறது. இந்தத் தொகை குறைவென்றே சொல்லவேண்டும். டிபார்ட்மெண்டார் சங்கத்தின் பஞ் சாயத்தார்கள் இலவசமாய் வேலை செய்யவேண்டுமென்ற விதியை



சிரம்ப நாளாய் ஊர்ஜித்துக்கொண்டு வரப்பார்த்ததில் அனேக சங் கங்கள் விர்த்தி யடையாமல் நின்றன. இதை உணர்ந்தபின் சங்கங்கள் குறைவாய் செலவு செய்கின்றன. இன்னும் இதுவிஷயத்தில் சங்கத் தின் தன்மைக்கு தக்கபடி வேலைசெய்யும் பஞ்சாயத்தார்களுக்கோ அல்லது பிரத்தியேக சிப்பந்தி யேற்படுத்தியோ அவர்களுக்கு சாங்க்ஷன் செய்துவந்தால் இன்னும் சங்கங்கள் நன்றாய் விர்த்தியடையுமென்பது என் தாழ்மையான அபிப்பிராயம். சாதலவின் செலவில் ரூ. 1,4[illegible]9 ஆகிறது; சராசரி இதுவும் ரூ. 30 ஆகிறது. இந்தவிகிதம் ஜாஸ்தி என்றே சொல்லவேண்டும். பஞ்சாயத்தார்கள் சாதலவின் சிலவுசெய்வ தில் ஜாக்கிரதையா யிருக்கவேண்டும். ஒவ்வொரு செலவையும் அதின் அவசியத்தையும் கவனிக்க செய்யவேண்டும். டிபார்ட்மெண்டார் இது விஷயமாய் எச்சரிப்பதில் தங்கள் பேனாவை உபயோகப் படுத்தவேண்டும். எச்சரிப்பு இருந்தால்தான் சங்கங்களுக்கு பயமிருக் கும். இதுவிஷயமாய் டிபார்ட்மெண்டார் செய்யும் ஒவ்வொரு எச்ச ரிப்பையும் நமது அபிவிருத்திக்கென்று நிரம்பவும் வந்தனத்துடன் ஏற்று அதின்படி நடக்கவேண்டியதே சங்கங்களின்கடமை. இதுவிஷய மாய் சங்கங்கள் சரியாய் நடந்துவந்ததாக நினைக்கலாம். ஆனால் டிபார்ட்மெண்டாருக்கு ஜாஸ்தி என்று தோன்றக் கூடும். ஜாஸ்திசெலவு செய்யக்கூடாதென்று புத்திமதி சொல்லுங்காலத்தில் அவர்கள் புத்தி மதியை பெற்றுக்கொண்டு நடப்பதே முறை. சங்கங்கள் இதற்கென்று ஏற்பட்ட ஆக்டின்கீழ் ரிஜிஸ்டர் செய்திருக்கிறதென்றும் அந்த ஆக் டின் அமைப்பின்படி யேற்படுத்தப்பட்ட டிபார்ட்மெண்டார் சொல் லும் கற்பனைகளெல்லாம் சங்கத்தின் அபிவிர்த்திக்கென்றே நினைக்க வேண்டும்.

8. க்ஷேமநிதி:—30-6-17-ல், சங்கங்களின் க்ஷேமநிதி மொத் தம் ரூ. 21,397-5-3. இதில் ரூ. 14,642-6-6. மதுரை சென்ட்ரல் பாங் கில் டிபாஸிட்டு செய்திருக்கிறது. ரூ. 789-8-0, 3 சங்கங்கள் யுத்த பாண்டுகளில் போட்டிருக்கின்றன. நடப்பு வருஷத்தில் ரூ. 116-4-0 விடமலேபுரம் சங்கம் போஷ்டாபீஸ் ரொக்க சர்ட்டிபிகேட் வாங்கி வருகிறது. சங்கம் க்ஷேமநிதியை பிரத்தியேகப்படுத்தி வைக்காமல் 5,965-6-9 தன்விவகாரத்துடன் சேர்த்து வைத்துக்கொண்டிருக்கின் றன இது சங்கம் விதிகளுக்குவிரோதமா யிருப்பதுடன் டிபார்ட்மெண் டார் கற்பனைக்கும் விரோதமா யிருக்கிறது. இவ்விதம் வைத்திருப்பதா னது பக்கத்திலிருக்கும் சங்கங்களுக்கும் கெடுதலை உண்டாக்கக்கூடியதா யிருக்கிறது. சரியாய் செலுத்தியிருக்கும் சங்கங்களை பார்த்து இவைகள் பின்பற்ற வெண்டியதாயிருக்க சரியாக செலுத்திவரும் சங்கங்கள் இவைகளின் உதாரணத்தை பின்பற்ற ஏற்படுகிறது. பக்க சங்கங்களின்

க்ஷேமத்தை குறித்தும் க்ஷேமநிதியை வெளியில் வைக்கவேணு மென்ற நோக்கத்தை உத்தேசித்தும் இச்சங்கங்கள் உடனே செலுத்தி விடுவது உசிதம்.' க்ஷேமநிதியை செலுத்த வேண்டியவைகளுக்கு ஒரு யோசனைசொல்ல அனுமதி வேண்டுகிறேன்.

தற்சமயம் ஐரோப்பா யுத்தம் நடந்துவருவதும் அந்த யுத்தத்திற் காக கவர்ன்மெண்டார் கடன் வாங்குவதும் சங்கங்களுக்குத் தெரிந்ததே. சங்கங்களின் க்ஷேமநிதியை யுத்தக்கடனுகக் கொடுக்கவேண்டுமென்று டிபார்ட்மெண்டார் ஸர்க்குலர் அனுப்பியிருப்பதும் சங்கத்தாருக்கு ஞாபகமிருக்கும். அதின்படி சில சங்கத்தார்கள் நடந்திப்பதும் முன் சொன்னதிலிருந்து தெரிந்துகொள்ளலாம். சில சங்கங்கள் செலுத்த உத்தேசமிருந்தும் ஆடிட் ஆர்டரை எதிர்பார்த்திருந்ததால் கடன் வாங் குவதற்கான காலம் கடந்துவிட்டது. ஆகையால் சில சங்கங்கள் செலுத்தவில்லை. இப்போது மறுபடியும் கவர்ன்மெண்டார் யுத்த நிமித்தம் கடன் வாங்குவதா யிருக்கிறுர்கள். க்ஷேமநிதி பாக்கி வைத்திருக்கும் சங்கங்கள் இப்பொழுது யுத்தத்துக்கு உதவி புரிய தக்க சமயமாகையால் உடனே தங்கள் க்ஷேமநிதி கடனுக கொடுப்பதில் நமக்கு இயற்கையாய் ஏற்பட்டிருக்கும் இராஜ பக்தியை வெளிப்படையாய் காட்டுவதற்கு தகுந்த சமயம்.

9. மீட்டிங்குகள் சென்ற 30-6-17 ௵த்தில் சங்கங்கள் 109-மகா சபைகளும், 533 பஞ்சாயத்து மீட்டிங்குகளும் கூட்டி யிருக்கின்றன. அடிக்கடி மகாசபைகளும் பஞ்சாயத்து மீட்டிங்குகளும் கூடவேண்டும். சில சங்கங்களில் மகாசபை கூட்டுவதானது நிரம்பவும் கஷ்டமாக யிருக்கிறது. இதினுல் மெம்பர்கள் எவ்வளவுதூரம் சங்கத்தின் விஷய மாய் கவனிக்கிறுர்களென்பது தெரியவரும். மெம்பர்கள் தயவுசெய்து சங்கத்தின் வரையறுக்காத பொறுப்பு தங்கள் தலையில் சுமத்தி யிருக்கிற தென்று தெரிந்து மகாசபைக்கு அவ்சியம் வரவேண்டும்.

10. லாபம்:—கோவாபரேடிவ் கமிட்டியார்கள் ரிபோர்ட்டில் சங் கங்களின் லாபத்தைக் கணக்கிடுவதில் வசூலாக வேண்டிய லாபஅம்சங் களை சட்கத்தின் ஆஸ்தியில் சேர்க்காமல்வசூலானதைமாத்திரம் கணக்கில் சேர்க்கவேண்டுமென்று சொல்லியிருப்பதின் பயனுய்சென்ற 1915-16ம் ௵த்தில் 6 சங்கங்கள் போக 43 சங்கங்களும் நஷ்டமாக வேலை செய்வ தாய் காட்டவேண்டியதா யிருந்தது. ஆனுல் வாஸ்தவத்தில் நஷ்டமல்ல. இவ்வழியாற்தான் சங்கம்செய்யும் ஒழுங்கான வேலையாவதுதெரியவரும். 1915-16-ம் ௵த்தில் நஷ்டமாக வேலைசெய்த 43 சங்கத்தில் 1916-17ம் ௵த்தில் 7 சங்கம் முன் வருஷத்து நஷ்டத்தை ஈடுசெய்தும் ஷை வரு ஷத்தில் செய்யவேண்டிய செலவுகள்செய்தும் கொடுக்கவேண்டிய வட்டி முதலும் போக லாபமாக வேலை செய்திருக்கிறது. 22 சங்கங்கள் ஷை



வருஷத்திய நடவடிக்கையில் மட்டும் லாபம் ஏற்பட்டு, ஷை லாபத்தை முந்தினவருஷத்து நஷ்டத்துக்கு ஈடுசெய்தன. 14 சங்கங்கள் ஷை வரு ஷத்திலேயே நஷ்டமாக வேலைசெய்து முந்திய நஷ்டத்துடன் ஜாஸ்தி நஷ்டமாக வேலை செய்திருக்கிறது. இவ்வித மிருப்பதில் சில சங்கங்கள் திருப்தியாக வேலைசெய்தும் நஷ்டத்தைக் காண்பிக்க வேண்டியதா யிருக் கிறது. இச்சங்கங்கள் கமிட்டியாரின் அபிப்பிராயத்தை தெரிந்து கொள்ளவில்லை. வசூலான வட்டியைமட்டும் கணக்கில் கூட்டப்படு மாகையால் ஒவ்வொரு வருஷம் ஜூன்௴ 30௳ முடிவில் மெம்பர்களிடம் வட்டி வசூல் செய்யாதவரை எப்போதும் நஷ்டமாகத்தான் முடியும். ஆகையால் ஒவ்வொரு சங்கமும்முயற்சிசெய்து ஜூன்௴ 30௳ யோடு முடிய யேற்படும் வட்டியை வசூலிக்க ஏற்பாடு செய்யவேண்டியது அவசியம்.

11. சங்கமாபிஸு: ஒரு சங்கமாவது தன் சொந்தத்திற்கு கட்டிடம் வாங்கவில்லை; வாங்குவதற்கு போதுமான காலம்வரவில்லை. ஆனுல் 8 சங் கங்கள் வாடகைக்குக் கட்டிடம்வாங்கி பிரத்தியேகமாய் ஆபிஸு ஏற்படு த்தி வேலை நடத்திவருகின்றன.

12. சில சங்கங்கள் ஆபீஸுக்கு வேண்டிய சாமான்கள் வாங்கி யிருக்கின்றன. இதின்மொத்தம் மதிப்பு ரூ. 533. வடமலைபுரம், மங் கலம், வர்த்திராயிருப்பு இந்த, 3 சங்கங்கள் இரும்பு பெட்டிகள் வாங்கி யிருக்கின்றன.

13. சங்கங்கள் கவனித்துவரும் இதர விஷயங்கள்.

வடமலைபுரம். இச்சங்கம் கல்வி சுகாதாரம் இவைகளை கவனிப்பது டன் தன் மெம்பர்களுக்கு கியாஷ் கிரிடிடின்பேரில் கடன் கொடுப்பதற்கு வேண்டிய விதிகள் ஏற்படுத்திகொண்டு கொடுத்து வருவதுடன் கமிட் டியார் அபிப்பிராயப்படி பாங்குக்கும் கொடுத்து வருகிறது.

இச்சங்கம் தன்மெம்பர்களுக்குள் ஏற்படும் விவகாரத்தை கோர்ட்டு க்கு போகாமல் தானே அனேக கேஸ்களை தீர்த்து விடுகிறது. இது விஷய மாய் முன்னமே புலட்டினில் பிரசுரமா யிருக்கிறது. இப்போதும் ஒரு முக்கிய பாகவழக்கை விசாரித்து பைசல் செய்து கோர்ட்டுக்குப் போகும் சிரமத்தை தடுத்திருக்கிறது. இதன் விவாதம் சமீபத்தில் புலட்டி னில் வெளியாகும்.

தடங்கம்.—ஒரு சிறு கிராமத்தில் ஏற்பட்டிருந்தாலும் ஜாஸ்தியான டிபா ஸிட்டுகள் வாங்குகிறது.

வெள்ளையாபுரம்.—இது ஒரு புது பள்ளிக்கூடம் ஏற்படுத்தி சங்கத்தின் பொது நன்மைநிதியை பள்ளிக்கூடத்துக்கு கொடுத்துவருவதுடன்

பள்ளிக்கூடத்துக்கு ஐக்கிய முறையில் புஸ்தக விற்பனை செய்ய பிரயத்தினம் செய்துவருகிறது.

**வர்த்திராயிருப்பு.**--இது வருஷந்தோரும் ஒரு குறிப்பிட்ட தொகையை ஷை யூர் பெண்பிள்ளை பள்ளிக்கூடத்துக்கு கொடுத்து வருகிறது.

**கோத்தன்குளம்.**—பாரஸ்டு பஞ்சாயத்துடன் வேலை செய்து வருகிறது.

மேலே சொன்ன விஷயங்களிலிருந்து ஐக்கியசங்கம் கடன் கொடுக்கத்தான்" என்று நினைத்திருக்கும் என்னுடைய 'சகோதரர்கள் சிலர் தங்கள் எண்ணத்தை மாற்றிகொண்டு ஐக்கிய இயக்கத்தில் சேருவார்களென்று நினைக்கிறேன்.

14. ஓர் எச்சரிக்கை:—அனேக சங்கங்கள் தற்காலக் கடனை சரியாய் செலுத்துகிறதில்லை. மெம்பர்கள் சரியாய் செலுத்தாததில் சென்ட்ரல் பாங்கிக்கு பணம்போய் சேருவதில்லை. சென்ட்ரல் பாங்கிக்குபணம் போகாமலிருந்தால் பாங்கியார் டிபார்ட்மெண்டாரை யோசனை கேட்கிறார்கள். டிபார்ட்மெண்டாருக்கு சங்கங்களை ஜாயிண்ட செய்வதில் சங்கத்துக்கும் தங்களுக்கும் யேற்படும் கஷ்டநஷ்டங்களை நன்றாய் தெரிந்துக் கொண்டிருப்பதால் சென்ட்ரல் பாங்காரை வியாச்சியம் செய்து கொள்ளும்படி சொல்லுகிறார்கள். சென்ட்ரல் பாங்கார் வியாச்சியம் தாக்கல்செய்யாமல் என்ன செய்வார்கள். வியாச்சியம் தாக்கல் செய்வதில் ஏறபடும் கஷ்டமும் நஷ்டமும் உங்களுக்குத் தெரிந்ததே. இவ்வளவு கஷ்டமும் ஒரு சங்கம் அனுபவித்து வருகிறது. அதாவது முதலிப்பட்டி சங்கம் பாங்காருக்கு தொகை அனுப்பாததால் பாங்கார் வியாச்சியம் தாக்கல் செய்து ரூ. 289-12-0 ஜாஸ்திபொறுப்பு சங்கத்தின் தலையில் கட்டியிருக்கிறது.

ஆகையால் கனவான்களே? மேற்கண்ட விஷயங்களை நன்றாய் மனதிற்கொண்டு ஐக்கிய முறையில் கொஞ்சமும் தவராமல் இயக்கத்தை முன்னுக்குக் கொண்டுவர பாடுபடுவது நமது கடமை.

---

## வந்தவாசியில் ஐக்கிய முயற்சி.

வடஆற்காடு ஜில்லா, வந்தவாசி தாலூக்கா 2273 நெம்பர் சோகத்தூர் கோவாபரேடிவ் சொஸைடி ஜெனரல்பாடி மீட்டிங்கில் அதின் காரியதரிசி M. S. விஜயராகவா சார்யாரால் செய்யப்பட்ட உபந்யாஸத்தின் சாராம்சம்.

1. இந்த சோகத்தூர் ஐக்ய நாணயச்சங்கத்தில் கீழ் வில்லிவனம் கிராமத்தை அணைக்கப்பட்ட பிறகு ஷை கிராமத்தின் மெம்பர்களுடன் கூடிய இம்மகாசபையின்கண் எனக்குப்பேச சமயம் வாய்ந்ததைப் பற்றி சந்தோஷப்படுவதற்கு முக்கியமான காரணம். நமது கூட்டுறவு சங்கங்களின் 6-வது வருஷத்திய சென்னை மாகாணக்கூட்டுறவு கான்பரன்ஸில் உபசரணக் கமிட்டியில் தலைமை வகித்த ராவ் பகதூர் K. B. ராமனுதய்யரின் உபந்யாஸத்தையும் அக்கிராஸனம் வகித்த திவான் பகதூர் P. ராஜகோபாலாசாரியாரின் அருமைப் பிரசங்கத்தையும் (மெட்ராஸ் புல்லெடின் ஆப் கோவாபரேஷன்) சஞ்சிகையிலுள்ளபடி உங்களுக்குப் படித்துக் காட்ட சமயம் கிடைத்ததேயாகும்.

2. 1918-ம் ௵ ஜனவரி மாதத்திய புல்லெடின் சஞ்சிகையினின்றும் மேற் சொன்ன இருகனவான்களின் அருமை பிரசங்கத்தில் காணப்படும் முக்யமான விஷயங்களை நீங்கள் செவ்வனே தெரிந்துக் கொண்டிருப்பீர்கள் என்று நம்புகிறேன். ஏனென்றால் ஷை இருகனவான்களின் உபந்யாசத்தைக் குறித்து விஷய பரிசீலனம் செய்த "ஜஸ்டிஸ்," "நியூ இந்தியா" முதலிய பத்திரிகைகளின் அபிப்பிராயத்தை புல்லெடின் பத்ராதிபரின் குறிப்பில் தெளிவாய் விவரித்திருப்பதையும் உங்களுக்குப் படித்துத் காட்டியதாகும்.

3. இப்படியே ஒவ்வொரு விஷயங்களையும் எல்லா மெம்பர்களும் சொஸைடியின் மூலமாய் தெரிந்துக் கொள்வதற்காகவே புல்லெடின் பத்திரிகை பிறந்திருப்பதைக்குறித்து அதிகம் சொல்ல வேண்டியதில்லை யாயினும் புல்லெடின் பத்திராதிபருக்கு நமது வந்தனத்தை செலுத்தக்கடமைப்பட்டிருக்கிறோம்.

4. இந்த சோகத்தூர் சொஸைடி ஏற்பட்டு சுமார் எழெட்டுமாதங்களேயாகிறது. 9 மகாசபைமீட்டிங்குகள் நடந்திருக்கின்றன. ஒன்பது மகாசபைகளிலும் இப்போது இந்த 10-வது மகாசபையிலும் அதிகமாய் மெம்பர்கள் சேராததற்கு விசனப்படுகிறேன். இனிமேல் கூடப்போகும் மகாசபைகளில் இப்போதிருக்கும் மெம்பர்களைவிட அதிகமாகவே சேருவார்கள் என்று நம்புகிறேன். மெம்பர்கள் அடிக்கடி மீட்டிங்குகளில் பிரசன்னமாயிருத்தலே நமது நன்மைக்கு அஸ்திவாரமாகும். ஆகையால் இந்த மகாசபையே (நமது நன்மைகளை அறிவதற்கு) முதல்தடவையாகக் கொண்டு புல்லெடின் பத்திரிகையை நம்தோழனாக சகாயமாய்வைத்து என் சிற்றறிவிற்கு எட்டிய வரையில் சிலவிஷயம் சொல்லத் துணிகிறேன்.

5. நாம் எல்லோரும் இப்போது சேர்ந்து மீட்டிங்கியில் பிரசன்னமாயிருப்பதுபோல் அடிக்கடி மகாசபை மீட்டிங்குகளில் இப்போது ஆஜரில் இல்லாத மெம்பர்களையும் அழைத்துக்கொண்டு வரும்படியாய் ஒவ்வொரு மெம்பரையும் நான் வேண்டிக் கொள்ளுகிறேன். மீட்டிங்குகளில் மெம்பர்கள் ஆஜராகவேண்டிய அவசியத்தை இன்னும் கற்றுக்கொள்ள

வேண்டிய தன்மையிலேயே யிருக்கிறோம் என்பதை மீண்டும் சொல்லத் தேவையில்லை.

6. "இந்த சொஸைடியின் மூலமாகத்தானா நரம் ஒன்று சேர்ந்து பேசக் கற்றுக் கொள்ளவேண்டும்?" என்று யாருக்காவது என்னைக் கேட்க எண்ணமுண்டானால் அதற்கு விபரமான பதில் சொல்ல சாவகாசமில்லாமையால் சுருக்கமாய் ஒரு விஷயமட்டும் சொல்லுகிறேன். 'ஒரு மனிதன் தலையைக்காட்டிலும் இரண்டு ஆட்டுத்தலை விசேஷம்' என்பது ஒரு பழமையான வாக்யம் மனதுக்கு வருகிறது. வம்பு அலப்புத் திண்ணைக் கச்சேரிகள் கிராமங்களில் விசேஷமாய் உண்டென்பது எனக்கும் தெரியும். இப்போது நாம் ஒன்று கூடியிருக்கும் சபைக்கும் மேற்சொன்ன மாதிரி திண்ணைக் கச்சேரிகளுக்கும் வித்தியாசமுண்டென்பதை நான் சொல்லாமலே நீங்கள் தெரிந்துக் கொள்வீர்கள்.

7. இந்த சொஸைடியில் ஒரு மெம்பர் இருக்கிறார், அவர் எந்த மீட்டிங்கிக்கும் ஆஜராவதில்லை. தவிர, ஒவ்வொரு மெம்பரையும் நான் நேரில் போய் கூப்பிட்டு இருப்பதால் மீட்டிங்குக்கு வர முடியாதென்று சொல்லும் ஒவ்வொரு மெம்பரின் மனப்பான்மையும் இப்படிப்பட்டது என்பது எனக்கு ஒருவாறு தெரியும். ஆனாலும் ஒரு மெம்பரை நான் 10-வது மகாஸபை மீட்டிங்குக்கு வரவேண்டும் என்று பிரார்த்தித்தேன். "நான் மீட்டிங்குக்கு வரமாட்டேன், மீட்டிங்கில் நான் சேரமாட்டேன் என்ற கண்டீஷனில்தான் நான் கடன் வாங்குகிறேன். அப்படி மீட்டிங்கில் வரும்படி நீர் கட்டாயப் படுத்தினால் நான் பணத்தை திருப்பிக் கொடுத்துவிடுகிறேன்." இன்னும் வேறுவித அசந்தர்ப்பமான பதிலும் (மாமூல்போல) சொல்லுகிறார். ஆனால் நடவடிக்கையில் நல்லவராகவேயிருக்கிறார். சொஸைடியின் சாதனமான நடவடிக்கைகளுக்கு விரோதம் செய்யமாட்டார். இப்படிப்பட்டவர் ஏன் மேற்சொன்ன மாதிரி மீட்டிங்கு விஷயத்தில் பதில் சொல்லவேண்டும் என்றால்? எழுத்து வாஸனையே தெரியாது. அந்தோ! பரிதாபம். லக்ஷ்மீ கடாக்ஷம் மாத்திரம் போதாது; சரஸ்வதி கடாக்ஷம் இல்லையேல் ஒன்றும் பயன்படாது.

8. சில மெம்பர்கள் பிரதி பிரயோசன மில்லாமல் ஏன் உழைக்க வேண்டும் என்று கேட்கிறார்கள். இதற்கெல்லாம் விரிவானபதில் சொல்வதற்கு சமயமில்லை. சூதாட்டங்களிலும், பயனில்லத கச்சேரிகளிலும் காலத்தைச் செலவுசெய்யும் நபர்கள் எந்த பிரதி பிரயோஜனம் அடைகிறார்கள். வீண் மனஸ்தாபமும் சச்சரவுமே பலனாக அடைகிறார்கள். நமது சொஸைடி விஷயத்தில் பஞ்சாயத்தார்கள் கூட என்ன வேலை செய்கிறார்கள்? செய்தால் இயன்றளவு செய்யலாம், ஆனால் இப்



போது நான் வேண்டிக்கொள்வது, மீட்டிங்குக்கு ஏற்படுத்தப்பட்ட காலம் ½ மணி (அல்லது) 1-மணிநேரம் உட்கார்ந்து கொண்டிருத்தல். (1) இரண்டாவது செய்யலாம் செய்யக்கூடாது என்பதில் ஏதாவது ஒரு அபிப்பிராயத்தை சொல்வது. (2) மூன்றாவது கையெழுத்து போடுவது. இந்தகாரியம் ஒரு சிரமமானதல்ல வென்பதை எல்லோரும் அறிவார்கள்.

9. இந்த சொஸைடியினால் அடையும் நன்மைகள் யாவும் மெம்பர்களே அடையவேண்டியவர்களா யிருப்பதால் ஜாதி மதவித்யாசமில்லாமல் எல்லோரையும் மெம்பர்களாகச் சேர்த்து மாதமொரு முறையாவது மகா சபை மீட்டிங்குகூடி நம்முடைய சம்சார, விஷயமான சுகதுக்கங்களை சொஸைடியினால் எப்படி நிவர்த்தியாகும் என்று யோசிக்க வேண்டும்.

10. இந்த சொஸைடி கேவலம் கடன் வாங்குவதற்காக ஏற்பட்டதென்பதை எண்ணாமல் நாம் எல்லோரும் ஒற்றுமையுடனிருப்பதற்கும் இன்னும் இதுபோன்ற அனேக நன்மைகளுக்கும் ஏற்பட்டதாய் நினைத்து இருப்பதுடன் ஜாதிமத துவேஷம், கிராமங்களுக்குள் ஏற்படும் இதர விஷயமான மனஸ்தாபங்கள், முதலியவைகளையும் இராஜாங்க சம்பந்தமான விஷயங்களையும், இந்த சொஸைடி விஷயத்தில் அறவே ஒழித்துவிடவேண்டுமாய் பிரார்த்திக்கிறேன். இந்த சொஸைடியில் ஒரு சமயம் ஒரு மெம்பர் தனக்கும் மற்றொரு மெம்பருக்கும் இருக்கும் பரஸ்பர துவேஷத்தை சொஸைடி விஷயத்தில் காண்பித்து நடக்கக் கூடாது என்று நான் கெஞ்சிக்கொண்டிருக்கிறேன். ஆகையால் அந்த விஷயத்தைப்பற்றி இவ்வளவு வணக்கமாய் உங்களை வேண்டிக்கொள்ளலாயிற்று.

11. கனம் திவான் பகதூர் பி. ராஜகோபாலாசாரியின் பிரசங்கம் எல்லோருக்குமே ஞாபகத்தில் வரலாம். அதாவது "இந்த சொஸைடி விஷயத்தில் ஜாதிமத வித்யாசத்தையாவது, மிதாமிதவாதக் கக்ஷியையாவது புகுந்துவிட்டால் ஆபத்தாய் முடியும்" என்ற விஷயத்தை புல்லெடின் பத்திராதிபர் குறிப்பாய் விளக்கி யிருக்கிறார்.

12. நமது சொஸைடியில் ஜாதிமதக் காற்றடிக்காமல் பார்த்துக் கொண்டால் போதுமானது. மற்ற விஷயங்களே நமக்குத் தெரியாது. ஆகையால் நாம் எல்லோரும் பஞ்சமர்கள் முதலிய இனத்தார்களுக்கு சொஸைடியின் விஷயங்களை தெரியப்படுத்துவதுடன் மெம்பர்களாக சேர்த்துக் கொள்ளவேண்டும்.

13. நமது சொஸைடியில் ஜாதி மதவித்யாஸமும் இல்லை என்று சொல்லலாம். ஜாதி மதவித்யாஸத்தால் ஒற்றுமைக் குறைவாவது சொஸைடியின் நடவடிக்கையில் மாறுதலாவது உண்டாய்விட்டதாக

சொல்ல வரவில்லை. ஆனால் ஒன்றுமட்டும் நான் சொல்வதை சபையோர்கள் ஆமோதிக்கவேண்டும். நமது சொஸைடியில் தாழ்ந்த வகுப்பாராகக் கருதப்படும் மெம்பர்களுக்கு படிப்பு கொஞ்சம் குறைவா யிருக்கலாம். இப்படிப்பட்ட மெம்பர்களுக்கு உயர்ந்த வகுப்பாராகக் கருதும் மெம்பர்கள் படிப்பாளிகளாயும் விவகாரவிஷத்தில் அனுபவ முள்ளவர்களாயுமிருப்பவர்கள் (தெரிந்தவர்களா யிருந்தால்) தன்னலம் கருதாமல் மற்ற மெம்பர்களுக்கு சொஸைடிவிஷயமாய் தெரிவிக்கக்கூடியவைகளை எந்த மாதிரியில் தெரிவிக்கலாமோ அம்மாதிரி யெல்லாம் தெரிவித்தல், கடனை சொஸைடிக்கு திருப்பி கொடுக்கும்விஷயத்தில் ஜாக்ரதையாய் கெடுதவறாமல் நடந்துக்கொள்ளும்படி செய்தல், கோர்ட்டுகளில் விசேஷ பணம் செலவழியாதபடி கிராமத்திலேயே நியாயப்படி நடந்துகொள்ளுதல், இன்னும் இதுபோன்ற அனேகவிஷயங்களை தெரிவிக்க படிப்பாளிகள் சிரமப்பட வேண்டுகிறேன்.

14. (1) கழுத்துக்குமேல் உள்ள முகமானது என்னவேலைசெய்யும்? வஸ்துக்களைப்பார்த்தல், விஷயங்களை கிரஹித்தல், கேட்டல், யோஜித்தல், எல்லா அங்கத்துக்கும் தலைமையாய் இருத்தல் போன்ற குணமுடையார் பிராமணர் (2) கழுத்தின் கீழ் குடலுக்குமேல் உள்ள (Heart) மார்பானது இருபுஜங்களுக்கும் ஆதாரமாய் இருந்து பாதமுதல் சிரஸுவரையில் வேண்டிய அளவு இரத்தத்தை சுத்திசெய்து இரத்தகுழாய் மூலமாய் சகல அவயவங்களுங்கும் செலுத்தவும், வேண்டியளவு ஆகாரங்களை சேகரிக்கவும், சத்துருக்களை ஜெயித்து இதர அங்கங்களை போஷிப்பதற்கு வேண்டிய சௌகர்யங்களைத்தேடுவது கைகளாகையால் புஜங்களை ராஜாவுக்கு ஒப்பிட்டும், (3) வரவு செலவு கணக்காய்செய்து தக்கதை கொண்டு தகாதவைகளை நீக்குவதும், சரீரபோஷணத்துக்கு முக்யகருவியாக இருந்து, ஒவ்வொரு அவயவங்களுக்கும் ஒத்தாசைசெய்ய இடையில் இருக்கும் குடல்களை வைசியராகவும் (4) குடல், மார்பு, சிரசு முதலியவைகளுக்கு வேண்டிய சகல காரியங்களையும் நிறைவேற்ற நினைத்தபடியெல்லாம் நினைத்த இடத்துக்கு செல்லவும் மேற்சொன்ன மூன்று அங்கங்களுக்கும் ஆதாரமாய் தாங்கிநிற்கும் தொழிலையே ஆதாரமாகக் கொண்டுள்ள குணமுடையோர் சூத்ரர்கள் என்றும், முன்னோர்கள் வர்ணித்து இருக்கிறார்கள்.

15. மேற்சொன்ன அங்கங்களில் எந்த அங்கம் இல்லாவிட்டால் சரீரம் நிலைக்கும்? ஏன் அங்கமாக ஜாதிகளை வர்ணித்தார்கள்? என்பதை யோசித்தாலே ஒன்றில்லாமல் ஒன்று முடியாதென்பதும், எல்லாம் ஒன்றேஎன்றும், ஒற்றுமைக்கு வேண்டிய அனேக காரணங்களை எளிதில் அறிந்துக்கொள்ளுமாறு முன்னோர்கள் இயற்றி யிருக்கிறார்கள்.



16. யோசித்து சத்யம் தவறாமல் நடந்து சமயோசிதமாய் இந்த சமயம் இன்னவேலை செய்யவேண்டும், இம்மாதிரி நடக்கவேண்டும் என்று நினைப்பதுபோன்ற மூளையைக்கொண்டு வேலையை செய்பவர்கள் தெய்வத்தை நம்பினவர்களாய் வேதசாஸ்திர புராணங்களுக்குக் கட்டுப்பட்டவர்களாய் இருந்து, மற்ற மூன்றங்கங்களின் க்ஷேமத்தை நாடியவர்களாய் இருத்தல் அவசியம் என்பதை சொல்லாமலே விளங்கும் இப்படியிருப்பவர்களே சிரஸாகிறார்கள். மற்ற மூன்றங்கமும் அப்படிப்பட்டபடியே யாகிறது. ஆகையால் எத்தொழிலை செய்கிறார்களோ அத்தன்மையராகிறார்கள்.

17. ஆனால் ஒரு அங்கத்தின் வேலையை மற்றோரங்கம் செய்யவு முடியாது, தரிக்கவுமுடியாது கடுக்கனை காலில் போட்டால் பொருந்துமா? கத்தியை குடலில் சொருகலாகுமா? இதுபோல் நியாயமாகவும் நடுநிலையாகவும், ஒற்றுமையாகவும் இருத்தலே அழகாகும்; அங்கங்கள் (கைகால் முதலியவைகள்) வயிற்றுடன் சண்டைசெய்து ஆகாரம் சம்பாரித்து வயிற்றுக்கு போடமாட்டோம் என்று சொன்னதாக முதல்பாடத்தில் நான் 1895-ல் படித்தது ஞாபகம் வருகிறது. நம்மில் ஒற்றுமையில்லாவிடில் சொஸைடியின் கதையும் வயிற்றுடன் சண்டைசெய்த அவயவங்களின் கதையாய் முடியும்.

18. இந்த சொஸைடியில் பிராமணர்கள் (வைஷ்ணவர்கள்) அதிகமாயிருப்பதால் ஒரு சிறியவிஷயம் குறிப்பிடுகிறேன். இவ்விந்தியாவில் வைஷ்ணவ குலத்திலகமாய் விளங்கிய பரமகுருவாகிய பாஷ்யகார் என்னும் இராமானுஜசாரியர் குருவாக்கையும் கடந்து ஜாதிமதவித்யாஸம் பாராட்டாமல் ஒற்றுமையைநாடி மகாமந்திரத்தை வெளியிட்டவிஷயம் இன்னுமும் நிலைபெற்று பிரகாசிக்கவில்லையா? நாம் எல்லோரும் அப்பரமகுருவின் சிஷ்டர்களல்லவா? ஷண்மதஸ்தாபனம் செய்த ஜகத்குரு சங்கராசாரியர் ஸ்வாமிகள் ஜாதிமத வித்யாஸம் பாராட்டினதாக யாராவது சொல்லத்துணிவார்களா? ஆகையால் மெம்பர்களான நண்பர்களே! நான் ஒரு விஷயம் வேண்டிக்கொள்ளுகிறேன். ஜாதிமத விஷயங்களைப்பற்றி இவ்வளவுதூரம் பேசவேண்டிய அவசியமிருப்பது எல்லோரும் அறிந்த விஷயம். இது சமயம் வெகு சுருக்கமாக சொல்லயிருப்பினும் விவரமாக சொல்லும்படியான சமயம் கிடைக்குமென்று நம்புகிறேன்.

19. சங்கத்தில் வாங்கியிருக்கும் தொகைகளை கெடுவில் கட்டும்படி ஒவ்வொரு மெம்பரும் மற்ற மெம்பர்களுக்கு ஞாபகமூட்டவேண்டுவதுமல்லாமல்பஞ்சாயத்து மெம்பர்கள். சிரத்தையுடன்சொல்லியகாரியத்தை செய்வார்கள் என்று நம்புகிறேன். இதற்காக பஞ்சாயத்தார் ஒரு சிரமமும் படவேண்டியதில்லை. வெகுவாய் எல்லாமெம்பர்களையும் பஞ்சாயத்தார

களுக்கும் தெரியும். எந்த சமயத்திலாகிலும் மெம்பர்களைக்கண்டால் "கடனைத்திருப்பிக்கொடுக்க எத்தனம் செய்தாயா?" என்று ஞாபக மூட்டிவந்தால் போதுமானது. 8-வது. பாராவில் சொல்லியிருக்கும் கஷ்டங்களில் இந்த வேலையும் ஒன்றாக செய்யும்படி பஞ்சாயத்தாரை வேண்டிக்கொள்ளுகிறேன்.

20. சொஸைடி ஒழுங்காய் நடக்கவேண்டுமானால் வாங்கிய கடனை சல்லிசாய் திருப்பிக் கொடுக்க வேண்டும். இந்த பழக்கம் ஏற்பட்டு விட்டால் கூடிய சீக்கிரம் சொஸைடியில் டிபாஸிட் செய்யும் விஷயம் தெரிந்து கொள்வார்கள்.

21. டிபாஸிட் செய்வதற்கு மெம்பர்களுக்கு சுல்பமான வழி யொன்று சொல்ல யோசிக்கிறேன். அதை அடுத்த மீடிங்கியில் யோசிப் போம், இப்போதே அநேக மெம்பர்களுக்கு அநேகம் இடைஞ்சலை உண்டாக்குகிறதற்கு மன்னிப்பு கேட்டுக்கொள்ளுகிறேன்.

22. இவ்வளவு சந்தோஷமாய் நாம் எல்லோரும் (சரீரமும் அவயவங்களும் போல்) ஒற்றுமையா யிருக்கக்கூடிய சந்தர்ப்பத்துக் குற்ற இந்த சொஸைடியை ஏற்படுத்திக் கொடுத்த கனம் அஸிஸ்டெண்டு ரிஜிஸ்ட்ராரவர்களுக்கு எனது வந்தனத்தை செலுத்துகிறேன்.

23. நம் எல்லோரையும் ஒரு விதமான இக்கட்டும் இல்லாதபடி காப்பாற்றவேண்டி கடும்போரில் மன்றாடிவரும் நமது சக்கிரவர்த்தி மன்னன் ஜயம் பெறவேண்டிக் கடவுளைத் தொழுவோமாக.

24. இவ்வளவு நேரம் எல்லா மெம்பர்களுக்கும் நான்கொடுத்த சிரமத்தை மன்னிப்பதுடன் மகாசபைகூடும் போதெல்லாம், எல்லா மெம்பர்களும் ஆஜரா யிருக்கவேண்டுமாய் எல்லோருக்கும் என்வந் தனத்தை செலுத்துகிறேன்.

---

## ஸ்ரீவில்லிப்புத்தூரில் ஐக்கியமுறையும் கைத் தொழிலும்.*

1. ஐக்கிய முயற்சியினால் நமக்கு முன்னேற்றம் கிடைப்பது திண்ணம் என்றும், முக்கியமாய விவசாயமும் கைத்தொழிலும், எவ் வெவ்விதம் ஐக்கியத்தால் நமது ஜனங்களுக்கு நன்மைபுரிந்து, வறுமை யைநீக்கி நல்வழிப்படுத்துமென்றும், அதற்கு வேண்டிய சாதனங்கள் யாதென்றும், மற்றும் அதற்கேற்ற விஷயங்களை தெளிவாய் நமது அக் கிராசனாதிபதி யெடுத்துரைத்தார்கள்.

2. நமக்கு எப்பேர்ப்பட்ட சங்கம் அவசியம் என்றும், நமது ஊரில், விவசாயமா அல்லது கைத்தொழிலா, எது நல்ல ஸ்திதியிலிருக்

* ஸ்ரீவில்லிபுத்தூரில் நடந்த கான்பரென்ஸில் வாசிக்கப்பட்டது.



கிறது, எதற்கு, முதலில் அபிவிருத்தி அவசியம் என்றும், சற்று விசா ரணை, செய்யுங்கால்:—கைத்தொழில்தான் முக்கியமென்றும், ஐக்கிய முயற்சியின் முறையை கைத்தொழிலாளிகளுக்குப் புகட்டி, அவர் கள் மனதில் வேரூன்றச்செய்து ஐக்கியமுறையில் அவர்களின் வேலையை நடத்தினால், அவர்கள் உன்னத ஸ்திதிக்கு வருவார்களென்றும், நகரவாசி களும், தங்கள் உடுக்கைமுதலிய சகல பதார்த்தங்களுக்கும் அயலூருக் குப்போகாமலே இவ்விடத்திலே சம்பாதித்துக் கொள்ளலா மென்றும், இவ்வழியில் இவ்வூரிலுள்ள பிரபுக்களும், கல்விமான்களும், பிரயாசை யெடுத்து வேலைசெய்தால், முன்கூறிய எனது எண்ணம் அல்லது நம் பிக்கை நிறைவேறுமென்றே நினைக்கிறேன்.

3. ஆனால், விவசாயம் முக்கியமில்லை யென்று நம்மூரில் அதைப் பற்றி பிரயாசை யெடுக்கவேண்டியதில்லை யென்றும், நான் சொன்ன தாக வைத்துக் கொள்ளக்கூடாது.—அம்முறையில், வேலைசெய்ய, இது கிராமம் போலல்லாமல், பட்டணத்தை ஒத்திருப்பதாலும் விவசாயி களும் வெவ்வேறு இடங்களில் விரிந்து பிரிந்து வசிப்பதாலும், நீர்வளம் குன்றியிருப்பதாலும், அதைப்பற்றி பிரஸ்தாபிக்க அசக்தனா யிருக்கி றேன்.

4. நமது ஊரில் நடந்துவரும் கைத்தொழில்கள்.— 1 நெசவு, 2. வார்ப்பு, 3. தாமிரம், பித்தளை அடிப்பு, 4. இரும்புவேலை, 5. தச்சவேலை, 6. சிற்பவேலை.—இவர்களை நெசவுக்காரர்களென்றும், ஆசாரி மார்களென்றும், இருவகையாப் பிரித்துக் கொள்வோம். இவ்விரண் டிலும், ஆசாரிமார்களை முதலில் எடுத்துக் கொண்டு அவர்கள் கைத் தொழில்கள் (a) எப்படியாகிற தென்றும், அவர்களுடைய தற்கால ஸ்திதிக்கு (b) என்னகாரணமென்றும், (c) எவ்விதம் அவர்களை முன் னேற்றத்திற்கு கொண்டுவரலாமென்று சற்று கவனிப்போம்.

5. வார்ப்புவேலையும், இரும்புவேலையும் மிகவும் உன்னதமாயும், சிலாக்கியமாயும், எப்பேர்ப்பட்ட காட்சிகளுக்கும் அனுப்பக் கூடிய தாயும், குணத்திலும் பார்வையிலும், உவமையற்றதாயும் எத்திறத்தா ரும் புகழத்தக்கதாயிருக்கின்றன. இவைகளின் தற்கால ஸ்திதியையும் அதற்கு காரணத்தையும் விசாரிப்போம். வார்ப்பு தொழிலாளிகள் சுமார் 10 வீட்டுக்காரர்களிருக்கிறார்கள். 1 வீட்டுகாரர் காரைமச்சு வீடு கட்டி யிருக்கிறார், மற்றவர்கள் எல்லாம் கூரைக் குடிசைலிருக்கிறார்கள். வேலை செய்யும் ஆண்மகர் (adults) சுமார் 50 பேர்களிருக்கிறார்கள். அவர்கள் செய்யும்வார்ப்பு வேலைகளில் முக்கியமாய் வீட்டிற்கு உபயோகப்படக்கூடி யது, கூஜாக்கள், குளபாத்திரங்கள் (cup and saucer) கிண்ணம் தாலங்கள், விளக்குவகைகள் முதலியன. ஷை சாமான்களின் குணங்களும் பார்வை யும் மாத்திரம் சிலாக்கிதையே ஒழிய, அவைகளைச் செய்யும் ஆசாரிகளின்

குணமும்பார்வையும் மிகவும் விகனிக்கத்தக்கது. அவர்களின் (character) ஒழுக்கம்மிகவும் கேவலமாயும் கைத்தொழிலை அபிவிருத்திக்குக் கொண்டு வராத தன்மையிது மிருக்கிறது. சொன்ன சொல் தவறுதல் சாதாரணமாய் எல்லாத் தொழிலாளிகளிடமு மிருக்கப்பார்க்கிறோம், இந்த ஜாதியார்களுக்கு அதில் மெடல் (பரிசு) கொடுக்கலாம்.—எப்பேர்பட்ட பிரபுக்களுக்கும், குறித்த தவணைகளில் சாமான்கள் கொடாதது பற்றி, அவர்கள் கொடுக்கும் ரூபாயை வேறு செலவு செய்துவிட்டு கடன்வாங்கியோ, பிறர் சாமான்களுக்காக கொடுக்கும் ரூபாயைக்கொண்டோ, முதலில் கொடுத்தவர்களுக்கு சாமான்களைக் கொடுப்பார்கள். சிற்சில தொழிலாளிகள் வார்ப்பு வேலைகளில் கெட்ட சரக்குகளை கலந்து கைப்புண்டாக்கி விடுவார்கள். (இது மிகவும் சொற்பந்தான்). தற்கால இயந்திர வேலைகளின் (Machine work) மகிமையும், சுளிவும், சல்ப ஜாக்கிரதையும், அநேக அயலிடங்களில் பரவி கைத்தொழில் முயற்சி மேன்மேலும், எவ்வளவோ நன்றாய் உபயோகபட்டுவந்தும், இங்கு அது வியாபிக்கமுடியவில்லை. இதற்கெல்லாம் காரணம், ஊக்கமின்மை, அறியாமை, பணக்குறைவு. ஆசாரிகளுக்கு தனித்தாவது சேர்ந்தாவது தங்கள் தொழிலை முன்னுக்குக் கொண்டுவரவேண்டுமென்ற வெண்ணமே கிடையாது. எவ்வளவோ பிரபுக்கள் தனித்தனியே அவர்களிடம் வேலையின் சிலாக்கியத்தைப் பற்றி சொல்லியும் அவர்கள் கவனிக்கிறதில்லை. அவர்களுக்குள் அசூயை (பொறாமை) யுமுண்டு. இந்த நிலைமையில் தொழில் விருத்தியடைய காரணமேயில்லை. பணமுதவி கொஞ்சமேனும் கிடையாது. அநேகமாய் கடனில் மூழ்கியிருக்கிறார்கள். தாங்கள் பரம ஏழையாயிருப்பதீ மன்னியில் பிறர் பணம் கொடுத்து உதவிசெய்தாலும் மேல் கூறிய காரணங்களால் பின்வாங்குகிறார்கள். வேலைகளின் திறமை எவ்வளவோ சிலாக்கியமாயிருந்தாலும் அவ்வேலைகளைச் செய்து கொடுக்கும் மாதிரியும் புரட்டும் காலவளவும், தொழிலை அபிவிருத்திக்கு கொண்டுவராது, க்ஷீணதிசைக்கு கொண்டு வந்து விடுமென்றே சொல்லலாம். அவர்களுக்கு ஒற்றுமையும், கூட்டுறவின் பயனும் தெரியும்பக்ஷத்தில் இத்தொழிலை விருத்திக்குக் கொண்டுவர வழியுண்டு: இது ஐக்கிய முயற்சியால்தான் நடக்கவேண்டும். இவ்வூரிலுள்ள சங்கம்ஒரு ஆசாரிக்கு இதன் பயனைச் சொன்னதின் பேரில் அவர் அறிகுறியாக பட்டரையில் இரவு வேலை முதலியவற்றிற்காக யந்திரம் (Machine) வாங்கி சில சாமான்களை செய்திருக்கிறார். தனக்கு நிரம்ப சுளிவாயிருக்கிறதென்றும் சங்கம் சொல்லும் மாதிரியே வேலைகளைச் செய்கிறதாயும் சொல்லுகிறார். "குணமது கைவிடேல்" என்னும் பழமொழிக்கேற்ப இவர்களுக்கு ஐக்கியத்தின் பயனை எடுத்துச் சொல்லி, ஐக்கியஸ்தர்களும் ஐக்கிய உத்தியோகஸ்தர்களும் சிரம மெடுத்தால் பயன் படுமென்றே நினைக்கிறேன்.



6. இரும்புவேலை, வார்ப்புவேலையைக் காட்டிலும் கொஞ்சம் நல்ல ஸ்திதியிலிருப்பதாகச் சொல்லலாம். கொல்லர்கள் இரும்புப் பெட்டி, பூட்டுகள் மிகவும் திறமையாய்ச் செய்கிறார்கள். ஆனால் அவர்களின் ஜனத்தொகை குறைவு. அவர்கள் இரும்புப் பெட்டிப் பட்டரைகள் வைத்து வேலைசெய்து கொஞ்சகாலம் வெளியூருக்கு அனேக பெட்டிகள் அனுப்பினார்கள். இவர்களுடைய (character) குணம் முன் சொன்னவர்களைப் போல் கேவலமில்லை. இவர்களின் பணக்குறைவால் தொழில் விருத்தியடையவில்லையென்று சொல்லலாம். இவர்களுடைய வீடுகள் [illegible]0; இருக்கும் ஜனத்தொகை 30.

7. இவர்களின் கடன் தொகை மொத்தம் ரூ. 1,000. தற்கால இரும்பு விலையினால் அவர்களுடைய கஷ்டம் ஜாஸ்தியானாலும் அவர்களுடைய வேலை அயலூரிலும் உள்ளூரிலும் தகுந்தபடி விலையாகுமென்பதில் ஐயமில்லை. இவர்களுக்கும் ஐக்கியமுறை அவசியமே. தாமிரம் பித்தளை அடிப்பு வேலைக்காரர்கள் மிகவும் சொல்பமாயிருப்பதால் அவர்களைப் பற்றி யாதொன்றும் என்னால் சொல்ல முடியவில்லை. மற்ற சிற்ப வேலையும் தச்சு வேலையும் இப்போது நடந்து வருகிறபடி குறைவாகச் சொல்லமுடியாது. ஊருக்குத் தகுந்தபடி அவைகள் க்ஷீணதிசையிலில்லாமல் நடந்து வருவதாகவே சொல்லலாம். முன்சொன்ன வார்ப்பு, இரும்பு கைத்தொழில் சம்பந்தப்பட்ட மட்டில் ரிஜிஸ்ட்ராரவர்களும் அஸிஸ்டெண்ட் ரிஜிஸ்ட்ராரவர்களும் வேண்டிய உதவிசெய்து ஷை கைத்தொழிலை முன்னேற்றத்துக்குக் கொண்டு வருவார்களென்று நினைக்கிறேன்.

8. நெசவு தொழில் விஷயமாய் டிபார்ட்மெண்டார்கள் விசாரணை செய்து வேண்டிய உதவி செய்து முன்னுக்குக் கொண்டு வரத் தயாராக இருக்கிறார்கள். சென்ற ஒரு மாதகாலமாக அவர்கள் விசாரணையும் செய்துகொண்டு வருகிறார்கள். இத் தொழில் சிலவகையில் இப்போது நல்ல ஸ்திதியிலிருக்கிறதாகச் சொல்லலாம். சில நெசவு சாமான்களும் எல்லோரும் விரும்பத்தக்கதாயும் உபயோகிக்கக் கூடிய தாயுமிருக்கின்றன. ஆனால் தற்கால நிலைமைப்படி இந்தத் தொழிலாளிகளின் வறுமை நீங்க மார்க்கமில்லை. இத் தொழிலில் முக்கியமாய் (1) சேடர்களும், (2) ஈள்வர்களும், (3) மூப்பர்களும் வேலை செய்கிறார்கள். சேடர்களெல்லாரும் ஓரே வட்டத்திலும், ஈள்வர்கள் ஓரே வட்டத்திலும், மூப்பர்கள் ஓரே வட்டத்திலும் சேர்ந்தே வசிக்கிறார்கள். ஆகவே, ஒவ்வொரு இனத்தாரும் தங்கள் தங்கள் தினுசு நெசவை விருத்தி செய்ய மிகவும் எளிதாயிருக்கும். ஈள்வன் தரியும், சேடர்தரியும் இப்போது பிரபலமாக விளங்கவில்லை. சேடர்கள் முக்கியமாய் ஸ்திரீகள் சேலையும், ஈள்வர்கள் முண்டுகளும் சொற்ப சொற்பமாய் நெசவு நடத்துகிறார்கள். இவ்

விருதிறத்தாரும், சேடர்கள் உயர்ந்த வேஷ்டிகளும்,ஈள்வர்கள் (Calicut-Buckingham Mills). முதலிய இடங்களைப்போல் செக்குத் துணிகளும் நன்றாய் நெய்து வந்தார்கள். ஆனால் சேடன் தரிவேஷ்டி நெசவு நின்றே போய்விட்டது. அதை மறுபடியும் உண்டாக்கினால் நகரவாசிகளின் வேஷ்டிக்கு வேறு இடங்களுக்குப் போகவே வேண்டியதில்லை. அவர்களுடைய எளிமையாலும், ஐக்கிய மின்மையாலும் ஆதரவின்மையாலும்தான் அவர்கள் அத்தரியை நிறுத்தி விட்டார்கள். இதுவிஷயமாக நமது செக்ஷன் அஸிஸ்டெண்ட் ரிஜிஸ்ட்ரார் ம-ா-ா-ஸ்ரீ, மீனாக்ஷி சுந்தரம் பிள்ளை யவர்களும், ஆனந்த ராவ் அவர்களும் ஒரு மாதத்திற்கு முன் சேடர்களிருப்பிடத்திற்குப் போய் விசாரணை செய்தார்கள். அவர்கள் குடியினாலே கெட்டு போனவர்கள். அவர்கள் விஷயத்திலும் ஐக்கியமுயற்சி அவசியம்.

9. முக்கியமாய் சாலியர்களின் ஸ்திதியையும் அவர்கள் நெசவு விஷயத்தையும் கவனிப்போம். ஐக்கிய டிபார்ட்மெண்டாரும் கைத்தொழில் டிபார்ட்மெண்டாரும் எவ்வெவ்வகையில் ஒன்றாக வேலைசெய்து ஜனங்களை முன்னுக்குக்கொண்டு வரலாமென்று யோசித்து இங்கு விஜயமாய் நம்முடன் கூடி நமக்கு உதவி செய்துகொண்டிருக்கும் நமது ரிஜிஸ்ட்ரார் ஹெம்மிங்வே (Hemingway) துரையவர்களும் கைத்தொழில் டைரக்டரவர்களான இன்ஸ் (Innes) துரையவர்களும் கலந்து பேசி, டைரக்டர் துரையவர்களால். 5—2—1918ல் ஒரு ஸர்க்குலர் (Circular) பிரசுரம் செய்யப்பட்டிருக்கிறது. அதில் இரண்டு டிபார்ட்மெண்டார்களும் ஒன்று கூடி ஒவ்வொரு உத்தியோகஸ்தரும் முறையே வேண்டிய விஷயங்களைத்தெரிந்து கொண்டு, பிரயாசை எடுக்கவேண்டு மென்றும் ரிஜிஸ்ட்ராரும் டைரக்டரும் வேண்டியவளவு உதவி செய்வதாயும் சொல்லியிருக்கிறார்கள். "காற்றுள்ள போதே தூற்றிக்கொள்" என்பதற்கேற்ப, இச்சமயத்தில்தான் நம்மூரிலுள்ள கைத்தொழில்களை உன்னத ஸ்திதிக்குக்கொண்டு வந்து தொழிலாளிகளை வறுமையிலிருந்தும் மற்ற தோஷங்களிலிருந்தும் விலக்கவேண்டும்.

10. டைரக்டர் துரையவர்கள் 6-வது பாராவில் சில குறிப்புகள் கொடுத்து விசாரணை செய்யும்படி எழுதி யிருக்கிறார்கள். அவைகளை டிபார்ட்மெண்டார் தவிர, ஒவ்வொரு ஊக்கமுடைய ஐக்கியஸ்தரும் கவனித்து வேலைசெய்தால், நன்மை உண்டாகு மென்பதில் ஐயமில்லை. அவைகளில் 7-வது விஷயமாகச் சொல்லியிருக்கிறபடி கவனித்தால் சாலியர்களுக்கு (Credit society) அல்லது (Co-operative marketing) அல்லது இரண்டும் சேர்ந்த ஒரு சங்கம் அவசியமென்று எனக்குத் தோன்றுகிறது. வேலைமுடிந்தும் சரமான்களை விற்பனை செய்வதிலுள்ள



தாமதத்தால்தான் நெசவு தொழிலாளிகள் கஷ்டப்படுகிறார்கள். மற்ற விபரங்களையும் கவனித்து அவர்களுக்கு ஒரு ஐக்கிய சங்கம் ஏற்படுத்த வேண்டியது அவசியம். இவ்வூரில் ஐக்கிய நாணயச்சங்கம் ஏற்பட்டு சுமார் 4-வருஷமாயும் கைத்தொழில் முறையில் எவ்வித அபிவிருத்தியும் செய்யமுடியவில்லை. ஊரிலுள்ள பிரபுக்களெல்லோரும் சங்கத்தில் சேர்ந்து சப்கமிட்டி (Sub-committee) யாகப் பிரிவினைசெய்து கொண்டோ அல்லது தனித்தனியோ மேற்படி தொழில் சமாஜங்களுக்குப் போய் ஐக்கிய முறையைப் புகன்றோ எவ்விதமேனும் கைத்தொழிலை முன்னேற்றமடையச் செய்வ தவசியம். நமது தேசத்தின் இயற்கைக்கேற்ப தொழிலாளிகள் அந்தந்தக் குலத்துக் கைத்தொழிலில் படிப்பில்லாமலே தேர்ச்சியுடையவர்களா யிருக்கிறார்கள். அவர்களுக்கு வழிகாட்டி ஒற்றுமைப்படுத்தி பொருளுதவி செய்து நவீன வழிகளைத் தெரியப்படுத்தவேண்டியதுதான் முக்கியமான கடமை. இவ்வூரில் அநேக தனவான்களைத் தவிர, இரண்டு நிதிகளிருக்கின்றன. ஏராளமாய் மேற்படி நிதிகளில் டிபாஸிட்டுகளும் வந்துகொண்டிருக்கின்றன. ஆகவே, நிதிகளும், ஐக்கிய சங்கமும் ஒற்றுமையாய் ஏற்பாடு செய்து கொண்டு மேற்கூறிய டிபார்ட்மெண்டா ரவர்கள் விசாரணையில் தெளிவாய்த் துலங்கும் எவ்வகைச் சங்கத்தையும் ஸ்தாபனம்செய்து வேலை தொடங்கும் விஷயத்தில், ஐக்கிய முயற்சியின் பயனை கைத்தொழிலும் அடையுமென்பதே எனது நம்பிக்கை.

---

## திருப்போரூர் கோவாபரேடிவ் சூபர்வைஸிங் யூனியன்.

1918ஆம் பிப்ரவரிமீ 24உ திருப்போரூரில் ம-ா-ா-ஸ்ரீ ராய் பகதூர் T. விஜயராகவாச்சாரியர், M. A. அவர்கள் அக்ராசனத்தின் கீழ் கூடிய கோவாபரேடிவ் கான்பரன்ஸில் பிரேரேபிக்கப்பட்டு அக்ராசனாதிபதி யவர்களால் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானங்களில் அடியிற்கண்டவை முக்கியமானவையா யிருக்கின்றன.

1. 5,000-ரூபாய்க்கு மேல் 10,000 வரையில் லேவாதேவி செய்யும் சங்கங்கள் வாரம் மும்முறை பிரசுரமாகும் எந்த வர்த்தமானப் பத்திரிகையையாவது, ரூபாய் 10,000-த்திற்கு மேல் லேவாதேவி செய்பவைகள் எந்த தினசரிப் பத்திரிகையையாவது மெம்பர்கள் வாசிப்பதற்காக வாங்கிக்கொள்ளலாம்.

2. பிரதி சங்கங்களிலும் லேவாதேவியிலிருக்கும் தொகையில் ஒவ்வொரு ஆயிரத்திற்கும் அரை ரூபாய் வீதம் வருஷம் ஒன்றுக்கு சங்கம் வேலைகளைச்செய்யும் நபருக்கு சன்மானமாய்க் கொடுக்கலாம்.

3. இந்த யூனியனுக்கு ஆனரரி ஆர்கானிசேஷன் அதிகாரம் கொடுக்கலாம்.

4. சங்கங்களில் மெம்பர்கள் செலுத்தும் தொகைகளுக்கு துண்டு ரசீதுகள் கொடுப்பதற்குப் பதிலாக ஒவ்வொரு மெம்பருக்கும் புத்தக ரூபமாய் "பாஸ்புக்" என்று ஒன்று தயார்செய்து கொடுத்து அதில் எல்லா செல்லுகளையும் எழுதிக் கொடுக்கலாம்.

கூட்டுறவு முயற்சி சம்பந்தமான இன்னும் அநேக விஷயங்கள் பேசப்பட்டு முடிவில் டிஸ்ட்ரிக்ட் கோவாபரேடிவ் பாங்கிங் யூனியன் செக்ரிடெரியாகிய ம-ா-ா-ஸ்ரீ ராமச்சந்திர சாஸ்திரியார் அவர்களால் சபலநாயகர் அவர்களுக்கு வந்தனம் மளிக்கப்பட்ட தன்மேல் கான்பர்ன்ஸ் கலைந்தது.

## யூனியன் தீர்மானங்களும் அஸிஸ்டெண்ட் ரிஜிஸ்ட்ராரின் உத்தரவுகளும்.

1918ஞு பிப்ரவரிமீ 24உ திருப்போரூரில் நடந்த மஹா சபை மீட்டிங்கில் தீர்மானத்திற்குக் கொண்டுவரப்பட்ட விஷயங்களும், அத் தீர்மானங்களின்பேரில், மதராஸ் செக்ஷன் அஸிஸ்டெண்ட் ரிஜிஸ்ட்ரார் அவர்கள் கடந்த ஏப்ரல்மீ ௳உ தம்முடைய நெ. 193 உத்தரவில் பிறப்பித்த உத்தரவுகளும் பின்வருபன.—

1. **விஷயம்:**—யூனியன் கவர்ணிங்பாடி மெம்பர் திருக்கழுக்குன்றம் துரைசாமிப்பிள்ளை, தொடர்ச்சியாய் நான்கு மீட்டிங்குகளுக்கு வராமலும் இதற்குக் காரணமும் தெரிவிக்காமலும் இருப்பதால் அவரை நிவர்த்தி செய்ய வேண்டியதைப் பற்றி;

**தீர்மானம்:**—அவரைக்காரணம் கேட்டுத்தெரிவிக்காமற்போனால் 28-வது பைலாபடிக்கு அவரை நிவர்த்தி செய்யவேண்டியது.

2. **வி:**—சங்கங்களில் நிர்வாக சபையார் வாங்கி யிருக்கும் கடன்கள் தவணைகள்படிக்கு வசூலாகாமல் தவறிப்போனால் அதன்பேரில் அமுலுக்குக்கொண்டு வரவேண்டிய நிபந்தனையைப் பற்றி;

**தீ:**—இவ்விதக் கடன்கள் நிற்கும் சங்கங்களில் உடனே மஹா சபை மீட்டிங் கூட்டி அக்கடன்காரரை நிர்வாக சபையினின்றும் நிவர்த்தி செய்யவேண்டியது.

**உத்தரவு:**—தவணை தவறிய காலம் மூன்று மாதங்களுக்கு அதிகப்படாம லிருந்து பஞ்சாயத்தார் தவறினதற்குக்காரணம் காண்பிப்பாராயின் 32-வது மாடல் நிபந்தனை பிரகாரம், மஹா சபையார் மீண்டும் அவர்களை பஞ்சாயத்தாராக நியமிக்கலாம்.

3. **வி:**—சில சொஸைடிகள் பிரதிமாதமும் வரவு செலவு கணக்கின் நகல் எழுதியனுப்பாதது பற்றி;



**தீ.**—சூபர்வைஸர் ஒவ்வொரு சொஸைடியிலும், கணக்குகள் தணிக்கைக் காகப் போகும்போது இதைப்பற்றி விசாரித்து நகல் அனுப்பாத் சங்கங்களிலிருந்து நேரில் அதை எழுதுவித்து வாங்கிக்கொண்டு வரவேண்டியது.

**உ:**—அங்கீகரிக்கப்பட்டது.

4. **வி:**—தவணை கடந்த கடன்கள் அதிகரித்தாவது அல்லது அத் தவணை கடந்து நீடித்த காலமாகியாவது இருக்கும் சங்கங்களில் நிர்வாக சபையார் அக்கடன்களை வசூல் பண்ணாமல் காலதாமதம் செய்தால் ;

**தீ:**—சூபர்வைஸர் நிர்வாக சபையாருடன் அவ்வித கடன்கள் வசூலாக வேண்டியதைப்பற்றி ஆலோசித்து உடனே வசூல் செய்விக்கவேண்டியதென்றும், கோர்ட்டில் தாக்கலாகும் கேசுகளில் டிக்ரியை சீக்கிரம் நிறைவேற்றுவிக்க வேண்டுமென்றும் இவ்விஷயத்தில் கால தாமதம் செய்யும் பஞ்சாயத்தாரை நீக்கி வேறே பஞ்சாயத்தாரை ஏற்படுத்தி வசூல் செய்விக்க வேண்டியதென்றும் சூபர்வைஸருக்கு அறிவிக்கவேண்டியது.

**உ:**—தவணைகள் கடந்த கடன்களை ஆர்பிடரேஷன் மூலமாய் விசாரணை செய்து தீர்ப்பளிக்க வேண்டுமென்று சங்கங்களை தீர்மானம்பண்ணச்சொல்லி அத்தீர்மானங்களை நமக்கு அனுப்புவிக்கவும்.

5. **வி:**—பஞ்சாயத்தார் தங்கள் பந்துக்கள் முதலானவர்கள் பேரால் தீர்மானமும் பத்திரமும் கணக்குகளும் எழுதி கடன் தொகையை தாமே பெற்றுக் கொள்வதைப்பற்றி.

**தீ:**—இவ்வித கடன்களை உடனே வசூல் செய்விக்க வேண்டியது.

**உ:**—இத்துடன் அணைக்கப்பட்டிருக்கும் 15 A, நிபந்தனைகளை எல்லா சங்கங்களிலும் அமுலுக்குக்கொண்டு வரவேண்டும்.

**வி:**—சென்ட்ரல் அர்பன் பாங்கியிலும் டிஸ்ட்ரிக்ட் பாங்கிங் யூனியனிலும் இந்த யூனியன் பங்குகள் எடுக்கவேண்டியதையும் பிரதிநிதிகள் நியமனத்தையும் பற்றி ;

**தீ:**—சென்ட்ரல் அர்பன் பாங்கியில் ஒரு பங்கும், டிஸ்ட்ரிக்ட் பாங்கிங் யூனியனில் ஒரு பங்கும், எடுத்துக் கொள்ளவேண்டிய தென்றும், சென்ட்ரல் அர்பன் பாங்கிக்கு பங்கு தொகை ரூபாய் இருபதும், பிரவேசகட்டணம் ரூபாய் இரண்டும்; டிஸ்ட்ரிக்ட் பாங்கிங் யூனியனுக்கு பங்கு தொகை ரூபாய் ஐந்தும் பிரவேசகட்டணம் ரூபாய் ஒன்றும் செலுத்தவேண்டிய தென்றும் யூனியன் பிரஸிடெண்ட் கே. ஏ. தேசிகாச்சாரியார் டிஸ்ட்ரிக்ட் பாங்கிங் யூனியனுக்கும் செக்ரி

டெரி கே. கந்தசாமி முதலியார் செண்ட்ரல் அர்பன் பாங்கிக்கும் பிரதி நிதிகளாவார்களென்றும் செய்த தீர்மானத்தை சம்பந்தப்பட்ட பாங்கிகளுக்கு அறிவிக்க வேண்டியது.

உ:—அங்கீகரிக்கப்பட்டது.

7. வி:—ஒரு கவர்ணிங்பாடி மெம்பரை நீக்கவும், மீண்டும் சேர்த்துக் கொள்ளவும் தகுந்த காரணங்களோடு 12-வது பைலாவின் கீழ் ஓர் உபவிதி ஏற்படுத்த வேண்டுமென்ற பிரேரணையின் பேரில்;

தீ:—அநுஷ்டானத்திலிருக்கும் 28-வது பைலாவே போதுமானது.

8. வி.—ஜில்லா பாங்கியில் சொஸைடிகள் பங்குகள் எடுப்பதைப்பற்றி;

தீ:—ஒவ்வொரு சங்கத்திலும் லேவாதேவியிலுள்ள மொத்ததொகையில் பிரதி ஆயிரம் ரூபாய்க்கும் இதற்குக் குறைந்த தொகைக்கும் ஒவ்வொரு பங்கு வீதம் எல்லா சங்கங்களும் பங்குகள் எடுத்துக் கொள்ளவேண்டியது.

உ.—ஜில்லா பாங்கியில் எல்லா சங்கங்களையும் பங்கெடுக்கும்படி யூனியன் வற்புறுத்த வேண்டியதெனக் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

9. வி:—வர்த்தமான பத்திரிகை தருவிக்க உத்தரவுக்காக சொஸைடிகள் மஹாசபைகளின் தீர்மானங்கள் அனுப்பியிருப்பதைப்பற்றி;

தீ:—ரூ. 5,000த்திற்கும் இதற்கு மேற்பட்டு ரூ. 10,000 வரையிலும் லேவாதேவி செய்யும் சங்கங்கள் வாரம் மும்முறைப்பத்திரிகை ஒன்றும் ரூ. 10,000 த்திற்கு மேற்பட்டு லேவாதேவி செய்யும் சங்கங்கள் ஒரு தினசரிபத்திரிகையும் தருவித்துக் கொள்ள சிபார்சு செய்யலாம்.

உ:—இந்த தீர்மானம் அங்கீகரிக்க முடியாது. சங்கங்கள் நன்றாய் வேலைசெய்து அவைகளின் நிபந்தனையில் பத்திரிகை வாங்குவதற்காக பொது நலபண்டு ஒன்று ஏற்படுத்தியிருந்தாலொழிய வர்த்தமான பத்திரிகைகள் வாங்க உத்தரவு கொடுக்கக்கூடாது.

10. வி:—பஞ்சாயத்தாருக்குள் சங்கங்களின் வேலைகளை மேற்போட்டுக் கொண்டு செய்யும் செக்ரிடெரி முதலாயினோர் மாச சம்பளம் கேட்பதால்;

தீ:—லேவாதேவியில் இருக்கும் பிரதி ஆயிரம் ரூபாய்க்கும் இதற்குக் குறைந்த எந்த தொகைக்கும் மாசம் ஒன்றுக்கு அரை ரூபாய் வீதம் சம்பளம் கொடுக்கலாமென்றும், முன்னமே குமாஸ்தாக்களை ஏற்படுத்திக்கொண்ட சங்கங்களில் அந்த அரை ரூபாய் வீதம் கணக்காகும் மொத்த தொகையிலேயே இவ்விருவித செலவுகளையும்



தகுந்த பிரகாரம் பிரித்துக்கொள்ளவேண்டிய தென்றும் சிபார்சு செய்யலாம்.

உ:—தவணை கடந்த கடன்களிருக்கும் சங்கங்களின் காரியதரிசிகளுக்கு சன்மானமாவது குமாஸ்தா சம்பளமாவது சிபார்சு செய்யக் கூடாது.

11. வி:—சங்கங்கள் கேட்கும் கடன்களுக்காக பாங்கிகளுக்கு நேராய் சிபார்சு செய்ய இந்த யூனியனுக்கு அதிகாரம் கொடுக்கப்பட வேண்டுமென்பதைப்பற்றி;

தீ:—இந்த யூனியன் வேலைசெய்யத் தொடங்கி ஒருவருஷத்திற்கு மேலாகிறது. சொஸைடிகளை தணிக்கை செய்வதிலும், வாய்தா கடந்த கடன்களை வசூல் செய்யவும்; பாங்கிகளில் வாங்கின கடன்களுக்குத் திருப்பிக்கொடுக்கவும் சொஸைடிகளில் தக்க ஏற்பாடுகள் செய்து அவைகளை நிறைவேற்றுவதிலும்; யூனியன் ரிகார்டுகளை அப்போதைக்கப்போது ஒழுங்காய் தயார்செய்து வைப்பதிலும் இந்த யூனியன் இதுவரை செய்துள்ள காரியங்கள் அஸிஸ்டெண்ட் ரிஜிஸ்ட்ரார் அவர்களுக்குத் திருப்திகரமாயிருக்கின்றன. கடன்களுக்கு சிபார்சு செய்யும் விஷயத்திலும் போதுமான அனுபவமடைந் திருக்கிறது. ஆதலால் சங்கங்களின் அநுகூலங்களை முன்னிட்டு, பாங்கிகளுக்குக் கடன்களுக்காக நேராய் சிபார்சு செய்யும் அதிகாரமளிக்கும்படியாய் ரிஜிஸ்ட்ரார் அவர்களைக் கேட்டுக் கொள்ளலாம்.

உ:—யூனியனின் வேலையைப் பார்த்துக்கொண்டுதான் இத்தீர்மானத்தில் கேட்கும் அதிகாரம் கொடுக்கப்படும்.

12. வி:—புதிதாய் சொஸைடிகளை ஸ்தாபிக்க இந்த யூனியனுக்கு ஆனரரி ஆர்கானிசேஷன் பலர் இருக்கவேண்டும் என்ற பிரேரணையின் பேரில்;

தீ:—ரிஜிஸ்ட்ரார் அவர்களைக் கேட்டுக் கொள்ளலாம்.

உ:—யூனியன் எல்லைக்குள் சங்கங்கள் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிற மனுக்களை யூனியன் சிபார்சுசெய்து அனுப்பலாம்.

13. வி:—மெம்பர்கள் செலுத்தும் கடன் தொகைகளுக்கும் டிபாஸிட்டுகளுக்கும் கொடுக்கப்படும் துண்டு ரசீதுகளுக்கும் பதிலாக பிரதி மெம்பருக்கும் பாஸ்புக்கு ஒன்று தயார் செய்துகொடுத்து அதில் தாக்கல் செய்து கொடுக்கவேண்டுமென்பதைப்பற்றி;

தீ.—மெம்பர்கள் வாங்கினகடன்மொத்த தொகையையும் அதற்குத்திருப்பிச் செலுத்திய அசல்வட்டியையும் அடுத்துவரும் தவணை காலத்

தையும் தாமே எளிதில் தெரிந்துக்கொள்ளக் கூடியவிதமாய் சர்க் கார் கைச்சாயத்தை யொப்ப பிரதிமெம்பருக்கும் ஓவ்வோர் புஸ்தகம் கொடுத்து அதில் செலுத்துவிவரத்தை எழுதிக்கொடுப்பது மிகுதி யும் யுக்தமாயிருப்பதால் இதற்காக ரிஜிஸ்ட்ரார் அவர்களுடைய அனுமதிபெற்றுக் கொள்ளவேண்டியது.

உ:—சங்கங்களில் மெம்பர்களுக்கு பாஸ்புக் ஒன்று தயார் செய்துகொடு த்து அதில்டிபாஸிட்டு தாக்கல்செய்வது நமக்கு நல்லதென்று தோன்றுகிறது.

14. வி:—திருநிலே, ஒழலூர் இந்தக்கிராம சங்கங்களைப்பற்றி சூபர் வைஸரால் எழுதப்பட்ட ரிபோர்ட்டுகளும் டைரியும் வாசிக்கப் பட்டதின் பேரில்;

தீ:—அடுத்த கவர்ணிங்பாடி மீட்டிங்கு திருநிலே கிராமத்தில் கூட வேண்டியது.

உ:—அங்கீகரிக்கப்பட்டது.

15. வி:—நெம்மலி சொஸைடியின் செக்ரிடெரி கேட்கும் ஆனரரி சன்மானத்தைப்பற்றி;

தீ:—ரூ. 48-க்கு மனு கொடுக்கப்பட்டிருக்கிறது. கடந்த ஜூன்மாதம் முடிவில் லேவாதேவியில் ரூ. 7,300-இருப்பதால் இதோடு பூர்த்தி யான ஒருவருஷத்திற்கு ரூ. 44-சன்மானமாய் கொடுக்க சிபார்சு செய்யலாம். இதற்கு முந்தினவருஷத்திற்குக் கொடுக்கமுடியாது.

16. வி:—திருப்போரூர் சொஸைடியின் கடன் விண்ணப்பத்தின் பேரில்;

தீ:—அவ்விண்ணப்பத்திற கண்டபடிக்கு ரூ. 2,500 'சாங்கிஷன் செய்ய அஸிஸ்டெண்ட் ரிஜிஸ்ட்ரார் அவர்களுக்கு சிபார்சு செய்யலாம்.

உ:—15, 16 தீர்மானங்களைப்பற்றி தனிமையாய் ஆர்டர் அனுப்புவிக் கப்படும்.

17. வி:—யூனியுன் உபயோகத்திற்காக வாங்கி யிருக்கும் சாமான் களின் சிறிய தொகையைப்பற்றி;

தீ:—பர்னிச்சருக்காக பட்ஜட்டில் ரூ. 25 சாங்ஷனு யிருக்கிறது. பர்னிச்சர் ரூ. 28-க்கு வாங்கப்பட்டது. செக்ரிடெரி பட்ஜட்டுக்கு மேல் இனி செலவு பண்ணுமல் ஷை அதிக செலவை மொத்தத்தில் சரிப்படுத்திக்கொள்ளவேண்டியது.

உ:— அங்கீகரிக்கப்பட்டது.

5. வது தீர்மானத்தின் பேரில் பிறப்பிக்கப்பட்டிருக்கும் உத்தர வில் கண்டபடி அணைக்கப்பட்ட நிபந்தனைகளாவன .—



15. A:—பஞ்சாயத்தார்களுக்கும், அவர்களின் நெருங்கிய பந்துக் களாகிய பிரிவினை யேற்படாத தாயாதி, மனைவி பாகம் பிரிந்துபோன மகன், மருமகன் முதலியவர்கள், சார்பு பெற்றவர்கள், வேலையாட்கள் ஆகிய இவர்களுக்கும் மகாசபையாருடையவாவது இருந்தால் சூபர்வி ஸன் கௌன்ஸலருடையவாவது, அனுமதி யில்லாமல் நீண்டகாலக் கடன்கள் கொடுக்கக்கூடாது.

ஒரு மெம்பர் சொஸைடியிலிருந்து கடன் வாங்கியிருக்கும் தொகை களின் மொத்தம் எந்தக்காலத்திலும் ரூபாய்..........க்கு மேற்பட்டிருக்கக் கூடாது. இந்த அளவிற்குட்பட்டு எந்த மெம்பரும் தான் எடுத்திருக் கும் பங்கு ஒன்றுக்கு ரூபாய்...........க்கு அதிகப்படாமல் கடன் வாங் கலாம். பாகித்துக் கொள்ளாத ஒரு குடும்பத்தின் எல்லா மெம்பர் களுக்குமாக கொடுக்கப்படும் கடன் ஒரு தனிமெம்பருக்குக் கொடுக்கக் கூடியதொகைக்கு அதிகரிக்கக்கூடாது.

## காஸர்காட் தாலூக்கா கோவாபரேடிவ் கான்பரென்ஸ்.

தென்கன்னடம் ஜில்லாவில் தாலூகா கான்பரென்ஸானது சென்ற ஜூன்மாதம் ஆரம்பத்தில் முதல் முதல் இந்த தாலூக்காவில் தான் நடந் தது. அதிக காலம் ஆகாவிடினும் எல்லா சொஸைடிகளும் சேர்ந்து இன் னெரு கான்பரென்ஸுக்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று சூபர்வைஸ ரைக் கேட்டுக்கொண்டதன்பேரில் அவரும் கூடிய சீக்கிரமாய் ஏற்பாடு கள்செய்து காஸர்காட் கோவாபரேடிவ் சொஸைடியின் ஆபீஸில் சென்ற பிப்ரவரி மாதம் 17உ காலே 8-மணிக்கு நடைபெற்றது. தாலூக்காவி லுள்ள 20 சொஸைடிகளுள் 14 சொஸைடிகளின் பிரதிநிதிகள் வந்திருந்தார்கள். வைஸ்பிரஸிடெண்ட் ஸென்ட்ரல் பாங்க் ஸெக்ரி டெரி, ஸர்க்கில் இன்ஸ்பெக்டர், சூபர்வைஸர் இவர்களைத் தவிர 30 பேயர்கள் இருந்தார்கள். இந்த கான்பரென்ஸில் நடந்த முக்கியமான வேலே, இத்தாலூகாவுக்கு ஒரு கோவாபரேடிவ் யூனியன் ஏற்படுத்திய தே. இதுதான் இந்த ஜில்லாவின் முதல் யூனியன். தற்காலமிருப்பது போல் ஸென்ட்ரல் பாங்கியின் ஏகாதிபத்தியத்தின் கீழிருப்பது கெடுதல் என்பதையும் யூனியன் அவசியமாய் ஸ்தாபிக்கப்பட்டால்தான் சொஸை டிகளுக்கு பொறுப்பும் விருத்திகாமும் ஏற்படு மென்பதையும் நன்றாய் எடுத்துக் காட்டப்பட்டது.

கோவாபரேஷனில் யூனியன் ஏற்படுதல் ஹோம்ரூல் ஏற்படு வதை ஒக்கும் என்று ஒருவர் இடையிற் சொன்னார். யூனியன் ஏற்

படுவதற்குத் தகுந்த காலம் வந்துவிட்டதாக எல்லாரும் ஏகோபித்துச்
சொன்னார்கள். வேலை செய்வதற்கு போதுமான சிப்பந்திகளைப்பற்றிய
சில விவாதம் ஏற்படவே, தாலூகாவில் முதல்தரமான ஓர் சொஸைடி
யில் சம்பந்தப்பட்ட ஒருவர்தான் அவ்வேலையில் ஈடுபடுவதாய் ஏற்றுக்
கொண்டார். சிப்பந்தி ஏற்பாடு இவ்விதமாய் முடிந்ததும் கோவாபரே
டிவ் டிபார்ட்மெண்டாரால் இதற்கென்று தயாரித்து வைக்கப்பட்டிருந்த
மாடல் பைலாக்கள் படிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டன. எல்லா சொ
ஸைடிகளும் தங்கள் தங்களுடைய டெலிகேட்டுகளை நியமித்து யூனியன்
ஏற்படுத்த வேண்டும் என்கிற மனுவில் அந்தந்த சொஸைடிகளின்
டெலிகேட்டுகள் கையெர்ப்பம் செய்ய அனுமதி பெற வேண்டுமென்று
ஸர்க்குலர் ஒன்று ஏற்கனவே ஸெண்ட்ரல் பாங்கியால் எல்லா சொஸைடி
களுக்கும் அனுப்பப்பட்டிருந்தது. அவ்விதம் ஏற்படுத்தப்பட்ட டெலி
கேட்டுகள் உடனே அங்கேயே மனுவையும் பைலாக்களையும் கையொப்
பம் செய்தார்கள். மற்றவர்கள் அதிகாரம் பெற்றவுடன் கையொப்பம்
செய்து அனுப்பும்படி கேட்டுக் கொள்ளப் பட்டார்கள். இத்துடன்
காலைக் கான்பரென்ஸ் முடிந்தது. பிறகு மாலை $2\frac{1}{2}$-மணிக்கு ஆரம்பிக்
கப்பட்டு சொஸைடிகளில் 10 ரூபாய்ப் பங்குகளை ஏற்படுத்துவதைப்
பற்றியும் அதனுடன் சம்பந்தமான பைலாக்களை அனுசரிப்பதைப் பற்றி
யும் பேசப்பட்டது. காலங்கடந்த நிலுவைகளைப்பற்றி மிக்க கவனமும்
கவலையும் காட்டப்பட்டது. கோவாபரேஷனை இதர விஷயங்களில்
புகுத்தி விருத்திசெய்ய ஆலோசிக்குமுன் காலங்கடந்த நிலுவை முதலிய
சிலவிஷயங்களில் இனிசெய்யவேண்டிய வேலைகளை நன்கு விளக்கப்பட்
டன. என்றாலும் கூட்டாக வாங்கிவிற்கும் விஷயம் பேசப்பட்டு இது
சரிவர அமுலுக்குக் கொண்டுவர முடிகிறவரையில் மனதை விட்டு நீங்
காமல் ஒவ்வொருவரும் நினைத்துக் கொண்டிருக்கும்படி கேட்டுக் கொள்
ளப்பட்டார்கள். அடுத்த கான்பரென்ஸ் கம்பளாவில் நடக்கவேண்டு
மென்று அச்சொஸைடியார் கேட்டுக் கொண்டதை அங்கீகரித்துவிட்டு
இக்கான்பரென்ஸ் கலைந்தது.

---

# கொச்சியில் ஐக்கிய முயற்சி.

கொச்சி சமஸ்தானத்தில் ஐக்கிய இயக்கம் ஏற்பட்டது
முதல் சளையாத விருத்தி அடைந்துகொண்டு வருகிறது என்பது
1917 ஆகஸ்டு மாதம் 16-ம் தேதியோடு முடிவாகும் வருஷ ரிபோர்டி
னால் நன்குபுலப்படும். இவ்வருஷத்தில் 16 சொஸைடிகள் ரிஜிஸ்டர் செய்
யப்பட்டு வருஷ ஆரம்பத்தில் இருந்த 28 சொஸைடிகளுடன் சேர்ந்ததி
னால் 44 ஆயிற்று. மெம்பர்களின் சங்கியை 1,664-லிருந்து 3,080 ஆக



வும் தொழில் தனம் ரூ. 26,444-லிருந்து ரூ. 54,949 ஆகவும் அதிகரித்
திருக்கின்றன. இவ்வருஷம் ரிஜிஸ்டர் செய்யப்பட்ட 16 சொஸைடி
களுள், ஒன்று திருச்சூர் டவுன்பாங்க், இரண்டு சிப்பந்திகளுக்காக, ஒன்று
செம்படவர்களுக்காக, மற்றொன்று(விவசாயத்திற்கென்றே ஏற்பட்டது)
கரும்பு சாகுபடிசெய்து வெல்லம் செய்து விற்பதற்காக என்று இம்மா
திரி ஏற்பட்டது. ஒரு சொஸைடியின் சராசரி மெம்பர்களின் தொகை
யும் தொழில் தனமும் முறையே 70, ரூ. 12,779 என்று ஏற்பட்டது.
இவ்விலக்கங்கள் முன் வருஷத்தில் 586, ரூ. 10,575 ஆக இருந்தன.
ரூ. 94,121 மெம்பர்களுக்குள் 2,636 கடன்களாகக் கொடுக்கப்பட்டிருக்
கின்றன. அதில் ரூ. 2,736 நிலுவையிலிருக்கிறது. திருவாங்கூரில்
போலவே இங்கும் புது சொஸைடிகள் ஏற்படுத்தவேண்டும் என்னும்
அவாவை திரவியக் குறைவினால் திருப்தி செய்ய முடியாமையா யிருக்கி
றது. இதுவரையில் "கொஞ்ச காலத்தவணைக்குத்"தான் கடன்
கள் கொடுக்கப்பட்டன. விவசாய விஷயங்களுக்காக நீண்டக் காலக்
கடன்கள் இயக்கம் விருத்தி யடைந்து பலப்பட்ட பிறகுதான் கொடுக்
கப்படும். ஒரு ஸெண்ட்ரல் பாங்க் ஏற்படுத்துவதற்குவேண்டிய முயற்சி
எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. நிகழும் வருஷத்தில் அது பூர்த்தி
யாகலாம். எல்லா சொஸைடிகளுடைய க்ஷேமநிதியானது ரூ. 2,501
ஆகிறது. அது அந்தந்த சொஸைடிகளின் வேலைகளிலேயே உபயோ
கிக்கப்பட்டு வருகிறது. ரிபோர்டில் கவனிக்கத்தக்கவிஷயம் ஒன்றுளது.
அதாவது செம்படவர்களுக்கென்று ஒரு சொஸைடி ஏற்படுத்தியதே.
அதன் நோக்கங்களுள் சில மீன் பிடிக்கும் புதுமாதிரிக் கருவிகளை வாங்
குதல், பிடித்த மீன்களின் பட்டுவாடாவுக்கு ஏற்பாடு செய்தலாகிய,
முக்கிய விஷயங்களுக்காக முன்பணம் கடனாகக்கொடுத்தல் முதலியன.
ஐக்கிய கிளர்ச்சி விருத்தியடையும் நோக்கத்துடன் போதனை புகட்டும்
வேலை சமீபத்தில் ஆரம்பமாகலாம். ஏனென்றால் இராஜாங்கத்தாருடைய
ரிபோர்டின் தீர்மானத்தில் பின்வருமாறு காணப்படுகிறது:—உத்தியோ
கஸ்தர்களும் உத்தியோக உரிமையில்லாதவர்களும் அடங்கிய ஒரு
போர்டாரால் தீர்மானிக்கப்பட்ட கிராம உபந்நியாச ஏற்பாடு நடை பெற
வேண்டுமென்று செய்து கோவாபரேஷன், விவசாயம், கைத்தொழில்
இன்னம் இவைகளுடன் கூட்டப்படக்கூடிய விஷயங்கள் ஆகிய இவ்விஷ
யங்களைப் பிரசுரிக்கும் பத்திரிகை ஒன்றை நடத்தவும் தர்பார் அநுமதி
கொடுத்திருக்கிறது. சொஸைடிகளின் நிர்வாகத்தில்கவர்ன்மெண்ட் உத்
தியோகஸ்தர்கள் தாராளமாய் கலந்துவேலைசெய்ய அனுமதி பெற்றபடி
யால் மிக்க நன்றாய் நடைபெறும் என்று நம்பப்படுகிறது. இச்சிறியசமஸ்
தானம் அடைந்திருக்கும் முன்னேற்றம் மிகவும் புகழத்தக்கதே.

---

# சேலம் ஜில்லாவில் ஐக்கிய முயற்சி.

சேலம் ஜில்லா 2332 நெ. இராமகிருஷ்ணம்பதி கோவாபரேடிவ்
க்ரெடிட் சொஸைடி காரியதரிசி Mr. N. பத்மநாபய்யர் எழுதியது:

இந்த ஜில்லாவின்கண்ணுள்ள கனம் அஸிஸ்டெண்ட் ரிஜிஸ்ட்ரார்
ஆபீஸிலிருந்து சென்ற ஜனவரி மாதம் ஒரு சர்க்குலர் வெளியாயிற்று.
அதன் கருத்து பின்வருமாறு:—

"ஐக்கிய சங்கங்களில் லேவாதேவி செய்யும் மெம்பர்கள் அப்போ
தைக்கப்போது கடன்வாங்கும்போதெல்லாம், புது கடனாக அல்லது
ஜாமீன் பத்திரங்கள் எழுதுவதற்குப் பதிலாக இத்துடன் சேர்த்திருக்கிற
பாரம் முதலில் எழுதிவிட்டு கடன்வாங்கும்போதெல்லாம், ஜாமீன்
அன்னியில் பாண்டு அல்லது பிராமிஸரிநோட்டு எழுதிக்கொடுத்தால்
போதுமானது." என்றும், பாரமும் அனுப்பப்பட்டிருக்கிறது. கடன்
வாங்கும் மெம்பர்களுக்கு மாத்திரம் இவ்வித உதவி புரியவேண்டும்
என்று சர்க்குலர் பிறந்திருக்கிறதே ஒழிய, ஜில்லா பாங்கிலிருந்து கடன்
வாங்கி மெம்பர்களுக்குக் கொடுக்கும் பஞ்சாயத்தார் விஷயத்தில்
யாதொரு உத்தரவும் கிடையாது.

2. நமது ஜில்லாவில் எல்லா கிராமச் சங்கங்களும் சங்கத்தின் மெம்
பர்களின் உபயோகத்திற்காக கடன் வாங்கும்போ தெல்லாம் குறைந்த
தொகைக்கோ அல்லது உயர்ந்த தொகைக்கோ பஞ்சாயத்தார்களில்
மூன்றுபேர் சேர்ந்து ஒரு புரோநோட்டு எழுதி ரிஜிஸ்ட்ர் செய்து ஜில்லா
பாங்குக்கு அனுப்பினால் பணம் பட்டுவாடா செய்யப்படுகின்றன.

3. புரோநோட்டு ரிஜிஸ்ட்ர் செய்யப்போவதில் 3 மெம்பர்களுக்கு
வண்டி வாடகை வகைரா செலவும் கொடுத்து உதவுகின்றார்கள். இம்
மாதிரி செலவுக்கு பணம் அப்போதைக்கப்போது கொடுத்து உதவும்
போது பஞ்சாயத்தார்களுக்கு என்னகஷ்டம் இருக்கிறது என்று ஒருவர்
கேட்கக்கூடும். இதற்குப் பதில்கூற நான் கடமைப்பட்டிருக்கிறேன்.
ஒரு வருஷத்துக்கு 4 தரம் ரூபாய் தேவையாயிருக்கிற ஒரு சங்கத்துக்கு
4 தரம் 3 மெம்பர்கள் சேர்ந்து ரிஜிஸ்ட்ர் செய்யப்போவதில் சாதாரண
மாய் 7 அல்லது 8 ரூபாய் செலவாகிறது. இதனால் சங்கத்துக்கு நஷ்
டமே தவிர லாபம் கிடையாது.

4. தவிர சப்ரிஜிஸ்ட்ராராபீஸில் புரோநோட்டு ரிஜிஸ்ட்ர் செய்யப்
போகும் சமயத்தில் ஏராளமான பத்திரம் வந்துவிடும் பக்ஷத்தில் மறு
நாளைக்கு வாவென்று சொல்லி விடுகிறார்கள். இதனால் குடிகளின் நன்
மைக்காகவும், கௌரவத்திற்காகவும் யாதொரு பிரதிப்பிரயோசனமும்



கருதாமல் உழைக்கும் பெயர்கள் மறுநாளும் போகவேண்டியதாய்
ஏற்படுகிறது. இதனால் பல தொழில்களில் இருக்கும் ஒரு மெம்பருக்கு
அநேக கஷ்டமும், தொந்தரவும் ஏற்படுகிறது.

6. முதல் பாராவில் சொல்லியிருக்கும் கனம் அஸிஸ்டெண்ட்
ரிஜிஸ்ட்ராரவர்களுடைய சர்க்குலரின்படி பஞ்சாயத்து மெம்பர்கள் ஒரு
சங்கத்துக்காக வாங்கும் கடனுக்கு ஒரு புரோநோட்டு ஓரே தரம் ரிஜிஸ்
டர் செய்தால் போதுமானது என்றும் மறுபடியும் பணம் தேவையா
யிருக்கும் பக்ஷத்தில் ஷை சர்க்குலரில் சொல்லியிருக்கிற மாதிரி செய்
யலாமென்றும், ஒருமாதிரி பாரம் எழுதி ஒவ்வொரு யூனியனின் அபிப்
பிராயத்துக்கு அனுப்பவேண்டுமென்றும், அல்லது ஒரு சங்கத்துக்கு
முதலில் கனம் அஸிஸ்டெண்ட் ரிஜிஸ்ட்ரார் அவர்களால் எவ்வளவு சாங்
ஷன்செய்யப் படுகிறதோ அந்த மொத்தத்துக்கு ஒரு புரோநோட்டு
எழுதி ரிஜிஸ்ட்ர் செய்துவிட்டு சிற் சில பணம் வாங்கிக்கொள்வதென்று
வது சீக்கிரம் ஊர்ஜிதத்துக்கு வரவேண்டும்.

7. நவம்பர் மாதத்தில் வெளியான புல்லெடீனில் இம்பீரியல் கோ
வாபரேடிவ் கமிட்டியாரின் சிபார்சுகளின் பேரில் சென்னை கவர்ன்
மெண்டாரும், 147வது சிபார்சை அங்கீகாரம்செய்து அதில் "சாதாரண
மாய்ப் பிராமிஸரி நோட்டின் பேரில்தான் சங்கம் கடன் வாங்க
வேண்டும்" என்று சொல்லி யிருக்கிறார்கள். இன்னவிதமாய் எழுதி
வாங்கவேண்டுமென்று நிர்ணயிக்கவில்லை. ஆகையால் பஞ்சாயத்தார்
விஷயத்தில் டிஸ்ட்ரிக்ட மேற்பார்வை கமிட்டியார் தக்க ஏற்பாடு செய்ய
வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

---

# இராமநாதபுரத்தில் ஐக்கிய முயற்சி.

ஸ்ரீவில்லிபுத்தூர் தாலூகா 995-நீ வர்த்திருப்பட்டி (Watrap)
ஐக்கிய நாணயச் சங்கத்தின் 30-6-17-ன் ரிபோர்டு.

இச்சங்கமானது 1912-ம் வருஷ கடைசியில் இப்பக்கத்து கௌரவ
ஸ்தாபகர், R. ஆனந்தருவால் ஸ்தாபிக்கப்பட்டு 1913-ம் வருஷ ஜனவரி மீ
28உ வேலை ஆரம்பம் செய்யப்பட்டது. இச்சங்கத்தில் 30-6-17-ல் 93
பிராமணர்களும் 117 பிராமணரல்லாதவர்களும், 4 பஞ்சமர்களும் ஆக
214 மெம்பர்களிருந்தார்கள், இந்த 214 பேர்களும் விவசாயமுயற்சியுடை
யவர்கள். இவர்களால் 30-6-17 முடிய செலுத்திய பங்குத்தொகை ரூ.835.
இச்சங்கம் டிபாஸிட்டு மூலமாய் ரூ. 3,185-ம் ஸெண்ட்ரல் பாங்கியில்

மூலமாய் 15,678-ம் கடன் வாங்கித்தன் விவகாரத்தை நடத்திவருகிறது. ஷை தேதியில் மெம்பர்களுக்குக் கொடுத்திருக்கும் கடன்தொகை ரூ. 19,096-ம் 263 கடன்களின் பேரில் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதில் 35 கடன்களின்பேரில் ரூ. 1728 தவணை தப்பி நின்றது. இது ஏறக்குறைய 100-க்கு 10 வீதம் ஏற்படுகிறது. க்ஷேமநிதி ரூ. 1,049-15-10 மதுரை இராமநாதபுரம் ஸெண்ட்ரல் கோவாபரேடிவ் பாங்கில் டிபாஸிட்டு செய்யப்பட்டிருக்கிறது. இச்சங்கத்தின் விவகாரத்துக்கு ஷேம நிதி ஜாஸ்தியாயிருக்கவேண்டியது. லட்டிக்கணக்கிடும் ஓர் வழக்கத்தால் 1915-16-ம் ஸூத்தில் ரூ. 604-14-10 நஷ்டமாக காட்டப்பட்டது. அப்பால் 1916-17-ம் ஸூத்தின் நடவடிக்கையால் ரூ. 112-15-8 மாத்திரம் லாபம் கிடைத்ததில் ஷை லாபத்தை முந்தின வருஷத்தின் நஷ்டத்துக்கு ஈடு செய்ததுபோக ரூ. 491-15-2, 1916-17-ம் ஸூத்து கடைசியில் நஷ்டமாகக் காட்டப்பட்டிருக்கிறது. இச்சங்கமும் மெம்பர்களிடம் ஜூன்மீ 30உ முடிய வட்டி வசூல் செய்யும் வழக்கத்தை கையாடினால் இம்மாதிரி நஷ்டம் காட்டவேண்டியதிராது. இச்சங்கம் தன் தொகையை வசூல் செய்வதற்காக கோர்ட்டுக்குப் போனதில் இன்னும் 12 கேஸ்கள் வசூலாக வேண்டியதாயிருக்கிறது. ரிபோர்ட்டு வருஷத்தில் பஞ்சாயத்து மீட்டிங் 42-ம், மகாசபை மீட்டிங் 10-ம் நடந்திருப்பதினால் சங்கத்தின் பஞ்சாயத்தார்களுடைய ஊக்கத்தைக் காட்டுகிறது. இச்சங்கம் பிரத்தியேகமாய் ஓர் கட்டடத்தை வாடகைக்குவாங்கி அதில் ஆபீஸ்வேலை நடத்தி வருவதுடன் ஒரு குமஸ்தாவையும் ஒரு சேவகனையும் நியமித்திருக்கிறது. இச்சங்கம் ஒரு இரும்பு பெட்டியையும் வாங்கியிருக்கிறது. இப்பக்கத்தில் வேலைசெய்யும் நல்ல சங்கங்களில் இது ஒன்று. இவ்வளவு நல்ல நிலைமைக்குக்காரணம் இச்சங்கத்தின் பஞ்சாயத்துதாரகளின் ஊக்கமும் முக்கியமாய் பிரஸிடெண்ட் ம-ா-ா-ஸ்ரீ, T. S. நாராயணய்யங்காரவர்களின் பிரயாசையும் காரணம். இச்சங்கம் மேன்மேலும் விருத்தி முகங்காட்ட வேண்டியதென்று யாவராலும் பிரார்த்திக்கப்படுகிறது. இப்பால் இச்சங்கத்தின் பஞ்சாயத்தார்கள் ஐக்கிய இயக்கத்தின் பொது அபிவிர்த்தியில் கலக்காமல் ஒதுங்கி யிருப்பதாய் தெரிவது நிரம்ப விசனிக்க வேண்டியதாயிருக்கிறது. மதுரை இராமநாதபுரம் பாங்காருக்கும் இச்சங்கத்தாருக்கும் ஏற்



பட்டிருக்கும் அபிப்பிராயபேதமே இதனது ஒரு காரணமாகச் சொல்லப்படுகிறது. சமீபத்தில் நடந்த ஸ்ரீவில்லிபுத்தூர் கான்பரென்ஸுக்கு பிரதிநிதிகள் அனுப்பாமலும் ஸ்ரீவில்லிபுத்தூரில் ஏற்பட்டிருக்கும் யூனியனில் இன்னும் மெம்பராகச் சேராமலிருப்பதே எல்லாருக்கும் ஓர் வியப்பைக்கொடுக்கிறது. யாருடனும் அபிப்பிராய பேதங்களிருந்தால் அதை எப்படி நிவர்த்திக்க வேண்டுமோ அவ்வாறு அதை நிவர்த்தி செய்ய வழிதேட வேண்டியிருப்பதை விட்டுவிட்டு ஐக்கிய இயக்க அபிவிர்த்தியில் கலக்காமலிருப்பதானது இச்சங்கத்தின் மதிப்புக்கு ஒரு குறை என்றே சொல்லவேண்டும். டிஸ்டிரிக்ட் பாங்கார்பேரில் இச்சங்கம் குறை கூறுவதை டிபார்ட்மெண்டார் கவனித்து சமரசப்படுத்த வேண்டிய யேற்பாடு செய்வார்களென்று நம்பப்படுகிறது. டிஸ்டிரிக்ட் பாங்கார் இச்சங்கத்தினிடம் 6 மாதத்துக்கு ஒருதரம் வட்டியை வசூல்செய்வது ஒருமுறைப்பாடாகசொல்லப்படுகிறது. அவ்விதம் 6 மாதத்துக்கு ஒருதரம் வட்டி வசூல் செய்வதாயிருந்தால் டிஸ்டிரிக்ட் பாங்கார் ஆதியில் தாங்கள் கொண்ட கொள்கையைவிட்டு தங்கள் இஷ்டம்போல் நடக்க ஆரம்பித்து விட்டார்களென்றே சொல்லவேண்டும். இது விஷயமாய் டிஸ்டிரிக்ட் பாங்காருக்கு ஓர் விஷயத்தை ஞாபக மூட்ட வேண்டியதா யிருக்கிறது. 1914ஸூ ஜனவரிமீ 3, 5உகளில் மதராஸில் நடந்த மாகாண கோவாபரேடிவ் கான்பரென்ஸில் மதுரை ஸெண்ட்ரல் பாங்கு ஸெக்ரிடெரி ம-ா-ா-ஸ்ரீ (இப்போதுராய்ஸாஹேப்) K. இராமசாமி அய்யரவர்கள் 6 மாதத்துக்கொருதரம் வட்டி வசூல்செய்யும் ஸெண்ட்ரல் பாங்குகளை வருஷத்துக்கு ஒரு தரம் வட்டி வசூல் செய்யும்படிக்கு கேட்டுக்கொள்ள இந்த கான்பரென்ஸ் அபிப்பிராயப்படுகிறது என்று தீர்மானித்திருப்பதை மறந்துபோய் இம்மாதிரி 6 மாதத்துக்கு ஒருதரம் வசூல் செய்ய பிரயத்தனப் படுவதானால் இப்பொழுது வர்த்திருப்பட்டி சங்கத்துக்கு மட்டுமென்று மற்ற சங்கத்தார்களும் டிபார்ட் மெண்டாரும் கவனியாமலிருந்தால் நாளடைவில் அது எல்லா சங்கத்தாருக்கும் ஏற்பட்டுவிடும் என்பதை கவனிக்கவேண்டும். ஆகையால் இதுவிஷயத்தை டிபார்ட்மெண்டார் கவனிப்பார்களென்று எதிர்பார்க்கப்படுகிறது. இவ்விஷத்திற்காக வர்த்திருப்பட்டி சங்கத்தார் பொதுவிஷயங்களில் ஒதுங்கியிருப்பதை விட்டு முன்போல் ஊக்கத்துடன் வேலை செய்யவேண்டியது அவசியம்.

அதிலும் தங்கள் சங்கத்தை ஸ்ரீவில்லிபுத்தூர் யூனியனில் அணைக்கவேண்டிய ஏற்பாடும்செய்யவேண்டும். இவ்விஷயமாய் வர்த்திருப்பட்டி சங்கத்தாருக்கு ஓர் விஷயத்தை ஞாபகப்படுத்த வேண்டியதா யிருக்கிறது. 1917ஞு ஜனவரிமீ 20, 21உகளில் வர்த்திருப்பட்டி சங்கத்தின் பிரயத்தனத்தின் பேரில் கூடின மதுரை, இராமநாதபுரம் இலாகாவின் 4-வது கான்பரென்ஸில் இச்சங்கத்தின் பிரஸிடெண்ட் ம-ா-ா-ஸ்ரீ, T. S. நாராயணய்யங்காரவர்கள் செய்த வரவேற்புப் பிரசங்கத்தில் யூனியனின் அவசியத்தைப் பற்றி பேசியும் யூனியன் ஸ்தாபிக்க வேண்டுமென்று தீர்மானங்கள் செய்யப்பட்டும் யூனியன் விஷயமாய் கவனிக்க ஒரு கமிட்டி ஏற்படுத்தி ஷை கமிட்டி மீட்டிங்கை கூட்டிவைப்பதற்கு ம-ா-ா-ஸ்ரீ, T. S. நாராயணய்யங்கார் அவர்களுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருப்பதை மறந்துபோய் யூனியன் விஷயமாய் பின்னபிப்பிராயப்பட்டிருப்பது சரியல்ல. பொதுவிஷயங்களில் சில்லரை விஷயங்களை விட்டுவிட்டு முக்கியமான காரியங்களில் ஒன்று சேர்ந்து வேலை செய்யவேண்டியதுதான் முறை. ஆகையால் வர்த்திருப்பட்டி சங்கத்தார் தங்கள் எண்ணத்தை மாற்றி சங்கத்தை முன்போல அபிவிர்த்திக்குக் கொண்டுவர வேண்டிய பிரயத்தனப்பட வேண்டுமாய் கோரப்படுகிறது.

# மதராஸ் புல்லெடீன் ஆப் கோவாபரேஷன்

என்னும்

# சென்னைக் கூட்டுத்தொழில் வர்த்தமானி

சம்புடம் IX] 1918ஞு மேமீ [இலக்கம் 11.

## பத்திராதிபரின் குறிப்புகள்

### விவசாயமும் ஆரம்பக் கல்வியும்,

அயர்லாந்திலுள்ள கூட்டுறவுக்காரர்கள் சமீபத்திலே அங்கு மகா நாடு கூடினர். ஆரம்பக்கல்வியை அபிவிருத்தி செய்யவேண்டு மென் பதைபற்றியே அம்மகாநாட்டில் மிகவும் தீவிரமாக விவாதம் நடந்தது. மகாநாட்டின் அக்கிராசனாதிபதியும் தமது பிரசங்கத்தில் அவ்விஷயத் தையே பெரிதும் முக்கியமாய் மதித்து விரிந்துரைத்தார்.

அயர்லாந்திலே பெரும்பாலருக்கு விவசாயந்தான் ஜீவனோபாய மாகும். ஆதலின் விவசாயத்துக்கும் கல்விக்கும் நெருங்கிய சம்பந் தம் இருக்கவேண்டுமென்றும், வேலைசெய்வதென்றால் இளப்பமல்ல கௌரவமேயாகுமென பெண்களுக்கும் பிள்ளைகளுக்கும் போதிக்க வேண்டுமென்றும், விவசாயிகளின் கருத்து, சிந்தனை, உத்தேசம், வாழ்வு, இவைகளை அநுசரித்தே ஆரம்பக்கல்வியை போதிக்கவேண்டு மென்றும், அம்மகாநாட்டில் பலர் வற்புறுத்திப் பேசினார்கள். நம் தேசத் திலே கிராமத்தார்களிலும் அத்தகைய சீர்திருத்தம் வேண்டுமென்று நாம் சொல்லவும் வேண்டுமோ ?

### கூட்டுறவும் மகாயுத்தமும்.

மகாயுத்தம் நடைபெற்றுவரினும், அதில் சம்பந்தப்பட்டுள்ள தே சங்களிலே கூட்டுறவு முயற்சி தளர்ச்சியடையாமல், வலுத்திருக்கிற தென்றே காணப்படுகிறது. இங்கிலாந்திலுள்ள மாஞ்சஸ்டர் நகரிலே கூட்டுறவு வர்த்தமானி (Co-operative News) என்ற பத்திரிகை பிரசுரமாகிறது. அதற்கு ஒரு லட்சம் சந்தாதார்கள் இருப்பதாக அறி கிறோம். தவிர அப்பத்திரிகைகள் வேண்டுமென்று சொல்லி ஏராள

மான பேர் கடிதமெழுதுவதாகவும் தெரியவருகிறது. இது மிகவும் விசேஷமல்லவா? அவ்வளவு முக்கியமல்லாத ஓரிடத்தில் மட்டும் 170 டஜன் வாராந்தப்பத்திரிகைகள் தருவிக்கப்படுகின்றனவாம். நம் தேசத்திலே பிரசுரமாகும் கூட்டுறவு வர்த்தமானப் பத்திரிகைகள் மிகவும் சொற்பம். ஆயினும் நம் தேசத்திலுள்ள தினசரிப் பத்திரிகைகளிலாவது ஏதேனும் ஒன்றுக்காவது 30 ஆயிரம் சந்தாதார்கள் உண்டோ? உண்டென்று நமக்குத் தோன்றவில்லை.

## ஓர் கூட்டுறவுசங்கத்தின் முன்னேற்றம்.

ஸ்காட்லாந்திலே மொத்தத்தில் சாமான்களை விலைக்குவிற்கும் ஸ்காட்டிஷ்கோவாபரேடிவ் ஹோல்ஸேல் ஸொஸைடி என்ற சங்கமொன்றுவுளது. சென்றவருஷத்திலே அச்சங்கத்தில் விற்பனையான சரக்குகளின் மதிப்பு 86 லக்ஷத்து 51 ஆயிரத்து 833 பவுனுகும். அதாவது முந்திய அரைவருஷ காலத்தில் விற்பனையானதைக் காட்டிலும் சுமார் ஏழரை லட்சம் பவுனுக்கு அதிக விற்பனை ஆயிருக்கிறது. அச்சங்கத்தின் ஆதரவில் நடை பெற்றுவரும் தொழிற்சாலைகளில் தயாரான சரக்குகளின் மதிப்பு 29 லட்சத்து 67 ஆயிரத்து 380 பவுன், அதாவது முந்திய ஒரு வருஷகாலத்திலே தயாரான சரக்குகள் 60 லட்சத்து 98 ஆயிரத்து 139 பவுன் மதிப்புள்ளவை. சென்றவருஷத்திலே மொத்தத்தில் விற்பனையான சரக்குகளின் மதிப்போ 170 லட்சத்து 83 ஆயிரத்து 274 பவுனுகும்.

## சிறந்த புத்திமதி.

தற்சமயம் ருஷியா தேசத்திலே கலகமும் குழப்பமும் ஒழுங்கீனமும் நிரம்பிக்கிடக்கின்றன. ஸ்காட்லாந்தில் பிரசுரமாகும் ஸ்காட்டிஷ் கோவாபரேடர் என்ற பத்திரிகையானது அவ்விஷயத்தின் மேல் ஸ்காட்லாந்து வாசிகளுக்கு சிறந்த புத்திமதி சொல்லி யிருக்கிறது. நம் தேசத்திலே தற்சமயமுள்ள இராஜீய நிலைமையை உற்றுநோக்குமளவில், அப்பத்திரிகையின் வாக்கியங்கள் நம் தேசத்திற்கும் பொருந்தமாயிருக்கும். அவ்வாக்கியங்கள் என்ன வென்றால்:—

அமிதமான அபிப்பிராயமுள்ள மனிதர்களிடம் கூட்டுறவுக்காரர்கள் ஈடுபட விடக்கூடாது. தங்களது லட்சியங்களை தெளிவாக மனதில் இருத்திக் கொண்டு, தகுதியான வழியினால் சரியான காலத்தில் அந்த லட்சியங்கள் கைகூடும் உபாயத்தைத் தேடவேண்டும். தற்சமயமோ மனிதர்களின் மனம் சலனப்பட்டுக் கொண்டிருக்கிறது, நிதானமாயில்லை. மேலும், அமிதமான பல அபிப்பிராயங்கள் சொல்லப்படுகின்றன. ஆதலினால் தான் நாம் அவ்வாறு சொல்லுகிறோம். கூட்டுறவுக்காரர்கள் மிதமான அபிப்பிராயங் கொண்டிருப்பவர்க ளென்று நாம் நம்புகிறோம். மேலும், பெருந்தன்மையால் லட்சியங்களை மேற்கொண்டு



அவைகளைக் கூடுமான வரையில் அனுபவத்தில் கண்டு, சமுகத்திற்கு நன்மை புரியக்கூடிய வர்களான மனிதர்களும் ஸ்திரீகளும் இருக்குமாறு எல்லாரும் முயலுவரார்களாக.

## சரக்குகளில் கலப்படம்

இந்தியாவிலே விவசாய விஷயத்தை கவனிப்பதற்காக விவசாய போர்டு என்ற சபையொன்று இருக்கிறது. அதில் மெம்பர்களாயுள்ள பலரும் கவர்ன்மெண்டிலே விவசாய இலாகாவில் வேலைபார்ப்பவர்கள். கடந்த டிசம்பர் மாதத்திலே அச்சபையார் முதல்முதல் கூடினார்கள். இந்தியாவிலிருந்து வெளிதேசங்களுக்கு போகும் சரக்குகள் யாவும் அப்பட்டமாயல்லாமல் கலப்படமா யிருப்பதால், இந்தியச் சரக்குகளின் மதிப்பு குறைந்துவிடுகிறதே அதற்கு யாதுசெய்யலாமென்பதைக் குறித்து அச்சபையார் ஆலோசனை செய்தனர். இந்தியச் சரக்குகள் கலப்படமாய் இருப்பதனால், சபைகளின் மதிப்பு குறைந்து வருவதோடு, விவசாயிகளுக்கு தகுந்த விலையும் கிடையாமற் போகிறது. அவ்விஷயமாய் அச்சபையின் முன்பு யாதொரு தீர்மானமும் செய்யப்படவில்லை. ஆனாலும், சபையின் ஸப்கமிட்டியாரால் மேற்படி விஷயமாய்ச் சொல்லப்பட்டிருந்த ரிபோர்ட்டை அவர்கள் அங்கீகரித்தனர். ஸப் கமிட்டியார் சொல்லிய யோசனைகள் என்னவென்றால்: ஒரு சரக்கானது ஓரளவு அப்பட்டமான நிலைக்குக் குறைந்திருக்குமானால், அதை அங்கீகரிப்பதில்லை யென்பதற்கு இத்தேசத்திலிருந்து ஏற்றுமதி செய்வோரும் அன்னியதேசங்களில் இறக்குமதிசெய்வோரும் தீர்மானிக்க வேண்டுமென்பதாகும்.

## பங்களூர் கத்தோலிக் கூட்டுறவுச் சங்கம்.

பங்களூரிலே "பங்களூர் கத்தோலிக் கூட்டுறவுச் சங்கம்" என்ற ஒரு சங்கம் உளது. அதன் சென்ற 1917-ம் வருஷத்திய ரிபோர்ட்டு நமது பார்வைக்கு வந்திருக்கிறது. பிரஸ்தாப வருஷத்தின் கடைசியிலே அச்சங்கத்தின் மெம்பர்கள் 309 பேர்; அவர்கள் அச்சங்கத்தில் 1,168 பங்குகள் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். வசூலாயிருக்கும் மூலதனம் 5,700 ரூபாய்க்கு மேலாகும். பிரஸ்தாப வருஷத்திலே 118 பேருக்கு 8,722 ரூபாய் கடன் கொடுக்கப்பட்டது. இதில் 2,336 ரூபாய் திரும்ப வசூலாய்விட்டது, 6,388 ரூபாய் பாக்கியிலிருக்கிறது. இதர சங்கங்களிடமிருந்தோ, சங்கமெம்பர்க ளல்லாதவர்களிடமிருந்தோ கடன் வாங்காமல், அச்சங்கமானது தன் அங்கத்தினருக்குக் கடன் கொடுத்திருக்கிறது. இது விசேஷமாகும். ஆரம்பத்திலே சங்கம் சரிவரத்தான் இருக்கிறது; போகப்போகவும் அப்படியே இருக்குமென நம்புகிறோம்.

## பம்பாய் கூட்டுறவு பாங்கு.

பம்பாயிலுள்ள பம்பாய் ஸெண்ட்ரல் கோவாபரேடிவ் பாங்கின்
சென்ற வருஷத்திய நிர்வாக ரிபோர்ட்டைப் பார்க்குமளவில், யுத்தநிலை
மையினல் கஷ்டங்கள் யுண்டாயினும் திருப்திகரமாகவே அப்பாங்கி
நடைபெற்று வந்திருக்கிறதென்று புலப்படும். அதன் முலதனமோ 31
லட்சம் ரூபாயாக உயர்ந்திருக்கிறது. கோவாபரேடிவ் சங்கங்களுக்கு
அப்பாங்கியிலிருந்து கடன் கொடுக்கப்பட்ட தொகை சுமார் 30 லட்சம்
ரூபாயாகும். பணம் வசூலாகுமோ ஆகாதோ வென்று சந்தேகப்படும்படி
யான நிலமையில் அப்பாங்கிக்கு வசூலாகவேண்டியகடன் தொகை 21
ஆயிரம் ரூபாயாகும். ஆதலின், பாங்கியின் சேமநிதியை அதிகரித்திருத்
தல் விசேஷமாகும். அங்குள்ள பிரவிடென்ஷி பாங்கியிலிருந்து சென்ற
வருஷம் அப்பாங்குக்கு நான்கு லட்சம் ரூபாய் கடன் கிடைத்திருப்பத
ஞல், பணவிஷயமாய் நல்ல பக்கபலம் உண்டென்று புலப்படுகிறது.
அத்தொகையில் ஒரு லட்சத்து 14 ஆயிரம் ரூபாய் போக மீதி
தொகை செலவாய்விட்டது. குறிப்பிட்ட தவணைக்குப்பின் வாங்கிக்
கொள்வதாக அப்பாங்கியில் வட்டிக்குப் போட்டு வைக்கப்பட்டுள்ள திர
வியம் 13 லட்சத்து 93 ஆயிரத்து 424 ரூபாய். வேண்டுமென்றபோது
வாங்கிக்கொள்வோமென்று அதில் வட்டிக்குப் போட்டுவைக்கப்பட்
டுள்ள தொகை ஒருலட்சத்து 5,411 ரூபாய்; பிரஸ்தாப வருஷத்திலே
அப்பாங்கிக்கு வட்டிமூலமாய்க் கிடைத்த வருமானம் ஒருலட்சத்து
7,500 ரூபாயாகும். பிரஸ்தாப வருஷத்திலே கஸர்லாபம் 64 ஆயிரத்து
840 ரூபாய்.

## கூட்டுறவு முறையிற் பால்சங்கங்கள்.

கல்கத்தா நகருக்கு பால் ஸப்ளை செய்வதற்காக அங்கே கூட்டுறவு
முறையில் ஆறு பால்சங்கங்கள் நடைபெற்று வருகின்றன. அத்த
கைய சங்கங்களுக்கு கார்பொரேஷனிலிருந்து நன்கு உதவி கிடைக்க
வேண்டுமென்று பங்காள கோவாபரேடிவ் ஜர்னல் என்ற பத்திரிகை
சொல்லியிருப்பதின் ஸாரம் என்னவென்றால்:—

சங்கங்களுக்கு ஆதரவாய் இருக்கும் வண்ணம், மோடார்வண்டி
யொன்றை பரீக்ஷார்த்தமாக அச்சங்கங்களுக்கு கார்பொரேஷன் கொடுக்
கவேண்டும். அவ்வாறு கொடுத்தால் தினந்தோறும் காலையிலே அவ்வண்
டியில் பாலை ஏற்றி நகரத்திற்குக் கொண்டுவர அச்சங்கங்களுக்கு அனு
கூலமாய் இருக்கும். மோடார்வண்டிக்குச் செலவாகும் பெட்ரோல் எண்
ணெயின் கிரயத்தை அச்சங்கங்கள் ஏற்றுக்கொள்ளும். தற்பொழு
துள்ள ஆறுசங்கங்களும் கல்கத்தாநகருக்கு அப்பால் 12 அல்லது 18
மைல்தூரத்தில் இருக்கின்றன. காலை 5 மணிக்கு கல்கத்தாவிலிருந்து



மோடார்வண்டி புறப்பட்டுச்சென்று 7 மணிக்குள் பாலுடன் நகருக்கு
திரும்பிவந்துவிட முடியும். இம்மாதிரிப் பாலைக் கொண்டுவந்தால், பால்
கெட்டுப் போகாது. தவிர, இம்முறை சரிவர பலன் கொடுப்பதைப்
பார்த்து, இன்னும் பலசங்கங்களையும் ஏற்படுத்தமுடியும். அப்பொழுது
பல கிராமங்களிலிருந்தும் நகரத்துக்கு வேண்டுமளவு பால் வந்துசேர
முடியும்.

கல்கத்தாவுக்கு சுமார் 15 மைல்தூரத்திலுள்ள ஜெஸ்ஸூர் என்கிற
ஊரிலே 10 லட்சம் ரூபாய் முதல் போட்டு பால்பண்ணை யொன்றை ஏற்
படுத்தினல் நகருக்கு வேண்டிய பால் முழுவதையும் ஸப்ளை செய்துவிட
லாமென கனம் பெயனி என்பவர் சொல்லியிருக்கிறார். ஏற்கனவேயுள்ள
பால் சங்கங்களுக்கு தற்சமயம் அசௌகரியங்கள் இருக்கின்றன. நம்
மாகாணத்திலே, பால் பண்ணைகளை ஏற்படுத்த முயற்சிகள் செய்யப்படுவ
தால், அந்த அசௌகரியங்களைக் கவனித்துப்பார்த்தால் அவைகள் நேரா
வண்ணம் வழிதேடமுடியும்.

## ஸர்வதேச ராஜ்யங்களுக்கு கட்டுப்பாடு.

போட்டிக்கும் சச்சரவுக்கும் நேர் எதிரிடையானது கூட்டுறவே
யாம். எனவே, வருங்காலத்தில் மகாயுத்தம் நேராமல்காக்க வேண்டு
மென்ற நோக்கத்துடன் இங்கிலாந்திலே ஸர்வதேசங்களின் கூட்டுறவு
சபை என்ற ஒரு சபை ஏற்பட்டிருத்தல் என்ன ஆச்சரியம் உண்டு; அச்
சபையின் நிர்வாக கமிட்டிக்குத் தலைவராய் இருப்பவர் மிஸ்டர் வில்லி
யம்ஸ் என்பவர் சபையின் நோக்கத்தைக்குறித்து அவர் சொல்லியிருப்ப
தாவது:—தற்சமயம் மகாயுத்தத்தை தடுப்பதற்குப்பழைய வழிகள் பலன
ளிக்கவில்லை. ஆயினும் இன்னும்பரிட்சைப் பார்க்கப்படாத பழையவழி
களில் ஒன்றுளது. அது யாதெனில், பெரிய ராஜாக்களெல்லாம் ஒரு வித
த்தில் கூட்டுறவு கொண்டிருப்பதாகும். தவிர ஸர்வதேசங்களினின்றும்
அததன்சக்திக்கு ஏற்றவாறு சேகரிக்கப்படும் சொற்ப ராணுவப் படை
யொன்றும், கடற்படையொன்றும், பார்லிமெண்ட் மகாசபையொன்றும்,
நிர்வாகசபை யொன்றும், இவைகளை ஏற்படுத்தவேண்டும். இதுசாமானிய
மான யோசனையும் ஏற்பாடுமல்ல. பெரிய வல்லரசுகளெல்லாம் அந்த ஏற்
பாட்டுக்குச் சம்மதிக்குமோ தங்களுடைய அதிகாரத்தை விட்டுக் கொ
டுக்கயிசையுமோ என்று பலரும் கருதுகின்றனர். எனவே, அனுப
வத்தில் நடக்கக்கூடிய காரிய மொன்றைச் சொல்லுகிறேன், அதாவது,
மிகவும் நாகரீகம் வாய்த்த ராஜ்யங்க ளெல்லாம் ஒன்றுபட்டு கூட்டுற
வாய் இருக்கலாம். தங்களுக்குள் விவகாரம் வந்துவிட்டால் அதைப்
பொதுவில் சொல்லித் தீர்த்துக்கொள்ளலாம். பொதுவில் செய்யப்படும்
தீர்மானத்தை யாரேனும் மீறி நடந்தால், அப்பொழுது எல்லா
ராஜ்யங்களும் சேர்ந்து, மீறி நடக்கும் தேசத்தை சரிப்படுத்தப்

பார்க்கலாம். இத்தகைய ஏற்பாட்டைச் செய்வதற்காகவே ஸர்வ ராஜ்யங்களும் முக்கிய கட்டுப்பாடான சபை யொன்று ஏற்பட்டுளது.

### கூட்டுறவு முயற்சி பிடரேஷன்.

பிஹார் ஒரிஸா மாகாணத்திலுள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்குள் பரஸ்பரம் கூட்டுறவை ஏற்படுத்த வேண்டுமென்று மத்திய மாகாணத்தில் ஏற்பட்டிருப்பதுபோல் கோவாபரேடிவ் பெடரேஷன் என்ற சங்கமொன்று பேஹார், ஒரிஸ்ஸாவில் ஏற்பட்டிருக்கிறது. அதன் நோக்கங்களாவன:—

1. கூட்டுறவு பாங்கிகள், சங்கங்கள் இவைகளை நன்கு கவனித்து வந்து, கிரமமான கணக்குப் பரிசோதனையும் மேற்பார்வையும் நடத்தல்.

2. விவசாயம், தொழில் முதலிய பல துறைகளிலும் கூட்டுறவு முயற்சியை பிரபலப்படுத்தல்.

3. ஆரம்பக் கல்வியின் அபிவிருத்திக்கு ஆதரவளித்தல், சுகாதார நிலைமையைக் கைத்தூக்கி விடுதல், வைத்திய வசதி தேடிக் கொடுத்தல்; பஞ்சகாலத்தில் சகாயம்செய்து கொடுத்தல்;

4. பேஹார் மாகாணத்திலே கூட்டுறவு முயற்சி சம்பந்தமான காரியங்களெல்லாம் ஒரே ரீதியில் திறமையாய் நடக்கும்படி முயலுதல்.

மேற்கண்ட சங்கத்திலே சேர்ந்து கொள்ள சென்ட்ரல் சொஸைடியும் பிரைமரி சொஸைடியும் தலைக்கு முறை ரூபாய் இருபத்தைந்தும் ரூபாய் இரண்டும் கட்டணம் செலுத்த வேண்டும். சங்கங்களில் கணக்குப் பரிசோதனையை நடத்துவதற்காக ஒவ்வொரு சங்கத்தினிடமிருந்தும் அதன் மூலதனத்துக்கு ஏற்றவாறு ஓரளவுபணம் வசூலிக்கப்படும். பெடரேஷன் என்ற சங்கத்தின் மெம்பர்களா யுள்ளவர்களுக்கு யாதொரு விதமான லாபமும் விதித்துத் கொடுக்கப்படமாட்டாது. பெடரேஷன் என்ற சங்கத்தின் மேற் பார்வையை வகிக்க கவர்னர் என்ற ஒருவரும் 10 பேர் அடங்கிய ஒரு நிர்வாக சபையும் உண்டு. அம்மாகாண ரிஜிஸ்ட்ராரே தற்சமயம் கவர்னராய் இருக்கிறார். மத்திய மாகாணத்தைப்போலவே கவர்னர் என்பவர் உத்தியோகப் பற்றிலாத ஒருவராய் சீக்கிரம் ஏற்பட்டு விடுவாரென்று நாம் நம்பியிருக்கிறோம்.

### கிராமப் பொதுக் காரியங்களும் பஞ்சாயத்துகளும்.

ஸ்தல சுய ஆட்சி விஷயமாய் சமீபத்தில் இந்தியா கவர்ன்மெண்டார் ஒரு தீர்மானத்தை வெளியிட்டனர். அதில், கிராம பஞ்சாயத்துகளை ஏற்படுத்தும் விஷயமும் சொல்லப்பட்டுளது. பஞ்சாயத்து சம்பந்தமான பாகத்தைமட்டுமாவது விசேஷ சிரத்தையுடன் கூட்டுறவுக் காரர்கள் படித்திருப்பார்களென நினைக்கிறோம். பிரிட்டிஷ் ஆட்சி முறையினால், கிராமப்பொது வாழ்வும் காரியங்களும் கெட்டுப்போய்விட்டன. ஆயினும்



அவைகளை நன்கு நடத்தக்கூடிய கிராம பஞ்சாயத்து சபைகள் ஏற்படும். ஏற்படும் என்று சென்ற40 வருஷகாலமாய் நாம் பேசிவந்தும் பலனில்லை. கிராம பஞ்சாயத்து சபைகளை ஏற்படுத்த வேண்டுமென்றும் அவசியமானால் அதற்காகப் பிரத்தியேகமாய் சட்ட திட்டஞ் செய்யவேண்டுமென்றும், மாகாண கவர்ன்மெண்டுகளுக்கு இந்திய கவர்ன்மெண்டார் அத்தீர்மானத்தில் சொல்லி யிருக்கிறார்கள். ஆயினும் மாகாண கவர்ன்மெண்டுகளோ பல தடவைகளில் தங்களது மேலதிகாரிகளின் உத்தரவை அலட்சியமாய் விட்டு விட்டிருக்கின்றனர். ஆதலின் பிரஸ்தாப தீர்மானத்தின்படியே பஞ்சாயத்து சபைகளை மாகாண கவர்ன்மெண்டு கள் ஏற்படுத்துமோ வென்று நாம் நிச்சய புத்தி கொள்வதற்கில்லை. நமது மாகாணத்திலே காட்டிலாகா பஞ்சாயத்து சபைகள் ஏற்பட்டு நல்லவேலை செய்திருப்பினும் சட்ட சம்பந்தமான பஞ்சாயத்து சபைகளை ஏற்படுத்த மாகாண கவர்ன்மெண்டார் முன் வரவில்லை. ஆயினும் இந்தியா கவர்ன்மெண்டார் தற்சமயம் தீர்மானம் வெளியிட்டிருப்பதால் பஞ்சாயத்து சபைகளை சட்ட சம்பந்தமாய் ஏற்படுத்த மாகாண கவர்ன்மெண்டார் முயலுவார்களென நாம் எதிர்பார்க்கிறோம்.

சட்ட சம்பந்தமான பஞ்சாயத்து சபைகள் இல்லாமலிருக்கையில், இதர தேசங்களிலே ஸ்தலகூட்சிமைகளால் செய்யப்படும் பொது ஜனக்காரியங்களில் சிலவற்றைத் தம்பக்கம் ஒப்புவிக்கவேண்டுமென்று இம்மாகாணத்திலுள்ள கூட்டுறவுக்காரர்கள் அவ்வப்போது கேட்டுவந்திருக்கிறார்கள். சுகாதார சம்பந்தமான சில வேலைகளைச் சில கூட்டுறவுச் சங்கங்களிடம் முன்னம் பரீட்சார்த்தமாய் ஒப்படைத்த பொழுது, காரியம் மிகவும் திருப்திகரமாகவே நடந்திருக்கிறது. கூட்டுறவுச் சங்கங்களுக்கு இதர வேலைகளைக்கொண்டு வந்து சுமத்திவிடக் கூடாதென்பதில் ஓரளவு உண்மையுண்டென்பதை நாமறிவோம். கூட்டுறவுச் சங்கங்களை பஞ்சாயத்து சபைகளாக்கிவிடக் கூடாதானாலும் பஞ்சாயத்து சபைகளுக்கு கூட்டுறவு சங்கங்களினால் தக்க உதவி கிடைக்குமென்பதில் தடையில்லை, ஆதலின் கூட்டுறவு சங்கங்கள் நடந்து வரும் இடங்களிலே பஞ்சாயத்து சபைகளை யேற்படுத்தினால் அச்சபைகள் நன்கு நடக்கும்.

### மைசூரில் கூட்டுறவு முயற்சி.

மைசூர் சமஸ்தானத்திலுள்ள கூட்டுறவுச் சங்கங்களின் சென்ற 1916-17-ம் வருஷத்திய நிர்வாக ரிபோர்ட் நமக்குக் கிடைத்திருக்கிறது. அதில் உருசிகரமான பல அம்சங்கள் காணப்படுகின்றன. ஒவ்வொரு ஜில்லாவிலும் கூட்டுறவுவேலை எவ்வாறு நடந்திருக்கிற தென்ற விபரங்கள் அந்த ரிபோர்ட்டில் காணப்படுவதுடன், வருங்காலத்திலே எவ்வி தம் வேலை நடக்கப்போகிறதென்ற விவரங்களும் காணப்படுகின்றன.

ரிபோர்ட்டில் காணும்வண்ணம், யுத்தகாரணத்தால், கூட்டுறவுச் சங்கங்களிலே அதிகப்பணம் வட்டிக்கு போட்டு வைக்கப்படவில்லை. நூல், யந்திரங்கள் முதலியன கிடைக்காததனால், தொழில் முறைசம்பந்தமான கூட்டுறவு முயற்சிக்குமிக்க பாதகம் உண்டு. மெம்பர்களுக்கு நாணயங் கொடுத்து உதவும் சங்கங்களைத் தவிர இதர துறைகளிலே கூட்டுறவு முயற்சி அவ்வளவு திருப்திகரமாக இல்லை என்றும், விவசாயத்துறையிலும் தொழில் துறையிலும் கூட்டுறவு முயற்சியைப் பிரபலப்படுத்த இலாகா அதிகாரிகளால் விசேஷப் பிரயத்தனங் காட்டப்படவில்லை யென்றும், சமஸ்தான கவர்ன் மெண்டார் குறிப்பிட்டிருக்கிறார்கள். சங்கங்களிலிருந்து வினியோகஞ் செய்யப்பட்ட கடன்களிலே பெரும் பாகம் சங்க காரியஸ்தர்களுக்கே கிடைத்திருக்கிறதென்றும், குறிப்பிட்டிருக்கிறார்கள். இக்குறையானது அங்கு மட்டும் இல்லை; பிரிட்டிஷ் இந்தியாவிலே எல்லா மாகாணங்களிலும் உளது. இதைக் குறித்து எல்லா அதிகாரிகளும் வருந்துகிறார்கள்.

கூட்டுறவு முயற்சியை பிரபலப்படுத்த அச்சமஸ்தானத்திலே பலர் சம்பளமின்றி கௌரவத்திற்கு வேலை பார்த்துவருதல் விசேஷமாகும். அவ்வாறு வேலை பார்த்தவர்களின் தொகை 45. இப்பொழுதோ 56 ஆகும். மற்றுமொரு விசேஷம் என்னவென்றால், சராசரி இம்மாகாணத்தில் எதைக் காட்டிலும், அச்சமஸ்தானத்தில் அதிகமான சங்கங்கள் இருக்கின்றன; தற்சமயம் 979 சங்கங்கள் உள. அவைகளில் பிரஸ்தாப வருஷத்தில் ஏற்பட்டவை 188 ஆகும். இந்த சென்னை இராஜதானியில் முழுவதிலுமுள்ள சங்கங்கள் 2,216. இவைகளில் பிரஸ்தாப வருஷமே ஏற்பட்டவை 421. நெசவுக்காரர்களின் உண்மையை மதித்து உழைக்கும் சங்கம் இம்மாகாணத்தில் காஞ்சிபுரம் சங்கம் ஒன்றுதான். மைசூரிலோ 23 இருக்கின்றன. தவிர, கீழ்க்கண்ட பலவாறான சங்கங்களும் உள: அரக்கு வேலை செய்யும் தொழிலாளிகளுக்கு ஒரு சங்கம் பட்டு நெசவுத் தொழில் சங்கங்கள் நான்கு; வெல்லம், காய்ச்சுதல், அரிசி குத்தல் ஆகிய சங்கங்கள் 16; பால்பண்ணைச் சங்கம் ஒன்று; சந்தன மரத்தில் சித்திர வேலை செய்வோர்கள் சங்கங்கள் 2, தந்த வேலைக்காரர்கள் சங்கம் ஒன்று. தவிர தையல்காரர்கள், கவர்ன்மெண்ட் சிப்பந்திகள் இவர்களுக்கு பிரத்தியேகமான, சங்கங்களும் இருக்கின்றன. தானியங்களை வாங்கி விற்பதில் உதவி புரிவதற்காக 11 பாங்கிகளும் உள. சங்கங்களில் இன்ஸ்பெக்டர்களாக B. A. பட்டதாரிகளையே நியமிக்க வேண்டுமென்று சமஸ்தான கவர்ன்மெண்டின் விருப்பம். இது மானதேயாம்.



# கூட்டுத் தொழில் முயற்சி. *

(1) ஐக்கிய இயக்கம்—அதின் சாஸ்திரம்.

(2) இந்தியாவில் ஐக்கிய சங்காபிவிருத்தியின் அவசியம்.

(3) இந்திய சங்கங்களின் ஐக்கிய சரித்திரம்.—இனிமேல் செய்ய வேண்டிய முறைகள் :

மேல்நாட்டு சாஸ்திரங்களில் முக்கியமானவைகளில் ஒன்று திரவிய சாஸ்திரம். அந்த சாஸ்திரத்தின் தாற்பரியத்தைப்பற்றியும் ஒழுங்கைப் பற்றியும் பற்பல அபிப்ராயங்களிருப்பினும், அதன் முக்கிய கருத்து என்னவென்றால், எவ்விதமாக ஒரு தேசத்தின்செல்வத்தை அபிவிருத்தி செய்து கூடியவரையில் வறுமையை குறைக்கலாமென்பதே. ஏனெனில் தற்காலம் இங்கிலாந்தில் முதல் மந்திரியாயிருக்கும் லாயிட் ஜார்ஜ் பிரபு சொல்லியபடி ஒரு தேசத்தார்களுடையவோ அல்லது ஒரு ஸமாஜத்தை சேர்ந்தவர்களுடையவோ முன்னேற்றமும் சௌக்கியமும் எப்பொழுது ஏற்படுமென்றால் வறுமையின் கொடுமை குறைந்து செல்வமுள்ளவர்கள் தங்களுடைய வறுமையில் பீடிக்கப்பட்ட சகோதரர்களுக்கு சந்தோஷமாய் சகாயம் செய்கிறார்களோ அப்பொழுதுதான். இப்படியிருக்க திரவியசாஸ்திரமானது சாதாரணமாய் அநேக தேசங்களில் செல்வத்தின் மிகுதி குறைவுகளைப் பற்றியும் அதன் காரணங்களைப் பற்றியும் எடுத்துச் சொல்லுகிறது. அவைகளில் முக்கியமாய் ஐக்கிய இயக்கத்திற்கு சம்பந்தமாயுள்ளது இரண்டு பெரும் விஷயங்கள். அதாவது (1) செல்வம் உற்பத்தியாகும் விதம் (production) (2) திரவியம் பலஜனங்களுக்குள் பரவுதல் (Distribution). முதலில் திரவிய உற்பத்தியைப்பற்றி எடுத்துக்கொள்வோம். திரவியமென்று சொன்னால் வெரும் பணங்காசு மாத்திரமேயல்ல—எல்லாவித விலையுள்ள பொருள்களும் அதிலடங்கியது. உணவுக்கும் உடைக்கும் மற்ற எல்லா அவசியமான சௌக்கியங்களுக்கும் வேண்டியவைகளை உற்பத்தி செய்வதென்றால் திரவிய உற்பத்தியே. திரவிய உற்பத்தி என்பது சாதாரணமாய் உணவுக்கு வேண்டியவைகளில் பெரும்பான்மையான வஸ்துக்களும் கைத்தொழில்களுக்கும் உடைமுதலானவைகளுக்கும் ஆதாரமான பொருள்களெல்லாவற்றையும் உண்டாக்குவது. இவைகள் பூமியிலிருந்து உண்டாக்கவேண்டியதாயிருக்கிறது. பொதுவாய் திரவிய உற்பத்தியை இரண்டாகப் பிரிக்கலாம். (1) விவசாயத்தினால் உற்பத்தியாக்குவது (2) கைத்தொழில்களி

* ஸ்ரீவில்லிபுத்தூர் கான்பரென்ஸில், அக்கிராஸனாதிபதியால், பிரசங்கிக்கப்பட்டது.

னால் உண்டாக்கும் பொருள்கள். முதலில், விவஸாயத்தை எடுத்துக் கொள்வோம், விவஸாயத்திலிருந்து ஏற்படும் பலன்களுக்குமுக்கிய ஆதாரங்கள் நிலமுமதில் உழைப்பவர்களும். ஆகையினால் விவஸாயத்திற்காதாரமான நிலமும் அதில் உழைப்பவர்களும் எவ்வளவுக்கெவ்வளவு நல்ல ஸ்திதியிலிருக்கிறார்களோ அவ்வளவுக் கவ்வளவு விவஸாயத்தின் திரவிய உற்பத்தி. ஆகையால் எங்கெந்த நிலத்திலிருந்து என்னென்ன விதமான விவஸாயத்தை எங்கெந்தகாலத்தில் செய்து ஜாஸ்திபலனை அடையலாமென்பதை ஆராய்ச்சி செய்து தெரிந்துகொள்வதவசியம். முக்கியமாய்த் தெரிந்து கொள்வதற்காதாரம் விவஸாய சாஸ்திரத்தில் ஏற்பட்டிருக்கும் விதிகள். உழைப்பவர்களை எடுத்துக்கொண்டோமானால் அவர்களுடைய உழைப்பினால் ஜாஸ்திபலனை அடைவதற்கு அவர்களுக்கு ஒருவிதமான குறைவுமில்லாமலிருக்கவேண்டியதவசியம். அதாவது அவர்களுக்கு அன்னவஸ்திரத்துக்காவது சாதாரணமான ஜீவனசௌகரியங்களுக்காவது குறைவு இருக்கக்கூடாது. மேலும் அவர்களில் விவஸாய விஷயங்களில் புத்தித்திறமை ஜாஸ்தியாய் ஏற்பட்டவர்களுக்கு அவர்களுடைய மனப்போக்குக்கு அனுசரணையாய் சகாயம் செய்து மென்மேலும் விவஸாய முறையின் அபிவிர்த்தியில் பிரவிர்த்திக்கும்படியாய் செய்யவேண்டியதவசியம். விவஸாயத்தில் முயன்றுவரும் பிரஜைகளில் பெரும்பாலரும் நல்ல தேகஸ்திதியிலிருந்து சாதாரணமாய் ஒருவேளை சாப்பாட்டுக்காவது வழி செய்து கொண்டாலொழிய விவஸாயமானது விருத்தியாய் வருஷத்துக்கு வருஷம் பூமியிலிருந்து விளை பொருள்களினால் கிடைக்கும் திரவியலாபம் வருஷத்திற்கு வருஷம் அதிகரிக்கவழியில்லை. மேற்சொன்ன விஷயங்களுடன் விவஸாயத்தில் கவனிக்கவேண்டிய முக்கியவிஷயம் ஒன்றுண்டு. பூமிசாரமானது சேர்க்கை ஆதாரங்களினாலல்லாது வருஷத்துக்கு வருஷம் குறைந்துகொண்டே வந்து பலனும் குறைவுபடும். ஆகையினாலே ஒவ்வொரு நிலத்திலும் தகுந்த சேர்க்கை ஆதாரம் ஏற்படுத்தி அந்த நிலத்தில் ஜாஸ்தி பலனை கொடுக்கக்கூடிய விளைபொருள் ஏதென்று ஆலோசித்து உண்டாக்கவேண்டியது. தொழிலாளிகளையும் அவர்களுக்கு தகுந்த தொழிலை சேர்ப்பிக்கவேண்டியதுந்தவிர எந்தவிதமான வேலையை எடுத்துக்கொண்டால் அவரவர்கள் ஜாஸ்திபலனை பூமியிலிருந்து அடையலாமோ அதில் அவர்களை பிரவர்த்திக்கச் செய்யவேண்டியது. ஆகையால் விவஸாயம் சம்பந்தப்பட்டமட்டில் பூமியிலிருந்து வருஷத்துக்கு வருஷம் ஏற்படும்பலன் அதிகரிக்கவேண்டியிருக்கும். விவஸாயிகளின் புத்தித்திறமை தேகசௌக்கியம் இவைகள் நல்ல ஸ்திதியிலிருக்க வேண்டியதற்கு சரியான வழிகள் தேடினால்தான் விவஸாயத்திலிருந்து எந்த தேசத்திற்கும் ஜாஸ்தியானதும் நம்பக்கூடியதுமான செல்வம் ஏற்படக்கூடியதாக யிருக்கிறது. இரண்டாவது கைத்தொழிலுக்கு முக்கிய



மாய் வேண்டியவை (1) பூமியிலிருந்தும்விளைவு பெருள்கள் (2) அவை
களை ஜனங்களுடைய உபயோகத்துக்கு பதப்படுத்துவதற்கு வேண்டிய
தொழிலாளிகளும் யந்திரங்களும். நாமுடுத்திக்கொள்ளும் வஸ்திரங்கள்
உணவுக்கு பாத்திரங்கள் இன்னும்நமக்கு அவசியமான அநேகசாமான்
கள், சாதாரணமாக கைத்தொழில்களினாலும் இயந்திரசாலைகளிலும்
கிடைக்கின்றன. மேல் நாடுகளைப்போல இயந்திரசாலைகள்ஜாஸ்தியாயிருந்
தாலும் நம்முடைய தேசத்தைப்போல் கைதொழிகள் யிருந்தாலும்
எவ்வகையான தொழில்களுக்கும் நல்ல தேகஸ்திதியிலுள்ள தொழிலா
ளிகளும் பற்பல தொழில்களை ஒழுங்குபடுத்தி பலன்களை கொடுக்கக்கூடிய
முறைகளைத்தேடி அவைகளை விர்த்திசெய்வதற்கு வேண்டிய திறமை
அமைந்திருக்கும் தொழில் தலைவர்களும் அவசியம். இந்தக் கைத்தொழில்
கள் அபிவிர்த்தியாலும் மற்றப்படி யந்திரசாலைகளில் உண்டாக்கும்
அபிவிர்த்திகளும் காலதேசவர்த்தமானங்களைத்தெரிந்து ஆராய்ச்சியுடன்
ஒழுங்குபடுத்தினாலன்றி அவைகளினால் தேசத்திற்கு திரவிய லாபமும்
அவசியமான சௌகரியங்களும் உண்டாவது கஷ்டம். மேலும் மேற்
சொன்ன விவஸாய அபிவிர்த்திக்கும் விளைவுபொருள்களின் அபிவிர்த்
திக்கும் கைத்தொழில்யந்திரங்கள் இவைகளாலுண்டாகும் சாமான்களின்
அதிகரிப்புக்கும் ஒரு முக்கியமான உதவி மூலதனம், ஆகையினால் மூல
தனத்தின் சகாயமில்லாமலிருக்கும் பக்ஷத்தில் எவ்வளவு உழைத்தபோ
திலும் கைத்தொழில்கள்மூலமாகவாவது விவஸாயத்தினாலாவது தகுந்த
பலனை அடைவது அசாத்தியம். ஆகையால் இயற்கையான பொருள்களைக்
கொண்டு ஒரு தேசத்தில் திரவிய லாபமானது அதிகரிக்க வேண்டு
மானால் சரியானதும் வேண்டுமானதுமான மூலதனமும் உழைப்பும்
முக்கிய ஆதாரங்கள். மூலதனமும் உழைப்பும் ஒன்றுக்கொன்று சகாய
மாயிருந்து உழைப்பாளிகளுக்கு எவ்வித குறைவில்லாமலிருக்கும்படிக்
கும் அவர்களுடைய உழைப்புக்குத் தகுந்த கைம்மாறு உண்டாகும்படிக்
கும் பார்த்துக்கொள்ளவேண்டியது மூலதன உதவிசெய்பவர்களின் கட
மை. உழைப்பவர்கள் தாங்களலியன்றளவு உழைத்து எவ்விதக்குறைவு
மில்லாமல் தனசகாயம் செய்பவர்களுக்கு நஷ்டமுண்டாகாமல் பார்த்துக்
கொள்ளவேண்டியது. அப்படிப்பார்த்துக் கொண்டாற்தான் தனசகாயம்
செய்பவர்களுக்கும் உழைப்பவர்களுக்கும் எக்காலத்திலும் எவ்விதமான
சச்சரவுமேற்படாது.

திரவியசாஸ்திரத்தின் முக்கியமான மற்றொரு பிரிவு திரவியம்
பரவும் வழி, இதிலனேக அம்சங்களடங்கி யிருக்கின்றன. இவைகளில்
நாம் எடுத்துக்கொண்டிருக்கும் விஷயங்களுக்குச் சம்மந்தமானது
வியாபாரம் ஒன்றுதான். வியாபார அபிவிருத்தியின் முறையும் வியாபார
லாபத்தில் யாவர் புகுந்து கொள்ளவேண்டியது மூலதன சகாயஞ் செய்

தவர்கள் நியாயமாம் வட்டிக்கிவ்வளவு எடுத்துக் கொள்ள வேண்டி
தென்றும் உழைத்தவர்களுக்கு நியாயமாய் என்ன பலன் கிடைக்க
வேண்டிய தென்றும் இன்னு மிதைப்போன்ற சில விஷயங்கள் திரவிய
சாஸ்திரங்களில் இந்த தலைப்பின் கீழ் எடுத்துச்சொல்லப்படுகின்றன.

நான் மேலே சொன்ன விஷயங்களை கவனித்தால் திரவிய உற்பத்தி
யிலும் பரவுதலிலும் ஐக்கிய இயக்கத்தின் பெரும் உபயோகம் ஒரு விதம்
உங்கள் மனதில் பட்டிருக்கும். பொதுவாக ஒவ்வொருவன் தானொரு
வனே தனித்து தன்னுடைய தனத்தையும் சக்தியையுங் கொண்டு ஒரு
வேலை செய்வதைக்காட்டிலும் பலர் ஒன்றுகூடி அவர்களுடைய தனம்
திறமை இவைக்கொண்டு ஐக்கியமாய் அதே வேலையைச் செய்யும்
பக்ஷத்தில் எவ்வளவோ ஜாஸ்தியான பலனைக்கொடுக்கும்படியாக
இருக்கும். ஒருவனாலேயே செய்யுமுடியாத காரியத்தையுஞ் செய்து
முடிக்கும்படியாக யேற்படும். ஆகையினாலே மேலேசொன்ன திரவிய
அபிவிர்த்தியின் ஆதாரங்களில் மிகவும் அருமையானது ஐக்கியமாகும்.
மேல் நாடுகளில் ஐக்கிய சங்கங்கள் ஏற்பட்டதற்கு காரணம் முக்கிய
மாய் மூலதனத்திற்கும் உழைப்புக்கு மேற்பட்ட சச்சரவுதான். கைத்
தொழில்களிலும் யந்திர சாலைகளிலும் சம்பந்தப்பட்ட தொழிலாளி
களுக்கு முக்கிய ஆதாரம் அவர்களுக்கு வேண்டிய ஜீவன சௌகரியங்
களுக்கு ஆதாரமான பணம். அது மூலதனம் கொடுத்து சகாயம் செய்
தவர்கள் கையிலிருந்துதான் வரவேண்டியதா யிருந்தது. ஆகையினால்
தொழிலாளிகளின் நிலைமையைத் தெரிந்து கொண்டு அவர்களின் சௌ
கரியத்தை எண்ணாமல் அவர்களை துன்பப்படுத்தி தாங்கள் பெரும்
லாபத்தை அடைந்தபோதிலும் அந்த லாபத்துக்கு முக்கிய காரணமா
யிருந்த தொழிலாளிகளின் சகாயத்தை மறந்து வந்தார்கள். ஆகையினாலே
தொழிலாளிகள் தங்களுடைய சௌகரியத்தையும் லாபத்தையும் மூல
தனத்தையுடையவர்கள் கருதாத வரையில் தாங்களே தங்களுக்கு
வேண்டிய சௌகரியங்களைத் தேடிக்கொண்டு மூலதனத்தைக் கொடுத்து
அதினால் அவர்களுக்கு வேண்டியபடி தொழிலாளிகளை ஆட்டிவைப்பதை
நிறுத்த வேண்டியதென்றும் தீர்மானித்து அதற்கு முக்கிய ஆதாரம்
ஐக்கியத்தினால்தான் ஏற்படக்கூடுமென்று தெரிந்துகொண்டு ஐக்கியத்
தை ஆதாரமாகக்கொண்ட அநேக இயக்கங்கள் ஏற்பட்டன. நாளது
வரைக்கும் அநேகவிதமாய் தொழிலாளிகள் ஒன்று சேர்ந்து மூலதனக்
காரர்கள் மீறி நடந்தபோதெல்லாம் அவர்களை அடக்கியே வந்திருக்கிறார்
கள். மேல் நாடுகளில் தொழிலாளிகள் தங்கள் தேசத்தின் செல்வ அபி
விர்த்திக்கு முக்கியமான காரணமென்று தெரிந்து கொண்டு தங்க
ளுடைய முன்னேற்றத்திற்கு பலவகைகளில் பிரயாசைப்பட்டு இந்த
நூற்றாண்டில் தொழிலாளிகளின் வைபவம் ஜாஸ்தியாய் விளங்கிக்கொண்



டிருக்கிறது. மேலே சொன்ன தொழிலாளிகளின் அநேக பிரயத்தினங்
களில் ஒன்று ஐக்கிய சங்கங்கள் ஏற்படுத்தினது.

எந்த தேசத்திலும் உழைப்பவர்கள் ஒரு பக்கத்திலிருக்க மூலதனத்
தைக் கொடுத்துச் சகாயம் செய்பவர்கள் ஒரு பக்கத்திலிருக்க மூல
தனத்தையும் தொழிலையும் கொண்டு அநேகவிலையாக்கக்கூடிய சாமான்
களை விற்பனைக்கு உண்டாக்குபவர்கள் மற்றொருபக்கமிருக்க ஒருவித
மான செலவில்லாமல் தரகர்கள் வியாபாரிகளையும் சாமான்களை உண்டு
பண்ணுபவர்களையும் ஒன்று சேர்த்து விற்பனை செய்விப்பதைக்
கொண்டு தரகர்கள் ஏராளமான லாபத்தை அடைந்து விடுகிறார்கள்.
இதனுடைய பலன் என்னவென்றால், மூலதனத்தைக் கொடுத்த
வர்களின் ஆசையும் சாமான்கள் உண்டாக்கியவர்களின் ஆசையும்
தரகர்களுடைய ஆசையும் எல்லாம் ஒன்று சேர்ந்து விற்பனைப்
பொருள்களின் விலையை அளவுக்கு மிஞ்சி உயர்த்தி சாதாரண
மாய் ஜீவனத்துக்கு வேண்டிய சாமான்கள் அதிக விலையுள்ளவை
களாய்ப் போய்விடுகின்றன. ஆகையினால் தரகருடைய ராச்சியத்தையும்
முதலாளிகளின் இருமாப்பையும் அதிக வட்டியின் ஆசையும் அழித்தா
லன்றி சாதாரண ஜனங்கள் ஜீவன ஆதாரப் பொருள்களைக்கூட வாங்கு
வது அசாத்தியமென்று தெளிவாய் ஏற்பட்டது. அதன்பேரில் முதலில்
இங்கிலாந்தில் ஏற்பட்ட ஐக்கிய சங்கம் ஜீவனத்துக்கு அவசியமான
பொருள்கள் தொழிலாளிகளுக்கும் சொற்ப அய்வேஜுள்ளவர்களுக்கும்
சகாயமான விலைக்கு வாங்க வேண்டியதற்காக ஒரு விற்பனைச்சாலையாக
ஏற்பட்டது. இந்தமாதிரி முதல் முதல் ஏற்பட்ட சங்கத்திற்கு (ருக்டேல்
சங்கமென்று பெயர்) அதை 1844-ஞூத்தில் 128 மெம்பர்கள் கூடி ஏற்
பட்டது. அவர்களுக்கெல்லாம் தொழிலாளிகள் அவர்கள் வாரத்துக்கு
வாரம் தங்களுக்கு ஏற்பட்ட சம்பளத்திலிருந்து சேர்த்து வைத்திருந்த
சொற்ப திரவியத்தைக்கொண்டு அவசியமான சாமான்களை வாங்கிஒரு விற்
பனைசாலைஏற்படுத்தினார்கள். அது ஆரம்பத்தில் மிகவும்சுருக்கமாயிருந்த
போதிலும் காலக் கிரமத்தில் ஐக்கியத்தின் விசேஷத்தாலும் ஆராய்ச்சி
யாலும் அனுபவத்தாலும் இவ்வகையான ஐக்கிய இயக்கமானது தங்க
ளுடைய முன்னேற்றத்திற்குமுக்கிய உதவியென்று ஏற்பட்டதினால் 128
மெம்பர்களால் ஆரம்பித்த சங்கமானது 1897-ல் 12,775 மெம்பர்கள்
அடங்கி யிருந்தது. இதற்குள் இங்கிலாந்திலும் இதர மேல் நாடுகளிலும்
ஐக்கிய இயக்க சம்பந்தமான அநேக முயற்சிகள் செய்யப்பட்டு வேறு
வகையான பல சங்கங்கள் ஏற்பட்டு விட்டன. இவைகளெல்லாம் மேலே
சொன்னபடி பொருள் உற்பத்தியிலும் பரவச்செய்தலிலும் வேண்டிய
சகாயங்கள் செய்துவந்தன.

ஐக்கிய இயக்கத்தினால் உண்டான நன்மைகள் என்னவென்றால்: (1) ஐக்கிய சங்கத்தில் சேர்ந்த ஒவ்வொருவர்களும் லாபத்தை பங்கிட்டுக் கொள்வது (2) தரகனுடைய ராஜ்ஜியத்தையும் கொடுமையும் குறைப்பது (3) எளியவர்களுக்கு மத்திய செல்வமுடையவர்களுக்கும் ஜீவனத்திற்கும் சாதாரண சௌக்கியத்திற்கும் வேண்டிய பொருள்களை கூடிய வரையில் குறைந்த விலைக்கு அடைவது.

மேலை நாடுகளில் திரவிய உற்பத்தியிலும் பரவுதலிலும் ஐக்கியத்தை ஆதாரமாகக்கொண்ட அநேக சங்கங்கள் ஏற்பட்டிருந்த போதிலும் திரவிய உற்பத்தி சம்பந்தமான சங்கங்கள் முன்னேற்றமடைய வழியில்லாமல் மலினமடைந்து வருவதாய்த் தெரிகிறது. மேல் நாட்டில் முக்கியமாய் அடியிற்கண்ட விஷயங்களுக்கு ஐக்கிய சங்கங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

1. உணவு, உடை, மற்ற, ஜீவனத்திற்கு வேண்டியவும் சாதாரண சௌக்கியத்திற்கு வேண்டிய பொருள்கள் விற்றல். 2. விவசாயிகளுக்கும் நகரவாசிகளுக்கும் மற்றவர்களுக்காகவும் திரவிய சகாயம் செய்தல், 3: கட்டடங்களை சௌகரியமானதும் தேகசௌக்கியத்திற்கு ஆதாரமானதுமான இடங்களில் கட்டுவதற்கு சகாயம் செய்தல். 4. லைப் இன்ஷியூரன்ஸ்—மரணகாலத்திலுதவி செய்தல்.

ஜர்மானியர் தேசத்தில் ஜனத்தொகுதியில் சமபாகம் ஐக்கிய சங்கங்களில் சேர்ந்திருக்கிறார்கள். இப்படியே இன்னும் மேல் நாடுகளில் ஐக்கிய இயக்கமானது மேன்மேலும் விருத்தியடைந்தே வந்திருக்கிறது. ஜர்மானியர் தேசத்தில் விலை குறைந்ததும் எளியவர்களும் வாங்கக்கூடிய சாமான்களை ஏராளமாய் உண்டாக்கி வந்ததில் முக்கிய ஆதாரமாக இருந்தவைகள் ஐக்கிய சங்கங்களே.

நான் இரண்டாவதாக எடுத்துக்கொண்ட தலைப்பு இந்தியாவில் ஐக்கிய சங்காபிவிர்த்தியின் அவசியம். சாதாரணமாய் 19-வது நூற்றாண்டுக்குமுன் இந்தியாவின் பிரஜைகள் நூற்றுக்கு 50 அல்லது 60 பேர்கள் தங்கள் ஜீவனோபாயத்திற்குதான் விவசாயத்தைச் சார்ந்திருந்தார்கள். 19-வது நூற்றாண்டின் ஆரம்பத்திற்குப்பின் பலவேறு காரணங்களினால் கைத்தொழில்களை மலினமடைந்து நூற்றுக்கு 80 அல்லது 90 பேர்கள் விவசாயத்தையே சார்ந்து இருந்து வருகிறார்கள். ஆயினும் உபயோகத்திலும் நாகரீகத்திலும் ஒப்பு உயர்வில்லாதிருந்து வந்த நம்தேசக் கைத்தொழில்களாலுண்டான சாமான்கள் நூற்றாண்டு கணக்காக இதர தேசங்களுக்கு அனுப்பப்பட்டு நம்தேசத்திற்கு திரவியமும் அதற்கு மேலான கீர்த்தியும் அதிகரித்துக்கொண்டு வந்தன. ஆனால் நம்முடைய துரதிர்ஷ்டத்தாலும், ஈஸ்வர கிருபை குறைவினாலும், நம்



முடையமுன்னேற்றத்தை அவமதித்ததாலும், நம் தேசத்திலிருந்த அபூர்வமான கைத்தொழில்களும், திறமைவாய்ந்த கைத்தொழிலாளிகளும் க்ஷீணமடைந்து இந்த தேசத்திலும் கைத்தொழில்களில் தேர்ச்சி இருந்ததா என்று பலரும் சந்தேகிக்க வேண்டிய ஸ்திதியில் இருக்கின்றன. இந்த க்ஷீணஸ்திதிக்கு காரணங்கள் பலவேறு வகையாய் இம்முறையில் ஆராய்ச்சி செய்திருக்கும் மேல் நாட்டார்களும் நம் நாட்டாரும் எடுத்து விளக்கியிருக்கிறார்கள். ஆனால் கொட்டிப்போன பாலைப்பற்றி துக்கிப்பதிலும் நம்நாட்டின் முன்னேற்றக் குறைவைப்பற்றி விசாரசிந்தையோடு கூடியிருப்பதிலும் காலத்தைப் போக்குவதைக் காட்டிலும் மடமை எதுவும் கிடையாது.

எளியவர்களுக்கும் நடு நிலைமையிலிருப்பவர்களிக்கும் சௌக்கியமும் முன்னேற்றமும் ஏற்பட்டுவிடும் பக்ஷத்தில் தேசமே முன்னுக்கு வந்ததாக வைத்துக்கொள்ளலாம். மேலே விவரித்தபடி நம் தேசத்தில் திரவியலாபமுண்டாய் வருமை குறைவதற்கு உபாயங்கள் என்னவென்று தேடினால் பொருள் உற்பத்தியிலும், அதைப் பரவச் செய்வதிலும் தேர்ச்சி அடைந்திருப்பதே. திரவிய உற்பத்தியை எடுத்துக்கொண்டோமானால் நமக்குச் சாதாரணமாய் ஜீவன சௌக்கியங்களுக்கு அந்தியாவசியமானவை பொருள்கள் மிகவும் குறைவானவை. தொன்றுதொட்டு வந்த ஆசாரங்களின்படிக்கும் யோக்கியதைக்கும் நம் தேசத்தின் சீதோஷ்ணஸ்திதியை உத்தேசித்தும் நமக்குத்தேவையான பொருள்கள் மிகவும்சுருக்கம்.

இப்படியெல்லாம் அநேகவிதமான காரணங்களினால் நம்தேசத்தில் ஐக்கிய இயக்கங்களின் தொகுதியும் பலனும் அதிகரிப்பதற்குத் தகுந்த முகாந்தரங்களிருக்கின்றன.

ஆகையால் அவைகளுக்கு குறைவில்லாமல் வைத்துக்கொள்ள வேண்டியது அவசியம். மேலே சொன்னபடி நம் தேசத்தில் பெரும்பாலரும் விவசாயத்தைச் சார்ந்திருப்பதால் விவசாயத்தின் முன்னேற்றத்தை நாம் முக்கியமாய் கவனிக்கவேண்டியது அவசியம். விவசாய முன்னேற்றத்திற்கு வேண்டிய ஆதாரங்கள் மூன்று—(1) பூமி அல்லது நிலம், (2) உழைப்பு, (3) மூலதனம். பூமி ஸாரத்தை அபிவிர்த்தி செய்வதற்கும், அதினின்றும் விளைபொருள்கள் வருஷத்திற்குவருஷம் அதிகரிக்கவும் முயலுவதற்கு திறமை வாய்ந்த உழைப்பும் மூலதனமும் வேண்டியவைகள். நம் தேசத்தில் அனேக நூற்றாண்டுகளாக தொன்று தொட்டு வரும் விவசாய முறைகளை கொஞ்சமேனும் அவசியத்திற்குத் தக்கபடி மாற்றாமல் நஷ்டத்தை தாமாகவே தேடி பிறகு தங்கள் விதியை நிந்தித்துக் கொள்ளுகிறார்கள். இது பிசகு, விவசாயத்திற்கு ஆதியில் ஏராளமான விஸ்தீரணமுள்ள பூமி இருந்ததுடன் பூபாரமே அதிகரித்திருந்ததில் விவசா

யம் பரவச்செய்து விளைபொருள்களை ஏராளமாய் விவசாயிகள் உண்டாக்கி வந்தார்கள். ஆனால் காலக்கிரமத்தில் உழுவதிலும், உரம் ஏற்றிவைப்பதிலும், இன்னும் இதுவிதமான அனுகூலங்களிலும் யாதொரு தேர்ச்சியுமில்லாததால் இயற்கை பூமியானது தன் சாரத்தை இழந்து செயற்கை சாரம் அறியாமல் வருஷத்திற்கு வருஷம் அதிகரிக்காமல் குன்றி வந்து கொண்டிருக்கிறது.

மேலும் பழையபடி விவசாயத்திற்குக்கூட அனேகமாய் விவசாயிகளுக்கு செலவிடத் திரவியமில்லை. கடன் வாங்கிச்செய்தால் விளைபொருள்கள் கடைசியாய் கடன் கொடுத்தவன் பங்காய் விடுகிறது, அதர்மமான வட்டிக்கே விவசாயிகள் கடன் வாங்கவேண்டியிருக்கிறது. அதன் பலன் விவசாயிகளின் வறுமையும் நிற்கதியுமல்லாது வேறில்லை. திரவியம் ஆர்ஜிப்பதிலும் செலவிலும் தர்மமே ஸத்தான முறையைக் கைக்கொள்வது நமது கடமை என்று நம் சாஸ்திரங்கள் முறையிட்டும் நம் நாட்டில் வழங்கிவரும் அதர்ம வட்டியானது மன்னைக் கலக்கக் கூடியதாயிருக்கிறது.

மேலும் மேல் நாட்டின் நாகரீகத்திலும், மேல் நாட்டார் குணவிசேஷங்களிலும் உள்ள நல்ல பாகங்களை நாம் உட்கொள்ளாமல் நமக்கு கேடு விளைவிக்கக்கூடிய அனேக விஷயங்களை கற்றுக்கொண்டிருக்கிறோம். அதனால் பெரும்போக நுகர்ச்சிக்கு வேண்டிய பொருள்களை நாடி அபரிமிதமான திரவியத்தை அவைகளில் செலவிட்டு அநேகர் தங்களுக்கும் தேசத்திற்கும் தீங்கு விளைவித்திருக்கிறார்கள். கிராமவாஸம் என்பதை அவமதித்தும் கிராம விவசாயத்தை கவனிப்பதும் அதை மேன் மேலும் விர்த்திசெய்யவேணுமென்ற விருப்பம் மிகவும் தாழ்வு என்று எண்ணியும் ஜாஸ்தி பூஸ்திதியுள்ளவர்கள் கூட அவைகளை தங்கள் பிரதிநிதிகளிடம் விட்டு விட்டு விவசாயம் எப்படிப் போனாலும் தாங்கள் பட்டணவாஸிகளாயிருந்து சுகானுபவம் செய்வதற்கு பணக்குறைவில்லாமல் இருக்கவேண்டுமென்பதே அவர்கள் முக்கிய கருத்தாய்விட்டது. இப்படி சிறு விவசாயிகளுக்கு மூலபலமாக இருந்து அவர்களுக்கு எல்லாவிதமான சகாயங்களும் செய்துவந்த பெருங்குடித்தனர்களான கிராமவாசிகள் நகரங்களை நாடிச்சென்று தம்மால் பிழைத்து வந்த சிறு விவசாயிகளையும் விவசாயத்தையும் தங்களுடைய சம்பள ஆட்களிடம் ஒப்புவித்திருப்பதால் சிறு விவசாயிகள் க்ஷீணதிசையடைந்து வருகிறார்கள்.

ஏராளமான பூஸ்திதியுள்ளவர்கள் கூட வெளியில் வக்கீல் தொழிலிலும் சர்க்கார் உத்தியோகத்திலும் ஏழைகளுடன் தாங்களும் முன்னுக்குவர முயலுகிறார்கள். இப்படி முயலுவதினால் அனேக அநியாயங்கள் ஏற்படுகின்றன. ஆனால் இவைகளையெல்லாம் சீர்திருத்தம் செய்வது மிகவும் கடினமான விஷயம். சிறு விவசாயிகள் தங்கள் முன்னேற்றத்திற்கு



மல் சொன்னவர்களை நம்பியிருந்தால் பிரயோஜனமில்லை. தங்களுக்குள் ஐக்கியத்தை அதிகரித்துக்கொண்டு தங்களுடைய சேர்க்கையினால் உண்டாகும் பலத்தை சார்ந்து முன்னேற்றத்தை நாடவேண்டும். அதற்கு மூலாதாரம் ஐக்கிய சங்கங்கள் பூசாரத்தை விர்த்திசெய்வதற்கும் விவசாயத்திற்கு விவசாயிகளுக்கும் பொருளுதவி புரியவும், அவர்களுடைய உழைப்பு தகுந்த பலன் கொடுக்கும்படி செய்யவும் மற்றப்படி அவர்களுக்கு பொதுநன்மையுண்டாக்கவும் ஐக்கிய சங்கங்கள் தான் உழைக்க வேண்டும். மேற்சொன்னபடியே கைத்தொழில்களிலும் கைத்தொழில்களுக்கு முக்கியமாய் திரவியமும், திறமை வாய்ந்த உழைப்பும் நம்முடையதேசத்தில் இப்போது குறைவுகிடையாது. ஆனால் உண்மையான தேசாபிமானக் குறைவினாலும் தொழில் கிரமத்தினாலும் தொழிலாளிகள் வகையையும் ஒழுங்கு படுத்தி ஊக்கத்துடன் இடைவிடாமல் அவைகளின் முன்னேற்றத்தை இதுவரையில் கவனியாதிருந்தமையால் எல்லாம் சின்னாபின்னமாய் வழிபாடு இல்லாமல் இருக்கின்றன. ஜாதிவகுப்பின் வரையறுப்பை உத்தேசித்து கைத்தொழில்களை சிலர்களே விடாமல் பரம்பரையாய் செய்துவந்தமையாலும் தொழிலாளிகளின் திறமை குறையவில்லை. கைத்தொழில்களில் நம் தேசத்தாருக்கு நிகரேயில்லையென்று சொல்லவேண்டும். ஆனால் இன்னும் சில விஷயங்களில் நாம் ஒன்றையும் ஜாஸ்தி கவனிக்காமல் இருந்துவிடுவோமாகில் வரவர இந்தத் திறமையும் மலினமடைந்து அனேகவிதமான கஷ்ட நஷ்டங்கள் ஏற்படும். எளியவர்கள் ஜாஸ்தியாயிருக்கும் நம் தேசத்தில் கைத்தொழில்களினால் வீடுகளிலும், சிறு சாலைகளிலும், உண்டாக்கக்கூடிய சாமான்களே போதுமானவை. கைத்தொழில்கள் விருத்தியாய் அதினால் தேசத்திற்கும் ஜனங்களுக்கும் நன்மையுண்டாக வேண்டுமானால் சிற்சில சீர்திருத்தங்களமைந்தனைகத்தொழில்களுக்கு வேண்டிய யந்திரங்கள் செய்வித்து தொழிலாளிகளைக் கூட்டி பொருளுதவி மார்க்கம் செய்து ஒழுங்குபடுத்துவது அவசியமாக இருக்கிறது, இதற்கும் ஐக்கிய சங்கங்கள்தான் முக்கிய ஆதாரம். சிறு விவசாயிகளையும், விவசாயத்தையும் கைத்தொழில்களையும் தொழிலாளிகளையும் படிப்படியாய் முன்னேற்றுவதற்கு ஐக்கிய இயக்கத்தைத் தவிர வேறே ஆதாரமொன்றும் இல்லையென்றே சொல்லிவிடலாம்.

ஐக்கிய இயக்கத்தின் முன்னேற்றமானது லாபத்தைச் சார்ந்து நின்றால் ஏற்படாது. சுயநன்மை கருதாத தேசாபிமானிகளின் உழைப்பு முதலிலிருந்தால்தான் ஐக்கிய சங்கங்கள் முன்னேற்றத்தை யடையும்.

---

# கிராமச் சங்கங்களுக்கு கடன் கொடுக்கும் பாங்கி.

[வடமலைபுரம் மா ள-ஸ்ரீ, R.ஆனந்தராவ் அவர்களால்.]

1918-ம் ௵ பிப்பரவரி௴ வெளியான நமது வர்த்தமானியில் காஞ்சீபுரம்,ம-ா-ா-ஸ்ரீ.பி. இராமச்சந்திர சாஸ்திரியாரவர்கள் எழுதிய நிரூபத்தில் செங்கற்பட்டு ஜில்லாவில் கூட்டுறவு இலாகா அதிகாரிகள் என்ன செய்கிறார்களென்பதை இரண்டொரு உதாரணங்களால் வெளிப்படுத்தியிருப்பதில் அம்மாதிரி உதாரணங்கள் மற்ற இடங்களிலிருப்பதை நமது ஐக்கியஸ்தர்கள் தெரிந்துகொள்வதற்காக மதுரை இராமநாதபுரம் ஜில்லாவில் நடக்கும் சில உதாரணங்களை இதனடியிற் சொல்லப்பட்டிருக்கிறது.

கிராமச் சங்கங்களுக்கு கடன் கொடுப்பதற்காக ஏற்பட்ட பாங்குகளில் மதுரை இராமநாதபுரம் சென்ட்ரல் கோவாபரேடிவ் பாங்குதான் சங்கங்களை மெம்பர்களாகச் சேர்த்துக்கொள்வதில் முதல் முதலில் அனுஷ்டித்தது. அக்காலத்தில் பாங்கின் அமைப்பு யாவராலும் மெச்சப்பட்டது. இன்னும் அக்காலத்தில் ஏற்பட்டிருந்த பாங்கியின் முக்கிய அம்சமென்ன வென்றால்: அப்பொழுதிருந்த சென்ட்ரல் பாங்குகளைப் போலல்லாமல் வருஷத்திற்கு ஒரு தபா கடன்களுக்கு வட்டி வசூல் செய்வதும் ஷை வட்டியானது 100-க்கு ௵ 1-க்கு 7-வீதம் ஏற்படுத்திக்கொண்டதும் டைரக்டர்களில் 4 ஸ்தானம் கிராமச் சங்கங்களின் பிரதிநிதிகளுக்கு கொடுப்பதுமான இந்த 4 அம்சங்கள் முக்கியமாய் கருதப்பட்டது. இப்பால் இந்த 4 அம்சங்களில் சிலது மாறி நிற்கிறது. ஏழுவட்டியாயிருந்ததை $7\frac{1}{2}$ வட்டியாக உயர்த்திவிட்டார்கள். ஷை $\frac{1}{2}$ வீதம் வட்டி உயர்த்தும் காலத்தில் ஷை ஜாஸ்தி வீதமானது சூபர்வைவிங்பண்டுக்கு உயர்த்துவதாய் சங்கங்களுக்கு சொல்லப்பட்டது. இது விஷயத்தை அப்போதிய ரிஜிஸ்ட்ரார் ம-ா-ா-ஸ்ரீ, திவான் பஹதூர், L. D. சுவாமிக்கண்ணு பிள்ளை யவர்கள் கவர்ன்மெண்டாருக்கு எழுதிய 1911-12-ம் ௵த்து ரிப்போர்ட்டின் 6-வது பக்கம் 16-வது பாராவில் இதனடியிற் கண்டபடி துலக்கி யிருக்கிறார்.

"இந்த (மதுரை இராமநாதபுரம் சென்ட்ரல் கோவாபரேடிவ் பாங்கி) பாங்கு இதர சங்கங்களுக்கு கடன் கொடுப்பதில் விதிக்கும் 100-க்கு $7\frac{1}{2}$ வீதம் வட்டியில் 100-க்கு $\frac{1}{2}$ வீதம் பிரத்தியேகமாய் இன்ஸ்பெக்டர்களையும் சூபர்வைஸர்களையும் நியமகம் செய்வதற்காக பண்டாய் சேர்த்து வைப்பதற்கு சம்மதித்திருக்கிறது."

அப்பால் டிபார்ட்மெண்ட் உத்தியோகஸ்தர்களே கூடியிருந்து ஷை $\frac{1}{2}$ வீதம் போக இன்னும் ஜாஸ்தியாய் $\frac{1}{2}$ வீதம் சூபர்வைவிங் பண்டு வசூல்



செய்ய பாங்கு பைலாவில் அதிகாரம் கொடுத்திருக்கிறார்கள். அது விஷயமான பைலாவில் அடியிற்கண்டபடி யிருக்கிறது.—

25-வது பைலா (பாங்கிலிருந்து கொடுக்கப்பட்ட தர்ஜம்படி) இந்த பாங்கில்பங்கு எடுத்துக்கொண்டிருக்கும் சங்கங்களை பரிசோதனை செய்யவும் மேற்படி சங்கங்கள் மேல் விசாரணைக்காகத் தகுந்த ஏற்பாடு செய்யவும் அதிகாரமுண்டு. அப்படி சோதனை செய்வதற்காக ஒவ்வொரு சங்கங்களிலிருந்து அந்தந்த வருஷம் ஜூன்௴ 30-ந்தேதியில் அந்தந்த சங்கம் வாங்கியிருக்கும் கடன்தொகை ரூபாயில் ஒவ்வொரு நூற்றுக்கும் 8 அணா வீதமும் [8-அணா வீதமாவது அல்லது யேதேனும் குறைந்த தொகையாவது] வசூல்செய்ய இந்த பாங்காருக்கு அதிகாரமுண்டு. இந்த பைலாவில் கடன் தொகை என்பதென்றால், 1. சென்ட்ரல் பாங்கியிலிருக்கும் தொகையும் 2. இதரரிடத்தில் வாங்கப்பட்ட டிபாஸிட்டுக் கடன்களும் சேர்ந்தது. ஆனால் பங்குத் தொகைகளும் க்ஷேமநிதித் தொகையும் இதிலிருந்துவாங்கியிருக்கிறது.

(குறிப்பு) பிராக்கிட்டிலுள்ளது இப்பொழுது இங்கிலீஷ் பைலாவை அனுசரித்து சேர்த்தது. மற்றப்படி பாங்கில் சப்ளை செய்தபடி எழுதியிருக்கிறது. ஆனால் சரியானபடி தர்ஜமாக செய்யப்படாததைப் பற்றி விசனிக்கவேண்டியதா யிருக்கிறது.

பைலா நே. 28. நிர்வாக சபையாருக்கு அடியில்கண்ட விஷயங்களை கவனிப்பதற்கு பூரா அதிகாரமுண்டு.—

* * * *

b. மகா சபையின் தீர்மானத்தின்படி இன்ஸ்பெக்ஷன் செய்கிற சிப்பந்தியின் செலவுக்காக தொகை வசூல் செய்வது.

ஏற்கனவே சூபர்விஷனுக்காக பண்டு ஏற்படுத்தியிருந்தும் இந்த 2 விதிகளை யேற்படுத்தவேண்டிய அவசியத்தை இப்பொழுது கவனிப்பது உசிதமல்ல. சங்கங்களே அதைப்பற்றி யோஜித்துக்கொள்ளட்டும்! தற்சமயம் ஏற்படுத்திக்கொண்ட புது விதிகளை எப்படி டிபார்ட்மெண்டாரும் பாங்காரும் கவனிக்கிறார்களென்பதையும் அவர்களுடைய மனப்பாங்கு எவ்விதமிருக்கிறதென்பதையுமாத்திரம் ஐக்கியஸ்தர்கள் தெரிந்து கொண்டால் போதுமானது. இந்த 2 விதிகளின் கருத்து ஒருவிதமிருக்க நடவடிக்கை வேறு விதமாயிருந்துவருவதை எவ்விதமாய் கவனிக்கப்பட்டு வருகிறதென்பதை யோஜிப்போம். சங்கங்கள் சூபர்வைஸிங் பண்டுக்கு தொகை கொடுக்கக் கடமைப்பட்டதுதான். ஆனால் அப்படி வசூல் செய்வதற்காக பாங்கில் ஏற்படுத்தியிருக்கும் விதிப்படி நடக்கவேண்டிய தவசியமென்பதையுமாக்கக் கூடாது,பாங்கு விதிகளின்படி அதாவது 28-ம் கிளாஸின்படி மகாசபைகூட்டி மகாசபை தீர்மானத்தின்படி ஒரு தொகையை குறிப்பிட்டு அதின்படி வசூல் செய்வதில் 25-வது விதியை கவனிப்பதில் பாங்கார் கவனம் செலுத்துவதில்லை. அந்தப்

படி பாங்கார் நடத்தவில்லை என்று டிபார்ட்மெண்ட் அதிகாரிகள் நோட்டீசுக்குக் கொண்டுவந்தால் அது ஒரு பிரயோஜனத்தையும் அடைகிறதில்லை. இந்த 2 ஜில்லாவில் சூபர்வைஸர்கள் 1917-ம் வருஷ பிப்பரவரிமாதந்தான் சங்கங்களின் மேற்பார்வையை யேற்றுக் கொண்டார்கள். டிபார்ட்மெண்டாரோ 1915-16-ம் வருஷத்து ஆடிட் உத்தரவிலேயே 30-6.-16-லிருக்கும் தொகையின் பேரில் 100க்கு 8-அணா வீதம் பாங்கில் செலுத்திவிடும்படி உத்தரவு அனுப்பிவிட்டார்கள். இந்த உத்தரவின் ஆதரவைவைத்து பாங்காரும் தங்கள் சூபர்வைஸர்களைக்கொண்டு வசூல் செய்கிறார்கள். ஐக்யமுறைமைய சரியாய் சங்கங்கள் கவனிக்கச் செய்ய வேண்டியதற்காக ஏற்பட்ட சூபர்வைஸர்கள், பாங்கின் விதிப்படிநடக்கவேண்டுமென்று பாங்காருக்கு எடுத்துச்சொல்ல வேண்டியது போய் பாங்கிக்கு கீழ்ட்பட்டவர்களென்ற ஆதாரத்தைக் கொண்டு பாங்கார் எண்ணத்தை நிறைவேற்றப் பார்க்கிறார்கள். சிலசங்கங்கள் மாத்திரம் பாங்கு தங்கள் பைலாப்படி நடக்கவேண்டுமென்று வற்புறுத்துகையில் சங்கங்களின் பேரில் பாங்காருக்கும் டிபார்ட் மெண்டாருக்கும் த்வேஷம் ஏற்படுகிறது. பாங்காருக்கு தங்களுக்கு வரும் தொகை குறைந்து விடுமென்ற பயம் ஏற்படுகிறது. பாங்கு விதிப்படி 30-6-16-லிருந்து தொகையின்பேரில் கணக்கு யேற்படுவதற்கு மகா சபை கூட்டி தொகை நிச்சயம் செய்தால் ஷை வருஷத்துக்கு 8-அணாவுக்கு பதிலாய் 2-முதல் 4-அணாவுக்குள் வசூல் செய்தால் போதுமென்று ஏறபடும். அதினால் பாங்கார் தங்கள் பைலாப்படி நடக்க சம்மதிக்காமல் டிபார்ட் மெண்டார் சொற்படி நடக்கிறோமென்று டிபார்ட்மெண்டாரை கைகாட்டி விடுகிறார்கள். டிபார்ட்மெண்டாரோ முதலில் தாங்கள் செய்த உத்தரவை ஊர்ஜிதப்படுத்த முயலுவதாய் தெரிகிறது. பாங்காரை சங்கங்கள் விதிப்படி நடக்கும்படி ஆலோசனை சொல்லுவதில் டிபார்ட் மெண்டாருக்கு என்ன ஆக்ஷேபனை இருக்கிறதோ தெரியவில்லை. சிலசங்கங்கள் தங்கள் பொறுப்பை உணர்ந்து பாங்கின் விதிப்படி நடக்கவேண்டுமென்று வற்புறுத்துவதில், இரண்டு இடத்திலும் பொல்லாப்பு ஏற்பட்டு இரண்டு பேர்களுடைய கோபத்திற்குள்ளாய் கஷ்டப்படுகின்றன. இதினால் பாங்காரும் டிபார்ட் மெண்டாரும் விதிப்படி நடக்கவேண்டுமென்றும் நடக்கச் செய்ய வேண்டுமென்றும் எண்ணமற்போனதும் சங்கங்களின் கஷ்டகாலமே. பாங்காரும்டி. பார்ட்மெண்டாரும் பாங்கின் 25, 28-வது விதிகளை இப்பொழுது இருக்கிற மாதிரியாய் உபயோகிக்க வேண்டுமானால் இதனடியிற் கண்ட யோசனையை கைக்கொளளவேண்டும்: ஒவ்வொரு ஜூன்மீ கடைசியிலும் பாங்கார் தங்கள் பட்ஜெட்டை தயார் செய்வதற்காக ஒரு ஸ்பெஷல் மகா சபை கூட்டவேண்டும். ஷை மகா சபையில் முந்தின ஜூன்மீ 30-லிருக்கும் தொகை



யின் பேரில்தங்களுக்கு நடப்புவருஷத்திற்காக யேற்படும் செலவை திட்டப்படுத்தி ஷை செலவு தொகையின்பேரில் ரேட் ஏற்படுத்தி ஷை ரேட்டை டிபார்ட் மெண்டாருக்கு ஆகஸ்டுமீ முதல் வாரத்துக்குள் அனுப்பிவிடவேண்டும். டிபார்ட் மெண்டார் ஷை ரேட்ப்படி தொகையை நிர்ணயித்து தங்கள் ஆடிட் ஆர்டரில் துலக்கியனுப்ப வேண்டும். இந்த முறையை கையாடுவதில் பாங்காருக்கும் டிபார்ட்டு மெண்டாருக்கும் யாதொரு கஷ்டமுமில்லை. சங்கங்களுக்கும் திருப்திகரமா யிருக்கும். 30-6-16-லிருக்கும்தொகையின் பேரில் ஏற்படுத்தியவரியின் விஷயம் இப்படியிருக்க, 30-6-17-லிருக்கும் தொகையின்பேரில் ஏற்படுத்தியிருப்பது நேராய் இன்னும் ஜாஸ்தி யோசனையை கொடுக்கிறது. 30-6-17-லிருக்கும் தொகையின்பேரில் 8-அணா விதம் ஏற்படுத்தவேண்டியதாய் விதியிருக்க, 30-6-16முதல் 30-6-17-முடிய நடத்தியிருக்கும் விவகாரத்தின் பேரில் ஏற்படுத்தி இருக்கிறது. இது இப்போது ஊர்ஜிதத்திலிருக்கும் விதிக்கும் விரோதமே. இதிலும் பாங்கியாரும் டிபார்ட் மெண்டாரும் செய்த செய்கையை சங்கங்கள் கஷ்டமென்று உணருகிறார்கள். உணர்ந்து என்ன செய்யும்? சங்கங்கள் பாங்காருக்கு கடன்காரர்களாயும் டிபார்ட் மெண்டுக்கு கீழ்பட்டவர்களாயு மிருப்பதால் சங்கங்களில் முறைப்பாடுகள் கவனிக்கப்படுவதில்லை. வருஷ முழுவதிலும் நடக்கும் விவகாரத்தின் பேரில் 8-அணா வரி ஏற்படுத்துவது விரும்பத்தகாது தான். அது தான் சரியானது. இந்த ஏற்பட்டை அமுலுக்குக்கொண்டுவர வேண்டுமென்று நினைக்கும் டிபார்ட் மெண்டார் பாங்கின் 25-வது விதியை மாற்றிக் கொள்ளும்படிக்கு பாங்காருக்கு யோசனை சொல்லவேண்டும். அவ்விதம் ஏற்படுத்திக் கொள்ளவேண்டியது அவசியம். இவ்விஷயம் டிபார்ட்மெண்டு அதிகாரிகள் கூடியகான்பரன்ஸில் தீர்மானிக்கப் பட்டதாய் தெரிகிறது. அந்த தீர்மானம் சங்கங்களுக்கு சர்க்குலர் ரூபமாய் தெரியப்படுத்தி யிருந்தால் நிரம்பவு மேன்மையா யிருந்திருக்கும். அவ்வித மில்லாமல் அடிட் ஆர்டரில் குறிப்பிட்டு உத்தரவு அனுப்பிவிடுவது அந்த உத்தரவின் ஆதரவை வைத்துக்கொண்டு பாங்கில் வசூல் செய்வதை யோசித்தால் சங்கங்கள் முற்றிலும் டிபார்ட்மெண்டாருக்கும் பாங்காருக்கும் கீழ்ப்பட்டு விட்டதாக நினைக்க வேண்டியதாயிருக்கிறது. இம்மாதிரி டிபார்ட் மெண்டு கான்பரன்ஸில் சங்கங்கள் பிரதிநிதிகளாக யிருந்தால் சௌகரியமா யிருக்கும்.

டிபார்ட் மெண்டு விஷயம் இப்படி யிருக்க பாங்கார் என்ன கொள்கையை அனுசரித்திருக்கிறார்களென்பதை கவனிப்போம். பாங்கார் தங்கள் விதியின்படி நடக்கவேண்டு மென்பதை மறந்து போவதுடன் விதிப்படிநடக்கும்படி கட்டாயப்படுத்துகிற சங்கங்களின்விஷயமாய் அநுவசியமாயும், விரும்பத்தகாததுமான நடவடிக்கைகள் ஏற்படுவதை நோக்க

எந்த ஐக்கியஸ்தரும் வருத்தப்படாமலிருக்க (சங்கங்களின் கடனை முன் னோட்டியில்லாமல் முடிவுகட்டி தொகையை பூராவும் ஏககாலத்தில் வசூல் செய்ய த்தனிப்பது வருஷத்துக்கு ஒருதபா வட்டி வசூல்செய்ய வேணு மென்று விருக்கும் ஏற்பாட்டை மறந்து 6-மீ த்துக்கு ஒருதபா செலுத் தும்படி கட்டாயப் படுத்துவது டைரக்ட்டர்கள் மீட்டிங்கில் விஷயங்களை கவனிக்கும்படி நேரிட்டால் கவனிப்பதில் சிரமம் எடுத்துக்கொள்ள அலக்ஷியம் செய்து இஷ்ட மிருந்தால் எழுதின் வரிகள் மதுரையில் வந்து டைரக்ட்டர்களைக் கீண்டு கொள்ள வேணுமென்று (சமன)எழுது தல் மகா சபையில் கேள்விகேட்டால் சொல்ல மறுதளிப்பது,மகா சபை கூட்டும்படி கேட்டால் கூடுவதில் பிரியமில்லாம விருத்தல், சங்கத்து பஞ்சாயத்தார்களை இகழ்ந்து யெழுதுதல் இப்பேர்பட்ட சங்கங்களின் பிரதிநிதிகளை குறித்து அனாவசியமாய் குறைகூறுதல் முதலிய சில நட வடிக்கைகள் மனவருத்ததை தரக்கூடியது.) பாங்குவிதியின் தன் மையை அனுசரித்து நடக்க பாங்கார் இஷ்டப்படாவிட்டால் உடனே மகா சபைகூடி சங்கங்களின் சுதந்தரத்துக்காக வேற்பட்டிருக்கும் பை லாக்களை ரத்துசெய்துவிட்டு தங்களுக்கு சௌகரியம்போல் ஏற்படுத்தி சங்கங்களை எப்படி தங்களுக்கு அடிமையாக நடத்திக்கொள்ள பிரயத்தி னப்பட்டு முடித்துக் கொண்டால் இம்மாதிரி கேள்விகள் பாங்காரை கேட்பதற்கு இடமிராது. பாங்கார் மேற்கண்டபடி செய்து கொண்டு விட்டால் பாங்கின் பேரில் டிபார்ட் மெண்டுக்கு குறைகள் எழுத காரண மிராது. ஆதலால் டிபார்ட் மெண்டுக்கு இப்பொழுது இது விஷயமாய் சிற்சில சமயத்தில் ஏற்படும் கரஸ்பாண்டன்ஸ்களை கவனிப்பதின்தொந் தரவு நீங்கும்.இவ்விஷயம் கவனிக்கப்படாமல் நெடு நாளாய் விஷயங்களை முற்ற விடுவதில் ஐக்கிஸ்தர்களுக்குள் பிளவு யேற்பட்டு ஐக்கிய இயக் கம் கஷ்டப்படுமென்ற பயம் ஏற்பட்டிருப்பதால் அதை போக்குவ தற்கு நமது வர்த்தமானி மூலமாய் முடியுமென்று நம்பப்படுகிறது.

---

## விவசாயகளின் கூட்டுறவு.

பின்வரும் வியாசம் இவ்வருஷம் விவசாய இலாகா காலண்டருக்கு மிஸ்டா F. R. ஹெமிங்வே துரையவர்கள் எழுதியிருக்கிறார்:—

பல பிள்ளைகளை உடைத்தாயிருந்த கிழவனொருவன இறக்குந்தரு ணத்தில் தன் பிள்ளைகளைக் கூப்பிட்டு ஒரு சிறு விறகு கட்டு கொண்டு வரச்சொல்லி அந்தக் கட்டை தன் பிள்ளைகளிடம் கொடுத்து, அதை முறிக்கும்படி சொன்னதாயும், அவர்கள் அது ஒருகட்டாக கட்டியிருந் தபோது முறிக்க முடியாமற்போனதாயும் கட்டைப் பிரித்து ஒவ்வொரு குச்சியையும் தனித்தனியாய் எடுத்து முறிக்கும்படி சொன்னபோது அவர்கள் சுலபமாய் முறித்ததாயும், அதின்பின் அந்தக் கிழவன் இதனால் கற்றுக்கொள்ளக்கிடந்த கற்பனையை விளக்கி "ஒற்றுமை" அல்லது "கூட்டுறவு" என்பதின் பெருமையையும் வலிமையையும் எடுத்துக்காட் டினதாயும் சொல்லப்படுகிற புராதன கதையை எல்லாரும் அறிவார் கள்.



நாகரீகம் பரவியிருக்கிற தேசங்களிலெல்லாம் கூட்டுறவும் இப் போது பரவியிருக்கிறது. அது அநேக வடிவுகொண்டு வெளித்தோன் றியிருந்தபோதிலும், அவைகளெல்லாம் மேற்சொன்ன கிழவன் செய்து காட்டிய உண்மையைத்தான் ஆதாரமாகக்கொண்டிருக்கின்றன. ஒன்று கூடாமல் தனித்தனியாய் வேலைசெய்யும் மனிதர்களைவிட ஒன்றுகூடி வேலைசெய்யும் அதே எண்ணிக்கையுடைய மனிதர்கள் பலசாலிகளாவார் கள்.

சென்னை இராஜதானியில் கூட்டுறவு சாதாரணமாய் அனுசரிக்கப் படும் நாணயச் சங்கங்களின் ரூபமாய் வெளித்தோன்றியிருக்கிறது. இந்த நாணயச் சங்கங்கள் இராஜதானி முழுவதும் பரவியிருக்கின்றன. ஜனங்க ளுள் பெரும்பாலருக்கு ஒருசமயம் அல்லது மற்றொரு சமயத்தில் கடன் வாங்கும்படி அவசியம் உண்டாகிறது. கல்யாணம் செய்யவேண்டிய காரணமாவது, மாசூல் பலன்கிட்டாத நிமித்தமாவது, கிணறுவெட்டுதல் அல்லது நிலத்தை சீர்திருத்துதல் முதலிய படிப்படியாய் பிரதிபலன் வரக்கூடிய காரியத்திற்கு முதற்பணம் வைக்கவேண்டிய அவசரமாவது, உண்டாகிறது. ஆகவே நமது குடியானவர்களில் அநேகர் கடனுக்கு ஆளாயிருக்கிறார்கள். கிராமாந்தரங்களிலிருக்கும் லேவாதேவிக்காரர்கள் கொடுக்கும் கடன் நிபந்தனைகளோ மிகக் கடினமானவை. ஆனதால் குடியானவரின் கடன் பளுவு அவனுக்கு நியாயமாய் இருக்கவேண்டிய அளவைப்பார்க்கிலும் பலசமயங்களில் அதிகமாயிருக்கிறது. சிலசமயங் களில் அவன் நிலைமை அவன் ஈடேறுவான் என்ற நம்பிக்கைக்கும் பெரும்பாலும் இடந்தருவதில்லை. கொடுத்தபணம் திரும்பி வரவேண்டும் என்னும் நோக்கத்தோடு சாவகார் கடன் கொடுப்பதில்லை. பணம் வாங் கினவன் கடனில் மூழ்கி அடமானநிலம் தன்கைக்கு வரும்விதமாக கடன் கணக்கு முடிவுகட்டப்படவேண்டுமென்ற ஆசையோடு சாவகாரர் கள் கடன் கொடுக்கிறார்கள் என்பது யாவருக்கும் அறிந்தவிஷயம்.

இந்தக் காரணங்களைப்பற்றித்தான் நாணயத்தை உண்டுபண்ண கூட்டுறவின் கோட்பாட்டைக் கைக்கொண்டது. மற்ற விஷயங்களைப் போலவே நாணயத்தை உண்டுபண்ணும் விஷயத்திலும் பத்துபேர் ஒன் றுகூடிச் செய்யும் காரியம் அவர்களே தனித்தனி பிரிந்து செய்யும் காரி யத்தைப்பார்க்கிலும் திறமானதாகக் காணப்படுகிறதென்பது ஆச்சரிய மல்ல. பத்துபேர் ஒரு சங்கமாய்ச் சேர்ந்து சங்கத்தின் கடன்களுக்கு சேர்ந்த பிரதி மனிதனும் ஜவாபு ஆகும்பக்ஷத்தில், அந்த ஜவாபைபற்றி

சங்கத்திற்கு உண்டாகும் நாணயம் மிகவும் அதிகமாயிருக்கும். சங்கத்தில் சேர்ந்த மனிதர்களுக்கு தனித்தனி கிடைக்கக்கூடிய நாணயத்தைப் பார்க்கிலும் சங்கத்திற்கு அதிக நாணயம் உண்டாகி பெருந்தொகை கடன்வாங்க சாத்தியமாகும். ஆகையினாலே கடன்கொடுக்கும் பெரிய பாங்குகள் இப்படிப்பட்ட சங்கங்களுக்கு, அவைகளில் தனித்தனி மெம்பர்களுக்கு எவரேனும் கடன் கொடுக்கும் நிபந்தனைகளைவிட, மிகவும் சுலபமான நிபந்தனைகளின்பேரிலும் சுலபமான வட்டியின்பேரிலும் கடன்கொடுக்கின்றன. இப்படி சுலபமான வட்டிக்கு வாங்கும் சங்கம் தனது மெம்பர்களுக்குத் தான் வாங்கினவட்டிவீதத்திற்கு சிறிது அதிகமாய் கடன்கொடுக்கிறது. இப்படி சிறிது அதிகப்படுத்தவேண்டிய அவசியம் என்னவென்றால் தனக்கு நேரும் நியாயமான செலவை பொறுக்கவேண்டியிருப்பதினாலேதான்.

ஒரு ஐக்யநாணயச்சங்கம் கொடுக்கும் கடனுக்கு ஒரு சாவகார் கொடுக்கும் கடனுக்கும் இருக்கும் தாரதம்மியத்தைக் கவனிக்கவேண்டும். கேட்கும் கடன் ஒரு நல்ல காரியத்திற்காக கேட்கப்படுகிறதாவென்றாவது கடன் நிபந்தனைகள் கடன் வாங்குபவனுக்கு சௌகரியமானவைதானாவென்றாவது சாவகார் கவனிப்பதில்லை. கடனுக்காகக் காட்டும் ஆதாரம் போதுமானதாவென்று பார்க்கும் விஷயத்தில் மாத்திரம் அவன் கவலையெடுத்துக்கொள்ளுகிறான். தன்னால் எவ்வளவு கிரகிக்கக்கூடுமோ அவ்வளவு அதிகமாய் வட்டி வாங்கிக்கொள்ள விரும்புவான். ஐக்கிய நாணயச்சங்கமோ, அப்படியல்லாமல் எவ்வளவு குறைந்த வட்டிக்குக் கொடுத்தல் சாத்தியமோ அவ்வள்வு குறைந்த வட்டிக்குக்கடன் கொடுக்கும். மேலும் கடன் நிபந்தனைகளை ஏற்படுத்துவதில்கடன் வாங்கினவனுக்குகடனைத் திருப்பிக்கொடுப்பதில் எவ்வளவுதூரம் சாத்தியமோ அவ்வளவுதூரம் செய்து நிபந்தனைகளை வெகு ஜாக்கிரதையாய் ஏற்படுத்தும். வாஸ்தவத்தில் பலனைக் கொடுக்கக்கூடாத காரியத்திற்கும் நல்லகாரியமுமல்லாத வேறெந்த காரியத்திற்கும் ஒரு ஐக்கியச் சங்கம் கடன்கொடுக்கமாட்டாது. சங்கத்தின் விருப்பம் எல்லாம் உண்மையாய் கடன்வாங்கும் மெம்பரின் நிலைமையை தன்னாலியன்ற அள்வு முன்னிருந்ததைவிட உயர்த்தி பணமுள்ளவனாகவும் எதை செய்வதற்கும் தன்னுடைய சக்தியையே நம்பியிருப்பவனாகவும் செய்ய வேண்டுமென்பதே. சாவகாரரோவென்றால் அவன் தன்னுடைய லாபத்தை அதிகரித்துக்கொள்ளுவதில்கவனம் செலுத்தவேண்டியவன்.



# மீன் உரத்தின் விஷயமாய் ஓர் குறிப்பு.

1918-ம்௵ மேமீ 10உ ஹிந்து பத்திரிகையில் விவசாய உதவி டைரக்டரவர்கள் மேற்கண்ட குறிப்பின்கீழ் பின்வரும் சாராம்சமுள்ளதான வியாசத்தை பிரசுரித்திருக்கிறார்.—

வரவர மாசூல் கம்மிப்படுவதும் அதின் காரணங்களும் ஒவ்வொரு வருஷத்திலும் மலையாளத்தில் வரவர விளையும் மாசூல் குறைந்து வருகிறதென்பதாய் முறைப்பாடுகள் யேற்பட்டிருக்கின்றன. அதின்காரணம் இன்னதென்று தெரிந்து கொள்ளவும் அதை பரிகரிக்க உபாயம் தேடுபவர்களும் உபாயம் சொல்லியும் அதின் பலனை தெளிவாய் எடுத்து காட்டியதும் அதைப்பற்றி கவனிப்பவர்கள் நிரம்பவும் சொற்பமாயிருப்பதைப் பற்றி விசனிக்க வேண்டியதா யிருக்கிறது. எடுத்துச்சொன்ன உபாயங்களை பின்பற்றினால் மேற்கண்ட புகார்கள் கூடுமானவரையில் குறையும் நிலத்தில் பயிராகும் ஒவ்வொருபயிரும் தன்வளர்ச்சிக்காக நிலத்தின் சத்தைகொஞ்சம் அப்புறப்படுத்தும். முன் காலத்தில் விவசாயிகள் தங்கள் நிலத்துக்கு மேன்மையான உரம் போட்டுவந்தார்கள் என்பதை எல்லாராலும் ஒப்பு கொள்ளப்பட்டிருக்கிறது. மலை அடிவாரத்திலுள்ளவர்கள் பக்கத்திலிருக்கும் மலைகளிலும் குன்றுகளிலுமுள்ள உயர்தர உரத்தை உபயோகித்து வந்தார்கள். இப்பொழுது நிலங்களுக்குப் போதுமானபடி உரம் செய்வதில்லை. மலைகளிலும் குன்றுகளிலும் மரம் முதலானவைகள் சிறுத்துப் போவதால் விவசாயிகளுக்கு அவைகளிலிருந்து உரங்கள் கிடைப்பதில்லை. ஆகையால் எதிர்பார்த்தபடி நிலம் மாசூல் கொடாமற் போவது ஆச்சரியமில்லை. சுருக்கமாய்ச் சொல்லின் சரியானபடி உரம் போடாமலிருப்பதுதான் குறைந்த மாசூலுக்குக் காரணம். சரியான உரம் கிடைக்காவிட்டால் அது ஒரு காரணமாகச் சொல்லலாம். ஆனால் எப்போதும் கிடையாமற் போகாது. மேற்குக் கரையிலிருந்து வருஷம் ஒன்றுக்கு 8 முதல் 10 லக்ஷம் ரூபாய் மதிப்பிடத்தக்க உரங்கள் அன்னிய நாட்டுக்கு யேற்றுமதி செய்யப்படுகிறது. அவைகளில் மீன் உரம் முக்கியமானது. அவைகளை ஜப்பான் மலாயாநாடுகளுக்கும், இன்னும் இதர இடங்களுக்கும், அனுப்புவதில் சிரமத்தோடு அதிக செலவுகள் நேரிடுகிறது. இவ்வளவு ஜாஸ்தி செலவுசெய்தும், இதில்—

லாபமிருப்பதாய் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் இந்த உர
மானது முக்கியமான உரமென்பதில் விவாதிப்பதற்கிடமில்லை. இந்த
உரத்தை மலையாளம் ஜில்லாவில் பரீக்ஷை பார்த்தவர்களுக்கு நிரம்பவும்
திருப்தியை கொடுத்திருக்கிறது. மேற்குக்கரையில் புகையிலை, காய்
கறிகள், வாழைமுதலிய பயிர்களுக்கு ஜாஸ்தியாய் இந்த உரத்தை உப
யோகப்படுத்துகிறார்கள். இந்த மீன் உரத்தை உபயோகப்படுத்தினால்
மாசூல் கம்மிப்படுகிறதென்று சொல்லப்படும் புகாருக்கு கொஞ்சமும்
இடமிராது. மீன் உரமும் அதின் தினுசுகளும் :—

மீன் உரத்தில் இரண்டுவகை உண்டு. வெயிலில் உலர்த்தப்படும்
மீன் ஒருவகை; மீனிலிருந்து எண்ணெய் எடுத்தபிறகு யேற்படும் பிண்
ணாக்கு மற்றொரு வகை. பின்சொன்னதின் விலை முன் சொன்னதை
விட இரண்டுமடங்காகும் 2240 பவுண்டு இடையுள்ள ஒரு டன் ரயில்வே
ஸ்டேஷனில் ஒப்புவிக்க வெயிலில் உலர்த்தப்பட்ட மீனின் கிரயம் 35 ரூ.
பிண்ணாக்கின் கிரயம் ரூ. 75 இந்த விலைகள் ஜாஸ்தி என்று சொல்ல முடி
யாது. இந்த விலைகள் சரக்கின் நயத்துக்கு தக்கதாயும் கையிருப்புக்குத்
தக்கதாயும் மாறுபடும். இதில் வயல்களுக்கு வேண்டிய நைரோஜன முத
லியவைகள் சரியான அளவாய் சேர்ந்திருக்கிறது. இந்த உரத்தைத்தனித்
தாவது அல்லது கால்நடையின் சாணத்துடன் சேர்த்தாவது சாம்பலோ
டாவது அல்லது அந்தந்த இடத்தில் கிடைக்கும் உரங்களையாவது கலந்து
உபயோகிக்க வேண்டும். சாம்பலோடு கலந்து உபயோகிப்பது நல்லது.
பற்பல பயிர்களுக்கு யேற்பட்ட விதியின்படி உபயோகிக்க வேண்டியது.

ஒரு ஏக்கர் நிலத்தில் நெல் சாகுபடிக்கு வெயிலில் உலர்த்தின மீன்
400 முதல் 500 பவுண்டு வரைக்கும், பிண்ணாக்கு 250 முதல் 300 பவு
ண்டுவரைக்கும் உபயோகப்படுத்த வேண்டும். 10 வருஷத்துக்கு மேற்
பட்ட தென்னைக்கு உலர்த்தினமீன் 10 பவுண்டும் பிண்ணாக்கு 5 பவுண்டு
வீதம் மரம் 1-க்கு உபயோகப்படுத்த வேண்டும். கமுகுக்கு இதில்பாதி.
கரும்புக்கு ஒரு ஏக்கருக்கு 1 டன் உரத்துடன் ஒரு டன் சாம்பல் கலந்து
உபயோகப்படுத்த வேண்டும். மிளகு கொடிக்கு ஒரு கொடிக்கு 1பவுண்டு
தேவை. வெயிலில் உலர்த்தின மீன் உபயோகப்படுத்தினால் உபயோகிக்
கும்முன் உரலில் போட்டு பொடியாக்கவேண்டும். இல்லாவிட்டால் காக்



கைஅல்லது இதரபிராணிகள் அதைத்தின்றுவிடுமாகையால் நஷ்டமடை
யும். நெல் புழுதியில் விதைப்பதானால் விதைக்குமுன் பூமியில் தெளித்து
உழுதபின் விதைக்கவேண்டும். மரம் நடுவதானால் நிலம் தயாரானபின்
செடி நடுமுன் ஒழுங்காய் உரத்தை பரப்பி மிதித்து நடவேண்டும்.
அல்லது கடைசியில் உழுகிறபோது உரத்தைப்போட்டு உழவேண்டும்
எப்படிச் செய்தாலும் உரம் பூமியில் விருதாவாய்ப் போகாமல் பார்க்க
வேண்டும். செடி நடும்பொழுது உபயோகப்படுத்தினால் ஒருவாரம் வரை
யில் தண்ணீர் தாராளமாய் வெளியே போகாமல் பார்க்கவேண்டும். இந்த
உரத்தை 2-ம் போகம் நெல் சாகுபடிக்கு உபயோகப்படுத்தினால் பயிர்
விசேஷமாயிராது. நாற்றங்கால்களில் உபயோகப்படுத்தினால் நாற்றுக்கு
உபயோகப் படுவதுடன் அதே இடத்தில் பயிர் செய்யப்படும் அடுத்தபயி
ருக்கும் உபயோகப்படும். தென்னைக்கும் கமுகுக்கும் உபயோகப்படுத்தி
னால் மரத்தைசுற்றி ½ அடி ஆழத்திற்கு 3 அல்லது 4 அடி தூரம் பரப்பி
காற்று அடிக்கும்போது மூடிவைக்க வேண்டும். மரத்துக்கு நிரம்ப
சமீபத்திலாவது அல்லது நிரம்ப தூரத்திலாவது இருக்கக்கூடாது.
தோட்டம் முழுவதும் தென்னையாவது கமுகாவது நடுவதானால் நிலத்தில்
பூராவும் உரத்தை பரப்பி அப்பால் குழி தோண்டுவதில் கெடுதலில்லை.
மீன் உரத்தை தாலுப்பரம்பா கோயம்புத்தூர் முதலிய சர்க்கார்
பண்ணையில் நெல் கரும்பு தென்னை மிளகுகொடி இன்னும் இதர
பயிர்களுக்கு உபயோகப்படுத்தியதில் லாபமுண்டென்று கண்டு பிடிக்
கப்பட்டு இப்பொழுது ஜாஸ்தியாய் உபயோகப்படுகிறது. விவசாய
டிபார்ட்மெண்டார் முயற்சியில் கோயம்புத்தூர், மதுரை, திருநெல்வேலி,
தஞ்சாவூர் இன்னும் இதர ஜில்லாவிலுள்ள விவசாயிகள் இந்த உரத்தை
உபயோகப்படுத்த முயன்றதின் பயனாய் ஜாஸ்தி உரத்துக்கு மனுக்கள்
வந்து கொண்டிருக்கின்றன. நடப்பு வருஷத்துக்கு சுமார் ரூ. 8,000 க்கு
ஆர்டர்வந்து அனுப்பியிருக்கிறது. ஆகையால் ஒவ்வொருவரும் உப
யோகிக்க பிரயத்தனப் படவேண்டும். 7-வது சர்க்கில் விவசாய உதவி
டைரக்டரவர்களுக்கு எழுதினால் வேண்டிய ஏற்பாடு செய்வார். மழை
காலத்தில் உரம் கிடைப்பது கஷ்டமாயிருப்பதுடன் விலையும் ஜாஸ்
தியா யிருக்கும்.

குறிப்பு.—இந்த வியாசத்தில் சில பயிர்களுக்கு மாத்திரம் சொல்லப்
பட்டிருப்பதாய் நினைக்கக்கூடாது. இந்த உரம் எல்லாப்பயிர்களுக்கும் உப
யோகப்படும். விவசாய இலாகா உத்தியோகஸ்தரை கேட்டால் அந்தந்த
பயிருக்கு வேண்டிய விவரத்தைச் சொல்லுவார்கள். சங்கங்கள் ஆர்டர்
செய்யும்போது அந்தந்த செக்ஷன் அசிஸ்டெண்டு ரிஜிஸ்ட்ரார்கள் மூல
மாய் ஆர்டர் அனுப்புவது உசிதம்.

## திருநெல்வேலியில் கோவாபரேஷன்.

ஒரு கோவாபரேடர் 18-4-18-தேதியின் கீழ் பின்வருமாறு எழுது
கிறார்:—

1. முதலாவது டிஸ்டிரிக்ட் கோவாபரேடிவ் கான்பரன்ஸ்:—திரு
நெல்வேலி இந்து காலேஜில் ஏப்ரல்மீ 10-ம்தேதி நடந்த ஜில்லாத் தலை
இடங்களிலுள்ள கோவாபரேடிவ் சொஸைடிகளின் டைரக்டர்களின்
மீட்டிங்கில், அடுத்த ஆகஸ்டு மாதம் ஜில்லா தலைமை ஸ்தானத்தில்
ஒரு ஜில்லா கான்பரன்ஸ் கூட்டப்பட வேண்டுமென்று தீர்மானித்தது
ஒரு சுபசூசகமே. அதற்கு வேண்டிய ஏற்பாடு செய்ய ஒரு சிறிய
கமிட்டி உடனே ஏற்படுத்தப்பட்டது. இந்த ஜில்லாவில் ஐக்கிய
இயக்கம் ஏற்பட்டு இவ்வளவுகாலம் ஆகியும் இதுவரையில் யாதொரு கோ
வாபரேடிவ் கான்பரன்ஸும் நடை பெறவில்லை. ஒன்றுமில்லாமலிருப்
பதற்கு தாமதமாகவாவது நடப்பது சிலாக்கியமல்லவா? புராணத்தில்
கூறப்பட்ட தெய்வீகத் தன்மையுள்ள தாம்பிரபரணிக்கரையில் நடக்கும்
முதல் கோவாபரேடிவ் கான்பரன்ஸுக்கு ஈசன் இனிது அருளுவா
ரென்று நம்புகிறோம்.

2. ஜில்லா கோவாபரேடிவ் பாங்கி:—வெகு நாளாக அவசியமா
யிருந்த இந்த பாங்கி இப்பொழுது 12-ம் தேதியன்று ஆரம்பிக்கப்
பட்டது. டிஸ்ட்ரிக்ட் கலெக்டரும், ரிஜிஸ்ட்ரார் ஜெமிங்வே துரை
யவர்களும் விஜயம் செய்து ஆரம்பித்து வைத்தார்கள். அஸிஸ்
டெண்டு ரிஜிஸ்ட்ரார்களான மீனாக்ஷி சுந்தரம் பிள்ளையவர்களும் ஆனந்த
ராவ் அவர்களும் கூட வந்திருந்தார்கள். இவர்களெல்லாருக்கும் நாம்
மிகவும் நன்றிப் பாராட்டுகிறோம்.



3. எல்லா ஜனங்களும் கொண்டாடும் நமது அஸிஸ்டெண்டு
ரிஜிஸ்ட்ரார் மீனாக்ஷிசுந்தரம் பிள்ளையவர்கள் மாற்றப்படுவார் என்று
கேட்க வருத்தமாயிருக்கிறது. ஆனால் அவருக்கு பதிலாக வருபவர்
அவரைப்போலவே நல்லகுணமுள்ள மாக-ா-ா-ஸ்ரீ ஆனந்தராவ் அவர்கள்
என்று கேட்க சந்தோஷப்படுகிறோம்.

4. பாங்கி ரிஜிஸ்ட்ர் செய்யப்பட்ட விஷயத்தில் முதலில் ஆகவேண்
டிய காரியங்களை வெகு சிரத்தையுடன் சிரமத்தைப்பாராமல் செய்து
முடித்த திருநெல்வேலி ஸர்க்கிள் கோவாபரேடிவ் இன்ஸ்பெக்டர்மிஸ்டர்
சிவராமகிருஷ்ணய்யர் காட்டிய ஊக்கம் மிகவும் சிலாகிக்கத்தக்கதே.

## பங்காளத்தில் கோவாபரேஷன்.

1917-ம் வருஷம் ஜூன்மீ 30ம்டை யுடன் முடிந்தவருஷத்திற்கு
பங்காளத்திலுள்ள கோவாபரேடிவ் சொஸைடிகள் செய்த வேலைகளின்
ரிபோர்டைப் பற்றிய தீர்மானங்களின் சாராம்சம் வருமாறு:—
1917-ம௵ ஜூன்மீ 30-ம் தேதியோடு முடிந்தவருஷம் மொத்
தத்தில் வங்காளத்தில் விவசாயம் விருத்திகரமானதாயிருந்தது. மேலும்
ஐக்கிய இயக்கம் விரைவாய் விருத்தியடைய வேண்டிய ஹேதுக்கள்
ஏற்பட்டன. இவ்வருஷத்தின் விருத்தி வருமாறு:-சொஸைடிகள் 843,
மெம்பர்கள் 21, 615, தொழில் தனம் ரூ. 27 லக்ஷம்; முந்திய வரு
ஷத்திய இவ்வகைய இலக்கங்கள், 251 சொஸைடிகள், 14,717 மெம்
பர்கள், தொழில்தனம் ரூ- 15 லக்ஷம். சேமநிதி $8\frac{1}{3}$ லக்ஷத்திலிருந்து
$10\frac{1}{3}$ லக்ஷமாக அதிகரித்திருக்கிறது.

பங்காளத்தில் கோவாபரேஷன் குழந்தைப் பருவம் தாண்டிவிட்
டது. சிலகாலங்களாக ரிஜிஸ்ட்ராரவர்களுக்கு நன்றாய்ப் பழகின
சிப்பந்திகள் வெகுவாய்த் தேவையாகும் என்று கவர்னர் அபிப்
பிராயப்படுகிறார். சொஸைடிகளின் விருத்திக்குத் தகுந்தபடி கவர்ன்
மெண்டும் வரையில்லாமல் சிப்பந்திகளை அதிகப்படுத்த இயலாதென்றும்
கோவாபரேடிவ் இயக்கம் பணப்பொறுப்பின் மிகுந்த பாகத்தை வகிக்க
கடமைப் பட்டிருக்கவேண்டுமென்றும் தெரிகிறது. 1917௵ பிப்ரவரி
மாதம் நடந்த ப்ரொவின்ஷியல் கோவாபரேடிவ் கான்பரன்ஸில் நன்றாய்

ஏற்பட்ட ஒவ்வொரு சொஸைடியும் தணிக்கைச் செலவுக்காக இயன்ற
அளவு கொடுக்கவேண்டுமென்ற தீர்மானம் அங்கீகரிக்கப்பட்டது. பிரஸ்
தாப வருஷத்தில் ஏற்கனவேயிருந்த சிப்பந்திகளுடன் 14 ஆடிட்டர்கள்
நியமனமாகவேண்டு மென்றும் அவர்களுக்கு சம்பளம் சொஸைடிகள்
கொடுக்கவேண்டுமென்றும் ஒரு ஏற்பாடு செய்யப்பட்டது. இதனால்
எல்லா சொஸைடிகளும் சரிவர தணிக்கை செய்யப்படவேண்டிய சாத
னம் ஏற்படும். அதுதான் முதல் முதல் இருக்கவேண்டிய அவசியமும்
சட்டசம்மதமுமாம். கவர்ன்மெண்டு இன்ஸ்பெக்டர்கள் எவ்வளவு
வரையில் அதிகப்படுத்தப்படுவார்கள் என்பது இப்பொழுது இராஜாங்
கத்தின் ஆலோசனையிலிருக்கிறது. ஆனால் இவ்வியக்கம் விருத்தி
யாக விருத்தியாக இராஜாங்கமும் மேற்பார்வை தணிக்கை இவைகளுக்கு
அதிகம்அதிகமாகக் கொடுக்கவேண்டியிருக்கும் என்பது வெளிப்படை
யாய் தெரிகிறது.

1915-16-ம் வருஷத்திய ரிபோர்டை பரிசோதித்தபொழுது கவர்ன
ரவர்கள் 1915-ம் வருஷம் டிப்பெரா ஜில்லாவில் ஏற்பட்ட கஷ்ட காலங்
களில் கோவாபரேடிவ் சொஸைடிகள் செய்த உபயோகமுள்ள உபகா
ரங்களைப்பற்றி சிலாகித்து 1916-17-ம் வருஷவேலைகளின் பயனாக சொ
ஸைடிகளின்பேரில் ஜனங்கள் நம்பிக்கைவைப்பது உசிதமாகுமா என்ப
தைப்பற்றி தன் அபிப்பிராயத்தை வெளியிட்டார். ஆகையால் அவர்
வெகு சிரத்தையுடன் இந்தஜில்லா சொஸைடிகளைப்பற்றிய இலக்கங்களை
கவனித்திருக்கிறார். 1916-17-ம் வருஷத்தில் விவசாய சொஸைடிகளின்
மெம்பர்களால் திருப்பிக் கொடுக்கப்பட்டதொகை ரூ. 1,83,845; இவ்வி
தத் தொகை 1915-16ல் ரூ. 69,579. ஆனால் காலம்கடந்த கடன்கள்
1915-16-ம் வருஷக்கடைசியில் ரூ. 92,788 ஆகவிருந்தது, 1916-
17-ம் வருஷக்கடைசியில் ரூ. 1,15,371 ஆக அதிகரித்தது. திருப்பிக்
கொடுபட்ட கடன்களின் அதிகத்தொகை நன்கு கவனிக்கத்தக்கதே. அத்
தொகை 1915-16-ம் வருஷக்கடைசியில் மெம்பர்களால் கொடுபடவேண்
டியிருந்த மொத்ததொகையில் சுமார் பாதியாக இருந்தது. ஆனால் காலங்க
டந்த கடன்களோ, இப்பொழுது மிக அதிகம். 1916-17ல் டிப்பெரா ஜில்
லாவில் விவசாயிகளின் நிலைமைகள் சௌகரியமாயிருந்தும் காலங்கடந்த



கடன்கள் போதுமான அளவு கழிபடாமலிருந்தவிஷயம் கவலைப்படத்
தக்க தென்று என்று கவர்னரவர்கள் அபிப்பிராயப்பட்டார்.

சென்ட்ரல் பாங்கிகளின் தொகைகள் 9 லிருந்து 47 ஆயிற்று.
டிபார்ட்மெண்டின் தற்கால நோக்கம் புது கிராமச் சங்கங்களை அதிகப்
படுத்துவதற்கல்ல. ஆனால் சென்ட்ரல் பாங்கிகள் தன் பார்வையிலிருக்கக்
கூடிய கிராமச் சங்கங்களை ஏற்படுத்த உதவுகிறது. ஏனென்றால் அந்த
மாதிரி பாங்கிகளுடைய பார்வையில் சங்கங்கள் ஏற்பட்டால் மேற்பார்
வை தகுதியாயில்லாத தோஷங்கள் குறைகிறது. ஆகவே சென்றவருஷ
ரிபோர்டில் கோவாபரேஷன் குறைவென்று குறைகூறப்பட்ட ஏழு ஜில்
லாக்களில் முன்னேற்றமே காணப்படவில்லை. ஏனென்றால் அவைகள்
ஒன்றிலும் சென்ட்ரல் பாங்கி கிடையாது. சென்ட்ரல் பாங்கிகளின்
தொழில் தனம் 46½ லக்ஷத்திலிருந்து 59 லக்ஷமாகவும் சேமநிதி
ரூ. 1,11,901 லிருந்து ரூ. 1,46,008 ஆகவும், கொடுபட்டிருக்கும் பங்
குத் தொகை 6½ லக்ஷத்திலிருந்து 8¾ லக்ஷமாகவும் அதிகரித்திருக்கின்
றன. இன்னும் 4 சென்ட்ரல் பாங்கிகளில் சம்பளம் பெறும் செக்ரி
டெரிகளின் நியமனமான பாங்கிகளின் நிர்வாகசக்தியை விருத்திசெய்
யும் சரியான மார்க்கம். சொஸைடிகள் தங்கள் நிலுவைகளை சரிவர
வசூல் செய்யும் பொறுப்பை வகிக்கத் தெரிந்துகொள்ளவேண்டியது அவ
சியமென்றும் கவர்ன்மெண்டு இன்ஸ்பெக்டர்கள் செய்வார்களென்று
எதிர்பார்க்கக்கூடாதென்றும் ரிஜிஸ்ட்ராரவர்கள் அபிப்பிராயப்பட்டது
போல்வே கவர்னரும் அபிப்பிராயப்படுகிறார்.

12-லிருந்து 13 க்கு அதிகரித்திருக்கும் சூபர்வைஸிங் யூனியன்
களின் வேலையைப்பற்றி ரிஜிஸ்ட்ராரவர்கள் குறைவாகப் பேசுகிறார்.
கிராமச்சங்கங்கள் பரஸ்பரம் கடன்களுக்கு ஜவாப்தாரியாக வேண்டிய
விஷயத்தை உத்தேசித்து யூனியன்களேற்படுவதற்கு பிரியப்படவில்லை
ஜில்லாத் தலையிடங்களுக்கும் ஸப்டிவிஷன்களிலும் யூனியன்களை நிர்
வகிக்கும் வேலையைக் கைக்கொள்ள தகுந்த மனிதர்களும் கிடைப்பது
அரிதாயிருக்கிறது.

விவசாய சொஸைடிகளின் தொகை 2,967-லிருந்து 2,857 ஆகவும்,
மெம்பர்கள் 94,074லிருந்து 1,10,961 ஆகவும், தொழில் தனம் 57

லக்ஷத்திலிருந்து 67 லக்ஷமாகவும் அதிகரித்திருக்கின்றன. மெம்பர்களுக்கு கொடுத்திருக்கும் கடன்களும் 17 லக்ஷத்திலிருந்து 26½ லக்ஷமாகவும் திருப்பி வசூலானது 14 லக்ஷத்திலிருந்து 18¾ லக்ஷமாகவும் அதிகமாயிற்று. ஆனால் காலங்கடந்த கடன்கள் 17 லக்ஷம் இருக்கின்றன. இது நிலுவைக்கடன்களில் 100-க்கு 30·7 விழுக்காடு ஆகிறது. சென்ற வருஷத்திய காலங்கடந்த கடன் 100க்கு 26·6 ஆகயிருந்தது. சென்ட்ரல் பாங்கிகள் கடன்கள் சரிவரத்திருப்பி வசூல் செய்யப்படும் விஷயத்தில் மிகவும் கண்டிப்பான ஏற்பாடுகள் செய்யவேண்டும். மேலும் சில இடங்களில் அயோக்கியர்களான சிப்பந்திகளால் நேரிட்ட அவதூறுகளை நீக்கி அவர்களுக்கு பதிலாக யோக்கியர்களை நியமிக்கவேண்டும். கவனிக்கத் தகுந்த சொஸைடிகளுள் மிட்ணபூர் ஜில்லாவிலுள்ள கேலார் சாகுபடி சொஸைடி லாபகரமாய் வேலைசெய்திருக்கிறது. கவர்னரவர்களும் மற்ற இடங்களும் இதன் மார்க்கத்தை அனுசரிக்கலாமென்று அபிப்பிராயப்படுகிறார்.

விவசாய டிபார்ட்மெண்டும் கோவாபரேடிவ் டிபார்ட்மெண்டும் சேர்ந்து அநேக கான்பரென்ஸ்கள் கூடின. அப்பொழுது விவசாய விருத்தியை பரவச்செய்ய அநேகமாய் அனுஷ்டிக்கக்கூடிய ஏற்பாடுகள் பிரஸ்தாபிக்கப்பட்டன. விசேஷமாய் உருளைக்கிழங்கு சாகுபடியைப்பற்றியே பிரஸ்தாபித்தாகள். உருளைக்கிழங்கு விதைகளை சிலாக்கியமானதாக சேகரித்து எல்லாருக்கும் கொடுத்து அநேக ஜில்லாக்களில் நிறைந்திருக்கும் விவசாயிகளிடமிருந்து அவைகளின் விலைகளை வசூல்செய்வது எளிதான வேலைஅல்ல. இத்தொழிலை ஆரம்பிக்கும் எத்தனம் டிபார்ட்மெண்டு உத்தியோகஸ்தர்களுக்கு ஒரு பெரிய பளுவாகத் தானிருந்தது. இனி எருக்களை விசேஷமாய் உபயோகிக்கும் வேலை இவ்விரு டிபார்டுமெண்டுகளின் கூட்டுப் பொறுப்பே. ஏனென்றால் விலையுயர்ந்த எருக்களை உபயோகிப்பதென்றால் நாணயத்தின்பேரில் வாங்குவதைப் பொறுத்ததாயிருக்கிறது.

## ஐக்கிய மாகாணங்களில் கோவாபரேஷன்.

அடியிற் காட்டப்பட்ட ஸ்டேட்மெண்டிலிருந்து 1916-17'ல் ஐக்கிய மாகாணத்தில் கோவாபரேஷன் முன்னேற்றம் மிகவும் மந்தமென்று காணலாம்.—



| சொஸைடிகளின் இனம். | சொஸைடிகளின் தொகை. | | மெம்பர்களின் தொகை. | | தொழில்தனம், | |
|---|---|---|---|---|---|---|
| | 1915—16 | 1916—17 | 1915—18 | 1916—17 | 1915—16 | 1916—17 |
| | | | | | ரூ. | ரூ. |
| 1. சென்ட்ரல் ... | 58 | 58 | 5,613 | 4,932 | 61,39,838 | 64,13,498 |
| 2. விவசாய சம்பந்தமுள்ளது ... | 2,9[illegible]9 | 3,008 | 1,06,333 | 1,02,312 | 51,32,044 | 51,36,[illegible] |
| 3. விவசாய சம்பந்தமல்லாதது ... | 182 | 179 | 6,918 | 6,921 | 4,62,969 | 4,91,127 |
| மொத்தம் ... | 3,189 | 3,245 | 1,18,864 | 1,14,165 | 1,20,34,851 | 1,20,40,886 |

இக்கிளர்ச்சியின் மந்தகதிக்கு முக்கிய காரணங்கள் விளைவு தவறிப்போனதும் சண்டையினால் ஏற்பட்ட திரவிய அருமையே. இவ்வருஷம் இரண்டு புதிய சென்ட்ரல் பாங்கிகள் ரிஜிஸ்டர் செய்யப்பட்டன. சென்ட்ரல் பாங்கியின் மெம்பர்கள் 5,613 லிருந்து 4,932-க்கு குறைந்ததற்குக்காரணம் சில ஐக்கிய சொஸைடிகள் முறிவடைந்ததினாலாகும். வருஷக்கடைசியில் 29 டிஸ்ட்ரிக்ட் பாங்கிகளும் 22 சென்டரல் சங்கங்களும் 7 பாங்கிங் யூனியன்களும் இருந்தன. சென்ட்ரல் பாங்கிகள் யூனியன்கள் ஆகிய இவைகளுள் 21, டிஸ்ட்ரிக்ட் பாங்கிகளோடு சேர்க்கப்பட்டன. இந்த பாங்கிகளின் ரொக்கக் கையிருப்பு ரூ. 9·54 லக்ஷம். இவைகளிடம் இப்பொழுது ரூ. 7·56 லக்ஷம் முக விலையுள்ள கவர்ன்மெண்டுக் காகிதங்கள் இருக்கின்றன.—ரூ. 1·18 லக்ஷம் வரையில் ஏற்பட்ட காலங்கடந்த வட்டி நிலுவையைச் சேர்த்துங்கூட பாங்கிகளின் மொத்த லாபம் ரூ. 77,862 தான். லாபத்தைக் கணக்கிடும்போது காலங்கடந்த வட்டி நிலுவையைச் சேர்க்க ரிஜிஸ்ட்ராருக்கு இஷ்டமில்லாவிடினும் வட்டி ஏற்பட்டு அதனால் கொடுக்கும் காலம் ஆகாத தொகைகளை கிராம நாணயச் சங்கங்களின் லாபத்துடன் சேர்க்கப் பிரியப்படுகிறார். டிஸ்ட்ரிக்ட் பாங்கிகளிலிருந்து சொஸைடிகள் பெற்ற கடன்களின் நிலுவை மிக்க அதிகம். அதாவது ரூ. 43·57 லக்ஷம். இதில் ரூ. 15·26 லக்ஷம் தவணை மீறிய தொகை. சென்ட்ரல் பாங்கிகளின் கொடுக்கப்பட்டிருக்கும் மூலதனமும் அவைகளின் சேமநிதிகளும் சேர்ந்து தொழில் தனத்தில் சுமார் 4-வில் ஒருபங்கு ஆகிறது.

122 கிராம நாணயச் சங்கங்கள் புதிதாக ரிஜிஸ்டர் செய்யப்பட்டபோதிலும் முறியடிக்கப்பட்ட தொகையின் மிகுதியினால் மொத்தத் தொகை குறைந்திருக்கிறது. ஒரு மெம்பரின் சராசரி மூலதனம் ரூ. 48·2 லிருந்து ரூ. 50·2 ஆக உயர்ந்திருக்கிறது. இச்சொஸைடிகளுள் 3,037 சென்ட்ரல் சொஸைடிகளுடன் சேர்க்கப்பட்டன. கூட்டங்களாயுள்ள சங்கங்களின் காரியதரிசிகளுக்குப் பதிலாக அவ்வவ்விடங்களில் வசிக்கும் மெம்பரை காரியதரிசியாக ஏற்படுத்தவும், கணக்குகள் வைக்க இலகுவான வழிகளைக் கண்டுபிடிக்கவும் பிரயத்தனங்கள் செய்யப்பட்டு வருகின்றன. சொஸைடிகளின் லாபம் ரூ. 1·79 லக்ஷத்திலிருந்து ரூ. 1·71 லக்ஷமாக காலங்



கடந்த வட்டித் தொகையைச் சேர்த்துங் கூடக் குறைந்திருக்கிறது. விவசாய நாணயச் சங்கங்களின் கொடுபட்டிருக்கும் பங்குத் தொகை ரூ. 10·16 லக்ஷம். அவைகள் எடுத்துக் கொண்ட பங்குகளின் கிரயம் ரூ. 17·29 லக்ஷம். கிராம நாணயச் சங்கங்களுக்கு அவைகளின் மெம்பர்களால் வரவேண்டிய கடன்களின் நிலுவை ரூ. 43·91 லக்ஷம். இதில் ரூ. 21·52 லக்ஷம் அதாவது 100-க்கு 49·2 விழுக்காடு தவணை மீறின கடன்தொகைகள். இந்த விசேஷ நிலுவைக்கு வெகு காரணங்கள் அனுமானிக்கப் பட்டதில் முக்கியமானது ஒன்று அடியில் வருமாறு ரிஜிஸ்ட்ரார் அவர்களால் காட்டப்பட்டது. அதாவது "கிராம நாயணச் சங்கங்களிலேயே கோவாபரேஷனின் குணம் மிக்க குறைவாக விருக்கிறதென்றும், சொஸைடி தன்னுடையதென்று ஒவ்வொரு மெம்பரும் அறியாமலிருத்தல் அவரவர்களின் குற்றமே என்றும், தங்கள் தங்கள் கடன்களை அப்போதைக் கப்போது கொடுத்துத் தீர்த்துவிடுதல் அவர்களின் செளகரியத்தோடு கூட, கடமையும் ஆகிறதென்றும் அறியவில்லையென நினைக்கிறேன். மேலும் இத்தவறுதலுக்குக் காரணம் சென்ட்ரல் சொஸைடிகளிடமும் விசேஷமாயிருக்கிறது. ஏனென்றால் அநேக சமயங்களில் மலினமடைந்த கிராம நாணய சங்கங்களை கவனிக்கிறதில்லை." என்றார். சென்ற வருஷக்கடைசியில் 83 சொஸைடிகள் முறிவடைவதற்கு இருந்தன. இவ்வருஷம் 73 சொஸைடிகள் அந்த ஜாப்தாவுடன் சேர்க்கப்பட்டன. அவற்றுள் 126-வருஷக் கடைசியில் பட்டுவாடா ஆகாமலிருந்தன. முறியடிக்கும் ஏற்பாடு அதிருப்திகரமாயிருக்கிறதென்றும் இதர தேசங்கள் போலப் பிரத்தியேக சட்டங்கள் ஏற்பாடு ஆகிவருகின்றன. விவசாயமில்லாத நாணயச்சங்கங்களுள் ஆக்ரா டெலிவரிப் சொஸைடி, லக்னோ போஸ்டல் சொஸைடி, குமாஸ்தாக்களின் சொஸைடிகள், சண்டிலாவிலுள்ள ஜமீன்தார்களின் சொஸைடி, இவைகளெல்லாம் திருப்திகரமாய்வேலை செய்திருக்கின்றன. ஜபாபாத்கம்பனி நெசவுசொஸைடி, தோல்வேலைசெய்யும் சொஸைடிகள், தண்டாஜேணியர்கள், பிரோஜபாற் கண்ணாடிவேலைக் காரர்கள் முதலிய இம்மாதிரியான பொறுப்புவரையற்ற சில சொஸைடிகள்தான் செழித்திருக்கின்றனவாகக் காணப்படுகின்றன.

வருஷக்கடைசியில் 23 நாணயமில்லாச் சொஸைடிகளிருந்தன. அவைகளுள் 13 விவசாய சம்பந்தமுள்ளது 10 விவசாய சம்பந்த மில்லாதது. அல்லஹாபாதிலுள்ள காட்ரா பால்விற்கும் சொஸைடியும், லக்னோவிலுள்ள வெண்ணெய்விற்கும் சொஸைடியும் நல்ல முன்னேற்றம் காட்டியிருக்கின்றன. பிந்தியது தன்கடன்களையெல்லாம் அனேகமாய் திருப்பிக்கொடுத்து விட்டதுமன்றி ரூ. 1,000லாபமும்சம் பாதித்திருக்கிறது. காசியிலுள்ள வெண்ணெய்விற்கும் சொஸைடியில்கூட கொஞ்சம் முன்னேற்றமானவேலைகள் நடைபெற்றன. இந்த பால்வெண்ணெய் வேலைகள் நடத்தும் சொஸைடிகள் விருத்தியடையும் என்று ரிஜிஸ்ட்ராரவர்களுக்கு நம்பிக்கையில்லை. அவர் பின்வருமாறு சொல்லுகிறார்:— "பம்பாய் ரிஜிஸ்ட்ரார் சொல்லுகிறபடி லக்னோவிலும் காசியிலுமுள்ள பால் வெண்ணெய் சொஸைடிகள் இராஜாங்கத்தார் அல்லது முனிசிபாலிடியாருடைய உதவியில்லாமல் முன்னுக்கு வரமுடியாதென்று நான் நினைக்கிறேன். மேலும் பால் வெண்ணெய்கள் சுத்தமாயும் கலப்பில்லாமலும்வைக்கப்படவேண்டியவிஷயத்தில் மெம்பர்களும் இதரர்களும் ஒழுங்காய் நடப்பதற்கு முனிசிபல் ஏற்பாடும் ஆக்ஞையும் அவசியமாய் ஏற்பட்டால்தான் முடியும்." நடை பெற்றிருந்த அநேக நெய் சொஸைடிகளுள் ஜராலி சொஸைடிதான் விருத்திகரமாய் வேலைசெய்கிறது. சில நெய் சொஸைடிகள் சேனையிலுள்ள இந்திய துருப்புகளின் ஆகார சப்ளையை உத்தேசித்து ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

மணிபுரி விவசாய சப்ளை சொஸைடி வெகு சுறுசுறுப்பாய் வேலை செய்கிறது. திரவிய அபிவிருத்தி செய்துகொண்டு பூசாகோதுமை 200 மணங்கு வாங்கியிருக்கிறது. விவசாயமற்ற நாணயமில்லாச் சங்கங்களுள் 8 விற்பனை ஸ்டோர்களும், பேரில்லி தச்சுவேலை சாலையும், கார்வால் டிரான்ஸ்போர்டு அண்டு சப்ளை சங்கமும் சேர்ந்திருக்கின்றன. சாண்டிலா சணல் ஸ்டோரும், லாலிட்பூர் சொஸைடியும் தங்கள் வியாபாரங்களை விருத்தி செய்திருக்கின்றன. அவைகளின் முன்னேற்றம் மிகத் திருப்திகரமாயிருக்கும். முந்தியதின் லேவாதேவி ரூ.10,000 லிருந்து ரூ.25,000 ஆகியிருக்கிறது. கான்பூர் சுதேசி ஸ்டோர் முற்றிலும் கோவாபரேடிவ் ஒழுங்கில் இல்லாவிடினும் மிக ஏற்பாடாக பராமரிக்கப்பட்டு வருகிறது. கையிருப்பு ஆஸ்திகளை மிகக் கடினமாய் மதிப்பிட்டதனால் பேரில்லி



தச்சுவேலையில் நிகரலாபம் மிகக் கொஞ்சமாய்த்தான் காட்டப்பட்டிருக்கிறது. வியாபார அபிவிருத்தி சொஸைடிகளின் நோக்கத்திலிருக்கிறது. இவ்வருஷம் தாகலான வியாஜ்யங்களின் எண்ணிக்கை மிகவும் அதிகம். 1,537 வியாஜ்யங்கள் வரையில் மத்யஸ்த ஏற்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டு 1,195 தீர்மானமாகி யிருக்கின்றன. ப்ரொவின்ஷியல் கோவாபரேடிவ் கான்பரென்ஸ் இந்த காலத்திற்குள் நடைபெறவில்லை. விவகரிக்க வேண்டிய முக்கியமான விஷயங்கள் ஒன்றுமில்லை என்று ரிஜிஸ்ட்ராரவர்கள் சொன்னதும் சரியே.

## இந்தியாவில் கோவாபரேஷனின் அபிவிருத்தி.

(பின்வருபவை "ஜனபிமானி" யிலிருந்து யெடுக்கப்பட்டது.)

இந்தியாவில் சென்ற 1916-17-ம் வருஷத்திய கோவாபரேஷனுடைய நிலைமையைப் பற்றிய கணக்குகள் ஸமீபத்தில் வெளியாகியிருக்கின்றன. இந்தக் கணக்குகளில் வடமேற்கு எல்லைமாகாணங்கள், டில்லி, பலூசிஸ்தானம் ஆகிய இவைகளின் கணக்குகள் சேரவில்லை. அவ்விடங்களில் கோவாபரேஷன் அதிகம் பரவாததே அதற்குக் காரணம். பரோடாவிலும், மைஸூர் ராஜ்யத்திலும் கோவாபரேஷன் அதிகமாகப் பரவியிருப்பதால், அவற்றின் கணக்குகள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இந்தக் கணக்குகளிலிருந்து ஒவ்வொரு வகையிலும் இந்தியா முழுவதுக்கும் ஆகும் எவ்வளவு முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிற தென்பதையும், மற்றமாகாணங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கையில் சென்னை இராஜதானி ஒவ்வொரு அம்சத்திலும் எத்தனைவதாக இருக்கிற தென்பதையும் குறிப்பிடுகிறோம்.

சென்ற 1915-16-ம் வருஷத்தில் இந்தியா முழுவதுக்கும் எல்லா வகை ஸங்கங்களும் சேர்ந்து 19,675 ஸங்கங்கள் இருந்தன. 1916-17-ம் வருஷத்தில் 23,036 ஸங்கங்கள் இருந்தன.

1916-17-ம் வருஷத்தில் சென்னை இராஜதானியில் 2,216 ஸங்கங்கள் இருந்தன. வங்காளம், ஐக்யமாகாணங்கள், பஞ்சாப், பர்மா, மத்யமாகாணங்கள் ஆகிய இவை ஒவ்வொன்றிலும் இதற்கு அதிகமாகவே ஸங்கங்கள் இருந்தன.

இந்தியா முழுவதுக்கும் மெம்பர்களின் தொகை 1915-16-ம் வருஷத்தில் 9,18,436 ஆகும். 1916-17-ம் வருஷத்தில் 10,45,425 ஆகும். மெம்பர்கள் விஷயத்தில் சென்னை இராஜதானிதான் முதன்மையாக நிற்கிறது. அதில் சென்ற 1916-17-ம் வருஷத்தில் 1,65,696 மெம்பர்கள் இருந்தார்கள். மற்ற மாகாணங்களில் மெம்பர்களின் தொகை குறைவுதான்.

## ஸெண்ட்ரல் பாங்கிகள்.

இந்தியா முழுவதிலும் இருந்த ப்ரொவின்ஷியல் பாங்கிகள், ஸெண்ட்ரல் பாங்கிகள், யூனியன்கள் ஆகிய இவைகளின் மொத்தத் தொகை 262 ஆகும். (1915-16-ம் வருஷத்தில் 244-தானிருந்தன.) இவைகளில் உள்ள மெம்பர்களின் தொகை (1915-16-ல்) 47,776-லிருந்து (1916-17-ல்) 76,195 ஆக உயர்ந்தது. ஷேர் முதல் பணமும் 400 லக்ஷம் ரூபாயிலிருந்து 480 லக்ஷமாக உயர்ந்தது. இவைகளின் நிகரலாபம் 7,09,650 ரூபாயிலிருந்து 8,98,705 ரூபாயாக உயர்ந்தது.

ஸெண்ட்ரல் பாங்கிகள் விஷயத்தில் சென்னை இராஜதானி 6-வதாக இருக்கிறது. இங்கே 13 ஸெண்ட்ரல் பாங்கிகள் தான் இருக்கின்றன. வங்காளத்தில், 47-ம், பேஹார் ஒரிஸாவில் 21-ம், ஐக்யமாகாணங்களில் 58-ம், பஞ்சாபில் 41-ம், மத்ய மாகாணங்களில் 31-ம் இருக்கின்றன.

## ப்ரைமரி ஸங்கங்கள்.

விவஸாயிகளுக்கான ஸங்கங்கள், இதரர்களுக்கான ஸங்கங்கள் ஆகிய இவைகளைப்பற்றிய சுருக்கமான கணக்குகள் பின்வருமாறு.

| ஸங்கங்கள். | வருஷம். | ஸங்கங்களின் தொகை. | மெம்பர்கள். | மூலதனம் லக்ஷம் ரூபாய். | லாபம். லக்ஷம் ரூபாய். |
|---|---|---|---|---|---|
| விவசாயிகளுக்கானவை. | 1915-16... | 17,729 | 7,16,858 | 515 | 19.88 |
| | 1916-17... | 20,725 | 7,84,252 | 596 | 17.75 |
| இதரர்களுக்கானவை. | 1915-16... | 1,019 | 1,48,195 | 116 | 5.18 |
| | 1916-17... | 1,209 | 1,76,798 | 147 | 6.56 |



விவஸாயிகளுக்கான ஸங்கங்கள் விஷயத்தில் சென்னை இராஜதானி
யானது 6-வது ஆக இருக்கிறது. சென்னை இராஜதானியில் 1921-ம், வங்
காளத்திலும் 2857-ம், ஐக்கியமாகாணங்களில் 3003-ம், பஞ்சாபில் 3417-
ம், பர்மாவில் 1985-ம் மத்யமாகாணங்களில் 3303-ம் இருக்கின்றன. ஸங்
கங்களிலுள்ள மெம்பர்கள் விஷயத்திலோ என்றால், இரண்டாவதாக
இருக்கிறது. சென்னை இராஜதானியில் 1,18,939 மெம்பர்களும், பஞ்சா
பில் 1,29,544 மெம்பர்களும் இருந்தார்கள். மற்ற மாகாணங்களில்
மெம்பர்களின்தொகை சென்னை இராஜதானியிலுள்ளதைவிடக் குறைவு.
விவஸாயிகளல்லாத இதரர்களுக்கான ஸங்கங்களில் சென்னை இராஜதானி
முதன்மையாக இருக்கிறது. இங்கே 224 ஸங்கங்கள் இருக்கின்றன.
மற்ற மாகாணங்களின் தொகை இதற்குக் குறைந்தது.

சென்ற வருஷத்தில் (1916-17.) ஸூபர்வைஸிங் (மேற்பார்வை
செய்யும்) யூனியன் 495 இருந்தன. (அதற்கு முந்தினவருஷத்தில் 361.)
சென்ற வருஷத்தில் சென்னை இராஜதானியில் 57 யூனியன்களும் அவை
களின் கீழ் 63 மேற்பார்வை ப்ரதிநிதிகளும் இருந்தார்கள். இந்த யூனி
யன்களில் 1388 ஸங்கங்கள் மெம்பர்களாக இருந்தன. கால்நடை
இன்ஷூரன்ஸ் ஸங்கங்கள் பர்மாவில் தான் அதிகம். அங்கே இப்படிப்
பட்ட ஸங்கங்கள் 324 இருந்தன. குடகில் 10 இருந்தன. ஐக்யமாகா
ணத்தில் 5 இருந்தன. வங்காளத்தில் 1. பம்பாயில் அந்த வருஷத்தில் 4
ஸங்கங்கள் ஏற்பட்டு மூலதனம் சேர்த்துக் கொண்டிருந்தன. சென்னை
இராஜதானியில் இப்படிப்பட்ட ஸங்கங்கள் ஒன்றுமே கிடையாது.

# கடலூர் அஸிஸ்டெண்ட் ரிஜிஸ்ட்ராரின் ஸர்க்குலர்

(1918 ஞூ R. C. No. 587.)

நஞ்சை நிலங்களுக்கு எருவாக மேற்கு தேசங்களில் உற்பத்தி
செய்யும் மீன் எருவை அல்லது மீன் க்வானோ உபயோகப் படுத்து
வதினால் நிலவளம் விருத்தியாகு மென்று விவசாய டிப்டிடைரக்டர்
அவர்கள் தெரிவிக்கிறார். இந்த எருக்கள் மூலமாய் நஞ்சைசாகுபடிசெய்து
வருகிறவர்களுக்கு மிகவும் தகுந்தது. புதிதாய் நஞ்சைக்கு பண்படுத்

தியநிலங்களுக்கு அவ்வளவு சிலாக்கியமல்ல. க்வானோஎரு மலையாளத்தில் ஒரு டன் ரூ. 15 விலையாகும், அந்த ஒரு டன் எருவை 10 ஏக்ரா நிலத்திற்கு உபயோகப்படுத்தலாம். ஆனால் சாதாரண மீன் எருவுக்கு டன் ஒன்றுக்கு ரூ. 37 முதல் 42 ரூபாய்க்குள் அகப்பட்டாலும் க்வானோ எருவைப்போல் அவ்வளவு கொழுப்புள்ளதாய்க் காணப்படவில்லை. இதில் ஒரு டன் எரு $5\frac{1}{2}$ ஏக்ராவுக்குத்தான் போதுமானது. இத்துடன் க்வானோ பக்ஷிகள், பூச்சிகள் இவைகளின் தொந்தரவில்லாமல் வைத்துக் கொள்ளலாம். ஆகையால் ஷை எருக்கள் வேண்டியவர்கள் மேற்கு தேசத்திய மழைகாலமாகிய ஆடி மாஸம் வருவதற்குமுன் தருவித்துக் கொள்ளலாம். தற்காலத்தில் எருக்களை ரயில் மூலமாய் வரவழைக்கிறதில் எருவிடும் காலத்துக்குள் வந்து சேராமல் போகக்கூடும். தஞ்சாவூர் ஜில்லாவில் நீடாமங்கலம் எருச் சங்கமூலமாய் ஓலே மொத்தமாய் தருவித்து அங்கேயிருந்து ரயில் ஒருவேளை உதவாமல் போனாலும் வண்டிகளில் கொண்டுபோகலாம். தென்னாற்காடு ஜில்லாவில் ரெட்டணை, கள்ளக்குரிச்சி விவசாய சங்கங்கள் மொத்தமாய் தருவித்து மெம்பர்களுக்கும் மற்ற சங்கங்களுக்கும் கொடுக்கலாம்.

(நீடாமங்கலம் ரெட்டணை, கள்ளக்குரிச்சி சங்கங்களுக்கும், யூனியன்களுக்கும், இன்ஸ்பெக்டர்களுக்கும்)


# மதராஸ் புல்லெடின் ஆப் கோவாபரேஷன்

என்னும்

# சென்னைக் கூட்டுத்தொழில் வர்த்தமானி


26 SEP 1918

சம்புடம் IX] 1918ஹ ஜூன்மீ [இலக்கம் 12

## பத்திராதிபரின் குறிப்புகள்

---

### ஜன்மதின கௌரவப்பட்டங்கள்.

கூட்டுறவுச் சங்கங்களின் உதவி ரிஜிஸ்டிராரான மிஸ்டர், A.
வேதாசல ஐயருக்கு ராஜ சக்கரவர்த்தியின் ஜன்மதினத்தை யனுசரி
த்து ராவ் பகதூர் என்ற பட்டம் வழங்கப்பட்டுளது. அதனால்
இம்மாகாணத்திலுள்ள கூட்டுறவுக்காரர்கள் அனைவருக்கும் 'மிக்க
திருப்தியுண்டு. கூட்டுறவு முயற்சியில் தமக்குள்ள சிரத்தையினாலும்
ஊக்கத்தினாலும், எல்லாவற்றிற்கும் மேலாக ஏழைகளிடம் தமக்குள்ள
அபிமானத்தினாலும் அவர் பலராலும் நன்கு மதிக்கப் பெற்றவர். அவரு
டைய முயற்சியையும் ஊக்கத்தையையுமே ஆதாரமாகக் கொண்டு கள்
ளர், தோட்டிகள், சென்னை உப்புப்பொதி சுமப்பவர்கள் ஆகிய இவர்களின்
நன்மையைக்கருதி கூட்டுறவுச் சங்கங்கள் எற்படலாயின. கூட்டுறவு முய
ற்சிசம்பந்தமான உழைப்பும் தக்க உழைப்பாகுமென சமீபத்தில் கவர்ன்
மெண்டாருக்குத் தோன்றியிருக்கிறது. ஆயினும், கூட்டுறவு முயற்சியில்
சம்பந்தப்பட்டுள்ளவர்களுக்கு இது வரையில் ராவ் ஸாஹிப், ரெய் ஸா
ஹிப் என்ற இருவகைப்பட்டங்களே அளிக்கப்பட் டிருக்கின்றன. முக்
கியமாக, கூட்டுறவு முயற்சியில் உழைக்கும் உத்தியோகஸ்த ரல்லாதவர்
களுக்கு கெய்ஸரி ஹிந்து பதக்கம் அளித்தல் நலமாகுமென நமக்குத்
தோன்றுகிறது. ஜன சமூகநன்மை, பரோபகாரம் இவைகளில் யாடு
படுபவருக்கு அப்பதக்கம் அளிப்பதென்ற கோட்பாடு உண்டு. கூட்டுறவு
முயற்சியில் தீவிரமாக உழைப்போரில் சமான்யமான பலரும் நிலை
மையில் உள்ளவர்கள். பட்டங்கள் பெறுவதில் அவர்களுக்கு அவ்வளவு

மனமிராது. ஆயினும் அப்பதக்கத்தைப் பெறுவதினால் அவர்களுக்கு அவ்வளவாக வெறுப்பு இராதென்றே நாம் சொல்வோம். பம்பாயிலே கூட்டுறவு முயற்சியில் உழைப்போருக்கு அப்பதக்கம் அளிக்கப்பட்டுளது. ஆதலின், இங்கும் அவ்விதமே பதக்கமளிக்கும் வழக்கம் ஏற்படுமென நினைக்கிறோம்.

## ஸிம்லாவில் கான்பரன்ஸ்.

கூட்டுறவுச் சங்கங்களின் ரிஜிஸ்ட்ரார்களது கான்பரன்ஸ் ஸிம்லாவில் நடைபெறுமென்று சிறிது காலத்திற்குமுன் அறிவிக்கப்பட்டதல்லவா? ரிஜிஸ்ட்ரார்கள் மட்டும் கூடினால் போதாதென்றும், ஜனசமூகப் பிரதிநிதிகளிற் சிலரையும் தருவிக்க வேண்டுமென்றும், தருவித்தால் ஜனசமூக அபிப்ராயங்களை நன்கு உணர்ந்துகொள்ள முடியுமென்றும்; மத்திய மாகாணத்திலே கூட்டுறவு முயற்சி சம்பந்தமாய் மிக்க உழைப்பும் சிரத்தையும் கொண்டிருக்கும் கனம் மிஸ்டர் K. N. கெல்கார் என்பவர் பத்திரிகைகளுக்கு ஒரு கடிதம் எழுதினார். அவர் எழுதியது வியர்த்தமாய்ப் போகவில்லை. ஏனென்றால், இம்மாகாணத்திலுள்ள கூட்டுறவுக்காரர்களின் பிரதிநிதியாக உத்தியோகப் பற்றில்லாத ஒருவர் அக்கான்பரன்ஸுக்கு அழைக்கப்பட்டிருக்கிறார்.

## ஸர் விசுவேசுவர ஐயாவின் பிரசங்கம்.

மைசூர் பொருளாதார கான்பரன்ஸின் இவ்வருஷத்தியக் கூட்டம் ஜூன்மீ 17உ யன்று நடைபெற்றது. அக்கூட்டத்தில் மைசூர் திவானாகிய ஸர்விசுவேசுவர ஐயா அக்கிராசனம் வகித்து அருமையானபிரசங்கமொன்று செய்தார். அப்பொழுது, மைசூரில் பொருளாதார நிலைமையையும் ஏகாதிபத்தியத்தில் இதர பாகங்களது திரவிய நிலைமையையும் அவர் ஒப்பிட்டுச் சொன்னதோடு, நம்மவரின் திரவியமூலம் ஏராளமாயிருந்தும் அதை ஜாஸ்தி அபிவிருத்தி செய்யவில்லையென்றும், இன்னின்னவாறு ஒவ்வொரு கிராமத்திலும் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படவேண்டுமென்றும் சுட்டிச் சொன்னார். நம்மவரின் திரவிய நிலைமையைக் குறித்து அவர் சொன்னதின் ஸாரம் என்னவென்றால்:—"மைசூரிலே தலைக்கு ஏற்படும் சராசரி ஆஸ்தி 384 ரூபாய்; கிரேட்பிரிட்டன், கனடா, ஆஸ்ட்ரேலியா, ஆகிய நாடுகளிலோ சராசரி ஆஸ்தி முறையே 6,000 ரூபாய்; 4,400 ரூபாய்; 3,960 ரூபாய்; மைசூரிலே தலைக்கு ஏற்படும் சராசரி வருஷவருமானம் 37 அல்லது 40 ரூபாய்; மேற்சொன்ன இதர நாடுகளிலோ 720 ரூபாய் முதல் 500 ரூபாய் வரையிலாகும். யுத்தம் ஏற்படுவதற்குமுன் கிரேட்பிரிட்டனிலே வருஷந்தோறும் கிடைத்து வந்த மொத்த அதிகவருமானம் நாலாயிரம் லட்சம் பவுன். மைசூரிலோ



எதுவுமில்லை. கூட்டுறவுச் சங்கங்களை யெவ்வாறு ஒழுங்குபடுத்துவதென்று பிரசங்கமூலமாய் ஜனங்களுக்குச் சொல்லவேண்டுமென்பதோடு சுட்டிக் காட்டவும் வேண்டும். எந்தவிதமான ஜீவனோபாயத்திலும் சரி, தொழிலிலும் சரி, கூட்டுறவுத் தன்மை பிரபலிக்கவேண்டும். பொதுஜனப் பிரசங்கங்களினாலும் துண்டுப் பத்திரிகைகளினாலும் சமாச்சாரப் பத்திரிகைகளினாலும் கல்விச்சாலைகளிலே கூட்டுறவு விஷயத்தைப் போதிக்கவேண்டும். நாட்டில் திரவிய நிலைமையை நன்கு ஆராய்ந்து வரவேண்டும்; கஷ்டமான திரவிய நிலைமை என்ற இருட்டு நீங்கும்வரையில் கூட்டுறவு முயற்சி என்ற தீபம் பிரகாசம் கொடுத்து வரவேண்டும்."

## கூட்டுறவு முயற்சியும் கடன் சுமையும்.

"மதுரை ஜில்லாவிலுள்ள ஒரு கிராமத்தின் திரவிய நிலைமை" என்ற தலைப் பெயரிட்டு, மைசூர் எகனமிக் ஜர்னல் என்ற சஞ்சிகையின் மே மாதப் பிரதியில் மதுரை அமெரிக்கன் கலாசாலையில் அர்த்த சாஸ்திர நிபுணராகிய மிஸ்டர், ஏ. எஸ். ஸாண்டர்ஸ் என்பவர் ஒரு வியாசம் எழுதியிருக்கிறார். மதுரையிலுள்ள ஊத்தங்குடி கிராமத்தில் இரண்டு கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன. ஒன்று ஐக்கிய நாணயச் சங்கம், மற்றொன்று விவசாயச் சங்கம். மதுரை ரெய் ஸாஹிப் K. ராமசுவாமி ஐயர் அவ்விருசங்கங்களிலும் மிக்க சம்பந்தம் உள்ளவர். இத்தகைய ஊத்தங்குடி கிராமத்தின் திரவிய நிலைமையைக் குறித்து மிஸ்டர் ஸாண்டர்ஸ் வியாசம் எழுதியிருப்பதனால், அதைக் குறித்து நாம் விசேஷமாக கவனிக்கவேண்டும். கூட்டுறவு முயற்சியில் மிஸ்டர் ஐயருக்கு மிக்க சிரத்தை யுண்டென்றும், ஊத்தங்குடி ஜனங்களின் சுகவாழ்வில் அவருக்கு அதிகமான அபிமானம் உண்டென்றும், மிஸ்டர் ஸாண்டர்ஸ் என்பவர் சொல்லி யிருப்பதைக்காண நமக்கு சந்தோஷம் உண்டாகிறது. சென்ற 10 வருஷகாலத்திற்குள்ளே அக்கிராமத்தாரின் திரவிய நிலைமை மிகவும் உயர்ந்திருக்கிறதென அவர் அபிப்பிராயப்படுகிறார். அவர் சொல்லும் வண்ணம், பத்து வருஷத்துக்கு முன்னே அக்கிராமத்தாருக்கு இருந்த கடன் 60,000 முதல் எழுபது ஆயிரம் வரையிலாகும். அதாவது தலைக்கு 1,500 ரூபாய் கடன் இருந்தது. தவிர கிராமவாசிகளில் நூற்றுக்கு 75 பேர் கடன்காரராய் இருந்தனர். தற்சமயம் உள்ள நிலைமை என்னவென்றால்: கிராமத்தின் மொத்தக் கடன் தொகை 25 ஆயிரம் ரூபாயாகும். இதில் 15 ஆயிரம் ரூபாய் ஐக்கிய நாணயச் சங்கத்தின் கடனாகும். மீதியுள்ள 10 ஆயிரம் ரூபாயோ மற்றவர்களிடம் வாங்கப்பட்ட கடனாகும். ஆகவே, இப்பொழுது அக்கிராமத்தாரில் ஒவ்வொருவருக்கும் ஏற்படும் சராசரி கடன் தொகை 700 ரூபாய்; அல்லது

நூற்றுக்கு 30 பேரே கடன்காரர்கள். கூட்டுறவு முயற்சியினால் மிக்க நன்மை விளைந்திருக்கிற தென்பதற்கு மேற்கண்ட புள்ளிவிவரங்களே தக்க அத்தாட்சியாகும்.

இவ்வாறு அவர் சொல்வதை அங்கீகரிக்க நமக்கு மனமுண்டு, ஆயினும், அங்கீகரிக்க இடமில்லை. நன்கு அவர் பரிசீலனை செய்திருக்கிறாரென்றே நாம் நினைக்கிறோமானாலும், கூட்டுறவுச் சங்கம் பலப்பட்டதனாலேயே அக்கிராமத்தில் கடன்சுமை தணியலாயிற்றெனநாம் கருதுவதற்கில்லை. தவிர, கூட்டுறவுச் சங்கமுள்ள எல்லாக் கிராமங்களிலும் அவ்வாறே கடன்களும் இலகுவாய் விட்டதென்று மதிப்பதற்குமில்லை. மைசூரிலே குறிப்பான சில இடங்களில் திரவிய நிலைமையைக் குறித்து அங்குள்ள ரிஜிஸ்ட்ராரால் பரிசீலனை செய்யப்பட்டது. அதன் பயனாக, கூட்டுறவுச் சங்கங்களினால் அங்கத்தினருக்கு இலகுவில் சொற்பவட்டிக்குப் பணம்கிடைக்க வழி யுண்டானாலும், மொத்தத்திலே கிராமவாசிகளின் கடன்சுமை ஒழியவில்லை யென்றும், ஆனால் கடன்சுமை அதிகரித்திருக்கிறதென்றும் புலப்பட்டிருக்கிறது. தமது பரிசீலனையின் முடிவே சரியென்று காட்டுவதற்காக, ஊத்தங்குடி கிராமத்தையும், கூட்டுறவுச் சங்கமில்லாமல் மிகவும் கேவலமாயுள்ள கோடிக்குளம் என்ற சிறிய கிராமத்தையும் அவர் ஒப்பிட்டுச் சொல்லுகிறார். கோடிக்குளம் என்ற கிராமத்திலுள்ள பாரி மிராசுதார் மிஸ்டர் ராமசுவாமி ஐயரேயாவர். பத்து வருஷத்திற்கு முன்னாலேயே கூட்டுறவு முயற்சியை அவர் ஊத்தங்குடியில் நிலைநாட்டியிருக்க அவ்வாறே கோடிக்குளத்திலும் அம்முயற்சியை ஏன் அவர் நிலைநாட்டவில்லை, கோடிக்குளத்தைக் குறித்து அவர் கவனிக்கவேயில்லை என்று சொல்வருவதற்கில்லை.

கூட்டுறவுச் சங்கத்தை ஏற்படுத்தினால், அதைநடத்துவதற்கு குற்றம் புத்திசாலித்தனமும் பொதுநல ஊக்கமும் வாய்ந்த புருஷர்கள் இல்லாதிருக்கையில், கூட்டுறவுச் சங்கத்தை வைத்துநடத்த ஏப்படி முடியும்? இதனால்தான் கோடிக்குளத்தில் சங்கம் ஏற்படவில்லை என்று கருத வேண்டும். ஊத்தங்குடியிலுள்ள ஐக்கிய நாணய சங்கத்தைக் குறித்து மிஸ்டர் ஸாண்டர்ஸ் அவ்வளவு அழுத்தமாகச் சொல்லியிருக்கக்கூடாதென்பதே நமது கருத்து.

## மைசூரில் கூட்டுறவு முயற்சி

மைசூர் சமஸ்தானத்திலுள்ள கூட்டுறவுச் சங்கங்களைக் குறித்து சமீபத்தில் ரிஜிஸ்ட்ரார் வெளியிட்டிருக்கும் ரிபோர்ட்டில் நம் நேயர்களுக்கு ருசிகரமாயிருக்கும்படியான சில விஷயங்கள் காணப்படுகின்றன. அவைகளை இங்கே சுருக்கிச் சொல்வோம். சம்பளத்தை



அபேட்சிக்காமல் கௌரவத்திற்காகவே கூட்டுறவுச் சங்கங்களை மேற்,
பார்வை பார்க்கும் ஸூபர்வைஸர்களை சமஸ்தான அதிகாரிகள் திட்டப்
படுத்தியிருக்கிறார்கள். அவ்வாறான ஸூபர்வைஸர்கள் 56 பேர் இருக்
கின்றனர். ஒரு ஸூபர்வைஸர் ஒரு தாலூக்காவிலுள்ள சங்கங்களை
மேற்பார்வைபார்ப்பார். வருஷந்தோறும் அவர்கள் நியமிக்கப்படுகின்ற
னர். சுயநலமின்றி பொது நலத்தையே கருதி அவர்கள் வேலைசெய்து
வருவதை அனைவரும் பாராட்டவேண்டும். அவர்கள் சுற்றுப்பிரயாணஞ்
செல்லும் தினங்களில் அவர்களுக்கு தினந்தோறும் ஒரு ரூபாய்வீதம்
படிப்பணம் கொடுக்கப்படுகிறது. புதிதாக கூட்டுறவுச் சங்கங்களை
ஏற்படுத்தல், கூட்டுறவுச்சங்க முயற்சியார் நன்மையை எடுத்துச் சொல்
லுதல், சங்கங்களை மேற்பார்வை பார்த்தல், முதலியவைகளே அவர்களு
டைய வேலைகளாகும். வருஷத்திலே சராசரி அவர்கள் 140 நாள் சுற்
றுப்பிரயாணஞ் செய்திருக்கின்றன ரென்பதைக் குறிப்பிடவேண்டும்.
அது விஷயமாய் அவர்களுக்கு சென்றவருஷத்திலே கொடுக்கப்பட்ட
படிப் பணம் மொத்தத்தில் 8,400 ரூபாய் ஆகும். நெசவுக்காரர்களின்
நன்மையைக்கருதி அங்குள்ள சங்கங்கள் 23, அவைகளின் அங்கத்தினர்
1,032 பேர்; மொத்த மூலதனம் 58,875 ரூ.1,46,913 ரூபாய் பெறுமான
முள்ள நூல் கட்டுகளும் சரக்குகளும் அச்சங்கங்களால் வாங்கப்பட்டன.
1,39,984 ரூபாய் பெறுமானமுள்ள சரக்குகள் விலையாயிருக்கின்றன.
ஒன்று இரண்டு சங்கங்களைத்தவிர மீதி சங்கங்கள் திருப்திகரமாக
வேலைசெய்யவேயில்லை. நெசவுக்காரர்களிடம் காணப்படும் மதுபான
வழக்கம், எழுத்துவாசனையின்மை, கடன்சுமை ஆகிய இவைகளே
காரணமென ரிஜிஸ்ட்ரார் சொல்லுகிறார். அவர்களுக்குக் கிடைக்
கும் லாபத்தைச் சாவுகாரர்கள் எப்படியோ கொண்டுபோய் விடுகிறார்கள்.
இத்தகைய தீமைகளைப் போக்குவதற்கான ஏற்பாடுகள் அங்கே செய்யப்
பட்டுவருகின்றன.

## கோள்விலையா பஜார்விலையா?

சென்னையிலுள்ள பக்கிங்ஹாம், கர்னாடிக் யந்திரசாலைகளில் வேலை
செய்யும் தொழிலாளிகளை அங்கத்தினராகக் கொண்டு தொழிலாளர்
சங்கம் என்ற சங்கம் ஏற்பட்டிருக்கிறதல்லவா? அவர்களின் நன்மை
யை மதித்து, அவர்களுக்குரிய சாமான்களை கொள்விலைக்கே விற்பதற்
காக அச்சங்கத்தின் ஆதரவில் ஒரு மளிகைக்கடை ஏற்பட்டிருக்கி
றது. பஜார்விலைக்கு சாமான்களை விற்காமல் கொள்விலைக்கே விற்ப
தென்பது புதிய வழியாகும். பஜார்விலைக்கு விற்றால்தான் சிறிதும் லாபங்
கிடைக்க அதை அங்கத்தினர் அடைந்தனுபவிக்கலாமென்பது பல
ருடைய கொள்கை. இது சாதாரணியமான காலக் கொள்கையாகும். இப்

பொழுதோ மகா யுத்தகாரணமாக புதிய தலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன. கொள்கைகளும் மாறியிருக்கின்றன. வியாபாரியும் தரகனும் சேர்ந்து கொள்ளைலாபம் அடைந்துவிட வேண்டுமென்று கருதுவதனாலேயே ஆகாரப்பொருள்கள் பலவற்றின் விலை வெகுதூரம் உயர்ந்து விட்டதென்பது உலகப்பிரசித்தம். இதனால், பரம ஏழைகள் விலை யேற்றத்தைத் தாங்க முடியாமல் தவிக்கின்றனர். அவர்களிற் பலரோ முன்னம் வயிறு நிரம்ப சாப்பிட்டுவந்தும், இப்பொழுதோ அரைவயிறு கால்வயிறு ஆகாரத்துடன் திருப்தியடையவேண்டி யிருக்கிறது. கூட்டுறவுச் சங்கங்களிலே கொள்விலைக்கே விற்பதானால் பஜார்விலை குறையும். அதனால் தேசமுழுவதற்குமே நன்மையுண்டு. இக்காரணம் பற்றியே அயர்லாந்திலும் அவ்வாறே கொள்விலைக்கு விற்பதென்ற வழக்கம் ஏற்பட்டிருக்கிறது. சென்னைத் தொழிலாளர் சங்கத்தின் மேனிகையானது நல்ல ஸ்திதியில் இருக்கிறதெனவும், அதனால் அங்கத்தினருக்கு நன்மையுண்டெனவும் கருதுகிறோம்.

## பிரிட்டிஷ் கூட்டுறவுக்காரர்கள்.

பிரிட்டிஷ் கூட்டுறவுக்காரர்களின் ஜுபிலி காங்கிரஸ் என்ற மகாநாடு சென்ற மே மாதத்திலே லிவர்பூல் நகரில் கூடியது. மகா யுத்தக்காரணமாக பிரிட்டனிலே ஒவ்வொரு வீட்டிலும் துக்கம் உண்டானால், அம்மகாநாட்டை வழக்கம் போல அவ்வளவு மிகுதி குதூகலத்துடன் கொண்டாடுவதற்கு இடமிராமற் போயிற்று. இதற்கு முன்போலல்லாமல் தற்சமயம் அம்மகா நாட்டினர் ராஜ்ய விஷயங்களை முக்கியமாக கவனித்தனர். எனென்றால். தற்சமயமுள்ள கவர்ன்மெண்டின் சில ஏற்பாடுகளினால் கூட்டுறவு முயற்சி விஷயத்தில் குந்தகம் ஏற்படலாயிற்று. ஆதலின், அடுத்தமுறை பார்லிமெண்டு சபைக்கு மெம்பர்கள் தேர்ந்தெடுக்கப்படும்பொழுது, தங்கள் பிரதிநிதிகளும் அச்சபையில் ஸ்தானம் வகிப்பதற்கேற்ற ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று அம்மகா நாட்டினர் தீர்மானிக்கலாயினர். இன்னும் கவர்ன்மெண்டின் ஏற்பாடுகளினால் உண்டாகும் இடையூறுகளைக் குறித்தும் ஆட்சேபித்து தீர்மானங்கள் செய்திருக்கிறார்கள். முதலாளிகள் சேர்ந்துக்கொண்டு கொள்ளை லாபம் அடையப் பார்ப்பதையும், அவர்களுக்கு ராஜாங்கத்திலே எப்படியோ செல்வாக்கு ஏற்பட்டிருப்பதையும் பற்றி மகா நாட்டின் அக்கிராசனாதிபதி கண்டித்துப் பேசியதோடு, சுரங்கங்களென்ன, ரயில்பாதைகளென்ன, இதர சொத்துக்களென்ன இவைகளை கூட்டுறவுச் சங்கத்தினர் அடைய வழி தேடவேண்டுமென்றும், முதலாளிகளின் விபரீதசூழ்ச்சிகளைப் போக்க எல்லாரும் ஒருமனப்பட்டு உழைக்கவேண்டு மென்றும் குறிப்பிட்டுச் சொன்னார்.



26 SEP 1918

## குழந்தைகளுக்கு அன்னமும் வசதியும்

ஜெர்மனியிலுள்ள ஹாம்பர்க் என்ற நகரிலே ஒரு கூட்டுறவுச் சங்கம் உளது. அதில் விசேஷமான ஏற்பாடு ஒன்றுண்டு. சரக்குகளைத் தயார்செய்து விற்பதே அச்சங்கத்தின் நோக்கம். அச்சங்கத்தின் அங்கத்தினர்களான தொழிலாளர்களுடைய குழந்தைகளின் நன்மையை மதித்து ஓர் புதிய ஏற்பாடு செய்யப்பட்டுளது. அக்குழந்தைகள் வருஷத்திலே சிறிது காலம் உல்லாசமாய் வசிப்பதற்குற்ற விடுதியொன்றைக் கட்டியிருக்கின்றனர். அவ்விடுதியில் இருக்கும்பொழுது, அவர்களுக்கு சாப்பாடு இனமாகப் போடப்படும். தவிர வாடகை யின்றியும் அதில் வசித்துவரலாம். இதற்காக தக்க அளவுபணத்தை அங்கத்தினர்கள் தங்கள் லாபத் தொகையிலிருந்துதான் எடுத்து வைத்திருக்கின்றார்கள். அப்பணத்திற்கு கிடைக்கும் வட்டியைக் கொண்டு வருஷத்திலே நான்கு வார காலம் ஆயிரம் குழந்தைகளுக்கு அவ்விதம் ஆதரவளிக்க முடியும்.

## நல்ல ஏற்பாடு.

நெல்லூர் முனிசிபாலிடியிலுள்ள சுங்கம் கேட் கண்டிராக்டர்கள் டிபாசிட்டாகக் கட்டும் தொகையை நெல்லூர் டிஸ்டிரிக்ட் பாங்கிங் யூனியனில் போட்டுவைக்க வேண்டுமென்று நெல்லூர் முனிஸிபல் சபையார் தீர்மானித்தனர். இத்தீர்மானத்தை சென்னை கவர்ன்மெண்டார் அங்கீகரித்து அவ்வாறே செய்யலாமென்று உத்தரவு செய்திருக்கின்றனர். பாங்கிங் யூனியன்கள் இருக்கும்படியான மற்ற ஜில்லாக்களிலும் முனிஸிபால்டியார்கள் அவ்வாறே ஏற்பாடு செய்யவழி தேடினால் நலமாய் இருக்கும். தற்சமயம் நெல்லூரில் கலெக்டராய் இருப்பவரும் முன்னம் ரிஜிஸ்டிராராய் இருந்தவருமான திவான் பகதூர் L. D. ஸ்வாமிக்கண்ணுபிள்ளை அவர்கள் மேற்படி விஷயத்தில் சிரத்தை காட்டி ஏற்பாடு செய்திருப்பார் என்றே நாம் நம்புகிறோம்.

## சங்க காரியதரிசிகள் அறியவேண்டிய விஷயங்கள்.

கிராமநாணயச் சங்கங்களின் பைலாக்களில் கண்டிருக்கும் சட்டதிட்டங்களைத் தவிர காரியதரிசிகளின் கீழ்க்கண்ட இதரப் பொறுப்புகள் சென்ற ஐக்கிய மாகாண கான்பரன்ஸில் பிரேரிக்கப்பட்டன.

1. ஒரு கூட்டச் சொஸைடிகளை நிர்வகிக்கும் செக்ரிடேரி தன் கூட்டத்திலுள்ள ஒவ்வொரு சொஸைடியின் மாதாந்தர மீட்டிங்கையும் அச்சொஸைடியின் பஞ்சாயத்தாரோடு கலந்து ஸூபர்வைஸரின் அனுமதியின் பேரில் நிர்த்தாரணம் செய்யவேண்டும். ஒரு செக்ரிடேரியின் ஆளுகையிலுள்ள சொஸைடிகளில் ஒரே தினத்தில் இரண்டு மீட்டிங்குகள் ஏற்படுத்தக்கூடாது.

2. மீட்டிங்கு தினம் முழுவதும் அவர் அந்த கிராமத்தில் ஆஜராயிருக்கவேண்டும்.

3. மாதாந்திர மீட்டிங்கு காலத்தைத் தவிர இன்னம் குறைந்த பக்ஷம் ஒரு தடவையாவது ஒவ்வொரு மாதமும் செக்ரிடேரி ஒவ்வொரு சொஸைடிக்கும் போய் சௌகரியப்பட்டால் பஞ்சாயத்து மீட்டிங்கு ஏற்படுத்தியும், அகப்படக்கூடிய மெம்பர்களை யெல்லாம் பார்த்தும் பணம் திருப்பிக் கொடுத்தல் முதலிய விஷயங்களைப் பற்றி அவர்களை விசாரித்தும் இது முதலிய பல வேலைகளைச் செய்யவேண்டும்.

4. செக்ரிடேரி ஒரு டைரி (குறிப்புப் புத்தகம்) வைத்துக்கொண்டு அதில் தான் செய்த வேலைகளையும் ஒவ்வொரு கிராமத்திலும் தான் காலம் கழித்த விவரங்களையும் எழுதி வைக்கவேண்டும். சூபர்வைஸர் தன் சோதனை காலங்களில் இந்த டைரிகளை கவனமாய்ப் பார்ப்பார்.

5. வசூல் காலங்களிலும் பஞ்சாயத்தார் அல்லது சூபர்வைஸர் உத்தரவு செய்தாலும் வேறு காரணமிருந்தாலும் செக்ரிடேரி அதிகத்தடவைகளில் சங்கத்தைப் பூர்வையிடவேண்டும்.

6. செக்ரிடேரிதன் கணக்குப்புஸ்தகத்தில் அந்தந்த மெம்பர்களின் பாஸ்புத்தகத்தில் எழுதாத யாதொரு வரவுசெலவையும் எழுதக்கூடாது. பாஸ்புத்தகம் கிடைக்காவிட்டால் வசூல் செய்த தொகையை தேதியுடனும்மெம்பரின் பெயருடனும் ப்ரொஸீடிங் புஸ்தகத்தில் குறித்துவிட்டு தான் மறுதடவை அந்த சொஸைடிக்குப் போகும்காலத்தில் பாஸ்புஸ்தகத்தைத்தருவித்து அதில் எழுதவேண்டும்.

7. ஒவ்வொரு மீட்டிங்கிற்கும் ஆகவேண்டிய நடவடிக்கைகளை புஸ்தகத்தில் குறித்து அவசியமான பைலாக்களையும் தணிக்கைக் குறிப்புகளையும் ஒவ்வொரு மெம்பரின் கணக்குகளையும், சொஸைடியின் மொத்தக்கணக்கையும் ஆஜராயிருக்கும் ஒவ்வொருவருக்கும் விவரித்துச் சொல்ல வேண்டும்.

8. சொஸைடிக்கணக்கு சம்பந்தமான யாதொரு பணத்தையும் செக்ரிடேரி கையாடக்கூடாது.

9. ஒவ்வொரு வசூல்காலத்திற்கு முன்னும் செக்ரிடேரி யானவர் கடன்பாக்கிகள், வட்டி, பங்குப்பணம் எல்லாவிதமான புதுத்தண்டல்கள் இவைகளை யெல்லாம் காட்டும் ஜாப்தா ஒன்று தயாரித்து அந்தந்த சொஸைடியின் பஞ்சாயத்திற்கு அனுப்ப வேண்டும்.

10. 'தாவில்'ஐப் பற்றிய சட்டங்களை மீறிய எல்லா சம்பவங்களையும் உடனே சூபர்வைஸருக்குத் தெரிவிப்பதோடு எந்தமுக்கியமான காரி



யங்களையும் சந்தர்ப்பங்களின் அவசியப்பிரகாரம் அறிவிக்கவேண்டும். மேலும் தான் சொஸைடியின் ஊழியன் என்பதை உணர்ந்து அதற்குத்தக்கபடி நடக்கவேண்டும்.

11. வருஷாவருஷம் தன் இலாகாவிலுள்ள ஒவ்வொரு மெம்பரின் ஆஸ்திக்கடன் கணக்குகளையும் தயாரித்து அக்டோபர்மாதம் 31-ம் தேதிக்குள் பூர்த்தி செய்யவேண்டும்.

12. சொஸைடிகளுக்காக கடன் மனுக்களை ஏற்படுத்தபடிருக்கும் பாரங்களில் எழுதிகொடுத்து சொஸைடிகளில் கடன் விநியோகம் குறிக்கப்பட்ட விஷயங்களுக்கு மாறாக இருந்தால் உடனே சூபர்வைஸருக்கு ரிபோர்டு செய்யவேண்டும்.

### அயர்லாந்தில் கோவாபரேஷன்.

பின்வருபவன 'ஐரிஷ்ஹோம்ஸ்டெட்' என்னும் பத்திரிகையின் சமீப பிரதி ஒன்றிலிருந்து எடுத்த விஷயத்தின் சாராம்சம்:—

### 1916-ம் வருஷத்தின் கோவாபரேடிவ் இலக்கக்குறிப்புகள்.

"ஐரிஷ் அக்ரிகல்சரல் ஆர்காணிஸேஷன் சொஸைடி (Irish Agricultural Organisation Society) யின் 1917-ம் வருஷம் மார்ச்சு மாதம் 31-ம் தேதி யுடன்முடிவடையும் வருஷாந்திர ரிபோர்டு,1916 ஆ டிசம்பர்மீ 31-உ யுடன் முடிந்த வருஷத்தில் சொஸைடிகளுக்கு ஏற்பட்ட இலக்கங்களோடு இப்பொழுதுதான் அச்சிடப்பட்டது. பிரஸ்தாப வருஷத்திலிருந்த 958 சங்கங்களிலுள்ள மெம்பர்களின் தொகை 106,734. கொடுக்கப்பட்டிருக்கும் பங்குத்தொகை 245,580 பவுன் கடன் இனத்தில் வந்ததொகை 3,13,740 பவுன். வியாபாரத்தில் நடமாடினதொகை 60,99,880 பவுன். கணக்குகள் கொடுபடாத தொகை இன்னம் ஒரு லக்ஷம் பவுன் அல்லது அதிகமாகவும் சேர்க்கலாம். மீதித்தொகைக்கு ஒரு டசன் பால் சொஸைடிகளின் இலக்கங்களைச் சேர்த்தால் எளிதாய் அக்கணக்கிற்கு வந்துவிடும். இவ்வியக்கத்தில் புரண்டுகொண்டிருக்கும் பொருள் கோடிக்கணக்கில் வளர்ந்துகொண்டிருக்கிறது. 1913-ம் வருஷத்தில் அது 33,33,189 பவுனுகவிருந்தது, 1914-ல் 36,68,958 பவுனுகவும் 1915-ல் 46,57,039 பவுனுகவும், 1916-ல் 60,99,889 பவுனுகவும் அதிகரித்துக் கொண்டிருக்கிறது. சென்ற வருஷத்தில் அயர்லாந்திலுள்ள விவசாய கோவாபரேடிவ் சொஸைடிகளுள் புரண்டுகொண்டிருந்த தொகை எழுபது லக்ஷம் பவுனுக்குமேல் இருந்திருக்கவேண்டுமென்று நினைக்கிறோம். அத்துடன் நகரச்சொஸைடிகள்

செய்திருக்கும் வேலைக்காக பத்து லக்ஷம் பவுன் சேர்க்கப்பட்டால் இந்நாட்டில் கோவாபரேடிவ் இயக்கம் எவ்வளவு முனைவில் வேலை செய்கிறதென்று தெரியவரும். அயர்லாந்தில் கோவாபரேஷனின் அபிவிருத்தியினால் அவ்வியக்கத்தை விளக்கிக் கொண்டு முன் வந்தவர்கள், அபிவிருத்திசெய்ய உதவினவர்கள், ஏற்படுத்தினவர்கள், கமிட்டிகள், மிராசுதார்கள் இவர்கள் எல்லாருக்கும் விசேஷகௌரவம் என்பதில் ஆக்ஷேபணையில்லை. பிரிட்டிஷ் ராஜாங்கத்திலாவது, யுனைடெட் ஸ்டேட்டிலாவது விவசாயிகளுடைய ஐக்கியசங்கம் இதைவிடப் பெரிதாகக்காணமுடியாது. அநேகநாடுகளுக்கு இதன் வேலையானது விவசாயக் கோவாபரேஷனின் ஒழுக்கங்களை நடித்துக்காட்டும் உதாரணமாயிருக்கிறது. அயர்லாந்தில் இன்னம் விசேஷமான முயற்சிகள் சாத்தியமாகும் என்றும் இன்னம் அதிகத் தொழில்தனங்கள் சேருவதனால் அநேகவேலைகள் செய்ய முடியும் என்றும் யாவரும் சொல்லும்படியான நிலைமையை கோவாபரேஷன் அடைந்திருக்கிறது. மேலும் விவசாயிகளுக்கு இவ்வியக்கத்திலுள்ள அபிமானத்தினால் தங்கள் வேலைகள் எல்லாவற்றையும் ஐக்கிய முயற்சி மார்க்கத்திலேயே செய்ய ஆவலுண்டாயிருக்கிறது.

## பிரிவினை ஐக்கிய முயற்சியின் வளர்ச்சி

இலக்கங்களை இன்னம் கவனித்துப்பார்த்தால் வியாபார ஏற்பாட்டில் பின்வரும் பிரிவினைகள் காட்டப்படுகின்றன. பாற்சங்கங்கள், 4,512,193 பவுன்; விவசாயசங்கங்கள் 481,473 பவுன்; நாணய சங்கங்கள் 41,281 பவுன்; கோழிச்சங்கங்கள் 118,022 பவுன்; சில்லரைச் சொஸைடிகள் 246,956 பவுன்; சணல் சொஸைடிகள் 198 பவுன்; படரேஷன் சொஸைடிகள் 699,057 பவுன்.

இவ்விலக்கங்களை இன்னம்கூர்மையாய் பிரித்துப்பார்த்தால் 1916-ம் வருஷத்தின் மொத்த வியாபாரத்தில் 3,871,588 பவுன் வெண்ணெய் வியாபாரத்திலும், 2,228,292, பவுன் விவசாயம், கோழி, லேவாதேவி முதலியவைகளிலும் ஈடுபட்டிருப்பதாகத் தெரிகிறது. பாற்சாலை நீங்கலான இதர ஐக்கிய முறைகள் மெதுவாய் அபிவிருத்தி யடைந்து வருகிறது. 1913-ம் வருஷத்தில் வெண்ணெய் விற்பனை மாத்திரம் 23 23, 441 பவுன்; இதர விற்பனைகள் 954,250 பவுன்தான். இவ்வியக்கத்தின் கிரய விக்கிரயபாகத்தில் இவ்விசேஷ ஏற்றத்தை கவனிக்க நமக்கு மிக சந்தோஷமுண்டாகிறது. பாற் சங்கங்களிலிருந்து வரும் அநேக கணக்குகளில் மெம்பர்களின் விவசாய விஷயங்களுக்கு வேண்டியவைகளை சேர்த்து வைக்கவேண்டும் என்கிற உணர்ச்சி இருப்பதாகத் தெரிகிறது. மேலும் அநேக சங்கங்கள் மளிகை வியாபாரமும் வைத்துக்கொண்டு



தங்கள் மெம்பர்களுக்கு வேண்டிய வீட்டு சாமான்களும் வாங்குகின்றன என்றும் நம்புகிறோம். இந்த "ஸ்டோர்" சொஸைடிகளை, ஸ்காட்லாண்டிலும் இங்கிலாந்திலும் சாத்தியமானதுபோல அயர்லாந்திலும் உற்பத்தி ஐக்கிய முறையால் முன்னேற்றம் அடையும்வரையில் விருத்தி பண்ணிக் கொண்டிருக்க வேண்டும். இவ்விஷயத்தை யுத்தம் முதலிய கலவரத்தினால் கவலைப்படாமல் இந்நாடு கவனிக்கும் சக்தியைப் பெற்றால் முதல் முதல் செய்யவேண்டியவிஷயம் வியாபாரத்தில், குறிப்பிட்ட இலசாமான்களைப்பற்றிய தீவிர விசாரணையைச் செலுத்தி அவ்விளைவுக்கு கோவாபரேடிவ் முயற்சி தேவையானதா என்பதை தீவரமாய் அறிந்து கொள்ள வேண்டும். இம்மாதிரி ஏற்பாட்டால்தான் நகரச் சொஸைடிகளுக்கும் கிராமச் சொஸைடிகளுக்கும் அவ்வவைகளின் சௌகரிய ஒற்றுமையை அநுசரிக்கச்செய்து ஐக்கிய முயற்சியை உண்டாக்கலாம். மேலும் இவ்விருவகைச் சங்கங்களுக்கும் இருக்கிற பரஸ்பர உபயோகங்களை எடுத்துக்காட்டி ஒற்றுமையை வற்புறுத்துவது அழகேயொழிய சமீபத்தில் 'ஆர்மாக்' என்னுமிடத்தில் சிலர் இவை இரண்டிற்கும் இணைக்கக்கூடாத பிரிவினை யிருக்கிறது என்று சொன்னதுபோல் சொல்லக்கூடாது. இப்பேச்சுகள் சிலவற்றைப்பற்றி பின்னால் கவனிப்போம். விசேஷமாய்ப் பிரிவினை முயற்சியிலேயே ஈடுபடும் பட்டினத்துக் கோவாபரேடருக்கு அடியில் வருமாறு வற்புறுத்தினால் போதும். அதாவது நாட்டுக் கோவாபரேடர் தனக்கு பிரிவினை வியாபாரத்தில் குறைந்தபக்ஷம் சமம்தான் என்றும் தங்களுக்கு வேண்டியவைகளை தாங்களே செய்து கொள்ள ஆசைப்படும் பட்டினத்துக் கோவாபரேடரின் கனவானது கோவாபரேஷனின் உறவால்தான் சமீப காலத்தில் ஜயம் பெறக்கூடியதென்றுமாகும். இக்கொள்கையில் திட நம்பிக்கையை ஊட்டி தேச நடவடிக்கைகளை ஆய்ந்து நடத்தவேண்டியது அவசியமாகும்.

## விவசாய டைரக்டரவர்களின் ஸர்க்குலர்.

1917௵ ஜூலை௴ 7௳ கோயம்புத்தூரில் ஐக்கிய நாணய உத்தியோகஸ்தர்களும் விவசாய இலாகா உத்தியோகஸ்தர்களும் கலந்து நடத்தின கான்பரன்ஸில் பின்வரும் தீர்மானங்கள் பெறப்பட்டன.

1. விவசாய டிபார்ட்மெண்டின் டிப்டி டைரக்டர்களும் அஸிஸ்டெண்ட் டைரக்டர்களும், கோவாபரேடிவ் டிபார்ட்மெண்டின் அஸிஸ்டெண்ட் ரிஜிஸ்ட்ரார்களும் அவரவர்கள் கவனிக்கவேண்டிய வேலை சம்பந்தமாய் தாராளமாகக் கடிதப் போக்குவரத்து வைத்துக்கொண்டும் நேரிலும் கலந்து பேசவேண்டும். கோவாபரேடிவ் சொஸைடிகளின்

ரிஜிஸ்ட்ரார்களும் விவசாய டைரக்டரும் தங்கள் உத்தியோகஸ்தர்கள் தங்களுக்கு அனுப்பும் மாதாந்தர ரிபோர்டுகளின் மூலமாய் அத்தகைய வேலைகளைப்பற்றி அறிந்துகொள்வார்கள். ஏதாவது புது ஏற்பாடு ஆரம்பிக்குமுன் அவர்களின் உத்தரவு கிரமமாய்ப் பெறப்படும்.

2. நாணயமில்லாத விவசாயக் வேலையைத் தொடங்குவதாயிருந்தால் கோவாபரேடிவ் டிபார்ட்மெண்டார் விவசாய டிபார்ட்மெண்டாரோடு கலந்து ஆலோசிக்க வேண்டும். உதாரணமாக, விவசாயத் தேவைகளை ஒரு சொஸைடி வாங்குவது அல்லது கூட்டுக் கடன் பைலாவின்படி மெம்பர்களின் ஒரு கூட்டத்தார் வாங்குவதும் விளைபொருள்களை கூட்டாக விற்பதும் விவசாயக் கருவிகளைக்கூட்டாக வாங்குவதும், இன்னும் மற்ற இம்மாதிரி விஷயங்களும் இவ்வாலோசனைக்குள் அடங்கும். சில சந்தர்ப்பங்களில் கோவாபரேடிவ்வேலை மிக அவசரமாக இருக்கும். அப்பொழுது அஸிஸ்டெண்ட் ரஜிஸ்ட்ரார்கள் விவசாயப் டிபார்ட்மெண்டாரின் ஆலோசனைக்காகக் எதிர்பார்க்காமல் தங்கள் பொறுப்பிலேயே வேலையை நடத்தவேண்டும் அப்பொழுதுங்கூட விவசாய உத்தியோகஸ்தர்களுக்கு நடந்த வேலைகளைத் தெரிவிக்கவேண்டியது. அப்படிச் செய்வதனால் அவர்களுடைய அபிப்பிராயங்கள் கிடைப்பதினால், அடுத்தவருஷம் அதேவேலையை நடத்தும் விஷயத்தில் விசேஷ உபயோகமுள்ளதாகும். மேலும் நடந்து கொண்டிருக்கும் வேலையைப் பற்றி விவசாய உத்தியோகஸ்தர்களுக்குத் தெரிவித்தால் அது நடைபெற வேண்டிய ஒழுங்குகளைப்பற்றிப் பொதுவான புத்திமதிகள் அவர்களால் சொல்லமுடியும்.

3. மேற்சொன்னபடியே விவசாய உத்தியோகஸ்தர்களும் விவசாய சம்பந்தமான கோவாபரேடிவ் நாணயமில்லா வேலையை விருத்தி பண்ண முயலும்போதெல்லாம் அஸிஸ்டெண்ட் ரிஜிஸ்ட்ரார்களுக்குத் தெரிவிக்க வேண்டும். மேலும் விவசாய டிபார்ட்மெண்டின் ஜில்லா வேலைகள் நடந்துகொண்டிருக்கும் ஸ்தலங்களைப்பற்றி அடிக்கடி அஸிஸ்டெண்ட் ரிஜிஸ்ட்ரார்களுக்குத் தெரிவிக்கவேண்டும். ஏனென்றால் கூடியவரையில் இந்த பாகங்களை கோவாபரேடிவ் மார்க்கத்திலும் விருத்தி செய்யலாம்.

4. சமாசாரங்களைப் பற்றியாவது அல்லது யோஜனைகளைப்பற்றியாவது யேற்படும் இவ்விரு டிபார்ட்மெண்டாருடைய வேண்டுகோள்கள் பரஸ்பரம் வெகு, அவசர வேலையென்று பாவிக்கப்பட வேண்டும். முடிவான ஜவாபு உடனே கொடுக்க முடியாவிட்டால் விஷய சம்பந்தமாய் அதுவரையில் எவ்வளவு சாத்தியமோ அவ்வளவு மட்டிலுள்ள பதிலை உடனே அனுப்பிவிட வேண்டும்.



5. ஸ்வய பாத்தியம் கொண்டாடாமல் குத்தகைக்காரர்களின் கீழ் விவசாயம் செய்யும் குடியானவர்களுக்குச் சகாய வட்டிக்குப் பணம் கொடுத்து உதவும் விஷயத்தில் முன் போதுமான கவனம் செலுத்தப்படவில்லை. என்று விவசாய டிபார்ட்மெண்டார் தங்கள் அபிப்பிராயத்தைக் காட்டி அது இல்லாதவரையில் விவசாய விருத்தியை அவர்கள் கைக்கொள்ள முடியாதென்று அபிப்பிராயப் படுகிறார்கள். அநேக இடங்களில் இவர்களே உண்மையான விவசாயிகளாயிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் எஜமானனுக்கோ, சௌகார்களுக்கோ கடன்பட்டு அக்கடனிலிருந்தும் மீட்டுக்கொள்ள முடியாமலிருப்பதினால் விவசாயத்தில் சீர்திருத்த முறையை அனுஷ்டித்து தங்கள் நிலைமையை ஒழுங்குபடுத்திக்கொள்ள முடியாமலிருக்கிறார்கள். இதில் காட்டிய உதாரணங்கள்:— டுப்பி, ஹாஸ்பெட், தாலூக்காக்களிலுள்ள கரும்பு விவசாயிகள், மலையாளத்திலுள்ள பாக்குப் பயிரிடுவோர்கள், தஞ்சாவூர் ஜில்லாவிலும் இதர டெல்டா பூமிகளிலுமுள்ள நஞ்சை நிலக்குத்தகைக்காரர்கள். இம்மாதிரி இனங்களில் மாசூலின் மதிப்பைக் கொண்டு கோவாபரேடிவ் சொஸைடி கடன் கொடுக்கலாம் என்று பிரஸ்தாபிக்கப்பட்டது. ஆஜராயிருந்த கோவாபரேடிவ் உத்தியோகஸ்தர்கள் மேற்கூறிய குறைகளுக்கு ஆதாரமிருப்பதை அங்கீகரித்து அதை நிவர்த்திப்பதற்கு வேண்டிய வழிகளை நாடி வேலைசெய்வதாய் வாக்களித்தார்கள்.

6. சென்ட்ரல் பாங்கிகள், யூனியன்கள், கிராம நாணயச் சங்கங்கள் இவைகளின் மூலமாய் விதைகள், எருக்கள் விவசாயக் கருவிகள் முதலியவைகளை விசேஷமாய் விற்கலாமென்ற விஷயம் வெகுவாக ஆமோதிக்கப்பட்டது. இந்த மார்க்கத்தில் விசேஷ அபிவிருத்திக்கு இடமிருப்பதாகத் தெரியவந்தது. விஸ்தாரமாய்த் தெரிந்து கொள்வதற்கு சில குறிப்பிட்ட விஷயங்களில் நேராக வேலைசெய்து அனுபோகமடைய வேண்டும். பொதுவாய் ஒத்துக்கொள்ளப்பட்ட ஏற்பாடு என்னவென்றால்: விக்கிரயம் கிராம சொஸைடிகளால் நடத்தப் படவேண்டும். அச்சொஸைடிகள் மெம்பர்களுக்கு கொள் முதலைவிட கொஞ்சம் அதிகவிலைக்கும் அன்னியர்களுக்கு இன்னும் அதிகவிலைக்கும் விற்கலாம். விதைமுதலியன விவசாய டிபார்ட்மெண்டாரால், தங்கள் கொள் முதல் பிரகாரம் சொஸைடிகளுக்கு நேராகவோ அல்லது சொஸைடிகளின் தேவைகளைக்காட்டும் ஜாபிதாக்களின் வசூல் செய்யும் யூனியன்களுக்கோ, சௌகரியம்போல் அனுப்புவார்கள். சில வருஷங்களுக்கு முதல் விவசாய டிபார்ட்மெண்டார் விற்காதபடி, சரக்குகள் அழிந்துபோன சரக்குகள் இவைகளைத் திருப்பி வாங்கிக்கொள்ளும் பொறுப்பை வகிப்பார்கள். போகப்போக சொஸைடிகள் தங்களுக்குவேண்டிய பச்சை எரு விதைகள், எருக்கள், கருவிகள் முதலியவைகளை நேராகவேயும் பெற ஏற்பாடு செய்யலாம்.

# கால் நடை உணவுக்காக கம்போடியா பருத்திக்கொட்டையை ஐக்கிய ஏற்பாட்டில் வாங்குதல்.

(நீடாமங்கலம் ம-ள-ள-ஸ்ரீ ரேய்ஸாஹேப் ஏ. சேதுராமய்யரவர்களால்.)

விவசாய டிப்டி டைரக்டரான ஸாம்ப்ஸன் துரையவர்கள் 5-4-18ல் எனக்குப் பின்வருமாறு ஒரு கடிதம் எழுதினார்:—

“பருத்தி விளைவில்லாத ஜில்லாக்களிலுள்ள சொஸைடிகள் கால்நடைகளின் உணவின் பொருட்டு அதிக விலையுள்ள திருநெல்வேலிப் பருத்திக் கொட்டையை வாங்குவதற்குப் பதிலாக கம்போடியா பருத்திக் கொட்டையை கோவாபரேடிவ் ஏற்பாட்டில் வாங்கவேண்டுமென்று பிரஸ்தாபித்து எல்லா அஸிஸ்டெண்ட் ரிஜிஸ்ட்ரார்களுக்கும் சமீபத்தில் கடிதங்கள் எழுதினேன். கோயமுத்தூரில் கால்நடை உணவுக்கு யோக்கியமான கம்போடியாக்கொட்டையின் விலை இப்பொழுது 247-ராத்தல் கொண்ட பொதி ஒன்றுக்கு ரூ. 6 முதல் ரூ. 6-4-0 வரையில் இருக்கிறது. கோணி, முதலிய சில்லரைச்செலவும் ரெயில்சார்ஜும் உள்பட ரூ. 7-4-0 முதல் ரூ. 7-8 வரையில் ஆகும். இது தஞ்சாவூரில் விற்கும் விதையின் சில்லரை விலையைவிட பொதி ஒன்றுக்கு ஐந்து ரூபாய்க்கு அதிகமாகவே குறைந்திருக்கக் காணலாம்.

மிஸ்டர் சி. நாராயணய்யா அவர்கள் விதைப்பதின்பொருட்டு இப்பொழுது கம்போடியாக் கொட்டையை எனக்காக வாங்கி வருகிறார். உங்கள் சொஸைடிகள்யாதாவது அவரிடம் கால்நடை உணவுக் கொட்டை வாங்கும் பொருட்டு பணம் அனுப்பினால் நான் எளிதாய் ஏற்பாடு செய்வேன். ஆனால் பணத்தை அவரிடம் முன்னாடியே அனுப்பிவிட வேண்டும். ஏனென்றால் முன்போட்டுப் புரட்டுவதற்கு எங்களிடம் பணமில்லை.

கால்நடை உணவுக்காக மங்கநல்லூரில்நாங்கள் கம்போடியாக்கொட்டையைத்தவிர வேறொன்றையும் உபயோகிப்பதில்லை. சுற்றூர்களிலுள்ள இரண்டு மூன்று மிராசுதார்களும் அதை உபயோகிக்கிறார்கள். அவர்களில் ஒருவர் தனக்கு 50 மூட்டைகள் அனுப்பவேண்டுமென்று இன்று எனக்குக் கடிதம் எழுதிக் கேட்டிருக்கிறார். இவைகளைப்பற்றி உங்கள் அபிப்பிராயத்தை எனக்குத் தெரிவிக்க வேண்டுகிறேன்—”

தஞ்சாவூர் ஜில்லாவில் சுமார் 1,000 ஏக்கர்கள் தான் பருத்தி சாகுபடி செய்யப்பட்டு வருகின்றன. இது தஞ்சாவூருக்கும் பூதலூருக்கும்



மத்தியிலுள்ளது. இதுவும் நீடித்த முக்கியப் பயிரும் இல்லை. ஆகையால் தஞ்சாவூரில் கால்நடை உணவுகளுக்கு திருநெல்வேலி, காதா இவ்விரு இடங்களிலிருந்து தான் பருத்திக்கொட்டை சாதாரணமாய் வருகிறது. ரெயில் உபத்திரவத்தினால் விலை மிகவும் அதிகரித்திருக்கிறது. சாம்ப்ஸன் துரையிடமிருந்து மேற்கண்ட கடிதம் கிடைத்தவுடனே ரூ. 200 அவருக்கு அனுப்பி அடுத்த ஒரு வாரத்திற்குள் இன்னம் ரூ. 1,000 அதிகமும் அனுப்பினேன்.

தஞ்சாவூர் ஜில்லாவில் கால் நடைகள்தான் குடியானவர்களுடைய ஆஸ்தியாக இருந்து அநேக விவசாயவேலைகளை முடிக்கின்றன. அவைகளின் முதல்தர உணவுகளுள் பருத்திக்கொட்டை ஒன்று. கறவை மாடுகளுக்கும் காளைமாடுகளுக்கும் உணவின்பொருட்டு குடியானவர்கள் சாதாரணமாய் இதை வாங்குகிறார்கள். விவசாய சொஸைடிகளின் மெம்பர்கள் ஐக்கியமுறையில் இதை வாங்கினால் விசேஷலாபமுண்டு. தஞ்சாவூர் ஜில்லாவுக்கு கம்போடியா பருத்திக்கொட்டை புதியது. திருநெல்வேலிக் கொட்டைக்கு இது ஒருவிதத்திலும் குறைந்ததில்லை. விலையும்கூட மலிவு. நல்லதினுசு, மலிவு, இரண்டையும் கவனித்தே சாம்ப்ஸன் துரை எனக்கு சிபார்ஸு செய்தார். நான்கு வாகன்களுக்கு (Wagons) ஆர்டர் கொடுத்தேன். நீடாமங்கலம் விவசாய பாங்கிற்கு ஒன்று, ஆவிகாடு கோவாபரேடிவ் சொஸைடிக்கு ஒன்று, மெலட்டூர் விவசாய பாங்கிற்கு ஒன்று, சீயாழிக்கு ஒன்று. கால்நடைஉணவாக இது தஞ்சாவூர் ஜில்லாவிற்குப்புதியது என்று முன்னமேயே சொல்லியிருக்கிறேன். ஆகவே அவ்விதை அவ்விடம் புதிதாக வந்தவுடன் ஜனங்கள் அதற்கு அநேககுற்றங்களைக் கற்பனைசெய்து இது அமெரிக்கா தேசத்து உதவாக்கரை குப்பையென்று தூஷிக்க ஆரம்பித்தார்கள். வியாபாரிகளும்கூட இப்புதுச்சரக்கு பழைய சரக்குகளின் விற்பனையை பாதித்தபடியால் அவர்களுடன் சேர்ந்துகொண்டார்கள்; இவ்விடத்தில் அதைப்பற்றி குடியானவர்களின் அபிப்பிராயத்தை ஸாம்ப்ஸன் துரைக்குத் தெரிவித்தேன். அவர், கம்போடியாக்கொட்டை சர்க்கார் நிலங்களிலெல்லாம் உபயோகப்படுகின்றனவென்றும் திருநெல்வேலிக்கொட்டையைவிடத் தாழ்ந்ததல்லவென்றும் எனக்கு வற்புறுத்தினார். கம்போடியாக்கொட்டை நாட்டுக்கொட்டையைப்போலவே பலனைத்தருகிறதென்றும், சரிநிறையாக உபயோகிக்கலாமேயொழிய சரிஅளவாக உபயோகிக்கக்கூடாதென்று நுட்ப ஆராய்ச்சியினால் தெரிந்தது. இக்கொட்டையில் ஜாக்கிரதையாயிருக்கவேண்டிய ஒரே விஷயம் என்னவென்றால், அதை அரைப்பதற்கு முன் அதிகநேரம் ஊறவைக்கக்கூடாது. இக்கொட்டையில் அதிக நுரையுள்ளதாதலால் எண்ணெய் விசேஷமா

யிருக்கிறது. அதனால் நனைக்கப்பட்டகொட்டை நாட்டுக்கொட்டையை விட அதிசீக்கிரத்தில் ஊறிப்பொங்கிவிடுகிறது.

முதலாவது, என் சம்சாரம் இது கறவைமாடுகளுக்கு வெகு உபயோகமென்று சிலாகித்தாள். சென்ற ஒருமாதமாக இதை உபயோகித்துக் கொண்டிருக்கிறேன். தினம் 10 மாடுகள் தின்கின்றன. திருநெல்வேலிக்கொட்டையைப்போல் மண், கல், தூசி முதலியன கலக்கப்படவில்லை. சுத்தமாயிருக்கிறது. மாடுகளும் பிரியமாய்த் தின்கின்றன. முதலில் நான் 20 மூட்டைகள் வாங்கினேன். பிறகு மற்ற மெம்பர்கள் வாங்கினார்கள். மெம்பர்கள் இதைப்பற்றி யோசனை செய்து எல்லா மூட்டைகளையும் வாங்கிவிட்டார்கள். 4 மணங்கு அதாவது 100 ராத்தல் கொண்ட மூட்டை ஒன்றுக்கு கோணி உள்பட விலை ரூ. 3—12—0 ஆயிற்று. நாங்கள் மெம்பர்களுக்கு மூட்டை ஒன்றுக்கு ரூ. 4 வீதம் விற்றுக்கொண்டிருக்கிறோம். கடைகளில் திருநெல்வேலிக் கொட்டை இதே எடையுள்ள மூட்டை 5 ரூ. வீதமும் சில்லரையில் ரூ. 6 வீதமும் கோணியில்லாமல் விற்கப்படுகிறது. லாபம் எவ்வளவு அதிகம் என்பதைப்பற்றி நான் அதிகமாய்ச்சொல்லவேண்டியதில்லை.

கம்போடியாப் பருத்திக்கொட்டை கால்நடை உணவாக தஞ்சாவூருக்குப் புதிதாக இருந்தபோதிலும் ரகம், விலை, இரண்டிலும் திருநெல்வேலிக்கொட்டைக்கு ஒரு விதத்திலும் தாழ்ந்ததன்று. இச்சிறிய குறிப்பினால் தஞ்சாவூர் விவசாய கோவாபரேடிவ் சொஸைடியின் மெம்பர்களின் சந்தேகம் நீங்கி இனிமேல் கம்போடியா பருத்திக்கொட்டையைமொத்தமாக ஐக்கிய ஏற்பாட்டில் வாங்குவார்கள் என்று நம்புகிறேன்.

# சென்னை இராஜதானியில் ஐக்கிய முயற்சி.

[ஓர் ஐக்கிய முயற்சிக்காரர் எழுதியது.]

1916-17-ம் வருஷத்திற்கு இந்தியாவிலுள்ள ஐக்கிய இயக்கத்தின் முன்னேற்றத்தைக் காட்டக்கூடிய ஸ்டேட்மெண்டுகளில், சமீபத்தில் இந்தியா கவர்ன்மெண்டாரால் பிரசுரிக்கப்பட்டிருக்கிறபடி அவ்விலக்கங்களை கவனித்து ஒழுங்கான தீர்மானம் செய்யக்கூடியவர்களுக்கு மிகவும் இன்பமாய் படிக்கத்தக்க விஷயங்கள் அடங்கியுள்ளன. அதில் நம்தேசத்தில் பற்பல பாகங்களில் நடைபெறும் வெவ்வேறு விதமான ஏற்பாடுகளின் ஏற்றத்தாழ்ச்சிகளைப்பற்றிய சமரச வித்தியாச பாகங்கள் நன்கு புலப்படும்.

நமது இராஜதானியில் சராசரி 18,500 ஜனங்களுக்கு ஒரு சொஸைடி விழுக்காடு இருக்கிறது. 248-ஜனங்களுள் ஒருவர் கோவாபரேடராக இருக்கிறார். இதர முக்கியதேசங்களின் இலக்கங்கள் வருமாறு:—

பம்பாயில் 12,500-ஜனங்களுக்கு ஒரு சொஸைடியும் 145-ஜனங்களுக்கு ஒரு கோவாபரேடரும்.

பங்காளத்தில் 14,000-ஜனங்களுக்கு ஒரு சொஸைடியும் 314-ஜனங்களுக்கு ஒரு கோவாபரேடரும்.

ஐக்கிய மாகாணங்களில் 14,500-ஜனங்களுக்கு ஒரு சொஸைடியும் 400-ஜனங்களுக்கு ஒரு கோவாபரேடரும்;

பஞ்சாப் தேசத்தில், 5,700-ஜனங்களுக்கு ஒரு சொஸைடியும் 145-ஜனங்களுக்கு ஒரு கோவாபரேடரும்.

பர்மாவில் 4,300-ஜனங்களுக்கு ஒரு சொஸைடியும் 179-ஜனங்களுக்கு ஒரு கோவாபரேடரும்.

மத்திய மாகாணங்களில் 3,900-ஜனங்களுக்கு ஒரு சொஸைடியும் 135-ஜனங்களுக்கு ஒரு கோவாபரேடரும், ஏற்படுகின்றன.

நம்முடைய இயக்கம் விருத்தியடைய ஏராளமான இடமிருக்கிறது. தேசத்தில் அநேக விசாலமான பாகங்களில் ஐக்கிய இயக்கமே இன்னதென்று தெரியாமலிருக்கிறது. நிதானமான முன்னேற்றத்துடனும் ஆழ்ந்த ஆலோசனையுடனும் வேலை செய்தால் காலக்கிரமத்தில் விசேஷமான பயனை அடைவது நிச்சயம்.

ஒரு சொஸைடியிலுள்ள மெம்பர்களின் சராசரித்தொகை வருமாறு:

சென்னை 75, பம்பாய் 100, வங்காளம் 46, ஐக்கிய மாகாணங்கள் 36, பஞ்சாப் 40, பர்மா 22, மத்திய மாகாணங்கள் 28.

பம்பாய், சென்னை ஆகிய இவ்விரண்டும் தவிர எல்லா மாகாணங்களிலும் சொஸைடி ஒன்றுக்கு 50-மெம்பர்களுக்குக் குறைவாகத்தானிருக்கிறது.

ஒரு கிராமத்தில் ஒரு சொஸைடிக்குமேல் இருக்கக்கூடாது என்ற ஏற்பாட்டை சென்னை இராஜதானியிலுள்ள நாம் தீர்மானமாய் அனுஷ்டிக்கிறோமாதலால் ஒரு கிராமத்தில் ஒரு சொஸைடிக்குமேல் காணப்படுவது வெகு அருமை. கோவாபரேடிவ் இயக்கம் கிராம சமூகங்களில் ஒற்றுமையை உண்டாக்கவேண்டுமே ஒழிய சௌகரியமான கும்பல்களுக்கு தனித்தனி சொஸைடிகள் ஏற்படுத்தி இப்பொழுதிருக்கும் விரோத பாவனைகளை பலப்படுத்துவதற்கு அல்ல என்கிற கொள்கையை அனுசரித்து இவ்வழக்கம் ஊர்ஜிதப் படுத்தப்பட்டது. இக்கொள்கையைக் கொண்டுதான் மதவித்தியாசச் சொஸைடிகள் கண்டிக்கப்பட்டு வெறுக்கப்பட்டன. ஆனால் இந்த சமரசநோக்கம் கோவாபரேஷனின் அஸ்திவாரத்தையே ஒருவிதத்தில் அறுத்துவிடுமென்பதை மறக்கமுடியாது. சொஸைடிகளுள் பரஸ்பர நம்பிக்கையும் மேன்பார்வையும் தங்கள்க்ஷேம லாபங்கள் பொது என்கிற உணர்ச்சியும் எல்லாருடைய பொது நன்மையையும் கருதித்தான் சிரமத்தை சகித்து நடை உடை ஆசாரம், நம்பிக்கை, தொழில் கொள்கை முதலிய வற்றில் விசேஷமான உரிமையுள்ள ஒரு சிறு கூட்டத்தால்தான் சாத்தியமாகும். இப்படிப்பட்ட ஊக்கத்தை ஒரு கூட்டத்தாருக்கு கோவாபரேடிவ் சொஸைடி போன்ற வெளித்தூண்டுதலினால் கட்டாயப்படுத்திப் புகட்டமுடியாது. ஆனால் உள்ளிருந்துதானே வளரவேண்டும். இதர மாகாணங்களில் இவ்விஷயம் நன்கு கவனிக்கப்பட்டிருக்கிறதாகத் தெரிகிறது. 1,500-ஜனத் தொகையுள்ள மத்தியமாகாணத்தைச் சேர்ந்த கிராமம் ஒன்றில், பொறுப்பு வரையற்ற ஏற்பாட்டுடன் ஏழு சங்கங்கள் இருக்கின்றனவென்றும் ஒன்றில் மெம்பராக இருப்பவர் மற்றொன்றில் மெம்பராகக்கூடாது என்பதைவிட வேறொரு நிர்ப்பந்தமும் இல்லையென்றும் தெரிகிறது. சில மாகாணங்களில் ஒரு சொஸைடிகளில் மெம்பராவதற்கு இராஜாங்கத்தாரே சில சட்டதிட்டங்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். இதனால் விசேஷமான பரஸ்பர சக்தியும் விசேஷமான பொறுப்பும் விருத்தியாக ஹேதுவுண்டு. சொஸைடிகள் நிலைகெட்டுப்போகாமல் குறைக்கப்படலாம். இந்த இராஜதானியைப்போல் முறியடிக்கும் கஷ்டம் அவ்வளவு சகிக்க முடியாமலிருக்காது. மத்தியமாகாணங்களில் ஒரு சொஸைடியின் சராசரிக் கடன் ரூ. 3,510, நமது இராஜதானியிலோ ரூ. 9,250.



இக்காரணங்களினால் ஒரு கிராமம் அல்லது ஒரு நகரத்திற்கு ஒரு சொஸைடிக்குமேல் இருக்கக்கூடாது என்ற ஏற்பாட்டை மாற்றுவதற்கு ஆகவேண்டிய ஆலோசனை செய்யவேண்டுமென்று நினைக்கிறேன். இந்த சந்தர்ப்பத்தில் விசேஷமாய் பொறுப்பு வரையறுக்கப்பட்ட நமது சில அர்பன் பாங்குகளிலும் டவுன் சொஸைடிகளிலும் நிர்வகிக்கமுடியாத்தொகை மெம்பர்களின் இலக்கத்தில் இருக்கிறது என்று சொல்வது பொருந்தும். 25 சதுரமைல் பரப்புள்ள ஒருநகரத்திற்கு 5,800 மெம்பர்களடங்கிய ஒரு அர்பன் பாங்கியில் எம்மாதிரியான கோவாபரேஷன் இருக்கக்கூடுமென்று ஒருவர் யோசித்துப் பார்க்கலாம். நிர்வகிக்கும் போர்டாருக்கு மெம்பர்கள் 10-ல் ஒருவரைக்கூடத் தெரியாது. மெம்பர்கள் சொஸைடியிலிருந்து வாங்கும் கடன்களை எப்படி உபயோகிக்கிறார்கள்; விவசாயத்திற்கா, வீண்செலவிற்கா என்றும் தெரியாது. தெரிந்துகொள்ள வேண்டிய கவலையும் கிடையாது. கடன்களின் விசேஷபாகங்கள் தவணை மீறியிருக்கின்றன. அவைகளை வசூல் செய்ய ஸிவில் கோர்ட்டுகளில் தாராளமாய் பிராதுகள் செய்யப்பட்டுவருகின்றன. இம்மாதிரி வியாபாரங்கள் எப்படி 'கோவாபரேடிவ்' என்ற பெயருடனிருக்கின்றனவென்றும் எந்த பாகத்தில் கோவாபரேடிவ் ஒழுக்கம் காணப்படுகிறதென்றும் சாதாரணமாய் சங்கைதோன்றலாம். என் சிநேகிதர் ஒருவர் "அவைகளெல்லாம் ஜாயிண்ட்ஸ்டாக் கம்பெனிகளென்றும் கோவாபரேடிவ் பாங்கிகளிலிருக்கும் அநேக அனுகூலங்களை அடையும் பொருட்டுமாத்திரம் கோவாபரேடிவ் பாங்கிகள் என்ற பெயருடன் வேலைசெய்கின்றன" வென்றும் தெளிவாய்ச் சொன்னார்.

பொதுவாகவே அர்பன் பாங்கிகளை அவமதிக்கவேணும் என்ற கருத்துடன் நான் இந்த அபிப்பிராயத்தை தெரியப்படுத்தவில்லை. இவைகள் நம்முடைய நாட்டில் முக்கியமான அம்சமாயிருக்கிறது. ஆனால் சங்கங்களின் சங்கியை மாத்திரம் இதரநாடுகளை விட அதிகமாயிருக்கிறது. நாட்டின் கோவாபரேடிவ் இயக்கத்தில் அது ஒரு முக்கியமான விஷயந்தான். அது நகரங்களிலுள்ள நடுத்தர ஜனங்கள், ஏழைஜனங்கள், இவர்களுக்கு கடன் உதவியினால் தங்களுடையடையரண்ப் பிடிப்புகளினின்றும் விடுவித்திருக்கிறது. இச்சாவுகார்களுடையபிடிப்புகிராமங்களைவிடபட்டணங்களில் மிகவும் பயங்கரமானது. ஏனென்றால் கிராமங்களில் பொதுஜன அபிப்பிராயங்களுக்கு விசேஷ மதிப்புண்டு. இச்சாவுகாரர்கள் கோவாபரேடிவ்இயக்கத்தில் தங்கள் மூலதனங்களை விசேஷமாய்ப்புகுத்தியிருக்கிறார்கள். மேலும் பட்டணங்களிலுள்ள பெரிய வியாபாரிகளுடைய ஒப்புயர்வையும் சம்பாதித்திருக்கிறார்கள். இந்த இதர விஷயத்தை ஜனங்கள் கவனித்து தங்கள் நிலைமை எப்படி சௌகரியமாக்கலாமென்றும், தங்கள் வேலை எப்படி ஒப்புயர்வாய் முடியுமென்றும், தங்கள் கடமைகளை

எப்படி திருப்திகரமாகச் செய்யலா மென்றும் ஜனங்கள் ஊகிக்கவேண்டு மென்றே இச்சங்கையை முன்னுக்குக் கொண்டுவந்தது. நிர்வகிக்கமுடியாது என்ற எண்ணத்தைமாற்ற ஒரு யுக்திதோன்றுகிறது. அதாவது ஒரு பட்டணத்தை கோவாபரேஷனின் பொருட்டு வார்டுகளாகப் பிரித்து ஒவ்வொரு 'வார்டிலும்' ஒரு சொஸைடியை ஏற்படுத்தி அதனுதன் பரிமாணமும் மெம்பர்களும் நிர்ணயிக்கப்படலாம். அப்பொழுது சரியான ஆளுகையும் மேற்பார்வையும் ஏற்படும். இன்னொரு யுக்தி 1918-ம் வருஷம் மார்ச்சு மாதத்தின் "பம்பாய்கோவாபரேடிவ் க்வார்டர்லி" என்னும் பத்திரிகையில் டப்ளியூ. ஜி. ஸ்மியூல் துரையவர்களால் (Group system) "கூட்டுல் ஏற்பாடு" என்னும் தலைப்பின் கீழ் எழுதப்பட்டிருக்கும் வியாசத்தில் காணலாம். ஒரு அர்பன் சொஸைடியில் மெம்பர்களின் பிரதிநிதிக்கூட்டம் ஒன்று ஏற்படவேண்டுமென்றும், சொஸைடி அக்கூட்டத்தார் மூலமாய்த்தான் மெம்பர்களுடன் நடவடிக்கை வைத்துக்கொள்ளுகிறதென்றும் சொல்லுகிறார்கள். இந்த யுக்தி நன்றாய்த்தோன்றுகிறது. அமுலுக்குக்கொண்டுவந்து பார்க்கலாம். இது போன்ற அனுகூல ஏற்பாடுகளினால் சொஸைடிகள் பத்திரமாக கோவாபரேடிவ் மார்க்கத்தில் நடைபெறும்படி செய்யலாம்.

## தொழில்தனம்.

சென்ற கோவாப்ரேடிவ் வருஷத்தில் (1916-17) இந்தியாவுக்குள் நமது இராஜதானிதான் அதிகத்தொழில் தனம் இருந்தது அதாவது 205 லக்ஷம்ரூபாய். இது நமக்கு ஒருகௌரவமே. இராஜாங்க உபகாரத்தில் கூட நாம் ஒரு பெருமையான ஸ்தானத்தையே வகிக்கிறோம். ஏனென்றால் நம் சென்ட்ரல் பாங்கிகளாவது விவசாயமில்லாச் சொஸைடிகளாவது கவர்ன்மெண்டாரிடம் பொருளுதவி பெறவேயில்லை. 1916-17-ம் வருஷக் கடைசியில் விவசாய சொஸைடிகளின் பேரில் இருந்த நிலுவை ரூ. 9,795 தான். இவை கவர்ன்மெண்டால் கோவாப்ரேடிவ் இயக்க ஆரம்ப காலங்களில் சில சொஸைடிகளுக்கு கொடுத்த கடன்கள் தொழில் தனத்தின், தலைப்பில் காணப்படும். இப்பெருந்தொகையை சோதித்துப் பார்த்தால் நமது மகாணத்தில் சென்ட்ரல் சங்கங்கள் அல்லது பொருளுதவும் சங்கங்கள் மிக பலமாயிருக்கிறதென்றும் அவை வியாபாரத்தோதான வேலையினாலும் லாபகரமான பயன்கொடுப்பதனாலும் ஜனங்களின் நம்பிக்கையை விசேஷமாய், அடைந்திருப்பதெனத் தெரிகிறது. நமது சென்ட்ரல் பாங்கிகளுள் 88 லக்ஷம் ரூபாய்களிருக்கின்றன. இவ்வளவு உயர்ந்ததொகை இதர மாகாணங்கள் ஒன்றிலும் இல்லை. ப்ரோவின்ஷியல் பாங்கியின் தலைப்பின்கீழ்காட்டப்பட்ட நமதுமதராஸ் சென்ட்ரல் அர்பன் பாங்கியின் தொகையும் மேற்கண்ட தொகையுள் சேர்ந்துள்ளது. விசே



ஷமாய் டவுன் பாங்கிகளாக இருக்கிற நமது விவசாயமில்லாச் சொஸைடிகள்கூட மதிக்கத்தகும்படி வேலை செய்திருக்கின்றன. அவைகளின் தொழில் தனம் 29 லக்ஷம். அதாவது இந்தியாவில் இரண்டாவது ஸ்தானத்திலிருக்கிறது. முதல் ஸ்தானம் பம்பாய் இராஜதானி 44 லக்ஷத்தோடு இருக்கிறது. அவைகளில் உரிமை பாத்திய மூலதனம் (அதாவது கொடுபட்டிருக்கும் பங்குத்தொகை டிபாஸிட்டுகள், மெம்பர்களிடமிருந்து வந்த கடன்கள், சேமநிதி) ரூ. 19 லக்ஷம் இது தொழில் தனத்தில் ஏறக்குறைய 100-க்கு 66 விழுக்காடு ஆகிறது. ஒவ்வொரு மெம்பருடைய சராசரி விகிதம், 4 ரூபாயாகிறது. ஆனால் நமது இராஜதானியில் கோவாபரேடிவ் இயக்கத்தில் விசேஷ அம்சமாய் அமைந்துள்ள விவசாய சொஸைடிகளோ அவ்வளவு திருப்திகரமான பயனைக் கொடுக்கவில்லை. அவைகளின் மொத்த தொழில்தனம் 88 லக்ஷம். அது 141-லக்ஷம் வைத்திருக்கும்பாஞ்சாப்புதேசத்திற்கு அடுத்தபடியாகிறது. எல்லாத் தலைப்புகளையும் விவரமாய்ச் சோதித்தால் நமது இராஜதானியில் சொஸைடிகளின் "பாத்திய உரிமை" யுள்ள மூலதனம் இதரதேசங்களை விட மிக்க குறைவாயிருக்கிறது. கீழ்காட்டியிருக்கும் இலக்கங்களினால் தானே விளங்கும்:—

| மாகாணம். | கொடுபட்டிருக்கும் பங்குத்தொகை (ஆயிரக்கணக்கில். | மெம்பர்களிடமிருந்து வந்த டிபாஸிட்டுக் கடன்களும் (ஆயிரக்கணக்கில்.) | சேமநிதி (ஆயிரக்கணக்கில் | மொத்தம் (ஆயிரக்கணக்கில்.) | மொத்தத் தொழில் தனம் (ஆயிரக்கணக்கில்.) | நூற்றின் வீதம். |
|---|---|---|---|---|---|---|
| | | | ரூ. | ரூ. | ரூ. | |
| சென்னை | 591 | 389 | 522 | 1,502 | 8,808) | 17 |
| பம்பாய் | 68 | 1,151 | 320 | 1,539 | 5,214 | 30 |
| வங்காளம் | 55 | 532 | 792 | 1,379 | 6,706 | 19 |
| பீகாரும் ஒரிஸ்ஸாவும் | 13 | 190 | 286 | 519 | 2,161 | 24 |
| ஐக்கிய மாகாணங்கள் | 1,016 | 76 | 636 | 1,728 | 5,136 | 34 |
| பஞ்சாப் | 4,687 | 838 | 2,708 | 8,233 | 4,070 | 60 |
| பர்மா | 1,066 | 63 | 872 | 2,001 | 7,956 | 25 |
| மத்திய மாகாணங்கள் | 8 | 147 | 379 | 535 | 4,825 | 11 |

இவ்விலக்கங்களில் நமது விவசாய சொஸைடிகள் சுய ஆதீனத்துடனாவது, சுய சௌகரியத்துடனாவது சுய போஷணையினாலாவது சுத்தமாய் இல்லை என்று தெரிகிறது. அவைகள் பெயருடன் இருப்பதற்குக் கூட வெளி உதவி வேண்டியிருக்கிறது. அந்த வெளி ஒத்தாசை 100-க்கு 83 வரையில் இருக்கிறது, இச்சொஸைடிகளின் மெம்பர்கள் தங்கள் சொஸைடிகளிலிருந்து கடன் வாங்குவது மாத்திரம் வழக்கமேயொழிய அதன் பண்டுக்காக ஒன்றும் கொடுப்பதே இல்லை. இதனால் என்ன தெரிகிறது? நம்முடைய சொஸைடியின் மெம்பர்கள் இதர தேச சகோதரர்களைவிட அதிக ஏழைகளா அல்லது மெதுவாகவும் உறுதியாகவும் கொஞ்சத் தொகைகூட சேர்த்துவைக்க முடியாதபடி ஓயாமல் பணத் தேவையினால் உபத்திரவப்படுகிறார்களா? இவ்விஷயத்தைப் பற்றி ஆதாரசித்தமான பதிப்புகளினால் அவர்கள் அவ்வளவு ஏழையென்றாவது பணமுடையுள்ளவர்களென்றாவது ஏற்படவில்லை. நேர்மாறாக ஏற்படுகிறது. ஆகையால் ஒவ்வொரு அந்தரங்க கோவாபரேடரும் நம் இராஜதானியின் தற்கால கோவாபரேஷனின் நிலைமையை நன்றாய் ஊகித்து எந்த பாகத்தில் குறையிருக்கிறதென்றறிந்து அக்குறையை எவ்விதஞ் சீர்ப்படுத்தவேண்டுமோ அவ்விதம் முயலவேண்டியது அத்தியாவசியம். இப்பொழுதுஉள்ளபடி நமதுசொஸைடிகளிலுள்ள மெம்பர்களின் பணம் அவ்வளவு குறைவாக இருப்பது நமது இயக்கத்திற்கே அழியாத அபகீர்த்தி. ஸர் ஹென்ரி உல்ப் துரையவர்கள் 1918-ம்வருஷம் மார்ச்சு மாதத்தின் "பம்பாய் கோவாபரேடிவ் குவார்டர்லி" என்றபத்திரிகைக்கு தாம் எழுதிய வியாசத்தில் "பிறர் ஊட்டி ஆதரித்து, புத்தி புகட்டும் ஐக்கிய நாணயம் முன்னுக்கு வராது. எவ்வளவு சிறிய பாங்கியாயிருந்தாலும் அது முன்னுக்கு வரவேண்டுமானால் தன் சக்தியினாலேயே நிலைபெறுவித்துக்கொண்டு தன் பொறுப்புகளுக்குத் தானே அதிகாரியாகவேண்டும்" என்று எழுதியிருக்கிறார். அதே வியாசத்தில் பிரான்ஸதேசத்தில் 'ரெய்ப்பிசன்' என்று அவர் கூப்பிடப்பட்ட மிஸ்டர் லூயிடுராண்டு என்னும் அவருடைய சிநேகிதர் "சென்ட்ரல் பாங்கிக்குக் கடன்பட்டிருக்கும்ஒருலோகல்பாங்கிதன்கடன்தீரும்வரையில்தான் ஒரு ஆஸ்பத்திரியில்இருப்பதாக நினைத்துக்கொண்டு அதைவிட்டுவிடுவித்துக் கொள்ளமுயலவேண்டு"மென்று சொன்னதாக எடுத்துக் காட்டியிருக்கிறார். ஒவ்வொருகிராமச்சங்கத்தின் நோக்கம் போதுமான தொழில் தனம் தன்னுடையதாகவே சேர்த்து வெளிக்கடன் வாங்குவதைதள்ளிவிடலாம் என்றிருக்கவேண்டும். இம்மாதிரி மேம்படுவதற்கு நிரம்பநாள் செல்லும் என்று ஸர்ஹென்ரி உலப்துரை அபிப்பிராயப்படுகிறார். ஆனால்அவ்வெண்ணம் முக்கியமானதென்று ஒவ்வொருவருக்கும் நோக்கமிருத்தல் உத்தமம். சென்ட்ரல் பாங்கில் கடன் வாங்குவது தற்கால உபயோகத்திற்கும்



அவசர நிமித்தத்திற்கும் மாத்திரமே யாயிருக்கவேண்டும். சென்ட்ரல் பாங்கிகள் கிராம நாணயச் சங்கங்களின் மிகுதித் தொகைகளை சமரசப்படுத்தும் துலாக்கோல்போல விசேஷமா யிருக்கவேண்டுமே யொழிய ஓயாமல் கடன் கொடுக்கும் சாவுகாரர்களைப்போல் நடிப்பதற்கன்று.

நமது இராஜதானியின் தற்போதுள்ள ஏற்பாடுதான் நம்சொஸைடிகளின் ஓயாக் கடன் தன்மைக்குக் காரணம் என்பது என் அபிப்பிராயம். ஒரு சொஸைடியில் அதன் மெம்பர்களின் மொத்த ஆஸ்தி எவ்வளவுக் கெவ்வளவு அதிகமா யிருக்கிறதோ அவ்வளவுக் கவ்வளவு எளிதாயும் சீக்கிரமாயும் பெரிய தொகைகள் கடன் பெறுவது எளிதாக இருக்கிறது. ஆஸ்திக் குறைவா யிருந்தால் கடன் பெறுவது அருமை. இப்படி குறைவினால் நாணயம் கிடைக்காமலிருத்தல் நல்லது. தோட்டிகளுக்காகவும் இதர ஏழைகளுக்காகவும் ஏற்பட்டிருக்கும் சொஸைடிகளுக்கும் இதனால் மிகுந்த உபகாரமாகவே உண்டாயிருக்கிறது. அவர்கள் மாதாமாதம் கொஞ்சம் கொஞ்சமாக ஒரு தொழில்தனத்தை உறுதியாய்ச் சேர்த்து தங்கள் மெம்பர்களுள் ஒன்று இரண்டு பெயர்களுக்குப் போதுமான தொகையாக சேர்ந்தவுடன் கடனைக் கொடுக்கிறார்கள். இம்மாதிரி அப்படிப்பட்ட ஏழை சொஸைடிகள் தங்களுக்கு சொந்த மூலதனத்தை ஏற்படுத்திக்கொண்டு சென்ட்ரல்பாங்கியினிடம் பெரியகடன்படாமலிருக்கின்றன. கிராம நாணயச்சங்கங்களிலோ கீழ்வகுப்பினரே விசேஷமாயில்லாமல் உயர் திறத்தாரும் மத்திய வகுப்பினருமே கூடிய விவசாயிகளானபடியால் பெரியதொகை பெறுமான பொதுச்சொத்துகளைக் காட்டி அதனால் வெகு எளிதாக சொஸைடி ஏற்பட்ட உடனேயே தங்கள் இலாகா சென்ட்ரல் பாங்கியிலிருந்து காட்டின பெறுமானத்திற்குத் தக்க கடன் அடைகிறார்கள்.

இவ்வளவு எளிதாகவும் சீக்கிரமாகவும் ஒரு சொஸைடிக்கு ஏராளமான தொகை ஆரம்பத்திலேயே கிடைப்பதும் பிறகு கேட்டபொழுதெல்லாம் கிடைப்பதும் ஒழுங்கீனத்தை உண்டாக்க ஹேதுவாகுமென்று என் மனதில் படுகிறது. கோவாபரேடிவ் இயக்கங்களின் இயற்கை ஒழுக்கங்களா யிருக்கவேண்டிய "தானே உழைத்தல்" "தானே போஷித்துக்கொள்ளுதல்" என்னும் நீதிகளை பலப்படுத்துகிறதில்லை. மெம்பர்களுக்குள் ஐக்கியத்தையும் பரஸ்பர பொறுப்புகளையும் கூட ஒருவாறு மாறுபடுத்தியிருக்கிறது. இதன் துர்க்குணம் "சிறுகாலக் கடன்கள்" அடிக்கடி புதுப்பிக்கப்படுவதினால் சற்று சாந்தமாக்கப்படுகிறது. ஸர் ஹென்ரி உலப் துரையவர்கள் எழுதியதாக மேலே சொல்லப்பட்ட வியாசத்தில் கண்ட அபாயம் நமக்கு நேருமோ என்றுகூட நான் கவலைப்படுகிறேன். அதாவது ஒரு சென்ட்ரல் பாங்கி தன் முதலாளிகளின் லே

வாதேவிக்காக சொஸைடிகளை சேரும்படி தூண்டி பிறகு அனாவசியமாய் கடன்களை அவைகளின்பேரில் சுமத்தி அதனால் லாபம் சம்பாதிக்க எத்தனிக்கக்கூடிய விதத்தைக் காட்டினார். சென்ட்ரல் பாங்கிகளில் பணம் முடங்கிக் கிடக்கிறதாகவும் அதற்கு அவசியமான விநியோகம் தேவையாயிருக்கிறதாகவும் அடிக்கடி தாராளமாய் நாம் கேள்விப்படுகிறோம். இப்படி முடங்கியிருக்கும் பணத்தை விநியோகிக்கும் ஆவலில் கடனின் தேவைக்கு உண்மையான காரணமும்; வேண்டிய தொகையும் கொடுக்கும் ஜாமீன் போதுமானதாயும் பத்திரமாயும் இருக்கிறவரையில் கவனிக்கப்படுவதில்லை.

பரிசீலனையுடன் ஒரு சென்ட்ரல் பாங்கி முதல் முதல் கொடுக்கும் பொருளுதவியானது கோவாபரேடிவ் கிளர்ச்சிக்கு விசேஷ உதவியுள்ளது என்பதில் ஆக்ஷேபணையில்லை. ஆனால் இது விஷயத்தை சரிவர வரையறுப்பது கடினம். ஒரு சொஸைடி எவ்வளவு பழையதாக இருக்கிறதோ அவ்வளவு அதிகக் கடனாளியாயிருக்கிறதென்பதை அனுபவத்தில் காண்கிறோம். இதேமாதிரிதான் ஒவ்வொரு சொஸைடியிலுள்ள மெம்பரின் கதியும் இருக்கிறது. நீடித்த மெம்பருடைய கடன் எப்பொழுதுமே அதிகம்தான். பைலாப்படிக்குள்ள கடைசியான அதிகத்தொகைவரையில் விருத்தியாகி அவ்விடத்தில்வந்து நின்றுவிடுகிறது. ஒரு காலத்திலாவது பைசலாகிறதேயில்லை. மெம்பருக்கு ருணபந்த நிவர்த்தியும் இல்லை. தன் கஷ்டகாலங்களில் தனக்குப் பொருளுதவி செய்வதற்கு நன்றி பாராட்டவாவது இப்பொழுது அம்மாதிரி நிலைமையிலிருக்கும் சகோதரர்களுக்கு உபயோகமாயிருக்கலாம் என்ற திருப்திக்காகவாவது தனது மீதித்தொகையை சொஸைடியின் பண்டில் போட்டுவைக்கப் பிரியப்படுகிறதுமில்லை. அதற்கு பதிலாக தனக்கு சொஸைடியில் சம்பந்தமிருக்கிறவரையில் சட்டப்படி எவ்வளவு பணம் அதிலிருந்து தான் பிடுங்கமுடியுமோ அவ்வளவு தொந்திரவும் செய்துகொண்டிருப்பதுதான் கடமை என்று எண்ணுகிறார். ஆனால் காலம்செல்லச் செல்ல புது மெம்பர்கள் சேருகிறார்கள். நன்றாய் நடத்தப்படும் ஒரு சொஸைடியில் அவர்களுக்கு வேண்டியதொகை பாங்கியிலிருந்து கடன்வாங்கவேண்டும் என்கிற அவசியமில்லாமல் பழைய மெம்பர்களின் டிபாஸிட்டிலிருந்து கொடுக்கமுடியும்.

மேற்கண்ட குறைகளை நிவர்த்திசெய்ய நமது இராஜதானியிலுள்ள கோவாபரேடர்களின் ஆலோசனைக்கு பின்வரும் பிரஸ்தாபங்கள் கொண்டுவரப்படுகின்றன. முதலாவது, மெம்பர்கள் தங்கள் பணங்களை இன்னும் அதிகமாக சொஸைடியில் கொண்டுவந்து போடும்படி கட்டாயப்படுத்தப்படவேண்டும். கோவாபரேஷன் கமிட்டியார் இம்மாதிரி



ஏற்பாடு கெடுதல் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் மெம்பர்களின் தற்கால நிலைமையில் பிரயோஜனத்தைக் கொடுக்கக்கூடிய வழி இது ஒன்றே. இவ்விஷயத்தில் நம்மைவிட மேலாக இருக்கும் இதர தேசங்களெல்லாம் உண்மையில் கட்டாயப்படுத்துகின்றன. பைலாப் பிரகாரம் கடன்வாங்கும் ஒவ்வொரு மெம்பரும் அல்லது கடனைத் திருப்பிக்கொடுக்கும் ஒவ்வொருவரும் தன்னுடைய நீண்டகால டிபாஸிட்டுக்கணக்கில் பங்குக்காக என்று ஒருகுறிப்பிட்டதொகை செலுத்த வேண்டியது அவசியம் என்று ஏற்படுகிறது. அம்மாதிரி ஏற்பாட்டில் யாதொரு தப்பும் இல்லை. அதற்குபதிலாக இக்கட்டாயமானது மெம்பருக்கு பிற்காலத்தில் அத்தியாவசியகரமான ஒரு நல்ல உதவியாயிருக்கிறது. ஆகையால் சொஸைடியின் பண்டுக்காக மெம்பர்கள் கொஞ்சம் கொஞ்சமாய் மெதுவாக தவறாமல் பணம் கட்டிவரவேண்டியது அவசியம். அம்மாதிரி நமது பைலாக்களில் பண்டுத்தொகை சேர்க்கப்படுவது பங்குத்தொகையிலா, நீண்டகால டிபாஸிட்டிலா என்பது சங்கங்கள் பின்னால் நிச்சயித்துக்கொள்ள வேண்டிய விஷயம்.

இரண்டாவது, சென்ட்ரல் பாங்குகளிலிருந்து கடன்கள் வாங்கும்பொழுது சொஸைடிகளுடைய பொருளீடுகளின் பலத்தோடுகூட அவைகளின் ஒழுக்கங்களையும் கவனிக்கும்படி ஏற்பாடுசெய்வது மிக்க நன்மையை உண்டாக்கும். முன் சொன்னபடி சொஸைடி ஆரம்பித்தவுடன் அதற்கு முதல் உபகாரப் பணம் கொடுக்கலாம். ஆனால் மூன்று வருஷம் வேலை செய்தபிறகு அதன் சொந்த மூலதனமானது பிரஸ்தாபிக்கும் கடனைச் சேர்த்து வெளிக்கடன்களில் ஐந்தில் ஒருபாகமாவது இருந்தாலொழிய புதுக்கடன் கொடுக்கக்கூடாது. 5 வருஷத்திற்குப் பிறகு மூன்றில் ஒரு பாகமாகவும் 8 வருஷத்திற்குப் பிறகு மூன்றில் இரண்டுபாகமாகவும் ஏற்படுத்தி அத்துடன் நிறுத்தலாம்.

(பின்வரும்.)

---

## நமது "கூட்டுத்தொழில் வர்த்தமானி"

### வடமலைபுரம் ம-ா-ா-ஸ்ரீ, ஆனந்தராவ் அவர்கள் எழுதியது

ஐக்கிய இயக்கத்தின் அபிவிர்த்தியை உத்தேசித்தும் ஐக்கிய இயக்கத்தின் தன்மையை இன்னதென்று ஐக்கிய சங்கங்கள் தெரிந்துகொள்ளுவதுடன் ஐக்கிய இயக்கத்திற்கு பாடுபடுபவர்கள் தெரிந்துகொள்ளும்படி ஐக்கிய இலாகா டிபார்ட்மெண்டாரால் இங்கிலீஷ், தமிழ், தெலுங்கு இந்த மூன்று பாஷைகளில் முதல் முதல் 1909-ம் வருஷம் செப்டம்பர் மாதத்தில் ஆரம்பித்து நடந்துவருகிறது. டிபார்ட்மெண்டார் இதை முதல் முதல்

சொற்ப காலம் நடத்தி அப்பால் திருவல்லிக்கேணி ஐக்கிய பண்டக சாலையார் வசம் ஒப்புவித்து அவர்களிடமிருந்து மாகாண கோவாபரேடிவ் யூனியன் 1915-ம் ௵ செப்டம்பர் ௴ முதல் நடத்திவருகின்றது. யூனியன் பிரசுரம் செய்த முதல் சஞ்சிகையிலேயே இந்த வர்த்தமானி விஷயமாய் இந்த இராஜதானியிலுள்ள எல்லா சங்கத்தாரையும் ஜனங்களையும் வேண்டிய உதவி செய்யவேணுமாய் கேட்டுக்கொண்டிருக்கின்றது. மேலும் அதேசமயத்தில் இங்கிலிஷ் பிரசுரத்தைவிட சுதேசபாஷை பிரசுரங்களை திறமையாய் நடத்த உத்தேசித்திருப்பதாலும தெரியப்படுத்தியிருக்கிறார்கள். அதுமுதல் அதாவது 1915 ம் ௵ செப்டம்பர் ௴ முதல் புலெட்டினை திறமையாய் நடத்திவரவேண்டியபொறுப்பு யூனியனின் தலையில் கட்டப்பட்டிருக்கிறது. இந்த யூனியன் யார்? இந்த பொறுப்பு யார்தலையிலிருக்கிறதென்று ஒரு நிமிஷம் ஆராய்ந்து பார்த்தால் அது இந்த இராஜதானியிலிருக்கும் சங்கத்தார்பேரில்தான் ஏற்படுகிறது. எப்படியெனில் சங்கங்களை மெம்பராகக்கொண்டுதான் யூனியன் ஏற்பட்டிருக்கிறதென்று தெரியவரும். ஆகையால் இப்பொறுப்பை யேற்றுக்கொண்ட சங்கங்கள் இதுவிஷயத்தில் எவ்விதமாய் உதவிசெய்வதாய்பார்ப்போமானால் எதிர்பாராதபடி இல்லை என்றமுடிவுக்குத் தான் வருவோம். இந்த "கூட்டுத்தொழில் வர்த்தமானி"யை நடத்துவதற்காக ஒவ்வொரு சங்கமும் ஏற்பட்டிருக்கும் சந்தாவை முன்னதாக செலுத்தவேணுமென்ற விஷயம் எல்லாச் சங்கத்தாருக்கும் தெரிந்ததே. இதுவிஷயமாய் சங்கங்களிடமிருந்து வசூல் செய்யவேண்டியதான பாக்கி ஜாப்தா ஒன்று எனது பார்வைக்கு வந்திருப்பதில் அதை கவனிக்கும்போது நிரம்பவும் வருத்தத்தை கொடுக்கக்கூடியதாயிருக்கிறது. சில சங்கங்கள் 5, 6 வருஷகாலமாக தங்கள் சந்தாவை அனுப்பாமலிருப்பதாய் தெரியவருகிறது. இவர்கள் சந்தாத்தொகையை அனுப்புவதில் எவ்வளவு அக்கரையுடன் இருப்பார்களோ அவ்வளவு அக்கரைதான் அதைப்படிப்பதிலிருக்குமென்று ஊகிக்கவேண்டியதாயிருக்கிறது. இப்பேற்பட்ட சங்கத்தைப்பற்றி நாம் என்ன சொல்வது. இந்த வர்த்தமானியை எல்லாச் சங்கத்தார்களும் பார்ப்பார்களென்றே பத்திராதிபர்கள் தங்கள் சொந்த வேலையுடன் இதற்கு வேண்டிய குறிப்புகள் எழுதுவதும் இன்னும் விஷயதானம்செய்வோர்கள் கஷ்டப்பட்டு விஷயங்களை ஆராய்ச்சிசெய்து எழு



தியனுப்புவதுமா யிருக்கிறது. அப்படியிருக்க சங்கங்கள் பத்திரிகைகளை பார்ப்பதே இல்லை என்று ஏற்பட்டுவிட்டால் மேலேசொன்னவர்களுடைய ஊக்கம் வரவரக் குறைந்து வர்த்தமானியால் தன்மதிப்புக்கெட்டுப்போய்விடும். அப்படியானால் இதற்கு ஜவாப்தாரி சங்கங்களே. இதற்கு இடங்கொடாமல் பார்க்கவேண்டியது சங்கங்களின் கடமை. இம்மாதிரி பிரசுரம் நமது இராஜதானியில் தான் முதல் முதல் ஏற்பட்டது. இதினால் நமது இராஜதானியில் விசேஷ அனுகூலங்கள் ஏற்பட்டிருப்பதாய் தெரிந்து இதரமாகாணங்களில்இப்போது ஏற்படுத்திநடத்திவருகிறார்கள். இதுஇந்த மாகாணத்தில் ஏற்பட்டது முதல் 3 மாசத்துக்கொருதரம் பிரசுரமாய் வந்தது. 1917-ம் ஜூலை ௴ முதல் மாத சஞ்சிகையாய் வெளியாய்வருகிறது. 3மாதத்துக்கொருதரம்பிரசுரம்செய்யவேண்டியகாலத்திலிருந்த பொறுப்பைவிட மாதாமாதம் வெளிபடுவதில் ஜாஸ்திபொறுப்பு ஏற்பட்டிருக்குமென்று நான் சொல்லாமலே விளங்கும். மாதாமாதம் பிரசுரம் செய்து வருவதில் ஜாஸ்தி விவரங்களுடன் வெளி வருவதுடன் விஷயதானம் செய்வோர்கள் பேரும் ஜாஸ்தியாய் வெளிவருகிறது. இது ஒரு சுபசூசனை. ஒரு நல்ல காரியம் செய்து பலனை அனுபவிக்க இச்சையுடையவர்கள் கஷ்டப்பட்டுத்தானாகவேண்டும். இதுவிஷயத்தில் தங்களை பிரயாசைக்கு பிரதிபிரயோஜனத்தை எதிர்பாராமல் உழைக்ககூடியவர்களிருக்கிறார்கள். ஆனால் தங்கள் கை முதலையும்போட்டு வேலைசெய்ய முன்வருவது அபூர்வம். ஆகையால் நமது வர்த்தமானியை இன்னும் மேன்மைக்குக் கொண்டுவந்து இதினால் அநேக நன்மைகள் அடையவேண்டியதாயிருக்கிறது. இந்த வர்த்தமானிதான் ஐக்கிய இயக்கத்தை பரவச் செய்வதும் சங்கம் நடத்துவோர்களுக்கு விஷயங்களை எடுத்துக்காட்டுவதற்கும் முக்கியகருவிஎன்பதைஎல்லாரும்நினைக்கவேண்டும் சிற் சில சங்கத்தார்கள் புலெடின் அந்தந்தமாதத்தில் வெளிவருவதில்லைஎன்று ஆவலாதி சொல்லுகிறார்கள். இந்தஆவலாதியைபோக்கடிக்கவேண்டியது தான். கூடுமானவரையில் சரியானகாலத்தில் வெளிவரும்படிக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது. ஆனால் இவ்விஷயத்தில்சங்கங்கள், நடந்துகொள்ளவேண்டிய முறையை கவனியாமலிருப்பதுவிசனிக்கத்தக்கது. வருஷக்கணக்காய் சந்தாபாக்கி வைத்துக்கொண்டிருந்தால் எப்படி சஞ்சிகையை காலந்தவறாமல் வெளியே அனுப்பமுடியும், இதுகஷ்டமானதே!

யூனியனிலிருந்து சந்தாத்தொகை பெறுவதற்காக V. P. (வி. பி.) யில் அனுப்பினால் சில சங்கத்தார் தொகை கொடுத்துப் பெற்றுக்கொண்டு வந்தனத்துடன் பதில் எழுதவேண்டியதாயிருக்க V. P. யை மறுத்துவிடுகிறார்கள். இவர்கள் இவ்விதம் செய்வதால் யூனியனுக்கு நஷ்டமேற்படுகிறது. இவைகளை எல்லாம் கவனித்து சங்கங்கள் சரியானபடி உதவிசெய்து வரவேண்டும் ஒவ்வொரு சங்கமும் தம் தொகையை அனுப்பிவிடுவதுடன் மற்ற சங்கத்தாரையும் அனுப்பிவைக்க வேண்டிய ஏற்பாடு செய்து அங்கங்கே நடக்கும் ஐக்கிய சமாசாரங்களையும் புலெடீனுக்கு எழுதியனுப்ப வேண்டும். சங்கத்தார்பாக்கியை இதர சங்கங்கள் தெரிந்து கொள்ளுமாறு மாதந்தோறுமாவது அல்லது மூன்று மாதத்துக்கு ஒருமுறையாவது சங்கங்களின் பாக்கியைப் புலெடீனில் பிரசுரம் செய்யவேண்டுமென்று யூனியன் காரியதரிசிகளைக் கேட்டு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்படும். சங்கங்கள் தங்கள் பாக்கியை உடனே செலுத்தி விட்டால் நலம். சங்கத்தின் பாக்கிகளை அது வெளிவருமுன் சங்கங்கள் தங்கள் பாக்கியை செலுத்தி விட்டு தங்கள் பேர் பாக்கிஜாப்தாவில் இல்லாமலிருக்க வேண்டிய பிரயாசை எடுக்கவேண்டுமென்று கோரப்படுகிறது.

---

## கீழச்சேரி மஹா சபை மீட்டிங்

நடக்கும் ஜூன் மாதத்தில் யூனியனில் அணைக்கப்பட்ட சங்கங்களில் எல்லா கவர்னிங்பாடி மெம்பர்களும் ஒவ்வொருவரும் கூடிய வரையில் சங்கங்களை இன்ஸ்பெக்ஷன் செய்து சங்கம் சென்ட்ரல் பாங்குக்கு அனுப்பவேண்டிய அசல் வட்டி பாக்கி யில்லாமலும்மெம்பர்கள் தவணை தவறிய கடன் பாக்கியில்லாமலும் சூபர்விஷன்பண்டு, க்ஷேமநிதிக்கு அனுப்பவேண்டியது. பாக்கியில்லாமலும் கவனிக்க வேண்டுமென்று பிரஸிடெண்டு அவர்கள் கொண்டு வந்த பிரேரபணை.

33[illegible]-நெ. மதுரமங்கலம், 3[illegible]9-நெ. சோகண்டி, 9-நெ. திருப்பந்தியூர், [illegible]2-நெ. முளசூர் இந்த சங்கங்களை மிஸ்டர் B. பாபையநாயுடு அவர்களும், 539-நெ. பேரம்பாக்கம், 339-நெ. சத்தரை, [illegible]9-நெ. நரசிங்கபுரம், [illegible]90-நெ. செல்லன்பட்டறை, 5[illegible]1-நெ. இருளஞ்சேரி, இவைகளை மிஸ்டர் தி. கணபதி முதலியார் அவர்களும், 343-நெ. கூவம், 532-நெ. குமாரசேரி, 353-நெ. எரையாமங்கலம், 16-நெ. அழிஞ்சிவாக்கம், 37-நெ. தங்கம்பாக்கம் இவைகளை மிஸ்டர் திருபுராந்தக் குருக்கள் அவர்களும்,



566-நெ. பிள்ளையார்குப்பம், 1116-நெ. ஏலம்பாக்கம், 942-நெ. அரையாவாக்கம், 793-நெ. கண்ணூர், 540-நெ. மப்பேடு இவைகளை சு. மன்னாத முதலியார் அவர்களும், 2. நெ. கீழச்சேரி, 370-நெ. புதுப்பட்டு, 1150-நெ. கசவநல்லாத்தூர், 1114-நெ. புதுமாவிலங்கை, 1577-நெ. பிஞ்சிவாக்கம், 525-நெ. ஸ்ரீபெரும்புத்தூர், 136-நெ. ஆய கொளத்தூர். 1578-நெ. நயப்பாக்கம் இவைகளை ராய்ஸாஹேப் அருளய்யநாயுடு அவர்களும், 144-நெ. எடையார்பாக்கம், 51-நெ. கள்ளிப்பட்டு, 789-நெ. பொடவூர், 1645-நெ. தொடூர், 97-நெ. அக்கமாபுரம், இவைகளை மிஸ்டர் திருவேங்கிடபிள்ளை அவர்களும், 95-நெ. வளர்புரம். 11-நெ. நெம்மலி இவைகளை மிஸ்டர். பெ. ராயப்பநாயுடு அவர்களும், 1646-நெ. பாபரம்பாக்கம், சங்கத்தை மிஸ்டர் சுப்பிரமணிய நாயக்கர் அவர்களும், இன்ஸ்பெக்ஷன் செய்யும்படிக்கும் சொஸைடிகள் லிஸ்டு அனுப்பும்படிக்கும் தீர்மானிக்கப்பட்டது.

### ஸர்க்குலர் நே. 530.

கூடலூர் செக்ஷன் அஸிஸ்டெண்டு ரிஜிஸ்ட்ரார் அவர்கள் தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள எல்லா ஐக்கிய சங்கங்களுக்கும் தெரிவிக்கிறதென்னவென்றால்:—

உங்களுடைய சங்கங்களின் க்ஷேமநிதிகள் தஞ்சை டிஸ்டிரிக்டு பாங்கில் டிபாஸிட்டாக வைக்கப்பட்டிருக்கிறதல்லவா? அதற்குண்டான வட்டியை வருஷாவருஷம் இதுவரையில் அந்த க்ஷேமநிதி டிபாஸிட்டுடனேயே டிஸ்டிரிக்டு பாங்கு சேர்த்துக்கொண்டு வந்தமையால் அடுத்த வருஷங்களில் நீங்கள் அனுப்பவேண்டிய க்ஷேமநிதியை அப்படி வட்டியை சேர்த்ததினால் அதிகமாயிருக்கும் தொகை அவ்வளவு குறைத்து அனுப்பி வந்தீர்களல்லவா? அம்மாதிரி செய்வதில் சங்கங்களுக்கு அநாவசியமான வட்டிநஷ்டமும் அசௌகரியமுமிருப்பதை நிவர்த்திக்க டிஸ்டிரிக்டு பாங்கி டைரக்டர்கள் ஷை வட்டியை ஏற்கனவே கடன் வாங்கியிருக்கும் சங்கங்களுக்கு அவைகளால் வரவேண்டிய, (1) கெடுவு கடந்த வட்டி. (2) கெடுவு கடந்த அசல். (3) கெடுவு ஏற்படாத அசல் இந்த வரிசையாய் அந்த வருஷம் ஜூன்மீ 30உயிலேயே அல்லது அடுத்த ஜூலைமீ 1உயிலாவது முஜராகொடுப்பதாயும் கடன்வாங்கியிராத சங்கங்களின் வட்டியை ரொக்கமாக ஷை சங்கங்களுக்கு ஷை தேதியில் அனுப்பிவிடுவதாகவும் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அப்படி முஜராவைக்கப்பட்ட கேஸில் அந்த விவரங்கண்டரஸீது உங்களுக்குகிடைக்கும். அதை உங்கள் கணக்குகளில் எந்த தேதியில் முஜரா வைக்கப்பட்டிருக்கிறதோ அதே தேதியிலேயே முஜராவைத்துக்கொள்ளவேண்டும்.

---

# வந்தவாஸி கோவாபரேடிவ் யூனியன்

ம-ா-ா-ஸ்ரீ, M. தருமலிங்காசாரி அவர்களால் 1—6—8-ல் ஷை யூனியன் மீட்டிங்கில் வாசிக்கப்பட்ட வியாசம்.

மாக்ஷிமையும் கருணையும் வாய்ந்த கவர்ன்மெண்டு ஆளுகையின் கீழ் கோவாபரேஷன் என்னும் கூட்டுறவுச்சங்க டிபார்ட்டுமெண்டை ஸ்தாபித்து நம்மனோர்களுக்கு ஒருவிதப் பட்டப்பேரும் சில அதிகாரங்களும் கொடுத்து தற்காலம் நடைபெற்று வருகின்ற கோவாபரேஷன் என்னும் கவர்னிங்பாடி மீட்டிங்கின்கண் யான் விரும்பிய சில உத்தேசம் உளது. அவைகளை யெடுத்துரைக்க இடந்தருவார்களென்று நம்புகிறேன்.

அஃதியாதெனின்:—ஐயா, இந்தியாவனது பூரணகல்வி கேள்விகளால் நிறைந்த ஞானபூமியென்று நம்முன்னோர்கள் புராணங்களிலும் சாஸ்திரங்களிலும் எழுதி வைத்திருக்கிறார்கள். இச்சார்பால் அடுத்த பல கண்டங்களிலும் ஞானவிர்த்தியாய் வந்திருக்கின்றன. அதற்கு அத்தாக்ஷி, கருவிகளால் அனேக அறிவதற்குரிய அற்புத நுண்ணறிவால் இயற்றக்கூடிய மிஷின்களும, நூல், சிமிள், இருப்பாயுதங்கள், உலோக முதலாகியவைகளால் யந்திர தந்திர ரஸாயன மனுக்ரஷ தேகத் தத்துவ பூகோள ககோள கணித ஆராயச்சிகளால் அதிகரித்திருக்கிறது. அத்தகைய அற்புத அறிவு சம்பந்தமான கல்வி கேள்வி, கைத்தொழில்கள் இந்தியா முற்றும் இழந்திருக்கின்றது.

இவ்விந்தியமாது, அன்னியகண்டப் பொருள்களுக்கு கையேந்தியும், அன்னிய கண்டப் பொருள்காக்ஷிக்கு கண்ணேக்கியும். அன்னிய கண்ட விஷயங்களுக்கு செவிசாய்த்தும் நிற்கிறாள். இத்தகைய குறைவுகளுக்கு நம்மாக்ஷிமை தங்கிய கவர்ன்மெண்டார் எவ்வளவோ உழைத்தும் இந்தியாதேசமானது நம்முன்னோர்கள் எழுதியபடி ஞானவிர்த்தி, ஒற்றுமை ஜிவனோபாய சீர்த்திருத்தங்களில் முன்னுக்கு வரவில்லை, இவை களுக்கு முக்கிய காரணம் கல்விக்குறைவே. சகல ஐசுவரியங்களுக்கும் காரணம் கல்வியென்பது திண்ணம். இவ்விந்தியா கல்வி அறிவில் பூரணமடைந்திருந்தால் இக்கூட்டுத்தொழில் வியாபாரம் வெகு சீக்கிரத்தில் முன்னுக்கு வந்திருக்கலாம். சுமார் 13-வருஷ காலமாயும் இக்கூட்டுறவுச்



சங்கம் முற்றிலும் இந்தியாவில் பரவவில்லை. ஆராயுமளவில் ஒவ்வொரு தாலூக்காக்களிலும் சராசரி 20 சொஸைடிகள்தான் ஏற்பட்டிருக்கிறது. முற்றிலும் கல்வி அபிவிருத்தி யடைந்திருக்குமாகில் ஐக்கிய முயற்சி வெகு சீக்கிரத்தில் இந்தியா முழுவதிலும் பரவி இருக்கலாம். „ இக்குறைபாடுக்குக் காரணம் கல்விக்குறைவே.

இந்தியாவில் கைநாட்டு சம்பிரதிகளும் அற்ப படிப்பாளிகளும், படித்திருந்தும் சீர்திருத்தம், உலகவழக்கம், இராஜாங்க முறைமை, அறியாதவர்களுமே அதிகமாக இருக்கிறார்கள். இப்படி யிருப்பதால்தான் சொஸைடியில் கடன்வாங்க பயப்படுகிறார்கள். தங்கள் பொருள்களை அநீதியாக கைக்கொள்வார்களென்றும் சொஸைடியில், கடன் வாங்க பயந்து அன்னியரிடத்தில் அதிகவட்டிக்கு கடன் வாங்கி நஷ்டம் அடைகிறார்கள். இன்னும் ஐக்கியவிஷயத்தைப்பற்றி என்னால் கூடியவரையிலும் அநேக கிராமங்களில்போய் ஐக்கிய அனுகூல வர்த்தமானங்களை பிரசங்கம் செய்தும் அவர்கள் புத்தி திருந்தவில்லை. ஆகையால் கூட்டுத் தொழிலுக்கு முதற்கருவியாகிய கல்வி விர்த்திக்கு நாம் யாவரும் ஒருங்கு சேர்ந்து ஒற்றுமைக்கவேண்டும். நிரக்ஷரகுக்ஷிகள் நிரம்பிய ஊர்களில் எவ்விதம் கூட்டு முயற்சி நடைபெறும்? படிக்கவாவது தெரிந்திருக்குமாகில் சங்கம் ஏற்படுத்த முடியும். ஐக்கிய நாணயச்சங்கம் பிரதி கிராமங்களிலும் நிரம்பினால் இந்தியா ஒருங்குச் சேர்ந்ததென்பது திண்ணம். இந்தியாவிற்கு வேண்டிய சௌகரியங்கள் கைகூடினதாகும். சுய ஆக்ஷியும் அதை இரக்ஷணைசெய்யும்வல்லமை இந்தியாவிற்குக் கட்டாயம் உண்டாகும். கவர்ன்மெண்டார் பேருதவிசெய்து கல்விவிஷயமாக உழைத்து வந்தும் விர்த்தியாகாததற்கு காரணம் கட்டாயப் படிப்பு விஷயமாக நோக்காதிருப்பதே. அது இந்தியாவினுடைய துர்ப்பாக்கியமே!

இவ்விஷயமாக அநேக யேதாவிகள் அனேக காலமாய் அனேக முறை கவர்ன்மெண்டாரை மன்றாடிகேட்டும் அதைக் கவனிக்காதிருப்பது என்ன காரணமோ விளங்கவில்லை. நாமும் இவ்விஷயமாக கேட்டதிலும் உழைப்பது "உத்தமம்;" உழைப்பில் வாரா உறுதிகளுளவோ? 'முயற்சி திருவினையாக்கும்' என்று ஆன்றோர்வாக்கியமுளது. இப்படி அடிக்கடி கவர்ன்மெண்டாரை கேட்டால் கிருபைகூர்ந்து கட்டாயப்

படிப்பில் நோக்கங் கொள்வார்கள் என்று நம்புகிறேன். இது நிற்க, வந்தவாஸி தாலூக்காவில் செகண்டெரி ஸ்கூல் அதிகமாக வைக்கப்படவில்லை. பொதுவாய் அனேக பிள்ளைகள் வெளிதாலூக்காக்களில் போய் வாசிப்பதில் அதிகமான கஷ்டம் அடைகிறார்கள். சில பிள்ளைகள் அவ்விதக் கஷ்டங்களை நிர்வகிக்க முடியாமல் படிப்பையே விட்டுவிடுகிறார்கள். இவ்விஷயமாய் தற்காலம் வந்தவாஸியில் செகண்டெரி ஸ்கூல் ஏற்படுத்த வேணுமாய் கோருகிறேன். தவிர ஆங்காங்கு ஐக்கிய நாணயச் சங்கத்தினர்கள் ஸ்கூல்கள் வைத்திருப்பதாக புல்லெடினால் தெரியவருகிறது. நமது தாலூக்காவிலும் அத்தகைய ஐக்கிய நாணயச் சங்கமில்லா திருப்பது பெருங்குறையைக் காட்டுகிறது. இதையும் பூர்த்திசெய்ய முயலக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

நம் சங்கங்களில் பொது நலபண்டு என்று லாபத்தில் 100-க்கு 7½ வீதம் பிரசெண்ட் நாமே தர்மச்செலவு செய்யலாமென்று இருப்பதில் அந்தந்த சங்கங்களில் ஏற்படும் தர்மபண்டை மொத்தமாக்கி, சௌகரிய இடத்தில் தற்காலம் பிரைமரி ஸ்கூல்வரையிலும் ஓர் ஸ்கூல் ஏற்படுத்தவேணுமாய் விடா முயற்சி எடுத்து ஸ்தாபிக்க வேணுமாயும் கோருகிறேன்.

கவர்ணிங் பாடியிலும் அங்கீகரித்து தீர்மானம் செய்து தீர்மானத்தை ஜெனரல் பாடியிலும் ஒப்புக்கொள்ள சிபார்ஸு செய்வார்களாக. கனம் அஸிஸ்டெண்டு ரிஜிஸ்ட்ரார் அவர்களுடைய அங்கீகாரத்திற்கும் புல்லெடினுக்கும் அனுப்பும்படி கோரப்படுகிறது.



# கிராமச் சங்கங்களுக்கு மேற்பார்வையும் திரவிய சகாயமும்

மதுரை ம-ா-ா-ஸ்ரீ, ரேய் ஸாஹேப் கே. ராமாஸ்வாமி அய்யரவர்களால் எழுதியது.

பணவிஷயத்திலாவது மேற்பார்வையிலாவது வெளி ஒத்தாசையை வேண்டாத கிராம நாணயச்சங்கங்கள் மிகச்சில. கிராமபிராந்தியங்களிலுள்ள அநேக கிராம நாணயச்சங்கங்கள் தங்களுடைய தொழில் தனத்தின் விசேஷ பாகத்திற்கு வெளி ஏஜன்ஸிகளையே நம்பவேண்டியதாகிறது. நகரச்சங்கங்களில் அநேகம் தங்களுக்குத் தேவையான தொழில்தனங்களை உள்ளூர் டிபாஸிட்டுகளைப் பெற்று அடைந்த போதிலும் இன்னும் அநேக சொஸைடிகள் வேண்டிய அளவு டிபாஸிட்டுகள் பெறமுடியாமலுமிருக்கின்றன. அப்படியே சில நகரச்சங்கங்களின் டிபாஸிட்டுத் தொகைகள் தங்கள் தேவைக்கு உபயோகமான பிறகு விசேஷமாய் மிகுந்து கிடக்கின்றன. ஆகையால் அவைகள் தங்கள் மிகுதிப் பணத்தை ஈடு படுத்த வெளி ஏஜன்ஸிகளின் உபகாரத்தை நாடவேண்டியிருக்கிறது. மேற்பார்வையைப்பற்றி கவனித்தால் அனேக கிராமநாணயச்சங்கங்களுக்கு இடைவிடாமல் கவனிக்கும் மேற்பார்வை வேண்டும். கிராமச்சங்கங்களுக்குப் போதுமான அவ்வளவு கவனமுள்ள மேற்பார்வை நகரச்சங்கங்களுக்கு தேவையில்லாவிட்டாலும் அவைகளில் விசேஷ லேவாதேவி யிருக்கிறபடியால் கவனமான தணிக்கை செய்யப்படவேண்டியது அவசியம்.

திரவிஜாரிக்குமளவில், நகரச்சங்கமானாலும் நாட்டுச்சங்கமானாலும் அநேகமாய் எல்லாச் சங்கங்களும் தங்களின் திரவிய சகாயத்திற்கும் மேற்பார்வைக்கும் தகுந்த ஏற்பாடு செய்ய வேண்டியிருக்கிறது. இதை எப்படி சாதிப்பதென்பது ஒவ்வொரு கோவாபரேடரும் ஆழ்ந்துயோசிக்கவேண்டியவிஷயம். இவ்விருவிஷயங்களையும் சரிவர நடத்துவதற்குத் தற்போதைய ஏற்பாடே மிகத்திறமென்றும் வேறு புது வழிகளைப்பற்றி நினைக்க வேண்டிய அவசியமில்லை என்றும் சங்கிக்கலாம். தங்கள் சௌகரியங்களை மிகத்திறமையுடன் கவனிக்கத் தயாராகவிருக்கும் சென்ட்ரல் பாங்கிகளிலிருந்து சொஸைடிகள் தங்களுக்கு வேண்டிய தொகைகளைப்பெறலாம். மிகுதித்தொகைகளையும் அவைகளில் டிபாஸிட்டுசெய்யலாம். இராஜாங்கத்தாரும் மேற்பார்வை, தணிக்கை இவைகளை நடத்தப்போதுமான சிப்பந்திகளை நியமித்திருக்கிறார்கள். அவசியமானால் சிப்பந்திகளை அதிகப்படுத்தவும் தயாராயிருக்கிறார்கள். இவ்வேஜன்ஸிகள் எவ்வளவு திறமாகவிருந்தாலும் அவைகள் அன்னியமே. எதுவரையில் சொஸைடிகளுக்கு

அத்தகைய ஏஜன்ஸிகளின் பேரில் அதிகாரப்பிடிப்பு இல்லையோ அதும் வரையில் அவைகள் சுவாதீன மடைந்திருக்கின்றனவென்று சொல்ல முடியாது. சுய ஒத்தாசையும் சுய ஆதீனமும்தான் ஐக்கிய முயற்சிக்கு முதல் முதல் வேண்டிய விஷயங்கள். இவைகளை அடையும் பொருட்டே உயர்தர ஐக்கியமுறை ஏற்படவேண்டியதாயிருக்கிறது.

பல மாகாணங்களில் பலவிதமான யேற்பாடுகள் விருத்திபண்ணப் பட்டிருக்கின்றன. ஆனால் இந்த இராஜதானி ஏற்றுக்கொண்டிருக்கும் முயற்சியைப்பற்றி கவனிக்கிறேன்.

இந்த இராஜதானியில் சூபர்வைஸிங் யூனியன்கள், டிஸ்ட்ரிக்ட் பாங்கிங் யூனியன்கள் என்று இருவகை ஏற்பாடுகள் இருக்கின்றன. முந்தியது மேற்பார்வைக்காகவும் பிந்தியது பொருளுதவிக்காகவுமே என்று தீர்மானிக்கப்பட்டவை. முன்னம் கூறப்பட்ட யூனியன்களில் சங்கங்கள்தான் மெம்பராக விருக்கலாம். பிந்தியதிலோ தனி நபர்கள்கூட மெம்பர்களாக எடுத்துக்கொள்ளப்படுகிறார்கள். இது வரையில் கவனித்தால் தீவர ஆலோசனையுடன் நன்றாகத்தான் பராமரிக்கப் படுகின்றன. ஆனால் இவ்விரு ஏற்பாடுகளுக்கும் இவைகளிரண்டின் சார்பையும் பற்றவேண்டியிருக்கிற கிராம நாணயச் சங்கங்களுக்கும் அமைந்துள்ள பொருத்தங்களை கவனிக்கப்புகின் விஷயங்கள் குழப்பமாய்த்தோன்றுகின்றன. இரண்டுவித ஏற்பாடுகளும் சீக்கிரமாக விருத்தியடைந்து கொண்டு வருகின்றன. ஆனால் அவைகளின் தனித்தனிப் பொறுப்புரிமைகள் இன்னவை யென்று இன்னும் விளக்கப்படவில்லை. ஒவ்வொன்றும் தனக்கு ஏகாதிபத்தியம் வேண்டுமென்கிறது. தங்களுடன் சம்பந்தப்பட்ட கிராமநாணயச் சங்கங்களின் கதிக்கு தாங்களே கர்த்தாவாக விருந்து அதிகாரத்தோடு ஆளவேண்டும் என்று யூனியன்கள் பிரஸ்தாபித்துக் கொள்ளுகின்றன. டிஸ்ட்ரிக்ட் பாங்கிங் யூனியன்களும் அவ்வாறே செய்கின்றன. கவர்ன்மேண்டு உத்தியோகஸ்தர்களோ இயக்கத்தின் பாதுகாப்புக்கு தாங்கள் ஜவாப்தாரி என்னும் காரணத்தைவைத்துக் கொண்டுயூனியன்கள், டிஸ்ட்ரிக்ட் பாங்கிங் யூனியன்கள் இவ்விரண்டிற்கும் மேலேயிருக்க விரும்புகிறார்கள். கிராமநாணயச்சங்கங்களோ என்றால் விசேஷமாய் வாயில்லாப் பூச்சிகளானமையால் வெளியிலிருந்து வரும் உபத்திரவம் எவ்விதமாக விருந்தாலும் தாழ்மையுடன் பொறுக்கின்றன. நாமும் இருக்கிறோம் என்று கொஞ்சம் பேசி உணரக் கூடிய சிலசொஸைடிகள் மாத்திரம் தங்கள் உள்விவகாரங்களில் புக வெளி ஏஜன்ஸிக்கு இடங்கொடுக்கிறதில்லை.

இக்குழப்பத்திற்கு அனுகூலமாகவே இவ்வேஜன்ஸிகளின் பொறுப்பு இன்னதுதான் என்று நிர்ணயிக்கிறதுமில்லை. ஆகவே ஹத்துமீறி



162043

ஒவ்வொன்றும் வேலைசெய்யுங்காலத்தில் அபாயமான சண்டை அவைகளுக்குள் ஏற்பட இடமுண்டு.

சூபர்வைஸிங் யூனியனுடைய முதல்வேலை அதனோடு சம்பந்தப்பட்ட சொஸைடிகளின் மேற்பார்வைக்கு ஏற்பாடு செய்யவேண்டியது. யூனியன் உத்தியோகஸ்தர்கள் அடிக்கடி சொஸைடிகளை சுற்றிப்பார்த்து உள் விஷயங்களை நன்றாய் கவனித்து தவறுதல்களிருந்தால் சரிப்படுத்த வேண்டியது. யூனியனின் கமிட்டி மெம்பர்களை சொஸைடிகளே தேர்ந்தெடுக்கிறபடியால் அவர்களுடைய நோக்கத்தை பிசகாக கிரகிக்க இடமில்லை. மேற்பார்வைக்கு லோகல்யூனியனைத் தவிர வேறு சௌகரியமானஏற்பாடு நினைக்கமுடியாது. மேற்பார்வையோடு இருந்து விட்டால் உபத்திரவம் ஏற்பட இடமில்லை. ஒருவேளை தவறுதல் செய்தால் அவர்கள் எல்லைக்கு வெளியில் ஒருவரையும் பாதிக்காது. திரவிய சகாயப் பொறுப்பை ஏற்றுக்கொண்டால்தான் சண்டை ஏற்பட இடமுண்டு. இவைகளுக்கு பணப்பொறுப்பு இல்லாமையால் கடன் கொடுக்கவாவது தடுக்கவாவது அதிகாரம் செலுத்தவிடுதல் புத்தியுள்ள ஏற்பாடல்ல. இதற்கு ஏற்பட்டது பாங்கிங் யூனியன். சூபர்வைஸிங் யூனியன் இதில் ஏன் குறுக்கே வரவேண்டும்? பணவிஷயத்தை கையாடாமலிருக்கும்பொழுது அவர்கள் தப்புவழியில் பிரவர்த்திக்கக் கூடாது. இதற்கு இரண்டு உதாரணங்கள் எடுத்துக் கொள்ளுகிறேன் "ஏ" சொஸைடி ஒரு கடனுக்காக மனுக்கொடுக்கிறது. டிஸ்ட்ரிக்ட் பாங்கியார் கொடுக்கத் தயாராகவும் இருக்கிறார்கள். ஆனால் சூபர்வைஸிங் யூனியன் சிபார்சு செய்யமாட்டேன் என்கிறது. அல்லது "பி" சொஸைடி கடனுக்கு மனுகொடுக்கிறது. சூபர்வைஸிங் யூனியன் சிபார்சும் செய்கிறது. ஆனால் டிஸ்ட்ரிக்ட் பாங்கி ஏதோ சில காரணத்தைக் கொண்டு கொடுக்க மாட்டேன் என்கிறது. சூபர்வைஸிங் யூனியன்கள் தங்கள் சிபார்சுகளை டிஸ்ட்ரிக்ட் பாங்கிகள் அவசியம் கௌரவிக்க வேண்டுமென்று அடிக்கடி சொல்லக்கேட்டிருக்கிறேன். இது சரியான பாங்கிங் வேலைக்கு விரோதமாயுள்ளது. பாங்கியைப் பற்றிய அநேக விஷயங்களில் யூனியனுக்கு அக்கறை யொன்றுமில்லை. ஆனால் கிராம நாணயச் சங்கங்களுக்கு அக்கறையுண்டு. அதின் எல்லா மெம்பர்களையும் பாதிப்பதோடு சொஸைடியே பங்காளியாக இருக்கிறது. அக்கறையில்லாத ஒரு யூனியன் செய்த சிபார்சின் நிமித்தமாய் இதர பாகங்களிலுள்ள கிராம நாணயச் சங்கங்களை சிரமப்படவிடமுடியாது. இந்த அம்சத்தை அடிக்கடி மறந்து விடுகிறார்கள்.

இதேமாதிரி கிராம நாணயச் சங்கங்களின் மேற்பார்வையை முற்றிலும் டிஸ்ட்ரிக்ட் பாங்கிங் யூனியனிடம் ஒப்புவிப்பதும் தப்பு. அதின் முக்கிய அம்சம் பொருளுதவுதல். கிராமச் சங்கங்களின் திரவிய நிலைமை

யை சரிவரத்தெரிந்து கொள்ள எவ்வளவு வேண்டுமோ அவ்வளவு மேற்பார்வைதான் அதற்கு இருக்கவேண்டும். பொருளுதவும் சொஸைடி கிராமச் சங்கத்தைப்பற்றித் தனக்கு வேண்டிய தகவல்களுக்கெல்லாம் சூபர்வைஸிங் யூனியனையே நம்புதல் அறிவீனம். யூனியன் என்பது யதேச்சையாயிருக்கக்கூடிய ஒரு குழாம். அது ஞாயமாய் நிறைவேற்றக்கூடியதற்குமேல் அதிகப் பொறுப்பை அதனிடம் சுமத்தக் கூடாது. இந்தியாவின் சில மாகாணங்களில் ஏற்பட்டிருக்கும் அனுஷ்டானம் என்னவென்றால், ஒவ்வொரு யூனியனையும் ஜவாப்தாரி யூனியனாக்குதலே. அதாவது ஸ்தலயூனியன், பாங்கி, ஆகிய இரண்டு வேலையையும் வகிக்கச்செய்தல். இம்மாதிரி யூனியன் இவ்விடத்தில் பிரஸ்தாபிக்கப்படாமையால் இதைப்பற்றி இங்கு அதிகமாய் எழுதுதல் அனாவசியம்,

டிஸ்ட்ரிக்ட் பாங்கி, லோகல் யூனியன் இவைகளிரண்டும் ஒன்றுக்கொன்று கீழ்ப்பட்டு அடங்கியில்லாமல் பிரத்தியேகமாய்த்தான் இருக்கவேண்டும். ஒன்றினுடைய தீர்மானத்தை மற்றது சிபார்சுபோலத்தான் எடுத்துக் கொள்ளவேண்டும்.

கிராம நாணயச்சங்கமோ இரண்டையும் தான் அனுசரிக்கவேண்டியது. டிஸ்ட்ரிக்ட் பாங்கியின் விஷயங்களெல்லாவற்றையும் பற்றி புத்திமதிக்கும் ஒத்தாசைக்கும் யூனியனையும், பணத்திற்கு பாங்கியையும் நாடவேண்டும்.

இம்மூவகைச் சங்கங்கள் ஒன்றுக்கொன்று விசுவாசமாய் இருக்கப் பார்ப்பது அஸிஸ்டெண்ட் ரிஜிஸ்ட்ராருடைய கடமை. தகரார்கள் சம்பந்தங்கள் ஏற்படும் போதெல்லாம் அதை ராஜி பண்ணி நல்ல புத்தி சொல்ல வேண்டியதும் அவர் பொறுப்பு.

கடன் கொடுக்க அங்கீகரிக்கும் முறைமையை அஸிஸ்டெண்ட் ரிஜிஸ்ட்ராரின் பொறுப்பில்விட எனக்கு இஷ்டமில்லை. இப்பொறுப்பை இவர் வகித்தால் கிராம நாணய சங்கத்திற்காவது டிஸ்ட்ரிக்ட் பாங்கிக்காவது சுவாதீன உணர்ச்சிக்கு வழி எங்கே. அவர்கள் ஒருவரோடு ஒருவர் ஒற்றுமையாய் நடமாடப் பழகவேண்டும். மற்றவரின் தேவை இன்னதென்று தானே முதல்முதல் அறியவேண்டும். கோவாபரேடர்களும் அதிகாரிகளும் கவனிக்க வேண்டிய விஷயங்களில் இவைகள் முக்கியமானதாகும்.

---



# கூட்டுறவும், விவசாயமும்.

பின்வருபவன "ஜனோபகாரி" யிலிருந்து எடுக்கப்பட்டது.

ஐக்கிய நாணயச் சங்கம் என்பதன் பொருளை நன்கு கவனிப்போமானால், அச்சங்கங்களுக்கு இருக்கவேண்டிய லக்ஷணங்கள் ஏற்படுகின்றன. ஐக்கியம் என்கிற பதத்திற்கு ஒற்றுமை என்பது பொருள். பத்து நபர்கள் தனித்தனியாய்ச் செய்யக்கூடாத ஒரு காரியத்தை அந்தப் பத்துபேர்களும் ஒன்று சேர்ந்து ஒற்றுமையாய்ச் செய்தால் அந்தக் காரியத்தைச் சுலபமாய்ச் செய்து விடலாமென்பது தெரிந்த விஷயம். உதாரணமாக, 10 நபர்களுக்கு ஒவ்வொருவருக்கும் 200 ரூபாய் கடன் வேண்டுமென்று வைத்துக்கொள்வோம். தனித்தனியாகக் கடன் வாங்கப்போனால் சாவுகாரியினிடத்தில் கடன் கிடைப்பது கஷ்டமாயிருக்கும். இந்தப் பத்து நபர்களும் ஒன்று சேர்ந்து ஒருவர்க்கொருவர் ஜாமீனாக நிற்க ஒப்புக்கொண்டு மொத்தமாய் 2000 ரூபாய் கடன் வாங்கினால், பணம் சுலபமாய்க் கிடைப்பதுமன்றி, சுவல்ப வட்டிக்கும் கிடைக்க ஏதுவாகிறது. ஏனென்றால், பத்துப்பேர்களுடைய சொத்துக்களும் அந்த மொத்தத் தொகைக்கு ஆதாரமாயிருப்பதனாலும், பத்து நபர்களின்பேரில் தனித்தனியாகப் பத்துப் பேரேட்டில் இருப்பதற்குப் பதிலாக ஒரே பேரேட்டில் இருக்கிற சவுகரியம் ஏற்படுவதனாலும், சாவுகாரி நம்பிக்கையோடு பணம் கொடுக்கிறான். ஆகையால்தான், ஒரு ஐக்கிய நாணயச்சங்கம் ஏற்படுவதற்குமுன் 10 நபர்களுக்குக் குறையாமல் ஒருவர்க்கொருவர் ஒற்றுமையோடு ஒவ்வொருவரும் மற்ற நபர்களுடைய கடன்களுக்கு ஜவாப்தாரியாக இருக்கவேண்டுமென்பது அவசியம். ஒரு சங்கத்திற் சேரக்கூடிய 10 அல்லது 15 நபர்களும் ஒரு ஊரில் குடியிருந்துகொண்டு, ஒவ்வொருவனுடைய நிலைமையும், யோக்கியதையும் தெரியாவிட்டால் ஒன்று சேரமாட்டார்கள். சாதாரணமாக, ஒரு கிராமத்திலிருக்கும் குடியானவனுக்கு அண்டைவீட்டுக்காரர்களுடைய நிலைமையும் யோக்கியதையும் நன்றாய்த்தெரிந்திருக்கும். ஆகையால்தான், ஒவ்வொரு கிராமத்திலும் தனித்தனியாகச் சங்கங்கள் வைத்துக்கொள்வது உசிதமென்று ஏற்படுகிறது. இப்படிச் சேருகிற பத்து நபர்களும் தங்களுக்கு வேண்டிய தொகையை வெளியிலிருந்து கடன் வாங்கித் தங்களுக்குள் பங்கிட்டுக்கொள்ளுகிறார்கள். அப்படி வாங்கும்தொகைக்கு ஒவ்வொருவனும் ஜவாப்தாரியாகிறான். எப்பொழுது இந்த ஜவாப் நியமம் ஏற்பட்டுவிடுகிறதோ அப்பொழுதே அதிற் சேர்ந்திருக்கும் நபர்கள் ஒவ்வொருவர்க்குள்ளும்பரஸ்பரம் நம்பிக்கையும் நாணயமும் இருக்கவேண்டியது அவசியமாகிறது. அதாவது நாணயமுடையவர்களும் அதாவது வாக்குத் தவறாமல் வாய்தா தேதிகளில் பாக்கியைச் செலுத்தக்கூடியவர்களும் அதனால் மற்ற

வர்களுக்கு நம்பிக்கையை உண்டாக்கக்கூடியவர்களும் ஒற்றுமையோடு சங்கமாய்ச் சேர்ந்து தங்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்துகொள்வதுதான் ஐக்கிய நாணயச் சங்கமென்று சொல்லப்படும்.

இப்படி ஐக்கியமும், நாணயமும் உடைய நபர்கள் பத்துப்பேர்கள் சேர்ந்து தங்கள் கிராமத்தில் ஒரு சங்கம் ஸ்தாபித்துக் கொடுக்கும்படியாக இதற்காக ஏற்படுத்தியிருக்கும் தங்கள் இலாகா ஐக்கிய நாணயச் சங்கங்களின் அஸிஸ்டெண்டு ரிஜிஸ்ட்ராரவர்களுக்கு மனுப்போட்டுக்கொண்டால் டிபார்ட்மெண்டு உத்தியோகஸ்தர்களை அவர் அனுப்பி வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வார்.

சாதாரணமாக, ஒரு கிராமத்திற்கு ஒரு சங்கத்தை ஏற்படுத்திக்கொண்டு வேலை நடத்துவதுதான் உசிதம். அப்படி இல்லாமல் அடுத்து 1 மைல் அல்லது 2 மைல் வட்டத்திற்குள்ளிருக்கும் 2, 3, கிராமங்களை ஒன்றாய்ச்சேர்த்தும் ஒரு சங்கம் ரிஜிஸ்டர் செய்து கொள்ளலாம். ஏனென்றால், ஒவ்வொரு கிராமத்திலும் ஒவ்வொரு சங்கத்தை ஸ்தாபித்துக்கொண்டு, சரியாக நடத்திக்கொண்டுபோகத் தக்க நபர்கள் அகப்படுவது கஷ்டமாயிருக்கலாம். முக்கியமாக, ஒரு சங்கத்திற்சேர்ந்திருக்கும் மெம்பர்கள் ஒருவருக்கொருவரது திரவியசம்பந்தமான நிலைமை தெரிந்திருக்க வேண்டுமென்பதே, கடன் கொடுப்பதற்காக ஏற்படும் கிராம சங்கங்களின் அவசியமான கோட்பாடு. இவ்விதமான சங்கங்களை வேண்டிய இடங்களில் ஸ்தாபிக்கவும், கணக்கு முதலானவைகளைச்சரியாக வைக்கக் கற்றுக்கொடுக்கவும், சரியான வழியில் நடவடிக்கைகளைச் செய்யும்படியாகச் சங்கத்தார்களுக்குச் சொல்லவும், அவர்களுடைய சங்கத்தின் நிலைமையைக் கவனித்து, கணக்குக்களை மேற்பார்வையிடுவதற்காகவும் கவர்ன்மெண்டார் சிப்பந்திகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

தற்காலம் இந்தச்சென்னை இராஜதானியில் சுமார் 2,200 சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இவைகள் சுமார் 7,000 கிராமங்களுக்கு உதவிசெய்கின்றன. நம்முடைய இராஜதானியிலிருக்கும் 20,000 கிராமங்களில் சுமார் 7,000 கிராமங்கள்தான் ஷை ஐக்கிய முறையில் பயனடைகின்றன என்றால், ஐக்கிய நாணயச்சங்கங்கள் இல்லாத இடங்களில் ஏற்படுத்துவதற்காக இன்னும் செய்யவேண்டிய வேலையின் பரிமாணம் நன்றாய் விளங்கும். இதுவரையில் ரிஜிஸ்டராயிருக்கும்சங்கங்கள் அநேகமாக சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் மூலமாகவே ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன; இது முக்கியமாக பொதுஜன நன்மைக்காக ஏற்படுத்திய டிபார்ட்மெண்டாதலால், ஒவ்வொரு தாலுக்காவிலும் பரோபகார சிந்தையுள்ள பெரிய மனிதர்கள் தங்கள் கிராமங்களிலும், அடுத்த கிராமங்களிலும் ஐக்கிய

சென்னைக் கூட்டுத்தொழில் வர்த்தமானி.

முறைகளைப்பற்றித் தெரியப்படுத்திச் சங்கங்கள் ஸ்தாபித்து உதவிசெய்ய முன்வந்தால்தான் சீக்கிரத்தில் பாக்கியிருக்கும் கிராமங்களிலும் இந்த ஐக்கிய நாணயச் சங்கங்கள் பரவும். ஒவ்வொரு தாலுக்காவிலும், தக்க மனிதர்கள் பொதுநன்மைக்காக உழைக்க முன் வருவார்களானால், சர்க்கார் அவர்களை "ஆனரெரி ஆர்கனைஸர்" அதாவது கௌரவத்திற்காகச் சங்கஸ்தாபகர்களாய் நியமிக்கத் தயாராயிருக்கிறார்கள். அவர்கள் தங்கள் தாலுக்காவிற்குள், தங்கள் கிராமங்களிலும் அக்கம்பக்கத்திலிருக்கும் கிராமங்களிலும் ஐக்கியக் கோட்பாடுகளை எடுத்துச்சொல்லி அந்தந்த கிராமக் குடியானவர்களிடத்திலிருந்து சங்கம் ஏற்படுத்துவதற்காக வேண்டிய மனு, ஸ்டேட்மெண்டு முதலியவைகளைத் தயார்செய்து அந்த இலாகா அஸிஸ்டெண்டு ரிஜிஸ்ட்ராரவர்களுக்கு அனுப்பி, கிராமங்களில் கங்கள் ஸ்தாபிக்க ஏற்பாடுகள் செய்யலாம். அந்த ஆனரெரி ஆர்கனைஸர்களுக்காக வேண்டிய பாரங்கள் முதலியவைகளைப்பற்றியும், அவர்கள் செய்யவேண்டிய வேலைகளைப்பற்றியும் அந்தந்த இலாகா அஸிஸ்டெண்டு ரிஜிஸ்ட்ராரவர்களுக்கெழுதித் தெரிந்து கொள்ளலாம்.

---

# இராணுவ சம்பந்தமான பிரிவினை ஐக்கிய முயற்சிச் சங்கம்.

இட்டாலிதேசத்தில் கோவாபரேடிவ் பிரிவினைச் சங்கங்கள் இரண்டு பெரிய பாகங்களாயிருக்கின்றன. அவையாவன:—(1) மிலான் நகரத்திலுள்ள கோவாபரேடிவ் யூனியன், (2) ரோமாபுரியில் பிரதான ஆபீஸுள்ள ராணுவயூனியன். அவைகளின் வேலை இட்டாலி குடியேற்ற நாடுகளுட்பட எல்லா இடங்களிலும் பரவியிருப்பதோடு தற்காலம் நாம் ஆக்ரமித்து சுவாதீனப்படுத்திக்கொண்ட விரோதி நாட்டிலும் நடந்து வருகிறது.

இராணுவ யூனியனின் பிரஸ்தாபவருஷ ரிபோர்டு 1916-ம் வருஷம் மார்ச்சு முதல் 1917-ம் வருஷம் பிப்ரவரி முடிய கணக்குக்காட்டும் காலத்தைப்பற்றியது. இச்சொஸைடியின் மெம்பர்களெல்லாரும் இட்டாலியின் கடற்படையையோ தரைப்படையையோ சேர்ந்த உத்தியோகஸ்தர்களாதலால் இது இராஜாங்கத்தாரால் எப்பொழுதும் அனுகூலமாகவே பார்க்கப்பட்டு வருகிறது. இவ்வனுகூலம் யுத்தகாலத்தில் நன்றாய்ப் புலப்பட்டிருக்கிறது. அச்சொஸைடியின் சமீபமுயற்சியின் காரணமாக இராஜப்பிரதிநிதியான ஜீனோவாவின் பிரபு அவர்கள் வேறு அறிக்கை ஏற்படுத்தும் வரையில் அது தன் நிகரலாபத்தில் சரிபாதியை எடுத்து

யுத்தத்திற்குப் பிறகு அவசியமாய் ஏற்படக்கூடிய தடுமாற்றக் கஷ்டங்களை முன்யோசனை யுடனும் திறமையுடனும் நிர்வகித்துத் தாங்குவதின் பொருட்டு தனிச் சேமநிதியாக வைக்கவேண்டுமென்று உத்தரவு செய்திருக்கிறார். சட்டங்களை யெல்லாம் மாற்றுவதற்கும் பொதுக் கூட்டங்கள் கூட்டுவது அவசியமானபடியாலும் மெம்பர்களில் அநேகருக்கு மீட்டிங்கு தினத்தில் வரமுடியாம லிருக்குமாகையாலும், இராஜாங்கத்தார் ஆலோசனை செய்து, இப்பொழுதே இம்மாதிரி ஏற்பாட்டைச் செய்யவேண்டியதாயிற்று.

பிரஸ்தாப வருஷத்தில் இராணுவச்சங்கம் விசேஷப் பரபரப்புடன் வேலைசெய்திருக்கிறது என்பது அதின் லேவாதேவி 16,255,242 லயரிலிருந்து 36,819,696 லயராக அதிகரித்திருப்பதனாலும் இந்த வருஷத்தில் அநேக கிளை ஸ்டோர்கள் புதியதாக ஏற்பட்டிருப்பதனாலும் அவைகளும் சண்டைப் பிராந்தியங்களி லிருப்பதினாலும் தெரிகிறது. (லயர் என்பது சுமார் $9\frac{1}{2}$ அணா) இவ்வருஷ ஆரம்பத்தில் இராணுவச் சங்கத்தாருக்கு 25 ஸ்டோர்களிருந்தன. வருஷக்கடைசியில் அவை 80 ஆக அதிகரித்திருக்கின்றன. இவைகளில் 15 இட்டாலிய சண்டைப் பிராந்தியங்களுக்கு வெளியிலும், 53 சண்டைப்பிராந்தியங்களிலும், 8 கைப்பற்றப்பட்ட ஆஸ்திரியதேசத்திலும், 3 இட்டாலியக்குடியேற்றநாடுகளிலும், 1 ஆல்பானியாவிலுமாகப் பரவியிருக்கின்றன. மிக்க அதிக விற்பனை ரோமாபுரியிலுள்ள தலைமையிடம் காட்டுகிறது. அது வது 4,518,788 லயர். மளிகை சாமான்களும் வாசனைமுதலிய இன்பகரமான சாமான்களும் சேர்ந்து மொத்த விற்று முதல் 29,282,085 லயர், இதர சாமான்கள் அதிலும் விசேஷமாய் இராணுவ முஸ்தீபுகளின் விற்று முதல் 7,537,608 லயர்.

600 008
162043